**திரு. கோவை செழியன்:** தலைவரவர்களே, நம்முடைய பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்., எம்.டி. போன்ற பட்டங்களைச் சுலபமாகத் தருவதில்லை, ஆண்டுக்கு 2 பேர், 3 பேர் போன்ற மாணவர்களைத் தான் தேர்வு செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே, வெளி பல்கலைக் கழகத்தில் மிகச் சுலபமாக ஃபர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ் வாங்கிவிடுகிறார்கள், நிறைய பாஸ்களும் தருகிறார்கள். அங்கே பாஸ் பண்ணிவிட்டு இங்கே வேலையிலே சேர்கிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாகப் போடுங்கள்.

**திரு. கோவை செழியன்:** விளக்கமாகச் சொல்லிவிட்டுக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கமாகச் சொல்லிக் கேட்கக் கூடாது.

**திரு. கோவை செழியன்:** அப்படி நம்முடைய மாணவர்களுக்கு அதிகமாகப் பாஸ் போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய முறையினாலேதான் நம்முடைய மக்களின் உயிர், மிகுந்த பாதுகாப்போடு இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

Thiru R. PONNAPPA NADAR: The Hon. Minister was saying that there is some difficulty in starting the short-term M.B.B.S. course for these students. What is the difficulty? Was it examined by any expert committee? If any examination has been done by an expert committee, will it be reconsidered by Government?

The Hon. Thiru K. ANBAZHAGAN: Any short-term course is conceived from the notion that they are prepared in some way for the same course through some other subjects. But actually these are not medical subjects but purely scientific subjects which are considered internationally as purely scientific subjects. They may be connected with medical course but not actual medical course.

Thiru K. M. SUBRAMANIAM: Am I to understand that the standard is high in Madras University? If so why are many students passing out from Delhi University in M.Sc and various other subjects find employment in various States and in Madras City also they are getting employed? What is the reason?

The Hon. Thiru K. ANBAZHAGAN: This question is more pertinent to other Assemblies.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது படித்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு இல்லை என்று கூறினார்கள். இருந்தாலும் எம்.எஸ்ஸி. படித்த மாணவர்கள் குறிப்பிட்டதொரு பாடத்தைத்தான் படித்திருக்கிறார்கள். அவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு மட்டும் தகுதியுள்ளவர்களாக இருப்பதால், இதுவரை படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்காவது வேலைவாய்ப்பளிக்க இந்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரையில் அந்த வகுப்புகள் நடத்தப்பட்ட வகையில் எம்.எஸ்ஸி. ப்ராஞ்ச் 1, அனாட்டமி படித்தவர்கள் 27 பேர்கள், அதில் 18 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது மருத்துவப்படிப்புத் துறையில். ப்ராஞ்ச் 2, ஃபிஸியாலஜி. அதில் 21 பேர்கள் படித்தவர்கள், 17 பேர்கள் அலுவலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், பயோ கெமிஸ்ட்ரி பிராஞ்ச் 3, படித்தவர்கள் 22. ஆறு பேர்களுக்கு இடம் இருந்து வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். பார்மக்காலஜி 22 பேர்கள் படித்தவர்கள், ஆறு பேர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மைக்ரோபயாளஜி 29 பேர்கள் படித்தவர்கள், 14 பேர்கள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக 121 பேர்கள் தேர்ச்சி பெற்றார்கள். 61 பேர்கள் வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இனி தேர்ச்சி பெற்றவர்கள் வேலை வேண்டுமென்று கேட்பார்களே என்று இந்தப் பாடத் திட்ட பயிற்சிகூட இரண்டாண்டுக் காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

*Post graduate Medical and Research Centres*

* 372 *Q.*—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether there is any proposal to start Post-Graduate Medical and Research Centres in the State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசு இம்மாதிரியான ரிசர்ச் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அதேமாதிரியாக தமிழ் நாட்டில் வைத்தியத்தில் நிபுணர்கள் ஜாஸ்தியாக இருக்கக்கூடிய காரணத்தினால் அம்மாதிரியான ஒரு ரிசர்ச் சென்டர் ஆரம்பித்தால், இந்தியாவிலேயே இது ஒரு முக்கியமான ஸ்தலமாகும் அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : போஸ்ட் க்ராஜுவேட் ரிசர்ச் சென்டர் என்ற முறையில் ஒரு பெரிய நிலையத்தினை ஏற்படுத்த வேண்டிய முயற்சி சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சி மத்திய அரசின்



நிதி உதவியால் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டு, பெருநிதி தேவைப்பட்ட காரணத்தினால் மத்திய அரசுக்கு விண்ணப்பித்து, மத்திய அரசு ஏற்கெனவே ஒன்றிரண்டு இடங்களில் டெல்லி, சண்டிகர் போன்ற இரண்டு இடங்களில் அப்படிப்பட்ட நிலையங்களை ஏற்படுத்தி இருந்தாலும், வேறு எந்த மாநிலத்திற்கும் நாங்கள் உதவி செய்து இந்த போஸ்ட் க்ராஜுவேட் மெடிக்கல் சென்டர் ஏற்படுத்துவதற்கு இல்லை என்று தெரிவித்து விட்டார்கள். அவர்கள் நிதி உதவி செய்யவில்லை என்ற நிலை ஏற்பட்ட பின்னர், நம் மருத்துவக் கல்லூரி ஒன்றில் இப்படிப்பட்ட போஸ்ட் க்ராஜுவேட் படிப்பிற்குள்ள அக்கல்வியை மேலும் உயர்தரமாக ஆக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக மருத்துவக் கல்வி இயக்குநர் ஒரு பரிந்துரை, ஆலோசனை ஒன்றை வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையின் அடிப்படையில் இப்போதுகூட இரண்டு துறைகளில் ஃபிஸியாலஜி; பாக்டீரியாலஜி இவைகளை அப்கிரேட் செய்ய தனிப்பட்ட முறையில் ஒரு இன்ஸ்டிட்யூட் என்ற முறையில் இல்லாமல், ஏற்கனவே கல்லூரியில் உள்ள சில படிப்புத் துறைகளை மேம்படுத்துவது என்ற அடிப்படையில் மத்திய அரசின் அனுமதி பெற்று பாக்டீரியாலஜி. ஃபிஸியாலஜி இந்த இரண்டு பிரிவுகளும் இப்போதே உயர்த்தப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு ஈ அன்ட் டி, பிரிவையும் உயர்த்துவதற்கான முயற்சியும் இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா : மத்திய அரசு வடக்கேயிருக்கிற இரண்டு மாநிலங்களில் இதுபோன்ற ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு உதவி செய்திருக்கின்றது. ஆனால் தெற்கே இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு உதவி செய்ய மறுத்திருக்கிறது. அதற்கு என்ன காரணங்கள் கூறப்பட்டுள்ளன ? இந்த நான்கு தென்னக மாநிலங்களில் ஒரு மாநிலத்திலாவது இப்படி அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களா ? அல்லது தெற்கேயிருக்கிற மாநிலங்களில் இம்மாதிரியான நிலையங்கள் வரக்கூடாது என்ற எண்ணம் காரணமாக ஏற்படுத்தவில்லையா? ஏதாவது காரணங்கள் குறிப்பிட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி அவ்வளவு பொருத்தமானதல்ல. ஏனென்றால், மத்திய அரசு ஏற்படுத்திய அந்த இடங்கள் மத்திய அரசின் கையிலுள்ள ஆராய்ச்சி நிலையங்கள். தமிழ் நாடு விரும்புவது தமிழக அரசின் மேற்பார்வையில் உள்ள ஆராய்ச்சி நிலையம்.

திரு. நா. வீராசாமி : பொதுவாக தமிழகத்தில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குத்தான் கல்வித் துறையிலாகட்டும், மருத்துவத் துறையிலாகட்டும், எந்தத் துறையிலானாலும் வரவேற்பு இருக்கிறது. அதிலும் நம் நாட்டில் இப்போது பாக்டீரியாலஜி, ஃபிஸியாலஜி போன்ற பாடங்களில் போஸ்ட் க்ராஜுவேட் படிப்பு படிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ஐந்து பாடங்களில் இந்த மேற்படிப்பு சொல்லிக்

கொடுக்க வசதியிருக்குமானால், அந்தப் பயிற்சிக்கூடத்தை போஸ்ட் க்ராஜுவேட் இன்ஸ்டிட்யூஷனாக ஆக்கலாம் என்ற விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறையை வலியுறுத்தி, மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது நம் சென்னையில் ஒரு போஸ்ட் க்ராஜுவேட் இன்ஸ்டிட்யூஷன் அல்லது ரிசர்ச் சென்டர் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசு அதனுடைய திட்டமாக மேற்கொள்கிற போஸ்ட்க்ராஜுவேட் இன்ஸ்டிட்யூட் என்ற முறையில் மேல் நிலை படிப்பு அமைப்பு நிர்வாகத்தை அவர்களே நடத்துவதற்குரியதாக இரண்டு இடங்களை எடுத்தார்கள். வேறு எந்த மாநில அரசும் அப்படிப்பட்டதொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் யாருக்கும் நிதி உதவி வழங்கவில்லை, எனவே, தமிழகத்திற்கும் வழங்குவதற்கு இல்லை என்று அறிவித்துவிட்டார்கள். எனவே, நாம் நம் தமிழக அரசின் சக்தியைக் கொண்டு எந்தெந்த வகையில் இந்தக் கல்வித் துறையை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதற்கு தமிழக அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும். ஆனால் மருத்துவக் கல்வியைப் பொறுத்த வரையில் இந்த வளர்ச்சிக்காக ஆகிற செலவை, மருத்துவக் கல்வித்துறையில் வேறு பல திட்டங்களை ஏற்றுக்கொண்டிருப்பதால் இதை உடனடியாக முழு அளவிற்கும் ஏற்றுக்கொள்ள முடியாது. வழக்கம்போல் படிப்படியாகத்தான் இது கவனிக்கப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த போஸ்ட் க்ராஜுவேட் மெடிக்கல் இன்ஸ்டிட்யூஷன் வருவதற்கு மத்திய அரசு போதிய அளவிற்கு நிதி உதவி செய்வதற்கில்லை, எனவே இப்படிப்பட்ட ஸ்கீம் இல்லை என்று கூறுகிற காரணத்தினால் ஏற்கனவே இருக்கிற பொது மருத்துவ மனையில் நாம் தொடர்ந்து தொடர்ந்து கட்டிடங்கள் எழுப்பினால் அங்குள்ள நெருக்கடியில் பெருமளவிற்கு அந்த மருத்துவ மனை பாதிக்கப்படுமே என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தப் பொது மருத்துவ மனைக்கு மக்கள் நிரம்ப வருகிறார்கள் என்றால், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவத்தை விட சிறந்த பாடப் பகுதிகள், பல துறைகளின் வளர்ச்சிக்கான பகுதிகள் அங்கு ஏற்கனவே அமைந்துள்ளன. இந்தத் துறையின் வளர்ச்சிக்கான முதல் இடம், முதல் நிலையம் என்று கருதப்படுவது சென்னை பொது மருத்துவ மனையாகும். அந்த இடத்தில் உயர்தர பாடப் பகுதிகளை, இக்கல்வியில் உயர்தர வளர்ச்சிக்கான பகுதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றால் அவுட் பேஷன்ஸ் எண்ணிக்கையைக் குறைத்து. வேறு பகுதிகளில் அவர்களுக்கான சிகிச்சைகள் அளிக்கும் ஏற்பாட்டை மேற்கொள்ளலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அதைப் பரிசீலித்துச் செயலாற்ற சில காலமாகும்.



### *Master Plan for Madras City*

*373. Q. THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether the Government has formulated Master Plan for Madras City; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (ஆ) சென்னை பெரு நகர்ப் பகுதிக்குரிய இடைக்காலத் திட்டமொன்று, 1967-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த இடைக்காலத் திட்டத்திற்கென்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலும் சென்னை மாநகருக்கும் சென்னை பெருநகர்ப்பகுதியிலும் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும் 1971-91 காலத்திற்கான ஓர் இருபதாண்டு தொலை நோக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டு திட்டங்களும் தற்போது அலுவலக ஆவணங்களாகவே உள்ளன. தற்போது சட்டப் பேரவையின் பரிசீலனையிலுள்ள புதிய நகர்ப்புறத்திட்ட மசோதாவானது "Town and Country Planning Bill" சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னரே, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குரிய பெருந்திட்டத்தைச் சட்ட அடிப்படையில் மேற்கொள்ள முடியும்.

**திரு. சு. துரைசாமி :** சென்னை, கோவை, மதுரை போன்ற . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சென்னை நகரத்தைப் பற்றி மட்டும் கேளுங்கள். கொள்கை விளக்கத்தை இதில் கேட்கக் கூடாது.

**திரு. சு. துரைசாமி :** சென்னை நகரில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு காலம் பிடிக்கும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முதலில் கேட்ட கேள்வி பாட்டியாரைப் போல் பேத்தி ஆக எவ்வளவு காலம் பிடிக்கும் என்று. இரண்டாவது கேள்வி, பாட்டியாருக்கு இன்னும் தேவையான வசதிகள் செய்து கொடுப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதாகும். சென்னை நகரம் பெரிய பகுதியாக இருப்பதால், இப்படி தேர்ந்தெடுத்திருப்பதாகக் கருத முடியாது. சென்னை நகரில் மக்கள் தொகை மிகுதியாக இருக்கிறது. இதனால் ஏற்படுற பொது நல்வாழ்வுப் பிரச்சினைகள் அதிகமானது, ஆகவே இருபதாண்டு காலத்திட்டம் என்பது சென்னை நகரின் வளர்ச்சிக்காக என்பதைவிட சென்னை நகர நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக என்று கொள்ள வேண்டும்.

Dr. H. V. HANDE : Sir, even though this will all take place only after the Town and Country Planning Bill becomes an Act, may I know from the Hon. Minister whether it is possible to give some indication as to whether we are going to have a ring road around the City as suggested by the Estimates Committee and whether the transport system just like tube railways, underground railways, more electric railway routes, whether all these things will be taken into consideration, whether it is possible to give some indication as to the broad details on which this Master Plan is going to be executed?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போதைய சென்னை நகரம் ஏற்கனவே ஓரளவு விரிவுபடுத்தப்பட்ட நகரந்தான் என்று சொன்னாலும், இன்றைக்கு ஏற்பட்டு வருகிற பெரிய தொழில் வளர்ச்சி, போக்குவரத்துப் பெருக்கம், மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக, ஆட்சி முறையில் இல்லாவிட்டாலும் 450 சதுர மைல் அளவுள்ள விரிவான நகராக உள்ளத்தில் கொண்டு தெற்குப் பகுதியில் செங்கற்பட்டு நகரத்தையும், மேற்குப் பகுதியில் திருவள்ளூர் நகரத்தையும், வடக்கே கும்மிடிப்பூண்டி நகரத்தையும் சுற்றுப்புற நகர் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொண்டு அந்த நகரங்களுக்கும் சென்னை நகருக்கும் இடையில் தெற்குப் பகுதியில் தாம்பரம், பரங்கிமலை, மேற்குப் பகுதியில் ஆவடி அம்பத்தூர், வடக்குப் பகுதியில் மணலி, மீஞ்சூர், ஆகியவற்றைச் சென்னையின் கிளை நகரங்களாகக் கருதி, கிளை நகரங்களில் இரண்டு மூன்று லட்சம் மக்கள் வாழவும், சுற்றுப்புற நகரங்களில் ஒரு லட்சம் மக்கள் வாழவும், அந்த வகையிலே போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தவும், குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவும், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இடையிலுள்ள குடிசைகளை மாற்றவும், குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தரவும், விரிவான திட்டமிட்டு 20 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றினால் சென்னை நகர மக்கள் படுகிற பல்வேறு இன்னல்களைத் தவிர்க்க முடியுமென்ற வகையில் 938 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் 1971-ல் இருந்து 1976-க்குள் ஐந்தாண்டுக் காலத்தில் 185 கோடி ரூபாய்க்கு இடைக்காலத்தில் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற பரவலான கருத்தும் இருக்கிறது. இந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கான வழியும், வாய்ப்பும் அண்மையில் நிறைவேற்றப்பட இருக்கிற டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் பில் நிறைவேறிய பிறகு ஏற்படும். அதற்குப் பிறகு அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைச் சொல்லியிருக்கிற காரணத்தால், மேற்கொண்டு துணைக் கேள்விகள் தேவையில்லை என்று கருதுகிறேன்.





*Employees of Standard Motors*

* 374 *Q.*—Thiru O. N. SUNDARAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether all the employees who were working in the Standard Motors (Private) Limited, before its closure have been absorbed in service after the reopening of the factory; and

(b) if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) சென்னையிலுள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை திறக்கப்பட்ட பிறகு இதுவரை 777 தொழிலாளர்கள் நிர்வாகத்தினரால் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) பழைய தொழிலாளர்கள் அனைவரையும் குறிப்பிட்ட காலத்தில் திரும்ப எடுத்துக் கொள்ளாமைக்கு நிர்வாகத்தினர் கூறும் காரணம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கப் பெறாததும், இங்கிலாந்திலிருந்து சில மோட்டார் உறுப்புகள் வந்து சேராததும் ஆகும் என்று கூறுகிறார்கள். அந்த நிதியைப் பெற்றுத் தர மத்திய அரசோடு தொடர்பு கொண்டு விரைவில் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. அந்த நிதியைப் பெற்றுத் தந்த பின் மீதியுள்ள தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இந்த நிறுவனத்திற்குத் தேவையான பொருள் தேவையைப் பெற்றுத்தர அரசு முயற்சி எடுத்துள்ளது என்று சொன்னார்கள். அதற்காக என்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன? இதுவரை பெற்ற நன்மைகள் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அந்த நன்மைகளைக் கூறும் அளவுக்குப் பேச்சு வார்த்தைகள் முடியவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இவ்வாண்டு ஜூன் மாதம் 23-ம் தேதிக்குள் எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று ஏற்கனவே நிர்வாகம் ஒப்புக் கொண்ட பிறகும் ஏன் கால தாமதம் ஆகிறது ? எவ்வளவு நாளைக்குள் பாக்கி இருக்கும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் படுவார்கள்?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** ஸ்டாண்டர்டு மோட்டார் மானேஜ்மெண்டார் நான்கு திங்களுக்குள்ளாக எல்லாத் தொழிலாளர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்று ஒப்பந்தத்தில் சொன்னது உண்மைதான். ஆனால் அதற்கேற்றபடி அவர்களுக்கு வேண்டிய உதவி கிடைக்காததால் தாமதம் ஏற்படுகிறது. எந்த அளவுக்கு விரைவாக அவர்களுக்கு நிதியைப் பெற்றுத் தர முடியுமோ அந்த அளவுக்கு அரசு முயற்சியினைச் செய்து வருகிறது.

[1971 ஜூலை 22

திரு. நா. வீராசாமி : இப்போது 777 பேரைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டதாக அறிவித்தார்கள். அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் சீனியாரிடிபடி எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தொழிலாளர்கள் போராடுகிறார்கள். சீனியாரிட்டிபடி, அதிகம் சர்வீஸ் பெற்றவர் என்ற அடிப்படையில் அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் குறைபாடு ஆரம்பத்தில் இருந்தது. ஐந்தாறு தொழிலாளர்கள் சீனியாரிடிபடி எடுக்கப்படவில்லை என்ற குறைபாட்டைத் தெரிவித்தவுடன் அரசு சார்பாக மானேஜ்மென்ட்டை அழைத்து இது போன்ற தவறுகள் நடக்கக்கூடாது, ஒப்பந்தப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது வலியுறுத்தப் பட்டது. அதற்குப் பிறகு இதுவரை அப்பேர்ப்பட்ட குறைபாடுகள் ஏற்படவில்லை.

திரு. ஏ. எம். இராஜா : இந்த ஸ்டான்டர்டு மோட்டார் கம்பெனிக்காரர்கள் வங்கியின் உதவி கேட்டிருப்பதாகவும், அந்த உதவி கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் எவ்வளவு நிதி உதவி கேட்டிருக்கிறார்கள்? அந்த நிதி உதவி கிடைத்தால் இன்னும் எவ்வளவு பேரை அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள்? அதற்கு கண்டிஷன்ஸ் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : முதலாவதாக அங்கு 1,481 பேர் வேலை செய்து வந்தார்கள். அதிலே 777 பேர் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். அதிலே 757 பேர் தொழிலாளர்கள், 20 பேர் ஆபீசர்கள் நிதி உதவி கிடைத்த பிறகு விரிவான அளவுக்குத் தொழில் நடக்கத் தொடங்கியவுடன் மற்றத் தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

*Report of Elayaperumal Committee on Untouchability*

* 375 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether Central Government has sent any copy of the report of the Elayaperumal Committee on Untouchability; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) அறிக்கையின் விபரங்கள் பின்வருமாறு :—

இந்த அறிக்கையின் விபரங்களை கீழ்க்கண்ட நான்கு தலைப்புகளின்கீழ் வகைப்படுத்தலாம்.

பகுதி 1 தீண்டாமை



1971 ஜூலை 22]

பகுதி 2 பொருளாதார முன்னேற்றம்.

பகுதி 3 கல்வி.

பகுதி 4 வேலை வாய்ப்பு.

மேலே கண்ட நான்கு பிரிவுகளிலும் மொத்தம் 186 சிபார்சுகள் உள்ளன. சிபார்சுகள் அனைத்தையும் அரசு நன்கு பரிசீலித்து அவைகளின் பேரில் முடிவு எடுத்துள்ளது. மத்திய அரசு சம்பந்தப்பட்ட வரை உள்ள சிபார்சுகளில் எடுத்த முடிவை அவ்வரசுக்கு தனியாக அறிவிக்கப்படும். மீதியுள்ள சிபார்சுகளின் பேரில் எடுத்துள்ள முடிவுகளை செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் இரண்டு பிரதிகள் இப்பேரவையின் நூலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE : Sir, it is quite a long time since the report was submitted. After the submission of the report, are the Government having any intention to see that the person who practises untouchability would be punishable under the law. May I know whether the Government have got any proposal to bring forward such an enactment so that there will be greater security for the persons who are now considered as untouchables?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தச் சிபாரிசில் பல்வேறு விஷயங்களைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அதை நமது அரசாங்கம் பரிசீலனை செய்தது. அதற்காக தனி மசோதா கொண்டுவர உத்தேசம் இல்லை. தீண்டாமைக் கொடுமை அனுஷ்டிக்கப்படுகின்ற நேரத்தில் நடவடிக்கை எடுத்து கடுமையான தண்டனை கொடுக்கப்படுகிறது. சிபாரிசுகளில் சிலவற்றை நம்முடைய மாநில அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது என்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தக் கமிட்டிகள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன? தாலுகா அடிப்படையிலா அல்லது மாவட்ட அடிப்படையிலா? இதற்காக அமைக்கப் படுகின்ற கமிட்டிகளிலே அங்கம் வகிப்பவர்கள் யார் யார்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த கேள்விக்கான பதிலை இப்போது கேட்கிறார்கள் போல் இருக்கிறது. இந்தக் கமிட்டி மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கமிட்டி. அதிலே மாநிலத்திலே இருப்பவர்களும் சிலர் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இளையபெருமாள் தலைமையில் நடந்த இந்தக் கமிட்டி எத்தனை ஆண்டுகள் பரிசீலித்து இந்த அறிக்கையை எப்போது சமர்ப்பித்தது? இதைப் பற்றி எப்போது மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏறத்தாழ 1965-ம் ஆண்டு இந்தக் குழு நிறுவப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை 1969-ம் ஆண்டில் தரப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டில்

[1971 ஜூலை 22

நமது மாநில அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்தது. இப்போது அதிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவற்றைப் பற்றி முடிவு செய்திருக்கிறோம்.

### தீண்டாமை ஒழிப்பு

* 376 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பினை தீவிரப்படுத்த தாலுக்கா அளவில் அரிசன நலக் குழுக்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என் கிட்டப்பா: அத்தகைய குழுக்களில் எந்தெந்தத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர்கள் பங்கு கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது? அந்தக் குழுவின் நடைமுறை வேலைத் திட்டத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து தாலுகா வாரியத்திற்கு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளவும், போலீஸ் அதிகாரிகள் சிலரைச் சேர்த்துக் கொள்ளவும், அப்படி தீண்டாமை ஒழிப்பில் அக்கறையுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தாலுகா வாரியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்ட வாரியத்தை அமைக்கவும், மாவட்ட வாரியத்தில் உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து மாநில அளவில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்து திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தாலுகா குழுவில் இருப்பவர்கள் சார்பிலே அவர்கள் புகார்களை எடுத்துச் சொன்னாலும், அதைப் பற்றியும் விசாரணை செய்து உண்மைதானா என்று பார்த்து உண்மை என்று ஒத்துக்கொண்ட பிறகு அதை மேலே இருக்கும் குழுவுக்கு அனுப்புவார்கள். போலீசாரும் தகவல் கொடுப்பார்கள். போலீசாரும் நல்ல முறையில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு இந்தக் குழு தன்னிச்சையாகச் சிபாரிசு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்று சொன்னால், மாநிலக் குழுவுக்கு அவர்கள் தெரிவிப்பார்கள். மாநில வாரியத்திற்கு நலத்துறை அமைச்சர் தலைவராக இருக்கிறார்கள்; ஐ.ஜி. அவர்கள் பொறுப்பாளராக இருக்கிறார்கள். சமூக நலத் துறைச் செயலாளர் அவர்கள் செயலாளராக இருக்கிறார்கள். ஆகவே, மேல் மட்டத்தில் இருக்கும் மாநிலக் குழுவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு பற்றி மக்களிடையே பிரசாரம் செய்ய செய்திப் படம் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 22]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போதே செய்திப் படங்களில் கூடுமான வரையில் தீண்டாமை ஒழிப்பு பற்றி பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த குழுக்களுக்கு நியமிக்கப்படுகிற தலைவர்கள் 'சமுதாய அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து தான் அந்த குழுக்களுக்கு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

### தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் புது விடுதிகள்

* 377 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக புதிதாக விடுதிகள் எவையேனும் திறக்க அரசு முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவை எந்தெந்த இடங்களில் திறக்கப்படும் ?

(உ) அவற்றில் எத்தனை மாணவ, மாணவிகள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) ஆம்.

(இ) & (உ) இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடிய சீக்கிரத்தில் ஆணை விடுக்கப்படும்.

திரு. கு திருப்பதி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் பள்ளிகளில் சேரும்போதும், கல்லூரிகளில் சேரும்போதும் கொஞ்சம் பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணம் போதுமானதாக இல்லாததால், முதலிலோ அல்லது கடைசியிலோ சிரமப்படுகிறார்கள். ஆகவே, ஹாஸ்டலில் இடம் இல்லாத மாணவர்களுக்கு தனியாக கட்டிடம் கட்டிக் கொடுக்க, வசதி செய்து கொடுக்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் ஹாஸ்டல்கள் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில், நலத் துறையின் மூலமாக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவைகளில் இடம் தரப்படுகின்றது. ஒவ்வொரு ஹாஸ்டலிலும் ஒரு ஹாஸ்டல் கமிட்டி என்று உருவாக்கி அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராக இருந்து செயல்பட்டு வருகிறார்கள். கூடுமான வரையில் எல்லோருக்கும்

[1971 ஜூலை 22

இடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முயற்சி எடுத்து இருக்கிறது. எல்லோருக்கும் கொடுக்கும் நிலையில் இல்லை என்பதையும் அரசாங்கம் உணர்ந்து இருக்கிறது. காரணம், ஆண்டுக்கு ஆண்டு அதிகமான மாணவர்கள் சேருகிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு 10 சதவிகிதம் தான் அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன. மேற்கொண்டு அதிகப்படியாக சேர வேண்டுமென்று விரும்பினால் தனியாக அவர்களுக்கு 'நான்-ரிசிடென்சியல்' அமௌன்ட் என்று தனித் தொகை தரப்படுவதன் மூலமாக அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளில் ஏனைய சமுதாய மாணவர்களுக்கு எத்தனை சதவிகிதம் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன? ஒதுக்கப்படுகின்ற இடங்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு எத்தனை சதவிகிதம் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன என்று அமைச்சர் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதியில் 75 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு என்றும் 20 சதவிகிதம் பின்தங்கிய மாணவர்களுக்கு என்றும், 5 சதவிகிதம் முற்போக்கு சமுதாயத்திற்கு என்றும் ஒதுக்கப்படுகிறது. அதேபோல், ஹாஸ்டல்களில் 60 சதவிகிதம் பின் தங்கிய மாணவர்களும், 25 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களும், எஞ்சிய சதவிகிதம் பின்தங்கிய மாணவர்களும் சேர்க்கப்படுகிறார்கள்.

**திரு. கோ. இளங்கோவன் :** துணைத் தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு என அமைக்கும் விடுதிகள் வட்டத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் அமைக்கப்படுவதோடு விடுதிகளில் உள்ள மாணவர்கள் தரமான பள்ளிகளில் பயிற்சி பெற வழி வகை செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற பள்ளிகள் அனைத்துமே தரமான பள்ளிகள் தான் என்று அரசு கருதுகிறது. தனியார் நடத்தும் பள்ளிகளைப் பற்றி அப்படி கூறமுடியாது. பள்ளிகளில் இடம் பெற்றவர்கள் விடுதிகளில் இடம் பெற துணை செய்யும் வகையில் தற்போது நலத் துறை மூலமாக விடுதிகள் கட்டி, தங்கிப் படிப்பதற்காக வசதி செய்து கொடுத்து இருக்கிறோம். இதிலே தாலுக்கா வாரியாக, மாவட்ட வாரியாக என்று இல்லாமல் எந்தந்த இடத்தில் கல்லூரியோ, பள்ளியோ இருக்கிறதோ அந்த பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு 3 மைலுக்கு மேலே இருந்து வருபவர்களாக இருந்தால் சேர்க்கப்படுகிறார்கள். 3 மைலுக்குள்ளே இருந்து வருகிற மாணவர்களுக்கு விடுதியில் தங்க வசதி செய்து கொடுப்பது இல்லை.



1971 ஜூலை 22]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Is there any proposal to start a hostel for working women belonging to Scheduled Castes and Backward Classes?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இன்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயப் பெண்கள் அந்த அளவுக்கு முன்னேறவில்லை. பிறகு பார்க்கலாம்.

**திரு. ந. முத்துவேல் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு எத்தனை மாணவர்கள் விடுதிகள் அரசால் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஏறத்தாழ 25 புதிய விடுதிகள் அமைக்க அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறது.

*Separate Cell for Idol theft cases*

* 363 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to create a separate cell for idol theft cases; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :**

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பொதுவாக தமிழ் நாட்டிலே, அதுவும் சென்னை நகரத்திலே தான் அதிக சிலைகளைத் திருடிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி திருடுகிறவர்கள் சாமி சிலைகளை திருடி இன்னொரு இடத்தில் வைத்தால் தான் மகிமை உண்டு என்று இப்படி செய்கிறார்கள். அது உண்மையா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, சிலையைத் திருடி இன்னொரு இடத்தில் பதித்தால் தான் மகிமை என்று ஒரு சில பக்தர்கள் இடத்தில் எண்ணம் இருக்கிறது என்பது உண்மை தான். ஆனால் இங்கே கூறப்பட்ட சிலை திருட்டுக்கான காரணம் அப்படி அல்ல. வெளி நாட்டவர்கள் தமிழ் நாட்டு சிலைகளின் கலை நுணுக்கங்களில் ஆர்வம் கொண்டு அதை அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள் என்ற அடிப்படையில் அந்த சிலைகள் திருடப்படுகின்றன. அதிலும் குறிப்பாக உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல் அது சென்னை மாவட்டத்திலே அல்ல, தஞ்சை மாவட்டத்திலே தான் சிலைகள் அதிகமாக திருடப்படுகின்றன.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, வெளி நாட்டிலே உள்ளவர்கள் சிலையின்மீது பற்றுக் கொண்டுள்ளதால் திருடுகிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய

[1971 சூலை 22

மகாபலிபுரத்திலே அழகிய சிலைகளை நமது அரசாங்கமே தயாரித்து வருகிறதே, அத்தகைய சிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் சிலையின் மீது மோகம் கொண்டு திருடவில்லை. அந்த சிலை வடிக்கப்பட்ட காலத்தின் மீது அவர்கள் கொண்டு இருக்கிற அந்தப் பற்றின் காரணமாகத்தான் அவர்கள் அந்தச் சிலைகளை வாங்கிக் கொள்கிறார்கள். மகாபலிபுரத்தில் தயாரிக்கப்படும் சிலைகள் எல்லாம் அண்மைக் காலத்தவை. ஆகவே, அவைகளை வெளிநாட்டார் அவ்வளவு விரும்பி வரவேற்கமாட்டார்கள்.

**திரு. சொ. காவேரிமணியம் :** துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் தென் மாவட்டங்களில் தான் விலை உயர்ந்த சிலைத் திருடு அதிகமாக ஏற்படுகிறது. இவைகளைத் தடுக்கும் பொருட்டு ஒரு தனிக் காவல் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே அந்த சிலை திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக மாநில அளவில் தனியாக ஒரு காவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அது பணியாற்றி வருகிறது. எந்த மாவட்டத்தில் அதிகமாகச் சிலை திருடப்படுகிறது என்பதைப் பரிசீலித்து அதற்குத் தக்கபடி அதைத் தடுக்க முயற்சி எடுக்கலாம்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, இதுவரையில் எத்தனை சிலை திருடிய வழக்குகளை நம் அரசாங்கம் பதிவு செய்து இருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1968-ம் ஆண்டில் 79 வழக்குகளும், 1969-ம் ஆண்டில் 63 வழக்குகளும், 1970-ம் ஆண்டில் 112 வழக்குகளும், 1971-ல் இது வரையில் 36 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, பிள்ளையார் சிலையைத் திருடி வைத்தால் தான் மகிமை என்ற காரணத்தால் மாம்பலத்திலும் பிள்ளையார் சிலை திருடி வைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாம்பலத்து சிலையைப் பற்றி இந்த மன்றத்திலே வெகு விரிவாகப் பேசப்பட்டு இருக்கிறது. மீண்டும் அதைக் கிளற வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, இப்படிச் சிலைகள் நிறைய திருடுபோய் இருக்கின்றனவே, இந்தச் சிலைகளில் ஆண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா பெண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் இந்த பால் வேறுபாடு பார்த்துச் சிலைகளைத் திருடிக்கொண்டு இருப்பது இல்லை. ஏனென்றால் அந்தச் சிலையிலே உள்ள கலை நுட்பங்களைத்தான்



1971 சூலை 22]

அவர்கள் வெகுவாக ரசிக்கிறார்கள். திருடுபவர்கள் அதை ரசிப்பது இல்லை. திருடுபவர்கள் விலையை ரசிக்கிறார்கள். வெளிநாட்டவர்கள் அதன் கலையை ரசிக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த சிலைகளைத் திருடுபவர்கள் குறைவாக இருந்தாலும், இதற்கென்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிக்கச் செல்வாக்குப் படைத்தவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது புதிய தகவல். மீதமுள்ள தகவல்களையும் தெரிவிக்க வேண்டுகிறேன். (சிரிப்பு)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** புதிய தகவல் இல்லை ; மீதமுள்ள தகவல்களை அரசாங்கம் தன் சிப்பந்திகளைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று தான் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்கம் தனி அதிகாரிகளை மட்டும் வைத்துச் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்றில்லை : மக்கள் பிரதிநிதிகளுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, சிலப்பதிகாரத்தை வடித்துக்கொடுத்த இளங்கோவிற்குச் சிலை . . . .

MR. DEPUTY SPEAKER : It is not a relevant question.

மு.ப. 10-00

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது வரையில் 290 சிலைகள் திருட்டு இந்த நான்கு ஆண்டுக்காலத்தில் பிடிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்படிச் சிலைகளைத் திருடுபவர்கள் கூட்டமாக இருக்கிறார்களா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் கூட்டமாக இல்லாவிட்டாலும், ஒருவருக்கொருவர் தொடர்புள்ளவர்களாக சங்கிலிபோல் தொடர்புகொண்டு காரியங்கள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படும் சிலைகளை வெளிநாட்டில் வைத்துக்கொள்ளாமல், திரும்பவும் இந்தியாவுக்கே பெறவேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டு, குறிப்பாக, தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை காரணமாக, அண்மையில் பாரிசில் நடந்த ஐ.ஜி.க்கள் மாநாட்டில், தமிழக ஐ.ஜி. அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இங்கே திருடப்பட்ட, வெளிநாட்டிலுள்ள சிலைகளைப் பற்றி ஆராய மேலும் அகில உலக, 'இண்டர்-போல்' கூட்டம் வருகிற செப்டம்பர் மாதத்தில் நடக்கும்போது, அது பரிசீலிக்கப்பட இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Was there any instance of policeman stealing idols?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** போலீஸ்காரர்கள் திருடுகிறார்கள்; சில போலி பக்தர்களும் திருடுகிறார்கள்.

மகாபலிபுரத்திலே அழகிய சிலைகளை நமது அரசாங்கமே தயாரித்து வருகிறதே, அத்தகைய சிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் சிலையின் மீது மோகம் கொண்டு திருடவில்லை. அந்த சிலை வடிக்கப்பட்ட காலத்தின் மீது அவர்கள் கொண்டு இருக்கிற அந்தப் பற்றின் காரணமாகத்தான் அவர்கள் அந்தச் சிலைகளை வாங்கிக் கொள்கிறார்கள். மகாபலிபுரத்தில் தயாரிக்கப்படும் சிலைகள் எல்லாம் அண்மைக் காலத்தவை. ஆகவே. அவைகளை வெளிநாட்டார் அவ்வளவு விரும்பி வரவேற்கமாட்டார்கள்.

**திரு. சொ. காவேரிமணியம் :** துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் தென் மாவட்டங்களில் தான் விலை உயர்ந்த சிலைத் திருடு அதிகமாக ஏற்படுகிறது. இவைகளைத் தடுக்கும் பொருட்டு ஒரு தனிக் காவல் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே அந்த சிலை திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக மாநில அளவில் தனியாக ஒரு காவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அது பணியாற்றி வருகிறது. எந்த மாவட்டத்தில் அதிகமாகச் சிலை திருடப்படுகிறது என்பதைப் பரிசீலித்து அதற்குத் தக்கபடி அதைத் தடுக்க முயற்சி எடுக்கலாம்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, இதுவரையில் எத்தனை சிலை திருடிய வழக்குகளை நம் அரசாங்கம் பதிவு செய்து இருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1968-ம் ஆண்டில் 79 வழக்குகளும், 1969-ம் ஆண்டில் 63 வழக்குகளும், 1970-ம் ஆண்டில் 112 வழக்குகளும், 1971-ல் இது வரையில் 36 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, பிள்ளையார் சிலையைத் திருடி வைத்தால் தான் மகிமை என்ற காரணத்தால் மாம்பலத்திலும் பிள்ளையார் சிலை திருடி வைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாம்பலத்து சிலையைப் பற்றி இந்த மன்றத்திலே வெகு விரிவாகப் பேசப்பட்டு இருக்கிறது. மீண்டும் அதைக் கிளர வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே. இப்படிச் சிலைகள் நிறைய திருடுபோய் இருக்கின்றனவே, இந்தச் சிலைகளில் ஆண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா பெண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் இந்த பால் வேறுபாடு பார்த்துச் சிலைகளைத் திருடிக்கொண்டு இருப்பது இல்லை. ஏனென்றால் அந்தச் சிலையிலே உள்ள கலை நுட்பங்களைத்தான்





அவர்கள் வெகுவாக ரசிக்கிறார்கள். திருடுபவர்கள் அதை ரசிப்பது இல்லை. திருடுபவர்கள் விலையை ரசிக்கிறார்கள். வெளிநாட்டவர்கள் அதன் கலையை ரசிக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த சிலைகளைத் திருடுபவர்கள் குறைவாக இருந்தாலும், இதற்கென்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிக்கச் செல்வாக்குப் படைத்தவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது புதிய தகவல். மீதமுள்ள தகவல்களையும் தெரிவிக்க வேண்டுகிறேன். (சிரிப்பு)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** புதிய தகவல் இல்லை ; மீதமுள்ள தகவல்களை அரசாங்கம் தன் சிப்பந்திகளைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று தான் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்கம் தனி அதிகாரிகளை மட்டும் வைத்துச் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்றில்லை : மக்கள் பிரதிநிதிகளுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, சிலப்பதிகாரத்தை வார்த்துக்கொடுத்த இளங்கோவிற்குச் சிலை . . . .

Mr. DEPUTY SPEAKER : It is not a relevant question.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது வரையில் 290 சிலைகள் மு.ப. 10-00
திருட்டு இந்த நாலு ஆண்டுக்காலத்தில் பிடிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்படிச் சிலைகளைத் திருடுபவர்கள் கூட்டமாக இருக்கிறார்களா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் கூட்டமாக இல்லாவிட்டாலும், ஒருவருக்கொருவர் தொடர்புள்ளவர்களாக சங்கிலிபோல் தொடர்புகொண்டு காரியங்கள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படும் சிலைகளை வெளிநாட்டில் வைத்துக்கொள்ளாமல், திரும்பவும் இந்தியாவுக்கே பெறவேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டு, குறிப்பாக, தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை காரணமாக, அண்மையில் பாரிசில் நடந்த ஐ.ஜி.க்கள் மாநாட்டில், தமிழக ஐ.ஜி. அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இங்கே திருடப்பட்ட, வெளிநாட்டிலுள்ள சிலைகளைப் பற்றி ஆராய மேலும் அகில உலக, 'இண்டர்-போல்' கூட்டம் வருகிற செப்டம்பர் மாதத்தில் நடக்கும்போது, அது பரிசீலிக்கப்பட இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Was there any instance of policeman stealing idols?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** போலீஸ்காரர்கள் திருடுகிறார்கள்; சில போலி பக்தர்களும் திருடுகிறார்கள்.

[1971 ஜூலை 22

மகாபலிபுரத்திலே அழகிய சிலைகளை நமது அரசாங்கமே தயாரித்து வருகிறதே, அத்தகைய சிலைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் சிலையின் மீது மோகம் கொண்டு திருடவில்லை. அந்த சிலை வடிக்கப்பட்ட காலத்தின் மீது அவர்கள் கொண்டு இருக்கிற அந்தப் பற்றின் காரணமாகத்தான் அவர்கள் அந்தச் சிலைகளை வாங்கிக் கொள்கிறார்கள். மகாபலிபுரத்தில் தயாரிக்கப்படும் சிலைகள் எல்லாம் அண்மைக் காலத்தவை. ஆகவே, அவைகளை வெளிநாட்டார் அவ்வளவு விரும்பி வரவேற்கமாட்டார்கள்.

**திரு. சொ. காவேரிமணியம் :** துணைத் தலைவரவர்களே, பெரும்பாலும் தென் மாவட்டங்களில் தான் விலை உயர்ந்த சிலைத் திருடு அதிகமாக ஏற்படுகிறது. இவைகளைத் தடுக்கும் பொருட்டு ஒரு தனிக் காவல் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஏற்கனவே அந்த சிலை திருட்டைக் கண்டுபிடிப்பதற்காக மாநில அளவில் தனியாக ஒரு காவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டு அது பணியாற்றி வருகிறது. எந்த மாவட்டத்தில் அதிகமாகச் சிலை திருடப்படுகிறது என்பதைப் பரிசீலித்து அதற்குத் தக்கபடி அதைத் தடுக்க முயற்சி எடுக்கலாம்.

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, இதுவரையில் எத்தனை சிலை திருடிய வழக்குகளை நம் அரசாங்கம் பதிவு செய்து இருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 1968-ம் ஆண்டில் 79 வழக்குகளும், 1969-ம் ஆண்டில் 63 வழக்குகளும், 1970-ம் ஆண்டில் 112 வழக்குகளும், 1971-ல் இது வரையில் 39 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, பிள்ளையார் சிலையைத் திருடி வைத்தால் தான் மகிமை என்ற காரணத்தால் மாம்பலத்திலும் பிள்ளையார் சிலை திருடி வைக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாம்பலத்து சிலையைப் பற்றி இந்த மன்றத்திலே வெகு விரிவாகப் பேசப்பட்டு இருக்கிறது. மீண்டும் அதைக் கிளற வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, இப்படிச் சிலைகள் நிறைய திருடுபோய் இருக்கின்றனவே, இந்தச் சிலைகளில் ஆண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா பெண் சிலை அதிகமாகத் திருடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் இந்த பால் வேறுபாடு பார்த்துச் சிலைகளைத் திருடிக்கொண்டு இருப்பது இல்லை. ஏனென்றால் அந்தச் சிலையிலே உள்ள கலை நுட்பங்களைத்தான்



1971 ஜூலை 22]

அவர்கள் வெகுவாக ரசிக்கிறார்கள். திருடுபவர்கள் அதை ரசிப்பது இல்லை. திருடுபவர்கள் விலையை ரசிக்கிறார்கள். வெளிநாட்டவர்கள் அதன் கலையை ரசிக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இந்த சிலைகளைத் திருடுபவர்கள் குறைவாக இருந்தாலும், இதற்கென்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மிக்கச் செல்வாக்குப் படைத்தவர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது புதிய தகவல். மீதமுள்ள தகவல்களையும் தெரிவிக்க வேண்டுகிறேன். (சிரிப்பு)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** புதிய தகவல் இல்லை ; மீதமுள்ள தகவல்களை அரசாங்கம் தன் சிப்பந்திகளைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று தான் சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரசாங்கம் தனி அதிகாரிகளை மட்டும் வைத்துச் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்றில்லை : மக்கள் பிரதிநிதிகளுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, சிலப்பதிகாரத்தை வார்த்துக்கொடுத்த இளங்கோவிற்குச் சிலை . . . .

Mr. DEPUTY SPEAKER : It is not a relevant question.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது வரையில் 290 சிலைகள் மு.ப. 10-00
திருட்டு இந்த நாலு ஆண்டுக்காலத்தில் பிடிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இப்படிச் சிலைகளைத் திருடுபவர்கள் கூட்டமாக இருக்கிறார்களா என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் கூட்டமாக இல்லாவிட்டாலும், ஒருவருக்கொருவர் தொடர்புள்ளவர்களாக சங்கிலிபோல் தொடர்புகொண்டு காரியங்கள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இப்படிக் கொடுக்கப்படும் சிலைகளை வெளிநாட்டில் வைத்துக்கொள்ளாமல், திரும்பவும் இந்தியாவுக்கே பெறவேண்டும் என்ற முயற்சி எடுக்கப்பட்டு, குறிப்பாக, தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை காரணமாக, அண்மையில் பாரிசில் நடந்த ஐ.ஜி.க்கள் மாநாட்டில், தமிழக ஐ.ஜி. அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இங்கே திருடப்பட்ட, வெளிநாட்டிலுள்ள சிலைகளைப் பற்றி ஆராய மேலும் அகில உலக, 'இண்டர்-போல்' கூட்டம் வருகிற செப்டம்பர் மாதத்தில் நடக்கும்போது, அது பரிசீலிக்கப்பட இருக்கிறது.

Thiru K. M. SUBRAMANIAM : Was there any instance of policeman stealing idols?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** போலீஸ்காரர்கள் திருடுகிறார்கள்; சில போலி பக்தர்களும் திருடுகிறார்கள்.

transpired between the State Government and the Central Government and which is not very much in tune with the established principles and policy adopted by the Central Government in the international field?

MR. DEPUTY SPEAKER : There is no point of order. There is no need for any clarification. கேள்விக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிகிறது. அதை நீட்டிக்க அவையின் அனுமதி கோரப் படுகிறது.

**திரு. செ. கந்தப்பன் :** மத்திய சர்க்காருடைய அயல் நாட்டுக் கொள்கையை வகுக்கும்போது, மாநில சர்க்காரையும் கலந்து கொள்வது உசிதம் என்பது சுட்டிக்காட்டப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மத்திய சர்க்காருடைய வெளி நாட்டுக் கொள்கையில், மாநில அரசைக் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிலைமை இல்லை, வேண்டிய முடிவுகளை எடுக்க மத்திய சர்க்காருக்கு உரிமை இருக்கிறது என்றாலும், இப்படிப் பட்ட சங்கடமான சூழ்நிலைகளில் மாநில அரசைக் கலந்து கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும்.

**திரு. துரைமுருகன் :** இப்பொழுது பங்களா தேச அகதிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மத்திய சர்க்கார் வற்புறுத்து கிறது. முதல்வர் அவர்கள் தமிழர்கள் 5 லட்சம் பேர்கள் சிங்களத் திலிருந்தும், பர்மாவிலிருந்தும் வந்திருக்கிறார்கள் என்று சொல் கிறார்கள். அவர்களை மத்திய சர்க்கார் வேறு வட புலத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, இவர்களை நாம் எடுத்துக் கொள்ள முடியாது என்று அறுதியிட்டுச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பதிலுக்குப் பதில், பழிக்குப் பழி என்று அணுகும் பிரச்சினையல்ல இது. மனிதாபிமானத் தோடு அணுகவேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறோம். பிடி வாதத்தைக் காட்டி அந்தக் கண்ணோட்டத்தைக் காட்ட விரும்ப வில்லை.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir are the Government aware that the Government of India are taking undue advantage of the kindness of Tamil Nadu in imposing this condition of rehabilitating the refugees, whereas there has not been any such stipulation as far as other States are concerned?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்பற்றி அதிகமாகச் சொல்லிக் கொண்டிருக்க விரும்பவில்லை.

**திரு. சொ. கவேரிமணியம்:** நம்முடைய மாநிலத்து மக்கள் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பிரசாரம் செய்கிறோம். இந்த நேரத்தில் அகதிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், அது நம்முடைய நலனைப் பாதிக்கும் என்பதை அரசு வலியுறுத்திச் சொல்லுமா?

(பதில் இல்லை)



### சேலத்தில் கள்ள நோட்டுகள் அச்சடிப்பு.

* 365 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ஆம் வருடம், மே மாதம் சேலம் நகரில் கள்ள நோட்டுக்கள் அச்சடித்ததாகக் கைது செய்யப்பட்டவர்கள் யார் யார் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சேலத்தில் 1971 மே திங்களில் கள்ள நோட்டு அச்சடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, (1) கந்த சாமி, (2) முத்துசாமி, (3) நாராயணசாமி நாயுடு ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கைதானவர்களில், பழைய குற்றவாளிகள் இருக்கிறார்களா? கள்ள நோட்டு அடிப்பவர் களைத் தண்டனைக்கு உள்ளாக்கும்போது, தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று ஆலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பல கேள்விகளை இணைத்துப் போடப்பட்டிருக்கிறது. பொதுவாகக் கள்ளநோட்டு அடிப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள். தூக்குத் தண்டனை போடு வதுபற்றிய குறிப்பேடுகள் எதுவும் இல்லை. தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக் கொள்வதாக இல்லை.

DR. H. V. HANDE : This counterfeiting of notes has become a very serious matter and in spite of having regularisation of taxation and other things which we have carefully adopted, the entire State is completely ruined. Will the Hon. Chief Minister do something for these counterfeit notes? May I know whether this Government are taking concrete steps in touch with the other States—counterfeit notes from other States may also come—like the Interpol System or conjoint action to see that manufacturing of counterfeit notes is completely removed from this place and also such notes coming from other States to this State is prevented? Will these things be co-ordinated properly and necessary action be taken?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது மற்ற மாநிலங்களுடன் இணைந்து செய்யப்படக்கூடிய ஒரு காரியமாக இல்லாவிட்டாலும் மற்ற மாநிலங்களோடு கலந்து செய்யப்படுகின்ற காரியமாக இன்றைக்கு இருந்து வருகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டு மானால், இப்பொழுது கூட கேரளாவில் இருந்து சி.ஐ.டி. இலாகா வைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திற்கு வந்து பலரைக் கைது செய் திருக்கிறார்கள். கேரளாவில் கள்ள நோட்டு அடித்தவர்கள் இங்கே

வந்து புழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆகவே, உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல் இதிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது.

திரு. கா. காளிமுத்து : கள்ள நோட்டுக்களை அடிப்பவர்கள், இந்தியாவின் நோட்டுக்களைத் தவிர அமெரிக்க நாட்டின் நோட்டுக்களையும் அடிக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட திறமைசாலிகள் தமிழ் நாட்டில் இல்லை. அவர்கள் கேரளாவிலே இருப்பதாகக் கேள்வி. அவர்கள் தமிழ் நாட்டிலே மூன்று இடங்களிலே பிடிபட்டிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கந்தசாமி, முத்துசாமி, நாராயணசாமி போன்றவர்கள் பல இடங்களிலே கள்ள நோட்டு அடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டதாகப் பார்க்கிறோம். ஆனால் அப்படிப்பட்டவர்கள் கோர்ட்டுகளிலே விசாரிக்கப்பட்டு எவ்வளவு சீக்கிரமாக, எவ்வளவு ஆண்டுகள் தண்டிக்கப்பட்டார்கள் போன்ற விவரங்கள் எல்லாம் பத்திரிக்கையிலே வருவது கிடையாது. அப்படி அவைகள் எல்லாம் பத்திரிக்கையில் வருவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு அங்கே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் அவ்வப்போது ஏடுகளிலே வருகின்றன. இந்த வழக்குகள் விரைவாக நடத்தப்பட அரசு ஆவன செய்து வருகிறது.

திரு. சோ. கருணாநாதன் : மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திற்கு வந்து கள்ளநோட்டு அடிக்கிறார்கள். அப்படி அடிப்பதற்கான மூலப்பொருள்கள் தமிழ்நாட்டிலே சுலபமாகக் கிடைப்பது தான் காரணமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதற்கு மூலப் பொருள் தேவையில்லை. 'மூளைப் பொருள்' தான் தேவை.

திரு ஏ. ஆர். சுப்பையா : வாரச் சந்தைகளிலே தான் அதிகமாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கள்ள நோட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றன. தென்காசி தாலுக்கா போன்ற இடங்களிலே இப்படிப்பட்ட நோட்டுக்கள் அதிகமாகப் பழக்கத்தில் இருக்கிறது. எனவே, அப்படிப்பட்டவர்களைப் பிடிப்பதற்காக, வாரச் சந்தைகளுக்குத் தனி போலீஸ் அதிகாரிகளை அனுப்பமுடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதை உறுப்பினர் அவர்கள் தனியாகச் சொல்லி இருந்தால், அதிகாரிகளை அனுப்பி அவர்களைச் சுலபமாக கைது செய்திருக்கலாம். இப்படிப் பகிரங்கமாகச் சொல்லிவிட்டதால், வாரச் சந்தைக்கு வரும் கள்ள நோட்டு விநியோகஸ்தர்கள் உஷாராகி விடுவார்கள்.



நிலஉச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் உள்ள உபரி நிலங்கள்.

* 378 வினா—திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு நில உச்ச வரம்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு உள்ள உபரி நிலங்கள் இம்மாநிலத்திலுள்ள நிலமற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்;

(இ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (உபரி நிலங்கள் முடிவு செய்தல்) விதிகள் 1965-ன் விதி 5 (1)-ல் குறிக்கப்பட்டுள்ள முறைப்படி உபரி நிலம் தகுதி உள்ளவர்களுக்கு அடமானம் செய்யப்படுகிறது. இதுவரை 10,714 நபர்களுக்கு 18,752 ஏக்கர் அடமானம் செய்யப்பட்டுள்ளது. நிலமில்லாத ஏழை மக்களுக்கும் மற்றவர்களுக்கும் மேலே குறிப்பிட்ட முறையில் எவ்வளவு நிலம் அடமானம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தயாராக இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், 30 ஏக்கர் என்று உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்த போது, எத்தனை ஏக்கர் உபரி நிலம் எடுப்பதாக உத்தேசத்தில் இருந்தது ? இப்பொழுது கழக ஆட்சி வந்ததும், 15 ஏக்கர் என்று உச்சவரம்புச் சட்டம் செய்ததன் மூலமாக எத்தனை ஏக்கர் நிலம் எடுக்கப்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்ச வரம்பு இருந்த பொழுது 'எக்ஸ்டன்ட் நோட்டிபைடு ஆஸ் சர்ப்பளஸ்' 28,317. இப்பொழுது இன்னும் விவரம் கையிலே வரவில்லை. வந்ததும் இந்த அவையிலே சொல்லுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழே உபரி நிலங்கள் அதிகமாக அரசாங்கத்திற்கு வரும். அதை நிலம் இல்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம் என்று எதிர்பார்த்தது. ஆனால், இந்த சட்டம் வருவதற்கு முன்னாலேயே பலர் தங்களுக்கு இருந்த அதிகப்படியான நிலங்களைப் பல்வேறு பிரிவாகப் பிரித்து எழுதிக் கொண்டதாலே சர்க்கார் எதிர்பார்த்த நிலம் கிடைக்காமல் போய்விட்டது என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிலம் அற்ற விவசாயிகளுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கும் வகையிலே உபரி நிலம் அதிகமாகக் கிடைக்கும் என்று அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால், எதிர்பார்த்தபடி உபரி நிலம் கிடைக்கவில்லை என்பது உண்மை தான்.

[1971 ஜூலை 22

## தொரனூர்—சொக்கனூர் சாலை.

* 379 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் யூனியன், தொரனூரிலிருந்து சொக்கனூர் செல்லும் பாதையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே. திருப்பூர் யூனியன் தொரனூரிலிருந்து சொக்கனூர் செல்லும் பேருந்துப்பாதை மிகச் சிறியதாக இருக்கிறது. பஸ் போகும் நேரத்திலே விவசாயிகள் தங்களுடைய மாட்டு வண்டிகளை ஓட்டி வந்தால், மிக சிரமம் ஏற்படும் நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாதை அகலப்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, இந்தச் சாலையில் 4 மைல் 2 பர்லாங் நீளத்திலே 1 மைல் 6 பர்லாங்கை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்தச் சாலை முழுவதும் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

## மாயூரம்—மணல்மேடு நெடுஞ்சாலை.

* 380 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம்—மணல்மேடு நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு தற்போது ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரத்திலே இருந்து மணல்மேடு செல்லும் சாலை பழுது அடைந்து சீர்கெட்டிருக்கிறது. இதை விரிவுபடுத்தவிருக்கிறது இந்த அரசு என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 'இன்டென்சிவ் டெவலப்மென்ட் அகிரிகல்ச்சுரல் புரகிராமின்' கீழ் சீர்திருத்த வேலை செய்யலாம் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.



1971 ஜூலை 22]

## அரசு அலுவலகங்களில் மின் விசிறி.

* 381 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் மின் விசிறி அமைத்திட அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சட்ட சபையிலே மேலே ஓடுகின்ற மின் விசிறிகளிலே இருந்து காற்றுச் சரியாக வருவதில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்களா ? அதை ஏதாவது சீர்படுத்த வழி வகை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த விசிறிகளிலே இருந்து காற்று நன்றாகவே வருகிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தனியார் கட்டடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற நீதி மன்றங்களிலே மின் விசிறிகளைப் பொதுப் பணித்துறை தலையிட்டுப் பொருத்த வேண்டும். அப்படி மின் விசிறிகளை இந்தப் பொதுப்பணித் துறை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நீதி மன்றங்களிலே மின் விசிறிகள் அமைக்கப்பட வேண்டுமென்றால், ஹைகோர்ட்டு அதற்கான சிபாரிசை செய்ய வேண்டும். அப்படி தனியானக் கோரிக்கை வரும்பொழுது அதை ஏற்று நடத்த முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

## *New Railway lines.*

* 382 Q.—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have addressed the Centre recently to start any new Railway line in the State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஆம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் அவற்றிற்கு இணைக்கப்பட்டுள்ள வரிசை முறையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக இந்திய அரசிடம் பரிவுரை செய்யப்பட்டுள்ளது. சென்னை-அரக்கோணம், சென்னை-கும்மிப்பூண்டி பிரிவுகளில் மின்சார ரயில் பாதைகள் போடுதல்.

சேலத்திலிருந்து கரூர் வழியாகத் திண்டுக்கல் வரை புதிய அகல ரயில்பாதை போடுதல்; மணியாச்சி-திருநெல்வேலி குறுகிய இணைப்புப் பாதை உட்பட திண்டுக்கல்-தூத்துக்குடிப் பிரிவை அகல ரயில் பாதையாக மாற்றுதல்;

திருநெல்வேலியிலிருந்து திருவனந்தபுரம் வரை (நாகர் கோயில்-கன்னியாகுமரி வழியாக) புதிய ரயில் பாதை அமைத்தல்;

திருச்சிராப்பள்ளி--விழுப்புரம் குறுக்கு ரயில்பாதையை அகல ரயில்பாதையாக மாற்றுதல்;

விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டு வரை கூடுதல் அகல ரயில் பாதை ஒன்று அமைத்தல், அரக்கோணம்--செங்கற்பட்டு ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்றுதல்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சின்ன சேலத்திலே இருந்து பட்டாளத்திற்கு ஒரு ரெயில் பாலம் அமைக்கும் திட்டம் 20 ஆண்டுகளுக்கு முன்னால் வகுக்கப்பட்டு, அதற்கான சர்வே எல்லாம் எடுக்கப்பட்டுத் தயாராக உள்ளது. அதனால் வட ஆற்காடு மாவட்டம் பலன் பெறும் என்பதால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு மத்திய அரசுக்கு இந்த அரசு வற் புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே இந்தத் திட்டத்தைப் பற்றி மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டியது மத்திய அரசின் பொறுப்பைச் சாரும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : திருநெல்வேலி-கன்னியா குமரி ரெயில் பாதையைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். இந்தப் பாதையை நிறைவேற்றும் பொருட்டு ரயில்வே போர்டிலே இருந்து அனுமதி வழங்கப்பட்டதா ? அதன்பொருட்டு நம்முடைய மாநில அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா ? அப்படி ஏதாவது தகவல் வந்திருந்தால், இந்த வேலை எப்பொழுது துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : In October 1968 it was decided by the Ministry of Railways that a fresh re-apparisal for this line should be taken up. Accordingly, with a view to finding out the justification for this line, the Southern Railway has been advised in May 1969, to take updating of the earlier survey reports for the metre-gauge line and carrying out a fresh survey for an alternative broad-gauge rail line at an estimated cost of Rs. 1.58 lakhs and these are already in progress. The field work on the Engineering Survey has been completed and the report is under compilation. The traffic survey is in progress and 70 per cent progress has been achieved upto the end of Febrhary 1970. Further consideration to the project will be given after the results of the survey become known.



*State Agro-Industries Corporation*

* 383 Q.—Thiru A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any change of personnel in the Chairmanship of State Agro-Industries Corporation?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

**சலவை, சவரத் தொழிலாளர்களுக்கு உதவிகள்.**

* 384 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சலவைத் தொழிலாளர்களுக்கும், சவரத் தொழிலாளர் களுக்கும் அவர்கள் தொழில் நிலையங்களைக் கூட்டுறவு முறையில் அமைப்பதற்கு ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்களுக்கும், சவரத் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கடனுதவி செய்வதுடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும் கடனுதவி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் அந்த மாதிரி அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அவர்களுக்கு அந்த உதவி உண்மையில் கிடைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1966-67-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக) 60 சலவைத் தொழிலாளர்களுக்கும், 60 சவரத் தொழிலாளர்களுக்கும் அவரவர்கள் தொழில் செய்ய அவர் களுடைய தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி சலவைத் தொழிலாளர்களுக்கு நபருக்கு ரூ. 110 பெறுமான சலவைக் கருவிகளும் சவரத் தொழிலாளர்களுக்கு நபருக்கு ரூபாய் 75 பெறுமானமுள்ள சவரக் கருவிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அண்மையில் அமைக்கப்பட்ட பிற்பட்டோர் நலக்குழு தனது பரிந்துரைகளில் தொழில் கருவிகள் வழங்குதல் பற்றி பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது :—

" கிராமங்களில் சலவைத் தொழிலாளர்களுக்கும், சவரத் தொழிலாளர்களுக்கும் நல்ல தரமான கருவிகள், சாதனங்களை இலவசமாக வழங்கவேண்டும். நகர்ப் பகுதிகளில் முடிதிருத்தும் நிலையங்கள், சலவை நிலையங்கள் ஆகியவைகளைச் சொந்தத்தில் வைத்து நடத்தும் இவ்வகுப்பினருக்குப் பகுதிக் கடன் அடிப் படையில் கருவி சாதனங்கள் வழங்கப்பெற வேண்டும்."

மாநிலத்தின் நிதி நிலைமையை முன்னிட்டு இப்பரிந்துரையைப் பின்னர் ஆய்வு செய்யலாமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர சலவை, சவரத்தொழில் நிலையங்கள் கூட்டுறவு முறையில் அமைப்பதற்கான குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

*Suriliar Hydro Electric Scheme*

* 385 *Q.*—THIRU N. K. PALANISAMI :
THIRU P. MALAICHAMY : Will the Hon. the Minister forElectricity be pleased to state :

(*a*) whether any decision has been taken up in regard to Suriliar Hydro Electric Scheme; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) தமிழ்நாடு மின் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட, சுருளியாறு புனல்மின் திட்டம் பற்றிய விரிவான அறிக்கைக்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள சுருளியாறு, நீரைப் பயன்படுத்தி விசை உற்பத்தி செய்ய, இத்திட்டம் வகை செய்கிறது. இத் திட்டத்திற்காகும் செலவு ரூ. 617 லட்சமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் கீழ்த் திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையம் 35 மெ. வா. நிறுவப்பட்ட திறனளவு உடையதாக இருக்கும். இத்திட்டம் பற்றிய விரிவான அறிக்கை குறித்துத் தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்காகவும் அதற்குத் திட்டக் குழுவின் ஒப்புதலைப் பெறுவதற்காகவும் இந்திய அரசைச் சேர்ந்த மத்திய நீர் மின் குழுவிற்கு 26—5—70 அன்று அது அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய நீர் மின் குழுவின் அனுமதியும் திட்டக் குழுவின் ஒப்புதலும் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆறு கோடி ரூபாய் திட்டத்தில் இந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மொத்தத்தில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆறு கோடி பதினேழு இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எவ்வளவு என்று பிரித்துச் சொல்ல இயலாது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, எப்பொழுது முழுமையாக வேலை தொடங்கப்படுமென்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வெகு விரைவில்.

திரு. கே. பி. கோபால் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தால் சுருளியாற்றினால் பாசனம் நடைபெறும் இடங்கள் பாதிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதிலிருந்து பிரிகின்ற நதிகள் (டிரிபியூடரிஸ்) மூலம் பசானம் நடைபெறுபவை பாதிக்கப் படாது.





*Route Permit for Kumbakonam Co-operative Motor Transport Society*

* 386 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether a memorandum, dated 27th March 1970 has been received from the Kumbakonam Co-operative Motor Transport Society Limited requesting route permits to be given to the Society; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம். பேருந்து வழித்தட உரிமங்கள் வழங்கக்கோரி கும்பகோணம் கூட்டுறவு மோட்டார் போக்குவரத்து சங்கத்திடமிருந்து 27—3—1970 நாளிட்ட கோரிக்கை மனு ஒன்று தஞ்சாவூர் வட்டாரப் போக்கு வரத்து அதிகாரி அவர்களுக்கு வந்தது.

(இ) தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி வலங்கைமான், வெட்டாறுபாலம், பெருங்குடி வழியாக, கும்பகோணத்திலிருந்து அரித்துவாரமங்கலம் செல்லும் பேருந்து வழித்தடம் ஒன்றிற்கு இச்சங்கத்திற்கு 26-5-70 அன்று உரிமம் வழங்கினார்.

DR. H. V. HANDE : The Hon. Minister in his reply said that it was on 26th May 1970 the permit was granted. Is it not a fact that this Kumbakonam Motor Transport Society had applied for route permit on 12th May 1967? Is it not a fact that this society was inaugurated by the Hon. Minister for Industries and the society had purchased some bus in the year 1967, in anticipation of Government giving permit? Is it not a fact, that for three years, because of administrative delay, this bus was kept idle? May I know the reasons for three years' delay?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எனக்கு இங்கே தரப்பட்டிருக்கின்ற தகவல் 1-4-1970 அன்றும் 21-4-1970 அன்றும் அரசைக் கேட்டிருக்கிறார்கள். 1967-ஆம் ஆண்டில் அவர்கள் என்ன செய்தார்கள் என்பது தெரியாது. வழித் தடங்கள் அனுமதியளிப்பது ஆங்காங்கே உள்ள தேவையைப் பொறுத்து மண்டல அதிகாரிகள் தீர்மானித்துச் செய்யப்படுகிறது.

DR. H. V. HANDE : In that memorandum itself it has been clearly stated. A copy of the memorandum is with me. It had already been given to Government. There the complainant had said that they had applied for permit as early as 1967. I just want to bring it to the attention of Government. May I know from the Hon. Minister whether suitable inquiry will be conducted and whether suitable action would be taken if it is found that it is due to departmental delay?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பஸ் வாங்கிவிட்டார்கள் என்பதற்காக வழித்தடங்கள் அனுமதி கொடுப்பது என்பது முடியாத காரியம்.

**திரு. நா. வீராசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழித்தடங்கள் லைசன்ஸ் வழங்குகின்றபோது முன்னாள் ராணுவத்தினர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அரசு உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரும்ப கோணத்தில் இருக்கின்ற முன்னாள் ராணுவத்தினர் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டால் கொடுக்கவில்லை. அதற்கான முறையில் சட்டம் செய்யப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள சட்டத்தின்படி அதர் திங்ஸ் பீயிங் ஈக்குவல், மற்றவர்களுக்குச் சமமாகவிருந்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை அளிக்க வேண்டுமென்று சட்டமிருக்கிறது. ஆனால், அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது.

*City routes for private buses*

* 387 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the route miles for the private buses plying as City buses have been increased;

(*b*) if so, the result thereof;

(*c*) whether it is a fact that some areas in Madurai District are not covered even after official announcement was made; and

(*d*) if so, the reasons thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது மத்திய சர்க்காரின் விதி முறைப்படி 15 மைலுக்குள் ஓடுகின்ற பஸ்கள் எல்லாம் சிடி பஸ்கள் என்று மாற்றப்பட்டு வருகிறது. அது மாதிரி பல சிடி பஸ் ரூட்கள் ஆரம்பிக்கப்பட்ட வகையில் மதுரை—திருமங்கலத் திற்கிடையே இப்பொழுது நான்கு பஸ்கள் தான் போகிறது. அந்த ரூட்டில் அதிக பஸ்கள் விட அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த நகர பஸ்களை அதிகரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் மதுரை-திருமங்கலம் ரூட்டில் டெம்பரரி பர்மிட்டில் நான்கு பஸ்கள் ஓட இப்பொழுது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டுக்கு அனுமதி அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அவ்வப்போது தேவைக்கேற்ப அதிகாரிகள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒற்றிவைப்புத் தீர்மானம்

### திருச்சி நகரத்தில் காவல் துறையினர் செய்த தடியடியும் அதன் விளைவுகளும் குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறார்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, நான் அறிக்கை கொடுத்திருக்கும் மிகவும் அவசரமும் முக்கியத்துவமும் வாய்ந்த ஒரு தீர்மானத்தைப் பற்றி எனது கருத்தைச் சுருக்க மாகச் சொல்ல விரும்புகிறேன்.

Sir, I move that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance, i.e., "That the Police resorted to lathi charge in Trichy Town on 20th July 1971 in which many people suffered injuries."

என்று கொடுத்திருக்கிறேன். இது சம்பந்தமாக எனக்குக் கிடைத்துள்ள தகவல்களைப் பற்றி இங்கே சுட்டிக் காட்டுகிறேன். ஒரு ஆங்கிலோ-இண்டியன் பெண்மணி, இரண்டு வாரங்களுக்கு முன்னால் திருச்சியில் பிராம்மணர்களும் மற்றவர்களும் குடியிருக்கின்ற ஒரு பகுதியில் தனிமையாக இரவு நேரத்தில் சென்று கொண்டிருந்த நேரத்தில் யாரோ சிலர் அந்தப் பெண்மணியைப் பரிகாசம் செய்ததாகவும், அது சம்பந்தமாகப் போலீசாருக்கு அந்தப் பெண்மணி ஒரு புகார் கொடுத்த தாகவும் தகவல் வந்திருக்கிறது. அந்த மனு இரண்டு வார காலத்திற்கு விசாரணை செய்யப்படாமல் இருந்து, மறுபடியும் 19-ஆம் தேதியன்று அதைப் புதுப்பித்ததாகவும் அன்றையதினம் ஒரு சில டாக்சி டிரைவர்களையும் ஆட்டோ ரிக்‌ஷா டிரைவர் களையும் திரு. கல்யாணசுந்தரம் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கைது செய்திருக்கிறார். அவர்களை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டுமென்று தொழிலாளர்கள்சார்பில் கேட்கப்பட்டு அதற்கு வேண்டிய ஜாமீனையும் கொடுக்க அவர்கள் தயாராகவிருந்தார்கள். ஆனால் ஏதோ சில காரணத்தால் அந்த எஸ்.ஐ. அவர்களும் அந்த இலாக்காவினரும் அவர்களை ஜாமீனில் விடுவதற்கு மறுத்த தாகவும் அதைத் தொடர்ந்து 20-ஆம் தேதியன்று இது சம்பந்தமாகத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்ட தாகவும், அதிலிருந்து லத்தி சார்ஜ் செய்ததாகவும், அந்த லத்தி

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 22

சார்ஜில் நான்கு பேர் தலையில் காயமேற்பட்டதாகவும், அவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்தத் தொழிலாளர்கள் இயக்கத்திலிருப்பவர்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களல்லர். எல்லாக் கட்சியையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் போலீஸ் அத்து மீறி நடந்ததாக இப்பொழுது ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவம் அன்றாட நிர்வாகத்தைப் பொறுத்ததல்ல என்ற காரணத்தால், அதைப்பற்றி விசாரணை நடத்தும் வகையில் இந்த மன்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : THIRU K. T. K. Thangamani and Thiru N. Marudhachalam have also given notice of similar motions.

THIRU K. T. K. THANGAMANI : With your leave, Mr. Speaker Sir, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules I give notice of the following Adjournment Motion :

"Unprovoked lathi charge of a severe nature by the Police in Tiruchi on 20th July 1971 on the unarmed taximen seriously injuring four and consequent protest strike by taximen and auto-rickshawmen".

சில விவரங்களை ஏற்கனவே மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரை ஒரு வாரத்திற்கு முன்பு அங்கே இன்ஸ்பெக்டராக ஒருவர் வந்திருக்கிறார். அங்கு இருக்கக்கூடிய டாக்ஸிமென்கள் சங்கம் திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்டு சங்கமும் சேர்ந்து இணைப்பாக இருக்கக்கூடியது. அதில் இருக்கக்கூடிய பல டாக்ஸி டிரைவர்கள் சொந்தமாக டாக்சி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இன்ஸ்பெக்டர் தம்முடைய இஷ்டத்திற்கு சில காரியங்களைச் செய்யவேண்டுமென்று அவர்களை வற்புறுத்த அவர்கள் மறுத்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்றே ஊகிக்கவேண்டியதாக இருக்கிறது. 19-ஆம் தேதி இரவு எந்த விதமான நிகழ்ச்சியும் நடக்கவில்லை. அதுவும் அந்தப் பகுதி முஸ்லீம்களும், பிராமணர்களும் சேர்ந்திருக்கக்கூடிய பகுதி. பெண்களைக் கேலி செய்ததாக, நையாண்டி செய்ததாக வீட்டில் இருந்த டாக்சி டிரைவர்களை கைதுசெய்து போயிருக்கிறார்கள். மறுநாள் சங்கத்தின் தலைவர் அர்ஜுனன் வேண்டுகோள்படி வேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றிருக்கவேண்டும். ஆனால், அத்து மீறி போலீசார் தாக்கியதில் வீரமணி என்ற டாக்சி டிரைவரும், நான்கு பேர்களும் காயமுற்று இருக்கிறார்கள். அங்குள்ள நிலைமையை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலியாணசுந்தரம் பார்த்திருக்கிறார். இன்னமும் அங்கே பதட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. குறைந்தபட்சம் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் டையாவது போட்டு விசாரணை நடத்தினால்தான் இதில் திருப்தி



1971 ஜூலை 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஏற்படும். இது சட்டப் பிரச்சினை அல்ல என்ற காரணத்தினாலும், போலீசார் அத்துமீறிய செயல் என்ற காரணத்தினாலும் இந்தத் தீர்மானத்தை உங்கள் முன்னால் கொண்டு வந்திருக்கிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது திரு. பொன்னப்பநாடார் அவர்களும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் உள்ளபடியே அவர்கள் விரும்புவதுபோல ஒத்திவைத்து விவாதித்தாலும் விவாதத்திற்கு விஷயங்கள் அதிகமாக இல்லாத தீர்மானம் என்பதை உணர்கிறேன். அவர்களும் அப்படித்தான் எண்ணுவார்கள் என்று கருதுகிறேன்.

நமது பொன்னப்ப நாடார் தொடக்கத்தில் குறிப்பிட்டதைப் போல திருச்சியில் தெருவில் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்ணை வழியில்போன ஹுசேன் கான், ஹபீப் முகமது, அப்துல் சுக்கூர், நடேசன், சீனிவாசன், ஜெயராமன் என்கிற 6 பேர்களும் கேலி செய்தார்கள் என்று அவர்கள் மீது புகார் தெரிவிக்கப்பட்டு 19—7—71 அன்று நடு இரவில் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது போடப்பட்ட கேசும் பெட்டி கேஸ் என்ற அளவில்தான் போடப்பட்டிருக்கிறது. இரவு 11 மணிக்குக் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கேட்பதற்காக மறுநாள் 20—7—71 அன்று காலை 8½ மணிக்கு 50 கார், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் மேலப்புலிவார் ரோடு, மெயின் கார்டு கேட்டு சாலையின் குறுக்கே தங்கள் வண்டிகளை போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்திவைத்ததோடு மாத்திரம் அல்ல, அவ்வழியே வந்த ஏனைய பேருந்துகளை நிறுத்தியும், அதன் ஓட்டுநர்களை வண்டிகளை ஓட்டவேண்டாம் என்று கோரியும், மற்றும் பிரயாணிகளை வண்டிகளைவிட்டு கீழே இறங்கச் சொல்லியும் குழப்பம் ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கினார்கள்.

அன்று காலை மேற்கண்ட ஆறு நபர்களைக் கைது செய்த கோட்டை காவல்நிலைய ஆய்வாளர் திரு. கல்யாணசுந்தரம் ஒரு சிறு காவலர் படையுடன் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்படி இடத்திற்கு வந்து சேர்ந்தார். அத்தருணத்தில் கூட்டத்தினரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஓர் ஆயிரத்தை எட்டி விட்டது. கூட்டத்தினர் கோட்டை காவல் நிலைய ஆய்வாளரின் மீதும், மற்றவர்களின் மீதும் கற்களையும் காலணிகளையும் வீசி தாக்கத் தொடங்கிய பிறகு அவர்கள் தடியடிப்பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதில் காயமுற்றோர் நான்கு பேர்களும் திருச்சி அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சென்றிருக்கின்றார்கள். பெரிய அளவில் சம்பவம் முற்றுவிட்டாலும் அன்றைய கல்லெறியினால் காவல் துறை ஜீப் எண் எம். டி. ஜி. 1381 முன்புறக் கண்ணாடி முழுவதும் சேதமுற்றது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அவைகளுக்குப் பிறகு திருச்சி நகரத்தில் இப்போது அமைதி நிலவுகிறது. சம்பவத்திற்குக் கண்டன ஊர்வலம் 21—7—71 அன்று மாலை நடத்த வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்ததும் கைவிடப் பட்டிருக்கிறது. இப்போது திருச்சி நகரத்தில் அமைதி இருந்து வருகிற காரணத்தினால், இது தெருவில் நடந்து செல்கிற பெண் களுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கவேண்டுமென்ற முறையில் 6 பேர்கள் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியை ஒட்டியதாதலால் இது அன்றாட அளவில் போலீசார் எடுக்கிற நடவடிக்கை என்கிற முறையில் ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இது அரசாங்கத்தின் அன்றாட நிகழ்ச்சிக்கு அப்பாற்பட்டதல்ல என்ற காரணத்தினால் ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கிறேன்.

## (3) கவன ஈர்ப்பு

### இலங்கைவாழ் தமிழ் குடிமக்களுக்கு, இலங்கை அரசால் புதிதாக நிறைவேற்றப்பட்ட சட்டத்தினால் ஏற்பட்டுள்ள தடைகள், தொல்லைகள் இவற்றால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir, under Rule 41 of the Tamil Nadu Legislative Assembly Rules, I call the attention of the Hon. Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely, the serious situation arising out of the legislation passed by the Ceylon Government under plea of enforcing Sastri agreement resulting in new impediment and harassment to one million citizens of Indian descent, mostly from Tamil Nadu and Kerala and the casual attitude of the Government of India and I request the Hon. Minister to make a statement.

THIRU K. SUPPU : Mr. Speaker, Sir, I have also given a call attention notice relating to the same matter.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : தலைவர் அவர்களே, இலங்கை வாழ் "இந்திய மக்கள்" என்று வகைப் படுத்தப்பட்ட மக்கள் பொதுவாக இரண்டு பிரிவினராவர் :

(அ) இந்திய குடியுரிமை பெற்று இந்திய பயண ஆவணங்கள் இருப்பவர்கள்;

(இ) "குடியுரிமையற்றோர்" எனப்படுவோர். இவர்கள் 1954-ம் ஆண்டு நேரு-கோடேலாவாலா ஒப்பந்தத்தின் கீழ் அல்லது 1964 ஆண்டு சாஸ்திரி-சிரிமாவோ உடன்படிக்கையின் கீழ் வருபவர்கள்.



2. (அ) பிரிவைச் சேர்ந்தவர்கள் குடியிருப்பு அனுமதி பெற்று இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இந்தியாவைச் சார்ந்தவர்களென இவர்களில் பலர் தாமாகவே இந்தியா திரும்பினர். இன்னும் பலர் தொடர்ந்து குடியிருப்பு அனுமதியின் கீழ் இலங்கையில் வசித்தனர். இலங்கை அரசு எடுத்துவரும் சில நடவடிக்கைகளால் பாதிக்கப்படுபவர் இவர்கள்தான்.

3. அண்மைக் காலத்தில், இலங்கை அரசு, வைர வியாபாரிகள், நகை வணிகர்கள், சிறு வியாபாரிகள், கள் இறக்குவோர் போன்ற பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த இந்தியர்களின் குடியிருப்பு அனுமதிகளை ரத்து செய்யும் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது. இந்தியர்களின் முற்றுரிமையின்கீழ் இருந்த, உணவு இறக்குமதி வாணிகம், பஞ்சாலை போன்ற வர்த்தகப் பிரிவுகள் பலவற்றை நாட்டுடைமையாக்கப்படக் கருதப் பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் இந்தியர்களுக்குப் பெரும் தொல்லைகளை விளைவித்துள்ளன. இவர்களிற் பெரும்பான்மையினர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்தத் தகவலை நாம் ஏற்கனவே, 1970 நவம்பரிலேயே இந்திய அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். இருப்பினும், 1970 நவம்பர் 10-ஆம் நாளன்று நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கொண்டுவரப்பட்ட நாட்ட ஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதில் அளிக்கையில், மத்திய அரசின் வெளி விவகாரத்துறை அமைச்சரும், துணை அமைச்சரும் இது குறித்து மக்களவையில் அறிக்கைகள் அளித்துள்ளாரெனத் தெரிய வருகிறது.

இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் திட்டவட்ட மாக இந்தியருக்கெதிராகப் பிறப்பிக்கப்பட்டவையல்ல என்றும், அந்நடவடிக்கைகள் பொதுவாக எல்லா இந்தியரைப் பாதிக்காது என்றும் 200 வாணிகர்கள் மட்டுமே அதனால் பாதிக்கப்படுவர் என்றும் இடையூறுகளைத் தீர்க்க உயர்நிலையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவது தேவையென்று இந்திய அரசு கருதவில்லை என்றும் தொல்லைகள் எழுந்துள்ளது எனும் பேச்சுக்கே இடமில்லை என்றும் கூறினர். இருந்தபோதிலும், 1970, நவம்பர் 23- தேதியன்று லோக் சபாவில் பேசுகையில், வெளி விவகாரத்துறை அமைச்சர் அவர்கள் இலங்கையில் பயண நுழைவுச் சீட்டு வரியால் இந்தியர்கள் படும் தொல்லைகளைப் பற்றி மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொள்ளும் என்று கூறினர். அதற்குப் பிறகு ஒப்பந்தங்களின் கீழ் வரும் இந்தியர்களுக்குப் பயண நுழைவுச் சீட்டு வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. இலங்கை அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட 1964-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் வராத இந்த அகதிகளுக்கு உதவி அளிக்கும் கருத்தை இவ்வரசு ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. இது பற்றிய முடிவை விரைவில் எடுக்கும்படி மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம்.

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1971 ஜுலை 22

4. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினரால் குறிப்பிடப்படு கின்ற, அண்மையில் இயற்றப்பட்ட சட்டம் இது சம்பந்தமானது அல்ல. இந்தச் சட்டம் முன்பு கூறப்பட்ட 'இ' பிரிவைச் சார்ந்த வர்களை சம்பந்தப்பட்டது. நேரு-கோடேலாவாலா ஒப்பந்தத்தின் படி 10—10—1954 தேதியன்று வேலையில் அமர்ந்திருந்து இந்திய குடியுரிமை பெற்றவர்கள் 55 வயதுவரை இலங்கையிலேயே வாழ முடியும். 1964 அக்டோபரில் குடியுரிமையற்ருேர் 1964 ஆண்டு சிரிமாவோ-சாஸ்திரி உடன்படிக்கைக்கு உட்படுவார். மேலும் குடியுரிமையளித்தலும் தாயகத்துக்குத் திருப்பியனுப்புதலும், ஒவ்வொரு நிலையிலும் இயன்றவரை ஒன்றுக்கொன்று எண்ணிக் கையளவு விதாசாரம் ஒத்திருக்குமாறு அமைதல் வேண்டும். அதாவது குடியுரிமையளிக்கப்படவிருப்போர் எண்ணிக்கையான 3 லட்சத்திற்கும், தாயகத்துக்குத் திருப்பியனுப்பப்பட விருப்போர் எண்ணிக்கையான 5.25 லட்சத்திற்கும் உள்ள விதா சாரத்தின்படி இருக்கவேண்டும். "தாயகத்துக்குத் திருப்பி யனுப்பப்படவிருப்போர்" என்ற சொற்றொடருக்கு விளக்கமாகவே அண்மையில் இயற்றப்பட்ட சட்டம் உள்ளது. 1964-ஆம் ஆண்டுச் சட்டத்தை செயல்படுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட 1967-ஆம் ஆண்டின் 14-ஆவது சட்டமான, இந்திய-இலங்கை உடன்படிக்கை (செயல்படுத்துதல்) சட்டம், இந்த எண்ணிக்கையை இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்யப்படுவோர் எண்ணிக்கை என்று விளக்கம் தந்தது. தற்போதைய திருத்தம் இதனை இந்தியாவிற்கு உண்மையில் திரும்பியவர்களின் எண்ணிக்கை என்று விளக்கம் தருகிறது. இது, இந்தியக் குடியுரிமை வேண்டுமென்று தெரிவித்து இந்தியாவிற்குத் திரும்புபவர்களேயோ, தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்படும் நிலையில் இருப்பவர்களேயோ பாதிக்காது. ஆனல் இது இலங்கை குடியுரிமை வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ள வர்களைப் பாதிக்கலாம். அவர்கள் அதிகக் காலம் "குடியுரிமை யற்றவர்களாக"க் காத்திருக்க நேரிடலாம்.

5. "அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள்" மத்திய அரசு கவனிக்கும் ஒரு பிரச்சினையாகும். எனவே, இலங்கைவாழ் இந்திர்களின் தொடர்பான பிரச்சனைகள் இந்திய அரசால் மட்டுமே கவனிக்கப்படுகின்றன. இலங்கைவாழ் இந்தியர்களிட மிருந்து பெறப்படும் முறையீடுகளை இவ்வரசு உடனுக்குடன் கவனித்து வந்துள்ளது. அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க் கப்பட உரிய நிலையில் தேவைப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் வண்ணம், இந்திய அரசை அவ்வப்போது வேண்டிக் கொண்டுள்ளது. 1964 ஆண்டு உடன்படிக்கையின் கீழ் தாயகத்துக்குத் திருப்பியனுப்பப்படவிருக்கிறவர்களைப் பொறுத்த வரை, இவ்வரசு அவர்களுக்கு உரிய முறையில் மறுவாழ்வு



1971 ஜுலை 22] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

அளிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் விவரங்கள் அவ்வப்போது பேரவை முன்னர் வைக்கப்பட்டு வந்துள்ளன

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, 1954-ம் வருஷத்து ஒப்பந்தத்தின்படி இலங்கைக் குடிப் பிரஜை என்று ஆட்களைச் சேர்ப்பதிலே காலதாமதம் செய்துவிட்டு, 1964-ம் வருஷத்து ஒப்பந்தத்தை அமல் படுத்துகிருேம் என்று சொல்லி, அதிகமான ஆட்களை இந்தியாவுக்கு அனுப்பிக்கொண்டிருக் கிருர்கள். ஏற்கனவே இருந்தவர்களுக்கும் பிரஜா உரிமை கிடைக்காத முறையிலே 'பீப்பிள் ஆஃப் இண்டியன் டிசெண்ட்' என்று சொல்லக்கூடியவர்களை நிர்ப்பந்தப்படுத்தி, தொந்தரவு பண்ணக்கூடிய முறையில் சிறுதொழில்கள்கூட செய்யக்கூடாத சட்டம் என்றும், இதன் காரணமாக இந்தியாவுக்கு அதிகமான ஆட்களை அகதிகளாக அனுப்பிக்கொண்டிருக்கிருர்கள் என்கிற குறிப்பை மத்திய அரசுக்கு இந்த மாநில அரசு அனுப்புமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் அவ்வப்போது குறிப்புகளை அனுப்பி வருகிறது. இலங்கை அரசு கூறுவதெல்லாம் இலங்கையிலிருந்து வாழ்கிறவர்கள் தாமாகவே இந்தியாவுக்குச் செல்ல வேண்டும் என்பது. நீண்டகாலமாக இலங்கையிலிருந்து வருபவர்கள் குடியுரிமை பெற வேண்டுமென்பதற்காகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிருேம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்ருல், பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் இதி லுள்ள குறைகளை நீக்க முடியும். இதுபற்றி மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குக் குறிப்புகளை அனுப்பிக்கொண்டிருக் கிறது.

4. நடைமுறைக் கேள்வி.

**கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் கண்டுள்ள ஒரு சொற்ருெடர் குறித்து.**

DR. H. V. HANDE : On a point of order, Mr. Speaker. i wish to present a point of order. In the calling attention notice, in the last sentence in the English translation it was stated as 'casual attitude of the Government of India'. In the Tamil version it was stated as '*alakshia manappanmai*' I would like to know from the Hon. Speaker whether he would give a ruling in this matter. Supposing a similar statement is made with regard to the State Government, it would be considered as an imputation against the Government. I fully agree that it is casual attitude. But I am not going into that aspect. I want to know whether this will be in order to say like that in this House and whether we have got freedom to put an imputation like that. I would like to have a ruling from the Hon. Speaker for future guidance. I want to know whether we will be given the same freedom and permitted to

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 22

say like that whenever the Central Government has failed in its duty or whenever it has transgressed from its norms, whether it is possible for you to give a ruling on this particular matter, so that it may be a precedent. It was clearly a casual attitude with which I fully agree.

MR. SPEAKER: There is no point of order. It is only a translation. Casual attitude has been translated as '*alakshia manappānmai*' I cannot give you any assurance. There is no point of order in it. Because it is in order, the Speaker has permitted it. It is a matter of translation.

As the Hon. Member Thiru N. Rajangam is not in his seat, the Call Attention Notice given by him is deemed to have been withdrawn.

## 5. அறிவிப்பு

### பேரவைக் கூட்ட நாள் நீட்டிப்பு பற்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைக் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். சட்டப் பேரவை இம்மாதம் 29-ம் தேதி வரையில் கூடுவதாக இருந்தது. இப்போது பார்க்கும்போது, அரசினர் மசோதாக்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கும், மற்ற அலுவல்களை முடிப்பதற்கும் 29-ம் தேதி வரைக்கும் போதாது. எனவே, இந்த அலுவல்களையெல்லாம் முடிப்பதற்காக சட்டப் பேரவை 30-ம் தேதியன்றும் கூடும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (6) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதி கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்.

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 5—ஆவணப் பதிவுத் துறை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல்

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 99,66,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss the grievances of labour employed in Government undertakings, I move the cut motion standing in my name, namely,—

"That the allotment of Rs. 99,66,500 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100."



1971 ஜூலை 22]

THIRU K. T. K. THANGAMANI: Sir, to discuss about the necessity for non-intervention of Police in industrial disputes even when there is stay-in-strike or stay-out-strike, I move the cut motion standing in my name, namely,—

"That the allotment of Rs. 99,66,500 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100."

DR. H. V. HANDE: Sir, to discuss the need on the part of the Government to take an impartial and non-partisan attitude in inter-union rivalries, I move the cut motion standing in my name, namely,—

"That the allotment of Rs. 99,66.500 under Demand No. 24—Labour including Factories—be reduced by Rs. 100."

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, ஆலை நிர்வாகத்தினர் சட்டங்களையோ, ஒப்பந்தங்களையோ மீறியதன் காரணமாக நிகழ்கின்ற வேலை நிறுத்தங்கள் சட்டபூர்வமானவையே என்று ஆக்குகின்ற வகையில் சட்டமியற்றப்படுதல் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 99,66,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THE HON. THIRU N. V. NATARAJAN: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,24,90.300 under Demand No. 5—Registration Department.'

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவெட்டாறு தொகுதியில், வேர்கிளம்பி (பூவன்கோடு) என்ற இடத்தில் ஒரு பத்திரப்பதிவு அலுவலகம் அமைக்கவேண்டுமென விவாதிக்க—

"கோரிக்கை எண் 5—ஆவணப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,24,90,300-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நகரச் சொத்துக்களைக் குறைந்த மதிப்பில் பதிவு செய்வதைத் தடுப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 5—ஆவணப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,24,90,300-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 1,24,90,300 under Demand No. 5—Registration Department be reduced by Rs. 100.'

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, பூமிகளை கிரயச் சொத்தில் கர்ணம் நிர்மானிக்கும் மதிப்பீடு அடிப்படை

[திரு. கே. என். குமாரசாமி] [1971 ஜூலை 22

யில் இல்லாமல் பழைய கிரய அடிப்படையில் ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி கிரயம் செய்து செட்டில்மெண்ட், பாக சாசனம் செய்வது போன்ற ஏற்பாடுகள் செய்வது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் 5—ஆவணப் பதிவுத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,24,90,300-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தொழிலாளர் நலத் துறை மானியம், பத்திரப் பதிவுத் துறை மானியம் ஆகிய இரண்டு மானியங்கள் இருக்கின்றன, இரண்டரை மணி நேரம் இருக்கிறது. இரண்டையும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாமா? அல்லது ஒவ்வொன்றாகத் தனித் தனியாக எடுத்துக்கொள்ளலாமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, இரண்டையும் ஒன்றாகவே எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் ஒன்றாகவே எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

***மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வேலை தேடித்தரும் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் கோரிக்கை எண் 24—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற கோரிக்கையில் சேர்ந்துள்ளது. தொழிலாளர் நலத்துறை, வேலைவாய்ப்புப் பயிற்சி இயக்குநர் அலுவலகத்தின் தொழிலாளர், வேலை வாய்ப்புப் பிரிவுத் துறை ஆகியவை 1970–71-ல் ஆற்றிய பணிகளை விவரிக்கும் ஆய்வுரை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. அதைக் கண்ணுறுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வதுடன் சட்டப்பேரவை நடவடிக்கையிலும் இதைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டு ஒரு சில விவரங்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

"வளர்க தொழில் ! வாழ்க தொழிலாளர் ! " என்ற குறிக்கோள்தான் தமிழக அரசின் தொழிலாளர் கொள்கையாகும். அதாவது தொழிலாளர்கள்-தொழிலதிபர்களிடையே நல்லுறவை வளர்த்து அதன் வாயிலாக ஒட்டுமொத்தமாகச் சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் நல்வாழ்வை அளிப்பதென்பது அரசின் திட்டவட்டமான கொள்கையாகும்.

இந்த அடிப்படையில் தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையின் பணியினை நடுநிலையிலிருந்து ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏறத்தாழ தொழிலாளர் நல அரசாக, சமதர்மக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவரும் அரசாக மாண்புமிகு கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்கி வருவதை உணரக்கூடும்.

@ 125–192-ம் பக்கங்களில் முதல், இரண்டாவது இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



1971 ஜூலை 22] [திரு. என். வி. நடராசன்]

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த நாளிலிருந்தும், தொடர்ந்து கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கி வரும் கழக அரசு தொழிலாளர்கள் தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறுவதில் அவர்களுக்குப் பெருந்துணையாக இருந்து வருவதை யாரும் மறுக்கமுடியாது என்பதே, எனது பணிவான எடுத்துக்காட்டாகும். எனினும் அதிதீவிரவாதிகள் என்று சொல்லிக்கொள்பவர்கள் அங்கும் இங்குமாக அரசியல் கண்ணோட்டத்தை நினைவில்கொண்டு நம் மாநிலத்தில் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியையும், தொழிலதிபர்கள்—தொழிலாளர்கள் நல்லுறவையும் கெடுத்து, சமுதாயத்திற்கு அரசு செய்யவேண்டிய கடமைகளுக்கும் மறைமுகமாக பாதகங்களை விளைவித்து வருவதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தொழிலாளர்கள் நடத்திய கிளர்ச்சிகளை அடக்குவதற்குக் கழக அரசு அடக்குமுறையைப் பிரயோகித்ததில்லை. அதற்குப் பதிலாக முதல்வர் அவர்களும், தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் தொழிலதிபர்கள்-தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஆகிய இருதரப்பினரையும் கலந்து பேசி தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் பெற்றுத்தரப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு அடக்குமுறையை நம்பியிருப்பதைவிட அன்பினையும், நற்பண்பினையும் கலந்து பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதிலும் அழுத்தமான நம்பிக்கையைக் கொண்டிருக்கிறது. அதே கொள்கையின் வழி நின்று தமிழ் நாட்டுத் தொழிலாளர் தோழர்களின் வாழ்வில் உற்சாகமும், மனநிறைவும் ஏற்படும்வகையில் மேலும் பல வாய்ப்பு வசதிகளைச் செய்து தரும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்தினை வழங்கவேண்டுகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆவணப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு* ஒன்று இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. இத்துறை இம்மாநிலத்தில் மிகத் தொன்மை வாய்ந்த துறைகளில் ஒன்று என்பதையும், மிக இன்றியமையாத பணியை நிறைவேற்றி வருகின்றது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். 1970-71-ம் ஆண்டில் இத் துறை ஈட்டிய வருவாய் ரூ. 17.50 கோடி ஆகும். முத்திரைத்தாள் தீர்வையின்கீழ் ரூபாய் 14.25 கோடியும், ஆவணப் பதிவுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களின்கீழ் ரூ, 3.25 கோடியுமாகும். 1970-71-ம் ஆண்டில் இத் துறையின் செலவினம் ரூ. 1 கோடியாகும்.

2. பதிவுத் துறையில் தற்பொழுது நடைமுறையிலிருந்து வரும் கோப்பு முறை செயல்படும் வகையில் அபிவிருத்தி செய்வது குறித்தும் இந்திய பதிவுத் துறைச் சட்டத்தின் நிர்வாகம்

* 193–199-ம் பக்கங்களில் மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

குறித்தும் உறுப்பினர்கள் தங்களின் மேலான கருத்துக்களைக் கூறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.' உறுப்பினர்களின் கருத்துக்களுக்கும் யோசனைகளுக்கும் இந்த அரசு மிகுந்த கவனம் செலுத்தி ஏற்க வேண்டியவற்றை ஏற்று எங்கெல்லாம் இயலுமோ அங்கு செயல்படுத்த முயலும் என்று உறுதி கூறுகின்றேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியிலே தரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை வலியுறுத்துகின்ற நேரத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னரே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மாநிலத்தினுடைய தொழிலாளர் நல அமைச்சர் மிகச் சாதாரணக் குடும்பத்திலே பிறந்து, தொழிலாளியாக இருந்து, தொழிற்சங்கவாதியாக இருந்து தொழிலாளர்கள் மேம்பாடு அடையவேண்டுமென்ற நல்ல கருத்தைக் கொண்டவர்கள் என்ற காரணத்தினாலே இங்கே சொல்லப்படுகின்ற கருத்துக்களை ஏற்றுக்கொண்டு செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக தொழிற்சாலைகள் அதிகரித்திருக்கின்றன. தொழிற்சாலை ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள், ஆய்வுப் பணியை வெகுவாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்வேன். இன்னும் பயனுள்ள வகையில் ஆய்வு நடைபெறவேண்டும். 6,000 தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவற்றிலே பத்தாயிரம் ஆய்வுகள்தான் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆய்வுகள் இன்னும் அதிகமாக நடைபெறவேண்டும்.

தொழிற்சாலை சட்டத்தை மீறுகின்ற தொழிற்சாலைகளுக்குச் சில ரூபாய்கள் மட்டும் அபராதம் விதிக்கின்ற காரணத்தினாலே அவர்கள் அதைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறார்கள். அவர்களுக்குத் தண்டனையாக டெட்டரண்ட் பனிஷ்மெண்ட்டாக அவர்கள் மேலும் அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யாத அளவுக்கு அளிக்க வேண்டும். அதற்காக விதியை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணத்திலே முடியாத விபத்துக்கள் 1969-79 ஆண்டிலே நான்கு ஆயிரம் விபத்துக்கள் அதாவது 15% அதிகமாகியிருக்கின்றன. இது மிகவும் அபாயமான நிலைமையைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. தொழிற்சாலைகள் பாதுகாப்புபற்றி சேப்டி கவுன்சில்கள் அமைத்து இருக்கிறார்கள். அதற்ாகப் பரிசுகள் வழங்குகிறார்கள். இருந்தபோதும் விபத்துக்கள் அதிகரித்து இருக்கின்றன. 6 ஆயிரம் தொழிற்சாலைகளிலே 300 ஆலைகளிலேதான் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மீதம் ஏன் அமைக்கப்படவில்லை என்று தெரியவில்லை. பாதுகாப்புத் திட்டங்களில் பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன. இந்த பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு





ஆண்டும் நடத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செயல்படுத்தாத நிர்வாகங்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தன் மு.ப.
கொள்கையாக ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் அமைக்கும் 11 00
கருத்தை அரசு பரிசிலித்து வருகிறது என்று சொல்லியிருக்கிறது. அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அமைச்சர்களும் அடிக்கடி சொல்கிறார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் வேண்டுமென்று ஆதரித்துப் பேசி வருகிறார்கள். ஆனால் இதைச் சொல்வதோடு மட்டும் நின்றால் பயன் இல்லை. இதைச் செயல்படுத்திக் காட்டியாக வேண்டும். இதற்கான கொள்கை கடந்த 15 ஆண்டுகளாக இந்த நாட்டிலே சொல்லப்பட்டு வருகிறது. தேசிய லேபர் கமிஷன் முன்னாலே சொல்லப்பட்டு அதுவும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சிறந்த ஜனநாயக மரபுக்கு ஒத்தவகையில் தொழிலாளர்களிடையே வாக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் பெரும்பான்மையான தொழிலாளர்கள் எந்தச் சங்கத்தை ஏற்கிறார்களோ அதை, பார்கெயினிங் ஏஜெண்ட் என்ற அளவில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையை அமல்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, தொழில் தகராறுகளைப் பைசல் செய்யும் முறைகளிலேயும், மற்ற வகைகளிலேயும் பாரபட்சமின்றி நடக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன். போலீசார் இந்தத் தொழில் துறையிலே தலையிடும் நிலைமை இருக்கிறது. ஒரு தொழிற்சாலை நிர்வாகத்தில் சில தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்துவிடுகிறார்கள். உடனே அவர்கள் வெளியே போகவேண்டும், இல்லையென்றால் போலீசார் கைது செய்வார்கள் என்று சொல்கிறார்கள். சிலயிடங்களில் இப்படி நடைபெறுகிறது, ஆனால் சிலயிடங்களில் சில சங்கமாக இருக்கும்பொழுது தலையிடுவதில்லை. சங்கத்தைப் பார்த்து, வண்ணத்தைப்பார்த்து தலையிடும் நிலைமை இருக்கிறது. இவ்வாறு போலீசார் தலையிடுவது தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

தொழில் தகராறுகள் எழுகின்றன. ஏராளமான தொழில் தகராறுகள் எழுகின்றன. இதற்கென இலாக்கா இருக்கிறது. ஆனால் தொழில் தகராறுகள் தீர்வதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இது பலமுறை சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட தாமதம் வருகிறது. தகராறுகளை ஒரு குறிப்பிட்ட காலத்திலே, சம்பளப் பிரச்னையாயிருந்தால் இத்தனை நாட்களிலே முடிய வேண்டும், அல்லது வேலை நீக்கப் பிரச்னை என்றால் இத்தனை நாட்களிலே முடிய வேண்டும் என்று வரையறை செய்ய வேண்டும். வேலை நீக்கத் தகராறுகள்கூட ஆண்டுக்கணக்கிலே இழுத்துக்கொண்டுவருவதைப் பார்க்க முடிகிறது. சில தகராறுகளை அமைச்சரவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கிறேன். இப்படியிருந்தால் தொழிலாளர்களுக்கு இந்தத் துறையிலே நம்

[திரு. எ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 22

பிக்கையற்றுப் போகும். வேலைநிறுத்தங்கள் அதிகரித்திருக்கின்றன, வேலையிழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் முதலாளிகள் சட்டங்களை மதிப்பதில்லை, தொழிலாளிகளை மதிப்பதில்லை என்று ஒரு புறமிருந்தாலும், தொழிலாளர் இலாக்காவினால் பிரச்னைகள் உடனடியாகத் தீரும், நியாயமாகத் தீரும் என்பதில் தொழிலாளர்களிடையே உள்ள நம்பிக்கைக் குறைவும் இதற்கு ஒரு காரணம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, தொழில் தகராறுகள் உடனுக்குடன் தீர வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

இதிலே இன்னொன்று, லேபர் ஆபீசர்கள் நியமிக்கப்படுகிறார்கள். லேபர் ஆபீசர்கள் இதில் எந்த அளவிற்குத் திறமை பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். தொழில் தகராறைத் தீர்ப்பது என்றால் அதிலே டேக்ட் அவசியம், மிகுந்த ஈடுபாடு அவசியம். இவைகளெல்லாம் இருப்பவர்களாகப் பார்த்து லேபர் ஆபீசர்களைப் போடும் முறையை அமைத்திட வேண்டும். இதனைச் சொல்லும்பொழுது என்னுடைய கோவையைப் பொறுத்த வரையில் ஒரு பிரச்னை. லேபர் ஆபீசர் 1 இருக்கிறார். அவர் தான் பஞ்சாலைப் பிரச்னையைக் கவனிக்கிறார். ஆனால் லேபர் ஆபீசர் 1 என்பது ஸ்பிரிங் போர்டாக, ஏ.சி.எல்.-க்கு ஸ்பிரிங் போர்டாக இருக்கிறது. அதாவது வழிநடைப்பாதையாக லேபர் ஆபீசராக வருகிறார்கள், 6 மாதம், 1 வருஷம் என்று இருப்பார்கள். உடனே போய்விடுவார்கள். ஸ்பின்னிங் ரோலிங் என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்குள்ளே மேலே வந்து விடுகிறார்கள். இப்படிப் போவதால் ஆண்டுக்கணக்கிலே தொழில் தகராறுகள் நீடிக்கின்றன. எனவே இதற்கான அசிஸ்டெண்ட் கமிஷனர் ஆப் லேபர் என்று கோவையிலே போட்டு அவரே இவ்வேலையைச் செய்ய வேண்டுமென்ற முறையினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

கோவையைப் பொறுத்தவரையில் பலயிடங்களில் கட்டிடங்கள் இருக்கின்றன. லேபர் ஆபீசர் ஆபீஸ் வெகு தூரத்திற்கு அப்பாலே இருக்கிறது, டி.சி.எல். ஆபீஸ் ஒருபுறத்திலே இருக்கிறது, ஃபேக்டரி இன்ஸ்பெக்டர் ஆபீஸ் இன்னொரு புறத்திலே இருக்கிறது. இவைகளை ஒரு மையமான இடத்திலே அரசாங்கம் தனியாகக் கட்டிடத்தைக் கட்டியும், அலுவலர்களுக்கு வீடுகளைக் கட்டியும் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

வேலை நிறுத்தங்கள் நடைபெறுகின்றன. வேலைநிறுத்தம் நடந்த பிறகு கம்ப்ளெய்ன்ட் போய் லேபர் ஆபீசர் வருகிறார்கள். அவர்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால், முக்கியமான இடங்களில் ஜீப் கொடுத்துவிட்டால் வேலைநிறுத்தம் செய்தவுடனே நேரடியாகச் சென்று, முதலாளிகளுடைய காரைக் கடன் கேட்கத் தேவையில்லாமல் நேரடியாகச் சென்று தீர்க்க வழியேற்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.



1971 ஜூலை 22] [திரு. எ. சுப்பிரமணியம்]

அடுத்து இன்னொன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். லேபர் கமிஷனர் ஆபீஸ்களுக்கு நாங்களெல்லாம் போகிறோம். அங்கே உட்காரக்கூட நல்லமுறையில் இடமில்லை. தரையில்தான் உட்கார வேண்டும். நாற்காலிகூடப் போடவில்லை, பலயிடங்களில் அப்படியிருக்கிறது, என்ன கருதி அப்படி வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. லேபர் டிபார்ட்மெண்ட் ‘சிண்டரெல்லா’வாக, மூத்தாள் பிள்ளையாக இருக்கிறது. கமிஷனர் ஆபீஸ் இப்பொழுது கீழேயிருந்து மேல்மாடிக்குப் போய் இருக்கிறது, ஆனால் அங்கே முன்னேற்றம் ஏற்படவில்லை. லேபர் ஆபீஸ்களில் உட்கார நாற்காலிகள் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேமெண்ட் ஆஃப் வேஜஸ் ஆக்ட் இருக்கிறது. கோவையிலே பல ஆலைகளிலே சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. மாதக் கணக்கில் அப்படியிருக்கிறது. டி.சி.எல். இருக்கிறார்கள், அவர்களுக்கு ஆயிரம் வேலைகள் இருக்கின்றன. அவர்களே பார்ப்பது என்றால் மாதக் கணக்காகும், குறைந்தபட்சம் ஒட்டுமொத்தமாக சம்பளம் தாமதப்படும் வழக்குகளையாவது சம்மரி டிஸ்போசல் செய்யும் நிலை ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். குஜராத்தில் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள், 69-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் என்று நினைக்கிறேன், சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதால் அல்லது ஒப்பந்தங்களை நிறைவேற்றாத காரணத்தினால் வேலைநிறுத்தம் நடைபெற்றால் அதை சட்டபூர்வமாகக் கருதப்பட வேண்டுமென்று சட்டம் வைத்திருக்கிறார்கள். அதே போல் இங்கேயும் செய்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்வேன்.

அடுத்தபடியாக இந்த பிராவிடெண்ட் பண்ட் பாக்கி. அமைச்சரவர்களும் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கோடிக்கு மேலே நிலுவையிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படியிருப்பதால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய பொருளாதார நிலையைப் பாதுகாப்பதற்காகத் தான் இந்த ஏற்பாட்டைச் செய்து வைத்து இருக்கிறார்கள். தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் அந்தப் பணத்தை முதலாளிகள் உடனடியாகக் கட்டவில்லையென்றால் இதற்காக உடனடியாக நடவடிக்கை எடுத்து, கொஞ்சமும் தாட்சண்யம் காட்டாமல் வசூலிக்க வேண்டும், இல்லையென்றால் வழக்குத் தொடர்வதற்குச் சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

பிராவிடெண்ட் ஃபண்ட் கான்ட்ரிபியூஷன் 8 பர்சென்ட் என்பதை 10 பர்சென்டாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். அதற்கு வட்டி விகிதம் 5.70 என்று இருக்கிறது. அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 5.50 ஆகயிருந்ததை 5.70 ஆக மாற்றியதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது குறைவு, வட்டி விகிதம் பொதுவாக அதிகமாக இருக்கும் காலத்தில் இது குறைவானதாகும். தொழிலாளர்கள் சேமித்து வைப்பதற்கு 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் ஆகின்றன. அதற்குள்ளே பணத்தினுடைய ரியல்

[திரு. வ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 22

வேல்யூ குறைந்து போகிறது. ஆகவே வட்டிவிகிதத்தை நிச்சய மாக அதிகமாக ஆக்கி, 9 பர்சென்டாகவாவது உயர்த்த வேண்டு மென்று மத்திய சர்க்காரிடம் இந்த அரசு வலியுறுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்வேன்.

ஈ.எஸ்.ஐ. அரியர்ஸ் பல முதலாளிகள் வைத்திருக்கிறார்கள். இதையும் உடனடியாக வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் வேன்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளியைப் பற்றி சன்முகசுந்தரம் அவர் கள் ஆராய்ந்து கொடுத்திருக்கிறார்கள். அதிலே 13.2 புள்ளி குறைந்திருப்பதாக ஆராயப்பட்டு, 70 பிப்ரவரியிலேயிருந்து கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அப்படியென் றால் பழைய பாக்கிகள் என்ன ஆவது? ஒவ்வொரு தொழிலாளிக் கும் 500, 600 ரூபாய் வரை இருக்கும். அதை முதலாளிகள் வழங்கவேண்டும். அதை வழங்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக, கடைச் சிப்பந்திகள் சட்டத்தில் சில திருத் தங்கள் அவசரம் அவசரமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். அதிலே, கடைச் சிப்பந்திகள் சட்டத்திலே வேலை நீக்கத்தை எதிர்த்து, கமிஷனருக்கு அப்பீல் செய்வதிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிவிலக்கு தரப்பட்டிருக்கிறது. அந்த விதிவிலக்கை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, இன்னொன்று, இந்தச் சட்டத்தின்படி டி.சி.எல்., டாகு மென்ட்ஸ், தஸ்தாவேஜுகளை, சாட்சிகளைக் கட்டாயமாகக் கோரிப் பெற உரிமை வழங்கப்படவில்லை. இதனால் அந்த வழக்கு களுக்கு இடைஞ்சல்கள் வருகின்றன. எனவே அதற்கான உரிமை கள் வழங்கப்பட வேண்டும்.

அடுத்து, அந்தத் தீர்ப்புகளை முதலாளிகள் அமல்படுத்தவில்லை யென்றால் அமல் படுத்தச் செய்ய அதிலே வழி கிடையாது. அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக, இந்த மாநில அரசுக்கு லேபர் அட்வைசர் ஒருவரை, தொழிலாளர் வழக்குகளில் நல்ல அனுபவம் பெற்ற ஒருவரை பார்ட் டைமாகவாவது போட வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஏனென் றால் ஏராளமான சட்டங்கள் வருகின்றன, அவைகளைப்பற்றி அரசுக்கு ஆலோசனை சொல்லவும், செய்ய வேண்டிய சட்டங்களைப் பற்றி ஆலோசனை கூறவும் அது பயனுள்ளதாக இருக்கும்.

மினிமம் வேஜஸ் ஆக்டின்கீழ் உள்ள மினிமம் வேஜஸ் மிகவும் குறைவாக இருக்கிறது. ஸ்டார்வேஷன் வேஜசாக போடப்படு கிறது. மினிமம் என்றால் அதற்குக் கீழே போகக் கூடாது என்ப தற்காகப் போடப்பட்டது. மினிமம் வேஜஸ் கமிட்டிகளின் வேலை டி.சி.எல்-லிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு ஆயிரம்



1971 ஜூலை 22] [திரு. வ. சுப்பிரமணியம்]

வேலைகள், பேமென்ட் ஆப் வேஜஸ் ஆக்ட், ஒர்க்மென்ஸ் காம்பன் சேஷன் ஆக்ட் இப்படிப் பட்டவைகளுக்கு அவர்தான் அதா ரிட்டியாகவிருப்பதால் தாமதம் ஏற்படுகிறது. தனியாக டி.சி.எல். போடுவது பயனுள்ளதாக இருக்கும்.

வேலை இல்லாதவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. வேலை இல்லாதோர் இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வரப்படும் என்று வெகு நாட்களுக்கு முன்பே சொல்லப்பட்டது. அதை இந்த அரசு உடனடியாகக் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். வேலையில்லாமல் பலர் இருக்கிறார்கள்; வேலையில் இருப் பவர்கள் வேலையற்றுப் போகிறார்கள். கோவையில் பல மில்களை மூடிய காரணத்தால் பல தொழிலாளர்கள் தவிக்கிறார்கள். ஆகவே இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வர வேண்டும்.

கிராசுவிடி என்று இருக்கிறது. பஞ்சாலைகளில் வேலை செய் வோருக்குத் தருகிறார்கள். பெரிய தொழிற்சாலைகளில் ஓய்வு பெறும்போது அடிப்படைச் சம்பளத்தை வைத்துக் கொடுக்கிறார் கள். அப்படி இல்லாமல் மொத்தச் சம்பளத்தையும் வைத்து ஒரு வருட சர்வீசுக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுப்பதற்கான முறை யில் அரசு சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அது எல்லாத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

இ.எஸ்.ஐ. திட்டத்தின்படி சிங்காநல்லூரில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத் திரி 500 படுக்கைகள் கொண்டதாக ஆரம்பிக்க முடிவு செய்து இப்போது 300 தான் இருக்கிறது. அதை 500 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் 625 படுக்கை களாக உயர்த்தி இருக்கிறார்கள். இந்தச் செலவை மத்திய அரசு மாநில அரசு எப்படி ஏற்றுக்கொள்ளுவதாக இருந்தாலும் சரி, மற்ற மக்களுக்குக் கொடுக்கிற மருந்துவ வசதியை இவர்களுக்கும் செய்து கொடுக்க வேண்டும். இவர்களும் அரசாங்கத்திற்குப் பணம் கொடுக்கிறார்கள். சோமனூரிலும், பல்லடத்திலும் டிஸ்பென்சரி களும் தொடங்க வேண்டும்.

வீட்டு வசதி செய்து தருவது எவ்வளவு முக்கியமானது என்று சொல்லத் தேவையில்லை. போன ஆண்டில் 12 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்தின் முயற்சியால் இந்த ஆண்டு 112 வீடுகள் கட்டவும், கூட்டுறவுத் துறையில் 65 வீடுகள் கட்டவும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இது இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கும் என்று புரியவில்லை. நேரம் இல்லாததால் புள்ளி விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்ல முடியவில்லை. 1970-ம் ஆண்டில் 28,000 ரூபாய் தான் செலவழித்திருக்கிறார்கள். 1.23 லட்சம் ஒதுக்கப்பட்டதில் அவ்வளவுதான் செலவு செய்திருக்கிறார்கள். ஒதுக்கப்படுகின்ற பணத்தைச் செலவழிக்க முன்வர வேண்டும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 9 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வசதிப் பிரச்சினை முக்கியமானது என்ற வகையில் அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களைக் கெஞ்சிக் கேட்டாவது

தொகையை அதிகப்படுத்தி கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டுவதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியத்தில் பேசுகின்றபோது எங்களைப் போன்ற சிலர் பல்லாண்டு காலமாகத் தொழிலாளர்கள் பகுதியிலேயே பல முறையில் பணியாற்றி வந்துள்ளதைப் போன்று இன்றைக்கு அமைச்சராக இருக்கக்கூடிய என். வி. என். அவர்களும் தொழிலாளியாக இருந்து, பல தொழிற் சங்கங்களில் எல்லாம் ஈடுபட்டு தொழிற் சங்கத் தலைவர் சிங்காரவேலர் போன்றவர்களோடு எல்லாம் செயல் பட்டவர்கள் ; மே தினத்தை அந்தக் காலத்திலேயே கொண்டாடியவர்கள் என்ற அடிப்படையான விஷயங்களை உங்கள் சார்பாக அனைவருக்கும் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்கள் பல இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் பற்றிப் பேசமுடியாமல் போனாலும் கூட, அதைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று நம்புகிறேன்.

நாங்கள் பிரதானமாக வலியுறுத்த விரும்பும் வெட்டுப் பிரேரணை போலீசுடைய தலையீட்டைப் பற்றியதாகும். அதைப் பற்றி நான் பின்னால் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

தமிழகம் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய தொழில் கேந்திரமாக மதிக்கப்பட்டு இப்போது தொழிற்சாலைகள், குறிப்பாக பஞ்சாலைகள், சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் தொழிற் சாலைகள், கெமிக்கல்ஸ் போன்ற பெரிய தொழில்களில் இருந்து, தோட்டத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலட்சத்திற்கு அதிகமான தொழிலாளர்கள், பீடி, கைத்தறி டானரி, முனிசிபல் கன்ஸ்ட்ரக்ஷன், சர்வீசிங் போன்ற தொழில் செய்யக்கூடியவர்களும் ஏராளமாக இருக்க இவர்கள் எல்லோரையும் பாதுகாக்கக் கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது இந்தத் தொழிலாளர்களை எல்லாம் இரண்டு மூன்று பிரிவிலே பார்க்க வேண்டியிருக்கிறது.

அப்படிப் பார்க்கும்போது ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரீஸ் இருக்கிறது. அதிலே இன்றைக்குத் தொழிற்சங்கங்கள் ஓரளவு அமைக்கப்பட்டு அதிகமான பல சச்சரவுகள், தகராறுகள் வருவதைப் பார்க்கிறோம். ஆர்கனைஸ்டு இண்டஸ்ட்ரிசைப் பொறுத்தவரையில் குறைந்த பட்ச தேவைக்கு அடிப்படையான சம்பளங்கள் பல இடங்களில் கொடுக்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள் என்று சொல்லும்போது பாங்கு சிப்பந்திகள், எல்.ஐ.சி. சிப்பந்திகள், சர்க்காரில் பணியாற்றக்கூடியவர்கள், ஆசிரியர்கள் எல்லோரையும் தொழிலாளர்கள் என்ற வகையில் தான் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் தொழில் செய்யக் கூடியவர்களுடைய கரத்திலும், கருத்திலும் பணியாற்றி வந்த இந்த இலாக்கா அருள்கூர்ந்து இவர்களுடைய பிரச்சினைகளை எல்லாம் இன்று கவனித்தால் நன்றாக இருக்கும்.





அப்படிப் பார்க்கின்றபோது நாட்டில் பாங்கு சிப்பந்திகளில் நான்காம்தர சிப்பந்திகள் ரூ. 247–490 வரையில் ஊதியம் பெறுகிறார்கள். ரிசர்வ் பாங்கில் 265-523 ரூபாய் கொடுக்கப் படுகிறது. ஸ்டீல் தொழிலில் 247 கிடைக்கிறது. இன்றைக்கு அரசாங்கம் குறைந்த பட்ச தேவைக்கேற்ற அந்த அளவு சம்பளத்தைக் கொடுக்கக்கூடிய முறையில் இருந்தால்தான் தொழிலாளர்கள் மத்தியில் எந்தவிதமான அதிருப்தியும் ஏற்படாமல் செயல்பட முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் தலையீட்டைப் பொறுத்தவரை தொழிற் தகராறுகளில் போலீஸ் தலையிடக்கூடாது என்று எல்லா மத்திய தொழிற்சங்க ஸ்தாபனங்களும் சொல்லுகின்றன. பலாத்காரமான நடவடிக்கை வருகிறது, ஆகவே, போலீஸ் தலையிடுகிறது என்று அரசு சொல்லலாம். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலைப் பற்றிப் பல பேர் பேசினார்கள். இன்றைக்குப் போய் விசாரித்தாலும் 2 சப்-இன்ஸ்பெக்டர்கள் 4 கான்ஸ்டபிள்கள் மானேஜ்மென்ட் சவுத்ரி சொல்லுவது போல் தொழிலாளர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். போலீசாருக்கு அதிகாரம் கொடுத்து விட்டால் தங்களுடைய நிலையைப் பாதுகாக்கும் முறையில் எல்லாம் அங்கிருக்கக்கூடிய நிர்வாகம் செய்ய ஆரம்பித்து விடுகிறது. யார் பேரிலும் குறை இல்லை ; அந்த மாதிரி நிலையை ஏற்படுத்தக் கூடாது.

இங்கே ஒரு ஹைகோர்ட் தீர்ப்பு வந்தது. தமிழக அரசு கூட 1967-68-ம் ஆண்டு அந்தத் தீர்ப்பைக் கண்டித்தார்கள். ரொம்ப விநோதமான தீர்ப்பு செல்பார்ந் தீர்ப்பு. ஜட்ஜ் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அரசைக் கலந்து கொள்ளாமல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களை வெளியேற்ற போலீசை ஏவலாம். அந்த முறையில் இன்றைக்கு ஊட்டியில் இருக்கக் கூடிய போட்டோ பிலிம் கம்பெனியில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்த 105 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இப்போது அடுத்த செக்ஷனில் இருப்பவர்களும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்ற மாதிரி அமைதியாக இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு ஆத்திரம் ஊட்டக்கூடிய முறையில் தீர்ப்பு இருக்கிறது. அந்தத் தீர்ப்பு அமலாக்கப்படாத முறைக்கு தடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

போலீஸ் எப்படி எப்படி எல்லாம் தலையிடுகிறது என்பதைப் பற்றி இந்தச் சபையில் 25 தடவை எழுப்பி இருக்கிறோம். போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது போலீசார் ஆயிரக்கணக்காகப் போய் வளைத்துக் கொள்வது அந்த முதலாளிகளைப் பாதுகாப்பதாக இருக்குமே தவிர,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 22

தொழிலாளர்களைப் பாதுகாப்பதாக இருக்காது. பலாத்காரம் ஏற்படுகிறது என்ற முறையில் தொழிலாளர்களுக்கு ஆதரவாகவும் வரலாம். தொழிலாளர்களுக்கு விரோதமாக எக்காரணத்தைக் கொண்டும் போலீசைப் பயன்படுத்தக் கூடாது என்பதை மீண்டும் ஒரு முறை வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வேலை நிறுத்தத்தைப் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் வேலை நிறுத்தத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. 1946-ம் ஆண்டில் இந்தியா பூராவும் வேலை நிறுத்தம் நடந்தது.

Ten million man days ' lost. What was the effect of 1946 strike?

1947-ல் சுதந்திரம் கிடைக்க அதுவும் ஒரு காரணமாக இருந்தது. 1966-ம் ஆண்டில் இருந்து தொடர்ந்து ஒரு கோடி வேலை ஆள் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. 1967-ல் அரசியல் மாறுதலால் அப்படி ஏற்பட்டது. 1967-ல் தொடருகிறது, 1968-ல் தொடருகிறது, 1969-ல் தொடருகிறது, 1970-ல் தொடருகிறது, 1971-ல் அரசியல் மாறுதல் காரணமாக இப்போதும் தொடருகிறது. தொழிலாளர்களுக்கு ஆதரவாக, அவர்கள் தங்களுடைய காரியத்தை நிலைநாட்டும் முறையில் அரசு ஆதரவாக நிற்பார்கள் என்று அறிவோம்.

ஆகவே, இந்த வேலைநிறுத்தத்தைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை. 1970-ம் ஆண்டில் பத்து லட்சம் வேலை நாட்கள் நஷ்டமாகியிருக்கிறது. 1968-ம் ஆண்டில் 20 லட்சம் வேலை நாட்கள் நஷ்டமாகியிருக்கிறது. அடுத்த ஆண்டில் இதைவிடக் கூடலாம். ஆகவே, அதைக் கண்டு நாம் அச்சப்பட வேண்டியதில்லை. அரசு செய்யவேண்டிய வேலைகள் பற்றி ஒன்றிரண்டு கூறலாம் என்று கருதுகிறேன்.

க்ராசுவிட்டி பற்றி (gratuity) எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றிய சட்டம் ஏற்கனவே கேரளாவில் வந்து விட்டது. அரை மாத சம்பளமாவது கிராசுவிட்டியாக கொடுக்க வேண்டுமென்று நான் அது ஒரு மாதமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். அந்த முறையில் ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்து கன்கரன்ட் சப்ஜெக்ட் என்றிருப்பதால் அதை மத்திய அரசுக்கு அதன் ஒப்புதலைப் பெறவேண்டுமென்றால் அப்படி அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தால் தமிழ் நாட்டு மக்கள் அதைப் பாராட்டுவார்கள்.

கேரளாவில் இன்னொரு சட்டமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சம்பள போர்டு தீர்ப்புக்களை அமலாக்க வேண்டும். இங்கு, மோட்டார் தொழிலாளர்கள் சம்பள போர்டு தீர்ப்பு வந்து அதை அமுல்படுத்தவேண்டுமென்று எவ்வளவோ பேச்சுக்கள் நடத்தியும் கூட, அது செய்யப்படவில்லை. ஆகஸ்ட் 31-ம் தேதிக்குள்ளாக அதை எல்லா முதலாளிகளும் அமல்படுத்தவேண்டும். அப்படி



1971 ஜூலை 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அமல்படுத்தவில்லையென்றால் கடுமையான நடவடிக்கைகள் எடுப்போம் என்று அமைச்சர் அவர்களும் எச்சரித்திருக்கிறார்கள். அப்போது அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம்.

Fair wages to Transport Workers' Act என்று ஏற்கனவே கேரள சர்க்கார் ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டு சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சர்க்கார் ஊழியர்கள், மத்திய சர்க்கார் ஊழியர்கள், ரெயில்வே ஊழியர்கள் இவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டால் அந்தக் காலத்திற்கு அவர்களுக்கு ஊதியம் கொடுக்கிறார்கள். அப்படி எந்தத் தொழிற்சாலையிலும் இன்றைக்கு தொழிலாளர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டால் ஊதியம் கொடுப்பதேயில்லை. இரண்டு ஆண்டுகள் கூட சஸ்பென்ஷனில் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட காலங்களில் அவர்களுக்கு அரைச் சம்பளமாவது கொடுக்கவேண்டுமென்று Regulation of Discharged Workers Bill என்றதொரு மசோதாவைக் கேரள அரசு தயாரித்து அதை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதேமாதிரி கீழ்த்தட்டில் உள்ள பலவிதத் தொழிலாளர்களுக்கும் அவ்விதமான வாய்ப்பு வசதி கொடுக்க வேண்டும் என்பதற்காக வொர்க்கேர்ஸ் வெல்பேர் பண்ட் ஆக்ட் என்ற சட்டத்தைத் தயாரித்து அதையும் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த மாதிரியான ஒரு சட்டம் மஹாராஷ்ட்ராவிலும் இருக்கிறது. அதே மாதிரியானதொரு சட்டத்தை நாமும் கொண்டு வருகிறோம் அல்லது அப்படிப்பட்டதொரு மசோதாவை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களேயானால் பெரும் உதவியாக இருக்கும்.

அடுத்து, First annual report of Relief undertakings of Special Provisions Act, 1959. நமக்கு வந்திருக்கிற அந்த ரிப்போர்ட்டைப் பார்த்தால் அதன்படி நான்கு மில்கள் லாபத்தில் தான் நடந்திருக்கின்றன. மதுரை ராஜா மில்ஸ், ராஜபாளையம் ஷண்முகர் மில்ஸ், பாலராமவர்மா மில்ஸ் போன்ற மில்களை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் தகராறு ஏற்பட்டால் அதன் பேரில் ஒரு செட்டில்மென்ட் ஆனவுடன் உடனடியாக கேஸ்களை வாபஸ் வாங்கவேண்டும். சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் போர்ட் ட்ரஸ்டில் ஒரு ஸ்ட்ரைக் நடந்தது. அதில் செட்டில்மென்ட் ஆகிவிட்டது. கேஸ் இன்றைய தினம் வரை இருந்து வருகிறது.

அடுத்து, பீடித் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காகத் தமிழ் நாடு ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது. அது 1966-ல் நாடாளு மன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அந்த ஒரிஜினல் மசோதாவை என்னைப் போன்றவர்கள் தயாரித்துக் கொடுத்தார்கள். பின்னால்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 22

சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு இன்று அதைத் தடை செய்துவிட்டார்கள் ஹைகோர்ட்டில். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கூட அதைப் பற்றிச் சொன்னார்கள். இம்மாதிரியாகச் சட்டம் செல்லாது என்று சொல்லி தடுத்து நிறுத்தக் கூடியதொரு நிலை ஏற்பட்டதென்றால் அதைக் கூடிய விரைவில் ஒரு ஆண்டு அல்லது ஆறு மாத காலத்திற்குள் திருத்தியமைக்கக் கூடிய நிலை ஏற்படவேண்டுமென்று. அப்படி சட்டத்தை தடுத்து நிறுத்திவிட்டதால் வட ஆர்க்காடு, திருச்சி போன்ற இடங்களில் உள்ள பீடித் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

ஹோட்டல் தொழிலாளர்களுக்காக ராஜன் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அமைத்தார்கள். அக்கமிட்டி என்னவாயிற்று, அவர்கள் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்களா, அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை யெல்லாம் அறிய விரும்புகிறேன்.

மதுரையில் பல கல்லூரி ஹாஸ்டல்களில் பணியாற்றக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், Catering Establishments Act, 1958 எங்களுக்கும் அமல் ஆகவேண்டுமென்றுவற்புறுத்தி வருகிறார்கள்.

அடுத்து, பே கமிஷன் ரிப்போர்ட் வந்தது. இன்று முனிசிபல் தொழிலாளர்கள், வொர்க்சார்ஜ்ட் பி. டபிள்யூ. டி. வொர்க்கர்ஸ் இவர்களின் நிலை என்ன ? முனிசிபல் தொழிலாளர்கள் பற்றி ஒரு வார்த்தை அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். தமிழ் நாட்டில் முனிசிபல் தொழிலாளர்கள் 50,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ள அடிப்படைச் சம்பளம் ரூ. 10, பஞ்சப்படி ரூ. 100. இது தலைகீழாக இருக்கிறது அடிப்படைச் சம்பளம் அதிகமாக இருக்கவேண்டும். பஞ்சப்படி குறைவாக இருக்கவேண்டும். அப்படி மாற்றியமைக்கவேண்டும். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதற்கும், மினிமம் வேஜஸ் ஆக்டின் கீழ் அவர்களும் சேர்ந்திருப்பதால் உடனடியாக ஒரு கமிட்டி நிறுவி மூன்று நான்கு மாத காலத்திற்குள் அது குறித்து ஆவன செய்யவேண்டுமென்றும் சொல்ல வேண்டும்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இன்று ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவோ போராட்டங்கள் உண்ணாவிரதம் போன்றவைகளை நடத்தியதற்குப் பிறகும் அவர்களுக்குப் போதிய சம்பள உயர்வு கொடுக்கவில்லை. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். அடுத்த தொடருக்கு முன்னால் ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

There must be an ordinance at least next month against closures, retrenchment and lay off இதை அடிப்படையாக வைத்து தான் பல தகராறுகள் வருகின்றன. இன்னொன்று, மதராஸ் லேபர் கெஜட் வெளியிடுகிறோம். அது ஒருவருக்கும் வருவதில்லை.



1971 ஜூலை 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்நேரத்தில் லேபர் இலாகா பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் அவர்களை அனுதாபத்தோடு பார்க்கக் கூடியவன். முக்கியமான காரியங்களைக் கவனிக்கும் அந்த இலாகாவிற்கு ஒரு கோடி ரூபாய் கூட எட்டியது கிடையாது. அவர்களுக்காகக் கொடுப்பதை இன்னும் ஒரு 50 சதவிகிதம் உயர்த்தினால் கூட தவறு என்று நான் சொல்ல மாட்டேன். சில இலாகாக்களுக்கு வொர்க் கம்மி. இந்த இலாகாவிற்கு வேலை ஜாஸ்தி. அப்படி வேலை கூடுதலாக இருப்பதினால் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, ஆட்களை அதிகப்படுத்தவேண்டும். டீ.ஸி.எல்.-க்கு வேலை ஜாஸ்தி. மதுரையில் ஒரு டீ.ஸி.எல். இருக்கிறார், கோயம்புத்தூரில் ஒரு டீ.ஸி.எல். இருக்கிறார், சென்னையில் ஒரு டீ.ஸி.எல். இருக்கிறார். சென்னையில் உள்ள டீ. ஸி. எல்.-க்கு பக்கத்திலுள்ள மாவட்டங்களையும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சென்னைக்கு இன்னொரு டீ.ஸி.எல்.லைப் போடலாம். மதுரையிலுள்ள டீ.ஸி. எல்-க்கு ஜூரிஸ்டிக்ஷன் கூடுதலாக இருப்பதால் திருச்சியில் ஒரு டீ.ஸி.எல்.-ஐப் போடலாம். ஆக, இவர்களுக்கு வேலை ஜாஸ்தியாக இருக்கிறது. இன்று லேபர் கோர்ட்டை வேண்டுமானால் குறைக்கலாம். மூன்றிருக்கின்றன. அவை இருக்கட்டும், படிப்படியாக குறைக்கலாம். ட்ரிப்யூனல் ஒன்றிருக்கிறது. அது வேண்டுமானால் இல்லாது போகட்டும். இன்று நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி தகராறுகளைத் தீர்க்கவேண்டியிருக்கிறது. எட்டாயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள் மதுரையில், அது கட்டுப்பாடாகவும், அமைதியாகவும் நடந்தது. ஆறு தினங்களில் அது முடிந்தது. இரண்டு தினங்கள் உட்கார்ந்து எப்படியாவது ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமென்ற கமிஷனர் அவர்களின் முயற்சியாலும், அமைச்சர் அவர்கள் விடாப்பிடியாக நின்று அதை முடிக்க வேண்டுமென்று எண்ணிய காரணத்தினாலும் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார்கள். இந்த மெஷினரி நன்கு. அதிகமாகச் செயல்படவேண்டும்.

அடுத்து, இந்தியன் லேபர் கெஜட் தொடர்ந்து வர வேண்டும். நான் லைப்ரரியில் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். ஜனவரி, பெப்ரவரிக்கு மேல் காணோம். தமிழ் நாட்டிலுள்ள நிலைமை பற்றி இந்திய அரசுக்கு அடிக்கடி எழுதவேண்டும். 240 நாட்கள் என்ற காட்டிகரி (Category) இருக்கிறது.

Industrial Disputes Act, Factories Act, Employees Provident Fund Act. They do not include festival holidays or negotiable instrument holidays. அதையும் சேர்க்க வேண்டும். பாக்டரி இன்ஸ்பெக்டர்ஸ் நகரத்தில் இன்ஸ்பெக்ஷன் செய்யும் போது 200, 250 பாக்டரிகள் என்று உள்ளன. நகரத்தில் அவர்களுக்கு டீ. ஏ. கொடுத்தால் அது ஒரு இன்ஸென்டிவாக இருக்கும். காஷுவல் வொர்க்கேர்ஸ் பாதுகாக்கப்பட வேண்டும். காண்ட்ராக்ட் ஸிஸ்டத்தை ஒழிப்பதற்காக மத்திய அரசு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. எந்த அளவிற்கு அது இங்கு அமலாகிறது என்பது தெரியவில்லை.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 22

மு.ப. 11-30 அடுத்து, கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் இருபது இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். முன்பெல்லாம் இந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் சட்டம் கொண்டு வர முடியுமா என்று நினைத்துக்கொண்டிருந்தோம். இன்று

Shops and Establishments Act, Catering Establishments Act.

என்ற சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலுள்ள முறைகளைக் கொண்டு சட்டங்கள் கொண்டு வந்தால் அது ஒரு எடுத்துக் காட்டாகவிருக்கும். சட்டங்கள் எப்படி மாறுகின்றன என்பது வேறு விஷயம். கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன். லேபர் அட்வைஸரிக் கமிட்டீஸ் அதிமாகக் கூடுவதில்லை. வொர்க்மென் காம்பன்சேஷன் ஆக்ட்படி ஒரு ஆளுக்கு கை ஒடிந்து விட்டால் காம்பன்சேஷன் கிடைக்கும், ஆனால் வைத்திய வசதிக்கு வழியில்லை.

இன்று சர்க்கார் ஊழியர்கள் நான்காண்டு காலம் லீவ் எடுக்காமலிருந்தால் அது அக்யூமுலேட் ஆகும். அதேபோல் இந்த பாக்டரி ஆக்டின் கீழும் லிவ் அக்யூமுலேட் ஆவதற்கு வகை செய்யவேண்டும். போனஸ் சட்டப்படி குறைந்தபட்சம் 4 சதவிகித போனஸ் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. அதைக் கூட நான்காண்டுகளாகக் கொடுக்காத சிலர் இருக்கிறார்கள், மகாலஷ்மி மில்ஸ், மதுரை. ஒரு மாதச் சம்பளமாவது கொடுக்கவேண்டுமென்று சிபார்சு மட்டுமல்ல, போனஸ் ஆக்டில் மாறுதல் செய்ய முடியும்.

இ.எஸ்.ஐ. கான்டிரிபியூஷனை முதலாளிகள் சரிவர அரசாங்கத்திற்குக் கொடுப்பது கிடையாது. கொடுக்காதவர்கள் பட்டியலை அரசாங்கம் வெளியிட வேண்டும். இதில் கொடுமை என்னவென்றால் தொழிலாளர்களிடத்தில் பணத்தைப் பிடித்துக் கொண்டு அதை அரசுக்குக் கட்டாமல், ஊருக்குள் தடிமாடு மாதிரித் திரிகிறார்கள். கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் வரையில் தொழிலாளியின் பணத்தை ஏமாற்றி விட்டு இன்று பல முதலாளிகள் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பிடித்து சிறையில் போடவேண்டும். அப்படிப்பட்ட பொறுப்பு இல்லாமல் இருக்கும் ஆட்களைப்பிடித்து, நீ இருக்கவேண்டிய இடம் இதுதான் என்று சொல்லி, 10 வருஷம் ஜெயிலில் இருங்கள், இது நல்ல இடம் நீங்கள் செய்த தவறுக்கு என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

அதோடு, இந்த இ. எஸ். ஐ. மருத்துவ மனைகள் தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கவேண்டும். மதுரையில் இருக்கும் ஹாஸ்பிடலில் 200 பேர் இருக்க வசதியோடு இருக்கிறது. ஆனால் 50 பேர் தான் இருக்கிறார்கள். நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும்.



1971 ஜூலை 22] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஓர்கர்ஸ் எடுகேஷன் அன்டு டிரெயினிங் ஸ்கீமை மத்திய அரசாங்கம் நடத்தினாலும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அந்த ஸ்கீம் நல்ல முறையில் நடத்தப்படுகிறது. தொழிலாளர்களும் நல்ல முறையில் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள்.

லாரி-லோடிங் அன்லோடிங் என்று இரண்டு தொழிலாளர்கள் இருக்கிறார்கள் அவர்கள் மிகவும் சிரமமான வேலைகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பஞ்சப்படி சலுகை சிலவற்றைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, சங்கங்கள் என்று வரும்போது, எல்லாச் சங்கங்களையும் அங்கீகரிக்கச் சட்டம் வரவேண்டும். ஒன்று 'போல்' மூலமாகவோ வேறு முறையாகவோ சங்கத்தை அங்கீகரிக்கலாம். தொழிலாளிகள் சங்கத்தில் சேர்ந்தால்தான் முதலாளிகள் பயப்படுகிறார்கள்.

Right to organise is first condition.

Right to recognition is second condition.

Right to organise and right to recognise for collective bargaining.

என்று போட்டுச் செய்தால் தான் நேரடியாகக் காரியம் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நேரடியாகப் பேச்சு வார்த்தை என்று செய்யும்போது, சமீபத்தில் எம்.ஆர்.எப். தொழிற்சாலை திறக்கப்பட்டு 1,500 தொழிலாளர்கள் வேலைக்குச் சேர்ந்து இருக்கிறார்கள். தொழிலாளர் நலனைத்தான் அரசாங்கம் முக்கியமாகக் கருதவேண்டும். அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி அந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவேண்டும். இல்லையென்றால் உள் இருப்பு வேலை நிறுத்தம் நடத்தலாம் என்று தொழிலாளர்கள் எண்ணக்கூடும். ஆகவே, தொழிலாளர்களின் நலனைப் பெரிதாக வைத்து அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்.

ஸ்டாண்டார்ட் மோட்டார்ஸ் முதலாளிகள் செய்தது தவறு என்று சொல்லி வருகிறார்கள். அதை நல்ல முறையில் கவனிக்க வேண்டும்.

இந்தத் தொழிலாளர் தகராறுகள் தீர்ப்பதில் உள்ள டிலே சம்பந்தமாக ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

In 1960, Ayath Pasha, a Checking Inspector in Ashok Transport, was dismissed for joining one Union. He won his case in the Labour Court. Writ was filed—Writ concluded in favour of worker in 1967. For pay and reinstatement it was transferred to Judge Venkatadri. In 1968 a writ appeal was filed by the management and writ appeal is yet to be heard. The money that is due to poor worker is Rs. 20,000.

இது ஒரு உதாரணம். இப்படி எண்ணற்ற உதாரணங்களைக் கையில் வைத்து இருக்கிறேன். Justice delayed is justice denied

எனக்கு ஒரு அனுபவம் உண்டு. ஒரு தொழிலாளி 1953-ல் வேலையிலிருந்து நீக்கப்பட்டான். அந்தத் தொழிலாளியை திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று அப்பீலில் உத்தரவாகியது. அவனைச் சென்று பார்த்த நேரத்தில் அவன் இறந்து ஒரு மாதம் ஆகிறது என்று சொன்னார்கள். இதனால் தொழிலாளிக்குக் கிடைக்கவேண்டிய நியாயம் கிடைக்காமல் போனதும் அல்லாமல், அவனுக்கு வாழ்வும் போய் இருக்கிறது.

இப்படி டிலேயாக ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டு, அதற்குத் திரும்பவும் புனராலோசனை செய்யவேண்டுமானால் முதலாளி அக்கறை காட்டமாட்டேன் என்கிறார். தொழிலாளி வந்தால் முதலாளி பேச மாட்டேன் என்கிறார். ஆகவே, அரசாங்கமே முன் கை எடுத்து இதைச் சரி செய்யவேண்டும். உதாரணமாக இ.ஐ.டி. பாரியில் 99 நாள் வேலை நிறுத்தம் நடந்தது. ஜூன் மாதத்தில் பேசுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் பேச்சு வார்த்தை ஆரம்பம் ஆகவில்லை. இப்படி ஆறப்போடாமல் பிரச்னைகளைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று சர்க்கரை உற்பத்தி அதிகமாக இருக்கிறது. தமிழகத்திற்குத் தேவையான அளவு சர்க்கரை உற்பத்தி ஆகிறது. இந்தத் தொழில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஆனால் தமிழகத்தில் இருக்கும் சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு அதிகமான பணம் கொடுத்து வந்தது, இப்போது தான் கம்மியாகிவிட்டது. இன்றைக்கு 3 சதவிகிதம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இவற்றை கோவாப்பரேடிவ் ஆலைகளாக மாற்றி, அரசு ஏற்று நடத்துமா? சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தீர்க்கப்பட வில்லை என்பதால், மிகவும் ஆத்திரத்தோடு கோபத்தோடு இருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மான்யத்திலே விவாதம் முடிந்த பிறகு அமைச்சரவர்கள் சில முக்கியமான அறிவிப்புகள் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். அதை வைத்துக்கொண்டு நாங்கள் தொழிலாளர்கள் மத்தியில் செல்வது மிகவும் நன்மையாக இருக்கும். தொழிலாளர்கள் நலனுக்காக இருக்கிறோம் என்று சொன்னால் போதாது, செயலில் இன்னின்ன காரியங்களைச் செய்து இருக்கிறோம். செய்ய இருக்கிறோம் என்று உறுதியாகக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதோடு, இன்னொரு மான்யமும் இருக்கிறது. அதன் மீது ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்; அதாவது, பத்திரப்பதிவுத்துறை மீதான மான்யம். இந்த மான்யத்தின் மீது இரு வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்து இருக்கிறோம். இந்த வெட்டுப் பிரேரணை கொடுத்ததன் நோக்கம், இந்தப் பத்திரம் பதிவதிலே 'அட்வலோரம்' அடிப்படையில் செய்வதால் அரசுக்கு





வரவேண்டிய வருமானம் குறைந்து விடுகிறது. சிங்கப்பூரிலே எந்தப் பத்திரம் பதிய வேண்டுமானாலும், லட்ச ரூபாய்க்குப் பத்திரம் பதிய வேண்டுமானாலும், 5 டாலர் தான் கொடுக்க வேண்டும். ஆகவே, இந்த அட்வலோரம் அடிப்படையில் பத்திரங்களைப் பதியாமல், வேறு முறையில் பத்திரங்களைப் பதிய அரசு முயற்சி செய்து பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் தான், இதன் மூலமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் குறையாமல் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இந்த பத்திரங்கள் விற்பனையில் பிளாக் மார்க்கெட்டிங் இருக்கிறது. சாதாரண ஆட்கள் தான் இந்தப் பத்திரங்களை விற்கிறார்கள். அவசரமாகப் பத்திரம் தேவையானால் அதிகமாகப் பணம் கேட்கிறார்கள். ஆகவே, தேவையான பத்திரங்கள் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இலாகா மான்யத்தின் மீது பேசுவதற்கு எனக்கு ஏராளமான விவரங்கள், பல விஷயங்கள் நேரடியாக இந்த இலாகாவோடு அடிக்கடி தொடர்பு கொள்கிறவன் என்ற முறையில், சொல்ல முடியும். இருந்தாலும், சுட்டிக்காட்டிய சில விஷயங்களில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்து நல்ல முறையில் செய்து அரசாங்கத்திற்கு ஒரு "credit of government in the matter of settling industrial disputes" என்ற முறையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. கா. வேழவேந்தன் : சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கொண்டு வந்து இருக்கிற மான்யக்கோரிக்கையைத் தமிழ்நாட்டிலே இருக்கிற லட்சோப லட்சம் தொழிலாளர்களின் சார்பில் பூரிப்போடு வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே இந்த அவையிலே கருத்துரையாற்றிய பி.எஸ்.பி. கட்சியைச் சார்ந்த சுப்பிரமணியம் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் கே. டி. கே. தங்கமணி அவர்களும் வெகுவாகத் தொழிலாளர் நலத் துறை ஈடுபட்டு இருக்கிற பணிகளைப் பாராட்டி இங்கே பேசியிருக் கிறார்கள். ஆக, அந்தத் தரப்பிலிருந்து எல்லாம் பாராட்டுதல் பெறுவதிலிருந்து நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக இந்தத் துறையை கவனித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் வேறு வார்த்தைகளால் பாராட்டவேண்டுமென்று விரும்பவில்லை. கழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின்னால் மூன்று முக்கியமான பணிகளைச் செய்து, அத்துறையிலே மிகப் பெரிய பெருமையைத் தேடிக்கொண்டு இருக்கிறது.

முதலாவதாக, இதற்கு முன்பெல்லாம் இருக்கிற அமைச்சர்களில் ஒருவரிடத்திலே இந்தத் துறையைக் கொடுத்து இருந்தார்கள். தொழிலாளர் நலத்துறைக்கு என்று தனி அமைச்சர் இல்லை. ஆனால் கழக அரசு ஏற்பட்ட பின்னாலே தான் தொழிலாளர் நலத்துறை என்று ஏற்படுத்தி, தனி அமைச்சரை நியமித்து, அவர் அதிலே மிக மிகக் கவனம் செலுத்த வேண்டும், பத்தோடு பதினொன்றாக இருக்கக்கூடாது அந்தத் துறை என்கிற அளவுக்கு தனி அமைச்சரை நியமித்து உரிய பணிகளைச் செம்மையாகச் செய்ய வாய்ப்பளித்து இருக்கிறது.

இரண்டாவதாக, நீண்ட பல நாட்களாக தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டு இருந்த ‘மே நாள்’ விடுமுறையை சட்டமாகக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், இப்போது சில முதலாளிகள் அதிலே இருக்கிற சில சாதகங்களைப் பயன்படுத்தி சட்டத்திற்குள் புகுந்து வெளியே வந்து விடுகிறார்கள் என்ற காரணத்தினால், அதைப் போக்க வேண்டுமென்ற முறையில் நல்ல ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, எல்லாத் தொழிலாளர்களுக்கும் ‘மே நாளை’ விடுமுறையாக, கட்டாய விடுமுறையாகக் கொடுக்க வேண்டுமென்று ஒரு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

மூன்றாவதாக, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன குற்றச்சாட்டை ஓரளவு நீக்குவதற்கு, விரைவாக கன்சிலியேஷன் புரோசிடிங்ஸ், பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்பதற்காக, இந்த அரசாங்கம் மாவட்டத்திற்கு மாவட்டம், கன்சிலியேஷன் அதிகாரிகளை லேபர் ஆபீசர்களை நியமித்து இருக்கிறது. இதற்கு முன்னாலே இரண்டு மாவட்டங்களையும் ஒன்றாக இணைத்து ஒரு லேபர் ஆபீசர் இருந்தார். ஒரு மாவட்டத்திலுள்ள தொழிலாளி ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமானால் அங்கே இருந்து 80 மைல் 100 மைல் போகும் நிலைமை இருந்தது. அரசாங்கம் அந்த நிலைமையைப் பார்த்து, இன்றைய தினம் மாவட்டத்திற்கு மாவட்டம் தொழிலாளர் நல அதிகாரிகளை நியமித்து சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இவ்வாறெல்லாம் செய்வதற்குக் காரணம், மாண்புமிகு தங்கமணி குறிப்பிட்டது போல், இந்தத் துறையை ஏற்று இருப்பவர் தொழிலாளர்களோடு நன்கு பழகியவர், முன்பு டாக்சி, ஆட்டோ ரிக்ஷா சங்கத்தின் தலைவராக இருந்தவர், நீண்ட நாளாகப் பேரறிஞர் அண்ணா காலந் தொட்டு, பல தொழிற்சங்கத் தலைவர்களோடு பழகி, தொழிலாளர்களுடைய ‘சைகாலஜி’, உளவியலை நன்கு புரிந்து கொண்டிருப்பதால், காரியங்களைச் செம்மையாகச் செய்கிறார்கள்.

தொழிலாளர் நலச் சட்டங்களை நிறைவேற்றி, இந்த அரசு மிகுந்த பாடுபடும் போது, அமைச்சரவர்கள் ஒரு கருத்தை மனம் புண்பட்டுச் சொன்னார்கள் யாரோ சிலர் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் வெளியே இருந்து கொண்டு எவ்வளவு ரண களங்களை,





களரிகளை உண்டுபண்ண முடியுமோ அவ்வளவும் செய்ய முற்படுகிறார்கள். இவர்களுக்கு ஜனநாயக முறையில் நம்பிக்கை உள்ளவர்களாகிய நாம் இடம் கொடுக்கலாமா என்று அமைச்சர் மிக்க உருக்கமாகக் கேட்டார்கள்.

தொழிற்சாலை என்பது நாவல் மரம் போன்றது. பழம் வேண்டுமானால், பழங்களை மூன்று விதங்களில் நாம் அடையலாம் ஒன்று, நாவல் மரத்தின் கீழே தவம் இருக்கலாம், பழம் பழுத்து விழும் வரை; இரண்டாவதாக, பழங்கள் விழும் வகையில் கிளைகளை உலுக்கிப் பழங்களைப் பெறலாம். மூன்றாவதாக ஒரேயடியாக மரத்தை வெட்டி வீழ்த்தி இருக்கிற பழத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இந்த அரசைப் பொறுத்தவரையில், நாவல் மரத்தின் கீழே தவம் இருந்து பழம் விழுகிற வரையில் காத்துக் கொண்டிருக்காமல், உலுக்கி, வேண்டிய அளவில் கிளைகளை உலுக்கி, பெற வேண்டிய கனிகளைப் பெறுவது என்ற முறையில் இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் தீவிர வாதிகள் மரத்தை ஒரேயடியாக வெட்டி வீழ்த்தி விடவேண்டும் என்கிறார்கள். இதனால் கனிகள் நிறைய இப்பொழுது கிடைக்கலாம். ஆனால் மறுபடியும் மரமே இருக்காது. அறிஞர் அண்ணா தோற்றுவித்த, கலைஞரால் போற்றி வளர்க்கப்படுகிற தொழிலாளர் நலக்கொள்கை இந்த வகையில்தான் வளர்ந்து இயங்கி வருகிறது.

கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் சமரச முயற்சிகள் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நானே தொழிலாளர் நல அமைச்சராக இருந்தபோது தொழிலாளர்கள் பிரச்சினைகள் அதிகமாக வெடிகாத வகையில், ஆணையரையும் வைத்துக்கொண்டு, இன்னும் அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு முக்கூட்டுப் பேச்சு வார்த்தைகளை உரிய பிரதிநிதிகளோடு நடத்தி வந்திருப்பதை எல்லோரும் அறிவர்.

இ.எஸ்.ஐ. பொறுத்தவரையில், அந்தத் திட்டம் பற்றிச் சொல்லப்பட்டது. அந்தக் கார்ப்பொரேஷன் 50 ரூபாய் என்று உச்ச வரம்பை வரையறை வகுத்தார்கள். இங்கே உள்ள தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு தமிழக அரசு மத்திய சர்க்காரோடு வாதாடி, அன்று மத்திய அமைச்சராக இருந்த சஞ்சீவய்யா அவர்களிடம் பேசி, 50 ரூபாய் என்பது 63, 64 வரையில் செல்லிடலாம் என்று மாற்றியிருக்கிறோம் என்கிற செய்தியையும் அறிவித்தார்கள். அந்த முறையில் அக்கறையோடு பணிபுரியும் இந்த அரசு முக்கியமாகச் செய்தது பீடித் தொழிலாளர்கள் பற்றியது. இது பற்றி எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஹைகோர்ட்டில் வழக்குகள் இருப்பது, சீக்கிரமாக முடியவேண்டும் என்று ‘எக்ஸ்பிடைட் பெடிஷன்’ என்று விரைந்து செய்யும் மனு தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இடையிலே முதலாளிகள் சிலர் தடையாக இருந்து சட்டம் நிறைவேறாத வகையில் செய்கிறார்கள். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுபடுவோம் என்று எதிர்பார்க்கிறோம்.

பக்கத்து மாநிலமாகிய ஆந்திரத்தில் என்ன காரணத்தினாலோ பீடித்தொழிலாளருக்குக் குறைந்த பட்ச கூலியை குறைவாகக் கொடுக்கிறார்கள்; ஏதாவது போராட்டங்கள் ஏற்பட்டால் நம் முதலாளிகள் தங்களுடைய நிறுவனத்தைச் சித்தூருக்கு மாற்றிக் கொள்கிறார்கள். இங்கே தொழிலாளர்கள் பட்டினியால் வாடு கிறார்கள். நான் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த காலத்தில், ஆந்திராவின் தொழில் அமைச்சர் அவர்களுக்கு விரிவாகக் கடிதம் எழுதி, குறைந்த பட்ச சம்பளத்தை உயர்த்துங்கள் என்று கேட்டிருந்தேன். இன்னும் பதில் வரவில்லை என்று தொழிலாளர் அமைச்சர் தெரிவித்தார்கள். அதற்குத் தக்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும்.

இங்கே ஓட்டல் தொழிலாளர்கள் பற்றிச் சொல்லப் பட்டது. குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க, அச்சுத் தொழிலாளர் களுக்கு, ஓட்டல் தொழிலாளர்களுக்கு, இன்னும் கைத்தறித் தொழிலாளர்கள், முடித்திருத்துவோர் இவர்களுடைய ஊதியத்தை நிர்ணயிக்க சீரிய முறையில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதுபற்றிய திட்டத்தை அமைச்சர் தந்தார்கள். அதை விரை வாகச் செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில ஓட்டல்களில் வெறும் 25 ரூ., 18 ரூ. என்று சம்பளம் கொடுக்கிறார்கள். 118 இல்லை. 218 இல்லை. வெறும் 18 வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியம் பற்றி எடுக்கப் பட்ட முயற்சியில், சென்னையில் ஒன்று இருக்கிறது. உட்லண்ட்ஸ் ஓட்டல் தொழிலாளர்கள் வெற்றிகரமாக எட்டு நாட்கள் வேலை நிறுத்தத்தின் காரணமாக ஏற்கனவே ரூ. 30 என்று இருந்த ஊதியத்தை மேற்கொண்டு 45 ரூ. வாங்கி, ரூ. 75 என்ற அளவில் பெறும் அளவுக்குப் போராட்டத்தில் வெற்றி கண்டிருக்கிறார்கள். இதற்காக, தொழிலாளர் நல அமைச்சரையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும், இன்னும் ஆணையர் போன்ற அதிகாரி களையும் நான் உண்மையிலேயே நன்றியோடு குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

போராட்டத்தையெல்லாம் ஒடுக்குவது நோக்கம் இல்லை. போலீஸ் தலையிட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய கருத்து, போலீசார் தொழில் சங்கங்களுக்கு வரைமுறை வேண்டும் என்கிறார்கள். தொழிலாளர் போராட்டத்தை துப்பாக்கிச் சூடு வரை போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கண்ணீர்ப் புகை, தடியடி வேண்டுமானால் செய்யலாம். ஆனால் துப்பாக்கிச் சூட்டுக்குப் போகக் கூடாது என்பதை நான் தாழ்மை யோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலியில் ஏற்பட்ட நிலைகள்பற்றி அன்றைக்கு முதல்வர் அவர்கள், மருத்துவ மனையில் இருந்தபோது. எப்படியெல்லாம் வருத்தப் பட்டார்கள் என்ற காட்சியைப் பார்த்திருக்கிறேன். அரசாங்கமோ, போலீசோ, தொழில் சங்கங்களை ஒடுக்க



வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படவில்லை. ஆனாலும், சில சந்தர்ப்பங்களில் காரியங்கள் நடைபெற்றுவிடுகின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே சென்ற ஆண்டு கேர் நிறுவனத்தின் சத்துணவுத் திட்டம் புகுத்தப்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை பின்னி அண்டு கம்பனியிலே கொண்டு வந்து சொன்னார்கள். அமெரிக்க மண்ணிலே விளைகிற பொருள்களைக் கொண்டுவந்து நம் நாட்டிலே சத்துணவாகக் கொடுக்கும் திட்டம் வருகிறது. அமெரிக்காவிலே இருந்து விண் மேகம் புறப்படும் நேரத்தில், அது தமிழ் நாட்டில் வந்து மழையாக பெய்தால் அதை நாம் வரவேற்கிறோம் என்றார்கள். அது 78 தொழிற்சாலைகளிலே தான் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய கருத்து இதிலே என்ன வென்றால், இந்தச் சத்துணவுத் திட்டம் மற்ற தொழிற்சாலை களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதுதான். ஒருவேளை அந்த கேர் நிறுவனத்தினர் உற்சாகம் குறைவாக இதிலே இருந்தாலும், இந்த அரசு அவர்களைத் தூண்டி மற்ற தொழிற்சாலை களுக்கும் இந்தச் சத்துணவுத் திட்டத்தைப் புகுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரி, சென்ற ஆண்டு தொழிலாளர் நல நிதி என்று 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்காக அமைச்சர் அவர்கள் மராட்டிய மாநிலத்திற்குச் செல்லவிருப்பதாக அறிகிறேன். இதன் விஷயமாக அங்கே போய் கருத்துக்களை அவர்கள் தெரிந்து வரவிருக்கிறார்கள். முதலாளிகள் தங்களுடைய பங்கைக் கொடுப்பதற்காக, இன்று பிராவிடன்ட் பண்டிலே இருப்பதைப் போல் அல்லாமல்—அவர்கள் பங்கை ஒழுங்காக கொடுக்கும் நிலைமையிலே விதி முறைகளை அமைக்க வேண்டும். அதோடு மட்டுமில்லாமல், தொழிலாளர்கள் சாதகமான தீர்ப்புகளை கோர்ட்டிலே பெற்றுவிட்டால், முதலாளிகள் உயர் நீதிமன்றத்திற்குப் போய், அதன் மீது ஸ்டே ஆர்டர், ரிட் மனுக்களின் மூலமாக பெறுகிறார்கள். இதற்காக அவர்கள் 1,000 ரூபாய், 2,000 ரூபாய் செலவு செய்கிறார்கள். ஆனால், தொழிலாளர்களால் அப்படி சென்று செலவு செய்ய முடிவதில்லை. எனவே, இதற்கு என்று ஒரு வழக்கறிஞர் குழு ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஊதியம் வரையறுக்கப்பட்டு, தொழிலாளர் சார்பிலே அந்த வழக்கறிஞர்கள் தங்களுடைய வழக்குகளை நடத்த உரிய முறையிலே வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், இலவச மாக அதை நடத்த வழக்கறிஞர்களை கொடுக்க முடியுமா என்று யோசித்தோம்; ஆனால் அது முடியாத காரியம். எனவே, தொழி லாளர் நல அமைச்சர் அவர்கள் இந்த முறையிலாவது உதவியை செய்ய முடியுமா என்று கருதிப் பார்க்க வேண்டும்.

இதற்குப் பிறகு தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. சென்ற ஆண்டு முக்கூட்டு மாநாட்டை கூட்டி, ஒவ்வொரு எஸ்டேட்டிலேயும் இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம்

விவாதித்தோம். அதற்குப் பிறகும் இப்பொழுது மதிப்பீட்டுக் குழுத் தலைவர் என்ற வகையில் பல்வேறு தோட்டத் தொழிலாளர்களை நான் சந்தித்துப் பேசினேன். அவர்களுடைய பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள்—காரணம் பல முடிவுகள் இன்றைக்கும் வேகமாக நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன, ஏனென்றால், தோட்டத் தொழிலாளர்கள் குளிர் பகுதியிலே வாழ்கிறார்கள். அவர்கள் வீடுகளிலே இன்னமும் மின் விளக்குகள் அளிக்கப்படவில்லை. இப்போதைய இந்தத் தோட்டத் தொழிலாளர் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற நடைமுறைகள் நிறைவேற்றப்படவில்லை. அவைகளை எல்லாம் இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் வேஜ் போர்டின் முடிவுகளை விரைவாக அமல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசு அடிக்கடி கூட்டங்களைப் போட்டு, எப்படி எப்படி அந்த முடிவுகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லப்படுகிறதோ, அப்படி அப்படி நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுகிறது. இந்தத் தமிழக அரசை பொறுத்த வரையில், இதிலே அது செய்திருக்கும் முயற்சியை மத்திய அரசு கூட பாராட்டியிருக்கிறது. எனவே, நல்ல காரியங்களைச் செய்து வருகிற தொழிலாளர் நல அமைச்சரை நல்லவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, வேலை வாய்ப்பைப் பற்றி இங்கே குறிப்பிடப் பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகங்களைத் திறக்கும் நோக்கிலே நான் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். இப்பொழுது நாட்டிலே இலட்சக்கணக்கான வாலிபர்கள் வேலை இல்லாமல் தங்களுடைய பெயர்களை அங்கே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஆங்காங்கே இருக்கின்ற வாலிபர்களுக்கேற்ப கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒரு சின்ன சிக்கல் இருக்கிறது. அவர்கள் பதிவு செய்யும் நேரத்திலே தங்களுடைய சர்டிபிகேட்டை கொடுத்து பதிவு செய்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. சர்ட்டிபிகேட், அல்லது டைப்ரைட்டிங் படித்திருந்தால் டைப்ரைட்டிங் சர்ட்டிபிகேட்டை கொடுத்து பதிவு செய்கிறார்கள். ஆனால், இனிமேல் அவர்கள் கொஞ்சம் தயவுசெய்து "நேடிவிட்டி சர்ட்டிபிகேட்டை" கொடுத்து பதிவு செய்து கொண்டு போகும்படி சொன்னால், அது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த மாநிலத்திலே இருக்கிற மக்களுக்குத் தான் அதிகமாக வேலை கிடைக்க வேண்டும்; அதேமாதிரி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கின்ற மாணவர்களுக்கு அப்படி பதிவு செய்து, வேலை கிடைப்பதிலே அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





பத்திர பதிவுத் துறையைப் பொறுத்த வரையில், இந்த புதிய முறை நல்ல முறையிலே செயல்பட்டு கொண்டிருக்கிறது. ஆங்காங்கே சில இடங்களிலே ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அவை எல்லாம் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியிலே 40, 50 மைல்கள் நடந்து வந்து பொன்னேரியிலே பத்திரங்களைப் பதிவு செய்கிறார்கள். மாண்புமிக்க அமைச்சர் அவர்களை கும்முடிப்பூண்டியிலே ஒரு துணைப் பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும், பொதுப்படையாக இந்த மானியக் கோரிக்கையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மிகக் குறைவாக இருக்கிறது, பல காரியங்களை செய்வதற்கு, என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். ஆனால், அதிலே பணத்தை வெட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் இங்கே வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

மற்றும், இந்தத் தொழிலாளர் நலத் துறையிலே பணிபுரியும் அதிகாரிகளுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதை எல்லாம் கருத்தில் கொண்டு, "துணை கமிஷனர்களை" நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் "லேபர் ஆபீசர்" என்று எப்படி அமர்த்தப்பட்டிருக்கிறார்களோ, அதே போல் "துணை கமிஷனர்களையும்" அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"அன் ஆர்கனைசுடு லேபர்" என்று சொல்லுகின்ற நிலையிலே இருக்கிற ஹோட்டல் தொழிலாளர்கள், அச்சகத் தொழிலாளர்கள் இவர்களுடைய சிதறிய வாழ்விலே ஒளி விளக்கை நாம் ஏற்ற குறைந்தபட்ச ஊதியத்தை உடனே நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பு தந்ததற்கு நன்றி கூறி, தொழிலாளர் நல அமைச்சருக்குப் பாராட்டுதலைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

நமது அரசாங்கத்தின் தொழிலாளர் கொள்கையை குறிப்பாக "வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்" என்ற அளவிலே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இது பாராட்டப்படக் கூடிய ஒன்று தான். ஆனால், அந்தக் கொள்கை விளக்கத்தோடு

அடுத்தபடியாக கூறுகின்றவற்றைப் பார்க்கும்பொழுது, இந்த நாட்டிலே தொழில்கள் வளருகின்றனவா, தொழில்கள் வளர்ந்தால் தான் இந்த தொழிலாளர்களுக்கு நல் வாழ்க்கை இருக்கிறது என்ற அடிப்படையிலே இருக்கின்ற இந்த அரசாங்கம், இந்த தொழில் வளம் பெருக ஏதாவது செய்து வருகிறதா என்றால் இல்லை என்று தான் சொல்லவேண்டும். அப்படியேதான் இந்த தொழிலாளர்களுக்கும் வாழ்வு இல்லாத நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம்

உதாரணமாக எடுத்துக்கொண்டால் இன்றைக்குக் கோவையிலே பல்வேறு ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 21 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. கடந்த 2½ ஆண்டுகளாக இவை மூடப்பட்டிருக்கின்றன. இந்த ஆலைகளைத் திறந்து நடத்த இந்த அரசு கடந்த 2½ ஆண்டுகளிலே ஏதாவது செய்திருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்று தான் தெரிய வருகிறது.

அண்மையில் நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் சேர்மன் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்டை "இந்து" பத்திரிகையிலே கொடுத்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், இந்த 2½ ஆண்டுகளாக மூடிய மில்களை திறக்க எந்த முயற்சியும் இந்த தமிழக அரசு எடுக்கவில்லை என்று. அவர்கள் இந்த அரசாங்கத்தின் மீது கூறிய குற்றச்சாட்டை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே இந்நிலையில் இந்த அரசாங்கம் தொழிலாளர் மறு மலர்ச்சியிலே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, மிகவும் வருந்தத்தக்க நிலையிலே இது இருக்கிறது என்பதை வேதனையுடன் கூறிக்கொள்கிறேன். இன்று இந்த இலாகாவானது பல்வேறு திட்டங்களை அமல் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், அந்தத் திட்டங்கள் சிறந்த முறையில் அமல் நடத்தப்படுகின்றனவா, அந்த திட்டங்களினால் தொழிலாளர்களுக்கு நன்மைகள் வருகின்றனவா என்று சிந்தித்துப் பார்க்கும் பொழுது, எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல், பல திட்டங்களிலே குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றைச் செயல்படுத்துகின்ற முறையிலேயும் கூட தொழிலாளர்களுக்கு நேரடியான நன்மைகள் வரக் கூடாத நிலைமை இருக்கிறது.

உதாரணமாக, இன்று இந்த நிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது என்றால், இந்தத் திட்டங்களை அமல்படுத்துகின்ற அதிகாரிகள் ஸ்வாதீனமாக செயல்படுகின்ற வழி வகைகள் இல்லாமல் இருக்கின்றன. ஏனென்றால், இப்போது அரசாங்கம் ஏற்று நடத்தும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆகவே, அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளிலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும், இந்த சட்டங்களை அமல்படுத்துகின்ற பொறுப்பு இந்த அரசாங்க அதிகாரிகளுக்கு இருக்கும்பொழுது, அவர்கள் தனியார் துறையிலே இருக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு முறையிலேயும்,



அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இன்னொரு முறையிலேயும் செயல் ஆற்றுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அரசாங்க நிறுவனங்களிலே இந்த சட்டங்கள் ஒழுங்காக செயல்படுத்தப்படவில்லை என்பதை நான் ஒரு உதாரணத்தின் மூலமாக இங்கே சொல்ல முடியும்.

என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அங்கு ஒரு அரசாங்க ரப்பர் தோட்டம் இருக்கிறது. அந்த ரப்பர் தோட்டத்தைப் போல் பல மடங்கு விஸ்தீரணமுள்ள தனியார் தோட்டங்களும் இருக்கின்றன. இந்த அரசாங்கத் தோட்டத்திலே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தனியார் தோட்டங்களிலே இருக்கும் சலுகைகளும், சம்பள விகிதங்களும் கொடுக்கப்படவில்லை என்று நான் சொல்லும்பொழுது, இந்தச் சட்டங்களை அமல் படுத்தும் அதிகாரிகள் என்ன தான் செய்ய முடியும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சில அதிகாரிகள் வேண்டுமானால் யோக்கியமாக இருக்கலாம். தாங்கள் தனியார் துறையானாலும், அரசாங்க துறையானாலும், சட்டங்களை ஒரே முறையில் தான் அமல்படுத்துவோம் என்று நினைக்கலாம். ஆனால், ஜனநாயக அடிப்படையிலே இந்த அரசு காரியங்களை மேற்கொண்டிருக்கும்பொழுது அதிகாரிகள் உள்ள துணிச்சலோடு செயலாற்றக் கூடிய நிலைமை இல்லாது இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற அரசாங்க ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற ஊதியம் எங்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று, நிர்வாகத்தினிடம் கோரிக்கைகளை வைத்து, போராட்டங்கள் நடத்தினார்கள். கடைசியாக, ஒரு பேச்சு வார்த்தை அடிப்படையில் கமிஷனரால் இது தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்று விடப்பட்டது. ஆனால், அது கமிஷனர் கைக்கு சென்று ஒரு ஆண்டு காலம் ஆகியும், இன்னமும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்றால், தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் ஊதியத்தையும், சலுகைகளையும் அரசாங்கத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏன் இந்த அரசு கொடுக்கத் தயங்குகிறது என்று கேட்கிறேன்.

இந்த அரசாங்கம் உண்மையிலேயே தோட்டத் தொழிலாளர்களின் நலத்திலே அக்கறை கொண்டிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம் சம்பளம் கொடுப்பது போன்றவைகளிலே 'முன் மாதிரியாக செயல்பட வேண்டும்' அப்படி அது செயல்பட்டால் தான், தனியார் துறையிலே இருக்கின்ற தோட்டத் தொழிலாளர்களுக்கும், அரசாங்க ரப்பர் தோட்டத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் நன்மை கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்ததாக, இன்று அரசாங்கம் கணக்கு கொடுக்கிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகப்படியான வேலை நிறுத்தங்களும், வேலை இழப்பு நாட்களும் அதிகரித்திருக்கிறது என்று சொல்லு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1971 ஜூலை 22

கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், இவ்வளவு வேலை நிறுத்தம் ஏற்பட்டாலும், இவ்வளவு வேலை இழப்பு நாட்கள் அதிகரித்திருந்தாலும் கூட. இந்த அரசாங்கம் அதை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. வேலை இழப்பு நாட்கள் அதிகரித்தால், அதனால் இந்த நாட்டிற்கு எவ்வளவு நஷ்டம் வருகிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் இந்த அரசாங்கம். அதன் பிறகு நல்ல முறையிலே செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேலை நிறுத்தம் ஏற்படுகிறது என்று சொன்னால், தொழிலாளர்கள் மட்டுமல்ல இந்த நாடே பாதிக்கப்படுகிறது. நாம் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குகின்ற நோக்கில் உழைப்பு தான் மிக முக்கியமானது. இந்த நாட்டில் உழைத்து உற்பத்தியைப் பெருக்கினால்தான் நாம் சமதர்ம சமுதாயத்தை உருவாக்க இயலும். ஆகவே எவ்வளவு தூரம் வேலை நிறுத்தத்தைத் தடுக்க முடியுமோ, அதனால் ஏற்படுகின்ற உழைப்பு விரயத்தைத் தவிர்க்க முடியுமோ அவ்வளவு தூரம் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ந. ப. 12-00 அடுத்ததாக இன்னொரு சூழ்நிலை தொழிலாளர்கள் மத்தியிலிருந்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இது வரையில் தொழிலாளர்கள் மத்தியில் அதிகமாக ஈடுபடாமல் இருந்தது. அதற்குக் காரணம் தொழிலாளர்களிடம் அதற்கு அதிகப் பிடிப்பு இல்லாதிருந்தது தான். அடிக்கடி அந்த அரசு தொழிலாளர் நல அரசு, தொழிலாளர் நல அரசு என்று பறை சாற்றிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் தொழிலாளர்களிடையே நாமும் செயல்பட வேண்டுமென்று ஒரு எண்ணம் கொண்டு இன்று எந்தெந்த நிறுவனங்களில் பல்வேறு அரசியல் கட்சிகள் சார்ந்த தொழிலாளர்களுக்காகச் சங்கங்கள் வைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவோ, அங்கெல்லாம் தலையிட்டு அங்கே தொழிலாளர்களுடைய ஐக்கியத்தைக் குலைத்து. தொழிலாளர்கள் நன்மை பெற முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறது, திராவிட முன்னேற்றக் கழகம். அதனால் தொழிலாளர்களுக்குப் பெரிதும் பாதகமேற்படுகிறது. அவர்கள் ஐக்கியம் குலைவது மட்டுமல்ல. அவர்கள் நன்மை பெறுவதற்குப் பதிலாக பாதகங்கள் விளைகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்கு வரத்துத் தொழிலாளர்கள் மத்தியில்கூட இந்த அடிப்படையில்தான் சச்சரவு ஏற்பட்டது. ஆகவே, தொழிலாளர்கள் நன்மை பெறுவதற்கு, இந்தக் கொள்கையான்து இடையூறாகவிருக்கிறது. இதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக மெட்ராஸ் ரப்பர் பேக்டரி கடந்த 82 நாட்களாக வேலை நிறுத்தத்திலிருந்து இன்று தான் ஒரு நல்ல செய்தி கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த



1971 ஜூலை 22] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அரசாங்கம் சற்று அதிக கவனம் செலுத்தியிருந்தால், இந்த வேலை நிறுத்தம் சற்று முன்னதாகவே முடிவுற்று தொழிலாளர்கள் இந்த அளவுக்குப் பாதிக்கப்படாத நிலை ஏற்பட்டிருக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

அதேபோல் ஸ்டேண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையில் அமைச்சர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மீறும் நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் துணிச்சலோடு அந்த முதலாளி மீது நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், பெரும் பிரச்சினையாகவுள்ளது. இந்த வீட்டு வசதி. அரசாங்க நிறுவனங்களானாலும் சரி, தனியார் துறை நிறுவனங்களானாலும் சரி. தொழிலாளர்கள் வீட்டு வசதி விஷயத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை. தனியார் துறை நிறுவனங்களில் சில அரசாங்கம் கொடுக்கின்ற கடன் வசதியைப் பெற்றுக்கொண்டு தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்காமல், அந்த நிதியைத் தங்களுடைய சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இன்னும் செய்து தரப்படவில்லை. இதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்ததாக இப்போதிருக்கின்ற மினிமம் வேஜ் சட்டமானது பல ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்றைக்கிருக்கின்ற விலைவாசி ஏற்றத்தின் அடிப்படையிலும், மற்ற சூழ்நிலையின் அடிப்படையிலும், அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அது மட்டுமல்ல, இதை அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே செய்யப்பட்டுள்ள சிபார்சுகள் இருக்கின்றன. அதையும் கருத்தில் எடுத்துக் கொண்டு அந்தச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கடைசியாக ஒன்று. வேலை தேடித்தரும் நிறுவனங்கள் நமது மாநிலத்தில் ஏறத்தாழ 25 இருப்பதாக அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னையில் இருக்கும் எம்பிளாய் மெண்ட் ஆபீஸ் ஒன்றில் மட்டும் ஏறத்தாழ 40,000 படித்த இளைஞர்கள் பதிவு செய்துகொண்டு பல ஆண்டுகளாகக் காத்திருக்கிறார்கள். இதுபோன்று பலவிடங்களில் பதிவு செய்து கொண்டு இன்னும் வேலை கிடைக்காமல் இருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இம்மாதிரி அந்த இளைஞர்கள் காத்துக் கொண்டிருக்கின்ற காலத்தில் அவர்களுக்கு வயது அதிகமாகி விடுவதால். பிறகு வேலை கிடைக்கும் வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். ஆகையினால் அவர்கள் என்றைக்கு வேலை தேடித் தரும்

நிறுவனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டார்களோ அன்று முதல் அவர்களுக்கு வயது வரம்பு விதி விலக்கு அளிக்கப்பட வேண்டும், அல்லது பதிவு செய்து கொண்ட தேதியிலிருந்து வேலை தேடித்தரும் நாள் வரையில் அவர்களுக்கு ஏதாவது ஒரு அலவன்ஸ் கொடுக்க வேண்டும். இதைச் செய்ய அரசாங்கம் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கொடுக்கின்ற கணக்கின்படி இன்று ஏறத்தாழ 4 இலட்சம் இளைஞர்கள் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டு கணக்கின்படி 28,000 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அரசாங்கம் முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இன்னும் பிசிகலி ஹேண்டிகேப்ட் என்பவர்களுக்குக் கூட எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. கணக்கு பார்க்கின்றபோது பதிவு செய்து கொண்டிருக்கிற எண்ணிக்கையில் முப்பது சதவீதத்தினருக்குத்தான் ஓராண்டு காலத்தில் வேலை வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குறையை நாம் தீர்க்க வேண்டுமானால், தனியார் துறைக்கு தொழில்கள் ஆரம்பிக்க லைசென்ஸ் வழங்கும்போது நிபந்தனையாக இத்தனை அங்கஹீனமான நபர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டு, லைசென்ஸ் வழங்கினால் நிச்சயமாக அவர்களுக்கு இருக்கிற குறையைத் தீர்ப்பதற்கு இந்த அரசால் முடியுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நமது அண்டை மாநிலமான கேரளாவில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதாவது அந்த மாநிலத்தின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் தும்பா ராக்கெட் என்று ஒரு அமைப்பு மத்திய அரசால் நிறுவப்பட்டிருக்கிறது. அங்கேயிருக்கின்ற தொழிலாளர்களில் 80 சதவீதத்தினர் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். மீதியிருக்கின்ற 20 சதவீதத்தினர் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். அந்தத் தொழிற்சாலைக்குக் கேரளத்தைச் சேர்ந்தவர்களை மட்டும்தான் நியமிக்க வேண்டுமென்று அந்த மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். முழுமையுமாக அந்த மாநில மக்களுக்கே அளிப்பதாக அந்த ப்ராஜக்டின் மேனேஜிங் டைரக்டர் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதேபோல் நம்முடைய மாநிலத்தில் இருக்கும் மத்திய அரசின் நிறுவனங்களில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கே வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, இந்த ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா சம்பந்தமாக ஒரு வேண்டுகோள். எனது தொகுதியில் ஒரு துணைப் பதிவாளர் அலுவலகத்தை நிறுவ, அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கோரிக்கை ஏற்கனவே அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.





மேலும், எனது தொகுதியில் ஏறத்தாழ 1,000 தொழிலாளிகள் வேலை செய்து கொண்டிருந்த ஆம்பாடி தனியார் ரப்பர் தோட்டம் கதவு அடைப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் தொழிலாளிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தோட்டத்தைத் திறந்து வேலை தொடர அரசாங்கம் நிர்வாகிகளை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சங்கவாதியாக நன்னுடைய அரசியல் வாழ்க்கையைத் தொடங்கி இன்று தொழிலாளர் நல அமைச்சராக இருந்து வருகிற மாண்புமிகு திரு. என். வி. என். அவர்கள் கோரியுள்ள தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து, அதன் அடிப்படையில் எனது கருத்துக்களை அமைத்திட விரும்புகிறேன்.

வளர்க தொழில், வாழ்க தொழிலாளர் என்ற கொள்கை அடிப்படையில்தான் இந்த அரசு இயங்குகிறது. குறிப்பிட்ட அளவுக்கு நேர்மையான உணர்வோடு முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் உறவு இருக்க வேண்டும். நியாய அடிப்படையில் இரண்டு சார்பிலும் காரியங்கள் நடைபெற வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் செயல்படுகிற இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில நேரத்தில் கடைசி ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டிய வேலைநிறுத்தம், முதல் ஆயுதமாக பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையும், அதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை நாம் ஒத்துக்கொள்கிற நேரத்தில், பல நேரங்களில் நியாய உணர்வோடு முதலாளிகள் நடந்துகொள்ளத் தவறுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் நியாய உணர்வு தவறுவது மட்டுமல்ல—மனித அபிமான உணர்வோடு நடந்து கொள்ளக் கூடத்தவறுகிறார்கள். நெஞ்சில் ஈரப்பசை கொண்டிருப்பவர்கள் முதலாளிகளாக செயல்பட முடியாது என்கிற எண்ணத்தில் செயல்படுகிறார்கள்.

குறிப்பாக சிவகாசித் தொகுதியில் இடம் பெற்றிருக்கிற தீப்பெட்டி, பட்டாசு, அச்சகத் தொழிலகங்களில் நடைபெறுகிற அவலநிலையைச் சுட்டிக் காட்ட வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே இருக்கிற தீப்பெட்டித் தொழிற்சாலைகளை எல்லாம் தொழிற்சாலைகள் என்ற வட்டத்திற்குள்ளேயே கொண்டுவராது குடிசைத் தொழில் என்ற அடிப்படையில் அடைக்கிறார்கள். அந்தக் குடிசைத் தொழில்களை நடத்துகின்றவர்கள் பெரிய பெரிய பங்களாக்களை வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உடம்பில் உயிர் ஓட்டிக் கொண்டிருக்கும் வயதில் இருக்கிறவர்களுக்குக் கூட குறைந்த

ஊதியத்தையே கொடுத்து உழைப்பைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அத்தோடு இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிவகாசியில்தான் தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால், தொழிற்சாலை இன்ஸ்பெக்டர் அலுவலகம் விருதுநகரில் இருந்து வருகிறது. அதை என்னுடைய தொகுதிக்கு மாற்றவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை கொடுத்திருக்கிறேன். அதை நிறைவேற்றித் தருவார்கள் என்று நம்புகிறேன்.

அதோடு சிவகாசியில் தொழிலாளர் குடியிருப்பு அரசினர் காலனியைப் பொறுத்த வரை இன்றய தினம் அரசினரே நேரிடையாக வாடகை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த விடுதிகளை முதலாளிகளிடம் ஒப்படைத்து விடும்படியாகவும், வாடகையை அவர்களே வசூல் செய்ய விடும்படியாகவும், மத்திய அரசு பரிந்துரை செய்திருப்பதாகக் கருதுகிறேன். அதனைக் கவனித்து நம்முடைய அரசே அந்தப் பொறுப்பை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய வகையில் மத்திய அரசுக்கு இப்போதுள்ள நிலையை நீடிக்கலாம் என்பதாக கேட்டுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

அதே நேரத்தில் சிவகாசியில் உள்ள தீப்பெட்டி, பட்டாசு, அச்சகங்களில் இரண்டு வகையான ஊழியர் பட்டியல்கள் வைத்திருக்கிறார்கள். ஒன்று நிலையாக வேலை செய்பவர்கள் பற்றியது. இன்னொன்று தற்காலிக வேலையில் இருப்பவர்கள் பட்டியல். இப்படி தற்காலிக வேலையில் இருப்பவர்கள் என்று பட்டியல் வைத்துக்கொண்டு, தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய போனசு, கிராஜுட்டி தராமல் ஏமாற்று வேலை செய்து வருகிறார்கள். அதை அரசு கண்டுபிடித்துக் கவனிக்க வேண்டும். எட்டு மணி நேரம் வேலை என்று சொல்கிறோம். எட்டு மணி நேர வேலை, என்பதற்காக மே தின விடுமுறை தொழிலாளர்களுக்குக் கிடைக்க சிகாகோவில் பெரிய புரட்சி நடந்திருக்கிறது.

ஆனால் இன்றைய தினம் என்னுடைய சிவகாசி தொகுதியில் எட்டு மணி நேர வேலை என்பதே இல்லை. அதிகாலை 3 மணிக்கு பஸ்ஸை எடுத்துக்கொண்டு கிராமப்புறங்கள் தோறும் சென்று சிறுவர்களையும், சிறுமிகளையும் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு அழைத்து வந்து விடுகிறார்கள். இரவு நெடுநேரத்திற்குப் பிறகு கிராமங்களில் கொண்டு போய் விடுகிறார்கள். இந்த எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை எங்கள் தொகுதியில் கொண்டு வருவதற்காக, இங்கே ஒரு சிகாகோ புரட்சியையே நடத்த வேண்டிய நிலைமை உருவாகிவிடும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அச்சகங்களில் பணிபுரிகிற முழுநேர ஊழியர்களுக்கு ஒரு நாளைக்கு 1 ரூபாய், 1½ ரூபாய் தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அச்சகத்தில் நீண்ட நாள் பணி புரிந்து வயது முடிகின்ற



தருணத்தில் இருக்கின்றவர்களுக்குக் கூட அதிகபட்சம் சம்பளம் 85 ரூபாய், 90 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. இந்த விஷயத்தையும் அரசு கவனித்துப் பார்த்து, தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டாக வேண்டும்.

வளர்க தொழில், வாழ்க தொழிலாளர் என்ற லட்சியத்தைக் கொண்டிருக்கின்ற இந்த அரசு தொழிலாளர்களுக்காக இருக்கின்ற சட்டங்களை அமல்படுத்துவதற்கும், தொழிலாளர்களுடைய நலனுக்காக பல காரியங்களைச் செய்வதற்கும் தயங்கக் கூடாது என்பதைத் தெரிவித்து, இந்த மானியத்தை மனதாரப் பாராட்டி, வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. க. சுப்பு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நாங்கள் கொடுத்திருக்கக் கூடிய வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்தப் பேரவையிலே தொழிலாளர்களின் நிலைமைபற்றி மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவர்கள் கூறிய கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். இந்த அரசாங்கமும் தம்முடைய அறிக்கையில் கொடுத்திருக்கிறது—" வளர்க தொழில்—வாழ்க தொழிலாளர் " என்பதாக. இந்த முழக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனினும், தொழிலாளர் நல அரசு என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதாக நாங்கள் நினைக்கிறோமோ அவற்றைத் தான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். கொடுத்திருக்கக் கூடிய முழக்கம் இது தொழிலாளர் நல அரசு என்பதை பிரகடனப் படுத்துவதாகும்.

ஆயினும், இந்த அரசு வந்து தொழிலாளர்களுக்குப் புதிதாக என்ன செய்திருக்கிறது ? ஏற்கெனவே, 1948-ல், 61-ல், 66-ல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைத் தான் இந்த அரசு அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே, இது தொழிலாளர் நல அரசு என்பதற்கு அடையாளமாகவாவது அந்தச் சட்டங்களை அமல்படுத்துவதில் முன்பு இருந்த காங்கிரஸ் ஆட்சிக்கு மாறுபட்ட நிலையில் இந்த அரசு செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

தொழிலாளர் தகராறு என்றால் அதில் போலீஸ் தலையிடக் கூடாது என்பதை நாங்கள் வற்புறுத்துகிறோம். முன்பு இருந்த அரசு அதை மதிக்கவில்லை. எந்த இடத்தில் நியாயம் இருக்கிறது என்பதைப் பார்த்தே இந்த அரசு தலையிடும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர்கள், முதலாளிகள் ஆகிய இரண்டு சாரார்களிடமும் நல்லுறவு நியாய அடிப்படையில், நேர்மையான அடிப்படையில் நிலவியாக வேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதற்காக " பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் " என்ற முறையில் ஒரு அரசு செயல்பட

[திரு. க. சுப்பு] [1971 ஜூலை 22

முடியாது. யார் பக்கம் நியாயம் இருக்கிறதோ அதற்கு ஊக்கம் அளிக்கிறேன் என்பதை வரவேற்கத் தயார். ஆனால் நியாயம் என்பதை யார் எடுத்துச் சொல்வது ?

இன்றைய தினம் திருச்சியில் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததைப் பற்றி இங்கே குறிப்பிடும்போது போலீஸ் துறையினர் கொடுத்த அறிக்கையை அப்படியே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் படிக்கிறார்கள். அங்கே உள்ள டாக்சிக்காரர்கள் இலவசமாக போலீசார் தங்களை பல இடங்களுக்கு வண்டியை ஓட்டச் சொன்னதன் காரணமாக இந்தத் தகராறு எழுந்தது என்கிறார்கள். அந்தத் தரப்பு வாதத்தில் எவ்வளவு நியாயம் இருக்கிறது என்பதைக் கூட ஆராயத் தயாராய் இல்லை. அது பற்றி பல விவரங்கள் இருக்கின்றன, பெண்களை நையாண்டி செய்ததற்காக கைது செய்தோம் என்று போலீஸ் துறையினர் சொல்கிறார்கள் என்றால், இதில் உள்ள உண்மை என்ன என்பதைக் கூட விசாரிக்க நாம் முன்வருவதில்லை. தொழிலாளர்கள் மீது பெட்டி கேஸ்தான் போடப்பட்டிருக்கிறது. இருப்பினும், இரவு 12 மணிக்கு அவர்கள் கைது செய்து காவலில் வைக்கப்படுகிறார்கள். இது எந்தச் சட்டத்திலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று புரியவில்லை. இது தொழிலாளர் நல அரசு என்றால், எப்படி தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகவே தொழிலாளர் நல அரசு என்றால் அதற்குப் பொருத்தமாக சட்டங்களை அமல்படுத்துவதில் முன்பு இருந்த ஆட்சிக்கு மாறாக இவர்கள் செயல்பட்டாக வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். அதிகாரிகள் கொடுக்கிற விவரத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஒருதலைப்பட்சமாக நடக்கக் கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைய தினம் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகிற போது பேச்சு வார்த்தை (கன்சிலியேஷன்) நடக்கக் கூடாது என்கிறார்கள். இங்கிலாந்து நாட்டில் கூட ஒரே நேரத்தில் இரண்டும் நடைபெறலாம் என்ற நிலை இருக்கிறது. சொல்லப் போனால் வேலை நிறுத்தம் நடைபெறுகிறபோது பேச்சுவார்த்தைகள் நடந்தால் தான் சீக்கிரமாக பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆகவே வேலை நிறுத்தம் நடைபெறுகிறபோது பேச்சுவார்த்தை நடக்கக் கூடாது என்பதை இந்த அரசு நீக்கியாக வேண்டும்.

எங்களுக்குக் கொடுத்திருக்கிற அறிக்கையில் எத்தனை விபத்துக்கள் நடந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு நஷ்டஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரத்தைக் கொடுக்கவில்லை. கைபோயிற்று—கால்போயிற்று—உயிர்போயிற்று என்கிறபோது உடனடியாக அரசு நஷ்டஈடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யாமல்—அவர்கள் மனுச் செய்துகொள்ளவேண்டும், கோர்ட்டுக்குப் போக வேண்டும் என்று இருக்கிற நிலையை இந்த அரசு மாற்றியாக வேண்டும். தொழிலாளர் நல அரசு செயல்படுகிறது என்பதற்கு



1971 ஜூலை 22] [திரு. க. சுப்பு]

அடையாளம் தொழிலாளர்கள் மனுச் செய்து கொள்ளாமலே, கோர்ட்டுக்குப் போகாமலே, விபத்திற்குள்ளானால் நஷ்டஈடு உடனடியாக அரசாங்கமே தலையிட்டு வழங்கத்தக்க ஏற்பாட்டைச் செயல்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இன்றைக்கு தொழில் கோர்ட் என்றாலும், ஐந்து மாவட்டங்களுக்கு ஒரு கோர்ட் இருக்கிறது. இந்த நிலையில் நீதி எவ்வாறு உடனடியாக கிடைக்கும் என்பதை யோசிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிற காரணத்தால் பல காரியங்களைத் துரிதமாகச் செய்ய முடியவில்லை. 'ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்' இருக்கிறது. அது இன்றைக்கு வந்தது அல்ல. 1948-ல் இருந்து இருக்கிறது. எங்கள் பகுதியிலே ஒரே இடத்தில் மூன்று ஊராட்சிகளை தனித்தனியாக மைனர் பஞ்சாயத்துக்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து நகரப் பஞ்சாயத்தாக மாற்றுவதே நல்லது. அந்தப் பகுதியிலே பல சாயப்பட்டறைகளும் இருக்கின்றன. தொழிலாளர்கள் நிரம்பியிருக்கிற அந்தப் பகுதியில் தொழிற் சட்டங்கள் அமல்படுத்தப்படவில்லை. அதற்கு என்ன வழியோ அதைக் கவனிக்க வேண்டும். சரியான முறையில் அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அதிகாரிகள் பல சோதனைகளைச் செய்திருக்கிறார்கள். இதிலே 1969-ல் ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிளிஷ்மென்ட் ஆக்ட்டின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 2,16,538 ஆகும். அதில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,84,710 ஆகும். 1971-ல் இச் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,11,190 ஆகும். இதில் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,15,155 ஆகும்.

1969-ம் ஆண்டில் 894 வழக்குகள் தொடரப்பட்டிருக்க, இவ்வாண்டில் 1103 வழக்குகள் தொடரப்பட்டன. இதில் 986 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 13 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. பல இடங்களில், பல கடைகளில் இந்த சட்டத்தை அமல்படுத்துவதற்கு வேண்டிய வழி இல்லை. அவற்றையெல்லாம் கண்டுபிடித்து தக்க முறையில் அமல்படுத்த வேண்டும். அவற்றைக் கண்டு பிடிப்பதிலே தீவிரம் காட்ட வேண்டும். தொழிலாளர்களுக்கு நல் வாழ்வு கிடைப்பதற்கு என்ன வழி இருக்கிறதோ அதைச் செய்ய வேண்டும். தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடாது. இந்த அளவில் பேச வாய்ப்பு அளித்தமைக்காக தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. மா. வே. நாராயணசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் மானியக் கோரிக்கையின் மீது பேசுகிறபோது முதற்கண் மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[1971 ஜூலை 22

தம்முடைய தமிழக அரசு 'தொழிலாளர் நல அரசு' என்பதனை முதலிலே நான் மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மொத்தத்திலே உழைக்கின்ற வர்க்கத்தினரை பாட்டாளி மக்களை வாழ்விக்கச் செய்ய வேண்டுமென்ற லட்சியத்தின் அடிப்படையில்தான் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார்கள். அப்பேர்ப்பட்ட முன்னேற்றக் கழகத்தின் அரசு நிச்சயமாக தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளித்திட வேண்டுமென்பதிலே அதிக நாட்டத்தோடு பணியாற்றிக் கொண்டு வருகிறது என்ற உண்மையை இந்த நாடு மிக நன்றாக அறியும். தொழிலாளர் உலகமும் மிக நன்றாக அறிந்து வரவேற்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரக்கூடிய இந்த அரசு தொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, தொழிலாளர் நல அரசாக நல்ல லட்சியத்தோடு பாடுபட்டுக்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முற்போக்கு உள்ளம் படைத்த மகத்தான தலைவர் என்பதை தொழிலாளர் உலகம் மிக நன்றாக அறிந்திருக்கிறது. அவருடைய எண்ணமெல்லாம், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை, பாட்டாளி மக்கள் வாழ்வு பெற வேண்டும், அவர்கள் நல்ல நிலையை அடைய வேண்டுமென்கிற நல்ல லட்சியக் குறிக்கோள்கள்தான். நாங்கள் எல்லாம் ஒரு சில தொழிற்சங்கங்களுக்குதான் தலைவராக இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு கலைஞர் அவர்களோ தொழிலாளர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கின்றார்கள். தமிழகத்தில் உள்ள அத்தனை தொழிலாளர்களுக்கும் தலைவராக இருக்கிறார். தொழிலாளர்கள் நிச்சயமாக நல்வாழ்வு வாழவேண்டுமென்பது தான் அவருடைய நோக்கம்.

நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்களைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தன்னை தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தவர்கள் என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபாடு கொண்டது மட்டுமல்லாமல், தொழிற்சங்க பாரம்பரியத்தை மிக மிக நன்றாக அறிந்தவர் ஆவார். 1947-க்குப் பிறகு தொழில் தகராறு ஏதாவது வந்துவிட்டால், தொழில் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைமை இருந்தது. முன்னால் எல்லாம் தொழிலாளர்கள் ஒன்றுபட்ட சக்திகளின் அடிப்படையில்தான் பல்வேறு நன்மைகளைப் பெறவேண்டியிருந்தது. தொழிலாளர் பிரச்சினை, மற்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் தொழில் தகராறுகளைச் சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டுமென்கிற எண்ணத்திலே அமைச்சர் அவர்களே தலையிட்டு நல்ல முறையில் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர் பிரச்சினை என்பது அமைச்சர் மட்டத்தில் வந்ததே இல்லை. லேபர் ஆபீசர் மட்டத்தில்தான் இருந்தது. ஒரு சில தகராறுகள் லேபர் கமிஷனர் வரையில் போகலாம். ஆனால்



1971 ஜூலை 22] [திரு. மா. வே. நாராயணசாமி]

இன்றைய தினம், தொழிலாளர் கமிஷனர் மட்டுமல்ல, தொழில் அமைச்சர் அவர்களே, நல்ல அக்கறை எடுத்துக்கொண்டு, முதலாளிகளையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி, உடன்பாடு காணப் பாடுபட்டு வருகிறார். அப்படிப்பட்ட உள்ளம் உடைய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய உளங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் மெட்ராஸ் ரப்பர் பேக்டரியைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு, நம்முடைய அரசு இதில் தலையிடவில்லையென்று குறிப்பிட்டார்கள். நான் அவருக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், இந்த அரசு அந்த விவகாரத்தில் அதிகமான அளவிலே தலையிட்டு இருக்கிறது என்பதுதான். காலதாமதம் ஆனதற்குத் தொழிற்சங்கத் தலைவர்கள்தான் காரணம். போராட்டம் ஆரம்பித்து நாற்பது நாட்களுக்குப் பிறகுதான் அரசுக்குப் பிரச்சினை கொண்டு வரப்பட்டது. அங்கே போலீஸ் தலையீடு என்பதாக எல்லாம் முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டார்கள். தொழிலாளர் முதலாளிகளுக்கிடையே நடைபெறும் போராட்டங்களில் எங்கே வன்முறைச் செயல்கள் நடைபெறுகின்றனவோ, அங்கேதான் போலீஸ் தலையீடு இருக்கும். அங்கே எதுவும் வன்முறைச் சம்பவம் நடந்துவிடக்கூடாது என்பதற்காக போலீஸை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். தொழில் தகராறுகளில் போலீஸை நிறுத்தி வைக்கிறார்கள் என்றால் வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான். முதலாளிகளிடத்திலும் தொழிற்சங்கத் தலைவர்களிடத்திலும் பேச்சுவார்த்தை நடத்தி நல்ல உடன்பாடு கண்டு நல்ல பாராட்டுதல்களைப் பெற்று வருகிறது இந்த அரசு. இன்றைக்கு நல்ல சூழ்நிலையைத் தொழிலாளர் மத்தியிலே உருவாக்கியிருக்கிறோம்.

(Mr. Deputy Speaker sounded the gong.)

THIRU M. V. NARAYANASWAMY : Sir, I want some more minutes. I am going to speak on some vital points.......

MR. DEPUTY SPEAKER : The hon. Member has already taken six minutes and there are other hon. Members to speak and they may not even get six minutes.

THIRU M. V. NARAYANASWAMY : Sir, I want to speak on some vital points.

MR. DEPUTY SPEAKER : I am sorry. The hon. Member, Thiru K. M. Subramaniam will now speak.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, in the Note on ' Labour in Tamil Nadu ' given to us, there is the expression ' May Industry Flourish and Labour Prosper ' and I am very happy about this copy—book maximum. But I really find in

[1971 ஜூலை 22

the recent years that neither industry flourishes nor labour prospers, To-day I am not going to deal with small matters but I will deal with only basic things.

The present-day set-up is different and many of the capitalists are sleeping share-holders and it is only a question of managerial shall versus labour. The labour unions have to play an important part in the present-day productivity and it is not like the one in the past when labour unions were fighting for additional wages only. Now whenever there is anything wrong in the industry, it is the labour that has to bring it to the notice of the managerial staff but the departmental committees which are organised by the labour unions do not do their service. Nowadays we find that the departmental committees are more cocerned with leave or absenteeism or recommendation for jobs. That is not what is wanted in the present set-up. The labour is concerned, particularly in cities like Madras, with housing facilities. Now the labourers live in katcha slums where there are no living facilities, public convenience, water-supply and other amenities.

Even those living in houses live in houses, consisting of 9 families or 10 families. They have to go to the general workshop at 7'o clock in the morning and before coming to the workshop they have to discharge their elementary functions like going to latrine, etc., Government should embark on good housing programme for labour. In the present houses wherein they live, there is no proper sanitary arrangement. Productivity will not improve unless proper conditions of living are created for labour. Wherever possible the workers should not be made to walk more than half a mile or one mile to the working place; then only the time taken for transport will be minimised. I find from the hand-out given to us that government is going to spend Rs. 150 lakhs on housing the labour and are going to build about 110 houses here and there and for private industries also government are giving. . .

Mr. DEPUTY SPEAKER : The hon. Member has already taken five minutes.

Thiru K. M. SUBRAMANIAM : I shall finish quickly. Let us not waste time on this.

Within the limited time available, I will confine my attention to housing. Government should impress on the industries to build houses for the labour and corporation and other municipalities should provide water-supply, etc., to these houses for industrial workers. In this matter there should be co-operation between the Centre, State, Corporation or Municipalities and the Industry. I would like to say one thing more. The houses built should be let on subsidised rent to workers. They should also be allowed some form of transport for better convenience. Then it would be easy for them to come to workshop. If we provide these facilities to the labour, there could be increase in productivity.



1971 ஜூலை 22] [Thiru K. M. Subramaniam]

If we say that in other countries there is increased productivity it is because of this, it is because the labour had been provided with basic needs. Here we do not have those facilities. We do not understand their problem.

Let me say one thing. I know there are mills closed, mills closing and mills likely to close. Tomorrow morning there may be news in the papers that five mills or so are closed. Who is there to check this? The reason advanced for closing of mills is lack of finance. It is not lack of finance alone. Who is there to check the mismanagement in various mills, the profiteering in various mills and legal swindling in various mills? When it is complained that mills are closed, it is said if loan comes, the mill might be started. That is not the point. There should be an organisation —profit and loss question is different—in Government to run these mills in national interest. Unfortunately my time is limited. Government must see that workers' committees are given representation in management and they should see that the industry is given the raw materials required.

One more point and I am finished. This hand out does not say one thing. The workers are now getting less than what they were getting 2 years back as wages. What is the reason? Those getting Rs. 300 or 400 two years back are now getting only Rs. 200 to Rs. 300. It is because of lack of materials and facilities. That is the reason. Thank you.

**திரு. கு. காமாட்சி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழ் நாட்டில் தொழில் வளம் பல்கிப் பெருகவும் தொழிலாளர்கள் நல்ல மேம்பாடு அடையவும் இங்கே அமைச்சர் அவர்கள் மானியத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாட்டிலே வறட்சிப் பகுதிகள் என்று பிரகடனப் படுத்தப்பட்ட பகுதிகளில் எல்லாம் தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம் வறட்சியைப் போக்குவதற்கு நாம் முனைய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே மூன்று பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. முதலாவதாக ஒரு கொதிகலன் தொழிற்சாலை, இரண்டாவதாக படைக்கலன் தொழிற்சாலை, மூன்றாவதாக ஒரு இரயில்வே தொழிற்சாலை. இந்த மூன்று தொழிற்சாலைகளும் நாட்டுமக்களுடைய கவனத்தை ஈர்க்கத்தக்க அளவுக்கு இருக்கின்ற தொழிற்சாலைகள் ஆகும்.

கொதிகலன் தொழிற்சாலை இன்றைக்கு நல்ல லாபத்தோடு இயங்கி ஏற்கனவே மலேசியா அரசாங்கத்தோடு 10 கோடி ரூபாய்க்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. அங்கே திறமையான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொழிலாளர்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச்

[திரு. கு. காமாட்சி] [1971 ஜூலை 22

சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தல் காலங்களிலே அவர்களை வேட்பாளர்கள் அணுகவே முடியாது, அவர்கள் குடியிருக்கின்ற இடங்களுக்குச் செல்லவே முடியாது. அப்படிச் செல்ல வேண்டுமானால் அனுமதி பெறவேண்டும். வேட்பாளர்களுடைய நிலையைப் புரிந்து கொள்ளக்கூடிய முறையிலே இதைப் பற்றி மத்திய அரசுக்கு நம்முடைய அரசு குறிப்பு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நிலைதான் படைக்கலன் தொழிற்சாலையிலும். அங்கே 3,500 பேர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் இப்பொழுது அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,500 தான். இன்னும் இரண்டாயிரம் பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு, கருவிகள் இருந்தும்கூட இது வரையிலும் வேலை செய்வதற்காக அனுமதிக்கப்படவில்லை என்பதையும் நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொன்மலை ரயில்வே தொழிற்சாலை பல ஆண்டுகளாக நடை பெற்றுக்கொண்டு வருகிறது. 1960-ம் ஆண்டிலே துவக்கப்பட்ட அந்த வேகன் செய்யும் தொழில் பிரிவை இப்பொழுது மூடி விட்டு அந்த தொழில் பிரிவை அமிர்தசரஸில் இருக்கிற ஒரு தனி நிறுவனத்திற்கு ஒப்படைக்க மத்திய அரசு தீர்மானித்து இருக்கிறது. அதன் காரணமாக 1,500 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை, ஊதிய உயர்வை, பதவி உயர்வை அத்தனையையும் இழக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தப் பிரிவை மூடாமல் இருக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு குறிப்பு அனுப்ப வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரிவு ஏறத்தாழ 11 ஆயிரம் யூனிட்டுகளை நல்ல திறமையோடு செய்திருக்கிறது. பொதுத் துறையிலே இருப்பதை தனியார் துறைக்கு மாற்றக் கூடாது என்ற குறிப்பை நம்முடைய அரசு அனுப்ப வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் வாழுகின்ற பகுதிகள் நெருக்கடியான பகுதிகளாக இருக்கின்றன. அவர்களுக்கு என்று தனித் தொழிற்சாலை ஒன்று கிடையாது. அவர்கள் அத்தனை பேரும் ஒரு இடுக்கான குடிசையிலேயிருந்து காசநோய் பற்றும் அளவில் அவர்களுடைய நிலைமை இன்றைய தினம் இருக்கிறது. ஆகவே நமது அரசு அதிலே ஈடுபட்டிருக்கும் அந்தப் பீடி தொழிலாளர்களுக்குத் தனியாக நல்ல காற்றோட்டமான வசதியுள்ள நல்ல பல தொழிற்சாலைகளை அமைத்துத் தர ஆணையிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய பகுதியாகிய திருவெறும்பூர் பகுதியில் அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் நிறைய வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல மருத்துவ வசதியில்லாமல்



1971 ஜூலை 22] [திரு. கு. காமாட்சி]

அல்லற்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு மருத்துவ விடுதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே இன்னொன்று, எரி சாராயத் தொழிற்சாலை இருக்கிறது. அதன் வாயிலாக ஆயிரக்கணக்கான விவசாயப் பெருமக்கள், கால்நடைகள், மீன்வளம் அத்தனையும் பாதிக்கப்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்த நாற்றத்தின் காரணமாகத் திருச்சியிலும், சுற்று வட்டாரத்திலும் இருப்பவர்கள் மற்ற நல்ல நாற்றத்தை நுகர முடியாத அளவில், வாசனையை நுகர முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்த நாற்றமுள்ள அந்தத் தொழிற்சாலையில் 150 தொழிலாளர்கள் அளவில்தான் அங்கே வேலை செய்கிறார்கள். இருந்தாலும் பல ஆயிரக்கணக்கான விவசாயப் பெருமக்களும், கால்நடைகளும் பாதிக்கப்படும் அளவில் இருப்பதால் அந்தத் தொழிற்சாலையை வேறொரு இடத்திலே மாற்றுவதன் மூலம் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நமது அரசைக் கேட்டுக்கொண்டு இந்த அளவில் வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்டு எல்லாக் கட்சிகளும் அதிலே அக்கறையோடு பேசுவதைப்போல் நான் சார்ந்திருக்கின்ற முஸ்லிம் லீக்கின் சார்பாக எல்லா நலன்களும் தொழிலாளர்களுக்கு ஏற்பட வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தொழிலாளர் மானியத்தை வரவேற்றுப் பேசுகின்ற அதே நேரத்தில் தொழிலாளர் நலனிலே இந்த அரசுக்கு உள்ள அக்கறை மட்டுமல்ல, இதற்கு முன்பிருந்த புரட்சிக் கவிஞர் சொன்ன கருத்துக்களை இந்த இடத்திலே கூறுவது பொருத்தமாகயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

" சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப்பாரினிலே! முன்னர்
எத்தனை தோழர்கள், ரத்தம் சொரிந்தனரோ!
உங்கள் வேரினிலே "

" ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ ! நீங்கள்
ஊர்த்தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய்யலவோ ? "

என்று கூறியிருக்கிற அடிப்படையிலே நமக்கு அமைந்திருக்கிற மாண்புமிகு அமைச்சரவர்கள் அமைதியின் சின்னமாகவும்,

பொறுமையின் பொக்கிஷமாகவும் இருக்கிறார்கள் என்று கூறுமளவிற்கு, முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே சமன் செய்து சீர்தூக்கிச் செயல்படும் தன்மையுடையவராகவும் இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

இராணிப்பேட்டைத் தொகுதி மக்களின் சார்பிலே, எங்கள் பகுதியிலே உள்ள தொழிலாள மக்களின் சார்பிலே தனிப்பட்ட முறையிலே பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அங்கேயிருக்கின்ற பாரி தொழிலாளர்கள் முதலிலே மே தினத்தை சம்பளத்தோடு விடுமுறையாக விட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே கூறினார்கள். அதை அமைச்சரவர்கள் மிகுந்த கவனத்துடனும், அக்கறையுடனும், சிரமத்துடனும் ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கலந்து சட்டமாக்கப்பட்டு இந்த நாட்டிலிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நன்மை அடையுமாறு செய்தார்களே அதற்காகத் தனியாகப் பாராட்ட வேண்டுமென்று இருந்தாலும் இந்த நேரத்திலேயும் எங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இராணிப்பேட்டையிலுள்ள தொழிலாளிகள், முதலாளிகள் உறவுகள் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகவும் விளங்குகிறது. தோல் தொழில் செய்யும் தொழிலாளர்களாகயிருந்தாலும் சரி அல்லது வேறு பாரி அண்ட் கம்பெனியில் வேலை செய்பவர்களாகயிருந்தாலும் சரி சச்சரவு இல்லாமல் ஏறத்தாழ 25 ஆண்டுகள், 30 ஆண்டுகளாக ஒரு சுமுகமான சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் அப்படித் தகராறுகள் வந்தால் உடனே தொழிலாளர்களும் முதலாளிகளும் கலந்து உறவாடி தங்களுக்குள்ளேயே அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த நாட்டிலேயிருக்கும் மற்றத் தொழிலாளர்களும் முதலாளிகளும் கடைப்பிடிக்க வேண்டுமென்ற யோசனையை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மறுபடியும், இந்த மே தினத்திற்கு அவர்கள் அளித்துள்ள விடுமுறையை சம்பளத்தோடு கூடிய விடுமுறையாக ஆக்கியிருப்பதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இப்படித் தொழிலாளர்களிடத்திலே அக்கறை உள்ளவர்களால்தான் இதைச் செய்ய முடியுமென்று கூறி அதற்காக மறுபடியும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அடுத்து வடார்க்காடு மாவட்டத்தைப் பற்றி ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். இங்கு பலரும் பீடித் தொழிலாளர்களுக்கு உள்ள அவல நிலையைப்பற்றிப் பேசினார்கள். இந்த நாட்டில் எல்லாத் தொழிலாளர்களையும் விட பீடித் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் வருந்தத்தக்க விதத்தில் வறுமை நிறைந்ததாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையிலே உள்ளவர்கள், தொழிலாளர்கள் என்ற நிலையிலே எல்லாத் தொழிலாளர்களையும் விடப் பின் தங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு





உடனடியாக இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காசநோயிலும், வறுமையிலும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அவர்களுக்கு வசதி செய்ய வேண்டும். முதலாளிமார்கள் நல்லவர்கள்தான். பீடித் தொழிலாளர்களுக்குப் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக அளிக்கின்ற நல்ல மனப் பக்குவமுடையவர்கள். அவர்களையும் தொழிலாளிகளையும் ஒன்றுபடுத்தி அல்லது பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி தொழிலாளர்களுக்கு வசதி செய்ய முடியவில்லை என்றாலும்கூட அவர்களுக்கு ஊதியத்தையாவது உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வறுமையில் வாடும் ஏழைப் பீடித் தொழிலாளர்களின் சார்பிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, எனக்கு முன்னால் என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் தொழிலாளர்களின் பிரச்னையைப்பற்றியும், அதிலே இருக்கின்ற சில குறைபாடுகளைப்பற்றியும், அரசாங்கம் செயல்பட வேண்டிய முறைகளைப்பற்றியும் இங்கே எடுத்துரைத்தார்கள்.

நான் பத்திரப் பதிவுத்துறையைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பத்திரப்பதிவுத் துறையிலே இன்றைக்கு ஸ்டாம்ப் அதிகமாகக் கிடைக்காத காரணத்தினாலே அரசாங்கம் 500 ரூபாய் வரைக்கும் ரொக்கமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு பதிவு அலுவலகங்களிலே ரிஜிஸ்தர் செய்து கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதை விடப் பதிவுக் கட்டணத்திற்கு எவ்வளவு பணம் அந்த ஸ்டாம்ப் பீசிற்காக வருகிறதோ அந்த அளவிலே அந்தக் கட்டணத்தை ரொக்கமாகப் பெற்றுக்கொண்டு ரிஜிஸ்தர் செய்துகொள்வதற்கான வாய்ப்பை இந்தத் துறையிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3 ரூபாய், 2½ ரூபாய் பேப்பர்கள் ரிஜிஸ்தர் ஆபிஸ்களிலே கிடைக்காத காரணத்தினாலே 2½ ரூபாய் பேப்பர் வாங்குவதற்குப் பதிலாக 3 ரூபாய் பேப்பரை வாங்கி, கட்டணங்கள், மெரிபாரிட்டி சர்டிபிகேட் போன்றவைகளை வாங்கக்கூடிய நிலையிலிருக்கிறது. ஆகவே எந்தெந்த அளவிற்கு வேண்டுமோ, அதற்குப் போதுமான அளவில் பத்திரத்தைத் தயார் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முன்பெல்லாம் பாகப்பிரிவினை, பாகசாசனம் செய்ய அவர்கள் 7½ ரூபாய் ஸ்டாம்ப் கட்டணம் உள்ள பேப்பரை வாங்கி பாகசாசனம் செய்து கொண்டு வந்தார்கள். இப்பொழுது அப்படிப் பாகசாசனம் செய்ய வேண்டுமென்றால் இன்றைக்கிருக்கும் நிலவரத்தின் பிரகாரம் ஒரு பத்தாயிரம் ரூபாய்க்குச் சொத்திருந்தால் அதற்குக் கிட்டத்தட்ட 750 ரூபாய்க்கு ஸ்டாம்ப்

பேப்பர் வாங்கி பாகசாசனம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. இதனால் தமிழ் நாடு முழுவதும் பாகசாசனம் செய்துகொள்ள முடியாத ஒரு தொல்லையான சூழ்நிலை ஏற்பட்டு, பலபேர்கள் அந்த முறையிலே பாகசாசனம் செய்துகொள்ள முடியாமல் பணம் அதிகமாக இருப்பதால் பல சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குச் சுலபமான வழியிலே, அரசாங்கம் முன்பு 7½ ரூபாய் ஸ்டாம்ப் வாங்கினார்கள். இப்பொழுது கூடுதலாக அதிகப்படுத்த வேண்டுமென்றால் அதற்காக மினிமம் ரேட் வைத்து, அதிகமாக வைப்பதைப்பற்றி ஆட்சேபணை இல்லை, ஆனால் சுலபமாகப் பாகப்பிரிவினை செய்துகொள்ள ஸ்டாம்ப் பீசை மினிமம் ரேட்டாக பிக்ஸ் பண்ண ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, சீட்டுப்பதிவுக் கம்பெனி என்று தமிழ்நாட்டில் நடக்கின்றன. அவர்களுக்கு எந்தப் பொறுப்பிலே அனுமதி வழங்கப்படுகிறது என்று தெரியவில்லை. அவர்களுக்குச் சொத்து மதிப்பு எவ்வளவு இருக்கிறது என்று சொத்து மதிப்பை எடுத்து யாராவது ஒருவர் எழுதிக் கொடுப்பதோ ஒன்றுமில்லை. ஐம்பதாயிரம் ரூபாய் சீட்டு நடத்துபவர்கள் என்றால் அதற்குண்டான அவர்களுடைய ஒரிஜினல் சொத்தை அடமானம் செய்துகொண்டு அதன் மீது அனுமதி வழங்க வேண்டும். அப்படியில்லாமல் யாரோ ஒருவர் செக்யூரிடி கொடுத்துவிட்டால் எந்த மாநிலத்திலேயிருந்து வந்தாலும் அவர்களைப் பதிவு செய்கிறோம். ஆனால் இடையிலே பல இலட்சக்கணக்கான பொதுமக்களின் பணத்தை வெளி மாநிலத்திலேயிருப்பவர்கள் எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே பொதுமக்களுக்குப் பெரிய தொல்லைகள் ஏற்பட்டது என்பதையும், பல காலமாக சீட்டுக் கம்பெனிகள் மறைந்திருக்கிறது என்பதையும் பத்திரிக்கைகளில் படித்திருக்கிறோம். எனவே அதற்குச் சரியான செக்யூரிட்டியை, அவர்களுடைய ஒரிஜினல் சொத்தைப் பேங்கிலே அடைமானம் செய்து அந்தச் சூழ்நிலையிலே அரசாங்கம் பதிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சொத்து கிரயம் செய்வதற்கு முன்பெல்லாம் நூற்றுக்கு 7½ ரூபாய் ஸ்டாம்ப் வாங்கி வந்தார்கள். இன்றைக்கு சொத்து மதிப்பு உயர்ந்து விட்டது என்ற காரணத்தால் ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்து இன்றைக்கு பத்தாயிரம் ரூபாய் மதிப்பு என்று கணக்குப்பிள்ளை அடங்கலில் எழுதி வைத்திருக்கும் அடிப்படையில் ரிஜிஸ்டரார் ஆபிசில் ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியதை எப்படி இன்றைக்குப் பத்தாயிரம் ரூபாய் என்று எழுதி வைக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஏதோ விவசாயிகள் எல்லாம் அரசாங்கத்தை ஏமாற்றுவதாகக் கருதிக் கொண்டு இப்படிச் செய்திருக்கிறார்கள் போல் இருக்கிறது. ஆனால் அது



சரியல்ல, நியாயமல்ல. பழைய கிரயப் பத்திரத்தில் என்ன மதிப்பீடு இருக்கிறதோ அந்த அளவுக்கே மறுபடியும் கிரயம் பண்ணும் போது ஸ்டாம்ப் கட்டணம் வாங்கினால் போதும் என்ற அளவுக்கு அரசாங்கம் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிங்காநல்லூர் பெரிய முனிசிபாலிடியாக மாற்றப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் உதவிப் பத்திரப் பதிவாளர் அலுவலகம் ஒன்றினை ஏற்படுத்தித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவையில் உள்ள ஹெட் ஆபீசுக்குப் போய் வரவேண்டுமென்றால் காலதாமதமாகிறது. இந்தத் துறையில் சீட்டுக் கம்பெனி பற்றியெல்லாம் அரசாங்கம் மற்ற அம்சங்களையும் பார்த்து நம்பிக்கையானவர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. க. துரைசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் பேசிய பல உறுப்பினர்கள் தொழிலாளர் நலன் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். குறிப்பாக எங்களுடைய வட ஆர்க்காடு மாவட்டத்தில், சிறப்பாக குடியாத்தம் பகுதியில் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பீடித் தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு உறுதியான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தும் தமிழகத்தில் உள்ள பீடி முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்று பீடித் தொழிலாளர்கள் சட்டத்தின் பலனைத் தொழிலாளர்கள் அனுபவிக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான பீடித் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு உணர்ந்து அவர்களுக்குப் பரிகாரம் காணும் வகையில் நீதிமன்றத்தில் வழக்கை விரைவுபடுத்தி நல்ல முடிவைக் காண வேண்டும்.

என்னுடைய தொகுதியில் இரண்டு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. அந்தத் தொழிலாளர்கள் ஐந்தாண்டுக் காலம், ஏழாண்டுக் காலம், பத்தாண்டுக் காலம் என்று பணியாற்றியும்கூட நிரந்தரமாக்கப்படாமல் ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை நடுவில் நிறுத்தப்பட்டு மீண்டும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டு டெம்பரரி என்ற முறையிலேயே வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு இன்றைக்குள்ள விலைவாசியில் 2½ ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இதைப்பற்றி அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும் சரி, கலைஞர் காலத்திலும் சரி தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு சீராகப் பணியாற்றிக் கொண்டு வருகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிலாளர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள் பிரச்சினையில் இந்த அரசு எடுத்துக்கொண்ட அக்கறையையும் அவர்களுக்காக நான்கு கோடி ரூபாய் வழங்கியதையும் நாடு அறியும்.

இப்படிப்பட்ட முறையில் தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கும் அரசு நெசவுத் தொழிலாளர்கள் பிரச்சினையிலும், தீப்பெட்டித் தொழிலாளர் பிரச்சினையிலும் அக்கறை கொள்ள வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் பலவித ஸ்தானங்களை ஒதுக்கி வந்திருப்பது போல் பீடித் தொழில், நெசவுத் தொழில், தீப்பெட்டித் தொழில் ஆகியவற்றைப் பொருத்த வரை அரசாங்க இயக்கத்தில் சலுகைகளை அளித்து முன்னுரிமை வழங்க முயற்சி எடுத்துக் கொள்வது நலமாக இருக்கும்.

கேர் ஸ்தாபனத்தின் மூலம் நம்முடைய அரசு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தொழிலாளர்கள் குழந்தைகளுக்கு சத்துணவை அளித்து வருகிறது என்பதைப் பெருமையோடு சொல்வது மாதிரி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடைய ஏற்படுகின்ற தொழில் தகராறுகளைத் தீர்க்க ஏற்கனவே முடிவு செய்யப்பட்டபடி 14 அங்கத்தினர்கள் போதாது என்று கருதி மேலும் ஐந்து பேரை நியமிக்க வழி செய்திருக்கிறார்கள். இந்த முறையில் தொழிலாளர்-முதலாளி பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு மேற்கொண்ட முயற்சியை வெகுவாகப் பாராட்டி இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இ. ராமசாமி : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இந்த அரசு தொழிலாளர் அரசு என்பதை நாட்டுமக்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனாலும் இங்கே ஒருசிலர் தொழிலாளர் அரசு தி.மு.க. அரசு என்று பறைசாற்றிக் கொள்ளுகிறார்களே என்று கேட்டார்கள். இந்த அரசு தொழிலாளர் அரசு என்பதை நிரூபித்துக் காட்ட பல்லாயிரக்கணக்கான சான்றுகளை இங்கே





எடுத்துக் காட்ட முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தொழிலாளர்களுடைய கஷ்டங்களை எல்லாம் உணர்ந்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களைக் காலாகாலத்தில் செய்து கொடுத்து வருவதற்காக இந்த நேரத்தில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில், கடல் மட்டத்தில் இருந்து ஐயாயிரம், ஆறாயிரம், ஏழாயிரம் அடி உயரத்தில் வேலை செய்கின்ற தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சனையை கழக ஆட்சிக்கு முன்னால் இந்த அளவுக்கு அவர்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய காரியங்களைக் கொண்ட அறிக்கையைப் பார்த்திருக்க முடியாது என்ற வகையில் கொடுத்திருக்கிறார்கள். கழக அரசு ஏற்பட்ட பிறகுதான் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையில் நல்ல கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

என்றாலும் இன்றைக்குப் பண்டங்கள் விற்கும் விலைக்கு ஏற்றபடி அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி போதுமானதாக இல்லை. அவர்களுக்குக் கூலி உயர்வு வேண்டுமென்ற பிரச்சினையை வைத்து கடந்த ஆண்டு அவர்களுடைய பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தொழிலாளர் நல ஆணையாளர் அவர்களும் தலையிட்டு அந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடித்துக் கொடுத்தார்கள். இன்றைக்கு இருக்கும் நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் அந்தக் கூலி போதாது. எனவே குறைந்தபட்சக் கூலி நிர்ணயக் கமிட்டி அமைக்க இந்த அறிக்கையிலேயே ஒரு குறிப்பு இருக்கிறது. அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்து வருகிறது என்று இருக்கிறது. அத்தகைய குறைந்தபட்சக் கூலி நிர்ணயக் கமிட்டியை விரைவில் அமைத்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு கொடுப்பதற்கான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாகர்கோயிலில் மாஞ்சோலை, உதகமண்டலம் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை என்ன என்று தெரிந்து கொள்ள ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அமைச்சரும், தொழிலாளர் நல ஆணையாளர் அவர்களும் கலந்து கொண்டு தோட்ட முதலாளிகளையும் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கத் தலைவர்களையும் கூட்டி வைத்துப் பேசிய நேரத்தில் தொழிற்சங்கத் தலைவர்கள் எடுத்துக் கூறிய பல பிரச்சினைகளைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், ஆணையாளர் அவர்களும் மிக்க அனுதாபத்தோடு அணுகி தோட்ட முதலாளிகளிடத்தில் மிகப் பரிவோடு சொன்னார்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, நடைபாதை வசதி, மலஜலம் கழிக்கக்கூடிய அறைகள் கட்டுவது போன்ற பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொன்னபோது அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தோட்ட முதலாளிகளிடத்தில் பரிவோடு எடுத்துச் சொல்லியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. முடியாது

என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதனைச் சட்டத்தால் செய்ய முடியும் என்றும் அப்போது சொல்லியிருக்கிறார்கள். முதலாளிகள் தாங்களாக அதனைச் செய்ய மாட்டார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் சட்டமாகச் செய்து அவற்றை நிறைவேற்ற வழி செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன்னால் வைத்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறி அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

தொழிலாளர் நலன் குறித்து வைக்கப்பட்டுள்ள அறிக்கையை நாம் படித்துப் பார்த்த நேரத்தில் என்னுடைய எண்ணமெல்லாம் புரட்சிக் கவிஞர் அவர்களின் மீதும், தொழிற்சங்கத் தலைவராக இருந்து, தொழிலாளர்களுக்காக தன் வாழ்வை முடித்துக் கொண்ட ஜீவா அவர்கள் மீதும் சென்றது.

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான், அவன் காணத் தகுந்தது வறுமையாம்" என்று புரட்சிக் கவி பாரதிதாசன் பாடினார்.

"காலிற்கு செருப்பில்லை கால் வயிற்றுக் கூழுமில்லை என் தோழா" என்று ஜீவா அவர்கள் ஒரு காலத்தில் பாடிக் கொண்டிருந்தார்கள்.

தொழிலாளர்கள் என்பவர்கள் இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்காகவும் வாழக் கூடியவர்கள், அவர்கள் வாழ வழியற்றிருக்கிறார்கள், அந் நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கருதுகிற கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகும். திராவிட முன்னேற்றக் கழகம் அரியணை ஏறிய பிறகு தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி நன்கு அமைதியாகச் சிந்தித்துப் பார்த்து நியாயம் என்று பட்டால் அவற்றை நிறைவேற்றுவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் என்றுமே பின்தங்கியதில்லை.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அது நெய்வேலிப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினையாக இருந்தாலும் சரி அல்லது போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்கள் பிரச்னையாக இருந்தாலும் சரி அவற்றில் எல்லாம் முன்னின்று வாதாடி இரண்டு பக்கமும் சமரசம் செய்து வைத்து நியாயம் என்று பட்டதை நிறைவேற்றித் தருகிற வகையில் நமது முதல்வர் அவர்கள் ஈடுபட்டு அதில் வெற்றி தேடித் தந்திருக்கிறார்கள்.



தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் மே தினத்திற்கு விடுமுறை விட்டிருக்கிறது இந்த அரசு.

கோவைப் பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்றன என்ற காரணத்தினால் அவைகளுக்கு எல்லாம் கடன் தந்து அதற்கு உத்தரவாதம் தந்து மூடிய மில்களைத் திறந்து வாடி நின்ற தொழிலாளர்களையெல்லாம் உள்ளே வரவழைத்து அவர்களுக்கு வேலையும் ஊதியமும் தர ஏற்பாடு செய்தது கழக அரசுதான் என்பதை நான் பெருமையுடன் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மூடியவைகளை, திறந்தவை போக மீதியுள்ள மில்களையெல்லாம் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிற இந்த அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இப்படி பல்வேறு இடங்களில் நடைபெற்றிருக்கின்றன.

இந்த நாட்டில் அமைதி இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தத் தயாராக இருக்கிறது இந்த அரசு. சமுதாயத்தின் நன்மை பெரிதா அல்லது தொழிலாளர்களின் நன்மை பெரிதா என்று எண்ணுகிற நேரத்தில் சமுதாயத்தின் நன்மையே பெரிது, தொழிலாளர்கள் அதற்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதை இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

வன்முறைகளைக் கண்டித்து நன்முறையில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதில் கழக அரசு இன்று முன்னணியில் நின்று கொண்டிருக்கிறது. நேரமில்லாத காரணத்தினால் சில கருத்துக்களைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

குறைந்தபட்ச கூலி நிர்ணயக் குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டு பன்னெடுங் காலமாகியும் அதன் பலன் இன்னும் கிடைக்கவில்லை. ஆகவே துரிதமாக நடவடிக்கைகள் எடுத்து அதன் பலன்கள் தொழிலாளர்களுக்கு விரைவில் கிடைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்று இருக்க வேண்டும் என்ற கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதை மற்ற தொழிற்சங்க வாதிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் இன்றையதினம் உள்ள மிகப் பெரிய பிரச்னை பீடித் தொழிலாளர்கள் பிரச்னையாகும். பீடித் தொழிலாளர்கள் பிரச்னை பற்றி பலமுறை இங்கு பேசியிருக்கிறார்கள்; என்றாலும் நான் அதிகமாக அதில் புகாமல் ஒன்றை மட்டும் சுட்டிக் காட்ட விழைகின்றேன். அவர்களுக்காகப் போடப்பட்டுள்ள சட்டம் இன்றையதினம் நீதிமன்றத்தில் படிக்கட்டுகளில் தொடங்கிக் கொண்டிருக்கிறது. முதலாளிகள் அதை

[திரு. துரைமுருகன்] [1971 ஜூலை 22

நிறுத்தி வைத்திருக்கிறார்கள். சட்டத்தை அவர்கள் அங்கு நிறுத்தி வைத்திருந்தாலும் அதில் இருக்கிற ரெகுலேஷன்களையாவது அரசாங்கம் அமல் நடத்தலாம். அதைச் செய்வதற்கு அரசு முன் வரவேண்டும்.

இன்று பீடித் தொழிலாளர்களை எப்படி எமாற்றுகிறார்கள் என்றால், பீடி முதலாளிகள் ஏஜெண்ட்களை வைத்திருக்கிறார்கள். ஏஜெண்ட்கள் மற்றவர்களிடம் இலை, புகையிலை எல்லாம் தருகிறார்கள். முதலாளியிடம் ஏதாவது கேட்டால் ஏஜெண்டைக் கேளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். ஏஜெண்ட்டுகளை அவர்கள் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களாகப் பாவித்து அரசாங்கப் பாதுகாப்பு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பீடித் தொழிலில் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதம் இல்லை, ஊதிய உத்தரவாதமும் இல்லை. அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை.

இங்குள்ள உறுப்பினர்களில் யாராவது பீடி பாக்டரியில் சென்றிருந்து பார்த்தால்தான் அங்குள்ள கஷ்டமான நிலை தெரிய வரும். அப்படி ஒரு நெடி வீசும். அத்தொழில்களில் டி.பி. யில் அகப்படாத தொழிலாளியே கிடையாது. குழந்தைகள் நூல் சுற்ற வேண்டும், பெண்டாட்டி இலை மடிக்க வேண்டும். கணவன் முறத்தில் புகையிலையை வைத்துக்கொண்டு பீடி சுற்றவேண்டும். இப்படியாக அவர்கள் படும் துயரத்தை நான் நேரில் கண்டு வருந்தியிருக்கிறேன். ஆகவே; இந்தப் பீடித் தொழிலாளர்களின் விஷயத்தில் அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அவர்கள் குறைகளை அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவர் அவர்களே, சுதந்திராக் கட்சி சார்பாக கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முதன்முதலாக இந்த அறிக்கையில் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தெளிவான ஒரு பகுதியைப் புகுத்தியிருக்கிறார்கள்.

" . . .The aim is to promote industrial peace and thereby create a congenial climate for industrial development in the State and at the same time ensure that the labour gets its legitimate share of the wealth produced."

என்று தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஒரு கருத்தைத்தான் பல்லாண்டுகளாக சுதந்திரக் கட்சி சார்பாக வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். எங்களது அடிப்படைக் கொள்கையே, எங்கள் 18 அம்சத் திட்டத்தில், இக்கட்சி வயலில், ஆலைகளில், கடைகளில், வேலை செய்யும் தொழிலாளர்கள் சிப்பந்திகளுக்கு நியாயமான ஊதியம் கிடைக்க வேண்டுமென்ற கொள்கையுடையது. தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்து சங்கம்



1971 ஜூலை 22] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அமைத்துத் தங்கள் உரிமைகளைக் கேட்டுப் பெற உரிமை உண்டு என்று இக்கட்சி கருதுகிறது. "முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே தகராறுகள் ஏற்பட்டால் இருபாலாரிடையே நல்லுறவை ஏற்படுத்த இந்தக் கட்சி உறுதி கொள்கிறது என்றிருக்கிறது. இப்படிப் பல ஆண்டுகளாக நாங்கள் வற்புறுத்திக் கொண்டு வருவதை மிகத் தெளிவாக இந்த நூலில் போட்டதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, இன்னொரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் பல்லாண்டுகளாகச் சொல்லி வருகிறோம். தொழிற்சங்கங்கள் நியாயமான அளவிற்கு தங்களுடைய உரிமைகளைப் பெற வேண்டுமென்றால் தொழிற்சங்கங்கள் கேட்கக் கூடிய உரிமைகளை முதலாளிகள் தரவேண்டிய தொரு நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்றால் பயங்கரமான வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தால்தான் அது முடியுமே தவிர இல்லாவிட்டால் முடியாது. வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் தொழிற்சங்கங்கள் கேட்கக் கூடிய உரிமைகளுக்கும் நல்லதொரு தொடர்பு உண்டு. இன்டர்டிப்பென்டென்ட், ஒன்றை ஒன்று ஒட்டியிருக்கிறது.

உதாரணமாகச் சொல்கிறேன். ஒரு தொழிற்சாலையில் ஒரு போராட்டம் நடைபெறுகிறது. அப்படி நடைபெற்று வருகிற நேரத்தில் முதலாளிகள் மறைமுகமாக அங்கு வேலைவாய்ப்புகள் இருக்கின்றன. மற்றவர்கள் பாதி ஊதியத்திற்கும் வாலாம் என்று சொல்கிறார்கள். வெளியே இருக்கின்றவர்கள் லட்சக் கணக்கில் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக நாங்கள் வருவதற்குத் தயாராகயிருக்கிறோம் என்கிறார்கள். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தை நல்ல முறையில் கட்டுப்படுத்தி வைத்திருந்தால் வெளியே இருக்கிறவர்கள் பரவாயில்லை, நம் சகோதரத் தொழிலாளிதானே, அவன் போராட்டம் நடத்தட்டும், நாங்கள் பாதி ஊதியத்திற்கு வரமாட்டோம் என்று சொல்லக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தால் தவிர தொழிற்சங்கங்களில் அடிப்படை உரிமைகளைப் பெற முடியாது. இதை பலமுறை நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம்.

ஒரு இன்டஸ்ட்ரியல் க்ளைமேட் ஏற்படுத்த வேண்டும். நம் நாட்டிற்குப் பல இன்டஸ்ட்ரீஸ் தேவை. நல்லதொரு இன்டஸ்ட்ரியல் கிளைமேட் உருவாக்கப்பட வேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது முதலாளிகளுக்காக இவர்கள் வாதாடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு நாங்கள் பலியானது உங்களுக்குத் தெரியும். நேற்றுகூட ஒரு சகோதர உறுப்பினர் சொன்னார்கள். தனியார் துறையை, இந்தத் தனியார் பஸ் போக்குவரத்தை இன்னும் ஆதரிக்கக் கூடிய கட்சி இருக்கிறதே என்று. எல்லாத் தொழிற்சாலைகளையும் தேசியமயமாகக்கூடிய அளவில் இன்று

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1971 ஜூலை 22

யாரும் இல்லை. ஒரு முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். எந்த அளவுக்கு இங்கே வேலையில்லாத் திண்டாட்டம் பரவிக் கொண்டு வருகிறது என்பதற்காக சில முக்கியமான கருத்துக்களை இந்த அவைமுன் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1963-64-ல் 2,30,443 இருந்தது, 1968-69-ல் 2,64,007 ஆக இருக்கிறது என்றால் எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

| | During April 1970 to November 1970. | During April 1669 to November 1969. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 Number of candidates registered. | 2,79,457 | 2,71,539 |
| 2 Number of candidates placed in employment. | 28,552 | 28,508 |
| 3 Number of vacancies notified .. | 38,762 | 42,074 |
| 4 Average number of employers who used the employment offices— | | |
| (a) Government (public sector) | 1,167 | 1,106 |
| (b) other (private sector) .. | ·227 | 354 |
| 5 Number of applicants on live register at the end of the period. | 4,13,470 | 3,23,710 |

இந்த அளவுக்குப் பயங்கரமாக நம்முடைய தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கிறது. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதை விட்டு விட்டு வேறு திசைக்குப் போய் விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில முக்கியமான விஷயங்களை நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கோயம்புத்தூர் டெக்ஸ்டைல் மில்லை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அரசாங்கம் எடுத்துக் கொண்ட உடனே டி.ஏ. வை குறைத்துக்கொண்டால்தான் உத்தியோகம் என்று டி. ஏவை குறைத்துக்கொண்டால்தான் உத்யோகம் என்று சொன்னார்கள். அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிறகு அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்துக் கொண்டிருந்த டி. ஏ. வும் போய்விட்டது. இப்படிப்பட்ட நிலையில் அந்தத் தொழிலாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் சரிவர நடக்கவில்லை. ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி 1,200 workers will be taken back on the rolls for employment and the unit will be working at the end of March. என்று 7–1–71 அன்று ஒப்பந்தம் அங்கே கையொப்பம் ஆகி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் நேரத்தில் அந்த



1971 ஜூலை 22] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

ஒப்பந்தத்திற்கும் இப்போது நடப்பதற்கும் எவ்வளவு வித்தியாசங்கள் இருக்கிறது என்பதைப் பார்த்தோம். ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ்-ஐப் பார்த்தால் அங்கேயும் ஒப்பந்தத்தைச் சரிவர நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் அவர்களுக்குப் பணம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் நிலைமை ஒன்றும் மாறவில்லை. எம்.ஆர்.எப்.-லே போராட்டம் நடைபெற்றது. அமைச்சர் அவர்கள் அங்கே மிகவும் முயற்சி எடுத்துக் கொண்டு அதை திறக்கச் செய்து இருக்கிறார்கள். இன்று பத்திரிகையில் கூட அந்தத் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர் என்று செய்தி வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, அரசாங்கம் தலையிட்டு தனியார் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பதற்காக செய்து இருக்கும் ஏற்பாடுகளைச் சரியாக நிறைவேற்ற முடியவில்லை என்பதாகக் குறைபட்டு எடுத்துச் சொல்கிறார்கள். அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு செய்யும் காரியங்களை தனிப்பட்ட [illegible] நிறைவேற்ற ஒத்துழைக்கவில்லை என்கிற நேரத்தில் அரசாங்கம் என்ன செய்தால் நல்லது என்று அங்கத்தினர் அவர்கள் கூறுவார்களா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எந்த பாக்டரி பற்றி?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஸ்டான்டார்ட் மோட்டார்ஸ் பற்றி.

61529

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அங்கே இருக்கும் சூழ்நிலையைப் பார்த்தேன். அங்கே இருக்கும் முதலாளிகளை நிச்சயமாக அரசாங்கம் கண்டிக்க வேண்டும். அப்படிக் கண்டிக்கின்ற நேரத்தில் அரசாங்கத்திற்குப் பக்கபலமாக நாங்கள் இருப்போம். ஆனால் அங்கே இருக்கும் துர்ப்பாக்கியமான நிலைமை பற்றி அங்கே இருக்கும் தொழிலாளர்கள் அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள்.

All the 300 workers who had been re-employed had been hand-picked by the management over-looking the seniority. என்று அவர்களே, அங்கே இருக்கக்கூடியவர்களே, திரு. எஸ்.ஜி. சுப்பிரமணியம் அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். இதை கவனிக்க வேண்டுமென்று சொன்னார்கள். எந்த வகையில் அங்கே இருக்கும் தொழிற்சங்கத்திற்கும் துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அவர்களோடு பேசினார்கள் நம்முடைய அமைச்சர். முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று அமைச்சர் சிறப்பாக பேசினார்கள். நிலைமை அப்படி இருக்கிறபோது, அந்த நிலைமையை எடுத்துக் காட்டுவதற்காக, சுட்டிக் காட்டுவதற்காகச் சொன்னேன்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1971 ஜூலை 22

எம். ஆர். எப். பற்றிச் சொன்னார்கள். நிச்சயமாக அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டு ஓரளவுக்குச் சரிப்படுத்தி இருக்கிறார்கள். அந்த விஷயத்தை மீண்டும் தூண்டி, மீண்டும் ஸ்ட்ரைக் ஏற்படுத்தும் நிலைக்கு நாங்கள் ஆளாக மாட்டோம் அங்கே கூட தொழிலாளர்கள் சில பேர்களை அழைத்து, தகராறு இல்லாத வகையில் நிரந்தரமான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சியில் ஏ. பி. டி. டிரான்ஸ்போர்ட் இருக்கிறது. நேற்று மன்றத்தில் கூட பேசப்பட்டது. எந்த அளவுக்கும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு வருக்கப்படவில்லை. வேலை வாய்ப்பு மீண்டும் கிடைக்குமா இல்லையா என்ற கவலை இருக்கிறது. வாட்டர் போர்டில் தகராறு இருக்கிறது. அரசாங்கம் ஒரு கமிட்டியைப் போட்டு கவனித்து ஒரு முடிவை எடுக்கும் என்று கருதுகிறேன்.

ஹார்பார் ஸ்ட்ரைக் எடுத்துக் கொண்டாலும் அங்கே திருப்திகரமாக இல்லை. எந்த இடத்தில் பார்த்தாலும் மனதிலே ஒரு பயங்கரமான அதிருப்தி இருப்பதைப் பார்க்கிறோம்.

some demands have not been settled. These demands included 21 days minimum guarantee.

என்றெல்லாம் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால் எந்த இடத்தில் போனாலும் அப்படிப்பட்ட அதிருப்தியைப் பார்க்கிறோம். இதை நிச்சயமாக அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இ.எஸ்.ஐ. ஹாஸ்பிடலைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அங்கே சரியான வகையில் மருந்துகள் இல்லை. நான் மிகவும் வேதனையோடு சொல்கிறேன். முன்பு ஒரு மான்யத்தில் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளை லட்சக்கணக்கான ரூபாய் செலவில் நம்முடைய அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து நடத்தி வருகிறது. ஏழை எளிய தொழிலாளர்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் மருந்துகள் வினியோகம் செய்யப்படுவதில்லை என்று பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்காக நல்ல முறையில் டாக்டர்களைப் போட்டு, வரக்கூடிய நோயாளிகளுக்கு நல்ல முறையில் மருந்து கொடுத்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிம்சன் 'குரூப் விவகாரத்தைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். தொழிற்சங்கம் இரண்டு கோஷ்டியாக மாறி, அதிலே சில தகராறுகள் ஏற்பட்டு, தொழிலாளர்கள் தாக்கப்பட்டு, ப்ராக்சர் கூட சில பேருக்கு ஏற்பட்டு இருக்கிறது. அதற்கென்று ஒரு விசாரணைக் குழு அமைத்து நல்ல முறையில் அதைத் தீர்த்து வையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் ஒரு குழு அமைத்து தீர்த்து வையுங்கள் என்று சொல்கிறேன் என்றால், நான் கேட்டால் உடனடியாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் தாக்கப்பட்டனர் என்று ஆனால் எனக்கு வந்த தகவல், குருமூர்த்தி ஆட்கள்தான் தாக்கப்பட்டனர் என்று. அமைச்சர் பதில் சொல்லும்போது அப்படி இல்லை என்றுகூடச் சொல்லலாம். எனக்கு நிச்சயமாகத் தெரியும். யார் அடிபட்டவர்கள் என்று, நான் அவர்களோடு பேசி இருக்கிறேன். பலாத்காரம், வன்முறை செயலில் சிக்கிக் கொண்டு, மிரட்டல் காரணமாக அவர்கள் தங்களுடைய இடத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டிய அளவுக்குப் பல சிப்பந்திகள் உள்ளானார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாகப் பேசப்படுகிறது. ஆகவே, தயவு செய்து நான் கூறிய கருத்தை அமைச்சர் கவனத்தில் கொண்டு, அதற்கென குழு அமைத்து என்ன நடந்து இருக்கிறது என்று பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.



1971 ஜூலை 22] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அதற்காகத்தான் அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் "நான்-பார்டிசான் ஆட்டிட்யூட்" அரசு எடுக்க வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்து இருக்கிறேன். இங்கே அரசியல் வாதிகளின் கையில் பல தொழிற்சங்கங்கள் சிக்கிக் கொண்டு இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம் அரசாங்கத்தின் மேனேஜ்மென்டை, தனியார் துறை மேனேஜ்மென்ட்தான். பல இடத்தில் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. இருந்தால் அங்கே வேறு யாராவது இருந்தால் அவர்கள் விலகிக் கொள்ள வேண்டியிருக்கிறது. என்றால் சில தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், எனக்குப் பதவியே வேண்டாம், நீங்கள் ஆளும் கட்சித் தொழிற்சங்கத்திற்கே சென்று விடுங்கள் என்று சொல்லி, வருத்தத்தோடு விலகிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அதே வகையில் இங்கே தனியார் துறையில் பார்க்கிறபோது, அது கூட அந்த மேனேஜ்மென்ட் அரசாங்கத்தின் சார்பாக இருந்தால், அரசாங்கத்தின் எம்.எல்.ஏ. வந்தால்தான் உடனடியாக நாற்காலியைப் போட்டு, உட்காரச் சொல்லிப் பேசுகிறார்கள்.

அதே மாதிரி தனியார் மேனேஜ்மென்டாக இருந்தாலும் ஒரு எம்.எல்.ஏ., எம்.பி. வந்தால்தான் உட்காரச் சொல்லி பேசுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடியவர்களே, அந்தத் தொழிற்சங்கத்திற்குத் தலைவராக இருந்தால் அவர்களுக்கு நியாயம் கிடைப்பது இல்லை. இந்தவிதமான துர்ப்பாக்கியமான போக்கின் காரணமாகத்தான் நான் முதலாளிகளுக்கு எச்சரிக்கையாகச் சொல்கிறேன். பஸ்மாசுரன் தன் தலையில் கையை வைத்துக் கொண்டது போல், அரசியல் வாதிகளுடைய கையில் சிக்கிக் கொண்டு, தொழிலாளிகளுடைய வெறுப்புக்கு ஆளாக வேண்டாம் என்று எச்சரிக்கிறேன். தொழிலாளிகளுடைய பிரதிநிதிகள் வந்தால் அவர்களையும் வாருங்கள், உட்காருங்கள் என்று சொல்லி அவர்களுக்கும் மரியாதை காட்டுங்கள் என்று சொல்லுகிறேன்.

இறுதியாக, ஐ.என்.டி.யு.சி. சிம்சனில் இருக்கிறது. தகராறு வந்து போலீஸ் கமிஷனருக்கு மனுக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சருக்கும் கொடுத்திருக்கிறார்கள். ஜூலை 16, 1971-ல் கொடுத்திருக்கிறார்கள். அதில் பல கோரிக்கைகள் இருக்கின்றன. நேரம் இல்லாததால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. அவர்களுடைய உயிருக்கு ஆபத்தான நிலைமை, பயங்கரமான நிலைமை என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அதை நல்ல முறையில் ஆராய்ந்து, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதுதான் என்னுடைய வெட்டுத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம்.

'To discuss the need on the part of the Government to take an impartial and non-partisan attitude in inter-union rivalries'.

அதே நேரத்தில் நியாயமான வகையில் என்னென்ன காரியங்களைச் செய்ய முற்படுகிறார்களோ, சுமுகமாகத் தொழில் சங்கக் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கிறார்களோ அதில் எங்கள் கட்சி தாராளமாக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தரும் என்று சொல்லிக் கொண்டு முடிக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை அமைச்சர் ஒரு கோஷத்தோடு ஆரம்பித்தார்கள், 'வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்' என்று. அது கோஷ அளவில் இருக்கிறதே அல்லாமல், தொழில் வளர்கிறதா, தொழிலாளர் வாழ்கிறார்களா என்று அலசிப் பார்க்கும்போது, கோஷத்திற்கு நேர்மாறாக நிலைமைகள் இருப்பதை புள்ளி விவரத்தோடு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில்கள் வளருவது கிடையாது; இருக்கும் தொழில்களும் மூடப்படுகின்றன; மூடப்பட்டவை திறக்கப்படவில்லை; திறக்கப்பட்டாலும், எல்லாத் தொழிலாளர்களையும் திரும்ப எடுக்கும் சக்தியில்லாத அளவில் இருக்கிறது. எங்கே தொழில் வளருகிறது? அதை இந்த அரசாங்கம் சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறது. தொழில்கள் வளருவதற்கு வழி இல்லாமல் இருக்கும் இந்த நிலையில், தொழில்கள் தளர்ச்சி அடையாமல் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எவ்வளவு வேகத்தில் தொழில்கள் வளர்ந்திருக்கின்றன, காங்கிரஸ் ஆட்சியில் எவ்வளவு வேகமாக வளர்ச்சியடைந்ததோ, அதே வேகத்தில் தொழில்கள் இப்பொழுது தளர்ச்சி அடைந்து கொண்டே போகிறது என்பதை புள்ளிவிவரத்தோடு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவையில் மூடப்பட்ட மில்கள் திறக்கப்பட்டனவா? சமீபத்திலேகூட வாலவதா சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாதத்திலே திறக்கலாமே என்று சொல்கிறார். ஆனால் இங்கே எவ்வளவு எதிர்ப்புத் தீர்மானங்கள் மூலமும், இன்னும் வேறு வகைகளில் கேட்டாலும், மூடப்பட்ட மில்கள் மூடப்பட்டதுதான் என்கிற நிலைதான் இருக்கிறது. தொழில் எங்கே வளரும்?



அடுத்து, ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டாலும், 1,500 தொழிலாளர்கள் இருந்தார்கள். எவ்வளவு அக்கறை காட்டினாலும், என்ன செய்தாலும் இன்னமும் 500, 600 பேர்கள் வேலைக்கு எடுக்கப்படவில்லை. கேட்டால் மத்திய சர்க்கார் கடன் தரவேண்டும் என்கிறார்கள். அவர்கள் எப்பொழுது கடன் தருவது, தொழிலாளர்கள் எப்பொழுது எடுக்கப்படுவது? ஆகையினால், இப்படியெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு இருக்கும் நேரத்தில் தொழிலாளர்கள் வேலை இழந்து கொண்டே இருக்கிறார்கள். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க முடியாமல் தினறும் நேரத்தில், இருக்கும் வாய்ப்பையும் இழக்கிறோமே என்பதைத்தான் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரி மாத்திரமல்ல, கொடுத்திருக்கும் அறிக்கையில் 'engineering industries and other miscellaneous industries' என்று அத்தனை தொழிற்சாலைகளையும் பற்றிச் சொல்லி இருக்கிறது.

இப்படி எத்தனை வேலை செய்யும் நாட்களை நாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்று பார்த்தால், 15-வது பக்கத்தில், அதை சொல்ல முடியும். அதைப் பற்றிச் சொல்லும்போது, கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை, 1969-ல் 174, 1970-ல் 277. விரயமாகிய உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 6,83,059 என்றும், 10,33,377 என்றும் இருக்கிறது, பாருங்கள். இதில் பஞ்சாலைகளில் 1,87,510 நாட்களும், பொறியியல் தொழிற்சாலைகளில் 2,40,422 நாட்களும் ஏனைய தொழிற்சாலைகளில் 2,03,629 என்றும் உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பார்க்கும்போது என்ன தெரிகிறது? மொத்தத்தில் 6,83,059 உழைப்பு நாட்களை இழந்திருக்கிறோம். இப்படி அதிகரித்து இந்தியாவிலேயே நம் மாநிலம் மூன்றாவது மாநிலமாக இருப்பது அவல நிலை இல்லையா? அதைப் போக்க எடுக்கப்பட்ட அவசர நடவடிக்கை என்ன? மூடப்பட்ட மில்கள் திறக்கப்படவில்லை. திறக்கப்பட்ட மில்களில் தொழிலாளர்கள் பூராவாக எடுக்கப்படவில்லை. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதே நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தினால் ஆனாலும் சரி, அரசாங்கத்தின் அனுசரணையினால் ஆனாலும் சரி, தொழிலாளர்களுக்கு எந்த விதமான நன்மையும் கிட்டவில்லை

ஒன்றைச் சொல்ல வேண்டும். எலெக்ட்ரிசிடி போர்டை எடுத்துக் கொண்டால், என்னூர் தர்மல் ஸ்டேஷனில் ஒர்க் சார்ஜ்ட் தொழிலாளர்களை, ஸ்கில்ட் தொழிலாளர்களை, அன்ஸ்கில்ட் லேபராக அந்த அதிகாரி செய்து, முதலாளிகளையும் விட மோசமாக நடந்து கொண்டிருக்கிறார். அந்த அதிகாரிகளை அரசு என்ன செய்திருக்கிறது?

அடுத்தது, பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், என்னதான் அமைச்சர் ஐந்து ஆண்டுகள் வேலை செய்தவர்களை ப்ரொவின்ஷலைஸ் செய்கிறோம் என்று சொன்னாலும், பல இலாக்காக்களிலும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிலும், பல ஆண்டுகள் வேலை செய்தவர்கள் இன்னமும் நிரந்தரமாக்கப் படாமலேயேதான் இருக்கிறார்கள். இன்னும் முனிசிபல் தொழிலாளிகள் நிரந்தரமாக்கப் படாமலேயே இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி கூட முனிசிபல் எம்ப்ளாயிகளுக்கு அடிப்படைச் சம்பளம் சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

அதே போலத்தான் பால் பண்ணையில் 15 ரூபாய் சம்பளத்தில் ஆட்கள் இருக்கிறார்கள். அரசாங்கமே வழிகாட்டவில்லை என்றால், தனியார் தொழிலாளிகளை நல்லவகையில் நடத்த வேண்டும் என்று வாதாட என்ன வழி இருக்கிறது? உங்களிடமே நிரந்தரம் ஆக்க படவில்லையே. குறைந்த கூலியில், வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறார்களே?

நேற்று மோட்டார் போக்குவரத்துப் பற்றிப் பேசும் போது, பஸ் தொழிலாளிகளுக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ஒரு பைசாக் கூடச் செலவழிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது. ஆகையினால் முதலில் அரசாங்கம் கண்டிக்கத் தக்க முதலாளி போல் நடந்து கொண்டிருக்கிறது.

சட்டம் அமுல் படுத்தப்படும்போது, ஒழுங்காக இருக்கிறதா என்பதைப் பார்க்கப் போனால், பேஜ் 2-ல் பாருங்கள், 1969-ல் நான்-ஃபேடல் ஆக்ஸிடெண்டுகள்' 25 896. பேடல் ஆக்ஸிடெண்டுகள் 68; 1970-ல் பார்த்தால் அதுவே 29,721 என்றும், 32 என்றும் இருக்கிறது. ஒரு முறையில் பேடல் ஆக்ஸிடெண்ட் தேவலைபோல் இருக்கிறது. அவனாவது செத்துப் பாய்விடுவான்; ஆனால் Non-fatal accidents are more serious. இந்த நான்-பேடல் கேசுகள், கால் போய், கை போய் காயம் பட்டு உலகத்திலே வாழ வாய்க் கற்ற நிலையில் பெருங் கொடுமைக்குள்ளாகிறான். ஆகவே இந்த கேசுகளைப் பற்றி அதிகமான கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆக்ஸிடெண்டுகள் 69-ஐக்காட்டிலும், 70-ல் ஏன் அதிகமாக இருக்கிறது? உங்கள் தொழிலாளிகளுக்கே காப்பு இல்லையே? எலெக்ட்ரிசிடி தொழிலாளர்கள் ரிபேர் செய்யப் போனால், கீழே விழுந்தால் நாமே பாதுகாப்புக் கொடுக்கவில்லையே மற்றவர்களை எப்படிச் செய்யச் சொல்ல முடியும்?

இன்றைக்கு 'நான்-பேடல் ஆக்ஸிடென்ட்ஸ்' இவ்வளவு பெருகியிருக்கிறது. இவ்வளவு பெருகி இருக்கிறது என்றால், அந்தத் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதைப் பார்த்தால் கடலிலே கரைத்த பெருங்காயம் மாதிரி 15 இலட்சமும் 13 இலட்சமும் என்று கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்கள் உடல் உறுப்புக்களை இழந்து உலகத்திலே அவஸ்தை படுவதைவிட, அவனுக்கு வேண்டிய நஷ்ட ஈட்டை வாங்குவது அதை





விட அவஸ்தையாக இருக்கிறது. வழக்குப் போட்டு, வாதாடி, முதலாளியின் வீட்டுக்குப் போய் இப்படி இவ்வளவு கஷ்டங்களை பட்டு அவன் வாங்கும் பணமோ மிகக் குறைவு. 'நான்பேடல் ஆக்ஸிடென்பிட்ஸ்'-ஐ ஏன் தடுப்பதற்கு நாம் முயற்சி எடுக்கவில்லை? நம்முடைய அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? முதலாளிகள் அதிகாரிகளை ஏமாற்றுகிறார்களா அல்லது அதிகாரிகளே முதலாளிகளின் பணத்தை பெற்றுக்கொண்டு இப்படிச் செயல்படுகிறார்களா என்பதை அறிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி இந்தத் தொழிற்சாலைகளுக்குப் போய் இதை எப்படித் தவிர்ப்பது என்பதைப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அம்மையார் அவர்கள் இந்த ஆக்ஸிடெண்டலை எப்படிக் குறைப்பது என்பதற்கான வழி முறைகளைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நம் தொழிலாளர்களைக் காப்பதற்கு வேலி போட வேண்டும். வேலியாக இருப்பவர்கள் அந்த அதிகாரிகளே. யாருமே வேலி போடுவதில்லை. அப்படியேயானாலும், வேலியே இன்றைக்குப் பயிரை மேய்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு இந்த நிலை வந்ததற்குக் காரணம், உங்களுடைய கவனக் குறைவுதான். "வாட் ஆர் யுவர் இன்ஸ்பெக்டர்ஸ் டூயிங்?" இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. வெல்டிங் வேலை செய்பவர்களுக்குக் கண்ணாடியே கொடுப்பதில்லை. இப்படிக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியமான சாதனங்கள் கூடக் கொடுக்கப்படுவதில்லை. இந்த நிலைமை நீடித்துக்கொண்டே போனால், கட்டாயம் "நான்பேடல் ஆக்ஸிடென்ட்ஸ்" அதிகரிக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டத்தின்படி (டமில்நாடு ஷாப்ஸ் அன்ட் எஸ்டாபிலிஷ்மென்ட்ஸ் ஆக்ட், 1947) 1971லே 2,15,155 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த நிறுவனங்களின் எண்ணிக்கையோ 2,11,190 ஆக இருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஒன்று இலாகா சரியாக வேலை செய்யாமல் இருக்க வேண்டும். அல்லது ஷாப்ஸ் எஸ்டாபிலிஸ்மென்ட்ஸ் ஆக்ட் ரொம்ப பிரமாதமாக அமல்படுத்தப்பட வேண்டும். அப்படி என்றால், அதிகாரிகளைக் குறைத்து விடுங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். பெயரளவில் தான் இந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். எனவே, இந்த இலாகாவே தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு ஒதுக்கி இருந்த நேரம் முடிவடைந்துவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இது தொழிலாளர் பிரச்சினை. இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் அனுமதிக்கப் படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இதே போன்று தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் தகராறு வரும்பொழுது அதை நாம் எவ்வளவு சாமர்த்தியமாகத் தீர்த்து வைக்கிறோம் என்பது தான் மிக முக்கியம்.

"Climate of the industrial atmosphere and the problems of labourers"

ஆகிய இரண்டையும் நாம் பார்த்துச் செயல்படவேண்டும். தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்குமிடையே ஒரு அமைதியான சூழ்நிலை இருக்கிறதா என்பதை முதலிலே யோசித்துப் பார்த்து, பிறகு பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கவேண்டும் இந்த அரசு. இன்றைக்கு என்ன நடக்கிறது? நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையிலே தொழிலாளர்கள் போராடச் செல்லும்பொழுதே, போலீஸ் அங்கே போகிறது. சாதாரணமாக முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே தொழிற் தகராறின் காரணமாக வன்முறை செயல் வந்தால் தான் போலீசை இந்த அரசு அனுப்ப வேண்டும். ஆனால், முன்னாலேயே போலீசைக் கொண்டு போய் வைத்து விட்டால், எப்படித் தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் தங்களுடைய தகராறுகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ள முடியும்? இதற்கு எடுத்துக்காட்டு, சங்கரி துர்க்கிலே நடந்த சம்பவம் ஆகும். தொழிலாளர்களைப் பேசவிடுகிறீர்களே, அவர்களுடைய குறையைச் சொல்ல விடுகிறீர்களே? எதற்காக அங்கே 'போலீஸ் இன்டர்வென்ஷன்'? ஆனால், அதே நேரத்திலே சிம்சன் கம்பெனி உள்ளே சிம்சன் ஒர்க்கர்ஸ் யூனியனைச் சேர்ந்தவர்களை மற்ற யூனியனைச் சேர்ந்தவர்கள் உதைக்கிறார்கள். எனவே, போலீசைப் பாதுகாப்புக்கு அனுப்புங்கள் என்று அங்கிருக்கும் மேனேஜ்மென்ட் கேட்கும் பொழுது, எவ்வளவு பேர் அடிபட்டான் என்று கேட்பது மாதிரி போலீஸ்காரர்கள் வெளியே நின்று சொண்டிருக்கிறார்கள். எங்கே பாதுகாப்பிற்கு போலீஸ் வேண்டுமென்று கேட்கப்படுகிறதோ அங்கே போலீசை அனுப்புவது இல்லை. எங்கே பாதுகாப்பிற்கு அவசியம் இல்லையோ, அங்கே போலீஸ் அனுப்பப்படுகிறது.

அடுத்து, இப்படித் தொழிற் தகராறுகள் ஏற்படும்பொழுது, இந்த லா அன்ட் ஆர்டர் போலீசை அனுப்பக்கூடாது. இதற்குத் தனியாக "இன்டஸ்ட்ரியல் செக்யூரிட்டி போலீஸ்" என்று போட்டு விடவேண்டும். சாதாரண லா அன்ட் ஆர்டர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை அனுப்பிவிட்டால், போலீஸ் ஸ்டேஷனிலே ஆள் இருக்க மாட்டேன் என்கிறார்கள். எனவே, இந்தத் தொழிற் தகராறுகளைத் தீர்க்கும்பொழுது அங்கே வன்முறைச் செயல் இருந்தால்தான், அங்கே போலீஸ் போக வேண்டும்.





இந்தத் தொழிலாளர்கள் சாதாரணமாக நியாயமான கோரிக்கைகளை உண்ணாவிரதத்தின் மூலமாகவோ, கோஷம் போட்டோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அங்கே போலீஸ்காரர்கள் இருப்பதற்கு அவசியம் இல்லை. எனவே, இந்தப் போலீஸ் தலையிட்டால் நியாயமான கோரிக்கைகளைக்கூட முதலாளிகள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இந்தப் போலீஸ் தொழிலாளர்களைத் தங்களுடைய லாரியிலே ஏற்றிக்கொண்டு போய் 40 மைல் தூரத்திற்கு அப்பால் விட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். இப்படிப் பல தகராறுகளை போலீஸ் செய்து கொண்டிருக்கிறது. இப்படி இருந்தால் தொழிலாளர்களின் உரிமைகள் எப்படி பாதுகாக்கப்படும் என்பதை இந்த அரசாங்கம் உணர வேண்டும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உறுப்பினர் அவர்கள் எப்படியாவது தொழிலாளர்கள் பக்கம் தான் இருப்பதாக காட்டிக்கொள்ள, 40 மைல் தூரத்திலே தொழிலாளர்களை போலீஸ் லாரியிலே கொண்டு போய்விட்டார்கள் என்கிறார்கள். அப்படிப்பட்ட சம்பவம் நடந்து, அதன் மீது ஏதாவது புகாரை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களா? அது எந்த இடத்திலே நடந்தது என்பதையும் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தொழிலாளர்கள் எப்படியாவது எங்கள் பக்கம் வரவேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. எங்களுக்குத் தொழிலாளர்கள் மீது அதிகப்படியான அக்கறை முன்னமே இருக்கிறது. மெட்ராஸ் ரப்பர் பாக்டரியிலே தான் தொழிலாளர்களை 30 மைலுக்கு அப்பால் உள்ள தூரத்திலே கொண்டு போய் விட்டார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்பொழுது அதுவே 30 மைல் என்று ஆகிவிட்டதா? எங்கே இருந்து எங்கே கொண்டு போய் அந்தத் தொழிலாளர்களை விட்டார்கள் போன்ற விவரங்களை அம்மையார் அவர்கள் சொல்ல வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மீண்டும், மீண்டும் விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே!

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நீங்கள் பேசியதை ஒட்டித்தான் விவரங்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. அம்மையார் அவர்கள் அப்படிப் பேசியது தவறு என்று ஒப்புக் கொள்ளலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் பேசியது தவறு இல்லை. என்று சொல்லிக் கொள்கிறேன். மெட்ராஸ் ரப்பர் பாக்டரியிலே இருந்து அப்படிக் கொண்டு போய்விட்டார்கள். சங்கரி துர்க் தொழிலாளர் பிரச்சினையிலே, 40 மைலுக்கு அப்பால் கொண்டு போய் அந்தத் தொழிலாளர்களை போலீஸ் விட்டது. இப்படி 40 மைலுக்கு அப்பாலே கொண்டுபோய் விட்டார்கள் என்று எங்களுக்குப் புகார்கள் வந்தது. அதைச் சொன்னேன். ஏன் அப்படி

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 ஜூலை 22

போலீஸ் செய்தது என்று கேட்டு, அவைகளைத் தீர்ப்பதிலே இந்த அரசாங்கம் ஆர்வம் காட்ட வேண்டுமே தவிர, எங்களைப் போய் விவரம் கொடுங்கள் என்று சொல்லக் கூடாது. உங்களுக்கு என்று போலீஸ் இலாகா இருக்கிறது, விஜிலென்ஸ், சி.ஐ.டி. போன்றவை இருக்கிறது நீங்கள் விவரங்களைக் கொண்டு வந்து சொல்லுங்கள். எங்களை விட அதிகமாக, நன்றாக நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்தத் தொழிலாளர்களுக்கு நாங்கள் என்ன பதில் இதிலே சொல்லியாக வேண்டும் என்பதற்காகத் தான் இதை யெல்லாம் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மற்றும், "டமில்நாடு ஷாப்ஸ் அன்ட் எஸ்டாபிலிஷ்மென்ட்ஸ்" சட்டத்தை சரியாக அமுல் படுத்தவது இல்லை. "It must be extended to other areas". என்ற கோரிக்கைகள் இருக்கின்றன. "கேடரிங் எஸ்டாபிலிஷ்மென்ட்ஸ் ஆக்ட்டை" வந்து காலேஜி யிலே இருக்கின்ற கேன்டீன்களுக்குக்கூடத் தேவை என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நியாயமான கோரிக்கைகள் எங்கெங்கே இருக்கிறதோ, அவைகளை எல்லாம் இந்த அரசாங்கம் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோல், ஹோட்டல் தொழிலாளர்களுக்கு ஒரு கமிஷன் போட்டார்கள். அதன் ரிபோர்ட்டு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அது சட்ட சபை உறுப்பினர்களுக்கு வரவே இல்லை. அறிக்கையிலே சொல்லுகிறார்கள், அந்தத் தொழிலாளர் களுக்குக் கொடுக்கக்கூடிய 'உணவு அலவன்சை' அதிகமாக கொடுத்திருக்கிறார்கள் என்று. இது Recommendation of Special Officer with regard to hotel industry to the Government" அதை அமைச்சர் அவர்கள் மாத்திரம் தெரிந்து, அமுல் நடத்து கிறார்கள் என்றால், அதைப் பற்றி சட்டசபை உறுப்பினர்களுக்குத் தெரிய வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன். எனவே,, இப்படி தெரிந்துகொள்ளும் உரிமை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, அந்த அறிக்கையை இந்த சபையின் முன்னாலே கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல், பின்னாலே பல வாரியங்களிலே பல ஆட்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த ஆட்களையும் சர்விஸ் கமிஷன் மூலமாகவும், எம்பிளாய்மென்ட் எக்சேன்ஞ் மூலமாகவும் எடுக்க முயற்சி செய்ய வேண்டும். இல்லை யென்றால், செல்வாக்குப் படைத்தவர்களுக்குத்தான் அங்கே வேலை வாய்ப்புப் பெற முடியும் என்ற நிலைமை வந்துவிடும். எனவே, இதைச் சீர்திருத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேமாதிரி, இந்த அறிக்கையின் 15-வது பக்கத்தைப் பார்க்கும் பொழுது "Number of disputes investigated, number of disputes settled by negotiation and number of disputes referred to adjudication"



1971 ஜூலை 22] [திருமதி த. ந. அனந்தநாயகி]

என்ற ரீதியிலே விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நமக்குத் தெரியும், எந்தத் தொழிலாளர் பிரச்சினையும் "அட்ஜுடிகேஷனுக்குப்" போனால் அந்தப் பிரச்சினை தீரவே தீராது. அது பல ஆண்டுகளுக்கு இழுக்கப்பட்டு அதனால் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்குமா என்ற நிலைமை இருக்கிறது. எனவே, இந்தத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை கூடியமட்டில் 'கன்சிலியேஷனிலே' முடிக்க முயற்சி செய்ய வேண்டும். இப்படி "அட்ஜுடிகேஷனுக்கு" அனுப்பப்பட்ட தகராறுகள் 373-லே இருந்து 670 ஆக 1970-லே அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து என்ன தெரி கிறது என்றால், இந்தப் பிரச்சினைகளை பேச்சு வார்த்தையின் மூலம் தீர்க்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது. அதன் மீது இந்த அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்பதைத் தான் இது சுட்டிக்காட்டுகிறது.

அடுத்து, தொழிலாளர்கள் பிரச்சினைகளை வைத்து போராடிக் கொண்டிருக்கும் பொழுது, அவசர அவசரமாக இந்த அரசாங் கம் தலையிட்டு அதை "இல்லீகல் லாக் அவுட்ஸ்" என்று பிரகட னப்படுத்துவது நல்லதல்ல. பிரச்சினைகளை வைத்து தொழிலாளர் களும் முதலாளிகளும் பேசட்டுமே, அவர்கள் பிரச்சினை முற்றிப் போனால்தான் அப்படிப்பட்ட நிலையினைச் செய்யவேண்டும் இந்த அரசாங்கம். அதற்குள்ளே அரசாங்கம் தலையிட்டு பல கஷ்டங் களைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்துவது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

Number of strikes including lockouts 1969--174; 1970—277 என்ற ரீதியிலே ஏறிக் கொண்டே போகிறது. "லாக் அவுட்ஸ் அன்ட்டு ஸ்ட்ரைக்ஸ்" இப்படி அதிகரித்து பல தொழிற்சாலைகள் மூடப்படும் சூழ்நிலை நீங்கி இவைகள் குறைக்கப்பட்டிருந்தால், "வளர்க தொழில், வாழ்க தொழிலாளர்" என்று இந்த அரசாங்கம் சொல்லு வது பொருத்தமாக இருக்கும். ஆனால், 1969-லே 174 ஆக இருந் தது. இன்றைக்கு அதாவது 1971-லே 275 ஆக அதிகரித்திருக் கிறது. ஏன் இப்படி இது அதிகரித்தது, எதற்காக அதிகரித்தது என்பதைத் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதற்காக அதிக நேரத்தைச் செலவழித்து அறிந்து, அவைகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்து, அதன் மூலம் இந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல வாழ்வைத் தர முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

அரசாங்கத்தினுடைய இன்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷனின் உதவியுடன் வால்டாக்ஸ் ரோடிலே இயங்கி வந்த "டான்சி" யூனிட் என்ற தொழிற்சாலையே மூடிவிட்டார்கள். அது இன்னமும் திறக்கப்படவில்லை. இப்படி இன்றைக்குத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இழந்து அவதிப்படுகிறார்கள் என்பதைத் தான் இது எடுத்துக் காட்டுகிறது. இதைப்பற்றி ஏதாவது கேட்டால், மத்திய அரசாங்கத்தின் "லைசென்ஸ் கொள்கை" தவறு என்று சொல்லுகிறார்கள். ஒரு கோடி ரூபாயிக்குள்ளே நீங்களே

லைசென்ஸ் கொடுத்து, தொழில்களைத் துவக்கி, அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்தலாமே என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டால், அதிலேயும் சிக்கல்கள் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

அத்தோடு, தொழிலாளர்கள் பிரச்சினைகளிலே போலீஸ் தலையீடு வேறு இருக்கிறது. இத்தனைக்கும் மத்தியிலே அவர்கள் இருப்பது மிக கஷ்டமாக இருக்கிறது.

அடுத்து, எந்த அரசியல் வாதியும் தொழிற்சங்கத் தலைவராக இருக்கக் கூடாது. "The very worker must become leader of the union" என்று இருக்க வேண்டும். வெளியே இருக்கும் அரசியல வாதிகளைத் தொழிற்சங்கத் தலைவர்களாக ஆக்கி, தொழிற்சங்கங்களை அரசியல்வாதிகள் கையிலே போகிற மாதிரி இந்தச் சர்க்கார் உதவி செய்கிறது. சிம்சன்ஸ் குரூப்பிலே இவ்வளவு பிரச்சினைகள் இருப்பதற்குக் காரணமே இதுதான். அங்கிருந்த தலைவரை அரசியல் ஆதிக்கத்தினால் மாற்றி விட்டார்கள். இப்படி எத்தனை தொழிற்சங்கங்களைப் பிடிக்க முடியுமோ, அதற்காக எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சிம்சன்ஸ் குரூப் தொழிற்சாலையிலே இதற்கு முன்பு இருந்தவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள். இப்பொழுது அங்கே ஆளும் கட்சிக்காரர்கள் வந்துவிட்டார்கள் என்பதற்காக 'கட்சிக் கண்ணோட்டம்' கூடாது என்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் ஆளும் கட்சியிலே இருந்த பொழுதும் அதைத்தான் சொல்லிக் கொண்டு வருகிறேன். இந்த அமைச்சர் அவைக்கும் அதைத்தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசியல்வாதிகள் தொழிற் சங்கங்களைப் பிடிக்கக் கூடாது என்று சொல்வது, நம்மை நாமே தாக்கிக் கொள்வது போல் இருக்கிறது. நீங்கள் உங்களைத் தாக்கிக் கொள்ளலாம். ஆனால் எல்லோரையும் தாக்கக் கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்படி "பொலிடிகல் பயாசோடு" ஆட்கள் போனால், தொழிலாளர்களுக்குப் பல கஷ்டங்கள் வருகின்றன. எனவே, இது எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் பொதுவான ஒன்றாகும். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களிலே இருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தார்கள் வரை சொல்லுகிறேன். இது கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்சினை என்று பார்க்க வேண்டும். எனவே, இதிலே அரசியல் வேறுபாடுகளுக்கும், அரசியல் காட்புணர்ச்சிக்கும் இடம் கொடுக்காமல் பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டு, அரசியல் ரீதியிலே தொழிற்சங்கங்களைப் பிடித்துக் கொண்டிருக்கலாமா? அதன் மூலம் ஒரு கட்சியின் செல்வாக்கை பெருக்கிக் கொண்டிருக்கலாமா? இப்படி ஒரு அரசியல் கட்சி நினைத்தால், அது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.





பின்னர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு வருவோம், இன்றைக்கு இலட்சக்கணக்கானவர்கள் வேலை இல்லாமல் எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சிலே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், வேலை என்பதோ கிடைப்பதில்லை. கடைசியிலே, சலித்துப் போகிறார்கள். எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சிலே பெயர் பதிவு பண்ணினாலும், வேலை என்பது எங்களை நாடி வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். குறிப்பாக, பேக்வார்டு கிளாசஸ் அண்ட் ஹரிஜனங்களுக்கு ஸ்பெஷல் எம்பிளாய்மெண்ட் எக்சேஞ் இருக்க வேண்டும். பிற்பட்ட இனத்தவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட மாவட்டமாகக் கருதும் இடங்களிலே இவைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இப்படி, அவர்கள் நலன்களிலே ஒரு தனி அக்கறை செலுத்த வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படி படித்தவர்களுக்கே வேலை கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கும்பொழுது, கை கால் இல்லாதவர்களுக்கும், ஊனம் அடைந்தவர்களுக்கும் எங்கே வேலை கிடைக்கும். இப்படி அங்கஹீனர்கள் மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். இப்படி பெரும் பிரச்சினைகள் உங்களை நோக்கி இருக்கும்பொழுது, அந்தப் பிரச்சினைகளை எவ்வளவு துரிதமாகத் தீர்க்கக் கூடும் என்று பார்த்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர, அதைவிட்டு அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்து பிரச்சினைகளைத் தீர்த்தால், உண்மையிலேயே தொழில் வளரும், தொழிலாளர்கள் வாழ்வு நலம் பெறும் என்று சொல்ல முடியாது. இதை அரசாங்கத்திற்குச் சொல்லி, எல்லா வெட்டு பிரேரணைகளையும் ஆதரித்து, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது மாண்புமிக்க உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களில் நல்லவைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு இந்த அரசாங்கம் எப்பொழுதும் தயங்காது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நமது அம்மையார் அனந்தநாயகி அவர்கள் வழக்கம் போலவே ஆளும் கட்சியை ஏதாவது சொல்லாவிட்டால் தூக்கம் வராதே என்ற கவலையில், அவர்கள் உண்மைக்கு மாறாகப் பலவற்றைச் சொன்னார்கள். குறிப்பாக, 'சிம்ப்சன் கம்பனியைப்" பற்றி. இந்தப் பிரச்சினையை நான் இங்கே விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், நம்முடைய அருமை நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்று அவருடைய உடையிலேயும் மாறுதல், உள்ளத்திலேயும் மாறுதல், அவர்களுடைய கருத்திலேயும் மாறுதல் கொண்டவராக இன்றைக்குக் காட்சியளிக்கிறார்கள். அதற்கேற்ப அவரது பேச்சின் தன்மையும் இருந்தது. சிம்ப்சன் கம்பனியின் விவகாரங்களை அரசாங்கம் மேலும் புரிந்து கொண்டு ஆவன செய்வதற்குத் துணையாக ஏதாவது அவர்கள் சொல்லியிருந்தால், அதை வணக்கத்துடன் வரவேற்கிறேன். தோழர் குருமூர்த்தி அவர்கள் ஆறு மாத காலமாக அந்தத் தொழிற் சங்கத் தலைவர் பதவியை விட்டு விலகிவிடுவதாக என்னிடத்திலேயும், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களிடத்திலேயும் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது நான் "நீங்கள் அதை விடக் கூடாது, நீங்களே தொடர்ந்து தலைவராக இருந்து நடத்த வேண்டும்" என்று சொல்லி வந்தேன். அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதிக்கமே கிடையாது; குருமூர்த்தியின் ஆதிக்கம்தான் இருந்தது. இன்னும் சொல்லப் போனால், கடைசி நேரத்திலே அவர் என்னிடத்திலே வந்து, 'உங்கள் தோழர் ஒருவரை அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளச் சொல்லுங்கள்" என்று கேட்ட பொழுதும் கூட, "கழக தோழர் யாரும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அது யார் விட்டுச் சொத்துமல்ல, தேர்தல் மூலம் வரட்டும்" என்று சொன்னவர்கள் நாங்கள். அதை உணராமல் அவரைக் கட்சி வெறி கொண்டு வெளியேற்றிவிட்டதாகக் கூறுவது நியாயமாகாது. குருமூர்த்தி அவர்கள் இங்கே வரமுடியாவிட்டாலும், அவர் இருக்கின்ற இடத்திற்கு நீங்கள் சென்று கேட்டால், அவரே இதை ஒப்புக் கொள்வார்கள், எதையோ சொல்ல வேண்டும் என்று எண்ணி "அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதைப் போல", இங்கே அம்மையார் பேசுகிறார்கள்.

எம். ஆர். எப். ஐ எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே ஏன் இந்த அரசாங்கம் வேகமாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அம்மையார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் கேட்டார்கள். நான் நான்கைந்து முறை தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசியபொழுது, 'இந்தப் பிரச்சினை இன்னும் 2,3 மாதம் தீர்க்கப்படாமல் இருக்கட்டும்' என்றார்கள். இன்னும் 2 மாதம் இருந்தால் அந்தத் தொழிலதிபர்கள் வழிக்கு வந்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். அதோடு நீங்கள் இப்பொழுது செய்துள்ள இந்த செட்டில்மெண்ட் இருக்கிறதே அதுவே போதும் என்று புரிகிறது எனக்கு. ஆனால் தொழிலாளர்களில் ஒரு சிலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், கஷ்டப்படாமல் உரிமைகளைப் பெற்றால் "வணக்கம்" என்று சொல்லிவிட்டுப் போய் விடுகிறார்கள். கொஞ்சம் கஷ்டம் அனுபவித்தால் தான் எங்கள் நினைவு இருக்கும் என்று கருதுகிறார்கள். விரைவில் வேலைநிறுத்தம் முடியக் கூடாது என்று கருதும் தொழிற் சங்கத் தலைவர்களும் இருக்கிறார்கள். இன்னொரு தலைவர் சொன்னார், "தொழிலாளர் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்க வேண்டும். ஏதாவது தகராறு தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இருந்து கொண்டே இருக்க வேண்டும்" என்றார் அவர். இது எப்படி இருக்கிறதென்றால், "ஒரு ஊருக்குப் பெரிய தனக்காரர் என்று ஒருவர் இருந்தால், ராசி செய்வதற்கு இரண்டு கலகம் இருக்க வேண்டும்" என்பார்கள். அப்பேர்ப்பட்ட மனப்பான்மை கொண்ட தொழிற் சங்கவாதிகளை நம்பிக் கொண்டு கழக அரசைத் தாக்குவது நல்ல தல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

நாங்கள் நூற்றுக்கு நூறு செய்து விட்டோம் என்று சொல்ல மாட்டோம்; செய்யப்பட்டவைகளிலே தவறு இருக்கலாம். அவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டிய முறையிலே சொன்னால், ஏற்றுக்கொள்ளக் கழக அரசு தயங்குவதில்லை. மற்றொன்றை





இங்கே சொல்லிக் கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியத்தைச் சொல்லுகிறேன், அதன் தாய்க் கழகமான திராவிடக் கழகத்தின் இலட்சியத்தை சொல்லுகிறேன், தொழிலாளர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும், அப்படித் தொழிலாளர்களுக்கு செய்வதினால் எங்களுக்கு என்ன நன்மை என்ற இலாபக் கணக்கைப் பார்த்தது இல்லை. எங்களுடைய அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "அரசியல்வாதிகளிடம் தொழிலாளர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டுமே தவிர, பாட்டாளி மக்களையெல்லாம் கூட்டி வைத்து அவர்கள் மூலம் இலாபம் பெறுவது அரசியல் கட்சிகளுக்கு ஏற்றதில்லை" என்ற அந்தப் பொன்மொழியை பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கும் கூட சொல்லுகிறேன், நாங்கள் அரசியல் ஆதிக்கத்தைச் சொல்லித் தொழிற் சங்கங்களைக் கைபற்றியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் எதிர் வரிசையிலே இருப்பவர்கள். தமிழ் நாட்டிலே எத்தனை தொழிற் சங்கங்கள் இருக்கின்றன? நாங்கள் ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் ஆகின்றன. எத்தனைத் தொழிற் சங்கங்களை நாங்கள் அப்படி அரசியல் ஆக்கத்தைக் காட்டிக் கைப்பற்றினோம் என்று ஆதாரத்தோடு சொல்ல முடியுமா என்று கேட்கிறேன். எந்த ஒரு தொழிற்சாலையிலே எங்கள் கட்சி தனது ஆதிக்கத்தை வைத்துக் கைப்பற்றியது என்று சொல்லட்டும் பார்ப்போம். என்ன வேண்டுமென்றாலும் பேசிவிடுவது என்றால், பேசிக்கொண்டே போகலாம். ஆனால் அதற்கு மதிப்பில்லாமல் போய்விடும். அப்படி நாங்கள் தொழிற் சங்கங்களை எடுத்துக் கொள்ள வேண்டிய பஞ்ச நிலையிலே இருந்தது கிடையாது. அரசியலிலேயும் எங்களுக்குப் பஞ்சம் ஏற்படவில்லை. தொழிற் சங்கத் துறையிலேயும் பஞ்சம் ஏற்படவில்லை. பொதுவாகவே எங்களுக்குப் பொதுவாழ்வில் பாடுபட எதிலும் பஞ்சம் ஏற்படவில்லை. அப்பேர்ப்பட்ட அஸ்திவாரத்தை எங்கள் தானைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அரசுக்கு அமைத்துக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

"அட்ஜூடிகேஷன் எவ்வளவு அதிகமாக வளர்ந்து விட்டது பார்த்தீர்களா?" என்று திருமதி அனந்தநாயகி சொன்னார்கள். அம்மையார் வழக்கறிஞர். அவர் நமக்கு வேண்டியவர் நீண்ட காலமாக. அட்ஜூடிகேஷன் என்பது தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு. கோர்ட்டுக்கு அனுப்பாவிட்டால்தான் அவர்களுக்கு பாதகம் என்று தொழிலாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் அட்ஜூடிகேஷன் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று அம்மையார் அவர்கள் சொல்லுவார்களேயானால் அவரின் மனப்போக்கை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I said that the number of conciliations should be more than the number referred to adjudications. It is always in the interest of labour to have more conciliations. Adjudication is always a slow process. Let us sit across the table and have more conciliations. I welcome it.

மாண்புமிகு திரு. என் வி. நடராசன்: அந்த அடிப்படையில் பார்த்தால் கூட, அது தொழிலாளர்களுக்கு நல்லதல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். கோவையிலே ஆலைகள் மூடப்பட்டிருப்பது பற்றிச் சொன்னார்கள். அதிலே நடைபெற்ற உண்மைகள் என்ன என்பது குறித்து உங்களுக்குத் தெரிந்திருக்கும். எல்லா மில்களையும் நாங்களா மூடினோம்? நீங்கள் ஆட்சியிலே இருந்த பொழுதும்தான் மூடினீர்கள். "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்பதைப் போல், நன்மைகள் செய்தால் நீங்கள், கெடுதல் ஏற்பட்டால் நாங்கள்தான் பொறுப்பு என்ற ரீதியிலே அம்மையார் அவர்கள் பேசக் கூடாது. தவறு ஒருவர் செய்ய, தண்டனை இன்னொருவருக்கு என்றால் அது நியாயமில்லையே. காங்கிரஸ் கட்சிதான் ஆலைகளை மூடியது. பிறகு நாங்கள் ஆட்சிபொறுப்பை ஏற்றவுடன் அவைகளைத் திறக்குமாறு வலியுறுத்தப்பட்டு வருகிறது. மூடியுள்ள ஆலைகள் திறக்கப்பட வேண்டுமானல் ஒரு சில மாதங்களுக்கு தற்காலிகமாக டி.ஏ.வைக் குறைத்துக் கொள்ளுங்கள், லாபம் கிடைக்க ஆரம்பித்தவுடன் இதையும் சேர்த்துத் தருகிறோம் என்று சொன்னோமேயொழிய வேறு இல்லை. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரியும். ஏற்கெனவே இந்த அடிப்படையில் 5 ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டு நல்ல முறையில் நடந்து இப்பொழுது முழு டி. ஏ. தரப்படுகிறது. ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும், இன்னொரு பக்கம் டி.ஏ. வைக் குறைப்பதா என்றால் எதைத்தான் செய்வது? எங்களுக்குத் தெரியவில்லை?

கனம் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், அரசியல் கட்சிகளை நடத்துவது சிரமம்தான். ஆனல் அதைவிட, தொழிற்சங்கத்தை நடத்துவதில் சற்றுத் தவறினல்கூட, அதைத் தலைமை வகித்து நடத்துபவர்களையே தூக்கி எறிந்துவிடும்.

இந்தியா பிஸ்டன் தொழிற்சாலையில் பலாத்காரம் இருந்ததாகச் சொன்னார்கள். யார் அடித்தார்கள்? யார் அடிபட்டார்கள்? அடிபட்டுக் கை உடைந்தவர்கள் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களே. பத்துப் பன்னிரண்டு பேர்கள் என்னிடம் வந்து காட்டினார்கள். நம்முடைய ஆட்சி நடக்கிறபோதும் இப்படி நாங்கள் அடிபடவேண்டுமா? என்றார்கள். அவர்கள் சொன்னதை நம்புவதா. டாக்டர் ஹாண்டே சொன்னதை நம்புவதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சர் அவர்கள் சொல்வது போல நாங்களும் சொல்ல முடியும். ஆகவேதான் ஒரு குழுவைப் போட்டு பொதுவாக இதில் உள்ள நியாயம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும் என்று நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஒரு இடத்தில் திராவிட முன்னேற்றக் கழக யூனியன்தான் இருக்கட்டும், வேறு எந்தக் கட்சி யூனியன்தான் இருக்கட்டும். போட்டி சங்கங்களிடையே





தொழிற்சங்கப் பிரச்சினைகளில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு அதைத் தடுப்பதற்குப் பலாத்காரத்தைப் பயன்படுத்தினல், கழகமாக இருந்தாலும், வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த அரசு அதைக் கண்டிக்கும் என்பதாக முதல்வர் சார்பாக உறுதி அளிக்கிறேன்.

நமது அம்மையார் அவர்கள் பால் பண்ணையில் பதினைந்து ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். எங்களைத் தாக்குவதற்காகத் தொழிலாளர்கள் அந்த அளவுக்குக் குறைந்த சம்பளம் வாங்கவேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள் போல் இருக்கிறது. ஆனல் இன்றைய தினம் டி.ஏ.யையும் சேர்த்து ரூ 125 கொடுக்கப்படுகிறது. நடு இரண்டை அம்மையார் சாப்பிட்டு விட்டார்கள். பாவம் பசி நேரம் (சிரிப்பு).

அங்குமிங்குமாக ஒன்றிரண்டு குறைகள் இருக்கலாம். எங்கள் நிர்வாகத்தில் குறைகளே இல்லை என்று சொல்லவில்லை. இருக்கும் குறைகளை சுட்டிக்காட்டுவது எதிர்க்கட்சியினரின் முக்கிய கடமை. ஆனல் திட்டவட்டமாக ஆதாரத்தோடு குறையிருப்பதை எடுத்துக் காட்டினல் நாங்கள் என்றைக்கும் திருத்திக் கொள்ளத் தயார். அதைத்தான் உங்கள் பக்கத்தில் இருந்து நாங்கள் எதிர்பார்க்கிறோமே தவிர வெறும் க்ரிடிசிசம் மட்டும் அல்ல.

அடுத்தபடியாக, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பற்றிச் சொன்னார்கள். நான்கு மாதத்தில் எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம், நிதி உதவி 95 லட்சம் ரூபாய் கிடைத்தவுடன் என்பதுதான் நிபந்தனை. இதுவரை 800 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். இன்னும் ஏறத்தாழ 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டும். ஆனல் நிதி உதவி இன்னமும் கிடைக்கவில்லை. அதுபற்றி அரசிடம் சொன்னார்கள். அரசும் அதற்கு எல்லா முயற்சியும் எடுத்து வருகிறது.

தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளும்போது சீனியாரிடியை கடைப்பிடிக்க வேண்டும் என்பது தான் நிபந்தனை. நான்கு பேர்கள் விஷயத்தில்தான் சீனியாரிட்டி மீறப்பட்டிருந்தது. ஆனல் அதை உடனே திருத்திக் கொள்ளுமாறும், சீனியாரிடியைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும் என்று மானேஜ்மெண்டாருக்குக் கூறப்பட்டு, அதுபோலவே செய்யப்பட்டிருக்கிறது.

எம். ஆர். எப்.-ஐத்தான் எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே தகராறு ஏற்பட்டவுடன் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், அதன் முதலாளிகளுடன் பேசினார்கள். தொழிலாளர்களுடன் பேசினார்கள். அப்போது ஏற்பட்ட முடிவைப் பெரும்பாலான தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனல் தொழிற்சங்கத் தலைவர்தான் இன்னும் கொஞ்சம் அதை நன்றாக யோசித்துப் பார்க்க அவகாசம் இருக்கட்டுமே, என்று கூறிவிட்டார். அங்கே

90 நாள் வேலைநிறுத்தம் நடந்தது என்றால் நமக்கு மட்டும் நஷ்டம் என்று கருதவேண்டாம். நம் சமுதாயத்திற்கே 90 லட்சம் நஷ்டம். யார் யார் இந்த வேலைநிறுத்தம் ஒரு முடிவுக்கு வராது நடந்துகொண்டே இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள் என்பதைக் கூட நான் காலம் வரும்போது சொல்வேன். பேச்சு வார்த்தைகள் மூலமாகவே தகராறுகள் தீர்க்கப்பட்டன.

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. அவர்கள், நகராட்சி சிப்பந்திகளின் அடிப்படைச் சம்பளம் குறைவாக இருப்பதாகவும், இந்தக் கூட்டத்திலேயே அமைச்சர் பதில் கூற வேண்டும் என்றும் சொன்னார்கள். நான் முதல்வருடன் கலந்து பேசினேன். ஊதியத்தைப்பற்றி மற்ற துறையினரையும் கலந்து கொண்டு எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதாகப் பரிசீலனை செய்வோம் என்றார்கள். அந்த உறுதியினை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கிராஜுவிடி பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். பதில் வரவில்லை, பதில் வரவில்லை என்றால், நாமே அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.எஸ்.பி. தலைவர் சுப்ரமணியம் அவர்கள் பேசும்போது, தொழில்தகராறை தீர்க்கையில் பாரபட்சம் காட்டுவதாகச் சொன்னார்கள். எங்கேயும் அப்படிக் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பிட்டுச் சொன்னால் அதைத் திருத்திக் கொள்ளவும் முயற்சிப்போம்.

தொழில்தகராறைத் தீர்ப்பதில் காலதாமதமாகிறது என்றார்கள். இப்போது அதிகமான லேபர் ஆபிசர்களைப் நியமித்திருக்கிறோம். காலதாமதத்தைத் தவிர்க்க எல்லா நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சோமனூர், பல்லடம் ஆகிய இடங்களில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகைகளை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். கடந்த ஆறு திங்களில் 7 இ.எஸ்.ஐ. மருந்தகங்களை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இன்னும் அதிகமாக மருந்தகங்கள் திறக்கப்படவேண்டும் என்பதுதான் ஆசை. போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் செய்ய முடியவில்லை. எதிர்காலத்தில் இன்னும் எந்த அளவுக்கு இதை விஸ்தரிக்கலாமோ அந்த அளவுக்கு விஸ்தரிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் இ-எஸ்.ஐ. பணியாளர்கள் ஒழுங்காக தங்கள் கடமைகளை நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள். எந்த இடத்தில், எந்தப் பணியாளர் தம் கடமையை நிறைவேற்றத் தவறினார் என்கிற விவரத்தைக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.





மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவர்கள் பாக்டரி இன்ஸ்பெக்டர் அலுவலகத்தை விருதுநகரிலிருந்து சிவகாசிக்கு மாற்றவேண்டும் என்று சொன்னார்கள். அதுபற்றி பரிசீலனை செய்யப்படும் என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டுவசதி பற்றி திரு. சுப்பிரமணியம், திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. துரைமுருகன், திரு. ம. வே. நாராயணசாமி ஆகியோர் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி மேற்கொண்டு எந்த அளவு விரைவாகக் காரியங்களைச் செய்ய முடியுமோ அந்த அளவு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு தொழில் நிறுவனத்திற்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதுதான் தமிழக அரசினுடைய லட்சியமாகும். தொழிலாளர்களுக்குப் பாதகம் இல்லாத வகையிலும், தொழிற்சங்கத்தினுடைய பெருமை குன்றாமலும் குறையாமலும் இருக்க வேண்டுமென்றால், தொழிலாளர்கள் நன்மை அடைந்து, நாட்டுக்கும் நல்ல வாழ்வு கிடைக்க, ஒரு தொழிற் நிறுவனத்திற்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டும் இரண்டு மூன்று சங்கங்கள் இருப்பதாலே தொழிலாளர்களுக்கும் லாபம் இல்லை. சமுதாயத்திற்கும் லாபம் இல்லை. தொழிற்சங்கத் துறைக்கும் லாபம் இல்லை. ஒரு தொழில் நிறுவனத்திற்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கையை எப்படி நிறைவேற்றுவது என்பதை தொழிலாளர் தலைவர்கள் பலமுறை கலந்து பேசினால்தான் நல்ல முடிவுக்கு வர முடியும். அதுதான் அரசினுடைய எண்ணம், லட்சியம்.

அடுத்தபடியாக, பீடித் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. பீடித் தொழிலாளர்கள் மிகமிகக் கேவலமான நிலையில் இருப்பவர்கள் என்பதை நான் உணராமல் இல்லை. அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும். உள்ளிருப்பு வேலை நிறுத்தங்கள் பற்றி திரு. சுப்பு அவர்கள் தெரிவித்தார்கள். போலீஸ் ஏன் தலையிடுகிறது என்றால், கலவரம் ஏற்படும்போது, அங்குள்ள சாமான்களுக்குச் சேதம் ஏற்படுகிறபோது, முதலாளிகள் போலீசை அழைக்கும்போதுதான் போலீசார் உள்ளே செல்கிறார்களே தவிர, அரசாங்கம் அனுப்புவதில்லை. போராட்டம் என்று சொல்லிக்கொண்டு, வழியிலே ஏதாவது ரகளை நடந்தால், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டுமென்கிற கடமை போலீசுக்கு இருக்கிறதே தவிர, தொழிலாளர்களைத் துன்புறுத்த வேண்டுமென்கிற நோக்கத்தில் அவர்கள் இருப்பதில்லை. தொழிற்சாலையின் உள்ளே கலவரம் நடக்கும்போது பெரிய பெரிய என்ஜின்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று முதலாளிகள் சொல்கின்ற நிலைமையில் போலீசை அனுப்பாமல் என்ன செய்ய முடியும்?

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, பல ஆலை முதலாளிகள் எந்தக் கலவரமும் நிகழாமல் இருக்கும்போது தொழிலாளர்களை சஸ்பெண்ட் செய்தவுடனே அவர்கள் வெளியே

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 22

போகாமல் இருந்தால் உடனே போலீஸை வரவழைத்து கைது செய்துவிடுகிறார்கள். குறிப்பிட்ட ஆலையில் மட்டும் போலீஸ் நுழைவதில்லை. அங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் ஸ்தலத்திலே இருக்கின்றவர்களுடைய தூண்டுதலால் இப்படி நடைபெறுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அப்படி நடைபெறுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்தத் தவறுகள் ஏற்படாமல் செய்யலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஹைகோர்ட்டிலே 'ஸெல்பார்க் கேஸிலே' ஒரு தீர்ப்பு வந்தது. உள்ளிருப்பு வேலைநிறுத்தம் சட்டபூர்வமாகச் செய்தால் முதலாளிகள் விரும்பினால் போலீஸ் அனுப்பலாம் என்று. இந்தக் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டபூர்வமாக வேலைநிறுத்தம் செய்யும்போது, அங்கே பலாத்காரம் இருக்கிறதா, இல்லையா என்பதை பரிசீலனை செய்து, அறிந்துதான் அரசு தலையிட இருக்க வேண்டும். ஊட்டியில் இருக்கக்கூடிய போட்டோ பிலிம் பேக்டரியில் உள்ளிருந்து வேலைநிறுத்தம் செய்தபோது, போலீஸார் தலையிட்டு, அவர்களை வெளியேற்றி இருக்கிறார்கள். இது இன்றைய காலை பத்திரிகைகளில்கூட வந்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது. ஏதாவது கேட்கலாம் என்றால், இறுதியில் கேட்கலாம் என்று விதி இருக்கிறது. இப்படி உறுப்பினர்கள் குறுக்கிடுவதால் நேரம் அதிகமாகிறது. பசி வேளையும் வந்துவிடுகிறது. உறுப்பினர்கள் குறுக்கிடாமல் இருக்க வழிசெய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் .** This is not a point of order அமைச்சர் அவர்கள் அனுமதித்தால் குறுக்கிடலாம். If the Minister does not yield the Member cannot interrupt.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் சொன்ன சம்பவத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டேன். அவர் தெரிவித்த கருத்து, கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு மாறுபாடாக இருக்கிறது. அங்கே அமைதியை நிலைநாட்டுமாறு சொல்லியிருக்கிறேன். முதலாளிகளின் அழைப்பு இல்லாமல் போலீஸ் தலையீடு ஏற்பட்டிருக்கிறது என்று, எதிர்காலத்தில் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்தபடியாக, அம்மையார் அவர்கள் பேசும்போது, விபத்துக்கள் அதிகமாகி, காயம் பட்டவர்கள் அதிகம்; உயிர் இழந்தவர்கள் குறைவு என்பதாக வருத்தப்பட்டார்கள். (சிரிப்பு.)



1971 ஜூலை 22]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** This is a clever twisting of my argument செத்தவர்களைப்பற்றிக் கட்டாயம் வருத்தப்படுகிறோம். சாகாமல் தினந்தினம் செத்துக்கொண்டிருக்கிறார்களே; அதற்காகத்தான் வருத்தப்பட்டோம். அமைச்சர் அவர்கள் திரித்துச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்போது கூட 'ஸேப்டி ஸ்கீமில்' தமிழ்நாடு முதன்மையான இடத்தைப் பெற்று பரிசு பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இது ஒரு வாரத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சி. தமிழ்நாடு முதல் நிலையில் இருக்கிறது.

இன்னும் பல்வேறு கருத்துக்களை உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் பரிசீலனை செய்து, எந்தெந்த அளவிற்கு நடைமுறைக்குக் கொண்டு வர முடியும் என்பதை அரசு பரிசீலனை செய்யும் என்ற உறுதியை அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் எல்லோரும் அரசாங்கத்தை மிகவும் கண்டிக்க முடியாத நிலையிலே தொழிலாளர்கள் நலனிலே இந்த அரசாங்கம் அக்கறை காட்டி வருகிறதே என்று வருத்தப்பட்டார்கள். அவர்களுக்கே உள்ளூர மகிழ்ச்சிதான். நீங்கள் தெரிவித்த எல்லாக் குறிப்புகளையும் கவனித்து ஆவன செய்கிறேன் என்று கூறி, எல்லோரும் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவடைந்தது. வெட்டுத் தீர்மானங்களும் கோரிக்கையும் வாக்கெடுப்புக்கு விடப்படுகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உருக்கமாகக் கேட்டுக்கொண்ட பின்னர் கோரிக்கை எண் 24-க்கு நான் கொடுத்திருந்த என் வெட்டுத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

THIRU K. T. K. THANGAMANI : In view of the assurance given by the Hon. Minister I am not pressing my cut motion.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

DR. H. V. HANDE : I am not pressing my cut motion.

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

THIRU A. SUBRAMANIAM : I am not pressing my cut motion.

வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 99,66,500 under Demand No. 24—Labour including Factories."

The Demand was put and carried, and the Grant was made.

*மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. அழகர்சாமி, டாக்டர் ஹாண்டே ஆகியோர் கோரிக்கை எண் 5-க்கு கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமையினால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.*

*மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஜேம்ஸ், திரு. கே. என். குமாரசாமி ஆகியோர் தங்களுடைய இருக்கைகளில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டன வாக கருதப்பட்டன.*

MR. DEPUTY SPEAKER : The question is :

"That the Government be granted a sum not exceeding Rs. 1,24,90,300 under Demand No. 5—Registration Department".

The Demand was put and carried, and the Grant was made.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும்.*

*பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

## 7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

'Nil'

### B. *Reports, Notifications and Other Papers.*

150. Erratum issued with notification Roc. No. 208560/69-P1, dated the 16th June 1970, relating to bifurcation of Palur Panchayat published at page 193 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette, dated the 15th April 1970.

151. Erratum issued with notification Roc. No. 51889/70-P1, dated the 30th March 1970, relating to inclusion of Central Government properties within the limits of the concerned panchayats in Madurai district.

@ 152. The performance Budget of the Transport Department for the year 1971–72.

@ 153. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Khadi and Village Industries.





@ 154. Speech by Hon. Thiru S. Ramachandran, Minister for Transport on the Demand on Motor Vehicles Acts—Administration (English and Tamil).

£ 155. A Review on Road Transport in Tamil Nadu 1970-71 (English and Tamil)

£ 156. Policy note on Demand No. 5—Registration Department (English and Tamil).

£ 157. The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1971 (L.A. Bill No. 24 of 1971).

158. Speech by Hon. Thiru N. V. Natarajan on Demand No 5—Registration Department (English and Tamil).

& 159. Review on the progress made by the Forest Department (Tamil).

---

@ Laid on the table of the House on 21st July 1971.

£ Despatched to Members on 20th July 1971.

& Despatched to Members on 21st July 1971.

## இணைப்பு 1.

[50-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தொழிலாளர் நல அமைச்சர் உரை.

### கோரிக்கை 24—தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும்.

பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் துறையில் பொதுவான கொள்கை பற்றியும் சாதனைகள் குறித்தும் இப்போது சுருங்க உரைக்க விரும்புகிறேன்.

'வளர்க தொழில்—வாழ்க தொழிலாளர்' என்ற குறிக்கோள் தான், தமிழ் நாடு அரசின் தொழிலாளர் கொள்கையாகும். அதாவது, தொழிலாளரிடையே அமைதியை ஏற்படுத்தி அதன் மூலம் இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதும் அதே சமயத்தில் உற்பத்தியாகும் செல்வத்தின் உரிய பங்கைத் தொழிலாளர்கள் துய்க்கச் செய்வதும் அரசின் சீரிய நோக்கமாகும். சமரச அதிகாரிகள் தங்கள் செவ்விய முயற்சிகளின் வாயிலாக இந்நோக்கத்தை நிறைவேற்றுகின்றனர். தகராறு எழுகையில் மட்டுமின்றி தகராறு எழக்கூடிய காரணங்களையும் ஆய்ந்தறிந்து தகராறு ஏற்படக்கூடிய பகுதிகளை எதிர்பார்த்து தங்கள் நன்முயற்சிகளைக் கொண்டு தக்க முறையில் அத்தகராறுகளுக்கு அவர்கள் இணக்கமாகத் தீர்வு காணவேண்டும். தொழிலாளர் பாதுகாப்பு, சுகாதாரம், நலன் ஆகியவற்றைத் தலையாய நோக்கமாகக் கொண்டு தொழிலாளர் சட்டங்கள், தொழிலாளர் நலச் சட்டங்கள் அனைத்தையும் திறம்படச் செயல்படுத்துவதும் பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் எத்தகைய வேறுபாடுமின்றி தொழிலாளர் நலன் குறித்த சட்டங்களை நிறைவேற்றுவதும் இந்த அரசின் குறிக்கோள்களாகும்.

தொழிலாளர் தலைவர்களும், தொழில் துறையில் முன்னணியில் நிற்பவர்களும் மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்தின் மூலமாகத் தமிழக அரசுக்கு ஆலோசனை நல்குகின்றனர். மாநில நிலையில் தொழிலாளர் குறித்த பிரச்சினைகள் அனைத்திலும் அரசுக்கு ஆலோசனை வழங்கும் இவ் வாரியம் இம்மாநிலத்தின் முக்கியமான முக்கூட்டு ஆலோசனை மன்றமாகும்.

### வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், உழைப்பு நாட்கள் விரயம்.

1969-ஆம் ஆண்டில் 174 வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் நடந்தன. விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 6,83,059 ஆகும். 1970-ம் ஆண்டில் 277 வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் நடந்தன. விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 10,33,377 ஆகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெல்லிக் குப்பத்தில் உள்ள பாரி நிறுவனம் போன்ற பெரிய நிறுவனங்களிலும் வட ஆர்க்காடு மாவட்டத்திலும், சென்னை மாநகரிலும் உள்ள பீடித் தொழிற்சாலைகள் சிலவற்றிலும் ஊதிய உயர்வு குறித்தும் பூரிப்பு ஊதியம் குறித்தும் ஏற்பட்ட தகராறுகளே நடப்பாண்டில் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் விரயமான உழைப்பு நாட்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரித்ததற்குக் காரணமாகும். ஆயினும் இப்பெரும் தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட தகராறுகள் திறம்பட கையாளப்பட்டு அவற்றிற்கு வெற்றிகரமான தீர்வுகள் காணப்பட்டன. நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் அல்லது தமிழ் நாடு மின்வாரியம் போன்ற பெரும் நிறுவனங்களில் பெரிய அளவில் தகராறுகள் எழுந்தபோது நமது மாண்புமிகு முதலமைச்சர் தமது அரிய நேரத்தை இத்தகராறுகளுக்குத் தீர்வு காண்பதில் செலவிட்டு தனது அரும்பெரும் ஆலோசனையையும் உதவியையும் நல்கி உதவியதை நான் ஈண்டு குறிப்பிடாமல் இருக்க முடியாது.



கோயம்புத்தூரில் உள்ள டெக்ஸ்டூல் லிமிடெட், பட்டாபிராமில் உள்ள சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் போன்ற பொறியியல் நிறுவனங்களின் நிர்வாகம் செயலற்று நின்றன. இந் நிறுவனத்தின் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புதிய இயக்குநர் வாரியங்களினால் இந்நிறுவனங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன. வேலையிழந்து தவித்து வந்த தொழிலாளர் அனைவரும் இதனால் வேலை வாய்ப்பைப் பெற்றதுமின்றி உற்பத்தி வளமும் பெருக வழியேற்பட்டுள்ளது.

### சமரச அதிகாரிகள் அமைப்பை வலுப்படுத்துதல்.

தொழில் தகராறுகளுக்கு, விரைவில் தீர்வு கண்டு, அத் தகராறுகளினால் துன்புற்றுத் தவிக்கும் தொழிலாளர்களுக்கு விரைவில் துயர் தணிப்பு வழங்கும் நோக்கத்துடன் அரசு ஐந்து தொழிலாளர் நல அதிகாரிகள் பதவிகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் இம்மாநிலத்தில் உள்ள சமரச அதிகாரிகளின் எண்ணிக்கை 14-லிருந்து 19-ஆக அதிகரித்துள்ளது. தருமபுரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் அதிகாரி இப்போது உள்ளார். 1969-ஆம் ஆண்டில் 1,272 தகராறுகள் சமரசமாகத் தீர்க்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1970-ஆம் ஆண்டில் 1,343 தகராறுகள் சமரசமாக தீர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தீர்வுகாணப்பட்ட முக்கியமான தகராறுகள்.

1970-ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்ட தகராறுகளுக்குள் கீழ்க்காணும் முக்கியமான சில தகராறுகள் பற்றிக் குறிப்பிட விழைகிறேன்—

(i) நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் நிர்வாகத்தினருக்கும் அதில் பணிபுரியும் 16,600 தொழிலாளர்களுக்குமிடையே தொழில் தகராறு ஒன்று மூண்டது. ஊதியம், படிகள், கூடுதலாக கிடைக்கக்

கூடிய நன்மைகள் போன்றவை மாற்றியமைக்கப்படவேண்டும் என்று தொழிலாளர் கோரியதே இத்தகராறுக்குக் காரணமாகும். தொழிலாளர் நல ஆணையாளரது சமரச முயற்சியினாலும் தமிழ் நாடு முதல்வரின் அரும் பெரும் முயற்சியினாலும் 1970-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதி அன்று ஒரு சமரச ஏற்பாடு ஏற்பட்டது. அதன் பின்னர் இந்த நிறுவனத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் 1970-ம் ஆண்டு மே மாதம் 2-ந் தேதி முதல் 1970-ம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதி வரையில் வேலைநிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல ஆணையாளரின் முன்னிலையில் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலும் தமிழக முதல்வர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவும் தொழிலாளர்கள் 1970-ஆம் ஆண்டு மே மாதம் 6-ம் தேதி அன்று வேலை நிறுத்தத்தை விட்டனர்.

(ii) தமிழ்நாடு மின்வாரியத்தின் பணியாளர்களுக்கும் (70,000 பணியாளர்கள்) தமிழ்நாடு மின் வாரியத்திற்கும் சம்பளங்கள், படிகள் இவற்றை மாற்றியமைப்பது குறித்துத் தகராறு எழுந்தது. தமிழக முதல்வரின் தலையீட்டின் மேல் இத்தகராறுக்கு நல்லதொரு தீர்வுகாண வழியேற்பட்டது. தமிழ்நாடு மின் வாரியத்தின் பிரதிநிதிகளும் மின்வாரியத் தொழிலாளர்களும் 1970-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் தேதியன்று 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழ் உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டனர். இதன் பலனாக பணியாளர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4 கோடி ஊதிய அதிகரிப்பு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

(iii) மலைத் தோட்டத் தொழிலாளர்கள் ஊதிய அதிகரிப்பு வேண்டுமெனக் கேட்டுத் தகராறு ஒன்றினை எழுப்பினர். முன்னரே உடன்பாடு ஒன்று செயலில் இருந்தபொழுதிலும் சூழ்நிலைகள் மாறி விட்டன என்று காரணம் காட்டி அவர்கள் ஊதிய உயர்வு கேட்டனர். 1971-ம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்பு இத் தகராறு இணக்கமான முறையில் தீர்க்கப்பட்டது.

(iv) வட ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் பீடித் தொழிலாளர்கள் பூரிப்பு ஊதியம், முழு வேலை வாய்ப்பு முதலியன கேட்டு 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதி முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தையின் பலனாக 1970-ம் ஆண்டு ஜூலை மதம் 7-ம் தேதி அன்று அவருக்கு முன்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டு வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

(v) சென்னையில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையினர் ஆதாயம் இல்லை என்ற காரணம் பற்றி, 1970- ஆண்டு மே மாதம் 22-ம் தேதி முதற்கொண்டு தங்கள் தொழிற்சாலையை மூடிவிட்டனர். இதனால் ஏறத்தாழ 1,500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். நெடுநாள் பேச்சு வார்த்தைகள் நடத்திய





பிறகு 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி அன்று என் முன்னிலையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன் பலனாக 1971-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22-ம் நாள் அன்று தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், தொழிலாளர் நலன் இவற்றிற்குரிய வசதிகளை ஏற்படுத்துதல்.

தொழிற்சாலைகளில் ஒப்புரவான சூழ்நிலைகள் ஏற்படுத்துவதன் மூலம் தொழிலாளர் நலன், உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். இக் கொள்கைக் கிணங்க 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் விதித் துறைகளையும், தொழிலாளர் பாதுகாப்பு, சுகாதாரம், நலன் குறித்த ஏனைய சட்டங்களின் விதித் துறைகளையும் கண்டிப்பாகச் செயல்படுத்துவது குறித்து அவசியமான நடவடிக்கைகளை தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் மூலமாக அரசு எடுத்து வருகிறது. மேலும் தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் குறைக்கும் நோக்குடன் பயிற்சி வகுப்புகள், திரைப்படக் காட்சிகள் மூலமாக மும்முரமான பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதற்காக பாதுகாப்பு பற்றிய வகுப்புகள் தொழிலாளர், நிர்வாகப் பணியாளர் பயனுக்காக தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்டு வருகின்றன. பரிசுகள், விருதுகள் வழங்கும் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் விபத்துக்களை அதிக அளவில் குறைத்துள்ள நிர்வாகங்களுக்குக் கேடயங்களும், ரொக்கப் பரிசுகளும் கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு குறித்தும், பாதுகாப்பு விளம்பரம் குறித்தும் சிறந்த ஆலோசனைகள் வழங்கும் தொழிலாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இது குறித்து தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகம் சிறந்த முறையில் பணியாற்றி வந்துள்ளது. 1969-ம் ஆண்டு 68 மரண விபத்துக்கள் ஏற்பட்டிருக்க 1970-ஆம் ஆண்டு இந்த விபத்துக்களின் எண்ணிக்கை 32 ஆகக் குறைந்திருப்பதே இந்த ஆய்வாளர் அலுவலகம் திறம்படச் செயல்பட்டிருப்பதற்குப் போதியதொரு சான்றாகும்.

ஆசிய உற்பத்தித் திறன் நிறுவனம்

ஆசிய உற்பத்தித் திறன் நிறுவனத்தின் உறுப்பினர் நாடுகள் 1970-ஆம் ஆண்டை " ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டாகத் " தெரிந்தெடுத்துள்ளது. அதன் குறிக்கோள் ' தர உயர்வு, நம்பகம் ' என்பதாகும். நமது மாநிலத்தில் ஆசிய உற்பத்தி ஆண்டு விழாக் குழு ஒன்று எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நல ஆணையாளர், இக் குழுவின் செயலாளர் ஆவார். ஆசிய உற்பத்தித் திறன் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இந்த விழாவின் முக்கியத்துவம் பற்றி பிரச்சாரம் செய்வதற்காகவும் இக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கென அரசு ரூ. 25,000 நிதி உதவி வழங்கியுள்ளது.

[1971 ஜூலை 22

## தொழிலாளர்களுக்கான சத்துணவுத் திட்டம்

தொழிலாளரின் சிறுர்களுக்கும் பெண்களுக்கும் புதிய வலுவையும் வலிமையையும் அளிப்பதற்காக, 'கேர்' நிறுவனத்தின் உதவியுடனும் தொழில் நிர்வாகங்களின் உதவியுடனும் தொழிலாளருக்கான சத்துணவுத் திட்டம் ஒன்று இம் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய முயற்சி இந்தியாவில் இப்பொழுது தான் முதல் முறையாக மேற்கொள்ளப்படுகிறது.

1969-ஆம் ஆண்டில் இத் திட்டம் சென்னை பக்கிங்ஹாம் கர்னுடிக் ஆலையில் நமது முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. அதன் பின்னர் இத் திட்டம் நமது மாநிலத்தில் ஏராளமான தொழில் நிறுவனங்களில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது இத் திட்டம் 78 தொழிற்சாலைகளிலும் மலைத் தோட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 29,398 பேர் நன்மை பெறுகின்றனர்.

## மே தினம் தொழிலாளர்க்கு ஊதியத்துடன்கூடிய விடுமுறை

மே தினம், தொழிலாளர்களுக்கு மிகவும் புனிதமானதொரு நாளாகும். இதனை ஊதியத்துடன் கூடிய விடுமுறையாகச் செய்யும் பொருட்டு தமிழக அரசு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசீய விடுமுறைகள், பண்டிகை நாட்கள்) சட்டத்தைத் திருத்தி, அச் சட்டத்தின் கீழுள்ள விடுமுறை நாட்களை 8-லிருந்து 9-ஆக உயர்த்தியுள்ளது. 9 நாட்களுக்கு மேலாக விடுமுறை கொடுத்து வரும் தொழிற்சாலைகளில்கூட மே தின விடுமுறைக்காக மற்றெரு விடுமுறை நாளை ஈடு செய்யக் கூடாது என்று சட்டத்தைத் திருத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

## குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயம் செய்தல்

எத்தகைய தொழிற் சங்கத்தின் கீழும் வராத (Unorganised labour) தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியங்களை நிச்சயிப்பதற்காக/மாற்றியமைப்பதற்காக அரசுக்கு ஆலோசனை வழங்க கீழ்க்காணும் தொழில்களில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

(1) சிறு துறைமுகங்களில் படகு கட்டும் தொழில் வேலை.

(2) பொன் நகைகள் தயாரிப்பு வேலை.

(3) வெட்டு மரத் தொழிலில் வேலை.

(4) பூத்தையல் வேலை.

(5) விசைத் தறித் தொழில்.

மாற்றியமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய மாநில ஆலோசனை வாரியம் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதி அன்று கூடியது. குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விவரங்கள் விவர அட்டவணையில் (i) அச்சகங்கள், (ii) சினிமாக்கள், iii) உணவகங்கள் சிற்றுண்டி விடுதிகள் (iv) கடைகள், வணிக நிறுவனங்கள்



1971 ஜூலை 22]

(v) முடி திருத்தகங்கள், (vi) கைத்தறி நெசவு ஆகியவை சேர்க்கப்பட வேண்டுமென்றும் இத் தொழில்களில் வேலைக்கமர்த்திக் கொள்ளப்பட்ட தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய விதங்கள் நிச்சயிக்கப்பட வேண்டுமென்றும் அது முடிவு செய்தது. கைத்தறி நெசவுத் தொழிலை விவர அட்டவணையில் சேர்த்திருப்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. பொது மக்களிடமிருந்து மறுப்புரைகளையும் கருத்துரைகளையும் கேட்டு அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. முடி திருத்தகங்களில் பணி புரிவோரை விவர அட்டவணையில் சேர்ப்பது குறித்த செயற் குறிப்பு ஒத்தி போடப்பட்டுள்ளது. எஞ்சிய நான்கு தொழில்களையும் விவர அட்டவணையில் சேர்ப்பது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறது.

நியாய ஊதியங்களை நிச்சயிப்பதைப் பொறுத்தவரை, பொறியியல், மின்சக்தி, சாலைப் போக்குவரத்து, தோல், சர்க்கரை, உரம் முதலிய பல்வேறு தொழில்கள் குறித்து மத்திய ஊதிய வாரியங்கள் அளித்த பரிவுரைகள் ஏற்பெற்று நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## பஞ்சாலை தொழில் நெருக்கடியும் ஆலைகளை மீண்டும் திறப்பதும்

பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக வேலையில்லாத் திண்டாட்டமும் தொழில் துறையில் அமைதியின்மையும் ஏற்பட்டது. அரசு இந் நிலைமையை கவலையுடன் கவனித்து வருகிறது. தகராறுகள் காரணமாக ஆலைகள் மூடப்பட்டிருப்பின் அத்தகராறுகளுக்கு இணக்கமான முறையில் தீர்வு காண ஏற்பாடு செய்வதன் மூலமும் சீரமைப்பு குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமும் ஆலைகளை மீண்டும் திறக்க அரசு உதவியுள்ளதுடன், பொருளாதார மந்த நிலை காரணமாக மூடப்பட்டுள்ள ஆலைகளை மீண்டும் திறக்க உதவி செய்வதற்காக அவ்வாலைகள் குறித்து நன்கு ஆய்ந்த பின்னர் வங்கிகளிடமிருந்து அவை கடன் பெறத் தேவையான உத்திரவாதத்தை அளிப்பதன் மூலமும் அரசு பஞ்சாலைகளுக்கு உதவி வருகிறது. 1951-ஆம் ஆண்டு தொழில் வளர்ச்சி முறைப்படுத்தல் சட்டத்தின்கீழ் தகுதியானவை என்று கண்டறியப்பட்ட ஆலைகளின் நிர்வாகத்தை மேற்கொண்டு அவற்றை நடத்துவதற்காகத் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. 1960 முதல் 1968 வரை மூடப்பட்ட கீழ்க்காணும் ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன :—

(1) கம்போடியா ஆலை, கோயம்புத்தூர்.

(2) திருவள்ளுவர் பஞ்சாலை, கோயம்புத்தூர்.

(3) ரங்கவிலாஸ் பருத்தி விதை எடுத்தல், நூற்பு-நெ ஆலை, கோயம்புத்தூர்.

(4) தமிழ்நாடு நூற்பு ஆலை, திருப்பூர்.

(5) கோயம்புத்தூர் முருகன் ஆலை, கோயம்புத்தூர்.

## வாழ்க்கைச் செலவுப் புள்ளி

இவ்வாண்டில், சென்னை மாநகரில் தொழிலாளர் வகுப்பினருக்கான 1960-ஆம் ஆண்டு வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் 13.2 புள்ளிகளைச் சேர்த்துக்கொண்டு அதன் மூலம் 1960-ஆம் ஆண்டுக்கான சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளியை 476 புள்ளிகளாகக் கொண்டு வந்து சரி செய்த பின்னர் இந்த வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1936-ம் ஆண்டு தமிழ்நாடு தொடர்களிலிருந் 1960-ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்து சிம்லா தொழிலாளர் நலக் கழக இயக்குநர் தொகுத்துள்ள 1960 அனைத்து இந்திய தொடர்களுக்கு 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ம் நாள் முதல் மாற்றப்படவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

## மாநில தொழிலாளர் நல நிதி.

கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின் போது தொழிலாளர் நல அமைச்சர் இந்த அவையில் அளித்த விவர அறிக்கையையொட்டி அரசு நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் தொடக்க மானியத்துடன் தொழிலாளர் நல நிதி ஒன்றை ஏற்படுத்தி இதை நிர்வகிப்பதற்காகத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. தொழிலாளர் நல அமைச்சர் இந்த வாரியத்தின் தலைவராவார். இவ் வாரியம் 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதியன்று நடந்த தனது கூட்டத்தில் பெரிய தொழில் பகுதிகளாகிய சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் மூன்றினை அமைப்பதற்கான செயற்குறிப்புக்கு இசைவளித்தது.

இந்நிதிக்கு வேலையளிப்பவர்களும், தொழிலாளர்களும் தொகை அளிக்கும் வகையில் சிறப்புச் சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து தமிழ் நாடு அரசு பரிசீலித்து வருகின்றது.

## தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்தல்

மற்ற பணிகளுடன் தொழிற் சங்கப் பணியில் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன், பம்பாயிலுள்ள தொழிற் பயிற்சி நிறுவனத்தைப் போன்று சென்னையிலும் ஒரு தொழிற் பயிற்சி நிறுவனத்தை அமைக்கவும் தமிழ் நாடு அரசு கருதியுள்ளது.

## தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்

நீலகிரி, தருமபுரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழ் நாடு முழுவதற்கும் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் தற்போது பொருந்துகிறது. இத் திட்டத்தின்கீழ் 3,90,500 குடும்பங்கள் (ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர் குடும்பங்கள்) அடங்கிய 1,562,000 பேர் பயனடைந்தனர். சென்னை மாநகர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களிலும் இடத்திற்கு ஒன்றாக எல்லா



வசதிகளும் கொண்ட தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகள் மூன்று செயல்படுகின்றன. இம் மூன்று மருத்துவ மனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை முறையே 625, 300, 202 ஆகும். இத்துடன் 97 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள் (நிலையானவையும், சுற்றி இயங்குபவையும்) இத்திட்டத்தின் கீழ்ச் செயல்படுகின்றன. இவற்றுடன் கூட, தொழில் உரிமையாளர் பயன்பாட்டு மருந்தகங்கள் மூன்றும் பகுதி நேர சிறு மருத்துவ மனைகள் இரண்டும் செயல்படுகின்றன. 1970-71-ஆம் ஆண்டில், முதல் தடவையாக தென் ஆர்க்காட்டில் வடலூரிலும், நெல்லிக்குப்பத்திலும் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி முதற்கொண்டு தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் செயல் படுத்தப்பட்டது. இது தொடர்பாக இரண்டு புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்கள்—வடலூரில் ஒன்றும் நெல்லிக்குப்பத்தில் மற்றொன்றுமாகத் தொடங்கப் பட்டுள்ளன. சென்னை அருகே மீஞ்சூரில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் தேதி அன்று ஒரு புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்கப் பட்டுள்ளது. மதுரையில் 202 படுக்கை வசதிகளுடன் ஒரு புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. மற்றொரு புதிய தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் சேலம் மாவட்டம், கோனூரில் (ராமன் நகர்) 1971-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி முதல் தொடங்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் பழனியிலும், நெய்க்காரப்பட்டியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உசிலம்பட்டியிலும் (மணப்பாறை) 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் தேதி முதல் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

புதுடில்லியிலுள்ள தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் தனது நிதி நிலையை ஆய்வு செய்ய 1969-ம் ஆண்டு மார்ச் திங்களில் குழு ஒன்றை அமைத்தது. இக் குழு செய்த பரிவுரைகளின் விளைவாக, மருத்துவ வசதியின் பகிர்ந்து கொள்ளத்தக்க செலவிற்கான மொத்த மேல்வரம்பை, தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் ஓராண்டில் ஒரு தொழிலாளருக்கு ரூ. 50 விதம் என்று வரையறுத்தது. இந்த உச்சவரம்பிற்கு மேற்பட்ட செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்கவேண்டும் என்று அது தெரிவித்தது. இந்த உச்ச வரம்பை விட்டுவிடுமாறு இந்திய அரசை வற்புறுத்தி தமிழ் நாடு அரசு முன்னாள் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் தமிழ்நாட்டிலிருந்து முகமையில் அனுப்பப்பட்ட குழு கொடுத்த மனுவின் விளைவாக தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் இந்த உச்ச வரம்பை தற்போது மாற்றியமைத்து ஒரு தொழிலாளர் குடும்பத்திற்கு வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிக்கு ரூ. 50 வீதத்திலும் விரிவு படுத்தப்பட்ட மருத்துவ வசதிக்கு ரூ. 54 என்ற வீதத்திலும், மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவது உட்பட முழு மருத்துவ வசதிக்கு ரூ. 64 என்ற வீதத்திலும் வரையறுத்துள்ளது. இதன்படி, இது காரணமாக மாநில அரசு நடப்புச் செலவுப்போக்கைக் கருதிப் பார்க்குமிடத்து ஆண்டொன்

றுக்கு ஏறக்குறைய ரூ. 124 லட்சம் கூடுதல் பொறுப்பை ஏற்க வேண்டி வரும். இது குறித்து அரசு மேற்கொண்டும் பரிசீலனை செய்து வருகிறது.

### எடைகளும் அளவைகளும்

எடைகள், அளவைகள் சட்டம் இவ்வாண்டில் தொழிலாளர் துறை ஆய்வாளர் அலுவலகத்தால் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டது. வாடகை கார் மீட்டர்கள், ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள் குழந்தைகளை எடை போடும் இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு இச் சட்டத்தை நீட்டிப்பது குறித்து முனைப்புடன் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### தொழிலாளர் நலன்குறித்த தேசியக் கழகம்

தேசிய வேலை வாய்ப்புப் பணி, நாட்டில் பல்வேறு வகையான வேலை வாய்ப்பு தேடுபவர்களும் அடங்கும்படியாக தனது நடவடிக்கைகளை நிலையாக விரிவுபடுத்திக் கொண்டது. வழக்கமாக உள்ள வேலை வாய்ப்பகங்களைத் தவிர, சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் வழிகாட்டி நிறுவனங்கள் மூன்று உள்ளன. வேலை தேடுவோருக்கு இதனால் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு வழி ஏற்படுவதுடன், தொழில்பற்றிய ஆலோசனை. வேலைவாய்ப்பு பற்றிய ஆலோசனை, தொழில் பற்றிய தகவல் ஆகியவையும் உடல் ஊனமுற்றவர்களுக்கான தனிப்பட்ட வாய்ப்பகம் ஒன்றும் உயர்தகுதி பெற்றோருக்கான தனிப்பட்ட வேலைவாய்ப்பகம் ஒன்றும் செயல் பட்டு வருகின்றன. பர்மா, இலங்கை நாடுகளிலிருந்து திரும்பி வரும் அகதிகளின் மறுவாழ்வு குறித்தும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக நியமிக்கப்பட்ட வேலை வாய்ப்புத் தொடர்பு அலுவலர் இந்த அகதிகள் ஒழுங்காகவும், விரைவாகவும் மறுவாழ்வு பெற வகை செய்வதற்காக தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் உள்ள தொழிலதிபர்களுடனும் இதில் அக்கறை கொண்டுள்ள பிற நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளார். அரிசனங்கள்/பழங்குடி மக்கள் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு நல்ல வகையில் ஆலோசனை நல்குவதற்காக இந்திய அரசு சென்னையில் பயிற்சி-ஆலோசனை நிலையம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. உடல் ஊனமுற்றோரின் சிக்கல்களை கவனிப்பதெற்கென்றே மாநில வாரியம் ஒன்றை சென்னையில் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. உடல் ஊன முற்றோர்களை அதிக அளவில் வேலைக்கு எடுத்துக்கொண்டுள்ள தொழிலதிபர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களில் மிகவும் திறமையுடைய பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கும் திட்டம் ஒன்றையும் அரசு கொண்டுவந்துள்ளது.

தொழிலாளர் பிரதிநிதிகளும் நிர்வாகங்களின் பிரதிநிதிகளும் எனது பணியில் எனக்கு ஒத்துழைப்பை நல்கித் தங்களது நல்லெண்ணத்தைத் தெரிவித்துக்கொண்டமைக்காக அவர்களுக்கு





எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். இம் மாநிலத்தில் தொழில்துறையில் அமைதி நிலவி வருவதற்கு இவர் களின் ஒத்துழைப்பும் நல்லெண்ணமுமே காரணமாகும் என்று சொன்னால் அது மிகையாகாது. தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலன் ஆகிய இரண்டுமே அரசு குறிக்கோள்களாகும் என்பதை நான் ஈண்டு மீண்டும் வலியுறுத்த விழைகிறேன்.

"வளர்க தொழில்—வாழ்க தொழிலாளர்"

என்று கூறுவதன் வாயிலாக உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று தெரிவித்துக்கொள்வதுடன் இக்கோரிக்கையை ஏற்குமாறு இப்பேரவையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1971 ஜூலை 22

## இணைப்பு 2.

[50-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

### தமிழ் நாட்டில் தொழிலாளர்கள், 1970-71 ஆய்வு.

இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்படும் தொழிலாளர் நலச் சட்டங்கள் வருமாறு :—

I. பணியாளரமைப்புச் சட்டம்.

II. ஊதியங்கள் பற்றிய சட்டம்.

III. தொழில் தகராறுகள் சட்டம்.

IV. சமூகப் பாதுகாப்புச் சட்டம்.

V. தொழிலாளர் நலச் சட்டம்.

இவைகளுடன் எடைகள்-அளவைகள் சட்டத்தைச் செயல் படுத்துவது பற்றியும் வேலைவாய்ப்புப் பணி குறித்தும் தனித்தனி அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### I. பணியாளரமைப்புச் சட்டம்.

1. **தொழிற்சாலைகள் சட்டம், 1948.**—ஆண்டுத் தொடக்கத்தில் பட்டியலில் 6,218 தொழிற்சாலைகள் இருந்ததற்கு மாறாக, 415 தொழிற்சாலைகள் சேர்க்கப்பட்டன; 268 தொழிற்சாலைகள் பட்டியலிருந்து நீக்கப்பட்டன. ஆக, ஆண்டு முடிவில் இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6,365. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | பதிவேட்டிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. 1969. | 1970. |
|---|---|---|
| பிரிவு 2 (m) (i) .. .. .. .. | 5,811 | 5,968 |
| பிரிவு 2 (m) (ii) .. .. .. .. | 407 | 397 |
| மொத்தம் .. | 6,218 | 6,365 |
| வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை. | 3,92,558 | 4,22,640 |

1969ஆம் ஆண்டில் உரிமக் கட்டணமாக ரூ. 16,83,261.04 வசூலிக்கப்பட்டிருக்கையில், 1970ஆம் ஆண்டில் ரூ. 17,42,254.70 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துப் பணியாளர்கள் 1969ஆம் ஆண்டில் 10,527 ஆய்வுகள் நடத்தியதற்கு மாறாக, 1970ஆம் ஆண்டில் 10,443 முறையான ஆய்வுகள் நடத்தியுள்ளனர். இவை தவிர, பதிவு செய்யப்படாத நிறுவனங்களில் இவ்வாண்டில்



1971 ஜூலை 22]

ஞாயிற்றுக் கிழமைகளில் 668 தொழிற்சாலைகளில் ஆய்வு செய்யப் பட்டன. 368 முறை திடீர் ஆய்வுகளும், 1,758 முறை சிறப்பு ஆய்வுகளும், 262 முறை இரவு நேர ஆய்வுகளும் செய்யப்பட்டன. 565 முறை பார்வையிடப்பட்டன. தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர்கள் செய்த சோதனை ஆய்வுகள் 1,843 ஆகும்.

தொழிற்சாலை சட்டம், தொடர்பான சட்டங்கள், இவற்றின் விதித் துறைகளை மீறியதற்காக தொழிற்சாலைகள் நிர்வாகங்கள் மீது 1969-ஆம் ஆண்டில் 1,832 வழக்குகள் தொடரப்பட்டிருக் கையில், அறிக்கை ஆண்டில் 909 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

1969, 1970ஆம் ஆண்டுகளில் நடந்துள்ள விபத்துக்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | மரணத்தில் முடியாத விபத்துக்கள். | மரண விபத்துக்கள். |
|---|---|---|
| 1969 .. .. .. .. | 25,896 | 68 |
| 1970 .. .. .. .. | 29,721 | 32 |

விபத்துக்கள் நிகழ்வதைக் குறைக்கும் பொருட்டு, 21 நாட் களுக்கு மேல் தொழிலாளர் பணி செய்ய இயலாமல் போன கடும் விபத்துக்கள் பற்றி ஆய்வாளர்கள் புலன் விசாரணை செய் துள்ளனர். இத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை கூறப் பட்டுள்ளது. 300 தொழில் நிறுவனங்கள் நிர்வாகப் பிரதிநிதி களையும், தொழிலாளரின் பிரதிநிதிகளையும் கொண்டு, அந்த அந்தத் தொழிற்சாலை பாதுகாப்புக் குழுக்களை அமைத்துள்ளன. தொழி லாளர் நலனைப் பாதுகாப்பதற்காக இக் குழுக்கள் செவ்வையாகச் செயல்பட்டுள்ளன.

இயந்திரங்களுக்கு வேலிபோட்டு, காத்து வருவது குறித்து ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆழ்ந்த நாட்டம் செலுத்தி வருகின்றனர். வேலிகள் போட்டுப் பேணிவருவதற்கும், காவல் வைப்பதற்கும் தொழிற்சாலை நிர்வாகிகளுக்கு ஆய்வாளர்கள் போதிய ஆலோசனைகளும், அறிவுரைகளும் கொடுத்துள்ளனர். சட்டப்படிக்கான விதித்துறைகளுக்கு இணங்கி நடக்குமாறு நிர்வாகங்களுக்கு அவசியமான அறிவுரைகள் கொடுக்கப் பட்டுள்ளன.

தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, விபத்துத் தடுப்பு உத்திகளைத் தொழிலா ளர்கள் தெரிந்து கொள்ளச் செய்யவேண்டியதன் தேவையை யொட்டி, எல்லா மாவட்டங்களிலும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்பு கள் நடத்தப்படுகின்றன. நிதி ஆண்டில், ஆய்வாளர் அலுவலகம், சேலம், உதகமண்டலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தியது.

[1971 ஜூலை 22

ரசாயனத் தொழிற்சாலையில் ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றிய கருத்தரங்கு ஒன்று இந்த ஆண்டில் மேட்டூரில் நடத்தப்பட்டது. இது தமிழ்நாடு தொழிலாளர்த் துறை அமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு அறிவுரைகள் புகட்டி, தொழிற்சாலையில் விபத்துகள் ஏற்படுவதைக் குறைக்கும் பொருட்டு, பாதுகாப்புச் சுவரொட்டிகள், தொழிலாளர்களுக்குக் காட்டி வைப்பதற்காக அச்சிடப்பெற்று தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

1960-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற தொழிலாளர்த்துறை அமைச்சர்களது மாநாட்டுப் பரிந்துரைகளையொட்டி, மாநிலப் பாதுகாப்புப் பரிசுத் திட்டம், "உழைப்பு வீரர்" பரிசுத் திட்டம் என்கிற இரு திட்டங்களுக்குத் தமிழ் நாடு அரசு ஒப்புதல் வழங்கியது.

2. **மாநிலப் பாதுகாப்புப் பரிசுத் திட்டம்.**—தொழிற்சாலையில் விபத்துத் தடுப்பு வேலையில் நிர்வாகம், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் போதிய அக்கறை ஏற்படுத்தி அதைத் தொடர்ந்திருக்கச் செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி, துணிகள், உலோகங்கள், சிமிட்டி, காகிதம், ரசாயனங்கள், பொறியியல், போக்குவரத்து போன்ற 10 பெரிய தொழில் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் (a) விபத்துக்கள் அடிக்கடி நேர்வது மிகப் பெரிய அளவில் குறைந்துள்ளது. (b) விபத்துக்கள் மிகக் குறைவாக ஏற்படுவது, (c) விபத்துக்கள் இல்லாத மிக அதிகக் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில், தொழிற்சாலைகள் எய்தியுள்ள சிறந்த பாதுகாப்புச் சாதனைகளை அறிந்து பாராட்டிப் பரிசளிப்பது இத் திட்டத்தின் பணியாகும். ஒரு காலண்டர் ஆண்டில் 5 லட்சம் உழைப்பு மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்த தொழிற்சாலைகள் இத் திட்டத்தில் கலந்து கொள்ளலாம். இத் திட்டம் இரு பகுதிகளில் செயல்படுகிறது. (1) ஓராண்டில் 5 லட்ச உழைப்பு மணி நேரத்திற்கும் 10 லட்ச உழைப்பு மணி நேரத்திற்கும் இடையே வேலை செய்துள்ள தொழிற்சாலைகள், (2) 10 லட்சத்திற்கும் அதற்கும் மேற்பட்ட உழைப்பு மணி நேரங்களுக்கு வேலை செய்த தொழிற்சாலைகள், தொடர்கோப்பைகள், சான்றிதழ்கள் வடிவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

3. **"உழைப்பு வீரர்" பரிசுகள் திட்டம்.**—பொதுவாகத் தொழில் திறமையை வளர்ப்பதற்குத் தனிப்பட்ட தொழிலாளர்கள் ஆற்றிய பணிக்குச் சிறப்பு ஊக்கம் அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். "மேம்பாட்டுக் கருத்து கூறும் திட்டம்" செயலில் உள்ளதும்; ஏற்கெனவே தொழிற்சாலை அளவில் பரிசு பெறத் தகுதியுள்ளதுமான தொழிற்சாலைகளில், சிறந்த பாதுகாப்பு, உயர் உற்பத்தித் திறன், தரமேம்பாடு, குறைந்த உற்பத்திச் செலவு, இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உள்நாட்டுப் பொருள்களைப் பயன்படுத்துவது ஆகியவை குறித்துத் தொழிலாளரிடமிருந்து வரக்கூடிய சிறந்த கருத்துக்கள், ஆலோசனைகளுக்கு அரசு நிலையில் பரிசு வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.



1971 ஜூலை 22]

"A", "B", "C" ஆகிய மூன்று வகைகளுக்கு முறையே ரூ. 500, ரூ. 250, ரூ. 100 ரொக்கப் பரிசுகள் வடிவில் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

மேற்சொன்ன இரு திட்டங்களின்கீழ், 1966, 1967, 1968 ஆண்டுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தொடர் கோப்பைகள், ரொக்கப் பரிசுகள், சான்றிதழ்கள் இந்த நிதி ஆண்டில் வழங்கப்பட்டன.

மாநில பாதுகாப்புப் பரிசுத் திட்டம்.

| ஆண்டு. | வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | பரிசு பெற்றவர்களின எண்ணிக்கை. | ரொக்கப் பரிசுகள் குறித்துச் செலவிட்ட தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1966 .. .. | 79 | 42 | 13,000 |
| 1967 .. .. | 68 | 41 | 13,000 |
| 1968 .. .. | 130 | 60 | 19,500 |

"ஷ்ரம் வீர்" மாநிலப் பரிசுத்திட்டம்.

| ஆண்டு. | வரப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | பரிசு பெற்றவர்களின் எண்ணிக்கை. | ரொக்கப் பரிசுகள் குறித்துச் செலவிட்ட தொகை. |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1966 .. .. | 18 | 17 | 3,050 |
| 1967 .. .. | 8 | 8 | 1,500 |
| 1968 .. .. | 24 | 14 | 3,050 |

4. உற்பத்தித் திறம்.—இந்தப் பிரிவைச் சேர்ந்த திரைப்படக் காப்பகம், உற்பத்தித்திறம் பற்றிய திரைப் படங்களைக் கொண்டதாகும். திரைப்படங்களைப் போட்டுக் காட்டுவதற்கு, வேண்டுகோள் விடுப்பதன்பேரில், உற்பத்தி குறித்த உள்ளூர் மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் முதலியவற்றிற்குத் திரைப்படங்கள் கட்டணமின்றிக் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய திரைப்படங்கள் கல்வி அறிவூட்டவல்லவை என்று எல்லோராலும் நன்கு பாராட்டப்படுகின்றன. இத்தகைய திரைப்படங்கள் மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன. உற்பத்தித் திறம் பற்றி முன்னாள் மாவட்ட விளம்பர அதிகாரிகள் திரையிட்டு வந்த, திரைப்படங்களைக் கொடுத்தனுப்புமாறு செய்தி-விளம்பரத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். உற்பத்திப் பொருட்கள் பற்றி போதிய புத்தகங்கள் நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. நிதிகள் கிடைக்கும்போதெல்லாம் புதிய புத்தகங்கள் வாங்கிச் சேர்க்கப்படுகின்றன.

உள்ளூர் உற்பத்தி மன்றங்களுக்கு அரசு பொது மானியங்கள் கொடுப்பது இவ்வாண்டில் (1970-71) முடிந்துவிடும். பல்வேறு மன்றங்கள் செய்துகொண்ட முறையீடுகளின்பேரிலும், உற்பத்தி இயக்கம், முழு மூச்சுடன் தொடங்கவில்லை என்பதைக் கருத்தில்

கொண்டும், மன்றங்கள் தங்கள் நடவடிக்கைகள் நிறைவேற்றும் வகையில் மேலும் 5 ஆண்டுக் காலத்திற்கு ஒவ்வொரு மன்றத்திற்கும் ரூ. 5,000 வீதம் ஒருபடித்தான மானியம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, ஆசிய உற்பத்தி அமைப்பைச் சேர்ந்த பல நாடுகள் 1970-ஆம் ஆண்டை ஆசிய உற்பத்தி ஆண்டாகக் கொண்டாடின. 1970-ஆம் ஆண்டு உற்பத்தி விழாவைக் கொண்டாடும் நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்தி நடத்துவதற்காக, மாநில அரசு, தொழிலாளர் நல அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்களைத் தலைவராகவும், தொழிலாளர் நல ஆணையாளர் திரு. எம். எம். ராசேந்திரன் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு மாநில ஆசிய உற்பத்தி ஆண்டுக் குழு ஒன்றை மாநில அரசு அமைத்தது. நிதி சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனித்துக்கொள்ள ஒரு குழுவும், திட்ட நிகழ்ச்சிகளைத் தயாரிக்க மற்றொரு குழுவும் ஆக இரு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இயலூர்திப் பொருட்காட்சிகள் (Mobile Exhibition) கருத்தரங்குகள், கட்டுரை, பேச்சு போட்டிகள் நடத்தப்படும். "தர நம்பிக்கை" என்னும் பொருளை மையமாகக் கொண்ட திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்புடைய தொழிற்சாலைகள் (உற்பத்தி) மேற்பார்வைப் பொறியாளரும் தொழிற்சாலைக் கட்டிடங்களின் அமைப்பு வரைபடத்தை, யந்திரங்கள் அமைப்பு, பொருள்களைக் கையாளுதல் முதலியவற்றிற்குச் சிறப்பு கவனஞ் செலுத்தி ஆய்ந்து பார்ப்பதற்குத் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு உதவிபுரிகிறார்.

**5. தமிழ் நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டம், 1947.**—இச் சட்டத்தின் விதித்துறைகள் இம் மாநிலத்தில் இவ்வாண்டில் தொடர்ந்து செயலில் இருந்து வருகின்றன. இவை வேறு எந்தப் புதிய பகுதிக்கும் நீட்டிக்கப்படவில்லை.

1969-லிருந்து 1971 வரை மூன்று ஆண்டுக் காலத் தொடக்கத்தில் இச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட கடைகள்-நிறுவனங்கள் எண்ணிக்கை, அவற்றில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டுத் தொடக்கத்தில். | இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளரின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1969 .. .. | 2,16,538 | 1,84,710 |
| 1970 .. .. | 2,09,260 | 1,97,695 |
| 1971 .. .. | 2,11,190 | 2,15,155 |





இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்கள், 1969-ல், 336,663 ஆய்வுகள் நடத்தியதற்கு மாறாக, 1970-ல் 416,241 ஆய்வுகள் நடத்தியுள்ளனர்.

1969-ம் ஆண்டில் 894 வழக்குகள் தொடரப்பட்டிருக்க, இவ்வாண்டில் 1,103 வழக்குகள் தொடரப்பட்டன. இதில் 986 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன. 13 வழக்குகள் விடுதலையில் முடிந்தன. (1969-ல் ரூ. 14,467 வசூலிக்கப்பட்டிருப்பதற்கு மாறாக) 1970-ல் அபராதத் தொகையாக ரூ. 20,552 வசூலிக்கப்பட்டது. 1970-ஆம் ஆண்டில் வரப்பெற்று, மேற்படி சட்டத்தின் 4-வது பிரிவின்படி தொழிலாளர் நலத் துறைத் துணை ஆணையாளர்களால் முடிவு எடுக்கப்பட்ட மேல் முறையீடுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1970ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் நாள் வரை முடிவாகாமல் உள்ள மேல் முறையீடுகள். | 214 |
| இவ்வாண்டில் வரப்பெற்ற மேல் முறையீடுகள். | 359 |
| மொத்தம் .. | 573 |
| முடிவு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் .. .. | 403 |
| இவ்வாண்டு முடிவில் முடிவு செய்யப்படாமலுள்ள மேல் முறையீடுகள். | 170 |

இவ் வாண்டுத் தொடக்கத்தில் மேற்படி சட்டத்தின் 51-வது பிரிவின்படி பதினொரு விண்ணப்பங்கள் முடிவாகாமல் இருந்தன, இவ்வாண்டில் ஒரு விண்ணப்பம் வரப்பெற்றது. இவ்வாண்டில் பத்து விண்ணப்பங்கள் மீது முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாண்டில் முடிவில் இரு விண்ணப்பங்கள் முடிவு பெறா நிலையில் இருந்தன.

1970-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாளிலிருந்து, டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையுள்ள காலத்தில், நிலையான விலக்கு எதையும் அரசு அளிக்கவில்லை. சந்தைகள், திருவிழாக்கள் போன்றவை நீங்கலாக 9 நேர்வுகளில் அரசு தற்காலிக விதி விலக்கு அளித்துள்ளது.

(பொருட்காட்சி. சர்க்கஸ் உட்பட) சந்தைகள், திருவிழாக்கள் குறித்துப் பத்து நேர்வுகளில் இச் சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுவதைச் சிறிது காலத்திற்குத் தள்ளிவைத்து தொழிலாளர் நல ஆணையாளர் ஆணையிட்டார். 209 நேர்வுகளில் தொழிலாளர் துறைத் துணை ஆணையாளர்கள் தற்காலிக விலக்குகள் அளித்துள்ளனர்.

பல்வேறு தொழிலாளர் சங்கங்களிலிருந்து கிடைத்த முறையீட்டின் பேரில், தொழிலதிபர் நீங்கலாக மூன்று அல்லது மூன்றுக்கும் குறைந்த தொழிலாளர் வேலைக்கமர்ந்துள்ள கடை

களுக்கும் நிறுவனங்களுக்கும், தமிழ் நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் பெரும்பாலான முக்கிய விதித்துறைகளினின்றும் விலக்களிப்பது பற்றிய பிரச்சினையை அரசு மீண்டும் பரிசீலித்தது. கவனமாகப் பரிசீலித்துப் பார்த்த பிறகு அரசு, விதி விலக்கு மீண்டும் அளிக்கப்படவேண்டிய அவசியமில்லை என்று முடிவு செய்தது. மேலும், எல்லா நிறுவனங்களிலும் இச் சட்டத்தை முழுவதும் செயல்படுத்துமாறு ஆய்வாளர் அலுவலகத்திற்கு அறிவுரை கூறப்பட்டது. ஆயினும் சொந்தக்காரர்களாலும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாலும் நடத்தப்படுகின்ற கடைகளையும், நிறுவனங்களையும் மட்டும், 43, 47-வது பிரிவுகளைத் தவிர தமிழ் நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தின் ஏனைய பிரிவுகளினின்றும் அரசு விலக்களித்தது.

6. தமிழ் நாடு 'விருந்தோம்பல் கலை" (catering) நிறுவனங்கள் சட்டம், 1958.—1970-ஆம் ஆண்டில் இச் சட்டம், விதிகள் இவற்றின் விதித்துறைகள் இம் மாநிலத்தில் புதிய பகுதி எதற்கும் நீட்டிக்கப்படவில்லை.

நகர்ப் பகுதிகளில் உணவுப் படியை நாளொன்றுக்கு ரூ. 1.50 லிருந்து ரூ. 2.75 வரையிலும், கிராமப் பகுதிகளில் ரூ. 1.25-லிருந்து ரூ. 2.50 வரையிலும் உயர்த்தித் தமிழ் நாடு "விருந்தோம்பல் கலை" தொழில் நிறுவனங்கள் விதிகளைச் சேர்ந்த 21-வது விதிக்கு வரைவுத் திருத்தம் ஒன்றை அரசு பிறப்பித்தது. பொதுமக்களிடமிருந்து மறுப்புரைகள், கருத்துரைகள் பெற்று கருதிப் பார்த்த பிறகு, இந்தத் திருத்தம் உறுதி செய்யப்பட்டது. ஓட்டல் தொழில் சிறப்பு அதிகாரியின் பரிந்துரைகளின் பேரில் உணவுப் படி உயர்த்தப்பட்டது.

1971-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் நாள் வரை இச்சட்டத்தின்கீழ் 19,776 நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டன. இதில் 9,585 நிறுவனங்களில் வெளித் தொழிலாளர்களே கிடையாது. (1970-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் வரை 19,720 நிறுவனங்கள் 68,608 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ளதற்கு மாறாக) இந் நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,069 ஆக இருந்தது. 1969-ஆம் ஆண்டில் 3,102 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கையில் இவ்வாண்டில் 9,399 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. (1969-ஆம் ஆண்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 1,22,592.50 வசூலிக்கப்பட்டதற்கு மாறாக) 1970-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாளிலிருந்து 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் முடியும் கால அளவில் பதிவு கட்டணமாக ரூ. 1,39,452 வசூலிக்கப்பட்டது.

ஆய்வாளர்கள் ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு வகையான விதி மீறல்களுக்காக, (1969ஆம் ஆண்டில் 1,004 வழக்குகள் தொடரப்பட்டதுடன் ஒப்பிடுகையில்) 1970-ல் 928 வழக்குகள் தொடரப்பட்டன. இவற்றில் 883 தண்டனையில் முடிவடைந்தன.



1969-ஆம் ஆண்டில் அபராதத் தொகையாக ரூ. 16,802.00 வசூலிக்கப்பட்டிருக்கையில், அறிக்கை ஆண்டில் ரூ. 19,867 வசூலிக்கப்பட்டது.

வேலை நீக்கம் அல்லது வேலையினின்று தள்ளிவைப்பு செய்ததற்கு எதிராக மேற்படி சட்டத்தின் 19 (2) பிரிவின் படிச் செய்து கொண்ட 58 மேல் முறையீடுகள், 1970-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தொழிலாளர் நல அதிகாரிகள் முன்பு முடிவுறாமல் இருந்தன. இவ்வாண்டில் 182 மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. கடந்த ஆண்டில் 255 மேல் முறையீடுகள் மீது முடிவு எடுக்கப்பட்டதற்கு மாறாக, இவ்வாண்டில் 167 மேல் முறையீடுகள் மீது தொழிலாளர் நல அதிகாரிகள் முடிவு எடுத்துள்ளார்கள். குன்னூரில் உள்ள "ப்ருக்லாண்ட்ஸ் மிசினரி ஹோம்", கோத்தகிரியில் உள்ள "கிவின்ஸ் ஹில் மிஷனரி ஹோம்" ஆகிய நிறுவனங்களுக்கு இவ்வாண்டில் இவ்வகை ஈராண்டுகளுக்கு இச் சட்டத்தின் 19, 20, 23 முதல் 25, 27 முதல் 30 வரையிலான பிரிவுகள் நீங்கலாக ஏனைய பிரிவுகளின் விதித்துறைகளினின்றும் விதிவிலக்கு அளித்துள்ளது. மேற்படி சட்டத்தின் 12-வது பிரிவின் விதித்துறைகளினின்றும் மேற்படி விதிகளைச் சேர்ந்த 18-வது, 19-வது விதிகளினின்றும் சங்கர நயினார் கோயில் கூட்டுறவு பால் வழங்கு சங்கம் நடத்துகின்ற காப்பிக் கடைகளுக்கும் குளிர்பானக் கடைகளுக்கும் இவ்வரசு விதிவிலக்கு அளித்தது.

இவ்வறிக்கை ஆண்டில் தொழிலாளர் நல ஆணையாளர் முடிவு எடுக்க வேண்டி, தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு விருந்தோம்பல் கலைத் தொழில் நிறுவனங்கள் சட்டத்தின் 27-வது பிரிவின்படி ஒரே ஒரு விண்ணப்பம் வரப் பெற்றது. இவ் விண்ணப்பம் இன்னும் முடிவு பெறு நிலையில் உள்ளது.

7. மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951.—இவ்வாண்டு தொடக்கத்தில், 85,267 தொழிலாளர்களை வேலையிலமர்த்திக் கொண்டு, இச் சட்டத்தின்கீழ் 309 மலைத் தோட்டங்கள் இருந்தன. இவ்வாண்டில் 12 புதிய மலைத் தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. 14 மலைத் தோட்டங்கள் பதிவிலிருந்து நீக்கப்பட்டன. இவ்வாண்டு முடிவில் 307 மலைத் தோட்டங்கள் இருந்தன.

இவ்வண்டில் மலைத் தோட்ட ஆய்வாளர்கள், 167 சிறப்பு, ஞாயிறு, திடீர் வருகைகள் தவிர, 596 முறை, முறையான பார்வையிட்டனர். இவ்வாண்டில் இவர்கள் பதிவு செய்யப்படாத 24 மலைத் தோட்டங்களுக்கும் சென்று பார்வையிட்டனர்.

சென்னை, மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளர் சம்மதம் பெற்று இவ்வாண்டில் தனிப்பட்ட தயாரிப்பாளர்கள் மூலமாக மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கம்பளிகளும், படுக்கை ஜமுக்காளங்களும் வழங்கப்பட்டன.

தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் 1951-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 10-வது பிரிவின் படி மலைத் தோட்ட அதிபர்கள் இலவச மருத்துவ வசதிகள்

செய்து கொடுக்க வேண்டியது கடமையாகும். மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதை முன்னிட்டு, மலைத் தோட்டங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகைத் தோட்டங்களும் ஏற்பாடு செய்து வைக்க வேண்டிய மருத்துவ வசதிகளின் தரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட மலைத் தோட்டங்கள் I-வது வகையின்கீழ் வரும். அவர்கள் சொந்தமாக மலைத் தோட்டப் பகுதியிலேயே மருத்துவ மனை வைத்து வருவதற்கான ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். 200 தொழிலாளர்களுக்கு மேற்பட்டு, ஆனால் 1,000-க்கு மேற்படாத தொழிலாளர்களைக் கொண்ட மலைத் தோட்டங்கள் II-வது வகையைச் சாரும். ஆனால் இவை இணைந்த மருத்துவ மனைக்கும் தனி மருந்தகத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். 200 தொழிலாளர்களையும் அதற்கும் குறைந்த தொழிலாளர்களையும் கொண்ட மலைத் தோட்டங்கள் III வது வகையின்கீழ் வரும். அவை, தனித்தனியாகவோ, தொகுதிகளாகவோ, அவசியமான சாதனங்களுடனும் மருத்துவர்கள் வருகைக்கான ஏற்பாட்டுடனும் மருந்தகங்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். 1951-ம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் 26-வது விதி, 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகள் ஆகியவற்றுடன் 10-வது பிரிவைச் சேர்த்து வாசித்தபடி மருத்துவ வசதிகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான திட்டங்களை அரசுக்குத் தொழிலதிபர்கள் அனுப்பவேண்டும். இதுவரை 257 மலைத் தோட்டங்களைப் பொறுத்த மருத்துவ திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், மருத்துவத் திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்ட 4 மலைத் தோட்டங்கள் இவ்வாண்டில் மலைத் தோட்டப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன.

தமிழ்நாடு மலைத் தோட்டத் தொழிலாளர் விதிகளைச் சேர்ந்த 22-வது விதி தொகுதி மருத்துவ மனைகள் ஏற்படுத்துவதற்கு வகை செய்கிறது. மலைத்தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின்படி, தொகுதி மருத்துவ மனைகள் அமைப்பதற்கு 1970 சூன் 30-ம் நாள் வரை கால நீட்டிப்பு அனுமதித்துள்ளது. தொகுதி மருத்துவ மனைகள் ஏற்படுத்துவதற்கு பெருவாரியான செலவு உண்டாகும் என்று மலைத் தோட்டத் தொழிலதிபர்கள் கருத்து தெரிவித்து தொகுதி மருத்துவ மனைகள் அமைப்பதற்கு 1970 சூன் திங்கள் 30-ம் நாளிலிருந்து மேற்கொண்டும் கால நீட்டிப்பு அனுமதிக்குமாறு அரசினை வேண்டியுள்ளனர். 1971 சூன் திங்கள் 30-ம் நாள் வரை மேலும் ஓராண்டுக்கால அளவுக்கு அரசு கால வரம்பை நீட்டித்துள்ளது.

1970-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு முடிவுறாமல் இருந்தது. இவ்வாண்டில் 35 வழக்குகள் தொடரப்பட்டன. இவ்வாண்டில் 27 வழக்குகள் குறித்து முடிவு எடுக்கப்பட்டது. இதில் 25 தண்டனையிலும், 2 விடுதலையிலும் முடிந்தன. 1970-ஆம் ஆண்டு முடிவில் நீதி மன்றத்தில் 9 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன.



1970-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் உயர் நீதி மன்றத்தில், கீழ் நீதி மன்றத் தீர்ப்புக்கு எதிராக இரண்டு மேல் முறையீடுகள் முடிவுறாமல் இருந்தன. சம்பந்தப்பட்ட வழக்கில் விடுதலை செய்யப்பட்டதற்கு எதிராக இவ்வாண்டில் மேல் முறையீடு எதுவும் அரசுத் தரப்பு வழக்குரைஞர் கருத்தை முன்னிட்டு செய்து கொள்ளப்படவில்லை.

1967 செப்டம்பர் திங்கள் 1-ம் நாளிலிருந்து பெண் தொழிலாளர்களுக்குப் பேறு கால உதவி 1961-ஆம் ஆண்டு பேறு கால உதவிச் சட்டத்தின் விதித் துறைகளால் முறைப்படுத்தப்படுகிறது. 1961-ம் ஆண்டு பேறு கால உதவிச் சட்டத்தின்படி மாநில அரசு விதிகள் தயாரித்துள்ளது. இச்சட்டத்தின் விதித்துறைகளும், விதிகளும் இப்போது நடை முறையில் உள்ளன.

1970-ஆம் ஆண்டில் மூன்று மலைத்தோட்டத் தொழிலதிபர்களிடமிருந்து வரப்பெற்ற வீடுகட்டும் திட்டங்களுக்கு மலைத்தோட்டத் தலைமை ஆய்வாளர் ஏற்பளித்தார்.

மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனைக் குழு, அரசுத் தொழிலாளர் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு 1970 ஏப்ரல் திங்கள் 27-ம் நாள் அன்று திருநெல்வேலி மாஞ்சோலையில் கூடியது. இங்கு பின்வருவன குறித்து விவாதம் நடைபெற்றது. வீட்டு வசதி கொடுக்கப்படாத உறைவிடத் தொழிலாளர்களுக்கு வாடகைப்படி கொடுத்தல், மலைத் தோட்டப் பள்ளி ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல், தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் அக்கம்பக்கத்திலும் மின் வசதி அளித்தல், குடி நீர் வசதிகள், தொழிலாளர் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல், சுண்ணாம்பு அடித்தல், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்தல், கழிப்பிடங்களுக்கு ஏற்பாடு செய்தல், குடியிருப்புகளுக்கு காற்றோட்ட வசதி, தொழிலாளர் குடியிருப்புகளுக்குத் துப்புரவு வச்தி, பொழுது போக்கு அறைகள் கட்டுதல், மலைத் தோட்டங்களில் குளியல் அறைகள் கட்டுதல், மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதிக்குரிய தரங்களைக் குறிப்பிடுதல் எஸ்டேட்டுகளில் வேலை செய்யும் வலவர்கள், தச்சர்கள், "வார்டு" சிறுவர்கள் முதலிய கைவினைத் தொழிலாளர்களுக்குக் கூடுதல் இடவசதி அளித்தல், குடும்பத்திலிருந்து ஒருவர் வேலையை விட்டுச் சென்ற நேர்வுகளிலும் இடவசதி அளித்தல்.

பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966 (தமிழ் நாடு பீடித் தொழில் வளவுகள் வேலை நிபந்தனைகளை முறைப்படுத்தல்) சட்டம், 1958.—1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தில் 3-வது பிரிவைத் தவிர அச்சட்டத்தின் ஏனைய விதித்துறைகள் யாவும் 1968 சூலை திங்கள் 1-ம் நாள் முதல் இம்மாநிலத்தில் செயலுக்கு வந்தன. அச்சட்டத்தின் 3-வது பிரிவு மட்டும் 1968 செப்டம்பர் திங்கள் 1-ம் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது.

இச்சட்டம் செயல் முறைக்கு வந்ததன் பிறகு, மாநிலச் சட்டம் அதாவது தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு பீடித் தொழில் வளவுகள் (வேலை நிலைமைகளை முறைப்படுத்தல்) சட்டம் செயற்படுத்தப்படுவதில்லை.

இச்சட்டத்தின் கீழ் 1969-70-லிருந்து 1970-71 வரையுள்ள காலத்தில் உரிமத்திற்கு விண்ணப்பம் செய்து கொண்ட பீடித் தொழில் வளவுகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | 1969-70. | 1970-71. |
|---|---|---|
| உரிமங்களுக்காக விண்ணப்பித்துக் கொண்ட பீடித் தொழில் வளவுகள். | 1,139 | 909 |
| வேலையில் சேர்த்துக் கொள்ள உரிமம் கேட்டுள்ள தொழிலாளர்கள். | 5,542 | 1,183 |

அதிக அளவில் தொழிலாளரை வேலைக்கமர்த்தியுள்ள பெரிய நிறுவனங்கள், சட்டம் செயல் படுத்துவதை நிறுத்தி வைப்பதற்கான அனுமதி பெற்று, 1970-71-ல் உரிமத்திற்கு விண்ணபித்துக் கொள்ளாமல் இருப்பது காரணமாக, உரிமம் பெற்ற தொழில் வளவுகளில் அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர் எண்ணிக்கை சரிந்துள்ளது.

எடைகள்-அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின்கீழ் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மேற்படி சட்டத்தின்படி, பொருத்தமான அதிகாரியின் அலுவல்களை நிறைவேற்றித் தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவின்படி மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரிகளாக தொழிலாளர் துறைத்துணை ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் துணை ஆணையாளர்கள், தொழிலாளர்த்துறை ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் மேற்சொன்ன சட்டத்தின்படி அவரவர்க்குரிய அதிகார வரம்புக்குள் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் துறைத் (ஆய்வுகள்) துணை ஆணையாளர், மேற்படி சட்டத்தின் 6 (2) பிரிவின் படித் தலைமை ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

1936-ஆம் ஆண்டு ஊதியங்கள் கொடுத்தல் சட்டத்தின் விதித்துறைகளும் (மத்திய சட்டம் IV/1936) அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், பீடி, சுருட்டுத் தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்கள் அனைவருக்கும் இச் சட்டம் பொருந்துகிற தொழில் வளவுகளுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) விதிகளைச் சேர்ந்த 3 (2) விதியின்கீழ் பணித்தனுப்பப்படுகிற தொழில் வளவு, கட்டிட வரை படங்களை ஆய்ந்து பார்க்கையில், பொருத்தமான அதிகாரி, மேற்படி சட்டத்தின்படி தொழில் வளவுகளாகப் பயன்படுத்துவதற்கு அந்த வளவும், கட்டிடமும், தகுந்தவையாக உள்ளனவா என்றும், மேற்படி சட்டத்



தின் 8 முதல் 16 வரையுள்ள பிரிவுகளின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளத்தக்கவையா என்றும் கவனித்துக் கொள்ளவேண்டும் என்றும் அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய திருவிழா விடுமுறைகள்) சட்டத்தின் விதித் துறைகள், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள பீடி, சுருட்டுத் தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பீடித் தொழில் வளவுகளிலிருந்து உரிமைக் கட்டண வகையில் 1969-ஆம் ஆண்டில் ரூ. 14,591 வசூலிக்கப்பட்டிருக்கையில், 1970-ல் ரூ. 12,517 வசூலிக்கப்பட்டது.

ஆண்டுத் தொடக்கத்தில் 6 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. இவ்வாண்டில் 25 வழக்குகள் தொடரப்பட்டன. 31 வழக்குகள் யாவும் தண்டனையில் முடிந்தன. அபராதத் தொகையாக ரூ. 108 வசூலிக்கப்பட்டது.

1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலை நிலைமைகள்) சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து இம்மாநிலத்தின் பீடித் தொழில் அதிபர்களில் சிலர் உயர் நீதி மன்றத்தில் 1968-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதியன்று "ரிட் மனுக்கள்" தாக்கல் செய்தனர். அந்த நிறுவனங்கள் குறித்து, மேற்படி சட்டமும், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும் செயல்படுவதை நிறுத்தி வைத்து சென்னை உயர் நீதி மன்றம் ஆணை பிறப்பித்தது. ஆனால் திருநெல்வேலி மாவட்டம், மூக்கூடல் சொக்கலால் ராம்சேட் பீடிக் கம்பெனி தாக்கல் செய்த "ரிட் மனுக்கள்" பேரிலேதான், மேற்படி சட்டம் செயல்படுவதைப் பொதுவாக உயர்நீதி மன்றம் நிறுத்தி வைத்தது. இதன் பின்னர், இச் சட்டமும், விதிகளும், 1968-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி முதல் இம்மாநிலத்திலுள்ள எந்த பீடி நிறுவனம் குறித்தும் செயல்படுத்த முடியவில்லை. நிறுத்தி வைப்பு ஆணையை அந்த நிறுவனத்துக்கு மட்டிலும் கட்டுப்படுத்துமாறு கோரி உயர்நீதி மன்றம் முன்பு அரசு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. இந்த 'ரிட் மனுக்கள்" மீது மாநில அரசும் மத்திய அரசும், எதிர்வாக்குமூலங்களைத் தாக்கல் செய்துள்ளன. இவ் வழக்கு உயர்நீதி மன்றத்தில் இன்னும் முடிவுறு நிலையிலுள்ளன.

1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்திற்கு முரணாயிராத தமிழ்நாடு சட்டத்தின் விதித்துறைகளின்படி, உரிமங்கள் புதுப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு தொழிலாளர்துறை ஆணையாளரை அரசு கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு சட்டத்தின் 2 (ஐ) (i) பிரிவு அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று 1960-ல் அதாவது 1960-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ஆம் தேதியன்று உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்ததால், இந்தப் பிரிவைச் செயல்படுத்த முடியாது என்று அரசு மேலும் சுட்டிக் காட்டியது.

[1971 ஜூலை 22

வேலூர்-6, விருதம்பட்டு, யு.கே. அப்துல்ஜப்பார் சாகிப் சன்ஸ், எடையம்பட்டி, ஜோலார்பேட்டை சு. ரத்தினவேல் கவுண்டர் சன்ஸ், காதர்கொடி பீடி கம்பெனி ஆகியோர் உயர்நீதி மன்றத்தில் அரசு ஆணையை எதிர்த்து வழக்கிட்டனர். மேற்சொன்ன அரசு ஆணைகள் செயல்படுவதை நிறுத்திவைத்து சென்னை உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்தது.

9. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961.—அறிக்கை ஆண்டில், சென்னை தொழிலாளர் நலத்துறை (ஆய்வுகள்) துணைஆணையாளர் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் தலைமை ஆய்வாளராகத் தொடர்ந்து இருந்து வந்தார். 1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளும் அவற்றின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளும், 156 தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள். 18 துணை ஆய்வாளர்கள், 10 ஆய்வாளர்கள் ஆகியோரால் செயல்படுத்தப்பட்டன. அறிக்கை ஆண்டில் 129 விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் பதிவுக் கட்டணமாக ரூ. 2,353.75 வசூலிக்கப்பட்டது. 996 நேர்வுகளில், தொழிலாளர் நல ஆய்வாளர்களால் பதிவுச் சான்றுகள் புதுப்பித்துக் கொடுக்கப்பட்டு ரூ. 41,277.50 வசூலிக்கப்பட்டுள்ளது. பதிவுச் சான்றுகளில் இரண்டாம்படி வழங்கியது குறித்து கட்டணமாக ரூ. 85 வசூலிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் தொழிலாளர் நல ஆய்வாளர்கள் பதிவுச் சான்றுகளில் 17 இரட்டைப் படிகள் வழங்கியுள்ளனர். 1970-ஆம் ஆண்டு தொடக்கத்தில், பதிவுசெய்யப்பட்ட 1,061 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் இருந்தன. இவ்வாண்டில் 133 நிறுவனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. பதிவேடுகளிலிருந்து 56 நிறுவனங்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. இவ்வாண்டு முடிவில், பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 1,138 ஆக இருந்தது. இந் நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 34,334 ஆக இருந்தது.

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளினின்றும் மலைத் தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட போக்குவரத்துத் தொழிலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்கினை 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதியிலிருந்து 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ந் தேதி வரை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு அரசு நீட்டித்துள்ளது.

1970-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ஆம் தேதியிலிருந்து 1973-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி வரை மேலும் மூன்றாண்டுக் காலத்திற்கு மேற்படி விலக்கை நீட்டிப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

ஆண்டுத் தொடக்கத்தில் 18 வழக்குகள் முடிவுறாமல் இருந்தன. இவ்வாண்டில் 116 வழக்குகள் தொடரப்பட்டன. ஆக மொத்தம் 134 வழக்குகள் உள்ளன.



1971 ஜூலை 22]

விதிகளுக்கு இணங்கிப் பின்னர் நடந்து கொண்டமை காரணமாக ஆணையிடப்பட்ட வழக்குகள் 4 நேர்வுகளில் ரத்து செய்யப்பட்டன.

எஞ்சிய 130 நேர்வுகளுள், 114 வழக்குகள் மீது கீழே விவரித்துள்ளவாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| தண்டனையில் முடிந்த வழக்குகள் | 111 |
| விடுதலையில் முடிந்த வழக்குகள் | 3 |
| | 114 |

தண்டனையில் முடிந்த 111 வழக்குகளில் அபராதத் தொகையாக ரூ. 4,417.00 வசூலிக்கப்பட்டது.

பதினாறு வழக்குகளில் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேல் முறையீட்டுக்கு மூன்று வழக்குகள் பொருத்தமானவையல்லவென்று அரசுத் தரப்பு வழக்குரைஞர் கருதுவதால் அவை குறித்து மேல் முறையீடு செய்து கொள்ளப்படவில்லை.

விடுதலையான எஞ்சிய ஒரே ஒரு வழக்கில், சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளுமாறு அரசுக்கு கேட்டு எழுதப்பட்டுள்ளது.

முத்தரப்பு நிலைக் குழுவின் மூன்றாவது கூட்டம் சென்னையில் 1970-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7-ஆம் தேதியன்று நடைபெற்றது. தமிழ் நாடு 1965-ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் விதிகளைச் சேர்ந்த 32-வது விதியின்படி வழங்கப்படும் தேசிய விடுமுறை நாட்களுடன் மே 1-ஆம் நாளையும் சேர்த்து வரைவுத் திருத்தம் ஒன்றை அவ்விதிகளுக்கு இவ்வாண்டில் அரசு பிறப்பித்தது.

10. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் (வேலை நிலைமைகளும், பல்வகை விதித்துறைகளும்) சட்டம், 1965.—பத்திரிகை நிறுவனங்களின் ஆய்வாளர்கள் என்னும் தகுதியில் தொழிலாளர் நல ஆய்வாளர்களால் அறிக்கை ஆண்டில், இச்சட்டத்தின் விதித் துறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தின்கீழ் 11,970 பணியாளர்களைக் கொண்டு 1,298 நிறுவனங்கள் உள்ளன. அறிக்கை ஆண்டில் ஆய்வாளர்கள் 37 ஆய்வுகள் நடத்தினர்.

11. தொழில் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம், 1946.—இவ்வாண்டில் 37 தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த நிலை ஆணைகளுக்குச் சான்றளிக்கப்பட்டன. இதனால், சான்றளிக்கப்பட்ட நிலை ஆணைகளின் எண்ணிக்கை 4,451 ஆக உயர்ந்தது. இவ்வாண்டில் 16 நேர்வுகளில் நிலை ஆணைகளுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் சான்று அளிக்கப்பட்டது.

12. தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, திருவிழா விடுமுறைகள்) சட்டம், 1958.—1970-ஆம் ஆண்டில் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் 562,002 தொழிலாளர்களைக் கொண்டு தொழிற்சாலைகள் உள்ளிட்ட 96,066 கடைகளும், நிறுவனங்களும் இருந்தன. பீடி அல்லது சுருட்டு அல்லது இவ்விரண்டும் சம்பந்தப்பட்ட தயாரிப்பு வேலை முறை மின்சக்தியைப் பயன்படுத்தி அல்லது பயன்படுத்தாமல் நடைபெறுகின்றவையும் அறிவிப்பு நாளன்று வேலைக்கமர்த்தப்பட்டுள்ள அல்லது அதற்கு முந்திய 12 திங்களில் எந்த ஒரு நாளிலாவது வேலை செய்து வந்த பத்து அல்லது பத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளனவையுமான எல்லா நிறுவனங்களையும். மேற்சொன்ன 1958-ஆம் ஆண்டுச் சட்டத்தை முன்னிட்டு, தொழில் நிறுவனங்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

“மே திங்கள் முதல் நாளை ” தேசிய விடுமுறையாக விடுவதற்கு வகை செய்ய தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) சட்டத்தை, நடப்பாண்டில், அரசு திருத்தியுள்ளது. இதன் மூலம், இச்சட்டத்தின் கீழ் சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாட்கள் 8-லிருந்து 9-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஒரு எல்லை வரை விசாரணை வரம்புடைய இன்ஸ்பெக்டர் வேண்டும்பொழுது, VI ஆம் என் படிவத்தைக் கொண்டு வந்து காண்பிக்குமாறு கேட்க அவருக்கு அதிகாரமளித்து தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய. பண்டிகை விடுமுறைகள்) விதிகளின் 7-ஆம் விதியில் திருத்தம் ஒன்றையும் அரசு பிறப்பித்துள்ளது.

## II. ஊதியங்கள் சட்டம்

1. கீழ்க்காணும் வேலைகள் குறித்து, குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறை செய்யவும்/திருத்தியமைப்பதற்கும் அரசுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன :—

1. சிறு துறைமுகங்களில் படகுப் பணியில் வேலை.
2. தங்க ஆபரணங்கள் செய்யும் தொழிற்சாலையில் வேலை.
3. மரத் தொழிற்சாலையில் வேலை.
4. உள்ளாடை. தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை.

கீழ்க்காணும் வேலைகள் குறித்து குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுக்க குழுக்கள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் ஆலோசனையில் உள்ளன :—

1. அரிசி ஆலை, மாவு ஆலை அல்லது பருப்பு ஆலை எதிலேனும் வேலை.
2. பொது மோட்டார் போக்குவரத்தில் வேலை.
3. தானியங்கி (மோட்டார்) பணிக்களரியில் வேலை.





4. தாம்பூல வாசனைப் புகையிலைத் தொழிற்சாலையில் வேலை.
5. விசைத்தறி ஆலையில் வேலை.
6. மலைத் தோட்ட வேலை.
7. வேளாண்மை, துணை வேளாண்மைப் பணிகளில் வேலை.
8. உள்ளாட்சி மன்றத்தின்கீழ் வேலை.
9. சாலை போடுதல் அல்லது கட்டடங்கள் கட்டுதல், கல் உடைத்தல் அல்லது கல் நொறுக்குதல், சாலைகளைப் பேணுதல் ஆகியவற்றில் வேலை.
10. கல் வெட்டி எடுக்கும் இடங்களில் கல் உடைத்தல், கல் நொறுக்குதல் ஆகியவற்றில் வேலை.

முந்திரிப்பருப்பு தொழிற்சாலையில் வேலை பார்ப்பதற்குரிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை வரையறுத்து, வரைவு அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. அதை உறுதிப்படுத்துவது ஆலோசனையின்கீழ் உள்ளது.

விவர அட்டவணையில் மேலும் சேர்க்கப்பட்டவை.

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்ட விவர அட்டவணையில் 27-வது பிரிவின்கீழ், “ கைத்தறிப் பட்டு நெசவு ஆலை ” யில் புரியும் வேலையையும் சேர்த்து அறிவிப்பு ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது.

### திருத்தங்கள்

இச் சட்டத்தின்கீழ், வேலை அளிப்பவரால் பேணிவரப்படுவதற்குரிய பல்வேறு பதிவுகள், ஆவணங்கள், அறிவிப்புகள் ஆகியவற்றை எக்கால அளவிற்குப் பாதுகாத்து வரவேண்டுமென்று வகை செய்வதற்காக. 1953-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதிய (தமிழ் நாடு) விதிகளின் கீழ், 28(A) என்ற புதிய விதி ஒன்றை அரசுகொண்டு வந்துள்ளது.

### விலக்குகள்

மலைத் தோட்டங்களில், மருத்துவமனை, மருத்துவப் பணியாளர்கள், வீட்டு வேலையாட்கள், செடிப்பண்ணை ஆட்கள் முதலியோருக்கு 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ஆம் நாள் வரையும், அன்றைய தினம் உட்படவும் உள்ள ஒரு கால அளவிற்கு, 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் 13, 14-வது பிரிவுகளின் விதித்துறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

### 2. குறைந்த அளவு ஊதிய (மாநில) ஆலோசனைக் குழு

நடப்பாண்டில், குறைந்த அளவு ஊதிய மாநில ஆலோசனைக் குழுவை அரசு மாற்றியமைத்துள்ளது. 1970 டிசம்பர் திங்கள் 21-ஆம் நாள் அக் குழு கூடிற்று. அக் குழு கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்தது :—

1. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை குறைந்த அளவு ஊதிய வீதங்களை திருத்தி அமைத்தல் என்னும் தற்பொழுதுள்ள நடை-

[1971 ஜூலை 22

முறைக்கு எதிராக, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைப்பதற்கு வகை செய்ய இச்சட்டத்தின் 3-வது பிரிவைத் திருத்துதல்.

2. குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் விவர அட்டவணையில் கீழ்க்காணும் நிறுவனங்களில் புரியும் வேலையைச் சேர்த்தல் : (i) அச்சகங்கள், (ii) திரைப்பட அரங்கங்கள், (iii) ஓட்டல்களும், சிற்றுண்டி விடுதிகளும், (iv) கடைகளும் வணிக நிறுவனங்களும், (v) முடிதிருத்தும் நிலையங்கள், (vi) கைத்தறி நெசவு ஆலைகள்.

3. சின்கோனா தோட்டங்கள், பீடி, புகையிலை தொழிற்சாலைகள் ஆகியவற்றில் புரியும் வேலைகளுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைத்தல்.

இச்சட்டத்தில் அடங்கிய 8,743 நிறுவனங்கள் (தொழிற்சாலைகள் உட்பட) இருந்தன; அவற்றில் 155,562 பேர் வேலை பார்த்தனர். நடப்பாண்டில், 199 வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் 192 வழக்குகள் ரூ. 6.508 அபராதத்தோடு தண்டனையில் முடிவுற்றன. முந்தைய ஆண்டு தொடரப்பட்ட 120 வழக்குகளில் 86 வழக்குகள் ரூ. 3,590 அபராதத்தோடு தண்டனையில் முடிவுற்றன.

கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட 13,917 ஆய்வுகளுக்கெதிராக, நடப்பாண்டில் 14,087 ஆய்வுகள், தொழிலாளர் நல இன்ஸ்பெக்டர்கள், தொழிற்சாலைகள் இன்ஸ்பெக்டர்கள், தொழிலாளர் நல துணை இன்ஸ்பெக்டர்கள், உதவி இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரால் நடத்தப்பட்டன.

3. 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.—1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வரும் நிறுவனங்கள் நீங்கலாக, பிற தொழில் நிறுவனங்கள் அனைத்தின் தொடர்பாக, இச்சட்டத்தை, தொழிலாளர் நலப் பிரிவு நிர்வகிக்கிறது. தொழிற்சாலைகள் உட்பட 27,197 நிறுவனங்கள் இச் சட்டத்தின்கீழ் வருகின்றன. 1970-ஆம் ஆண்டில் இச் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 538,299 (முந்தைய ஆண்டில் இந்த எண்ணிக்கை 508,636) ஆகும்.

தொழிற்சாலைகள் உட்பட 294 நேர்வுகளில் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில், ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறு நிலையிலிருந்த வழக்குகள் உட்பட 289 வழக்குகள் குற்றத் தீர்ப்புத் தண்டனையில் முடிவுற்றன. எட்டு வழக்குகள் விடுதலையில் முடிந்தன. அபராதமாக ரூ. 5,012 பெறப்பட்டது.

ஊதியம் வழங்குதல் தொடர்பாக இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 350 உரிமைக் கோரிக்கைகள் முடிவுறு நிலையிலிருந்தன. தொழிலாளர் இழப்பீட்டுக் கூட்டு ஆணையாளர் முன்பாக (1969-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 545 உரிமைக் கோரிக்கைகளுக்கு



1971 ஜூலை 22]

எதிராக), நடப்பாண்டில் 407 உரிமைக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. இவற்றில், நடப்பாண்டில் 504 உரிமைக் கோரிக்கைகள் குறித்து முடிவெடுக்கப்பட்டது.

ஊதியம் வழங்குதல் சட்டத்தின் 11-வது பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இரயில்வே விமானப் போக்குவரத்துப் பணிகள், சுரங்கங்கள் முதலியவை தொடர்பாக வேலை அளிப்போரால், சிற்றுண்டி விடுதிகளுக்கு செய்து கொடுக்கப்பட்ட வசதிகள் குறித்து, குறைப்புகளைச் செய்ய அதிகாரமளிக்கும் அதிகாரியாக, தலைமைத் தொழிலாளர் நல (மத்திய) ஆணையாளரை மத்திய அரசு நியமித்துள்ளது.

1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டத்தின் 14 (3) பிரிவுக்கு இணங்க, கீழ்க்காணும் மத்திய அரசு அதிகாரிகளை "இன்ஸ்பெக்டர்களாக" மேற்படி சட்டத்தின் காரியங்களுக்காகத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. அச்சட்டத்தின் (2) பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுக்காக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அந்தத் தொழில் நிறுவனங்கள் குறித்து மேற்கூறிய இன்ஸ்பெக்டர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவார்கள்.

| அதிகாரிகள். | தொழில் நிறுவனங்களின் வகுப்புகள். |
|---|---|
| (1) | (2) |
| 1. சென்னை, வட்டாரத் தொழிலாளர் நல (மத்திய) ஆணையாளர். | சென்னைத் துறைமுகத்தில் கப்பல்துறை, சரக்குத்துறை அல்லது தோணித்துறை. |
| 2. சென்னையில் தலைமையிடத்தைக் கொண்ட தொழிலாளர் நல (மத்திய) ஆணையாளர். | சென்னைத் துறைமுகத்தில் கப்பல்துறை, சரக்குத்துறை அல்லது தோணித்துறை. |
| 3. சென்னையில் தலைமையிடத்தைக் கொண்ட தொழில் விதிகள் செயல்படுத்துதல் (மத்திய) அதிகாரிகள். | சென்னைத் துறைமுகத்தில் கப்பல்துறை, சரக்குத்துறை அல்லது தோணித்துறை. |

## III

## தொழில் தகராறுகள் சட்டம்

1. 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.—சமரச அதிகாரிகள், கீழ்க்கண்ட அளவிற்கு தொழில் தகராறுகள் குறித்து இணக்கமான முடிவை ஏற்படுத்த முடிந்தது.

| | 1969 | 1970 |
|---|---|---|
| (அ) புலனாய்வு செய்யப்பட்ட குறையீடுகளின் எண்ணிக்கை. | 7,504 | 8,579 |
| (இ) சமரசப் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,272 | 1,343 |
| (உ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 373 | 670 |
| (எ) சட்டப்படி அமையாத நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 40 | 21 |

[1971 ஜூலை 22

மேலே கூறப்பட்ட (இ), (உ), (எ) இவற்றின் கீழ் வராத வழக்குகள், சட்டப்படி அமையாத நடுவினைக்கத்தால் முடிவு செய்யப்பட்டன அல்லது அதன்மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் அல்லது நடுவர் தீர்ப்புக்கு விடுதல் அவசியமென்று கருதப்படவில்லை.

1969-ஆம் ஆண்டில் வந்த 7,640 குறையீடுகளுக்கெதிராக இவ்வாண்டில் தொழிலாளர் நல அதிகாரிக்கு வந்த குறையீடுகளின் எண்ணிக்கை 8,523 ஆகும்.

2. வேலை நிறுத்தங்கள்.—கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்த ஆய்வு ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும் கீழ்க்கண்டவாறு உள்ளன :—

| | 1969 | 1970 |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை. | 174 | 277 |
| (இ) விரயமாகிய உழைப்பு நாட்களின் எண்ணிக்கை. | 6,83,059 | 10,33,377 |

வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்த தொழிற்சாலை வாரியான பகுப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1969

| தொடர் எண்ணும் தொழிற்சாலையும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | விரயமான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பஞ்சாலைகள் .. .. | 45 | 15,591 | 187,510 |
| 2. பொறியியல் தொழிற்சாலை .. | 56 | 9,148 | 240,422 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலை. | 2 | 62 | 346 |
| 4. புகையிலை, பீடி தொழிற்சாலை. | 2 | 1,200 | 9,600 |
| 5. மலைத்தோட்டம் .. .. | 10 | 1,398 | 41,552 |
| 6. ஏனைய தொழிற்சாலைகள் .. | 59 | 14,501 | 203,629 |
| | 174 | 41,900 | 683,059 |

1970

| | | | |
|---|---|---|---|
| 1. பஞ்சாலைகள் .. .. | 86 | 41,824 | 335,454 |
| 2. பொறியியல் தொழிற்சாலை .. | 60 | 9,384 | 169,656 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலை. | 3 | 510 | 2,969 |
| 4. புகையிலை, பீடி தொழிற்சாலை. | 23 | 13,594 | 129,339 |
| 5. மலைத்தோட்டங்கள் .. .. | 12 | 2,388 | 25,861 |
| 6. ஏனைய தொழிற்சாலைகள் .. | 93 | 73,486 | 320,098 |
| | 277 | 141,186 | 1,033,377 |



1971 ஜூலை 22]

1970ஆம் ஆண்டில் மேலும் முடிவுற்ற வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;—

| | |
|---|---|
| (அ) நேரடிக் கலந்துரையாடல் மூலம் முடிவுற்றவை. | 22 |
| (இ) தாமே வேலையை மேற்கொண்டது .. .. | 76 |
| (உ) அரசு/தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளால் செய்யப்பட்ட நடுவிணக்கம். | 161 |
| (எ) காலவரையறையின்றி .. .. .. .. | 5 |
| (ஐ) இவ்வாண்டின் இறுதியில் நடைபெற்றுவந்தவை. | 12 |
| | 276 * |

* சென்னையிலுள்ள ஸ்ரீ லலிதா சிற்றுண்டி சாலை, கடந்த ஆண்டிலிருந்து வேலை நிறுத்தம், கதவடைப்பு தொடர்ந்து நடைபெற்று வந்தது. இச்சிற்றுண்டிச்சாலை 1970-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் நாளோடு முடிவடையும் காலாண்டின்போது மூடப்பட்டது. எனவே, அது, இக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை (முடிவுற்றது).

இந்த ஆய்வு ஆண்டில் விரயமான உழைப்பு நாட்களின் கூடுதலுக்குக் காரணம், கீழ்க்கண்ட பெரிய தொழில் நிறுவனங்களில் ஏற்பட்ட தொடர்ந்த வேலை நிறுத்தங்களும், கதவடைப்புகளும், வேலை நிறுத்தங்கள் அல்லது கதவடைப்புகளாகும். அத்தகைய நிறுவனங்களில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

1. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி

2. இந்தியன் ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் லிமிடெட், சென்னை.

3. ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ் லிமிடெட், சேலம்.

4. இ.ஐ.டி. பாரி லிமிடெட், நெல்லிக்குப்பம்.

5. வட ஆர்க்காடு மாவட்டம், சென்னை மாநகர் ஆகியவற்றில் உள்ள பீடித்தொழில் நிறுவனங்கள்.

6. ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர் லிமிடெட், சென்னை-32.

3. 1970-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சில முக்கியமான இணக்க உடன்பாடுகள்.

இனம் 1. பி. அண்டு சி. ஆலை, சென்னை.—நூலை ஊசி இயக்குபவர்களை வேலைக்கு எடுத்தது குறித்து, பக்கிங்ஹாம், கர்நாடிக் பணியாளர் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக அந்த வேலை நிறுத்தம் 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ஆம் நாள் நிறுத்தப்பட்டது.

சென்னை 11-ல் உள்ள பக்கிங்ஹாம் கர்நாடிக் மில்ஸைச் சேர்ந்த சுமார் 13,500 தொழிலாளர்களும, பணியாளர்களும் ஊதியம் அகவிலைப்படி முதலியவற்றைத் திருத்தியமைக்குமாறு கோரிக்கை விடுத்து, 1970-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், சென்னை, தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர் முன்பு 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22-ஆம் நாள் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக 1970-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ஆம் நாள் இவ்வேலை நிறுத்தம் முடிவுற்றது.

இனம் 2. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம் லிமிடெட், நெய்வேலி.—ஊதியங்கள், படிகள், மேல் நன்மைகள் ஏனைய பிரச்சினைகள் குறித்தும் இவற்றைத் திருத்தியமைப்பது குறித்தும் தொழிலாளர்களுக்கும் (எண்ணிக்கையில் சுமார் 16,600 பேர்) நெய்வேலியிலுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழக நிர்வாகத்தினருக்கும் இடையே தொழில் தகராறு ஒன்று எழுந்தது. சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரால் சமரசம் செய்யப்பட்டது. இந்தச் சமரசத்தின் விளைவாகவும், மாண்புமிகு தமிழ் நாடு முதல் அமைச்சரின் தலையீட்டின் பேரிலும் 1970-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 20-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இருப்பினும், 1970-ஆம் ஆண்டு மே திங்கள் 2-ஆம் நாளிலிருந்து 1970-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் வரை நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். 1970-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் நாள் தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இவ்வேலை நிறுத்தம் முடிவுற்று 1970-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாள் திரும்பவும் பணி தொடரப்பட்டது. ஆணையாளர் முன்பு ஒப்புக்கொள்ளப்பட்ட வரையறைகளுக்கு இணங்கவும். தீர்க்கப்படாமல் பிரச்சினைகள் ஏதேனுமிருப்பின், பணி திரும்பவும் மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகு அவைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் செய்த வேண்டுகோளை ஏற்கும் வகையிலும் 1970-ஆம் ஆண்டு மே மாதம் 6-ஆம் நாள் முதல் முறை வேலையிலிருந்து வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்து, வேலை திரும்பவும் மேற்கொள்ளப்படும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது

இனம் 3—தமிழ் நாடு மின்சார வாரியம்.—சென்னையிலுள்ள தமிழ் நாடு மின்சார வாரியப் பணியாளர்கள் (சுமார் 70,000 பேர் எண்ணிக்கையுள்ளோர்) சம்பளம், படிகள் இவற்றைத் திருத்தி அமைக்குமாறு தமிழ் நாடு மின்சார வாரியத்துடன், தொழில் தகராறு ஒன்றை மேற்கொண்டனர். மாண்புமிகு தமிழ் நாடு முதல் அமைச்சரின் தலையீட்டின் பேரில் இரு தரப்பினரும் தகராறைத் தீர்த்துக்கொள்ள முடிந்தது. 18(1) பிரிவின் கீழ் உடன்பாட்டு விவரம் ஒன்றில் 1970-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள், தமிழ் நாடு மின்சார வாரியப் பிரதிநிதிகளும்,



அவ்வாரியப் பணியாளர்களும் கையெழுத்திட்டனர். அதன் மூலம் தமிழ் நாடு மின்சார வாரியப் பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு ரூ 4 கோடி வரை பயனடைந்தனர்.

இனம் 4—ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை.—ஆதாயமின்றி செயல்பட்டதன் காரணமாக, சென்னை ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட் 1970-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் தேதியிலிருந்து மூடப்பட்டது. இதன் மூலம் ஏறத்தாழ 1,500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் முன்பு நடத்திய நீண்ட கலந்துரையாடலுக்குப் பிறகு, தொழிலாளர் நல ஆணையாளர் (பொறுப்பிலுள்ளவர்) முன்பு 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன் மூலம் அத்தொழிற்சாலை 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ஆம் நாளிலிருந்து மீண்டும் திறக்கப் பட்டுள்ளது.

இனம் 5—உப்புத் தொழிற்சாலைகள், தூத்துக்குடி.—தூத்துக்குடியிலுள்ள உப்புத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த சுமார் 3,000 தொழிலாளர்கள், சம்பளம் முதலியவற்றைத் திருத்தியமைக்கக் கோரி 1970-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். திருநெல்வேலி தொழிலாளர் நல அதிகாரியின் தலையீட்டின் பேரில், இதுகுறித்து நல்லிணக்க உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. 1970-ஆம் ஆண்டு மே மாதம் 20-ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குச் சென்றனர்.

இனம் 6—மேட்டூர் இரசாயன—தொழிற்கழகம் லிமிடெட், மேட்டூர்.—இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, கனரக இரசாயன—உரத் தொழிற்சாலைகள் குறித்த மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தல் தொடர்பாக, மேட்டூரிலுள்ள மேட்டூர் இரசாயன தொழிற்கழகம் லிமிடெட்டின் நிர்வாகத்தினருக்கும் அதன் தொழிலாளர்களுக்குமிடையே தகராறு ஒன்று எழுந்தது. தக்க திருத்தங்களுடன் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட வேண்டும். ஏனெனில், அதன் மூலம்தான் மேற்கூறிய பரிந்துரைகளுக்கு அதிகமாக சலுகைகள் கிடைக்கும் என்று தொழிலாளர்கள் கோரினர். தொழிலாளர் நல ஆணையாளரின் சமாசப் பேச்சு வார்த்தையின் விளைவாக. அவர் முன்பு, 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது.

இனம் 7—ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ், லிமிடெட், சேலம்.—நூல் நூற்கும் பிரிவில் (Ring Frame Department) அதிக வேகத்தைப் புகுத்துதல் என்று கூறப்படும் புகாருக்கு எதிராக, சேலம் ஸ்ரீ ராஜேந்திரா மில்ஸ் லிமிடெட்டைச் சேர்ந்த சுமார் 660 தொழிலாளர்கள் 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1970-ஆம் ஆண்டு ஜூன்

மாதம் 15-ஆம் நாளிலிருந்து நிர்வாகத்தினர் கதவடைப்புச் செய்தனர். தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு 1970-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. 1970-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ஆம் நாளிலிருந்து மீண்டும் வேலை தொடங்கப்பட்டது.

இனம் 8—இ.ஐ.டி., பாரி லிமிடெட்.—1968–69-ஆம் ஆண்டிற்கான பூரிப்பு ஊதியம் குறித்து. இ.ஐ.டி. பாரி லிமிடெட் தொகுதிக் கம்பெனிகளின் நிர்வாகத்தினருக்கும், அதன் தொழிலாளருக்கும் இடையே தொழில் தகராறு ஒன்று எழுந்தது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் தலையீட்டின் பேரில், 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு 1970 ஜூன் திங்கள் 12-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்பாட்டிற்கு இணங்க தொழிலாளர்களின் 1968-69-ஆம் ஆண்டின் மொத்த ஆண்டு ஊதியத்தில் (சம்பளம், அகவிலைப்படி உட்பட) 10½ சத வீதத்தை அக்கால அளவின் பூரிப்பு ஊதியமாக வழங்க நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டனர்.

1968-69-ஆம் ஆண்டிற்கு அதிக அளவு பூரிப்பு ஊதியம், சம்பளம், அகவிலைப்படி முதலியவற்றை திருத்தியமைத்தல் முதலியவற்றைக் கோரி, நெல்லிக்குப்பத்திலுள்ள இ.ஐ.டி. பாரி லிமிடெட்டின் (சர்க்கரைத் தொழிற்சாலை) தொழிலாளர்களும், பணியாளர்களும் 1970 ஜூன் திங்கள் 17-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை தொழிலாளர் நல ஆணையாளரின் ஆலோசனையின் பேரில் வேலை நிறுத்தம் முடிவுற்றது. 1970 ஆகஸ்ட் திங்கள் 16-ஆம் நாளிலிருந்து மீண்டும் வேலை தொடங்கப்பட்டது.

இனம் 9—அசோக் லேலண்ட் லிமிடெட், எண்ணூர், சென்னை—1969-70-ஆம் ஆண்டிற்கு அதிக அளவு பூரிப்பு ஊதியம் கோரி, சென்னை எண்ணூரிலுள்ள அசோக் லேலண்ட் லிமிடெட்டின் தொழிலாளர்கள் வேலைநிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். 1971 மார்ச் திங்கள் 16-ஆம் நாளிலிருந்து அவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். சென்னை, தொழிலாளர் நல ஆணையாளரின் தலையீட்டின் விளைவாக, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 1971 மார்ச் திங்கள் 31-ஆம் நாள் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. 1971 ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். உடன்பாடு 1971 ஏப்ரல் திங்கள் ?-ஆம் நாளில் கையெழுத்திடப்பட்டது.

இனம் 10—வட ஆர்க்காடு, சென்னை ஆகிய இடங்களில் பீடித் தொழிற்சாலைகள்.—பூரிப்பு ஊதியம், மறுவேலைவாய்ப்பு முதலியவற்றைக் கோரி வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பீடி தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் (சுமார் 20,000 பேர்) 1970 ஜூன் திங்கள் 20-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு 1970 ஜூலைத்





திங்கள் 7-ஆம் நாள் நடந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன் விளைவாக வேலை நிறுத்தம் முடிவுற்றது.

போதுமான அளவு தரமான இலைகள், இலவசமாக நூல் முதலியவை வழங்கக் கோரி, சென்னையிலுள்ள சுமார் 10,000 பீடித் தொழிலாளர்கள் 1970 ஜூன் திங்கள் 25-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். 1970 ஜூலைத் திங்கள் 4-ஆம் நாள் தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக வேலை நிறுத்தம் முடிவுற்றது.

இனம் 11—ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ் லிமிடெட், கிண்டி.—கூடுதல் சம்பளம், அகவிலைப்படி, ஏனைய நன்மைகளைக் கோரி, கிண்டி, ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர்ஸ் லிமிடெட்டைச் சேர்ந்த சுமார் 1,200 தொழிலாளர்கள் 1970 ஜூலைத் திங்கள் 22-ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். அதைத் தொடர்ந்து 1970 ஜூலை திங்கள் 25-ஆம் நாளிலிருந்து நிர்வாகத்தினர் கதவடைப்புச் செய்தனர். சென்னை, தொழிலாளர் நல துணை ஆணையாளர் இத்தகராறில் சமரசப் பேச்சினை மேற்கொண்டார். பேச்சு வார்த்தைகள் புது டில்லியிலும் நடைபெற்றன. 1970 ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் நாள், சென்னை, தொழிலாளர் நல துணை ஆணையாளர் முன்பு ஏற்பட்ட உடன்பாட்டினையொட்டி, வேலை நிறுத்தம் முடிவுற்று, 1970 ஆகஸ்ட் திங்கள் 6-ஆம் நாளிலிருந்து மீண்டும் வேலை தொடங்கியது.

இனம் 12—லதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட், பட்டாபிராம்.—நிதி இடர்பாடுகள் காரணமாக, 1969-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து சுமார் 1,200 தொழிலாளர்களுக்கு, பட்டாபிராமிலுள்ள லதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட்டின் நிர்வாகத்தினர் வேலையில்லை என்றனர். 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 600 தொழிலாளர்கள் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். 1969 டிசம்பர் திங்கள் 19-ஆம் நாளிலிருந்து எல்லாத் தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலையில்லை என்றனர். பொருளாதார உதவி, அரசின் பிரதிநிதிகளைச் சேர்த்து இயக்குநர் குழுவை மாற்றியமைத்தல் ஆகியவற்றின் மூலம் இத் தொழிற்சாலை மீண்டும் செயல்பட அரசு உதவியுள்ளது. 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழ் 1971 சனவரித் திங்கள் 8-ஆம் நாள் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவாக, 1971 சனவரித் திங்கள் 6-ஆம் நாளிலிருந்து இத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது.

இனம் 13—ஏனைய சில வேலை நிறுத்தங்கள்.—கல்நார் சிமிட்டித் தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த (அனைத்து இந்திய தொழிலாளர் சங்கக் காங்கிரஸ்) தொழிலாளர்களும், கோயம்புத்தூரிலுள்ள கோயம்புத்தூர் மாவட்ட திராவிட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும், 1970 அக்டோபர் திங்கள் 19-ஆம் நாளிலிருந்து சில

பிரச்சினைகள் மீது வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் நல அமைச்சரின் தலையீட்டின் பேரில் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன்படி 1970 டிசம்பர் திங்கள் 26-ஆம் நாளிலிருந்து வேலை திரும்பவும் தொடங்கப்பட்டது.

கோயம்புத்தூர், டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் விவகாரங்களைக் கவனிக்க தமிழ் நாடு அரசால் அமைக்கப்பட்ட உயர் அதிகாரக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட புதிய இயக்குநர் குழுவின் மூலம் இக்கம்பெனியின் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளதுடன் இக்கம்பெனியின் பணியைத் திருத்தி அமைக்கும் நோக்கத்தோடும், தொழிலாளருக்கும், ஏனையோருக்கும் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகைகளைக் கொடுப்பதன் மூலம், தற்போதுள்ள அதனுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வேலையாள் பிரச்சினைகள், குறைந்த வேலைவாய்ப்பு முதலியவற்றைப் போக்கவும் தமிழ் நாடு 1969-ஆம் ஆண்டு துயர் தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் கீழ் இக்கம்பெனியை துயர்தணிப்புக்கான நிறுவனம் என்றும் 1970 ஆகஸ்ட் திங்கள் 14-ஆம் நாளிலிருந்து அரசு அறிவித்துள்ளது. இயல்பான பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது.

4. பஞ்சாலைகளை மூடுதல்—பொருளாதார சிக்கல்கள் காரணமாக 1970-ஆம் ஆண்டு கீழ்க்காணும் பஞ்சாலைகள் மூடப்பட்டன :—

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. புதுக்கோட்டை பஞ்சாலை லிமிடெட், நமணசமுத்திரம். | 1970 மார்ச திங்கள் 30-ஆம் நாள். | 400 |
| 2. ஸ்ரீ சண்முகர் ஆலை, இராசபாளையம். | 1970 ஜூலைத் திங்கள் 18-ஆம் நாள். | 400 |
| 3. தி பலராமவர்மா பஞ்சாலை, செங்கோட்டை. | 1970 அக்டோபர் திங்கள் 26-ஆம் நாள். | 600 |

1966-68-ஆம் ஆண்டில் மூடப்பட்ட கீழ்க்காணும் ஆலைகள், அந்த ஆலைகளுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள தேதிகளில் இப்பொழுது மீண்டும் திறக்கப்பட்டுள்ளன :—

| ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | மீண்டும் வேலை ஆரம்பிக்கப்பட்ட நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. கம்போடியா ஆலை, லிமிடெட், கோயமுத்தூர். | 12–8–1966 | 1,800 | 4–2–1970 |
| 2. கிருஷ்ணவேணி பஞ்சாலை | 2–11–1967 | 350 | 4–2–1970 |
| 3. ஸ்ரீ ரெங்க விலாஸ் பருத்தி அடித்தல்-நூல் நூற்பு-நெசவாலை லிமிடெட், கோயமுத்தூர். | 14–3–1967 | 1,300 | 15–4–1970 |
| 4. தமிழ் நாடு நூற்பாலை லிமிடெட், திருப்பூர். | 10–3–1968 வேலை நிறுத்தப்பட்டது. 2–7–1968 லிருந்து மூடப்பட்டது. | 83 | 8–6–1970 |
| 5. கோயமுத்தூர் முருகன் ஆலை, கோயமுத்தூர். | 1–5–1968 | 967 | 30–10–1970 |





1951-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி—ஒழுங்கு படுத்தல்) சட்டத்தின்கீழ் ஆலைகளின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக 1969-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் நாள் அமைக்கப்பட்ட தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், இது வரையில் மேற்கண்ட சட்டத்தின் கீழ், கீழ்க்காணும் ஆலைகளை மேற்கொண்டுள்ளது :—

1. ஸ்ரீ ரெங்க விலாஸ் பருத்தி அடித்தல், நூற்பு நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

2. கிருஷ்ணவேணி பஞ்சாலை, கோயம்புத்தூர்.

3. கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

4. ஓம் பராசக்தி ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

5. பஞ்சாலைத் தொழிலில் சிக்கன சீரமைப்பு.—1970-ல் துறையின் உதவியோடு சிக்கனச் சீரமைப்புத் தொடர்பான 79 தகராறுகள் தீர்க்கப்பட்டன. 30 தகராறுகள் நேரடிக் கலந்துரையாடல் மூலம் தீர்க்கப்பட்டன.

6. சட்டப்படி அமையாத நடுவர் மன்ற முடிவு.—தகராறுகளுக்குரிய கட்சிக்காரர்கள் குறிப்பாக வேலையிலிருந்து விடுவித்தல். விலக்கல், ஆட்குறைப்பு செய்தல் முதலியன தொடர்பாக, சட்டப்படி அமையாத நடுவர் மன்ற முடிவுக்கு ஒப்புக்கொள்ளுமாறு பொதுவாக ஆலோசனை கூறப்பட்டனர். 1970-ஆம் ஆண்டில் 21 வழக்குகள் சட்டப்படி அமையாத நடுவர் மன்ற முடிவுக்கு விடப்பட்டன. இவ்வழக்குகளின் கீழ், வேலையிலிருந்து விடுவித்தல், விலக்கல், ஆட்குறைப்பு செய்தல் முதலியன வருவதோடு, ஊதியங்கள், பரிப்பு ஊதியங்கள் பணிச் சுமை முதலியன குறித்த பெருவாரியான நிதிப் பொறுப்புள்ளவைகளும் கீழ் வருகின்றன. இதற்குக் கூடுதலாக, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-எ பிரிவின் கீழ் 13 வழக்குகள் நடுவர் முடிவுக்கு விடப்பட்டன.

**7. நடுவர் தீர்ப்பளித்தல்.**—தீர்ப்பளிப்பதற்காக 1969, 1970 ஆம் ஆண்டுகளில் சென்னை, தொழில் நடுவர் மன்றம், சென்னை, மதுரை கோயம்புத்தூர் தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னை தொழிலாளர் கூடுதல் நீதிமன்றம் ஆகியவற்றுக் வந்த வழக்களின் எண்ணிக்கைகளும், அந்த ஆண்டுகளில் அந்த நீதி மன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் எண்ணிக்கைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | தீர்ப்பளிப்பதற்காக வந்த வழக்குகளின் எண்ணிக்கை. | | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | 1969 | 1970 | 1969 | 1970 |
| தொழில் நடுவர் மன்றம், சென்னை | 45 | 88 | 81 | 87 |
| தொழிலாளர் நீதி மன்றங்கள் .. | 328 | 582 | 329 | 445 |
| மொத்தம் | 373 | 670 | 410 | 532 |

மேலே குறிப்பிட்ட தீர்ப்புகளுக்குக் கூடுதலாக, 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33 (c) (2) பிரிவின்கீழ் தொழிலாளர்களால் கடந்த ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 2.837 விண்ணப்பங்களுக்கெதிராக 2,783 விண்ணப்பங்கள் குறித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

**8. தொழில் தகராறுகள் சட்டம் முதலியவற்றின் கீழ், பொதுப் பயன் பணிகள் குறித்த தொழிற்சாலைகள் என அறிவித்தல்.**—பொதுப் பயன் பணிகள் குறித்த தொழிற்சாலைகள் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட கீழ்க்காணும் தொழிற்சாலைகள், நடப்பாண்டிலும், அதுபோன்று தொடர்ந்து இருந்து வருகின்றன—

(1) சிறு துறைமுகங்களில் உள்ள எல்லாத் தொழிலாளர்களும்.

(2) இரும்பு, உருக்கு, மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றில் பணிகள், தீயணைக்கும் படைப் பணிகள், பருப்பு ஆலைகள், உணவுப் பொருளாகப் பயன்படுத்தும் மாவு உற்பத்தி செய்யும் ஆலைகள், அரிசி ஆலைகள் உணவுப் பொருளாகப் பயன்படுத்தும் எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகள், பாலும், பால் உற்பத்திப் பொருள்களும்.

(3) தோல், பிராணவாயு, அசிடிலேன்.

(4) பிஸ்கோத்துகள், ரொட்டி உற்பத்திப் பொருட்கள்.

(5) பெட்ரோலிய உற்பத்திப் பொருட்களைத் தயாரித்தல், விற்பனை செய்தல், பங்கிடுதல்.

(6) உரத் தொழிற்சாலை.

(7) சிமிட்டித் தொழிற்சாலை.

(8) பருத்தி நெசவுத் தொழிற்சாலை.

(9) மோட்டார் போக்குவரத்துத் தொழிற்சாலை.

(10) சர்க்கரைத் தொழிற்சாலை.





இத் தொழிற்சாலைகள் தவிர, கீழ்க்காணும் தொழிற்சாலைகளும் பொதுப் பயன் பணி குறித்த தொழிற்சாலைகளாக நடப்பாண்டில் அறிவிக்கப்பட்டன :—

(1) ரயான், நைலான், ஏனைய செயற்கை நார் உற்பத்தித் தொழில்.

(2) கனரக இரசாயனத் தொழிற்சாலை.

**9. வழக்குத் தொடர்தல்.**—தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித் துறைகளை [இச் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பை] செயல்படுத்தாமல் மீறியதற்காக, தஞ்சாவூர் சுவாமி மோட்டார் போக்குவரத்து (தனியார்) லிமிடெட்டின் நிர்வாகத்தினருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு இன்னும் முடிவுறு நிலையில் நீதி மன்றத்திலுள்ளது.

**10. வசூல்கள்.**—இந்த ஆண்டில் 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-C (1) பிரிவின் கீழ், தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைகளை வசூலிப்பதற்காக, 145 வழக்குகளில் மொத்தத் தொகை ரூ. 2,79,243.39-ஐ வசூல் செய்வதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்தது.

**11. ஊதியக் குழு**—(i) **பஞ்சாலைகள்.**—பஞ்சாலைத் தொழிற்சாலைகள் குறித்த இரண்டாவது ஊதியக் குழு செய்த பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. நேரடி உடன்பாட்டின் மூலமாகவும் சமரச அதிகாரிகளின் முன்பு ஏற்பட்ட உடன்பாடுகள் மூலமாகவும் இந்தப் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்று வரை இப் பிரச்சினைகள் குறித்து உடன்பாட்டின் கீழ் வந்த ஆலைகளின் எண்ணிக்கையும், இதில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| நெசவு ஆலைகளின் எண்ணிக்கை | 100 |
| தொழிலாளர்களின் எண்ணிக்கை | 80,000 |

(ii) **பொறியியல்.**—பொறியியல் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் ஒருமுகமானதாக இல்லாததால், ஊதியக் குழுவின் தலைவர், சுயேச்சை உறுப்பினர்கள் ஆகியோர் செய்த பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்துவது என்று இந்திய அரசு தீர்மானித்தது. பிரிவு வாரியாக, மேற்கூறிய பரிந்துரைகள் குறித்து கலந்துரையாடி ஓர் உடன்பாட்டிற்கு வருமாறு நிர்வாகிகளையும், சங்கங்களையும் கேட்டுக்கொண்டு தமிழ்நாடு அரசு பத்திரிகைகளில் செய்தி ஒன்று வெளியிட்டது. நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டாம் என்றும், தேவைப்படும் பொழுதெல்லாம் சமரச அதிகாரிகளை அணுகுமாறும் நிர்வாகிகள், தொழிற்சங்கங்கள் ஆகியவை கேட்டுக் கொள்ளப்பட்டன. ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் இது வரையில் 56 பொறியியல் நிறுவனங்களில் உடன்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

[1971 ஜூலை 22

(iii) சர்க்கரை.—சர்க்கரைத் தொழிற்சாலைகள் குறித்து இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடப்பாண்டில் அறிவிக்கப்பட்டன. இக் குழுவின் பெரும்பாலான பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இத் தொழிற்சாலை தொடர்பாக, பரிந்துரைகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அதுபோன்று செயல் படுத்தப்படும் பொழுது ஏற்படும் பொருள்கள் குறித்து பிரிவுமட்டத்தில் தீர்த்துக்கொள்ளுமாறும், வேலை அளிப்போர், தொழிலாளர்கள் ஆகியோருக்கு அறிவுரை கூறி தமிழ்நாடு அரசு பத்திரிகைகளில் செய்தி ஒன்று வெளியிட்டது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை வெளியிடுவதற்கு முன்பு ஊதியத்தில் இடைக்கால உயர்வு அளிக்கப்பட்டப் போதிலும், ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது பிரிவு மட்டத்தில் உடன்பாடு ஒன்றுக்கு வருவதற்கு அவர்களால் இயலவில்லை. இப்பிரச்சினை குறித்து விரைவில் உடன்பாடு ஏற்பட வேண்டும் என்று கோரி சில தொழிலாளர்கள் சங்கங்களிடமிருந்து வேலைநிறுத்த அறிவிப்புகள் வந்ததால், இப் பொருள், 1971 பிப்ரவரி திங்கள் 12-ம் நாள் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரால் மீண்டும் விவாதிக்கப்பட்டது. தொழிலாளர் நலத் துணை ஆணையாளரை அமைப்பாளராகவும், ஒவ்வொரு தரப்பிலும் 6 பிரதிநிதிகளைக் கொண்டும் குழு ஒன்று அமைப்பது குறித்து அக்கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதுகுறித்து நடவடிக்கை எடுப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(iv) சாலைப் போக்குவரத்து.—சாலைப் போக்குவரத்துத் தொழில் குறித்த ஊதியக் குழுவின் இறுதியான பரிந்துரைகள் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பரிந்துரைகள் அனைத்தும் ஒருமனதாகச் செய்யப்பட்டவை. இதுவரையில். ஊதியக் குழுவின் பரிந்துரைகளை 105 பிரிவுகள் செயல்படுத்தியுள்ளன. இந்தப் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்தும்படி எஞ்சியுள்ள நிர்வாகங்களை வற்புறுத்துமாறு துறை அதிகாரிகளுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்துத் தொழில் குறித்து ஊதியக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு 1971 ஜூன் திங்கள் 21-ம் நாள் நடந்த கூட்டத்தில், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரும், மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரும், 1971 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் தேதி வரையில் காலம் கொடுத்தார்கள்.

(v) மின்சாரம்.—மின்சாரம் குறித்து ஊதியக் குழுவின் இறுதியான பரிந்துரைகளை இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன. தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், இதுவரை, மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சரின் தலையீட்டின் பேரில், கட்சிகளுக்கிடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டு, இச் சட்டத்தின் 13 (1) பிரிவின் கீழ் உடன்பாட்டுக்குறிப்பு ஒன்று 1970 மே திங்கள் 27-ம் நாள் கையெழுத்திடப்பட்டது. தனியார் மின்சார நிறுவனங்களில் இப்பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



1971 ஜூலை 22]

தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் உடன்பாடு காணப்பட்ட அதே முறைகளில், மின்சாரத் தொழிலாளர்கள் குறித்து மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கோரி மதுரை (தற்போது மாநகராட்சியாக அமைக்கப்பட்டுள்ளது), கோயம்புத்தூர், பொள்ளாச்சி, கரூர், தஞ்சாவூர் ஆகிய நகராட்சி மின்சார நிறுவனங்களில் உள்ள தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். தொழிலாளர் நல ஆணையாளரின் (பொறுப்பிலுள்ளவர்) பரிந்துரைகளின் பேரில், தொழிலாளர்கள் குறைகளை ஆராய்வதற்கும், பரிந்துரைகள் செய்வதற்கும் அதிகாரிகள் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

(vi) தோல், தோல் பொருள்கள் குறித்த ஊதியக் குழு தனது பரிந்துரைகளை வெளியிட்டது. அவற்றை மாநில வரசு ஏற்றுக்கொண்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருப்பதைத் தவிர இம் மாநிலத்திலுள்ள தோல் பதனிடுதல் தொழிற்சாலைகள் குறித்து 1970 மார்ச் திங்கள் 11-ம் நாள் தொழிலாளர் நல ஆணையாளரால் வழங்கப்பட்ட நடுவர் தீர்ப்பின்கீழ் ஊதியத்தைத் திருத்தி அமைக்கும் பிரச்சினையும் வருகிறது. 293 நிறுவனங்களில், 9,893 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 224 நிறுவனங்கள் இதுவரையில் இப் பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளன. எஞ்சியுள்ள பிரிவுகளில் செயல் படுத்தப்படுவது குறித்து கவனிக்கப்பட்டு வருகிறது.

(vii) கனரக இரசாயனம்.—இம் மாநிலத்திலுள்ள கனரக இரசாயனத் தொழிலைச் சேர்ந்த 8 பிரிவுகளில், 3,255 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள 6 பிரிவுகள் கனரக இரசாயனம், உரத் தொழில் குறித்த ஊதியக் குழுவின் பரிந்துரைகளை இதுவரையில் செயல்படுத்தியுள்ளன.

12. தொழிற் சங்கங்கள்.—1970 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் அன்று இருந்த பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 1,758 ஆகும். நடப்பாண்டில், 301 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 196 சங்கங்களின் பதிவுகள் நீக்கப்பட்டன. 7 சங்கங்கள் கலைக்கப்பட்டன. அதன் மூலம் நடப்பாண்டின் இறுதியில் இயங்கும் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 1,856 ஆக ஆனது. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் அமைக்கும் கருத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

13. தொழிற்சாலையில் ஒழுங்கு முறை விதிக் கோவை.—ஒழுங்கு முறை விதிக்கோவை முதலியவற்றைச் செயல்படுத்தும் பணி மாநில மதிப்பீடு-செயல்படுத்துக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விதிக் கோவையின் விதித் துறைகள் அச்சிடப்பட்டு, வேலை அளிப்போருக்கும், தொழிலாளர் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டன. பல்வேறு தொழில் உரிமையாளர்கள்,

[1971 ஜூலை 22

பணியாளர் சங்கங்கள், மத்திய நிறுவனங்களுடன் இணைக்கப்படாத உள்ளூர் சங்கங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு, ஒழுங்குமுறை விதிக்கோவைக்கு ஏற்பளிக்கும்படி, அவர்களுக்கு ஆலோசனை கூறுமாறு தொழிலாளர் நல அதிகாரிகள், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் ஆகியோர் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் நன் முயற்சிகளினால் 2,176 தொழிற் சங்கங்கள், 260 நிர்வாகத்தினர், 24 உள்ளூர் சங்கங்கள் ஆகியவை ஒழுங்குமுறை விதிக்கோவையைத் தாம் ஏற்றுக்கொள்ளுவதாக 1970 டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை எழுத்து மூலம் தெரிவித்துள்ளன.

ஒழுங்குமுறை விதிக் கோவையை மீறுதல், தீர்ப்புகளைச் செயற்படுத்தாமை, சங்கங்களுக்கு ஏற்பளிக்காமை முதலியவற்றிற்காக தொடரப்பட்ட 77 வழக்குகளில் (1970 ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் அன்று முடிவுறாத நிலையில் உள்ள வழக்குகள் 37; 1970-ல் அறிவிக்கப்பட்ட வழக்குகள் 40), 1970-ல் 36 வழக்குகள் முடிக்கப்பட்டன. ஆண்டு முடிவில் 41 வழக்குகள் பற்றி புலனாய்வு செய்யப்பட்டு வந்தன.

மாநில மதிப்பிடுதல்—செயற்படுத்துதல் குழு 1970 ஜனவரி திங்கள் 24-ஆம் நாள், 1970 செப்டம்பர் திங்கள் 3-ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடி, ஒழுங்குமுறை விதிக் கோவையினை மீறுதல், சங்கங்களுக்கு ஏற்பளித்தல், மதிப்பிடுதல், செயற்படுத்துதல் தொடர்பான பணிகள் ஆகியவற்றைப்பற்றி விவாதித்தது. இக் குழு 1970 ஜனவரியில் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது. தொழிலாளர் நல ஆணையாளர் இதன் தலைவர் ஆவார். தொழிலாளர் தனித் துணை ஆணையாளர் இக் குழுவின் செயலாளராவார்.

14. **1965-ஆம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கல் சட்டம்**—இச் சட்டத்தின் 19-வது பிரிவின் கீழ் பூரிப்பூதியம் வழங்குவதற்கான கால அளவை நீட்டிக்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. இவ்வாண்டில் 77 தொழில் நிறுவனங்களுக்குக் (4 கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட) கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1965-ம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கல் விதிகளின் 3 (b) விதியை 1965-ஆம் ஆண்டு பூரிப்பூதியம் வழங்கல் சட்டத்தின் 2(1) பிரிவுடன், சேர்த்துப் படிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளவாறு நிர்வாகத்தினர் தங்களது கணக்கு ஆண்டை மாற்றிக்கொள்வதற்கு ஒரு நிறுவனத்தை அனுமதித்து 1970-ல் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணை பிறப்பித்தார்.

## IV.

### சமூகப் பாதுகாப்புச் சட்டம் இயற்றுதல்.

**1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம்.**—1969-ஆம் ஆண்டில் 694 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கையில், இவ்வாண்டில், 1,024 விண்ணப்பங்கள் பதிவாகியுள்ளன. 1970-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள், 1-ஆம் நாளின்படி 428 விண்ணப்பங்கள்



1971 ஜூலை 22]

முடிவுறு நிலையில் உள்ளன. மொத்தம் 1,452 விண்ணப்பங்களில் 1970-ல் 1,092 விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்கப்பட்டன. (1969-ல் 682 விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்கப்பட்டன).

தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் இழப்பீடு கோருகின்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு அரசுச் செலவில் வழக்குரைஞர் பணியை ஏற்படுத்தித் தருவதற்காக 1975-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாள் வரையிலான ஐந்து ஆண்டுக்கால அளவிற்கு இவ்வரசு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 வழங்க ஏற்பாடு செய்துள்ளது. தொழிலாளர் இழப்பீட்டுக் கூடுதல் ஆணையாளரின் ஆணைகளுக்கு எதிராக தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தினர் மேல் முறையீடு செய்யும் பொழுது, தொழிலாளர் உயர் நீதிமன்றத்தில் அதை எதிர்த்து வழக்காடுவதற்காக, காயமடைந்த பணியாளருக்கோ அல்லது இறந்துவிட்ட பணியாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கோ வழக்குரைஞரை நியமிப்பதற்கான உதவியும் வழங்கப்படுகிறது. (ஆனால், இத்தகைய நேர்வுகளில் தொழிலாளர் இழப்பீட்டுக் கூடுதல் ஆணையாளரின் முன்பு வழக்கு நடப்பதற்காக ஏற்கனவே இத்தகைய உதவி அளிக்கப்பட்டிருக்கவேண்டும்). 1970-ல் இரண்டு வழக்குகளில் சட்ட உதவிக்காக ரூ. 80 வழங்கப்பட்டது.

2. **1961-ஆம் ஆண்டு பேறுகால நலச் சட்டம்.**—1961-ஆம் ஆண்டு பேறு கால நலச் சட்டம் (மத்திய சட்டம்) அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் இவற்றின் விதித்துறைகளின்கீழ் பெண் தொழிலாளர்களுக்கான பேறுகால நலன் வழங்குதல் 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து முறைப்படுத்தப்பட்டுள்ளது.

3. **1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதிச் சட்டம்.**—தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு கணிசமான அளவில் நிதிப் பாதுகாப்பு வழங்குதல், உற்றுழிப் பொருளுதவி அளித்தல் ஆகியவற்றில் 1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதிச் சட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. 1970-ல் இச் சட்டம் மேலும் ஒரு தொழிலுக்கு அதாவது "பொது ஈட்டுறுதிப் பணிகளில் மட்டும் ஈடுபட்டுள்ள பணியாளரமைப்பிற்கு" இச் சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, 1969-ல் 123 தொழிற்சாலைகள்/பணியாளரமைப்பின் வகைகள் இச் சட்டத்தின்கீழ் பயனடைந்திருக்க, 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை 124 தொழிற்சாலைகள்/பணியாளரமைப்பின் வகைகள் இச் சட்டத்தின் செயல் வரம்புக்குள் வந்துள்ளன. தமிழ்நாட்டில், 1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின்கீழ் 6,000 பணியாளர் அமைப்புக்கள்/தொழிற்சாலைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் பணியாளரமைப்புகளில் உள்ள தொழிலாளர்கள்/சந்தாதாரர்களின் எண்ணிக்கை முறையே 5,96,562, 5,27,226 ஆகும்.

[1971 ஜூலை 22

**4. உதவித் தொகைகள்/நிர்வாகச் செலவுகள்/ஆய்வுக் கட்டணங்கள் பற்றிய கேட்பு/வசூல்/நிலுவை குறித்த புள்ளி விவரங்கள்.—**

| நிலுவையின் தன்மை. | கேட்பு 1970 செப்டம்பர் 30-ம் நாள் வரை. | வசூல், 1970 செப்டம்பர் 30-ம் நாள் வரை. | 1970 அக்டோபர் 1-ஆம்நாளின் படி நிலுவை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| நடப்பு உதவித் தொகை. | 8,94,78,475·62 | 7,79,91,329·90 | 1,14,87,145·72 |
| நிர்வாகச் செலவு | 21,60,786·27 | 19,39,325·95 | 2,21,460·32 |
| ஆய்வுச் செலவு .. | 2,92,870·79 | 2,92,565·09 | 305·70 |
| முந்தைய ஆண்டில் சேர்ந்து வந்த தொகை. | 25,90,418·94 | 25,72,064·41 | 18,354·53 |

பொருளாதாரச் சீர்கேடு, குறிப்பாகப் பஞ்சாலை, பொறியியல் தொழில்களில் ஏற்பட்ட மந்தம் காரணமாக இந்த நிலுவைத் தொகை பெருகியுள்ளது. சென்ற ஆண்டில், பொருளாதாரச் சீர்கேட்டினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இத் தொழிற்சாலைகள் சிறிது சிறிதாக அதிலிருந்து விடுபட்டு வருகின்றன. அவற்றிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகைகளை இயன்ற வரையில் வசூலிப்பதற்கு மாநில அரசின் உதவியுடன் தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1952-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின்கீழ் வலுக்கட்டாய முறைகள் மூலம் அதாவது, நிலுவைகளை நிலவரி போல் வசூல் செய்தல், இழப்பீட்டுத் தண்டத் தொகைகள் விதித்தல், தொகை செலுத்தத் தவறிய நிறுவனங்கள்மீது வழக்கு தொடருதல், முதலிய வலுக்கட்டாய நடவடிக்கைகள், தொகை செலுத்தத் தவறிய நிறுவனங்கள் மீது எடுக்கப்பட்டுள்ளன. ஆயினும், இவ்வாறு தொகை முழுவதையும் வசூலிப்பது அத் தொழில் சீரடைவதைப் பொறுத்ததாகும்.

5. வட்டி வீதம்.—1970-71-ஆம் நிதி ஆண்டிற்கு தொழிலாளர் வருங்கால வைப்புநிதியில் ஒவ்வொருவரின் கணக்கிலும் உள்ள தொகைக்காக 5.70 சத வீதம் வட்டி வரவு வைக்கப்பட்டுள்ளது, முந்தைய ஆண்டில் 5·50 சதவீத வட்டியே அனுமதிக்கப்பட்டது என்பது ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

6. முன்பணங்கள்.—இந்த ஆய்வு ஆண்டில் திரும்ப வசூலிக்காத முன்பணமாக ரூ. 100 லட்சம் வரையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**7. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளைத் தீர்த்து இறுதியாகத் தொகை கொடுத்தல்.**—1969-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள்வரை உள்ள கால அளவில் வருங்கால வைப்பு நிதியிலிருந்து கணக்குத் தீர்த்து பணம் கொடுக்கும் வகையில் ரூ. 3,42,61,323.95 வழங்கப்பட்டிருக்கையில், 1970-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் செப்டம்பர்



1971 ஜூலை 22]

திங்கள் 30-ஆம் நாள் வரையுள்ள கால அளவில் இவ்வகையில் ரூ. 2,34,55,311.13 வழங்கப்பட்டது. தவிர, இறந்துவிட்ட 328 உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு/நியமனதாரர்களுக்கு மரண நிவாரண நிதியிலிருந்து கூடுதல் பயனாக ரூ. 1.17 லட்சம் வழங்கப்பட்டது.

8. ஆண்டுக் கணக்கு விவரம் அளித்தல்.—உறுப்பினர்களுக்குக் கொடுக்கவேண்டிய 1969-70-க்கான 466,825 ஆண்டுக் கணக்கு விவரத்தில் 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரை 126,524 பேர்களுக்குக் கணக்கு விவரம் அனுப்பப்பட்டுள்ளது.

**9. வட்டாரக் குழு-தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதி—தமிழ் நாடு வட்டாரம்**—தமிழ் நாடு வட்டாரத் தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி, வட்டாரக் குழு ஆய்வு ஆண்டில் 1970ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10ஆம் நாளிலும், ஜூன் திங்கள் 27ஆம் நாளிலும் கூடியது. இக்கூட்டம், 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் செயல்படுவது தொடர்பான பல் வேறு பொருள்கள் பற்றி விரிவாக விவாதித்தது.

**10. ஆய்வு ஆண்டில், 1952ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்திற்கு முக்கியமான திருத்தங்கள்.**—(1) கீழ்க் கண்ட தொழில் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள், 1970-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1-ம் நாள் முதல் 50 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பணிபுரிகின்ற தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஆகியோருக்குக் கொடுக்கவேண்டிய உதவித்தொகையை அவர்களது சம்பளத்தில் 8 சத வீதமாக உயர்த்துவதற்குத் தேவையான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன:—

(i) பயண முகவரமைப்புகள் ; (ii) அனுப்பும் முகவரமைப்புகள் ; (iii) மாக்னசைட் சுரங்கங்கள் ; (iv) கல் வெட்டி எடுக்குமிடங்கள் ; (v) இரும்புக் கலப்பற்ற உலோகங்களும் உலோகக் கலவைகளும் ; (vi) அகர் ஊதுவத்தி.

(2) சுடு செங்கல்லுக்குரிய களிமண் கிடைக்கும் சுரங்கம், ஜிப்சம் சுரங்கம் ஆகியவை, தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் 2-வது பாரா (KKK) வில் கூறியுள்ளபடி குறிப்பிட்ட காலங்களில் செய்யப்படும் தொழில்கள் என அறிவிக்கப்பட்டுள்ளன.

(3) விலக்களிக்கப்பட்ட / விலக்களிக்கப்படாத பணியாளரமைப்பில் பணிபுரியும் தொழிலாளர்கள், வருங்கால வைப்புநிதிச் சேர்ப்புத் தொகைகளை முதலீடு செய்வதற்கு இந்திய அரசு 1970-ம் ஆண்டு எப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட முதலீட்டு முறையை வகுத்துள்ளது:—

(i) மத்திய அரசு ஈட்டு ஆவணங்களில் 50 சத வீதத்திற்குக் (Central Government Securities) குறையாமல்.

(ii) மாநில அரசால் வெளியிடப்பட்ட ஈட்டு ஆவணங்களில், சிறு சேமிப்புகளில், மத்திய/மாநில அரசால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிற ஈட்டு ஆவணங்களில். } எஞ்சியவை.

**11. தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டம்.**—1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் அன்று நிலவரப்படி இம் மாநிலத்தில் 35 இடங்களில் தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டம் செயலிலுள்ளது. இத் திட்டத்தின்கீழ் 3,84,600 குடும்பப் பிரிவுகள் அடங்கிய நிலையில் தோராயமாக 15,38,400 பேர் பயனடைகிறார்கள். மேற்சொன்ன இடங்களில், இத் திட்டத்தின்கீழ் 90 முழுநேர தொழிலாளர் அரசு காப்புறுதி மருந்தகங்களும், 9 இயல் மருந்தகங்களும், (Mobile Dispensaries) தொழிலதிபர்கள் பயன்படுத்திக் கொள்ளத்தக்க 3 மருந்தகங்களும், 2 பகுதிநேர மருந்தகங்களும் செயல்படுகின்றன.

1970-71-ல் தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, விக்கிரமசிங்கபுரம் ஆகிய இடங்களில் காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 1970ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 13ஆம் நாளிலிருந்து மருத்துவ வசதியை அரசு நீட்டித்துள்ளது.

இவ்வாண்டில், கீழ்க்கண்ட இடங்களில் அவற்றிற்கு எதிராகக் குறிப்பிட்டுள்ள நாளிலிருந்து இத் திட்டம் செயற்படுத்தப் பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| (1) | இராமநாதபுரம் மா ட்டம். [illegible] நகர் நகராட்சி எல்லைக்கு வெளியே அடுத்துள்ள தொழிற்சாலைப் பகுதி. | 1970-ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 27-ஆம் நாள். |
| (2) | தென் ஆற்காடு மாவட்டத்தின் நெல்லிக்குப்பம், வடலூர் ஆகிய இடங்களில். | 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாள். |

சென்னைக்கு அருகில் உள்ள மீஞ்சூரில் 1971ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13ஆம் நாள் அன்று, புதிய தொழிலாளர் அரசு காப்புறுதி மருந்தகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. மற்றொரு மருந்தகம் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 29ஆம் நாளில் சேலம் மாவட்டம், கோனூரில் (இராமன் நகர்) திறக்கப்பட்டுள்ளது. பழனி, நெய்க்காரப்பட்டி (மதுரை மாவட்டம்), திருச்சிராப்பள்ளி மாவட்டம், உசிலம்பட்டி (மணப்பாறை), ஆகிய இடங்களில், காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் 1971ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26ஆம் நாள் முதல் தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகள் நீட்டிக்கப் படுகிறது.

**12. மருத்துவமனை.**—சென்னை, அய்யனாவரத்தில் தொழிலாளர் அரசு காப்புறுதிப் பிணியாளர்களுக்கென்றே எல்லா மருத்துவ வசதிகளும் நிறைந்த மருத்துவமனையொன்று 1962ஆம் ஆண்டு ஏப்ரலிலிருந்து செயல்பட்டு வருகிறது. சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இத் திட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களது குடும்பங்களுக்கு இத்திட்டத்தை நீட்டித்துள்ளதையொட்டி அம் மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கை 625-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் 300 படுக்கைகள் கொண்ட புதிய தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்ட மருத்துவமனை ஒன்று 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாளிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இதைப் போன்ற மருத்துவமனை ஒன்று 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13-ஆம் நாளிலிருந்து மதுரையில் செயல்படத் தொடங்கியுள்ளது.





வார்டுகளும், இணைப்புகளும்.—தாம்பரம் அரசினர் எலும்பு உருக்கி நோய் நலம்பேண் மருத்துவமனையில் 52 படுக்கைகள் கொண்ட தொழிலாளர்கள் அரசு காப்புறுதி வார்டுகள் நிலையாகத் தொடங்கப்பட்டுள்ளன. சிவகாசி, அரசினர் மருத்துவமனையில் 12 படுக்கைகளுடன் கூடிய தொழிலாளர் அரசு காப்புறுதி பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. லால்குடி அரசினர் மருத்துவ மனையில் தொழிலாளர்கள் அரசு காப்புறுதி நோயாளிகளுக்கென்றே 10 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்று கட்டி முடிக்கப் பட்டுள்ளது. கோவில்பட்டி அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு காப்புறுதி வார்டு ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நாகர்கோவில் அரசினர் மருத்துவமனையில் 26 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு காப்புறுதி எலும்பு உருக்கி நோய் வார்டு ஒன்றும், பெண்ணாத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்) அரசினர் எலும்புருக்கி நோய் நலம்பேண் நிலையத்தில் 16 படுக்கைகள் கொண்ட எலும்பு உருக்கி நோய் வார்டு ஒன்றும் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நாகர்கோவிலில் உள்ள எலும்பு உருக்கி நோய் வார்டு செயல் படத் தொடங்கியுள்ளது. காவேரி நகர், உசிலம் பட்டி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் அரசு காப்புறுதி மருந்தகங்கள் ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள் கொண்ட வார்டுகள் அமைப்பிற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**13. தொழிலாளர் அரசு காப்புறுதி மருந்தகங்கள்.**—இவ்வாண்டில், சூளை, திருவல்லிக்கேணி ஆகிய இடங்களில் உள்ள இரண்டு தொழிலாளர் அரசு காப்புறுதி மருந்தகங்கள் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் அன்று செயல்படத் தொடங்கின. இத்துடன், கீழ்க்கண்ட இடங்களில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடங்களில் தொழிலாளர் அரசு காப்புறுதி மருந்தகங்கள் செயல்படுகின்றன:—

1. தண்டையார்பேட்டை.
2. பெரம்பூர்-I.
3. செம்பியம்.
4. சிங்காநல்லூர்.
5. ஒண்டிப்புதூர்.
6. சௌரிப்பாளையம்.
7. உப்பிலிப்பாளையம்.
8. வெள்ளலூர்.
9. சிவகாசி.
10. இராஜபாளையம்.
11. தூத்துக்குடி.
12. வி. கே. புரம்
13. காவேரி நகர்.
14. இராம்ஜி நகர்.
15. மேட்டூர் அணை (மேல் நிலை)
16. மேட்டூர் அணை (கீழ் நிலை).
17. கொண்டித்தோப்பு.
18. கீழ்ப்பாக்கம்.

செய்துள்ளார். குறைத்துப் பரிந்துரை செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு வருமாறு :—

| திட்டத்தின் பெயர் | நான்காவது ஐந்தாண்டுத் திட்டம். |
|---|---|
| | ரூ. |
| அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (பொதுத் துறை). | 45 லட்சம். |
| அரசு உதவி பெறும் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம் (தனியார் துறை). | 20 லட்சம். |
| மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம். | 5 லட்சம். |

1969-70-ல் பீளமேட்டில் 12 வீடுகளுக்கான கட்டிட பணிகளுக்காக ரூ. 2.91 லட்சம் செலவிடப்பட்டு, பணியும் முடிக்கப் பட்டுவிட்டது.

நடப்பாண்டில் (1970-71), பொதுத் துறையில் வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்ற வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 9 லட்சமும், திருத்த மதிப்பீட்டில் ரூ. 1.23 லட்சமும் ஒதுக்கப் பட்டுள்ளது. 1970-ல் ரூ. 0.28 லட்சம் செலவு செய்யப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பீளமேட்டில் (கோயம்புத்தூர் மாவட்டம்) 12 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது.

18. **தனிப்பட்ட தொழில் உரிமையாளர் திட்டம்.**—1970-71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.25 லட்சமும், திருத்த மதிப்பீட்டில் ரூ. 0.50 லட்சமும் இத்திட்டத்திற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. முண்தயம்பாக்கம், திருவாளர்கள் தென் இந்தியா உருக்கு-சர்க்கரை (தனியார்) நிறுவனம், தனது தொழிலாளர் களுக்கு 10 வீடுகள் கட்டிக்கொள்வதற்காக அதற்கு நிதி உதவி செய்யும் செயற்குறிப்பிற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. விலாங்குடி ஸ்ரீ விசாலாட்சி ஆலை (பிரைவேட்) லிமிடெட்-ன் நிர்வாகத்தினர் 1970-ல் செம்டம்பர் திங்கள் 30-ம் நாளில் 8 வீடுகளைக் கட்டி முடித்துள்ளனர்.

1970 ஜூலைத் திங்கள் 8-ம் நாளன்று நடத்தப்பட்ட, அரசுத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 19-வது கூட்டத்தில், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் தங்களது தொழிலாளர்களில் 4 சத வீதத்தினருக்கு வீட்டு வசதி வழங்க வேண்டும் என்று தொழிலாளர் நல அமைச்சர் வேண்டுகோள் விடுக்க வேண்டுமென முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, தொழில் நிறுவன உரிமையாளர்களுக்கு அரசு வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

19. **மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.**—1958-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்ட விதிகளையொட்டி மலைத் தோட்டச் சொந்தக்காரர்கள்





தங்களது தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுப்ப தற்காக அவர்களுக்கு உதவி செய்வது இத்திட்டத்தின் நோக்க மாகும். 1966-லிருந்து ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து அரசு உதவிபெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தைப் போன்று மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டமும் உதவித் தொகை அளிக்க வகை செய்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடாகிய ரூ. 10 லட்சத்தை மலைத் தோட்ட தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்திற்கு திட்ட மொத்தத்தில் ரூ. 5 லட்சமாகக் குறைக்கும்படி திட்ட ஆணைக் குழுவின் ஆலோசகர் பரிந்துரைத்துள்ளார். 1970-71-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 1.00 லட்சமாகும். ஐந்து எஸ்டேட்களிலிருந்து (அதாவது வேவர்லி எஸ்டேட், கோப்லில் எஸ்டேட், அப்பாவு காப்பி எஸ்டேட், லட்சுமி எஸ்டேட், சேர்வராயன் எஸ்டேட்) 40 வீடுகள் கட்டுவதற்காக விண்ணப்பங்கள் வந்துள்ளன. மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கான திருத்தப் பட்ட மலைத்தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்திற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. மேற்சொன்ன எஸ்டேட்களிலிருந்து வந்த விண்ணப்பங்கள், ஏர்க்காடு மலைத் தோட்ட ஆய்வாளரிடம் நேரிடச் சோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. அவரிடமிருந்து அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர் நல ஆணையாளரின் தலைமையில் இக்குழு 1970 பிப்ரவரித் திங்கள் 23-ஆம் நாளன்று நாகர்கோயிலில் கூடியது. 1970 மே திங்கள் 22-ஆம் நாளன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் உதகமண்டலத்தில் கூடி, 1951-ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1955-ஆம் ஆண்டு தமிழ் நாடு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகள் ஆகியவற்றை செவ்வையாகச் செயற்படுத்துவது பற்றிய வழிவகைகளை ஆலோசித்தது.

20. **தொழிலாளர் கல்வி.**—தொழிலாளர்கள் கல்வித் திட்டம், இந்திய அரசால் நாடு முழுமையிலும் அறிமுகப்படுத்தப்பட்டு, 1969-70-ல் தொடர்ந்து வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் உள்ள வட்டார நிலையங்கள் தொழிலாளர் பயிற்சி ஆசிரியர்களுக்கு கீழ்க் கண்டவாறு பயிற்சி அளிக்கின்றன :—

| | சென்னை. | மதுரை. | கோயம் புத்தூர். |
|---|---|---|---|
| நிறைவேற்றி முடிக்கப்பட்ட தொழிலாளர்—ஆசியர்கள் பயிற்சி வகுப்பின் எண்ணிக்கை. | 4 | 27 | 4 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்—ஆசிரியர்கள். | 96 | 98 | 80 |
| பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 4,820 | 5,920 | 2,746 |

| | |
|---|---|
| **19.** திருவொற்றியூர். | **26.** பரவை. |
| **20.** செங்குன்றம் (**Red Hills**). | **27.** உடுமலைப்பேட்டை. |
| **21.** அம்பத்தூர். | **28.** பல்லாவரம். |
| **22.** ஆவடி. | **29.** முனிச்சாலை ரோடு. |
| **23.** திருநகர். | **30.** திருப்பூர். |
| **24.** பொன்னகரம். | **31.** கும்பகோணம். |
| **25.** பழங்காநத்தம். | **32** கோவில்பட்டி. |

பணியாளர்கள் குடியிருப்புகளுடன் கூடிய மேற்சொன்ன மருந்தகங்கள் ரூ. 206 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

14. செலவு.—தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு ஆகும் செலவு முதலில் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, காப்புறுதி செய்து கொண்ட தொழிலாளருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்ற இடங்களில் இச் செலவை 7:1 என்ற விகிதத்திலும் காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு மட்டும் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்ற இடங்களில் 3:1 என்ற விகிதத்திலும் மாநில அரசும், தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகமும் பகிர்ந்து கொள்கின்றன. கட்டிட செலவு முழுவதையும் தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம் ஏற்றுக்கொள்கிறது. 1970 ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் 1970 டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரையில் கொடுக்கப்பட்ட ரொக்கப் பண உதவி புள்ளி விவரம் வருமாறு:—

| | | ரூ. |
|---|---|---|
| (அ) | தற்காலிக ஏலாமை நல உதவி .. .. .. | 11,52,967·47 |
| (ஆ) | நிலையாக ஏலாமையுற்றோர் நல உதவி .. .. | 10,90,077·11 |
| (இ) | ஏலாமையுற்றோர் நல உதவி .. .. .. .. | 1,32,546·91 |
| (ஈ) | நோய்க்கால உதவி .. .. .. .. .. | 91,68,597·33 |
| (உ) | நாள் பட்ட நோய்க்கால உதவி .. .. .. | 5,96,099·40 |
| (ஊ) | பேறுகால நல உதவி .. .. .. .. | 4,71,678·53 |
| (எ) | இறுதிச் சடங்குகளுக்கான செலவுத் தொகை .. | 60,100·00 |
| | மொத்தம் .. | 1,21,11,116·22 |

இத் திட்ட உதவியை நீட்டிக்கவும் சமூக நல நடவடிக்கையின் கீழ் அதிகப்படியான பகுதியைக் கொண்டுவரவும் அதிகமான தொழிலாளர்களையும் அவர்தம் குடும்பத்தினரையும் பயனடையச் செய்யவும் அரசு விரும்புகிறது. எனினும், தொழிலாளர்கள் அரசு காப்புறுதிக் கழகம் விதித்த மருத்துவ வசதிச் செலவுக்கான மேல் வரம்பு காரணமாக இக் குறிக்கோள் அளவை அடைய முடியவில்லை. தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம், இத் திட்டத்தின் கீழ் ஒரு தொழிலாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 வரையில்தான் மருத்துவ வசதி வழங்கவேண்டும் என்று தொடக்கத்தில் மேல் வரம்பு விதித்தது. முன்னாள் தொழிலாளர் நல அமைச்சரின்





தலைமையில் அனுப்பப்பட்ட மாநிலக் குழு இந்திய அரசிடம் குறிப்பு ஒன்றைக்கொடுத்து மேல்வரம்பை நீக்கும்படி கோரியதன் பயனாக, வரையறுக்கப்பட்ட மருத்துவ வசதிக்காக தொழிலாளர் குடும்பம் ஒன்றிற்கு 50 ஆகவும், விரிவு படுத்தப்பட்ட மருத்துவ வசதிக்கு ரூ. 54 ஆகவும், மருத்துவமனை தங்க வசதி உட்பட முழு மருத்துவ வசதிக்கு ரூ. 64 ஆகவும் மேல்வரம்பைத் தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம் திருத்தியமைத்தது. எனினும், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் இந்த மேல் வரம்பை விட மருத்துவச் செலவு அதிகப்படுமேயானால் அச் செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகம் அச் செலவில் ஒரு பகுதியைக் கூட ஏற்காது. திருத்தி அமைக்கப் பட்ட மேல் வரம்பின் விளைவாக மாநில அரசு கூடுதலாக ரூ. 125 லட்சம் செலவு ஏற்க வேண்டியிருக்கும்.

**15. தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ் குடும்ப நலத் திட்டம்.**—சென்னை அய்யனாவரத்திலுள்ள தொழிலாளர் அரசு காப்புறுதி மருத்துவமனை, முனைப்புத் திட்டத்தின்கீழ் கருத்தடை அறுவை மருத்துவம் செய்வதற்கான ஏற்பளிக்கப்பட்ட அறுவை மருத்துவ நிலையமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டத்தின்கீழ், காப்புறுதி செய்துகொண்ட தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகின்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள எல்லா மருத்துவச் சாலைகளிலும் குடும்ப நலத்திட்ட மருந்தகங்கள் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**16. அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.**—1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் வரம் பெல்லைக்குட்பட்ட தொழிலாளர்களுக்கும், நிலக்கரி மைக்கா சுரங்கங்களைத் தவிர ஏனைய சுரங்கங்களில் பணி புரிகின்ற தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி கிடைக்கும் வகையில், தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தை அமைக்கும் நோக்கத்துடன் அரசு உதவி பெறும் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தை இந்திய அரசு தொடங்கியது. இத் திட்டத்தின்கீழ், மாநில அரசு. சட்டப்படிக்கான வீட்டு வசதி வாரியம், தொழிலதிபர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய வற்றிற்கு கடனாகவும், உதவித் தொகையாகவும் இந்திய அரசு நிதி உதவி வழங்குகிறது.

**17. பொதுத் துறை.**—பொது, தனியார், கூட்டுறவுத் துறைகளுக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 150 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் வீட்டு வசதிக்கான நிதி ஒதுக்கீட்டில் சுமார் 50 சதவிகிதத்தைக் குறைக்குமாறு திட்ட ஆணைக் குழுவின் ஆலோசகர் பின்னர் பரிந்துரை

[1971 ஜூலை 22

துறையின் ஆதரவின்கீழ் தொழிற்சாலைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு "கேர்" உணவு வழங்கப்படுவது இந்நாட்டில் இதுவே முதல் முயற்சியாகும்.

கேர் நிறுவனத்தினர் முற்போக்கு நிர்வாகத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இத் திட்டம் தற்போது 78 தொழிற்சாலைகளிலும், மலைத் தோட்டங்களிலும் செயற்படுத்தப்படுகிறது. இதனால் 29,398 பேர் பயனடைகிறார்கள்.

**எடைகளும், அளவைகளும்.**—தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு எடைகள், அளவைகள் (செயற்படுத்துதல்) சட்டம் எடைகள்—அளவைகளின் தரத்தைச் செயற்படுத்துவதற்கும் அது தொடர்பானவற்றிற்கும் வகை செய்கிறது. இச் சட்டம் மாநில முழுமைக்கும் பொருந்துகிறது.

தொழிலாளர் ஆய்வாளர் அலுவலகம், தொழில் நுட்பத் தொழிலாளர் அல்லாத தொழிலாளர் சட்டங்களைத் தவிர எடைகள்—அளவைகள் சட்டத்தையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றது.

தமிழ் நாட்டில் மெட்ரிக் முறை படிப்படியான திட்டத்தின்கீழ் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1967 டிசம்பர் முதல் நாளிலிருந்து எல்லா வகைச் சரக்குகள் பற்றிய வணிக நடவடிக்கைகள் அனைத்திலும் மெட்ரிக் அளவுகளைக் கடைப் பிடிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா நகராட்சிகள், நகரியங்கள். பேரூராட்சிகளில் உணவுத் தானியங்கள், பருப்பு வகைகள், பயறு வகைகள், கூலங்கள் போன்ற பொருட்களை நிறுத்து விற்க வேண்டியது 1968 அக்டோபர் முதல் கட்டாயமாக்கப்பட்டது.

**உரிமங்கள்.**—1970-ல் 101 தயாரிப்பாளர்கள், 518 விற்பனையாளர்கள், 193 எடைகள்—அளவைகள் பழுதுபார்ப்போர் ஆகியோருக்கு எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி உரிமங்கள் வழங்கியுள்ளார்; புதிதாக வழங்கப்பட்ட உரிமங்களும், புதுப்பிக்கப்பட்ட உரிமங்களும் இதில் அடங்கும். முன்னிரு ஆண்டுகளில் வழங்கப்பட்ட உரிமங்களின் நிகரான எண்ணிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1968 | 1969 |
|---|---|---|
| தயாரிப்பாளர்கள் —— —— | 123 | 108 |
| விற்பனையாளர்கள் —— —— | 598 | 522 |
| பழுதுபார்ப்பவர்கள் —— —— | 201 | 191 |

தொழிலாளர் நலத் துறையின் எடைகள்—அளவைகள், பிரிவிற்குச் சென்ற ஆண்டில் தொழிலாளர் நலத்துறையின் எடைகள்—அளவைகள் பிரிவுக்கு உரிமக் கட்டணங்கள், முத்திரைக்



1971 ஜூலை 22]

கட்டணங்கள் ஆகியவை மூலமாக ரூ 12,88,648.63 வருவாய் கிடைத்திருக்க, இந்த ஆண்டில் 1970 டிசம்பர் வரை ரூ. 13,35,856 வருவாய் கிடைத்துள்ளது. முந்திய ஆண்டில் இப்பிரிவு ரூ. 19,34,766 செலவு செய்திருக்க, அறிக்கை ஆண்டில் ரூ. 20,32,372 செலவு செய்தது.

**விளம்பரம்.**—மாநிலம் முழுவதும் 1970 டிசம்பர் திங்கள் 28-ஆம் நாளிலிருந்து 1971 சனவரித் திங்கள் 1-ஆம் நாள் வரை மெட்ரிக் முறையில் விளம்பர வாரம் கொண்டாடப்பட்டது. விளம்பர வாரம் தொடர்பாக, தமிழ் நாடு எடைகள் அளவுகள் கட்டுப்பாடு அதிகாரி "மெட்ரிக் முறையில் எடைகளும் அளவைகளும்" என்பது பற்றி அனைத்திந்திய வானொலியில் 1971 சனவரித் திங்கள் 3-ஆம் நாளன்று ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

**வழக்கு தொடர்தல்.**—1958-ஆம் ஆண்டு தமிழ் நாடு எடைகள்—அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டம், அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகள் இவற்றின் விதித்துறைகளை மீறியதற்காக 1969-70-ல் 608 பேர்களின் மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த 608 வழக்குகளில், 402 வழக்குகள் குற்றத்தீர்ப்பு கண்டு தண்டனையில் முடிந்தன. மூன்று வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டனர். எஞ்சியுள்ள வழக்குகளில் அந்த ஆண்டு முடிவு வரை நீதி மன்றத்தில் விசாரணை முடியவில்லை.

**மாநாடு.**—மாநில எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் 15-வது மாநாடு 1970 நவம்பர் திங்கள் 9-ஆம் நாள் முதல் 1970 நவம்பர் திங்கள் 12-ஆம் நாள் வரை புதுடில்லியில் நடந்தது. அம்மாநாட்டில் தமிழ் நாடு எடைகள் அளவை கட்டுப்பாட்டு அதிகாரியும் கலந்து கொண்டார்.

## தேசிய வேலைவாய்ப்புப் பணி.

1. **வேலை வாய்ப்புகள்.**—சென்னை-35, தொழில், நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை-35-லுள்ள சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், அண்ணாமலை நகர், சென்னை, மதுரை பல்கலைக் கழகங்களிலுள்ள 3 பல்கலைக்கழக வேலை வாய்ப்பு தகவல் வழி காட்டிக் கழகம் ஆகிய சிறப்பு அலுவலகங்களும், திண்டுக்கல், ஈரோடு, புதுக்கோட்டை, காஞ்சீபுரம் ஆகிய இடங்களிலுள்ள 4 துணை வேலை வாய்ப்பு அலுவலகங்களும் உட்பட தமிழ் நாட்டில் 25 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தேசிய வேலை வாய்ப்புப் பணியின் கீழ் உள்ளன.

இரண்டு துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள், செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையில் ஒன்றுமாக அறிக்கைக் கால அளவில் பணி புரியத் தொடங்கின.

1969-70-ல் நிகரான கால அளவை ஒப்புநோக்கும்போது அறிக்கைக் கால அளவில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை, வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, செயல் பதிவு

தொழிலாளர் நல ஆணையாளர் மூன்று வட்டார குழுக்களின் தலைவராக தொடர்ந்து பணியாற்றுகிறார்.

(i) **சென்னை.**—இந்நிலையத்தில் நடத்தப்படுகின்ற தொழிலாளர்—ஆசிரியர் பயிற்சி வகுப்புகளைத் தவிர, தொழிலாளர் கல்வித் திட்டத்தின் மூன்றும் நிலை தொடர்பான பாடங்களிலும், கற்பிக்கும் நவீன உத்திகளிலும் ஆசிரியர்களுக்கு நினைவூட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

தொழிலாளர்களிடையே தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தை நன்கு பரப்புவதற்காக, ஒரு நாள் பள்ளித் திட்டங்கள், மூன்று நாள் கருத்தரங்குகள், கல்வி மன்றங்கள் முதலான குறுகியகாலப் பயிற்சித் திட்டங்களை இந்நிலையம் நடத்துகிறது. மேற்சொன்ன திட்டத்தினால் இதுவரை 2,439 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

தொழிற்சங்கத்தினருக்காக, புதுச்சேரியில், 1970 ஜூன் திங்கள் 29-ஆம் நாள் முதல் 1970 ஜூலைத் திங்கள் 4-ஆம் நாள் வரையில் ஒருவாரம் கோடைகால பயிற்சி நடத்தப்பட்டது. இத் திட்டத்தில் 14 தொழிற் சங்கத்தினர் கலந்துகொண்டனர். இதைப்போன்ற குளிர்கால பயிற்சி ஒன்று 1971 சனவரியில் நெய்வேலியில் நடத்தப்பட்டது.

ஸ்ரீ வேதவிரத பருவா அவர்களைத் தலைவராகக் கொண்ட தொழிலாளர்கள் கல்வி பற்றிய நாடாளுமன்ற மதிப்பீட்டுக் குழு (தொகுதி I) 1970 அக்டோபர் திங்கள் 25-ஆம் நாளன்று வட்டார நிலையத்தைப் பார்வையிட்டு இவ்வட்டாரத்தில் தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவதுபற்றி வட்டார இயக்குநர், கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் விவாதித்தது.

(ii) **மதுரை.**—1970-ஆம் ஆண்டு அனைத்து நாடுகள் கல்வி ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. அனைத்து நாடுகள் கல்வி ஆண்டுக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 1970 நவம்பர் திங்கள் 25-ஆம் நாளன்று மதுரைப் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் தொழிலாளர் கல்வித் திட்டம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

பொதுத் துறை நிறுவனங்களில் தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவது பற்றி சிறப்புக் கருத்தரங்கு ஒன்று 1970 அக்டோபர் திங்கள் 14-ஆம் நாளன்று மதுரையில் நடத்தப்பட்டது. மதுரை, நேரிட பிரச்சார அதிகாரியின் ஒத்துழைப்புடன் ' இவ்வட்டார நிலையம் 1970 டிசம்பர் திங்கள் 22-ஆம் நாளன்று "குடும்பநலத் திட்டம்" பற்றிய சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது.

(iii) **கோயம்புத்தூர்.**—கூடலூரில் நடத்தப்பட்ட தொழிலாளர்கள்—ஆசிரியர்கள் பயிற்சி வகுப்பின் 20-வது பிரிவு, மலைத் தோட்டத் தொழிலாளர்களின் பயனுக்கென்றே சிறப்பாக அமைக்கப்பட்ட திட்டமாகும். இதுவே இதன் சிறப்பு.



கோயம்புத்தூர், பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரியில் 1970-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளன்று அனைத்துநாடுகள் கல்வி ஆண்டு, 1970—தொழிலாளர்கள் கல்விக் கருத்தரங்கு ஒன்றை இந்த நிலையம் நடத்தியது. மாணவர்கள், விரிவுரையாளர்கள் உட்பட சுமார் 90 பேர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

21. **நுகர்வோர் கூட்டுறவு பண்டசாலைகளும் நியாய விலைக் கடைகளும்.**—250 தொழிலாளர் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர் பணி புரிகின்ற தொழில் நிறுவனங்களும், மலைத் தோட்டப் பண்ணைகளும் அங்கு பணி புரிகின்ற தொழிலாளர்களின் பயனுக்கென நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள்/நியாய விலைக் கடைகளை அமைக்கும்படிக் கேட்கப்படுகின்றன. இதுவரை இத்தகைய பண்டசாலைகள்/கடைகள் ' அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை :—

பண்டசாலைகள் 185; கடைகள் 94.

22. **தமிழ்நாடு தொழிலாளர் அரசிதழ்.**—தொழிற் தகராறுகள், வேலை நிறுத்தப்பட்டமை ( work stoppages )தொழிற் சங்கங்கள், முக்கியமான உடன்படிக்கைகள், தொழிலாளர் நீதி மன்றங்கள். சென்னை தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புச் சுருக்கங்கள், உயர்நீதி மன்றம், தலைமை நீதி மன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள், தொழிலாளர்களுக்கான நுகர்வோர் பொருள் விலைக் குறிப்புகள் முதலியவை பற்றிய பயனுள்ள தகவல்கள். புள்ளி விவரங்கள் ஆகியவற்றைத் தரும் நோக்கத்துடன், தமிழ்நாடு தொழிலாளர்கள் அரசிதழ் மாதம் ஒரு முறை வெளியிடப்படுகிறது. தொழிலாளர் பிரச்சினைகள், தொழில் நிர்வாகம் பற்றிய கட்டுரைகளையும், அனைத்து நாடுகள் தொழிலாளர் நிறுவன அறிக்கைகள், இந்திய தொழிலாளர் மாநாடு, தொழிலாளர் நிலைக்குழு, மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்குழு முதலியவற்றின் தீர்மானங்கள், பரிந்துரைகள் ஆகியவற்றையும் இது வெளியிடுகிறது. இவ்விதழின் முக்கிய பகுதியாகிய புள்ளிவிவரப் பகுதி இப்பொழுது தமிழில் அச்சிடப்பட்டு வருகிறது.

23. **வாழ்க்கைச் செலவு புள்ளி.**—இம் மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் அகவிலைப்படி மொத்தத்தில் சென்னை மாநகரத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் இணைந்துள்ளது. இவ்வாண்டில், சென்னை மாநகரில் உள்ள தொழிலாளர்களின் 1960-ஆம் ஆண்டிற்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி வல்லுநர்கள் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க 13.2 புள்ளிகளைக் கூட்டுவதன் மூலம் திருத்தப்பட வேண்டுமென அரசு முடிவு செய்தது. இதனால் 1960-க்கான சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 476-ஆக உயர்ந்துள்ளது. இத்தகைய திருத்தத்திற்குப் பிறகு வாழ்க்கைச் செலவு புள்ளி 1936 சென்னை வரிசையிலிருந்து சிம்லா, தொழிலாளர் கழக இயக்குநரால் தொகுக்கப்பட்ட 1960 அனைத்திந்திய புள்ளிக்கு 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1-ம் நாளிலிருந்து மாற்றப்படவேண்டுமென்றும்

அரசு முடிவு செய்தது. அனைத்திந்தியக் குறியீட்டு எண் ஒன்றைத் தொகுக்கும் பொருட்டு, 1936-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிவரத்தை அண்மையில் உள்ள ஓர் ஆண்டிற்கு மாற்றவேண்டும் என இந்திய அரசு உணர்ந்தது. 1960-ம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு சிம்லா, தொழிலாளர் கழக இயக்குநர் தொகுத்த குறியீட்டு எண்ணைப் பின்பற்றும்படி இவ்வரசை இந்திய அரசு கேட்டுக்கொண்டது. 1936 வரிசையில் பொருத்தமான திருத்தங்களைச் செய்தபிறகு இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில், கடலூர், திருச்சிராப்பள்ளி போன்ற வெளியூர்களின் வாழ்க்கைச் செலவுப் புள்ளியைத் தக்கவாறு மாற்றுவதுபற்றி மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியத்துடன் அரசு கலந்தாலோசித்தது. இந்த ஊர்களின் வாழ்க்கைச் செலவுப் புள்ளியையும் 1970-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாளிலிருந்து சென்னையைப் போலவே திருத்தங்கள் செய்த பிறகு 1960 அடிப்படை ஆண்டிற்கு மாற்றும்படி அரசு ஆணையிட்டுள்ளது.

24. **மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்.**—தொழிலாளர் நல அமைச்சரை தலைவராகக் கொண்ட மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம், மாநில அளவில் பெரும் முக்கியம் வாய்ந்த முக்கூட்டு ஆலோசனை மன்றமாகும். தொழிலாளர்களைப் பாதிக்கின்ற முக்கியமான பிரச்சினைகள் யாவும் இம்மன்றத்திற்கு ஆலோசனைக்காக அனுப்பப்படுகின்றன.

இவ்வாரியத்தின் 19-வது கூட்டம், 1970-ஆம் ஆண்டு மே திங்கள் 23-ஆம் நாளில் உதகமண்டலத்திலும், 1970-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8-ஆம் நாளில் சென்னையிலுமாக இரண்டு கூட்டத் தொடர்களில் நடத்தப்பட்டன. தொழிலாளர்கள் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவது, வாசக்டமி அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தொழிலாளர்களுக்குத் தொகை கொடுத்து ஊக்கமளித்தல், பூரிப்பு ஊதியம் வழங்குதல் சட்டத்தின் திருத்தம், தொழிலாளர்கள் வீட்டு வசதி, தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டம், மருத்துவ வசதி, தொழிலாளர்களை வேலையிலிருந்து தள்ளுவது, அனுப்புவது இவற்றை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கான ஏற்பாட்டுடன் சட்டமியற்றுதல் ஆகியவை இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

மாநில ஆலோசனை வாரியத்தின் 20-வது கூட்டம் சென்னையில் 1970ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாள் அன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், சென்னைமாநகர் தவிர ஏனைய இடங்களுக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளியை 1936 அடிப்படை ஆண்டிலிருந்து 1960 புதிய அடிப்படை ஆண்டிற்கு மாற்றுதல், 50 பேருக்குக் குறைவாகப் பணி புரியும் தொழிற்சாலைகளில் தற்காலிகமாக வேலையை நிறுத்தி வைத்தமைக்காக அத் தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்குதல், வேலை நிறுத்தம், கதவடைப்பு நடைபெறும்போது காவலர்களின் கடமைகள் ஆகியவை விவாதிக்கப்பட்டன.



25. **தொழிலாளர் நல நிதி.**—இந்திய அரசினால் அமைக்கப்பட்ட, தொழிலாளர் நல நிதிக் குழு, சட்ட அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திலும் தொழிலாளர் சேம நல நிதி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. தொழிற்சாலைகள், சட்டம், மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், ஆகியவற்றின் செயல் வரம்புக்கு மேற்பட்டும் வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற தொழிலாளர்களின் நெடுநாளைய கனவை நனவாக்க இந்த நிதி பயன்படுத்தப்படும். தேசியத் தொழிலாளர்கள் ஆணைக் குழுவும் சட்டப்படிக்கான தொழிலாளர் நல நிதி அமைப்பை ஆதரித்துள்ளது.

தமிழ்நாடு அரசு தொழிலாளர் நல நிதி ஒன்று அமைக்க முடிவு செய்து, அதை நிர்வாகிப்பதற்காகத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றையும் அமைத்துள்ளது. தொழிலாளர் நல வாரியத்தின் முதற் கூட்டம் 1971ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26ஆம் நாள் அன்று தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. முக்கியத் தொழிற்சாலை நகரங்களில் அதாவது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் மூன்றினை நிறுவுவதுபற்றியும், இந்நிலையங்களுக்கு நிர்வாகப் பணியாளர்கள் நியமிப்பதற்காக செயற்குறிப்பு பற்றியும் இவ்வாரியம் ஆலோசித்தது. இம் மாநிலத்தில் தொழிலாளர் நல நிதி அமைப்பதற்கு மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 5 லட்சம் தொடக்க மானியம் தருவதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

படிப்பகம்—நூல் நிலையம், மனையக விளையாட்டுகள், திடலில் விளையாடும் விளையாட்டுகள் போன்ற வசதிகள் வானொலிப் பெட்டி வசதி, திரைப்படம் காட்டும் கருவிகள், பெண்களுக்குத் தையல் வகுப்புகள் போன்ற நல வசதிகளை இந்த நல நிலையங்கள் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில் உரிமையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோரை இந் நிதிக்குத் தொகை வழங்குமாறு கோருவதற்கான சிறப்புச் சட்டம் இயற்றுவது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

26. **தொழிலாளர்கள் சத்துணவுத் திட்டம்.**—தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த, பள்ளி செல்லும் வயதடையாத சிறுர்கள், கருவுற்றிருக்கும் மகளிர், கைக்குழந்தைகளுடன் கூடிய தாய்மார்கள் ஆகியோருக்கு சமச்சீர்நிலை உணவு வழங்குவதே தொழிலாளர்கள் சத்துணவுத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தின் கீழ், "கேர்" நிறுவனத்தினர் வழங்கும் அதிகச் சத்துக்கள் அடங்கிய உணவுப் பொருள்கள் சமைக்கப்பட்டு, தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பள்ளி செல்லும் வயதடையாத சிறுர்கள், கருவுற்றிருக்கும் மகளிர், கைக்குழந்தையுடன் கூடிய தாய்மார்கள் ஆகியோருக்கு அவர்களது அன்றாட உணவுக்குக் கூடுதலாக வழங்கப்படுகின்றன. தொழிலாளர் நலத்

[1971 ஜூலை 22

ஏட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கை, அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பணியைப் பயன்படுத்திக் கொண்ட அரசு, தனியார் துறை வேலை கொடுப்பவர்கள் ஆகியோரின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண்ணும், விவரங்களும். | அறிக்கை ஆண்டில், 1970 எப்ரலிலிருந்து நவம்பர் வரை. | 1969–70, வரவு-செலவுத் திட்ட ஆண்டில் 1969 எப்ரலிலிருந்து நவம்பர் முடிய உள்ள கால அளவுக்கு. |
|---|---|---|
| 1. பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை. | 2,79,457 | 2,71,539 |
| 2. வேலையிலமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | 28,552 | 28,508 |
| 3. அறிவிக்கப்பட்ட காலி இடங்களின் எண்ணிக்கை. | 38,762 | 42,074 |
| 4. வேலை வாய்ப்பு அலுவலகத்தைப் பயன்படுத்தும் வேலை கொடுப்போரின் சராசரி எண்ணிக்கை— | | |
| (அ) அரசு (பொதுத்துறை). | 1,167 | 1,106 |
| (இ) ஏனையோர்கள் (தனியார் துறை), | 227 | 354 |
| 5 கால முடிவில் செயல் பதிவேட்டிலுள்ளவர்களின்எண்ணிக்கை. | 4,13,479 (30–11–1970 நிலவரப்படி.) | 3,23,710 (30–11–1969 நிலவரப்படி.) |

## II. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள்.

இவ்வலுவலகம் தமிழ் நாடு முழுவதிலும் உள்ள உடல் ஊனமுற்றோர்களை (குருடர், செவிடர், முடவர்) பதிவு செய்து அவர்களுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பு உதவிகளை வழங்குகிறது. பல்வேறு வகையான உடல் ஊனமுற்ற பதிவாளர்களுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பு அளிப்பதில் இவ்வலுவலகம் தனி முயற்சி எடுத்துக்கொள்கிறது. அரசு இதன் பொருட்டு அரசு தனியார் வேலை கொடுப்பவர்களிடம் நெருங்கிய தொடர்பு கொள்ளவும் அதைப் பேணிப் பாதுகாக்கவும் செய்கிறது. உடல் ஊனமுற்றவர்களை இத்தகைய சிறப்பு முயற்சிகள் மூலமாகவும் வேலை கொடுப்பவர்களின் ஒத்துழைப்பினாலும் மட்டுமே அவர்களுக்குப் பொருத்தமான பணிகளில் அமர்த்த முடிந்துள்ளது.

இவ்வலுவலகம் 1970 ஏப்ரல் முதல் 1970 நவம்பர் வரையுள்ள கால அளவில் 416 உடல் ஊனமுற்றோர்களைப் பதிவு செய்து அவர்களில் 130 பேரை வேலையில் அமர்த்தியுள்ளது.



1971 ஜூலை 22]

## III தொழில்—நிர்வாக வேலை வாய்ப்பு அலுவலகம்.

இந்த அலுவலகம் தமிழ் நாட்டில் தொழில், அறிவியல், பொறி இயல், நிர்வாகம், மேற்பார்வையியல் போன்ற பல வகைகளில் உயர் கல்வியும் தேர்ச்சியும் பெற்றிருப்பவர்களின் வேலை வாய்ப்புத் தேவைகளை நிறைவு செய்வதுடன், அவர்களுக்கு ஏற்ற வேலைகளைக் கண்டறிந்து நல்ல பொருத்தமான பணிகளில் அவர்களை அமர்த்துவதற்காக, இந்த அலுவலகம் அரசு. தனியார் துறையிலுள்ள வேலை கொடுப்பவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்கிறது. இவ்வலுவலகம் அறிக்கை காலத்தில் உயர்ந்த கல்வித் தகுதி பெற்று இருக்கும் 2,975 பேரைப் பதிவு செய்து, 289 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

வேலை காலி இருப்பது பற்றி அறிந்து கொள்ளவும், தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து அனுப்புவதற்கும் இவ்வலுவலகம் மாநில வேலை வாய்ப்பு ஒருங்கிணைந்த அலுவலகமாகவும் செயல்படுகிறது.

## IV அண்ணாமலை, சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிக்காட்டிக் கழகம்.

இக்கழகங்கள் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் மாணவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டி நடவடிக்கைகளை தொடர்வதுடன் இது போன்ற வேலை வாய்ப்பு உதவியை நாடுபவர்களையும் பதிவு செய்து கொள்கிறது.

1970 ஏப்ரல் முதல் நவம்பர் வரை, அண்ணாமலைநகர்ப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகம் 487 பேரைப் பதிவு செய்து 18 பேரை வேலையிலமர்த்தியது. சென்னைப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகம் 322 பேரைப் பதிவு செய்து 24 பேரை வேலையிலமர்த்தியது. மதுரைப் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்—வழிகாட்டிக் கழகம் 441 பேரைப் பதிவு செய்து 36 பேரை வேலையிலமர்த்தியது.

## வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுவதும், வேலை வாய்ப்புப் பற்றி ஆலோசனை கூறுவதும்.

நீலகிரி, தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களைத் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் செயல்படுகின்றன. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் விண்ணப்பதாரர்களின் நன்மைக்காக, தொழில்கள், வேலை வாய்ப்புகள், வாழ்க்கைத் தொழில் பயிற்சி வசதிகள், உதவியாளர் பதவிகள், பற்றிய பயனுள்ள தகவல் தருவதுடன், வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி நிலையங்களாகச் செயல்படுகின்றன. மாவட்டங்களிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் பிரிவுகளிலுள்ள தொகுதியினருக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழிகாட்டியாக இருப்பதுடன் விண்ணப்பதாரர்களுக்கு

[1971 ஜூலை 22

ஆலோசனை நல்குகின்றன. அவை மாவட்டங்களிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள், பிற கல்வி பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, பள்ளிகள் கல்லூரிகளிலுள்ள இறுதி வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழில்கள் குறித்து உரை ஆற்றுகின்றன. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் இந்தப் பிரிவுக்காக இளைஞர்களின் நன்மைக்காக தொழில், வேலை வாய்ப்புத் தகவல்களைத் திரட்டித் தருவதுடன், "மாவட்டங்களில் தொழில் வேலை வாய்ப்புகள் பயிற்சி வாய்ப்புகள்" என்பது பற்றி காலாண்டுச் செய்தி ஏட்டினையும் வெளியிடுகின்றன.

இத்திட்டத்தின் பயனை திட்ட காலத்தில் பயன்படுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது —

| | அலுவலகத்தின் பெயர். | கூட்டாகப் பலருக்கு வழி காட்டுதல் திட்டத்திற்குச் சென்றவர்களின் எண்ணிக்கை. | தனிப்பட்டவர்களுக்குப் பயனுள்ள ஆலோசனை. | தனிப்பட்டோர் ஆலோசனை. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | சென்னை 35 .. .. .. | 26,124 | 516 | 1 |
| 2 | செங்கற்பட்டு .. .. .. | 10,558 | 1,306 | 65 |
| 3 | நெய்வேலி .. .. .. | 4,339 | 56 | 2 |
| 4 | தஞ்சாவூர் .. .. .. | 4,186 | 369 | .. |
| 5 | திருச்சிராப்பள்ளி .. .. .. | 6,550 | 128 | .. |
| 6 | கோயம்புத்தூர் .. .. .. | 8,679 | 204 | .. |
| 7 | சேலம் .. .. .. .. | 3,092 | 613 | 172 |
| 8 | திருநெல்வேலி .. .. .. | 6,435 | 278 | .. |
| 9 | நாகர்கோயில் .. .. .. | 2,972 | 287 | 204 |
| 10 | மதுரை .. .. .. .. | 9,668 | 489 | 341 |
| 11 | இராமநாதபுரம் .. .. .. | 3,400 | 334 | 347 |
| 12 | வேலூர் .. .. .. .. | 6,642 | 856 | 193 |
| 13 | கடலூர் .. .. .. .. | 6,670 | 325 | .. |
| 14 | தருமபுரி .. .. .. .. | 3,037 | 44 | 3 |
| | மொத்தம் | 1,02,352 | 5,805 | 1,328 |

இயக்குநகரத்திலுள்ள மாநிலத் தொழில் வழிகாட்டிப் பிரிவு, நடப்புக் காலத்தில் மாவட்டங்களில், தொழில், வழிகாட்டித் திட்டத்தின் நடவடிக்கைகளை இணைத்தல், கண்காணித்தல், மதிப்பிடுதல், ஆகிய பணிகள் குறித்துத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மாநில தொழில் வழிகாட்டிப் பிரிவின் கண்காணிப்பின் கீழ், தொழில் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்படுவதற்கு,



1971 ஜூலை 22]

வேலை வாய்ப்பு அதிகாரிகளால் ஆர்வத் தேர்வுகள் நடத்தப் பட்டன. சென்னையிலுள்ள சென்னை உற்பத்திக் குழுவிற்கு வேலை பழகுவோர்களை வேலைக்கு எடுப்பதற்கு, மாநில தொழில் வழிகாட்டிப் பிரிவு மூலம் அறிக்கை ஆண்டில் ஆர்வத் தேர்வு நடத்தப்பட்டது.

1970-ஆம் ஆண்டில் அக்டோபர், நவம்பர் திங்களில் சென்னை மாநகரைச் சுற்றிலும், துணைத் தொழில்கள் மேம்பாட்டிற்காக, திருச்சிராப்பள்ளி பாரத் கனரக மின்சக்தி லிமிடெட்டாலும், இந்திய அரசின் கீழ் உள்ள பொதுத் துறை நிறுவனங்களாலும் அமைக்கப்பட்ட இரண்டு பொருட்காட்சிகளிலும் மாநிலத் தொழில் வழிகாட்டித் திட்டத்தின் பணியாளர்கள் கலந்து கொண்டனர். நடுத்தர/சிறு துணைத் தொழில்களை ஆரம்பித்து தாங்களே ஒரு தொழிலில் அமர்வதற்குள்ள பரந்து பட்ட வளங்களை, முக்கியமாக வேலைவாய்ப்பற்ற தொழில் முனைவர்களுக்கு வலியுறுத்திக் கூறுவதற்காக மாநில அரசின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்தப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன.

வழிகாட்டித் திட்டத்தின் பயனுக்காக வேலைவாய்ப்பு குறித்த "வாழ்க்கை வழிகாட்டி" என்னும் துண்டு வெளியீடுகளும் தொடர்ந்து தயாரிக்கப்பட்டன.

## VI வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் திட்டம்.

1970-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து 1970-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரையிலான காலத்தில் வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் திட்டத்தின் கீழ் இரண்டு காலாண்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. இவை, 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 1970-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஆகியவற்றில் முடிவடையும் காலாண்டுகளைச் சேர்ந்தவையாகும். கீழ்க்காணும் அட்டவணை, மேற்கூறப்பட்ட இரண்டு காலாண்டுகளில் கடிதம் அனுப்பப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, பதில் அனுப்பியவர்களின் எண்ணிக்கை, சதவீதம் ஆகியவற்றைக் காண்பிக்கிறது :—

| கீழ்க்காணும் திங்களுடன் முடிவடைந்த காலாண்டு | கடிதம் அனுப்பப் பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | பதில் அனுப்பியவர்களின் எண்ணிக்கை. | சத வீதம். |
|---|---|---|---|
| மார்ச்சு, 1970 .. .. .. | 16,594 | 15,198 | 91·6 |
| ஜூன், 1970 .. .. .. | 16,744 | 15,306 | 91·4 |

1969-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாளோடு முடிவடையும் இரண்டாண்டுக்கொருமுறையான தனியார் பிரிவு வேலை வாய்ப்புத் தகவல் சேகரிப்புப் பணி இந்த அறிக்கை ஆண்டில் முடிவடைந்தது. வேலை வாய்ப்பு குறித்து சேகரித்த தகவல்கள், மாநில வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவில் ஆய்வு

செய்து, தொகுக்கப்பட்டு, இயந்திர முறையில் பட்டியல் படுத்துவதற்காக புதுடில்லியிலுள்ள வேலை வாய்ப்பு-பயிற்சித் தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டன. 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களோடு முடிவடையும் இரண்டாண்டுக்கொரு முறையான தனியார் பிரிவுகள் குறித்து நடத்தப்படும் வேலை வாய்ப்புத் தகவல் சேகரிப்பு பணியும் அறிக்கை ஆண்டிலும் நடைபெற்று வந்தது.

கீழ்க்காணும் சிறப்பு ஆய்வுகள் நடந்து வருகின்றன:—

(1) வேலை பற்றுக்குறை பற்றிய ஆழ்ந்த ஆய்வு.

(2) தமிழ் நாட்டிலுள்ள உப்பளங்களில் வேலை வாய்ப்பு மதிப்பீட்டு ஆய்வு.

(3) சிமிட்டி பயன்படுத்தப்படும் அடிப்படையில், கட்டுமானத் தொழிலில் வேலை வாய்ப்பு மதிப்பீட்டு ஆய்வு.

இதோடு, வேலைவாய்ப்பு, பயிற்சி தலைமை இயக்குநர் அலுவலகத்தால் பொறுப்பேற்கப்பட்ட கீழ்க்காணும் சிறப்பு ஆய்வுகளுக்காக, மாநில வேலை வாய்ப்பு நிலவரத் தகவல் நேரிடப் பணிப் பிரிவுகளால் நேரிடப் பணி நடத்தப்பட்டது.

1. கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற அரிசன வகுப்பைச் சேர்ந்த கைவினைஞருக்கு வேலை வாய்ப்பு நிலைமை குறித்து நிச்சயித்தறியும் ஆய்வு.

2. அரிசனங்கள்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மனுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் குறித்து ஆய்வு.

3. போர்ப்படையிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் படைஞர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளிதற்கான ஏற்பாடு செய்வதைச் சார்ந்த பிரச்சினைகள் குறித்த ஆய்வு.

நடப்பு அறிக்கை ஆண்டில் பொறியியல் பட்டதாரிகளுக்கிடையேயுள்ள வேலையில்லாமையைக் குறைப்பதற்கு, தமிழ் நாடு அரசால் மேற்கொள்ளப்பட்ட தொழில் பழகுவோர் சிறப்புப் பயிற்சித் திட்டம் தொடர்பாக உள்ள அன்றாடப் பணியில் மாநில வேலைவாய்ப்பு நிலவரத் தகவல் பிரிவும் ஈடுபட்டது.

## VII மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு, சென்னை-5.

அறிக்கை ஆண்டில், மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவு, தொழில் ஆய்வு, பகுப்பாய்வு பணி ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது.

நடப்பாண்டில் இப்பிரிவு கீழ்க்காணும் இனங்களில் பணிகளை முடித்துள்ளது:—

1. “குளிரூட்டுதல், வெப்ப சமச் சீர்நிலைப்படுத்துதல் இயந்திரக் கம்மியாரின்” தொழில் வாய்ப்பு குறித்து சிறு புத்தகம் வெளியிடுதல்.



2. உடல் ஊனமுற்றவர்களுக்குத் தக்க விதத்தில் பயிற்சி அளித்து, வேலைக்கமர்த்துதல் குறித்துப் புதிய தொழில்களைக் கண்டறிதல் குறித்த ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது.

3. “விளம்பரப்படுத்துதல்—தொழில் நிலவர ஆராய்ச்சி குறித்த குறிப்பு நூல்” தயாரித்து முடிக்கப்பட்டு, வெளியிடுவதற்காக, வரைவு அறிக்கை, வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதோடு அறிக்கை ஆண்டில் தொடங்கப்பட்ட மீனளத் தொழில் குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது.

தொழில்களைப் பற்றி ஆய்வு நடத்துவதற்குத் தொழில் வாய்ப்புகள் குறித்து தகவல் தயாரிப்பது முதலியவைகளுக்கும் வல்லுநர்களோடு கலந்துரையாடல் நடத்தியதோடு, புதிய தொழில்களைக் கண்டறிவதற்கும், வேலைப் பகுப்பாய்வுகளை நடத்துவதற்கும் இம் மாநிலத்திலுள்ள 92 நிறுவனங்களுடன் தொழில் அதிபர்களுடன் மாநில வாழ்க்கைத் தொழில் தகவல் அறிவிப்பு அதிகாரி தொடர்பு கொண்டார்.

## VIII சென்னை-5-ல் உள்ள வேலை வாய்ப்பு அதிகாரியின் நடவடிக்கைகள்.

ஆய்வு ஆண்டில், 1,115 பர்மா அகதிகளும், 700 இலங்கை அகதிகளும், தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தங்களது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். 220 பர்மா அகதிகளும், 99 இலங்கை அகதிகளும் வேலையில் அமர்த்தப்பட்டனர். 1970-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆம் நாள் நிலவரப்படி, 1,149 பர்மா அகதிகளும், 623 இலங்கை அகதிகளும் வேலை வாய்ப்பு அலுவலகச் செயல் பதிவு ஏடுகளில் பதிவு செய்யப்பட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்த்துள்ளனர்.

1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் நாளிலிருந்து நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தில் மண்வாரிக் கனரக இயந்திரம் இயக்குவதில் 17 அகதிகளுக்குத் தொடக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கு பயிற்சி முடிந்ததும் மேலும் ஓராண்டு பயிற்சி பெறுவதற்குக் கோட்டாவிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்திற்கு அவர்கள் அனுப்பப்பட்டார்கள். நெய்வேலியில் பயிற்சி பெறும் 3 மாத காலத்திற்கு ஒவ்வொரு அகதிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 55 பயிற்சி உதவிப்பணமாக வழங்கப்பட்டது. கோட்டாவிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் கால அளவிற்கு ஒவ்வோர் அகதிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 பயிற்சி உதவிப்பணமாக வழங்கப்பட்டது.

இராம குண்டம், ஆந்தர்கான் ஆலை (ஆந்திரப் பிரதேசம்)-யில் வேலை பார்ப்பதற்கு, 60 அகதிகள் (நெசவுக்கு 30 பேரும், நூற்புக்கு 30 பேரும்) தேவைப்பட்டனர். தமிழ் நாட்டிலிருந்து 60 அகதிகள்

தெரிந்தெடுக்கப்பட்டனர். நெசவு, நூற்பு ஆகியவற்றில் அவர்களுக்கு 3 மாதம் தொடக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்ததும், 1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆந்தர்கான் நூற்பு ஆலைக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். பண்ணை இயந்திரத்தில் சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, புட்னியிலுள்ள டிராக்டர் பயிற்சி—சோதனை நிலையத்திற்கு 3 அகதிகள் அனுப்பி வைக்கப்பட்டனர். 1970-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ஆம் நாளிலிருந்து பயிற்சி வகுப்பு தொடங்கியது.

திருத்தணி, சரஸ்வதி ஆலையில் வேலைக்கு அமர்த்தப்படுவதற்காக 100 அகதிகளுக்குத் தொடக்கப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, ஒப்பளிப்பு வழங்கப்படுவதற்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலூர், ஸ்ரீ வில்லிப்புத்தூர், திருச்செந்தூர் ஆகிய ஊர்களில் உள்ள மூன்று கூட்டுறவு ஆலைகளில் வேலையில் அமர்த்தப்படுவதற்காக விருப்பம் உள்ள அகதிகளிடமிருந்து பெறப்பட்ட 995 மனுக்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. வேலைக்கு அமர்த்தப்படுவதற்காக 52 அகதிகள் (குடும்பங்களோடு) அஸ்தினாபுரம், மதன் தொழிற்சாலைகள் லிமிடெட்டிற்கு 1970-ஆம் ஆண்டு மே மாதம் 12-ஆம் நாள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாறு, தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் கனரக ஊர்தி கம்மியர்—வலவர் பாடமுறைப் பயிற்சி பெற்ற 4 அகதிகள், எ. பா. ப. (எல்லைப் பாதுகாப்புப் படை) காவலர்களாக நியமிக்கப்படத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஷில்லாங்கிலுள்ள சிறப்புப் பிரிவில் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ஆம் நாள் பணியில் சேருமாறு அவர்கள் பணிக்கப்பட்டனர். சென்னையில் இருந்து அவர்கள் ஷில்லாங் செல்வதற்குப் பயண ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மாறுவிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற 5 அகதிகள், அந்தமானிலுள்ள தலைமை வளர்ச்சி ஆணையாளரின் கீழ் டிராக்டர் கம்மியராக நியமிக்கப்படுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும், மாறுவிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் கனரக ஊர்திகள் கம்மியர், வலவர்கள் பாட முறைப் பயிற்சி பெற்ற 13 அகதிகள் மத்திய சேமக் காவலர்களாக நியமிக்கப்படுவதற்கு, மத்திய சேமக் காவற்படை அதிகாரிகளால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## IX உழைப்பு ஆற்றலும் வேலை வாய்ப்புத் திட்டங்களும்—சாதனைகள்.

1969-70-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கீழ்க்காணும் திட்டங்கள், 1970–71-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(அ) மாநிலத் தலைமையிடத்தில் பணியாளர் பயிற்சிப் பிரிவு ஒன்று நிறுவுதல்.

(இ) மாநிலத் தலைமையிடத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.



(உ) மதுரையில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் அறிவிப்பு வழிகாட்டுங் கழகம் ஒன்றை நிறுவுதல்.

(எ) இரண்டு துணை வேலை வாய்ப்பு நிலையங்கள், ஒன்று ஈரோட்டிலும் மற்றது திண்டுக்கல்லிலும் நிறுவுதல்.

(ஒ) ஓர் உதவியாளரையும், ஒரு தொழில் நுட்ப உதவியாளரையும் சேர்த்து மாநிலத் தலைமையிடத்தில், மாநில வாழ்க்கைத் தொழில் வழி காட்டும் பிரிவில் பணியாளரின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குதல்.

(ஔ) தொழில்களில் அமர்வது குறித்து "வாழ்க்கை வழி காட்டி" என்னும் சிறு நூல்களைத் தமிழில் அச்சிடுதல்.

இத் திட்டத்தின்கீழ், குறிப்பிடத்தக்க திட்டக் குறிக்கோள் எதுவும் முடிவு செய்யப்படவில்லை. ஆனால், இதற்கான செலவுக்கு மட்டும் ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் "வாழ்க்கை வழி காட்டி" என்னும் சிறு நூல்களை அச்சிடுவதற்கான தாள்களை வாங்குவதற்காக இதுவரை ரூ. 358 செலவிடப்பட்டுள்ளது.

1970-ஆம் ஆண்டில், செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரத்தில் ஒரு துணை வேலைவாய்ப்பு நிலையமும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையில் ஒரு துணை வேலைவாய்ப்பு நிலையமும் ஆக இரண்டு துணை வேலைவாய்ப்பு நிலையங்கள் 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து செயல்படத் தொடங்கின. இதன் மூலம் துணை வேலைவாய்ப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

## இணைப்பு 2-ஈ

### முக்கியமான புள்ளி விவரங்கள்.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்— | | | ரூ. |
| 1969 .. .. .. .. | 6,218 | 3,92,558 | 16,83,261 |
| 1970 .. .. .. .. | 6,365 | 4,22,640 | 17,42,254 |
| 2. தமிழ் நாடு 1947ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம்— (ஆண்டுத் தொடக்கத்தில்.) | | | |
| 1969 .. .. .. .. | 2,16,538 | 1,84,710 | இதற்கு இடமில்லை, |
| 1970 .. .. .. .. | 2,09,260 | 1,97,695 | ஷை |
| 1971 .. .. .. .. | 2,11,190 | 2,15,155 | ஷை |
| 3. தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவு உபசரிப்பு இயல் நிறுவனங்கள்— (ஆண்டுத் தொடக்கத்தில்-) | | | |
| 1970 .. .. .. .. | 19,720 | 68,608 | 1,22,592·50 |
| 1971 .. .. .. .. | 19,776 | 70 069 | 1,39,452·00 |





## இணைப்பு 2-ஈ—தொடர்ச்சி.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4. 1961-ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம்— | | | |
| 1969 .. .. .. .. | 309 | 85,267 | இதற்கு இடமில்லை |
| 1970 .. .. .. .. | 307 | 85,528 | ஷை |
| 5. 1966-ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம்— | | | |
| 1969–70 .. .. .. .. | 1,139 | 5,542 | 14.591·00 |
| 1970–71 .. .. .. .. | 909 | 1,183 | 12,517·30 |
| 6. 1961-ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்— | | | |
| 1969 .. .. .. .. | 1,061 | .. | 33,542·50 |
| 1970 .. .. .. .. | 1,138 | .. | 43,716·25 |
| 7. 1936-ஆம் ஆண்டு ஊதியம் வழங்குதல் சட்டம்— | | | |
| 1968 .. .. .. .. .. | 31,111 | 7,75,818 | இதற்கு இடமில்லை. |
| 1969 .. .. .. .. .. | 18,555 | 5,08,636 | ஷை |
| 1970 .. .. .. .. .. | 27,197 | 5,38,299 | ஷை |
| 8. 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம்— | | | |
| 1969 .. .. .. .. .. | 9,704 | 1,69,494 | இதற்கு இடமில்லை. |
| 1970 .. .. .. .. .. | 8,748 | 1,55,562 | ஷை |

## இணைப்பு 2-அ

### 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 33-c பிரிவின்கீழ் வசூலிக்கப்பட்டவை.

| | | | | ரூ. பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீசண்முகா ஆலை லிமிடெட், இராஜ பாளையம். | திருவாளர்கள் எ. சுப்பிரமணி யமும் ஏனைய ஐவரும். | 1970 சனவரித் திங்கள் 27-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 405. | 505 20<br>384 70<br>258 65<br>384 70<br>428 80<br>384 70<br>2,346 66 |
| 2. | இந்திரா பருத்தி ஆலை (தனியார்) லிமிடெட், குரோம்பேட்டை சென்னை-44. | திரு பி. ஜே. டேவிட் .. .. | 1970 மே திங்கள் 4-ஆம் நாளிட்ட தொழிலாளர் நலத் துறை அரசு ஆணை எண் 965. | 1,000 00 |

## இணைப்பு II

### 1970-ஆம் ஆண்டில் மூடப்பட்ட பஞ்சாலைகள்.

| | ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. | புதுக்கோட்டை பஞ்சாலை லிமிடெட், நமன சமுத்திரம் .. .. | 30-3-1970 | 400 |
| 2. | ஸ்ரீ சண்முகர் ஆலை, இராஜபாளையம் .. .. .. | 18-7-1970 | 400 |
| 3. | பலராமவர்மா பஞ்சாலை, செங்கோட்டை .. .. .. | 26-10-1970 | 600 |



## இணைப்பு 2-ஆ

### 1966—1968 ஆண்டுகளில் மூடப்பட்டு 1970-ஆம் ஆண்டில் மீண்டும் திறக்கப்பட்ட பஞ்சாலைகள்

| | ஆலையின் பெயர். | மூடப்பட்ட நாள். | தொழிலாளர் களின் எண்ணிக்கை. | மீண்டும் தொடங்கப்பட்ட நாள். |
|---|---|---|---|---|
| 1. | கம்போடியா ஆலைலிமிடெட், கோயம்புத்தூர் .. .. | 12-8-1966 .. | 1,800 | 4-2-1970 |
| 2. | கிஷ்ணவேணி பஞ்சாலை லிமிடெட், கோயம்புத்தூர் .. | 2-11-1967 .. | 350 | 4-2-1970 |
| 3. | ஸ்ரீ ரெங்க விலாஸ் பருத்தி அடித்தல்—நூற்பு—நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர். | 14-3-1967 | 1,300 | 15-4-1970 |
| 4. | தமிழ்நாடு நூற்பு ஆலை லிமிடெட் திருப்பூர் .. .. | 1968 மார்ச் திங்கள் 10-ஆம் நாள் வேலை நிறுத்தப் பட்டது. 1968 சூலை திங்கள் 2ஆம் நாளி லிருந்து மூடப் பட்டது. | 83 | 8-6-1970 |
| 5. | கோயம்புத்தூர் முருகன் ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.. | 1-5-1968 .. | 967 | 30-10-1970 |

## இணைப்பு 2-இ

1951-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி-முறைப்படுத்தல்) சட்டத்தின்கீழ் தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தால் 1970ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பஞ்சாலைகள்—

(1) ஸ்ரீ ரெங்க விலாஸ் பருத்தி அடித்தல்-நூற்பு-நெசவு ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

(2) கிஷ்ணவேணி பஞ்சாலை லிமிடெட், கோயம்புத்தூர்

(3) கம்போடியா ஆலை லிமிடெட், கோயம்புத்தூர்.

9. 1926-ஆம் ஆண்டு இந்தியத் தொழிற் சங்கச் சட்டம்—

| | 1969 | 1970 | 1971 |
|---|---|---|---|
| (சனவரி முதல் நாள் அன்றிருந்த தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை.) .. | 1,666 | 1,758 | 1,856 |

10. 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்—
(வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.)

| ஆண்டு. | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகிய வற்றின் எண்ணிக்கை. | விரயமான உழைப்பு நாட்கள். |
|---|---|---|
| 1968 .. .. .. .. .. .. .. | 231 | 13,81,559 |
| 1969 .. .. .. .. .. .. .. | 174 | 6,83,059 |
| 1970 .. .. .. .. .. .. .. | 277 | 10,33,377 |

11. பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிச் சட்டம்—

| ஆண்டு. | இதன் கீழ்வரும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | இதன் கீழ்வரும் தொழிலாளர் களின் எண்ணிக்கை. | பெறப்பட்ட சந்தாத் தொகைகள். | நிர்வாகச் செலவுகள். | ஆய்வுகுறித்த செலவுகள். |
|---|---|---|---|---|---|
| | | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1968–69 .. .. | 5,389 | 4,97,471 | 883·47 | 21.02 | 2.80 |
| 1969–70 .. .. | 5,834 | 5,24,359 | 1,018·52 | 25·81 | 3.18 |
| 1970–71 .. .. | 6,271 | 5,41,126 | 1,017·02 | 26.37 | 3.03 |



12. பணியாளர் அரசு காப்புறுதிச் சட்டம்—

| ஆண்டு. | இதன் கீழ்வரும் இடங்களின் எண்ணிக்கை. | இதன் கீழ் வரும் பணியாளர்கள்: காப்புறுதி செய்துகொண்ட நபர்கள். | இதன் கீழ் வரும் பணியாளர்கள்: குடும்பப் பிரிவுகள். | நீட்டப்பட்ட நோய்களுக்கு நீட்டிக்கப்பட்ட பயன்கள் உட்பட நோய்க்காலப் பலன்கள். |
|---|---|---|---|---|
| | | | | (ரூ. லட்சத்தில்) |
| 1969 .. .. .. | 32 | 3,39,500 | 1,98 450 | 1,26.83 |
| 1970 .. .. .. | 32 | 3,52,000 | 3,29,350 | 1,28.31 |

தொழில் காயம் குறித்த பயன்கள்.

| ஆண்டு. | தற்காலிக இயலாமை குறித்த பயன்கள். | நிலையான இயலாமை குறித்த பயன்கள். | சார்ந்துள்ளோர் குறித்த பயன்கள். | மகப்பேறு குறித்த பயன்கள். | மருத்துவ வசதிக்கு வகை செய்வதற்கான செலவு. |
|---|---|---|---|---|---|
| | ரூ. | | | | |
| 1969 .. .. | 13,40,620.11 | 6,75,303.77 | 1,25,719.60 | 6,06,283.19 | 2,48,69,721 |
| 1970 .. .. | 15,05,775.75 | 13,26,264.05 | 1,63,335.21 | 6,21,700.20 | 2,75,80,461 |

## இணைப்பு 3.

[51-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண் 5-க்கான குறிப்பு

### " ஆவணப் பதிவுத்துறை "

ஆவணப் பதிவுத் துறை மிகத்தொன்மை வாய்ந்த அரசுத் துறைகளில் ஒன்றாக தாவரச் சொத்துரிமைகளின் சான்றாக விளங்கும் ஆவணங்களின் காப்பு நிறுவனமாக பயன்பட்டு வருகிறது. இத்துறையின் முக்கிய பணி சொத்துக்களின் உரிமையைப் பொறுத்த ஆவணங்களைப் பதிவு செய்வதும், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்களையும் அட்டவணைகளையும் பராமரிப்பதும் ஆகும். இதன் மூலம் மிகச் சிறிய அளவு சொத்தினை உடையவரது சொத்துரிமையையும் சிறிதும் சிரமமின்றி நிலைநிறுத்த ஏதுவாக உள்ளது. இத்துறை இந்தியக் கூட்டு வணிகச் சட்டம், சங்கப் பதிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டங்கள் அதாவது சிறப்புத் திருமணச் சட்டம், இந்து திருமணச் சட்டம் ஆகியவற்றையும் நிர்வகிக்கின்றது. 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ம் நாள் முதல் மாநில முழுவதிலும் விரிவு படுத்தப்பட்டுள்ள தமிழ் நாடு சீட்டு நிதிச் சட்டத்தையும் நிர்வகிக்கின்றது.

2. 1967-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் ஆவணங்களைக் கோத்துவைக்கும் முறை கொண்டுவரப்பட்டதை உறுப்பினர்கள் அறிவர். இதன் நடைமுறையையும் கேரளாவில் தற்போதுள்ள முறையையும் பரிசீலித்து 1971-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் இந்த அரசு கீழ்க்கண்ட சில அபிவிருத்திகளைச் செய்துள்ளது :—

(அ) பதிவுத் துறை நகல் படிவத்தின் அளவு 43 × 31 சென்டி மீட்டராக ஆக்கப்பட்டுள்ளது. இது முன்பு பயன்படுத்தப் பட்டதைப்போல், இரண்டு மடங்கு அளவு உள்ளதாகும். இதன் விளைவாக படிவத்தாளின் விலை 5 பைசாவிற்குப் பதிலாக 10 பைசாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(இ) பத்திரப் பதிவு அலுவலகங்களில் முன்பு கோப்பு புத்தகங்களில் ஒட்டப்பட்ட ஆவணங்களின் நகல்கள் இப்பொழுது பூட்டக்கூடிய கோப்பு அட்டைகளில் கோத்துவைக்கப்பட்டு, பின் பிரிவு ஏடுகளாக தைக்கப்படுகின்றன.



(உ) நகல்கள், குறிப்பிட்ட பதிவு நகல் படிவத்தில் தயாரிக்கப் படவேண்டுமென்பது விதிவிலக்கின்றி எல்லா ஆவணங்களுக்கும் பொருந்தும். கூட்டுறவுச் சங்கம், நிலவள வங்கி, இணைக்கப்பட்ட கம்பெனி, மற்றைய நிறுவனங்கள் முதலியவற்றின் தற்காலிக ஆவணங்களின் நகல்கள் முன்பு விலக்களிக்கப்பட்டிருந்தாலும் இப்பொழுது குறிப்பிட்ட பதிவு நகல் படிவத்தில்தான் தயாரிக்கப்பட வேண்டும். இருந்தபோதிலும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், கூட்டுறவு தலைமைப் பதிவாளர் இவர்களின் வேண்டு கோளின்படி ஆரம்ப நிலவள வங்கிகள், இறைவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் முதலியவைகள் அவர்களிடமிருக்கும் அச்சடிக் கப்பட்ட படிவங்களை அவை செலவாகும்வரை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளன.

3. பதிவு செய்வதற்குக் கொடுக்கப்படும் பத்திரங்களின் நகல்கள் சுத்தமாகவும், விளக்கமாகவும், சரியாகவும் இருப்பதற்காக அரசு 2—4—1971-லிருந்து நகல் எழுதுபவர்களுக்கான உரிமம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற நகல் எழுத்தர் மூன்றாவது படிவமாவது, எட்டாம் வகுப்பாவது அல்லது அதற்குச் சமமான தகுதியுடன் குறிப்பிட்ட ஒரு தேர்வில் வெற்றிபெற வேண்டும். இந்தத் தேர்வு ஒவ்வொரு பதிவு மாவட்டத்தின் தலைமையிடத்தில் தேவையானபோது நடைபெறும். இதற்கான மனுக்கள் பெற சுற்றறிக்கை ஒவ்வொரு துணைப்பதிவு அலுவலக அறிவிப்புப் பலகையின் வாயிலாக வெளியிடப்படும்.

உரிமம் பெற்ற நகல்படி எழுதுபவர்கள் உரிமத்தில் குறிப்பிடப் பட்டுள்ள அலுவலகங்களில் மட்டுமே நகல் எழுதும் வேலையை மேற்கொள்ளலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவு அலுவல கங்களில் நகல் எழுதும் பணியை மேற்கொள்ள விரும்பினால், கோளின்படி ஆரம்ப நிலவள வங்கிகள், இறைவை நீர்ப்பாசன செலுத்த வேண்டும். கையால் எழுதப்பட்ட ஒவ்வொரு பக்கத்திற்கு 75 காசுகள் விதமும், தட்டச்சு நகலுக்கு ஒவ்வொரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் விதமும் அவருக்குக் கூலியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

4. இதே நேரத்தில், அரசு சோதனை முறையில் பத்து மாவட்டப் பதிவு அலுவலகங்களுக்குத் தமிழ்த்தட்டச்சுப் பொறிகளை வழங்க ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தப் பத்து மாவட்டப் பதிவு அலுவலகங்களும் பதிவுத் துறைத்

தலைவரால் தேர்ந்தெடுக்கப்படும். இத்தட்டச்சுப் பொறிகள் வழங்க ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தப் பத்து மாவட்டப் பதிவு அலுவலகங்களும் பதிவுத் துறைத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்படும். இத்தட்டச்சுப் பொறிகள் உரிமம் பெற்ற நகல்படி எடுப்பவர்களுக்கு, நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அல்லது மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய் என்ற வீதத்தில் வாடகைக்கு அளிக்கப்படும். பதிவுக்குக் கொண்டுவரப்படும் நகல்கள் சுத்தமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டுமென்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

5. 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ம் நாள் முதற்கொண்டு சொத்துரிமை மாற்ற ஆவணங்கள், சொத்துப் பரிமாற்ற ஆவணங்கள் அல்லது கொடை ஆவணங்கள் ஆகியவற்றிற்கான முத்திரைத்தாள் தீர்வை அவற்றில் எழுதப்பட்டிருக்கும் மதிப்பின் பேரில் இல்லாமல் சொத்துக்களின் நிலவர மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. சொத்துக்களைச் சரிவர மதிப்பிட துணைப் பதிவாளர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு வருவாய்த் துறை, பெரும்பாலான மாவட்டங்களில் சொத்து மதிப்பிடுவது பற்றிய வழிமுறை கோட்பாடுகளை வழங்கியுள்ளது. கிராமப் பகுதிகளிலும் நகர்ப்புறங்களிலும் உள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளை நுண்ணிய முறையில் நிர்ணயிப்பதற்காக வழிமுறைக் கோட்பாடுகளை மேம்பட்ட முறையில் திருத்தியமைப்பதற்கு அரசு சிறப்புப் பணியாளர்களை பதிவுத் துறைத் தலைவரின்கீழ் பணியாற்ற நியமனம் செய்துள்ளது. இப் பணியாளர்கள் ஆரம்பத்தில் சென்னை நகரத்திற்கும், கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களுக்கும் நியமிக்கப்பட்டனர். பின்னர் ஏனைய மாவட்டங்களுக்கும் இத் திருத்தப்பணி எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்னை நகரத்திற்கும், கோயம்புத்தூர், மாவட்டத்திற்குமான வழிமுறைக் கோட்பாடுகள் திருத்தியமைக்கப் பட்டுவிட்டன. மற்றைய மாவட்டங்களில் இப் பணி விரைவாகச் செய்யப்பட்டு வருகிறது இத் திருத்தத்தினால் சொத்தின் மதிப்பை அறிய வருவாய்த் துறைக்கு அனுப்புவதற்கான அவசியமும். அதனால் ஏற்படும் காலதாமதமும் குறைவுபடும்.

6. துணைப் பதிவு அலுவலகங்களின் கணக்குகளை முழு அளவில் தணிக்கை செய்யும் முறை 1969-ம் ஆண்டு பத்து பதிவு மாவட்டங்களிலும், சென்னை நகரிலும் தொடங்கி 1970-ம் ஆண்டு ஜூலைத் திங்களில் இத் திட்டம் ஏனைய பதிவு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. வருவாய் இழப்பையும், இத் துறையில் கணக்குகளைப் பராமரிக்கும் முறையில் ஏற்படக்கூடிய தவறுகளையும் நீக்கி நல்ல பயன் பெற முடியும் என்பதை மேற்கூறிய முறை நிரூபித்துள்ளது.





7. முத்திரைத் தாள் பற்றாக்குறையினால் எழுந்த சிரமங்களைத் தவிர்ப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்று உதவிப் பதிவாளர்களுக்கு ரூ. 500 வரையுள்ள முத்திரைக் கட்டணத்தை பணமாக வசூலிக்க அதிகாரமளித்துள்ளது. 1967-ல் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம் ஒவ்வொரு வருடமும் தற்காலிகமாக தொடரப்பட்டு வந்து, 1971-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் நிரந்தரமாக்கப்பட்டது.

8. பத்திரப் பதிவுக்காக வரும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய பதிவுத் துறை அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன. 1967-ல் எமது அரசு பதவிக்கு வந்த பிறகு 22 புதிய அலுவலகங்கள் (1968–69-ல் 10, 1969–70-ல் 6, 1970–71-ல் 6) திறக்கப்பட்டுள்ளன. 1971-72-ல் மேலும் 11 புதிய அலுவலகங்களை திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9. 1970-71-ம் ஆண்டில் இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் அரசு மேற்கொண்டுள்ளது :—

(i) இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப உத்தரவிடப்பட்ட பொது ஊதிய உயர்வுக்கு முன்னதாகவே இத் துறையில் உள்ள கீழ்க்கண்ட அலுவலர்களின் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன :—

| | பழைய சம்பள விகிதம். | | இரண்டாம்ஊதியக் குழுவின் மறு ஆய்வுக்கு முன்பிருந்த புதிய சம்பள விகிதம். |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| மாவட்டப் பதிவாளர்கள். | 300—25—600 | .. | 350—25—600. |
| துணைப் பதிவாளர்கள்— | | | |
| தரம் 1 .. .. | 200—10—300 | .. | 250—10—350. |
| தரம் 2 .. .. | 150—5—175—10—225. | | 175—10—275. |
| தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள். | 70 நிலையானது | .. | 70—2—100(13ஆண்டு காலத்திற்குத் தொடர்ந்து பணிசெய்து வருவோர்க்கு மட்டும்) |

இச் சம்பள உயர்வினால் மாவட்டப் பதிவாளர்கள் பலரும் தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள் பலரும் மற்றும் 1-ம் தர துணைப் பதிவாளர்கள் 160 பேரும், 2-ம் தர துணைப் பதிவாளர்கள் 322 பேரும் பயனடைந்தனர்.

( i ) 2-ம் தர துணைப் பதிவாளர் 1-ம் தரத் துணைப் பதிவாளர்களாக தற்காலிகப் பதிவு உயர்வு பெற அரசு அனுமதித்துள்ளது. இதற்கு முன்னர் இத் தரத்தில் நிலையான பதவி உயர்வுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

( iii ) முன்னர் 1-ம் தரத் துணைப் பதிவாளர்களும், 2-ம் தரத் துணைப் பதிவாளர்களும் 1 : 2 என்ற விகிதத்தில் இருந்தனர். 1970-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு அதை 1 : 1 என்ற விகிதத்தில் மாற்றியது. இதன் விளைவாக 79 இரண்டாம் தரத் துணைப் பதிவாளர் இடங்கள் 1-ம் தரத் துணைப் பதிவாளர் இடங்களாக உயர்த்தப்பட்டன.

(iv) ஆண்டொன்றுக்கு 4,200 ஆவணங்களுக்கு மேல் பதிவு செய்யும் பதிவு அலுவலகங்களுக்கு நிவாரணம் கொடுக்கும் வகையில் கூடுதல் துணைப் பதிவாளர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

(v) 10 மாவட்டங்களிலுள்ள மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரடித் தொலைபேசித் தொடர்பு அமைக்கப்பட்டது. 1970-ம் ஆண்டு ஜூன் திங்களில் இவ்வசதிகள் ஏனைய பதிவு மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

(vi) இருவார காலத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை 175-க்கு மேற்படுகின்ற பதிவு அலுவலகங்களுக்குக் கூடுதல் துணைப் பதிவாளர்கள் பதவிக்கு ஒப்பளிப்பு வழங்க ஆவணத் துறைத் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(vii) தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள், இளநிலை உதவியாளர்கள் பதவி உயர்வுக்காக மூன்றில் ஒரு இடம் என்ற விகிதமாக இருந்ததை, இரண்டில் ஒன்ருக உயர்த்தப்பட்டுள்ளது.

(viii) 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதியில் கோப்பு முறை அமுலுக்குக் கொண்டு வந்தபோது பட்டியலில் இல்லாத பிரிவு எழுத்தர்கள் நியமனத்திற்கு அரசு தடை விதித்திருந்தது. இத்தடை 1971-ம் ஆண்டு சனவரித் திங்களில் நீக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரே சமயத்தில் உயர்ந்தபட்சம் 313-லிருந்து 617 தற்காலிகப் பிரிவு எழுத்தர்கள் வரை வேலைக்கமர்த்த வகை செய்யப்பட்டது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 5.69 இலட்சம் செலவாகிறது.

(ix) பயனற்ற மேசை, நாற்காலிகளுக்குப் பதிலாகவும், பணியாளர் பொதுமக்களது வசதிக்காகவும், மேசை நாற்காலி போன்ற அலுவலகத் துணைப் பொருள்கள் ரூ. 62,500-க்கு வாங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது.





(x) நடப்பு ஆண்டில் அரசு கீழ்க்கண்ட ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணம் தள்ளிக் கொடுத்திருக்கிறது :—

பட்டா நிலங்களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகள் செய்வதனால் பயனடைபவர்கள் விவசாயத் துறைக்கு எழுதிக் கொடுக்கும் ஒப்பந்தங்கள்.

எந்திரக் கலப்பை தவணை முறையில் வழங்கும் திட்டத்தின்கீழ் அக்கலப்பைகளைப் பெறுவதற்குக் கடன் வாங்கும் பொருட்டு சில நபர்கள் அரசின் பேரில் எழுதிக் கொடுத்த அடமானப் பத்திரங்களையும், ஒப்பந்தங்களையும் தமிழ் நாடு விவசாய தொழில் கூட்டு நிறுவனத்திற்கு மாற்றுவதற்கான ஆவணங்களின் மேல் விதிக்கப்படும் பதிவுக் கட்டணம்.

தஞ்சை மாவட்டத்தில் சில ஆற்று நீரேற்றுத் திட்டங்களின்கீழ் பயனடைபவர்கள் தண்ணீர் மேல் வரியும், நடைமுறைச் செலவுகளையும் செலுத்த எழுதிக் கொடுக்கும் ஒப்பந்தங்கள்.

சென்னை கஸ்தூரிரெங்க அய்யங்கார் சாலையில் உள்ள ரூ. 7,25,000 மதிப்புள்ள நிலக் கிரயம் சம்பந்தமாக திரு. ஜி. கஸ்தூரி அவர்களும், அவருடைய குடும்பத்தினரும் ஐக்கிய சோஷலிஸ்ட் சோவியத் குடியரசு தூதருக்கு எழுதிக் கொடுத்த பத்திரம்

மறுவாழ்வுக்காக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கடன் வாங்க அரசுக்கு இலங்கை அகதிகள் எழுதிக் கொடுக்கும் தாவர சொத்து அடமானப் பத்திரங்கள்.

விவசாயக் கருவிகள் வாங்க தமிழ் நாடு விவசாய தொழில் கூட்டு நிறுவனம் ரூ. 5,000-க்கு மேற்படாமல் கடன் வழங்குதற்காக அமர்த்தப்பட்டிருக்கும் மேற்பார்வையாளர்கள், வில்லங்க சான்றிதழ்களுக்காகச் செலுத்த வேண்டிய தேடு கூலியும், மனுக் கட்டணமும்.

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ச்சித் திட்டத்திற்கும், தூத்துக்குடி முந்திரி, தென்னை வளர்ச்சித் திட்டத்திற்கும் ரூ. 500-க்கு மேற்படாமல் கடன் வழங்கும் பொருட்டு ஈடுகாட்டும் நிலங்களுக்கு வில்லங்க சான்றிதழ்கள் வாங்க செலுத்த வேண்டிய தேடு கூலியும், மனுக் கட்டணமும்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 23

### I. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Post of Director of Venereology*

* 395 *Q*.—THIRU R. PONNAPPA NADAR:
THIRUMATHI JOTHI VENKATACHELLUM:

Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the post of Director of Venereology has been kept vacant:

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether any appointment has since been made?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ), (இ) & (உ) 1—4—1970 அன்று சென்னை அரசினர் பொது மருத்துவமனை, மேகநோய் மருத்துவத்துறை இயக்குநர் பதவி காலியாகியது. இந்தத் துறையின் இயக்குநராக நியமிப்பதற்கென, மேகநோய் மருத்துவத் துறையைச் சேர்ந்த முதுநிலைப் பேராசிரியர் தகுந்தவரா என்பது குறித்து சென்னைப் பல்கலை கழகத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் இசைவு பெறும் வரையில், அப்பதவிக்குத் தற்காலிக அடிப்படையில் (temporary basis) மிகு முதுநிலை அதிகாரியை அப்பதவிக்கு நியமிப்பதற்கு 21—12—1970 அன்று அரசு ஆணைகளைப் பிறப்பித்தது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இப்பொழுது எல்லா ஆலோசனையையும் பெற்று, அந்தப் பதவிக்கு அவர் தகுதியானவர் என்று அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட டைரக்டர் பதவி வகிப்பதற்கு degree in M.D. in General Medicine or M.S. in General Surgery of any University or Institution recognized by the University Grants Commission for the purpose of grant.

என்று ஒரு விதி இருக்கிறது. இப்பொழுது அங்கே தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறவர் எம்.டி., எம்.எஸ். இவைகளில் ஏதாவது பொது வகையான பட்டங்களைப் பெருதவர். அவர் பெற்றிருக்கிற பட்டம் "டிப்ளமா" என்கிற வகையில் அதே துறையைச் சார்ந்தது. அவர் நீண்டகால அனுபவம் உள்ளவர். அதற்குமேல் ஒரு பட்டம் பெற வேண்டும் என்ற தகுதி அவசியமாக இருக்கிறதென்று பல்கலைக்

[1971 ஜூலை 22

அரசு தற்போதுள்ள சலுகைகளை மேலும் கீழே குறிப்பிட்ட வற்றிற்கு கால அளவை நீடித்துள்ளது.

( i ) மேலும் ஓராண்டிற்கு :—வணிக வங்கியிடமிருந்து ரூபாய் 5,000-க்கு மேற்படாத தொகையைக் கடனாகப் பெறுவ தற்காக அந்த வங்கிகளின் சார்பில் விவசாயிகள் எழுதிக் கொடுக்கப்படும் பத்திரத்திற்கான பதிவுக் கட்டணத்திலிருந்து 50 சத விகிதம் சலுகையும், அந்த விவசாயி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவராயிருந்தால் ரூபாய் 5,000-க்கு மேற்படாத தொகையைக் கடனாகப் பெறுவதன் பொருட்டு வில்லங்கச் சான்றிதழ்களுக்காகக் கொடுக்கப்படும் விண்ணப்பத்தின் பேரில் விதிக்கப்படும் தேடு கட்டணத்திலிருந்து முழுச் சலுகையும்.

(ii) மேலும் இரண்டாண்டிற்கு :—ரூபாய் 5,000-க்கு மேற் படாத தொகையைக் கடனாகக் கொடுப்பதற்காக, நில அபிவிருத்தி வங்கிகளால் வில்லங்கச் சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப் பங்களின் மேல் விதிக்கப்படும் தேடு கட்டணத்திலிருந்து சலுகையும்.

11. வாடகைக் கட்டிடங்களிலிருக்கும் துணைப் பதிவு அலுவல கங்களுக்கும், மாவட்டப் பதிவு அலுவலகங்களுக்கும் தேவையான கட்டிடங்களைக் கட்டுவதற்கான ஐந்தாண்டுத் திட்டமொன்று அரசின் கவனத்திலிருக்கிறது. இதற்கிடையில் சுமார் 3,25,000 ரூபாய் செலவில் இந்த ஆண்டில் பதிவு அலுவலகங்களுக்கான சில கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. தஞ்சாவூரிலும், கன்னியாகுமரியிலும் அம்மாவட்டப் பதிவு ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக, மத்திய தொல்லேட்டு அலுவல கங்கள் இரண்டை நடப்பு ஆண்டில் கட்டுவதற்கும் இவ்வரசு முடிவு செய்துள்ளது.

12. இதுநாள் வரை மின்சார வசதி இல்லாத 10 மாவட்டப் பதிவு அலுவலகங்களுக்கும், 141 துணைப் பதிவு அலுவலகங் களுக்கும் மின்சார வசதி அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆகவே இனிமேல் மின்வசதி இல்லாத ஆவணப் பதிவுத் துறை அலுவலகங்களே இருக்காது.

13. சீட்டு நிதிச் சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ம் நாள் அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. இச் சட்டம் பின்னர் சென்னை நகரத்திற்கு 1965-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் நாளன்று விரிவுபடுத்தப்பட்டது. 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து இச் சட்டம் இம் மாநிலம் முழுவதற்கும் விரிவு படுத்தப்பட்டது. 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரை 11,408 சீட்டுகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 1970-71-ம் ஆண்டில் இவைகளின் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ. 4,61,839 ரூபாயாகும்.



1971 ஜூலை 22]

14. 1966-67-ம் ஆண்டிலிருந்து 1970-71-ம் ஆண்டு வரை இத் துறையின் வரவு-செலவு கீழ் வருமாறு;—

| | 1966-67 | 1967-68 | 1968-69 | 1969-70 | 1970-71 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | | | |
| வரவு .. .. | 202·72 | 229·67 | 259·70 | 270·62 | 319·99 |
| செலவு .. .. | 70·82 | 70·93 | 82·60 | 90·05 | 100·23 |

15. இத் துறையின் திறமையை மேம்படுத்தவும், இத் துறையுடன் தொடர்பு கொள்ளும் பொது மக்களுக்குத் தேவையான வசதிகளைப் பெருக்கவும் எமது அரசு பெருமுயற்சி எடுத்துக்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கழகத்தால் வற்புறுத்தப்பட்ட காரணத்தால், அந்தப் பட்டம் இல்லாமல் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்த காரணத்தால், அவர் இப்பொழுது பெற்றிருக்கும் பி.எச்.டி. பட்டம் அதற்கு ஏற்றதுதானா என்று அறிந்து கொள்வதற்காக நம்முடைய மருத்துவத் துறை இயக்குநர் அவர்கள் திரும்பவும் பல்கலைக்கழகத்திற்கு எழுதியுள்ளார்கள். அந்த அனுமதி வராமையினால் தீர்மானிக்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்போது இருக்கின்ற டாக்டர் அவர்கள் பெற்றிருக்கின்ற அந்த டிப்ளமாவானது, இப்பொழுது இருக்கின்ற வைஸ்-சான்ஸலருக்கு முன்பாக இருந்த நம்முடைய மதிப்பிற்குரிய வைஸ்-சான்ஸ்லர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களால் equivalent to any M.S. or M.D. post-graduate degree of the Madras University.

என்று ரிகக்னைஸ் செய்யப்பட்டிருக்கின்றது. அரசாங்கம் அவர்கள் பெற்றிருக்கின்ற இந்த எம்.பி.எச். டிப்ளமா குறித்து ஆலோசித்து அவர்களுக்கு இந்தப் பதவியை நிர்ணயம் செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த டைரக்டர் பதவி என்பது நம்முடைய சென்னை மருத்துவத் துறை மட்டும் நியமிக்கிற ஒரு பதவி அல்ல. இது வேறொரு வகையில் கிராண்ட் பெற வேண்டியது. அவர்கள் விதித்திருக்கும் அடிப்படையில்

M.D. or M.S. either in General Medicine or in General Surgery is the basis for recognition as Director"

என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தின் காரணமாக, பொது வகையான எம்.டி., எம்.எஸ். போஸ்ட்-கிராஜுவேட் டிக்ரி இல்லாததால், அதற்கான தனித் தகுதி அவருக்கு இருந்தாலும்கூட, அதை உடனடியாக ஒப்புக்கொள்வதற்குச் சில தடைகள் இருக்கின்றன.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM: Sir, are the Government aware that this post-graduate Degree was then recognised by the Madras University when this officer was posted as Reader by the previous Government? So, will the Hon. Minister be in a position to explain why this objection has been raised by the present Vice-Chancellor of the University? Is it not casting aspersion on the action of the previous Vice-Chancellor?

THE HON. THIRU K. ANBAZHAGAN: The position has been slightly misunderstood by the hon. Member. The condition that is required for recognition of a post-graduate degree in the said subject is not only sufficient to hold the post of Director of this particular department but there is also another condition that he should be qualified in the post-graduate degree of either M.S. or M.D. Because of that condition, the Department has enquired the University whether they will recognise the Ph.D. degree that is obtained by the Lady Doctor as equivalent to M.D. or M.S.





THIRUMATHI JOTHI VENCATACHELLUM: The compulsory qualification of a post-graduate degree in General Surgery or General Medicine was considered before this doctor was appointed as a Reader. Are the Government aware of it?

THE HON. THIRU K. ANBAZHAGAN: This condition for the post of the Director in that particular Department has been there even earlier.

*Legalisation of abortion*

* 396 Q.—THIRU N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to legalise abortion in this State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கருவைக் கலைக்கும் செயலை சட்டப்படி செல்லுபடியாக்கும் செயற்குறிப்பொன்று மைய அரசின் ஆய்விலுள்ளது. அதைப்போன்ற செயற்குறிப்பெதுவும் இம்மாநில அரசின் ஆய்விலில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்று பல நாடுகளில், அபார்ஷன் சட்டபூர்வமாக்கப்பட்டு, அதற்கான வைத்திய வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் மத்திய அரசினுடைய கையைப் பலப்படுத்தும் முறையில் தமிழக அரசு ஒரு குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்புவதோடு, தேவைப்பட்டால் தமிழக அரசே ஒரு மசோதா கொண்டுவர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கருச் சிதைவு குறித்து மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்கு மிக நன்றாக விஷயம் தெரிந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஓரளவு கரு வளர்ந்ததற்குப் பின்னால் கலைப்பது எப்படி என்பது பிரச்சினையே தவிர, கரு தொடங்குகிற நிலையில் தடுப்பதற்கும், கரு உண்டாகாமல் இருப்பதற்கும், உண்டாகிய கட்டத்திலேயே அது உருப்பெற்று விடாமல் இருப்பதற்கும் எவ்வளவோ ஏற்பாடுகள், குடும்பக் கட்டுப்பாடு முறைகளில் இருக்கின்றன. கருவைச் சிதைக்க வேண்டும் என்று சட்டம் வருமானால் அதற்குரிய சில அடிப்படைக் கருத்துக்களோடு இருப்பது நல்லது என்பது தமிழக அரசினுடைய எண்ணமாகும். ஆனால், மத்திய அரசு, நாட்டினுடைய பொது நிலைமையைக் கருதி அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவார்களானால் தமிழகத்திலேயும் அது இயல்பாக இயங்கத் தொடங்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: கருச் சிதைவு காரணமாகப் பெண்கள்தான் பாதிக்கப்படுவார்கள். பெண்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தினுடைய பொறுப்பு மட்டுமல்லாமல் ஆண்களுடைய பொறுப்புமாகும். ஆகையால், கருச் சிதைவைச் சட்டபூர்வமாக்கும் மசோதாவை மத்திய அரசு கொண்டுவர முன்வந்தால், அதைத் தமிழக அரசு ஒப்புக்கொள்ளாமல் இருப்பதற்கும், அத்தகைய சட்டம் கூடாது என்று மத்திய அரசை வற்புறுத்துவதற்கும் கனம் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்தப் பிரச்சினை குறித்த பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக ஆராய்ந்து சில முடிவுகளை எடுத்திருக்கிறது. தமிழக அரசினுடைய கருத்தாகத் தெரிவிக்கப்பட்டபடி, இந்தக் கரு தோன்றுகிறபோது, ஒரு பெண்மணி எந்தக்காரணத்தினாலேயோ மூளைக்குழப்பம் உள்ள பெண்ணாக இருந்தாலும், அல்லது திருமணமாகாத நிலையிலிருந்த பெண்ணாக இருந்தாலும், அல்லது கரு வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலை இருந்தாலும், அல்லது அந்தக் குழந்தை பிறந்தாலும்கூட சரியாக வளர முடியாத நோயுடைய குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், இப்படிப்பட்ட சில காரண காரியத்தோடு, அதற்கான டாக்டருடைய ஆலோசனையைப் பெற்று, சர்டிபிகேட் பெற்று கருச்சிதைவு செய்யலாம் என்ற ஆலோசனையைத் தமிழக அரசு மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுதியிருக்கிறது. ஆனால், அகில இந்திய நிலைமை என்ன என்பது அவர்களுக்குத் தெரியும். தாங்க முடியாத நிலைமைகள் இன்றைக்கு நாட்டிலே உருவாகிக்கொண்டிருக்கிறது. அதையெல்லாம் கருத்தில் கொள்ளும்போது கருச்சிதைவுக்குச் சட்டம் மத்திய அரசால் கொண்டு வரப்படுமானால் அதை நாம் முழுவதும் மறுத்துவிட முடியாது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இந்தக் கருச் சிதைவு மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டிலே மக்கள் தொகை வேகமாகப் பெருகிக்கொண்டு வருகிறது. அதுவும் போதாது என்று அகதிகள் வந்து மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைக் குலைத்து விடுகின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஜப்பான் போன்ற நாடுகளிலே கருச்சிதைவைச் சட்டப் பூர்வமாக ஆக்கியதால் மக்கள் தொகை குறைந்து இருக்கிறது. அதே போன்று நம்முடைய நாட்டிலும் மக்கள் தொகையைக் குறைப்பதற்கு, நல்ல முறையிலே அதைக் கட்டுப் படுத்துவதற்கு எந்தவிதமான தடங்கலும் இல்லாமல் கருச்சிதைவைச் சட்டப் பூர்வமாக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு அழுத்தமாக வாதிப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும்கூட கருச் சிதைவை ஏற்றுக்கொள்வது மக்களுடைய மனப்பான்மையைப் பொறுத்தாகும். ஜப்பான் நாட்டு மக்கள் பெற்றிருக்கின்ற மன வளர்ச்சியைத் தமிழக மக்கள் பெறுவதற்கு இன்னும் காலம் ஆகும்.

திரு. ஜே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த முடிவை எடுத்தாலும் அம்மையார் அவர்கள் சொன்னதைப் போன்று அது நமக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந்தாது என்ற காரணத்தினாலும் கருச் சிதைவு செய்துகொண்டால், உடல் கோளாறுகள், ஒழுக்கக் கேடுகள் ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகள் இருப்பதால் இந்த அரசு பெண் குலத்தினுடைய நலத்தைக் கருதி அதைத் தடுக்கக்கூடிய முறையில் மத்திய அரசை வற்புறுத்துமா?



1971 ஜூலை 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நாடாளு மன்றம், பார்லிமெண்ட், அது முழு அதிகாரம்பெற்ற ஒரு மன்றம் ஆகும். அதுவும் ஜனநாயக முறையிலே இயங்குவதாகும். அந்த மன்றத்திலே நிறைவேற்றப்படுவதை நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்றம் எதிர்க்க முடியாது. அது அகில இந்தியத் தொடர்பையுடையது, ஜனநாயக மரபையொட்டியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஐயத்தைப் போக்குகின்ற வகையில்—நம்முடைய பெண்கள் ஆக்குவதிலும் சரி, அழிப்பதிலும் சரி—சக்தி படைத்தவர்கள், எனவே அவர்களே காத்துக்கொள்வார்கள். (சிரிப்பு).

திரு. நா. வீராசாமி: கரு உண்டாக்கப்படுவது ஆண்டவனுடைய செயல் என்று நாட்டிலே ஒரு எண்ணம் இருக்கிறது. அதற்காகப் பயந்து கொண்டுதான் மத்திய அரசாங்கம் இதிலே காலதாமதம் செய்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆண்டவன் என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. எனவே அந்தப் பெண்ணே அப்பொழுது ஆண்டவன் என்பதற்குப் பொருளாகும். (சிரிப்பு).

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, நாகரிகம் என்ற பெயரால் நாட்டில் உள்ள இளைஞர் சமுதாயம் பாதி கெட்டுப் போய்க் கிடக்கிறது. கருச் சிதைவு சட்டமாக்கப்பட்டால் கொஞ்சம் நஞ்சம் இருக்கின்ற ஒழுக்கமும் பாதிக்கப்பட்டு விடும். எனவே கருச் சிதைவு என்ற நிலைமை வருகின்றபொழுது கணவன் மனைவி இரண்டு பேரும் சேர்ந்து சென்றால்தான் அப்படிச் செய்துகொள்ளலாம் என்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதிலே இரண்டு கூறுகள் இருக்கின்றன. ஒன்று ஒரு பெண்ணுக்கு நன்மை பயப்பதற்காகக் கணவனும் மனைவியும் அதை ஏற்றுக்கொண்டால் கருச் சிதைவினை ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு மனைவிக்கு இருக்கிறது. இரண்டாவது தவறான ஒழுக்கத்தின் விளைவாகக் கரு ஏற்பட்டு விட்டால் அந்தத் தவறான ஒழுக்கத்தினுடைய முத்திரை பதியாமல் செய்வது. இந்த இரண்டுக்கும் இடம் இருக்கிறது, இடத்தையொட்டி காலத்தையொட்டி.

திரு. வீ. இராசகோபால்: கருச் சிதைவைச் சட்டப் பூர்வமாக்கும் அதிகாரம் இந்த மாநில அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய அரசு அந்த முயற்சியிலே இறங்காமலிருந்து தமிழக அரசுக்கு அது மிக அவசியம் என்று நிலை ஏற்பட்டு தீர்மானித்திருந்தால் அதைப் பயன்படுத்தியிருக்கலாம். அதற்குத் தேவையில்லை.

திரு. எம். சுரேந்திரன்: குடும்பக் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக நடத்தப்படவேண்டுமென்று எல்லா அரங்குகளிலிருந்தும் சொல்லப்பட்டு ஏராளமான பணம் அதற்காகச் செலவிடப்படுகிறது. குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்துகின்ற முறையிலே—கருச்சிதைவு

[1971 சூலை 23

செய்வதே பாவ காரியம், அது ஆரோக்கியத்திற்குக் கெடுதலானது என்ற யுகம் மாறி—விஞ்ஞான ரீதியாக அது மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியம் என்று கருதி இந்த அரசு வேகமாக அதைத் தீவிர மாகக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு நம்முடைய அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழக அரசு அதனைப் பாவ காரியம் என்றோ நாட்டுக்குக் கேடு என்றோ கருதவில்லை. அது பாவ காரியங்களைத் தொடங்குவதற்கான ஒரு கருவியாக இருக்கக்கூடாது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்கள். எனவே மத்திய அரசாங் கத்தை வற்புறுத்துவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சி செய் யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மத்திய அரசிலே இருப்பவர் பெண்தான். அவர்களுக்கு அந்த இரக்கம் இருக்கும் என்று எதிர் பார்க்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: கிராமப் புறங்களிலே பல இடங்களிலே சட்டத்திற்குப் புறம்பாகக் கரு உண்டாகின்ற நேரத்திலே அதைச் சிதைக்கின்ற நிலையில் நாட்டுப்புற மருந்துகள் கொடுத்து உயிரிழக்கக் கூடிய நிலைமையெல்லாம் இருக்கின்றன. எனவே இதைச் சட்டப் பூர்வமாக்கினால் பல உயிர்களைக் காப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே இதைச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பல்வேறு பிரச்னைகள் சட்டத்தின் கண்ணுக்குத் தெரிந்தால்தான் சட்டவிரோதம் என்று புலப்பட்டு நிலை நிறுத்தப்படுகிறது. பல பிரச்னைகள் சட்டத்தின் கண்ணுக்குப் புலனாவதில்லை. அப்படிப்பட்ட அறியாமையைப் போக்குவதற்கு நம்முடைய அங்கத்தினர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் சில நேரங்களிலே சில தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. குறைந்த அளவு குழந்தைகள் பெறுகின்ற அடிப்படையில் குழந்தைகள் பெறுகின்ற நேரத்திலே தவறுகள் வராமல் இருப்பதற்காகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தவறுகள் இல்லாமலிருக்க கருச்சிதைவுச் செய்துகொள்வதற்கு அரசாங்கம் ஆதரவு அளிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு கருச்சிதைவுக்கு ஆன முயற்சி எடுத்துக்கொள்கின்றபொழுது அதற்கான போதுமான காரணங்கள் நியாயமானவையாக இருக்குமானால் அந்தத் துறையிலே இருக்கின்ற மருத்துவர்கள் மூலமாக அவர்கள் முயற்சி செய்யலாம்.

திரு. சோ. கருணைநாதன்: இந்தக் கருத்தடைத் திட்டத்திற்காக மருத்துவத் துறையில் பல முறைகள் இருக்கின்ற நேரத்திலே அந்த முறைகள் இருக்கின்ற நேரத்திலே அந்த முறைகளை மீறி கருச்சிதைவு செய்கின்றவர்கள்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?



1971 சூலை 23]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கருத்தடைத் திட்டம் என்று சொல்கின்ற பொழுது முறைப்படி நியாயமான காரணங்களுக்காக அப்படிச் செய்வது கடுமையான குற்றம் என்று கூறுவதற்கு இடம் இல்லை. அப்படியில்லாமல் முறையோடு செய்யாமல் யாருடைய நலனுக்கும் தீங்கிழைக்கின்ற எண்ணத்தோடு செய்தால் அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

## கிராமப்புற மருத்துவர்கள்.

* 397 வினு—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம மருத்துவர்களின் பதவிகளை நிரந்தரமாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) அவர்களுக்கு அளிக்கப்படும் மானியத் தொகையை மாற்றிச் சம்பளமாக வழங்குவதற்குத் திட்டம் ஏதேனும் அரசு பரி சீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, கிராம மருத்து வர்கள் பல வருடங்களாகப் பல இடங்களிலே வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையிலே அவர்களுடைய சம்பளத்தை நிர்ணயித்து நல்ல நிலைமையிலே இருக்கச் செய்தால்தான் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எனவே அந்த வகையிலே அந்தவிதமாகச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கிராம மருத்துவர்கள் பெரும்பாலும் ஒரு துறையிலே பயின்று பட்டம், டிப்ளமா பெற்று அலுவலுக்கு வந்தவர்கள் அல்ல. ஓரளவு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் "பி" கிளாஸ் மருத்துவர்களாக நியமிக்கப்படு வதற்கு அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. அவர்களை முழு நேரப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பிட்ட நேரத்திலே அவர்கள் மருந்தகத்தில் வந்து வேண்டிய பணியை ஆற்றி விட்டு மற்ற வேளைகளிலே சுய காரியங்களைச் செய்வதற்கு அவர் களுக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் மூலமாக நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு சப்சிடி தொகை வழங்கப்படுகின்றது. ஏற்கனவே 120 ரூபாய் என்ற அளவிலே வழங்கப்பட்டது இப்பொழுது ஊதியக் குழுவினுடைய ஆலோசனைப்படி மாதம் 150 ரூபாய் என்ற அளவிலே வருடத்திற்கு 1,800 என்ற அடிப்படையிலே அவர்களுக்கு சப்சிடி வழங்கப்படு கின்றது. அந்த அளவுக்குத்தான் அரசு நிலைமையை உயர்த்த முடிந் திருக்கிறது.

[1971 ஜூலை 23

## கிராமப்புற மருந்தகங்கள்.

* 398 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய நகராட்சி பராமரிப்பில் உள்ள மருந்தகங்களைத் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்த திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஊராட்சி ஒன்றிய நகராட்சி பராமரிப்பில் உள்ள மருந்தகங்களை (Dispensaries) தமிழக அரசு படிப்படியாக ஏற்று நடத்தி வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தினுல் உள்ளாட்சித் துறையின்கீழ் இருக்கின்ற மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் மக்களுடைய தேவையைத் திருப்திகரமாக நிறைவேற்ற இயலவில்லை. படிப்படியாக நிறைவேற்ற இருக்கிற அந்தத் திட்டத்தைச் சிறப்புத் திட்டமாக ஆக்கி அரசு செயல்பட விரைந்து முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன். தலைவரவர்களே, இப்படிப்பட்ட மருந்தகங்கள் ஏராளமாக இருக்கின்றன. அது ஜில்லா போர்டு காலத்திலே தோன்றி பஞ்சாயத்து யூனியன் காலத்திலேயும் நடைபெற்று வருவதாகும். அவை அனைத்தையும் ஒன்றுக ஏற்றுக்கொள்வதற்குப் பெருநிதி ஒதுக்குவது என்பது இயலாத காரியம். ஆலோசிக்கப்பட்டபொழுது அரசாங்கத்தின் உத்தரவில் எந்தெந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் டிஸ்பென்ஸரியை உள்ளபடியே அவர்களால் நிர்வகிக்க முடியாத அளவிற்கு, மக்கள் தொகை பெருக்கத்திற்குத் தேவையான அளவு வசதி செய்து தர முடியாமல் இருந்தால் அதைப் போதுமான அடிப்படைத் தொகையோடு, மூலதனச் செலவோடு ஒப்படைத்தால் கரண்ட் எக்ஸ்பென்டிச்சர், நடைமுறைச் செலவை அரசாங்கம் ஏற்று அவற்றை நிர்வகிக்கலாம் என்று கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பல டிஸ்பென்சரிகள் இதுவரை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் சிலசில டிஸ்பென்சரிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

Thiru R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister the number of dispensaries taken over by the Department from the Panchayat Unions and Municipalities so far?

The Hon. Thiru K. ANBAZHAGAN : From the report that I have, only four Panchayat Union dispensaries, one in Illupur in Tiruchirappalli district, Subramaniapuram in Thanjavur district, Kottampatty in Maduari district and Thambampatti in Salem district are taken over by the Government and other dispensaries, some of them in every district, are under recommendation by the Department. Further, there is a proposal to consider some more dispensaries to be taken over.



1971 ஜூலை 23]

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங் களில் நடைபெறும் மருந்தகங்களில் பணி செய்யும் பணியாளர்களுக்கு அரசாங்கத்திலிருந்து சம்பளம் கொடுக்கிறோம். ஏறக்குறைய ஒவ்வொரு மருந்தகங்களிலும் வேலை செய்யும் பணியாளர்களும், நல்ல ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரும் அங்கே இருக்கிறார்கள். வருஷத்திற்கு 15,000 ரூபாய் அளவில் சம்பளம் கொடுக்கிறோம். இருந்தாலும் ஒன்றியங்களால் 5,000 ரூபாய் அல்லது 6,000 ரூபாய் அளவிற்குத்தான் மருந்து வாங்கிக் கொடுக்கப்படுகிறது. 5,000, 6,000 ரூபாய் மருந்துக்காக 15,000 ரூபாய் செலவிலே சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் மருந்தகங்களை ஒன்று, அதிகப்படியாக மருந்து வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும், அல்லது அரசாங்கமே உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த விகிதாச் சாரக் கணக்கு சரியான அடிப்படையில் பிறப்பது அல்ல. மருந்து களின் விலையைவிட மருந்தைக் கொடுக்கும் டாக்டர்கள், மருத்துவத் துறையைச் சார்ந்த அவர்களின் தொண்டின் விலையின் மதிப்பும் அதிகம். மிகப்பெரிய மருத்துவமனையாக யிருந்தாலும் மாவட்ட மருத்துவ மனைகளாகயிருந்தாலும் மருந்துக்கு ஆகும் செலவைவிட மருந்தைத் தருகின்ற நிபுணத்துவத்திற்கு ஆகும் செலவு அதிகம். அந்த அடிப்படையில் அது தவறு அல்ல.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசாங்கம் எடுக்க படிப்படியாக அமல் படுத்தத் திட்டம் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் அமல் ஆக்கப்படுவதற்குமுன் இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மக்களுக்கு நன்ருகப் பயன்படும் வகையில் இந்த மருந்தகங்களுக்குப் போக்குவரத்து வசதியும், டெலிபோன் வசதியும் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி நல்ல நோக்கத்தோடு கூடியது. இப்பொழுது மாவட்ட மருத்துவ மனை அடிப்படையிலே இந்தப் பணி நடைபெறுகின்றது. இனி வட்டத்திற்கு வந்து, வட்டத்திலிருந்து யூனியனுக்கு வரும் காலத்தில் திரு. கணபதி அவர்கள் அந்தப் பலன்களைப் பெற முடியும்.

* 399. Q.—Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal with the Government to take over the rural dispensaries in major panchayats?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது பெரிய பஞ்சாயத்துக்களிலுள்ள ரூரல் டிஸ்பென்சரிகளை அரசு ஏற்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தக்கூடிய அந்த மருந்தகங்களில் நகரங்களில் எத்தனை நடத்தப்படுகின்றன, கிராமப்புறங்களில் எத்தனை நடத்தப்படுகின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுது நகரசபைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அப்படிப்பட்ட மக்கள் தொகை அதிகமாகவுள்ள இடங்களில் உள்ள டிஸ்பென்சரிகள், மருத்துவ மனைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. அதற்குப் பின்னால் முறைப்படுத்த வேண்டிய மிக நெருக்கடியான அவசியம் இருப்பதால் அதற்குப் பின்னால்தான் மேஜர் பஞ்சாயத்து அல்லது டவுன் பஞ்சாயத்துக்களில் உள்ள மருந்தகங்களைப் பற்றி எண்ணிப் பார்க்க முடியும். இப்படிப்பட்ட டவுன் பஞ்சாயத்து களுக்குப் பஞ்சாயத்து யூனியனோ, பஞ்சாயத்தோ செலவை ஏற்பது மட்டும் அல்ல, அரசாங்கத்தில் 5,000 அல்லது 7,000 ரூபாய் என்று முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. அதற்குமேல் அரசு ஏற்றுக் கொள்ளும் பொறுப்பைப்பற்றி இனிதான் சிந்திக்க வேண்டும்.

*Sheep Breeding Co-operative Societies.*

* 400 Q.—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start co-operative sheep-rearing credit societies in Dharmapuri district; and

(b) if so, when they will be started?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வேளாண்மை மறுகடன் உதவிக் கடன் உதவியுடன் தருமபுரி மாவட்டம், கிலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த குண்டு மாரனபல்லி கிராமத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பது குறித்த செயற்குறிப்பை கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர் பணிந்தனுப்பி யுள்ளார்.

(இ) வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்தின் ஒப்புதலும் அனுமதியும் கிடைப்பதன் மேல் இந்தச் சங்கம் அமைக்கப்படும்.

THIRU B. VENKATASAMY : The entire Dharmapuri district is having good potentialities to start co-operative sheep-rearing credit societies. May I request the Hon. Minister to start these sheep rearing co-operative societies in the entire Dharmapuri district?

THE HON. THIRU K. ANBAZHAGAN : No proposal can be for the entire Dharmapuri district. It is based upon the units that are formed; that is the co-operative units that are formed either in big village or in town. Here in this case it is only pending because the loan, that is the total amount of loan that is required is to be sanctioned by the concerned authorities.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை மாவட்டத்தில் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு ஆரம்பிக்கப்பட்டன. அதற்குப் பிறகும் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று மனுக்கள் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. பொதுவாக இந்த விவசாயிகளுக்கு ஆடுவளர்ப்பு என்பது ஒரு உப தொழிலாகவும், நிலமில்லாதவர் களுக்கு வருமானத்திற்கு வழி அளிப்பதாகவும் இருப்பதால் இதை அபிவிருத்தி செய்யவும், முடிந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள்





ஏற்படுத்த உதவியும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுது கால்நடை வளர்ப்பிலே மிக முக்கியமான பங்கு வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிராம மக்களை ஈடுபடுத்துவது அவசியம்தான். அப்படி அவர்கள் விண்ணப்பித்தால் அரசாங்கம் பெருமளவில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யும்.

திருப்பூர் நகருக்கு ஆம்புலன்ஸ் வண்டி.

* 401 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் திருப்பூர் நகருக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை. திருப்பூர் நகருக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆம்புலன்ஸ் வண்டி 4—4—1971 முதல், தற்காலிகமாக உடுமலை பேட்டை நகருக்கு (E.S.I.) நடமாடும் மருந்தக வண்டியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் உடுமலைபேட்டை நடமாடும் மருந்தக வண்டி செயலற்ற நிலையில் உள்ளது. தவிரவும், உடுமலை பேட்டை ஆம்புலன்ஸ் வண்டியும் பழுதுபட்டுள்ளது. பழுது பட்டுள்ள உடுமலைபேட்டை ஆம்புலன்ஸ் வண்டியை உடனடியாகச் சரிபார்க்க துரித ஏற்பாடுகள் செய்யவும், அதுவரையில் உடுமலை பேட்டைக்கு வேறு வண்டி ஏற்பாடு செய்யவும் திருப்பூருக்கான ஆம்புலன்ஸ் வண்டியை மீண்டும் திருப்பூருக்கே உடனடியாக ஒதுக்கும்படியும், சுகாதார குடும்ப நலத்துறை இயக்குநர் தெரிவிக் கப்பட்டிருக்கிறார்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் போன வாரத்தில் ஆம்புலன்ஸ் திருப்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஆம்புலன்ஸ் வண்டியை நடமாடும் மருத்துவ வண்டியாக விடுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டு 15 நாட்களுக்கு மேல் ஆகின்றது. உத்தரவு அனுப்பி வைத்து ஒரு வாரம் ஆகிறது.

*Employees State Insurance Hospitals.*

* 402 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to increase the number of Employees State Insurance Hospitals in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் இப்பொழுது எந்தெந்த இடத்தில் இருக்கின்றன? இந்த ஆண்டு வேறு ஏதாவது புதிய ஆஸ்பத்திரி கட்ட ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 இடங்களில் இருக்கின்றன. மேலும் அதை விரிவு படுத்த வேண்டு மென்ற எண்ணமிருந்தாலும் நிதி வசதி இல்லாத காரணத்தால் அது இப்போதைக்கு இல்லை என்று கூறுகிறேன்.

நடமாடும் பல்கலைக் கழகங்கள்.

* 388 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் பல்கலைக் கழகங்களை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மிதக்கும் பல்கலைக் கழகம் என்று சென்னைக்கு வந்ததை அறிவோம். அப்படி மிதக்கும் பல்கலைக் கழகம் நம்மால் அமைக்க முடியாது என்றாலும், நடமாடும் பல்கலைக் கழகம் என்ற பெயர்பெற்றவராக நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் காலத் திலேயே நடமாடும் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக்கூடத்தையே நடமாட விட முடியாது. ஆகவே இன்றைக்குக் கல்லூரிகளையோ அல்லது பல்கலைக்கழகத்தையோ நடமாட விடுவது என்பது இயலாத ஒன்று. வேண்டுமென்றால் ஆசிரியர்களை நடமாட விடலாம், பேராசிரியர்களை நடமாடவிடலாம். உலாவி வரச் செய்யலாம். ஏனென்றால் விசிட்டிங் ஃபுரொஃபசர்ஸ் என்ற முறையில் இருக்கிறார்கள். பல்கலைக்கழகத்திற்குப் பல்கலைக்கழகம், கல்லூரிக்குக் கல்லூரி பேராசிரியர்களையும் மற்றவர்களையும் வேண்டுமானால் அனுப்பலாம். ஆனால் இப்பொழுது வானொலியின் மூலமாகக் கல்வியைப் பரப்பும் முயற்சியில் உயர்நிலைப்பள்ளிகளுக்கும், துவக்கப்பள்ளிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மதுரைப் பல்கலைக்கழகத்தில் கடிதப்போக்குவரத்தின் மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளைச் சொல்லிக் கொடுக்கும் முயற்சியை மேற்கொண் டிருப்பதால் இந்தப் பட்டப் படிப்பிற்கு வானொலியைப் பயன் படுத்தலாம் என்ற முயற்சியும் இருக்கிறது. கடிதப்போக்கு வரத்தோடு வானொலியிலே குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிச் சிறந்த பேராசிரியர்கள் சிலரை வைத்து அதன் மூலம் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கச் சொன்னால் கடிதப்போக்குவரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். எனவே வானொலியின் மூலம் கல்வி கற்பிக்கின்ற சூழ்நிலையை மேற்கொள்ளலாம்.



1971 ஜூலை 23]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கடிதப் போக்குவரத்து மூலமாக ஏற்படுத்துகின்ற பட்டப் படிப்புக்கு ஃபீஸ் அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதைப் பற்றிப் புனர் பரிசீலனை செய்து ஃபீஸைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பல்கலைக் கழகந்தான் இதை வகுத்திருக்கிறார்கள். அதற்காகும் செலவு மற்றவைகளை எல்லாம் கணக்கில் எடுத்து முறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள். கடிதப் போக்குவரத்து முறையில் பாடங்களை எல்லாம் அச்சடித்துப் புத்தக வடிவில் அனுப்புவதற்கு ஆகும் பெருஞ் செலவு எல்லாவற்றை யும் கணக்கில் கொண்டு பல்கலைக் கழகம் அதை நிர்ணயித்திருக்கிறது.

டெலிவிஷன் மூலம் கல்வி

* 389 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் டெலிவிஷன் மூலம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

செஞ்சிக் கோட்டையைப் புதுப்பித்தல்

* 390 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சிக் கோட்டை பழுதடைந்திருப்பதால் அதைப் புதுப்பிக்க மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : செஞ்சிக்கோட்டை தேசிங்குராஜன் ஆண்ட பழைய வரலாற்றைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தக் கோட்டையில் இப்போது மத்திய சர்க்கார் பணியாளர்களைப் போட்டு உள்ளே செல்லுகின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்கிறார் கள். பண்டைக் காலத்து வரலாற்றைக் காட்டும் வகையில் அமைந் திருக்கின்ற அந்தக் கோட்டையைப் புதுப்பித்து பயணிகள் தங்கும் அளவுக்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைப்பதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செஞ்சிக் கோட்டையை மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்காணித்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழுதடைந்ததைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்பற்றி மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டதில் அந்தக் கோட்டை பழுதடையவில்லை யென்றும் அது ஓரளவு நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது

என்றும் பதில் அளித்திருக்கிறுர்கள். அந்தக் கோட்டையைத் தற்காலத்திற்கேற்றவாறு புதுப்பித்துவிட்டால் பழமையின் தன்மை மறைந்துவிடும். பழுது ஏற்படுவதைத் தற்போது அவர்களே பராமரித்து வருகிறுர்கள். அதைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டிருக்கிறுர்கள்.

## திருமலை நாயக்கர் மகாலில் கலைக்கூடம்

* 391. விஞ—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மதுரை திருமலை நாயக்கர் மகாலில் கலைக்கூடம் ஒன்று துவக்க அரசு பரிசீலனை செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : திருமலை நாயக்கர் மகால் நம்முடைய பண்டையக் கட்டடக் கலைக்கு எடுத்துக் காட்டாக இருக்கிறது. வெளிநாட்டவர் கூட மெச்சத் தகுந்த விதத்தில் அமைந்திருக்கிறது. வெளிநாட்டவரைக் கவரக்கூடிய விதத்தில் அங்கு கலைக்கூடம் ஒன்று ஏற்படுத்துவதோடு திருமலை நாயக்கர் மகாலில் இருந்து சுரங்கப் பாதை மதுரை நகரத்தின் பல பகுதிகளுக்குச் செல்லுவதாகச் சொல்லப்படுவது பற்றியும் ஆராய்ச்சி செய்து சரித்திரச் சான்றுகளை வெளிப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகாலைப் பொறுத்தவரை அரசாங்கத்திடம் அப்பேர்ப்பட்ட செயற் குறிப்பு இல்லை. திருமலை நாயக்கர் மகால் தென்னக மாநிலங்களில் இருக்கும் அரண்மனைகளில் கட்டடக் கலைச் சிறப் போடு அமைந்த கூடமாக இருந்து வருகிறது. அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றி சுற்றுலாக் குழுவினர் ஆலோசனை செய்து வருகிறுர்கள். கலைக் கூடம் ஏற்படுத்தலாம், சிறுவர் பூங்கா வைக்கலாம், நூல் நிலையம் அமைக்கலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே சுற்றுலாக் குழுத் தலைவராகவும் இருப்பதால் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குத் தெரிவித்து, தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குநர் இதுபற்றிப் பரிசீலித்து மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து உரையாடி இருக்கிறுர்கள். திருமலை நாயக்கர் மகாலின் பழமையும், அழகும் கெடாதவாறு எப்படி அமைக்கலாம் என்று அவர்கள் ஆராய்ந்து முடிவு செய்த பிறகு அரசு மேற்கொண்டு நடவடிக்கையை மேற் கொள்ளும்.

திரு. பெ. மலைச்சாமி : நாயக்க மன்னர்கள் பாண்டி மண்டலத்தை ஆண்ட நேரத்தில் பல்வேறு சிலைகளையும், சிற்பங்களையும் செய்திருக் கிறுர்கள். அந்தச் சிலைகள் அந்த மாவட்டம் முழுவதும் சீர்கெட்ட நிலையில் இருக்கின்றன. அவற்றை அரசு சேர்த்து இந்தத் திருமலை நாயக்கர் மகாலில் வைக்க முன் வருமா?





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோவில் சிற்பங்கள், சிலைகள் கொண்ட கலைக் கூடம் மீனுட்சி அம்மன் கோயில் மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்தில் இருக்கும் பல்வேறு சிலைகள் எல்லாம் கொண்டு வரப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருக் கின்றன. தஞ்சை மாநகரத்தில் எப்படி கலைக்கூடம் நிறுவப் பட்டிருக்கிறதோ அதைப் போன்று மீனுட்சி அம்மன் கோவில் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருமலை நாயக்கர் மகாலில் கலைக் கூடம் அமைக்கவும், கலைப் பூங்கா அமைக்கவும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. திருப்பதி : திருமலை நாயக்கர் மகாலில் ஒலி–ஒளி ஏற்பாட்டை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகாலைவிட மீனுட்சி அம்மன் கோயிலில் பரந்த மண்டபங்கள் இருக்கின்றன. டெல்லியில் செங்கோட்டைக்குப் போய்ப் பார்த்தவர் களுக்கு இதற்கு எப்படிப்பட்ட இடவசதி தேவைப்படும் என்று தெரியும். பாண்டியர் வரலாறு, நாயக்கர் வரலாறு ஆகியவற்றை எல்லாம் மீனுட்சி அம்மன் கோயில் மண்டபங்களை அடிப்படையாக வைத்துக் காட்டலாம். இதைப்பற்றி ஆராய்ந்த குழுவினர் இரண்டு இடங்களையும் பார்த்துவிட்டு மீனுட்சி அம்மன் கோயில் மண்ட பங்கள்தான் இதற்கு ஏற்றவையாக இருக்குமென்று தெரிவித்திருக் கிறுர்கள். சுற்றுலாக் குழுவினர் இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக் கிறுர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : திருமலை நாயக்கர் மகாலில் தற்போது நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அது பழுதடையக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறது. ஆகவே, கலைக்கூடத்தை ஆரம்பிப் பதில் துரித நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திருமலை நாயக்கர் மகால் தமிழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இருக்கிறது. விரைவில் மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கூறப்பட்டிருக்கிறுர்கள்.

## பாண்டித்துரைத் தேவரின் இல்லம்

* 392 விஞ.—திரு. க. சுப்பு : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலுள்ள, தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் அவர்கள் வாழ்ந்து வந்த இல்லத்தை, அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப் பயன்படுத்தும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. க. சுப்பு : வ.உ.சி., பாரதியார் போன்றவர்களுடைய இல்லங்களை அவர்களுடைய நினைவுச் சின்னமாக அமைத்தது போல் தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் இல்லத்தையும் அவருடைய நினைவுச் சின்னமாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எட்டயபுரம் பாரதி யாருடைய வீடுதான் அண்மையில் எடுக்கப்பட்டது. அவர் சென்னை யில் வாழ்ந்த வீட்டை அரசாங்கம் நினைவுச் சின்னமாகப் பயன்படுத்த முயன்று கொண்டிருக்கிறது. பாண்டித்துரைத் தேவர் அவர்களைப் பொறுத்தவரை அந்த ஊர் மக்களும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கட்டடம் இருக்கிறதா, அந்தக் கட்டடத்தைத் தரத் தயாராக இருக்கிறார்களா என்பதை எல்லாம் ஆராய்ந்து மக்கள் முயற்சி எடுத்து அரசுக்குத் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கா. காளிமுத்து : இப்போதுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. மதுரை செந்தமிழ்க் கல்லூரியைப் பாண்டித்துரைத் தேவர் செந்தமிழ்க் கல்லூரி என்று பெயரிட்டு அழைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயர் இலங்க வேண்டுமென்று செய்தவரே பாண்டித் துரைத் தேவர் ஆவார்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் பெயரிடப்பட்டது நான்காவது தமிழ்ச் சங்கம் என்று கூறுவார்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் இடப்பட்ட அந்தப் பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. வேறு எந்த வகையிலாவது அவருடைய நினைவை நிலைநிறுத்தும் வகையில் முயற்சிகளைச் செய்தால் அது பற்றி யோசிக்கலாம். அந்தப் பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

## காவிரிப்பூம்பட்டினம்

* 393 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கடல்கொண்ட பண்டைய காவிரிப்பூம்பட்டினத்தை அகழ் ஆராய்ச்சி செய்திட மத்திய அரசினை நமது தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பூம்புகார் அகழ் ஆராய்ச்சி நடத்த மத்திய அரசு முன் வராவிட்டாலும் ஐ.நா. கலாசார அமைப்பின் நிதி உதவி பெற்றாவது நடத்த மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பூம்புகார் பட்டினத்தைப் பொறுத்தவரையில் அகழ்வாராய்ச்சி செய்யச் சொல்லி தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அது வெற்றியும் பெற்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலையே அகழ்ந்து ஆராய்ச்சி நடத்த நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மத்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் குழு அந்தப் பணிகளைச் செய்யவேண்டி இருக்கிறது. அந்தக் கடற்கரைப் பகுதிக்குக் கீழே பல்வேறு சிறப்பு மிக்க பொருள்களும் 2,000 ஆண்டுகளுக்கு முன்



செய்த நாணயங்கள், சோழ நாட்டு, ரோம் நாட்டு நாணயங்கள், அரும் பொருள்கள் கிடைத்து இருக்கின்றன. ஆனால் கடல் அகழ் வாராய்ச்சி செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னால் அதிலே என்ன சிறப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஐ.நா. நாடுகள் அவைக்கு எழுத வேண்டுமென்றால், அந்தத் திட்டத்தின் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறினால் தான் சேர்த்துக் கொள்வார்கள். அதற்கு அடுத்தபடியாக சில பல கருத்துக்களைத் தெரிவித்தால்தான் ஐ.நா. நாடுகள் அவை அதைப் பற்றி நடவடிக்கை எடுக்க முன் வரும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, பூம்புகார் நகரத்தில் பண்டைச் சிறப்புகளை எடுத்துக் காட்டும் வகையில் கலைக்கூடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அது எப்போது முடிவடைந்து, திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கலைக்கூடம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. எப்போது திறக்கப்படும், எப்போது முடிவடையும் என்பதற்கான விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. டி. வி. சம்பத் : பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் சிறப்பு வாய்ந்த அந்தப் பகுதியில், துறைமுகம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கரிகால் சோழன் காலத்துப் படகுகளும், கப்பல்களும் தான் அந்தக் கரையில் ஒதுங்குமே தவிர இப்போது இருக்கும் கப்பல்கள் அந்தக் கரையில் ஒதுங்குவதற்கு இல்லை. எனவே, அதைக் கடற்கரையைத் துறைமுகம் ஆக்க இயலாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

## *Demands of Municipal Employees*

* 394 *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether representation was made to the Government on 4th April 1971 on behalf of the Municipal workers on their demands; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையின் கீழ் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நகரசபையில் பணியாற்றும் சிப்பந்திகளுக்குச் சம்பளக் கமிஷன் சிபார்சுகள் அமலாக்கப்படவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும், கீழ்த்தட்டிலுள்ள சிப்பந்திகளுக்கும் அது பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் நேற்றுக் கூறினார் கள். கீழ்த்தட்டு சிப்பந்திகள் அல்லாது மற்றவர்களுக்கும் கொடுப் பதற்கு அரசு முன்வருமா?

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மதுரை நகராட்சியைச் சார்ந்த ஊழியர்களின் சங்கத்தின் சார்பாக 4—1—71 அன்று 11 கோரிக்கைகள் அடங்கிய மனுவை முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்து இருக்கிறார்கள். அது நகராட்சி நிர்வாக இயக்குநர் கருத்துரைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அவருடைய கருத்துரை வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, முனிசிபல் நிர்வாகத்திலே இருக்கும் ஊழியர்களில் ஆயா என்று சொல்லக் கூடிய ஒரு தரப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது குறைந்த ஊதியம் கொடுக்கிறார்கள். அவர்களைப் பார்ட்-டைம் ஊழியர்கள் என்று கருதுகிறார்கள். அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்தக் கோரிக்கை மனுவோடு இதையும் சேர்த்து ஆராய்ந்து பார்த்து, அவர்களை முழு நேர வேலை ஊழியர்களாக்க வாய்ப்பு இருக்குமா என்று பார்க்கலாம். பகுதி நேர ஊழியர்கள் என்றால் அதற்கான ஊதியங்களைத் தான் பெற முடியும். இவர்களுக்கு எந்த அடிப்படையில் ஊதியம் தருவது என்பது பரிசீலனையில் இருப்பதால், பரிசீலனை முடிந்த பிறகு அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, நகராட்சிப் பணியாளர்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்கள். அந்தக் கோரிக்கையிலுள்ள விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் தந்து இருக்கிற கோரிக்கைகள் :—

1. சம்பளம், கீழ்நிலை அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற வீதத்தில் நகராட்சி ஊழியர்களுக்குச் சம்பளம் படிகள் மற்ற வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

2. அரிசன, மலைவாழ் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு நகராட்சி ஊழியருக்கும் 5 சென்ட் நிலம் வழங்கி அதற்கான விலையை அவரது சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ள வேண்டும்.

3. அந்த நிலங்களில் குறைந்த விலையில் வீடுகள் கட்டித் தர வேண்டும்.

4. நகராட்சி ஊழியர்களுக்கும் தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

5. அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிர்வாக அதிகாரி, நகராட்சி ஊழியர் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

6. வருங்கால வைப்பு நிதித் திட்டத்தை மதுரை நகராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிக்க வேண்டும்.

7. ஓய்வு பெறும் நகராட்சிப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50 ஓய்வு ஊதியத் தொகை வழங்க வேண்டும்.



1971 ஜூலை 23]

8. மதுரை நகராட்சி, மாநகராட்சியாக்கப்பட்டிருப்பதால், சென்னை மாநகராட்சிக்குப் பொருந்தும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மதுரை மாநகராட்சிக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

9. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும்.

10. குடிசைகளை மாற்றி அமைக்க வேண்டும்.

11. புறம்போக்கு நிலங்கள் ஒப்படை செய்யவேண்டும் என்று 11 கோரிக்கைகள் வைத்து இருக்கிறார்கள். இவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

## கோரைக்கு விற்பனை வரி விலக்கு

* 403. வினு.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதன் மூலம் அரசு இழக்கும் தொகை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாய் நெய்யும் கோரைக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டதன் மூலம் ஒரு ஆண்டில் சுமார் ரூ. 30,000 அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, ஏழைகளுக்கு நன்மை செய்யும் இது போன்ற வேறு வரி விலக்குகள் என்ன பொருள்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது? இன்னும் ஏதாவது கைவினைப் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கும் உத்தேசம் உண்டா? கைத்தறித் துணிகளுக்கு அளிக்கப்படும் ரிபேட் போல், இந்தக் கோரைப் பாய்களுக்கும் ரிபேட் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எந்தெந்தப் பொருள்களுக்கு வரி விலக்கு அளித்து இருக்கிறோம் என்று கேட்டார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். ரிபேட் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். இதைத் தொழிலமைச்சரிடம் கேட்கவேண்டும்.

## அரிசனங்களுக்கு கிராம அதிகாரிகள் பதவி

* 404. வினு.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் கர்ணம், கிராம முன்சிப் முதலிய வேலைகளுக்கு அரிசன மக்களுக்கு விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்கப்படுகிறதா?

(இ) இல்லை எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) தற்பொழுது உள்ள விகித முறையில் சலுகை காட்ட வாய்ப்பு இருப்பதால் விகிதாசாரப்படி வாய்ப்புக் கொடுக்க அவசியமில்லை.

[1971 ஜூலை 23

திரு. எம். முத்தையா: பேரவைத் தலைவர் அவர்களே, விகிதா சாரப்படி வாய்ப்புக் கொடுக்க அவசியமில்லை என்று சொல்கிறார்கள். இனிமேலாகிலும், அந்தக் கிராமங்களில் உள்ள கர்ணம், முன்சீப்பு வேலைகளுக்கு ஹரிஜன் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு, அதற்கு வேண்டிய சொத்து மதிப்பு வைத்து இருந்தால், படிப்பு தகுதி இருந்தால், அவர்கள் மனுக் கொடுத்தால் அவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஒரு கிராம உத்தியோகஸ்தராக நியமிக்க சட்ட விதிமுறைகள் வகுத்து இருக்கிறோம். அதற்கு ஏற்ப பொதுவாக கிராமங்களிலிருந்து மனுக்கள் கேட்கிறோம். அந்த மனுக்கள் கேட்கிற நேரத்தில் அவர்களும் மனுக் கொடுத்தால் பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே இருக்கிற சட்டத்தில் பாதுகாப்பு இருக்கிறது. அதுவே போதுமானதாகக் கருதப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, ஜாதி விகிதா சாரப் பிரகாரம் இந்தக் கர்ணம், முன்சீப்பு வேலைகளுக்கு ஆட்கள் எடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஜாதி விகிதாசாரத்தைப் பார்ப்பது இல்லை. இந்தப் பதவிகளுக்கு என்று தனியாக தகுதி, விதி முறைகள் வைத்து இருக்கிறோம். 40 வயதுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். 11-வது வகுப்புத் தேறி இருக்க வேண்டும். ரெவினியூ டெஸ்ட் பாஸ் செய்து இருக்க வேண்டும். இப்படி விதிமுறைகள் வைத்து இருக்கிறோம். இதைத் தவிர, எவ்வளவு சொத்து இருக்க வேண்டும் என்று, அதாவது ஒரு கிராமத்தில் எவ்வளவு வரி வசூல் ஆகிறதோ அந்த அளவுக்கு சொத்து இருக்க வேண்டும். இவைகளைப் பொறுத்துத்தான் நியமிக்கிறோம். ஜாதி விகிதா சாரத்தைப் பார்ப்பது இல்லை.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, புதிய விதிமுறைகளின் கீழ் கிராமக் கர்ணம், முன்சீப்பு வேலைகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து இருக்க வேண்டுமென்று இருப்பதையாவது, தாழ்த்தப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் தளர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி ஒருவருக்கு ஒரு விதி, இன்னொருவருக்கு ஒரு விதி என்று செய்வதற்கு இயலாது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எக்சம்ஷன் தரும்போது, இதற்குக் கொடுக்காத காரணம் என்ன? தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத ஒரு ஜாதியில் பிறந்தவர்கள் தான் அந்தப் பதவிக்கு வரவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஒரு ஜாதி தான் வர வேண்டுமென்று அரசாங்கம் கொள்கை வகுக்கவில்லை. ஒரு கிராமத்தில் வரி வசூல் செய்வதற்குத்தான் கர்ணம்,



1971 ஜூலை 23]

முன்சீப்புகள் நியமிக்கப்படுகிறார்கள். இதிலே ஜாதிப் பிரச்னை வரவில்லை. புதிதாகக் கொண்டு வந்து புகுத்துவதில் பயன் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

டாக்டர் வ. சின்னசாமி: தலைவரவர்களே, கிராம முன்சீப்பு போன்ற வேலைகளுக்கு நியமிக்கப்படுவதற்கு சொத்து இவ்வளவு இருக்க வேண்டுமென்று விதி முறை வகுத்து இருக்கிறார்கள், ஹரிஜனங்களுக்கு அந்த விதியைத் தளர்த்த முடியுமா, அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சொத்து மதிப்பு கேட்பது அரசாங்க வரிப் பண வசூலுக்கான பாதுகாப்பு. அதைத் தளர்த்த இயலாது.

திரு. ஆ. முனியாண்டி: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் ஆதித் திராவிட பெருமக்கள் கர்ணம் போன்ற பதவிகளில் இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தெரியாது. அங்கத்தினர் சொன்னால் தெரிந்து கொள்ளலாம்.

திரு. வீ. இராசகோபால்: தலைவரவர்களே, ஹரிஜனங்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்து கர்ணம் போன்ற உத்தியோகங்களைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அவ்வப்போது அதற்கான பரீட்சைகள் வைக்கப்படுகின்றன. அவற்றில் தேற வேண்டும். அப்படித் தேறியவர்கள் மனுச் செய்தால், அவர்கள் தகுதி, சொத்து மதிப்பு ஆகியவற்றைப் பார்த்துப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, ஒரு கிராமத்தில் கர்ணம் கிராம முன்சீப்பு உத்தியோகத்திற்கு அங்கே உள்ள தகுதி உள்ளவர்கள் மனு செய்வார்களானால், மற்ற சமூகத்தினரைப் போல், ஹரிஜன மக்களும் சொத்து மதிப்பிலும், மற்ற தகுதி உடையவர்களாக இருந்தால், அவர்களையும் புறக்கணிக்காமல் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அப்படி கீழ் மட்டத்தில் ஏதாவது புறக்கணிக்கப்பட்டிருந்தால், அப்பீல் செய்வதற்கு எல்லா வாய்ப்பு வசதியும் இருக்கிறது. அது அரசாங்கத்திடம் அப்பீலில் வரும்போது பரிசீலிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதுவரையிலும் வில்லேஜ் ஆபீசர்களாகப் போடுவதற்கு ஒரு தகுதி வாய்ந்த ஹரிஜன் கூடக் கிடைக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தமிழ்நாட்டில் ஹரிஜன் அல்லாதவர்கள் தான் வில்லேஜ் ஆபீசர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னதே இல்லை.

[1971 ஜூலை 23

*Siruvani Water.*

* 405. *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the officials of the State Government met the Kerala Government representatives in February 1971, in connection with the sharing of water of the Siruvani; and

(*b*) if so, the details thereof?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> (அ) & (இ) சிறுவாணி திட்டத்தைப்பற்றி கேரள அரசால் அனுப்பப்பட்ட வரை ஒப்பந்தமும், தமிழ்நாடு அரசால் தயாரிக்கப்பட்ட வரைவு ஒப்பந்தமும் விவாதிக்கப்பட்டன. திருவனந்தபுரத்தில் 27—1—1971 அன்று செயலாளர் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்விரு வரைவு ஒப்பந்தங்களும் விவாதிக்கப்பட்டன. 1971 பிப்ரவரி 17-ம் நாளன்று சென்னையில் நடைபெறுவதற்காக கூட்டம் ஒத்திவைக்கப் பட்டது. ஆனால் கேரள அரசு அதிகாரிகள் வர இயலாமையைத் தெரிவித்து கூட்டத்தை ஒத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டதனால் ஒத்திவைக்கப்பட்ட இக் கூட்டம் சென்னையில் 1971 பிப்ரவரி 17-ம் நாளன்று நடைபெறவில்லை.

10—5—1969-ஆம் தேதிய முதலமைச்சர்களின் ஒப்பந்தம் விரைவில் அமுலாக்கும் பொருட்டு சிறுவாணி ஒப்பந்த வரைவை விவாதிக்க சென்னையில் கூடிப் பேச ஜூன் மாதம் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் ஒரு ஏற்ற தேதியைத் தெரிவிக்குமாறு கேரள அரசு பாசனச் செயலாளருக்கு 18—5—1971-ஆம் தேதியில் ஒரு நேர்முகக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அதற்கு அவர் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்:</u> தலைவர் அவர்களே, இந்தச் சிறுவாணி தண்ணீர் தகராறைப் பொறுத்த அளவில் தமிழ்நாடு அரசு சரியாக நடந்து கொள்ளவில்லை என்பதாக கேரள அமைச்சர் திரு. திவாகரன் பத்திரிகையில் அறிக்கைவிட்டிருக்கிறாரே, அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படி அறிக்கைவிட அடிப்படைக் காரணம் உண்டா?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> சிறுவாணித் திட்டத்தைப்பற்றிப் பரிசீலிப்பதற்காக நேரிடையாகக் கடிதம் வரவில்லை. அப்படிச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. சிறுவாணித் திட்டம் என்பது ஏற்கனவே முடிந்த ஒன்று. அந்த விவரங்களை எல்லாம் கேரளா அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். கேரள அரசாங்கத்தின் குற்றச்சாட்டு இதுபற்றி அல்ல. வேறு பிரச்சினைகள் சம்பந்தப்படுத்தப்படுவதால் இது காலதாமதப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: This Siruvani agreement actually was finalised about two or three years ago originally by the Chief Ministers and later on by the P.W.D. Ministers and the Coimbatore people were also assured that Siruvani construction will take place immediately and Coimbatore people will get water



1971 ஜூலை 23]

supply. May I know whether there are different parts of this agreement? One part of the agreement, the first part, allows us to start the work straightaway because we have also given them some concession as a sort of exchange programme, as a sort of barter system. May I know the details, whether the construction is started already and when the Coimbatore city people can hope to get some water at least because they are finding water supply as a tough problem there.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Major portion of the work is to be done by the Kerala Government because it is to be constructed in the Kerala territory. We have asked for sanction of Kerala Government to proceed with the work. We have submitted proposals and we are awaiting reply from the Kerala Government.

<u>திரு. ஏ. சுப்பிரமணியம்:</u> தலைவர் அவர்களே, ஜூன் மாதத்திலேயே பேச்சுவார்த்தைக்கு நாள் குறிப்பிட்டனுப்பும்படி கேட்டிருந்ததற்கு பதில் வரவில்லை என்று சொன்னார்கள். இன்று தமிழக அரசுக்கும், கேரள அரசுக்கும் உள்ள நல்ல உறவின் அடிப்படையில் நமது மாநில முதல் அமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சரைச் சந்தித்துப்பேசி ஒரு நல்ல முடிவு காண்பதற்கு முயல்வார்களா?

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:</u> கேரள மாநில முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பும்போது இங்கே வந்திருந்தார்கள், தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் அப்போது அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு ஏற்பாடு செய்வதாக, அவர்கள் சொன்னார்கள்.

<u>திரு. நா. வீராசாமி:</u>

* * * * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> * * இந்தக் கேள்வியை நான் அனுமதிக்க முடியாது. நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

<u>திரு. நா. வீராசாமி:</u>

* * * * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இந்தக் கேள்வியையும் அனுமதிப்பதற்கில்லை. இதையும் அவையின் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். பத்திரிகைகள் பிரசுரிக்க வேண்டாம்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: I understand that certain conditions have been imposed by the Kerala Government to Tamil Nadu Government regarding the Siruvani water-supply. May I know what those conditions are?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேரளத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்ட சிறுவாணித் திட்ட ஒப்பந்தப்படி 1.3 T.M.C. தண்ணீர் நமக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் கேரள எல்லைக்குள் நடைபெற வேண்டியிருப்பதால் அவர்களது அனுமதி தேவைப்படுகிறது. இது பற்றி நம் அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, சிறுவாணித் திட்ட பேச்சுவார்த்தையின் மூலம் இவ்வளவு காலன் தண்ணீர் கோவைக்குக் கொடுப்பதாக ஏற்கெனவே முடிவாகிவிட்டது. ஆனால், அதை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசாங்கம் கால தாமதம் செய்கிறது என்கிற பிரச்சினையை கேரள அதிகாரிகள் அறிக்கையின் மூலம் வெளியிட்டு வருகிறார்களே, இதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு அரசாங்கத்திற்கும், கேரள அரசாங்கத்திற்கும் கடிதப்போக்கு வரத்து நடைபெறுகிறது. அதன் விவரங்களைக் கேட்டார்கள். நாங்கள் பதில் அனுப்பியிருக்கிறோம்.

The Government of Kerala have been given a detailed reply on 18th May 1971 regarding the changes in the design of the Siruvani Dam with a request to intimate a convenient date in the first or second week of June 1971 for a meeting at Madras to discuss the draft Siruvani agreement so as to ensure speedy implementation of the Chief Ministers' agreement of 10th May 1969 which will be beneficial to both the States. The draft agreement will be finalised after the Secretariat level discussion is over.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஜனத்தொகையில் 40 ஆயிரத்திற்குமேல் மலையாளிகள் இருக்கிறார்கள். அதுபோல தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் நிறைய இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையில் கேரள அரசாங்க அனுதாபத்தைப் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கேரள அரசாங்கத்திற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அத்திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றே அரசு விரும்புகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், சிறுவாணித் திட்டத்திற்காக கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீரைப் பெறும்போது, அவர்கள் அப்பர் பவானியிலிருந்து தண்ணீர் கேட்டிருக்கிறார்களா என்பதை தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.



1971 ஜூலை 23]

திரு. எம். சுரேந்திரன்: சார், அண்டை மாநிலங்களில் இருக்கிற தண்ணீரைப் பயன்படுத்துவதில் ஒருவருக்கொருவர் இடையே சர்ச்சைகளும் விவாதங்களும் ஏற்படுவதால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதில் காலதாமதம் ஆகிறது. ஆகவே, இப்படித் தண்ணீரைப் பயன்படுத்தும்போது, அது கேரளாவிலிருந்து பெற்றாலும், மைசூர், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் எங்கிருந்து பெற்றாலும், அடிப்படையான கொள்கை ஒன்றை வகுத்துக்கொள்ள வேண்டிய அவசியமான நிலை அருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட கொள்கையை மத்திய சர்க்கார் தான் வகுக்க முடியும். அப்படி கொள்கையை வகுத்துக்கொள்ள மத்திய சர்க்காரை தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எம்.எல்.ஏ-க்கள், அமைச்சர்கள் சேர்ந்து சத்தியாகிரகம் போன்று நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஒரு பொதுவான கேள்வி. அதற்கு கொள்கை விளக்கத்தை கேள்வி நேரத்தில் நான் கொடுக்க முடியாது. எந்த வகையிலும் சுமுகமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நம்முடைய அரசு விரும்புகிறது.

திரு. ஏ. எம். இராஜா: சிறுவாணி அணை கட்டுவதால், அது கேரளாவில் கட்டப்படுவதால், உடன்பாட்டில் தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நமக்கு இப்பொழுது கோவை நகரத்திற்கு தண்ணீர் இல்லாத பிரச்சினை அதிகமாக இருப்பதால், நம்முடைய பக்கத்தில் ஒரு தற்காலிகமான அணையைக் கட்டிக் கொண்டு, முதலிலே அவசரமாக கோயம்புத்தூர் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா? அதைப் பற்றி முதலிலே பொறியாளர்களை ஆராய வேண்டும் என்று கேட்டார்களா? பொறியாளர்களுடைய பதில் என்ன என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கோவை நகரில் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர் கஷ்டத்தைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க என்னென்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அதிகாரிகளைக் கலந்து பேசியிருக்கிறோம். இப்பொழுது இருக்கும் நிலையில் தண்ணீரைத் தேக்கி கோவை நகரத்திற்கு தண்ணீர் தரமுடியுமா என்பதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்த பிறகு, ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப்: சார், அண்மையிலே கண்ணனூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் கேரள அமைச்சர் கலந்துக் கொண்டார்கள். கோயம்புத்தூர் தண்ணீர் பிரச்சினை பற்றி, அவர்கள் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, தமிழ் நாட்டு அரசோடு முடிவு காண வேண்டும் என்று வேண்டிக் கொண்டபோது, அவர்கள் நாங்கள் செய்வதையெல்லாம் செய்து விட்டோம். இந்த பிரச்சினை மனிதாபிமானத்தோடு செய்ய வேண்டிய காரியம், அதை தமிழ் நாட்டு அரசுதான் செய்ய வேண்டும் என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தை நம்முடைய அமைச்சர் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேரளத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் ஏற்பட்ட சிறுவாணித் திட்ட ஒப்பந்தப்படி 1.3 T.M.C. தண்ணீர் நமக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் கேரள எல்லைக்குள் நடைபெற வேண்டியிருப்பதால் அவர்களது அனுமதி தேவைப்படுகிறது. இது பற்றி நம் அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சிறுவாணித் திட்ட பேச்சுவார்த்தையின் மூலம் இவ்வளவு காலன் தண்ணீர் கோவைக்குக் கொடுப்பதாக ஏற்கெனவே முடிவாகிவிட்டது. ஆனால், அதை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு அரசாங்கம் கால தாமதம் செய்கிறது என்கிற பிரச்சினையை கேரள அதிகாரிகள் அறிக்கையின் மூலம் வெளியிட்டு வருகிறார்களே, இதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு அரசாங்கத்திற்கும், கேரள அரசாங்கத்திற்கும் கடிதப்போக்கு வரத்து நடைபெறுகிறது. அதன் விவரங்களைக் கேட்டார்கள். நாங்கள் பதில் அனுப்பியிருக்கிறோம்.

The Government of Kerala have been given a detailed reply on 18th May 1971 regarding the changes in the design of the Siruvani Dam with a request to intimate a convenient date in the first or second week of June 1971 for a meeting at Madras to discuss the draft Siruvani agreement so as to ensure speedy implementation of the Chief Ministers' agreement of 10th May 1969 which will be beneficial to both the States. The draft agreement will be finalised after the Secretariat level discussion is over.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஜனத்தொகையில் 40 ஆயிரத்திற்குமேல் மலையாளிகள் இருக்கிறார்கள். அதுபோல தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் நிறைய இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையில் கேரள அரசாங்க அனுதாபத்தைப் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேரள அரசாங்கத்திற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அத்திட்டம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றே அரசு விரும்புகிறது.

திருமதி த. நா. அனந்தநாயகி : சார், சிறுவாணித் திட்டத்திற்காக கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி தண்ணீரைப் பெறும்போது, அவர்கள் அப்பர் பவானியிலிருந்து தண்ணீர் கேட்டிருக்கிறார்களா என்பதை தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.



1971 ஜூலை 23]

திரு. எம். சுரேந்திரன் : சார், அண்டை மாநிலங்களில் இருக்கிற தண்ணீரைப் பயன்படுத்துவதில் ஒருவருக்கொருவர் இடையே சர்ச்சைகளும் விவாதங்களும் ஏற்படுவதால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதில் காலதாமதம் ஆகிறது. ஆகவே, இப்படித் தண்ணீரைப் பயன்படுத்தும்போது, அது கேரளாவிலிருந்து பெற்றாலும், மைசூர், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் எங்கிருந்து பெற்றாலும், அடிப்படையான கொள்கை ஒன்றை வகுத்துக்கொள்ள வேண்டிய அவசியமான நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட கொள்கையை மத்திய சர்க்கார் தான் வகுக்க முடியும். அப்படி கொள்கையை வகுத்துக்கொள்ள மத்திய சர்க்காரை தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எம்.எல்.ஏ-க்கள், அமைச்சர்கள் சேர்ந்து சத்தியாகிரகம் போன்று நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஒரு பொதுவான கேள்வி. அதற்கு கொள்கை விளக்கத்தை கேள்வி நேரத்தில் நான் கொடுக்க முடியாது. எந்த வகையிலும் சுமுகமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நம்முடைய அரசு விரும்புகிறது.

திரு. ஏ. எம். இராஜா : சிறுவாணி அணை கட்டுவதால், அது கேரளாவில் கட்டப்படுவதால், உடன்பாட்டில் தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நமக்கு இப்பொழுது கோவை நகரத்திற்கு தண்ணீர் இல்லாத பிரச்சினை அதிகமாக இருப்பதால், நம்முடைய பக்கத்தில் ஒரு தற்காலிகமான அணையைக் கட்டிக் கொண்டு, முதலிலே அவசரமாக கோயம்புத்தூர் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா? அதைப் பற்றி முதலிலே பொறியாளர்களை ஆராய வேண்டும் என்று கேட்டார்களா? பொறியாளர்களுடைய பதில் என்ன என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவை நகரில் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர் கஷ்டத்தைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க என்னென்ன சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அதிகாரிகளைக் கலந்து பேசியிருக்கிறோம். இப்பொழுது இருக்கும் நிலையில் தண்ணீரைத் தேக்கி கோவை நகரத்திற்கு தண்ணீர் தரமுடியுமா என்பதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்த பிறகு, ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்திப் : சார், அண்மையிலே கண்ணனூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் கேரள அமைச்சர் கலந்துக் கொண்டார்கள். கோயம்புத்தூர் தண்ணீர் பிரச்சினை பற்றி, அவர்கள் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, தமிழ் நாட்டு அரசோடு முடிவு காண வேண்டும் என்று வேண்டிக் கொண்டபோது, அவர்கள் நாங்கள் செய்வதையெல்லாம் செய்து விட்டோம். இந்த பிரச்சினை மனிதாபிமானத்தோடு செய்ய வேண்டிய காரியம், அதை தமிழ் நாட்டு அரசுதான் செய்ய வேண்டும் என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தை நம்முடைய அமைச்சர் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இரு தரப்பிலும் செல்வாக்கை உபயோகித்து, நல்ல முடிவு ஏற்படவேண்டும் என்று தான் நம்முடைய அரசு எல்லா விவரங்களையும் கொடுத்திருக்கிறோம். கேரள எல்லேயில் நடக்கவேண்டியதாக இருப்பதால், நல்ல முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

* 406. வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சிறுவாணி குடிதண்ணீர் திட்டத்திற்காக அணைகள் கட்டும் வேலே எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இத்திட்டம் குறித்து பணிகளைத் தொடங்குவதற்குக் கேரள அரசின் முடிவான இசைவு தேவைப்படுகிறது. அது கிடைத்துவிடுமென எதிர்பார்க்கிறோம். அணைக்கட்டு வேலேயைக் கேரள அரசு நிறைவேற்றவேண்டும். எனவே இந்தத் திட்டம் விரைவாகத் தொடங்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலேவர் அவர்களே, அமைச்ச ரவர்கள் விரைவாக வேலே தொடங்கப்படும் என்று சொன்னூர்கள். இந்தச் சிறுவாணி அணே எவ்வளவு லட்சம் மக்களுக்கு உபயோக மாகும், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், அடிக்கடி கோடை காலங் களில் பற்றுக்குறை இருக்கிறதே, அதைப் போக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா? இவற்றைப்பற்றி அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கோவை நகரத்திற்கு இருக்கும் தண்ணீர் பிரச்சினையை நிவர்த்திக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப்பற்றி அதிகாரிகளைக் கலந்து பேசிவருகிறோம். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலேவர் அவர்களே, கோவை நகரத்தில் தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க, "ஸம்மர் ஸ்டோரேஜ்" கட்டுவது பற்றி மார்ச் திங்களில் ஆராயப்பட்டு, ஒரு மாதத்தில் இறுதி அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் பணித்தார்களே, அந்த இறுதி அறிக்கை இன்னும் வரவில்லேயா? தாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப் பினர் அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். இன்னும் அதிகாரிகளிடமிருந்து விளக்கங்கள் தேவையாக இருப்பதால் இன்னும் அறிக்கை வரவில்லே. தண்ணீர் கஷ்டத்தைப் போக்க சாத்தியமான நடவடிக்கைகள் எடுக்க முயற்சி செய்யப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலேவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் கேரள அரசாங்கத்திற்கு தமிழக வாய்க் கால்கள்மூலம் தண்ணீர் இல்லாவிட்டாலும், கேரள மாநிலத்திற்கு அம்பலப்புழா ஆற்றில் 12 அடித் தண்ணீர் விடப்படுகிறது. அதனுல்



1971 ஜூலை 23]

இந்தப் பகுதி வாய்க்கால்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதமான ஒப்பந்தம் கேரள அரசாங்கத்தோடு செய்து கொள்ளப் பட்டது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கு தொடர்பில்லே. அடுத்த கேள்வி வரும்போது, இந்தக் கேள்வியைக் கேட்டால் பதில் அளிக்கிறேன்.

## பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம்

* 407. வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் தமிழகம் தண்ணீர் பெறுவதில் கேரள அரசு காலம் கடத்திக்கொண்டு போவதால் "நதி நீர் தகராறுகளை தீர்க்க" நீதிபதிகள் கொண்ட போர்டு நியமிக்க வேண்டும் என 1970–71-ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(இ) இல்லே எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லே.

(இ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின்கீழ், நதி நீர் பங்கீடு குறித்த சிக்கலான பிரச்சனைகள் எல்லாவற்றையும் இரு மாநில அரசுகளும் பேச்சு வார்த்தைகள்மூலம் சமாதானமாக முடிவு செய்து 29—5—1970-ல் ஒப்பந்தம் ஒன்று கையொப்பம் இட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலேவர் அவர்களே, இந்தப் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் போக, நீராற்றில் அணைக் கட்டு வேலே காரணமாக எவ்வளவு ஏக்கருக்கு பயன்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நீராறு அணைக் கட்டு வேலே ஒன்றரைக் கோடி செலவில் துரிதமாக நடைபெறுகிறது. அது ஒரு ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலேவர் அவர்களே, பரம்பிக் குளம்–ஆழியாறு திட்டத்தின்கீழ் உள்ள வாய்க்கால் காங்கயம் பகுதியில் பாயும்போது, பல நேரங்களில் "டெயில்-எண்ட்"க்கு தண்ணீர் வருவதில்லே. நீராறு திட்டம் நிறைவுபெற்றுல், அங்கே ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விடும் வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் எல்லா அணைக்கட்டுகளும் முடிந்தால், 2,40,000 ஏக்கருக்கு ஆண்டுதோறும் தண்ணீர் கிடைக்கும்.

* 408. வினு.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட வேலேகள் காண்ட்ராக்ட் மூலம் நடைபெறுவதை கைவிட்டு அரசே ஏற்று நடத்த உத்தேச முண்டா?

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்திலே காண்டிராக்ட் விடுவது, அந்த கண்டிராக்டர்கள் 5, 10 வருஷம் வேலை செய்த வேலையாட்களை வேலைக்கு எடுக்காமல், புதிதாக தொழிலாளர்களை எடுக்கிறார்கள். ஆகவே, அந்த வேலைகளை கண்டிராக்டுக்கு விடாமல், அரசாங்கமே தொழிலாளர்களைக் கொண்டு நடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் வகையில் கண்டிராக்டர்கள் 5, 10 வருஷம் வேலைசெய்த தொழிலாளர்களை எடுத்துக் கொள்கிறார்களா இல்லையா என்பதற்கான குறிப்பு என்னிடம் இல்லை. அரசாங்கத்தில் சில தொழிலாளர்கள் "ஒர்க்-சார்ஜ்ட்" தொழிலாளர்கள் என்று பணி புரிகிறார்கள். கண்டிராக்டர் செய்வதை அரசாங்கமே எடுத்து நடத்துவது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை.

## தமிழ் நாட்டில் சுற்றுப் பயணத் தலங்கள்

* 409. வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சுற்றுப் பயண தலங்களை அதிகப்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சுற்றுப்பயண தலங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்துவதோ குறைப்பதோ அரசு செய்வதில்லை. சில ஊர்கள் சுற்றுலா சிறப்பு பெற்றிருப்பதால் பயணிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தும் பணியில் அரசு செயல் படுகிறது. ஒரு சுற்றுலா தலத்தின் வளர்ச்சிக்கான அரசின் திட்டங்கள் அத்தலத்திற்கு வந்து போகும் பயணிகளின் எண்ணிக்கையையும், அத்தலத்திலுள்ள சுற்றுலா வளர்ச்சிக்கான சிறப்பையும் பொறுத்திருக்கிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு வருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு மக்களுக்கு பல்வேறு இடங்களையும் சுற்றிப் பார்க்கும்போது, நீலகிரி, குற்றாலம் போன்ற இடங்களை அதிகமாக கவர்ச்சி உள்ளதாகச் செய்ய விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இருக்கின்ற நல்ல இயற்கை காட்சியுள்ள இடங்களையும், பழங்கால சிற்பங்கள் இருக்கும் இடங்களையும் வளமாகச் செய்து, பாதைகளை அமைத்து அத்தகைய காரியங்களைச் செய்கிறது. வேறு எதையும் செய்வதில்லை. இந்த ஆண்டில் ஏற்காட்டிலும், சிறுமலையிலும் அபிவிருத்தி வேலைகள் செய்யப்படுகின்றன. குன்னூரில் சுற்றுலா கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது.



1971 ஜூலை 23]

திரு. ஆர். கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போதுள்ள சுற்றுலா பயணிகள் போகக்கூடிய இடங்களை விரிவு படுத்தக் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா இடங்களை எந்த எந்த வகைகளில் அபிவிருத்தி செய்வது என்பது பற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பழங்கால சிற்பங்கள் உள்ள இடங்கள், கடற்கரையோரங்கள் இவற்றை வளப்படுத்தவும், உள்நாட்டு மக்கள் பார்க்கவும், வெளிநாட்டு மக்கள் மகிழவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : வட ஆற்காடு மாவட்டத்தில் சுற்றுலா தலங்கள் அமைத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசு தரப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட இடங்கள் அரசு பொறுப்பில் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் ஏற்காட்டில், பல ஆண்டுகளாக ஒரு சுற்றுலா மாளிகை அமைக்க பேறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலும், நமது கலைஞர் அவர்கள் ஏற்காட்டிற்கு வந்திருந்தபோதும், மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் வந்திருந்தபோதும் சுற்றுலா மாளிகை அங்கு விரைவில் அமைக்கப்படுமென்று தெரிவித்திருந்தாலும்கூட இன்று எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்காட்டில் இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சுற்றுலா மாளிகை கட்ட ஏற்பாடாகி சென்ற மாதம் வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் முடிவுறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பழமுதிர்சோலை என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இடத்திற்கு அந்நிய நாட்டினர் அதிகமாக வருகிறார்கள். அங்கு சுற்றுலா மாளிகை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் நிறைய சோலைகள் இருக்கின்றன. சில சோலைகளைத்தான் வெளிநாட்டினருக்கு விளம்பரப் படுத்த முடியுமே தவிர எல்லாவற்றையும் விளம்பரப் படுத்த முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ஏற்காட்டில் சுற்றுலா மாளிகை தேவை என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற நேரத்தில், இங்கே வங்காளவிரிகுடாக் கடல் பக்கத்தில் இருக்கின்ற பழவேற்

காட்டில், டச்சுக்காரர்கள் இருந்த நகரமாகிய இந்த இடத்தில், ஒரு சிறிய தீவுகூட இருக்கிறது. அங்கு சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேம்பாட்டுத் திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பொறுப்பில் தற்போது பழவேற்காடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பலவிடங்கள் இம்மாதிரி இருப்பதை அரசு அறியுமென்றாலும், அவற்றை எல்லாம் வளப்படுத்து வதற்கு நிதி பற்றாக்குறையாகவிருப்பதால் இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யத்தை சுற்றுலாத் தலமாக்க அரசுக்கு யோசனையுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திற்குச் சமீபத்தில் நான் சென்றிருந்தேன். அங்கு பறவைகள், மீன்கள் சரணாலயங்கள் மிகச் சிறப்பாகவிருக்கிறது. அவ்விடத்திய சிறப்பைப்பற்றி அரசு கருத்தில் கொண்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலிருக்கின்ற சுற்றுலாத் தலங்களை விளக்கக் கூடிய ஒரு குறிப்பு நமது அரசாங்கத்தின் சார்பாக வெளியிட்டிருக் கிறதா, அப்படி இல்லாவிட்டால் செய்ய உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திருச்செந்தூர் போன்ற இடங்களைப்பற்றி ஆங்காங்கே நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எல்லாவற்றையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிட எண்ணமிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தப் பக்கத்திலிருப்பவர்கள் தலைவர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க எந்த முறையைக் கையாளவேண்டுமென்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு தடவை சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தப் பக்கத்திலிருக்கின்ற அங்கத்தினர்கள் தலைவர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க எந்த முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க தலைவர் அவர்களின் கண்ணில் படவேண்டியதே தவிர, அவருடைய காதில் விழவேண்டிய அளவுக்குப் பேசினால் அது கூச்சலாகி விடும். அது சட்ட மன்ற மரபுமில்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கேள்வி நேரத்தின்போது சில உப



கேள்விகளுக்குத்தான் அனுமதி கொடுக்கப்படும். ஹரிஜன நலனைப் பற்றி ஒரு கேள்வி வந்தது. பெரும்பாலாக ஹரிஜனத் தொகுதி, ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலிருந்து வந்துள்ளவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. மதுரையைப்பற்றிய கேள்வி வந்தபோது திரு. திருப்பதி போன்றோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அந்த வகையில் உறுப்பினர்களுடைய உரிமையும் மிக பாதுகாப்பாகத் தலைவர் அவர்களிடம் இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்பதல்ல. உண்மையைச் சொல்லப் போனால், கேள்வி நேரம், அதாவது ஒரு மணி நேரம் முடிவடைந்து விட்டது. தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற விசேஷ அதிகாரத்தைக் கொண்டு அந்தக் கேள்வி நேரத்தை தாண்டியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## தமிழ்நாட்டில் புது மலைவாசஸ்தலங்கள்

* 410. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் புதிதாக மலைவாசஸ்தலங்கள் அரசு அமைக்கும் செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, புதிதாக மலை வாசஸ்தலங்களை உருவாக்குகின்ற நேரத்தில், திருக்குற்றாலத்தைச் சேர்த்துக்கொள்ள அரசு முயற்சிக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : குற்றாலம், கொடைக்கானல், உதகை போன்ற இடங்கள் ஓரளவுக்கு வளமுடையவை என்பது அரசு கவனத்திலிருக்கிறது. பல மலைகள் உதகையைப் போல் உயர மாகவிருந்தாலும், எல்லா இடங்களையும் கோடை மலைவாசஸ்தலங் களாக உருவாக்குவது மிகவும் கடினம்.

திரு. முகமது கோதர் முகைதீன் : தலைவர் அவர்களே, அந்தந்த வாசஸ்தலங்களுக்கு வருகின்ற பயணிகள் மூலம் வருகின்ற வருவாய் மாகாண சர்க்காருக்குக் கிடைக்கின்றதா அல்லது மத்திய சர்க்காருக்குப் போகிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்தந்த ஊருக்கு வந்து அங்கங்கே செலவு செய்கின்ற பணம்—வருவாய் அந்தந்த மாநிலத் திற்குப் போய் சேருகிறது. அந்தச் சர்க்காருக்குத்தான் கிடைக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஜோலார் பேட்டை ரயில் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள ஏலகிரி மலையை மலைவாசஸ்தலமாக ஏற்பாடு செய்து தந்தால் சாதாரண மக்கள் சென்று தங்க வசதியாகவிருக்கும். அதை உடனடியாக அரசு செய்து தரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது உணவு—வருவாய்த்துறை அமைச்சர் சமீபத்தில் ஏலகிரி மலைக்குச் சென்றிருந்தார்கள். அங்கே சென்று தங்கியும் இருந்தார்கள். அந்த இடத்தை மலைவாசஸ்தலமாக மாற்றுவதற்கு ஏராளமான தொகை தேவைப்படுகிறது. ஆகவே, உடனடியாக மலைவாசஸ்தலமாக அதை மாற்றுவது இயலாது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, ஏலகிரி மலைக்கு நான் சென்றிருக்கிறேன். நடுத்தர மக்கள் சென்று வரக்கூடிய வசதி படைத்த இடம் அது. அங்கு பக்தி மார்க்கம் கொண்டவர்களுக்குக் கூட விசேஷமான ஒரு கோவில் இருக்கிறது. ஆகவே அரசு அதை ஒரு நடுத்தர வர்க்கத்தினருக்கான மலைவாசஸ்தலமாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நடுத்தர வர்க்கத்தினரும், ஏழைகளும் ஏற்காட்டிற்குச் சென்று வரலாம். அது அடிக்கடி சென்று வரக்கூடிய இடமாகத்தான் அமைந்திருக்கிறது.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்திலே எந்த கோடை வாசஸ்தலமும் இல்லை. எனவே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் இராஜபாளையம் அருகே அய்யனுர் கோவில் என்ற மலை இருக்கிறது. அந்த மலையை ஒரு கோடை வாசஸ்தலமாக மாற்றும் எண்ணம் ஏதாவது இந்த அரசுக்கு இருக்கிறதா? அந்த மலையின் முன்னேற்றத்திலே இந்த அரசு கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அய்யனுர் கோவில் மலையை கோடை வாசஸ்தலமாக ஆக்கும் எண்ணம் இந்த அரசுக்கு கிடையாது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல், ஒரு இடத்தை கோடை வாசஸ்தலமாக ஆக்க வேண்டுமானல், அங்கே போய் தங்குவதற்கு தேவையான குடி தண்ணிர் வசதி வேண்டும், வீட்டு வசதி வேண்டும்; அதற்குப் பிறகு சாலை வசதி வேண்டும். இது எல்லாவற்றையும் விட அந்த இடம் போய் தங்குவதற்கு தேவையான சுகாதார வசதி உள்ளதாக இருக்கவேண்டும். சில மலைகளிலே விஷக் காற்று அடிப்பதாக கூடச் சொல்லுகிறார்கள். எனவே, அதை எல்லாம் பார்த்துத் தான் ஒரு இடத்தை கோடை வாசஸ்தலமாக மாற்ற முடியும். நம் மாகாணத்திலே, ஏற்கனவே பல கோடை வாசஸ்தலங்கள் இருக்கின்றன. இவற்றை நாம் விரிவுபடுத்தி, நல்ல வசதிகளை செய்து கொடுத்தால் வெளி நாட்டினரோடு, நம் நாட்டவர்களும் அந்த இடங்களுக்கு அதிகமாக வருவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே வேலூர் நகரத்திற்கு அருகில் "பாலமதி" மலையில் 6 லட்சம் ரூபாய் செலவில் ஒரு சாலை அமைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு திருமதி சத்தியவாணிமுத்து இத்துறையின் அமைச்சராக இருந்த



1971 ஜூலை 23]

பொழுது அதற்கு 50,000 ரூபாய் நிதி ஒதுக்கி காரியங்களை செய்ய ஏற்பாடு செய்வதாக சொன்னார்கள். அது இந்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது தற்பொழுது இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Can this Government think of constructing a loding in Ootacamund for the low, income group people so that they may not pay more than Rs. 3 or 4 as rent per day, as the present rent is very high in many of the hotels and guest houses there?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகமண்டலத்திலே சுற்றுலா பயணிகள் மாளிகை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு வாடகை ரூபாய் 10. அதையே 2, 3 ரூபாயில் வாடகை கொடுக்கவேண்டுமானல், அப்படிப்பட்ட ஒரு திட்டம் சமீபத்திலே இந்த அரசாங்கத்திடம் இல்லை. ஆனல், கல்வித் துறையின் மூலமாக ஒரு உணவு விடுதி கட்டுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி அது கட்டப்பட்டால், ஒரு படுக்கைக்கு 3, 4 ரூபாய் அளவிலே ஏற்பாடு செய்யலாம் என்ற எண்ணம் இந்த அரசின் ஆய்விலே இருக்கிறது.

## உதகமண்டலத்தை சிறந்த கோடை வாசஸ்தலமாக்கல்

*411. வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் நகரத்தை இன்னும் விரிவு படுத்தி மிகச் சிறந்த கோடை வாசஸ்தல நகரமாக்கிவிட வேண்டுமென்று நமது தமிழ் நாடு அரசு மத்திய சுற்றுலா கார்ப்பொரேஷனிடம் வலியுறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மத்திய சுற்றுலா கார்ப்பரேஷன் வணிக முறையில் சுற்றுலா விடுதிகள், வாடகைக்கு சுற்றுலா ஊர்திகள் முதலியவைகளை நடத்தி வருவதால், மத்திய சுற்றுலா கார்ப்பரேஷனிடம் வலியுறுத்தவில்லை. ஆனல் உதகமண்டலம், மாமல்லபுரம் இவற்றின் வளர்ச்சிக்காக ஒரு கோடி ரூபாய் வழங்குமாறு மைய அரசிடம் இவ்வரசு கோரியுள்ளது. அண்மையில் தமிழக அரசு உருவாக்கியிருக்கும் தமிழக சுற்றுலா வளர்ச்சி கார்ப்பரேஷன் உதகமண்டலத்திலும், மற்ற சுற்றுலா சிறப்புகள் இடங்களிலும், பயணிகளுக்காக பல வசதிகள் செய்வதற்கு திட்டங்கள் தயாரித்து வருகிறது.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, சிறந்த கோடை வாசஸ்தலமாக கருதப்படுகின்ற ஊட்டிக்கு பக்கத்திலே இருக்கின்ற குன்னூரையும், கோத்தகிரியையும் சேர்த்து இந்த அரசு கவனிக்க வேண்டும். அவைகளை முன்னேற்றம் செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு கை கொள்ளுமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[1971 சூலை 23

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கோத்தகிரியிலே ஒரு "வியூ பாயின்ட்" கட்ட $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாயிலே காரியம் நடந்து வருகிறது. அதே போல், குன்னூரிலே 12 குடில்கள் பிரயாணிகள் தங்குவதற்காக $2\frac{1}{2}$ இலட்சம் ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : உதகமண்டல நகரத்தை இன்னும் விரிவு படுத்த இந்த அரசு மேற்கொண்டிருக்கும் சிறப்பான நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகமண்டலத்தைப் பொறுத்த வரையில் மற்ற வட நாட்டு கோடை வாசஸ்தலங்களுக்கு இல்லாத ஒரு பெரிய சிறப்பு இருக்கிறது. இந்தியாவில் இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களிலே பல வருஷம் பூராவும் பனியாலே மூடப்பட்டு இருக்கின்றன. இங்கே அப்படி இல்லை. ஏறக்குறைய வருஷத்திலே 10 மாத காலம் சுற்றுலா பயணிகள் சென்று உதகையிலே தங்கிட எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கிறது. இவைகளைப் பற்றிய விளம்பரங்களை எல்லாம் இந்த அரசு செய்து வருகிறது. அதற்காக தனி போஸ்டர்களையும், ஒரு புத்தகத்தையும் கூட வெளியிட்டு, அவைகள் எல்லா இடங்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டன. செப்டம்பர் மாதத்திலே கூட சில காரியங்களைச் செய்யலாம் என்று இந்த அரசு எண்ணியிருக்கிறது. கோடை காலத்திலே உதக மண்டலத்திற்கு வரும் பயணிகளை அதிகமாக கவர்ந்து ஈர்க்க வேண்டும் என்பதற்காக கோடையிலே நாடக விழா போன்றவற்றை வைத்து "கோடை விழா" ஒன்றை ஏற்பாடு செய்து, ஒரு தொகையை செலவு செய்யத் தயாராக இருக்கிறது. அதோடு இல்லாமல் அங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கத்தின் மூலமாக பஸ் ஒன்றை ஏற்பாடு செய்து, ஏழை மக்களும், மற்றவர்களும் முதுமலைக்காடு வரை போய் வர வழி வகைகளை செய்திருக்கிறது.

திரு. எம். தேவராசன் : உதகமண்டலத்தை விரிவுபடுத்தியும், அழகுபடுத்தியும் வரும் இந்த அரசாங்கம், கோடை கால சட்ட மன்ற கூட்டங்களை அங்கே நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது அரசினுடைய கொள்கை விளக்கம் பற்றிய கேள்வி ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாகும் இது.

*Facilities for visitors to Kodaikanal.*

* 412 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether this Government has any proposal to improve the facilities for the visitors to Kodaikanal during summer; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். போதிய அளவு தங்குவதற்கான இடவசதிகள் அளிப்பது பற்றி அரசிடம் ஒரு செயற் குறிப்பு இருந்துவருகிறது.

(இ) இத்திட்டம் பற்றி முடிவு செய்ய தேவையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் இத்திட்டத்தை ஏற்று நடத்தும்.



1971 சூலை 23]

DR. H. V. HANDE : May I know from the Hon. Minister whether any concrete proposals to provide convenience to the visitors also have been made? For instance, even though there is electricity there is frequent failure of electricity. That is supposed to be one of the reasons which deters many people from going and settling down there, even though it is the second best hill station in Tamil Nadu. Taking all these factors into consideration, will this Government prepare a sort of a Master Plan and to solve the problem immediately construct a few tenements or tourist bungalows or some buildings for tourists, if necessary, buildings for middle class, upper middle class and lower middle class people and see that these sort of pinpricks are avoided there?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, அங்கே அடிக்கடி மின்சாரம் தட்டுப்பட்டு போகிறது என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதை மின்சார இலாகாவிடம் சொல்லி, அப்படிப்பட்ட குறைபாடுகள் நேராத வகையிலே முயற்சிகள் கைக்கொள்ளப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஊட்டியிலே இருக்கும் "தமிழகம்" மாதிரி, கோடைக்கானலிலேயும் நல்ல ஒரு கட்டிடத்தைக் கட்டி, பல கமிட்டிகள் ஊட்டியிலே நடப்பது மாதிரி இங்கேயும் நடக்க அரசாங்கம் வசதி செய்யுமா? காரணம், ஊட்டியிலே இருக்கும் "தமிழகத்திலே" இடம் கிடைப்பது கடினமாக இருக்கிறது. ஆகவே, இதை அங்கே கோடை காலத்திலே பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கொடைக்கானலிலே கமிட்டிகளை கூட்டுவதிலே ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனால், உதகையைத் தான் அதிகமாக எல்லோரும் விரும்புகிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : கொடைக்கானலிலே ஒரு பெரிய ஏரி இருக்கிறது. வடக்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலமான காஷ்மீரிலே இருக்கின்ற ஏரி அளவுக்கு இங்கேயும் ஏரிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே இருப்பது போன்று இங்கேயும் படகு வீடுகள் கட்டி விடுவதற்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா. இதை " டூரிஸ்ட் அன்ட் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் " மூலமாகச் செய்ய வேண்டும். மற்றபடி, மத்திய அரசு வடக்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களுக்கு கொடுக்கும் விளம்பரங்களை போல் தெற்கே இருக்கும் கோடை வாசஸ்தலங்களுக்கு கொடுப்பதில்லை. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், வடக்கே இருக்கும் கோடை வாசஸ்தலங்கள் வருஷத்திலே பல நாட்கள் பனியால் மூடிக் கிடக்கின்றன. ஆனால், தெற்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களிலே 10 மாதம் பனியே இல்லாமல் நல்ல முறையிலே இருக்கின்றன. எனவே, அந்த முறையிலே வடக்கே இருக்கின்ற கோடை வாசஸ்தலங்களைவிட நம்முடைய கோடை வாசஸ்தலங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாக இருந்தும், மத்திய அரசு தகுந்த முறையிலே இதற்கு விளம்பரங்கள் செய்யப்படுவதில்லை. ஆகவே, தமிழக அரசு மத்திய அரசுக்கு இவைகளை எடுத்துக் கூறி, நல்ல முறையிலே விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கொடைக்கானலை விருத்தி செய்வதிலே இந்த அரசு கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். கொடைக்கானல் ஏரியிலே படகு வீடுகள் கட்டிவிடுவது பற்றி அரசின் கவனத்திலே இருக்கிறது. நம் கோடை வாசஸ்தலங்களுக்கு போதிய விளம்பரம் இல்லை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அந்த விளம்பரத்திற்கான ஏற்பாடுகளை விரைவிலேயே இந்த அரசு மத்திய அரசோடு கலந்து ஆவன செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: இங்கே புதிதாக திருமணம் ஆகிற இளம் தம்பதிகள் தங்களுடைய தேன் நிலவிற்காக காஷ்மீருக்கும், சிம்லாவுக்கும் போகிறார்கள். ஏனென்று கேட்டால், தமிழகத்திலே இருக்கிற கோடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களிலே தங்குவதற்கு "அவுஸ் போட்டுகளோ", ஓடி ஆடி விளையாட சிறந்த பூங்காக்களோ, இரவில் தங்க நல்ல ஓட்டல் வசதிகளோ இல்லை என்று சொல்லுகிறார்கள். அத்தகைய வசதிகளை எல்லாம் ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அத்தனை ஏற்பாடுகளும் இங்கே இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் எடுத்த சினிமா படத்திலே கூட இது எல்லாம் இருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தப் பெரிய ஏரியை டெவலப் செய்ய வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது. அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

## (2) நடைமுறைக் கேள்வி

### வினாக்களுக்கான விடைகளை விரைவுபடுத்துவது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், இந்த பேரவையில் வருகின்ற சில கேள்விகள் ஒரு மாதத்திற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்டு, அவைகளுக்கு பதில்கள் அப்போது தயார் செய்யப்பட்டிருக்கின்றன. வருகின்ற பதில்கள் எல்லாம் அப்-டு-டேட் ஆக இருக்கிறதா என்பதற்கு விளக்கம்தர வேண்டும். தொழில் அமைச்சர் அவர்கள் இரண்டு வாரத்திற்கு முன்னதாக உள்ள கேள்விக்கு அப்போதுள்ள பதிலைத்தான் சொன்னார்கள். ஆகவே, கேள்வி—பதில்கள் கொடுக்கின்ற நிலையில் குழப்பம் காணப்படுகிறது, தலைவர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தக் குளறுபடியும் காணப்படவில்லை. நம் எண்ணங்களில்தான் குளறுபடி இல்லாமல் இருக்க வேண்டும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## (3) அறிவிப்புகள்

### (அ) மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 21/1971).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக சட்ட மேலவையின் மாண்புமிகு தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது என இப்பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்:—

21—7—1971-ம் நாளன்று மேலவையில் கீழ்க்கண்ட திருத்தங்களுடன் மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு 21/1971) நிறைவேற்றப்பட்டு கையொப்பமிடப்பட்டு பேரவையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

### திருத்தங்கள்.

*Clause* 6.

(1) in clause 6, *for* the expression 'section 62-D', *substitute* the expression "sections 62-D and 62-E";

*Clause* 8.

(2) in clause 8—

(*a*) in the marginal heading *for* the figures and letter "62-D" *substitute* the figures and letter "62-E";

(*b*) for section 62-D proposed to be inserted, *substitute* the following namely:—

"62-D. *Permission to transfer to be refused in cases where the applicant holds more than ten stage carriage permits.*—(1) Where the holder of stage carriage permits in excess of ten, applies to the transport authority for permission to transfer any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission:

Provided that no such refusal shall be made unless the transport authority has given the applicant a reasonable opportunity of being heard.

(2) All applications for, and proceedings (whether original or by way of appeal) relating to, transfer of any stage carriage permit under sub-section (1) of section 59, sought for by a holder of stage carriage permits in excess of ten and pending before any court, transport authority or officer on the 18th June 1971, and appeal or revision, if any, arising from such pending application or proceeding shall be disposed of under sub-section (1).

62-E. *Benami transfers to be refused.*—Where the holder of any stage carriage permit applies for permission to transfer any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission if it appears to such authority, after making such enquiry as it deems fit, that the transfer sought for is a benami transfer:

Provided that no such refusal shall be made unless the transport authority has given the applicant a reasonable opportunity of being heard."

## 4. கவனஈர்ப்பு

### கண்காட்சி ஒலி பெருக்கிகள் மூலம் எழும் சத்தமும் அதன் காரணமாக (மருந்தியல் பட்டப்படிப்பு) மாணவர்களுக்கு ஏற்படும் தொல்லையும்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Health, to a matter of urgent public importance, namely, the inconvenience caused to the examination-going M.B.B.S. and B.D.S. students on account of the regular noise emanating from the loudspeakers situated in the South Indian Industrial Development Arts Exhibition (M.U.C. Grounds) and the need to take immediate steps to put an end to this disturbance.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, (மருந்தியல் பட்டப்படிப்பு) மாணவர்கள் சிலருக்குத் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதும், அடுத்து வரும் செப்டம்பர் தேர்வுக்குப் பலர் படித்துக்கொண்டு வருகின்றனர் என்பதும் உண்மைதான். ஒலிபெருக்கிகள் மூலம் இடைவிடாமல் எழும் சத்தம் காரணமாகத் தேர்வுக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தொல்லை ஏற்படுவதாகத் தோன்றுகிறது.

இது தொடர்பாக, ஒலி பெருக்கிகளின் ஒலியை எந்த அளவிற்குக் குறைக்க இயலுமோ அந்த அளவுக்குக் குறைக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதுமாறு மாணவர் இல்லக் காப்பாளருக்கு, கல்லூரித் தலைவர் கட்டளையிட்டுள்ளார். அந்த வேண்டுகோளுக்குப் பின்னர் அங்கே அந்த ஓசை குறைக்கப்பட்டிருக்கிறதென்று அறிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I am thankful to the Hon. Minister for taking immediate action in the matter. Even yesterday evening the noise continued to emanate from the exhibition where certain scenes which are not normally permitted, take place. A number of students came to me and told me about it and that is why I want to mention it here. So I once again request the Hon. Minister to investigate the matter and see that the grievances of the students are redressed.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, this is such a small matter that it is not to be investigated. My hon. Friend, Dr. Hande should look into this as a public affair. There is a fair and there is some noise and naturally noise is always harmful but so many lorries and buses ply very near the hostel. These musical noises may even help certain students to study better. Anyway, we have asked them to reduce the noise as far as possible.



## 5. அறிக்கை அளித்தல்

### பொதுத் துறையினால் பராமரிக்கப்படுகின்ற அரசு விருந்தினர் இல்லங்கள்பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on State Guest Houses maintained by the Public Department.

## 3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

### (ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு குடியரசுத் தலைவர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவைப் பேரவைக்கு அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (ஆ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவை இப் பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## (7) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண் 17—மீனளம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று நான்கு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். முதல் 1½ மணி நேரத்தில் மானியக் கோரிக்கை எண் 17—மீனளம் எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான வெட்டுத் தீர்மானங்களை இப்போது முன்மொழிய வேண்டும். அந்த மானியம் நிறைவேற்றப்பட்டு முடிந்த பிறகு, பாக்கியுள்ள 3 மானியக் கோரிக்கைகளையும் எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,35,15,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRUMATHI T. N. ANANDANAYAKI: To discuss about the need to provide more facilities for the fishermen owning mechanised boats, I move the following cut-motion:—

"That the allotment of Rs. 2,35,15,700 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100."

DR. H. V. HANDE: To discuss the need for the Government to provide compulsory insurance scheme to fishermen in view of the risk in their profession, I move the following cut-motion:—

"That the allotment of Rs. 2,35,15,700 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100."

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மாநில முழுதும் உள்ள மீனவர்கள் குடியிருப்பு ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,35,15,700-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: விசைப்படகுகள் வினியோகம் பற்றியும், கட்டுமானம் பற்றியும், நிர்வாகம் பற்றியும் விவாதிக்க—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,35,15,700-ல் ரூ. 100-ஐக் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மீனளத்துறையின் மீது விளக்க உரை தரப்பட்டிருக்கிறது. ஆகையினால் நான் இப்போது அதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. அந்த விளக்க உரையினை * இந்த விவாதத்தின் ஒரு பகுதியாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

309–318-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



* திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, மீனளத்துறை மானியத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை எல்லாம் ஆதரித்து நான் எனது கருத்தைச் சொலல ஆசைப்படுகிறேன்.

இந்தத் துறை மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது உணவுப் பிரச்சினையோடு ஓரளவு தொடர்பு கொண்டதாக இருக்கிறது. நம்முடைய கடற்கரை மிகப் பெரியதாகவிருந்தாலும், இந்தத் துறையில் நாம் வளர்ச்சியடையவில்லை என்றுதான் கூறவேண்டும். கேரளாவில் அமைந்திருக்கிற அளவுக்குக்கூட நாம் வளரவில்லை என்று தான் சொல்ல வேண்டும். நம்முடைய விசைப்படகுகளை ஓட்டுவதற்குக் கேரளாவிலிருந்துதான் டிரைவர்களை வரவழைக்க வேண்டிய நிலை இருக்கிறது. நமது மீனவர்கள் மத்தியில் அப்படிப்பட்ட திறமைபடைத்த டிரைவர்கள் இல்லாத காரணத்தால் கேரளாவிலிருந்து அழைத்து வருகிறார்கள். காரணம், நாம் அவர்களுக்குக் கொடுக்கும் பயிற்சி போதாது. பயிற்சி போதாத காரணத்தால், தொழில் இழந்து பல குப்பங்கள் இன்று அழிந்து விட்டன. கேரளாவிலிருந்து ஆட்களைக் கொண்டு வருகிறார்களென்றால் பல பிரச்சினைகள் வருகின்றன. அவர்கள் வருகின்ற படகுகளிலிருந்து மீன் வாங்கக்கூடாது, அப்படி வாங்குகிறவர்களையெல்லாம் ஜாதிப் பிரஷ்டம் செய்வோம் என்ற பல பிரச்சினைகள் எழுகின்றன. இங்கே உள்ளவர்கள் கேரளத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால்தான் இந்த நிலைமைகள் இங்கு எழுகின்றன.

பொதுவாக அரசாங்கம் மெக்கனைஸ்ட் போட்டுகளைச் செய்து கொடுத்திருக்கிறதென்பதை நாம் இங்கே பார்க்கிறோம். தனியார் துறையில் சிலர் ஓரிரண்டு போட்டுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஓடுகின்ற போட்டுகள் ஒழுங்காக ஓடுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டு சக்கைகளுக்கிடையே இருக்கும் இடைவெளி ஒரு ஆள் புகுந்து போகுமளவுக்கு இருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இப்படி போட்டுகள் செய்து கொடுத்தால் அதிலே போகின்றவர்கள் நிலை என்னவாகும்? நாம் கொடுக்கின்ற போட்டுகள் சரியாகக் கட்டப்படவில்லை என்பதை அரசாங்கம் உணரவேண்டும். இது ஒரு பெரிய குறை.

அது மட்டுமல்ல. நாம் மெக்கனைஸ்ட் போட்டுகளில் வின்ச் போட்டுக் கொடுத்திருக்கிறோம். இப்படியெல்லாவற்றையும் கொடுத்து அவர்களைப் பெருத்த கடனாளியாக்கிவிட்டோம். கையிலிருந்த காசை எல்லாம் கடனுக்காகத் கொடுத்துவிட்டுக் கஷ்டப்படும் நிலைமைதான் காணப்படுகிறது. இந்த போட்டுகளை வாங்கிக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள் என்பதை இந்த அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு இலட்சத்து இருபதி

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1971 சூலை 23

ணுயிரம் ரூபாய் போட்டு, போட்டுகள் தயாரித்து, நம்முடைய மீனவர் சமுதாயத்திற்குக் கொடுத்திருக்கிறோம். மாதம் இரண்டாயிரம் ரூபாய் வீதம் அவர்கள் கொடுக்க வேண்டும். நாம் கொடுத்திருக்கின்ற போட் சரிவர வேலை செய்வதில்லை. அவைகள் பழுது பார்க்கப்பட வேண்டுமானல், ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. அலைந்து திரிந்து பொருத்திவிடுகிருர்கள். அந்த விதத்தில் ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்கின்ருர்கள். அது தவிர, இரண்டாயிரம் ரூபாய் தவணைகட்டு என்ருல் அவர்கள் நசித்துப் போய் விடுகிருர்கள். ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாயை எண்பது தவணைகளில் கட்டச் சொல்கிருர்கள். இரண்டாயிரம் ரூபாய் என்பது மிக அதிகம். ரூபாய் 500 என்ற அளவில் கட்டும்படி செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் அந்தத் தொகைக்கு வட்டி வேறு வாங்குகிருர்கள். இதை நீக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். இன்றையதினம் வட்டித் தொகைக்காகக் கொடுத்த பணம் சற்றேறக்குறைய மாதத் தவணைக்காகப் போகும் அளவிற்கு இருக்கிறதென்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஒரு வருஷ காலமாக நம்முடைய கடற்கரைகளில் நல்ல மீன் வளமில்லை. அந்த மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். இப்படியிருக்கும்போது, வட்டித் தொகையையும் தவணையையும் கட்டச்சொல்வது அவர்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. இதைச் செய்து கொடுத்தால் மீனவர்களுக்குப் பெரிய சலுகையாகவிருக்குமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மீனவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். குப்பங்கள் பல இருந்த போதிலும், அநேகமாக இவர்கள் தனியார் நிலங்களில்தான் இருக்கிருர்கள். சொந்தமாக இவர்களுக்கென்று இடமில்லை. ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதுபோல் மீனவர்களுக்கும் நாம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும்போது அவர்கள் வைத்திருக்கும் பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளும் வகையில் அவை அமைந்திருக்க வேண்டும். அவர்கள் வலைகளையும், தொழிலுக்கு வேண்டிய இதர சாதனங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளத்தக்க முறையில் அமைய வேண்டும். அவர்களுள் அடிக்கடி சண்டைகள், வம்புகள் ஏற்படும், உடனடியாக அவர்களுடைய தொழிற் சாதனங்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையில் நடந்து கொள்வார்கள். அவர்களுக்காக நில ஆர்ஜிதம் செய்து ஆளுக்கு இவ்வளவு என்று ஒதுக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடலோரத்தில் குப்பங்களில் வசிக்கும் மீனவர் குடும்பங்கள் பல கஷ்டங்களுக்கு ஆட்படுகிருர்கள். அதைப் போக்க அரசாங்கம் ஏதாவது செய்ய வேண்டும்.

இந்த போட்டுகளில் பொருத்தப்பட்டுள்ள யான்மார் இன்ஜின்கள் சரிவர வேலை செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. எங்கெங்கேயோ இன்ஜின்களை வாங்கிக் கொடுத்து விட்டதால் ரிப்பேர் வந்து விடுகிறதென்று சொல்கிருர்கள். அவைகளை ரிப்பேர் செய்வதற்கு



1971 சூலை 23] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. ஒரு ரிப்பேர் வந்து விட்டால், உதவிப் பொருட்கள் கிடைக்காவிட்டால், எப்படித் தொழில் சரிவர நடத்த முடியுமென்பதை உணரவேண்டும். போட்டுகளைக் கொடுக்கின்றபோது இன்ஜின்களுக்கு வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ் போதுமான அளவில் டிபார்ட்மெண்டில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு எங்கும் கிடைக்காத நிலையில், பிளாக் மார்க்கெட்டில் வாங்கிப் போடுகிருர்கள். ஒன்றுக்குப் பத்து பங்கு விலை கொடுத்து வாங்குகிருர்கள். இதைத் தவிர்ப்பதற்கு—அந்த இன்ஜின் ஜப்பான் நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டது—இன்ஜின் வாங்கும் போதே போதுமான ஸ்பேர் பார்ட்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டு, தேவைப்படும்போது மீனவர்களுக்கு நியாய விலையில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, நமது சென்னைக் கடற்கரையில் முன்பெல்லாம் ராயபுரத்திற்கு அருகே பிடிக்கப்படும் மீன்களை அங்கேயே மீன் விற்பவர்களும், மீன் வாங்குபவர்களும் கூடி விற்று வாங்கிக்கொள்வார்கள். சாதாரணமாக அரை மணி அல்லது ஒரு மணி நேரத்தில் அவர்களுடைய வேலை முடிந்து விடும். இப்பொழுது கொஞ்சங் கொஞ்சமாக அவர்கள் விரட்டப்பட்டு காசிமேட்டுக்கு சென்ருர்கள். இன்றைய தினம் என்ன நிலை என்ருல் மணலி ஆயில் ரிபைனரி கிட்டே கொஞ்சங் கொஞ்சமாகக் கொண்டுபோகும் நிலைக்கு அதிகாரிகள் வந்து விட்டார்கள். அங்கே கூடாது, இங்கே கூடாது என்று அவர்களைத் துரத்திக்கொண்டே இருக்கிருர்கள். இதையும் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்ருேம் என்பதை அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மீனவ மாணவர்களுக்கு கடலிலே பயிற்சி தரக்கூடிய முறையிலே அவர்களுக்குச் சலுகைகள் தரவேண்டும். இப்பொழுது தரப்படுவது கிடையாது. சரிவர இயக்கத் தெரியாதவர்கள் எல்லாம் போட்டிரைவராகப் போகிருர்கள்; போகின்ற வேளையிலே பயம் வந்து விடுகிறது; அதன் காரணமாக எவ்வளவு ஆழம் போகவேண்டுமோ அவ்வளவு ஆழமாகப் போவதில்லை.

மேலும், ஃபிஷரீஸ் டிபார்ட்மெண்டிலே ரிசர்ச் சென்டர்ஸ் இருக்கின்றன. கொஞ்சங்கொஞ்சமாக அவற்றினுடைய முக்கியத்துவத்தை மத்திய அரசாங்கம் குறைத்துக்கொண்டு வருகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள், நாம் வாதாடிக் கொண்டிருக்கிருேம். அவர்களோடு பேசிக்கொண்டிருக்கிருேம் என்று சொன்னுலும்கூட, மத்திய அரசாங்கத்தினர் அதை மாற்ருமல் வைத்திருக்கிருர்களே தவிர அதனுடைய தரத்தை, முக்கியத்துவத்தைக் குறைத்துக்கொண்டே தான் இருக்கிருர்கள்.

மீனவர்களுக்கு வீடு வசதி கிடையாது; அவர்களுக்குக் கடன் வசதி கிடையாது; கடன் கொடுத்து அவர்கள் தொழில் செய்ய வசதி கிடையாது; பழுதடைந்த படகுகளைக் கொடுத்து அவர்கள் தங்களுடைய தொழிலைச் சரிவரச் செய்ய முடியாமல் இன்றைக்குத் தெருவிலே நின்று திண்டாடிக்கொண்டிருக்கிருர்கள். அவர்களுடைய கஷ்டத்தைப் போக்கி நிவாரணம் தேட வேண்டும்,

இல்லாவிட்டால் அந்தத் தொழிலே நசிந்துவிடும் என்று சொல்லிக் கொண்டு, இவற்றையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக் கின்ற மீனளத் துறை மானியத்தை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்திலே கூறவிரும்புகிறேன்.

பொதுவாக மீனளத் துறையைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால், எதிர்ப்பார்த்த அளவுக்குப் போதுமான நன்மைகள் மீனவர்களுக்குச் செய்து இருந்தாலும்கூட, இன்னும் அதிக வேக மாக நாம் செயல்படவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால், விவசாயத் துறையிலே ஈடுபடுகின்றவர்கள் விவசாயத் துறையிலே பெரிய முன்னேற்றத்தை இந்த அரசின்கீழ் எந்த அளவுக்குப் பெற்றிருக்கிறார்களோ அந்த அளவுக்குச் சமமான முன்னேற்றத்தை மீனளத் துறையிலே ஈடுபடு கின்றவர்களும் அடைகின்ற முறையிலே வேகமாக நம்முடைய அரசு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். உணவுத் துறைக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு மீனளத் துறைக்கும்—அது இந்த நாட்டிலே உணவுப் பிரச்சினையைச் சமாளித்து வருகிறது—அளிக்கவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயத் துறையைக் காட்டிலும் மீனளத் துறையிலே ஈடுபடுகின்றவர்கள் தான் அதிகமாக இந்த நாட்டிற்கு அன்னியச் செலாவணியைக் கொண்டுவருகிறார்கள் என்றால் மிகையாகாது.

அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஒரு அறிக்கை வைத் திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலிருந்து, 1951-ஆம் ஆண்டில் 0.44 லட்சம் டன்னாக இருந்த உற்பத்தி 1970-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 2.28 லட்சம் டன் என்ற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இன்னும் இந்தத் துறையை நல்ல முன்னேற்றத் திற்குக் கொண்டுவருவதற்கு ஆக்கப்பூர்வமான பணிகளை நாம் செய் வோமானால் உற்பத்தியை இன்னும் பெருக்கலாம் என்ற நம்பிக்கை இந்த மன்றத்திலே உள்ள அனைவருக்கும் ஏற்படும். இந்த அறிக்கை யிலே மேலும் வருகின்ற நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் உற்பத்தியை 3 லட்சம் டன்னாக உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள்.

இந்த நாட்டிலிருந்து இரால் போன்ற மீன்களை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலமாக இந்த நாட்டிற்கு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. நான் ஒன்றைத் தெளிவாக இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். தமிழகத்திலே இரால் என்ற மீன் கிடைக்கிறது. அந்த



மீன் இந்த நாட்டிலே உள்ளவர்களால் வாங்கப்பட்டுப் பிறகு அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அந்த மீனை கேரளாவிலே உள்ள முதலாளிகள்—பணக்காரர்கள்— மீனவர்களிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று, பிறகு அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அனுப்புவதின்மூலம் அபரிமிதமான லாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இரால் மீன்களை அவர்கள் குறைந்த விலைக்கு வாங்கிச் சென்று, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அனுப்புவதைத் தடுத்து நிறுத்து கின்ற முறையிலே தமிழ்நாடு அரசே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாட்டுக் கடற்கரைகளிலே கிடைக்கின்ற அந்த மீனை வாங்கிப் பதனப்படுத்தி, பிறகு அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் தனிப்பட்டவர்களுக்குக் கிடைக்கின்ற லாபத்தை நாம் பெறமுடியும். அது மட்டுமல்ல, மீனவத் தொழிலாளர்களுக்கு அதனால் நியாயமான விலை கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இரால் என்ற மீன் ஆண்டிலே மூன்று மாதங்கள் நான்கு மாதங்கள் என்ற அளவிலேதான் கிடைப்பதால் அப்பொழுதுதான் பிடிக்கப்படுகிறது. அப்படிப் பிடிக்கப்படுகின்ற நேரத்திலேதான் அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கடனிலே மூழ்கி வாழ்கிற அந்தத் தொழிலாளர்கள் அந்தக் கடன் நிலைமையி லிருந்து விடுபடுவதற்காகப் பணம் தேவைப்படுவதால் அந்த மீன்கள் பிடிக்கப்பட்டவுடனேயே கேட்ட விலைக்கு அந்த முதலாளி களுக்குக் குறைந்த பணத்திற்குக் கொடுத்துவிடக் கூடிய நிலைமை தான் இருக்கிறது. அந்த அவல நிலைமையைப் போக்கவேண்டு மானால் நம்முடைய அரசே அந்த மீன்களை வாங்கி அவற்றை ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு ஏற்பாடுகள் செய்தால் அந்த மீனவத் தொழிலாளர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கும், அவர் களுடைய குறைகளும் நீங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். இனிமேலாவது நம்முடைய அரசாங்கத்தின் மூலமாகவோ அல்லது கூட்டுறவுத் துறையின் மூலமாகவோ அந்த மீன்களை வாங்கி அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே இருக்கின்ற நீளமான கடற்கரைபோன்று வேறு எந்த நாட்டிலும் இல்லை என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தொழிலிலே லட்சக் கணக்கான மீனவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுடைய நிலைமைகள் முன்னேற வேண்டுமானால் பல முறைகளிலே நாம் காரியங்களை ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் களுக்கு வேண்டிய கருவிகள், அவர்களுக்கு வேண்டிய சாதனங்கள் இவற்றைத் தாராளமாகக் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்ய நம்முடைய அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். நான் அதற்காக, எதுவும் செய்யவில்லை என்று சொல்லவில்லை. 1967-ஆம் ஆண்டிற்குப் பின்னாலே—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே—அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக்

கொண்டிருக்கின்ற மீனவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. ஆனால் எதிர்ப்பார்த்த நன்மைகள் கிடைத்திருக்கின்றனவா என்றால், நிச்சயமாக இல்லை. ஓரளவுக்குத்தான் கிடைத்திருக்கின்றன. அவர்கள் நம்மிடமிருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். இருபது ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் அவதிப்பட்ட மீனவர்கள் இன்றைக்கு ஓரளவுக்கு நன்மைகளைப் பெறுகிறார்கள் என்றாலும்கூட நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் செய்யமுடியாது என்றால் வேறு எந்த ஆட்சியால் செய்யமுடியும் என்று அங்கலாய்க்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான நம்முடைய அரசு அவர்களுடைய குறைகளைக் களைவதிலே இன்னும் அதிகமாக வேகம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்பொழுது, மீனவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற படகுகளில் ஒரு ஆள் போய்வரக்கூடிய அளவுக்கு ஓட்டைகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம் 1967-க்குப் பின்னாலே அல்ல, 1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலேதான். 1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலே மீனவர்கள் எந்த அளவுக்கு அவதிக்குள்ளானார்கள் என்று அவர்களைக் கேட்டால் தான் தெரியும். அம்மையார் அவர்கள் தமக்கே உரிய தன்மையில், இருக்கின்றவற்றைக் கூட்டிக் குறைத்துச் சொல்கிறார்களே தவிர, உண்மையைச் சொல்கிறார்களா என்றால், இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: 1967-க்கு முன்னாலே இருந்ததைப் பற்றி நான் சொல்லவில்லை. நான் 1967-இல் சட்டசபை உறுப்பினராக இல்லை. 1971-லே இருக்கின்ற உண்மை நிலையைத்தான் சொன்னேன். எனவே, தெரிந்து கொள்ளாமல் பேசுகிறார் என்று சொல்வது மற்றொரு உறுப்பினரைக் குறைகூறுவதாகும். எனவே, பாதுகாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: It is better to avoid personal remarks.

THIRU G. R. EDMUND: I am not making any personal remark. I am only commenting on the speech of the hon. Lady Member in the House. I am only giving a commentary on that.

MR. DEPUTY SPEAKER: The hon. Member can comment on the speech. It is better to avoid personal remarks.

திரு. க. உரோ. எட்மண்ட்: திருமதி அம்மையார் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இப்பொழுது கொடுக்கும் படகுகளிலே ஓட்டையிருக்கிறது, ஆளே போய்வரலாம் என்று சொன்னார்கள். ஆள் போய்வரக்கூடிய அளவிற்கு ஓட்டையிருந்தால் கடலிலே எப்படிச் செல்லும் என்பது அம்மையார் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ எனக்கு நன்றாகத் தெரியும் என்பதை இந்த மன்றத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





திருமதி த. ந. அனந்தநாயகி: அவ்வளவு மோசமாகப் "போட்டு"கள் கட்டப்படுகின்றன என்பதை அழுத்தமாக எடுத்துச் சொல்வதற்காகச் சொன்னால் உண்மையிலே ஆள் போவார்கள் என்று அர்த்தமில்லை. இதைப்புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட்: ஆள் போகின்ற அளவிற்கு ஓட்டையிருந்தால், பெரிய ஓட்டையிருந்தால் கடலிலே செல்ல முடியாது; தண்ணீரிலே செல்ல முடியாது என்பது அம்மையார் அவர்களுக்குத் தெரியவேண்டும். நான் அதற்காகத்தான் சொன்னேன், இருக்கின்ற குறைகளைக் கூட்டிக்குறைத்துச் சொல்கிறார்கள், அது அவர்களுக்கு உரிய தனிப்பண்பாடு என்பதற்காகக் கூறினேன்.

இன்றைக்கு நம்முடைய இந்திய—பெல்ஜிய மீனளத் திட்டத்தின் கீழ் கட்டுமரங்களில் இயந்திரங்களைப் பொருத்தும் முயற்சியில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முதல் முறையாக இயங்கியிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் அதிக ஊக்கம் கொடுப்பதோடு, இந்தப் பொறுப்பை இந்திய—பெல்ஜிய மீனளத் திட்டத்தோடு ஒப்படைக்காமல் நம்முடைய அரசாங்கமே மேற்கொண்டு நம்முடைய கடற்கரைகளில் மீனவர்கள் வைத்திருக்கும் கட்டுமரங்களில் விசைப்பொறிகளை அமைக்க வேண்டுமென்று நம் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) எனக்கு இன்னும் சிறிது நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலேயிருக்கும் இலட்சக்கணக்கான மீனவர்களில் ஒருசிலர்தான் விசைப்படகுகளை வைத்திருக்கும் சக்தி பெற்று வைத்திருக்கிறார்கள். பெரும்பாலான மீனவர்கள் கட்டுமரங்களிலேயும், நாட்டுப்படகுகளிலேயும் சென்று தங்களுடைய மீன்பிடித் தொழிலைச் செய்து வருகிறார்கள். ஆகவே, இன்றைய தினம் மனித சக்தியின் மூலம் ஓட்டிச்செல்லும் இந்தக் கட்டுமரங்களிலும், நாட்டுப்படகுகளிலும் விசைப்பொறிகளை அமைத்து, வேகமாகக் கடலிலே செல்லவும், குறித்த காலத்தில் செல்வதோடு மட்டுமல்லாமல், எந்தக் காலத்திலேயும் காற்றை மட்டும் நம்பியிராமல் விசையை நம்பி, வேண்டிய தூரத்திற்குப் போய் ஆழ் கடலிலே மீன் பிடிக்கும் அளவில் அந்த வசதியைச் செய்து கொடுத்தால் இன்னும் நம்முடைய மீனளத்துறையில் உற்பத்தி பெருகும். அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும், அதன் மூலமாக அந்நியச் செலாவணி கிடைக்கவும் வாய்ப்பு வசதிகள் ஏற்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்துள்ள அறிக்கையில் இரும்பு—சிமெண்ட் படகுகள் தயார் செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். அதுவும் தமிழ்நாட்டிலேதான் முதல்முறையாகச் செய்யப்படுகிறது என்பதை அறியும்பொழுது உண்மையிலேயே அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் இந்த

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1971 ஜூலை 23

அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முயற்சியிலே இன்னும் தீவிரமாக ஈடுபாடு கொண்டு அவற்றை இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு பகுதியிலுள்ளவர்கள் அவற்றை நல்லமுறையில் ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில் அதிகப்படியான இரும்பு–சிமெண்ட் படகுகளைத் தயாரிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் மீன்பிடித் துறையைப் பொறுத்தவரையில் மீன்களைப் பிடித்தால் மட்டும் போதாது. பிடிக்கப்பட்ட மீன்களைப் பதப்படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இன்றைக்குக் கடலோரப் பகுதிகளில் ஒருசில இடங்களில் மட்டுமே மீன்களைப் பதப்படுத்தும் பனிக்கட்டி தயாரிக்கின்ற சிறுசிறு தொழிற்சாலைகளும் இன்னும் குளிர் அறைச் சாதனங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. குறைந்தபட்சம் கடலோரப்பகுதிகளிலே 15 மைல் தூரத்திலே ஒரு பனிக்கட்டி தயாரிக்கின்ற தொழிற்சாலையையாவது அல்லது குளிர் சாதன அறையையாவது நிறுவ வேண்டுமென்ற முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடியிலே நம்முடைய அரசாங்கத்தின் துறையிலே பிடித்த மீன்களை டின்களில் அடைத்து அதை வெளிநாட்டிலேயும் இந்த நாட்டிலே உள்பகுதிகளிலேயும் விற்பனை செய்ய முந்தைய அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தது, அது இலாபகரமாக நடக்காத காரணத்தினுல் அதைத் தனியார் துறையிலே ஒப்படைத்திருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. நான் அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மீன் துறையிலே எந்தக் காலத்திலேயுமே இழப்பு ஏற்படுவதில்லை அதைச் சரியாகப் பயன்படுத்தினுல். எனவே அதிலேயுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அந்தக் குறைபாடுகளைக் களைந்து நல்லமுறையிலே அந்த டின்களில் மீன் அடைக்கும் அந்தத் தொழிற்சாலையை நடத்தினுல் கூடுதல் இலாபம் கிடைக்க வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. எனவே அதை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனுகயிருக்கிறேன்.

இன்னும் மீனவர்களின் அவலநிலையைப்பற்றிச் சொல்லும் நேரத்தில் அவர்களுக்குப் போதுமான வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும், அவர்கள் பிடிக்கின்ற அந்த மீன்களுக்கு நல்ல மார்க்கெட், நல்ல விலை கிடைப்பதற்கான வாய்ப்பு வசதிகளை இந்த அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அதைப்போல் இன்னும் பல்வேறு துறைகளில் மீனவர்களுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் குழுக்கள் மூலமாக அறிந்து அவைகளை நிவர்த்திக்க வேண்டிய முறைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, கடைசியாக என்னுடைய தொகுதியிலே உள்ள குறைகளைப்பற்றி மட்டும் ஒருசில வார்த்தைகளைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.



1971 ஜூலை 23] [திரு. க. உரொ. எட்மண்ட்]

என்னுடைய தொகுதியிலே புன்னக்காயல் என்ற கடற்கரை கிராமம் இருக்கிறது. அதிலே ஏறத்தாழ 5,000 மீனவர்கள் வாழ்கிருர்கள். ஆயிரம் நாட்டுப் படகுகளை வைத்துக்கொண்டு ஆழ்கடலிலே சென்று மீன் பிடித்து வருகிருர்கள். அந்த ஊரிலே உள்ள நிலைமை என்னவென்ருல், அங்கே கடலிலே சங்கமமாகும் தாமிரபரணி ஆற்றின் வழியாகத்தான் கடலிலே இறங்கியாக வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது, வேறு வழியில்லை. ஆனுல் சமீபத்திலே திருவைகுண்டத்தில் ஆற்றின் குறுக்கே அணை கட்டிவிட்டதால் அந்தத் தண்ணீர் குறைந்து ஓடுவதால் கடலுக்குப் போக முடியாத சூழ்நிலையில் படகுகள் ஆற்றின்மூலம் கடலுக்குள்ளே இறங்க முடியாத நிலை இருப்பதால் அங்கேயுள்ள மீனவர்கள் ஆண்டுதோறும் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இன்றையதினம் தங்களுடைய தொழிலை நடத்திக்கொண்டு வருகிருர்கள். நான் நீண்ட நாள் முயற்சியெடுத்துக்கொண்டபிறகு நம்முடைய அரசாங்கம் ஆண்டு ஒன்றுக்கு 3,000 ரூபாய் மட்டும் கொடுக்கிருர்கள். அது போதாது, அந்த ஆற்றினைத் தோண்டிக் கொடுக்கின்ற பொறுப்பை அரசாங்கமே எடுத்து அந்த ஆற்றை நல்ல முறையில் தோண்டிக் கொடுத்தால் ஆயிரம் படகுகளிலே தொழிலைச் செய்யும் ஏறத்தாழ 3,000 மீனவர்களும், அவர்களைச் சார்ந்த குடும்பங்களும் நல்ல முறையில் தொழிலை நடத்த முடியும், வாழ்க்கை வசதியோடு வாழ முடியும். அதை உடனடியாகச் செய்து தர வேண்டும். இதைப் பற்றி நீண்ட நாட்களாக மாண்புமிகு மீனளத்துறை அமைச்சரவர்களிடம் சொல்லி வந்திருக்கிருேம். அதை உடனடியாகச் செய்ய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பினை அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். நாள் தவருமல் நாம் இரண்டரை மணி வரையில் உட்காரவேண்டிய நிலை ஏற்படுகிறது. எத்தனைமுறை சொன்னுலும், பேச ஆரம்பிக்கும்பொழுது 5 நிமிடங்களுக்குள் முடித்துவிடுவதாக ஆரம்பித்து, கிட்டத்தட்ட 15 நிமிஷங்கள் வரையில் பேசுவது ஒரு வழக்கமாக ஆகிவிட்டது. பேசுகின்ற உறுப்பினர்கள் 5 நிமிடங்களுக்குள் முடிக்கின்ற அளவில் பேச ஆரம்பிக்கும்பொழுது அதற்குள் தங்கள் கருத்துக்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. வி. சம்பத்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மீனளத்துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி சொல்லி என்னுடைய கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன்.

மீனவ சமுதாயத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு எவ்வளவு முற்போக்குத் திட்டங்களைத் தயாரித்து அவர்களுக்காக முன்னேடித் திட்டமாக அமைத்து அதன்மூலம் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முயற்சித்தாலும் ஒருசிலர் அதற்குக்

குறுக்கே நிற்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் தரங்கம்பாடியிலிருந்து பெருந்தோட்டம் வரையில் மீனவர்கள் ஏறத்தாழ 30,000 பேர்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் நம்முடைய அரசு மீனவர்களுக்காக உயர்தர, துரிதமாகச் சென்று மீன்பிடிக்க வசதிகளையும், நைலான் வலை போன்ற சாதனங்கள் தரப்பட்டும் அவைகளை அங்கிருக்கின்ற மீனவர்கள் பயன்படுத்த முடியாமல் அந்தப் பகுதியில் தற்பொழுது இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள பழம்பெரும் காங்கிரஸ்காரர்களும், அங்கே வசதி படைத்தவர்களும் பருத்தி வலை வைத்திருக்கிறார்கள், அவர்கள் நைலான் வலை போடுவதை எதிர்க்கின்ற நோக்கமாக இருக்கிறார்கள். தப்பித்தவறி நைலான் வலைகளைப்போட்டால் அந்த வலைகளை அவர்கள் பறித்துக்கொண்டு செல்வதும், அப்படிச் செல்லுகின்ற கட்டுமரங்களைப் பிடித்து, கட்டுமரங்களை வெட்டி வீழ்த்துவதுமாக இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அண்மையில் தரங்கம்பாடிக்கு அருகாமையில் குட்டியாண்டூர் என்ற கிராமத்திற்குப் பக்கத்தில் மீனவர்கள் நைலான் வலைபோட்டு மீன்பிடிக்கச் சென்றார்கள். தரங்கம்பாடியிலே நாட்டாண்மைக்காரராக உள்ள காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த நைலான் வலையையும் கட்டுமரத்தையும் பறித்து குட்டியாண்டூர் குப்பத்தில் உள்ளவர்களைத் தொந்தரவுக்கும் பல கொடுமைகளுக்கும் ஆளாக்கினார்கள். நைலான் வலையைப் பறித்த காரணத்தினால் சண்டை ஏற்பட்டு ஏறத்தாழ 10 வீடுகள் தீக்கிரையாயின. 2 பேர் உயிர் துறக்க வேண்டிய துர்பாக்கியமான நிலை ஏற்பட்டது.

பருத்தி வலை போடுவது என்றால் ஒரு வலைக்கு ஏறத்தாழ 30, 40 ஆட்கள் தேவைப்படுகின்றனர். அதைக் கரையிலிருந்து இழுத்துச் சென்றும் அதிகப் பலன் இல்லாத காரணத்தால் துரிதமாக மீன்களைப் பிடிப்பதற்காக நைலான் வலையைப் பயன்படுத்தும்போது அவர்கள் பலமாக எதிர்க்கிறார்கள். நைலான் வலை போடுகின்றவர்களுக்கு இந்த அரசு பாதுகாப்புத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பருத்தி வலை போடுகின்றவர்கள் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஊரின் பொதுப் பணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் தொகையைச் சேர்த்து வைத்துக் கொண்டு நைலான் வலை போடுகின்றவர்களை எதிர்க்கும் நோக்கத்தில் சண்டை, சச்சரவுகளைச் சமாளிக்கும் அளவுக்கு வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, நைலான் வலை போடுகின்றவர்களுக்கு ஆதரவு தருகின்ற நிலைமையில் காவல்துறை மூலம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும் அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.





திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனள மானியக் கோரிக்கையின்மீது ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நாட்டிலுள்ள மக்களுடைய தொகையைக் கட்டுப்படுத்த விரும்பும் நிலையில் அரசாங்கம் நம் நாட்டைச் சுற்றியுள்ள சமுத்திரத்தில் ஏராளமான உணவு காத்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, இந்தச் சமுத்திரத்திலுள்ள மீன்களை நாம் நல்லமுறையில் மக்களுக்கு உணவுச் சத்தைத் தரக்கூடிய விதத்தில் விநியோகித்தால் நாட்டில் எவ்வளவு ஜனத்தொகை பெருகினாலும் அதைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக் கடற்கரையின் நீளம் ஆயிரம் கிலோ மீட்டர். மீன்பிடிக்கும் பரப்பளவு 77,200 சதுர கிலோ மீட்டர். இவ்வளவு பெரிய வசதி படைத்திருக்கும்போது ஏன் உணவுக்காகக் கவலைப்பட வேண்டும்? ஆழ்கடலில் மீன்களைப் பிடிப்பதற்கு வேண்டிய நவீன சாதனங்களை இன்னும் போதுமான அளவுக்குக் கையாளாததன் காரணமாகத்தான் எதிர்காலத்தைக் குறித்து அஞ்ச வேண்டியவர்களாகவும், எங்கே மக்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்ச வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். இப்படி இறைவன் அளித்துள்ள மகத்தான அருட்கொடையை நல்ல முறையில் பயன்படுத்தி, மேல்நாடுகளில் பெரிய பெரிய கப்பல்களில் ஆழ்கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்து, பதப்படுத்தி, சுத்தம் செய்து, பக்குவப்படுத்தி அளிப்பது போன்ற நல்ல பல திட்டங்களை நிறைவேற்றினால் நம் நாடு என்றுமே பஞ்சத்திற்கு ஆளாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். தூத்துக்குடியில் தமிழக அரசால் நடத்தப்படக்கூடிய மீன் பதனிடும் சாலையை அரசு நடத்த முடியவில்லை என்று கூறி தனியார் ஒருவருக்கு 5,000 ரூபாய் ஆண்டு வாடகைக்கு ஒப்படைத்தது. அந்த வாடகை கூடுதலாக இருக்கிறது என்று அவர் கூறி இப்போது அந்த வாடகை 3,500 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் எண்ணூரிலே உள்ள மீன் பதனிடும் சாலைக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் வாடகையாகப் பெறப்படுகிறது. அதைத் தனியார் ஒருவர் சிறப்பாக நடத்தி வருகிறார். தூத்துக்குடியில் ஐயாயிரம் ரூபாய் ஆண்டு வாடகையே அதிகம் என்று கூறி அதை 3,500 ரூபாயாகக் குறைத்திருக்கிறார்கள். இங்கே ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் வாடகை இருந்தும்கூட, ஒப்பந்த காலம் முடிவதற்குள்ளாகவே அந்தத் தனியாரிடமிருந்து அதைப் பறித்துக் கொள்ள அறிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். அரசுக்கு ஒரு தாழ்மையான விண்ணப்பம் விடுக்க விரும்புகிறேன். விருப்பு வெறுப்புக்கு இலக்காகாமல் நியாயத்தின் அடிப்படையில் நடக்க வேண்டும்; இந்தத் தொழிலுக்கு எது நன்மையோ அதைத்தான் செய்யவேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஸ்டீல் ட்ராலர்ஸ் பற்றி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். ஸ்டீல் ட்ராலர்ஸ் அதிகமாக வாங்கிச் சமுத்திரத்திலுள்ள மீன்களைப் பிடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

பரங்கிப்பேட்டை முக்கியமான மீன்பிடித் துறைமுகமாக மாற்றப்பட வேண்டும். அதைச் சுற்றியுள்ள கடல்களில் ருசிகரமான மீன்கள் கிடைக்கின்றன. நவீன முறையில் உயர்ந்த சக்தியுள்ள படகுகளை அமைத்து மீன்களைப் பிடிக்க ஏற்பாடு செய்தால் பரங்கிப் பேட்டை பகுதி வளர்ச்சி அடைய முடியும்; மக்கள் பஞ்சம் தீரவும் வழிவகையாக அமையும். பரங்கிப் பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க இயற்கையான வசதி இருக்கிறது. அங்கே ஒரு ஆறு சமுத்திரத்தில் கலக்கிறது. பெரிய படகுகள் முதற்கொண்டு உள்ளே வரக்கூடிய வசதிகள் இருக்கின்றன. இருப்புப் பாதை இருக்கிறது. இந்த வசதிகளை எல்லாம் உபயோகப்படுத்திப் பரங்கிப் பேட்டையை ஒரு மீன்பிடித் துறைமுகமாக மாற்ற இந்த அரசு எல்லா நடைமுறைகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்துக் குளிப்பதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. முத்துக் குளிப்பவர்களுக்கு எந்த விதமான நவீன உடைகளும் கொடுக்கப் படாமல் பழைய முறையிலேயே மூச்சைப் பிடித்துச் செல்லும் நிலைமைதான் இருக்கிறது. அந்த முத்துக் குளிக்கும் தொழிலாளர்களுக்கு நவீன உடைகளைத் தந்து அவர்கள் காற்றைச் சுவாசிப்பதற்கு ஏற்ற உடைகளைத் தந்தால் தண்ணீரில் அமிழ்ந்து நல்ல முத்துக்களைக் கொண்டுவர வசதியாக இருப்பதோடு அந்தத் தொழிலாளர்களுக்கும் நல்ல பாதுகாப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டில் இருந்து சற்றேறக்குறைய 2½ கோடி ரூபாய் அளவுக்கு மீன் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று அறிகிறேன். இதனால் என்ன நிலை ஏற்படுகிறது என்றால் சமுத்திரக் கரையில் வாழும் மக்களுக்குக்கூட தரமான மீன்கள் கிடைப்பதில்லை. சிதம்பரம் வாசியாக இருந்தபோது நல்ல இரால்களைக் குறைந்த விலையில் ருசிகரமாக வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். இப்போது கிலோ ஆறு ரூபாய் கொடுத்தால்கூட அந்த மீன்களைக் கண்ணில் பார்க்க முடியவில்லை. சமுத்திரக் கரை மக்களுக்கே இந்த நிலை என்றால் உள்நாட்டில் சொல்லவே வேண்டியதில்லை. வெளிநாட்டுக்கு மீன்களை அனுப்பும்போது உள்நாட்டுத் தேவையையும் பார்க்க வேண்டும். வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லை. அந்த அளவுக்கு அதிகமான மீன்களைப் பிடிப்பதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தால் வெளி நாட்டுக்கு அனுப்புவதில் ஆட்சேபணை இல்லை. இந்தத் துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளாகச் செய்யப்பட்டுள்ள முன்னேற்றங்கள் பெருமைக்குரியன என்பதற்காகப் பாராட்டுகிறேன். செய்தது போதாது, இன்னும் நிறையச் செய்யவேண்டும். இதற்காக அதிக மானியத்தைப் பெற்று, இன்னும் பல திட்டங்களை இந்தத் துறை காண வேண்டுமென்று கூறி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.





திரு. வீ. கார்த்திசன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மீனள மானியக் கோரிக்கையை ஆதரித்து இந்த அரசு இந்தத் துறையில் பாட்டாளி வர்க்கத்தினரின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு காரியங்களைச் செய்து வருவதைப் பாராட்டுகிறேன்.

மீன் உற்பத்தி பெருகுவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மீன்பிடி படகுகளைக் கட்டுவது முதல் மீனவர்களுக்கு தொழில் பயிற்சி அளிப்பதுவரை பல பணிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. 1971–72-ல் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் மூலம் திருநெல்வேலி மாவட்டத்திற்கு 78 லட்சம் ரூபாய் உதவி அளிக்க இருப்பது போற்றத்தக்கது. ஆழ்கடல் மீன் பிடிப்புப் பயிற்சி நிலையங்களைப் பொறுத்தவரை மீனவர்கள் வாழும் இராதாபுரம் தொகுதியில் ஒரு பயிற்சி நிலையம் வேண்டுமென்பது அழுத்தமான கோரிக்கை. "போனவர் வந்தால் புதுவாழ்வு" என்ற நிலையில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் இராதாபுரம் தொகுதியில் இந்து மகாசமுத்திரத்தில் கடலோரப் பகுதிகளில் அன்றாடங்காய்ச்சிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதோ சில மாதங்களில் கிட்டும் இரால் மீன்களை மட்டும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றைப் பதனிட்டு வெளிநாட்டுக்கு அனுப்ப வாய்ப்பு வசதி எங்கள் தொகுதியில் இல்லை. கேரளத்தைச் சேர்ந்த வணிகப் பெருங்குடி மக்கள் எங்களுடைய பகுதிக்கு வந்து பெருமளவுக்கு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். கொச்சின் கம்பெனி, கேரளா கார்ப்பரேஷன், போன்ற கம்பெனிகள் இவ்வாறு செய்கின்றன. இதன் காரணமாக தமிழக அரசுக்கு வர வேண்டிய மிகப் பெரிய வருமானம் தடைப்படுகிறது. தமிழ்நாட்டின் கடற்கரையில் இரால் மீன் அதிக லாபம் தரக் கூடியது. அதை மற்றவர்களிடத்தில் விற்றுவிட்டு நாம் கையைக் கட்டி வேடிக்கை பார்ப்பது என்பது உள்ளபடியே வருந்தத்தக்கது. இரால் மீன்களைப் பதனப்படுத்தி, தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு அனுப்பலாம். இதனால் அதிகமான பேர்களுக்கு வேலை கிடைக்கும். இடிந்தகரையில் கட்டப்பட்டுள்ள ஐஸ்கட்டித் தொழிற்சாலை நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே இருக்கிறது. மீன்கள் கிடைக்கிற நேரத்தில் கூட அவற்றைப் பிடிப்பதற்கு புது முறை நைலான் இழைகளைக் கொடுப்பது இல்லை. குடிசைத் தொழில் மூலமாக இதுவரை இந்த நைலான் இழைகளைத் தயாரித்து வந்தோம். இப்போது நைலான் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் நைலான் நூல் தொழிற்சாலை ஒன்றை சாத்தான்குளம், மணப்பாடு, பெரியதாழை ஆகிய இடங்களில் ஏற்படுத்தவேண்டும். நிலவளத்தைப் பெருக்குவதற்காக விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதுபோல், மீன்வளத்தில் ஈடுபட்டு இருக்கிறவர்களுக்கும் வங்கிகள் மூலமாகக் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இந்த மக்கள் கடல் அரிப்பினால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு முன்பு இருந்த அரசாங்கம் அதைக் கவனிக்காமல் விட்டு

[திரு. வீ. கார்த்திசன்] [1971 ஜூலை 23

விட்டது. மூன்று பர்லாங்கு நீளமுள்ள மணற்பரப்பு கடல் அரிப் பால் விழுங்கப்பட்டு, அங்கே உள்ள மக்கள் மிகவும் துன்பத்திற் குள்ளானார்கள். கடல் அரிப்பைத் தடுப்பதற்காக மணல் மூட்டை களைப் போட்டால் போதாது. வேறு நடவடிக்கை எடுத்து அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுமரம் ஓட்டுபவர்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகிறார்கள். அவர்களுக்கும் கப்பல் காப்புறுதித் திட்டம் (மெரைன் இன்சூரன்ஸ் ஸ்கீம்) செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பு இருந்த அரசு, மீனவர்கள் ஏதும் படிக்காத வர்கள் என்ற பெயரால், அதிகமாக மீனவர்கள் உள்ள இராதாபுரம் தொகுதியை விட்டுவிட்டு, அதே மாவட்டத்தில் செங்கோட்டையில் அந்தக் கல்விச் சலுகையை கொடுத்து இருக்கிறார்கள். இது வருந் தத்தக்கது. மீனவர்களே இல்லாத செங்கோட்டையில் இந்தக் கல்விச் சலுகை தருவதற்குப் பதிலாக ஏழை மீனவர்கள் அதிகமாக இருக்கும் இராதாபுரம் தொகுதிக்கு இந்த கல்விச் சலுகை தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி, தூத்துக் குடி கடலோரப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு இருக்கும் இணைப்புப் பாதைகள் மிகவும் பழுது அடைந்து இருப்பதால் அங்கே இணைப்புப் பாதைகள் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டு இருக்கிற மான்யத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தின் மீது சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே மீன் பிடிப்புத் தொழில் மிகவும் விரிவாக வளர்ந்து கொண்டு வருகிறது. அது ஒரு பயனுள்ள தொழி லாக அமைந்து கொண்டு வருகிறது என்பதை அறிவோம். எப்போதுமே தண்ணீரில் இருக்கிற உயிர்கள் தரையிலே வந்தாலும், தரையிலே உள்ள உயிர்கள் தண்ணீரில் வந்தாலும் நீண்ட நேரத் திற்கு உயிர் வாழ்ந்து கொண்டு இருக்க முடியாது என்ற நிலை இருக் கிறது. அதைப்போலவே, தண்ணீரிலே காலையிலிருந்து மாலை வரையில் சென்று அதில் இருக்கும் மீன்கள், முத்துக்கள், இன்னும் இதர நல்ல பொருள்களைத் தேடி எடுத்து வருகிறார்கள். இப்படி தண்ணீரில் இருப்பவை நிலத்திற்கும், நிலத்தில் இருப்பவை தண்ணீரில் செல்வதுமான ஒன்றோடு ஒன்று ஒட்டாத நிலை, மாறிக் கொண்டு இருக்கிற நிலை இருக்கிறது. அப்படி மாறிக் கொண்டு வருகிறது என்று சொன்னால் அந்தப் பணியில் ஈடுபடக்கூடியவர் களுக்குப் போதிய வசதிகளை, வேண்டிய காரியங்களை ஒவ்வொரு நாளும் அதிகப்படுத்திக்கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

இன்று நாமும் சரி, நம் தேசமும் சரி, உழைப்பவர்களுக்கு முதலிடம் அளிக்கவேண்டுமென்ற கொள்கையைக் கடைபிடித்து, அமுல் நடத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம்.



1971 ஜூலை 23] [திரு. எம். சுரேந்திரன்]

அப்படியானால் இன்று உலகிலேயே பெரும் உழைப்பாளிகளாக இருப்பவர்கள் மீனவர்கள்தான் என்று கூறலாம். அப்படிப்பட்ட அந்த மீனவர்களுக்குத் தகுதியான வசதிகள் செய்து கொடுக்க வில்லை என்றால் நம்முடைய கொள்கையில் முரண்பாடு உண்டாகிறது என்பது பொருளாகும். அங்கே மீனவர்களுக்கு வசதியான வீடுகள் என்று சொன்னால், ரொம்ப வசதியான வீடு களாக இல்லாவிட்டாலும் கூட, அவர்கள் உயிர் வாழ்வதற்கு எந்த அளவு தேவையோ, அந்த அளவுக்குத் தகுதியான வீடுகள் கட்டித் தருவதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், கடல் ஓரத்தில் குடி இருக்கும் நிலையில் அவர்கள் தொழில் இருக்கிறது. கடலோரப் பகுதியில் இணைப்புப் பாதைகள், ஆங்காங்கு இல்லாமல் இருக்கின்றன. அவைகளைப் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில இடங்களில் காடுகள் கூட இருக்கிறது. அந்தப் பாதையில் நடந்து செல்வதால், அதனுடைய உரிமையாளர்களின் அனுமதியை பெற வேண்டியதாக இருக்கிறது என்று பலர் சொல் கிறார்கள். அப்படி இருக்கிற நிலைமையை மாற்றி அவர்கள் குடி இருக்கும் இடத்தையும், அவர்கள் நடந்து செல்லும் இடத்தையும் அவர்களுடைய உரிமையாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அவர்கள் கடலோரத்தில் இருப்பதால் கடல் நீரைக் குடித்துக் கொண்டு இருக்க முடியாது. அவர்களுக்குக் குடி தண்ணீர் கிடைக்கச் செய்யும் வகையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு அவர்கள் இருப்பது மிகவும் இருள் சூழ்ந்த இடமாக இருக்கிறது. அவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கும் வகையில் மின்சார வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் ஆழ்கடலில் சென்று மீன் பிடித்து வருகிறார்கள். வீட்டிற்கு வருவதற்கு முன்னால், அவர்கள் உணவு அருந்த வசதிகள் உண்டாக்கித் தர வேண்டுமென்றும், அதற்கான இடங்களை ஏற்படுத்தித் தருவது மிகவும் அவசியம் என்றும் கூறிக்கொள்கிறேன்.

நாம் விசைப்படகுகளை ஒவ்வொரு வருஷமும் அதிகப்படுத்திக் கொண்டு வருகிறோம். அதிகப்படுத்த வேண்டுமென்று எல்லோரும் எடுத்துச் சொல்கிறோம். எனக்குக் கிடைத்த தகவல்படி விசைப் படகுகள் தயாரிக்கும் இடத்தில் முனைப்பாக இருப்பவர்கள், நல்ல பயிற்சி, நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக இல்லை என்று புகார் கூறு கிறார்கள். அந்தப் புகாரை சர்க்கார் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குக் கீழ் இருக்கும் " போர்மேன்" வேலையில் ஈடுபட்டு இருப்பவர்கள் இயந்திரங்கள், படகுகளைப் பற்றித் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். இதைச் சரியாக ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், ஆழ்கடலில் செல்பவர்கள் எந்த நேரத் திலும் ஆபத்தை எதிர் நோக்கியிருக்கிறார்கள்.

[திரு. எம். சுரேந்திரன்] [1971 ஜூலை 23

அவர்கள் செல்லும் படகு நல்ல சாதனமாக இல்லாவிட்டால் அவர்களுக்குத் தீங்கு உண்டாகும். அந்தப் படகு தயாரிப்பதில் பலகைகளை இணைக்கும்போது, பயிற்சி பெற்றவர்கள் இல்லாத காரணத்தால், சரியாக இணைப்பு செய்வதில்லை என்பதோடு மாத்திர மல்லாமல், அப்படி ஏற்படுகிற இடைவெளியில் தேங்காய் நாரைப் போட்டு அதை அடைத்து, அதிலே தார் பூசி வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது சரியாகக் கவனிக்க வேண்டியதொன்றாகும். படகுகளை எடுத்துக் செல்பவர்கள் பைப் வைத்து, பம்பு வைத்துத் தண்ணீரை இறைத்துக்கொண்டு செல்கிறார்கள். அப்படிச் சென்றாலும் கூட அந்த இடைவெளியால் ஓட்டைகள் ஏற்பட்டு, படகுகள் மிக விரைவில் கெட்டுவிடுகின்றன என்று சொல்கிறார்கள். இவற்றை ரிப்பேர் செய்யப் போதுமான வசதி இல்லை என்று சொல் கிறார்கள். நாம் அளிக்கும் தவணை முறை மிகக்குறைவாக இருக் கிறது. அவர்களுக்குக் கொடுக்கும் கடன் தொகைக்கும் தவணை முறைக்கும் அதிக வித்தியாசம் இல்லாமல், தவணை முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் படகுகளிலே சென்று வந்தால் நம்முடைய ஹார்பரிலே இடம் கொடுப்பது இல்லை. நங்கூரம் பாய்ச்சுவதற்கு 20 அடி ஆழம் வேண்டுமென்று சொல்கிறார்கள். அங்கே வசதி இல்லை என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரியான காரியங்களைச் சரியான முறை யில் கவனித்து, அந்தத் துறையை மேலும் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது உள்நாட்டு உணவுப் பொருளாகமட்டும் இல்லாமல் வியாபாரப் பொருளாகவும் இருப்பதால், ஏராளமான வெளிநாட்டுச் செலாவணியை நமக்குப் பெற்றுத் தருகிற காரணத்தால் இன்னும் அதிகமான கவனம் செலுத்தி, அதற்காக ஒரு மீனள வாரியம் அமைத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

* திரு. தொ. ப. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மீனளத் துறை மானியத்தை வரவேற்று, என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாகவே, மீனளத் துறை அதிகாரிகள்—இயக்குநர் போன்றவர்கள்—தமிழகத்தில் இந்த மீன்பிடித் தொழிலுக்கும் மீனவர்களுக்கும் செய்கின்ற நன்மைகளையெல்லாம் இரு கூறுகப் பிரிக்கலாம். அப்படிப் பிரித்துப் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக் கிறது. ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்று துன்பங்கள் பலவற்றை அனுபவித்து, இறுதியில் மீன் கொண்டு வந்தால், அவற்றை உடனடி யாகக் கொண்டுபோய் விற்பதற்கான நல்ல மார்க்கெட் வசதி இல்லை. இதன் காரணமாக வருவாய் இல்லாமல் போவதால் இந்தச் சமுதாயம் முன்னேற முடியாத நிலையில் இருக்கிறார்கள். வீடு



1971 ஜூலை 23] [திரு. தொ. ப. சீனிவாசன்]

கட்டிக் கொடுப்பதிலும், இன்னும் அதிகமான ஆர்வம் காட்டி, மீனவ மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில் உள்நாட்டு மீனவர்களின் நிலைமை நல்ல வித மாகக் கவனிக்கப்படவேண்டும். நீர்த் தேக்கங்களிலும், ஏரி, குளங் களிலும் அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப, பரிசீலனை செய்து அவர் களுக்கு வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆழ் கடலில் ஆண்டு முழுவதும் மீன் பிடிக்க வசதி உண்டு. ஆனால், உள்நாட்டில் ஆண்டில் மூன்று மாதங்கள்தான் ஏரி நிரம்பி இருக்கும்போது மீன் பிடிக்க முடியும். மற்ற கோடைக் காலங்களில், வெயில் காலங்களில் அவர்களுக்கு பிழைப்பில்லை. வெவ்வேறு தொழில்களைச் செய்து வாழவேண்டும். கடந்த பஞ்ச காலத்தில், உள்நாட்டு மீனவர்கள் பிழைப்பு இல்லாமல் மைசூருக்கும் மற்ற இடங்களுக்கும் சென்று வேறு தொழில்கள் செய்ய வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டது. அத்தகைய நிலை ஏற்படாமல் அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது அவர் களுக்கு இருக்கின்ற வசதியெல்லாம், கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, அவர்களுக்கு உள்நாட்டு ஏரி, குளங்களை விடவேண்டும் என்று இந்தக் கருணைமிக்க அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டு போடப்பட்டது. இதற்காக உள்நாட்டு மீனவர்கள் அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அந்த உரிமையைக் கொடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு செய்திருக் கிறார்கள். அதேபோல, தனியார் துறையிலும், பாசிக் குத்தகை எல்லாம் விடவேண்டும் என்று, அரசு தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அரக்கோணத்தில் குறைந்த தொகைக்கு எடுத்துவிட்டு, வேறொருவனுக்கு அதை அதிக ரூபாய்க்கு ஏலம் விட்டு, தனி நபர் ஒருவர் ஏராளமான பணத்தை அடைகிறார். இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நிதி ஒதுக்கப்படுகிறது. கடலோர மீனவர்களுக்கு அந்த வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதேபோல் உள்நாட்டு மீனவர்களுக்கும் கூட்டுறவு சங்கம் மூலமாகப் பணத்தை ஒதுக்கி ஆண்டுதோறும் செயல்படுகிறார்கள். ஆனால், உள்நாட்டு மீனவர்கள் ஊருக்கு மத்தியில் 700 ரூபாய் மானியத்திலும், மீதித் தொகை கடன் என்ற அளவிலும் கொடுக்க விதி வைத்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, ஊருக்கு ஒதுக்காக இருக்க வேண்டும் என்றும், முறைப்படி கட்டடம் கட்ட வேண்டும் என்றும் விதி முறைகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒரு இடத்தில்கூட இப்படிச் செய்ய முடியவில்லை. ஒதுக்கப்படும் பணம் சர்க்காருக்கே திரும்ப வந்துவிடுகிறது. ஆகவே, தயவு செய்து, ஒவ்வொரு உள்நாட்டு மீனவருக்கும், சூழ்நிலைக்கு ஏற்ப தொகைள் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1971 ஜூலை 23

உள்நாட்டு மீனவர்கள் பயிற்சிப் பெற ஆறு இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பயிற்சிப் பெற மேட்டூரில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல சாத்தனூர் அணையிலும் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்த அதிகாரிகளை நியமிக்கும்போது மீனவர் இனத்தைச் சேர்ந்தவர்களையே நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குலத் தொழிலாக மீன் பிடிக்கிறவர்கள் செய்கிறார்கள். அந்த இலாகாவிலே காவலர், ப்யூன் போன்ற பணியாளர்களை நியமிக்கும்போது, தயவுசெய்து மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையே நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம், இந்த மீனவ மக்கள் மிகவும் பின் தங்கியவர்கள். படித்தவர்கள் இல்லை. அவர்களுக்கு வேறு எந்த விதமான உத்தியோகமும் இல்லை. ஆகவே, கடை நிலை ஊழியர்களாகவும், காவலர்களாகவும் கருணைகூர்ந்து நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூரில் பிடிக்கும் மீன்களைப் பரவலாக போளூர், ஆரணி, திருவண்ணாமலை போன்ற இடங்களில் மார்க்கெட்டுக்குக் கொண்டு வந்து விற்பனை செய்தால் மிகவும் உபயோகமாக இருக்கும்.

படகுகள் கட்டிக் கொடுப்பதுபோல், நீர் நிலையங்களில் உபயோகப்படும் வகையில், பரிசல் குறைந்த செலவில், 700, 800 ரூபாயில் மானியமாக கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி செலுத்தி, முடிக்கிறேன்.

* திரு. மு. வேதாசலம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை மானியத்தை ஆதரித்துப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே, நம்முடைய மாநிலத்தில் பெரிய கடற்கரை இருந்தாலும், பிடிக்கும் மீன்களை அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் வகையில் பயன்படுத்த முயற்சிகள் செய்யப்படவில்லை. இருந்தாலும், தமிழக அரசு நல்ல முறையில் இந்த மானியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எவ்வளவு உதவிகள் செய்ய முடியுமோ அந்த வகையில் தமிழக அரசு எல்லாம் செய்திருக்கிறார்கள். ஆனால் மாற்றுக் கட்சி நண்பர்கள் பொதுவாகவே, அதிலும் மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், இந்த அரசு வந்து எந்தக் காரியத்தையும் மீனவர்களுக்காகச் செய்யவில்லை என்று. அவர்களுடையக் கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில், காங்கிரஸ் ஆட்சியில் கடற்கரையில் வாழும் மீனவர்களுக்குப் போட்டிருந்த குடிசைகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று செய்தார்கள். நம் கலைஞர் ஆட்சியில்தான்......

திருமதி த. ந. அனந்தநாயகி: On a point of self-explanation, Sir, மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கத் திட்டம் இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆகவே, அவர்கள் பேசுவதைப் பேசட்டும்.



1971 ஜூலை 23]

திரு. மு. வேதாசலம்: கடற்கரைப் பகுதியில், நம் அரசு அழகான வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறார்கள். மைலாப்பூர் தொகுதியில் வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். காசிமேடுப் பகுதியில் 425 வீடுகளைக் கட்டித்தரத் திட்டமிட்டு வேலை செய்து வருகிறார்கள். கடற்கரையில் வாழும் மீனவர்களுக்கு 20 ஆண்டு காலத்திற்கு முன்பு அவர்கள் இருந்த நிலையைவிட இன்றைக்குப் பல நன்மைகளைப் பெற்று வருகிறார்கள்.

லாஞ்சில் மீன் பிடிப்பவர்கள் கேரளாவிலிருந்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். தமிழக மீனவர்கள் திறமையற்றவர்கள் என்று சொன்னதை வன்மையாக நான் கண்டிக்கக் கடமைப் பட்டுள்ளேன். கேரளத்து மீனவர்களைவிட நம் தமிழக மீனவர்கள் திறமை படைத்தவர்கள். ஆகவேதான், இறால்களைப் பிடித்து வெளி நாட்டிற்கெல்லாம் அனுப்புகிறார்கள். அவர்கள் தங்கள் கட்சியின் பாணியில் பேசுகிறார்கள்.

மீன்பிடித் துறைமுகம் ராயபுரத்தில் தேவை என்று சொன்னதன் பேரில், இப்பொழுது திட்டமிட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் சொல்லி அதை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

யான்மார் எஞ்சின்தான் நல்ல வகையில் பயன்படும், நிறைய மீன் பிடிக்க உதவியாக இருக்கும். ஆகவே, எண்ணூரில் யான்மார் எஞ்சின் பாக்டரி ஏற்படுத்த தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரை ஓர மீனவர்கள் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு நிலங்களில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவற்றைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும்.

முன்பெல்லாம் 50 சதவிகித மானியம் எஞ்சினுக்கும், 1/3 பாகம் ஹல்லுக்கும் கொடுத்தார்கள். ஹல்லுக்கு மானியத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும். மீனவர்கள் உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டதாக எண்ண வேண்டாம். தாழ்ந்த நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மானியத்தை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டும். அதேபோல், அவர்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள்போல் ஷெடூல்ட் காஸ்ட்டில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மிக்க தாழ்த்தப்பட்ட நிலையில் தான் இருக்கிறார்கள்.

இராயபுரம் பகுதியில் வாழ்கின்ற மீனவர்கள், அடிக்கடி ஏற்படும் கடல் கொந்தளிப்பால் கடல் அரிப்பு ஏற்பட்டு, பாதகங்கள் விளைகின்றன. அந்த மண் அரிப்பைத் தடுக்கும் வகையில் சுவர் கட்ட வேண்டும் (Sea wall) அப்பொழுதுதான் அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் வாழ முடியும். படகு ஓட்டுவதற்குப் பயிற்சிப் பள்ளி வைத்திருக்கிறார்கள். அதிலே பயிற்சி பெற்றவர்கள் தான் விசைப் படகு ஓட்ட வேண்டுமென்று வைக்க வேண்டும்.

அடுத்து, மீனவர்கள் கடலில் இறந்துவிட்டால் நம்முடைய சர்க்கார் ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறார்கள். அது போதாது. அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 50 கொடுக்கிறார்கள். அதையும் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலில் மட்டி ஷெல்ஸ் கிடைக்கிறது. அவற்றை அங்கேயுள்ள கோவாப்ரேடிவ் சொசைட்டி மூலமாகக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அங்குள்ள மீனவர்களுக்கு வசதியாகவிருக்கும்.

கடற்கரைப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவர்களெல்லாம், கடற்கரை ஓரத்திலிருக்கின்ற காரணத்தால் நல்ல ரோடு வசதிகள் இல்லாமல், அவர்கள் பிடிக்கின்ற மீன்களை உடனடியாக மார்க்கெட்டுக்குக் கொண்டுவர முடியாத நிலை இருக்கிறது. அவர்கள் போக்குவரத்திற்கு உடனடியாக நல்ல ரோடு வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரையோரங்களில் வாழ்கின்ற மீனவர்களுக்கு நல்ல மருத்துவ வசதி, எலெக்டிரிக் லைட் வசதி, ஒவ்வொரு குப்பத்திற்கும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது மீனவர்களுக்கு 100 வீடுகள்தான் கட்டிக்கொடுக்கும் திட்டமிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஆயிரம் குடும்பங்களுக்கு வீடு கட்டித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவுமல்லாமல் நம்முடைய ஏழை மீனவர்களுக்கு, விவசாயிகளுக்குக் கொடுப்பதுபோல், பாங்கு கடன் வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியாக தமிழ்நாடு கூட்டுறவு மீன்வள பாங்கு ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்கு உள்ள குளம் குட்டைகளை எல்லாம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு லீசுக்கு விடுகிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். கூட்டுறவு முறையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பதால் அதை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நம்முடைய சர்க்கார் மீது ஏதாவது குறை சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர, மீனவர்களுக்கு சர்க்கார் எவ்வளவு நன்மை செய்தாலும் அவர்கள் அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று வருத்தப்படுகிறேன். இந்த மானியத்தில் மீனவர்களுக்கு குறைந்த ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இரண்டு கோடியே முப்பத்தைந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. இன்னும் அதிகம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கு பேச அனுமதி தந்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

* திரு. மணலி சி. கந்தசாமி: மீனளத்துறை மானியத்தின் மீது பொதுவான சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.





போன பட்ஜெட் உரையில் நான் வைத்த கோரிக்கையை அங்கீகரித்து, அந்த இரண்டாயிரம் சங்கு குளித்தொழிலாளர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் இப்பொழுது நடவடிக்கை எடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மையார் அவர்களுக்கும் அந்த மக்கள் சார்பில் நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறை வருங்காலத்தில் சரிவர பயன்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டால் ஒரு மிகப் பெரிய துறையாக வளரும். இரண்டு கோடியே முப்பத்தைந்து லட்சம் மட்டுமல்ல; அதற்கு மேல், கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து இயங்கும் ஒரு துறையாக, நாட்டிலிருக்கும் மக்களுக்கு போஷாக்கான உணவு அளிக்கும் நல்ல ஒரு துறையாக வளர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இந்தக் கடற்கரை எந்த ராஜ்யத்திலுமில்லாத அளவுக்குப் பெரியதாக அமைந்திருக்கிறது. அதில்லாமல் உள்நாட்டிலும் இருபது லட்சம் ஏக்கர் நிலப்பரப்புள்ள வகையில் நாம் இருக்கிறோம். அந்த அடிப்படையில் செலவழிக்கப்படக் கூடிய பணம் குறிப்பிடத்தக்கதாக இல்லை என்பது என்னுடைய கருத்து. உயிரையே திரணமாக மதித்துக் கடலில் வெகு தூரம் கட்டுமரங்களில் சென்று வரும் இந்த மீனவர்களுக்கு 68 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு விசைப் படகுகள் கொடுத்து, நவீன முறையில் மீன் பிடிக்க ஏற்பாடுகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு வருஷத்தில் பத்து, அல்லது இருபது அல்லது நூறு கொடுப்பதன் மூலமாக இந்தத் திட்டத்தை அவர்களுக்குப் பயனளிக்கும் விதத்தில் சீக்கிரமாக நிறைவேற்ற முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இதுவரையில் 1,214 பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 68 ஆயிரம் பேருக்குக் கொடுப்பதற்கு 100 ஆண்டுகளுக்கு மேலாகும்போல் இருக்கிறது. விரைவில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுத்துறை இந்த மீனளத் துறையைப் பொறுத்தவரையில் எவ்விதம் இயங்கிக்கொண்டு வருகிறது என்று தெரியவில்லை. பொதுவாகவே கூட்டுறவுத்துறை ஒரு மர்மமாகவே இருக்கிறது. கூட்டுறவுத்துறை மானியத்தின் மீது நடந்த விவாதத்தின்போது, தனி நபருடைய வருமானம் பெருகுவதைப் பற்றி சொல்ல முடிந்ததே தவிர, உள் விவகாரங்கள் தெரியாத நிலைமை தான் நீடித்தது. அந்த அளவில் கூட்டுறவுத் துறை இருந்தது. இந்த மீனளத் துறையைப் வளப்படுத்துவதற்கு ஆக்கப் பூர்வமான பணி செய்யும் விதத்தில் கூட்டுறவுத் துறை ஈடுபாடு கொள்ளவில்லை.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1971 ஜூலை 23

மன்னார்குடியில் 500 மீனவர்கள் குடும்பம் இருக்கின்றது. அது ஒரு பரந்த தாலுக்கா. உள்நாட்டிலும் நீர் நிலைகள் அதிகமாக இருக்கின்றன. தனியார்கள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்தால் இலாகாவினர் ஆட்சேபணை செய்துகொண்டு வருகிறார்கள். இது சம்பந்தமாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த மீன் பிடிப்பது, பிடித்த மீனை உலர வைப்பது, அவைகளை நல்ல முறையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்வது, உள்நாட்டில் மக்களுக்குத் தேவையான போஷாக்கு உள்ள உணவு கிடைப்பதோடு வெளிநாட்டு செலாவணியையும் பெருக்கிக் கொள்ள முடியும். தமிழ் நாடு இந்த அடிப்படையில் முதலிடத்தில் இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் பதப்படுத்திய மீன்கள் 16,000 டப்பிகள் அடைக்கப்பட்டன. அது 1,575 ஆக என்ற அளவிற்கு குறைவாகப் போகும் நிலைக்கு வந்திருக்கிறது என்றால் அதைப்பற்றி ஒரு விசாரணை நடத்திப் பார்க்க வேண்டும். அதேமாதிரி ஒரு சந்தர்ப்பத்தில் "சார்ட்டின் மீன் டப்பிகள்" 2,23,000 ஆக இருந்தது, மறு வருஷத்தில் 34,000 ஆக குறைந்திருக்கிறது. இதற்கான காரணத்தையும் விசாரணை செய்து பார்க்கவேண்டும். அதிலே மோசடி நடந்ததா, வேறு என்ன காரணம் என்று பார்க்க வேண்டும். ஒரு தனியாருக்கு காண்ட்டிராக்ட் விட்டுவிட்டு சர்க்காருக்கு வரவேண்டிய ஊதியம் வேறு ஒருவருக்குப் போகாமல் எல்லாவற்றையும் சர்க்காரே செய்தால் நலமாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கருவாட்டை உலர வைப்பது, மிகவும் சுகாதாரமற்ற முறையில் நடைபெற்று வருகிறது. அதை தட்டிப் பாய்மேலே போட்டு உலர வைப்பதால், மணல், மற்ற அசுத்தங்கள் பூராவும் அதில் ஏறுகின்றன. அதை நல்ல முறையில் உலர வைப்பது அவசியம் என்பது மட்டுமல்லாமல், பல நாடுகளிலே கிராக்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மேலைநாட்டுக்காரர் என்னை கருவாடு வாங்கி தரச் சொன்னார். நான் அவருக்கு வாங்கிக் கொடுத்தேன். அது மிகவும் நல்ல முறையில் இருந்தது என்று சாப்பிட்டப் பிறகு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், மேலும் வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டார். அந்த வகையில் நல்ல முறையில் கருவாடைத் தயாரிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக சானிடரி கண்டிஷன்ஸ், சுகாதார சூழ்நிலை நல்லபடி இருக்கும்படி ஏற்பாடு செய்து, அவைகளைத் தயாரிக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

பொதுவாக, மீன் மார்க்கெட் என்று சொன்னாலே, சந்தை, இரைச்சல், சத்தம் போடுவது என்று தான் அர்த்தம். இன்றைய தினம் இருக்கின்ற மீன் மார்க்கெட்டுகளைப் பார்த்தால் அங்கே போய் நாகரீகம் உள்ளவர்கள் நாகரீகமான முறையில் மீன் வாங்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. சுகாதாரமும் மிகக் குறைவாக இருக்கிறது. அதைப் போக்கி நல்ல முறையில், ஆரோக்கியமான முறையில், இந்த மீன் வியாபாரம் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1971 ஜூலை 23] [திரு. மணலி சி. கந்தசாமி]

மீன் எண்ணெய் எடுப்பதைப்பற்றி, எந்த முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. எதிர் காலத்திலே எடுத்துக் கொள்ளப்படுமா என்பதும் குறிப்பிடப்படவில்லை. வெளிநாட்டிலே கோடிக்கணக்கான ரூபாய்க்கு இதை வரவழைத்து நம்முடைய நாட்டிலுள்ள மக்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நாம் இதை இங்கேயே தயாரிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். மீன் தொட்டிகள் கட்டுவது என்பது அனுவசியமான விஷயம். 50, 60 சதுர அடியில் கட்டுகிற தொட்டி—காண்டிராக்டர்கள் பிழைக்கத்தான் உதவுகிறது. நல்ல முறையிலும் அவர்கள் கட்டுவதில்லை. அதில் மீன் குஞ்சுகளை வளர்பதாகச் சொல்கிறார்களே தவிர வெயில் அடித்தால் தண்ணீர் சூடாகி அவ்வளவும் செத்துப்போகின்றன. ஆகவே, இதுவரை கட்டப்பட்டத் தொட்டிகளை அங்கங்கே ஆடுமாடுகள் தண்ணீர் குடிக்க, தண்ணீர் தேக்கிவைக்கும் தொட்டிகளாகப் பயன்படுத்தக் கொடுத்துவிட வேண்டும். மேற்கொண்டு தொட்டிகள் கட்டாதிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கங்கே உள்ள நல்ல குளங்களில் மீன் வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் மாத்திரம் அல்ல, தோப்புத்துறை, கோடிக்கரை ஆகிய இடங்களில் வசதியாக மீன் பிடிக்க சௌகரியமான நிலைமை இருக்கிறது. ஆனால் போக்குவரத்து வசதி குறைவு. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருப்பதால் அதை அபிவிருத்தி செய்யவேண்டும்.

அடுத்து, ஆழ்கடலில் சென்று தங்களது உயிருக்கே ஆபத்தை உண்டாக்கிக்கொள்கிற மீனவர்களுக்கு கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டுவந்தாக வேண்டும். எப்போது புயல் அடிக்குமோ, என்ன ஆகுமோ என்று அஞ்சுகிற நிலை அவர்களுடையது. ஏதாவது ஒன்று என்றால் அவர்களது குடும்பம் மிகவும் பரிதாபத்திற்குரியதாக ஆகிறது. ஆகவே, கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவந்து, அவர்களது குடும்பத்திற்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வர வேண்டும். வருஷத்திற்கு 30, 50 வீடுகள் கட்டித் தருகிறோம் என்பது பிரயோசனம் இல்லை. 18 லட்சம் ஜனத்தொகை உள்ள சமுதாயத்திற்கு இன்னும் தீவிரமான முறையில் திட்டத்தைச் செயல்படுத்தி எல்லோருக்கும் வீடு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லி, என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, in support of the cut motions given by me, I wish to offer a few remarks.

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 23

At the very outset I would like to impress one particular fact namely, that we have done enough propaganda to see that people of Tamil Nadu take to fish much more liberally than what they are doing now. In fact I have recommended the idea to a number of my patients—I also take fish—because fish is an ideal diet according to me, for several reasons. Firstly, it is mostly developed in sea which is saline. By itself it is antiseptic and so it is a good diet. It is a high-protein diet. It contains less fat and it is easily digestible. It contains a lot of vitamins. So, the consumption of fish will solve the food problem to a considerable extent. (Interruption from Thirumathi T. N. Anandanayaki) I also take fish and I do take non-vegetarian dishes. I do not preach one thing and do something else. I would request the hon. Lady Member also to join me in doing propaganda for the consumption of fish.

Then I would like the Government to take note of the fact that we have a long stretch of coast--line, namely, 600 miles. So we must produce more quantity of fish than we are producing now. Also, we should see that it is properly utilised. We simply forget the utilisation aspect. So, we must see that proper steps are taken not only to produce fish but also to utilise it in an effective manner. Now the question is how we are going to achive the goal. There are two distinct methods of doing it. One is the inland fishing and another is deep-sea fishing. In this very House I told the then Hon. Minister Thiru Govindaswami about it and he agreed with me that that was the only and right solution and that he would take necessary steps to promote deep-sea fishing. I am very sorry that during the last 10 or 15 years we have never bothered about deepsea fishing. On page three of the Note on 'Fisheries' Demand, it is stated—

'Orders have been placed for the construction of four 57 feet steel trawlers. These trawlers are intended for survey of the deep-see off Tamil Nadu coast......'

This shows that we are going to find out whether deep-sea fishing is possible. How many years it would take for the Department and experts to find out whether deep-sea fishing is possible! It is just like saying to the hungry man that seed would be sown and after harvest it would be converted into rice which would be given to him and by that time the man would collapse. This is a very, slow and lethargic way of doing the job. I take the persons concerned to severe task for completely neglecting it. Then it is stated—

'Two vessels have already been completed and trial launches conducted at Calcutta during the year 1970–71 and they are expected to be delivered shortly. The other two trawlers are also expected to be launched for trial and delivered in the course of the current year. For the year 1971–72, a sum of Rs. 20.88 lakhs has been provided for the maintenance and operation of these four trawlers departmentally.'



1971 ஜூலை 23] [Dr. H. V. Hande]

I want the whole thing to be reorganised and I want the Government to look into this matter in all seriousness, and see that a large quantity of fish is produced.

The next question is with regard to the preservation of fish. In regard to this matter, even the Public Accounts Committee and the Estimates Committee have taken the departmental officials to task for going about the job in an unscientific manner and several cold storage plants are not functioning properly and consequently heavy loss has been incurred. But in Kerala the concerned organisation is doing very well and they have very fine cold storage plants. They are making profit and they are also exporting fish after meeting the internal requirements. So I would request the Government to follow the Kerala Government in this respect.

Then, I come to the cut motions I have given notice of. The first cut motion says—

'To discuss the need to give loan without interest for the construction of boats and also increase the period of repayment of loan to 10 years.'

My submission is that we must give proper incentive to fishermen, as otherwise they will walk into other professions and we will find ourselves in a difficult situation. I want the Government to look into this aspect of the matter.

Then, the second cut motion reads as follows—

'To discuss the need to supply more steam-boats to fishermen at Washermanpet, Ennore, etc.'

If more steam-boats are supplied, the production of fish will increase.

Then, the third cut motion is as follows:—

'To discuss the need for the Government to provide Compulsory Insurance Scheme to fishermen in view of the risk in their profession.'

In this connection, I want to suggest that the Government should start a Welfare Society for fishermen and it is also necessary that they should subsidise it. Also if some sort of insurance scheme is introduced, it will infuse confidence among fishermen and I hope and trust the Government will look into this matter.

Then I want to pinpoint the maladministration of this Department, and I hope that the Hon. Minister will take prompt action in the matter. During May or June 1971, copper sheets worth about some thousands of rupees were loaded at Marina yard to be delivered at Royapuram yard. It is understood that the entire

consignment was missing for some time and got back after investigation. How did it happen and what is the result of the investigation? I want the Hon. Minister to reply to it.

On 23rd June 1971 the Director of Fisheries got an information that unaccounted spare parts worth about some thousands of rupees were lying in the Marina yard and subsequently the office was sealed by the Director of Fisheries. Now the investigation is going on. How were the spare parts kept unaccounted? Since how long have they been lying? What is the value of the spare parts? Who are all involved in this conspiracy and what action has been taken against them? I request the Hon. Minister to reply to these points in her reply. It was reported in the Press that spare parts worth several thousands of rupees were stolen from Royapuram yard. Some man was caught, I believe. I do not know what action had been taken against the persons concerned.

These are some of the omissions and commissions. Now I come to concrete suggestions. I have already given a cut motion. In the technical field, only qualified persons should be appointed as Works Manager and Marine Foreman. Otherwise boats could not be repaired. The hon. Lady Member was graphically describing how there were pot holes in the boats and how some could not move in the sea. I am giving a concrete suggestion. Boat should be supplied strictly on the basis of priority instead of lots. Otherwise, a man who sincerely believes in this and who is interested may not get it. A lot may fall to someone and he may sell it to somebody else, exploiting his chance.

Interest free loans should be given. I also say that there should be an 'incentive scheme' for prompt repayment of loan. Hon. Minister may ask whether they are going to repay. But for those who repay promptly, let them be given some incentive. Let us have an 'incentive scheme'. If this is adopted, you can expect better repayment.

Mooring charges of Rs. 100 should be abolished. Government should take note of this. The Indian Oil Corporation is going to purchase large tract of land and I think about 3000 fishermen would be rendered homeless. What are the alternative arrangements for these men? What is going to be their fate? I would request the Hon. Minister to see that something is done. Either the land should not be occupied by Indian Oil Company or if they are allowed to occupy it, the fishermen should be given alternative accommodation. A welfare scheme of the department may be opened to improve the social life of the fishermen. Government should launch upon a technical scheme to train mechanics to repair boats. In one family, the father may be involved in fishing and the son if he is given training in repair of boats, it would be a very good thing for that fisherman's family. That is a useful suggestion I am making. In this training course, fishermen's families should be given preference.





Finally one thing and I shall finish. During May 1971, a social boycott was organised and there were two groups. One Kerala boat also came here. Finally some persons claimed themselves as self-styled Panchayat members and Panchayat Presidents. The whole thing was organised. I do not know whether they were real Panchayat Board members. Fine was levied. I would request the Hon. Minister with her dexterity and skill, to bring the two warring groups together and find a peaceful solution to the problem in that area. Thank you.

* திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரு கருத்துக்களை வழங்க முற்படுகிறேன்.

முதலிலே, இந்த இலாகாவானது காங்கிரஸ்காரர்களால் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லையெனவும் இன்று ஆட்சியிலிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம்தான் நல்ல முயற்சிகளை எடுத்துக்கொண்டு, நல்ல தீவிரம் நல்கியிருக்கிறதெனவும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். இங்கு "பெர்ஃபாமன்ஸ் பட்ஜெட்" என்று தந்திருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற ஒரு சில கருத்துக்களை மட்டும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மீன் உற்பத்தித் துறையில் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்பதைப் பார்ப்போம். மீன் உற்பத்தி 1951லே 44 லட்சம் டன்னாக இருந்தது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அது இப்போது, அதாவது 1969-ல், 2 லட்சம் அதிகப்பட்டதாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலமாகப் பல திட்டங்களைப் போட்டும் இவ்வளவு முன்னேற்றம்தான் ஏற்பட்டிருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மீன் நல்ல சத்துள்ள உணவு என்றும், நல்ல போஷாக்கு உள்ள உணவு என்றும், உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்குத் துணைபுரியக் கூடியது என்றும் டாக்டர் அவர்கள் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உணவுப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், இந்தத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, மீனைப் பயன் படுத்தி, நாட்டிலே இருக்கிற உணவுப் பஞ்சத்தைத் தடுக்க முடியும். மேலும் வெளிநாடுகளுக்கு "பிரான்" போன்ற மீன்களை ஏற்றுமதி செய்வதன்மூலம் அந்நியச் செலாவணி கிடைக்க வழி செய்ய வேண்டும்.

கேரளாவிலே "இந்தோ–நார்வே ஸ்கீம்" என்ற முறை சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நீண்டதூர கடற்கரையுள்ள நாம் நல்ல பல சிறப்பு அம்சங்கள் கொண்ட திட்டங்களைப்போட்டு, மீன் உற்பத்தியை அதிகப்படுத்த வழிவகை செய்ய வேண்டும். குறிப்பாக நல்ல பல காரியங்களைச் செய்வதற்குத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்,

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 23

நாம் இன்றைக்கு நல்ல திட்டங்களைத் தீட்டினாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவது கடினமாக இருக்கிறது. "ஃபிஷ்ஷிங் ஹார்பர்" ஏற்படுத்தப்பட வேண்டும். தூத்துக்குடியிலே மீன் பிடித் துறைமுகமாக ஆக்குவது மத்திய அரசாங்கத்தின் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய வேலை ஆமை வேகமாகத் தான் இருக்கிறது. விரைவிலே கிடைக்கும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் இதுகாறும் காணவில்லை. ஆகவே, இந்த அரசாங்கமே அதை எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் திட்டங்களைத் தீட்டுவது மட்டும் போதாது. காரியங்கள் விரைவாக நடக்க வேண்டும். அதற்கான துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இராமேஸ்வரம், கடலூர், மண்டபம் போன்ற இடங்களில் துறைமுகங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். இராமேஸ்வரம், மண்டபம் போன்ற இடங்களில் துறைமுகங்கள் அமைப்பதற்கான பணிகள் இதுவரையில் நடக்கவில்லை. இவற்றை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாகப்பட்டினத்தில் "ஷிப் வே" போட இருக்கிறார்கள். தாராளமாக மீன் பிடிப்பதற்கும், மார்க்கெட்டிலே கொண்டுபோய் விற்பனை செய்வதற்கும், எல்லாவிதமான வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தால் அதைத் துரிதமாகச் செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பல பகுதிகளில் துறைமுகங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கடலோரத்திலே இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று குளச்சல்; இன்னொன்று, கன்னியாகுமரிக்கு அருகில் ஒரு பழைய துறைமுகம் இருக்கிறது. அதைச் சீர்திருத்தம் செய்தால் சிறப்பாக இருக்கும். இது மிகவும் பொருத்தமானது என்று ஆராய்ச்சியாளர்களால் பலமுறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், "ஃபிஷ்ஷிங் யார்ட்" அதாவது மீன் மடை அந்தப் பகுதியில் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது. அதையும் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

குளச்சலிலே கடல் பாலம் கட்டுவதற்குத் திட்டம் ஒன்று இருப்பதாக அறிகிறேன். இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அடுத்து, முத்துக்குளிப்பு பற்றியும், சங்கு குளிப்பு பற்றியும் ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முத்துக்குளிப்பு மிகவும் சிரமமானது. இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் அதிகமான அளவில் முத்துக்குளிப்பு நடக்கிறது. காலாகாலங்களில் முத்துக்குளிப்பு நடைபெறுகிறது. அது செவ்வனே நடப்பதற்குப் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்குப் போதிய கூலி கிடைக்கவில்லை. மேலும் இதை கான்ட்ராக்ட் முறையில் விடுகிறார்கள் என்று அவர்கள் குறைகள் சொல்கிறார்கள். அதில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி நடத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அடுத்தபடியாக, சங்குகளையெல்லாம் வங்காள வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்கிறார்கள். வளையல் போன்றவை செய்வதற்கு இது மூலப் பொருளாக இருக்கிறது. இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு நமது மாநிலத்திலுள்ள வியாபாரிகளை அணுகி, அவர்களை இதில் ஈடுபடச் செய்வது நல்ல பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, "போட்"களைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விழைகிறேன். "யான்மார்" இன்ஜின்களைத்தான் அதிகமாக விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கொடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும். என்னுடைய தொகுதியில் கடற்கரையொட்டிய பகுதி இருப்பதால் "யான்மார்" இன்ஜின் கொடுக்க வேண்டுமென்று அடிக்கடி கூறுகிறார்கள். இப்பொழுது மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசாங்கம் பெற்றுக் கொண்டிருக்கின்ற போட்கள் எல்லாம் நல்ல முறையிலே இயங்கவில்லை. அதனால் நமது கடற்கரையை பொறுத்தவரையில் அவற்றை ஓட்டிச் செல்வதில் கஷ்டங்கள் இருக்கின்றன, சிரமங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆதலால் யான்மார் இன்ஜின் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது எல்லாம் "லாட்" அதாவது சீட்டுக்குலுக்கிப் போட்டு "போட்டு"களை வழங்குகிறார்கள். அது முறையானதல்ல. "பிரையாரிடி லிஸ்ட்" ஒன்று வைத்துக்கொள்ள வேண்டும். வேண்டுமானால் ஜில்லா அடிப்படையிலே அந்த பிரையாரிடி லிஸ்டைத் தயாரிப்பதிலே ஆட்சேபணை இல்லை.

இப்பொழுது விநியோகம் செய்யப்படுகின்ற போட்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. இந்த மன்றத்திலே 12—7—1971 அன்று ஒரு விடையை இங்கே கொடுத்திருக்கிறார்கள், அதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். கேள்வி எண் 451. "மெயின் ஆன்சரிலே" சென்னையிலே 25 படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன, செங்கற்பட்டில் 1 போட் வழங்கப்பட்டிருக்கின்றது, தென் ஆற்காட்டில் 3 போட்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன, இராமநாதபுரத்திலே 12 போட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன, தஞ்சாவூரிலே 4 போட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன, திருநெல்வேலியிலே 2 போட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன, கன்னியாகுமரியிலே 6 போட்கள் வழங்கப்பட்டிருக்கின்றன, என்று மொத்தமாக 53 போட்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன—1969–70 கால வரையிலும்—என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு கணிசமான முன்னேற்றம் என்று சொல்லமுடியாது. இந்தமாதிரியான காரியங்கள் எல்லாம் துரிதமாக நடக்கவேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 23

எண்ணற்ற மீனவர்கள் மனுக்கள் தாக்கல்செய்து காத்துக் கொண்டிருக்கிறார்கள், துரிதமாகச் செய்ய வேண்டும்; இல்லாவிட்டால் துரிதமாகச் செய்யவில்லையென்ற குற்றச்சாட்டுக்கு இந்த இலாகாவினர் ஆளாவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி பெரிய பெரிய காரியங்களைச் சாதித்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் twine nets and synthetic twine nets போன்றவைகளைப் பொறுத்தவரையில் இலக்காக 1970–71 ஆம் ஆண்டில் 15 ஆயிரம் கிலோ கிராம் என்று வைத்திருந்தும் 14 ஆயிரம் கிலோ கிராம் தான் கொடுத்திருக்கிறார்கள். இதிலே "ஷார்ட்ஃபால்" இருக்கிறது. 1969–70-இல் முழுமையாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டிலே அவ்வளவு ஏன் குறைந்தது என்பதை இந்த இலாகாவினரைக் கொண்டு ஆராய வேண்டும். இப்படிப்பட்ட முக்கியமான இலாகாக்களிலே "ஷார்ட்ஃபால்" ஏற்படக்கூடாது.

கருவிகள், வலைகள் போன்றவற்றைக் காலாகாலத்தில் கொடுப்பதுதான் சாலச் சிறந்தது ஆகும். தூத்துக்குடி தேனிங் யூனிட்டில் நஷ்டம் ஏற்படுகின்றது என்ற காரணத்தினால் தனியாருக்கு விடப்பட்டிருக்கிறது என்று இந்த மன்றத்திலே பல கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதை விசாரித்து லாபகரமாக இயங்குவதற்கு நாம் என்ன என்ன செய்ய வேண்டுமென்று பார்க்கவேண்டும்.

போட் கட்டுவதற்கு காப்பர் பிளேட்ஸ் தேவைப்படுகின்றன. மரங்கள் தாராளமாகக் கிடைக்கக்கூடிய பகுதியாக அந்தப் பகுதி இருக்கவேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அதோடு அலுமினிய ஷீட்டுகளினாலே போட்கள் கட்டமுடியுமா என்று பார்க்க வேண்டும். காப்பர் பிளேட்ஸ் மூலம் செய்வதால் கடல் நீராலே துருப் பிடிக்காமலும் கெட்டுப்போகாமலும் எப்படி பாதுகாக்கப்படுகின்றதோ, அதைப்போன்று அலுமினியத்தை புராஸஸ் செய்வதின் மூலம் அதைச் செய்யமுடியுமா என்பதையும் இந்த இலாகா ஆராய வேண்டும்.

காப்பர் பிளேட்ஸ் வெளியிலே அதிகமான விலைக்குக் கிடைக்கக்கூடிய நிலைமையில் கிராக்கியாக இருக்கிறது என்றெல்லாம் பலர் குற்றங்கள் எல்லாம் சொன்னார்கள். நான் மறுமுறையும் அவற்றை எடுத்துக்கூற விரும்பவில்லை. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு யார் பொறுப்பாளிகள் என்பதைப் பார்க்க வேண்டும் Responsibility should be fixed என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, "இன்லேண்ட் பிஷரிஸ்" பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கூறவிரும்புகிறேன். பெரிய பெரிய அணைக்கட்டுகள் இருக்கின்றன, ஏரிகள் இருக்கின்றன, குளங்கள் இருக்கின்றன. அரசாங்கத்தின் கையில் ஒரு திட்டம் இருக்கிறது. ஆங்காங்கு மீன்குஞ்சுகளை விடுவதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் ஏற்பாடு செய்ய ஆய்வு செய்து இருக்கிறார்கள். நீலகிரியிலே நீர்த்தேக்கங்களிலே என்ன என்ன மீன்குஞ்சுகளை விடவேண்டும், எப்படிப் பராமரிக்கவேண்டுமென்ற முறையெல்லாம் இருக்கிறது. பொதுவாக நல்ல உற்பத்தியாகக்கூடியதும், தாராளமாக வருவாய் வரக்கூடியதுமான மீன்குஞ்சுகளை விடுவதுதான் பொருத்தமாக இருக்கும். அவற்றை சரியான முறையிலே பராமரிப்புதந்து வழிவகை செய்யவேண்டும். அவற்றைப் பிடிப்பதற்கு குத்தகைக்கு விடுகிறார்கள், பல தகராறுகள் அதிலே ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட தகராறுகளைத் தவிர்க்கக்கூடிய முறையிலே விதிமுறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு இது ஒரு வருவாயாக இருக்கிறது. அவர்களுடைய நிர்வாகத்திலே விட்டுவிடுவதுதான் பொருத்தமாக இருக்கும். சிறு சிறு ஏரி, சிறு சிறு குளங்கள் விஷயத்தில் இப்பொழுதும் அப்படித்தான் செய்து கொண்டுவருகிறார்கள். சரியான முறையிலே இயங்க ஒரு லாபகரமான முறையிலே நடப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.



1971 ஜூலை 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கடலரிப்பினால் அதிகமான அளவுக்கு மீனவர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடலோரத்திலே அவர்களுடைய குடிசைகள் இருப்பதாலே அடிக்கடி கடல் கோந்தளிப்பு ஏற்படுகின்ற நேரத்திலே இராமேஸ்வரத்திலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், குளச்சல் பகுதியிலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் அதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமேஸ்வரத்தைப் பொறுத்தவரையிலே ஒரு தடுப்புச் சுவர் கட்டவேண்டும் என்று பலரும் சொன்னார்கள். அதற்குத் திட்டவட்டமான குறிப்பு இருக்கிறதா, வரைபடம் தயாராகிவிட்டதா, பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கங்கள் கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடல் பொருள்களிலே பண்டங்கள் செய்யலாம் என்று கூறியிருக்கிறார்கள். கடல் பாசியிலே என்ன என்னவெல்லாமோ அல்வா போன்றவை செய்யலாம் என்று ஆலோசனை கூறினார்கள். அந்த மாதிரியான திட்டங்கள் உருவாகியிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கக் கடலோரப் பகுதிகளிலே, அவர்கள் வாழுகின்ற பகுதிகள் நெரிசலாக இருக்கின்ற பகுதிகளிலே, ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்கள் சுகாதார வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் வசதியுடன் இருக்கிறார்கள்—எனக்குத் தெரியும். ஆனால், பெரும்பாலோர்கள் ஏழை எளியமக்களாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டியிருந்தது. இன்னும் பலர் வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் உடனடியாக வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 23

அடுத்தபடியாக, இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் அவர்களுக்குக் கட்டாயமாக்கவேண்டும். இப்பொழுது உயிரிழந்தவர்களுக்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படவேண்டுமென்று இருக்கிறது; அது போதாது. கூட்டுறவுத் துறையின்மூலமாகவாவது இன்ஷூர் செய்துகொள்ளக்கூடிய நிலைமையில் அரசாங்கம் ஒரு சிறு பங்கும் மற்றவர்கள் ஒரு பங்கும் போட்டுக்கொள்கின்ற முறையிலே முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறுவதற்கு வழியேற்படும்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் சில கிராமங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பம்புசெட்டுகள் பழுதடைந்திருக்கின்றன. அவற்றை உடனுக்குடன் ரிப்பேர் செய்யமுடியாத நிலைமையில் எப்படி போர்ட் ரிப்பேர் செய்யமுடியாத நிலைமை இருக்கிறதோ, அதற்காக குவாலிபைட் டெக்னீஷியன்ஸ், ஸ்கில்டு ஒர்க்கர்ஸ் இல்லையோ அதைப்போன்றுதான் இருக்கிறது இதிலும். எனவே இரண்டையும் ஒருங்கிணைத்து பம்புசெட்டுகள் ரிப்பேர் செய்வதற்காகவும் பழுதடைந்த போட்களை ரிப்பேர் செய்வதற்காகவும் என்று மீனவர்கள் வாழுகின்ற பகுதிகளிலே ஒர்க்ஷாப் ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக மீன் உற்பத்தியிலே இன்னும் அதிகமான அக்கறையும் தீவிரமும் காட்டவேண்டும். இப்பொழுது சென்றுகொண்டிருக்கின்ற வேகம்போதாது.

ரிசர்ச்சுக்காக மண்டபத்திலிருக்கின்ற யூனிட்டைக் கேரளத்திற்கு மாற்றப்போவதாக அமைச்சர் அவர்கள் முன்பு ஒரு முறை கூறினார்கள். நமது அரசாங்கம் வேண்டிய புரொடெஸ்ட்டுகளை அனுப்பியிருந்தும், மத்திய சர்க்கார் மாற்றியிருக்கிறது என்ற கருத்தைக் கூறினார்கள். கேரளாவில் இருப்பதைப்போல் இங்கும் பல முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். அதாவது இன்றையதினம் ரோடு வசதியில்லாத பல கடலோரக் கிராமங்கள் இருக்கின்றன, அவற்றுக்கு இணைப்புச் சாலைகளை அமைக்க வேண்டும்.

மீன்களைப் பாதுகாக்க குளிர்சாதனங்களை (ஃப்ரீஸிங் ப்ளாண்ட்) ஆங்காங்கே அமைத்து அதற்கு வேண்டிய ஒழுங்கான முறையிலே லாபகரமாக வேலை செய்தால் சிறப்பாக இருக்கும். இப்பொழுது மீன்கள் சீஸனலாகக் கிடைக்கின்றன. கிடைக்ககின்ற அந்தக் காலங்களிலே உலர்த்தி வைக்கப்போதிய வழிவகைகளில்லாத காரணத்தினால் கெட்டுவிடுவதைப் பார்க்கிறோம்.

ஃபிஷ்மீல் இலாபகரமாக நடக்கவில்லை என்பதைப் பார்க்கிறோம். எனவே இம்மாதிரி நல்ல இலாக்காவில் இன்னும் அதிகப்படியாக அக்கறை காட்டவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த இலாகா தீவிரக் கவனம் செலுத்தி ஏழை எளிய மீனவர்களுக்கு அதிலும் குறிப்பாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உள்ள துயரைத் துடைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1971 ஜூலை 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

என்னுடைய பகுதியில் கடலரிப்பினாலே பாதிக்கப்படுகிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தோம். தடுப்புச்சுவர் அந்தப் பகுதியில் இடிந்துபோய்விட்டது, அதன் அருகே தடுப்புச்சுவர் கட்ட வழிவகை செய்திருக்கிறார்கள். அதைக் காலாகாலத்தில் சரியாகப் பராமரித்தால் இயற்கையோடு போராடும் ஏழை எளியவர்களின் வாழ்க்கை மலரும் என்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

* மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று அவைமுன் விவாதிக்கப் பட்டுள்ள மீனள மானியக் கோரிக்கையின்மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் ஆரம்பத்தில் கொடுத்துள்ள இந்தக் கொள்கை விளக்க உரையில் கூடுமானவரையில் நல்ல கருத்துக்களைக் கொடுத்திருக்கிறேன் என்றும், அதை அவர்கள் ஆழ்ந்து கவனித்திருப்பார்கள் என்றும் நான் கருதினேன். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தத் துறையில் எந்த அளவிற்குப் பாராட்டத்தக்க நல்ல திட்டங்களையெல்லாம் உருவாக்கி வருகிறது, செய்துகொண்டு வருகிறது என்பதற்கு இந்தச் சிறிய உரையும், அதிலும் குறிப்பாக மீனவச் சமுதாய மக்களும் அவர்கள் பெற்றிருக்கும் நல்ல புனர் வாழ்வுமே அத்தாட்சி ஆகும். இருந்தாலும், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஆளுகின்ற கட்சியினர் கொண்டுவருகின்றவற்றிற்கெல்லாம் எதிர்ப்பு கூற வேண்டுமென்ற எண்ணத்தினாலே சிலவற்றைக் கூறியிருக்கிறார்கள் என்பதையும், அதையும் மிகைப்படுத்திக் கூறியிருக்கிறார்கள் என்பதையும், மிகைப்படுத்தித்தான் சொல்லப்பட்டது என்ற உண்மையையும் ஒப்புக்கொண்டு இங்கே பேசியதை அனைவரும் நிச்சயமாக அறிவார்கள்.

இந்த உரையில் ஃபெரோ சிமெண்ட் படகுகள் கட்டும் திட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள் என்றே நம்புகிறேன். நிறையப் படகுகளை ஏன் கட்டவில்லை, இவ்வளவுதானா இத்தனை ஆண்டுக்காலத்தில், என்று எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் அரசாங்கம் துறையின் மூலமாக சிலவற்றைக் கட்டுகிறது. அரசாங்கம் கட்டுவது, அதிகப் படியான படகுகளைக் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்ற காரணத்தினாலே தனியார் துறையின்மூலம் படகுகளைக் கட்டிக் கொண்டு வருகிறோம். ஒவ்வொரு படகும் அதிகமாக விலையாகின்ற காரணத்தினால், அதிகம் பேருக்குப் படகு கொடுக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, கொஞ்சம் விலை மலிந்த படகாக, ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் கூறியதைப்போல் ஓட்டை விழ முடியாத அளவிற்குப் படகுகள் இருக்க வேண்டுமென்று, சிமெண்டிலே கட்டலாம் என்ற புதிய திட்டத்தை அரசு துவங்கியிருக்கிறது. அதை அனைவரும் கவனித்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஓட்டை விழுவதைப்பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதேநேரத்தில் ஆள் நுழைகின்ற அளவிற்கு இருக்கிறது என்று அதிகப்படுத்திச் சொன்னதாக அவர்களே ஒத்துக்கொண்டார்

[டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து] [1971 சூலை 23

கள். எனவே பேசுவதில் அதிகப்படுத்திப் பேசுவதிலுலேயே அத்தனையும் குற்றம் என்று நாங்கள் எடுத்துக்கொள்ள மாட்டோம். குறைபாடுகள் இருக்கவே இருக்காது என்று நான் அடித்துப் பேச முன்வரவில்லை. குறைபாடுகள் இருக்கலாம்; ஆனுல் குறைபாடுகள் இருப்பதனுல் மீனவ மக்களது வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்பட்டிருக் கிறதா, அல்லது இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தில் ஏதாவது ஏமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா, இந்தத் திட்டங்கள் செயல் படுத்தப்படவில்லையா, அதிலே முன்னேற்றம் காணவில்லையா என்பதைத்தான் நாம் உண்மையிலேயே எண்ணிப் பார்க்க வேண்டும். எத்தனையோ ஆண்டுக்காலமாக ஆழ்கடலிலே மீன் பிடிக்கின்ற அந்த எண்ணத்தை எடுத்துச்சொல்லி, அது பலமுறை இந்த மன்றத்திலே வற்புறுத்தப்பட்டு, ஆனுல் இப்பொழுதுதான் 4 ஸ்டீல் டிராலர்ஸ் கட்டுவதற்காக ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. ஆனுல் அவைகள்கூட ஆழ்கடலில் எந்தெந்த இடங் களில் மீனைப் பிடிக்கலாம் என்பதைக் கணக்கிடத்தான் வருகின்றன.

எப்பொழுது கணக்கு எடுப்பது, எப்பொழுது பிடித்துக் கொடுப்பது, எப்பொழுது நாங்கள் அந்த மீனைச் சுவைத்து, உடலுக்கு ஏற்ற நல்ல சக்தியைக் கொடுக்கிறதா என்பதையெல்லாம் பார்ப்பது, என்றெல்லாம் கற்றறிந்த டாக்டரவர்கள் சொன்னுர்கள். ஆனுல் இதற்காகத் தாமதம் ஏற்படுகிறது என்ருல், அதற்கு நமது மாநில அரசு பொறுப்பாக இருக்க முடியாது. விலைமதிக்கத்தக்க இந்த இழுபறி படகுகள் கல்கத்தாவிலே கட்டப்பட்டு இங்கே அளிக்கப்படுகின்றன மத்திய சர்க்காரின் துணையாக. மத்திய அரசு அவ்வப்பொழுது இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து அவைகளை நமக்கு விரைவில் கட்டிக்கொடுக்குமாறு பணித்திருந் தால் அந்தப் படகுகள் எப்பொழுதோ இங்கே வந்து, எப் பொழுதோ வேலை துவங்கியிருக்கலாம். ஆனுல் அவர்கள் காட்டு கின்ற தாமதம், மதமதப்பிலே அந்தப் படகுகள் மிதந்து கொண் டிருக்கின்றன. எனவே வரவில்லை, விரைவிலே வந்து சேரும் என்று நம்புகிருேம்.

எனவே ஆழ்கடலிலே மீன்பிடிக்கும் அந்த நல்ல திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக நாம் இப்பொழுது வைத்திருக்கின்ற லாஞ்ச் மூலம், கூடுமானவரையில் 50, 60 கட்டு மரங்களைக்கூட லாஞ்சில் செல்லும்பொழுது எடுத்துச்சென்று 2, 3 தினங்கள் அந்த லாஞ்சிலேயே இருந்து ஆழ்கடலுக்குச் சென்று மீனைப் பிடித்து, அங்கேயே பதப்படுத்தி, கடலோரத்திற்குக் கொண்டு வருவதற்குச் சிறிய முறையில் இப்பொழுது இந்தத் துறை ஈடுபட் டிருக்கிறது. அந்த அளவிலேதான் நம்மால் செய்ய முடிகிறது.

இன்னென்றையும் எண்ணிப்பார்க்க வேண்டும், இங்கே யாரோ சொன்னுர்கள் என்று கருதுகிறேன், இரால் அதிகமாகக் கிடைக்க வில்லை என்று மத்திய அரசை மாநில அரசு எத்தனையோமுறை கேட்டுக் கொண்ட பிறகும், ஆழ்கடலிலே எந்தெந்த இடத்திலே மீன் செல்வங்கள், கடல் செல்வங்கள் இருக்கின்றன என்ற சர்வேயை இன்னமும் அவர்கள் எடுத்துத்தரவில்லை. நம்மால் முடிந்தவரை



1971 சூலை 23] [டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து]

ஓரளவிற்கு மாநில அரசுக்கு இருக்கின்ற வசதிகளை வைத்துக் கொண்டு சில இடங்களிலே, எந்தெந்த இடத்தில் இரால் கிடைக்கும், எந்தெந்த இடத்திலே மீன் கிடைக்கும் என்றெல்லாம் தெரிந்து கொள்கிற அளவில் இப்பொழுது நடக்கிறதே தவிர, பலமுறை மத்திய சர்க்காரைக் கேட்டும் ஆழ்கடலில் இரால்கள் எங்கே அதிக மாகக் கிடைக்கின்றன என்ற சர்வே நமக்கு அவர்களால் செய்து தரப்படவில்லை. எனவே, அது ஆழ்கடலிலே எங்கே அதிகமாகக் கிடைக்கும் என்று சொல்ல முடியவில்லை. ஆனுலும் சிறிய முயற்சி யின் மூலமாகக் கூடுமானவரையில் 25 அடி ஆழம் அல்லது 50 அடி, 100 அடி என்ற அளவில் செல்லும் அளவிலே இன்றைக்குச் செல்ல முடிகிறது. இரால்தான் பணத்தைச் சேமித்துக் கொடுப்பது என்று கருதி மீனவர்களும் அந்த வழியிலே அதிகமாக ஆசை காட்டு கிருர்கள்.

இதிலே இன்னென்று, கேரளாவைப்போல் அதிகப்படியான முன்னேற்றத்தைக் காண வேண்டுமென்று விரும்புகிருர்கள். அந்த ஆசை எனக்கும்கூட உண்டு. ஆனுல் நான் கேட்டுத் தெரிந்து கொண்டவரையில், எனக்குத் தெரிந்தவரையில், கேரளாவிலுள்ள வர்களைப்போல் இங்கேயிருக்கின்ற மீனவர்கள் ஒரு வாரமோ அல்லது ஒரு மாதமோ ஆழ் கடலுக்கு அப்பால் சென்று காத் திருந்து மீன்களை எடுத்துக்கொண்டு வருகிற அளவிற்குப் பழக்கப் படவில்லை. அந்தப் பயிற்சியை நாம் தர வேண்டும். இங்கேயிருக்கும் மீனவர்கள் காலையிலே சென்று மாலையிலே திரும்பி விடுகிருர்கள். நிறைய இரால்களைப் பிடிக்க முடியவில்லை. அந்தப் பயிற்சியைக் கொடுக்கின்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. எனவே எந்த அளவிலே வேகமாக முன்னேற்றத்தைக் காண முடியுமோ அதைக் காண்பதற்கு இந்த அரசு துடிப்பாக இருக்கிறது.

அடுத்து, குத்தகைக்கு விடுவது பற்றியது. ஊராட்சி மன்றங்கள் குத்தகை கொடுப்பதால் பெரும்பாலும் உள்நாட்டு மீனவ மக்களுக்கு அவர்களால் தரப்படவில்லை, அவர்கள் வஞ்சிக்கப் பட்டார்கள். ஊராட்சி மன்றப் பொறுப்பிலேயிருப்பவர்கள் இந்த மீனவர்களுக்கு அந்தக் குத்தகையைக் கொடுக்காமல் யார் யாருக்கோ கொடுத்தார்கள். உள்நாட்டிலே இப்படிப்பட்ட ஏரி குளங்களில் எப்பொழுதுமே மீன்களைப் பார்க்க முடியாது.

மழை பெய்தால்தான் குளம் நிறையும், குளம் நிறைந்தால்தான் மீன் கிடைக்கும். அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு கட்டாயமாக மீனவ சமுதாய மக்களுக்குத்தான் அந்தக் குத்தகைகளைக் கொடுக்க வேண்டும், வேறு சமுதாய மக்களுக்குத் தரக்கூடாது என்று இந்த அரசு வந்த பிறகுதான் முடிவு எடுத்து அவர்கள் வாழ்விலே வளம் பெறச் செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கள் பராமரிக்கக்கூடிய குளம் குட்டைகளுக் கெல்லாம் நான்கு லட்சம் ரூபாய் இந்த ஆண்டு அரசு ஒதுக்கி யிருப்பதன்மூலம் அப்படிப்பட்ட குட்டைகளில்கூட அதிகப்படியான மீன்கள் அதிகப்படியாக உற்பத்தியாக வேண்டுமென்ற நோக்கத்தில்

தான். மீன் பண்ணை வைத்திருப்பதில் அதிகப்படியான மீன்கள் உற்பத்தியாவதில்லை என்று ஒரு உறுப்பினர் கூறினர். சிறிய சிமெண்ட் தொட்டிகளாகக் கட்டிவிடப்படுகிற காரணத்தால் மீன் குஞ்சுகள் உலர்ந்து போகின்றன என்றார்கள். மீன்குஞ்சுகள் உலர்ந்து போகும் அளவுக்கு அது அமைக்கப்படவில்லை. கற்றறிந்தவர்கள்தான் தொட்டிகளைக் கட்டுகிறார்கள். எங்காவது சில குறைகள் ஏற்பட்டிருக்கலாம். அதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம்.

மீன் இனங்களை அதிகப்படியாக ஆக்க வேண்டுமென்பதற்காகத் நான் 1970-71-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஆண்டு ஒன்றுக்கு 1,200 லட்சம் அளவுக்கு மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்குப் போதிய முறையினை இன்றைக்கு அரசாங்கம் எடுத்திருக்கிறது. இன்ட்யூஸ்டு கார்ப் ஸ்பானிங் சென்ட்டர்ஸ் Carp Spawning Centres.) என்று ஏற்படுத்தி மீன்குஞ்சுகளை அதிகரிக்கக்கூடிய அளவில் செயற்கைமுறை மூலமாக இஞ்செக்ஷன் செய்து அதிக முட்டைகள்கொண்ட இனங்களாக்கி குஞ்சுகள் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்காக ஏற்பாடுகள் செய்திருப்பது புதிய ஒரு முறையாகும்.

இதில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்லாமல், இதிலே அதிகப்படியான அக்கறை கொண்டவர்களும் மூலதனமிட்டு இதை மேம்பாடு செய்வதை ஊக்குவிக்கும் வகையிலே அரசாங்கம் நல்ல முடிவை எடுத்திருக்கிறது. அதை அனைவரும் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட 100 விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 20 சதவிகிதம் அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்கள் கொடுத்தால் 20 சதவிகிதம் அரசாங்கம் கொடுத்து 60 சதவிகிதத்தினை வங்கிகள் மூலமாகப் பெற்றுத் தந்து, அவர்கள் இந்தத் தொழிலில் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்ற முறையிலும், இந்தத் தொழில் மேம்பாடு அடைய வேண்டுமென்ற எண்ணத்திலும் அரசு புதிய திட்டத்தை ஏற்றிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மணலி கந்தசாமி அவர்கள், கூட்டுறவுத் துறை நேரடியாக இந்தத் தொழிலுக்கு உதவி செய்யவில்லை என்றார்கள். நேரடியாகச் செய்யாவிட்டாலும் வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் மூலமாக ஏறத்தாழ 78.70 லட்ச ரூபாய் அளவுக்கு நிதி உதவி பெற்று இந்தத் தொழில் மேம்பாடு அடைய அரசு வழிவகை செய்திருக்கிறது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம் அடுத்த ஆண்டோ, அதற்கடுத்த ஆண்டோ நிறைவேற இருக்கிறது. தூத்துக்குடிப் பகுதியில் நிறைய படகுகள் இல்லை. அங்கிருக்கும் மீனவர்கள் வேறுபல இடங்களுக்குச் சென்று மீன்பிடிக்க அக்கறை காட்டுகிறார்கள். நிறைய படகுகள் கொடுக்க வேண்டுமென்பதற்காக, திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்பிடி திட்டத்தை மேம்பாடு அடையச் செய்ய அதிக நிதி உதவி செய்ய அரசு முன்வந்திருக்கிறது.



சங்கு குளிக்கும் தொழிலில் எவ்வளவு இடையூறுகள், சங்கடங்கள் தகராறுகள் ஏற்பட்டு வந்தன என்பது அனைவருக்கும் தெரியும். இன்று சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கே குத்தகையைத் தர வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்து கொடுத்ததன்மூலம் அவர்கள் இன்றையதினம் அந்தக் குத்தகையை எடுத்திருக்கிறார்கள். கூட்டுறவு மூலமாக எடுத்து அவர்களை மேம்பாடு அடையச் செய்வது குறித்தும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இவை எல்லாம் விளக்கமாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கின்றன.

சிலர் எதையாவது சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லியிருக்கலாம். பொதுவாக இந்தத் திட்டத்தின் மூலமாக நமது தமிழகம் அடைந்திருக்கும் மேம்பாட்டை எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அம்மையார் அவர்கள் ஏழாண்டுக் காலத்தில் கட்ட வேண்டுமென்றிருப்பதைப் பத்தாண்டுகள் என்று ஆக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். வட்டி இல்லாத முறையில் கடன் தரவேண்டுமென்று சொன்னார்கள். எவ்வளவோ முயற்சிகளை அரசாங்கம் எடுக்கிறது. வட்டி இல்லாத கடன்களைக் கூட அவர்களுக்குக் கொடுக்கிறது. இந்த மீனவ சமுதாயத்திற்கு என்று தனியாக அல்லாமல் நான் பொறுப்பேற்றிருக்கும் அரிசன இலாகா மூலமாகக் கூட ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று எவ்வளவோ கடன் வசதிகளைச் செய்து தருகிறோம். அரசாங்கத்திலிருந்து கடன்களைப் பெறுகிறவர்கள் திருப்பி அந்தக் கடன்களைத் தர வேண்டுமென்ற எண்ணம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கடன் வாங்கும்போது இருக்கும் வேகமும், அக்கறையும் கடனைத் திருப்பித் தருவதில் இருப்பது கிடையாது. அந்தக் கடனை எப்படியாவது ரத்து செய்து விட மாட்டார்களா என்பதிலேயே நாட்டம் செலுத்துகிறார்கள். அதற்காக எதிர்க்கட்சி உறுப்பினர்களை எல்லாம் அழைத்து வந்து வக்காலத்து வாங்கச் சொல்லிப் பேசி இருக்கிறார்கள். அவர்களுடைய நல்வாழ்வுக்காகக் கடன்களைக் கொடுக்கும்போது அதைத் திருப்பிக் கொடுப்பதும் அவர்கள் கடமையாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்...

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நாங்கள் யாரும் வக்காலத்து வாங்கவில்லை. எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் வக்காலத்து வாங்கியதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்த மாதிரி யாராவது சொல்லி இருந்தால் வெளிப்படையாகச் சொல்லட்டும். மறைமுகமாகச் சொல்வது பொருத்தமல்ல, நியாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வக்காலத்து என்பது மோசமான வார்த்தையல்ல. வழக்கறிஞர்கள் அதைப் பற்றித் தவறாக எண்ண வேண்டியதில்லை.

விசாரித்தது. அதைப்பற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறது. போலீசார் விசாரணை செய்கிறார்கள். குற்றம் யாருடையது என்று பிறகு கூறுகிறேன் என்று கூறி, இத்துடன் அதை விட்டுவிடுகிறேன்.

படகு கொடுப்பதில் "லாட் சிஸ்டம்" பற்றிச் சொன்னார்கள். குலுக்கல் முறை கூடாது, பிரயாரிடி முறை கொடுக்கவேண்டு மென்று சொன்னார்கள். இந்த முறை முன்னாலே இருந்த முறை தான். அப்போது என்ன சொன்னார்கள்? பிரயாரிடி மூலமாகக் கொடுப்பதால் ஆளும்கட்சியைச் சார்ந்தவர்களுக்குக் கொடுக் கிறார்கள் என்ற குற்றச்சாட்டை எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னார் கள். 1969-70-ல் 53 படகுகள் கொடுக்கப்பட்டன என்று சொன் னார்கள். அதற்குக் கூட காரணம் 1967-68-ல் பிரயாரிடி மூலமாகக் கொடுக்கப்பட்டு வந்ததுதான். உரியவர்களுக்குப் படகு போய்ச் சேரவில்லை என்று புகார்களும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். இந்தக் குறையைப் போக்குவதற்காக இன்று அனைவருக்கும் படகு கொடுக்க வேண்டும், படகு கிடைக்காதவர்களுக்குப் படகு கொடுக்கவேண்டும், படகு பெற்றவர்களே இரண்டாவது முறை யாக ஏமாற்றிப் பெற்றுவிடக்கூடாது என்பதற்குச் சரியான முறை யாக இருக்கவேண்டும், பயிற்சி பெற்றவர்கள்தான் படகு பெற வேண்டும் என்ற அடிப்படையில்தான் இவற்றைச் சரியான முறையில் கண்காணித்து, அதற்கான வசதிகளைச் செய்து ஒவ்வொரு இடத் திற்கும் 25 சதவிகிதம் என்று போட்டு, குலுக்குச் சீட்டு மூலமாகப் படகுகளைக் கொடுத்து வருகிறோம். இதனால் யாருக்கும் குறை இருக்கவில்லை. தவறாக நடக்கிறது என்று சொல்லிவிட முடியாது. பயிற்சி பெற்றவர்கள், பயிற்சி பெறாதவர்கள், ஏற்கெனவே பெற்றவர் களுக்குக் கொடுத்துவிட்டார்கள், வேண்டியவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்றெல்லாம் இந்த முறையில் சொல்ல முடியாது. இதுதான் சிறந்த முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மண்டபத்தில் இருக்கும் ரிசர்ச் சென்டர் முழுவதும் மாறவில்லை என்று பல முறை கூறியிருக்கிறேன். அங்கே இருக்கும் டைரக்டர், அவருக்கு உதவியாக இருக்கும் 4 எழுத்தர்கள்தான் போயிருக்கிறார்களே தவிர, ரிசர்ச் சென்டர் போகவில்லை. இது கூடச் செல்லக் கூடாது, அந்தத் தலைமை அதிகாரி இங்கே இருக்க வேண்டும் என்று பல முறை மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து இன்னும் அதற்கான பதில் வரவில்லை. நாம் எழுதிக்கொண்டே இருக்கிறோம், என்று நீங்கள் அடிக்கடி கேட்கிற போது நான் சொல்ல வேண்டியிருக்கிறது. கேட்காமல் இருந்தால் நான் சொல்ல மாட்டேன். எப்போது அவர்கள் முடிவு எடுக்கிறார் களோ அப்போது மாநில சர்க்காரும் அதுபற்றி ஒரு சரியான முடிவு எடுக்கும்.

யான்மார் இன்ஜின்களைப்பற்றிச் சொன்னார்கள். யான்மார் இன்ஜின்தான் வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த இன்ஜின் ஜப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இன்ஜின். இப்போது அதைத் தருவிக்கக் கூடாது என்று மத்திய அரசு சொல்லிய காரணத் தால் அந்த இன்ஜினை நம்முடைய தமிழகத்திலேயே கட்ட வேண்டு



மென்று மத்திய அரசை மாநில அரசு பல முறை கேட்டுக்கொண்டு இருக்கிறது. அதிலே இருக்கும் பல தகராறுகளை முன்னிட்டு எண்ணூரில் கட்டுவதற்கான திட்டம் இருந்தது கைவிடப்பட்டது. அதற்குரிய கம்பெனி இல்லாமல் இருந்தது. இப்போது கார்டன் ரீச் கம்பெனிக்காரர்கள் அந்த இன்ஜின் செய்யும் தொழிற்சாலையை எண்ணூரில் அமைப்பதற்கு முன்வந்திருக்கிறார்கள். அதற்காகப் பேச்சுவார்த்தை நடத்தும்பொருட்டு, அந்தத் துறைச் செயலாளர் அவர்களும் கல்கத்தா செல்ல இருக்கிறார்கள். அது எவ்வளவு விரை வாக அமைக்கப்படுமோ அந்த வகையில் யான்மார் இன்ஜின்களை தமிழ்நாட்டிலேயே தயாரித்துத் தரமுடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னும் அவர்களுக்கு வேண்டிய பல்வேறு திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். இன்சூரன்ஸ் திட்டம், வீடுகள் அதிகமாகக் கட்டித் தரவேண்டும், டெக்னிகல் குவாலிபிகேஷன் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அரசாங்கம் இவற்றை நல்ல முறையில் பரிசீலனை செய்து, அவர்கள் வாழ்வை வளப்படுத் தும் நல்ல திட்டங்களை நிறைவேற்றும் என்ற உறுதியை எடுத்துக் கூறி, இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிக்கு, கேட்டிருக்கும் தொகையை ஒதுக்கித் தரவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மான்யத்தின் மீது கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மானியத்தின் மீதான விவாதம் இத்துடன் முடிவுற்றது. மான்யக் கோரிக்கை எண் 17 மீது உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on the assurance given by the Hon. Minister that the instalments would be extended for a further period of time, I am not pressing my cut motion.

The cut motion of Thirumathi T. N. Anandanayaki was, by leave, withdrawn.

The cut motions of Thiru K. T. K. Thangamani, Dr. H. V. Hande and Thiru M. Surendren were, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,35,15,700 under Demand No. 17—Fisheries'.

The Demand was put and carried and the Grant was made.

(ஆ) கோரிக்கை எண் 21—சின்கோனா.

(இ) கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை.

(ஈ) கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு.

[1971 சூலை 23

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்

"கோரிக்கை எண் 21—சிங்கோனு என்ற தலைப்பின் கீழ் ரூ. 59,37,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள்.

THIRU J. JAMES: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 59,37,700 under Demand No. 21—Cinchona be reduced by Rs. 100'.

THIRU K. SUPPU: Sir.

சிங்கோனு தொழிலாளர்களின் குறைந்த சம்பளத்தை உயர்த்துவதுபற்றி விவாதிக்க—

I move—

"That the allotment of Rs. 59,37,700 under Demand No. 21—Cinchona be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன்: சார், சின்கோனு தோட்டங்களும், தொழிற்சாலைகளும், வேலை செய்யும் தொழிலாளர்களின் வசதிகளும், சம்பளங்களும் குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 21—சின்கோனு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 59,37,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற என் பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்

"கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை @ என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,20,90,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, கன்யாகுமரி மாவட்டம், அரசு ரப்பர் தோட்டத்தில் நிர்வாக சீர்திருத்தம் செய்ய வேண்டியதின் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 35—காட்டுவளத்துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,20,90,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான விவசாயத்திற்குத் தகுதியுள்ள நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—



1971 சூலை 23] [திரு. க. சுப்பு]

"கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,20,90,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—

"கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,41,74,800-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"
என்று கோருகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 1,41,74,800 under Demand No. 44—Capital Outlay on Forests be reduced by Rs. 100.'

THIRU K. T. K. THANGAMANI: Sir, to discuss about the necessity to plant more income-bearing trees like sandalwood, etc., I move—

"That the allotment of Rs. 1,41,74,800 under Demand No. 44—Capital Outlay on Forests be reduced by Rs. 100."

* திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வனத் துறை மானியத்தின் மீது பேசும்போது, சாகுபடிக்குத் தகுதியாக உள்ள காட்டு நிலங்களை நிலமில்லாதவர்களுக்கு வழங்குவது என்பதை எங்கள் கட்சி ஆதரிக்கிறது. சென்ற ஆண்டு ஜூலை 14-ம் தேதி இந்தியா பூராவிலும் பரவிக்கிடக்கும் இத்தகைய 9 கோடி ஏக்கர் நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காக எங்கள் கட்சி ஒரு போராட்டம் நடத்தியிருக்கிறது. அந்த அடிப்படையில் இப்பொழுது நிலம் வழங்க நமது அரசு முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

முன்பு ஜமீன் ஒழிப்பு வந்த காலத்தில், பல நிலங்களில் விவசாயிகள் உழுது கொண்டிருந்தாலும், ரிகார்டுகள் இல்லை என்பதால், பல விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கப்படாமல் வனத்துறையுடன் அவை இணைக்கப்பட்டுவிட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை ஜமீனில் கூட பரம்பரை விவசாயிகள் அப்படி வெளியேற்றப்படும் நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. கூடலூரில் வெளியேற்றுவதற்கென்றே பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எவிக்ஷனுக்காகவென்றே ஸ்டாப் வைத்திருக்கிறார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்களும், வெளியேற்றத்தில் பயன்படுத்தப்பட்டு

---

@ கொள்கை விளக்கக் குறிப்பு மூன்றும் இணைப்பாக 319–326-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

@ கொள்கை விளக்கக் குறிப்பு இரண்டாம் இணைப்பாக 114–121-ம் பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

வருகிறார்கள். பல ஆண்டுக்காலமாக தண்டத் தீர்வை கொடுத்த விவசாயிகளும் இருக்கிறார்கள். அவர்கள் பேரில் பட்டா போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வனத் துறையில் இணைக்கப்பட்டு இருந்தாலும், நிலங்கள் விவசாயிகளிடத்தில் இருந்து வருகின்றன. ஆனால் பதிவு ஏடுகளில் "காட்டுவளத் துறை" என்று இருக்கும். அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து, அதற்கென்று ஒரு குழு அமைத்து, பட்டா போட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஏராளமாக இருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் ரப்பர், தேயிலைத் தோட்டங்களில், நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அதிகமான நிலத்தைச் சுற்றி வளைத்துக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதுமாதிரித்தான் கண்ணன்தேவன் எஸ்டேட்டில் 55,000 ஏக்கருக்கு அதிகமாகச் சேர்த்து அனுபவிக்கப்பட்டு வந்ததை கண்டுபிடித்து சட்டத்தின்மூலம் மக்கள் அரசு மேற்கொண்டுள்ளது. அதே போல் வரிசை நாடு பகுதியிலும் சுற்றிவளைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பல விவசாயிகள் துன்பத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். இதுபற்றிப் பல மனுக்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மலைப் பகுதிகளில் அதிகமான நிலங்களை வளைத்துப் போட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மறுபடியும் ரீ-சர்வே செய்து, எந்த நிலம் யாரிடம் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, ஏழை விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்க ஆவன செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகள் எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலும், மலைப்பகுதியிலும் இருக்கின்றன. தேயிலைத் தோட்டம் வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். இவற்றை மாற்றி விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும்.

அதே போல இராமநாதபுரம் மாவட்டம் கான்சாபுரம் பகுதியில் புல்வெளிக்காடு என்ற பகுதி இருக்கிறது. அமைச்சர் கூட ஒரு நாள் பதில் சொல்லும் போது சொன்னார்கள். அங்கே இலஞ்சியும், காரையும், புதர், புளிச்சை, புல் இவையே இருக்கின்றன. மரம் என்பது மருந்துக்குக் கூடக் கிடையாது. ஆனாலும், அங்கே யானை வருகிறது என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள். வனத் துறை அதிகாரிகள் சொல்வதை மட்டும் கேட்பதை விட, எங்களைப் போன்ற, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சொல்வதையும் கேட்டுச் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பழைய பாணியில் இன்னமும் அதிகாரிகள் கொடுக்கும் புள்ளிவிவரங்களையே அரசினரும் அப்படியே கொடுத்து வருகிறார்கள். புல்வெளிக்காட்டில் இது சம்பந்தமாக கேசுகள் நடந்து, விவசாயிகளுடைய குடிசைகள் பிரிக்கப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு, 50-க்கு மேற்பட்டவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 100 பேர்கள் கைதாகியிருக்கிறார்கள். இதற்குப் பின்னால் அங்கேயிருக்கும் விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஏற்பட்ட மனக் கசப்பின்





காரணமாக, வனத் துறை அதிகாரிகள் யானை வருகிறது என்று சொல்வதெல்லாம் சரியில்லை. முன்பு யானை வந்த இடம் என்றாலும், அதையெல்லாம் விவசாயிகள் திருத்திப் பண்படுத்தி வெகு காலமாக விவசாயம் செய்து வந்திருக்கிறார்கள். அப்படித்தான் கான்சாபரம் பகுதி இருக்கிறது. இராஜபாளையம் பகுதியில் அதிகமாக நிலத்தை எடுத்து வளைத்துப் போட்டுக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். இது சட்ட விரோதமானது.

இந்த நிலையில் தலைச் சுமையாக விறகு கொண்டுவரும் விவசாயிகள் தண்டிக்கப்படுகிறார்கள். கலியாணம் ஆகாதவர் பிடிக்கப்பட்டு, பிற்பாடு அவர் குழந்தையோடு கோர்ட்டில் வந்து நிற்கும் நிலைதான் இருக்கிறது. சேத்தூர் சிறைக்காட்டிலிருந்து இப்படித் தலைச் சுமையாகக் கொண்டு வருவது ஜமீந்தார் காலத்தில் கூட அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால், பின்னால் அந்தப் பகுதியை அரசு மேற்கொண்ட பிறகு அனுமதி மறுக்கப்பட்டது. நீண்ட காலத்திற்கு முன்னர் சேத்தூர் ஜமீன்தாரால் இந்த மாதிரி எடுக்கக் கூடாது என்று வழக்குத் தொடரப்பட்டு கீழ்கோர்ட்டில் வண்டி பாரம் (கார்ட் லோட்) என்பதற்குப் பதிலாக உயர்நீதிமன்றத்தில் (ஹெட் லோட்) "தலைச் சுமை" என்று சொன்னார்கள். இப்பொழுது தலைச் சுமையையும் தடுக்கிறார்கள். இதில் பல மக்கள் இப்படி விறகு கொண்டு வந்துதான் வாழ்க்கையே நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். தலைச் சுமையாகக் கொண்டு போக உரிமை வழங்கவேண்டும். தரிசு நிலங்களை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். கூடலூர் பகுதியில் ஜமீன் நிலத்தில் கற்பூர மரம் வைக்க வேண்டும் என்று விவசாயிகள் வெளியேற்றப்படுவது சரியில்லை. விவசாயம் செய்தவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கவேண்டும். விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சின்கோனா தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ, அவைகளை இவர்களுக்கும் கொடுக்க வேண்டும். பிர்லாவிற்குச் சொந்தமான நிலங்களிலும் இதைச் செய்ய வேண்டும், மறுபடியும் சர்வே செய்து, நிலம் இல்லாத ஏழைகளுக்குப் பட்டா போட்டுக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. வி. கே. இராமராசன்: தலைவரவர்களே, வனத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் 1967-லே ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, காலம் சென்ற அண்ணா அவர்கள், ஃபாரஸ்ட் இலாகா பொறுப்பேற்றிருந்த மறைந்த கோவிந்தசாமி அவர்களை ஃபாரஸ்ட் பகுதிக்கு அழைத்துச் சென்று, அங்கே உள்ள பொட்டல் காட்டுப் பகுதிகளைக் காட்டி, அந்தக் காட்டு பூமிகளையெல்லாம் ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து தரவேண்டுமென்று சொல்லிச் சென்றார்கள். பொதுப்பணித் துறை அமைச்சரும்

[திரு. வி. கே. இராமராசன்] [1971 ஜூலை 23

பவானிசாகர் நீர்த் தேக்கத்தின் பக்கத்திலே இருக்கின்ற 10,000 ஏக்கர் நிலத்தில், ஒரு கமிட்டியை அமைத்து ஒரு ஏக்கர் 15 ரூபாய் என்று வைத்து 7,000 ஏக்கர் நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க விருக்கிறது அரசு. இதற்கு இந்த அரசாங்கம் அனுமதி அளித்ததற்காக, நான் பவானிசாகர் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைச் செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி முன்னேற்றக் கழகம் ஏழை விவசாயிகளின் நலனிலே அக்கறை கொண்டு காரியங்களை ஆற்றி வருகிறது. 20 ஆண்டுகளாக ஆண்ட காங்கிரஸ் கட்சிகூட இதைச் செய்யவில்லை. ஃபாரஸ்ட்டுக்கு இடையிலே உள்ள பூமிகள் அத்தனையும் கர்ணம், மணியக்காரர் போன்றவர்கள் பட்டா செய்து கொண்டு, "அது ரெவின்யூ புறம்போக்கு" என்று சொல்லிவிடுகிறார்கள். அதோடு, நிலம் உள்ள பணக்காரர்களும் இப்படிப் பட்டா செய்து கொள்கிறார்கள். இதையெல்லாம் பார்த்த முன்னேற்றக் கழக சர்க்கார், இந்த நிலங்களையெல்லாம் ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட வன இலாக்கா அதிகாரியைக் கொண்ட ஒரு கமிட்டியையும், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்ட ஒரு கமிட்டியையும் வைத்து இப்படி 7,000 ஏக்கர் நிலத்தை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

பவானிசாகர் பகுதியிலே, மங்களப்பட்டு ஃபாரஸ்ட் ஏரியாவிலே 10,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த ஃபாரஸ்ட் ஏரியாவின் 10,000 ஏக்கர் நிலத்திற்கும் ஒரு கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்துமாறு இந்த அரசை கேட்டுக்கொள்ளுகிறேன்.

மைசூர் மாநிலத்தையும், கேரள மாநிலத்தையும் ஒட்டி வருகின்ற ஃபாரஸ்ட் பகுதியிலே ஏராளமான சந்தன மரங்கள் வளர்ந்திருக்கின்றன. நக்சல்பாரிகள் இரவிலே வந்து, அந்த சந்தன மரங்களை வெட்டிக் கொண்டு போகிறார்கள். காரணம், தாளவாடி மைசூரோடு இணையவேண்டும் என்று சொல்லி, சில கன்னடக்காரர்கள் ஏழை எளியவர்களை ஏவிவிட்டு அந்தப் பகுதியிலே இருக்கும் சந்தன மரங்களை வெட்டிக் கொண்டு போகிறார்களாம். எனவே, இந்தப் பகுதியிலே 3 மைலுக்கு ஒரு காவல்காரர் என்ற ரீதியிலே போட்டு நமது பகுதியை நாம் காத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பவானிசாகர், பகுதியிலே "கீழ் பவானி கால்வாய்" என்ற ஆறு ஓடுகிறது. அதன் இரு கரைகளிலேயும் ஃபாரஸ்ட் படர்ந்திருக்கிறது. அங்கே 10,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே ஒருவருக்கு 3 ஏக்கர் வீதம் லீசுக்குக் கொடுக்கச்சொல்லி அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. அதை ஏழை எளிய மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எனவே, இந்த ஃபாரஸ்ட் நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்கும் கொடுக்கும் பொருட்டு, இதை ரீ-சர்வே செய்து அவர்களுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைக் கூறி, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன்.



1971 ஜூலை 23] [திரு. வி. கே. இராமராசன்]

* திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த வனத்துறை மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக நம் நாட்டில் வனத் துறை பாதுகாப்பிலே அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளிலே அக்கறை காட்டப்பட்டிருந்தாலும் கூட, இந்தியாவிலேயே 33 சத விகிதம் (பாரஸ்டு) காடுகள் இருக்கவேண்டும் என்று தேசியக் கொள்கை வகுக்கப்பட்டது. ஆனால், நம் தமிழ் நாட்டிலே 16 சத விகிதம்தான் காடுகள் பாதுகாக்கப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள். பொதுவாக விஞ்ஞானிகள் கூட இப்படி மரங்கள் அழிக்கப்படுவதால், வனத்துறையானது பாதுகாக்கப்படாமல் இருப்பதால், மழை கூட குறைவாகப் பெய்கிறது என்ற காரணத்தைச் சுட்டிக் காட்டி, ஒரு பூமியில் மூன்றில் ஒரு பங்காவது காடுகளாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்படவேண்டிய கொள்கை ஆகும். இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது தமிழ் நாட்டிலே 16 சதவிகிதம் தான் வனங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்று அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

ஆண்டுக்கு ஆண்டு வனத்துறையின் அபிவிருத்திக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட, அந்த வனப்பகுதிகளிலே புதிய, புதிய மரங்களை நடுவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதாகத் தெரிகிறது. மற்றும், வனத்துறையிலே இருப்பவர்கள் மரம் நட்டு பயிரிடுவதிலே காலதாமதம் செய்வதால், அங்கிருக்கும் விவசாயிகள் அந்த நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு, எங்கே பார்த்தாலும் மலைப் பகுதிகளிலே வளர்ந்த பெரிய மரங்களை அழித்துவிட்டு, தேயிலை போன்ற தோட்டப் பயிர்களைப் பயிர் செய்வதால், காடுகள் குறைவாக போய்விடுகின்றன. நீலகிரி போன்ற பகுதிகளிலே, நீலகிரித் தைலம் தயாரிக்கும் மரமும், கற்பூர மரமும் நீர்ப்பசையை 120 அடி ஆழம் வரையில் உறிஞ்சிக் கொள்ளும் சக்தி படைத்தனவாயிருப்பதாலும், மழை அப் பகுதிகளிலே குறைந்து கொண்டு வருவதாலும், அது பெரிதும் காடுகளைப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, அப்படிப்பட்ட மரங்கள் அந்த பகுதியிலே இல்லாமல் இருக்கும் பொருட்டு, எந்த மாதிரி நிலைமையிலே எந்தப் பகுதியிலே அவற்றை வளர்க்க வேண்டும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபொழுது பூலாம்பட்டி விவசாயிகளுக்கு 5 ஏக்கர் நிலம் நன்கொடை கொடுப்பதாகவும் அந்த ஃபாரஸ்ட்டிலே பயிர் செய்து வந்த விவசாயிகளுக்கு ஆர்டர் போடப்பட்டதாகவும் எங்களுக்குத் தகவல் வந்தது. இப்

பொழுது அதைக் குறைத்து 3 ஏக்கர் மட்டும்தான் கொடுக்கப் போவதாக அறிவிப்பு வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்கள் எல்லாம் 25 வருஷங்களாகத் தங்களுடைய வாழ்நாட்கள் பூராவும் கஷ்டப்பட்டு கிணறு தோண்டி, விவசாயம் செய்தவர்கள். எனவே, 2, 3 ஆண்டுகள் அந்த பூமியில் வந்து பயிர் செய்தவர்களுக்குக் கொடுப்பதைப் போல 3 ஏக்கர்தான் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அது கூடாது. அவர்களுக்கு 5 ஏக்கர் என்ற அளவிலேயே கொடுத்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு இந்த வனத்துறையிலே ஏராளமான சந்தன மரங்கள் கடத்தப்படுவதாகவும் பொதுமக்களால் சொல்லப்படுகிறது. ஒரு முறை இந்த ஃபாரஸ்ட் கான்டிராக்ட் எடுக்கும் நபர்கள் மறு வருஷமே இலட்சாதிபதிகளாக மாறிவிடுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, இதிலே ஃபாரஸ்ட் ரேன்ஜர்களும், மற்ற ஃபாரஸ்ட் இலாகா அதிகாரிகளும் அதிகக் கவனம் செலுத்தி, திருட்டுக்களைக் கண்டு பிடிக்க வேண்டும். அதோடு இந்தச் சந்தனக் கட்டைகள் மிகவும் குறைந்த அளவில்தான் கருத்தில் கொள்ளவேண்டும். நம்முடைய இந்த அரசாங்கம் கருத்தில் கொள்ளவேண்டும். நம்முடைய பகுதியிலே இருக்கும் இந்த சந்தன மரங்களைக் கண்காணித்துப் பாதுகாப்பது நம்முடைய ஃபாரஸ்ட் அதிகாரிகளின் கடமை என்று அறிந்து, அப்படிப்பட்ட அதிகாரிகளை அதிகமாகப் போட்டு, நம்முடைய வனத் துறையின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, வனத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேச எழும்பொழுது என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

இந்த வனத்துறை ஆய்வு உரையில் புள்ளி விவரங்களை எல்லாம் காட்டி, தமிழ்நாட்டிலே காடுகள் இருக்கின்ற பகுதி, ஒரு நாட்டிலே குறைந்தபட்ச காட்டு பகுதி எவ்வளவு இருக்கவேண்டுமோ அதை விடக் குறைவாகத்தான் இருக்கிறது என்று தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். அப்படி எடுத்துக்காட்டி இருந்தாலும் கூட மரங்களே இல்லாத காட்டுப் பகுதியை அந்த வட்டாரத்திலே இருக்கிற ஏழை எளியவர்களுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அடுத்து, நெல்லை மாவட்டத்திலே திருச்செந்தூர் வட்டாரத்திலே திருச்செந்தூர் தொகுதிக்கும், சாத்தன்குளம் தொகுதிக்கும் இடையிலே இருக்கின்ற 12,000 ஏக்கர் நிலத்திலே குதிரைவால் ஏரி என்ற நிலத்தை 3,000 ஏக்கர் வரையுள்ள நிலத்தை கரையோரப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு, சாதாரண மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கலாம் என்ற வேண்டுகோளை விடுத்துக் கொள்கிறேன். இந்தப் பகுதியிலே காடுகளே இல்லை, மரங்களே இல்லை. 12,000 ஏக்கர் இருக்கிறது. ஆகவே, அந்த நிலத்திலே ஒரு பகுதியை, 3,000 ஏக்கர் நிலத்தை, அந்தப் பகுதி மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால், அந்த நிலத்திலே வேளாண்மையைப் பெருக்கலாம்.





அது மட்டுமல்ல. இந்த வனத்துறை விரும்புகின்ற காடுகளைக் கூட அந்தப் பகுதியிலே வளர்க்கச் செய்யலாம். இந்த மணற் பாங்கான பகுதியிலே விளைகிற "உடை மரங்களை" எல்லாம் இது வரை அந்தப் பகுதி மக்கள் விறகாகப் பயன்படுத்தி வந்தார்கள். இப்பொழுது தெரிகிறது, இந்த "உடை மரம்" காகிதம் தயாரிக்கக் கூடப் பயன்படுகிறது என்று. எனவே, இந்த மணற்பாங்கான இடத்திலே நன்றாக விளையக்கூடிய இப்படிப்பட்ட மரத்தைக் கூட அந்தப் பகுதியிலே வளர்த்து, அதைக் காட்டுப் பகுதியாக வைத்துக் கொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

தவிர, இந்த ஆய்வுரையில் காகிதத்திற்கான கூழ் செய்வதற்கு உபயோகப்படும் மரங்கள் வனத்துறையில் அதிக அளவில் பயிரிடு வதற்கு வழி செய்யப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய்க்கு வாக்ஸ், மூங்கில் போன்ற மரங்கள் பயிரிடுவதற்காகச் செலவழிக்கப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டி லிருக்கின்ற காகிதப் பற்றுக்குறையைப் போக்கத் தகுந்த நடவடிக்கை தக்க நேரத்தில் எடுக்கப்படாவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் ஒரு காகிதப்பஞ்சமே ஏற்பட்டுவிடும் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன். ஆகவே இன்றிருப்பதைவிட இந்தக் காகிதக் கூழுக்குப் பயன்படும் மரங்களை அதிகமாக வளர்க்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் தனியார் நிலங்களிலும் இப்படிப்பட்ட மரங்களை அதிகமாக வளர்க்க முயற்சி செய்வதுடன் வன இலாக்காவினர் புதிய முறைகளை ஆராய்ச்சி செய்து ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டில் எவ்வளவு அதிகமாகப் பயிரிட்டு வளர்க்க முடியும் என்று கண்டுபிடித்து அந்த வழியில் செயல்பட்டால் நிச்சய மாக, தனியார் நிலங்களிலும் அரசு நிலங்களிலும் வளரும் மரங்களைக் கொண்டு இந்த காகிதப் பஞ்சத்தைப் போக்கிவிட முடியுமென்று கூறிக்கொள்கிறேன். அந்த வழியில் வன இலாக்காவினர் முயற்சி செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, இங்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கும் வகையில், அதன் மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட பிறகு இந்த நாட்டில் மட்டும் வளம் ஏற்பட்டதென்பதல்ல, காட்டிலும் நல்ல வளமேற்பட்டிருக் கிறது என்பதற்கு முதுமலையில் ஈரேழு காலமாக நடைபெறாத ஒரு அதிசயம் ஒரு யானை இரண்டு குட்டிகள் போட்டிருக்கிறதென்பதி லிருந்து தெரிந்து கொள்ளலாம். அதற்காகக் குறிப்பாக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சின்கோனாத் துறையைப்பற்றி ஒரு குறிப்பை நான் இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன். நம்முடைய இந்த அரசு பொறுப் பேற்கின்ற வரையில், அதாவது 1967 வரையில் சின்கோனாத் துறை

இருக்க வேண்டுமா வேண்டாமா என்ற ஒரு இழுபறி நிலைமை இருந்தது. அந்தத் துறை இன்றையதினம் ஒவ்வொரு வருஷமும் லாபம் ஈட்டிக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலையைப் பார்க்கிறோம். அந்த நிலையினை ஏற்படுத்திய செயல் திறமை மிக்க சின்கோனுத் துறை இயக்குநருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நம்முடைய நாட்டுக்கு அன்னியச் செலாவணி என்ற முறையிலும் சின்கோனுத் துறை மிக அதிகமான அளவுக்குப் பணம் ஈட்டித் தந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, நீலகிரி மாவட்டத்தில் வாசனைப் பொருள்களை மிக அதிகமான அளவுக்கு உற்பத்தி செய்து அதன் வாயிலாகவும் அன்னியச் செலாவணியை உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள். அதற்காகவும் பாராட்டுதல் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு 'காட்டுப் பிரதிநிதி'. என்னுடைய பகுதி காடுகள் நிறைந்த பகுதி. ஆகையினால் என்னுடைய சில கோரிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உங்களுக்கெல்லாம் தெரியும். புங்கம்பட்டு நாடு, புதூர் நாடு, நெல்லி வாசல் நாடு என்ற மூன்று நாடுகளையும் கொண்ட குறிஞ்சி நாடு எங்கள் நாடு. எங்களுடைய காடுகளிலே சந்தனம் இருக்கிறது, அகில் இருக்கிறது. சந்தனமும் ஜவ்வாதும் மணம் கமிழ அங்கே வருகிறவர்களை வரவேற்ற நாள் ஒரு நாள் இருந்தது. இன்றைய தினம் அந்த நிலை அழிந்து அலங்கோலமான காட்சியைத்தான் பார்க்கிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : ஒவ்வொருவருக்கும் மூன்று நிமிடங்கள்தான் கொடுக்கவேண்டும் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : எங்களுடைய பகுதியில் சுமார் 16,000 ஏக்கர் நிலம் அழிக்கப்பட்டிருக்கிறது. அங்கே யார் அழித்தார்கள், எப்படி அழிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. கேள்வி கேட்டால் கீழே இருக்கிறவர்கள், மேலே உள்ளவர்களைக் காட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில்தான் ஆயிரம் ஏக்கர் அங்கே ஜவ்வாது அழிக்கப்பட்டிருக்கிறது. நாம் வனமகோத்சவம் கொண்டாடுகிறோம். இதனால் எங்கள் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர்க்க உடனடிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்துடன் நீலகிரி மாவட்டத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வனவிலங்குகள் வாழ்கின்ற அருமையான காடுகளாக இருந்தவற்றை அழித்து, சமப்படுத்தி அங்கே நம்முடைய நாட்டுக்கு வளம் தரும் தேயிலையைப் பயிரிட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே கூடலூர் பகுதியில் கேட்பார் யாருமில்லை என்ற ஒரே காரணத்தால், அங்கே வாழும் மக்கள் வெளியேற்றப்படுகின்ற கொடுமை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாக



நிலைமையை உணர்ந்து, மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முடிவெடுக்கின்ற வரையிலாவது இந்த வெளியேற்றப் பிரச்னையை நிறுத்தி வைக்க ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சோ. கருணைநாதன் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தில் காட்டிலாகா தன்னுடைய பணியினைக் கடந்த சில ஆண்டுகளாக நல்ல முறையில் செய்து பல சாதனைகளைச் செய்து காட்டியிருக்கிறது. காட்டிலாகா நல்ல முறையில் இயங்கி வருவதற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் காட்டிலாகாவில் இருக்கின்ற ஒருசில பிடிவாதத் தனத்தை மட்டும் சற்று தளர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மலையில் வசிக்கின்றவர்கள் தங்களுடைய சொந்த மரங்களை வெட்டி விறகுக்காக எடுத்துக் கொண்டு வருகின்ற நேரத்தில் இந்த இலாகாவினர் தொல்லைகள் புரிந்து வருகிறார்கள். இது நீலகிரி மாவட்டத்தில் பெரும் பிரச்சினையாகி நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது. அதைத் தீர்த்து, அவர்கள் வெட்டிக் கொண்டு போக வழி செய்ய வேண்டும். இப்படி சொந்தமாக நான்கு, ஐந்து மரங்களை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு அரசாங்க அனுமதி பெற்று வெட்டவேண்டும் என்று இருக்கின்ற தடையை நீக்கிவிடும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய சட்டத்திற்குட்பட்டு அனுமதி பெறவேண்டும் என்று சொன்னால் யார் யார் அனுமதி கோரி விண்ணப்பம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குக் குறைந்தது இரண்டு அல்லது ஒரு மாத கால வரம்பு வைத்து அதற்குள் அனுமதி தந்துவிட வேண்டுமென்றும் உத்திரவு போட்டால் அது சாலச்சிறந்ததாகவிருக்குமென்று நினைக்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய காட்டிலாகா, மரங்கள் இல்லாத ஆனைகட்டி, கல்லம்பாளையம் போன்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, ஜில்லா கலெக்டர் மற்ற அதிகாரிகளைக் கலந்தாலோசித்து, ஏற்கனவே விவசாயம் நடைபெற்ற பகுதிகளாக இருந்தவற்றில் மறுபடியும் விவசாயம் நடைபெற வழி செய்யலாம். ஆனால் காட்டு நிலத்தின் வளர்ச்சியில் நாட்டில் உள்ள அனைவருக்கும் அக்கறை இருக்கிறது. அது காட்டு இலாக்காவுக்கு மட்டுமல்ல. ஆகவே, காட்டு இலாக்கா தன்பிடிவாதப்பிடியிலிருந்து ஒரு படி கீழே இறங்கி வரவேண்டும். விவசாயிகளிடம் இருந்து திரும்பப்பெற்ற தகுதியுள்ள நிலத்தைத் திரும்ப அவர்களுக்கே கொடுக்கவேண்டும்.

சின்கோனாவைப் பொறுத்தவரையில் நீலகிரி மாவட்டத்தில் நன்றாக வளர்கிறது. காட்டு இலாக்காவுக்குச் சொந்தமான 441 ஹெக்டேர் நிலத்தில் போட்டிருக்கிறார்கள். மூவாயிரம் அடி

[திரு. சோ. கருணாநாதன்] [1971 ஜூலை 23

உயரத்தில் வளரக்கூடிய சிங்கோனா மரங்களை அங்கே அதிக அளவில் பயிரிட்டு வருமானத்தைப் பெருக்கித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இன்றையதினம் காட்டு இலாக்காவின் ஒத்துழைப்புத் தான் பலவகையிலும் தேவைப்படுகிறது. ஜிரேனியம் மற்ற தைலப் பொருள்களையும் வளர்க்க வேண்டும்.

சில கிராமங்களில் கர்ப்பூர மரங்களை வீட்டு ஓரம்வரை நடுகிறார் கள். கர்ப்பூர மரங்களை வீடுகளுக்குச் சற்று தள்ளித்தான் நடவேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று சொல்லி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. வெங்கடசாமி தெலுங்கில் உரையாற்றினார்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. எஸ். முருகையன் : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையை சிறந்த முறையில் நிர்வகித்துக்கொண்டு வருகிறார்கள். இதுவரை இல்லாத அளவு தீவிர கவனம் செலுத்தி நல்ல முறையில் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஜவ்வாது மலையில் ஒரு பகுதி என்னுடைய தொகுதியைச் சார்ந்தது. அங்கே உள்ள சந்தன மரங்களின் மூலம் வருடத்திற்கு 50 லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு வருவாய் வருகிறது. அரசாங்கம் இதில் தீவிர கவனம் செலுத்தினால் மேலும் 50 லட்சம் ரூபாய் அளவிற்கு வருமானம் வரக்கூடும். இப்போது சந்தன மரங்கள் உற்பத்தி குறைந்து வருகிறது. காரணம், அது தானாகவே வளர்ச்சி அடையக்கூடிய ஒன்று. நாம் எவ்வளவுதான் செடிகளை நட்டு வளர்க்க முயன்றாலும் வருவதில்லை. ஆனால் பழங்களைப் பறவைகள் தின்று எச்சமிடுகிற இடங்களில் அதன் விதைகள் விழுந்து தானே முளைத்து வளருகின்ற ஒன்றாக இருக்கிறது. அங்கங்கே விழுந்து முளைக்கிற செடிகள் அப்படியே முளைக்க சந்தர்ப்பம் ஏற்பட்டால் நிறைய மரங்கள் வளர வாய்ப்பிருக்கிறது. ஆனால் தனிப்பட்டவர்களுடைய நிலங்களில் மரங்கள் வளர்ந்தால் மொத்தமும் அரசாங்க மரம் என்றே எடுத்துக்கொண்டு போய்விடு கிறார்கள். அதில் ஒரு பங்காவது விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வந்தால் தனிப்பட்டவர்கள் நிலங்களில் அந்தச் செடிகள் முளைத்தாலும் வளரவிடுவார்கள். அதே ஜவ்வாது மலையின் மறு பகுதியில் இதுபோல தனிப்பட்டவர்கள் நிலத்தில் சந்தன மரம் முளைத்தால் மூன்றில் ஒரு பங்கு அந்த நிலக்காரருக்கே கொடுக் கிறார்கள். அதுபோல இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்தால் மேலும் 50



1971 ஜூலை 23] [திரு. எஸ். முருகையன்]

லட்சம் அளவிற்கு அரசாங்க வருமானம் பெருக வாய்ப்பிருக்கிறது. இதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் யவனமருதூர் என்ற பெரிய மலைக்கிராமம் இருக்கிறது. அங்கே காவல்துறை இருக்கிறது. உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதி மக்கள் போளூருக்கு வர பாதை வசதி கிடையாது. ஜீப் வசதி செய்துதரப்பட்டிருக்கிறது. ஆனாலும் குறிப்பிட்ட நேரம் போன்ற நிலை இல்லாத காரணத்தினால் இதில் அரசு கவனம் செலுத்தி பாதை வசதியையே ஏற்படுத்தித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு நூறு ஏக்கர் வெட்டிக்கொள்ள அனுமதி கொடுத்தால் 500 ஏக்கர் வெட்டிக்கொள்கிறார்கள். காரணம், ஒரு ஃபாரஸ்ட் கார்டு என்றால் 200 ரூபாய் சம்பளம் கொடுக்கிறோம். 30 மைல், 40 மைல் சுற்றளவைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அது அவர்களால் இயலாத காரியம். அதன் காரணமாகவே ஏராளமான மரங்கள் வெட்டப்படுகின்றன. ஆகவே, காட்டு இலாக்காவில் இன்னும் அதிகமான சிப்பந்திகளை நியமிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் பேப்பர் மில்களுக்காக அரசாங்கத்திலிருந்து மூங்கில்கள் சப்ளை செய்கிறோம். அவர்கள் ஒரு டன் மூங்கில் மூன்று நான்கு ரூபாய் என்ற அளவிற்கு வாங்குகிறார்கள். ஆனால் அவர்கள் அதை பேப்பருக்கு உபயோகப்படுத்தி, பேப்பர் டன் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் விற்கிறார்கள். தொழில் துறை வளர வேண்டுமென்றால் அதற்கு அரசாங்கத்தின் உதவி தேவைதான். நம்மிடம் டன் ஒன்றுக்கு மூன்று, நான்கு ரூபாய் என்று வாங்கி, நமக்கே டன் பேப்பர் இரண்டாயிரம் என்று விற்கிறார்கள். அதனுடைய உற்பத்தியின் அடக்க விலையே 700 ரூபாய்தான் ஆகிறது. ஆகவே, அரசாங்கத்திற்கு உற்பத்தியாகும் பேப்பரில் இத்தனை டன் பேப்பர் அடக்க விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று நாம் வரையறை செய்துகொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, வனத்துறை சிப்பந்திகளுக்குத் தக்க பாதுகாப்பு கிடையாது. வனங்களில் ஏராளமான கொடிய மிருகங்கள் இருக் கின்றன. ஆகவே, அவர்களுக்கெல்லாம் பாதுகாப்புக்காக கைத் துப்பாக்கி கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், சட்ட மன்றம் நடக்கின்ற நேரத்தில் அமைச்சர்களில் யாராவது ஒருவர் முன்வரிசையில் இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அதே போல எதிர்க்கட்சி வரிசையில் எதிர்க்கட்சியின் சார்பில் ஒருவர்கூட இப்போது முன்வரிசையில் இல்லையே, இது முறைதானா?

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்கள் என்பவர்கள் சட்டப் பேரவைக்கு மரியாதை தரக்கூடியவர்களா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி ஏதாவது நியதி இருக்கிறதா? இப்பொழுது முன்வரிசையில் யாரும் இல்லையே? இதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: முன்வரிசையில் இல்லாவிட்டாலும், நாங்கள் பின்வரிசையில் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்கள் இருப்பதைப் போல எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்க வேண்டுமென்று விதி இல்லை. இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றுமில்லை, "நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர்".

* திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சி வரிசையில் இந்த மானியத்தின்மீது கருத்துக்கள் கூறுவதற்கு நான் ஒருவன்தான் இருக்கிறேன் என்ற காரணத்தால், தலைவர் அவர்கள் கொஞ்சம் தாராளமாக எனக்கு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இலாகாவில் ஒரு சிறப்புப் பகுதியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்தாயிரம் ஏக்கர் விஸ்தீர்ணத்தில் ரப்பர் தோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் நோக்கம், சிலோனிலிருந்து வந்த அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும், இந்த மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால் அங்குள்ள மக்களுக்குத் தொழில் வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் ஆரம்பிக்கப்பட்டது. ரப்பர் தொழிலானது போதிய வருவாயைத் தருகின்ற காரணத்தால் 1959-ல் அந்தத் திட்டத்தை வகுத்துச் செயலாக்கி வருகிறோம். இது மிகுந்த நல்ல திட்டம். அரசுக்கு நல்ல வருவாயை அளிக்கக்கூடிய திட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அலுவல் களை 1-30 மணிக்கு மேலும் நீட்டிக்க, பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ரப்பர் மரமானது மிகவும் நுட்பத்தன்மை வாய்ந்தது. ரப்பர் தொழிலில் எல்லா வேலைகளும் நுட்பத்தன்மை உடையதாக இருக்கின்றன. ரப்பர் தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். செயலாற்றுகின்ற அதிகாரிகளும் சிறப்புப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். முன்பு இருந்த கன்சர்வேட்டர் அவர்கள் அரசாங்கத்தினால் மலேசியாவுக்கு அனுப்பப்பட்டு, ரப்பர் தொழிலில் சிறப்புப் பயிற்சி பெற்று வந்தவர். இப்போது இருக்கிற அதிகாரிகள் அம்



மாதிரியான சிறப்புப் பயிற்சி இல்லாத காரணத்தால் இந்த பிளான்டேஷன் மிகவும் சீர்குலைந்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ரப்பர் தொழிலில் நல்ல லாபம் வரவேண்டும். தொழிலாளர்களுக்கும் வேலை இழப்பு இல்லாத வகையில் இருக்க வேண்டுமென்றால் சிறந்த முறையில் செயலாற்றப்பட வேண்டும். சிறப்புப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் போடப்பட வேண்டும். இந்தத் தோட்டத்தில் வேளாவேளைக்கு இப்போது உரம் போடுவதில்லை. ஆகவே, நிச்சயமாக நாம் எதிர்பார்க்கின்ற வருவாயை அது அளிக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதை நிச்சயமாக சொந்த அனுபவமுள்ள முறையில் எடுத்துக் கூறியிருக்கிறேன். மண் அரிப்புத் திட்டத்தின்கீழ் ஆங்காங்கு குழிகள் எடுக்கப்பட்டால்தான் இடப்படுகின்ற உரம் மழைக்காலத்தில் வெளியே போகாமல் ரப்பர் மரத்திற்குப் பயன்படும். ஆகவே, குழிகள் வெட்டப்பட வேண்டும். மேலும், பால் வெட்டுகின்ற இடத்தில் மருந்துகள் தடவ வேண்டும். இல்லாவிட்டால் மரத்திற்கு காயம் ஏற்பட்டு, அதிகமான பால் சுரக்காது. மேலும் மரத்தின் இலைகளில் ஸ்ப்ரே பண்ண வேண்டும். இல்லாவிட்டால் அடிக்கடி நோய்கள் வரும். மரங்களுக்கு வேளாவேளைக்கு களையெடுத்து பராமரிக்க வேண்டும். இன்றைக்கு அந்த வேலைகள் எல்லாம் தோட்டங்களில் நன்கு செயல்படுத்தப்படவில்லை.

இந்த இலாகாவானது வன இலாகாவோடு சேர்ந்து இருக்கிறது. வன இலாகாவிலுள்ள அதிகாரிகள்—குறிப்பாக—இன்று அங்கு இருக்கிற கன்சர்வேட்டர் அவர்கள் தொழிலாளர்களோடு தொடர்பு கொள்வதற்கு எந்த முறையிலும் தகுதியற்றவராக இருக்கிறார். குறிப்பாக அங்கு ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் அடிக்கடி அதிகாரிகளின் வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். 30—12—1970-ம் நாள் ஜபப்பிள்ளை என்ற தொழிலாளியை ராமகிருஷ்ணன் என்று சொல்லக்கூடிய ஃபீல்ட் ஆபீசர் அழைத்துச் சென்று, அறையில் அடைத்து, நையப்புடைத்து, மரணம் அடைகின்ற தருவாயில் இருக்கிறார் என்று அறிந்ததும், மருத்துவரை அழைத்து சிகிச்சை அளித்திருக்கிறார். அந்தத் தொழிலாளியை நானும் சென்று பார்த்தேன். வேலை பார்க்கின்ற சிப்பந்திகள், கீழ்மட்டத்தில் இருக்கின்ற சிப்பந்திகளால் தொழிலாளிகள் மிகவும் தொல்லைப் படுத்தப்படுகிறார்கள். குறிப்பாக பெண் தொழிலாளர்கள் அதிகாரிகள் விருப்பங்களுக்கு இசைவு தெரிவித்தால்தான் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்கிற பரிதாபகரமான நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது இருக்கின்ற கன்சர்வேட்டர் அங்கு போலீஸ் ராஜ்யத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கன்சர்வேட்டரின் போலீஸ் ராஜ்யமாக நடந்துகொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, 16—6—1971-ம் நாள், பல ஆண்டுகளாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த தொழிலாளர் சேன்டீன் கன்சர்வேட்டரால் இடித்து அழிக்கப்பட்டது. 12 ஆயிரம் ரூபாய் இதனால் தொழிலாளர்கள் நஷ்டம் அடைகின்ற அளவில் கன்சர்வேட்டர் செய்து இருக்கிறார்.

பல ஆண்டு காலமாக தோட்டம் தொடங்கிய நாள்முதல் தொழில் சங்கம் செயல்பட்டுக்கொண்டு இருந்தது. தொழிலாளர்களுக்கு சங்கம் இருக்கிறது. சங்கத்திற்கு கொடி இருக்கிறது. சங்கத்தின் கொடி அந்தப் பிளான்டேஷனிலே இருந்துகொண்டிருந்தது. கன்சர்வேட்டர் அந்தக் கொடியை அகற்ற வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார். அதுமட்டுமல்ல, அந்தக் சேன்டீனை இடித்து மாற்றியபோது, தொழிலாளர்கள் மறுப்பு தெரிவித்து, பக்கத்தில் சென்றபோது, “யாராவது அருகில் வந்தால் சுட்டுவிடுவேன்” என்று பயமுறுத்தியிருக்கிறார். சங்கத்தின் துணைக் காரியதரிசியை கண்ட இடத்தில் சுட்டுப் போடுங்கள் என்று ஏற்பாடுகள் செய்திருக்கிறார். சங்கத்தின் பொதுக் காரியதரிசி நான். சில பிளான்டேஷன் தோட்டம் என்னுடைய தொகுதியில் அமைந்திருக்கிறது. நான்கூட அந்தப் பகுதியில் போவதற்கு பாதுகாப்பு வேண்டுமென்றால், ஜன நாயகத்தில் இப்படி ஒரு அதிகாரி செயலாற்றலாமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஏழைத் தொழிலாளர்கள் வாழ்க்கைக்கு வசதியற்ற தொழிலாளர்கள் அவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட மனைகளுக்குப் பக்கத்தில் காய்கறிகள் போட்டு அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு இருந்தார்கள் பல ஆண்டுகளாக. ஆனால் இந்த அதிகாரி வந்ததும் யாருடைய ஆலோசனையும் கேட்காமல் அவற்றையெல்லாம் அழித்துவிட்டதன் மூலம் 5 ஆயிரம் ரூபாய் தொழிலாளர்களுக்கு நஷ்டம் விளைவித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இன்னும் இதுபோன்ற விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடக்காமல் இருக்கவேண்டுமானால் அந்த அதிகாரி உடனடியாக மாற்றப்படவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கனவே நான் கூறினேன், ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள், அதிகாரிகளின் விருப்பத்திற்கு இசையாத தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுப்பதில்லை. நிரந்தரமான தொழிலாளர்களாக அவர்கள் இருந்தும், 200 பேர்கள் 300 பேர்கள் என்ற அளவிலே காஷுவல் ஒர்க்கர்ஸ் போட்டுக் கொண்டு வேலைசெய்து நிரந்தர தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப் படுகிறது. அதாவது விக்டிமைசேஷன் என்ற முறையிலே செய்யப் பட்டுவருகிறது.

இன்னொரு பிரச்னையையும் நான் இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ரப்பர் வேஜ் போர்டு சிபார்சுகள் கேரள மாநிலத்திலேயும் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற தனியார் தோட்டங்களிலும் அமலாக்கப் பட்டிருக்கின்றது. ஆனால் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற ரப்பர்



பிளான்டேஷன்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இன்னும் வேஜ் போர்டு சிபார்சுகள் அமுல் நடத்தப்படவில்லை. தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத் தோட்டத்திலே வேலை செய்கின்ற பணியாளர்களுக்குமிடையே வித்தியாசம் 80 காசு அளவிலே இருக்கிறது. இதைப்பற்றி நான் பலமுறைகள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து தனியார் தோட்ட முதலாளிகள் கொடுக்கின்ற அளவுக்கு கூலியை நமது தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத் தோட்டத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் திட்டத்தையும் நிறைவேற்றவில்லை, எனவே அதையும் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக போனஸ் கொடுப்பதுபற்றிக் கூற விரும்புகிறேன். பல ஆண்டுகளாக அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் அந்தச் சட்டத்தை மாற்றவிருக்கிறது. எனவே, அந்தத் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனத்துறையிலிருந்து இந்தத் துறையைத் தனியாகப் பிரித்து தனித்துறையாக்கினால்தான் தொழிலாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படும், அதனால் அரசாங்கத்திற்கு நல்ல பெயரும் ஏற்படும் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:</u> தலைவர் அவர்களே, காட்டு வளம், சின்கோனா ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெற்ற விவாதத்தில் பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக காட்டுவளத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு வசதிகளைப் பெருக்க வேண்டும், வருமானத்தைப் பெருக்கித் தரவேண்டும் என்ற முறையிலே நல்ல பல யோசனைகளை சில உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களில் பொதுவாக ஒரு மாநிலத்திற்கு இருக்க வேண்டிய காட்டு இலாகா நிலம் நமக்கு இல்லையென்றும் அதன் காரணமாக காட்டு இலாகா நிலத்தை விநியோகிப்பதில் சற்று கவனம் செலுத்த வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இருந்தாலும்கூட காட்டு இலாகா நிலங்கள் நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று பல பக்கங்களிலிருந்தும் விண்ணப்பங்கள் வருவதைப் பார்க்கிறோம். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பையேற்றுக்கொண்டதற்குப் பின்னாலே காட்டு இலாகா நிலம், காடு என்ற நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்படுகின்ற நிலங்கள் இருக்குமானால் அவற்றைப் பரிசீலனை செய்து, நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு முதற்கட்டமாக 50 ஆயிரம் ஏக்கர் கொடுக்கப்படுமென்று அறிவித்திருக்கிறார்கள்.

வரலாம். நிர்வாகச் செலவிற்காக 50 இலட்சம் ரூபாய் போக 50 லட்சம் ரூபாய் 1984-ஆம் ஆண்டு ரப்பர் தோட்டத்தின் மூலமாக நிகர லாபம் கிடைக்கும் என்று தீர்மானிக்கிறோம்.

தொழிலாளர் பிரச்னையைப்பற்றிச் சொன்னார்கள். இந்தப் பிரச்சினை உண்மையாகவே இருக்கிறதா, எந்த அளவில் தவறு இருக்கிறது என்பதை விசாரித்துப் பார்க்கிறேன். அதிகாரிகளைப்பற்றிச் சொன்னார்கள். நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன், தொழிற்சங்கத்தின் தலைவர், காங்கிரஸ் கட்சியின் தொழிற் சங்கத்தின் தலைவர் என்பது பற்றி உள்ளபடியே பாராட்டுகிறேன். அவர் சொல்லுகின்ற கருத்து என்னவென்றால்—தொழிற்சாலைகளில் கொடியை ஏற்றுகிறார்கள்; ஆனால் அதிகாரிகள் வந்து எடுத்துவிட வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி ஒரு தொழிற்சங்கத்தில் கட்டியிருந்தால், அவர்கள் தொழிலாளர்களை உள்ளபடியே ஆதரிக்கிறார்கள் என்றால், நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். ஆனால் அவர்கள் ஏற்றியது தொழிற் சங்கக் கொடி அல்ல, காங்கிரஸ் கொடி, திராவிட முன்னேற்றக் கழகமாகயிருந்தாலும், கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி, தொழிற் சங்கக் கொடியைத்தான் ஏற்றியிருக்கிறோம். "தொழிற்சங்கம் உங்கள் கட்சிக்கு இருக்கிறதா என்று கேட்டேன்?" இல்லை. என்று சொன்னார்கள். இவ்வளவு காலம் தொழிலாளர்களைப்பற்றி நினைக்காதவர்கள், அவர்களுக்குத் தொழிலாளர்களுக்கு என்று தனிக் கொடி கிடையாது. இனிமேலாவது காங்கிரஸ் கொடியை ஏற்ற வேண்டாம், காங்கிரஸ் கட்சிக்கு என்று தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டத்திற்கு என்று கொடுப்பதை விவசாயத்திற்குப் பயன் படுத்திக்கொண்டிருந்தார்கள், அதையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும் என்றார்கள். கிச்சன் கார்டன் என்று அனுமதிக்கலாம், அனுமதித்திருக்கிறோம். ஆனால் கிச்சன் கார்டன் என்றிருப்பதற்கு 2, 3 பர்லாங்குகளுக்கு அப்பால் தனியாக விவசாயம் செய்கிறார்கள். அதை அனுமதிக்க முடியாது. ரப்பர் தோட்டத் தொழிற்சாலையை விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் விடக்கூடிய நிலங்கள், ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடிய நிலங்கள் இருந்தால் பரிசீலிக்கலாம். இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு விடாமல் செய்திருந்தால் விசாரிக்கிறேன், முதலமைச்சரவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

சம்பளப் பிரச்னையைப்பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் நானும் சம்பளப்பிரச்னையைப் பற்றிப் பேசினோம். எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று தெரியும். இன்னும் உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். பரிசீலனை செய்து, மினிமம் வேஜ் கமிட்டி எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களோ அந்த அளவிற்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் இவர்கள் சொல்வது மற்றத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தனிப்பட்டவர்கள் தேயிலை, காபி போன்றவைகளை நடத்துகிறார்கள். அவர்களுக்கு விற்பனை அதிகம், அந்நியச்



செலாவணியும் அதிகமாகக் கிடைக்கிறது: ஆகவே, அவர்கள் விற்பனைக்குத் தகுந்தாற்போல் சம்பளத்தை உயர்த்துவதற்கு ஒப்புக் கொள்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கேரள அரசாங்கம் கொடுப்பதைப் போலவாவது நமது அரசாங்கம் கொடுக்க என்ன கஷ்டம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் தொழிற்சாலையின் கெபாசிட்டியைப் பொறுத்து இருக்கிறது. குறைந்த பட்சம் எவ்வளவு கூலி இருக்க வேண்டுமென்று சொல்கிறதோ அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அந்த அளவில் வருவாயை ஈட்டித் தரும்பொழுது நியாயமான அளவில் சம்பளத்தை உயர்த்த நாங்கள் எந்த நேரத்திலும் தயார்.

கேரள அரசாங்கத்தைப்பற்றி, திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன், கேரளாவிலே காட்டிலாக்காவிற்குச் சொந்தமாகவுள்ள இடங்களில் தனியார் நிலங்களை எடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள் என்று கருதுகிறேன். அங்கே ஆர்டினன்ஸ் கொண்டுவந்து, தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமானதை அக்ரேரியன் ரிஃபார்ம் என்று எடுத்தார்கள். அதிலேகூட எக்ஸ்செம்ப்ஷன், காபித்தோட்டம், வாழைத்தோட்டம், ஆரஞ்சுத்தோட்டம் என்று இந்தப் பழவகைத் தோட்டங்களை எடுப்பதற்குச் சட்டம் இல்லை. இவையெல்லாம் இல்லாவிட்டால் எவ்வளவு நிலம் இருக்கும் என்று கருதுகிறீர்கள்? தனிப்பட்டவர்கள் வெறும் மரத்தை எவ்வளவு காலம் வைத்திருப்பார்கள்? நாங்கள் கணக்கு வைத்திருக்கிறோம்.

திரு. க. சுப்பு: விதிவிலக்குகளைப்பற்றித் தெரிந்துதான் பேசினேன். 55,000 ஏக்கர் சொந்தமில்லாதவற்றை அனுபவித்திருக்கிறார். அதைப் பற்றிக் கூறினேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தவறாக யார் எடுத்திருந்தாலும் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம். தனிப்பட்டவர்கள் சோலைகள் வைத்திருக்கிறார்கள். அவைகளை வெட்டுவதற்கு கலெக்டரோ அரசாங்கமோ அனுமதி கொடுக்க வேண்டும். இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கொள்கைப்படி, தனிப்பட்டவர்களுடைய சோலை போன்றவைகளை வெட்ட நாங்கள் அனுமதிப்பது கிடையாது. அரசு அனுமதி பெற்றுத்தான் வெட்ட முடியும். மலைப்பகுதிகளில் தனிப்பட்டவர்களுக்கு உள்ளதை எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பரிசீலிக்கிறோம். கேரளாவிலே எடுக்க முடிந்ததா என்றால் இல்லை. டெல்லியிலே, தலைமை நீதிமன்றத்திலே இருக்கிறது, தீர்ப்பைப் பார்ப்போம். நம் சட்டப்படி எந்த அளவிலே மலைப்பகுதிகளிலேயுள்ள சோலைகளை அகற்ற நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைப் பார்க்க வேண்டும்.

கிராமத்திலே சாதாரணமாகச் சொல்லுவார்கள், ஆடு கெட காடு கெடும், காடு கெட நாடு கெடும் என்று. காட்டைக் கெடுக்க ஆட்டைவிட்டால் போதும், நாட்டைக் கெடுக்க காட்டைக்

[திரு. ஓ. பி. இராமன்] [1971 ஜூலை 23

கெடுத்தால்போதும் என்று சொல்லுவார்கள். எனவே இப்படி நாளுக்குநாள் காடுகளை அழித்துவிட்டால் பிறகு நாடே கெட்டுப் போகும். தட்ப, வெட்ப நிலை பாதிக்கப்படும். மழை பெய்தால் தான் அதன்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும்; மலைப்பகுதியில் பெய்யும் நீரிலேயிருந்து மின்சாரத்தை எடுக்கிறோம். எனவே இதெல்லாம் பாதிக்கப்பட்டால் நாட்டிலே பொருளாதாரம் பாதிக்கப்படும். உள்ளபடியே சொல்கிறேன், சில தகுதியானவர்களுக்கு நிலம் கிடைப்பதில்லை என்பது தெரியும். ஆனால் அதே நேரத்தில் ஆக்கிரமிப்புச் செய்தால், அரசியல் கண்ணோட்டத்திற்கும் இடம் கொடுக்காமல் ஆக்கிரமிப்பாளர்களின் செயல்களைக் கண்டிக்கவும், அவர்களை வெளியேற்றவும் ஒத்துழைக்க வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சின்கோனாத் தொழிற்சாலையைப்பற்றிச் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளாக நடக்கும் முறை சற்றுத் திருப்தியாக இல்லை. அதற்குக் காரணம், 1954-லிருந்து கிட்டத்தட்ட 1966-ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட 10, 11 ஆண்டுக்காலமாக, அன்றிருந்த அரசு அதை எடுத்துவிடுவது என்ற நோக்கத்திலே மேற்கொண்டு செடியை வளர்க்கவில்லை. அப்படி 1954-ஆம் ஆண்டிலிருந்து 1966-ஆம் ஆண்டுவரையில் செடிகளை நடாத காரணத்தினால் இந்த மூன்று ஆண்டுகளாகப் பட்டை கிடைக்கவில்லை. வெளிநாட்டிலே அதற்குக் கிராக்கியிருந்தாலும்கூட உற்பத்திக் குறைவாகயிருந்ததன் காரணமாக ஒன்றும் செய்ய இயலவில்லை. 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப்பிறகு திட்டமிட்டு ஒரு ஆண்டுக் காலமாக இப்பொழுது செடிகளை வளர்த்துக்கொண்டு வருகிறார்கள். இன்றைக்குச் சின்கோனாத் தொழிற்சாலை கணிசமான இலாபத்தோடு, அந்நியச் செலாவணி தரக்கூடியது.

இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலேயே சின்கோனா தயாரிக்கப்படுவது மேற்கு வங்காளத்திலும், தமிழ்நாட்டிலும்தான். அதிலும் மேற்கு வங்காளத்திலுள்ள சின்கோனாவைவிடத் தமிழ் நாட்டிலுள்ள சின்கோனா தான் தரமானது என்று சொல்லப்படுகிறது. இன்று அது மட்டுமல்ல, சின்கோனாவிலிருந்து மலேரியாக் காய்ச்சலுக்கு மருந்து மட்டுமல்ல, இப்பொழுது இருதய நோய்க்கும் உதவக்கூடிய க்வினிடைன் என்ற மருந்தையும் கண்டுபிடிக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அதற்காகப் புதிய இயந்திரங்களை வாங்கி வைத்து இருக்கிறோம். அதன்மூலம் உற்பத்தி பெருகினால் நல்ல லாபம் கிடைக்கும். எனவே, கிட்டத்தட்ட 1,500 பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம், 1,000 பேர்கள் ரப்பர்த் தொழிற்சாலையில் இருக்கிறார்கள்.

ஆகவே, அரசு காட்டிலாக்காவைப் பொறுத்தவரையில் சீரான கொள்கையைக் கடைப்பிடித்து வளப்படுத்தவும், தொழிற்சாலைகளைப் பெருக்கி மூலப்பொருட்களை உற்பத்தி செய்யவும் வேண்டுமென்ற கருத்தில் கூறிய கருத்துக்கள், உயர்ந்த நல்ல நோக்கத்தோடு சொல்ல வேண்டுமென்று சொல்லியிருந்தாலும், வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தாமல் மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டு



1971 ஜூலை 23] [திரு. ஓ. பி. இராமன்]

மென்று கேட்டுக்கொண்டு, பேசப்பட்ட கருத்துக்களை மனத்திலே வைத்து அரசு நடவடிக்கையை எடுக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: கூடலூர் பிரச்சினையைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு உறுப்பினர்கள் பலர் கொண்டு வந்தார்கள், நானும் தெரிவித்தேன். அங்கு குடியேறிய விவசாயிகளை இன்று வெளியேற்றக்கூடிய நிலை இருந்து வருகிறது. அதைத் தடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்குச் சாதகமாக உத்தரவிட வேண்டும். அதைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தைக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கூடலூர் பிரச்சினை தனியான பிரச்சினை. அந்தப் பகுதியில் நம்முடைய நாட்டில் இருப்பவர்களும், கேரளாவில் இருப்பவர்களும் வந்து ஆக்கிரமிப்பு செய்கிறார்கள். இப்போது இருக்கும் நிலைமையில் அதைப் பற்றிப் பரிசீலித்து எந்த அளவுக்கு ஒப்புக்கொள்ள முடியுமோ, எந்த அளவுக்கு நியாயமாக இருக்குமோ அந்த அளவுக்கு உண்மையிலேயே விவசாயம் செய்யக்கூடியவர்களுக்குக் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ். கான்டீன், காய்கறித் தோட்டங்கள் இவற்றை எல்லாம் அகற்றிய முறை சரியல்ல. ஏறக்குறைய ஆயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தொழிற்சங்கத் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து செய்ய வேண்டியதைச் செய்திருக்கலாம். இதைச் செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கனவே சொன்னேன். தொழிலாளர்கள் பிரச்சினையில் ஆத்திரமாகப் பேசுவதிலோ, அவசரமாகப் பேசுவதிலோ பயன் இல்லை. அமைதியாகப் பேசவேண்டும். சுமுகமான சூழ்நிலை ஏற்பட வழிவகை இருக்கிறது. கான்டீன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு சார்பில் வைத்துக் கொடுக்க ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு வேண்டிய இதர வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொழிலாளர் பிரச்சினையில் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் கூறுவது எல்லாம் அந்த அதிகாரி கையாண்ட முறை தவறு என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்களா என்பதுதான்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதைப்பற்றி விவாதித்தால் பெரிய பிரச்சினையாகும். தலைமை அதிகாரியை அனுப்பி விசாரிக்கச் சொல்லியிருக்கிறோம். நீங்கள், ஷெட்டையெல்லாம் உடைத்து விட்டார்கள் என்று சொன்னீர்கள். அங்கு யார் கடை வைத்திருந்தார்களோ அவரே, அதை எடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று அரசுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார். அது அரசு மூலம் கட்டப்பட்ட கட்டடம். ஆகவே, தொழிலாளர்கள் நடத்தி வந்தார்கள்.

அதைத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்து விடுவதற்காக தொழிற் சங்கத் தலைவர் பணத்தை வாங்கிக் கொண்டு அந்த முறையில் வேலை செய்தார்கள். இதைப் பற்றியெல்லாம் நான் இங்கே சொல்ல வேண்டாமென்பதற்காகத்தான் அமைதியாகப் பேச வேண்டும் தொழிலாளர்கள் பிரச்சினையிலே என்று சொன்னேன். அதைப்பற்றி தலைமை அதிகாரியை அனுப்பி விசாரிக்கச் சொல்லி இருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 50,000 ஏக்கர் நிலத்தை விவசாயி களுக்குப் பிரித்துக் கொடுப்பதாகச் சொன்னார்கள். 18,000 ஏக்கர் மதுரை வருஷநாடு பகுதி என்று சொன்னது மிகவும் மகிழ்ச்சி தரக் கூடியது. மற்ற 32,000 ஏக்கர் எந்தெந்தப் பகுதி என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கூடலூர் பகுதியில் 10 வருஷத்திற்கு மேலாகத் தண்ட வரி கட்டிக் கொண்டிருக்கும், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 50,000 ஏக்கர் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிறது. இந்த ஆண்டு முதல் கட்டமாகக் கொடுத்து முடிந்த பிறகு, வேறு எந்தெந்த இடங்களில் கொடுப்பது என்பது முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நீலகிரி பகுதியில் இருக்கும் கூடலூரில் ஆக்கிரமிப்புச் செய்திருப்பது உண்மை. அவர்களை அகற்ற வேண்டுமென்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆக்கிரமிப்புச் செய்தவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுப்பதற்கு ஒரு கால வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கால வரம்புக்கு உட்பட்டு, அங்கே ஆக்கிரமித்திருப்பவர் களுக்கும் கூட, அரசாங்கத்திற்கு அந்த இடம் தேவையில்லை என்று கருதினால்தான் கொடுக்கப்படும். ஏனென்றால் அந்தப் பகுதியில் காப்பி, தேயிலை பயிரிட 10 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அப்போது அரசாங்கத்திற்கு நிலம் தேவை யாக இருந்தால் அரசாங்கமே நிலத்தை விலைக்கு வாங்க வேண்டிய நிலை வந்துவிடும். ஆகவே, அந்த நிலைமைகளை எல்லாம் பார்த்து மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையின் மீது அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. எம். ஏ. லத்தீப்: 1965-ம் வருஷத்திற்கு முன்பு குடியேறியவர் களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று சர்க்காரில் திட்டம் இருந்த தாக அறிகிறேன். 1965-ல் குடியேறி இன்றுவரை விவசாயம் செய்து வரக்கூடியவர்களுக்குச் சலுகை தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1965 என்ற கால வரம்பைச் சொல்லாமல் நான் குறிப்பிட்டேன். 1965-க்கு முன்பு குடியேறியவர் களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்றாலும் அந்த நிலம் அரசாங் கத்திற்கு தேவை இல்லை என்ற நிலை இருந்தால்தான் தரமுடியும். கூடலூர் பகுதியில் இன்னொரு விசித்திரமான சூழ்நிலையும் இருக்



கிறது. எட்டி எட்டி, தனித் தனியாக அமைந்திருக்கிறது. அவர்கள் கேட்கிறபடி அடமானம் செய்து கொடுத்து விட்டால் இடையே பூமி தனியாக இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்து பரிந்துரை அனுப்பிய பிறகு முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

THIRU J. JAMES: In view of the assurance given by the Hon. Minister, I withdraw my cut motion.

The cut motion of Thiru J. James to Demand No. 21 was, by leave, withdrawn.

திரு. சுப்பு அவர்களின் வெட்டுப் பிரேரணை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. சுரேந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுப் பிரேரணை திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் பட்டது.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 59,37,700 under Demand No. 21—Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

கோரிக்கை எண் 35-க்கு திரு. ஜேம்ஸ், திரு. அழகர்சாமி ஆகி யோர் முன்மொழிந்துள்ள வெட்டுப் பிரேரணைகள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,20,90,900 under Demand No. 35—Forest Department.'

The Demand was put and carried and the Grant was made.

கோரிக்கை எண் 44-க்கு திரு. ஜேம்ஸ், திரு. தங்கமணி ஆகியோர் முன்மொழிந்துள்ள வெட்டுப் பிரேரணைகள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,41,74,800 under Demand No. 44—Capital Outlay on Forests.'

The Demand was put and carried and the Grant was made.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவற்று நாளை காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (8) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A.—*Statutory Rules and Orders.*

172. Notification issued with Roc. No. 63058/71-F2, dated the 22nd May 1971, in regard to no confidence motion against the Chairman, Kalligudi Panchayat Union Council in Madurai District and removal of the Chairman from the office of the Panchayat Council. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

173. Notification issued with Roc. No. 199072/70-P1, dated the 26th February 1970, in regard to exclusion of certain areas from the existing Arisiperiyankuppam panchayat and inclusion in Kariyeeravithankuppam panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B.—*Reports, notifications and other papers.*

160. Erratum issued with Roc. No. 51889/70-P1, dated the 13th April 1970, relating to bifurcation of Idaikazhinadu Panchayat.

161. Erratum issued with Roc. No. 51889/70-P1, dated the 30th March 1970, relating to bifurcation of Shanmugasundarapuram panchayat.

162. The Performance Budget of the Fisheries Department for the year 1971-72.

@ 163. Review on Labour in Tamil Nadu, 1970–71 (English and Tamil).

@ 164. Policy note on Fisheries Demand, 1971–72 (Tamil).

£ 165. Speech by Hon. Thiru N. V. NATARAJAN, Minister for Labour on Demand No. 24—Labour including Factories for the year 1971–72 (English and Tamil).

@ 166. Annexure to the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1971 (L.A. Bill No. 24 of 1971)

---

@ Despatched to Members on 21—7—1971.

£ Laid on the Table of the House on 22—7—1971.



## இணைப்பு 1.

[142-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### முன்னுரை

17. மானியக் கோரிக்கை.—மீனளத்துறையின் கீழ் ரூ. 2,35,15,700-க்கு மேற்படாமல் அரசுக்கு தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1970–71-ஆம் ஆண்டில் அரசால் நிறைவேற்றப்பட்ட முக்கியமான மீனள பணித்திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிப் பின் வரும் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1971–72-ல் எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள புதிய திட்டங்கள் பற்றிய முக்கியக் கூறுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நோக்கம்.

நீண்ட கடற்கரையும் எண்ணற்ற நீர்த்தேக்கங்களும், ஏரிகளும், குளங்களும் நிறைந்து எழில் குலுங்கும் நாடு இன்பத் தமிழ்நாடு. ஆழ்கடலும் அகநாட்டு நீர் நிலைகளும் மீன்வளத்தை வணிக முறையில் மேம்படுத்துவதற்கேற்ற வாய்ப்புக் கூறுகளைப் பெருமளவில் பெற்றுள்ளன. மீன் பிடிப்பதற்கேற்ற 77,700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள கடற்பகுதியுடன் தமிழ்நாட்டுக் கடற்கரை 1,000 கி.மீ. நீளமுள்ளதாக அமைந்துள்ளது. உள்நாட்டு நீர் நிலைகளின் பரப்பளவு 7,90,000 ஹெக்டேராகும்.

தமிழ்நாடு மீனளத்துறை 1907-ல் நிறுவப்பட்டது. அன்று முதல் மீனளங்கள், மீனைச் சார்ந்த தொழில்கள் முதலியவற்றை ஆழ்ந்தறிந்து அவற்றை வளர்ப்பதில் தமிழ்நாடு அரசு நாட்டம் செலுத்தி வந்துள்ளது. எனினும் 1950-க்குப் பின்னர், ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ், மீனின வளர்ச்சியைப் பெருக்குவதற்காக மீனள வளர்ச்சி பற்றிய பெருந்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தவணைக் கொள்முதல் அடிப்படையில் மீன்பிடி விசைப்படகுகள், நைலான் நூல்கள் வழங்குதல், பிடித்த மீனைப் பாதுகாப்பதற்காக உறை பனிக் கட்டித் தொழிற்சாலைகளுக்கும், பனி அறைகளுக்கும் வகை செய்தல், மீன்களைக் கரை சேர்ப்பதற்கும் மீன்பிடி படகுகளை நிறுத்தி வைப்பதற்குமான வசதிகளுக்கு வகை செய்தல் போன்றவை இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான திட்டங்களாகும். வீட்டுவசதி, மீன்பிடி கிராமங்களை இணைக்கும் சாலைகள் அமைத்தல் போன்ற சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் மீனவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் இத்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அறிவியல் முறையில் மீன் குஞ்சுகளை வளர்த்து நீர்த்தேக்கங்களில் விடுவதற்கும் பாதுகாப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் உள்ளூர்ப்பகுதிகளிலுள்ள பெரிய நீர்த்தேக்கங்கள் அனைத்தும் துறையின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

[1971 ஜூலை 23

மீனளத்துறை வளர்ச்சிக்காக ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 1969–70, 1970–71-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட செலவையும் 1971–72-ல் செய்துள்ள நிதி ஒதுக்கத்தையும் கீழேயுள்ள விவர அறிக்கையில் காணலாம் :—

| | மத்திய அரசின் ஊக்குவிக்கும் திட்டங்கள். | மத்திய அரசின் உதவிப் பெறும் திட்டங்கள். |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்.) | |
| 1969–70 (கணக்குகள்) .. .. | 27·87 | 109·39 |
| 1970–71 (துறையின் கணக்கு) .. | 49·91 | 127·80 |
| 1971–72 (வரவு-செலவு திட்ட இருத்த மதிப்பீடு) .. .. .. | 101·53 | 183·59 |

## மீன் உற்பத்தி.

கடல் மீன் பிடிப்பின் ஆண்டு அளவு, 1951-ல் 0.44 லட்சம் டன்களிலிருந்து 1970-ல் 2.28 லட்சம் டன் ஆகவும் உள்நாட்டு மீன் பிடிப்பு 0.34 லட்சத்திலிருந்து 1.20 லட்சம் டன் ஆகவும் உயர்ந்துள்ளது. 1969-70-ல் ஏற்பட்ட வறட்சி நிலைமையின் காரணமாக அந்த ஆண்டில் மீனினப்பெருக்கம் பாதிக்கப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உள்நாட்டு நீர்நிலைகளிலிருந்து 2.00 லட்சம் டன்களும், கடலில் இருந்து 3.00 லட்சம் டன் மீனையும் பிடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மீன்பிடி விசைப்படகுகள்.

இரண்டாம் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீன்பிடி விசைப் படகுகள் திட்டம், அதனை அடுத்து வந்த எல்லாத் திட்டங்களிலும் மீனள வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய திட்டமாக இருந்து வந்துள்ளது. இத்திட்டத்திற்கென்றே ஒவ்வொரு ஆண்டும் திட்டச் செலவில் சுமார் 75 சதவீதம் ஒதுக்கப்படுகிறது.

நான்காவது திட்டத்தில் மீனளத்துறையின் மூலம் 1,000 படகுகளைக் கட்டி வழங்கவும் வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் மூலம் 275 படகுகளைக் கட்டி வழங்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு 1969–70-ல் ரூ. 60.02 லட்சம் தொகை செலவிடப்பட்டது. துறையைச் சேர்ந்த படகு கட்டும் நிலையங்கள் மூலம் 135 விசைப்படகுகள் கட்டப்பட்டன. துறையின் கணக்குப்படி இத்திட்டத்திற்கு 1970–71-ல் ரூ. 98.10 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. தனி முகவர்கள் மூலம் கட்டப்பட்ட 40 படகுகளைத் தவிர, துறையின் படகு கட்டும் நிலையங்கள் மூலம் 146 படகுகள் கட்டப்பட்டன. மேலும் 40 படகுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. 1971–72-ஆம் ஆண்டில், 1970–71-ல் விட்டுப்போன எஞ்சிய வேலை இனங்களைத் தவிர மீனளத்துறையின் படகு கட்டும் நிலையங்களில் 150 படகுகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1971–72-ல்



1971 ஜூலை 23]

மேலும் 50 படகுகளைத் தனியார் படகு கட்டுபவர்கள் மூலம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் படகுகள் கட்டுவதற்காக, ரூ. 128.33 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 31—3—1971 வரை குறிப்பாக துறையின் படகு கட்டும் நிலையங்கள் நான்கின் மூலம் 1,198 படகுகள் கட்டப்பட்டன.

இந்தியாவில் முதன் முறையாக இரும்பு-சிமிட்டி (Ferro-Cement) படகுகள் கட்டுவதற்காகத் துறையைச் சேர்ந்த படகு கட்டும் நிலையம் ஒன்று நிறுவும் சிறப்பு தமிழ்நாட்டிற்கே உரிய ஒன்றாகும். இந்தவகைப் படகுகள் காப்பதற்கு எளிதாகவும் மரப்படகுகளைக் காட்டிலும் செலவு குறைந்ததாகவும் இருக்கும். 1971-72-ல், 8 இரும்பு-சிமிட்டிப் படகுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட விசைப்படகுகளைப் பொறுத்தவரையில், பழுது பார்க்கும் வசதிகளுக்கு வகை செய்வதற்காக, மீன் கரை சேர்க்கும் முக்கிய இடங்களில் எல்லாம் பணி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## ஆழ்கடல் மீன்பிடிப்பு.

57 அடி நீளமுள்ள உருக்கு இழு படகுகள் (Steel trawlers) நான்கு கட்டுவதற்காக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்களால் பெரிய அளவில் வணிக முறையில் மீன் பிடிப்பதற்காக மீன்பிடி இடங்களைத் தமிழ்நாடு கடற்கரையின் ஆழ் கடலில் ஆய்வு செய்வதற்காக இந்த இழு படகுகள் தயாரிக்கப்படும். இதில் இரண்டு இழு படகுகள் கல்கத்தாவில் 1970-71-ல் முன்னரே கட்டி முடித்து வெள்ளோட்டம் விடப்பட்டது. இவை கூடிய விரைவில் ஒப்படைக்கப்படும். ஏனைய இரண்டு இழு படகுகளும் வெள்ளோட்டம் விடப்பட்டு நடப்பாண்டில் ஒப்படைக்கப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1971-72-ஆம் ஆண்டிற்காக, இந்த நான்கு இழு படகுகளையும் துறை பேணி வருவதற்கும் இயக்குவதற்கும் ரூ. 20.88 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடி சாதனங்கள் வழங்கல்.

மீனவர்களுக்கு விசைப் படகுகளுடன் வழங்கப்படுவதற்காக 1969-70-ல் 10,360 கிலோகிராம் நைலான் நூல் வாங்கப்பட்டது. 1970-71-ல் துறையால் 14,000 கிலோகிராம் நைலான் நூல் வாங்கப்பட்டது. 1971-72-லும் கூட விசைப்படகுகளுடன் சலுகை விலையில் நைலான் முறுக்குக் கயிறு வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1971-72-ல் 17,500 கிலோகிராம் நைலான் நூல் பகிர்ந்தளிப்பதற்கென வாங்குவதற்காக ரூ. 7.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் நூல்கள் வாங்கிப் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு மானியத் தொகை வழங்குவதற்கான திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென 1971-72-ல் ரூ. 2.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டத்தின் கீழும் அனுமதிக்கப்பட்ட 20 சதவீதம் உதவித் தொகை 1971-72-லும் தொடர்ந்து வழங்கப்படும்.

## மீன் சினைகள் உற்பத்தியும் அக நாட்டு நீர் நிலைகளில் மீன் குஞ்சுகளை விடுவதும்.

இயற்கை நீர் நிலைகளிலிருந்து மீன் சினைகளைச் சேகரிக்கும் திட்டத்தினாலும், பெரிய கெண்டை மீன் சினைகளைத் தூண்டுதல் முறையில் பொரிக்கச் செய்து மீன் குஞ்சுகளை நீர்நிலைகளில் விடுவதன் மூலமும் அகநாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1969–70-ஆம் ஆண்டில் 450.00 லட்சம் மீன் குஞ்சுகளும், 838.00 லட்சம் பொரித்த மீன் குஞ்சுகளும் (Hatchlings) வளர்க்கப்பட்டன. 1970-71-ல் சுமார் 600.00 லட்சம் மீன் குஞ்சுகளும், 900.00 லட்சம் பொரித்த மீன் குஞ்சுகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 1971-72-ல் மீன் குஞ்சுகள் உற்பத்தியை மேலும் அதிகரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலுமுள்ள மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட நீர்நிலைகளிலும், மாநில அரசால் மேற்கொள்ளப்படாத நீர் நிலைகளிலும் ஊராட்சி நீர் நிலைகளிலும் மீன் வளர்ப்பதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. போதுமான அளவு மீன் சினைகள் இல்லாத காரணத்தால் மாநில அரசு மேற்கொள்ளாத நீர்நிலைகளிலும் ஊராட்சி நீர்நிலைகளிலும் தற்போது குறைந்த அளவு மீன் உற்பத்தி செய்யப்படுகின்றது. மாநில அரசு மேற்கொண்டுள்ள நீர் நிலைகளிலும் கூட போதுமான அளவு மீன் சினைகள் இல்லாத காரணத்தால் போதுமான அளவு மீன் குஞ்சு வளர்க்க இயலவில்லை. மதிப்பீட்டிற்கிணங்க, 450 லட்சம் மீன் குஞ்சுகள் குறைந்துள்ளன. இந்தக் குறைவு, கூடுதல் உற்பத்தியின் மூலம் நிறைவு செய்யப் படவேண்டும். எனவே 1971–72-ல் படிப் படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் ஆளியாறு, திருமூர்த்தி, கோமுகி போன்ற நீர்த்தேக்கப் பகுதிகளில் தூண்டல் முறையில் கெண்டை மீன் முட்டைகளைப் பொரிக்கச் செய்யும் நிலையங்களைத் (Induced Carp Spawning Centres) தொடங்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 1971–72-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாவட்டத்தில் மேற்படி திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பூங்கார், உப்பார் அணை முதலிய இடங்களில் முன்னரே மேற்கொள்ளப்பட்டுள்ள மீன் குஞ்சுப் பண்ணைகளும், மீன் வளர்ப்புப் பண்ணைகளும், 1971–72-ல் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 1,200 லட்சம் அளவு மீன் குஞ்சு உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறிக்கோள் அளவை எய்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## நீர்த்தேக்கங்களில் மீன் பண்ணைகளை அமைத்தல்.

1969–70-ஆம் ஆண்டில் மஞ்சளாறு, பூண்டி, புத்தேரி, சாத்தனூர், வைகை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மீன் பண்ணைகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டு அவை இயங்கி வருகின்றன. 1970–71-ஆம் ஆண்டில் திருமூர்த்தி, வைகை, மணிமுத்தாறு ஆகிய இடங்களில் மீன் பண்ணைகள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டில் அவலாஞ்சி, திருச்சிராப்பள்ளி, வீடூர், கோமுகி ஆகிய இடங்களில் மீன் பண்ணைகள் அமைக்கும் பணியை முடிக்கவும், சோலையாறு, சித்தாறு நீர்த்தேக்கங்களை மேம்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது. மணிமுக்தா நதி, மேல் அணை, சத்தியாறு அணை ஆகிய இடங்களில் முறையாக மீன் குஞ்சுகளை விடுவதற்காக, 1971–72-ல் அந்த இடங்களில் மீன் வளர்ப்புப் பண்ணைகளும் கட்டப்படும்.



## அக நாட்டு நீர்நிலை மீனளங்களைக் குத்தகைக்கு விடுதல்.

மாநில அரசின் நீர்வாயில்களில் மீன் பிடிப்பதற்கான உரிமைகளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகை விடும் முறை, பொது ஏலம் எதுவுமின்றி, 1970-ஆம் ஆண்டு முதல் அல்லது 1380-ஆம் விளைச்சல் ஆண்டிலிருந்து மேற்கொண்டு மூன்றாண்டுக் கால அளவுக்குத் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று ஆணையிடப் பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழுள்ள குளங்களில் மீன் பிடிப்பதற்கான உரிமைகளை 1969–70 வரையில் தங்களது விருப்பப்படி முடிவு செய்தன. இந்தக் குளங்களில் மீன் பிடிக்கும் உரிமைகளையும் பொது ஏலமின்றி மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடவேண்டுமென்று அரசு பின்னர் ஆணையிட்டுள்ளது.

## பயிற்சி.

சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி, கொளச்சல் ஆகிய இடங்களில் ஒவ்வொரு பயிற்சி நிலையமாக 6 கடல் மீனவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. மேட்டூர் அணைக்கட்டில் உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. மண்டபத்தைத் தவிர, ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும், 10 திங்கள் கால அளவில் ஒரு சமயத்தில் 50 மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் 60 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1969–70, 1970–71-ஆம் ஆண்டுகளில் இந்த பயிற்சி நிலையங்கள் எல்லாவற்றிலும் பயிற்சி பெற்ற மீனவர்களின் மொத்த எண்ணிக்கை 630 ஆகும். மேம்பாடான முறைகளில் மீன் பிடிப்பதும், விசைப்படகுகளை இயக்குவதும் மீனவர்களுக்கு இயலச் செய்வதே பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். 1971–72-ஆம் ஆண்டில், பயிற்சித் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. திட்டப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் துறைப் பணியாளர்களின் திறமையை உயர்த்தும் நோக்கத்துடன் அரசிதழ் பதிவுபெற்ற, அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் பல துறைகளிலும் பயிற்சி பெறுவதற்கு பல மத்திய மீனள நிலையங் களுக்கு முகமையில் அனுப்பப்படுகிறார்கள்.

## பனிக்கட்டி உற்பத்தி பிரிவு, பனி அறைப் பிரிவு, உறையவைக்கும் பிரிவு.

இத்துறை 27 பனிக்கட்டி உற்பத்திப் பிரிவுகள், பனி அறைப் பிரிவுகள், உறையவைக்கும் பிரிவுகளை நிறுவியுள்ளது. தூத்துக்குடியில் மற்றுமோர் உறையவைக்கும் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இந்த உறைய வைக்கும் பிரிவை குத்தகைக்கு விடத் திட்டமிடப் பட்டுள்ளது. கன்னியாகுமரி, இடிந்தகரை, கடப்பாக்கம், முத்துப் பேட்டை, சேதுபவாசத்திரம், அதிராம்பட்டினம், தூத்தூர், எனையம் புத்தந்துறை ஆகிய இடங்களில் 5 டன் திறனுள்ள இரண்டு பனிக் கட்டித் தொழிற்சாலைகள் 2 டன் திறனுள்ள ஆறு பனிக்கட்டித் தொழிற்சாலைகள் ஆகியவை கட்டப்படும் பணி வெவ்வேறு நிலைகளில் உள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆரம்பாக்கத்தில் அந்தப் பகுதிலுள்ள மீனவர்களின்

[1971 ஜூலை 23

தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மற்றுமோர் பனிக்கட்டித் தொழிற்சாலை கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய-நார்வே திட்டத்தின் கீழ் 10 டன் மீன்களை உறையவைக்கும் திறனுள்ள புழைவழி உறை நிலையம் (Tunnel Freezer) ஒன்றும், 50 டன் திறனுள்ள உறைய வைக்கப்பட்ட மீன்களைச் சேகரித்து வைக்கக்கூடிய பனி அறை ஒன்றும் மண்டபத்தில் கட்டப்பட்டுள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் ஒரு டன் திறனுள்ள குளிர் அறைத்தட்டுகளில் உறைவிக்கும் இயந்திரம் ஒன்றும் இந்தப் பிரிவுடன் சேர்க்கப் பட்டுள்ளது.

## பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் பிரிவு.

பதப்படுத்திய மீன்களை டப்பியில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று முன்னோடித் திட்ட அடிப்படையில் 1965-ல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியில் அமைக்கப்பட்டது. இத் தொழிற்சாலை துவக்கப்பட்ட நாளிலிருந்து குத்தகைக்கு விடப்பட்ட வரை உற்பத்தி செய்த டப்பிகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு. | இறால் டப்பிகள். | 'சார்டின்' மீன் டப்பிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1965 | —— | 7,716 |
| 1966 | 16,689 | 33,205 |
| 1967 | 1,575 | 1,21,860 |
| 1968 | 2,351 | 2,23,287 |
| 1969 | —— | 34,502 |
| | 20,615 | 4,20,570 |

"சார்டின்" மீன் டப்பிகளில் பெரும்பகுதி தரைப்படைக் கொள் முதல் நிறுவனத்தால் ஒப்பந்த அறிவிப்புப்படி வாங்கிக்கொள்ளப் பட்டது. டப்பிகளில் அடைக்கப்படும் மீன்களைத் துறை மூலம் விற்பனை செய்வதில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக, இத் தொழிற்சாலை தூத்துக்குடியிலுள்ள மெஸர்ஸ் சி. ஆர். கொரேரா பிரதர்ஸுக்கு 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி முதல் 5 ஆண்டு காலக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## மீனவர் நலத் திட்டங்கள்.

பல ஆண்டுகளுக்குப் பின் முதல் தடவையாக மீனவர்களுக்காக 100 வீடுகள் கட்டுவதற்கு 1968–69-ஆம் ஆண்டில் அரசு ரூபாய் ஒரு லட்சம் ஒப்பளிப்பு வழங்கியது. மீனவர்களுக்கு இன்னும் 100 வீடுகள் கட்டுவதற்காக 1969–70-ல் மற்றுமோர் லட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 200 வீடுகளில் 1969–70, 1970–71-ஆம் ஆண்டுகளில் 127 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகள் 1971–72-ஆம் ஆண்டில் முடிக்கப்பெறும். இத் திட்டத்தின் கீழ் 1969–70-ஆம் ஆண்டில் ரூ. 0.73 லட்சமும், 1970–71-ல் ரூ. 0.35 லட்சமும் (துறைக் கணக்கு)



1971 ஜூலை 23]

செலவிடப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டிலும் இத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ல் மீனவர்களுக்காக இன்னும் 100 வீடுகள் கட்டுவதற்காக ரூபாய் ஒரு லட்சத்துக்கு ஒப்பளிப்பு வழங்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதைத் தவிர, புயல் நிவாரண நிதியிலிருந்து ரூ. 2.62 லட்சம் செலவில் 1969–70-ல் தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபட்டினம் கிராமத்தில் 70 வீடுகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இந்த 70 வீடுகளும் 1971–72-ல் கட்டி முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ரூ. 4.00 லட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் (1) முக்கியச் சாலையிலிருந்து செருத்தூர் மீனவர் குப்பத்தை இணைக்கும் கிளைச் சாலை, (2) தோப்புத்துறை ரயில் நிலையத்திலிருந்து ஆர்க்காடு சாலை வரை இணைக்கும் கிளைச் சாலை ஆகிய இரண்டு கிளைச் சாலைகளை அமைக்க 1969–70-ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இச் சாலைகள் அமைக்கப்படும் பணி நடந்தேறி வருகிறது. 1971–72-க்குள் அவை அமைத்து முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70-ல் ரூ. 0.53 லட்சம் செலவில் எட்டு சிறு சாலைகளை அமைக்கும் பணியை சேதுபவாசத்திர ஊராட்சி ஒன்றியம் மேற் கொண்டது. செலவு முழுவதும் மீனள நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியத்துக்குத் திரும்ப கொடுக்கப்பட்டுள்ளது. 1970–71-ல் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தால் ரூ. 0.25 லட்சம் செலவில் சேலம் மாவட்டத்தில் கீரக்காரனூரிலிருந்து கூனண்டியூர் வரை சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பணி நடந்தேறி வருகிறது. 1971–72-ஆம் ஆண்டில் கன்னியாகுமரி பனிக்கட்டித் தொழிற்சாலைக்கு ஓர் இணைச் சாலை அமைக்கவும், ஏரிபுறக்கரைக்காக மற்றொரு கிளைச் சாலையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. சாலைப் பணிக்காக 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 2.20 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## மீன்பிடித் தொழிலுக்கான நிறுவன நிதி உதவி.

மீனள வளர்ச்சிப் பணிகளுக்கு அரசு முக்கியமாய் நிதி உதவி அளித்துவந்தபோதிலும், இத்தகைய பல மேம்பாட்டுப் பணிகளில் வளர்ச்சியை நோக்குமிடத்து அரசின் நிதி வாயில்கள் போதுமானவை அல்ல எனத் தெரியவந்துள்ளது. எனவே, தனியார், கூட்டுறவுத் துறைகளில் மீன்பிடித் தொழிற்சாலைகளை அமைக்க அரசு நிதியுதவி நீட்டிக்க முடியாமலுள்ளது. எனினும், வேளாண்மை மறு நிதியுதவிக் கழகம், வணிக வங்கிகள் முதலிய நிதியுதவும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கு இத் துறைகளுக்கு அரசால் ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்துத் தேவையான உதவியையும் அரசு வழங்கி வருகிறது. சென்னை மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் ஆதரவுடனும், வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவி யுடனும் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள மீன்பிடி தொழில் மேம்பாட்டிற்கான திட்டத்திற்கு ரூ. 33.82 லட்சம் மொத்தச் செலவில் அரசு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அத் தொகையில் ரூ. 22.98 லட்சம் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்

திடமிருந்து கடனாகவும், எஞ்சியுள்ள ரூ. 10.84 லட்சம் அரசால் விசைப் படகு, நைலான் நூல் போன்றவற்றிற்கு உதவித் தொகையாகவும் வழங்கப்படுகின்றன. அரசு ரூபாய் மூன்று லட்சம் பங்கு மூலதனத்தையும் வழங்கியுள்ளது. திருநெல்வேலி மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் ஆதரவின்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் மீன்பிடித் தொழில் மேம்பாட்டிற்கான இதுபோன்ற ஒரு திட்டம் ரூ. 78.70 லட்சம் செலவில் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் வேளாண்மை மறு நிதியுதவிக் கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

இம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் மீனளத் திட்டங்களை நிறுவுவதற்காக மீன்களைக் கரை சேர்க்கும் இடங்களில் கடற்கரைக் கருகில் நிலங்களை ஒதுக்கியும், நீர், மின்வசதிகளைச் செய்து கொடுத்தும், மாநில அரசு உதவி செய்து வருகின்றது. மீன்பிடி படகுகள் வேண்டுமென மீனவர்களல்லாதவரிடமிருந்து ஏறத்தாழ 100 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மீன்பிடி படகுகளை வாங்குவதற்காக இந்த விண்ணப்பதாரர்களுக்கு நிதி உதவி வழங்க வணிக வங்கிகள் அணுகப்பட்டு வருகின்றன.

## மீன்பிடித் துறைமுகங்களும், மீன்களைக் கரை சேர்ப்பதற்கான துறைகளும்.

இம் மாநில அரசின் அயரா முயற்சியின் பயனாக ரூ. 210 லட்சம் செலவில் தூத்துக்குடியில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற இந்திய அரசு முன்வந்தது. இத் துறைமுகப் பணி 1968–69-ல் மேற்கொள்ளப் பட்டது. பணி நடந்தேறி வருகிறது. துறைமுகம் 1972–73 இறுதிக்குள் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இராமேஸ்வரத்திலும், மண்டபத்திலும் இரு மீன்பிடித் தோணித் துறைகளைக் கட்டுவதற்கான திட்டம் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 1968–69-இல் ஒப்புதலளிக்கப்பட்டது. பணி விரைந்து நிறைவேறி வருகிறது. கடலூரார் ( II நிலை), நாகப்பட்டினம் துறைமுகப் பணிகளும் நடந்து வருகின்றன. அவை 1971–72-இல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1969–70-இல் ரூ. 27.87 லட்சம் செலவிடப்பட்டது. 1970–71-ல் ரூ. 49.91 லட்சம் மேற்படி திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டது. மேற்சொன்ன துறைமுகப் பணிகளுக்காக 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 101.53 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய அரசுத் துறைத் திட்டத்தின் கீழ் ரூ. 388 லட்சம் செலவில் சென்னையில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றைக் கட்ட இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப் பணி சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தால் நிறைவேற்றப்படும். இத் துறைமுகத்திற்கான வடிவமைப்பு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பூனாவிலுள்ள மத்திய நீர்–மின் ஆராய்ச்சி நிலையத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த வடிவமைப்புக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு அது இந்திய அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், இப் பணியைச் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் மேற்கொள்ளும்.



## இந்திய–நார்வே திட்டம்.

நார்வே நாட்டுத் தொழில் நுட்ப இயந்திர உதவியுடன் மீனளத் திட்டம் ஒன்று 1963 நவம்பர் திங்களில் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில், தொடங்கி வைக்கப்பட்டது. படகு கட்டும் தளம், மீனளப் பயிற்சி நிலையம், பனிக்கட்டித் தொழிற்சாலை, குளிர்சாதன அறை, மீன்களை உறையவைக்கும் பிரிவு, மீன் மாவுத் தொழிற்சாலை, மீன்பிடி படகுகளை நிறுத்திவைப்பதற்கான வசதிகள். மீனவர் குடியிருப்பு ஆகியவை இத் திட்டத்தின் கீழ் அடங்கும். இப் பணிகள் அனைத்தும் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டு, மீனவர் புதுக் குடியிருப்பு நீங்கலாக மற்ற பணிகள் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன. மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளையும் படகுகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளையும் ஏற்படுத்துவதற்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. இத் திட்டத்திற்காக ரூ. 36.43 லட்சம் பெறுமான பொறிகளை நார்வே நிறுவனம் வழங்கியுள்ளது. இத் திட்டத்திற்காக முதலில் வழங்கப்பட்ட 81 ஆழ்கடல் பொறிகளும் இதில் அடங்கும். இத் திட்டத்தை நிறுவ மாநில அரசுக்கு ஏறத்தாழ ரூ. 66 லட்சம் செலவு ஏற்பட்டுள்ளது.

ஐம்பது டன் பொடி மீன் (Trash Fish) மீன் கழிவு இவற்றை மீன் மாவாக மாற்றுவதற்கான திறனுள்ள மீன் மாவுத் தொழிற்சாலை இப்போது கட்டி முடிக்கப்பட்டு விட்டது. நார்வே பொறியாளர்கள் இத் தொழிற்சாலையில் சோதனை அடிப்படையில் பணிகளை நடத்தி வருகின்றனர். இத் தொழிற்சாலை வணிக ரீதியில் உற்பத்தியை விரைவில் தொடங்கும்.

## இந்திய–பெல்ஜிய மீனளத் திட்டம்.

கட்டுமரங்களில் விசைப் பொறிகளை அமைக்கும் திட்டத்தின் முதல் நிலை, கன்னியாகுமரி மாவட்டம் முட்டத்திலுள்ள கோட்டார் சமூகப் பணிச் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்குப் பெல்ஜியம் பசிப் பிணியொழிப்பு இயக்கக் குழு (Belgium Freedom From Hunger Compaign) உதவி அளிக்கிறது. இப்பணி 1970 டிசம்பர் திங்களில் முடிவடைந்துள்ளது. 100 நாட்டுப் படகுகளில் விசைப் பொறிகளை அமைத்துள்ளது. எந்த அளவுக்கு வெற்றிகரமாகச் செயல்பட்டுள்ளது என்பதை இத்துறை ஆய்ந்து வருகிறது. இதன் அடிப்படையில் இரண்டாவது நிலையில் இப் பணியை விரிவுபடுத்துவதே நோக்கமாகும். இரண்டாவது நிலைப் பணி முடிவடைந்தவுடன் மீனள உற்பத்தி அதிகரிப்பதுடன் இத் திட்டப் பகுதியைச் சுற்றி வாழ்ந்துவரும் மீனவர்களின் சமூக-பொருளாதார நிலை மேம்படுமென்றும் கருதப்படுகிறது. இந்த இரண்டாவது நிலைப் பணிக்கு பெல்ஜியம் பசிப் பிணி ஒழிப்பு இயக்கக் குழு மேற்கொண்டும் உதவி செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முத்துக் குளித்தல்.

தூத்துக்குடி முத்துக் குளிக்கும் கரை, உலகில் இன்று நல் முத்துக்கள் கிடைக்கும் இடங்கள் சிலவற்றில் ஒன்றாகும். இங்கு ஆண்டுதோறும் முத்துக்கள் கிடைப்பதில்லை. 1805 முதல் 1961

வரையில் 27 முறைகள்தான் முத்துக்குளிப்பு நடந்துள்ளது. முத்துச் சிப்பிகள் கிடைக்கும் இடங்களைப்பற்றிக் குறித்த காலத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்வதன் மூலம் அறிவியல் முறையில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. 1970-இல் கடைசியாக நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் முத்துச் சிப்பிகள் அதிகமாகக் காணப்படவில்லை யென்றும், இப்போது முத்துக்குளித்தல் நடத்த அவை போது மானவையல்ல வென்றும் தெரியவந்தது.

### சங்கு எடுப்போருக்கு உதவியளித்தல்.

இதுவரை தமிழ்நாட்டிலுள்ள சங்கு குளிக்கும் துறைகள், துறையால் இயக்கப்பட்டன. அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிக ஒப்பந்த விலை கேட்பவர்களுக்குக் குத்தகைக்கு விடப் பட்டன. சங்கு குளிக்கும் ஏழை எளியமக்களுக்கு உதவும் பொருட்டு, அரசு அண்மையில் ஒரு முடிவெடுத்தது. அதாவது, தூத்துக்குடி சங்கு குளிக்கும் துறை நீங்கலாக தமிழ்நாட்டின் கடற்கரை முழுவதும் உரிமம் பெற்ற சங்கு குளிப்போர் தாராளமாக சங்கு குளிக்கும் பகுதியாய் இருக்குமென அரசு முடிவெடுத்துள்ளது. முற்போக்கான இந்த ஏற்பாட்டின் காரணமாக, ஏராளமான சங்கு குளிப்போர் ஒரு சில தனிப்பட்டவர்களுக்குச் சங்குகளை ஒப்புவிக்கும் பொறுப் பிலிருந்து விடுபடுகின்றனர். சங்குகளை விற்பனை செய்யக் கூட்டுறவு சங்கங்களை அமைக்குமாறு அரசு ஆலோசனை கூறியுள்ளது. தூத்துக்குடி சங்கு குளிக்கும் துறையைப் பொறுத்தவரையில் சங்கு குளிப்போரின் பணிகளை முறைப்படுத்தி சங்குகளைச் சேகரித்து அவற்றை விற்பனை செய்யும் பணியைத் துறையே தொடர்ந்து செய்து வரும்.

### மத்திய மீனளக் கழகம்.

கல்கத்தாவிலுள்ள மத்திய மீனளக் கழகத்தில் பங்கு மூலதனமாக மாநில அரசு ரூபாய் மூன்று லட்சம் முதலீடு செய்துள்ளது. நியாய மான விலைகளில் துய்ப்போருக்கு மீனை வழங்குவதும், அதே சமயத்தில் நியாயமான விலையை மீனவர்கள் பெறுவதற்கும் வகை செய்வதே இந்தக் கழகத்தின் பொது நோக்கங்களாகும். மேற்கு வங்காளத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்காகவும் சென்னை மாநகரில் சில்லரையில் விற்பனை செய்வதற்காகவும் நமது நீர்த் தேக்கங்களிலிருந்து மத்திய மீனளக் கழகத்திற்கு வழக்கமாக மீன்கள் ஏற்றியனுப்பப்படுகின்றன. இதனால் நமது மாநிலத்தில் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு நியாய விலை கிடைப்பது உறுதியாகிறது.

### ஏற்றுமதி.

1969–70-இல் தமிழ்நாடு சுமார் ரூ. 2.49 கோடி மதிப்புள்ள மீனையும், மீன் பொருட்களையும் ஏற்றுமதி செய்துள்ளது. இலங்கைக்கு உலர்ந்த மீனையும், அமெரிக்காவிற்கும், ஜப்பானுக்கும் உறைந்த இறால் மீன்களையும் ஏற்றுமதி செய்ததன் மூலம் இந்த வருமானத்தில் பெரும் பகுதி ஈட்டப்பட்டது.



## இணைப்பு 2.

[284-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## தமிழ்நாடு சின்கோனாத்துறையைப் பற்றிய குறிப்பு.

### அ. பிரிவு.

### முகவுரை.

சின்கோனாத்துறை தமிழ்நாடு அரசின் தொன்மை வாய்ந்த வணிக நிறுவனங்களில் ஒன்றாகும். நீலகிரி மாவட்டத்திலும், கோயம் புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆனைமலைப் பகுதிகளிலும் இந்தத் துறைக்கு சின்கோனா, பிற மூலிகைச் செடிகள், மணமுள்ள தைலங்கள் நல்கும் செடிகள் உள்ளன. ஆனைமலைப் பகுதியில் கொய்னா பொருட் கள் தயாரிப்புத் தொழிற்சாலை யொன்றையும், மருத்துவப் பயனுள்ள நீலகிரித் தைலம், ஜெரேனியம் தைலம், கற்பூரத் தைலம், ஜாவா தைலம் போன்ற தைலங்களைத் தூய்மையாக்கி சோதித்து, தரப் படுத்தும் வேலைக்காக நடுவட்டத்தில் மற்றுமொரு தொழிற் சாலையையும் இத் துறை நடத்துகிறது.

### 2. இத் துறையின் அலுவல்கள்.

சின்கோனா பயிரிடுதல், சின்கோனாப் பட்டை எடுத்தல், பல்வேறு கொய்னாப் பொருட்களைப் பிரித்தெடுத்தல், தயாரித்தல், அவ்வுற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளிலும் உள்நாட்டுச் சந்தைகளிலும் விற்பனை செய்தல் ஆகியவை இத் துறையின் தலையாய பணியாகும். இதன் தொடர்பாக, இத் துறையின் வருவாயைப் பெருக்கவும், இந்நாட்டில் மருந்து மணங்கமழ் தைலங்களுக்கு அதிகரித்து வரும் தேவையினைக் கருத்தில் கொண்டும், மருந்து மணங்கமழ் பொருட்களை நல்கும் பல்வேறு வகையான செடிகளை இத்துறை பயிரிடுகிறது. இவற்றிலிருந்து கிடைக்கின்ற பொருட்களை செய்முறைப்படுத்தி இந்நாட்டிலுள்ள மருந்துத் தொழிற்சாலைகள் நறுமணப் பொருட் கள், ஒப்பனைப் பொருட்கள், சோப்புகள் முதலியன தயாரிக்கும் தொழிற்சாலைகளில் கொள்முதல் செய்வோருக்கு விற்பனை செய்து வருகிறது.

மலேரியா நோயைக் குணப்படுத்தும் சஞ்சீவியாகிய கொய்னா, சின்கோனா மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சாதாரண தடுமன், காய்ச்சல் முதலிய நோய் தணிப்பதற்குப் பயனாகும் பல்வேறு மருந்துகள் தயாரிப்பதற்கும் கொய்னா தற்பொழுது பயன்படுத்தப் படுகிறது. இதய நோய்கள் தணிப்பதற்கு கொய்னா பயன்படுத்தப் படுகிறது. சின்கோனா மரம் தென் அமெரிக்காவைச் சேர்ந்தது. இது முதன் முதலில் 1859-ஆம் ஆண்டு இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டது. தென்னிந்தியாவில் சின்கோனா மரங்கள் சுமார் 3,000 அடி உயரத்தில் தான் செழித்து வளர்கின்றன. இம்மரத்தில் கொய்னா மருந்து தயாரிப்பதற்குத் தகுதியுள்ள முதிர்ந்த பட்டை பிடிப்பதற்கு எட்டு முதல் பத்தாண்டு காலம் ஆகிறது.

தேயிலை, காப்பி, ரப்பர் முதலிய செடிகளைப்போல், சின்கோனா அவ்வளவாக ஆதாயம் தராத காரணத்தால், தனிப்பட்ட மலைத்

தோட்டக்காரர்கள் பெரும் பரப்பில் இதைப் பயிர் செய்வதில்லை. இருப்பினும் கொய்னாவின் நோய்த் தடுப்பு ஆற்றலைக் கருத்தில் கொண்டு மலேரியா நோய் தடுப்பில் இந்தியாவின் கொய்னாத் தேவையை நிறைவு செய்ய தமிழ்நாடு அரசு இதனைப் பயிரிட வேண்டியதாயிற்று. இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர கொய்னா உற்பத்தி செய்யும் ஒரே மாநிலம் மேற்கு வங்காளம்தான்.

## 3. பல்வகை மரங்கள் வளர்க்கப்படும் பரப்பளவு.

1970-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் நாள் நிலவரப்படி இத்துறையின் தோட்டங்களில் சின்கோனா மருத்துவப் பயனுள்ள மணங்கமழ் தைல மரங்கள் ஆகியவை வளர்க்கப்படும், பரப்பளவு கீழே தரப்பட்டுள்ளது :—

| தொடர் எண்ணும் மரத்தின் பெயரும். | நீலகிரித் தோட்டங்கள். | ஆனைமலைத் தோட்டங்கள். | மொத்தப் பரப்பளவு. |
|---|---|---|---|
| | (ஹெக்டேர்களில்.) | | |
| 1. சின்கோனாத் தோட்டங்கள். | 441 | 1,875 | 2,316 |
| 2. மருத்துவப் பயனுள்ள, மணங் கமழ், தைலப் பொருட்களைத்தரும் ஏனைய தோட்டங்கள் .. .. | 353 | 131 | 486 |
| மொத்தப் பரப்பு .. | 794 | 2,008 | 2,802 |

## 4. தொழிற்சாலைகள்.

### (அ) ஆனைமலையிலுள்ள அரசு கொய்னா தொழிற்சாலை.

இத்தொழிற்சாலை சின்கோனா பட்டையிலிருந்து பல்வேறு கொய்னாப் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. ஓர் ஆண்டிற்கு 20,000 கிலோ கிராம் கொய்னா சல்பேட்டும், 17,000 கிலோ கிராம் மலேரியா காய்ச்சல் தணிக்கும் சின்கோனா மருந்தும் தயாரிக்கும் வகையில் இத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. ஆனால் ஓர் ஆண்டில் 16,000 கிலோகிராம் கொய்னா சல்பேட்டும், 12,000 கிலோ கிராம் மலேரியா, காய்ச்சல் தணிக்கும் சின்கோனா மருந்தும் தயாரிப்பதே இத் தொழிற்சாலையின் சாதாரண உற்பத்தித் திறனாகும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட முக்கியமான பொருள் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் பெயர். | ஆண்டு. | | |
|---|---|---|---|
| | 1968-69 | 1969-70 | 1970-71 |
| | | (கிலோ கிராமில்.) | |
| 1 கொய்னா சல்பேட் .. .. | 14,454 | 14,555 | 12,434 |
| 2. மலேரியா காய்ச்சல் தணிக்கும் சின்கோனா மருந்து | 15,627 | 13 853 | 11,199 |
| 3. கோயினா நீரகப் பாசிதை (ஹைட்ரோகுளோரைடு) . | 11.753 | 6,731 | 7,207 |
| 4. க்வினிடைன் சல்பேட் .. | இல்லை. | இல்லை. | 20 |



### (இ) நீலகிரி நடுவட்டத்திலுள்ள மருந்து தைலத் தொழிற்சாலை.

இத் தொழிற்சாலை பல்வேறு மருத்துவத் தைலங்களையும், மணங் கமழ் தைலங்களையும் சோதித்து, தூய்மை செய்து, தரப்படுத்தி, சிப்பம் கட்டும் பணிகளைச் செய்கிறது. 1970–71-ம் ஆண்டில் தரப் படுத்திய தைலத்தின் மொத்த அளவு 6,500 கிலோகிராமாகும். அத்தொழிற்சாலை அத் தைலங்களின் உற்பத்தியையும் தரத்தையும் பெருக்கும் ஆராய்ச்சிப் பணியினையும் செய்து வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இவ்வாலையில் தூய்மைப்படுத்தி தரப்படுத்தப்பட்ட தைலங்களின் மதிப்பு வருமாறு :—

| | ரூ. |
|---|---|
| 1968–69 ... ... ... ... | 4,60,400 |
| 1969–70 ... ... ... ... | 5,53,900 |
| 1970–71 ... ... ... ... | 8,16,000 |

## 5. சின்கோனாத்துறை செய்த விற்பனையும் ஈட்டிய வருவாயும்.

### (அ) கொயினாப் பொருட்களின் விற்பனை.

1964-ம் ஆண்டிலிருந்தே வெளிநாடுகளில் கொய்னாப் பொருட் களுக்கு மிகுந்த தேவை இருந்து வந்திருக்கிறது. கொயினாப் பொருட்களின் விலை கிடுகிடுவென ஏறிவந்தது. ஆனால் 1967–68-ல் அவற்றின் விலை சிறிது குறைந்தது. இவ்வாண்டிலிருந்து அவற்றின் விலை ஏறுமுகமாக உள்ளது. இவற்றின் தேவையும் பெருகி வருகிறது.

ஏற்றுமதி வாயிலாகவும், உள்நாட்டு விற்பனை மூலமாகவும் கடந்த மூன்றாண்டுகளில் கொயினாப் பொருட்கள் விற்பனையால் கிடைத்த வருவாய் வருமாறு :—

| ஆண்டு. | | | ஏற்றுமதி விற்பனை. | இந்தியா விற்குள் விற்பனை. | மொத்த விற்பனை. |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1968–69 | .. | .. | 37·94 | 6·37 | 44·31 |
| 1969–70 | .. | .. | 26 96 | 11·94 | 38·90 |
| 1970–71 | .. | .. | 20·84 | 13·69 | 34·53 |

இந்தியாவிற்குள் கொயினா மலிவு விலையில் விற்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிற்குள்ளும் குறைந்த விலைக்கு அஞ்சலகங்கள் மூலம் கொய்னா விற்கப்படுகிறது. கொய்னா மருந்து செய்முறைத் தயாரிப்புக்குத் தேவையான சின்கோனா பட்டை போதிய அளவு கிடைக்காததால் கொய்னா உப்பு உரிய அளவில் தயாரிக்கப் படவில்லை. கடந்த மூன்றாண்டுகளில் வருவாயில் ஏற்பட்ட படிப்படி யான குறைவிற்கு இதுதான் முக்கிய காரணமாகும்.

[1971 ஜூலை 23

## (இ) மருந்து, நறுமணத் தைலங்களின் விற்பனை.

இந் நாட்டில் இத்தைலங்களுக்கு அதிகத் தேவையுள்ளது. கடந்த மூன்றுண்டுகளில் இந்தத் தைலங்களை விற்றதன் மூலம் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

| ஆண்டு. | விற்பனை மதிப்பு. ரூ. லட்சம். |
|---|---|
| 1968–69 ... ... ... ... ... | 4.81 |
| 1969–70 ... ... ... ... ... | 6.01 |
| 1970–71 ... ... ... ... ... | 8.16 |

## 6. ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்.

1970–71-ஆம் ஆண்டில் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இத்துறையால் நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு :

1. மருந்துச் செடிகள், மணங்கமழ் தைலச்செடிகள் வளர்ப்பதை வணிக அளவில் பெருக்கும் திட்டம்.

2. மருந்து தயாரிப்புக்கான, நறுமணத்தைலச் செடிப்பொருட்களுக்கு முன்னேடித் திட்ட அளவில் செய்முறை உருவாக்கும் திட்டம்.

3. மும்முரமான ஆராய்ச்சியையும், வளர்ச்சி முறைகளையும் கையாண்டு மருந்து தயாரிப்புக்கான நறுமணத்தைலச் செடிகளை நட்டு வளர்க்கும் திட்டம்.

4. அதிக அளவில் கொயினவையும் குவினிடினையும் தரவல்ல செடிவகைகளைப் பரப்பும் திட்டம்.

5. சின்கோனத் துறையின் அதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் தொழிலாளர்களுக்கும், பலன் தரும் வகையில் கட்டடங்கள், சாலைகள் முதலிய பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம்.

6. சின்கோனத் துறையின் இரண்டு தொழிற்சாலைகளுக்கும் தேவையான இயந்தர சாதனங்களை வாங்கும் திட்டம்.

7. ஆனைமலையிலுள்ள அரசு கொய்னு தொழிற்சாலையைச் சேர்ந்த ஆய்வுக்கூடத்திற்குச் சாதனங்கள் வாங்கும் திட்டம்.

8. ஆனைமலை அரசு கொய்னு தொழிற்சாலைக்காக, மருந்து வடிகட்டும் கருவிக்கு வகை செய்யும் திட்டம்.

இத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இத்துறை நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது.



1971 ஜூலை 23]

## 7. இத் துறையின் நிதியமைப்பு.

1970-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ஆம் நாள் நிலவரப்படி இத் துறையின் மொத்த இருப்புகளின் மதிப்பு ரூ. 2,53,90,452 ஆகும். இந்த இருப்பு பற்றிய விவரம் தனித்தனித் தலைப்புகளில் கீழே தரப்பட்டுள்ளது :—

நிலையியல் இருப்புகள் :

| | ரூ. | காசு. |
|---|---|---|
| அ. சின்கோனத் தோட்டங்கள் .. .. | 61,31,797 | 00 |
| இ. விறகு, மருந்து தைலச் செடிகள் .. | 10,39,704 | 00 |
| உ. கட்டடங்கள், சாலைகள், தொழிற்சாலைகள், இயந்திரத் தளவாடங்கள், மோட்டார் வண்டிகள் முதலான இருப்புகள் .. .. | 61,39,408 | 00 |
| தற்காலிக இருப்புகள் : | | |
| பண்டங்கள், வேலை நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவை .. .. .. | 1,20,79,543 | 00 |
| மொத்தம் .. | 2,53,90,452 | 00 |

## 8. இத் துறை ஈட்டிய ஆதாயம்.

1969–70-ஆம் ஆண்டு இறுதியில் இத்துறை ரூ. 7,53,179.00 ஆதாயம் ஈட்டியது. ஏறத்தாழ இதேபோன்ற ஆதாயம் 1970–71-ஆம் ஆண்டிலும் இத் துறையால் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆ. பிரிவு.

### இத் துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்.

டில்லியில் 1967-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ஆம் நாளில் நடைபெற்ற கொயினு மாநாட்டில் மலேரியா நுண்ணுயிர்கள், மலேரியா நோய் நீக்கும் செயற்கை மருந்துகளை எதிர்த்து நிற்கும் ஆற்றல் அடைந்துள்ளதால், நாட்டில் மலேரியா நோய் பரவலாகவும் கடுமையாகவும் ஏற்படுமானல் அதைக் கட்டுபடுத்துவதற்காக, கொயினப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று இந்திய அரசு கருத்துத் தெரிவித்தது. அனைத்து நாட்டு அங்காடிகளில் நிலவும் போக்கை யொட்டி இத் துறையினரால் உற்பத்தி செய்யப்படும் கொயினப் பொருட்களுக்குத் தொடர்ச்சியான தேவை இருக்குமென்றும், அதனல் இன்னும் சில காலத்திற்கு இப் பொருட்களை ஆதாய விலைக்கு விற்க முடியுமென்றும் துணிவாகக் கூறலாம். இந்நாட்டில் கொயினு உற்பத்தியை அதிகரிக்கும் வழிவகைகளை ஆராய வேண்டி இந்திய அரசினரால் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு உள் நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளில் கொயினப் பொருட்களுக்குப் பெருகிவரும் தேவையைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு அரசு தனது சின்கோனத் தோட்டங்களை மேம்பாடு செய்து பயிரிடும் பகுதிகளையும் பெருக்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

2. பட்டையிலிருந்து கொயினு மருந்து இறக்கும் அளவுக்கு முதிர்ச்சி அடைந்த நல்ல பட்டைகள் கிடைப்பதற்கு சின்கோனு

பயிரிடப்பட்ட நாளிலிருந்து சுமார் 8 முதல் 10 ஆண்டுகள் ஆகின்றன. சின்கோனு அதிக அளவில் பயிரிடப்பட்டு சுமார் எட்டு முதல் பத்து ஆண்டுகள் கழித்து அம்மரங்கள் பலன் தரத் தொடங்கும் போது கொயினுப் பொருட்களின் விலை குறைந்தால், அவற்றின் விலை மீண்டும் உயரும் வரையில் இத் துறைக்குத் தொடர்ந்து விரயம் ஏற்படும்.

3. மேற்கூறிய எல்லாக் கூறுகளையும் கருத்திற் கொண்டு, சின்கோனு பயிரிடும் பரப்பை 2,630 ஹெக்டேருக்குப் (6,500 ஏக்கரா) பெருக்க வேண்டும் என்றும், அவ்வாறே தொடர்ந்திருக்கச் செய்ய வேண்டுமென்றும் மாநில அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. இதற்குத் தேவையான பணியாளர்களை இத் துறையில் நியமிப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1970-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் நிலவரப்படி சின்கோனு பயிரிடப்படும் பரப்பளவு 2,316 ஹெக்டேர் ஆகும். இப் பரப்பளவை 2,630 ஹெக்டேர் அளவுக்கு உயர்த்தும் நோக்கத்துடன் புதிய பகுதிகளில் பயிரிடுவதற்கான ஏற்பாடுகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

4. மருந்து தயாரிப்புக்கான நறுமணத் தைலம் வடிக்கக்கூடிய செடிகளைப் பயிரிடும் அளவைப் படிப்படியாக உயர்த்த வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இத் துறை இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

5. வெளிநாட்டுச் சந்தைகளில் கொயினு உப்புகளுக்கு ஆதாயமான விலைகள் இருப்பதைக் கருத்திற் கொண்டு வெளிநாடுகளின் தேவையைச் சமாளிக்கவும் அதன் வாயிலாக இத்துறைக்கு ஆதாயம் ஈட்டவும் அதன் உற்பத்தியை முடிந்த அளவுக்குப் பெருக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. 1964-ஆம் ஆண்டில் கொயினு ஏற்றுமதி வாய்ப்பு திடீரென்று அதிகரித்தபோது, இத்துறை தன்னகத்தேயுள்ள எல்லா வசதிகளையும் முனைப்பாகப் பயன்படுத்தித் தேவையை ஈடு செய்ய முற்பட்டது. அதற்காக சின்கோனுப் பட்டையைப் பெருமளவில் வெட்டி எடுப்பதற்காக ஒப்பந்த முறைகளையும் பணியாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் முறைகளையும் செயல்படுத்தியது. மேலும், உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் கொய்னுப் பொருட்களின் தரத்தை உயர்த்தவும் செய்முறைத் தயாரிப்புக் கால அளவை ஓரளவு குறைப்பதற்காகவும் தரத்தை மேலும் உயர்த்தவும் தொழிற்சாலையில் கூடுதலான கருவிகளும், இயந்திரங்களும் நிறுவப்பட்டன. அயல் நாடுகளில் கொய்னு சல்பேட்டை விட கொய்னு நீரகப் பாசிதைகளையே (Hydrochloride) பெரிதும் விரும்பிக் கேட்பதாகத் தெரிந்தது. சிறப்பான முயற்சிகள் எடுத்ததன் வாயிலாக தொழிற்சாலையில் கீழ்க்கண்ட ஆண்டுகளில் கொய்னு நீரகப் பாசிதை தயாரிக்கப்பட்ட அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | கி. கிராம். |
|---|---|
| 1967–68 ... ... ... ... ... | 2,521 |
| 1968–69 ... ... ... ... ... | 11,756 |
| 1969–70 ... ... ... ... ... | 6,731 |
| 1970–71 ... ... ... ... ... | 7,207 |





தோனேசியாவிலிருந்து சின்கோனுப் பட்டையை இறக்குமதி ய்து தொழிற்சாலையில் பட்டையைச் செய்முறைக்குட்படுத்தி ாய்னுப் பொருட்களை ஏற்றுமதி செய்து அதன் மூலம் அதிக ளவில் ஆதாயம் பெறுவதற்கான முயற்சிகள் அனைத்தும் இத்துறை னுல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. சின்கோனுத் தோட்டங்களில் பயிரிடப்படுகின்ற தரப்பிலும் சின்கோனுத் துறையின் தொழிற்சாலையுடன் இணைந்துள்ள ஆய்வுக் கூடங்களில் தயாரிப்புத் தரப்பிலும் ஆராய்ச்சிகள் நடத்தப் படுகின்றன. இத் துறையினுல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) மலேரியா காய்ச்சல் தணிக்கும் சின்கோனு மருந்திலிருந்து கொய்னு, கொய்னு படிகவில்லை (guinidine) மருந்துகளை தயாரித்தல்.

(2) மேம்படுத்தப்பட்ட சிக்கனமான முறையில் நச்சுத்தடை பொருந்தியுள்ள சினியோல் தயாரித்தல்.

(3) நறுமணக் கற்பூரத் தைலம் தயாரித்தல்.

(4) இஞ்சியிலிருந்து பிசுவரக்குக் கலவை (oleoresain) தயாரித்தல்.

(5) மருந்து தயாரிக்கப்பட்டபின் சின்கோனு பட்டையிலிருந்து வீரியகரியம் (activated carbon) தயாரித்தல்.

(6) சின்கோனின், சின்கோனிடைன் ஆகியவற்றைப் பிரித்தெடுத்தல்.

(7) தெரிந்தெடுத்த சிம்போலின் விண்டேரியன்ஸ் வகைகளைத் தனியே பிரித்தெடுத்தல்.

(8) இத்துறையைச் சேர்ந்த தோட்டங்களின் மண்வள மாதிரி பார்த்தலும் சோதனையிடுதலும்.

இ. பிரிவு.

1971–72-க்கான திட்டம்.

சின்கோனுத் துறையின் 1971–72-ம் ஆண்டிற்கான திட்டங்களின் முக்கியக் கூறுகளாவன:—

(1) இலங்கை அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க 30 ஹெக்டேரில் புதிதாகச் சின்கோனு பயிரிடுதல்.

(2) உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு சுமார் 575 ஹெ டேர் பரப்பளவில் தற்போது உள்ள சின்கோனுத் தோட்டங்களி கன்றுகள் நடுவதன் மூலம் சின்கோனு உற்பத்தியை நிலைப்படுத்தல்.

(3) வான்பதியம், தரைப்பதியம், செடி இருக்கும் இடத்திலே பதியம் போடுதல், அரும்பவைத்தல் ஆகியவை மூலமாக சும 6 லட்சம் மேம்படுத்தப்பட்ட சின்கோனு செடி வகைகளை (அதா பட்டையில் அதிக சதவீத குனேன், குவினிடைன் மருந்துப் பொருள் அடங்கிய செடி வகைகள்) அதிகப் பரப்பளவில் பயிரிடுதல்.

[1971 ஜூலை 23

(4) சுமார் 12,000 கிலோகிராம் கொய்னு சல்பேட், சுமார் 10,000 கிலோகிராம் மலேரியா காய்ச்சல் தணிக்கும் சின்கோனு மருந்து, சுமார் 6,000 கிலோகிராம் கொய்னு நீரகப் பாசிதை ஆகிய வற்றைத் தயாரித்தல். இவற்றின் மதிப்பு ரூ. 49 லட்சமாகும்.

(5) சுமார் 80 ஹெக்டேர் பரப்பளவில் மருந்து நறுமணத் தைலங்கள் தயாரிக்கக் கூடிய தாவரங்களைப் புதிதாகப் பயிரிடுதல்.

(6) சுமார் 11,000 கிலோகிராம் மருந்து, நறுமணத் தைலங்கள் தயாரித்துத் தரப்படுத்துதல். இவற்றின் மதிப்பு ரூ. 10 லட்சமாகும்.

(7) ஐந்தாண்டு திட்டப் பணிகளைத் தொடர்ந்து செயற்படுத்துதல்.

(8) மேலே குறிப்பிட்ட பல்வேறு ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்ந்து செய்தல்.

(9) இத் துறையைச் சேர்ந்த தொழிற்சாலைகளில் சின்கோனு பட்டைகளைச் செய்முறைக்குட்படுத்தி, கொய்னுப் பொருட்கள் தயாரித்து, அவற்றை ஏற்றுமதி செய்து, அதன் மூலம் துறைக்கு அதிக ஆதாயம் ஈட்டுவதற்காக அயல்நாடுகளிலிருந்து சின்கோனு பட்டைகள் வாங்குதல்.

## நிதிநிலை கணிப்பு.

1971–72-ஆம் ஆண்டில் இத்துறைக்குத் தோராயமாக ரூ. 62 லட்சம் வருவாய் கிடைக்கும் என்றும் ஆண்டு முடிவில் ரூ. 15.62 லட்சம் நிகர ஆதாயம் கிடைக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## இணைப்பு 3.

## காடுகள் துறை மானியக் கோரிக்கை.

[284-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1970–71-இல், காடுகள் துறை நிர்வாகம் குறித்த முக்கியக் கூறுகளும் 1971–72-ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களும்.

பரப்பளவு.—காடுகள் துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 20,964 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,232 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கக் காடுகளாகும் 3,732 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கப்பட்ட நிலங்களாகும். இந்தியாவில் உள்ள காடுகளின் சராசரி பரப்பளவு 22 சதவீதமாக இருக்க, தமிழ்நாட்டில் உள்ள அடவிகளின் பரப்பளவு 16 சதவீதமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனல், காடுகள் வளர்ப்புக்குரிய தேசியக் கொள்கையின் குறிக்கோள் அளவு 33 சதவீதமாகும். நமது மாநில நபர்வாரி காடுகள் பகுதி 0.05 ஹெக்டேராயிருக்க, அனைத்திந்தியச் சராசரி 0.15 ஹெக்டேராகும். நீண்ட காலப் பொருளாதார நலங்களையும் மக்களின் பொதுநல வாழ்வையும் கருதிப் பார்க்கையில் குறைந்த



1971 ஜூலை 23]

அளவு இருக்க வேண்டிய காட்டு நிலைப்பகுதியைக் காட்டிலும், காடுகளின்கீழ் இப்போதுள்ள நிலப்பகுதி மிகவும் குறைவாகவே உள்ளது. எனினும் மக்கள்தொகை செறிந்துள்ளதனல் காட்டு நிலப்பகுதிகளை வேளாண்மைக்காகவும், ஏனைய பயன்களுக்காகவும் விடுவித்துத் தருமாறு மக்கள் இடைவிடாமல் தொடர்ந்து கேட்டு வருகின்றனர்.

### வெட்டுமர உற்பத்தியும், மற்ற காடுபடு பொருள்களும்.

அதிக மதிப்புடைய வெட்டுமரக்காடுகள் பொதுவாகத் துறையினராலேயே வெட்டப்படுகின்றன. வெட்டி எடுக்கப்படும் மரங்கள் அரசு விற்பனை நிலையங்களில் ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. 1970–71-இல் வெட்டு மர உற்பத்தி அளவு 16,181 கன மீட்டராகும். இத்துடன் 16,352 அகல இருப்புப்பாதை அடிக்கட்டைகளும், 5,281 குறுகிய இருப்புப் பாதை அடிக்கட்டைகளும் ரயில்வேத் துறையினருக்கு வழங்கப்பட்டு அதன் மூலம் ரூ. 5.37 லட்சம் வருவாய் கிட்டியது. 1970–71-இல் காடுகளிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட விறகு மரங்களின் அளவு ஏறத்தாழ 1.39 லட்சம் கன மீட்டராகும்.

வருவாய் ஈட்டும், பிற முக்கியமான காடுபடு பொருள் சந்தன மரமாகும். அறிக்கைக்குட்பட்ட இவ்வாண்டில் திருப்பத்தூர், சத்தியமங்கலம் விற்பனை நிலையங்களில் 1,417.50 டன் சந்தனமரம் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் ரூ. 122.47 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இது மட்டுமல்லாமல், சந்தனமரச் சிராய்கள் ரூ. 0.48 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்ட முந்திரி மர வளர்ப்புப் பணி ஆண்டுதோறும் விரிவடைந்து வருகிறது. தற்போது முந்திரி வளர்க்கப்படும் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 30,000 ஹெக்டேராகும். இதற்கு முந்திய ஆண்டுகளில் வளர்க்கப்பட்ட முந்திரித் தோட்டங்கள் இப்போது முழுப் பலனளிக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாண்டில் முந்திரி குத்தகை உரிமை விற்பனை மூலம் கிடைத்த வருவாய் ரூ. 13 லட்சமாகும்.

காடுகள் துறை, கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை 2,300 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்களை வளர்த்துள்ளது. இதில் 351 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர்பால் இறக்கும் நிலையில் மரங்கள் முதிர்ச்சியடைந்துள்ளன. 1970–71-இல் ரப்பர் தோட்டங்களில் உற்பத்தியான ரப்பர் அளவு ஏறத்தாழ 188.103 டன்னுகும். கிடைத்த வருவாய் ரூ. 8.67 லட்சமாகும். இவ்வாண்டில் கீரிப்பாறை ரப்பர் தோட்டத்தில் ரூ. 7.00 லட்சம் செலவில் ரப்பர் விரிப்பு, செருப்பு அடிக்கட்டை, கெட்டி ரப்பர் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

காடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களாவன: அரக்கு, அரக்குப் பொருள்கள், தோல்பதனிடும் மரப்பட்டைகள், பழங்கள், தேன், புளி, தந்தம், விலங்குக் கொம்புகள் முதலியன.

### காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்டுள்ள பெரிய தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்கள் வழங்குதல்.

இம் மாநிலத்தின் தொழில்வள முன்னேற்றத்தில் காடுகள் மேன் மேலும் முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கியுள்ளன. அண்மை ஆண்டுகளில் மரங்களை மையமாகக் கொண்ட பெரிய தொழிற் சாலைகள் பல இம் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத் தொழிற் சாலைகளுக்கு வேண்டிய மரத்தின் தேவை முக்கியமாக காகிதத் கூழ் தேவை வேகமாகப் பெருகி வருகிறது. ஆகவே, குறுகிய காலத்தில் வெட்டக் கூடிய விரைவில் வளரும் மரவகைகளைப் பெருவாரியாக அதிக அளவில் பயிரிட்டு, தொழிற்சாலைக்கு வேண்டிய மரங்களை உற்பத்தி செய்து தருவது முற்றிலும் அவசியமாகிறது.

காடுகள் துறை, மூங்கில், கற்பூரம், மிலாறுபட்டை, பிரம்பு போன்றவற்றைத் திருவாளர்கள் சேஷசாயி காகிதம், கெட்டி அட்டைகள் தயாரிப்பு நிறுவனம், சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனி, டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட்ஸ் கம்பெனி, சன் காகிதத் தொழிற்சாலை முதலியவற்றிற்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. மென்மரம் வழங்குவதற்காக, ராஜபாளையத் திலுள்ள "மதராஸ் சிப் போர்ட்ஸ்" கம்பெனியுடன் அண்மையில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது. ஆக, இத்துறை இம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது.

மேய்ச்சல்.—காடுகளுக்குள் மேய்ச்சல், அனுமதிச் சீட்டுகள் வழங்குவதன் மூலம் முறைப்படுத்தப்படுகின்றது. மேய்ச்சல் அனுமதிச் சீட்டுகள் மூலம் ரூ. 4.60 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. 1971-ம் வருடம் ஜூலை மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு மேய்ச்சல் கட்டணங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன :—

| | | ரூ. | காசு. |
|---|---|---|---|
| செம்மறியாடுகள் | ஆண்டொன்றுக்கு தலைக்கு | 0 | 50 |
| பசுவும் எருதும் | ,, | 1 | 00 |
| எருமை | ,, | 2 | 00 |
| கழுதையும் குதிரையும் | ,, | 2 | 00 |
| யானை | ,, | 20 | 00 |

### காடு வளர்ப்புக் கலைப் பயிற்சி.

இத்துறையில் வனப்பணியாளர்கள், வனக்காப்பாளர்கள் ஆகி யோருக்கு வைகை அணையில் உள்ள காடுவளர்ப்புக் கலை பயிற்சிப் பள்ளியில் பணிக்காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வனப் பணி யாளருக்கான (Foresters) பயிற்சிக் காலம் ஓராண்டும், வனக் காப்பாளருக்கு (Forest Guards) ஆறு திங்களுமாகும். இந்தப் பள்ளியில் 1970–71-ஆம் ஆண்டில், 30 வனப்பணியாளர்கள், 86 வனக்காப்பாளர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

வன ஆராய்ச்சி.—மாநில வன வளர்ப்பியல் வல்லுநர் ஆராய்ச்சி நிறுவனத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். இந்த நிறுவனம், வன வளர்ப்பியலிலும், மிலாறு (Wattle) கற்பூர மரம், சந்தன மரம்,



முந்திரி போன்ற முக்கியமான மரங்களைக் குறித்தும் ஆராய்ச்சி நடத்துகிறது. சோதனை அடிப்படையில் மர வளர்ப்பு பணிகள் குறிப்பாக அந்நிய மரவகைகள் இம்மாநிலத்தில் வளர்க்கப்படுவது குறித்த சோதனைகள் இம்மாநிலத்தின் பல்வேறு வட்டாரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மண்வளம், தட்பவெட்ப நிலைமைகளில் அவை வளரத்தக்க கூறுபாடுகளை இந்த சோதனைகள் மூலம் கண்டறிவதே இதன் நோக்கமாகும். ஊசியிலை மரங்கள் கூழ் பொருளாகப் பயன்படும் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு பெருவாரியான அளவில் ஊசி இலை மரங்களை வளர்க்கும் நோக்கமும் இருந்து வருகிறது.

மேம்பட்ட விதைகளைத் தயாரித்தல், செடிகளை மேம்படுத்தல், வறட்சி நோய் முதலியவற்றைத் தாங்கிக் கொண்டு நல்ல பயன் தரத் தக்க, வளரக்கூடிய புதிய மர வகைகளைத் தயாரித்தல், ஆகிய பணிகளை முக்கிய நோக்கமாகக் கொண்டு கோயம்புத்தூரில் வன மரபியல் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

வன விலங்குகள்.—வனவிலங்கு அமைப்பு மாநில வனவிலங்குத் துறை அதிகாரியின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது. இம்மா நிலத்தில் ஐந்து வனவிலங்கு உய்விடங்கள் உள்ளன. இந்த உய்விடங்கள், இம்மாநில வன விலங்குகளுக்கு முழுப்பாதுகாப்பு அளிப்பதுடன் பல்வகை விலங்குகள் வளரக்கூடிய தேவையான சூழ் நிலைகளை உருவாக்கித் தந்துள்ளன. சிருலாப் பயணிகளை ஈர்ப்பதில் இந்த உய்விடங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. ஏனெனில் இவை வெளிநாட்டு, இந்திய சிருலாப் பயணிகளைப் பெரிதும் கவரு கின்றன. சிருலாப் பயணிகளுக்கு உறைவிட வசதிகளைப் பெருக்கித் தருதல், மேலும் பல வண்டிகளுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல், சாலைகளை மேம்படுத்துதல் ஆகியவை மூலம் வன விலங்கு உய்விடங் கள் மேம்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

### இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள்.

அகதிகள்.—இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக, காடுகள் துறை இந்திய அரசிடமிருந்து முழுக் கடன் உதவி பெற்று கீழ்காணும் திட்டங்களை மேற்கொண்டுள்ளது:—

(அ) துறையைச் சேர்ந்த தேயிலைத் தோட்டங்கள்.—இத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் ரூ. 5,43.25 லட்சம் மதிப்பீட்டுச் செலவின்கீழ் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதுவரை ரூ. 37.58 லட்சம் செலவில் சுமார் 50 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளது. இத் திட்டப் பகுதியில் இதுவரை 307 அகதிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

1971 ஜூலை 23]

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள்.—அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 124.63 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் தோட்டங்களை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 1970–71-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதுவரை ரூ. 2.78 லட்சம் செலவில் 100 ஹெக்டர் பரப்பளவில் ரப்பர் தோட்டம் வளர்க்கப்பட்டுள்ளன. இதுவரை இத் திட்டப் பகுதியில் 36 அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இலங்கை அகதிகளைக் குடியமர்த்தும் காரியத்திற்காக சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலையில் காப்பித் தோட்டங்களை ஏற்படுத்துவது குறித்தும் இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் முந்திரித் தோட்டங்களை ஏற்படுத்துவது குறித்தும் இத் துறை பரிசீலித்து வருகிறது. கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலையில் தேயிலைத் தோட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஒன்றும் உள்ளது.

கிராமப் பணிகள் சிறப்புத் திட்டம்.—இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சித் தணிப்பு நடவடிக்கையாக, கிராமப் பணிகள் சிறப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத் திட்டம் மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும். இத் திட்டத்திற்கு இந்திய அரசு முழு உதவித் தொகை அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ரூ. 36 லட்சம் செலவுக்கான செயற்குறிப்புகளை காடுகள்துறை பணிந்தனுப்பியுள்ளது. காடுகள் வளர்த்தல், மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், கிராமங்களில் காடுகள் வளர்த்தல், காட்டுப் பகுதிகளில் சாலைகள் அமைத்தல், அவற்றை மேம்பாடு செய்தல், நீர் வாயில்களை மேம்பாடு செய்தல் ஆகியவை இச்செயற்குறிப்புகளில் அடங்கும். 1970–71-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 1.91 லட்சம் செலவிடப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல வளர்ச்சிப் பணிகள் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1970–71-இல் மேற்கொண்ட திட்டம்பற்றிய விவரங்களும் 1971–72-ஆம் ஆண்டுக்கான செயற்குறிப்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

### காடுகள்—மாநிலப் பணித்திட்டங்கள்.

### 1. பண்ணைக் காடுகளும், விறகு மரங்களும்.

### 2. பண்ணைக்காடு—கிராமக் காடுகள்.

(அ) கிராமங்களைச் சுற்றிலும் அடைவாக அமைந்த தகுந்த நிலப் பரப்புகளில், அரசு தரிசு நிலங்களிலும் புறம்போக்குகளிலும் கிராமத் தோட்டங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம வாசிகளுக்கு அன்றாடம் தேவைப்படும் விறகு, வெட்டு மரம், தழை உரம், தீவனம் ஆகிய தேவைகளை இக்கிராமக்காடுகள் நிறைவு செய்யும்.



1971 ஜூலை 23]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத் திட்டத்தின் கீழ் ரூ. 40 லட்சம் செலவில் 16,000 ஹெக்டேர் பரப்பளவில் இக் காடுகள் வளர்க்கப்படும். 1970–71-இல் 1,732 ஹெக்டேர் பரப்பளவில் கிராமக்காடுகள் வளர்க்கப்பட்டன. இதற்கான செலவு ரூ. 3.94 லட்சமாகும்.

1971–72-இல் ரூ. 5.82 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 1,750 ஹெக்டேர் பரப்பளவில் பண்ணைக்காடுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) விறகு, மரங்கள்.—நகர மக்களுக்குத் தேவைப்படும் விறகு கிடைப்பதற்காக, மக்கள் பெருக்கம் மிகுந்த பகுதிகளை அடுத்துள்ள காட்டுப் பகுதிகளில் விறகு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ. 30 லட்சம் செலவில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1970–71-இல், மொத்தம் 595 ஹெக்டேர் பரப்பளவில் இவ்வகை மரங்கள் வளர்க்கப்பட்டன. இதற்கான செலவு ரூ. 2.78 லட்சம் ஆகும்.

1971–72-இல், 300 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கப்படும்.

### தொழில் வாணிபப் பயன்வகையில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள்.

1. தேக்கு.—இம் . மாநிலத்தில் வெட்டு மரங்களுக்கான வாயில்களைப் பெருக்க வேண்டி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர், செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களில் தகுந்த இடங்களில் தேக்கு மரங்களையும் ஏனைய கடினவகை மரங்களையும் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், சுமார் 3,000 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்களையும் ஏனைய கடின மர வகைகளையும் வளர்ப்பதற்காக ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-இல் ரூ. 1.38 லட்சம் செலவில் 374 ஹெக்டேர் பரப்பளவில் இவ்வகை மரங்கள் வளர்க்கப்பட்டன.

1971–72-இல், 480 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்களையும் செம்மரங்களையும் (Red Sanders) வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 1.81 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

2. மென்மரம்.—மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தகுந்த இடங்களில் மென்மரங்கள் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் தீப்பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களை அதிக அளவில் இம் மரங்கள் வழங்கும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில், ரூ. 5.00 லட்சம் செலவில் மென்மரங்களை 1,500 ஹெக்டேர் பரப்பளவில் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. 1970–71-ல் 298 ஹெக்டேரில் மென்மரங்கள் வளர்க்கப்பட்டன. இதற்கான செலவு ரூ. 0.53 லட்சமாகும்.

1971–72-ல் 245 ஹெக்டேர் பரப்பளவில் மென்மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ரூ. 1.01 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

3. சவுக்கு மரம்.—மாநிலத்தின் விறகுத் தேவையை ஈடுசெய்வதற்காக தஞ்சாவூர், இராமநாதபுரம், தென் ஆற்காடு மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளிலும் படுகை நிலங்களிலும், திருச்சி மாவட்டத்திலும் சவுக்கு மரத்தை அதிக அளவில் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ரூ. 10.00 லட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு மரங்களை வளர்ப்பதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வகை செய்கிறது. 1970–71-ல் 336 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு மரங்கள் வளர்க்கப்பட்டன. இதற்கான செலவு ரூ. 2.62 லட்சமாகும்.

1971–72-ல் 320 ஹெக்டேரில் சவுக்கு மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 2.08 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

4. மிலாறு.—மரங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கான கூழ் தயாரிக்கும் தொழில்களுக்கும், தோல் பதனிடும் தொழில்களுக்கும், மிலாறு மரமும், மிலாறு மரப்பட்டையும் மிக முக்கியமான மூலப் பொருள்களாக இருப்பதால், நீலகிரியிலும், மேல் பழனியிலும் மிலாறு மரங்களை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டகால அளவில் 4,000 ஹெக்டேரில் மிலாறு மரங்கள் வளர்ப்பதற்கான திட்டத்திற்கு ரூ. 20.00 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. 1970–71-ல் 1,200 ஹெக்டேரில் மிலாறு மரங்கள் வளர்க்கப்பட்டன. இதற்காக ரூ. 5.10 லட்சம் செலவிடப்பட்டது.

1971–72-ல், ரூ. 4.22 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், நீலகிரி மாவட்டத்திலும், மதுரை மாவட்டத்திலும் 800 ஹெக்டேர் பரப்பளவில் மிலாறு மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. விரைவில் வளரும் மரவகைகள்.—விரைவில் வளரும் மரவகைகளிலிருந்து கிடைக்கும் பொருள்கள், மரத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களான காகிதம், ரயான், ஒட்டு மரக்கட்டை (Chip board) ஆகியவற்றின் மூலப் பொருள்களை நிறைவு செய்வதால், விரைவில் வளரும் மரவகைகளை வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.





நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 75.00 லட்சம் செலவில் 12,000 ஹெக்டேர் பரப்பளவில் விரைவில் வளரும் மர வகைகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1970–71-ல் 2,616 ஹெக்டர் பரப்பளவில் ரூ. 15.57 லட்சம் செலவில் இந்த மரவகைகள் வளர்க்கப்பட்டன. 1971–72-ல் ரூ. 10.86 லட்சம் செலவில் 2,250 ஹெக்டர் பரப்பளவில் இவ்வகை மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

6. சந்தனம்.—சந்தனமரம் இம்மாநிலத்திற்கு கணிசமான வருவாயை ஈட்டித் தருகிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன் கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் சந்தன மரத்தை செயற்கை முறையில் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

நான்காவது திட்டக் கால அளவில் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 10.00 லட்சம் செலவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1970–71-ல் ரூ. 1.76 லட்சம் செலவில் 182 ஹெக்டேர்களில் சந்தன மரங்கள் வளர்க்கப்பட்டன.

1971–72-ல் 125 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 0.63 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

7. ஆற்றங்கரை, கால்வாய்க்கரை ஓரம், ஏரிக் கரையோரக் காடு.—வெட்டு மரங்களைக் கூடுதலாகப் பெறுவதற்கும் மண் அரிப்பைத் தடுப்பதற்கும், தேக்குமரங்களையும் பொருளாதார மதிப்புள்ள பிற மரவகைகளையும் ஆற்றங்கரைகளிலும், கல்வாய்க் கரைகளிலும், ஏரிக் கரைகளிலும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவில் ரூ. 20 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், 4,000 ஹெக்டேரில் இந்த மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது. 1970–71-ல் ரூ. 2.17 லட்சம் செலவில் 503 ஹெக்டேர் பரப்பளவில் இந்த மரங்கள் வளர்க்கப்பட்டன.

1971–72-ல் ரூ. 2.55 லட்சம் செலவில் 470 ஹெக்டேரில் இந்த மரங்களை வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

8. ரப்பர்.—1959-ல் காடுகள் துறை மாநில நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரப்பர் தோட்டங்களை வளர்க்கத் தொடங்கியது. இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தில், 2,300 ஹெக்டேரில் ரப்பர் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 1970–71-ல் ரூ. 10.09 லட்சம் செலவில் 104 ஹெக்டேரில் ரப்பர் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

1971–72-ல் 200 ஹெக்டேரில் ரப்பர் மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 12.85 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

வன விலங்கு உய்விடங்களின் மேம்பாடு.—வனவிலங்குகளை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் வனவிலங்கு உய்விடங்கள் முக்கிய மான பங்கை வகிக்கின்றன. இவைகள் சீருலாப் பயணிகளைக் கவர்வ தாகவும் உள்ளன. மாநிலத்தின் சீருலாப் பணியை மேம்படுத்து வதற்கான நமது திட்டத்தில் வன விலங்கு உய்விடங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.

வன விலங்கு உய்விடங்களில் மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வன விலங்கு உய்விடங்கள், பறவைகள் உய்விடங்கள் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும், சீருலாப் பயணிகளுக்கு வசதி களைச் செய்து தருவதற்காகவும் 1970–71-ல் ரூ. 2.32 லட்சம் செலவிட பட்டது.

1971–72-ஆம் ஆண்டில் ரூ. 3.22 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், முதுமலை வனவிலங்குகள் உய்விடம், கோடிக்கரை உய்விடம், முண்டந்துறை புலிகள் உய்விடம், வேடந்தாங்கல் நீர் வாழ்ப் பறவைகள் உய்விடம், கிண்டியிலுள்ள சிறுவர்கள் பூங்கா ஆகிய வற்றுக்குச் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

மரம் வெட்டும் பணிகள்—

இது ஒரு பல்நோக்குத் திட்டம், இதன் குறிக்கோள்கள் பின் வருவன :—

1. கட்டைகள் வெட்டுதல், மரங்களை வெட்டி அகற்றுதல் முறைகளில் மேம்பாடு செய்தல்.

2. வெட்டப்பட்ட மரங்களை எடுத்துச் செல்லும் வசதிகளை மேம்படுத்தல்.

3. கட்டைகள் வெட்டுதலுக்குரிய மேம்படுத்திய முறைகளில் வனத் தொழிலாளர்களுக்குத் தொடர்நிலைப் பயிற்சியளிக்க வகை செய்தல்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின்போது, மரம் வெட்டும் கருவிகளைப் பெறவும் வெட்டப்பட்ட மரங்களை எடுத்துச் செல்வதற்கு அதிகரித்த வசதிகளைப் பெறவும் மரம் வெட்டும் தொழில் நுட்பத்தில் வனத்தொழிலாளர்களுக்குத் தொடர்நிலைப் பயிற்சியளிக் கவும் ரூ. 10 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71-ல் ரூ. 0.93 லட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. தொழிலாளர் குடியிருப்பு ஒன்று கட்டுதலும், மோட்டார் வண்டிப் பணிக்களரி ஒன்று நிறுவுதலும் மேற்கொள்ளப்பட்டன.

1971–72-ல் டிராக்டர் ஒன்று வாங்கவும் வனத்தொழிலாளர் களுக்குக் கம்பளிப்பின்னல் சட்டைகளும் கம்பளிகளும் வாங்கவும் அடிப்பூச்சி பொருள்கள், வெப்பம், நீர் இவற்றைத்தாங்கி நிற்கும் வன்மையுடைய மெருகெண்ணெய்கள் முதலியனவற்றை உற்பத்தி செய்யும் கருவிகளை வாங்குவதற்கும் கருதப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு மொத்தம் ரூ. 1.44 லட்சம் செலவாகும்.



வன ஆராய்ச்சி—

வளர்ச்சிகள் அனைத்துக்கும் அடிப்படையாக அமைவது ஆராய்ச்சியே. பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுள்ள காடுகள் துறை அமைப்பின் பணியாளர் எண்ணிக்கையை அதிகரிப் பதும் வனவளர்ப்பியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சிகளை மேற் கொள்வதற்கான வன ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவுவதும் இத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், இத்திட்டத்திற்கென ரூ. 10 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. மரக்கூர் மரவியல் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளன. (Genetic section) 1970–71-ல் இத்திட்டம் ரூ. 0.51 லட்சம் செலவில் செயற்படுத்தப் பட்டது. காட்டுமரங்கள் மரவியல் ஆராய்ச்சிப் பிரிவு தொடர்ந்து செயற்பட்டு வந்தது.

1971–72-ல் காட்டு மரங்கள் மரவியல் ஆராய்ச்சிப் பிரிவும் விதைகள் சேமிப்பு, தரம் பிரித்தல்-வழங்கல் நிலையமும் மேம்படுத்தப் படும். இத்திட்டத்திற்காக ரூ. 1.34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிகள் (சாலைகள்)—

வெட்டப்பட்ட மரங்களையும், ஏனைய காடுபடு பொருள்களையும் விரைந்து எடுத்துச்செல்ல வசதியளிக்கும் பொருட்டு, காட்டுப்பகுதி களில் ஏற்கெனவேயுள்ள சாலைகளை மேம்படுத்துவதும், புதிய சாலைகள் அமைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். காட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் போக்குவரத்துக்கும் இச்சாலைகள் உதவும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்துக்கு ரூ. 30.00 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில் பதினைந்து கிலோ மீட்டர் தொலைவுக்குச் சாலைப் பணிகளை மேற்கொண்ட வகையில் ரூ. 3.29 லட்சம் தொகை செலவிடப்பட்டுள்ளது.

1971–72-ல் 22 கிலோ மீட்டர் தொலைவுக்குச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்கான நிதி ஒதுக்கம் ரூ. 4.50 லட்ச மாகும்.

கட்டிடங்கள்—

காடுகளின் உட்பகுதிகளில் பணியிலமர்த்தப்பட்டுள்ள பணியாளர் களுக்குக் குடியிருப்பு வசதிகள் அளிப்பது இத்திட்டத்தின் நோக்க மாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்துக்கென ரூ. 25 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71-ல் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 2.23 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1971–72-ல் 20 கட்டிடங்களைக் கட்டும் பணியை மேற்கொள்வதன் மூலம் ரூ. 3.00 லட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 23

வனத்துறைப் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வசதிகள்—

குளிர் நிறைந்த பகுதிகளில் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் கம்பளிகள் வழங்குதல், தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் முதலிய வசதிகளை வனத்துறைத் தொழிலாளர்கட்கும், பணியாளர்கட்கும் செய்துதருதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்கென ரூ. 10.00 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-ல் மழைப் பாதுகாப்புக் கம்பளிகள், கம்பளிப் பின்னல் சட்டைகள் வாங்கவும் தொழிலாளர் குடியிருப்புகளும், மருந்தகமும் கட்டுவதற்கும் ரூ. 0.71 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1971–72-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ. 0.88 லட்சம் தொகை செலவிடக் கருதப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வகைப் பணிகள் மேற்கொள்ளப்படும் :—

1. தமிழ்நாடு வன வளர்ப்பியல் பயிற்சிப் பள்ளிக்கு ஒரு சிறிய பேருந்து (Mini Bus) வாங்குதல்.

2. ஹாசனூரிலுள்ள சார்நிலைப் பணியாளர் குடியிருப்புகட்கு நீர் வழங்க வகை செய்தல்.

3. ஹாசனூரில், மாளிகைக் காவலாளுக்குக் குடியிருப்பு கட்டுதல்.

4. மழைப் பாதுகாப்புக் கோட்டுகள், கம்பளிகள், கம்பளிப் பின்னல் சட்டைகள் வாங்குதல்.

5. கோயம்புத்தூரிலுள்ள வனத் துறை அலுவலகங்களுக்குச் சிற்றுண்டிக் கொட்டகைகள், பொதுக் கழிப்பிடங்கள் முதலியன கட்டுதல்.

6. யானைப் பாகர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்.

காடுகள் பற்றிய விளம்பரம்—

நாட்டின் நலனில் காடுகளும் வன விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும், அவற்றைக் காப்பதன் அவசியம் குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் காடுகள் துறையில் விளம்பரப் பிரிவு ஒன்றை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வெளியீடுகள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள் முதலியவை மூலம் இதுகுறித்து பிரச்சாரம் செய்யப்படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வன விளம்பரத்திற்காக ரூ. 2.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71-ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 0.25 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டில், சுவரொட்டிகள், திரைப்படத்துண்டு விளம்பரங்கள், விளம்பரத்தட்டிகள், படஅஞ்சல் அட்டைகள் முதலான பிரச்சாரப் பொருள்கள் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதற்காக ரூ. 0.09 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



1971 ஜூலை 23]

வனப் பாதுகாப்பு—

தீ விபத்துக்களிலிருந்தும் ஏனைய இடையூறுகளிலிருந்தும் வனங்களைக் காப்பதற்கான வழிவகைகளை வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது திட்டக் காலத்தில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 0.49 லட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது. கோபிச்செட்டிப் பாளையத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட இயல் ரோந்து காவல் படை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

1971–72-ல் இத்திட்டத்தை ரூ. 0.63 லட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## செயல் திட்டங்கள்.

ஒவ்வொரு வனக் கோட்டத்திலும் செயல் திட்டங்கள் நிர்வாகத்தின் அடிப்படையாக அமைகின்றன. செயல் திட்டங்களைத் தயாரிக்கும் பொறுப்புள்ள சிறப்பு நிறுவனம் ஒன்று உள்ளது. கூடுதல் பணியாளர்களை நியமிப்பதற்கும், செயல் திட்டங்களை விரைவாகவும், திறம்படவும் தயாரிப்பதற்கு தேவையான சாதனங்களை வாங்குவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. இதற்காக நான்காவது திட்டத்தில் ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 0.43 லட்சம் செலவழிக்கப் பட்டது.

1971–72-ல் ரூ. 0.37 லட்சம் செலவில் இத்திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

## காடுபடு சிறு பொருள்கள்.

புளி, கோக்கோ, இலவங்கம், குங்கிலியம் (Bursera), கற்பூரத் தைல மரம், எலுமிச்சை வகைச் செடிகள் (Citriodora), மாசிக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதால் அதிக மதிப்புள்ள காடுபடு சிறு பொருள்கள் சிலவற்றிலிருந்து வருவாய் அதிகரிக்க சாத்தியக் கூறுகள் உள்ளன என்னும் காரணத்தால், இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1,500 ஹெக்டேர் பரப்பளவில் காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களை வளர்ப்பதற்காக நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1970–71-ஆம் ஆண்டில் 219 ஹெக்டேர் நிலப்பரப்பில் மலைத் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இதற்காக மொத்தம் ரூ. 0.83 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் 242 ஹெக்டேர் பரப்பளவில் இவற்றை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 1.34 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

[1971 ஜூலை 23

## திட்ட, புள்ளி விவரப் பிரிவு.

வனங்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டவும், விளை பொருள்கள் முதலியன குறித்த புள்ளி விவரங்களைத் தொகுக்கவும், அங்காடிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவும், தற்பொழுதைய வருங்காலத் தேவைகளை மதிப்பிடவும் பிரிவு ஒன்றை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதன் பொருட்டு ரூ. 2.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் ரூ. 35,100 செலவில் திட்ட–புள்ளி விவரப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## காடுகள் நிர்வாகத்தைத் திறம்படச் செய்தல்.

காடுகள் குறித்து பணிகள் விரைந்து பெருகிவருவதால், பயனுள்ள வகையில் மேற்பார்வையிட இயலாத அளவிற்கு பரந்து விரிவடைந்துள்ள காட்டு வட்டாரங்கள், கோட்டங்கள் சரகங்கள் ஆகியவற்றின் அதிகார எல்லையை மாற்றியமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 2.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது நீலகிரிக் கோட்டத்தில் அதிகார எல்லை கட்டுக்கடங்காத அளவிற்கு அதிகமாக உள்ளது. 1971–72-ல் பணிகளைச் செவ்விய முறையில் செயல்படுத்தப்படுவதற்கும், சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் இயலுவதற்காக, இந்தக் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது.

## காட்டுத் திட்டங்கள்—மத்திய அரசு ஆதரவு பெறுபவை.

## காட்டு வளம் குறித்து ஆய்வு.

காட்டு வளங்களை நல்ல முறையிலும் அறிவார்ந்த வகையிலும் பயன்படுத்துவதற்குத் திட்டமிடுவதற்காக காட்டுவளங்களின் விரிவான ஆய்வினை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோயிலைத் தலைமையிடமாகக் கொண்டு 1969–70-ல் காட்டு வளங்களை ஆய்வு செய்யும் கோட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. முதற்கண், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள காட்டுவளங்களை ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1970–71-ல் ரூ. 0.73 லட்சம் செலவில் இத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் 357 சதுரமைல் ஒதுக்ககாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய கோட்டம் ஒன்று மதுரை மாவட்டத்தில் ஆய்வை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

1971–72-ல் ரூ. 0.83 லட்சம் செலவில் இத் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 23]

## பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டம்).

இது மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டமாகும்.

பயிர்ப்பாதுகாப்பு, பயிர் நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் முந்திரி விளைச்சலைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1970–71-ல் ரூ. 2.33 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, கடலூர், திருச்சிராப்பள்ளி வனவள மாவட்டங்களில், 9,000 ஏக்கர்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1971–72-ஆம் ஆண்டில் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. 1971–72-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.85 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## மண்வளப் பாதுகாப்பு மாநிலத் திட்டங்கள்—வைகை ஆற்று நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.

வைகை ஆற்று நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பிற்காக பல நடவடிக்கைகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நீர்கோள் பகுதிகளிலுள்ள நீர்த் தேக்கங்கள், ஏரிகள், குளங்குட்டைகளில் வண்டல் படிவது தடுக்கப்படுகிறது.

4-வது திட்டக் காலத்தில் ரூ. 30.00 லட்சம் இப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1970-71-ல் 337 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. ரூ. 2.87 லட்சம் இதற்கான செலவாகும்.

ரூ. 3.88 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், காடுவளர்ப்பு, பொறியியல் பணிகள், ஏரிகளைப் புதுப்பித்தல் உட்பட 300 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதிக்கு மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தில் மண்வளப் பாதுகாப்பு.

மண் அரிப்பையும், நீர்த்தேக்கத்தில் வண்டல் படிவதையும் தடுப்பதற்காக, மேட்டூர் ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் நீர்கோள் பகுதிகளில் பலவகை மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

4,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 30.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1970-71-ஆம் ஆண்டில் 520 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. இதற்கு ரூ. 3.06 லட்சம் செலவு ஆகியது.

1971–72-ஆம் ஆண்டில் ரூ. 5.47 லட்சம் செலவில் இத் திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. வெள்ளத்தடுப்புச் சுவர்கள், தடுப்பு அணைகள், நீர் அரிக்காவண்ணம் சரிவான படிகளை அமைத்தல் (Bench Terraces) முதலிய பணிகளைத் தவிர 500 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலப்பகுதியில் மண்வளப் பாது காப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மண்வளப் பாதுகாப்பு—மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டங்கள். குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.

குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்ட நீர்கோள் பகுதிகளுக்குள் மண் வள பாதுகாப்பு, ஈரத்தன்மை பாதுகாப்பு, நீர்த்தேக்கங்களில் தூர் படிவதைத் தடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 7,000 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலப் பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக நான்காவது திட்டக் காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ. 60.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1970-71-ஆம் ஆண்டில் 153 தடுப்பு அணைகள், 94 வெள்ளத் தடுப்புச் சுவர்கள் கட்டுவது தவிர, 282 ஹெக்டேர் பரப்பளவுள்ள பகுதியில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ரூ. 5.10 லட்சம் செலவாகியது.

1971-72-ஆம் ஆண்டில் ரூ. 7.64 லட்சம் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் நிறை வேற்றப்படும் :—

(1) வேளாண்மைப் பணிகள்—500 ஹெக்டேர்.
(2) கட்டப்படும் தடுப்பு அணைகள்—200.
(3) கட்டப்படும் வெள்ளத்தடுப்புச் சுவர்கள்—600.
(4) தூர்படிவதைக் கண்காணிக்கும் இடங்களைப் பேணுதல்.

கீழ் பவானித் திட்டத்தில் மண் வளப் பாதுகாப்பு—மத்திய அரசு ஆதரவு பெறும் திட்டங்கள்.

கீழ் பவானித் திட்டப் பகுதிகளிலும், பிற ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டப்பகுதிகளிலும் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பல வற்றை மேற்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நான் காவது திட்டக் காலத்தில் இதற்காக ரூ. 30.00 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

1971–72-ஆம் ஆண்டில் 840 ஹெக்டேர் பரப்பளவில் ஆய்வுப் பணிகளும், மண்வளப் பாதுகாப்புப் பணிகளும், மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 4.10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



*309 வினா திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை

வேளாண்மை உற்பத்தி.

காட்டுப் பகுதிகளில் முந்திரி வளர்ப்பு.

முந்திரி மரங்களை வளர்ப்பதற்குத் தகுந்த பகுதிகளில் முந்திரித் தோட்டங்களை வளர்த்தலும் உரங்களைப் பயன்படுத்தல், பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தெளித்தல் போன்ற மும்முரப் பயிரிடும் முறைகளை மேற்கொள்வதன் மூலம் தற்போதுள்ள முந்திரித் தோட் டங்களின் உற்பத்தியைப் பெருக்குதலும் இத்திட்டத்தின் நோக்க மாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 30.00 லட்சம் செலவில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கப்படும்.

1970–71-ஆம் ஆண்டில், 1,253 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்ப்பும், 2,750 ஹெக்டேர் பரப்பளவில் விழிப்புடன் பேணுதல் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு ரூ. 10.96 லட்சம் செல வாகியது.

1971-72-ஆம் ஆண்டில் 1,700 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி வளர்க்கவும் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் விழிப்புடன் பேணுதல் பணியை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற் காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு ரூ. 9.19 லட்சம் ஆகும்.

அரக்கு உற்பத்திப் பெருக்கம்.

மதுரை தெற்குக் கோட்டத்தில் வண்ணாத்திப் பாறையில் உள்ள அரக்கு பண்ணையில் அரக்கு உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத் தின் நோக்கமாகும். மதுரையிலுள்ள அரக்குத் தொழிற்சாலையும் மேம்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் அரக்கு மற்றும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

அரக்கு தயாரிக்கும் பணிகளை விரிவு படுத்தல், அரக்கு தயாரிக்கும் தொழிற்சாலைக்கு மேம்பாடு செய்தல் ஆகியவற்றோடு 200 ஹெக் டேர் பரப்புள்ள நிலத்தில் அரக்கு மற்றும் மரங்கள் வளர்ப்பதற்கு இத்திட்டத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 6.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் அரக்கு தயா ரிக்கும் தொழிற்சாலைக்கு ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவுவதோடு 40 ஹெக்டேர் பரப்பளவில் அரக்கு பற்றும் மரங்கள் வளர்க்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவு ரூ. 0.42 லட்சமாகும்.

1971–72-ல் மதுரை தெற்குக் கோட்டத்தில் 30 ஹெக்டேர் பரப் பளவில் அரக்கு பற்றும் மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வண்ணாத்திப்பாறை அரக்குப் பண்ணையில் அரக்கு தயாரிப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறும். மதுரையில் உதவி இரசாயன வல்லுநர், உதவியாளர், கடைநிலை அரசுப் பணியாளர் ஆகியோ ருக்குக் குடியிருப்புகள் கட்டும்பணி மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தின்கீழ் மதிப்பிட்ட செலவு ரூ. 0.81 லட்சமாகும்.

## முடிவுரை.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு இவற்றிற்கு ஆதரவாகவும் அவற்றின் வளர்ச்சிக்காகவும், போதிய பாதுகாப்பு அளிக்கும் காடுகள் இன்றியமையாதவை என்பது ஒருமனதாக அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. தட்பவெப்ப நிலை உரியவாறு இருக்கச் செய்வதிலும், ஆறுகளின் நீர்பெருக்கினை முறைப்படுத்துவதிலும், மண்வளத்தையும் ஈரத்தையும் பாதுகாப்பதிலும் வனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அண்மைக் காலத்தில் நம் நாட்டைத் தொழில் மயமாக்குதலில் காடுகள் பெருமளவில் பயன்பட்டு வருகின்றன. இம் மாநிலத்தின் வனவளங்களை நம்பி காடுபடு பொருள்களை அடிப்படை யாகக் கொண்ட பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒரு மரத்தை சிறிய கன்றாக நட்டு வளர்த்துப் பாதுகாத்து பெரிய மரமாக்குவதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன என்பதும், ஆனால் அதை வெட்டி வீழ்த்த அதிக நேரமாகாது என்பதும் அனைவரும் அறிந்த உண்மையே. அது போலவே பயிர் விளைச்சலைப் பெருக்கு வதற்காக ஓரங்குல உயரத்திற்கு வளங்கொழித்த மேல்மண்ணை நிலத்தில் சேர்க்க வேண்டுமென்றால், அதற்குப் பல்லூழி காலம் ஆகின்றது. ஆனால் தக்க தாவரப்பாதுகாப்பு இல்லையெனில் அல்லது போதிய மண்வளப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தக்கவாறு மேற் கொள்ளப்படவில்லையெனில் வளங்கொழித்த மேல் மண் ஒரு சில மணி நேரத்தில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விடும். காடுகளை வளர்த்தல், வளம் குன்றாமல் காத்தல், அழியாமல் பாது காத்தல், அறிவார்ந்த முறையில் பயன்படுத்தல் ஆகியவற்றை செய்யும் பணி மாபெரும் பணியாகும். ஆகவே இப்பணித் திட்டங்களில் மக்களும் அவர்தம் தலைவர்களும் மனமுவந்து ஒன்றி நின்று ஊக்க முடன் இடைவிடாமல் ஒத்துழைப்பு நல்கினால்தான் பெரும்பொறுப் புள்ள இந்தப் பணியை அரசு நிறைவேற்ற இயலும்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## சனிக்கிழமை, 1971 ஜூலை 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### வல்ல நாட்டில் காசநோய் மருத்துவமனை

* 4 குறுகிய கால வினா.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் வல்லநாட்டில் ஒரு காசநோய் மருத்துவமனை துவக்க வேண்டு மென்று சமீபத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்குப் பரிந் துரை செய்யப்பட்டதா?

(இ) ஆம், எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Science subjects for Degree Course in Evening Colleges*

* 413 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether arrangements are made for teaching science subjects at the degree level in the evening colleges; and

(b) if so, the stage at which the matter now stands ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அறிவியல் பாடங்களை மாலை நேரக் கல்லூரியில் உள்ள பட்டப் படிப்பு வகுப்பு களில் சொல்லித் தருவதற்கு போதுமான ஏற்பாடுகளை அரசு செய்து தந்திருக்கிறது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, எந்தெந்த ஊர்களில் மாலை நேரக் கல்லூரிகள் துவங்குவதற்கான ஏற்பாடுகள் இருக் கின்றன? கோவை மாவட்டத்தில் எங்கெங்கு அத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் கணக்கு, ஃபிஸிக்ஸ் இரண்டும் பி.எஸ்.ஸி. பட்டப் படிப்பில் மாலை நேரக் கல்லூரியில் சொல்லித் தரப்படுகிறது. சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் கணக்கு சொல்லித் தரப்படுகிறது. சென்னையிலுள்ள தியாகராயா கல்லூரியில் கணக்கும் ஸுவாலஜியும் சொல்லித் தரப்படுகின்றன.

[1971 ஜூலை 24

சென்னை நியூ காலேஜில் கணக்கு, ஃபிஸிக்ஸ் சொல்லித் தரப்படுகின்றன. திருச்சியிலுள்ள ஜமால் மொகிதீன் கல்லூரியில் கணக்கு சொல்லித் தரப்படுகிறது. பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரி, கோயமுத்தூரில் கணக்கு, ஃபிஸிக்ஸ் ஆகிய இரண்டும் பி.எஸ்.ஸி. பட்டப் படிப்பில் சொல்லித் தரப்படுகின்றன.

திரு. கா. காளிமுத்து: மாலை நேரக் கல்லூரியில் பட்டப்படிப்புக்குரிய வகுப்புகள் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு நடத்தப் படுகின்றனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசினர் கலைக் கல்லூரியில் நடத்தப்படுகின்றன என்று கருதுகிறேன். அதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால், விவரம் அளிக்கலாம்.

திரு. இ. எஸ். தியாகராசன்: இன்ஜினீரிங் கல்லூரியில் மாலை நேரக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறதா? ஆம் எனில், எத்தனை இடங்கள் உள்ளன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இன்ஜினீரிங் மாலை நேரக் கல்லூரியில் பி.ஈ. பார்ட்-டைம் கோர்ஸ் இந்த ஆண்டிலிருந்து துவங்கியிருக்கிறோம். ஏற்கனவே டிப்ளமா வாங்கியவர்கள் மூன்றாண்டுக் காலம் பகுதி நேரப் பொறியியற் கல்லூரியில் படிக்கலாம் என்ற ஏற்பாடு இந்த ஆண்டிலிருந்து துவக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, சென்னையில் மட்டும் பாட்டனி, ஜூவாலஜி, பி.எஸ்.ஸி. பட்டப் படிப்பில் மாலை நேரக் கல்லூரியில் சொல்லிக் கொடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். சேலம், கோவை, திருச்சி போன்ற மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கல்லூரிகளிலும் பி.எஸ்.ஸி. ஜூவாலஜி, பாட்டனி ஆகியவைகளை மாலை நேரக் கல்லூரிகளில் துவக்கும் ஏற்பாட்டைச் செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே 10 மாலை நேரக் கல்லூரிகள் கலையியற் பாடங்களுக்கும் அறிவியல் பாடங்களுக்கும் திறக்கப்பட்டன. இப்பொழுது இருபது மாலை நேரக் கல்லூரிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆக, கல்லூரியில் இருக்கும் இட வசதி, மற்றவைகளைக் கவனித்துப் பல்கலைக் கழகம் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும். மாலை நேரக் கல்லூரிகளில் அறிவியல் பாடங்களை நடத்தப் போதுமான இட வசதியும் மற்றவைகளும் இருக்கின்றன என்று அறிவிப்பதன் பேரில் பல்கலைக் கழகத்திடமிருந்து அனுமதி வாங்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற கல்லூரிகளில் இட வசதி மற்ற வசதிகளெல்லாம் இருக்கின்றனவா என்று பார்த்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரைப் பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கக்கூடிய கல்லூரிகளில் எவற்றிலாவது இம்மாதிரி மாலை நேரக் கல்லூரி அமைப்பு முறை இருக்கிறதா? அப்படியானால், எந்தெந்தக் கல்லூரிகளில் என்று தெரிவிக்க முடியுமா?



1971 ஜூலை 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாலை நேரக் கல்லூரிகள் அந்தப் பகுதியிலும் இருக்கின்றன. ஆனால், அறிவியல் பாடங்கள் கற்றுத்தரப்படும் ஆறு கல்லூரிகளைப்பற்றிக் குறிப்பிட்டேன். மற்றவற்றில் கலையியல் பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன. அவற்றின் முழு விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்கள் தரலாம்.

திரு. பா. நாகலிங்கம்: பொன்னேரியிலிருக்கும் கல்லூரியில் மாலை நேரக் கல்லூரி ஆரம்பிக்க அரசுக்கு ஏதேனும் எண்ணம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாலை நேரக் கல்லூரிகள் பெரும்பாலும் பெருநகரங்களில்தான் இயங்குகின்றன. ஏனென்றால், அங்குதான் ஏராளமானவர்கள் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றி, அவர்கள் தங்களுடைய தகுதியைப் பெருக்கிக் கொள்ள விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில்தான் அந்த வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன. ஆகவே, தமிழகத்திலிருக்கும் 161 கல்லூரிகளிலும் மாலை நேரக் கல்லூரிகள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்காது. பெரு நகரங்களில்தான் ஆங்காங்கு பல்வேறு துறைகள் இருக்கின்றன; பல்வேறு அலுவலகங்கள் இருக்கின்றன. அங்கே இருப்பவர்கள் தங்கள் தகுதியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். பகல் முழுவதும் வேலை செய்கிறவர்கள் மாலை நேரத்தில் இந்தக் கல்லூரியில் வந்து பயிலுகிற அப்படிப்பட்ட இடங்களில் மாலை நேரக் கல்லூரிகள் வைக்கின்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன்: அமைக்கப்பட்டிருக்கும் மாலை நேரக் கல்லூரிகளில் ஏராளமான மாணவர்கள் வருகின்றார்களா? எவ்வளவு நேரம் வகுப்புகள் மாலை நேரக் கல்லூரிகளில் நடைபெறுகின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, போதுமான அளவு மாணவர்கள் வருகிறார்கள். அதிகமாகக்கூட விண்ணப்பிக்கிறார்கள். ஒரு நாளுக்கு இரண்டரை மணி நேரம் என்று நான் கருதுகிறேன். ஆனால், முழு நேரக் கல்லூரியில் ஓராண்டு பி.யு.சி. வகுப்பில் படிக்க வேண்டுமென்றால், மாலை நேரக் கல்லூரியில் இரண்டாண்டுக் காலம் படிக்க வேண்டும். அதற்குமேல் மூன்று ஆண்டு கலைப் படிப்பு நான்கு ஆண்டுக் காலத்தில் சொல்லித் தரப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: மாலை நேரக் கல்லூரியில் பி.எஸ்.ஸி.-இல் கணிதம், ஃபிஸிக்ஸ் சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஸயன்ஸ் என்று சொன்னால் கெமிஸ்ட்ரியைத்தான் பெரும்பாலும் விரும்புகிறார்கள். அந்த கெமிஸ்ட்ரி ஸப்ஜெக்ட் எந்த மாலைக் கல்லூரியிலும் சொல்லிக் கொடுப்பதில்லை. சென்னை நகரத்திலும் மற்ற நகரங்களிலும் உள்ள கல்லூரிகளில் மாலை நேரக் கல்லூரிகளில் கெமிஸ்ட்ரி பிரிவையும் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியபடி, இடவசதியையும் பல்கலைக்கழக அனுமதியையும் பொருத்து வழங்கப்படுகிறது. பெரும்பாலும் கெமிஸ்ட்ரி

லாபரடரியில் பகல் நேர மாணவர்கள் அவர்களுடைய ஆராய்ச்சியைத் தொடங்கி முடிப்பதற்கு இரவு 8 அல்லது 9 மணி சில சமயங்களில் ஆகிவிடுகிறது. ஆகவே, மாலை நேரக் கல்லூரியில் கெமிஸ்ட்ரியைப் பொறுத்த வரையில் இடம் ஒதுக்கித்தர இடர்ப்பாடு பல இடங்களில் ஏற்படுகின்றன. கெமிஸ்ட்ரியைப் பொறுத்தவரையில் தான் ஆய்வுக்கூடங்கள் தேவைப்படுகின்றன. ஃபிஸிக்ஸ் என்றால் குறிப்பிட்ட நேரத்தில் ஆராய்ச்சிகள் முடிந்துவிடும். ஆனால், கெமிஸ்ட்ரி க்ளாஸ் நடைபெறுவதற்கு இட வசதி ஏற்படாத காரணத்தால் கெமிஸ்ட்ரி வகுப்பு மாலை நேரக் கல்லூரிகளில் ஏற்படுத்தப்படவில்லை. எங்காவது அதற்கான வசதி வாய்ப்புகள் பெருகக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அரசாங்கம் தனியாகக் கவனித்துத் தக்க முடிவு எடுக்கும்.

திரு. ரா. ரா. முனுசாமி: புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரிகளில்—குறிப்பாக திண்டிவனம், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில்—மாலை நேரக் கல்லூரிகள் திறக்க அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்த இடங்களில் பகல்நேரக் கல்லூரிகளை ஒழுங்காக நடத்தவே போதுமான இட வசதி இல்லை. அங்கே பட்டப் படிப்புத் துவங்குவதற்குப் போதுமான அளவு கட்டட வசதிகள் இல்லை. கட்டட வசதிகள் பெருகி பி.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்கப்படாமல் கல்லூரி தொடங்கி நான்கைந்து ஆண்டுகள் ஆகி இருக்கின்றன. இந்த ஆண்டுதான் கடலூரில் பாட்டனி பி.எஸ்.ஸி. துவங்கியிருக்கிறது. மற்ற பி. எஸ்.ஸி. துவங்கப்படவில்லை. விருத்தாசலத்தில் கட்டட வசதி ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அங்கே இந்த ஆண்டு இரண்டு பி.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. திண்டிவனத்தில் துவங்கப்படவில்லை. முதலில் அதைக் கவனித்த பிறகுதான் மாலை நேரக் கல்லூரியைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### மதுரை பல்கலைக் கழகத்தில் அன்னிய மொழிகள் பயிற்சி

* 414 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள மதுரை பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு, ஜெர்மனி, ரஷ்யன் மொழிகள் கற்றுத்தர வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மதுரைப் பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு, ரஷ்யன் மொழிகள் கற்றுத்தர வசதிகள் உள்ளன. ஜெர்மன் மொழியை இந்தப் பல்கலைக் கழகத்தில் கற்றுக் கொடுப்பதில்லை.

திரு. என். கிட்டப்பா: பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்ய நாட்டுப் பல்கலைக்கழகங்கள் இவற்றில் எங்கேயாவது தமிழ் கற்பிக்கப் படுகிறதா? தமிழ் பேராசிரியர்கள் இந்த நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ் கற்பிக்கப்படுவதற்கு அமர்த்தப்பட்டுள்ளனரா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இன்டோ-ஜெர்மன் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம், இன்டோ-ப்ரஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம், இன்டோ-ரஷ்யன் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் என்று இந்திய அரசு ஏற்படுத்தியிருக்கிற வகையில் அங்குள்ள பேராசிரியர்களை இங்கு கொண்டு வருவது, இங்குள்ள பேராசிரியர்களை அங்கு அனுப்புவது என்ற முறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அந்த வகையில் இன்டோ-ப்ரெஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அமைப்பின் மூலம், இன்டோ-ரஷ்யன் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அடிப்படையின் மூலம் மதுரைப் பல்கலைக்கழகத்தில் இந்த இரண்டு மொழிகளையும் சொல்லிக் கொடுப்பதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இங்கிருந்து தமிழ் பேராசிரியர்கள் ப்ரெஞ்ச் பல்கலைக்கழகம் ஒன்றிலும், ரஷ்யாவிலும் சொல்லித் தருகிறார்கள். அமெரிக்காவிலும் சில இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். முழு விவரமும் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களும் தரலாம்.

திரு. க. உறொ. எட்மண்ட்: மதுரைப் பல்கலைக்கழகத்தில் எந்தெந்தக் கல்லூரிகளில் ப்ரெஞ்ச், ரஷ்யன் மொழிகள் போதிக்கப் படுகின்றன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: யுனிவர்ஸிட்டி சார்பாக சொல்லித் தரப்படுகிறது. எம்.ஏ. டிக்ரி கோர்ஸ் ப்ரெஞ்ச் இரண்டு ஆண்டுகள், சர்டிபைட் கோர்ஸ் இன் ப்ரெஞ்ச் ஒரு ஆண்டு, டிப்ளமா கோர்ஸ் இன் ப்ரெஞ்ச் ஒரு ஆண்டு என்றிருக்கிறது. சர்டிபைட் அன்ட் டிப்ளமா கோர்ஸ் இன் ரஷ்யன் இந்த ஆண்டு பல்கலைக்கழகம் சார்பாகச் சொல்லித் தரப்படுகிறது.

திரு. க. சுப்பு: சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை ஆராய்ச்சிப் பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு க்வாலிபைட் ப்ரொஃபஸர்ஸ் அமர்த்தப்படவில்லை. ஆனால் கேரளா பல்கலைக் கழகத்தில் அப்படிப்பட்ட க்வாலிபைட் ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த குறையைப் போக்குவதற்கு தகுந்த ஆசிரியர்களை அமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. சொ. காவேரிமணியம்: மதுரைப் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவை கற்றுக் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடை தரப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரைப் பல்கலைக்கழகத்தில் ரஷ்ய, பிரெஞ்சு மொழிகள் சொல்லிக் கொடுக்கப்படுகிறதே, அவற்றில் ஒவ்வொரு மொழியிலும் பயிலும் மாணவர்கள் எத்தனை பேர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாணவர்களின் எண்ணிக்கை தரப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: மாஸ்கோ நகரில் தமிழ் பள்ளி ஒன்றில் தமிழ் மொழி கற்றுக் கொடுக்கப்படுவதாக அறிந்தேன். அதைக் கற்றுக் கொடுக்க நம் அரசு தமிழ் ஆசிரியர் யாரையாவது அனுப்பி வைத்திருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது மதுரைப் பல்கலைக் கழகம் பற்றிய கேள்வி.

திரு. கா. காளிமுத்து: மதுரைப் பல்கலைக்கழகத்தில் ப்ரெஞ்ச், ரஷ்யன் மொழி கற்றுத்தர ப்ரெஞ்ச், ரஷ்ய நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்கள் அங்கு பணியாற்றுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் கூறிய படி, இன்டோ-ப்ரெஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அடிப் படையில் ப்ரெஞ்ச் ஆசிரியர்கள் வந்து ப்ரெஞ்ச் சொல்லிக் கொடுக் கிறார்கள். ரஷ்ய ஆசிரியர்கள் ரஷ்ய மொழி சொல்லிக் கொடுக்கிறார்கள்.

*Shift system in Colleges*

*415 Q.—Thiru K. P. GOPAL: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether shift system will be inroduced in colleges of the State in view of the heavy rush for admission; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. கோபால்: சட்டக் கல்லூரியில் இம்முறை வெற்றிகர மாக நடைபெற்று வருவதால், அந்த அடிப்படையில் மீண்டும் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மிக நெருக்கடி இருக்கிற கல்லூரிகளில் இந்த முறையை மேற்கொள்ளலாமா என்ற கருத்து தெரிவிக்கப்பட்டபோது சென்னைப் பல்கலைக் கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் அதற்கு அவசியமில்லை, இப்போதுள்ள அமைப்பில் கல்லூரிகளில் போதிய இடவசதி இருப்பதால், ஷிப்ட் முறை தேவை இல்லை என்று கருதுகிறார்கள். ஷிப்ட் முறை வருவதால் வேறு டிஸிப்ளின் மற்றவைகளைக் காப்பாற்றுவதில் பல சங்கடங்கள் ஏற்படும் என்று கருதுவதால் தேவை இல்லை என்று கருதுகிறார்கள். மிக நெருக்கடியுள்ள கல்லூரிகளில் இந்த ஷிப்ட் முறையைக் கொண்டுவந்தால், நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்ற கருத்தை அரசு தெரிவித்தும் சின்டிகேட் அவையினர் ஆராய்ந்து இப்போது அவசியமில்லை, தேவைப்படும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றும் அமைதிக் குறைவு அதிகமாக ஆக வாய்ப்பு ஏற்படும் என்று கருதுவதால், இந்த முறை கொண்டுவரப்படவில்லை.



இப்போதுள்ள இடவசதி போதுமான அளவிற்கு இருக்கிறது என்றும் கருதப்படுகிறது. சென்னை போன்ற பட்டணங்களின் வெளிப் புறங்களிலுள்ள கல்லூரிகளில் இடவசதி போதுமான அளவிற்கு இருக்கிறது என்று பல்கலைக்கழக துணைவேந்தர்கள் அறிவித்திருக் கிறார்கள்.

திரு. பி. எஸ். மணியன்: வெளிநாடுகள் சிலவற்றில் உள்ளதைப் போல் காலை எட்டு மணிக்குத் தொடங்கி ஒரு மணிக்கு முடிந்து விடுகிற செயற்குறிப்புபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்தக் கருத்தும் கூறப்பட்டு வருகிறது. சில கல்லூரிகளில் அந்தக் கருத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். உதாரணமாக, வைஷ்ணவா கல்லூரி எட்டு மணிக்கு துவங்குகிறார்கள். கந்தசாமி நாயுடு கல்லூரி காலை 7-30-க்கு தொடங்கி ஒரு மணிக்கு முடித்து விடுகிறார்கள்.

Dr. H.V. HANDE: Sir, is it not a fact that the position of admission in the colleges has become very acute and if so, what are the steps taken by this Government to tackle the position? Also what are the steps taken by this Government to see that those persons who are working in offices get admitted in the evening colleges? They are also given an opportunity in evening colleges, and some thing like a shift only, for the evening college course the colleges will be utilised. In spite of this fact, is it possible to have evening colleges, may I know from the Hon. Minister the steps taken by this Government to see that this extraordinary rush is properly tackled and some solution is given?

May I know whether chemistry, physics and other things are also taught in the evening colleges, whether laboratory equipments have been given, what about the position in the Government Arts College and also New College?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: புதுப் புதுக் கல்லூரிகள் ஆண்டுக்காண்டு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இட வசதியைப் பொறுத்து ஆங்காங்கு அந்தந்த வகுப்புகளுக்கு மாணவர்களை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும் வழிவகைகள் செய்து தருகிறார்கள். சில புது வகுப்புகள் பி.ஏ. கலையியல், அறிவியல் வகுப்புகளைத் தொடங்க அந்தந்தக் கல்லூரிகள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். பல்கலைக்கழகமும் அந்த செக்ஷன்களை அதிகமாக்குவதற்கும் இடவசதியைப் பொறுத்து அனுமதி வழங்குகிறார்கள்.

இந்த ஆண்டு ஆங்கில வகுப்புகளைத் தொடங்குவதற்கு மட்டும் 95 செக்ஷன்கள் பல்வேறு கல்லூரிகளுக்குக் கொடுத்து ஆறுயிரத்துச் சில்லறை மாணவர்கள் அதிகமாக சேருவதற்கு வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் ரஷ் இருப்பதால், ஒருவர் பல கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதால், மொத்தத்தில் விண்ணப்பங் கள் ஏராளமாக இருக்கின்றன. கடைசியில் கணக்கு கொடுக்கும் போது சரியாக ஆகிவிடுமென்றுதான் துணை வேந்தர்கள் கருதுகிறார் கள். அந்த வகையில் இப்போது இடவசதி ஏற்படுத்தப்பட்டிருக் கிறது.

திரு. நா. வீராசாமி: இட நெருக்கடி ஏற்பட்டால் அந்த நிலைமையைப்பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஆறாயிரம் மாணவர்கள் இன்றும் இடம் கிடைக்காமல் அவதிப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே சென்னை நகரத்திற்கு மட்டுமாவது இந்த ஷிப்ட் ஸிஸ்டத்தை கல்லூரிகளில் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அரசு இந்த யோசனையைச் சொல்லிற்று. ஆனால் பல்கலைக்கழகங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்று கூறினேன். அதற்கு அவசியமில்லை என்று பல்கலைக்கழகங்கள் கருதுகின்றன.

திரு. கே. என். குமாரசாமி: கல்லூரிகளில் இட நெருக்கடி என்று சொல்லப்படுகிறது. கல்லூரியில் சேருவதற்கான மார்க்ஸ் இவ்வளவு வேண்டும் என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துவிடுமானால், இவ்வளவு மார்க்குகளுக்கு மேற்பட்டவர்கள்தான் அனுமதிக்கப் படுவார்கள் என்று சொன்னால் எவ்வளவு இட நெருக்கடியிருக்கிறது என்பது தெரியும் அல்லவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் ஒரு கருத்தும் உலவி வருகிறது. அதற்கு மாறு பட்ட கருத்தும் இருக்கிறது. திட்டவட்டமாக அந்த வகையில் முடிவு எடுத்து பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்க முடியுமா என்பது பற்றி யோசித்துத்தான் செய்யவேண்டும். கல்லூரிகளுக்கு "எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று சர்ட்டிபிகேட் பெற்றவர்கள்தான் அனுமதி கோருகிறார்கள். அவரவர்கள் அவரவர் களின் தன்மைக்கேற்ப, ஆங்காங்குள்ள வசதிகளுக்கேற்ப சேர்ந்து கொள்கிறார்கள். அவர்களை ஏன் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. ஓரளவிற்குக் கட்டுப்படுத்துவதால், தரமுள்ள வர்கள்தான் வருவார்கள், மற்றவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய் விடும் என்றும் சொல்லப்படுகிறது. அதுபற்றி கன்ஸல்டேட்டிவ் கமிட்டியில் வைத்து ஆலோசித்த பின்னர்தான் முடிவு எடுக்க வேண்டும்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether there is a Telugu class in M.A. Literature in the evening classes?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ப. முத்துசாமி: தற்போது தமிழ்நாட்டில் பல கல்லூரிகளில் பி.யு.ஸி., பி.ஏ. வகுப்புகளில் இடமிருக்கிறது என்று சொல்லப்படு கிறது. அவை பூர்த்தியாகிவிட்டனவா? பல கல்லூரிகளில் இன்னும் இடமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இன்னும் சில நாட்கள் கழித்துதான் எவ்வளவு இடங்கள், எந்தெந்த கல்லூரிகளில் காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிந்து அப்படி காலியாக இருக்கிற இடங்களை அறிவிக்கும்படி, வானொலி மூலம் அறிவிக்கும்படி ஏற்பாடுகள் கூடச் செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறேன். முழுவதும் வந்த பிறகுதான் அந்தச் செயல் செய்யப்படவேண்டும்.



புதிய உயர்நிலைப் பள்ளிகள்

* 416 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடப்புக் கல்வி ஆண்டில் எத்தனை புதிய உயர் நிலைப் பள்ளிகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது மாவட்ட வாரியாக?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஓர் விவர அறிக்கை @ பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்படுவதற்கான அனுமதிகள் வழங்கப்படும்போது எந்தெந்த விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளி துவங்குவதற்காக 5 ஏக்கர் நிலம் வேண்டும் என்பதை தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலங்கள் அதிகமாக இருப்பதால், அந்த மாவட்டத்திற்காகிலும் இந்த விதிமுறைகளிலிருந்து விதி விலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஓர் உயர்நிலைப்பள்ளி துவங்குவதற்கு குறைந்தது 10 மைல் சுற்றளவுக்குள் ஓர் உயர்நிலைப்பள்ளிகூட இல்லாமல் இருக்கவேண்டும். அதோடு 5 ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் கிடைக்கவேண்டும். இந்த 5 ஏக்கர் நிலம் கட்டிடங்கள் கட்டுவதற்கும், ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கும், அரங்கங்கள் அமைப்பதற்கும், விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்து வதற்கும் தேவைப்படுகிறது. பராமரிப்பு செலவுக்காக மக்களின் தொகையாக ரூ. 10,000 முன்பணமாக கட்ட வேண்டுமென்று கூறப் படுகிறது. 12,500 ரூபாய் கட்டட நிதிக்காக அவர்கள் சேர்த்துத் தரவேண்டும். பிறகு, மேலும், மேட்சிங் கிராண்ட், தொகை, மற்ற வற்றை அளிக்க-அரசு முன் வரும். தஞ்சை மாவட்டத்தில் தொடர்ந் தாற்போல் 5 ஏக்கர் நிலம் கிடைக்காது என்று சொன்னார்கள். கூடுமானவரையில் 5 ஏக்கர் நிலம் கிடைக்கவேண்டும். அப்படியில்லை என்றால், கட்டிடங்கள் கட்டுவது ஒரு பகுதியிலும், விளையாட்டு மைதானங்கள் அமைப்பது மற்றொரு பகுதியிலும், ஒன்றுக்கொன்று அருகே இருக்குமானால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த விதிமுறைகளிலிருந்து விதிவிலக்கு அளிக்க பரிசீலனை செய்யலாம்.

திரு. கருப்பையா: தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் பாலமடை என்ற இடத்தில் உயர்நிலைப் பள்ளிக்கூடம் நடத்த உத்திரவு வேண்டுமென்று கோரி மனு ஏதேனும் வந்திருக்கிறதா, அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தனிக்கேள்வி போடவும்.

---

@ 449-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1971 ஜூலை 24

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, உதகை நகரசபை சேடப்பள்ளி என்ற இடத்தில் ஒரு உயர்நிலைப்பள்ளி துவங்க அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பி இருக்கிறது. நடப்பு ஆண்டிலாவது ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணை வினாக்கள் கேட்கும்போது இவ்வளவு "டீடெய்ல்" ஆகக் கேட்கக்கூடாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பொதுவாக பள்ளிக்கூடங்கள் துவங்கும்போது, தனியார் பள்ளிகள் துவங்க அனுமதிக்கப்படாமல், அரசாங்க பள்ளிகள் அல்லது பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாக பள்ளிகளைத் துவங்க அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பெரும்பாலும் அரசாங்க பள்ளிகள்தான் துவங்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியம் உயர் துவக்கப்பள்ளி வரைதான் நடத்தி வருகிறது. சில இடங்களில் உயர் துவக்கப்பள்ளிகளை எடுத்துக்கொண்டு, உயர்நிலைப் பள்ளியாக்கி இருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தும் உயர் துவக்கப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும் வகையில் முயற்சிகள் எடுத்து வருகிறோம். சில இடங்களில் நல்ல முறையில் தனியார் உயர் துவக்கப்பள்ளி நடந்துகொண்டு வருகிறது. அதற்காகத்தான் ரூ. 1 லட்சம் வைப்பு நிதியாக கட்டவேண்டுமென்று சொல்கிறோம். ரூ. 50,000 முதல் ஆண்டுக்கும், ரூ. 10,000 பிறகு ஆண்டு ஒன்றுக்கும் கட்டவேண்டுமென்று நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையையும் ஏற்று, சுற்றிலும் 5 மைல்களுக்குள் உயர்நிலைப் பள்ளி இல்லாமல் இருந்து இருக்கக்கூடிய சூழ்நிலையில்தான் தனியார் பள்ளி துவங்க அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், உயர்நிலைப்பள்ளிகள் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் விதிமுறைகள் கூறினார்கள். ஆனால் சில இடங்களில் ஜன நெருக்கம் அதிகமாக இருப்பதால், இந்த உயர்நிலைப் பள்ளிகள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற விதிமுறையை தளர்த்த முடியுமா? மேட்டூரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் இடம் கிடைக்கவில்லை என்று இந்த சமயத்தில் அமைச்சரிடத்தில் புகார் கூறப்பட்டதே, அது போன்ற இடங்களில் விசேஷ சலுகை அளித்து உயர்நிலைப்பள்ளிகளை துவங்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இட நெருக்கடி ஏற்படுகிற இடங்களில், இந்த 5 மைல் தொலைவு இருக்கவேண்டுமென்ற விதியை தளர்த்தலாம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இடங்களில் 9-ம் வகுப்பு ஆரம்பிப்பதற்காக சுமார் 25–30 மாணவர்கள் உயர் துவக்கப்பள்ளியிலிருந்து ஈர்க்கப்படுவார்களானால், அதற்கான மேல் நடவடிக்கைகளை எடுத்து இவ்வளவு தொலைவு இருக்கவேண்டுமென்ற விதியை ஓரளவு தளர்த்தி தரப்படுகிறது.



1971 ஜூலை 24]

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் குனியமுத்தூர் என்ற இடத்தில் அரசுக்கு 5 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டு, ரூ. 10,000 வசூல் செய்து பள்ளி இயக்குநரிடத்தில் கட்டியிருக்கிறார்கள். அந்தப்பள்ளி கட்டடத்தை கட்டி முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது சிறிது காலமாக தற்காலிகமான கட்டடத்தில் இருந்து வருகிற அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. அந்தந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியைப் பொறுத்து, மாவட்டங்களில் அரசாங்க பள்ளிக் கட்டடங்கள் கொஞ்சம் கொஞ்சமாக எழுப்பப்பட்டு வருகின்றன. அதோடு மாவட்ட தலைமை அதிகாரியின் மூலமாக இயக்குநருக்கு மதிப்பீடுகள் அனுப்பி, எந்த அளவில் கட்டிடம் கட்டவேண்டுமென்று தேவையான முயற்சிகள் எடுத்துக்கொண்டுவரப்படுகிறது.

THIRU K.M. SUBRAMANIAM : Sir, is it a fact that some of the High Schools of the Corporation do not, for technical reasons, get building matching grants?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநகராட்சியைப் பொறுத்தவரையிலும் அந்தப் பள்ளிகளின் நிர்வாகம் முழுப்பொறுப்பு மாநகராட்சியைச் சார்ந்தது ஆகும். அது மற்ற ஊர்களிலே என்றாலும், அரசாங்க பள்ளிகள் போன்று வருவது இல்லை. மாட்சிங் கிராண்ட் என்பது மாநகராட்சிப் பள்ளிகளுக்குத் தரப்படுவதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் மற்ற தனியார் பள்ளிகளுக்குத் தரப்படுகிற அளவுக்கு தருவது இல்லை. ஏனென்றால் மாநகராட்சி மன்றமே வருவாய், நிதி வைத்து இருப்பதால் தரப்படுவது இல்லை என்று கருதுகிறேன். இதுபற்றி தனிக் கேள்வி போட்டால், அதனுடைய முழு விவரம் அறிந்து சொல்லப்படும்.

திரு. எம். முத்தையா : தனியார் நடத்தி வரும் உயர்நிலைப்பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்கிறது என்று சொன்னார்கள். காணும்பட்டி கிராமத்திலிருந்து விண்ணப்பம் வந்துள்ளதா? அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக்கேள்வி போடவும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, விஞ்ஞான கூடங்கள் அமைப்பதற்கு மானியம் அளிக்கப்படும்போது எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்விக்கும் அதற்கும் இடையே தொடர்பு இல்லையென்றாலும், பொதுவாக விஞ்ஞான கூடங்கள் அமைப்பதற்கு குறைந்தது 500 மாணவர்கள் இருந்து பல்லாண்டுகளாக விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் எங்கு இல்லை என்பதை தேர்ந்தெடுத்து அந்த இடங்களில் அதை அமைக்கும் வகையில், எல்லா மாவட்டங்களிலும் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றது.

[1971 ஜூலை 24

அவைகள் தீர்ந்த பிறகு, மாணவர்கள் அதிகப்படியாக உள்ள இடங்களிலும் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்கான சூழ்நிலை ஏற்படும்.

DR. H. V. HANDE : Sir, sometime ago with reference to my Call Attention Notice, the Hon. Minister had stated that it would not be possible to increase the number of high schools but at least some classes from 9th Sandard to 11th Standard could be increased so that rush could be avoided. May I know from the Hon. Minister whether any concrete steps have been taken in regard to this matter?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கருத்து இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு அதைத் துவக்குவதற்கான சிரமங்கள் பல ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால் பள்ளிக் கல்வி இயக்குநரிடத்திலே அடுத்த ஆண்டு இப்படிப்பட்ட நெருக்கடிகள் வராமல் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சென்னையில் என்ன கஷ்டம் என்றாலும் இடவசதி மிகவும் பெரும்படியாக இருக்கிறது. போதுமான வசதி இருந்து அந்த இடத்தில் துவங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று பார்க்க சென்னையிலே பல்வேறு இடங்கள் ஆராய்வதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரிடத்தில் கேட்டு இருக்கிறோம். சென்னையில் 12 வட்டங்கள் இருக்கின்றன. 12 வட்டங்களிலும் ஆங்காங்கு பள்ளிகள் துவங்க, 9, 10, 11 வகுப்பு துவங்க சென்னையைப் பொறுத்த வரையில் அனுமதி தரப்பட்டிருக்கிறது. இது ஓரளவுக்கு நெருக்கடியைக் குறைத்து இருக்கிறது. இதை நடைமுறைப்படுத்த அடுத்த கல்வி ஆண்டிலிருந்து முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கும் உயர்நிலைப்பள்ளிகளிலே எல்லாம் மாவட்ட தலைமை அதிகாரியைக் கலந்து கட்டடங்கள் கட்டவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான நிதி ஒதுக்கி இருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலே உள்ள கூரைப்போட்ட பள்ளிகள் மாறவில்லை. இந்த கூரைப்போட்ட பள்ளிகளை மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கிட்டத்தட்ட 2500 உயர்நிலைப்பள்ளிகள் இந்த மாநிலத்தில் இருக்கின்றன. 1000 உயர்நிலைப்பள்ளிகளுக்கு மேல் கட்டடங்கள் இல்லாமலே கூரைப்போட்ட கட்டடங்களில்தான் இருந்து வருகின்றன. அவற்றை எல்லாம் மெல்ல, மெல்ல நிதி வசதிக்கு ஏற்ப மாற்றியமைப்பதற்கு முடியும். எல்லாப் பள்ளிகளுக்கும் மாட்சிங் கிராண்ட் கட்டட மானியம் அளிக்கும் வகையில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இடத்திலும் அந்தந்த நிலைமைக்கு ஏற்றபடி நாம் திட்டங்களை வகுத்து அவைகளை கட்டி முடிக்க இருக்கிறோம்.

நகராட்சிகளால் நடத்தப்படும் உயர்நிலைப்பள்ளிகள்

* 417 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1971 ஜூலை 24]

(அ) தற்போது தமிழ்நாட்டில் நகராட்சி நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(இ) அவைகளை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 129 (சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் 28 பள்ளிகள் உள்பட).

(இ) ஆம்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு முற்ப
போதிய நிதி வசதி இருந்தால், நகராட்சிகளே புதிதாக உயர்நிலைப் 9-3
பள்ளிகளை ஆரம்பிக்க அனுமதி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நிதி வசதி போதுமான அளவுக்கு இருந்தால் அனுமதிக்கலாம். ஆனால் இன்றைக்கு எல்லா நகராட்சி மன்றங்களும் நிதிவசதி இல்லாமல் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோருகின்றன. ஏற்கனவே 50 சதவிகிதம் செலவினத்தில் அரசாங்கம் பொறுப்பேற்கிறது. அது போதுமானதாக இல்லை. 1963-ல் அதை 66 2/3 சதவிகிதம் என்று உயர்த்தித் தரப்பட்டது. அப்படி மானியத்தை உயர்த்த வேண்டும் அல்லது அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த 129 பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்து நடத்துவது என்பது சங்கடமான காரியம். ஆகவேதான் நிதிநிலையை உயர்த்தலாமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. தனியார் பள்ளிகளுக்கு எந்த அடிப்படையில் நிதி உதவி செய்யப்படுகிறதோ, அந்த வகையில் நகராட்சிகளுக்கும் செய்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தும் வருகிறது. இவைகளையெல்லாம் அரசாங்கம் ஆராய்ந்து விரைவில் ஒரு முடிவு எடுத்துச் செயல்படும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பழனி உயர்நிலைப் பள்ளியை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டும் என்று பழனி நகராட்சி மன்றத்தில் தீர்மானித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்த உயர்நிலைப் பள்ளியை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி, இந்த 129 உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சிகள் நடத்துகின்றன. பழனி உயர்நிலைப் பள்ளியைப் பற்றி தனியாகத் தெரியாது. போதுமான அளவில் நிதிவசதி இல்லாமல், நடத்தவே முடியாத, "வீக் முனிசிபாலிடி"கள் என்று சொல்லப்படுகிற பலகீனமான நகராட்சியில் உள்ள பள்ளிகளை அரசு எடுக்கலாமா என்கிற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட 25 பள்ளிகளை எடுக்கலாமா என்ற கருத்து பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும். ஒன்று, மானியத்தை உயர்த்தவேண்டும், அல்லது கஷ்டப்படுகிற முனிசிபாலிடியில் உள்ள பள்ளிகளை அரசாங்கமே மெல்ல மெல்ல, "ஃபேஸ்டு ப்ரோக்ராம்"படி எடுத்து நடத்தலாமா என்பது ஆராயப்பட்டு வருகிறது.

[1971 ஜூலை 24

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஸிக் முனிசிபாலிடிகள் என்று அமைச்சர் சொன்னார்கள். அப்படிப்பட்ட முனிசிபாலிடிகளில் வடாற்காடு மாவட்டத்திலுள்ள வாலாஜா வரும் என்று நினைக்கிறேன். அந்தப் பள்ளியை எடுத்து நடத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பலகீனமானதாக இருந்தால் முதலிடம் பெறும் என்று வேண்டுமானால் சொல்லுவேன். அந்த யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது. முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் நடத்தும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் பல்வேறு இடையூறுகளுக்கு உள்ளாகிறார்கள். குறிப்பாக.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கேள்வி நகராட்சிப் பள்ளிகளை அரசு எடுத்து நடத்துவது பற்றியது.

திரு. க. உரொ. எட்மண்ட் : உள்ளாட்சித் துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குப் பல இடையூறுகள் இருக்கின்றன. சம்பளம் தேவைப்பட்டபோது கொடுக்கப்படுவதில்லை. அடிக்கடி இடம் மாற்றப்படுகிறார்கள்...

MR. DEPUTY SPEAKER : The hon. Member should put his question without any explanation.

திரு. க. உரொ. எட்மண்ட் : அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றிய உள்ளாட்சிப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது கொள்கைப் பிரச்சினை. ஆகையினால், கொள்கை அடிப்படையில் முடிவு எடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு கஷ்டங்கள் இருப்பதைத் தவிர்க்கலாம். அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆ. முனியாண்டி : தலைவர் அவர்களே, நிலக்கோட்டையில் இருக்கும் பள்ளிக் கட்டடம் தீக்கிரையாகி, கூரை எரிந்து போய் விட்டது. அங்கே புதியதாக ஒரு கட்டடம் கட்ட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முறைப்படி விண்ணப்பித்து, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபாரிசின் பேரில் முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி 28 உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. அந்தப் பள்ளிகளுக்குக் கட்டடத்திற்கு அதிகமான செலவு ஆகிறது. அதை அரசாங்கமே ஏற்று நடத்த முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1971 ஜூலை 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்ற குறிப்பு எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. மானியம் தரவேண்டும் என்று அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. கல்வி மானியம் நகராட்சி மன்றங்களுக்குத் தருவதில், சென்னை மாநகராட்சிக்குத் தருவது குறைவான அளவில்தான் தரப்படுகிறது. மானியத்தைப் பெருக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, அவற்றை அரசாங்கமே எடுத்து நடத்தவேண்டும் என்ற சூழ்நிலை வந்தால், அதைப் பரிசீலிக்கலாம். மிகவும் கஷ்டப்பட்டு, நடத்தவே முடியாது என்று தேங்கிக் கிடக்கும் அளவில் உள்ள முனிசிபாலிடிப் பள்ளிகளை முதலில் எடுக்க வேண்டும். சென்னை மாநகராட்சி, பள்ளிகளை நடத்தும் அளவில் சக்தி பெற்றிருக்கிறது. நிதி பற்றாக்குறை பற்றித் தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

*Common good fund in Madhavaram Panchayat Union.*

* 418. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any common good fund has been created by the Panchayat Union at Madhavaram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தமிழ்நாட்டில் யானைக்கால் நோய் ஒழிப்பு

* 419 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் "யானைக்கால்" நோயினை அகற்றிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : யானைக்கால் நோய் பரவியுள்ள வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் நான்கு தேசிய யானைக்கால் நோய் கட்டுப்பாடு பிரிவுகள் முன்னோடித் திட்டங்களாக 1957-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் மூன்று இலட்சம் பேர்களுக்கு செயல்படுகிறது. மேலே சொல்லிய இந்நான்கு மாவட்டங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நோய் பரப்பும் கொசுக்கள் பெருகியுள்ள இடங்களில் புழுக்கொல்லி எண்ணெய் மருந்தை வாரந்தோறும் முறையாக தெளிப்பதே நோய்க் கட்டுப்பாடு திட்டத்தின் தலையாய பணியாகும். யானைக்கால் நோயுற்றவர்கள் அருகாமையிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு ஆலோசனை கூறப்படுகின்றனர்.

இதுவரையில் (நகராட்சிகளும், ஊராட்சிகளும் கொண்ட) 164 உள்ளாட்சி மன்றங்கள், யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன. அவைகளுக்கு மொத்த செலவில் மூன்றிலொரு பகுதியை மான்யத் தொகையாக அரசு வழங்கி வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நெசவாளர்கள் அதிக மாக உள்ள பகுதிகளில் யானைக்கால் நோய் வருகிறது. அப்படிப் பட்ட இடங்களில், தனியாக சிகிச்சை நிலையங்களை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலாளர்கள் மிகுதியாக உள்ள இடத்தில் யானைக்கால் நோய் வருகிறது என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. கால்களால் உழைப்பவர்களுக்குப் பெரும்பாலும் அந்த நோய் வராது. நீர் நிலையங்கள், தேங்கும் நிலைகளாக இருந்து, கொசுக்கள் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு இந்த நோயைப் பரப்புகிறது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister when this kind of preventive measure will be taken so as to avoid Malaria in Madras State?

THE HON. THIRU K. ANBAZHAGAN : This is concerning the Filaria Control Programme. This is also going to be slightly revised by increasing the number of units that are at present working, with the Central aid to a certain extent. About Malaria problem, it is already tackled to a certain extent according to the original programme.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that the mosquito nuisance has substantially increased in the City of Madras and if so, what are the steps the Government propose to take to stop the over-flow of sewage water through the City, which is to-day prevailing?

THE HON. THIRU K. ANBAZHAGAN : A separate question may be put for this purpose. But any how the Councillors and ex-councillors have a greater responsibility than Government in this regard.

திரு. ப. முத்துசாமி : சிலகுறிப்பிட்ட மாவட்டங்களில் மாத்திரம் இந்த நோய் அதிகமாகப் பரவக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் தேங்குகிற நீர் முதற்காரணம். இரண்டாவது காரணம் தேங்குகிற நீரைச் சுத்தப்படுத்தி, அசுத்த நீர் இருக்காது செய்வதற்குப் போதுமான வசதிகள் இல்லாமல் இருப்பது. மூன்றாவது காரணம் ஏற்கனவே அந்தப் பகுதியில் சில நோயாளிகள் இருப்பதும் அவர்களோடு தொடர்பு கொள்கிற கொசுக்கள் அந்த நோயை மற்றவர்களுக்குப் பரவச் செய்வதும்தான் ஆகும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : திருத்தணிப் பகுதியில் இந்த நோய் அதிகம் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டிருக் கிறதா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நோய் பரவுகிற வகை, பரவுகிற அளவு பற்றி அவ்வப்போது புள்ளிவிவரம் எடுக்கப்படுகிறது. இந்த நோயைத் தடுத்து சிகிச்சை அளிக்கிற யூனிட் ஒன்று செங்கற் பட்டிலும் செயல்பட்டு வருகிறது. திருத்தணியைப் பற்றி செங்கல் பட்டு மாவட்ட யூனிட் நிச்சயமாகக் கவனிக்கும் என்று நம்புகிறேன்

காசநோய் தடுப்புத் திட்டம்.

*420 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

காசநோய் தடுப்புத் திட்ட விளம்பரப் பிரிவினை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் தமிழ்நாடு அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : காசநோய் பற்றியும், அதைத் தடுக்கும் முறைபற்றியும் திரைப்படங்கள் மூலமாகக் கிராமங்கள்தோறும் பிரச்சாரம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, காசநோய் விளம்பரம் பற்றிய பிரிவுகள் 2 செயல்பட்டு வருகின்றன. ஒன்று மருத்துவ சுகாதாரத்துறை இயக்குநர் மூலமாகவும், மற்றொன்று மதுரை மருத்துவக் கல்லூரித் தலைவர் டீன் தலைமையிலும் செயல் பட்டு வருகிறது. இந்த இரண்டு பிரிவுகளும் யுனிஸெஃப் வெகிகிள் ஒன்றைப் பெற்று சினிமாப்படங்கள் மூலமாக அங்கங்கே காட்டி வருகிறார்கள். நாட்டு மக்கள்தொகை, பரப்பளவு இவற்றோடு ஒப்பிடுகிறபோது, இது எல்லாப் பகுதியிலும் அவ்வளவாகப் புலனாகாது. ஆனாலும் இந்தப் பகுதிகளில் வேறு பலவகையான துறைகளின் மூலமாகவும் இந்த நோய் தடுப்புக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : சின்னாளப்பட்டியில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கின்றனர். அவர்களிடையேதான் காச நோய் அதிகமாக இருக்கிறது என்று டாக்டர்கள் சொல்கிறார் கள். ஆகவே அதைத் தடுக்க அரசு அதிகம் கவனம் செலுத்தி ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த நோய் கைத்தறி நெசவாளர்களுக்குத்தான் அதிகம் வருகிறது என்பது ஒருவகையில் தவறு. ஆலைகளில் வேலை செய்யக்கூடியவர் களுக்கு பஞ்சுத் துகள்மூலமாக இந்த நோய் பரவக்கூடும் என்பது விஞ்ஞான முறையில் சொல்லக்கூடிய ஒன்றாகும். ஆயினும் கைத்தறி நெசவாளர்களிடம் பரவியிருக்கிறது என்றால்—டெபிசிட் இன் டயட் —சத்துள்ள உணவு கிடைக்காத அளவுக்கு வறுமையினால் வளரக் கூடும். அது ஒரு சமுதாயப் பிரச்சினை. எந்த அளவுக்கு அதைத் தடுக்க முடியுமோ, அந்த அளவு தடுக்க முயற்சிக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, காசநோய்க்கு ஒரே தென்னை மரத்தில் வடிகிற கள்ளை 48 நாளைக்கு சாப்பிட்டால்......

MR. DEPUTY SPEAKER : The main question relates to propaganda.

திரு. பெ. மலைச்சாமி: ஒரே தென்னை மரத்தில் வடிகிற கள்ளை 48 நாளைக்குக் குடித்தால், காசநோய் நீங்கிவிடும் என்பதாக கிராம மக்கள் அனுபவத்தின் பேரில் சொல்கிறார்களே, ஆகவே இதைப் போதைப் பொருளாகக் கருதாமல் மருந்துப் பொருளாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மருத்துவமனையில் வழங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் உள்ள ஒரு நுட்பமான கருத்தை அவையினர் அறிந்து கொள்வது நல்லது. குழந்தைகளுக்குக்கூட தென்னைமரத்துக் கள்ளை 48 நாட்கள் கொடுத்தால், பலவிதமான நோய்கள் அகன்றுவிடு கின்றன. நோயை எதிர்த்து வெற்றிபெறும் சக்தியை இது உடலுக்கு அளிக்கிறது. போதைப் பொருளாக அல்ல. போதை ஏறினால் நோய் நீங்காது.

DR. H. V. HANDE : The Hon. Minister was replying about the propaganda measures taken by this Government. May I know whether it is a fact that the Government are finding it difficult to have Tuberculosis Sanatoria because of paucity of funds? Will the Government make enough propaganda to convince the public that it is better also for some of the persons to have ambulatory treatment so that they can go to the hospital and have treatment. In fact the last Ministry have introduced the ambulatory treatment. May I know the steps taken by this Government to once again introduced this and expand the ambulatory treatment, and the steps taken by this Government to see that these persons are also properly treated and the persons also visited by those concerned?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The treatment through ambulation is not so easy in this country. Experts are needed and one are two experts are also available in the Sanatorium in Sengipatti. It is going to be tried by an expert who has got experience and training in a foreign country.

திரு. எம். சுரேந்திரன்: பஞ்சாலைகளும், கெமிகல் ஆலைகளும் வளர்ந்துகொண்டு வருகிற நிலைமையில் அதிகமான டி.பி. பேஷன்ட் உண்டாகிக் கொண்டிருக்கிறார்கள். டி.பி. சானிடோரியங்களில் போதுமான இடமில்லாத காரணத்தினால், ரிஜிஸ்தர் செய்துவைத்து வெகுநாட்களானாலும் இடம் கிடைப்பதில்லை என்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா? ஆகவே உடனடியாக அங்கங்கே சானடோரி யத்தை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த சானடோரியம் நாட்டில் பெருந்துறை, செங்கிப்பட்டி, இன்னும் செட்டிநாட்டுப் பக்கத்தில் காரைக்குடி ஆகிய இடங்களில் நடை பெறுகிறது. அங்கே படுக்கை வசதிகள் இருக்கின்றன. செலவுக்குத் தந்து அங்கே சேருவதற்கு பலருக்கு வசதியில்லை என்ற நிலைமை இருக்கிறது. தொழிலாளர்களின் செலவை ஏற்றுக்கொண்டால், நிச்சயமாக தேவையான மருத்துவம் கிடைக்கும்.



தொழுநோய்த் தடுப்பு.

* 421 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழுநோய்த் தடுப்பு நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை. தொழு நோயைத் தடுப்பதற்கு குறிப்பிட்ட நிவாரணம் எதுவும் இல்லை. தொத்தும் தன்மையுள்ள நோயாளிகளை சிகிச்சைக்குட்படுத்தி அந்நோய் மேலும் பரவாமல் இருக்கும்படி கட்டுப்படுத்துவதே தொழுநோய்த் தடுப்பு நிவாரணமாகும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களில் இருந்து வடாற்காடு, தென்னாற் காடு, செங்கல்பட்டு ஆகிய இடங்கள்தான் இந்த நோய் வளர்ச்சிக்குக் களஞ்சியமாக இருக்கிறது. இந்த மூன்று இடங்களிலும் வெளிநாடு களில் இருந்து சிலர் வந்து ராணிப்பேட்டை, வந்தவாசி, பனப்பாக்கம் போன்ற இடங்களில் தொழுநோய் தடுப்புக்கும் சிகிச்சைக்கும் ஆஸ் பத்திரி நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு பொருளா தார உதவி செய்ய முன்வருமா? அரசே தீவிர நடவடிக்கை எடுத்து இந்த நோயைத் தடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விரிவுப்படுத்தப்பட்டு, நான்காவது திட்டத் திலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

During the IV Plan, the Leprosy Control Programme is treated as a Centrally Sponsored Scheme. For 1969-70 and 1970-71 four Leprosy Control Units and forty-four S.E.T. Units and upgrading of one Leprosy Subsidiary Centre were sanctioned and the above units were started functioning. So, the total population covered by the Government units till the end on the year 1970 is about 73,00,000 and 1,27,000 cases were recorded.

என்பதாகக் குறிப்பு இருக்கிறது. அதற்கு மேலும் மத்திய அரசாங்க உதவியுடன் மாநிலம் முழுவதும் இந்த நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுக்க முயற்சி இருக்கிறது. தனிப்பட்ட நிறுவனங்கள், 32 வாலன்டரி ஆர்கனைசேஷன்ஸ் இப்போதே பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அப்படிப் பணியாற்றுகிறவர்கள் நம்மிடத்தில் அதிக உதவி பெற விரும்பாத நல்லெண்ணம் உள்ளவர்களாக இருக் கிறார்கள் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: செங்கல்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் உதவியோடு ஒரு நிறுவனம் இயங்கி வருகிறது. நீண்ட நெடுங்காலமாக அங்கே பணியாற்றுகிறவர்கள்

பல மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்கும் கொடுத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது என்பதை விளக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கனம் எதிர்க்கட்சித் தலைவரைப் போன்றவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத இந்தக் கேள்வியைப் போடுவது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

*Fishing harbour in Madras City.*

* 422 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal to construct any fishing harbour in the City of Madras; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) சென்னையில் ரூ. 388.50 லட்சம் செலவில் பெரிய மீன் பிடித் துறைமுகம் ஒன்று கட்டும் செயற்குறிப்புக்கு இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது இப்பணியை நிறைவேற்றும் பொறுப்பு சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவசியமான தொடக்கப்பணிகள் தற்போது கவனிக்கப் பட்டு வருகின்றன. பூனாவில் நடத்தப்படும், மாதிரி ஆய்வுகளின் அடிப் படையில், துறைமுகத்திட்ட அமைப்பு முடிவு செய்யப்பட்டவுடன், முறையான பணி மேற்கொள்ளப்படும். மீன்பிடித் துறைமுகம் கட்டி முடிக்கப்பட்டவுடன், பிடிபட்ட மீன்களைக் கரை சேர்க்கவும், 50 மீன்பிடி நாவாய்களும், 400 இயந்திரப் படகுகளும் தங்கவும் வசதி யாக இருக்கும்.

திரு. மு. வேதாசலம்: தலைவர் அவர்களே, சென்னை ராய புரத்தில் கட்டப்படுகின்ற மீன்பிடித் துறைமுகம் எப்போது தொடங் கப்படும்? எத்தனை ஆண்டுகளில் வேலை முடிவடையும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இதனுடைய துவக்க விழா 1969-லே நடைபெற்றிருக் கிறது. அதற்குரிய டிசைன்கள் பூனாவில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிக் கூடத்தில் ஆய்வு நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கிடையில் நிலப் பரப்பு ஆர்ஜிதம் செய்கின்ற வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறைந்தது மூன்று ஆண்டுகளில் இது முடிவடையும் என்று தெரி கிறது.

Thiru K. M. SUBRAMANIAM : Is it a fact that the proposed fishing harbour north of the harbour is likely to be dropped because of the pipe line there and a wall being constructed to protect the pipe line ? Is there any proposal to drop it or is it likely to be dropped, I would like to know.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, இல்லை. அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை. கட்டாயமாக இந்தத் துறைமுகம் கட்டித்தான் முடிக்கப்படும்.





*Deep Sea Fishing in Tamil Nadu*

* 423 *Q.*—Thiru B. VENKATASAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether there is any proposal to start Deep Sea Fishing in the coastal areas of the State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) தொலைகடல் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடி திட்டத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்குப் பெரிய படகுகள் தேவைப்படுகின்றன. 57 அடி உருக்கு நாவாய்கள் நான்கிற்கான தருவிப்பு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன. அவை கல்கத்தாவில் கட்டப்பட்டு வருகின்றன. அவை மாநிலத்திடம் அடுத்த சில திங்கள்களில் ஒப்படைக்கப்படுமென எதிர்பார்க்கப்படு கிறது. அந்த நாவாய்கள் கிடைக்கப் பெற்றவுடன் தொலைகடல் பகுதியில் உள்ள மீன்பிடி பகுதிகளை வரையறுப்பதற்காகவும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான ஏனைய நாவாய்கள் அந்தப் பகுதிகளில் மீன்பிடிக்க வகை செய்வதற்காகவும் முன்னோடி ஆய்வு நடத்த அவற்றைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

Thiru B. VENKATASWAMY : Sir, fish is a vitaminised food and there is a great chance of increasing production of fish from the coastal areas of Tamil Nadu. Yesterday the Hon. Minister had stated that there was some delay on the part of the Central Government with regard to making a survey. So, may I know whether any concrete steps have been taken by this Government to survey the entire coastal areas of our State?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இந்த நான்கு நாவாய்கள் வந்து, நல்ல முறையில் சர்வே செய்ய வழி செய்யப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் லாஞ்ச் மூலமாக ஆழ்கடலில் சென்று மீன் பிடிப்பதற் காகவும், எந்தெந்த இடங்களில் மீன் கிடைக்கிறது என்பதைக் கண்டறியவும் "இன்டோ-ஐஸ்லெண்டு ஃபிஷரீஸ்" நிறுவனம் மூல மாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்டோ-அமெரிக்கன் ஃபிஷரீஸ் நிறுவனம், மெஸர்ஸ் பின்னி அண்டு கம்பெனிக்காரர்கள் அமெரிக்காவிலிருந்து பெரிய டிராலர்ஸ் வரவழைக்கிறார்கள். ஆழ்கடலுக்குச் சென்று, நீண்டநாள் தங்கி, மீன் பிடித்து, மீன்களைப் பக்குவப்படுத்தி, அங்கேயே டப்பாக்களில் அடைத்து வைப்பதற் கான திட்டங்கள் செய்யப்படும். இந்தத் திட்டங்கள் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றி வைக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டி லுள்ள மீனவர்கள் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கும்போது, அவர் களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கேரளத்தாரும், ஜப்பான் மீனவர்களும் மிகப் பெரிய டிராலர் வைத்துக்கொண்டு மீன்பிடிப்ப தால், இரு சாராருக்குமிடையே கலகம் நடக்கிறது, சச்சரவுகள் உண்டாகின்றன. ஆகவே, கேரள அரசிடமும், ஜப்பான் அரசிடமும் இதுகுறித்து ஏதாவது நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக் கிறதா?

[1971 ஜூலை 24

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த விசைப்படகுகள் வழங்குவதிலே குலுக்குச் சீட்டு முறை கையாளப்படுகிறது. இதில் அனுபவம் பெற்றவர்களுக்குக் கிடைக்காமலும், அக்கறை இல்லாதவர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்பும் இருப்பதால், இந்த முறை மாற்றப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அக்கறை இல்லாதவர்கள் யாரும் விண்ணப்பிக்க மாட்டார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த 'மெக்கனைஸ்டு போட்ஸ்—யான்மார்' கொடுக்கப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "யான்மார்" மெஷின்கள் ஜப்பானிலிருந்து வரவழைக்கப்படுவது. "யான்மார்" போட்ஸ் தரத்திலே நன்றாக இருக்கிற காரணத்தாலே ஜாப்பனீஸ் டெக்னிகல் எக்ஸ்பர்ட்டுகளை வரவழைத்து, அதை இங்கேயே செய்வதற்கான முயற்சிகளை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, பல ஆண்டுக்காலமாக மத்திய அரசாங்கத்திலே வற்புறுத்தி வந்து, இடையிலே நிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் நமது மாநிலத்தில் எண்ணூரில் ஒரு நிறுவனம் ஆரம்பிக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜப்பான் கம்பெனிக்காரர்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் நேரடியாக கல்கத்தாவிலுள்ள "கார்டன் ரீச்" கம்பெனி மூலமாகச் செய்யலாமா என்று பரிசீலனை செய்து வருகிறார்கள். கார்டன் ரீச் கம்பெனிக்காரர்கள் ஒத்துக்கொண்டால், நமது மாநிலத்தில் எண்ணூரில் அமைப்பதற்கான முயற்சிகளை அரசாங்கம் செய்யும். இதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த விசைப் படகு விநியோகத்திலே குலுக்குச் சீட்டு போட்டு எடுப்பதன் மூலம், மனிதர்களுக்கு இருக்கின்ற அறிவு ஆற்றல் திறமை இவைகளை எல்லாம் தகர்த்து விடுவதைப் போலவும், மனிதர்களின் உழைப்பைக் குறைத்து அவர்களின் நியாயமான உரிமைகள் மறுக்கப்படுவதைப் போலவும் அமைந்து விட்டிருக்கிறது. இதை முறைப்படியாக, அவர்களின் திறமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலே வைத்து படகுகளை விநியோகம் செய்யும் நிலைமையிலே நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தொழில் நடத்த படகுகள் கேட்கிறார்கள். அவர்கள் அப்படி நடத்துவதற்கு பயிற்சி பெற்றவர்களா இல்லையா, அவர்கள் அப்படி நடத்துவார்களா இல்லையா என்பதைத்தான் அரசாங்கம் பரிசீலனை செய்ய முடியும். அதைவிட்டு, அவர்களுக்கு எந்த அளவுக்குத் திறமை இருக்கிறது என்பதை ஆராய அரசாங்கத்தினால் முடியாது. அப்படிப்பட்ட நல்ல ஆய்வுகளை எல்லாம் நடத்தித்தான் முதலிலே அவர்களுடைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கிறது. எனவே, அதிலே பூர்த்தி செய்யப்பட்டு இருக்கின்ற குறிப்புகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் குலுக்கல் முறை மூலம் தெரிந்தெடுக்கிறார்கள்.



1971 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிகின்ற தருவாயில் இருக்கிறது. ஆயினும், கேள்விகள் அதிகமாக இருப்பதால், கேள்வி நேரத்தை இன்னும் கொஞ்சம் நீடித்துக்கொள்கிறேன்.

விவசாயக் கூலி நிர்ணயச் சட்டம்.

* 427 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயக் கூலிகளுக்கான கூலி நிர்ணயச் சட்டத்தினை மேலும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, கணபதியா பிள்ளை குழுவின் அறிக்கையின்படி கீழத் தஞ்சையில் உள்ள விவசாயக் கூலிகளுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்திருப்பது போல், தமிழகத்திலுள்ள எல்லா விவசாய தொழிலாளர்களுக்கும் அத்தகைய நியாயமான கூலி கிடைக்க இந்த அரசாங்கம் வேறு ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மற்றப் பகுதிகளிலே இந்த கூலி நிர்ணயச் சட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் தற்போது இந்த அரசாங்கத்திற்கு இல்லை. இதிலே நிதானமாக யோசித்துப் பார்த்துத்தான் இந்த அரசு ஒரு முடிவு செய்யும்.

திரு. எஸ். கணேசன்: கீழத் தஞ்சை மாவட்டத்திலே ஒரு சில கிராமங்களிலே இருக்கின்ற கட்டுப்பாடுகளின் காரணமாக இந்த குறைந்த பட்ச கூலி நிர்ணய சட்டத்தின்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க மறுக்கிறார்கள். குறைந்த கூலியைக் கொடுத்து வருகிறார்கள். அப்படிப்பட்ட புகார் இந்த அரசுக்கு வந்து, அதன் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட புகார் வந்ததாகத் தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் விசாரித்து குறிப்பிடப்பட்ட கிராமத்தின் பெயரைச் சொன்னால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம்: கீழத் தஞ்சை மாவட்டத்திலே விவசாய கூலிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற விவசாயக் கூலி அளவை, குறைந்தபட்சம் மேல் தஞ்சை மாவட்டத்திற்காவது விஸ்தரிக்கபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது இருப்பதற்கு மேல், வேறு எங்கேயும் விஸ்தரிக்க யோசனை இல்லை. ஆனால், மற்ற பகுதிகளுக்கும் இந்தக் கூலி நிர்ணயச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கிறது. அதைப் பற்றி இந்த அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு நம் மாநிலத்திலே என்ன தினசரி கூலி கிடைக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

[1971 ஜூலை 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்மந்தமில்லை; எனவே அனுமதி மறுக்கப்படுகிறது.

மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றுப் பாலம்

* 428 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலத்தை அகலப் படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : அந்த பாலம் மிகவும் குறுகலாகவும், பழுது அடைந்திருப்பதாலும், மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலத்தை அகலபடுத்த ஏதாவது நடவடிக்கை எடுத்திருக் கிறீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாயூரம் நகரிலுள்ள காவிரியாற்றின் பழைய பாலம் மாயூரம் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிறது. எனவே, இதை அகலப்படுத்த வேண்டு மென்றால், அந்த நகராட்சி செலவிலே ஒரு பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அந்த மாயூரம் நகராட்சி தன்னுடைய பங்கை ஏற்றுக்கொள்ள இசைவு தெரிவித்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு யோசனை செய்யும்.

பு. முட்டலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம்

* 429 வினு—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

தென்னுற்காடு மாவட்டம், பு. முட்டலூர் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்த இடத்திலே பாலம் கட்டப்படவிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த நல்ல காரியத்தை எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த பாலம் கட்டுவதற்கு 25 லட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. இதிலே மத்திய அரசாங்கத்தின் அனுமதியையும் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்தினுடைய உதவியையும், அனுமதியையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.



1971 ஜூலை 24]

திரு. செ. சதாசிவம் : பென்னுடம் அருகே உள்ள சுகர் பாக்டரிக்கு திருச்சி மாவட்டத்திலே இருந்து கரும்பு கொண்டு வரும் வகையிலும், தஞ்சாவூர்–தென்னுர்க்காடு பாதையை சுலப மாக்கும் வகையிலும், பென்னுடம் அருகே உள்ள வெள்ளாற்றிலே பாலம் கட்ட இந்த அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

வேலூர்–ராணிப்பேட்டை சாலையில் விஷாரத்தில் பைபாஸ் ரோட்

* 430 வினு—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

வேலூர்–ராணிப்பேட்டை சாலையில் விஷாரத்தில் பஸ் போக்குவரத்துக்கு பைபாஸ் ரோட் (Bye-pass road) போடப் படும் திட்டம் எப்போது முடிவு பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த வேலை அக்டோபர் 15-ந் தேதி அளவில் முடிக்கப்படலாம்.

திரு. நா. வீராசாமி : வேலூர்–ராணிப்பேட்டை சாலையிலே இரண்டு மைலுக்கு ஒரு ஊர் இருக்கிறது. அந்த 16 மைல் தூரத் திலே 16 வளைவுகள் இருக்கின்றன. இப்படி அரசாங்கம் ஒரு பைபாஸ் ரோட்டை போடுவதற்கு பதிலாக, வேறு ஒரு புதிய ரோட்டையே ஏன் போடக்கூடாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது இந்த பைபாஸ் ரோட்தான் முடியும் தருவாயில் இருக்கிறது. அதை விட்டு புதிய ரோடு போட வேண்டுமென்றால், அதிலே கஷ்டங்கள் ஏற்படும். எப்படியும் உறுப்பினரின் கருத்து பரிசீலிக்கப்பட்டு, காரியங்கள் ஆற்றப்படும்.

மதுரை–தொண்டிச் சாலையிலிருந்து ஆனந்தூர் செல்லும் சாலை

* 431 வினு—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை–தொண்டிச் சாலையிலிருந்து பிரிந்து ஆனந்தூர் செல்லும் சாலையில் மெட்டல் பரப்பி பாலங்கள் அமைத்து பரா மரிப்புச் செய்து தரும்படி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1971 ஜூலை 24

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, இந்தச் சாலை 10 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப் பட்டு பஸ்ஸுகள் போய் வருகின்றன. இருந்தாலும், அந்தச் சாலை யிலே பாலம் கட்டப்படாமலும், மெட்டல் பரப்பப்படாமலும் இருப்பதால், பஸ்கள் போக்குவரத்திற்கு பாதகம் ஏற்படுகிறது. அதை நல்ல பாதையாக செய்ய, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சாலையை 1960–61-ம் ஆண்டில் பராமரிப்பதற்காக "பேருந்து சாலை திட்டத்தின் கீழ்", மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த சாலையிலே மெட்டல் பரப்ப வேண்டும் என்பதுதான் கோரிக்கை. இதற்கு 6½ லட்சம் ரூபாய் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். நிதி வசதியைப் பொறுத்து, காரியங்கள் விரைவாக தொடங்கப்படும்.

வெளி மாநிலங்களிலிருந்து கதர் வரவு

* 432 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு தற்போது வெளி மாநிலத்தில் இருந்து கதர் வரவழைக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) தமிழகத்தில், கதர் உற்பத்தி, கதர் விற்பனை இரண்டிலும், கதர் கிராமத் தொழில் வாரியம் ஈடுபட்டுள்ளது. விற்பனையின் தேவைக்கேற்ப, தமிழ் நாட்டில் உற்பத்தியாகாத கதர் ரகங்களை, வெளி மாநிலக் கதர் நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டியது அவசியமாகவுள்ளது. படுக்கை விரிப்புகள், சமக்காளம், மேலங்கித் துணிகள் போன்ற மிகத் திண்ணிய ரகக் கதர், மிகவும் மெல்லிய கதர், கதர்பட்டு, கம்பளி ரகங்கள் முதலியன வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, ஜமக்காளம், படுக்கை விரிப்புக்களை வெளி மாநிலத்திலே இருந்து வரவழைப்பது நம்முடைய மாநிலத்திலே உள்ள கைத்தறி தொழிலாளர்களை பாதிக்கும் என்று சொல்லுகிறார்கள். எனவே, அதை எல்லாம் மாற்றி அமைக்கக் கூடிய அளவிலே, கைத்தறி ஜமக்காளம், படுக்கை விரிப்பு போன்றவைகளை பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ பண்டிகைகளின் போது மக்கள் வாங்கி அணியச் செய்ய வேண்டும் என்று ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் இந்த அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உறுப்பினர் அவர்கள் கைத்தறியைப் பற்றி சொல்லுகிறார்கள். இது கதர் பற்றிய வினா. கைத்தறித் துணிகள் நல்ல முறையிலே விற்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இந்த அரசாங்கத்



1971 ஜூலை 24]

திற்கு கிடையாது. மோட்டா ரக ஜமக்காளமும், படுக்கை விரிப்பும்தான் வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைக்கப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மோட்டா ரகங்களை—தடித்த நூலினைக் கொண்ட ரகங்களை தமிழ் நாட்டிலே நாம் உற்பத்தி செய்யவில்லை. எனவேதான் வெளி மாநிலங்களிலே இருந்து வாங்குகிறோம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, வெளி மாநிலங்களிலே இருந்து கதர் வாங்கப்பட்டால், நம் மாநிலத்திலே இருக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு குறையாதா என்பது பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கைத்தறி நெசவு தனி யாகவும், கதர் நெசவு தனியாகவும் செயல்படுகிறது. எனவே, இந்த மாதிரி கதர் விரிப்புகளை வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைப்பதால், நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் பட மாட்டார்கள். கதர் நெசவு என்று சொல்லும் பொழுது நாம் ஏற்கனவே பல ஆண்டுகளாக இப்படி மோட்டா ரகங்களை வர வழைத்திருக்கிறோம். இந்த மோட்டா ரகம் 16-வது நெம்பர் நூலிலே நெய்யப்படுகின்றது. இப்படிப்பட்ட ஜமக்காளம், படுக்கை விரிப்புகளை மாத்திரம்தான் நாம் வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா : வெளி மாநிலங்களிலே இருந்து மோட்டா ரக கதர் ஜமக்காளங்களும், படுக்கை விரிப்புகளும் வர வழைக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம் மாநிலத்திலேயே கைத்தறி ஜமக்காளமும், படுக்கை விரிப்புகளும் பவானியிலேயும், சென்னிமலையிலேயும் தயாரிக்கப்படும்பொழுது, இப்படி கதர் வெளி மாநிலங்களிலே இருந்து இறக்குமதி செய்வ தால், அந்த வியாபாரம் இங்கே பாதிக்கப்படுகிறது. எனவே, வெளி மாநிலங்களிலே இருந்து இப்படி இறக்குமதி செய்வதை இந்த அரசு தடை செய்ய ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கதர் ஜமக்காளம், கதர் போர்வை என்பது வேறு. நம்முடைய உறுப்பினர் பவானி யிலேயும், சென்னிமலையிலேயும் நெய்யப்படும் கைத்தறி ஜமக் காளத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். நாம் வெளி மாநிலங்களிலே இருந்து இறக்குமதி செய்வது மிக மோட்டா ரகமாக இருப்பதால் தான், அதை இறக்குமதி செய்கிறோம். நம் மாநிலத்திலே இன்னும் நல்ல நூலைப்போட்டு, 48 கதிரில் உற்பத்தியாகும் நூலைப்போட்டு, நெய்ய திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்த மோட்டா ரகங்களை வெளி மாநிலங்களிலே இருந்து வரவழைப்பது தவறில்லை. ஏனென்றால், இது எல்லாம் அகில இந்திய ரீதியிலே இயங்கும் கதர் நிறுவனங்களிலே இருந்து வரவழைக்கப்படுகிறது.

திரு. மா. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து வருகின்றவை அங்கேயே ஹேண்ட் பிரிண்ட் செய்யப்பட்டுவருகின்றன. அவற்றை வெள்ளைத் துணிகளாக வர

வழைத்து இங்கேயே ஹேண்ட் பிரிண்ட் செய்ய ஏற்பாடு செய்தால், இங்குள்ளவர்களில் பலருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட வசதியாக விருக்கும் என்று, அரசு அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கையால் பிரிண்ட் செய்வதென்பது ஈரோட்டில் நடைபெறுகிறது. இப்பொழுது நாம் இங்கு விவாதிப்பது ஜமக்காளம், போர்வை போன்றவற்றைத்தான். அங்கேயே வெள்ளை செய்யப்பட்டு இங்கு அனுப்பப்படுவதால் இங்கு ஒன்றும் செய்வதற்கில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, கதர் சில்க் எல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வருகிறதென்று சொன்னால், நம்முடைய மாநிலத்தில் கதர் சில்க் உற்பத்தியை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, 62 லட்சம் ரூபாய்க்கு கதர்ப் பட்டு உற்பத்தி செய்கின்றோம். வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாக, மேற்கு வங்கத்திலிருந்து 16 லட்சம் ரூபாய் அளவுக்கு வரவழைக்கப்படுகிறது. இங்கே உற்பத்திக்கு அதற்கு மேல் வழியில்லை என்ற காரணத்தால்தான் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படுகிறது.

திரு. எம். முத்தையா: பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வருகின்ற கதர் ஆடைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். அங்கே ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்களை கம்பெல் பண்ணி அவர்களை வாங்கிக் கொள்ளவோ அல்லது விற்றுக் கொடுக்கவோ செய்யும் நிலைமையிருக்கிறது. ஊராட்சி ஒன்றியக் கமிஷனர்களின் பேச்சைத் தட்டிக் கழிக்க முடியாத சூழ்நிலை அந்த ஆசிரியர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. ஆகையினால் வெளி மாநிலங்களிலிருந்து இந்தக் கதர்ப் பொருட்களை நமது மாநிலம் வாங்காமலிருக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் கட்டாயம் என்பதேயில்லாமல், மான்யமும் கொடுத்து விற்பது போன்ற முறையில்லாமல், மற்ற துணிகளோடு ஒப்பிட்டு கதர் விற்பனை நடைபெற வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கட்டாயம் என்பது நாம் விரும்பும் ஒன்றல்ல. அதைத் தொடர்ந்து செயல்படுத்தும் எண்ணமுமில்லை. முன்பெல்லாம் அரசாங்கம் கட்டாயமாகக் கடன் கொடுத்து வந்தது. அப்படிச் செய்வதை நிறுத்த வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தீர்மானித்திருந்தார்கள். அது இப்பொழுது செயல்முறைக்கு வந்து கொண்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAN: Is it not better to stop this discussion because more than 75 per cent of our handloom goods are going outside Madras and they should not also discuss like this.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த விவாதத்தை நிறுத்துவதா, மேலும் தொடர்வதா என்பது தலைவர் அவர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்.

MR. SPEAKER: It is a suggestion.





## அரசு விவசாயப் பண்ணைகளின்–தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு

* 433 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு விவசாயப் பண்ணைகளில் கூலி வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தற்போதைய விலைவாசிக்கேற்ப கூலி உயர்வு நிர்ணயம் செய்து கொடுக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை, ஐயா.

(இ) வினா எழுவதற்கு இடமில்லை.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கோவை அரசாங்க வேளாண்மைத் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 1946–47-ல் கொடுக்கப்பட்ட கூலியையே இன்றையதினமும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதுள்ள விலைவாசிக்குத் தகுந்த மாதிரி கூலி உயர்வு கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலும், அரசு வேளாண்மைப் பண்ணைகளிலும் அதிக கூலியாட்கள் தேவை ஏற்படும்போதெல்லாம் அமர்த்திக் கொள்ளப்படுகிறார்கள். இக் கூலியாட்களுக்கு 25 காசு வரை ஒருவருக்கு ஒருமுறை தற்காலிகக் கூலி உயர்வு அளித்துவிட்டு, பின் ஒப்புதல் பெற பண்ணை மேலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். முதிர்ந்த முதிர்ச்சி அடையாத கூலியாட்களின் தினக்கூலி இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. முதிர்ச்சி பெறாத கூலியாட்களின் குறைந்தபட்ச நாட் கூலி, அதிகப் பட்ச நாட் கூலி, முறையே ரூ. 1-90-ம், ரூபாய் ஐந்துமாகும். முதிர்ச்சியடைந்த தினக் கூலிகளின் குறைந்தபட்ச கூலி, அதிகப் பட்ச கூலி முறையே ரூ. 1-90-ம் ரூபாய் எட்டுமாகும். சில வேளாண்மைப் பண்ணைகளிலும், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலும் பணிபுரியும் தினக்கூலிகள் கூலி, வேளாண்மைத் துறையில் பணி புரியும் முறையான கூலிகளின் கூலியை விட அதிகமாகவிருக்கிறது. கூலிகள் தேவை அதிகமாகவிருக்கும் இடங்களில் இந்நிலை தவிர்க்க முடியாதது. அவ் விடங்களில் மேற்கூறிய விகிதங்களில் கூலி ஆட்கள் கிடைப்பது அரிதாகும். கூலிகள் பற்றுக்குறையால் பண்ணைப் பணி தேங்குவதை தடுக்கும் பொருட்டு அதிகக் கூலி கொடுக்கப்படுகிறது. மேலும் பெரும்பாலான வேளாண்மைப் பண்ணைகளிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் அவற்றின் அருகில் உள்ள சுற்றுப்புறங்களில் நிலவும் கூலி அளவையொட்டி கூலி கொடுக்கப்படுகிறது.

கூலி உயர்வு கேட்டு, வேண்டுகோள் ஏதேனும் நாட்கூலிகளிடமிருந்து வருமானால், நடைமுறையிலுள்ள கூலி அளவு போன்றவற்றை கருத்தில் கொண்டு ஆராயப்படும். இதுவரை இத்துறையில் பணியாற்றும் நாட்கூலிகளிடமிருந்து முறையீடு ஏதும் வந்ததாகத் தெரியவில்லை.

## சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா நிலையமாக்கல்

* 434 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சாத்தியாறு அணைக்கட்டைச் சுற்றுலா நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மதுரை நகரத்தின் அருகாமையில், பதினைந்து மைல் தூரத்தில், முற்றிலும் இனிமையான சூழ்நிலையிலிருக்கும் இடம் சாத்தியாறு அணைக்கட்டு. இது அழகர் கோவிலிலிருந்து ஆறு மைல் தூரத்தில் உள்ளது. நம்முடைய அமைச்சரவையிலிருக்கும் மாண்புமிகு அமைச்சர்களில் நான்கு அமைச்சர்கள் அந்த இடத்திற்கு வந்திருந்து அந்த இடத்தின் சூழ்நிலையைப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தைச் சுற்றுலா நிலையமாக மாற்ற அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியாறு அணைக்கட்டு நல்ல சூழ்நிலையில், ரம்யமான இடத்திலிருக்கிற தென்பது உண்மை. அதைச் சுற்றுலா நிலையமாக்குவதற்கு நம்முடைய தலைமைப் பொறியாளரிடம் திட்டம் தீட்டும்படி கேட்டுக் கொண்ட நேரத்தில் இரண்டு லட்சத்தி நாற்பதாயிரம் ரூபாய் தேவைப்படுமென்று சொன்னார்கள். இந்த ஆண்டு நிதி நிலை இடம் தராததால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1972–73-ல், இரண்டாவது பாகத் திட்டமாக எடுத்துக் கொள்ள அரசு உத்தேசித்திருக்கிற தென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Rest house at Chittanna Vasal*

* 435 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) whether the Government has any proposal to construct a rest house at Chittanna Vasal for the benefit of the tourists; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இராசாராம் : இல்லை.

## *Half ticket system for children in State Transport Buses*

* 436 Q. Dr. H. V. HANDE : Will the Hon. the Minis for Transport be pleased to state :

(a) whether the Government has any propsal to intro half ticket system to children in State Transport buses; an

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) மாவட்ட வழித்தடங்களிலும், நெடுந்தொலைவு (விரைவு) பணிகளிலும் செல்லும் அரசுப் போக்குவரத்துத்துறைப் பேருந்துகளில் சிறார்களுக்கு அரைக்கட்டணம் வசூலிக்கும் முறை வழக்கத்திலுள்ளது. நகரப் பணிகளில் செல்லும் பேருந்துகளில் இம்முறை வழக்கத்தில்லை. நகரப் பணிகளில் செல்லும் பேருந்துகளில் இம்முறையைக் கொண்டுவர உத்தேசிக்கவும் இல்லை.

Dr. H.V. HANDE : Is it not a fact that in the month of March last year the Hon. Chief Minister had assured in this House, when I had raised the same question, that it would be sympathetically considered and all the necessary matters would be investigated and then a decision would be taken? May I know from the Hon. Minister whether all the details about these half tickets to children less than 12 years have been considered and taken into consideration by this Government and what are the reasons which prompted them to drop this idea which was originally kept in a nebulous stage by this Government?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாவட்ட வழித் தடங்கள்களிலும் நீண்டதூர பேருந்துகளிலும் அதிகக் கட்டணமிருக்கின்ற காரணத்தால், குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் அரைக்கட்டணம் வாங்குவது உண்மையிலேயே பயனுள்ளதாயிருக்கும். ஆனால் நகர்ப்புறங்களிலும் புற நகர்ப்புறங்களிலும் அதிகபட்சம் போனால் 20 காசு, 25 காசு என்ற அளவில் தான் கட்டணம் இருக்கிறது. அதற்கு மேலில்லை. அதிலே அரைக் கட்டணம் போட்டு ரேஷனலைசேஷன் பண்ணுவது முழு கட்டண அளவுக்கு வந்துவிடுகிறது. ஆகவே அந்தப்படி அரைக் கட்டணச் சலுகை அதிகப் பலன் கொடுப்பதில்லை. நகர்புற, பெருநகர் புறங்களில் இந்த மாதிரி பயணம் செய்கின்றவர்கள் பெருமளவில் பணி செய்கின்றவர்கள் செல்வதால் அதிகப் பலனில்லை என்று அரசு நம்புகிறது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இதிலே ஒரு சந்தேகம். அரை டிக்கட்கள் வீதம் 60 பேர்களைத்தான் பேருந்துகளிலே ஏற்றலாமா அல்லது 120 அரை டிக்கட்களை ஏற்றலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரை டிக்கட் என்பது கட்டணத்திற்குத்தானே தவிர இடத்திற்கு அல்ல.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே 5 அல்லது 6 வயது என்று இருந்தால் அரைக் கட்டணம் வசூலிக்கிறார்கள். 3 வயதிற்குக் குறைந்தவர்களுக்குக் கட்டணம் இல்லை. ஒரு சிலர் 7, 8 குழந்தைகளோடு வருகிறார்கள். அப்படியில்லாமல் ஒரு சீலிங் வைத்து ஒரு பாஸஞ்சர் ஒரு குழந்தையை அல்லது 2 குழந்தைகளைத்தான் கொண்டுவரலாம் என்று அரசாங்கம் உத்திரவு போடுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதிலே உச்சவரம்பு கட்டுவதற்கு உத்தேசம் இல்லை.

[1971 ஜூலை 24

### Jain temple in Vijayamangalam

* 437 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Jain temple in Vijayamangalam in Erode taluk has been taken over by the Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளையும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளையும் கோயமுத்தூர் மாவட்டம் ஈரோடு வட்டம், விஜயமங்கலத்திலுள்ள (1) ஸ்ரீ அமளீஸ்வரர் கோயில், திங்களூர், (2) ஸ்ரீ சந்திரப்பிரபா தீர்த்தங்கர் கோயில், மெட்டுபுதூர் ஆகிய இரு ஜைனர் கோயில்களுக்கு நீட்டித்துள்ளது. சமண மதத்தைச் சார்ந்தவர்கள் அக்கோயில்களின் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, இது சமணக் கோயிலாக இருப்பதால் இந்து சமய நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த சமய அறநிலையத் துறையின்கீழ் எடுக்கப்பட்டு அதற்காக அறங்காவலரும் நியமிக்கப் பட்டு உள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பேரவைக்கு நான்கு முறைகளாகப் பல் வேறு தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" பட்டம் வழங்கியிருப்பதை பேரவைத் தலைவர் என்ற முறையிலேயும் இந்த மாமன்றத்தின் சார்பிலேயும் என்னுடைய பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்)

இந்த மகிழ்ச்சியான நேரத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு "டாக்டர்" பட்டம் அளித்து இருப்பதன் மூலமாக உண்மையிலேயே அவர்களுக்குச் சிறப்புச் செய்வதைக் காட்டிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்கனவே தனக்கு இருக்கிற பெரிய சிறப்புக்களோடு இன்னும் ஒரு சிறந்த சிறப்பை உண்டாக்கிக் கொண்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 24]

[மாண்புமிகு பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிலே முப்பது முப்பத்தைந்தாண்டுக் காலமாகப் பொது வாழ்விலே எத்தனையோ மாதிரியான நல்ல அடிச்சுவடுகளைப் பதித்தவர்கள். அவர்களைக் கடந்த முப்பது ஆண்டுக் காலமாக நான் அறிவேன். அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளராக, நல்ல பேச்சாளராக, பத்திரிகை ஆசிரியராக, பெரிய சமதர்மவாதியாக, சுயமரியாதை வீரராக, புனிதமான கொள்கைக்காக உழைக்கும் உழைப்பாளராகத் திகழ்கின்றார்கள்.

தமிழ்நாட்டிலே ஏற்படுகின்ற அரசியல் சமுதாயப் பொருளாதார மாறுதல்களிலே அவர்களுக்கு நிரந்தரமான இடமுண்டு. முப்பது ஆண்டுக் காலமாக தமிழ் எப்படியிருந்தது. இன்றைக்கு எப்படி மாறியிருக்கிறது. அவர்களுடைய நடையின் மூலமாகவும், இலக்கியச் செல்வத்தின் மூலமாகவும் புதுமாதிரியான கருவூலங்களை நம்முடைய இலக்கியத்திற்கு அவர்கள் சேர்த்திருக்கிறார்கள். தென்றலின் குளிமையை புயலின் வேகத்தை எரிமலையின் சீற்றத்தை அருவியின் ஆலோலத்தை அவர்கள் எழுத்து நடையிலே நாம் காண்கிறோம். அவர்கள் பேசுகின்றபொழுது இலட்சக் கணக்கான மக்கள் குழுமியிருக்கின்ற கூட்டங்களிலே எத்தனையோ பேர்கள் கண்ணீர் விட்டு அழுவதை நான் பல நேரங்களிலே பார்த்து இருக்கின்றேன். தமிழ்நாட்டினுடைய பொதுவாழ்வில் ஈடுபட்டு சிறைச் சாலைக்குச் சென்று ஒரு பெரிய வாழ்க்கையைக் கொண்ட அந்தத் தலைவருக்கு தமிழ்நாட்டில் உள்ள ஒரு முக்கியமான கலாச்சாரப் பெருமைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "டாக்டர்" என்ற பட்டத்தை வழங்கியிருப்பது மிக மிகப் பொருத்தமாகும்.

பொதுவாழ்வில் தலைவர்கள் பிறக்கிறார்கள்; சிலபேர்கள் தலைவர்களாக ஆக்கப்படுகிறார்கள்; சிலர் தலைவர்களாக ஆகின்றார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள். தலைவராக ஆவதற்குப் குடிப் பெருமை வேண்டும், குலப் பெருமை வேண்டும், பணப் பெருமை வேண்டும், பாரம்பரியப் பெருமை வேண்டும் என்றெல்லாம் இருந்த நிலைமையை மாற்றி தமிழ்நாட்டிலுள்ள கோடானுகோடி ஏழை எளிய மக்களும் நாட்டைத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல முடியும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆகும்.

தமிழ்நாட்டு மக்களுடைய நம்பிக்கையின் நாதமாகவும் இதய ஒலியாகவும் இருந்து இரண்டரை ஆண்டுக் காலமாக திறமையுடன் பொறுப்பேற்று தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, இந்திய பூபாகத்தின் மற்ற மாநிலங்களிலும் வெளி நாடுகளிலும் உள்ளவர்களால் நல்ல நிர்வாகத் திறன்பெற்ற முதல் அமைச்சர் என்று பாராட்டப் பெற்ற அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டம் வழங்கியிருக்கிறது. முதலமைச்சர் மாநாடுகளிலும் சரி, வெளி மாநிலங்கள், வெளிநாட்டவர்கள் இவர்களை யெல்லாம் சந்திக்கின்ற நேரத்திலும் சரி அவர்களுடைய அறிவாற்றலையும் வாதிக்கின்ற திறமையினையும் எடுத்துரைக்கின்ற சிந்தனைத் திறனையும்

[பேரவைத் தலைவர்]

நான் கண்டிருக்கிறேன். அவர்கள் இரண்டரை ஆண்டுக் காலமாக பொறுப்பேற்றுக் கொண்டு அதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி மக்களுக்கு, கோடிக் கணக்கான மக்களுக்கு நன்மைகள் செய்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தலைசிறந்த அந்தத் தலைவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டம் வழங்கியிருக்கிறது.

கடந்த தேர்தலிலே தமிழ்நாட்டு மக்கள் பெரிய நம்பிக்கை வைத்து அவர்களுடைய இதய ஒலி, அபிலாஷைகள் ஆகியவற்றின் சின்னமாகவும் வெற்றியுடன் அவர்கள் வெளிவந்தார்கள். இன்றைக்கு ஒரு பெரிய சமதர்ம சமுதாயம் அமைக்கின்ற காரியத்திற்கும் பொருளாதாரப் புரட்சிக்கும் சமூகப் புரட்சிக்கும் தன்னை ஒரு கருவியாக ஏற்றுச் செயல்படுகின்ற அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் இன்னும் வளருகின்ற வகையில் நல்வாழ்த்துக்களை பேரவையின் எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பிலேயும் தெரிவித்துக்கொண்டு அவர்கள் பல ஆண்டுக்காலம் நீடூழி வாழ இன்னும் நல்ல ஆற்றல்களையும் பல வெற்றிகளையும் பெற்று இந்த நாட்டு மக்களை முன்னேற்ற வேண்டுமென்ற முறையிலே என்னுடைய இதயங்கனிந்த பாராட்டுதல்களையும் தெரிவித்து மன்றத்தின் உறுப்பினர்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்ற முறையிலே அவர்கள் கரவொலிசெய்து ஆமோதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கரவொலிகள்).

## (3) அறிவிப்புகள்

### (அ) கவன ஈர்ப்புகாரியம் ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திரு. கு. காமாட்சி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு பொதுமுக்கியமான காரியமொன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அது ஒத்திவைக்கப்படுகிறது.

## (4) கவன ஈர்ப்பு

### தென்னை, வாழை மரங்கள் தொத்து நோய்களால் பாதிக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. எம். இராஜா அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொதுமுக்கியமான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.



திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இம்மாநிலம் முழுவதிலும் தென்னை மரங்களும், வாழை மரங்களும் சில தொத்து நோய்களால் பாதிக்கப்படுவதைப் பற்றியும், இந்நோய்களைத் தடுக்க அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது பற்றியுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தென்னை வாழை பயிர்கள் சாகுபடியாகும் நிலப்பரப்பு முறையே, 1,96,600 ஏக்கராக்கள், 1,20,125 ஏக்கராக்கள் ஆகும். இப்பயிர்கள் கீழே குறிப்பிட்டுள்ள பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளன:—

தென்னை.

பூச்சிகள்—

1. தென்னை சிவப்புவண்டு.
2. தென் கருவண்டு.
3. நெப்பாண்டிக்ஸ் செரிநோப்பா.
4. வெள்ளை எறும்புகள்.

நோய்கள்—

1. தென்னை வாடல் நோய்.
2. சாறுவடிதல் நோய்.
3. பட்ருட் நோய்.
4. இலைப்புள்ளி நோய்.

வாழை.

பூச்சிகள்—

1. இறக்கை வண்டு.
2. ரிஸோன்வீவில்.

நோய்கள்—

1. முடிகொத்து நோய்.
2. இலைப்புள்ளி நோய்.
3. வாழைவாடல் நோய்.

பொதுவாக பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ள பரப்பளவும், அப்பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பரப்பளவும் பின்வருமாறு:—

தென்னை.

| தொ. எண். | மாவட்டத்தின் பெயர். | பூச்சிகளாலும், நோய்களாலும், பாதிக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்) | பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்) |
|---|---|---|---|
| 1. | செங்கை | 1,650 | 1,210 |
| 2. | வட ஆற்காடு | 3,200 | 2,625 |
| 3. | தென் ஆற்காடு | 2 200 | 1,500 |
| 4. | தஞ்சாவூர் | 16,000 | 12,000 |
| 5. | திருச்சி | 4 500 | 2,700 |
| 6. | சேலம் | 3,500 | 2,150 |
| 7. | தருமபுரி | 3,100 | 2,100 |
| 8. | கோயமுத்தூர் | 5,200 | 4,100 |
| 9. | மதுரை | 4,200 | 2,650 |
| 10. | இராமநாதபுரம் | 5,200 | 2 650 |
| 11. | திருநெல்வேலி | 5,100 | 2,750 |
| 12. | கன்னியாகுமரி | 5,900 | 4,500 |
| | மொத்தம் .. | 59,750 | 40,935 |

வாழை

| தொ. எண். | மாவட்டத்தின் பெயர். | பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்) | பூச்சிகளையும், நோய்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள மொத்த பரப்பளவு. (ஏக்கர்கள்) |
|---|---|---|---|
| 1. | செங்கை | 550 | 375 |
| 2. | தென் ஆற்காடு | 100 | 100 |
| 3. | வட ஆற்காடு | 500 | 400 |
| 4. | சேலம் | 254 | 217 |
| 5. | கோயம்புத்தூர் | 2,250 | 1,937 |
| 6. | திருச்சிராப்பள்ளி | 5,000 | 4,250 |
| 7. | மதுரை | 1,250 | 937 |
| 8. | திருநெல்வேலி | 300 | 200 |
| 9. | தஞ்சாவூர் | 2,500 | 2,250 |
| | மொத்தம் . | 12,704 | 10,666 |



மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களிலிருந்து பூச்சிகளினாலும், நோய்களினாலும், பாதிக்கப்பட்ட தென்னையில் 59,750 ஏக்கரா பரப்பளவில் 40,935 ஏக்கராக்களும், வாழையில் 12,704 ஏக்கரா பரப்பளவில் 10,666 ஏக்கராக்களிலும் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியலாம். மீதிப்பகுதிகளில் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேளாண்மைத்துறை அலுவலர்கள் விவசாயிகளோடு தொடர்புகொண்டு இந்த தொத்து நோய்களை கட்டுப்படுத்த எந்த அளவுக்கு பூச்சிகொல்லி மருந்துகளையும் பூசண மருந்துகளையும் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி ஆலோசனை கூறி தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பூச்சிகளாலும், நோய்களாலும் பாதிக்கப்படுவதை தடுக்க சுமார் 2,31,119 கிலோகிராம் அளவுள்ள பூச்சிகொல்லி மருந்துகளும், பூசண மருந்துகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை கிடங்குகள் மூலம் அநேகவிதமான பூச்சிகொல்லி மருந்துகளும், பூசணமருந்துகளும், விலையில் 15 சதவிகிதம் குறைத்து கொடுக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் தூவான்களையும், தெளிப்பான்களையும் 25 சதவிகித சகாய விலைக்கு கொடுக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் போதுமான அளவு தெளிப்பான்களும், தூவான்களும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவைகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். மொத்தம் 76,059 தூவான்களும் தெளிப்பான்களும் உள்ளன. தேவையான பொழுது, தூவான்கள் முதலியனவைகளைப் பயன்படுத்துவதுபற்றியும் விளக்கிக் காட்டப்படுகிறது

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் தூவான்கள், தெளிப்பான்கள் எல்லாம் ஒரே கன்ஃப்யூஷனாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் கோவை மாவட்டத்தைப்பற்றிக் கேட்பதற்காக இதைக் கேட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நானும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும் 28-ஆம் தேதி சென்றிருந்த பொழுது பொள்ளாச்சியிலிருந்து சில விவசாயிகள் இப்படிப்பட்ட நோய் பரவுவதைப்பற்றிச் சொன்னார்கள். நான் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து நடவடிக்கை எடுக்கச் சொல்லி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே இதுபோல பூச்சிகளால் பாதிக்கப்படும் நேரத்தில் உடனுக்குடன் விவசாயத் துறை அலுவலர்களால் உடனுக்குடன் அதற்கு வேண்டிய தக்க யோசனைகளும், தக்க ஏற்பாடும் செய்யப்பட்டு வருவதால் இதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தத் தென்னை மரத்திற்கு புள்ளிவரும் நோய்கள் புழுக்களால் ஏற்படுகிறது. அதை மற்றொரு புழுக்களைவிட்டுத்தான் சாகடிக்க வேண்டியிருக்கிறது. அந்தப் புழுக்களை வளர்க்க ஃப்ரீடிங் சென்டர்களை ஒவ்வொரு டிவிஷனிலும் ஏற்படுத்த அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1971 ஜூலை 24

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பல்வேறு நோய்கள் பரவுகின்றன. அதற்குப் பல்வேறு மருந்துகள் தெளிக்கப்படுகின்றது. நெப்பாண்டிக்ஸ் செரிநோப்பா எனறு இருக்கின்றன. தடுக்க பாரசை என்ற தடுப்பு பூச்சிகளை விட்டுத் தடுக்கும் முறையிருக்கிறது. அதை அதிகமாக ஆராய்ச்சி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Mr. SPEAKER : Now Government Bills.

### (5) நடைமுறைக் கேள்வி

### ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்வது பற்றி.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். ஒற்றி வைப்புத் தீர்மானம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கொடுத்திருக்கிறோம். அதை இப்பொழுது எடுத்துக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும். ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்காக இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்புவது முறையல்ல. அதை சபாநாயகர் அறையிலேயே தள்ளிவிடலாம், இங்கேயும் தள்ளிவிடலாம், அதற்கான காரணங்களைச் சொல்லலாம். ஆனல் அதைக் கொண்டுவந்து சபையிலே எழுப்புவது முறையானது அல்ல என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

### (அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.



1971 ஜூலை 24]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

### (7) 1971–72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

### (அ) கோரிக்கை எண் 16—வேளாண்மை

### (ஆ) கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை @ என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,87,83,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இரண்டாவது போக சாகுபடிக்கு பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்திலிருந்து விலக்களிக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக் காட்ட—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,87,83,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இடங்களுக்கேற்ற வகையில் திட்டங்களமைத்துச் செயல்பட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,87,83,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Dr. H. V. HANDE : To discuss the hazards involved in agricultural operation for the ryots in Cauvery delta as a result of construction of dam across Hemavathi, Kabini etc., I move the following cut motion :—

"That the allotment of Rs. 18,87,83,100 under Demand No. 16 Agriculture be reduced by Rs. 100."

திரு. ஏ. ஆர். மாரிமுத்து . தலைவரவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து ஏக்கருக்குக் குறைவான நிலமுள்ள விவசாயிகளில் 10 குடும்பங்களை எடுத்து மாதிரிப் பண்ணை நடத்திக் காண்பிக்க திட்டமிட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

---

@ வேளாண்மைக் கோரிக்கை பற்றிய குறிப்பு மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1971 ஜூலை 24

" நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,87,83,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 21,55,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும். "

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, விற்பனைக்கு வரும் எல்லா விவசாய விளைபொருள்களையும் நியாயமான விலையில் வாங்க அரசாங்க வர்த்தகக் கழகம் (State Trading Corporation) அமைக்க வேண்டுமென்று விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 21,55,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய விவாதத்தில் கலந்து கொள்வதற்கு 25, 30 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். மாலையிலும் வைத்துக் கொள்ளலாமா அல்லது கொஞ்சம் பேரைக் குறைத்து இப்போதே முடித்து விடலாமா? சாதாரணமாக தினமும் இரண்டரை மணி ஆகிவிடுகிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த மானியம் என்பதாலும், அனைவருமே வேளாண்மைத் துறையில் ஈடுபட்டவர்கள் என்ற காரணத்தாலும் இதற்கு இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். நான் அன்றையதினம் இல்லாததால் ஒரு நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உலகத்திற்கே அச்சாணி என்று சொல்லக்கூடிய இந்தத் துறைக்கு இன்னொரு நாள் கொடுத்தால் கூட நன்றாக இருக்கும். ஆகவே, மாலை நேரத்தையும் ஒதுக்குவது சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாலையில் கவுன்சில் இருக்கும் காரணத்தால் அமைச்சர்கள் இங்கே இருக்க முடியாது என்று கருதுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒன்றரை மணி அளவில் முடித்துவிட்டு முடிந்தால் இன்று மாலை வைத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் திங்கட்கிழமை காலை அமைச்சர் பதிலை மட்டும் வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திங்கட்கிழமை வைத்துக் கொள்ள முடியாது. இரண்டு மணிக்கு முடித்து விடலாம் என்று கருதுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: We can finish by 2'O clock.



1971 ஜூலை 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடுமான வரையில் உறுப் பினர்கள் சுருக்கமாகவும், விரைவாகவும் பேசினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு ரூ. 18,87,83,100 ரூபாயும், வேளாண்மை மூலதனச் செலவுக்கு ரூ. 21,55,100-ம் கோரப் பட்டிருக்கிறது. பொதுவாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை யில் இந்தத் தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

"சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்றார் வள்ளுவர்.

" இலமென் றசை இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும் "

என்றும் கூறியிருக்கிறார்.

" உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணி "

என்று ஔவையார் கூறியிருக்கிறார்.

'ஓதுவான் எல்லாம் உழவன் தலைக்கடைக்கே'

என்ற பழமொழியும் இருக்கிறது.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் "

என்றும் வள்ளுவர் கூறியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல. உழவுத் தொழிலைப் பற்றித் தெரியாதவர்கள் எல்லாம் உழவுத் தொழில் பற்றிப் பேசியே ஆகவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது என்பதைத் தமிழகம் நன்றாக அறியும். ஊருக் கெல்லாம் உழைக்கின்ற விவசாயப் பெருமக்களுக்குத் தமிழக அரசு இன்று கடமைப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை குறைவானது என்றாலும் சென்ற ஆண்டை விடச் சற்று அதிகமாக இந்த ஆண்டு ஒதுக்குவதற்காகக் கோரப்பட்டிருக்கிறது.

ஒதுக்கப்பட்ட பணத்தில் தமிழக உழவர் பெருமக்கள் எந்த அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது 1968–69-ம் ஆண்டு இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 14 கோடி 48 லட்சம் ரூபாய். உழவர் பெருமக்கள் அந்த ஆண்டு உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த வருவாயைப் பார்த்தால், அதன் மதிப்பு 362 கோடி ரூபாய். 1969–70-ல் 16 கோடி ரூபாய் மானியமாகக் கொடுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட விளைவின் மதிப்பு 503 கோடி ரூபாய். 1970–71-ல் ஏறத்தாழ 16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட விளைவின் மதிப்பு 629 கோடி ரூபாய். இந்த ஆண்டு 19 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தாலும் 73 லட்சம் டன் உற்பத்தி செய்யலாம் என்று ஒரு திட்டம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. எனவே, இதற்குச் செலவழிக்கின்ற பணம்

குறைவாக இருந்தாலும் தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்கு இடையில் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை
அழித்திடுவோம்'

என்றார் பாரதியார்.

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார்.

அதனையொட்டி தமிழகத்தில் 1967-ம் ஆண்டுக்குப் பிறகு உணவுத் தட்டுப்பாடு இல்லை, கட்டுப்பாடு இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சித் திட்டத்தை உருவாக்கினார்கள். அந்த நேரத்தில் அந்தத் திட்டம் பலரால் பழிக்கப்பட்டிருந்தாலும் கூட, அன்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு இன்றையதினம் நனவாகி இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது தமிழகத்தில் இருக்கும் நாமெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தீர்க்கதரிசனத்திற்குத் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

1967-ம் ஆண்டு அண்ணா அவர்கள், தமிழகத்திலே இவ்வளவு நிலங்கள் இருந்தும், வேளாண் நிலங்கள் இருந்தும், வளமான பகுதிகளாக இருந்தும், திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றித் தர மனவளம் நிறைந்த உழவர் பெருமக்கள் இருந்தும் உணவுத் தட்டுப்பாடு ஏன் என்பதை நினைந்து அரசு அலுவலாளர்களை எல்லாம் ஒன்றாக அழைத்துப் பேசி இதற்கு ஒரு திட்டத்தைத் தாருங்கள் என்று கேட்டார்கள். அலுவலாளர்கள் கொடுத்த திட்டத்தை அன்றையதினம் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த, இன்றையதினம் முதல்வராக இருக்கின்ற கலைஞர் அவர்களிடத்தில் அண்ணா அவர்கள் கொடுத்து தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று பொறுப்பை அவர்களிடத்தில் ஒப்படைத்தார்கள் என்பது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.

அதற்குப் பிறகு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு மன்னார்குடியில் நடைபெற்ற வேளாண்மைக் கருத்தரங்கில் வேளாண்பெருமக்களை அழைத்துப் பேசி, சம்பந்தப்பட்ட அரசு அலுவலாளர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களை எல்லாம் அழைத்துப் பேசி அவர்கள் முடிவை எல்லாம் அறிந்து, இறுதி நாள் அன்று உற்பத்தி பெருக்கத்திற்காக, ஒரு போகம் விளைகின்ற நிலங்களை இருபோகமாகவும், இருபோகம் விளைகின்ற நிலங்களை மூன்று போகமாகவும் ஆக்குவதற்கு ஒரு திட்டத்தை அன்றையதினம் செயல்படுத்தினார்கள். அந்தத் திட்டம் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்தில் மாத்திரமல்லாமல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் செயல்படத் துவங்கியிருக்கிறது. அந்த வகையில் உண்மையிலேயே தமிழக அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கி தமிழகத்தில் உணவுத் தட்டுப்பாடும் இல்லை, கட்டுப்பாடும்



இல்லை என்ற நிலையை உருவாக்கிய தமிழக உழவர் பெருமக்கள் அவ்வளவு பெருக்கும் தமிழக அரசின் சார்பில் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரமல்லாது வேளாண் துறையைப் பொறுத்தவரை பல திட்டங்களைப் பற்றிய விவரங்கள் எல்லாம் இந்த ஆண்டு விவரமாக உங்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். வேளாண்மைக் குறிப்புகள் என்ற இரண்டு பாகங்கள் அடங்கிய புத்தகம் உங்களுக்கெல்லாம் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். அதிலே, எந்தெந்த மாவட்டத்திற்கு எந்தெந்தப் பருவத்தில் எது எது ஏற்ற பயிர், எந்தெந்தப் பயிர்களுக்கு எந்தெந்த வகையில் எந்தெந்த அளவில் உரங்கள் இடப்பட வேண்டும் என்றெல்லாம் கூட திட்டவட்டமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். அதைப் போலவே இன்றையதினம் நம்முடைய நாட்டில் உணவு உற்பத்தி நிலைமை என்ன என்பதைப் பற்றியெல்லாம் கூட குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றைப் பற்றியெல்லாம் அதிக விவரங்களை முன்னுரையில் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

ஆனாலும் இன்றையதினம் நம்முடைய நில வளத்தைப் பொறுத்தவரை தமிழகத்தில் விளைகின்ற நிலங்கள் மிகவும் குறைந்து கொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். தொழில் வளம் பெருகுவதாலும், வீடுகள் கட்டப்படுவதாலும், வேறு சில காரணங்களாலும் இருக்கின்ற நிலங்கள் ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. நிலம் என்றைக்கும் வளருகின்ற நிலைமை தொழிற்சாலையைப் போல் இருக்காது. நிலங்கள் குறைந்து கொண்டு வந்தாலும் கூட உற்பத்தியைப் பெருக்க பயிர் விளைச்சலை அதிகமாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழக அரசு பல பயிர்ச் சாகுபடித் திட்டத்தினை இன்றையதினம் தமிழகத்தில் உருவாக்கி வருகிறது. அதைப் போலவே மும்முர வேளாண்மைத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய—ஜெர்மனி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக நீலகிரி மலைப் பிரதேசங்களில் நல்ல முறையில் வேளாண்மையைப் பெருக்க திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது போதாது என்று நம்முடைய முதல்வர் அவர்கள் சமீபத்தில் எங்களை எல்லாம் அழைத்துப் பேசி நீலகிரி மட்டும் மலை அல்ல, கொடைக்கானல் இருக்கிறது, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கொல்லி மலை, பச்சை மலை ஆகியவை இருக்கின்றன. இப்படிப்பட்ட மலைப் பகுதிகளையும் சேர்த்து உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களைத் தாருங்கள் என்று கேட்டார்கள். வேளாண்மைத் துறை அலுவலாளர்களால் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் நிச்சயம் அது வந்துவிடும் என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதுபோலவே ஒருங்கிணைந்த புன்செய் நில மேம்பாட்டுத் திட்டம் இன்றையதினம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அடுத்து, பருத்திக்காக நாம் வெளி மாநிலங்களை நாடி நிற்கிற நிலைமையைப் போக்குவதற்காக இன்றையதினம் அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. உங்களுக்கு நான் ஒரு மகிழ்ச்சிகரமான

செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசின் முழுப் பொறுப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றையதினம் இரண்டு நாட்களுக்கு முன்பு மத்திய அரசிலிருந்து ரூ. 66,67,000-க்கு மேற்படாத தொகை ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்வதற்காக பருத்தி தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ் சேர்த்து அதை அமல் படுத்துவதற்காக நான்காண்டுகளுக்கு மானியம் வழங்குகிற ஒரு திட்டத்தை மத்திய அரசு இப்போது அளித்திருக்கிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்த அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலவே, தமிழ் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு இல்லை யென்றாலும் பயிர் வகைகள், பருப்பு வகைகள் இவற்றின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டு போகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே பயிர்களைப் பெருக்கவும் இன்றையதினம் இங்கு இந்த ஆண்டு 23 லட்சம் ஏக்கராவில் பயிர்களாகவும், ஊடுபயிர்களாகவும், குறுகிய காலப் பயிர்களுக்கு இடைப் பயிராகவும் பயிர்களைப் பெருக்கவும், பருப்பு வகைகளைப் பெருக்கவும் ஒரு திட்டம் தீட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அதேபோல், குடியானவர்கள் நல்லமுறையில் பயிற்சி பெற்ற போதும், அவர்கள் உழவுத் தொழிலில் பல்லாண்டுகளாக செய்து வந்துகொண்டிருக்கிற முறைகளை மாற்றி புது முறையில் கொண்டு வருவதற்காக என்று பயிற்சி முகாம்கள் ஆங்காங்கு துவக்க ஏற்பாடு செய்யப்பட்டு அவைகளும் இன்றையதினம் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகள் பல விதைகளை வாங்கி அவை சரியாக முளைக்க வில்லை என்ற குறைபாடு சொல்லப்பட்டு வந்தது. ஆகவே தரமான விதைகளாக இருக்கிறதா என்று பார்க்க பரிசோதனைக் கூடங்கள் துவங்கப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டு அதற்குத் தகுந்த அத்தாட்சிகள் கொடுக்கப்பட்ட பிறகுதான் அந்த விதைகள் எல்லாம் விவசாயிகளுக்கு விற்கப்படவேண்டும் என்று சொல்லி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இன்றையதினம் முன் வந்திருக்கிறது.

அதேபோல் மண் வள ஆராய்ச்சி நிலையங்கள் துவங்கப்பட்டிருக் கின்றன. பல்வேறு திட்டங்கள், வேளாண்மைத் துறையைப் பொறுத்து சுமார் நாற்பதுக்கு மேற்பட்ட திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணைகள் மூலம் பேசுகிறபோது அவரவர்கள் அவரவர்களது பகுதிகளில் உள்ள கஷ்டங்கள் பற்றிக் கூறுவார்கள். மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபட்டு இருக்கலாம். ஏன், ஒரு வட்டத்திற்கு இன்னொரு வட்டம் மாறுபட்டிருக்கலாம். இன்னும் சொல்லப் போனால் ஒரு வயலுக்கு இன்னொரு வயல் மாறுபட்டிருக்கலாம். ஆகவே அவரவர்கள் என்னென்ன செய்யவேண்டுமென்று நல்ல கருத் துக்களை எல்லாம் சொல்வார்களேயானால், அவற்றைப் பற்றி ஆராய்ந்து அவரவர்களுக்குத் தக்க பதில் அளிக்கிறேன் என்ற உறுதியைக் கூறி விடைபெறுகிறேன்:

திருமதி. த. ந. அனந்தநாயகி: நேற்று மாலை வேளாண்மைத் துறைபற்றி இரண்டு பெரிய புத்தகங்கள் அனுப்பப்பட்டன. தொடர் கதை மாதிரி இருந்தது. அதைப் படித்துவிட்டு இந்த வரவு செலவுத் திட்டத்தில் பேசுவதா அல்லது அடுத்த வரவு செலவுத் திட்டத்தில்





பேசுவதா என்று புரியவில்லை. ஆகவே இப்படி பெரிய பெரிய புத்தகங்களை அனுப்புவதைக் காட்டிலும் சுருக்கமாக்கி அனுப்பினால் படித்துவிட்டுப் பேசலாம். இல்லையென்றால் அதைப் பார்த்துவிட்டு வரவேண்டுமே தவிர, படித்துவிட்டு வரமுடியாது என்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அது கதைப் புத்தகமும் அல்ல. சட்டப் புத்தகமும் அல்ல தேவையானபோது படித்துக் கொள்வதற்கு, படித்து விட்டு வைப்பதற்கு. அந்தப் புத்தகம் எந்தக் காலத்திற்கும் வைத்துக்கொள்ளத் தக்க வகையில் முழு விவரங்களும் அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, தலையணைக்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல குறிப்புகள், இன்றைக்கல்ல, நாளைக்குத் தேவையானவை, அடுத்த ஆண்டுக்குத் தேவையானவை, இப்படி பல ஆண்டுகளுக்குத் தேவை யானவற்றை மிகவும் சிரமப்பட்டு எங்கள் அலுவலர்களைத் தயாரிக் கச் சொன்னேன். அவர்கள் குறுகிய காலத்தில் தயாரித்துக் கொடுத் திருக்கிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்னமேயே கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். அது முடியாமல் போனதால் நேற்றையதினம் கொடுக்கப்பட்டது. அதைத் சுருக்கி வேளாண்மைத் துறை பற்றிய இந்த மானியத்தின் பேரில் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தப் புத்தகத்தைப் படித்தால் கூட இதிலும் சில விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதைப் படித்துப் பாருங்கள். அது புரியவில்லை என்று சொன்னால் பிறகு சொல்லும் கள், புரிய வைக்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சர்வகால சஞ்சீவி.

* மணலி திரு. சி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான தேசத்தின் வருவாயில் பாதி வருவாயை ஈட்டித் தருகிற இந்த மானியத்தின் மீது சில அபிப் பிராயங்களைச் சொல்வதற்கு முன்வந்திருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயத்தின் அருமை பெருமைகள் பற்றி குறள்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதே சமயத்தில் விவசாயிகளுக்குள்ள கஷ்டங்கள் பற்றி தமிழ் நாட்டில் பல செய்யுள்கள் இருக்கின்றன. விவசாயம் என்பது மிகப் பெருமை வாய்ந்த தொழில்தான்.

“சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை”

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். என்னதொழில் செய்தாலும் விவசாயத்திற்குப் பின்னால்தான் நிற்கவேண்டும் என்றும் சொல்லி யிருக்கிறார் வள்ளுவர்.

‘சுழன்றும் ஏர்ப்பின்ன துலக’ மென்றும், வருத்தமிலவேனும் பிற தொழில்கள் கடை யென்பது போதர ‘உழந்தும் உழவே தலை’ யென்றும் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் விவசாயி களைப்பற்றிக் கூறும்போது

" ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையான் நீளும் குடி"

என்று விவசாயிகள் படும் துன்பங்கள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் படும் இன்னல்கள் இன்னும் நீங்கிய பாடில்லை. பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் கொண்டுவரப்பட்ட போதிலும் விவசாயிகளின் கஷ்டங்கள் இன்னும் தீரவில்லை. விவசாயிகளுக்கு இருக்கக் கூடிய ஒரு பெரிய பலஹீனம் பழைமைப் போக்கு விவசாயிகளிடத்தில் ஊறியிருக்கிறது. எவ்வளவு கோடி ரூபாய் நாம் விவசாய அபிவிருத்திக்காகச் செலவழித்தபோதிலும் அவற்றை சரிவரப் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள் விவசாயிகள். காரணம், பழைய போக்கு அவர்கள் மத்தியில் ஊறியிருக்கிறது. குறிப்பாக, ஒரு புது விதை வந்திருக்கிறது என்றால், அல்லது புது உர வகைகளைப் போடவேண்டும் என்றால், அல்லது புதிய நவீன முறையில் சாகுபடி செய்யவேண்டும் என்றால், விவசாயிகள் பயப்படுகிறார்கள். வீணாகிப் போய் விடுமோ என்று அச்சப்படுகிறார்கள். இந்த மனோநிலையை அவர்களிடமிருந்து போக்குவதற்கு இந்த இலாகா விசேஷ முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

படம் காட்டுவது, தூண்டுவது, வலியுறுத்துவது, கிராமங்களில் கமிட்டிகள் அமைப்பது, கட்டாயமாக இவைகளை அமலுக்குக் கொண்டு வருதல் இவைபோன்ற பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு நவீன கருத்துக்களை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளும்படி அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, வீரிய விதைகள் கொடுக்கும்போது அவை நன்கு முளைக்கின்றனவா இல்லையா என்று ஏதோ சோதனை செய்து பார்ப்பதாகச் சொன்னார்கள். அவர்களே ஒரு பத்து பதினைந்து ஏக்கர் நிலத்தில் அந்த விதைகளைப் போட்டு அவை நன்கு முளைக்கிறதா என்று பார்த்துவிட்டு அனுப்பவேண்டும். என் அனுபவத்தில் சொல்கிறேன். ஒரு கோட்டை விதைக்கிறோம் என்றால் முளைக்கவில்லை என்றால் அந்த ஆண்டு சாகுபடி பூராவும் பாழாகும் ஆபத்து இருக்கிறது. ஆகவே முன்கூட்டியே அவற்றினை சில ஏக்கர்களில் போட்டு முளைக்க வைத்து அவை எந்தளவிற்கு முளைக்கிறது என்று திட்டவட்டமாக......

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஸீட் டெஸ்டிங் லாபரெட்டரீஸ் பற்றிச் சொன்னேன். அதோடு ஊராட்சி ஒன்றியங்களுக்கு விதைகள் அனுப்பும்போது, அந்த விதைகளை, ஒரு மூட்டை விதைகளைப் போட்டு முளைக்க வைத்து சரியாக முளைத்ததா என்று பார்த்த பிறகுதான் அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

மணலி திரு. சி. கந்தசாமி: வரவேற்கிறேன். அடுத்தபடியாக, விதைப் பண்ணைகள் வைத்திருப்பதைப்போல் சில இடங்களில், கோவில் நிலங்கள், மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இவற்றில், ஏன் நாற்றுப் பண்ணைகளை வைக்கக்கூடாது? தரமான நாற்றுக்களைக் கொடுப்பதால் நல்ல சாகுபடிக்கு உத்தரவாதம் அளிக்க முடியும். கோவில் நிலங்கள், மடங்களுக்குச் சொந்தமான





நிலங்கள் இவை நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அவைகளை குத்தகைக்கு எடுத்து—அவைகளை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை—நாற்றுப் பண்ணைகளை வைத்து நல்ல நாற்றுகளை விற்பது என்ற முறையைக் கையாண்டால் விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும், விவசாயமும் சீரும் சிறப்புமாக விளங்கும்.

அடுத்தபடியாக, களைநாசினி உற்பத்தி செய்வது. களைகளை எடுப்பதற்குப் பதிலாக சில மருந்துகளைத் தெளிப்பதால் களைகளை மட்டும் ஒழிக்கக்கூடிய மருந்துகள் இருக்கின்றன. அதை எந்தளவிற்குப் பரப்புகிறோமோ, அந்தளவிற்கு விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வர முடியும். சமீபத்தில் அதுபற்றிய சில பேச்சுகள் அடிபட்டன. நடைமுறைக்கு அது வரவில்லை. நான் ஹங்கேரிக்குச் சென்றிருந்தபோது அங்கு பார்த்தேன். களைநாசினி செய்வதற்காக என்னென்ன மருந்துகள் தேவை என்பதுபற்றிய புத்தகத்தை வாங்கி வந்திருக்கிறேன். வெகு சீக்கிரத்தில் அமைச்சர் அவர்களிடத்தில் அதைக் கொடுக்கிறேன். அப்படிப்பட்ட களைநாசினியைத் தயார் செய்து தெளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, மண்வளப் பரிசோதனை மிக அத்தியாவசியமானது. இன்றுள்ள மண்வளப் பரிசோதனைக் கூடங்கள் போதாது என்பது என் கருத்து. பல லட்சக்கணக்கான ஏக்கர் மண்ணை பரிசோதிக்க வேண்டிய நிலையில் சில ஆயிரம் ஏக்கர் மண்ணை மட்டும் பரிசோதனை செய்தால் போதாது. குறிப்பாக தஞ்சையில் ஒரு மொபைல் பார்ட்டி இருக்கிறதே தவிர, அங்கு ஒரு நிலையம் கிடையாது. ஆகவே, தஞ்சை ஜில்லா பெரியதாக இருப்பதன் காரணமாக, அச் சோழ நாட்டின் நெற்களஞ்சியமாக இருப்பதால், அங்கு மண்வளப் பரிசோதனைக் கூடத்தை ஏற்படுத்த வேண்டும். கூடுதல் மொபைல் யூனிட்ஸையும் ஏற்படுத்த வேண்டும். தஞ்சையில் உள்ள எல்லா மண்ணையும் குறிப்பிட்ட காலத்திற்குள் சோதிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

குடுமியாமலையில் அண்ணா பண்ணை என்று வைத்து இருக்கிறார்கள். சர்க்கார் தரப்பில் ஜில்லாவுக்கு ஒரு பண்ணை ஏற்படுத்த வேண்டும், நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும் இந்த மாதிரி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை சர்க்காரே எடுத்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் பண்ணைகளை ஏற்படுத்தினால், அங்கே உள்ள மக்கள் அந்த ஆராய்ச்சிகளை நேரிடையாக கண்டு அதனால் நல்ல பயன்பெறுவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பண்ணைகளை ஏற்படுத்துவதற்காக தேவஸ்தான நிலங்களையும், மடத்து நிலங்களையும், தரிசு நிலங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11.00

பாசன திட்டங்களுக்காக வடிகால் குழாய்கள், டியூப் வெல்ஸ்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வடிகால் குழாய்களை பணக்காரர்கள் தான் வைத்துக்கொள்ள முடிகிறது. 1 ஏக்கர் ½ ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சமுதாய வடிகால் குழாய்கள் ஏற்படுத்தி, அரசாங்கமே அதை நடத்த வேண்டும். 70 ஏக்கர் 50 ஏக்கர் என்று ஒரு பிளாக் ஏற்படுத்தி,

[மணலி திரு. சி. கந்தசாமி] [1971 ஜூலை 24

அந்த 70 ஏக்கர் 50 ஏக்கர் நிலச் சொந்தக்காரர்களை எல்லாம் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவந்து, அவர்களுக்கெல்லாம் நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும் அமைப்பில் வடிகால் குழாய் கிணறுகளை அவர்கள் 2 போக முப்போக சாகுபடி செய்ய முடியும். இன்று பக்கத்தில் பெரிய பணக்காரர்கள் வடிகால் குழாய்களை அமைத்து விவசாயம் செய்யும்போது, இந்த ஏழை நிலச் சொந்தக்காரர்கள் ஏமாந்த சோணகிரிகளாக அவர்களைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த வடிகால் குழாய் கிணறுகளை அரசாங்கமே அமைத்துத் தந்து, அதற்காக தண்ணீர் வரி வேண்டுமானால் வசூலித்துக் கொள்ளலாம்.

இன்னொரு விஷயத்தைப் புதிதாகச் சொல்ல விரும்புகிறேன். நஞ்சை நிலத்திலுள்ள களங்கள் போக, பாக்கி இருக்கும் புஞ்சை நிலங்கள், எந்த விதமான பிரயோசனமும் இல்லாத புஞ்சை நிலங்கள், இந்த மனைக்கட்டுகள் என்று சொல்கிறார்களே, அந்த மாதிரியான நிலங்கள் எல்லாம் பணக்காரர்களுக்குத் தான் சொந்தமாக இருக்கின்றன. கிராமத்திலுள்ளவர்கள் நெல் காயப்போட வேண்டுமானால், வேறு ஏதாவது தானியங்கள் காயப்போட வேண்டுமானால், அவர்கள் தார் ரோட்டுகளில் தான் காயப்போடுகிறார்கள். இது ஆரோக்யத்தை மிகவும் கெடுக்கிறது. இதைத் தடுக்கும் வகையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் சமுதாயத்திற்கு என்று குறைந்தது 1 ஏக்கர் 2 ஏக்கர் என்று நிலங்களை ஆர்ஜிதம் செய்து பொதுவாக மக்கள் அந்த இடத்தில் தான்யங்களை காய வைப்பதற்கு வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் பஸ்கள், மற்ற வண்டிகள் அந்த ரோடுகளில் காயவைத்து இருக்கும் தான்யங்கள் மீது செல்வதைத் தடுக்க முடியாது. இந்த நிலைமை மக்களுடைய ஆரோக்யத்தை கெடுக்கிற நிலைமையாக இருப்பதால், சமுதாய காய வைக்கும் களங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் விரைவாக அமுல் நடத்தப்படுகிற காரணத்தால், மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போய் விட்டது. கால்நடைகள் மேய்வதற்கு இப்போது நிலங்கள் இல்லை. ஆகவே, ஆற்றுக்கால் படுகையில் உள்ள நிலங்களை, மேய்ச்சல் நிலங்களாக வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல இடங்களில் தான்யக் கிடங்குகள் இல்லை. தான்யங்கள் ஸ்டோர் செய்வதற்குக் கிடங்குகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது விளைச்சல் போட்டி என்று நடத்தப்படுகிறது. இந்த விளைச்சல் போட்டி விவசாயிகளிடையே ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிப்பதாகத் தெரியவில்லை. சில பேர் தான் இந்தப் போட்டியில் ஈடுபடுகிறார்கள். இதிலே சாதாரண மக்கள் ஈடுபடுவது இல்லை. அதிலும் சில பேர் 10–15 ஏக்கர் நிலத்தில் பயிர்களை பயிர் செய்துவிட்டு, அதிகமான உரங்களை போட்டு, விளைச்சல் அதிகம் செய்து இருக்கிறோம் என்று காட்டி ரூ. 1,000 பரிசு பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்காக, விளைச்சலுக்கு முன்பே போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்று



1971 ஜூலை 24] [மணலி திரு. சி. கந்தசாமி]

சொல்லாமல், விளைச்சல் முடிந்த பிறகு, விவசாயத் துறை அதிகாரிகளை அனுப்பி யார் விளைச்சல் அதிகமாகச் செய்து இருக்கிறார்கள் என்று பார்த்து அதற்குப் பிறகு பரிசுகள் வழங்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அடிப்படையில் எல்லோரும் போட்டியில் கலந்து கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படும், அதே நேரத்தில் விளைச்சலும் அதிகமாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

இப்போது வேளாண்மைத் துறையில் அதிகமாக உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லி 19 கோடி ரூபாய் மான்யம் கேட்டு இருக்கிறார்கள். ஆனால், இந்த ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதால் தஞ்சை ஜில்லா பெரிதும் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. தினமும் பத்திரிகையில் பார்க்கிறோம். என்னதான் பிரதம மந்திரி அவர்கள் உறுதிமொழி அளித்தாலும், அந்த அணைக்கட்டு கட்டுவதை நிறுத்தினால் ஒழிய நமக்கு வரும் ஆபத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. மத்திய சர்க்கார் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதைக் கண்டு தமிழ்நாட்டு மக்கள் சும்மா இருக்க முடியாது. தமிழ்நாட்டு மக்களே கிளர்ச்சியில் ஈடுபட்டு விடுவார்களோ என்று அச்சமாக இருக்கிறது. சர்க்காரே எல்லாவிதமான நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டு இருக்கிறது என்று சொன்னாலும், தமிழ்நாட்டு மக்கள் ஒரு கிளர்ச்சியில் ஈடுபடுவார்களானால், அதற்காக மாநில அரசு தவறாகக் கருதக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு மாநில அரசின் மீதோ, மைசூர் அரசின் மீதோ எந்தவிதமான காழ்ப்பு உணர்ச்சியும் கிடையாது. அவர்களுடைய எழுச்சியை மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்பதற்காக, அந்தப் பிரச்னையைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காக, அவர்கள் ஏதும் செய்யாமல் இருக்கும் போக்கைக் கண்டித்து கிளர்ச்சிகள் ஏற்படலாம். அப்படி கிளர்ச்சியில் ஈடுபடுவார்களானால், நம்முடைய மாநில அரசு அதைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்று கூறிக்கொள்கிறேன்.

இவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறோம், 75 டன் உற்பத்தி செய்கிறோம் என்று சொல்கிறோம். ஆனால் அந்தக் குடியானவர்களுக்கு தான்யமாக இருந்தாலும் சரி, பருத்தியாக இருந்தாலும் சரி, மற்ற தானியங்களாக இருந்தாலும் சரி, சரியான விலை கொடுக்கிறோமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. காலம் எல்லாம் அவர்கள் பாடுபட்டு கொண்டு வரக்கூடிய பொருள்களை நடுத்தட்டுக்காரர்கள் மறைமுகமாக எடுத்துக்கொண்டு போகும் நிலைமை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் நெல்லை விற்றபோது ரூ. 12-க்கு விற்றேன். இன்று ரூ. 21 ஒரு கலத்திற்கு விற்கிறது. ரூ. 9 தான் வித்தியாசம் என்று சொன்னால், இதிலே எவ்வளவு ஏமாற்று இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் ஏழை எளிய விவசாயிகளும், அதை வாங்கிச் சாப்பிடுபவர்களும் மிகவும் கஷ்டப்படுவார்கள் என்று சொல்லி, இதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்

கிறேன். குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்கள் பெரிய அளவுக்கு இன்றைக்கு நடவு காலத்தில் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அந்த சமயத்தில் மறு விவசாயக் கடன் வழங்கி அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களை இன்னும் பெரிய அளவுக்குப் பாதிக்கும் விஷயம் என்னவென்றால், விவசாயக் குடியானவர்களுக்கு குடியிருக்க வசதி கிடையாது. குறிப்பாக நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்வது நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருக்க வசதி கிடையாது. நிலச் சொந்தக் காரர்கள் மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள். அவர்கள் பிழைப் பதற்காகக் கூட வயல்கள் கிடைக்கவில்லை. இதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு முறை சாகுபடி என்று சொல்லிவிட்டாலும்கூட, சிறு நிலச்சொந்தக்காரர்களைச் சேர்த்து பிளாக் வைத்து இருக்கும் நிலையை ஏற்படுத்தி சாகுபடி செய்ய வழிவகை செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சாகுபடி செய்யக்கூடிய முறையில் விவசாய இலாகா அவர்களுக்குள் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் சாகுபடி செய்யக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தரிசு நிலங்கள் கொடுப்பதில் புகார் ஏராளமாக வருகிறது. அவற்றை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அனுப்பி வைக்கிறேன். நிலம் இல்லாதவர் களுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டு, நான் சொன்ன ஆலோசனைகளை, கருத்துக்களை விவசாய இலாகா பெரும் அளவில் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விவசாயத் திலே மாபெரும் புரட்சியை ஏற்படுத்தவேண்டுமென்று பாரதி சொன்னானே, இனிய பொழில்கள், நெடிய வயல்கள் எண்ணரும் பெரும் நாடு, கனியும் கிழங்கும் தான்ய வகையும் கணக்கின்றித் தரும் நாடு என்று பெரிய மாபெரும் புரட்சியை நடத்திக் காட்டக்கூடிய அளவில் முனைப்பாக நின்று அதை நிறைவேற்றவேண்டியது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கையில் இருக்கிறது என்று எடுத்து கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பெ. மலைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

நல்ல பயிற்சியும், திறமையும் ஒருங்கே இணையப் பெற்ற நம்முடைய அமைச்சர், உள்ள நிலைகளை உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்து, இந்த மானியக் கோரிக்கையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. தமிழக அரசின் தீவிர விவசாயச் சாகுபடித் திட்டம் பல நன்மைகளை மக்களுக்கு அளித்துவருகிறது. இதே நேரத்தில், 1967-க்கு முன்னால் தமிழ் நாட்டில் நிலை என்ன, எப்படி யிருந்தது என்பதை நாம் சற்று நினைவுபடுத்தியாக வேண்டும். பிண்ணாக்கைத் தின்னு என்று சொன்னதும், பருத்திக் கொட்டை மாட்டுக்கு இல்லை, மனிதனுக்கு என்று சொன்னதும், கற்றாழை மனிதன் வயிற்றுக்கு என்று சொன்னதுமான காலம் அது. அப்படிச் சொன்னவர்கள் அவைகளைத் தின்கின்ற காளைமாட்டுச்



சின்னத்தையே நீதிமன்றத்தில் வைத்திருக்கிறார்கள். செந்நெல் வயல்கள், செழுங்கரும்புத் தோட்டங்கள், தின்னக் கனிகள், தெவிட்டாப் பயன் மரங்கள் என்ற அளவில் தமிழக வேளாண்மைத் துறை நிலைமைகளைத் தீவிரமாக உருவாக்கி வருகிறது. பேரறிஞர் பர்னார்ட்ஷா சொன்னார், மனிதன் தேவைப்பட்டதைத் தின்பான், மிருகம் கிடைத்ததைத் தின்னும் என்று. காங்கிரஸ்காரர்கள் காலத்தில், மனிதன் கிடைத்ததைத் தின்ன வேண்டும் என்ற நிலை இருந்தது. முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகுதான் எந்த நேரத்தில் என்ன தேவை என்பதைக் கண்டு உணவு வகைகளில் தேவைப்பட்டதை உண்ணும் அளவுக்கு முன்னேற்றமான, சீரிய முறையில் பணிகளை அரசாங்கம் செய்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்தாகவேண்டும்.

குறிப்பாக, 1971–72-ல் நெல் மட்டும் 50 லட்சம் ஏக்கரில் பயிரிடப்போவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறு தானியங் களைப் பொறுத்தவரையில், 4 லட்சம் ஏக்கரில் தமிழக அரசு பயன் பெற இருக்கிறது. கம்பு, எச்.பி. 3 என்ற வகையை 5 லட்சம் ஏக்கரில் தமிழகத்தில் பயிரிட அருமையான திட்டத்தை உருவாக்கி யிருக்கிறது. இவற்றையெல்லாம் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். பலபோக பயிர்களை 13 லட்சம் ஏக்கரில் தீவிரமான முறையில் பயிரிட திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம் மிகவும் போற்றத்தக்க ஒன்று. அந்த அந்தப் பகுதியில் நஞ்சையாக இருந்தால், 2, 3 ஏக்கர் இருந்தாலும், புஞ்சை 5 ஏக்கராக இருந் தால், அப்படிப்பட்ட சிறு விவசாயிகளுக்கு திட்டம் இருக்கிறது. இது அமுதசுரபி போல் இருக்கிறது. இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

அதேபோல, வேளாண்மையைப் பொறுத்தவரையில் சில சீர் திருத்தங்களை அமைச்சர் நிச்சயமாகச் செய்வார்கள் என்று நம்பு கிறேன். மக்களும் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். விவசாயக் கிணறு வெட்டுவது தேவை என்றால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரசாங்கக் கடன் பெற்று கிணறு வெட்டுகிறார்கள். பாவம், வெட்டிய பிறகு தண்ணீர் வருவதற்குப் பதில், பாறைதான் கிடைக் கிறது. ரூ. 15, 20 ஆயிரம் என்று செலவு செய்து கிணறு வெட்டினால் பாறைதான் கிடைக்கிறது. அப்படிப் பாறை வருவதால், அவனுக்கும் பயன் இல்லை, அரசாங்கத்திற்கும் பயன் இல்லை. ஆகவே, கூட்டுறவு அமைச்சர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர் களும், கலந்து பேசி, இந்த விவசாயக் கிணறுகளை அரசாங்கமே வெட்டிக் கொடுக்க பொறுப்பு ஏற்கவேண்டும். நல்ல தண்ணீர் வருகிறது என்றால், அப்பொழுது அதை விவசாயியிடம் கொடுத்து, கடன் தொகை கொடுத்ததை அவனிடமிருந்து திரும்பப் பெற வேண்டும். தண்ணீர் வராவிட்டால், அதற்கான செலவை சர்க்காரே ஏற்றுக் கொள்ளவேண்டும், விவசாயியிடமிருந்து வாங்கக் கூடாது. இப்படிப்பட்ட சீரிய முறையை வகுக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கும் நிலையில் புஞ்சை நிலங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பாறை அதிகமாக இருக்கிறது. அரசாங்கம் இதைக் கவனித்து, தமிழகம்

[திரு. பெ. மலைச்சாமி] 1971 ஜூலை 24]

முழுவதிலும் கிணறுகள் வெட்டுவதை அரசாங்கமே செய்து விட்டு, பின்னால் விவசாயிகளிடமிருந்து பணம் பெற்றுக் கொள்வது என்கிற நிலையை உருவாக்க வேண்டும்.

பயிர் பாதுகாப்பு பொறுத்தவரையில், மனிதனுக்கு எத்தனையோ மருந்தகங்கள் இருக்கின்றன. மாவட்டத் தலைநகரத்தில் தலைமை மருந்தகம் இருக்கிறது. இன்னும் பெரிய பெரிய தலைமை இடங்களில் மனிதனுக்கு மருந்தகங்கள் உருவாக்கியிருக்கிறோம். யாராவது ஒருவனுக்கு காலரா என்றால், உடனே வான் வருகிறது, மருத்துவர்களும், மற்ற அதிகாரிகளும் வருகிறார்கள். ஆனால் அதேமாதிரி ஒரு இடத்தில் வயலில் பயிருக்கு நோய் கண்டது என்றால், பயிருக்கு மருத்துவ மனை என்று எங்கும் கிடையாது. இதையெல்லாம் சிந்தித்துப்பார்த்து, ஆவன செய்தாக வேண்டும். மருத்துவ மனைகளை பயிர்களுக்கும் அமைக்க வேண்டும். ஒன்றிய டெப்போக்களில், அதிகாரிகள் இருப்பது மட்டும் போதாது. பயிர் மருத்துவ மனை என்ற பெயரில் தமிழகம் முழுவதும் எங்கு பார்த்தாலும், பயிர்களைப் பாதுகாக்க மருத்துவ மனைகளைத் திறக்க வேண்டும், நிச்சயமாக இவற்றை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸ்பிரிங்கிளிங் மெத்தேட், டிராக்டர்ஸ், ஸ்ப்ரேயர்ஸ் போன்றவற்றை ஒவ்வொரு விவசாயிக்கும் நிறையக் கொடுத்து, அதன்மூலம் விவசாயிகள் பயன் பெறச் செய்ய வேண்டும். உலக பாங்கியிலிருந்து கிடைத்த ஐம்பது லட்சம் ரூபாயையும் இதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அடுத்தபடியாக அக்ரிகல்சுரல் யுனிவர்சிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல ஆராய்ச்சிகளெல்லாம் செய்கின்றார்கள். இன்றைய தினம் மஞ்சளுக்கும், சேனைக்கிழங்கிற்கும் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யப்படவில்லை. கரும்புக்கு செஸ் போடப்பட்டு அதன்மூலம் இரண்டு கோடியிலிருந்து மூன்று கோடிவரை கிடைக்கிறது. அந்தப் பணத்தில் முப்பது லட்சம் ரூபாய்தான் அதன் இம்ப்ரூவ்மெண்டுக்குச் செலவழிக்கப்பட்டு வருகிறது. அது போதாது, அந்தப் பணம் பூராவையும் இதற்குச் செலவு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பனை எக்ஸ்போர்ட் விஷயமாக............(மணி அடிக்கப்பட்டது.)

* திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய நாடு விவசாய நாடு, விவசாயத்தையே நம்பி வாழும் நாடு, நம்முடைய பொருளாதாரம் விவசாயத்தையே நம்பியிருக்கின்ற காரணத்தால், விவசாயம் மேல் நிலைக்கு வந்தால்தான் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேறும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். விவசாய உற்பத்தி ஓரளவுக்குப் பெருகியிருக்கிறது. ஆனால் விவசாயிகளின் உற்பத்திச் செலவுக்குத் தகுந்தமாதிரி வருமானம் கிடைக்கவில்லை என்பதாக ஒரு பக்கம் சொல்லுகிறார்கள். ஆனால், வாங்குகிறவர்கள் தங்களால் வாங்குகின்ற பொருளுக்கு விலை கொடுக்க முடியவில்லையே, பொருள்களின் விலை ஏறிவிட்டதே என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முரண்பாடான நிலைமையை மாற்ற வேண்டியது அவசியம்.

ஜனப்பெருக்கத்திற்கு ஏற்றவாறாக, வாங்குகிறவர்கள் சக்திக்கு ஏற்றவாறாக உற்பத்தி பெருக வேண்டியது மிக அவசியம். அதே போல் விவசாய உற்பத்திக்கும் பெரும் செலவு இருக்கிறது. அதுவும் குறைக்கப்பட வேண்டியது மிக, மிக அவசியமாகும்.



[1971 ஜூலை 24 [திரு. என். டென்னிஸ்]

இன்று உரத்திற்காகவும், விதைக்காகவும், விவசாயக் கருவிகளுக்காகவும், விவசாயத் தொழிலுக்குக் கூலி கொடுக்கவும், மாட்டுத் தீனிக்காகவும் ஏராளமாகச் செலவு ஏற்படுகிறது. அந்தச் செலவு குறைக்கப்பட வேண்டியது மிக அவசியம். ஆகையினால் விதை, உரம், விவசாயக் கருவிகள் போன்றவற்றை அரசாங்கம் மானிய விலையில் கடனாக வட்டியின்றிக் கொடுத்தால் அது உதவியாக இருக்கும். அப்போதுதான் உற்பத்தியாக்குகிற செலவு குறையும். வாங்குகிறவர்களும் சாதாரண விலைக்கு வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கும் உற்பத்தி செய்ய உற்சாகம் ஏற்படும். அரசாங்கம் இவ்விதமாக உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படையில் விலையை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

விவசாயத்திற்குக் கடனாகவும், மானியமாகவும் பெரும் தொகை செலவிடப்படுகிறது. உண்மையில் விவசாயிகளுக்கு இத்தொகைகள் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால் பூரணமாக இதன் பயனை விவசாயிகள் அடையவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பூரணமாக விவசாயிகள் இதன் பயனை அடையக்கூடிய வகையில் இதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்தை எடுத்துக்கொண்டால் பெரிய, நடுத்தர, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். பரவலாக விவசாயிகள் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களினால்தான் அதிகம் பயன் அடைகிறார்கள். ஆகவே அங்கங்கே உள்ள குளங்கள் செப்பனிடப்பட வேண்டும். ஸ்லுயிஸ் மடைகள் பராமரிக்கப்படவேண்டும்.

விவசாயத்திற்கு மின்சார இணைப்புக் கொடுப்பதில் காலதாமதமாகிறது. அது தவிர்க்கப்படவேண்டும்.

விவசாயத்திற்கு உரம் மிக அவசியமானது. அதிக அளவில் உரம் உற்பத்தி செய்யப்படுவதும், சரியான முறையில் விநியோகிக்கப்படுவதும் அவசியமாகும்.

விவசாயக் கருவிகள் குறைந்த விலையில் கிடைக்க விவசாயக் கருவிகளுக்கு விதிக்கப்படுகிற வரிக்கு விலக்கு அளிக்க வேண்டும். புதுமுறை விவசாயத் திட்டம்பற்றி சினிமாப் படங்கள்மூலம் விவசாயிகளுக்கு விளம்பரப்படுத்தவேண்டும். விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள், கிராம சேவக்குகள் மூலமாக நல்லமுறையில் விளம்பரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்த வேண்டும். கன்னியாகுமரியில் ஒரு பழ ஆராய்ச்சி நிலையம் இருந்தது. அது தற்போது பழப்பண்ணையாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆண்டின் எல்லாக் காலத்திலும் மாம்பழம் இங்குதான் கிடைக்கும். மீண்டும் அதைப் பழ ஆராய்ச்சி நிலையமாகவே ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1971 ஜூலை 24

* திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த அவைமுன் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1968–69-ல் தமிழகத்தின் மொத்த உணவு தானிய உற்பத்தி 51.05 லட்சம்தான். அந்த நிலைமையை மாற்றி 1970–71-ல் நெல் உற்பத்தி மட்டும் 53.03 லட்சம் டன் என்ற அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கி, தமிழகம் உணவுத் துறையில் தன்னிறைவு பெறவும், உபரி இருப்பு வைத்துக்கொள்ளவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் துறையில் உள்ள ஏனையப் பெருமக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுத்துறையைப் பொறுத்தமட்டிலும் இதற்கு முன்னால் இருந்த ஆட்சிபோலில்லாமல் ரசாயன உரங்களை விவசாயிகளுக்குத் தேவையான நேரங்களில் கொடுத்திருக்கிறார்கள். பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்காதிருந்த அவல நிலையை நீக்கியிருக்கிறார்கள். மேம்படுத்தப்பட்ட விதைகள் அங்கங்கே கொடுக்கப்பட்டிருக் கின்றன. சிறப்பாக விமானம்மூலம் பூச்சி மருந்து தெளித்து இருப்பது பாராட்டத்தக்கது. இன்னமும் ஆடுதுறை 27, ஐ.ஆர். 8, நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் பெயரைக் கொண்ட கருணா ஆகிய சிறப்பு விதைகளை எல்லாம் ஆராய்ச்சிமூலம் வழங்கி யிருக்கிறார்கள். இவை எல்லாம் பாராட்டத்தக்கவையாகும்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த மாவட்ட உறுப்பினர் என்ற முறையில் நான் சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் பயிர்கள் வளர்ந்து குவிந்திருக்கிற நிலையில் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப் படுகிற நிலை ஆண்டுதோறும் இருந்து வருகிறது. ஆகவே அந்தக் காரணத்தினால் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திற்குப் பயிர் பாதுகாப்புத்திட்டத்தை மத்திய அரசைக் கலந்துகொண்டு நம் அரசு உருவாக்கித்தரவேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இப்போதே பயிர்பாதுகாப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் பயிர் பாதுகாப்புத் திட்டம் என்பதாகக் காப்புறுதித் திட்டத்தைச் சொல்கிறாரா?

திரு. என். கிட்டப்பா : மன்னிக்கவும். நான் இன்ஷூரன்ஸ் திட்டத்தைத்தான் சொன்னேன்.

அதேபோல இன்னும் நவீன முறைகளைக் கையாண்டு எலி களினால் ஏற்படுகிற தொல்லைகளில் இருந்து அந்த மாவட்ட விவசாயிகளை அரசு பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பாசன ஆதாரங்களில் சேதாரமற்ற முறையில் தண்ணீரைப் பயன் படுத்தப் புதுமுறைகளைக் கையாளவேண்டும். ஏ கிளாஸ் சானல்



[1971 ஜூலை 24 [திரு. என். கிட்டப்பா]

என்று சொல்லப்படுகிற கால்வாய்களில் கூட இருபுறமும் சிமிண்டினால் கரை கட்டினால் தண்ணீர் சேதாரம் பெரும் அளவுக்குக் குறையும்.

பாசன வசதிகளைப் பொறுத்த மட்டில் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சுட்டிக் காட்டியதைப்போல—காவேரி ஆற்றுக்கே பேராபத்து வந்திருக்கிற நிலையில்—கங்கையை காவேரியோடு இணைக்கிற திட்டம் மத்திய அரசோடு தீவிரமாகக் கலந்து பரிசீலனை செய்யப்படவேண்டும். இதற்குக் காலமாகும் என்ற காரணத்தினால் குறிப்பாக, ஆந்திர அரசாங்கத்தோடு பேசி கோதாவரி, கிருஷ்ணா காவேரியை இணைக்கும் திட்டத்தை மத்திய அரசு உருவாக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தை நெற்களஞ்சியம் என்பார்கள். "மாடு கட்டிப் போர் அடித்தால் மாளாது என்பதாக யானை கட்டிப் போரடித்தான்" அந்தக் கால சோழ வேந்தர்கள் என்பதாக தஞ்சை, திருச்சி மாவட்ட வளமையைச் சொல்வார்கள். அத்தகைய மாவட்டத்தில் விவசாய வளர்ச்சிக்காக ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த அரசுக்கு மனம் இரங்கவில்லை. நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த வகையில் உதவி புரிய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயக் கல்லூரி ஏற்படுத்து வது உடனயாக முடியாததாக இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாலிடெக்னிக்குகளில் விவசாயப் பிரிவுகளை ஏற்படுத்தி, அங்கு பயில்கிற மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்......

* திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்பதற்காக விவசாயத் திற்கு அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து வருகிறது. ஆனால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன என்ன மாதிரி செயல்படவேண்டும், என்ன என்ன விதைகளைப் போட வேண்டும், எத்தகைய உரத்தை வைக்கவேண்டும் என்று சொல் கிறார்களோ, அதுபோலவே விவசாயி செய்து, தண்ணீர் என்றால்— அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை, அந்த டிபார்ட்மெண்டில் போய்க் கேளுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக் கிறது. ஆக விவசாய இலாக்காவும், நீர்ப்பாசன இலாக்காவும் ஒன்றாக இணைந்தால்தான் விவசாயத்தை ஒழுங்காகச் செய்ய முடியும்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், இப்போது—சீலிங் ஆக்ட்— நிலச்சட்டம் போட்டதன் காரணமாக நிலங்கள் எல்லாம் துண்டு துண்டாகப் பகிர்ந்ததன் காரணமாக ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்கள்தான் இருக்கிறார்கள், முன்பெல்லாம் கிராமங் களில் 200 ஏக்கர், 300 ஏக்கர் நிலம் உள்ளவர்கள் இருப்பார்கள். தண்ணீர் வரவில்லையென்றால், கால்வாயை மராமத்து செய்வதற்கோ மற்ற ஏற்பாடுகளைச் செய்வதற்கோ அதிகாரிகளைப் போய்ப்பார்த்து

தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கோ தக்க முயற்சிகளை அவர்களே எடுத்துக்கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் தண்ணீர் வரவில்லையென்றால், அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போய்ப் பார்க்கவோ, மற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவோ முடியாதவர்களாக இருக்கிறார்கள். இப்போது மனு நீதி நாள் கொண்டாடப்படுகின்றபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டால், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சொல்லி, அவைகளைச் சமாளிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் குளங்கள் பற்றியது. குளத்தின் பாசனம் பல பேர்களுக்கு இருக்கிறது. ஆனால் குளம் தனியாருக்கு இருக்கிறது. குளத்தினுடைய வருமானத்தைக் கொண்டு ஏதாவது கோயில்களுக்கான மண்டபப்படித் திருவிழா போன்ற காரியங்கள் செய்வதற்கு குத்தகைக்கு விட்டுவிடுகிறார்கள். குத்தகைக்கு எடுத்தவர் குளத்தின் ஆயக்கட்டுகளில் உள்ள விளைச்சலைக் கவனியாது குளத்தை அழித்து விடுகிறார்கள். இதனால் சில சமயங்களில் சில விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கோடைக் காலங்களில் முன் கூட்டியே தேவையான தண்ணீரைத் தேக்கி வைத்திருந்தால் நாற்றுப் பாவுதல் போன்ற மற்ற வேலைகள் செய்ய வசதியாக இருக்கும். ஆகவே, தனியார் குளங்களையெல்லாம் அரசாங்கமே ஏற்று, நல்ல விதமாக மராமத்து செய்தால் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெருக்கிக் கொள்ள வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மானாவாரிக் குளங்கள் இருக்கின்றன. அவற்றால் பாசனம் பெறக்கூடிய ஏக்கர்களையும் அந்தக் குளத்தின் ஆயக்கட்டுகளுக்குப் போதிய அளவு குளங்களில் தண்ணீர் பெருக்கி வைக்க முடியவில்லை. அதுமாதிரி குளங்களில் பயிர்களைப் பாது காக்கும் அளவில் குளங்களை ஆழப்படுத்தி விஸ்தாரப் படுத்துவது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பிட்ட சில இனாம் கிராமங்களில் அரசாங்கத்தினால் செய்யக்கூடிய உரவசதி, கடன் வசதி, வீரிய வித்து வசதி போன்ற நல்ல காரியங்களை அங்குள்ள விவசாயிகள் பெற்று, பயன் அடைய முடியவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணறு வெட்டுவதற்காக கடன் கொடுக்கிறார்கள். எத்தனை கிணறுகளுக்குக் கடன் கொடுத்தோம்? அவற்றில் எத்தனை கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டன? எத்தனை கிணறுகளில் பாசன வசதி கிடைத்து பயிர் செய்கிறார்கள் என்று பார்த்தால், கிணற்றின் தண்ணீர் கிணற்றுக்குள்ளேதான் இருக்கிறது. வெட்டிய கிணறு இன்னும் நல்ல முறையில் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் கொடுக்கக்கூடிய கடன்களை முதல் தடவை, இரண்டாம் தடவை, மூன்றாம் தடவை என்று கொடுக்கிறோம். இதனால் விவசாயிகள் கிணறு வேலையைச் சரியாக முடிக்க முடியவில்லை. பிறகு யாரிடமாவது கடன் வாங்கி, அல்லது அடமானம் வைத்து கிணறு வேலையை பூர்த்தி செய்கிறார்கள். இடையில் கடன் தவணை வந்து



விடுவதால் பணம் கட்ட முடியாமல் அவர்கள் சிலசமயங்களில் நிலத்தையும் விற்றுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. தமிழகத்தில் யார் யாருக்கெல்லாம் கிணறு வெட்டுவதற்குப் பணம் கொடுத்தோம், யார் யார் கிணறு வெட்டினார்கள், யார் யார் பாசன வசதி கிடைத்து உற்பத்திச் செய்கிறார்கள், என்பதையெல்லாம் பார்த்தால், நிச்சயமாக பேர்பாதிக்கு மேற்பட்டவர்கள் விவசாயம் செய்யவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். கிணறு வெட்டுவதை அரசாங்கமே முழுப்பொறுப்பேற்று கிணற்றை வெட்டிக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப் பட்டார்)

திரு. அ. செ. குமாரசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை முதற்கண் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதும், "பசுமைப் புரட்சித் திட்டம்" வகுத்து, விவசாயிகளுக்கு நீண்டகால, குறுகிய கால கடன் வசதிகளைச் செய்துகொடுத்து, உரவசதி, வீரிய வித்து வசதி போன்றவற்றையெல்லாம் அளித்ததன் பலனாக தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் இருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு ஊக்கத்தையும் நிரம்ப கடன் வசதிகளையும் செய்துகொடுத்ததன் பலன் இது. மேலும் விவசாயிகளுடைய பல்வேறு பிரச்சினைகளையும், தொல்லைகளையும் உணர்ந்துள்ள அரசு நீண்டகாலக் கடன் வசதிகளை இன்னும் அதிகப்படுத்தி, அது விரைவில் விவ்சாயிகளுக்குக் கிடைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் தங்களுடைய வாழ்விலே நல்ல வசதிகளை அடையக்கூடிய அளவிற்கு, விவசாயிகளின் நல்ல மதிப்பினை இந்த அரசு பெற்றிருக்கிறது.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியாகிய திருவெண்ணெய் நல்லூரில் குறுகிய மலட்டாறு சுமார் பத்து கிராம விவசாயிகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இது மலட்டாறு என்று சொன்னாலும் பல ஏரிகளின் கழிவுநீர் இங்கு வந்து சேருகின்றது. விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை ஆற்றைக் கடந்து எடுத்துச் செல்ல முடியாமல் மிகுந்த நஷ்டத்திற்கு விற்பனை செய்கிறார்கள். ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் போக்குவரத்துச் செலவுக்காக என்று குறைத்துத் தான் வியாபாரிகள் அதை வாங்குகிறார்கள். கரும்பு டன் ஒன்றுக்கு 10 ரூபாய் குறைத்துத்தான் வாங்கப்படுகிறது. ஆற்றைக் கடந்து எடுத்துச் செல்வது சிரமமாக இருக்கிறது. ஆகவே, கரும்பு செஸ் நிதியிலிருந்தாவது அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி நல்லபடியாக இருப்பதால் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவுவதற்கு பாரி கம்பெனியார் முயற்சிகள் எடுத்துக்கொண்டு, திருவெண்ணெய்நல்லூரினைத் தேர்ந்தெடுத்தார்கள். பின்னர் இடவசதிகளையும், ரோடு வசதிகளையும், மற்ற வசதிகளையும் கருத்தில்கொண்டு, அங்கிருந்த

தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்கோ தக்க முயற்சிகளை அவர்களே எடுத்துக்கொள்வார்கள். ஆனால் இன்றைக்கு கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் தண்ணீர் வரவில்லையென்றால், அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போய்ப் பார்க்கவோ, மற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவோ முடியாதவர்களாக இருக்கிறார்கள். இப்போது மனு நீதி நாள் கொண்டாடப்படுகின்றபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டால், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சொல்லி, அவைகளைச் சமாளிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் குளங்கள் பற்றியது. குளத்தின் பாசனம் பல பேர்களுக்கு இருக்கிறது. ஆனால் குளம் தனியாருக்கு இருக்கிறது. குளத்தினுடைய வருமானத்தைக் கொண்டு ஏதாவது கோயில்களுக்கான மண்டபப்படித் திருவிழா போன்ற காரியங்கள் செய்வதற்கு குத்தகைக்கு விட்டுவிடுகிறார்கள். குத்தகைக்கு எடுத்தவர் குளத்தின் ஆயக்கட்டுகளில் உள்ள விளைச்சலைக் கவனியாது குளத்தை அழித்து விடுகிறார்கள். இதனால் சில சமயங்களில் சில விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கோடைக் காலங்களில் முன் கூட்டியே தேவையான தண்ணீரைத் தேக்கி வைத்திருந்தால் நாற்றுப் பாவுதல் போன்ற மற்ற வேலைகள் செய்ய வசதியாக இருக்கும். ஆகவே, தனியார் குளங்களையெல்லாம் அரசாங்கமே ஏற்று, நல்ல விதமாக மராமத்து செய்தால் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெருக்கிக் கொள்ள வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மானாவாரிக் குளங்கள் இருக்கின்றன. அவற்றால் பாசனம் பெறக்கூடிய ஏக்கர்களையும் அந்தக் குளத்தின் ஆயக்கட்டுகளுக்குப் போதிய அளவு குளங்களில் தண்ணீர் பெருக்கி வைக்க முடியவில்லை. அதுமாதிரி குளங்களில் பயிர்களைப் பாதுகாக்கும் அளவில் குளங்களை ஆழப்படுத்தி விஸ்தாரப் படுத்துவது மிகவும் அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பிட்ட சில இனும் கிராமங்களில் அரசாங்கத்தினால் செய்யக்கூடிய உரவசதி, கடன் வசதி, வீரிய வித்து வசதி போன்ற நல்ல காரியங்களை அங்குள்ள விவசாயிகள் பெற்று, பயன் அடைய முடியவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணறு வெட்டுவதற்காக கடன் கொடுக்கிறார்கள். எத்தனை கிணறுகளுக்குக் கடன் கொடுத்தோம்? அவற்றில் எத்தனை கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டன? எத்தனை கிணறுகளில் பாசன வசதி கிடைத்து பயிர் செய்கிறார்கள் என்று பார்த்தால், கிணற்றின் தண்ணீர் கிணற்றுக்குள்ளேதான் இருக்கிறது. வெட்டிய கிணறு இன்னும் நல்ல முறையில் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் கொடுக்கக்கூடிய கடன்களை முதல் தடவை, இரண்டாம் தடவை, மூன்றும் தடவை என்று கொடுக்கிறோம். இதனால் விவசாயிகள் கிணறு வேலையைச் சரியாக முடிக்க முடியவில்லை. பிறகு யாரிடமாவது கடன் வாங்கி, அல்லது அடமானம் வைத்து கிணறு வேலையை பூர்த்தி செய்கிறார்கள். இடையில் கடன் தவணை வந்து





விடுவதால் பணம் கட்ட முடியாமல் அவர்கள் சிலசமயங்களில் நிலத்தையும் விற்றுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. தமிழகத்தில் யார் யாருக்கெல்லாம் கிணறு வெட்டுவதற்குப் பணம் கொடுத்தோம், யார் யார் கிணறு வெட்டினார்கள், யார் யார் பாசன வசதி கிடைத்து உற்பத்திச் செய்கிறார்கள், என்பதையெல்லாம் பார்த்தால், நிச்சயமாக பேர்பாதிக்கு மேற்பட்டவர்கள் விவசாயம் செய்யவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். கிணறு வெட்டுவதை அரசாங்கமே முழுப்பொறுப்பேற்று கிணற்றை வெட்டிக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப் பட்டார்)

திரு. அ. செ. குமாரசாமி: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை முதற்கண் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதும், "பசுமைப் புரட்சித் திட்டம்" வகுத்து, விவசாயிகளுக்கு நீண்டகால, குறுகிய கால கடன் வசதிகளைச் செய்துகொடுத்து, உரவசதி, வீரிய வித்து வசதி போன்றவற்றையெல்லாம் அளித்ததன் பலனாக தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் இருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு ஊக்கத்தையும் நிரம்ப கடன் வசதிகளையும் செய்துகொடுத்ததன் பலன் இது. மேலும் விவசாயிகளுடைய பல்வேறு பிரச்சினைகளையும், தொல்லைகளையும் உணர்ந்துள்ள அரசு நீண்டகாலக் கடன் வசதிகளை இன்னும் அதிகப்படுத்தி, அது விரைவில் விவ்சாயிகளுக்குக் கிடைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் தங்களுடைய வாழ்விலே நல்ல வசதிகளை அடையக்கூடிய அளவிற்கு, விவசாயிகளின் நல்ல மதிப்பினை இந்த அரசு பெற்றிருக்கிறது.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியாகிய திருவெண்ணெய் நல்லூரில் குறுகிய மலட்டாறு சுமார் பத்து கிராம விவசாயிகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. இது மலட்டாறு என்று சொன்னாலும் பல ஏரிகளின் கழிவுநீர் இங்கு வந்து சேருகின்றது. விவசாயிகள் தங்களுடைய விளைபொருள்களை ஆற்றைக் கடந்து எடுத்துச் செல்ல முடியாமல் மிகுந்த நஷ்டத்திற்கு விற்பனை செய்கிறார்கள். ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் என்ற அளவில் போக்குவரத்துச் செலவுக்காக என்று குறைத்துத்தான் வியாபாரிகள் அதை வாங்குகிறார்கள். கரும்பு டன் ஒன்றுக்கு 10 ரூபாய் குறைத்துத்தான் வாங்கப்படுகிறது. ஆற்றைக் கடந்து எடுத்துச் செல்வது சிரமமாக இருக்கிறது. ஆகவே, கரும்பு செஸ் நிதியிலிருந்தாவது அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி நல்லபடியாக இருப்பதால் சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவுவதற்கு பாரி கம்பெனியார் முயற்சிகள் எடுத்துக்கொண்டு, திருவெண்ணெய்நல்லூரினைத் தேர்ந்தெடுத்தார்கள். பின்னர் இடவசதிகளையும், ரோடு வசதிகளையும், மற்ற வசதிகளையும் கருத்தில்கொண்டு, அங்கிருந்த

[திரு. அ. செ. குமாரசாமி] 1971 ஜூலை 24]

சர்க்கரை ஆலையை நெல்லிக்குப்பத்திற்கு மாற்றிவிட்டார்கள். திருவெண்ணெய்நல்லூர்ப் பகுதி கரும்பு விவசாயிகள் நீண்ட தொலைவில் உள்ள சர்க்கரை ஆலைக்கு, மிகுந்தச் செலவில் தங்களுடைய கரும்பை எடுத்துப் போக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் கரும்பு பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, நான் வேண்டிக்கொள்வதெல்லாம், திருவெண்ணெய் நல்லூர் மலட்டாறு பாலம் கட்டித் தர வேண்டும், திருவெண்ணெய் நல்லூரில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைத்துத் தர வேண்டும் என்பதேயாகும். இந்த இரண்டு பிரச்சினைகளையும் விவசாய அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்து, நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், வணக்கம்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, எனக்கு அதிகமான நேரம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இன்னும் 26 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேசுவதற்கு நான்கு நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உங்களுக்கு ஐந்து நிமிடங்கள் தருகிறேன். ஐந்து நிமிடங்களில் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, வேளாண்மை அபிவிருத்திக்காக பல திட்டங்களைத் தீட்டி, உணவு உற்பத்தியைப் பெருக்க வகை செய்துள்ளோம். அதற்குச் சில முக்கியமான விஷயங்களைக் கவனத்திற்கொள்ள வேண்டும். பொதுவாக நீர்ப்பாசன வசதிகள், வீரிய வித்துக்கள், உரவசதி, நோய்த் தடுப்பு போன்றவை முக்கியமானவை. முதலாவதாக நீர்ப்பாசன வசதியை எடுத்துக்கொண்டால் பெரிய திட்டங்களைத் தீட்டுவதற்கு இப்போது நமது மாநிலத்தில் வழி இல்லை. ஆகவே, பூமிக்கடியில் இருக்கிற தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள விரைவான திட்டத்தை ஏற்படுத்தி, வழிவகைச் செய்ய வேண்டும். இன்றைக்கு கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. அதிகமாகப் போனால் 5 ஆயிரம் ரூபாய் வழங்க முடியும். பலர் கிணறு வேலையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கமே கண்மாய்களைப் பழுதுபார்க்க, கால்வாய்களைப் பழுதுபார்க்க செலவிடுவதுபோல பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரைக் கொண்டு வருவதற்காக, கூட்டுறவு மூலமாகவோ அல்லது அரசாங்கமோ செலவு செய்து கிணறுகளை வெட்டித் தர வேண்டும்.

வேளாண்மைக்குத் தண்ணீர்தான் மிகவும் முக்கியம். எவ்வளவு வீரிய விதையாயிருந்தாலும் தண்ணீர் வசதி இல்லையென்றால் விளைச்சல் இருக்காது. நண்பர் மாரிமுத்து அவர்கள் கூறியதுபோல கடன் வசதிகளுக்காக கூட்டுறவு மூலமாகவோ, அரசாங்கத்தின் மூலமாகவோ ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ரேஷன் கார்டு மாதிரி ஒரு



[1971 ஜூலை 24 [திரு. சோ. அழகர்சாமி]

அட்டையைக் கொடுத்து, அதில் நிலத்தின் சர்வே எண், விஸ்தீர்ணம் போன்றவற்றைக் குறித்து, கொடுத்த கடன், திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைகள் போன்றவற்றைக் குறித்து விவசாயிக்கு வேண்டிய கடனைக் கொடுக்க உதவிகளைச் செய்து, கடனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

இன்றைக்கு வீரிய விதை கொடுக்கப்படுகிறது. சில தனிப்பட்ட முதலாளிகளிடம் பங்கீட்டு முறையை விட்டுவிடுவதால் கலப்படமில்லாத விதை கிடைக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே நேரடியாக இந்த இலாகாவின் மூலமாக, அரசாங்க விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி, வீரிய விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

அடுத்தபடியாக நோய்த் தடுப்பு மருந்து பற்றியது. காலரா, வைசூரி போன்ற தொத்து நோய்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் எப்படி நடவடிக்கைகளை மேற்கொள்கிறதோ அப்படியே பயிர்களுக்கு நோய் வந்தாலும் அரசாங்கமே நோய்த் தடுப்பு மருந்துகளைக் கொடுத்து, பயிர்களைக் காப்பாற்ற வேண்டும். நோய்த் தடுப்பு மருந்துகளை அரசாங்கமே இலவசமாக விநியோகிக்க வேண்டும். மேலும், நோய்த் தடுப்பு மருந்துகளைத் தெளிப்பதற்கு அரசாங்கமே வாலிபர்களுக்குப் பயிற்சி கொடுத்து, நோய்களைத் தடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். ஒருவர் தன்னுடைய வயலில் மருந்து தெளித்தால், அடுத்தவருடைய வயலிலும் மருந்து தெளிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஒருவர் மருந்து தெளித்து, அடுத்தவர் வயலில் நோய் இருக்குமானால், முன்னவர் மருந்து தெளித்தும் பிரயோஜனம் இல்லை. ஒருவர் மருந்து தெளிக்காவிட்டாலும் அதனால் ஏகப்பட்ட நஷ்டங்கள் வருகின்றன. அறவே பலன் இல்லாமல் போய்விடுகிறது. மனிதர்களுக்கு ஏற்படும் தொத்து நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுபோல பயிர் நோயைத் தடுப்பதற்கும் அரசாங்கமே தடுப்பு ஏற்பாடுகளைச் செய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது மின்வசதிகள் உடனடியாகக் கிடைப்பது கிடையாது. பலவிதமான இடைஞ்சல்கள் இருக்கின்றன. அதோடு அந்தக் கட்டணத்தை உயர்த்தப்போவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்வது விவசாயிகளின்மேல் செய்கின்ற விஷப் பரீட்சையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்தக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது; வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் உயர்த்த சம்மதிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நண்பகல் 12-00

கடைசியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஐ.ஆர். 8, கருணா, பாரதி போன்ற வீரிய விதைகளைப் போட்டு விவசாயிகள் என்னதான் உற்பத்தியைப் பெருக்கினாலும் கூட அவர்களுக்கு போதுமான வருமானம் கிடைப்பதில்லை. காரணம் உற்பத்தி செய்த உழைப்பாளருக்கு அந்த லாபம் கிடைப்பதில்லை; வாங்கிச் சாப்பிடுகின்ற சாதாரண மக்களுக்கும் அந்த லாபம் கிடைப்பதில்லை. இடையிலே இருக்கின்ற பெருத்த கொள்ளை லாபம் அடிக்கின்ற ஏகபோகக்காரர்களுக்குத்தான் லாபம் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. எங்களுடைய தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

நெல் உற்பத்தி செய்யக்கூடிய நேரத்திலே ஒரு விலையாக இருக்கிறது. ஆனால் விற்பனை செய்யும் காலத்தில் வேறு விலையாக இருக்கிறது. அதேபோன்று பருத்தி, கடலை இவற்றை எடுத்துக்கொண்டாலும் பேர்பாதி விலைக்குக்கூட குறைந்த விலைதான் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றது. உற்பத்தி செய்கின்ற நேரத்திலே இருக்கின்ற விலை பின்னாலே இருப்பதில்லை. இதனால் விவசாயிகள் என்னதான் உற்பத்தியைப் பெருக்கினாலும் அவர்கள் வருமானம் பெறமுடியாத நிலைமையில் கடன் சுமை பெருகி அவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு காணமுடியாத நிலைமை இருப்பதால் அவர்களுக்கு நியாயமான விலை கொடுக்கக்கூடிய முறையில் அவர்கள் வாங்குகின்ற பொருள், உழைப்புச் செலவு, கூலி முதலியவற்றையெல்லாம் பார்த்து ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்து அரசாங்கமே ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கி, திரும்பவும் குறைந்த லாபத்தை வைத்து விற்கக்கூடிய முறையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமாகத்தான் நாட்டிற்கு பல நன்மைகள் கிடைக்க முடியும்............(மணியடிக்கப்பட்டது).

திரு. வீ. சா. இளஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே இந்த நாட்டிலே வேறு எந்தத் துறையிலேயும் எடுத்துக் கொண்ட அக்கறையைவிட அதிகமாக—நிரம்பிய அக்கறையை இந்த நாட்டிலே இருக்கின்ற விவசாயிகள்பால் காட்டியது. அதன் காரணமாக இந்த நாடு பூராவுமுள்ள விவசாயிகள், நல்ல எண்ணம் கொண்ட விவசாயிகள் உறுதுணையாக இருக்கின்ற நிலைமையில் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளைச் சிறக்கச் செய்ய வேண்டுமென்ற அளவுக்கு அவர்கள் தங்களுடைய முழுத் திறமையையும் காட்டி உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். அதன் விளைவாக மற்றவர்கள் எல்லாம் பார்த்து பொறாமைப்படத் தக்க அளவுக்கு இப்படியும் நடக்குமா என்று எண்ணிப் பெருமூச்சு விடத்தக்க அளவுக்கு விவசாயத் துறையிலே மாபெரும் முன்னேற்றத்தை எய்திருக்கிறோம்.

ஒரு காலத்திலே தமிழகம் சாப்பாட்டுக்கே வழியில்லாம போய்விடுமோ என்ற நிலை, ரொட்டிகளைக் கையிலே வைத்துக் கொண்டு தெருவெல்லாம் நின்றுகொண்டிருந்த நிலைமை மாறி தமிழகம் இன்றைய தினம் உணவுத் துறையிலே மிகப் பெரும் முன்னேற்றம் அடைந்து, அடுத்த மாநிலத்திற்கு நாங்கள் கொடுப்போம் என்று சொல்கின்ற அளவுக்கு வளர்ந்து இருக்கின்ற நிலையில் தமிழக அரசுக்கும் விவசாயத் துறை அதிகாரிப் பெருமக்களுக்கும் இந்த நாடு பூராவிலும் உள்ளவர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு உள்ளார்கள் என்பதைத் தெரிவித்து நேரம் குறைந்திருப்பதால் ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன்.





என்னுடைய பகுதியானது கிணறுகளை நம்பியும் மழையை நம்பியும் இருக்கின்ற பகுதியாகும். அங்கேயுள்ள விவசாயிகள் எந்த மண்ணுக்கு எந்தப் பயிர் போடவேண்டும் என்பதைக்கூட இன்னும் தெரியாத நிலைமையில் இருக்கிறார்கள். கடன் வாங்கிக் கொண்டு கிணறுகள் வெட்டுகின்றார்கள். அதுவும் புதுக்கோட்டைப் பகுதியிலே கிணற்றுத் தண்ணீர் கிடைப்பதிலே கவலை இல்லை. ஆனால் அந்தத் தண்ணீருக்கும் விவசாயப் பொருளுக்கும் ஒத்துவராத காரணத்தினாலே குறைந்த பலனைத்தான் இன்றைக்கு அவர்கள் அடைகின்றார்கள். பெரிய அளவிலே விவசாயத்திலே உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம் என்று நாம் இன்றைக்கு எடுத்துக் காட்டுகின்றோம். ஆனால் எந்த விதை போடவேண்டும், எந்த மண் எந்த பயிருக்குப் பயன்படுகிறது என்று அவர்களுக்குத் தெரியாத காரணத்தினாலே குறைந்த பலனைத்தான் அடைகின்றார்கள். நம்முடைய அரசு அவர்களுக்கு எதைத் தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும் குறிப்பாக விவசாயிகளுக்கு எந்த மண்ணுக்கு எந்தப் பயிர், எந்த மண்ணுக்கு எந்த நெல், எந்த மண்ணுக்கு எந்தத் துவரை பயிர் செய்தால் நல்லது என்பதை, நிலத்தினுடைய தரத்தையொட்டி எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். இப்படிச் செய்ததால் இந்த வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் இன்னும் நான் கூறியதைப்போன்று விவசாயிகளுக்கு எடுத்துச்சொன்னால் மிகப் பெரிய வெற்றி இந்தத் துறையிலே கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே குடுமியான்மலை விவசாயப் பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணை ஆரம்பித்த நாளிலிருந்து பெரு லாபத்தைத்தான் பெற்றிருக்கிறது. நம்முடைய தமிழக அரசு முதல்வர் பெயரால் ஒரு பயிர்பாதுகாப்பு ஆராய்ச்சி நிலையம் அங்கே ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த பண்ணை லாபம் தரத்தக்க நிலையில் இருக்கின்றது. அங்கே அந்த ஆராய்ச்சி நிலையமும் இருக்கிறது. எனவே வரவிருக்கிற விவசாயக் கல்லூரியை அந்தப் பண்ணையிலே அமைக்கவேண்டுமென்று வேண்டுகோள் விட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை மானியத்திலே அதிக உறுப்பினர்கள் பங்குபெற இருக்கிறார்கள், அவர்கள் தங்கள் தொகுதி குறைகளைத் தெரிவித்தால் அவற்றுக்குப் பதில் தெரிவிப்பதாகச் சொன்னார்கள். கோவை நெடுஞ்செழியன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): கோவை செழியன்தான் இருக்கிறார், கோவை நெடுஞ்செழியன் இல்லை.

திரு. கு. அ. பொம்மன்: கோவை செழியன்தான். இந்தத் துறை எப்படி இருக்கிறது என்றால் விவசாயத்துறை தனியாகவும் உணவுத்துறை தனியாகவும் இருக்கின்ற காரணத்தினால், பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. மேலைநாடுகளிலேயெல்லாம்கூட ஒன்றாகத்தான் இணைத்து வைத்திருக்கிறார்கள். நம் மத்திய சர்க்காரிலும் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டுதான் இருக்கிறது. எனவே இரண்டையும் ஒன்றாக இணைத்தால் வேலைகளும் துரிதமாக நடைபெருகும் தன்னிறைவு பெற வாய்ப்பும் ஏற்படும் என்பதைப் வாய்ப்பாக இருக்கும்.

கனம் மொய்தீன் அவர்கள் தம் பேச்சில், பூச்சிகொல்லி மருந்து களைப்பற்றித் தெரிவித்தார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக சிறிய விவசாயிகளுக்குப் பூச்சிகொல்லி மருந்துகள் கொடுத்துவந்தார்கள். அவைகள் பாதி விலையிலே கொடுக்கப்பட்டு வந்தது ஆனால் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்து முழு விலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். எனவே மீண்டும் பாதி விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைப்பகுதிகள் மேம்பாடுத் திட்டம் இந்தோ-ஜெர்மன் உதவியுடன் திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள். அது நடைமுறையிலுள்ளது. நீலகிரி ஜில்லாவிலே அங்கே நெல்போன்ற பயிர்கள் கிடையாது, உருளைக்கிழங்கைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. முட்டைக் கோஸ் போன்ற காய்கறிகள்தான் விளையும். அங்கே அதற்காக ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். அங்கே கோல்டன் நெமோடே, லேட் பிளைட் போன்ற வியாதிகள் இருந்து வருகின்றன. அதற்கு தஸனித் என்ற மருந்தைத் தெளிக்கிறார்கள். மத்திய சர்க்காருக்கு ஒரு திட்டம் தயாரித்து அனுப்பியிருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். அந்தத் திட்டத்தில் நீலகிரி, பழனி, ஜவ்வாதுமலை எல்லாம் ஒருங்கே சேர்த்துப் போட்டிருக்கிறது என்றால், அது வரவேற்கத்தக்க அம்சமாகும். அது மட்டுமல்ல, கூடலூரர் பகுதிக்கும் ஜெர்மானியத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். இஞ்சி, மஞ்சள், கமுகு, தென்னை இதுபோன்ற நாற்றுப் பண்ணைகள் அமைப்பது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அந்த தட்ப வெட்ப நிலை பொருத்தமாய் இருப்பதால் கமுகு, தென்னை போன்றவைகளுக்கு நல்ல வாய்ப்பிருக்கும்.

அதுமட்டுமல்ல, கூடலூரர் தாலுக்காவில் என் தொகுதியில் ஏதோ சிலசில சமவெளிகளில் மட்டும் நெல் பயிராகின்றது. மேட்டுப்பாங்கான இடத்திலே ராகி போன்றவைகளை வைப்பதால், இந்த விவசாயங்களுக்கு மழையையே எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. எனவே, ஆங்காங்கு உள்ள சிறு ஓடைகளின் பேரில் சிறுசிறு அணைகளாகக் கட்டினால், மழையில்லாத காலங்களில் நெல்லுக்கு நீர் பாய்ச்சப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அதிலும் கூடலூரர் விவசாயத் தொழிலாளர் கூலியிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். வேளாண்மைத் துறை இப்பொழுது இந்த நாட்டின் முதுகெலும்பாக இருப்பதால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் விவசாயக் கல்லூரி சாத்தியமில்லையென்றாலும் பாலிடெக்னிக்காவது ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் வைத்தால் விவசாயிகளுக்குப் பயிற்சி கொடுத்து நவீன முறையில் விவசாயம் செய்ய ஏற்பாடுகள் செய்தால் உணவு உற்பத்தி பெருகும் தன்னிறைவு பெற வாய்ப்பும் ஏற்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, பி.வி.எஸ்ஸி. படித்தவர்களுக்கு கெஜெட் அந்தஸ்து கொடுத்திருப்பதைப்போல், அக்ரிகல்சுரலில் பி.எஸ்ஸி. படித்தவர்களுக்கும் கெஜெட் அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு மாமன்ற மாற்றுத் தலைவரவர்களே, திறமை மிக்க இந்த வேளாண்மைத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை நிறைந்த இதயத்தோடு வரவேற்றுப் பேச நல்கிய வாய்ப்புக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறத்தாழ இருபதாண்டு காலம் இந்தக் கோட்டையில் உள்ள முதலமைச்சர் நாற்காலியை ஒரே கட்சியான காங்கிரஸ் கட்சி அலங்கரித்து வந்திருக்கிறது. எவ்வளவோ பேராண்மைமிக்க பெரியவர்களெல்லாம் வேளாண்மைத்துறை அமைச்சர்களாக இருந்து இந்த நாட்டைப் பரிபாலனம் செய்து வந்திருக்கிறார்கள். கோட்டைக்குக் கோட்டை கொடி கட்டி, கொடி மரத்திற்குக் கொடி மரம் சங்கிலிகள் பிணைத்து இந்த நாட்டை அடக்கி ஆண்ட நல்லவர்கள் சாதித்த சாதனை என்ன என்று பார்க்கின்ற நேரத்தில் தமிழ் நாட்டுத் தெருக்களிலே ஒரு பிடி அரிசிக்கு வழியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் மக்களும், ஒரு கவளம் சோற்றுக்கு வழியில்லாமல் அலைந்துகொண்டிருக்கும் நிலைமையுந்தான் காங்கிரஸ் ஆட்சியிலே காட்சிப்பொருளாக இருந்தது என்பதை நாம் கவனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும்.

கடந்த இருபதாண்டு காலமாக வறட்சிப் பள்ளத்தாக்கிலே வீழ்ந்துகிடந்த வேளாண்மைத் துறையை நினைவிலே நிறுத்திவைத்து இன்றைய கலைஞர் அரசு சாதித்துள்ள புரட்சிகரமான மாற்றத்தையும், புயல்வேக சாதனைகள் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தான் இருக்கின்ற வேறுபாடுகளை, ஏற்றத்தாழ்வுகளை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்து அரசோச்சத் தொடங்குகிற நேரத்திலே சுற்றிச் சூழ்ந்திருந்த கடுமையான சூழ்நிலையை வான் பொய்த்த வறட்சியான இழிநிலையை நாம் மறந்திருக்க முடியாது. இந்த மாநிலத்தின் இயல்பான மழையளவு 920 மில்லி மீட்டர் என்றிருக்க 1968-ஆம் ஆண்டு 742 மில்லி மீட்டர் மழையே பெய்தது. 1969–70-ஆம் ஆண்டிலும் தென்மேற்கு பருவமழை போதுமானதாக இல்லை. 1969–70-இல் இயல்பான மழையளவு 307 மில்லி மீட்டராக இருக்க 237 மில்லி மீட்டர் மழைதான் பெய்தது.

[திரு. மே. சி. தூயமணி] 1971 ஜூலை 24]

இப்படி இயற்கை அன்னையால் ஏமாற்றப்பட்ட நிலையிலும் இத்தனை இடுக்கண்களையும் இடையூறுகளையும் மீறி பைந்தமிழ் நாட்டில் கலைஞரின் ஆட்சி பசுமைப்புரட்சியை உருவாக்கிக் காட்டியிருக்கிறது. ஏறத்தாழ 72 கோடி ரூபாய்த் திட்டமென்ற ஏ.ஆர்.சி. திட்டத்தின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 ஆயிரம் புதிய கிணறுகளை வெட்டவும், 11 ஆயிரம் கிணறுகளை ஆழப்படுத்தவும், 34,600 பம்பு செட்டுகளை இணைக்கவும், 15,000 வடிமுனை குழாய்களை பொருத்தவும், 3,000 டிராக்டர்கள் வாங்கவுமான முற்போக்கான காரியங்களை இந்த அரசு மின்னல் வேகத்திலே நிறைவேற்ற முழு முயற்சி எடுத்திருக்கிறது.

இதுமட்டிலும் அல்ல, 1966–67-ஆம் ஆண்டில் உற்பத்தியான அரிசியின் அளவு 31.91 லட்சம் டன்களாகும். ஆனால் அதே நேரத்தில் 1969–70-ஆம் ஆண்டில் உற்பத்தியான அரிசியின் அளவு 45.32 லட்சம் டன்களாகும். 1970–71-ஆம் ஆண்டு 49 லட்சம் டன்களாகும். இதைப்போலவே 1966–67-ஆம் ஆண்டில் உற்பத்தியான உணவு தானியங்களின் மொத்த அளவு 54.58 லட்சம் டன்களாகும். ஆனால் 1969–70-ஆம் ஆண்டில் உற்பத்தியான உணவு தானியங்களின் மொத்த அளவு 63 லட்சம் டன்களாகும். 1970–71-ஆம் ஆண்டு 67 லட்சம் டன்களும், 1971–72-லே 71 லட்சம் டன்களும் உணவு உற்பத்தி உயருகிற அளவுக்கு இந்த அரசு உன்னத நிலையை உருவாக்கிக் காட்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட சாதனைகளையெல்லாம் எடுத்துக் சொல்லும் இந்த நேரத்தில் எனது தொகுதியிலே உள்ள வேதனைக்குரலையும் இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்வது எனது இன்றியமையாக் கடமையாகக் கருதுகின்றேன். மோகனத்திலே ஆரம்பித்த நான் முகாரியிலே முடிப்பதாக யாரும் கருத மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

தமிழ் நாட்டிலேயே மிகமிக வறட்சியான பகுதி என்று சொன்னால், அது எனது அவினாசி வட்டம், மேட்டுப்பாளையம் தொகுதியைத்தான் குறிப்பிட்டுக் காட்ட முடியும். வேளாண்மைத் தொழிலையே நம்பி வாழ்ந்த எனது பகுதிவாழ் விவசாயப் பெருங்குடி மக்கள் மழையில்லாத காரணத்தாலும், நூற்றுக்கணக்கான அடிகள் கிணற்றை ஆழப்படுத்தியும் தண்ணீர் கிடைக்காத காரணத்தால் வெளி மாநிலங்களுக்கு வேதனைக் கண்ணீர் வடித்துக்கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. எனது பகுதியிலே இருக்கிற ஆயிரக்கணக்கான விவசாயிகள் கொள்ளேகாலம், மைசூர், சாம்ராஜ் நகர் ஆகிய இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கொடுமையான பிரச்னைகளுக்கு உடனடிப் பரிகாரம் கிடைக்க தமிழக அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றுத் தாழ்மையுடன் வேண்டிக் கொண்டு வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து, விடைபெறுகிறேன்.

* திரு. நா. வே. குருசாமி: தலைவரவர்களே, 1971–72-ஆம் ஆண்டு வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள்



1971 ஜூலை 24] [திரு. நா. வே. குருசாமி]

கொண்டுவந்த வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

அரசாங்கத்தின் உத்தரவாதத்தின் பெயரில் தேசியமயமாக்கப்பட்ட பேங்குகளால் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்பட்டது. அதைச் சரியான முறையில் விவசாயிகளுக்குக் கொடுத்த கடனைத் திருப்பித் தராததால் அரசாங்கத்திற்கு வங்கிகள் மூலம் நோட்டீஸ் கொடுத்திருப்பதாக அறிகிறேன். அதுவும் சிலருக்குக் கொடுத்த கடன் பழைய பம்பு செட்டுகளை விவசாயிகள் வைத்திருந்தாலும் குறிப்பாகச் சிலருக்கு எலெக்ட்ரிக் கரண்ட் சப்ளை கொடுக்காமலும் அவர்கள் திருப்பிக் கொடுக்காமல் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால் அரசாங்கத்தின் மூலமாக என்ன முடிவெடுத்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

சாதாரணமாகப் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பூச்சிகள் வந்ததற்குப்பிறகோ அல்லது பூச்சி வருவதற்கான அறிகுறிகள் தென்பட்ட பிறகோதான் மருந்தைப் பயன்படுத்துகிறார்கள். அவ்வாறில்லாமல் தடுப்புக்காவல் முறையைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு வேண்டிய வழிமுறைகளைச் சொல்லிக் கொடுப்பதற்கு மாவட்டம் தோறும் நிலையம் ஏற்படுத்தி, அதற்காக மெஷின்களை நல்ல கண்டிஷனோடு ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தெளிப்பதற்கான நல்ல முறையில் பயிற்சி பெற்ற பட்டதாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் வசதி பெருகியிருந்தாலும் அதைப் பெறுவதில் காலதாமதமும், பண விரயமும் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியான ஆண்டிப்பட்டி பகுதியில் கடந்த ஐந்தாண்டுக்காலமாக பருவமழை பொய்த்து, அங்கேயுள்ள விவசாயிகள், அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட கடன்களையும், கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களையும் திருப்பிக் கொடுக்க முடியாமல் மிகவும் அவதியுறுகிறார்கள். எனவே அவர்களுடைய கடன்களை ஓரளவு ஒற்றி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, விவசாயத்துறை நாட்டிலேயே பெரும் வளர்ச்சியடைய வேண்டிய துறை. பெரும் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவும் இருக்கின்ற துறையிலே விவசாயத்துறைக்கு ஈடான துறை வேறு எதுவும் இல்லை. இன்றையதினம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்றாலும்கூட தொழில்துறையை வளரச் செய்ய வேண்டுமென்றாலும்கூட விவசாயத்தைத்தான் அபிவிருத்தி செய்ய வேண்டுமே தவிர, வேறு வழியில்லை. விவசாயத்தை அபிவிருத்தி செய்தால்தான், தொழில்துறையை அபிவிருத்தி செய்ய முடியும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். ஆகவே இந்த விவசாயத் துறையில் எந்த அளவில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கணக்குப் பார்த்தால், விவசாயம்தான் தேசிய

உற்பத்தியிலே 50 சதவிகிதம் உற்பத்தி செய்கிறது. ஆனால் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் 70 சதவிகித மக்கள். ஆகவே, 70 சதவிகித மக்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும். இல்லையென்றால் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது.

விவசாயத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களுடைய பொருளாதார நிலையைக் கணக்கெடுத்துப் பார்த்தால் அவர்களது வருவாய் குறைவாகத்தான் இருக்கும். தொழிற்துறையில் இருப்பவர்களையும் சேர்த்துக் கணக்கிடுகிற நேரத்திலே கூடுதலாகக் காணப்படுகிறதே தவிர, விவசாயத் துறையிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய பொருளாதார வளம் குறைவாகத்தான் இருக்கிறது. இதை அபிவிருத்தி செய்ய பட்ஜெட்டில் அதிகமான தொகை ஒதுக்கப்படவில்லை. கணக்குப் பார்த்தால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக இருக்கிறது என்று கூடச் சொல்லலாம். சென்ற வருஷம் 18 கோடி 98 லட்சம், இந்த வருஷம் 20 கோடி 53 லட்சம்; இந்த அதிகப்படியான ஒரு கோடி 83 லட்சத்திலே எஸ்டாப்ளிஷ்மெண்டுக்கு 1 கோடி 45 லட்சம் போய்விடுகிறது. டிராவலிங் 21 லட்சம்; அதர் எக்ஸ்பென்ஸஸ் 84 லட்சம்; ஒர்க்கிங் எக்ஸ்பென்ஸஸ் 63 லட்சம் என்ற வகையில் அதிகமாகச் செலவு செய்திருக்கிறார்கள். மெட்டீரியலாக விவசாயிகளுக்குக் கிடைப்பது சென்ற ஆண்டை விட 131 லட்சம் குறைந்துவிட்டது. பட்ஜெட்டில் ஒதுக்கப்படாவிட்டாலும் அதிகமாகச் செலவு செய்யக்கூடாது என்று இல்லை. இந்த 131 லட்சம் என்ற அளவுக்காவது சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற அளவில் செலவழிக்க முன்வர வேண்டும். அடுத்த வருஷம் அதிகத் தொகை ஒதுக்கவும் முயற்சிக்க வேண்டும்.

விவசாயத் தொழிலில் படித்தவர்கள் ஊக்கம் கொண்டு ஈடுபட காரியங்களைச் செய்யவேண்டும். பழைய கால முறைப்படி மாடுகளை வைத்து விவசாயம் செய்வது என்றால் படித்தவர்கள் வேலை செய்யப் பயப்படுகிறார்கள். அதிக அளவுக்கு நிலம் இருந்தால்தான் பெரிய டிராக்டர்களை வைத்துக்கொள்ள முடியும். 2 ஏக்கர், 5 ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடியவர்கள் சிறுசிறு இயந்திரங்களை வைத்து உழுவதற்கு அவற்றை அதிகப்படியாக உற்பத்தி செய்ய முயற்சிக்க வேண்டும். பவர் டில்லர்ஸ் 10,000 ரூபாய், 12,000 ரூபாய் என்று இருப்பதைத் தடுத்து 3,000 ரூபாய், 5,000 ரூபாய்க்குள் கிடைக்கச் செய்யவேண்டும். அதற்கு அரசாங்கம் அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அதற்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும். கிராமப் புறங்களில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் இதிலே ஈடுபடத் தயங்குகிறார்கள். இந்த மாதிரி இயந்திரங்களை எல்லாம் கொடுத்து அவர்கள் இந்த வேலையிலே ஈடுபட ஊக்குவிக்க வேண்டும்.

பூச்சி கொல்லிக்கு இப்போது வேண்டிய உதவி செய்து வருகிறார்கள். குறைந்த விலையில் பூச்சிக்கொல்லி மருந்து கிடைக்கவும், ஸ்ப்ரேயர்ஸ், டஸ்டர்ஸ் கொடுக்கவும் வகை செய்திருப்பது போதாது. கிராமங்கள்தோறும் ஜனத்தொகை விஸ்தீரணத்திற்கு ஏற்ப 5 பேர் 10 பேருக்குப் பயிற்சி கொடுத்து



வர்கள் ஆங்காங்கு போய் ஸ்ப்ரே செய்யவேண்டும். ஸ்ப்ரேர்சை மட்டும் வாடகைக்குக் கொடுப்பதால், அதை அடிப்பதற்கு ஆள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அதைச் செய்ய அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் எலித் தொந்தரவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எலி அழிக்கும் அழிவு சொல்லுந்தரமல்ல. தினந்தோறும் எலி பிடித்துக் கொண்டே இருக்கவேண்டும். என்னுடைய நிலத்திலேயே தினந்தோறும் 150 எலிகள் பிடிக்கப்பட்டு வந்தன. எலிகளைப் பிடிப்பதற்காக என்னுடைய 15 ஏக்கர் நிலத்திற்கு ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்திருக்கிறேன். இப்போது இருக்கும் தானியங்களை எல்லாம் சேகரித்துக் கொண்டுபோய் வளைக்குள் வைத்துக்கொண்டு கோடையில் உள்ளேயே இருக்கின்றன. ஆகவே, கோடையில் எலி பிடிக்கும் வேலையை ஆரம்பிப்பது நல்லது ஒரு எலிக்கு கால் ரூபாய் வீதம் கூடக் கொடுக்கலாம். அரசு கிராமங்கள் தோறும் அப்படிப்பட்ட முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். எலி பிடி வாரம் என்று ஒரு வாரத்தையாவது வைத்து இருக்கின்ற எலிகளை எல்லாம் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எலி ஒழிப்பு வாரம் என்று ஒரு வாரமோ, இரு வாரமோ வைக்கலாம்.

கம்யூனிடி வெல் ரொம்பவும் முக்கியமானது. நாங்கள் நிலத்தை எல்லாம் ஒன்று சேர்க்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் அது சாத்தியமல்ல என்று சொன்னார்கள். கன்சாலிடேஷன் ஆப் ஹோல்டிங்ஸ் மிகமிக அவசியம். இதைப்பற்றிப் புனல் பரிசீலனை செய்யவேண்டும். கம்யூனிடி வெல்ஸ் போடவேண்டும். கவர்ன்மெண்ட் போர் வெல் ஸ்கீமை மறுபடியும் ஆரம்பிக்க வேண்டும்.

பசுந்தாள் உரத்திலே அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. அதிலும் அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

விவசாயிகளுக்கெல்லாம் நவீன முறைகளைப் பற்றிப் பயிற்சி அளிக்கவேண்டும். ரிப்ரஷர் கோர்ஸ் என்று ஆரம்பித்து ஒரு டிவிஷனுக்கு ஒரு இடத்தில் பயிற்சி அளிக்கவேண்டும்.

நிலப் பரிசோதனையை இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை பண்ணுகிறார்கள். இந்த வருஷம் உரம் போடுகிறார்கள். வருகிற வருஷம் வளம் குறைந்துவிடக் கூடும். ஆகவே, ஒரு தடவை பரிசோதனை செய்துவிட்டால் போதாது. அடிக்கடி பரிசோதனை பண்ண வேண்டும். ஒவ்வொரு டிவிஷனுக்கும் மண் பரிசோதனை நிலையம் ஏற்படுத்த வேண்டும். பட்டுக்கோட்டையில் ஒரு பரிசோதனை நிலையம் ஆரம்பிக்க வேண்டும்.

டிப்ளமா கோர்ஸ் ஒன்று வைக்கலாம். விவசாயம் செய்கிற களுக்கு மூன்று வருஷ கோர்ஸ் ஒன்று ஆரம்பிக்க முயற்சி வேண்டும். நவீன முறையில் சாகுபடி செய்யும் பண்ணை ஆடுதுறையில் வைக்கப்பட்டிருக்கிறது. பட்டுக்கோட்டை, தாங்கியில் உள்ளவர்கள் அங்கு சென்று பார்க்க முடியாத இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் 10 ஏக்கரில மாதிரி விவசாயப் பண்ணை வைக்கவேண்டும். எக்ஸ்டெ

ஆபீசர்கள் அங்கு போய் அதற்கு உதவ வேண்டும். இப்போது அக்ரிகல்சுரல் எக்ஸ்டன்ஷன் ஆபீசர்கள் மருந்து விற்பனைக் கணக்கு, விதை வாங்கிக் கொடுத்த கணக்கு ஆகியவற்றைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொறுப்பு நம் தலையில் வந்து விழுந்துவிடக் கூடாதே என்று அவர்கள் வெறும் கணக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கணக்குப் பார்க்கும் பொறுப்பை வேறு யாருக்காவது அளித்துவிட்டு விவசாயிகளுடைய பிரச்சினையைத் தீர்க்க இவர்கள் கவனம் செலுத்தச் செய்ய வேண்டும். விவசாயிகளை நேரடியாக இந்த அக்ரிகல்சரல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய விவசாயத் துறையினுடைய வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் பெரிய வல்லுநர்களில் இருந்து விவசாயப் பெருங்குடி மக்கள் வரையிலும் பாராட்டிப் புகழத்தக்க வகையில் நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். உணவு உற்பத்தி 1970–71-ம் ஆண்டில் 70.71 லட்சம் டன் அளவுக்கு பெருகியிருப்பது இந்த அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களையும் ஏனைய அலுவலர்களையும் பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

இதிலே, சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகம், வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக் கழகம் போன்ற கழகங்களை அமைத்து சாதாரண விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர வகை செய்திருக்கிறார்கள். பூச்சிகளை அழிக்க பூச்சி மருந்தை விமான மூலம் தெளிக்கும் காட்சியையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு விவசாயத் தொழில் நம்முடைய மாநிலத்தில் வளர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் எனக் கருதுகிறேன்.

நம்முடைய விவசாயத் தொழில் வள்ளுவர் காலத்தில் இருந்து பாராட்டப்பட்ட ஒரு தொழிலாகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்குப் பின்னும் புலவர்களாலும், அரசர்களாலும், வல்லுநர்களாலும் பாராட்டிப் புகழப்பட்ட தொழிலில் இன்றையதினம் சில இடையூறுகளும், கஷ்டங்களும் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டில் எந்தத் தொழிலை யார் செய்தாலும், குறிப்பாக ஒரு தொழிற்சாலையை ஒருவர் வைத்திருந்தால், அந்தத் தொழிலில் உற்பத்தியாகிற பொருள்களுக்கு, போட்டிருக்கிற முதலீடு, அதற்கு ஏற்படுகின்ற செலவு, தொழிலாளர்களுடைய ஊதியம், இயந்திரங்களின் தேய்மானம் எல்லாவற்றையும் போட்டுப் பார்த்து விலையை அந்தத் தொழிலதிபர் நிர்ணயிக்கிறார். ஆனால் விவசாயத் தொழிலைப் பொறுத்தவரை பிரதானமான தொழிலாக இருந்தாலும் விவசாயம்



செய்யக்கூடியவர் விலையை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. அவர்கள் நிலத்திற்கு ஒரு மதிப்பு போட்டு, அல்லது அவர்கள் உழைப்பிற்கு ஒரு செலவு போட்டு, அல்லது அவர்களால் செலவழிக்கப்படும் தொகைக்கு வட்டி போட்டு உற்பத்தியாகும் விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் அவர்களே செய்யாமல் அதை வாங்க வருகிற வியாபாரி அந்த விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கிறார். ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களே விவசாய விளை பொருள்களின் விலையை நிர்ணயம் செய்யக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். அல்லது அரசாங்கமே அந்த விவசாய விளைபொருள் களுக்கு விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவிற்கு ஒரு பட்டியல் தயார் செய்து, இந்த இந்த உற்பத்திக்கு இவ்வளவு இவ்வளவு செலவாகியுள்ளது, ஆகவே அவை இவைகளின் விலைகள் இவ்வளவு என்று விலை நிர்ணயம் செய்யக்கூடிய அளவிற்கு தெள்ளத்தெளிவான விளக்கத்தை அரசாங்கம் தரவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

(8) அமைச்சரின் அறிக்கை

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் குறித்து விசாரிக்க உயர்நீதி மன்ற நீதிபதி நியமனம்பற்றிய அவை முன்னவரின் அறிக்கை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): சட்டப் பேரவை 82-வது விதியின்கீழ் அவை முன்னவர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசு ஆணை ஒன்றினை இந்த அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன். 23—7—1971 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சில அசம்பாவித நிகழ்ச்சிகள் குறித்து விசாரிப்பதற்காக உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரை நியமித்துள்ளது என்ற செய்தியை அறிவிக்கிறேன்.

(7) 1971–72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி. பிற்பகல்

* திரு. சி. க. வடிவேலு: தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, தமிழக அரசு 1967-க்குப் பிறகு உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் மிகுந்த அக்கறையோடு நல்ல முறையில் செயல்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். பொதுவாக 1967-க்கு முன் தமிழகத்தில் உணவுத் தட்டுப்பாடு எந்தளவிற்கு சீர்கெட்டு இருந்தது என்றும் 1967-க்குப் பிறகு எந்தளவிற்கு உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறோம் என்பதையும் பார்க்கும்போது தமிழக அரசு நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறது என்பதைப் போலவே அரசாங்க ஊழியர்களும் அந்தளவிற்கு உற்சாகத்தோடு இருந்திருக்கிறார்கள் என்பதையும் பாராட்டுகிறேன். தமிழக அரசு மூன்று கோட்டங்களை விவசாய உற்பத்திக் கோட்டங்கள் என்று தேர்ந்தெடுத்திருக்கிறது. முசிறி, பட்டுக்கோட்டை, கடலூர் இவை உணவு உற்பத்தியை அதிக அளவில் செய்யக்கூடிய கோட்டங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

அதேபோல் திருச்சி மாவட்டம் ஒரு மத்தியப் பகுதியாக இருப்ப தினால், தஞ்சை, திருச்சி இவை விவசாயத்துறையில் நல்ல முறையில் முன்னேறியிருப்பதால் அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டும். அதனால் அங்குள்ள விவசாயிகள் பயன்பட ஏதுவாகும்.

எங்கள் பகுதியில் காட்டுப்புதூர், தொட்டியம் போன்ற இடங் களில் வாழைகளை அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அங்கு லட்சக் கணக்கான ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. பூச்சித் தொல்லையினால் அங்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு ஆராய்ச்சிப் பண்ணையைத் துவக்கவேண்டும்.

எங்கள் பகுதியில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. அத்திட்டம் வருவதுபற்றி அதிகாரிகள் மக்களுக்குத் தெரிவிக்காமல் அத்திட்டப்படியுள்ள வேலைகளைத் துவங்கும்போது தான் மக்களுக்கு அதைப்பற்றி தெரியவந்தது.

பொதுவாக விவசாயிகளிடத்தில் ஒரு திட்டம் தேவையா இல்லையா என்று அவர்களை அணுகிக் கேட்ட பிறகு அதைச் செயல் படுத்துவது நல்லது.

அடுத்து, பாவிரிப் பிரச்சினையில் இந்த அரசு மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டு வருகிறது என்பதை மற்ற மாநிலங்கள் உணரும் வகையில் நாம் நடந்து கொண்டிருக்கிறோம். காவேரித் தண்ணிர் சிக்கல்கள் ஏதாவது வரும்போது நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

பொதுப்பணித் துறையிலிருந்து வாய்க்காலிலிருந்து தூர் எடுக்க வேண்டும் என்று சொல்லும்போது ஏக்கருக்கு ரூ. 5 என்று கட்டண வரிதான் வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. உணவு உற்பத்தி பெருகினால்தான் மக்களுக்கு நன்மை செய்ய முடியும். வாய்க்கால் களிலிருந்து தூர் எடுக்க பி.டபிள்யூ.டி.-க்கு அதிகமான அளவில் தொகை ஒதுக்க வழிவகை செய்யவேண்டும். சில ஊர்களில் கேணிகள் வெட்டுவதற்கு நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக் கிறோம். அது, 800 அடி என்றிருக்கிறது. அதைக் குறைக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஒன்றிரண்டு ஏக்கர் உள்ளவர்களுக்கு உணவு உற்பத்தி செய்ய வசதியாக இருக்கும். விவசாயிகளுக்கு நல்ல முறையில் கடன் கொடுக்கவேண்டும். விவசாயிகள் எங்கிருக் கிறார்கள், எங்கிருக்கிறார்கள் என்று கண்டறிந்து விவசாயிகளுக்கு முதல் இடம் கொடுக்கும் தமிழக அரசைப் பாராட்டி நான் பேசு வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, விவசாய முன்னேற்றத்திற்காக, விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்காக என்னென்ன முயற்சிகளை எடுக்கவேண்டுமோ, ரசாயன உரமாகயிருந்தாலும் சரி, அல்லது மண் பரிசோதனையாக இருந்தாலும் சரி, எதுவாகயிருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் எடுத்து விவசாயத்திற்கு ஒரு முக்கியத்துவம் தந்திருக்கிறார்கள்.





அதை நான் வரவேற்கிறேன். விவசாய உற்பத்தி மிக முக்கியமானது என்றாலும், நிலத்தைப் பொறுத்தவரையில் அது ஏற்கனவே இருக்கிற இடம்தான்.

பயிர்கள் நன்கு விளைவதற்கு உயிர்நாடி போன்றது தண்ணீர் ஆகும். பருவ மழை வருடாவருடம் குறைந்து வரும்போது, இருக்கிற வசதியை வைத்துக்கொண்டு உற்பத்தி செய்யவேண்டிய தொரு நிலை இருப்பதால், வருடா வருடம் விவசாயம் குறைந்து கொண்டுவரும் நிலையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப் போன்று பூமிக்கடியில் உள்ள நீரூற்றுகளிலிருந்து நீரை குழாய்க் கிணறுகள் மூலம் வெளியே கொண்டு வந்து பயன்படுத்த வேண்டும். விவசாயத் துறை தனியாக இல்லாமல் மற்றத் துறை களின் உதவியோடு முன்னேற முடியும் என்ற கருத்தையும் அவர்கள் சொன்னார்கள்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் தெரு விளக்கிற்குக் கொடுக் கப்படுகிற முக்கியத்துவத்தைப் போல் விவசாய பம்ப் செட்ஸ் இணைக்கக் கூடிய காரியத்திலும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதன் மூலமாகத்தான் விளைச்சலை நாம் பெருக்க முடியும்.

கூட்டுறவுத் துறை விவசாய முன்னேற்றத்திற்கு முதுகெலும்பு போன்றதாகும். இங்கு விவசாயிகள் மேம்பாடு திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறு விவசாயிகள் மேம்பாட்டுக் கழகத்தை அமைக்கும்போது எந்தப் பகுதியாகயிருந்தாலும், அந்தப் பகுதியில் ஏ.ஆர்.ஸி. திட்டம் நடைமுறையில் இருந்தால் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் அதன் கண்டிஷன்ஸ் பொருந்தும். ஏ.ஆர்.ஸி. திட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் கிணறுகள் வெட்ட கண்டிஷன்ஸ் போடுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மோட்டார் வைக்க கண்டிஷன் போடுகிறார்கள். வேடசெந்தூர், அறவாக்குறிச்சி போன்றயிடங்களில் இந்தக் கண்டிஷன்ஸ் இருப்ப தால், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் புதுக்கிணறு கள் வெட்டுவதற்கு லோன் கொடுப்பதில்லை. மோட்டார்கள் வாங்க லோன் கொடுப்பது கிடையாது. ஆகவே, இந்தக் கஷ்டங்களை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கவேண்டும். இப்போது எங்கள் பகுதியில் மோட்டார் வைக்க வசதியில்லாத நிலை இருக்கிறது. புதுக் கிணறுகள் வெட்டுவதற்கு வசதியில்லாத நிலை இருக்கிறது. இந்தக் கஷ்டங்கள் நீக்கப்படவேண்டும்.

பிற்போக்கான பகுதிகள் இன்னும் பிற்போக்கான பகுதி களாகவே இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட பிற்பட்ட பகுதி களுக்கு ஒருசில சலுகைகள் அளிக்கப்படவேண்டும். இதுகுறித்து ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவந்தும் நிலைமை அப்படியே இருக்கிறது. பிற்பட்ட பகுதிகளுக்கு ஒரு சில சலுகைகள் அளிக்க வில்லை என்றால் அவை பிற்பட்ட பகுதிகளாகவே இருக்க நேரிடும்.

[1971 ஜூலை 24 [திரு. ப. முத்துசாமி]

அடுத்து, விவசாயக் கருவிகள் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன வாடகைக்குக் கொடுப்பதற்கு. ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவு செய்து வாங்கி வைத்திருக்கிறார்கள். ட்ராக்டர்கள் போன்ற கருவிகளுக்கு பழுது ஏற்பட்டால் தொலை தூரத்திற்குக் கொண்டு சென்று பழுது பார்க்கவேண்டியிருக்கிறது.

அடுத்து, பொறுக்கு விதைகள். பொறுக்கு விதையைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு நல்ல விதை கொடுத்தால் தான் தரமான தான்யங்களை அவர்கள் உற்பத்தி செய்ய முடியும். அப்படி விதைகளைக் கொடுக்கும் அரசாங்க டெப்போக்களில், விதைகளை மட்டும் விற்றால் போதாது. அந்த விதைகள் நல்ல விளைச்சலைத் தரக் கூடியவைதானா என்பதை கண்காணிக்க வேண்டும். விற்பவர்கள் என்று மட்டும் இல்லாமல், அதை வாங்கி உபயோகிப்பவர்கள் பலன் பெறுகிறார்களா என்பதையும் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அளவுக்கு விவசாய முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வரும் நமது அரசு, இந்த மான்யத்தின் மீது ஒதுக்கக் கேட்டு இருக்கும் கோரிக்கையை ஆதரித்து, வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கட்டாந்தரப்பரப்பை, காட்டை, வெறுந்தரையை, வெட்டிப் பயன் படுத்தி வேர்வை தனைப்பாய்ச்சி, பாரைப்பிளந்து உணவு படைக்கும் தொழிலுக்காய், ஏரைப்பிடித்து உழும் ஓர் ஏழைத்திருவுருவாய், கடவுளைக் காண்பதாய் கவிஞர் தாகூர் சொன்னார்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வேளாண்மைப் பற்றிய பேச்சா கவியரங்கமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாட் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். கவிதை நமது சட்ட மன்றத்தில் கூறப்பட்டால், அது பாராட்ட வேண்டியதாகும். வேளாண்மையைப் பற்றி ஏராளமான காவியங்கள், கவிதைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

திரு. துரை கோவிந்தராசன் : மறைந்த மாமேதை அண்ணாவோ, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண விரும்பினார். அதனால் தான் அவர் வழி நிற்கும் கலைஞர் அரசு வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பதை இந்த வேளாண்மை மானியம் எடுத்துக் காட்டுகிறது என்பதைக் கூறி, அதை ஆதரிக்கும் வகையில் என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இதிலே பல்வேறு . அம்சங்களைப்பற்றி எடுத்துக் கூறி, இந்த வேளாண்மைத் துறை கிட்டத்தட்ட 5 ஆண்டு காலமாக என்னென்ன பணிகளை ஆற்றியிருக்கிறது, அதன் காரணமாக நம்முடைய தமிழகம் உணவுத்துறையிலே தன்னிறைவு பெற்று இருக்கிறது என்பதையும் இந்த மானியத்தின் மூலமாக நமக்கு எடுத்துக் காட்டப்பட்டிருக் கிறது. புள்ளி விவரத்தின்படி நம்முடைய நாட்டின் உற்பத்திப் பெருக்கம், ஒரு போக நிலங்கள், இன்று இரண்டு போக நிலங்கள் பலபோக நிலங்களாக மாற்றப்படுகிற அளவுக்கு பல அம்சத் திட்டங்களை மேற்கொண்டு இருக்கிறது என்பதை இந்த மானியக் கோரிக்கை மிக தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.



1971 ஜூலை 24] [திரு. துரை. கோவிந்தராசன்]

அதேபோல் அவர்களுக்கென்று சிறு விவசாய மேம்பாட்டு நிறுவனத்தையும், ஒருங்கிணைந்த புன்செய் நில மேம்பாட்டு திட்டத்தையும் செயல்படுத்தி இருக்கிறது. ஒரு சில மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலி, திருச்சி மாவட்டத்தில்—திருநெல்வேலி மாவட்டத்தில் கோவில்பட்டி தாலூக்காவிலும், திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டை தாலூக்காவிலும்—பல பகுதிகளில் இப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கி இருப்பதை இந்த மான்யக் கோரிக்கை மூலமாக அறிகிறோம்.

அதேநேரத்தில் அப்படிப்பட்ட திட்டங்கள், மான்யக்கோரிக்கை தந்து இருக்கும் வேளாண்மைத் துறை அமைச்சர் வந்திருக்கும் சோழ வள நாட்டின் தலை நகர் பகுதியில் இருக்கும், நான் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கும் கந்தர்வகோட்டைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப் பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கையிலே இருக்கும் புண்ணுக்கு கண்ணாடி காட்டத் தேவையில்லை என்பதால், இப்படிப் பட்ட ஒருங்கிணைந்த திட்டங்களை நான் சார்ந்து இருக்கிற பகுதியில் இருக்கும் மக்களுக்கு பயன் அளிக்கத் தக்க அளவுக்கு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 2,000 ஏக்கரிலிருந்து 8,000 ஏக்கர் வரை குறிப்பாக 80 பேர் கொண்ட 8 குழுக்கள் 400 பெரிய விவசாயிகளுக்கு பயன் அளிக்கத் தக்க அளவுக்கு செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் பெறத்தக்க அளவுக்குள்ள தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு பகுதியோடு, கந்தர்வக்கோட்டையையும் இணைத்து அந்தப் பகுதியில் விவசாயப் புரட்சி ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் எல்லா வகையிலும் பசுமைப் புரட்சி என்று சொல்லத்தக்க அளவுக்கு பசுமை இருந்தாலும், பல பகுதிகளில் பல இடங்களில் அப்படி இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். இந்த சிறு விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் என்று பெயரளவில் எடுக்கப்பட்டு இருக்கிறதே தவிர, குறிப்பாக கந்தர்வ கோட்டைப் பகுதிகள் முன்னேற்றத்திற்கு வரவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். குறிப்பாக இந்த கந்தர்வகோட்டை பகுதி காடுகள் நிறைந்த பகுதி. 20–30 மைல்கள் காடுகள் இருக்கின்றன. வறண்ட காற்று அடிக்கும் பகுதி, இந்தப் பகுதியில் விவசாயம் நல்ல முறையில் செய்யத்தக்க அளவுக்கு வேளாண்மை அமைச்சர் அவர்கள், குறிப்பாக அந்த மாவட்டத்திலிருந்து வந்தவர்கள், அதற்கு வழி வகை செய்வார்கள் என்று கருதி, என் தொகுதி மீது பற்றும் பாசமும் வைத்து அதை கவனிக்க முன் கை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குறிப்பாக நம்முடைய நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும் பாகக் கருதக்கூடிய விவசாயத்துறை கடந்த 20 ஆண்டுகளாக மெலிந்து வளைந்து காணப்பட்ட ஒரு சோகமான காட்சியை நாடு

[1971 ஜூலை 24

[திரு. எம். ஏ. லத்தீப்]

கண்டது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவி ஏற்ற பிறகு இந்த வளைந்த முதுகெலும்பு நிமிர்ந்து நின்று கட்டிளம் காளைக்கு இருக்கும் முறுக்கோடு அது விளங்கும் நிலையை நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்று பசுமைப்புரட்சியை அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்த அறிக்கையிலே நம்முடைய நாட்டின் முதுகெலும்பாக கருதக்கூடிய......

திருமதி த. ந. அனந்தநாயகி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், சார், 20 வருஷங்களாக மெலிந்து வளைந்து காணப்பட்டது என்று சொல்வது சரியல்ல. அந்த 20 ஆண்டு காலத்தில் தான் நிமிர்ந்து நிற்கும் அணைக்கட்டுகளைக் கட்டினோம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : அம்மையார் அவர்கள் அன்று இருந்த நிலை நிமிர்ந்து இருந்தது என்று சொன்னார்கள். நான் சொல்வேன், நம்முடைய அங்கத்தினர் அவர்கள் நிமிர்ந்தது என்பதற்கு ஒரு இலக்கணத்தில் ஒரு புதிய பொருளைக் கண்டு இருக்கிறார்கள். நிமிர்ந்து இருந்தது என்பதற்கு அவர்கள் சொல்கிற பதிலை அவர்கள் தான் தெரிந்து வைத்து இருக்கிறார்களே தவிர நாட்டு மக்கள் நிமிர்ந்தது என்றால் என்ன, வளைந்தது என்றால் என்ன என்பதை நல்ல முறையில் தெரிந்து வைத்து இருக்கிறார்கள். ஆகவே, இன்று நம்முடைய பசுமைப் புரட்சியைப் ஏற்படுத்திய அந்த மாமேதைக்கு, நம்முடைய நாட்டிலே ஏற்பட்டு இருக்கிற உற்பத்திப் பெருக்கத்திற்கு, அந்த மாமேதைக்கு என் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்று இருந்த நிலை என்ன, இன்று இருக்கிற நிலை என்ன? அன்று ஒரு படி அரிசி வாங்குவதற்காக, ½ படி அரிசி வாங்குவதற்காக நம்முடைய தாய்மார்களும், பெண்களும், இரவிலே சென்று தெருவிலே நின்று மறு நாள் மாலை வரையிலே கூட அரிசி கிடைக்காமல், ஆங்காங்கே மயக்கமுற்று விழுந்த நிலைபோய், இன்று சாதாரணமாக எல்லா இடங்களிலும் அரிசி கிடைக்கும் நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலை முறுக்கேறிய நிலை இல்லை என்று யாராவது சொன்னால், அவர்களுடைய அந்த செய்கைக்கு நான் பரிதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த மான்யத்திலே நான் ஒன்றை நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு விரும்புகிறேன். இன்று நம் நாட்டிலே கண்டிருக்கிற முன்னேற்றம் பலவீனமான முன்னேற்றம், நாம் முன்னேற்றப்பாதையில் இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியவர்கள் என்பதை நாம் இந்த நேரத்தில் மறந்து விடுவதற்கு இல்லை. நம்முடைய விவசாயம் முன்னேற வேண்டுமானால், நீர் வளம் பெருக வேண்டும். நில வளம் பெருக வேண்டும். மக்களின் உழைப்பு பெருக வேண்டும்.

அந்த வகையில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் அமைச்சரின் கவனத்திற்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன்.



971 ஜூலை 24]

[திரு. எம். ஏ. லத்தீப்]

நான் வாழ்கிற பகுதி பாலாற்றை ஒட்டியிருக்கக்கூடிய பகுதி. அந்தப் பாலாறு எந்த நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்களுக்கு நான் எடுத்துக் கூறத் தேவையில்லை. என்னுடைய பகுதியில் நீர்ப் பாசனத்திற்காக பயன்படும் வகையில் கிணறுகள், ஏரிகள் இல்லை. நீர் இருக்கவேண்டுமானால் நல்ல மழை இருக்கவேண்டும். மழை தவறிவிட்டால் அங்கே நீர் வளத்திற்கு, நீர்ப்பாசனத்திற்கு வழி இல்லாமல் விவசாயிகள் தவிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே மழை பெய்கிற நேரத்தில் நாம் கவனமாக இருந்து நீரைத் தேக்கி வைத்தால்தான் விவசாயிகளுடைய வாழ்வில் நாம் முன்னேற்றத்தைக் காண முடியும் என்ற நிலை என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இருக்கிறது. நான் அமைச்சரின் கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். மெக்கனமலை என்று ஒரு மலை இருக்கிறது. நல்ல மழை பெய்தால் அந்த மலையிலிருந்து ஊற்று எடுத்து பெருகும் காணுறுகள் எங்கோ வயல் வெளிகளில் ஓடி, விவசாயத்திற்கு பயன்படாமல் சென்று விடுகிறது.

ஆகையினால், அங்கே வெள்ளைக் குட்டை என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு நீர்த்தேக்கம் கட்டினால், அந்த நீரைக்கொண்டு பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பயன்படுத்த முடியும். ஆகவே, வெள்ளைக்குட்டையில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்காயத்தில் ஏரி ஒன்று இருக்கிறது. அதற்கும் காணுறிலிருந்துதான் தண்ணீர் வரவேண்டும். அது பெரிய ஏரி. ஆனால் வருஷம் பூராவும் நீர் இல்லாமல் இருக்கிறது. அந்த ஏரிக்கு நீர் வரும் வகையில் தடுப்பு ஒன்று கட்டினால், ஆலங்காயம் ஏரிக்கு பாயும் வழி ஏற்படும். அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பாலாற்றின் புல்லுரு என்ற இடத்தில் ஒரு அணைக்கட்டும் திட்டம் இருந்தது. 20 ஆண்டு காலமாகியும் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சரவர்கள் அந்தப் பகுதிக்கு வந்து பார்க்க வேண்டும். பாலாறுக்கு மைசூரிலிருந்து நுழைகின்ற நுழைவாயில் ஒரு அணைக்கட்டி தேக்கினால், அது நீராறு ஆகி, விவசாயிகளுக்கு நல்ல பலன் ஏற்படும்.

இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன்கள் கொடுக்கிறார்கள். அந்த முறையினை பாராட்டுகிறேன். பல வகைகளில் கொடுக்கிறார்கள். கிணறுகள் வெட்ட, விவசாயக் கருவிகள் வாங்க, உரங்கள் வாங்க, விதைகள் வாங்க என்று இப்படி பல்வேறு வகைகளில் கொடுக்கிறார்கள். ஆனால் இவற்றைத் தவணை முறையாகக் கொடுக்காமல், ஒரே தவணையில் கொடுத்தால் நலமாக இருக்கும். நல்ல முறையில் பயன் படுத்திக்கொள்ள முடியும்.

பாலாறு பேசின் ரூல்ஸ் என்று இருக்கிறது. அதைக் கொஞ்சம் கவனித்து, அதை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வாணியம்பாடியில், வெகு தூரத்தில் உள்ள ஆலங்காயத்தில் கேணிகள் வெட்டத் தடை போடுகிறார்கள். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்]

சென்னையிலே வாஷர்மென்பேட்டையில் அக்ரிகல்சுரல் எஞ்ஜினியரிங் ஒர்க் ஷாப் இருக்கிறது. அங்கே செய்யப்படும் நல்ல கருவிகள் வெளிநாடுகளுக்கும் அனுப்புகிறார்கள். நல்ல லாபத்தில் நடக்கிறது. ஆனால் வேண்டிய அளவுக்கு அங்கே வேலைகள் கொடுப்பதில்லை என்று அறிகிறேன். இதையெல்லாம் அமைச்சர் கவனித்து, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இதில் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதால், அவர்களும் இதையெல்லாம் கவனித்து, நல்ல வகையில் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பொதுவாக இந்த மானியத்தை வரவேற்று, அரசைப் பாராட்டி முடிக்கிறேன்.

* திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

தீவிர சாகுபடி திட்டம், மேம்பாடுத் திட்டம், பரிசுத் திட்டம், மூன்று போக சாகுபடித் திட்டம் என்று பல திட்டங்கள் மூலமாக பசுமைப் புரட்சியை ஏற்படுத்த முயற்சிக்கும் இந்த அரசு, விவசாயிகளின் உற்சாகத்தைப் பாதிக்கும் வகையிலும் இந்தத் திட்டங்களைப் பாதிக்கும் வகையில் இந்த விவசாய வருமான வரி திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முக்கியமாக இந்த விவசாய வருமான வரி திருத்த மசோதாவின் மூலம், உச்சவரம்பு சட்டத்தில், ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு இருக்கும் விளக்கப்படி, விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஸ்டாண்டர்ட் ஏக்கர் விளக்கப்படி, இந்த மூன்று போக சாகுபடி திட்டம் பாதிக்கப்படும். என்னுடைய கம்பம் பகுதியில், மூன்று போக சாகுபடி திட்டம் அமுலில் இருக்கிறது. இரண்டு முறை நெல் சாகுபடியும், மூன்றாவது முறையாக இரண்டு கொட்டையுள்ள நிலக்கடலையையும் சாகுபடி செய்கிறார்கள். இந்தத் திருத்த மசோதா சட்டமானால், இந்த மூன்றாவது நிலக்கடலை சாகுபடியை விவசாயிகள் கைவிட்டுவிடுவார்கள். காரணம், 14 ஏக்கர் நஞ்சை பூமியில் மூன்றாவது முறையாக நிலக்கடலையை பயிரிட்டால், அது 20 ஏக்கர் என்ற அளவில் போகிறது. அப்படிப் போகும்போது, அவர்களுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன. திருத்த மசோதாவின்படி வருமானத்தின் அடிப்படையில் அவர்கள் வரி செலுத்த வேண்டும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 14 ஏக்கர் நிலத்தில் மூன்றாவது போகம் நிலக்கடலை சாகுபடி செய்தால், எப்படி அது உச்சவரம்புச் சட்டப்படி 20 ஏக்கர் என்று ஆகிவிடும் என்பது புரியவில்லை. அதை விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பி. கோபால : தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி திருத்த மசோதா இப்பொழுது என் கைவசம் இல்லை. அது வந்தவுடன் சொல்கிறேன். அதைக் கணக்கிட்டுப் பார்த்துத்தான் சொல்கிறேன்.



THIUMATHI T. N. ANANDANAYAKI : In the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1971, it has been stated that

" two-thirds of an acre of land used for growing groundnut (irrigated). "

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கணக்கில் 2/3 ஏக்கர் என்று இருந்தாலும், அது ஒரு ஏக்கராகத்தான் கணக்கிடப்படும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது வருமான வரியைப் பொருத்தது. 15 ஏக்கருக்கு உட்பட்டவர்கள் என்று இருக்கிறது. முப்போக சாகுபடி அந்தச் சட்டத்தின் கீழ் வராது என்று நினைக்கிறேன்.

திரு. கே. பி. கோபால் : இதிலே திருத்தம் என்னவென்றால், ஒரே பூமியில், ஒன்றுக்கு மேற்பட்ட விளைச்சல் செய்தால், குறைந்த அளவு சாகுபடி செய்வதைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற விளக்கம் தரப்பட்டிருக்கிறது. நிலக்கடலை சாகுபடி விகிதா சாரத்தைத்தான் எடுப்பார்கள். வருமானத்தின் அடிப்படையில் விவசாயிகள் வரி செலுத்தத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கம்பவுண்டிங் ரேட்டைவிட தொந்தரவாக இருக்கிறது. சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. சிரமங்கள் இருக்கின்றன. விவசாயிகள் கொடுக்கும் கணக்கை வருமான வரி அதிகாரிகள் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்வதற்கில்லை. விவசாய வருமான வரி அதிகாரிகள் எந்த அடிப்படையில் விவசாய வருமானத்தை நிர்ணயிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அது விவசாயிகளுக்குத் தெரியாத விஷயம். நிலக்கடலை சாகுபடியால் வரும் லாபத்தை விட, அதிகாரியினால் ஏற்படும் தொந்தரவுகள் அதிகமாக இருக்கிறது. ஒரே பகுதியில் ஒருவர் பூச்சி மருந்து அடிக்கவில்லை என்றால், ரசாயன உரம் போடவில்லை என்றால், விளைச்சல் குறைவாக இருக்கும். அடுத்த நிலக்காரனுக்குக் கூடுதலாகத்தான் இருக்கும். அதேபோல, ஒரு விவசாயிக்கு என்ன வருமானம் கிடைக்கிறது என்று பார்த்தால், வசதியுள்ளவர்கள் விளைச்சலை அதிகப்படுத்தி, நியாயமாக விற்கலாம். பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள், பொருளாதார நெருக்கடி காரணமாக, முன்பணம் போட்டு, அதையும் செய்யமுடியாது. விளைச்சலைக் காட்டித்தான் முன் பணம் பெற வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் என்ன வருமானம் வருகிறது என்று எப்படி நிர்ணயிக்க முடியும்? வருமான வரி அதிகாரிகளிடம் நியாயம் கிடைக்கும் என்பது இல்லாததால்தான் அப்பீல், ட்ரைப்யூனல், ஹைகோர்ட்டு என்று இருக்கிறது.

நிலவங்கிகள் மூலம் நிதி திரட்டி கடன் கொடுத்து, கிணறுகள் வெட்டி, பம்பு செட்டு வைக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்த மசோதா சட்டமானால், அதிலும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஸ்டாண்டர்ட் ஏக்கர் விளக்கத்தினால், 2½ ஏக்கர் திராட்சை சாகுபடி செய்தால், 7 ஏக்கர் வாழை, 8 ஏக்கர் மிளகாய் என்றால் அது 20 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் போகிறது. கம்பவுண்டிங் ரேட் என்ற உரிமை அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. நிச்சயமாக இது திட்டத்தை பாதிக்கும். விவசாயிகள் கிணறுகள் வெட்டி, மின்சாரத்தின் மூலம் திட்டத்தை அமுல்படுத்த முயற்சிக்க

[திரு. கே. பி. கோபால்] [1971 ஜூலை 24

மாட்டார்கள். இன்னமும் அந்தத் திருத்த மசோதா சட்டமாக வில்லை. வேளாண்மைத் துறை அமைச்சர் ஆர்வம் உள்ள அமைச்சர். விவசாயிகளுக்கு இருக்கும் குறைகளை அறிந்து, சட்டமாக்காமல் ஒத்திப் போட்டிருக்கும் மசோதாவை, நிரந்தரமாக கைவிட்டுவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, கைவிட முன்வருவார்கள் என்ற நம்பிக்கையோடு இவற்றை குறிப்பிடுகிறேன்.

அடுத்து, உணவு உற்பத்தியில் 1971--72-ஆம் ஆண்டு 73 இலட்சம் டன் கிடைத்திருக்கிறது. ஆனால், அதேசமயம் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்க, பொது மக்களோ விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்லுகிறார்கள். திரு. மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், இதற்கு காரணம் என்னவென்றால் இடையிலே உள்ள தரகர்களும், வியாபாரி களும், கமிஷன் ஏஜென்டுகளும் தான் காரணம். எனவே, இவர்களை எல்லாம் நீக்கும் விதத்திலே காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டும். ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள் 133 அமைக் கப்பட்டிருக்கிறது. பெரியகுளம் கோட்டாட்சிப் பகுதியிலே எந்த விதமான ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனைக் கூடமும் அமைக்கப் படவில்லை.

அது மாத்திரமில்லை, மத்திய அரசின் உதவியுடன் 1½ கோடி ரூபாயில் ஒருங்கிணைந்த விற்பனை கூடங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன. அந்த ரீதியிலே தேனியிலே பருத்திக்கும், மிளகாயிக்கும் ஒரு விற்பனை கூடமும், கம்பத்திலே நிலக்கடலை, மற்ற நவ தானியங் களுக்கு ஒரு விற்பனைக் கூடமும் அமைத்துக் கொடுக்குமாறு இந்த அரசை கேட்டுக் கொள்ளுகிறேன். பல உறுப்பினர்கள் எடுத்துப் பேசிய இந்த "கிராப் இன்ஷூரன்ஸ்" மேலே பல கட்சிகள் சார்பாக வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட அதை வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். எனவே, இந்த கிராப் இன்ஷூரன்சை உறுதி யாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம், மிகப் பயன் தரும் நெல் வகைகளை 1969-70-லே 28 லட்சம் ஏக்கரில் பயன்படுத்தி 45 லட்சம் டன்தான் உணவு தானிய உற்பத்தி ஆயிற்று. ஆனால், 1971-72-லே 50 லட்சம் ஏக்கரில் அந்த நெல்லைப் பயன்படுத்தி விளைச்சலை 54 லட்சம் டன்னாக உயர்த்தப் பட்டிருக்கிறது. எனவே, இதில் அவர்களுக்கு காலா காலத்திலே கிடைக்க வேண்டிய மழை கிடைக்காததால், விளைச்சல் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதைதான் இது சுட்டிக்காட்டுகிறது. எனவே, இதில் அவர்களுக்குக் காலா காலத்திலே இந்த "கிராப் இன்ஷூரன்ஸ்" திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை ஆதரித்தவனாக இரண்டொரு வார்த்தைகளை நான் சொல்ல விழைகிறேன்.

இந்த விவசாயத் துறையில் முன்பு அரசியல் துறையில் நிர்வா கத்தை நடத்திக் கொண்டிருந்தவர்களை விட இப்பொழுது ஆட்சி நடத்துபவர்கள் இந்தத் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை ஒப்புக்கொள்வதில் தப்பு இல்லை. நன்றி உள்ளத் தோடும், மனிதாபிமானத்தோடும் இதை நாம் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். அதற்கு கட்சி உணர்ச்சி தேவையில்லை. முன்பு



[1971 ஜூலை 24
[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

இருந்த கஷ்ட நிலைமையும், முன்பு இருந்த தொல்லையும், முன்பு விவ சாயிகளுக்கு இருந்த சிரமமும் ஓரளவேனும் இந்த சர்க்கார் கவனித்து மாற்றியிருக்கிறது என்ற உண்மையை ஒப்புக்கொள்வதற்கு தயங்கவில்லை. மூன்றாவதாக, முன்பு இருந்த நிலைமை நமக்கு நன்றாகத் தெரியும். அதற்கான காரணத்தை நான் இப்பொழுது கூற விரும்ப வில்லை, அது அவசியமும் இல்லை. எனக்குப் பின்னாலே இருக்கிறவர் கள் இப்படி நான் சொல்லும் பொழுது குறுக்கிடுவார்கள் என்ற அச்சமும் எனக்கிருக்கிறது. நான் குறிக்கிடக் கூடாது என்பதற்காக மிகவும் அடக்கத்தோடு பேச வேண்டுமென்று கருதுகிறேன். அவர் களால் செயல்படுத்த முடியவில்லை. ஓட்டு அளித்தவர்களை தெருவிலே நிறுத்தினார்கள். பையை வைத்துக்கொண்டு பகல் முழுவதும் நின்று கொண்டிருந்தார்கள். அதற்கு முரணான ஒரு நிலையை உருவாக்கினார் கள். அது இப்பொழுது ஒரேயடியாக தீர்த்து வைக்கப்பட்டது என்று நான் சொல்ல வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: மக்கள் நடுத்தெருவிலே நிற்கவில்லை.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: அம்மையார் அவர்கள் சொல்லு கிறார்கள் மக்கள் நடுத் தெருவிலே நிற்கவில்லை என்று, ஓரத்திலே தான் நின்றிருந்தார்கள், காரணம் தெருவிலே ஓடும் வண்டி மேலே ஏறிவிடாமல் இருக்க. அப்படி நின்று கொண்டிருந்தவர்களிலே நானும் ஒருவன் தான், ஏனென்றால், நமக்கும் தேவை இருக்கிறது என்பதால். அந்தத் தொல்லையில் இருந்து இப்பொழுது மாற்றம் அளித்திருக்கும் இந்த சர்க்காரை நான் பாராட்டுகிறேன் என்று சொல்லுவதிலே குற்றமில்லை. விவசாயத் துறையிலே உள்ளவர் களுக்கு அவர்கள் போதுமான உதவியை அவர்கள் செய்திருக்கிறார் கள். முன்பு அவர்கள் இயலாமல் இருந்தார்கள், புரியாமல் இருந் தார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லவில்லை. இப் போதைய சூழ்நிலை அது எல்லாம் நீங்கப் பெற்று, விவசாயிகளும் மக்களும் பயன் அடைந்திருக்கிறார்கள் என்ற நிலையினை நான் பார்க்கும் பொழுது, இந்த அரசை என்னுடைய கட்சியின் சார்பிலே பாராட்டிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : rose.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பேச நேரமில்லை. எனினும், அவர்கள் ஒரு 5 நிமிடத்திலே பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

THIRU K. T. K. THANGAMANI : Mr. Deputy Speaker, Sir, subject to your ruling, I will make my speech as briefly as possible.

இந்த வேளாண்மைத் துறை மானியத்தின் கீழே ரூ. 18,87,83,100-க்கு கோரப்பட்ட தொகை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலே, எங்கள் கட்சியின் சார்பிலே பல வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருந்தாலும், அதிலே மிக முக்கியமானது இடங்களுக்கு ஏற்ற வகையிலே திட்டங்களை அமுல் செய்யப்பட வேண்டியதாகும். எல்லா விவசாயப் பொருள்களும், நெல்லும் நியாயமான விலைக்கு வாங்கிக் கொள்ள உதவும் வர்த்தக கழகங்கள் அமைக்க வேண்டும் என்று நாங்கள் பல நாட்களாக கூறி வருகிறோம். இதன் அடிப்படையிலே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 24

தான் ஏற்கனவே, எங்களுடைய கட்சியின் சார்பிலே பேசிய மணலி கந்தசாமி அவர்களும், அழகிரிசாமி அவர்களும் விவரமாக இதைப் பற்றி பேசியிருக்கிறார்கள்.

நான் இப்பொழுது சில குறிப்பிட்ட விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மாவட்டத்திற்கு ஒரு அரசாங்கப் பண்ணை அமைக்க வேண்டும் என்பதை இங்கே சுட்டிக் காட்டிக்கொள்கிறேன். மத்திய சர்க்காரின் உதவியோடும், சோவியத் யூனியனின் உதவியோடும், திருச்சி மாவட்டத்திலே குடுமியான்மலையிலே இருக்கும் பண்ணையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு பண்ணை அமைய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அத்தோடு, நாம் வருஷத்திற்கு ஒரு பண்ணை அமைக்கப்பட வேண்டும் என்ற அளவிலே காரியங்களைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், ரசாயன தொழிற்சாலைகளின் கழிவு நீர் சரியாக திருப்பி விடப்படாததால், பல இடங்களிலே விவசாயத்திற்குத் தடங்கலாக இருக்கிறது. குறிப்பாக, மேட்டூரிலே இருக்கும் மேட்டூர் கெமிகல் இண்டஸ்டிரீஸ் கழிக்கும் கழிவு நீரினால், அங்கே பக்கத்திலே இருக்கும் கிணற்றுத் தண்ணீர் பாதிக்கப்பட்டு குடி நீர் பஞ்சமே வரக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அத்தோடு, பயிர் செய்யப்பட முடியாத நிலைமையும் இருக்கிறது. எனவே, இந்தக் கழிவு நீரை வேறு இடத்திலே கொண்டுபோய் விடும் அளவிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேலம் நகரத்திலே உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையின் கழிவு நீரும் இத்தகைய பல துன்பங்களைக் கொடுத்து, அங்கிருக்கும் மக்கள் எல்லாம் அதனால் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதை எல்லாம் போக்க ஆவன நடவடிக்கை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே இந்த விவசாயத்தைப் பற்றி போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு வீட்டிலே இருக்கும் மாணவர்களுக்கு —அப்படி கிராமங்களிலே இருக்கும் பிள்ளைகளுக்கு ஜில்லா அக்கிரிகல்சர் ஆபிசர் வகுப்புகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். டிராக்டர்களுக்காக வாங்கப்படும் சார்ஜ் குறைக்கப்பட வேண்டும். இதைச் செய்து, டிராக்டர்கள் சுலபமான முறையிலே கிடைக்கச் செய்யவேண்டும். நீலகிரி மாவட்டத்தில், கூடலூரார் பகுதியில், எருமாடு என்ற இடத்திலே ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் தாங்கள் பயிர் செய்துகொண்டிருந்த காட்டு நிலங்களிலே இருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அப் பகுதிகளிலே 7, 8 வருஷங்களாக விவசாயம் செய்து வந்தார்கள். அப்படி விவசாயம் செய்து வந்த 45 குடும்பங்களை அங்கே வெளியேற்றியிருக்கிறார்கள். இதை எல்லாம் அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு பட்டா கொடுக்கும் நிலைமையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ரசாயன உரம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் வகையிலே, குறைந்த விலைக்கு அவைகளை கிடைக்குமாறு செய்யவேண்டும். மேல் நாடுகளான ஜப்பான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலே எந்த



ஜூலை 24 [திரு. கே. டி. கே. தங்கமணி]

க்கு பெர்ட்டிலைசரை உபயோகிக்கிறார்களோ, அதைவிட நாம் குறைவாகத்தான் இந்த உரங்களை உபயோகிக்கிறோம். இதற்குக் ணம், இந்த உரங்களின் விலை அதிகமாக இருப்பதுதான். னும் சொல்லப்போனால், சைனாவிலே இந்த உரத்தை இலவச க விவசாயிகளுக்குத் தருகிறார்கள்.

அடுத்து, பூச்சிக்கொல்லி மருந்து விவசாயிகளுக்கு மிக, மிக யவசியம். இதிலே, அகில இந்திய சர்வே என்ன சொல்லுகிறது என்றால், இந்தப் பூச்சிகளினால் உற்பத்தியில் 3-ல் ஒரு பங்கு பாதிக்கப் படுகிறது என்றார்கள். எனவே, இந்தப் பூச்சிக் கொல்லி மருந்துகளைக் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு கொடுத்து, அந்த மருந்தை "பவர் ஸ்பிரேயர்" மூலமாக அடிப்பதற்கு வாலிபர்களுக்கு பயிற்சியும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மைசூர், வங்காளம் போன்ற பகுதிகளிலே "தைசூல்" என்ற மருந்து இப்படி இலவசமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருவது இந்த அரசுக்குத் தெரியும். எனவே, அப்படிப்பட்ட மருந்துகளையும் நம்முடைய விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கீழ் பவானியிலே அமுலில் உள்ள "பயிர் கட்டுப்பாடு சட்டத்தை" மாற்ற வேண்டும். அங்கே, பவானிக்கு அருகாமையிலே நஞ்சை பயிர் விவசாயிகள் பயிரிட்டால், அதற்காக அவர்களின் மேல் 'தண்டத் தீர்வை' போடப்படுகிறது. ஒருவர் 100 ஏக்கர் விவசாயம் செய்தால், வருஷத்திலே ஒரு கன அடி தண்ணீர் விடுவது என்பதை மாற்றி, அதை 80 ஏக்கரா என்று வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும், எம். சி. உகாண்டா 5 என்ற உயர்ந்த ரக பருத்திகளை விளைவிப்பவர்களுக்கு இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக, தேனி, கோவை, ராஜபாளையம் போன்ற பகுதிகளிலே இப்படிப்பட்ட பருத்திகளை பயிரிடுபவர்களுக்கு இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சியிலே அப்படி ஒரு கல்லூரி அமைக்கப்படும் என்று கருதுகிறேன். சென்னையிலே இருக்கிற கால்நடைக் கல்லூரியும், கோயம்புத்தூரிலே இருக்கிற "ஹோம் சயின்ஸ்" கல்லூரியு இந்த பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டால், அப்பொழுது தா இந்த பல்கலைக் கழகம் முழுமை பெற்றதாகவும், ஒழுங்காகவ இருக்க முடியும். அப்படிச் செய்தால் தான், அவைகளை விவச பல்கலைக் கழகம் என்று சொல்ல முடியும்.

பொருந்துமாறு இருக்கிறது. இந்த குறைந்த பட்ச கூலி நிர்ணயச் சட்டத்தை, மேலே தஞ்சைக்கும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத் திற்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கிராப் இன்ஷுரன்ஸ் திட்டம். அதை இன்னும் நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு, இது ஒரு முக்கியமான மானியமாக இருந்தாலும்கூட—நான் இதை இந்தச் சபையிலே சொல்லக்கூடாது என்றாலும்கூட—அடுத்த ஆண்டாவது இந்த வேளாண்மைத்துறை மீது இரண்டு தினங்க ளாவது விவாதிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர் கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் துணைத் தலைவ ரவர்களே, இன்றைய தினம் இந்த வேளாண்மைத்துறை மானியத்தின் மீது இங்கே பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரி வித்திருக்கிறார்கள் என்றாலும் பலர் தெரிவிக்க முடியவில்லை என்பதை நான் உணருகிறேன். தெரிவித்தவர்களும் முழுமையாகத் தெரிவிக்க வில்லை என்பதனையும் உணர்கிறேன். அதற்குக் காரணம் போதிய காலம் இல்லாத நிலைமைதான். இருந்தாலும் அவர்களுடைய கருத்துக்களையெல்லாம் எனக்கு அறிவிப்பார்களேயானால், அவைகளை யெல்லாம் ஆராய்ந்து செய்ய முடிந்தவற்றை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யவிருக்கிறேன் என்பதை முதலிலே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த விவாதத்தில் நல்ல பல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா அங்கத்தினர் களும் மற்ற துறைகளைச் சார்ந்த மானியக்கோரிக்கைகளின் மீது நடந்த விவாதத்தின்போது இருந்த மாதிரியில்லாமல், இதிலே எனக்கு மிகுந்த துணையாகவிருந்திருக்கிறார்கள் என்பதை நினைக்கும் போது நான் பெருமைப்படுகிறேன். காரணம், இங்கே வேளாண்மை தொழிலில் ஈடுபட்டுள்ள பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பேசி யிருக்கிறார்கள். அதனால்தான் அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சில மாண்புமிகு உறுப்பினர் கள் இதிலே எனக்கு நிறையப் பழக்கமிருக்கின்ற காரணத்தாலே, இப் படிப்பட்டத் தொல்லைகளை நானும் அனுபவித்துக்கொண்டிருக் கிறவன் என்ற காரணத்தாலும் அவற்றை நிறைவேற்றுவேன் என்று திடமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே அவர்களுடைய அந்த நம்பிக்கை வீண் போகாமல் செயலாற்ற முயற்சிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர் சொன்ன குறைகளையெல்லாம் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதென்பதற்கு இங்கே நான் கொடுத்திருக் கின்ற குறிப்புப் புத்தகத்தில் விளக்கங்கள் இருக்கின்றன. அவர் விதைப் பண்ணையைப் பற்றிச் சொன்னார்கள். சமீபத்தில் அரசு விதைப் பண்ணைகளிலே நட்டமாகி, மூன்று விதைப் பண்ணைகளை நான் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மூடியிருக்கிறேன். அதே நேரத்தில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கு, பல புதிய நட வடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். விவசாயிகள் உற்பத்



தியைப் பெருக்கிக் காட்டியிருக்கிறார்களே தவிர, அந்த விவசாயக் குடும்பத்தினருடைய நிலைமை உயரவில்லை என்பதையும் அவர் இங்கே சுட்டிக் காட்டினார்.

எனக்கு ஞாபகத்திற்கு ஒன்று வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி என்ற படத்தில் 'பார் முழுதும் ஏர் முனையிலே உழவன் பாட்டிலே கொண்டாட்டம் போடுது, அந்த ஏர் பிடிக்கும் குடும்பம்..............' என்று அவர் எழுதிக் காட்டினார். அதனுடைய முற்பகுதி இப்பொழுது முடிந்து பிற்பகுதி இன்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டு அந்த உழவர்களுடைய மேம்பாட் டிற்காக பலவிதத் திட்டங்களையெல்லாம் இன்றைய அரசு நிறை வேற்றிக்கொண்டிருக்கிறது. ஏறக்குறைய இந்த அரசு பொறுப் பேற்றதற்குப் பிறகு வேளாண்மைத்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக் கின்ற குடும்பங்களுக்குப் பல்வேறான துறையிலும் நல்லபடி உதவி செய்து வருகிறதென்பதை உழவர்களும் மற்றவர்களும் மறுக்க மாட்டார்கள்.

நம்முடைய மதிப்பிற்குரிய முஸ்லீம்லீக் தலைவர் முகைதீன் அவர் கள் குறிப்பிட்டதுபோல் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைய தினம் வேளாண்மைத்துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் அவர்கள் எந்தக் கட்சியாகவிருந்தாலும் அவர்களெல்லாம் தமிழக அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். வெளிப்படையாக இங்கே பாராட்ட முடியாவிட்டாலும், தனியாக இருக்கின்றபோது நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்பது எனக்குத் தெரியும். இங்கே கூட மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப் பிட்டார்கள். அருமை நண்பர் லத்தீப் அவர்கள் பேசுகிறபோதும் சொன்னார்கள். பாசனம் உயர்ந்திருக்கிறதென்றால், அணைகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அணைகளைக் கட்டி விட்டாலும் உழவன் நிமிர்ந்து நடக்க முடியாது என்று சொல்லப்பட்டது. ஒரு பழமொழி சொல்வதுண்டு, "எண்ணெய் செலவழிந்ததே தவிர பிள்ளை பிழைக்கவில்லை' என்று. 'ஆபரேஷன் சக்ஸஸ்புல், பேஷண்ட் கொலாப்ஸ்ட்' என்றும் சொல்வார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பல கோடி ரூபாய் செலவில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரு கின்றன.

சிறு சிறு பாசன வசதிகள் ஏற்படுத்தி, குளங்கள் தூர் எடுத்தல், ஏரிகளை அமைத்தல், தண்ணீர் தேங்குவதற்குப் பல குட்டைகளை அமைத்தல், மழை காலங்களில் மழைத் தண்ணீர் வீணாகாமல் தேங்கி வைப்பதற்கு வழி வகைகள், இப்படியாகப் பல சிறு, சிறு திட்டங்களை நிறைவேற்றி தமிழகத்தை முன்னேற்ற முடியுமென்று எடுத்துச் சொன்னார்கள். அதைத்தான் பசுமைப் புரட்சி என்று சொன்னார்கள். அந்தத் திட்டப்படி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அந்த முறையில் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட 17½ கோடி ரூபாயும் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக போக்கு வரத்துச் சாலைகள் அமைத்தல், குளங்கள், ஏரிகள் முதலியவற்றை தூர் எடுத்து ஆழப்படுத்துதல் போன்ற காரியங்களுக்காக அளிக்கப்பட் டிருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள். அதைப் போலவே வேறு பல திட்டங்களும் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டன.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] 1971 ஜூலை 24]

நண்பர் மலைச்சாமி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டதையே கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி பேசுகிறபோதும் சொன்னார்கள். சமுதாயக் கிணறுகள் வெட்டி அதன் மூலமாக விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமென்று சொன்னார்கள். சமுதாயக் கிணறுகள் ஏறத்தாழ 15, 20 ஏக்கர் நிலமுள்ளவர்களுக்கு வெட்டிக்கொடுக்கப்பட்டிருந்தது. அதேபோல் இன்றைய தினம் விவசாயிகள் கடன் பெற்று கிணறு வெட்டி பாசன வசதி செய்வதற்குள் பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டிய கெடுபிடி இருக்கிறதென்று சொன்னார்கள். இன்னும் விவசாயிகள் கடன் பெற்று கிணறு வெட்டிய பிறகு தண்ணீர் இல்லாமல் எந்த முன்னேற்றத்திற்காகக் கடன் வாங்கினார்களோ, அதைச் செய்யாமல், அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அந்த நிலத்தையே விற்க வேண்டிய நிலைமை இருக்கின்றதென்பதை நானும் அறிவேன். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்காக நம்முடைய அரசு இன்றைய தினம் அக்ரிகல்சுரல் சர்விஸ் சென்டர்ஸ் என்று ஏற்படுத்தி அதன் மூலமாக சிறு சிறு விவசாயிகளையெல்லாம் ஒன்று சேர்த்து அவர்களுக்காக குழாய்க் கிணறுகளை அமைத்து அதிலே தண்ணீர் வந்தால் அவர்களுக்குக் கொடுத்து தண்ணீர் தீர்வையாவது வாங்கிக் கொள்ளலாம். அப்படி வராமல் போய்விட்டால் அவர்களுக்கு தொல்லை ஏற்படாது. நட்டமுமில்லை. அப்படி ஒரு திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு இன்றைய தினம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்து, அது ஏற்கப்பட்டு செயல்படுத்தப்படவிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே உரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசின் சார்பில் கொடுக்கப்பட்ட சலுகை போய் அதை நம்முடைய மாநிலம் தனது பொறுப்பில் ஏற்றுக்கொண்டு அதற்காகப் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை இன்றையதினம் செலவு செய்து வருகிறதென்றால், அது மிகையாகாது. இந்த அரசு இப்பொழுது அதற்காக மானியம் வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ் நாட்டிலேதான் இந்தத் திட்டம் இருக்கிறதே தவிர, வேறு எந்தப் பகுதியிலுமில்லை. பதினைந்து சதவீதம் இப்பொழுது குறைத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதனாலே இந்த அரசுக்கு ஏற்பட்டு வருகிற நட்டம் பல இலட்ச ரூபாயாகும், உரங்களின் விலையை மத்திய அரசு 1—3—1969 முதல் உயர்த்தியிருந்தாலும், உழவர்களுடைய நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு இந்த அரசு 30—11—1969 வரையில் எல்லா உரங்களுக்கும் விலையை உயர்த்தாமல் பழைய விலைக்கே விற்றுக்கொண்டு வந்தது. 1—12—1969க்குப் பின்னால் எளிதில் விற்பனையாகும் யூரியா, அம்மோனியா சல்பேட் நீங்கலாக ஏனைய என்.பி.கே. போன்ற உரங்கள் தொடர்ந்து பழைய விலைக்கே 31—3—1972 வரையில் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்படி விற்பதால் மாநில அரசுக்கு 1970-71ல் ஒரு கோடி அறுபத்திஒன்பது இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. 1971-72ல் அந்த விதத்தில் ரூபாய் 35 இலட்சம் நட்டமேற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே இரண்டு கோடி ரூபாய் அந்த வகையில் நட்டமேற்படுகிறது.



[1971 ஜூலை 24

[திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அதுமாத்திரம் அல்ல. பல ஆண்டுகளாக சரியான எடையில் உரம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டு வந்தது. அந்தக் குறையைப் போக்க அந்த உரங்கள் சரியான எடையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதுமாத்திரம் அல்ல. பழைய ஸ்டாக் இருந்த காரணத்தினால் உரத்தை எடுத்துப் போகும்போது நைந்து போன சாக்கிலிருந்து பொத்து அவை கீழே கொட்டுவதும் அதனால் உரம் விவசாயிகளுக்குக் குறைவதும் தெரியவந்தது. அதன் காரணமாக இந்த ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு புதுச் சாக்குகளில் மாற்றிக் கொடுக்கவேண்டும் என்றும் அப்படி மாற்றிக் கொடுக்கிறபோது எடைபோட்டுக் கொடுக்க வேண்டுமென்றும், புதுச் சாக்குக்காக ரூ. 2 கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. இதுவரை 50 கிலோகிராம், 100 கிலோ கிராம் என்ற அளவில் மூட்டையாகத்தான் உரம் கொடுக்கப்பட்டது. சில்லரையாக விவசாயிகள் கேட்டாலும் கொடுப்பதில்லை என்கிற புகார் இருக்கக்கூடாது என்பதற்காக சில்லரையில் கேட்கிறவர்களுக்கும் கொடுக்க வேண்டும், அதற்காக 2 பைசா அதிகமாக வாங்கலாம் என்பதாக உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அடுத்து, விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். பிற மாநிலங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் நம் மாநிலம் ஒன்றில் தான் அதிகமான மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது விவசாயத்திற்கு. நான் மின்சாரத்துறை அமைச்சரிடமும் கேட்டுக் கொண்டேன். இப்போதே 50 ஆயிரம் கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குகிற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது பூர்த்தியானவுடன் புதியதாக வெட்டப்படுகிற கிணறுகளுக்கும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை, எளிய விவசாய மக்களுக்கு எல்லாம் குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இன்றையதினம் 8 கோடி வரையில் தமிழ் நாடுதான் நட்டப்பட்டு வருகிறது என்றால் மிகையாகாது. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்க இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளத் தயங்காது என்று இந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி நீர்ப் பிரச்சினை வந்திருக்கிறது. இதன் காரணமாக எத்தகைய பெரும் கஷ்டம் வர இருக்கிறது என்பதை எல்லோரும் உணர்வார்கள். இதுபற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து எடுக்கிற முடிவுப்படி பெரிய போராட்டமே நடத்த வேண்டியதாக இருந்தாலும் தயங்குவதில்லை என்கிற உறுதியை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

இந்த நேரத்தில் இருக்கின்ற தண்ணீரை எந்த அளவுக்குச் சிக்கனமாகப் பயன்படுத்தலாம் என்பதையும் நாம் யோசிக்கவேண்டும். இதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு—வாடர் மானேஜ்மெண்ட் என்கிற பெயரில் பரிட்சார்த்தமாக ஆடுதுறையில் உடனே ஆரம்பிக்க மத்திய அரசின் அனுமதியுடன் செயல்பட இருக்கிறோம். இந்தத் திட்டத்தை அண்ணா பண்ணையிலும், கலைஞர் கருணாநிதி மன்வள பாதுகாப்பு நிலையத்திலும் செயல்படுத்த இருக்கிறோம்.

இன்னும் கமுகு, இஞ்சி திட்டங்களைச் சொன்னார்கள். கடலூர் பகுதியில் இஞ்சி பெரும் அளவுக்குப் பயிரிடப்படுகிறது. இண்டோ-ஜெர்மன் உதவியுடன் இந்தப் பகுதி பூராவும் இஞ்சி பயிரிட இருக்கிறோம். ஆனால் இருக்கிற ஒரு சிக்கல் இன்னமும் அந்தப் பகுதியில் நிலம் யாரைச் சேர்ந்தது, கேரள அரசாங்கத்ததா என்கிற தகராறு இருக்கிறது. பல விவசாயிகள் திடீர் திடீர் என்று வெளியேற்றப்பட்டும் இருக்கிறார்கள். அதுபற்றியும் அரசு கவனித்து வருகிறது. இஞ்சிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். ஆகவே, அந்தப் பகுதி விவசாயிகளுக்குக் கடன் மற்ற உதவிகளை அளித்து அங்கே நல்ல முறையில் இஞ்சி பயிரிட ஏற்பாடு செய்கிறோம்.

உற்பத்தி செய்யப்படுகிறவற்றை விற்பதற்கும் சரியான சந்தை வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்தத் தொடர் கூட்டத்திலேயே சட்டம் வந்துவிடும் என்று கருதுகிறேன். ஒழுங்குமுறை விற்பனை சந்தைக் கூடங்கள் மாவட்டங்கள்தோறும் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

நம்முடைய விவசாயிகளிடம் இருக்கக்கூடிய கஷ்டம் என்னவென்றால் எதையாவது சொன்னால் உடனே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இன்னும் பழங்கால முறையில் இருக்கிறார்கள். ஐ.ஆர். 8 போடுங்கள் என்று சொன்னால் எங்களுக்குத் தெரியாததோ என்கிறார்கள். இதன் காரணமாக விவசாய இலாக்கா அதிகாரிகளுக்கு இருக்கிற கஷ்டத்தை நானே பல இடங்களில் அறிந்திருக்கிறேன். ஐ.ஆர். 8 அமோக விளைச்சல் தரும் என்றால் எங்களுக்கு ஜயா போதும் என்பார்கள். சில இடங்களில் ஜயா வேண்டாம், பத்மா கொடுங்கள் என்கிறார்கள். நான் செங்கல்பட்டு மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது அங்கே உள்ளவர்கள் எங்களுக்கு ஐ.ஆர். 8 வேண்டாம், மோட்டாவாக இருக்கிறது என்றார்கள். நான் உடனே ஐ.ஆர். 20 கொடுக்கச் சொல்லிவந்தேன். இப்படி குறைந்த காலத்தில் நல்ல பலன் தரக்கூடிய விதைகள் நம்முடைய மாநிலத்தில் பற்பல மாவட்டங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

புதுமுறையில் விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதற்காகவே அங்கங்கே பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தவும் இந்த அரசு முயன்று வருகிறது. அப்படியும் ஒருசில முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு வருகிறது.

அடுத்து பருத்தி சாகுபடியைப்பற்றிச் சொன்னார்கள். பருத்தி சாகுபடி தீவிர திட்டமாகச் செயல்படுகிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற அளவுக்கு தமிழகத்தில் அதிக பருத்தி உற்பத்தி செய்ய தரமான விதைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. எம்.ஸி. 2, எம்.ஸி. 5, சுஜாதா, பாரதி போன்ற பருத்தி விதைகள் எல்லாம் பயிரிடப்படுகின்றன. வேளாண் மக்களும் இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசின் பெருமுயற்சி காரணமாக மத்திய அரசு இந்த ஆண்டு 67 லட்சம் ரூபாய் இலவசமாக பருத்தி சாகுபடி அபிவிருத்திக்காகக் கொடுத்திருக்கிறது. நான்காண்டு காலம் தொடர்ந்து கொடுக்கவும் சம்மதித்திருக்கிறார்கள். நேற்று





முன்தினம்தான் மத்திய அரசின் அனுமதி கிடைத்தது. உடனடியாக இந்த 67 லட்சம் ரூபாய் பருத்திச் சாகுபடி திட்டத்தை தொடங்குமாறு அதிகாரிகளை நான் கேட்டிருக்கிறேன். இன்னும் கூடப் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். மத்திய அரசு தருகிற உதவியாகட்டும், இந்தோ ஜெர்மன் திட்ட உதவியாகட்டும்—எதுவாக இருந்தாலும் நம்முடைய அரசுதான் பூரணமாக அவற்றைப் பயன்படுத்தி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உருளைக் கிழங்குத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் அங்கே சென்று இரண்டு நாட்கள் தங்கி எப்படிப் பயிரிடுகிறார்கள் என்பதைப் பார்த்து வந்தேன். அந்தப் பகுதியில் உருளைக் கிழங்கு பயிருக்கு கோல்டன் நெமடெட் என்கிற கண்ணுக்குத் தெரியாத பூச்சி வருகிறது. அது 20 ஆண்டுகாலம் உயிரோடு இருக்கக்கூடிய ஒன்றாகும். சென்ற ஆண்டு இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்டின்கீழ் அந்தப் பூச்சியைக் கொல்வதற்கு தஸநித் என்ற மருந்து அடிக்கப்பட்டது. அதன் காரணமாக முந்தைய ஆண்டைவிட பத்துமடங்கு சென்ற ஆண்டு உற்பத்தியாகியிருக்கிறது என்பதை அந்தப் பகுதி விவசாய மக்களே ஒப்புக்கொள்கிறார்கள். மேலும் இந்தத் திட்டத்தை கூனூருக்கும், கோத்தகிரிக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்கிறார்கள். இதில் ஒரு பிரச்சினையை கவனிக்க வேண்டும். இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட்—ஒத்துழைப்புடன் இந்த 46 லட்சம் ரூபாய் பூச்சி மருந்து ஜெர்மன் நாட்டினரால் நமக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆனால் மத்திய சர்க்கார் இதற்குப் போட்டிருக்கிற ட்யூடி 36 லட்சம் ஆகும். இலவசமாக நமக்குக் கிடைத்த 46 லட்சம் ரூபாய் பூச்சி மருந்துக்கு போட்டிருக்கிற வரி 36 லட்சம் ரூபாய்.

(திரு. நா. வீராசாமி—தலைமை.)

இதை நீங்கள் இலவசமாக தள்ளிக் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிக்கொண்டேயிருந்தார்கள். நாங்களும் பிற்பகல் 1-30
அதைக் குறித்து எழுதிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் இனமாகக் கொடுக்கிறார்கள். நாம் 36 லட்சம் ரூபாயை "ட்யூட்டி"யாகக் கொடுக்கிறோம். விவசாயிகளிடமிருந்து ஒரு ஏக்கருக்கு 100 ரூபாய் "டிமான்ஸ்ட்ரேஷன் சார்ஜ்" என்று வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை பல்வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மலைப்பிராந்தியங்களுக்கு 36 கோடி ரூபாய் செலவிடுவதற்காக வேளாண்மைத் துறை அதிகாரிகளும், மற்றவர்களும் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயார் செய்திருக்கிறார்கள். இப்போது நீலகிரியை மட்டும் மலைப்பிராந்தியம் என்று எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசிய பின்னர், கொல்லி மலை, பச்சைமலை, பழனிக்கருகிலுள்ள கொடைக்கானல், ஜவ்வாது மலை, ஏலகிரி மலை போன்றவைகளையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று எழுதி அனுப்பியது மட்டுமல்ல, திட்ட அமைச்சர் அவர்களிடத்திலே உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவர்களும் பரிசீலிப்பதாக சொல்லிச் சென்றார்கள். அது கிடைக்குமென்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, மண்வள ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில் ஆடுதுறைப் பண்ணை இருக்கிறது. நமது மாநிலத்தில் 11 மண்வள ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. நமது மாநிலத்தில் 11 இடங்களில் திட்டம் செயல்படுத்தப்படுவதோடு அதை விரைவுபடுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பிற்பகல் 1-30 மணிக்கு மேலும், பேரவையின் நிகழ்ச்சிகளை நீட்டிக்க, பேரவையின் அனுமதி வழங்கப்படுகிறது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தமிழக அரசு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு "மொபைல் யூனிட்" ஆங்காங்கு கிராமங்களுக்குச் சென்று, தினம் 50 விவசாயிகளின் நிலத்தில் மண் எடுத்து, பரிசோதனை செய்து, அன்று மாலையே தங்கள் கருத்தை வழங்க வேண்டுமென்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பதிவுக் கார்டு கொடுத்து, அதில் நிலத்தின் சர்வே எண், மண் சத்துக் குறைவா, சாம்பல் சத்துக் குறைவா, என்ன சத்து குறைந்திருக்கிறது, என்ன உரம் இட வேண்டும், எவ்வளவு இடவேண்டும் என்பதையெல்லாம் விவசாயிகளுக்குச் செய்து கொடுக்கும் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது மூன்று நடமாடும் நிலையங்கள் அமைக்க முன்வந்திருக்கிறார்கள். இன்னும் வரும். இந்தத் திட்டத்தை தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் அமைச்சரவையிலும் எடுத்துச் சொல்லி, விரைவுபடுத்துவது குறித்து நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

பல்வேறு திட்டங்களையெல்லாம் அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கவனத்தில் கொள்வேன். பூச்சி மருந்து தெளிப்பது, எப்படி தெளிக்கப்படுகிறது என்பதுபற்றியெல்லாம் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற ஸ்ப்ரேயர், டஸ்ட்டர் போன்ற கருவிகள் எல்லாம் சரியாக இயங்குவதில்லை. யாரும் சரியாகப் பயன்படுத்துவதில்லை. இதைப் பற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் மற்ற அமைச்சர்களிடத்திலும் கேட்டேன். நாம் முன்பு 15 சதவீதம் குறைத்துக் கொடுத்தோம். இப்போது 25 சதவீதம் குறைத்துக் கொடுத்தும் அதனால் பயன் இல்லை. ஆங்காங்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று பழுதான கருவிகளை பழுது பார்க்கும் நடமாடும் பழுதுபார்க்கும் நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டேன். முதலில் சில இடங்களில் இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாகச் செய்யலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பழுதுபார்க்க நடமாடும் ஊர்தியை அமைக்க வழிவகை செய்யப்படும்.

அடுத்தபடியாக, மருந்து தெளிப்பது பற்றி உறுப்பினர்கள் சொன்னார்கள். மருந்து தெளிக்கின்ற நேரத்தில் சரியான முறையில் சரியாகக் கலந்து தெளிக்காத காரணத்தால், சிலர் உயிர் இழக்கவும் நேரிடுகிறது. ஆகவே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் பத்து



இருபது பேர்களைத் தேர்ந்தெடுத்து, மருந்து கலப்பது எப்படி, எந்த அளவில் கலப்பது, எந்த முறையில் தெளிப்பது போன்றவற்றிற்கெல்லாம் பயிற்சி கொடுக்கலாம் என்று திட்டம் வகுத்து, அதற்காகும் செலவை சர்க்காரே ஏற்றுக்கொள்ள வழி வகை செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளுடைய பயிர்களுக்காகவும் பல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட திட்டங்கள் பல இருந்தாலும், "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்ற நிலைமையில், இந்தத் திட்டங்களை எல்லாம் முன்னேற்றம் செய்வதற்கு அரிய யோசனை கூறியதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல யோசனைகளை நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ தெரிவித்ததற்கு நன்றிகூறி, அவையெல்லாம் கவனத்தில் கொள்ளப்படும் என்று கூறிக் கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைப் போட்டது திட்டத்தின் வழிவகையிலே முன்னேற்றம் அடைவதற்கு எனக்கு உறுதுணையாக இருக்கின்ற வகையிலே இருக்கிறது. என்றைக்கும் அவை உறுதுணையாக இருப்பதாகக் கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): Now the discussion is over. We can take up voting.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, கோரிக்கை 16-க்கு என்னுடைய வெட்டுத் தீர்மானம் இரண்டாவது போக சாகுபடிக்குப் பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்திலிருந்து விலக்களிக்க வேண்டிய அவசியம் குறித்தது. பதில் இல்லை. "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்று அமைச்சர் அவர்கள் கூறியதால், என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

The cut-motions of Thiruvalargal Alagarsamy and A. R. Marimuthu were by leave withdrawn.

DR. H. V. Hande was not in his seat, and so his cut-motion was deemed to have been wihdrawn.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI): Now the question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 18,87,83,100 under Demand No. 16-Agriculture.

The Demand was put and carried and the Grant was made.

The cut-motion of Thiru K. T. K. Thangamani to Demand No. 39 was by leave withdrawn.

MR. CHAIRMAN (THIRU N. VEERASAMI) : Now the question is—

That the Government be granted a sum not exceeding Rs. 21,55,100 under Demand No. 39 Capital Outlay on Agriculture".

The Demand was put and carried and the Grant was made.

(MR. DEPUTY SPEAKER IN THE CHAIR)

*(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)*

*(இ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை முன் வடிவு எண் 21/1971.)*

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move :—

" That the following amendments made by the Legislative Council to the Motor Vehicles Tamil Nadu Second Amendment Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971), as passed by the Legislative Assembly be taken into consideration. "

*Clause* 6.

(1) In Clause 6, for the expression " section 62-D" substitute the expression " sections 62-D and 62-E."

*Clause* 8.

(2) In Clause 8,

(a) in the marginal heading for the figures and letter " 62-D ", substitute the figures and letter " 62-E ";

(b) for section 62-D proposed to be inserted substitute the following namely :—

" 62-D. *Permission to transfer to be refused in cases where the applicant holds more than ten stage carriage permits.*—(1) Where the holder of stage carriage permits in excess of ten, applies to the transport authority for permission to transfer any stage carriage permit under sub-section (1) of Section 59, the transport authority shall refuse such permission :

Provided that no such refusal shall be made unless the transport authority has been given the applicant a reasonable opportunity of being heard.





[Thiru S. Ramachandran]

(2) All applications for, and proceedings (whether original or by way of appeal) relating to, transfer of any stage carriage permit under sub-section (1) of section 59, sought for by a holder of stage carriage permits in excess of ten and pending before any court, transport authority or officer on the 18th June 1971, and appeal or revision, if any, araising from such pending application or proceeding shall be disposed of under sub-scetion (1).

62-E. *Benami transfers to be refused.*—Where the holder of any stage carriage permit applies for permissin to transfer any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission if it appears to such authority, after making such enquiry as it deems fit, that the transfer sought for is a benami transfer :

Provided that no such refusal shall be made unless the transport authority has given the applicant a reasonable opportunity of being heard. "

MR. DEPUTY SPEAKER : The amendments are before the House for discussion.

THIRU K. T. K. THANGAMANI : The Bill has been returned with these amendments from the Upper House. We were looking forward for the views of Government on the amendments, whether they are welcoming those amendments or not.

MR. DEPUTY SPEAKER : It goes without saying since they have now been moved by a Ruling Party Member.

THIRU K. T. K. THANGAMANI : We would like to know the stand of the Government clearly.

THE HON. THIRU S. RAMACHANDRAN : The amendments given by an hon. Member in the Legislative Council had been accepted by Government and passed in the Legislative Council They are now placed before the Legislative Assembly for the valid consideration of the hon. Members.

* திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று எதிர்க்கட்சியிலே இருக்கும் நான் சொல்லியதை ஆளும் கட்சி நல்லெண்ணத்தோடு கொண்டு வந்ததைப் பாராட்டுகிறேன். இந்தத் தீர்மானத்தைப் பார்த்தால் சந்தேகமான சூழ்நிலையில் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், உச்ச வரம்பு 10 பஸ்கள் இருக்கக்கூடாது என்பது நமது கருத்தாக இருந்தாலும், இன்றைக்குப் பார்த்தால், மீதம் என்ன என்ன கிடைக்கும், என்ன என்ன வழியில் கிடைக்கும் என்பதைப்போல்தான் இருக்கிறது. 62-டி.யிலே சொல்லியிருக்கிறார்கள், அதாவது,

[திருமதி த. ந. அனந்தநாயகி]

Where the holder of stage carriage permits in excess of ten, applies to the transport authority for permission to transfer any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission.

என்று போட்டிருந்தது. பத்து பஸ்களுக்கு மேலே இருந்தால் மேலே இருப்பதை யாருக்காவது விற்றுவிடவேண்டுமென்ற எண்ணத்தில் அவர்கள் முன்வந்தால் கட்டாயமாக அது நிராகரிக்கப் படவேண்டும் என்று இருக்கிறது.

He has got a fundamental right to carry on his trade பத்து பஸ்களுக்குமேல் இருப்பதை அவர்கள் டிரான்ஸ்பர் செய்கிறார்கள் என்றால் அதைத் தடுக்கிறது என்ற நிலைமை இருப்பதால் அவர்கள் அந்தத் தொழிலையே நடத்தமுடியாத அளவுக்குக் கட்டாயம் செய்கிறோம். ஒரு பிரைவேட் லிமிடெட் கம்பெனி இருக்கிறதென்றால் அதிலே 7 டைரக்டர்கள் இருப்பார்கள். டைரக்டர்கள் எல்லோருமே ஒருவருக்கு ஒருவர் பினாமி என்று சொல்லிவிடமுடியாது. ஒரு டைரக்டர் நாயுடு ஆக இருப்பார், ஒரு டைரக்டர் முதலியார் ஆக இருப்பார், ஒரு டைரக்டர் செட்டியாராக இருப்பார். இப்படிப் பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் லிமிடெட் கம்பெனி வைத்திருப்பார்கள். அவர்கள் 20 பஸ்கள் வைத்திருந்தால் ஆறு டைரக்டர்கள் சிலிங் வந்துவிடும் என்பதால் பிரிந்து சென்றுவிடுகிறோம் என்று சொன்னால்கூட அது முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பத்து பஸ்கள் உள்ள கம்பெனியில் உள்ள டைரக்டர்கள் தங்களுக்குள்ளேயே பிரித்துக்கொடுப்பதுகூட மறுக்கப்படுகிறது. தனி மனிதனுடைய பொறுப்பிலே பத்து பஸ்களுக்கு மேலே இருக்கக் கூடாது என்று சொன்னதுபோக, மேலே இருப்பதை உனக்குத் தர மாட்டேன், சரண்டர் செய்துவிடு, நான் அதை எஸ்.டி.ஏ.டி. மூலமாக அல்லது ஆர்.டி.ஓ. மூலமாகக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லக் கூடிய நிலைமையில்தான் இந்தத் திருத்தம் அமைந்திருக்கிறது. லிமிடெட் கம்பெனியில் பத்துப் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் பஸ் தொழிலிலே நல்ல அனுபவம் பெற்றவர்கள் என்பதைப் பார்க்கிறோம்.

Previous experience is a very relevant consideration.

அந்தத் தொழிலிலே அனுபவம் இருந்தால் அது அவர்களைப் பாராட்டக்கூடியது.

பார்ட்னர்ஸ் இருப்பார்கள், 5 ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம். ஆளுக்கு 10 பஸ் வைத்துக்கொள்கிறோம், நாங்கள் பிரிந்து போகிறோம், பிரித்துக்கொள்கிறோம் என்று சொன்னால் ஷெல் நாட் டிரான்ஸ்பர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்குள்ளேயே பிரித்துக்கொள்கிறார்கள் என்றால் அவர்கள் எப்படிப் பினாமியாகிறார்கள் என்பது புரியவில்லை.





[திருமதி த. ந. அனந்தநாயகி]

The Government seems to be obsessed with the term ' benami '.

யார் யாருக்கு பினாமி என்று தெரிந்தால் பரவாயில்லை, யார் யாருக்கு பினாமி என்று தெரியாமலே அவர்கள் பிரித்துக்கொள்வதற்கு முடியாத அளவில் இந்தத் திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். அரசாங்கம் ஆழ்ந்து கவனம் செலுத்தாது கொண்டுவந்திருக்கிறதா, அல்லது யார் மீது கோபமோ, எப்படியும் பிரித்துக்கொள்ள விடக்கூடாது என்று தடுத்து நிறுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் கொண்டுவரப் பட்டிருக்கிறதோ என்று சந்தேகப்படவேண்டிய நிலைமை ஏற்படு கிறது. மனச்சாட்சிக்குத் தெரிந்தும் பினாமியாக இருக்கிறார்கள், அது வேறு. அவர்களைச் சட்டக் கண்கொண்டு கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்தால்தான் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று அடிப்படைச் சட்டமே கூறுகின்றன. பினாமி, பினாமி என்ற வார்த்தையைச் சொல்லிக்கொண்டு அவர்கள் வேறு பினாமிகளை உண்டாக்கிவிடக்கூடிய நிலைமை வரும். பஸ்கார பினாமிகளை விட்டு விட்டு வேறு பினாமிக்களைக் கொண்டுவருகிறார்கள் என்ற நிலைமை ஏற்படும்.

Benamis will not be granted a permit.

என்று எதற்காகப் போட்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

The R.T.A. can refuse if he deems fit, if he makes an enquiry and if it appears to the R.T.A. that he is a benami.

இப்படிப் போட்டிருப்பதால் நாம் குவாசி–ஜூடிசியரி அதிகாரத்தைக் கட்டுப்படுத்திவிடுகிறோம்.

இதிலே இன்னொன்றும் இருக்கிறது. அவர்களுக்கு என்ன சலுகை கொடுத்திருக்கிறார்கள் என்றால், அவர்களைக் கூப்பிட்டு உனக்குச் சலுகை இல்லை என்று சொல்லவேண்டுமென்ற முறையிலே An opportunity should be given to the other person who applies என்று போடப்பட்டிருக்கிறது. ஒருவனைக் கூப்பிட்டு உன்னைத் தூக்கில் தொங்கவிடப்போகிறோம் என்று சொல்வது மாதிரியாக இருக்கிறது. இந்தத் திருத்தம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மந்திரிசபை இதனை அவசரமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள் . . .

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: தலைவர் அவர்களே, கனம் அம்மையார் அவர்கள் "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்று அம்மையார் அவர்கள் பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் என்று சொன்னார்கள், அவர்களுக்குப் பசி வந்துவிட்டதாலே அவர்கள் கொள்கையும் பிரிந்துபோய்விட்டதோ என்னவோ தெரியவில்லை. 10 பஸ்களுக்கு மேலே வைத்திருக்கக்கூடாது என்று அவர்களேதான் முன்பு சொன்னார்கள். அவர்களே நிலத்திற்கு ச்ச வரம்பு கொண்டு வரவேண்டுமென்றெல்லாம் முன்னாலே பேசியிருக்கிறார்கள். சோஷலிஸ சமுதாயம் அமைக்கின்றபொழுது சில வரம்புகள் இருக்கத்தான் செய்யும், அப்பொழுது சில கசப்புகள் இருக்கத்தான் செய்யும், அதையும் சேர்த்துதான் விழுங்கவேண்டும், வேறு வழி கிடையாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இன்னும் நான் விளக்கவேண்டுமென்று நினைக்கிறேன். நான் சொல்வது சமதர்மத்திற்குப் புறம்பானதல்ல. நான்கு டைரக்டர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் நான்கு பேர்களுக்கும் ஒருவருக்கு ஒருவர் பினாமி என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் தொழிலுக்காக ஒன்றாகச் சேர்ந்திருக்கலாம். அவர்கள் எப்படி பினாமியாவார்கள்? பினாமி என்ற போர்வையிலே யார் உண்மையாக அந்தத் தொழிலிலே அனுபவம் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் வெளியே துரத்தப்படுவார்கள், அனுபவமே இல்லாத நமக்கு வேண்டியவர்களைப் புகுத்துவதற்குப் பயன்படுத்துகின்றது. நாங்கள் சமதர்மக் கொள்கையிலே என்றைக்குமே பின் வாங்கியதில்லை. பத்து பஸ்களுக்கு மேலே இருக்கக்கூடாது என்று கொண்டுவந்தீர்கள், இப்பொழுது இந்தத் திருத்தத்தை யார்மீது கோபமாக இருக்கின்றார்களோ கொண்டுவந்திருக்கிறார்கள்..........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : யார்மீதும் கோபமில்லை. நாட்டுமக்களுடைய நன்மைக்காகத்தான் செய்கின்றோம். எனவே அம்மையார் அவர்கள் தயவுசெய்து உள்நோக்கம் கற்பிக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் திருத்தத்தைப் படித்தால் ஒருவேளை அப்படி வந்திருக்கும் என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது என்று சொன்னேனே தவிர நான் அப்படிப்பட்ட எண்ணத்திலே சொல்லவில்லை. பெண்சாதி புருஷனுக்கு பினாமியில்லை என்று ஹைகோர்ட்டிலே தீர்ப்பு ஆகியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டிலும் இருக்கிறது. அப்படி இருக்கும்போது டைரக்டர்கள் ஒருவருக்கொருவர் பினாமியாற் ஒரு பார்ட்னர் இன்னொரு பார்ட்னருக்கு பினாமியா? இப்படித் திருத்தம் கொண்டு வந்திருப்பதாலே அந்தத் தொழிலிலே அனுபவம் இல்லாதவர்கள் புகுந்து பின்னால் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இது ரொம்பக் கடுமையானது.

It is even unconstitutional

என்ற நிலைகூட ஏற்படலாம். அமைச்சர் அவர்கள் சட்ட இலாகாவை வைத்துப் பரிசீலனைசெய்யவேண்டும். அவர்களுக்கு நீதியே மறுக்கப்படுவது மாதிரி இருக்கிறது. சமதர்மக் கொள்கைக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்ற சந்தேகம் பசியாக இருந்தாலும் நான் இதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 62-இ 48-ஏ என்று இரண்டு கிளாஸ்கள் போட்டிருக்கிறார்கள்.

" 48-A—Notwithstanding anything contained in this Act, a Regional Transport Authority shall refuse to grant or renew a stage carriage permit if it appears to such authority, after making such enquiry as it deems fit, that the application for such permit is benami " என்று இருக்கிறது.







62–D– Where the holder of any stage carriage permit applies for permission to transfer under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission if it appears to such authority. After making such enquiry as it deems fit, that the Transfer sought for is a benami transfer

என்று கொண்டுவந்திருக்கிறார்கள்.

" Permission to transfer under sub-section (1) of Section 59 "

என்பதையும் 48-லேயே சேர்த்துவிடலாம்.

" Refuse to grant or renew a stage permit or refuse to transfer under sub-section (1) of section 59 "

என்று போட்டுவிட்டால் எல்லாம் 48-ஏ யிலேயே வந்துவிடும். எதற்காக தனி ஒரு செக்ஷன்? பினாமிக்கு ஒரு ஒரு செக்ஷன் என்று நான்கு செக்ஷன்கள் இருப்பதை ஒன்றாகப் போட்டுவிடலாம். சமதர்ம அடிப்படையிலே உச்சவரம்பைக் கொண்டுவருகிறோம் என்றால் எவ்வளவு சுமுகமாக அதைக் கொண்டுவருகிறோமோ அவ்வளவு நல்ல பயன் ஏற்படும். உச்சவரம்பு, உச்சவரம்பு என்று சொல்லிக்கொண்டு மிச்ச பஸ் பெர்மிட்டுகள் வழங்குவதிலே அக்கறைகாட்டினால் நாமே சிக்கல்களை ஏற்படுத்திக்கொள்கிறோம். எனவே, மீண்டும் இதை ஆர அமர யோசித்துச் செய்யவேண்டும். உண்மையான பினாமி யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களைக் கண்டுபிடிப்பது சுலபமான வேலையல்ல. இன்றைக்குச் சட்டமிருக்கிறது, பல்லாயிரக் கணக்கான வக்கீல்கள் இருக்கிறார்கள் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். அதற்குப் பிறகு ரிட் அப்பீல் இருக்கிறது, எல்லாம் இருக்கிறது. நீங்கள் போட்டிருப்பது புதிய பினாமி என்பதைச் சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மேலவைக்குச் சென்று இந்தத் திருத்தத்தோடு வந்த மசோதா ஏற்கனவே இருந்த கொள்கையை இன்னும் அழுத்தமாக நிறைவேற்றுகின்ற முறையில் இங்கே வந்திருக்கிறது என்று கருதுகிறேன். பினாமி டிரான்ஸ்பர்கள் ஏதாவது ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதிக்குப் பிறகு டிரான்ஸ்பர் மனுக்கள் கொடுத்தால் நிராகரிக்கப்பட வேண்டுமென்ற திருத்தத்தை நான் கொடுத்திருந்தேன். அப்பொழுது அம்மாதிரியான செயல்களுக்கெல்லாம் அரசு இடம் கொடுக்காது என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்ட காரணத்தினால் நான் அதை வற்புறுத்தவில்லை. ஏப்ரல் 1-ம் தேதிக்குப் பிறகு, என்றைக்கு முதலமைச்சரவர்கள் இந்த சீலிங் வரும் என்று சொன்னார்களோ அதற்குப் பிறகு ஏதாவது டிரான்ஸ்பர் செய்ய முயற்சித்திருந்தால் அவை நிராகரிக்கப்படும் என்ற நம்பிக்கையோடு இப்பொழுது இந்தச் சட்டத்திலேகூட வந்த ஊனம் என்னவென்றால் 10 பஸ்களுக்கு அதிகமாக வைத்திருக்கக்

[திரு. கே. டி. கே. தங்கமணி]

கூடாது என்று சொல்லும் நேரத்திலே பத்து பஸ்களினுடைய பர்மிட் முடிந்த பிறகு, 10-க்கு மேல் இருப்பவைகளுக்கு முடிந்த பிறகு அவைகளைச் சரண்டர் செய்யவேண்டுமென்று இதிலே குறிப்பிட்டிருப்பதால் அவர்கள் சரண்டர் செய்யாமல் அந்தப் பஸ்களையெல்லாம் பினாமியாக மாற்றுவதற்குச் சிறிய லூப்ஹோல் இருந்தது: அதைப் பூர்த்தி செய்யும் முறையில்தான் மேலவையிலே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்.

இருந்தாலும் என்னால் ஒரு விஷயத்தைப்பற்றிக் கூறாமல் இருக்க முடியவில்லை. உதாரணமாக ஏற்கெனவேயிருந்த 62-டி இருக்கிறதே அந்த 62-டி என்பதும் அதேபோல் 62-இயும் அதே பதங்களைக் கொண்டிருக்கிறது. ஆகவே இரண்டையும் இணைத்து எந்த முறையிலே இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருப்பார்கள் என்பது ஒரு நல்ல விஷயமாக இருந்திருக்கும். இப்பொழுது 62-டியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவேயிருந்த 62-டியினுடைய அந்தப் பகுதியையும் அதற்குமேல்

whether the holder of any stage carriage permit applies for permission to transfer under sub-section (1) of Section 59, the transport authority shall refuse such permission if it appears to such authority, after making such enquiry as it deems fit, that the transfer sought for is a benami transfer.

Provided that no such refusal shall be made unless the transport authority has given the applicant a reasonable opportunity of being heard.

(2) All applications for, and proceedings (whether original or by way of appeal) relating to transfer of any stage carriage permit under sub-section (1) of section 59, sought for by a holder of stage carriage permits in excess of ten and pending before any court, transport authority, or officer on the 18th June 1971, and appeal or revision, if any, arising from such pending application or proceeding shall be disposed of under sub-section (1).

என்று போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறையிலே போட்டது பொருத்தம் என்றே நான் நினைக்கிறேன்.

பொதுவாக, இந்த 10 பஸ்களுக்குமேல் இருக்கும் அந்தப் பஸ் பர்மிட் ஹோல்டர்களையெல்லாம் அவர்கள் மேற்கொண்டு பஸ்களை வைத்துக்கொண்டு காரியம் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அது தடுக்கப்படவேண்டும். புத்திசாலித்தனமான முதலாளிகளாகயிருந்தால் 10 பஸ்களுக்குமேல் இருக்கும் மற்ற பஸ் பர்மிட்ஸ் பூராவையும் சரண்டர் செய்து அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று ஆலோசனை கூறினால் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இறுதியாக, ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதைப்போல, பினாமி சம்பந்தமாக நல்ல முறையிலே இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அந்த பினாமி டிரான்ஸ்ஃபர் எந்த முறையிலேயும் வரக்கூடாது என்று எச்சரிக்கையாகப் போட்டிருப்பது நல்லது. ஏனென்றால் அப்படிப்பட்ட காரியங்கள் நிறைய நடக்கின்றன. பினாமி என்றால் வெளியிலேயிருப்பவர் பணம் வைத்து பஸ் ஓட்டுவது என்பது ஒரு புறமிருக்க, இந்தச் சட்டத்தை ஏமாற்றுவதற்காக தானே நடத்தும்





கம்பெனியைத் தன் பெயருக்குப் பதிலாக தனக்கு வேண்டியவர்களின் பெயருக்கு மாற்றும் அந்த அம்சம் இருக்கிறதே அதன் மூலம் இந்த உச்சவரம்பைக் கண்டிப்பாக மாற்றிவிடக்கூடாது என்ற முறையிலே வந்திருக்கிறது. இது பொருத்தமான திருத்தம் என்றுதான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்த முறையிலே இன்னும் கொஞ்சம் புத்திசாலித்தனமாக மேலவையில் கொண்டுவந்து அனுப்பியது பாராட்டத் தக்கது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய கட்சியின் சார்பில் இந்தத் திருத்தம் வரவேற்கத்தக்கது என்று கூறி முடிக்கிறேன்.

* THIRU R. PONNAPPA NADAR: Sir, I would wish to support the learned arguments advanced by Thirumathi Anandanayaki on the floor of this House. This amendment which has come from the Upper House and the Bill in its amended form, I would like to point out to the House, is violative of Article 19 (g) of the Constitution. Article 19 (g) empowers or authorises a person to practise any profession or carry on any occupation, trade or business. So far as that aspect is concerned it is a fundamental right guaranteed by the Constitution. The State Legislature has got power to impose reasonable restrictions. Now whether this would come within the clause 'reasonable restriction' is a matter which has to be considered.

It has been argued and it has been represented with force that a 'person' as such has not been defined in the Motor Vehicles Act. So the definition that is given under the General Clauses Act will have to be taken as the criterion for matter of interpretation of 'person'. I say a 'person' may include Joint Hindu Family, Companies incorporated or unincorporated and also partnership. Any corporate body would come within the ambit of this definition of 'person'. In the present Bill you say that a 'person' if he is an individual can hold 10 buses but if he is a member of a company, Joint Hindu Family of other Corporate Body, that right is deprived and the theory of benami has been imported into this legislation. It would be far from correct if I say that the theory of benami which is put forward in this piece of legislation will be all right in the legal context. We shall not hazard into conclusion, because we can not say that one partner is holding some benefit on behalf of another; if the funds belonging to one person is advanced for the transfer or purchase of another, we can come to the conclusion that it is benami transaction. Now the discretion, which has been vested in the R.T.A. for valid purpose, has been whittled down by this amendment.

So, I say that this amendment is far reaching and this will affect the fundamental right of a citizen. I am sure that this will not come under the term reasonable restriction. That is my humble submission.

You have defined company or H.U.F. under the Land Ceiling Bill. There has been a certain principle and 'person' has been defined and he could hold only a limited extent of land and other

members also could hold land only to a limited extent. If any member comes into being another division is also contemplated under the Land Ceiling Act. Why not such a provision be imported so far as this piece of legislation is concerned ? It should not be termed that we are all reactisnaries and that we are all for support to bus-owners. If there is any such feeling in the mind of the Hon. Minister, I am sure that feeling will have to be dispelled here and now because we will not hold brief for any capitalist.

This Bill has been brought into the House so that there shall not be monopoly of trade. With that good intention the Bill had been orginally brought forward in the House. This is now offset by the present amendment. Therefore it would be fit and proper for the Hon. Minister to consider the arguments we have advanced against the amendment. This is the humble submission which I wish to make so far as this piece of legislation is concerned.

* <u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டது என்பதை அறிந்துகொண்டிருந்தால் இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் இதை எல்லோரும் முழுமனதோடு வரவேற்றிருக்க வேண்டியிருக்கும். இந்தத் திருத்தமே 10 உரிமங்களுக்குமேல் வைத்திருக்கும் நிறுவனங்கள் அவற்றை மாற்றிக் கொள்வது கூடாது என்ற திருத்தம்தான். ஆகவே இந்த உச்ச வரம்புச் சட்டத்தை வரவேற்று, பாராட்டி, இதற்காக வருந்தி வருந்தி அழைத்திருக்கின்ற எதிர்க்கட்சியினர் இந்தத் திருத்தத்தையும் வரவேற்றிருந்தால் உண்மையாகவே இந்தச் சட்டத்தின் நோக்கத்தை வரவேற்றிருக்கிறார்கள் என்று பொருள்.

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அரசியல் சட்டத்தினுடைய 19-வது ஜி பிரிவின்படி சரியாக வருமா என்று எடுத்துச் சொன்னார்கள். சட்டத்தைப் பொறுத்தவரை இரண்டு பக்கமும் வாதாடலாம் என்பதை வழக்கறிஞராக இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்
பிற்பகல் 2-00. அவர்கள் நன்றாக உணருவார்கள். இன்னும் சொல்லப் போனால் மோட்டார் வாகனச் சட்டத்தின் 4-ஏ பிரிவையே எடுத்துவிட வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் வரை முதலாளிகள் போய்க் கொண்டிருக்கிறார்கள்

மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது இதிலே இருக்கின்ற உள்ளக் கிடக்கையைத் தெளிவாக எடுத்து விளக்கியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பார்ட்னர்ஷிப் கம்பெனியாகவோ, ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனியாகவோ நிறுவனங்களாக வைத்திருக்கிறவர்கள் பத்து பஸ்களுக்கு மேல் வைத்திருந்தால், 50 பஸ்கள் வைத்திருந்தால் அவர்கள் அனுபவத்தை வைத்துக் கொண்டு டைரக்டர்கள் ஆளுக்கு 10 என்று வைத்துக் கொள்ளக்கூடாதா என்று கேட்டார்கள். அதிலேதான் நமக்கும் அவர்களுக்கும் இடையே இருக்கிற வித்தியாசம். அது தான் அவர்களுடைய சோஷலிசத்திற்கும், நம்முடைய சோஷலிசத்



திற்கும் இடையே இருக்கக்கூடிய வித்தியாசம். எந்தக் குடும்பங்களுடைய, எந்தக் கரங்களுடைய பொறுப்பில் பெரிய ஏகபோகம் கூடாது என்று கருதுகிறோமோ அந்தக் கரங்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அப்படியானால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியமே இல்லை. இந்தச் சாக்கரைப் பொறுத்தவரை அந்தக் குவியலின் ஏகபோகம் இருக்கக் கூடாது என்றுதான்...........

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : சிலரின் ஏகபோகத்திலிருந்து விடுபட வேண்டுமென்பதில் அவர்களைவிட எங்களுக்கும் அக்கறை இருக்கிறது. ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் ஒரு நிறுவனத்தில் டைரக்டர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

Direcors from various sections of Society, may be drawn from cross sections of society.

முஸ்லீம்கள் இருக்கலாம், இந்துக்கள் இருக்கலாம், கிறித்தவர்கள் இருக்கலாம், இந்து மதத்தைச் சார்ந்தவர்களும் இருக்கலாம். அது எப்படி ஏகபோகமாகும்? வேறு வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள், வேறு வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து தொழில் நடத்துவதில்லையா என்றுதான் கேட்கிறேன்.

THIRU M. A. LATHEEF : The Minister has sufficiently clarified the position that the word used here ' person ' means the holder of a permit and ' person ' includes not only a person or an individual but also a group of individuals, for example, partnership, company and such other groups. Therefore, there has been clarification with regard to that. But the sections have not been happily worded and the construction also is not quite all right. For example here in Section 62-D permission for transfers to be refused in case where the applicant holds more than 10 stage carriage permits, where the holder of stage carriage permits in excess of 10 applies to the transport authority,, ' applies ' is the word used. ' Holder ' means sigular and it may be a collective singular or an individual singular. It may denote both a single person and a group of persons. Here the word 'applies ' indicates only a singular. So, here is some anomoly in the wording of the section. Therefore, in order to remove that, in order to give the full implication that ' holder' means not only an individual, but also a group of individuals, the words that are used in the section should be suitably changed. That is my submission Otherwise, here will be great loopholes and as my lawyer friend submitted, there will be great avenues for us to argue in the Court.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, ஹோல்டர் ஆப் பர்மிட் என்பது சிங்குலர், தனி ஒருவரைத்தான் குறிக்கும் என்று சொன்னார்கள். பர்மிட் கொடுக்கிறபோது நிறுவனங்களாக இருந்தால் நிறுவனம் என்றும், தனியொருவர் பெயரில் இருந்தால் அவருடைய பெயரிலும் தான் கொடுக்கப் படுகிறது.

[திரு. ச. இராமச்சந்திரன்] 1971 ஜூலை 24]

'holder' of a permit means, an individual, a company or a partnership, but it does not necessarily mean it denotes only singular meaning.

இன்னும் ஒரு கருத்தையும் இங்கு பேசும்போது சொன்னார்கள். ஒரு கம்பெனியில் பத்து பேர் டைரக்டர்களாக இருந்தால் ஆளுக்கு பத்து பஸ்களை வைத்துக்கொண்டால் மிச்சம் என்ன கிடைக்கும் என்று கேட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரை மக்களுக்கு என்ன கிடைக்கும் என்றுதான் பாக்கிறோம். பஸ் முதலாளிகளுக்கு மிச்சம் என்ன கிடைக்கும் என்று அவர்கள் பார்க்கிறார்கள். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்றார்கள். பத்து பர்மிட்டு களையும் காப்பாற்ற வேண்டுமென்பதிலே அவர்களுக்கு அக்கறை இருக்கிறது. எது பறந்தாலும் பறக்கட்டும், பஸ் முதலாளிகளுடைய பர்மிட் பறந்து விடக்கூடாது என்பதிலே அவர்களுக்கு அக்கறை இருக்கிறது

நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதுபோல் இதிலே லூப் ஹோல்ஸ் இல்லாத வகையில் கொண்டுவரவேண்டுமென்ற அடிப் படையில்தான் இது அமைந்திருக்கிறது. மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதைத் தடுக்கத்தான் இது கொண்டுவரப்பட்டிருக் கிறது. சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள திறமை மிகுந்த வழக்கறிஞர்கள் எல்லாம் பஸ் முதலாளிகளுக்குக் கிடைப்பது வாடிக்கை. திறமை மிகுந்த வழக்கறிஞர்களைப் பயன்படுத்தி இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கொள்கையைத் தவறாகப் புரிந்து கொண்டதாகக் கூறினார்கள்.

'Concentration of economic power with a few hands

பொருளாதார ஆதிக்கம் ஒருசிலரிடத்தில் குவியக்கூடாது, பரவலாக வேண்டும் என்பதைத்தான் சமதர்மத் திட்டமாக வைத்திருக்கிறோம்.

இந்து குடும்பம் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் தெளி வாகச் சொல்ல விரும்புவது இந்தப் பிரிவின் மூலம் ஏற்கனவே கொண்டு வந்த நோக்கத்தைத்தான் நிறைவேற்றுகிறோம். அந்த நோக்கத்தை வரவேற்றிருக்கிறார்கள். ஆகவே, இதை முழு மன தோடு வரவேற்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : One amendment, Sir, with regard to Section 62-D...........

THIRUMATHI T.N. ANANDANAYAKI : The hon. Member has not moved any amendment previously. Now how can he move?

THIRU M.A. LATHEEF : As a suggestion, I am submitting it for the consideration of Government.

" Where the holder of stage carriage permits in excess of ten, applies or apply to the transport authority, as the case may be, for permission to transfer................Therefore that may be' added.



[1971 ஜூலை 24

MR. DEPUTY SPEAKER : The question is :

" That the following amendments made by the Legislative Council to the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971) as passed by the Legislative Assembly be taken into consideration ".

*Clause 6*

(1) In Clause 6, for the expression " Section 62-D" *substitute* the expression " sections 62-D and 62-E "

*Clause 8*

(2) in clause 8—

(*a*) in the marginal heading for the figures and letter " 62-D ", *substitute* the figures and letter " 62-E "

(*b*) for section 62-D proposed to be inserted, *substitute* the following, namely :—

" 62-D. *Permission to transfer to be refused in cases where the applicant holds more than ten stage carriage permits.*—(1) Where the holder of stage carriage permits in excess of ten, applies to the transport authority for permision to transfer any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission ;

Provided that no such refusal shall be made unless the transport authority has given the applicant a reasonable opportunity of being heard.

(2) All applications for, and proceedings (whether original or by way of appeal) relaing to, transfer of any stage carriage permit under sub-section (1) of section 59, sought for by a holder of stage carriage permits in excess of ten and pending before any Court, transport authority or officer on the 18th June 1971, and appeal or revision, if any, arising from such pending application or proceeding shall be disposed of under sub-section (1).

62-E. *Benami transfers to be refused.*—Where the holder of any stage carriage permit applies for permission to transfer any stage carriage permit under sub-section (1) of section 59, the transport authority shall refuse such permission if it appears to such authority ; after making such enquiry as it deems fit, that the transfer sought for is a benami transfer :

Provided that no such refusal shall be made unless the transport authority has given the applicant a reasonable opportunity of being heard. "

The motion was put and carried, and the amendments made by the Legislative Council to the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971) as passed by the Legislative Assembly were taken into consideration.

MR. DEPUTY SPEAKER : The question is :

" The amendments made by the Legislative Council to the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971, (L.A. Bill No. 21 of 1971) be approved."

The motion was put and carried and the amendments were approved.

MR. DEPUTY CHAIRMAN : The question is :

" That the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A.Bill No. 21 of 1971) as amended be passed. "

The motion was put and carried, and he Bill, as amended, was passed.

## (3) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழக சட்ட மேலவையின் மாண்புமிகு தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வந்துள்ளது என இப்பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்.

கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் சட்ட மேலவையில் திருத்தமேது மின்றி 21—7—1971-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றன :—

(1) 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1971).

(2) 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதி மன்ற (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1971).

(3) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை விடுமுறைகள்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1971).

மேலும், தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1971) 21—7—1971-ம் நாளன்றும், தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1971) 22—7—1971-ம் நாளன்றும் சட்ட மேலவையில் ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை ஏதும் செய்யப் படவில்லை என்றும் செய்தி வந்துள்ளது.

பிற்பகல் 2-00. பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று ஜூலை 26-ம் நாள் திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.



## (9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

' Nil. '

### *B. Reports, Notifications and other papers.*

167. Erratum issued with Roc. No. 196291/69-P1, dated the 4th March 1970, to the notification relating to exclusion of Karadikuppam area for constitution of a separate panchayat.

168. The Performance Budget of the Agriculture Department for the year 1971-72.

@ 169.Policy Note on Demand No. 21—Cinchona (Tamil).

£ 170. Report of the Committee on Estimates on State Guest Houses maintained by the Public Department.

@ Despatched to Members on 22nd July 1971.

£ Laid on the Table of the House on 23rd July 1971.

## இணைப்பு 1.

[9-ம் பக்கத்தில் 416-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1970-71, நடப்புக் கல்வி ஆண்டில் 3—7—71 வரை அனுமதி அளிக்கப்பட்ட புதிய உயர்நிலைப்பள்ளிகளின் மாவட்ட வாரியான விவரங்கள் கீழ்வருமாறு :—

| | 1970-71 | | | 1-6-71 முதல் 3-7-71 வரை. | | |
|---|---|---|---|---|---|---|
| | அரசு பள்ளிகள். | நகராட்சி பள்ளிகள். | தனியார் பள்ளிகள். | அரசு பள்ளிகள். | நகராட்சி பள்ளிகள். | தனியார் பள்ளிகள். |
| சென்னை | — | 1 | — | — | 1 | 1 |
| செங்கற்பட்டு | 3 | — | — | 2 | — | 1 |
| தென்ஆற்காடு | 3 | — | — | 1 | — | 1 |
| தஞ்சாவூர் | 6 | — | 2 | 1 | — | 2 |
| மதுரை | — | — | 1 | — | — | — |
| ராமநாதபுரம் | 1 | — | 1 | 2 | — | 4 |
| திருநெல்வேலி | 2 | — | 3 | 1 | — | 2 |
| வடஆற்காடு | 5 | — | 2 | 5 | — | — |
| சேலம் | 2 | — | — | 2 | 2 | — |
| தர்மபுரி | 1 | — | — | 2 | — | — |
| திருச்சிராப்பள்ளி | 5 | — | — | 2 | — | — |
| கோயம்பத்தூர் | 4 | — | 3 | 4 | — | 2 |
| நீலகிரி | 1 | — | — | — | — | — |
| கன்னியாகுமரி | 3 | — | — | — | — | — |

1971 ஜூலை 24]

## இணைப்பு 2.

[23-ம் பக்கத்தில் 426-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தவணைக்கொள்முதல் முறையில் மீனவர்களுக்காக மீனளத் துறையால் கட்டப்பட்ட மீன்பிடி விசைப்படகுகள் ஒதுக்குவது குறித்து முன்னர் இருந்த நடைமுறையை அரசு ஆராய்ந்து 1970-ஆம் ஆண்டு மே மாதம் கீழ்க்காணும் திருத்த நடைமுறை ஒன்றை வரையறுத்தது :—

(1) மண்டபத்திலுள்ள இந்திய-நார்வே திட்டத்தின் கீழுள்ள படகு கட்டும் நிலையம் உள்பட துறையின் படகு கட்டும் நிலையங்களில் ஒவ்வோராண்டும் கட்டப்பட்டு ஒதுக்கீட்டிற்காகக் கிடைக்கிற 30 அடி, 32 அடிப் படகுகள், பர்மா, இலங்கை அகதிகளுக்கும், வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கும் 5 சதவீதம் ஒதுக்கப்பட்ட பிறகு, சென்னை, செங்கல்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய ஏழு கடலோர மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் முடிவெடுக்கப் படாத மனுக்களின் எண்ணிக்கையின் விகிதாச்சாரப்படி ஒதுக்கப் படும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவ்வாறு ஒதுக்கப்பட்ட படகுகள், படகு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கும், படகு ஒதுக்கப் படாத கிராமங்களுக்கும், பயிற்சியாளர் தொகுதிக்கும், பொதுத் தொகுதிக்கும் கீழே காணும் விகிதாச்சாரப்படி மேலும் பகிர்ந்தளிக்க படும் :—

(அ) படகு வழங்கப்பட்ட கிராமங்கள்
1. பயிற்சியாளர் தொகுதி 25 சதவீதம்.
2. பொதுத் தொகுதி 25 சதவீதம்.

(இ) படகு வழங்கப்படாத கிராமங்கள்
1. பயிற்சியாளர் தொகுதி 25 சதவீதம்.
2. பொதுத் தொகுதி 25 சதவீதம்.

(2) மனுக்கள் பதிவு செய்யப்பட்டதன் முன்னுரிமைக்கு இணங்க படகுகள் இதுவரை ஒதுக்கப்பட்டு வந்ததற்கு மாறாக ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக படகுகள் வழங்கப்பட்ட, வழங்கப்படாத கிராமங்களின் கீழ் பயிற்சியாளர் தொகுதி, பொதுத் தொகுதி விண்ணப்பதாரர்களுக்குப் படகுகள் ஒதுக்குவதற்காகச் சீட்டுக் குலுக்கல் நடத்தப்படும்.

(3) 30 அடி, 32 அடிப் படகுகளுக்காக இரண்டு தொகுதி மனுக்களையும் ஒன்று சேர்த்து ஒரு பொதுச்சீட்டுக் குலுக்கல் நடத்தப்பட வேண்டும். 30 அடிப் படகிற்கு மனுச்செய்தவருக்கு சீட்டுக் குலுக்கல் மூலம் 32 அடிப் படகு கிடைத்திருந்து அல்லது 32 அடிப் படகிற்கு மனுச் செய்தவருக்கு சீட்டுக் குலுக்கல் மூலம் 30 அடிப்படகு கிடைத்திருந்து சீட்டுக்குலுக்கல் மூலம் ஒதுக்கப்பட்ட படகை அவர் மறுப்பாராயின் தகுதி வாய்ந்த மனுக்களின் பட்டியலிலிருந்து அவருடைய மனு நீக்கி விடப்படும்.



1971 ஜூலை 24]

(4) ஒவ்வொரு மாவட்டத்திலும் மனுதாரர்களுக்குப் படகு ஒதுக்குவதற்காகத் தனியாக அந்தந்த மாவட்டத்தின தலைமையிடத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையிலும், சம்பந்தப்பட்ட வட்டார மீனளத்துறைத் துணை இயக்குநர், அம்மாவட்டத்திலுள்ள மாநில மீனளத்துறை ஆலோசனை வாரிய உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஆகியோர் முன்னிலையிலும் படகுகள் ஒதுக்குவதற்கான சீட்டுக்குலுக்கல் நடத்தப்படும்.

The Government reviewed the procedure laid down earlier for allotment of mechanised fishing boats, constructed by the Fisheries Department, to the fisermen groups on hire purchase basis and prescribed the following revised procedure in May 1970 :

(i) The number of 30 footer and 32 footer boats constructed in the departmental boat building yards including the one at the Indo-Norwegian Project, Mandapam, every year and available for allotment, after reservation of 5 per cent of the boats to the special categories, namely Burma and Ceylon repatriaes and displaced goldsmiths, be allocated to the seven marine districts of of Madras, Chingleput, South Arcot, Thanjavur, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari in the proportion of number of pending applications from each district. The number of boats so allocated to each district be furher allocated to the covered and uncovered villages and the Trainee and General Groups in the following proportion :

(a) *Covered Villages*—

(i) Trainee Group—25 per cent.

(ii) General Group.—25 per cent.

(b) *Uncovered Villages*—

(i) Trainee Group—25 per cent.

(ii) General Group.—25 per cent.

(ii) Lots be drawn for allotment of boats among the applications in the trainee and general groups under covered and uncovered villages separately in each district, instead of allotting the boats according to seniority of registration of applications as hitherto.

(iii) A common lot should be drawn both for 30 footer and 32 footer boats by combining both the sets of applications and if any person who has applied for 30 footer boats gets a 32 footer boat or *vice-versa* in the lot and if he refuses to take the boat allotted as per the lot, his application should be deleted from the list of deserving applications.

(iv) Lots for allotment of boats among the applicants in each District be drawn separately at each district headquarters under the Presidentship of the Collector of the district concerned and in he presence of the concerned Regional Deputy Director of Fisheries, the members of the State Fisheries Advisory Board in the District and the applicants concerned.

## இணைப்பு 3.

[40-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## 1971–72-ம் ஆண்டு வேளாண்மைக் கோரிக்கை பற்றிய குறிப்பு.

### தோற்றுவாய்.

"கோரிக்கை 16—வேளாண்மை" யின் கீழ் ரூ. 18,87,83,100-க்கு மேற்படாத ஒரு தொகையையும், "கோரிக்கை 39—வேளாண்மை மூலதனச் செலவு" என்னும் தலைப்பின்கீழ் ரூ. 21,55,100-க்கு மேற்படாத ஒரு தொகையையும் அரசுக்கு வழங்குமாறு இப்பேரவையை வேண்டிக்கொள்கிறேன்.

1970–71-இல் அரசு நிறைவேற்றிய முக்கியமான வேளாண்மைத் திட்டங்களில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்த ஆய்வுரை அடுத்துவரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளது. மாநில முழுமைக்குமான வளர்ச்சிக் கொள்கையின் ஒரு சிறப்புக் கூறாக வேளாண்மை ஒருங்கே வளர்ந்திட குறிப்பாகவும் சிறப்பாகவும் அரசு நாட்டம் செலுத்தி வந்துள்ளது. உழவர்தம் பொருளாதார நிலையை மேம்படுத்தும் குறிக்கோளுடன் கொள்கைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 1970–71-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் உணவு தானியங்களின் மொத்த உற்பத்தியளவு 70.71 லட்சம் டன் அளவை எய்தியுள்ள மகிழ்ச்சியான செய்தியை இப்பேரவையினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது, நாம் முன்னெருபோதும் எய்தியிராத சாதனையாகும். இந்த மொத்த உற்பத்தியளவில் நெல் 53.03 லட்சம் டன்களும், சிறு தானியங்கள் 16.03 லட்சம் டன்களும், பருப்பு வகைகள் 1.65 லட்சம் டன்களுமாகும். இந்த உற்பத்திப் பெருஞ் சாதனையால் நம் மாநிலம் தன்னிறைவு பெற்றுள்ளதோடு உபரி இருப்பும் ஓரளவிற்குக் கிட்டியுள்ளது. வேளாண்மைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைவரது தொடர்ந்த முயற்சிகளின் விளைவாலும், அவர்கட்கு ஆதரவாக அரசு நல்கும் உதவிகளாலும் 1972-ஆம் ஆண்டில் மொத்த உணவு தானிய உற்பத்தி 73 லட்சம் டன்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, வேளாண்மையைப் பொறுத்தவரையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை உபரி வரவு-செலவுத் திட்டம் என்றே சொல்லலாம். 1971–72-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்களின் பொதுக் கூறுகளும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.



### பருவ மழை நிலைமைகள்.

1970–71-ஆம் ஆண்டில், தென் மேற்கு பருவ மழை, சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலும் இயல்பான அளவுக்கு மேல் பெய்தது; இவ்வாறே, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் இயல்பான அளவிற்கு மேலாகப் பெய்தது; மதுரை மாவட்டத்தில் பெரும்பாலும் வழக்கமான அளவில் ஏனைய மாவட்டங்களில் மழை அளவு வழக்கத்தை விடக் குறைந்திருந்தது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மழையளவு பெரிதும் குறைந்தது. இக்கால அளவில் மாநிலத்தின் சராசரி மழை அளவு 307.3 மி.மீ.-யாக இருப்ப மாநில முழுமைக்கும் பதிவான சராசரி மழை அளவு 318 மி.மீ.-யாகும். இவ்வாறு சராசரி மழையளவு சற்றே உயர்ந்துள்ளதைக் காணலாம். வடகிழக்குப் பருவ காலத்தின்போதும்கூட, இராமநாதபுரம், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில், தொடர்ந்து போதுமான அளவிற்கும் குறைந்தே மழை பெய்தது. இக்கால அளவில் மாநிலத்தின் சராசரி மழையளவு 449.7 மி.மீ.-யாக இருப்ப மாநில முழுமைக்கும் பதிவான மழையளவு 416.1 மி.மீ. (தற்காலிக புள்ளி விவரம்) ஆகும். இவ்வாறு சுமார் 7 சதவீதம் மட்டுமே மழையளவு குறைந்தது.

### உணவு தானிய உற்பத்தியளவு.

தமிழ் நாட்டில், வேளாண்மைத் துறையில் கடந்த மூன்றாண்டுகளில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. "பசுமைப் புரட்சி"க்குக் கட்டியங் கூறும் வகையில் யுகத்தில் அடியெடுத்து வைத்துள்ளோம் என்றும் வேளாண்மைத் துறையில் பெரு முன்னேற்றம் கண்டுள்ளோமென்றும் கூறினுல் அது மிகையாகாது. 1968–69-ல் உணவு தானிய உற்பத்தியில் நாம் எய்திய சாதனை 51.05 லட்சம் டன்னாகும். 1969–70-ல் உணவு தானிய உற்பத்தி 62.61 லட்சம் டன் அளவை எட்டிற்று. 1970–71-ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் 67 லட்சம் டன்கள் உணவு தானிய உற்பத்தி செய்வதென்று குறிக்கோள் ஒன்று வரையறுக்கப்பட்டது; அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | உற்பத்தி (லட்சம் டன்களில்.) |
|---|---|
| நெல் ... ... ... ... ... | 49.00 |
| ஏனைய தானியங்களும் சிறுதானியங்களும் ... | 16.50 |
| பருப்பு வகைகள் ... ... ... ... | 1.50 |
| மொத்தம் ... | 67.00 |

1970–71-இல் உணவு தானிய உற்பத்தியளவு 70.71 லட்சம் டன் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| | உற்பத்தி (லட்சம் டன்களில்.) |
|---|---|
| நெல் ... ... ... ... ... | 53.03 |
| சிறுதானியங்கள் ... ... ... ... | 16.03 |
| பருப்பு வகைகள் ... ... ... ... | 1.65 |
| மொத்தம் ... | 70.71 |

1971–72-ஆம் ஆண்டுக்கு வரையறுக்கப்பட்ட திட்ட இலக்குகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | உற்பத்தி (லட்சம் டன்களில்.) |
|---|---|
| நெல் ... ... ... ... ... ... | 54.00 |
| சிறுதானியங்கள் ... ... ... ... | 17.00 |
| பருப்பு வகைகள் ... ... ... ... | 2.00 |
| மொத்தம் ... | 73.00 |

### நெல் உற்பத்தி.

தமிழ் நாட்டில், 1970–71-ம் ஆண்டில் நெல் பயிரிடப்பட்ட பரப்பு 66.38 லட்சம் ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. முந்திய ஆண்டில் நெல் பயிரிடப்பட்டதாக மதிப்பிடப்பட்ட 66.60 லட்சம் ஏக்கர் பரப்புடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டின் மதிப்பீட்டில் ஒரு சிறு அளவு, அதாவது, 0.3 சதவீதம் குறைவு காணப்படுகிறது. 1969–70 உடன் முடிவடைந்த முந்திய ஐந்தாண்டுகளில் இதற்கு நிகரான கால அளவுக்குக் கணக்கிடப்பட்ட சராசரிப் பரப்பளவான 63.89 லட்சம் ஏக்கருடன் ஒப்பிட்டால், 1970–71-ம் ஆண்டுக்கான தற்போதைய மதிப்பீட்டில் பரப்பளவு 3.9 சதவீதம் அதிகரித்துள்ளதைக் காணலாம். 1970–71-ல், பரப்பளவு சிறிது குறைந்திருந்தாலும், நெல் உற்பத்தியளவு இதுவரை எய்திய சாதனைகளிலேயே மிக உயர்ந்த அளவாகும்; அதாவது, 53.03 லட்சம் டன்களாகும். முந்திய ஆண்டுக்கு மதிப்பிடப்பட்ட உற்பத்தியளவான 45.32 லட்சம் டன்களுடன் ஒப்பிட்டால், 1970–71-ம் ஆண்டுக்குரிய தற்போதைய மதிப்பீட்டில் 17 சதவீத உயர்வைக் காணலாம். மேலும், 1969–70 உடன் முடிவடைந்த முந்திய ஐந்தாண்டுகளுக்கு கணக்கிடப்பட்ட சராசரி உற்பத்தியளவான, 39.24 லட்சம் டன்களுடன் ஒப்பிட்டால், 1970–71-க்குத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ள அளவில் 35.1 சதவீதம் உயர்வு ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

ஆய்விற்குரிய இவ்வாண்டில் பொதுவாக, உணவு தானிய உற்பத்தி உயர்ந்ததற்கு முக்கியக் காரணங்கள் பின் வருவனவாகுமெனலாம்:— அவையாவன: புதிய பகுதிகளில் நெற்பயிர் விளைவிக்கப் பெற்றது; மிகு விளைச்சல் தரும் நெல் வித்துக்கள் பயிரிடப்படுகிற



பரப்பளவு விரைந்து விரிவுபடுத்தப்பெற்றது; இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், மேம்படுத்தப்பட்ட விதைகள் ஆகிய வற்றைச் சரிவிகித அளவில் பயன்படுத்துதல் போன்ற அறிவியல், பயிர் வளர்ப்பு முறைகளைப் பின்பற்றியது—ஆகிய இந்த வேளாண்மை முறைகளை முனைந்து கையாளுமாறு உழவர் பெருங்குடி மக்களைத் தூண்டுவதில் வேளாண்மைத் துறையினைச் சேர்ந்த வளர்ச்சிப் பணியாளர்கள் எடுத்துக்கொண்ட மாபெரும் முயற்சிகள் ஆகியன.

### மிகுபயன் தரும் தானிய வகைகள்.

மிகுபயன் தரும் தானிய வகைகள் திட்டம் இணைக்கப்பட்ட நடவடிக்கைக்கு வழி செய்கிறது; அதாவது இதன்கீழ் உரிய அளவுக்கு, வேளாண்மைக்குத் தேவைப்படும் பொருள்களைப் பயன் படுத்துதல் மூலமாக, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மிகு விளைச்சல் தரும் நெல், சிறு தானிய வகைகள் பயிரிட அறிமுகப்படுத்தப்படும். அத்துடன், அதே சமயம் கடன் வசதிகளும் செய்துத் தரப்படும்.

1970–71-ல் மிகு விளைச்சல் தரும் நெல் வகைத் திட்டத்தின்கீழ் கொண்டுவரக் கருதப்பட்ட பரப்பு 37.50 லட்சம் ஏக்கர் ஆகும். இப் பரப்பு இம் மாநிலத்தில் நெல் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவில் சரிபாதியாகும். இஃதிவ்வாறிருப்ப, இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட பரப்பு 44.93 லட்சம் ஏக்கர்களாகும்; அஃதாவது இது நெல் பயிரிடப்படும் மொத்தப்பரப்பில் 2/3 பங்கினை விட அதிகமாகும். உயர் விளைச்சல் தரும் சிறு தானிய வகைகள் திட்டத்தின் கீழ் 2.50 லட்சம் ஏக்கர்கள் இலக்கு வரையறுத்திருப்ப, 2.85 லட்சம் ஏக்கர்கள் இதன்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

1971–72-ல் இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ள பரப்புகள் விவரம் வருமாறு: நெல் 50.00 லட்சம் ஏக்கர்கள்; கலப்பினச் சிறு தானியங்கள் 4.00 லட்சம் ஏக்கர்கள்; 3 கம்பு 5.00 லட்சம் ஏக்கர்கள் ஆகும். மிகுபயன் தரும் தானிய ரக திட்டத்தின்கீழ் அடைந்த அமோக வெற்றிக்கு வேளாண்மைத் துறை எடுத்துக்கொண்ட அயரா முயற்சி போற்றத்தக்கது.

### பலபோகப் பயிர் ( Multiplecropping)

தமிழ்நாட்டில் வேளாண்மை செய்யப்படும் நிகர பரப்பளவை உயர்த்துவதற்கு வாய்ப்பு அரிதாகவுள்ளது; இவ்வுண்மையைக் கருத்திற்கொண்டு, பலபோகப் பயிர் திட்டத்தில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் யாதெனில் வழக்கமாகப் பயிரிடப்பட்டு வரும் வகைகளை விடுத்து, குறுகிய காலப்பயிர் வகைகளைப் பயிரிடுமாறு அறிமுகப்படுத்துவதே யாகும்; அதன் மூலம் உறுதிப் பாசனப் பகுதிகளில் ஒரு போகத்துக்குப் பதிலாக இரண்டு போகம் விளைவிக்கலாம்; இரண்டு போகம் விளைவிக்கப்பட்டு வந்த பகுதிகளில் மூன்று போகம் விளைவிக்கலாம். இத் திட்டத்தின்கீழ் பருப்பு வகைகள் பயிரிடும் திட்டத்தைச் செயல் படுத்தியுள்ளது மற்றொரு முக்கிய மாறுதலாகும். புதிய வேளாண்மைத் திட்டத்திலொரு பகுதியாக 1967-68-இல் பலபோகப் பயிர் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதி ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் 15.00 லட்சம் ஏக்கர் பரப்பினைக்

கொண்டுவரக் கருதப்பட்டிருக்கிறது. பலபோகப் பயிர் திட்டத்தின் கீழ் வரும் பரப்பிற் பெரும்பகுதி தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு, ஒரு போகம் விளையும் நிலங்கள் இரு போக நிலங்களாக மாற்றப்படுகின்றன. முதற் போகத்தில் குறுகிய காலத்தில் விளையும் குறுவை பயிரிடப்படுகிறது; இரண்டாவது போகத்தில் நெல் அல்லது வேர்க்கடலை அல்லது வேறு சிறு தானியம் பயிரிடப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் 1967–68-ல் 2.15 லட்சம் ஏக்கரும், 1968–69-ல் 5.53 லட்சம் ஏக்கரும் சாதனை எய்தியிருப்ப, 1969–70-ல் 9.95 லட்சம் ஏக்கர் பரப்பு சாதனை எய்தியுள்ளோம். 1970–71-ம் ஆண்டுக்கான திட்ட இலக்கு (தொகுத்து வரும் அளவு) 12.00 லட்சம் ஏக்கர்களாக இருப்ப, இவ்வாண்டில் எய்திய சாதனை 12.99 லட்சம் ஏக்கர்களாகும். பலபோகப் பயிர் திட்டத்தின் விளைவாலேற்பட்ட உற்பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | டன்கள். |
|---|---|
| 1968–69 ... ... ... ... ... | 4,72,820 |
| 1969–70 ... ... ... ... ... | 8,35,780 |
| 1970–71 ... ... ... ... ... | 10,66,560 |

1971–72-க்கான திட்ட இலக்கு 13.00 லட்சம் ஏக்கர்களாகும்.

## பலபோகப் பயிர் குறித்த முன்னோடித் திட்டங்கள்.

இதுவரை ஏற்பட்டுள்ள அனுபவத்திலிருந்து பலபோகப் பயிர்த் திட்டத்தின்கீழ் திட்ட இலக்குகளை வரையறுப்பது மட்டும் போதாதென்று தெரிய வந்துள்ளது. எது தேவையென்றால், வலுவானதும் உண்மையாய்ச் செயற்படுத்த முடிவதுமான பலபோகப் பயிர்த் திட்டமொன்றின் பல்வேறு கூறுகளும் பற்றிக் கட்புல விளக்கம் செய்யப்பட வேண்டும். அதாவது, திட்டத்தின் அமைப்பு, பயிரிடுவதற்கு இன்றியமையாத பொருள்கள், நிதி வாயில்கள், தொழில் நுட்ப உதவி இவற்றின் அவசியமும், விற்பனை வசதி, செய்யும் முறை, சேமிப்புக் கிடங்கு வசதி, சாலை வசதி, ஏனைய போக்குவரத்து வசதிகள் ஆகிய ஆயத்த முன் பணிகளின் அவசியமும் பற்றித் தெளிவாக உணர்த்தப்படவேண்டும். தெரிந்தெடுத்த வட்டாரங்களில் பலபோகப் பயிர் முறை முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துதல் மூலம் இதனை எய்தலாம். இத் திட்டத்தைப் பெரிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துதலுக்குரிய பொருத்தப் பாட்டினை முன்னோடி வட்டாரம் கட்புல விளக்கம் செய்யும்.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம், மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம், சிறு உழவர்கள் திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படும் பகுதிகளான கீழ்க்கண்ட மூன்று வேளாண்மைக் கோட்டங்களில் இந்த முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

பட்டுக்கோட்டை—தஞ்சாவூர் மாவட்டம்.

முசிறி—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

கடலூர்—தென்னார்க்காடு மாவட்டம்.





இந்தத் திட்டம் மத்திய அரசு ஆதரவு பெறுகிற திட்டமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட செலவுத்தொகை ரூ. 12 லட்சம் முழுவதும் இந்திய அரசால் வழங்கப்படும்.

## 1970–71 கோடைப் பின் பருவ காலத்தில் 1.50 லட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பு விரைவுத் திட்டம்.

திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் கரிசல் மண் பகுதிகளில் நடப்பாண்டுக் கோடைப் பின் பருவகாலத்தில் எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கான விரைவுத் திட்டமொன்றை துறை ஏற்கனவே தொடங்கியுள்ளது. இந்த மாவட்டப் பகுதிகளில் மானாவாரி கம்பு விதைப்பதற்கான காலம் அக்டோபர், நவம்பர் மாதங்களாகும்; எனவே, அந்தந்த மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் வேண்டிய அளவு எச்.பி. 3 கம்பு விதைகளை சேமித்து வைத்து, உரிய நேரத்தில் தேவைப்பட்ட உழவர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளித்தனர். இந்த ஆண்டுக்கென இலக்கு குறிப்பிடப்பட்ட 1.50 லட்சம் ஏக்கர்களில் எய்திய சாதனை 1.38 லட்சம் ஏக்கர்கள் மட்டுமே. இந்த ஆண்டில் இந்த வட்டாரங்களிற் சில பகுதிகளில் வட கிழக்குப் பருவ மழை தவறியதால் எஞ்சிய 12,000 ஏக்கர்களையும் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர முடியவில்லை.

## 1971–72-இல் 5.00 லட்சம் ஏக்கர்களில் எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கான திட்டம்.

1970–71-இல் எச்.பி. 3 கம்பு பயிரிட்டதில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், 1971–72-ல் இத் திட்டத்தின்கீழ் 5.00 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது ; அதன் விவரம் வருமாறு:—

| | பரப்பளவு (லட்சம் ஏக்கரில்.) |
|---|---|
| கோயம்புத்தூர் வட்டாரம் ... ... | 1.00 |
| திருநெல்வேலி வட்டாரம் ... ... | 1.25 |
| மதுரை வட்டாரம் ... ... ... | 1.00 |
| திருச்சிராப்பள்ளி வட்டாரம் ... ... | 1.65 |
| சென்னை வட்டாரம் ... ... ... | 0.10 |
| | 5.00 |

மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான தொகுதிட்டம் அரசின் ஆழ்ந்த பரிசீலனையில் உள்ளது. இந்தக் கம்பு பயிர்த் திட்டத்தின் விளைவாக 1971–72-இல் கம்பு உற்பத்தி 1 லட்சம் மெட்ரிக் டன்னுக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்.

"முனைப்புத் திட்டம்" என மக்கள் பரவலாக அறிந்துள்ள மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் 1960-ம் ஆண்டு முதற்கொண்டே தஞ்சாவூர் மாவட்டத்தில் செயற்பட்டு வருகிறது.

கொண்டுவரக் கருதப்பட்டிருக்கிறது. பலபோகப் பயிர் திட்டத்தின் கீழ் வரும் பரப்பிற் பெரும்பகுதி தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு, ஒரு போகம் விளையும் நிலங்கள் இரு போக நிலங்களாக மாற்றப்படுகின்றன. முதற் போகத்தில் குறுகிய காலத்தில் விளையும் குறுவை பயிரிடப்படுகிறது; இரண்டாவது போகத்தில் நெல் அல்லது வேர்க்கடலை அல்லது வேறு சிறு தானியம் பயிரிடப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ் 1967–68-ல் 2.15 லட்சம் ஏக்கரும், 1968–69-ல் 5.53 லட்சம் ஏக்கரும் சாதனை எய்தியிருப்ப, 1969–70-ல் 9.95 லட்சம் ஏக்கர் பரப்பு சாதனை எய்தியுள்ளோம். 1970–71-ம் ஆண்டுக்கான திட்ட இலக்கு (தொகுத்து வரும் அளவு) 12.00 லட்சம் ஏக்கர்களாக இருப்ப, இவ்வாண்டில் எய்திய சாதனை 12.99 லட்சம் ஏக்கர்களாகும். பலபோகப் பயிர் திட்டத்தின் விளைவாலேற்பட்ட உற்பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | டன்கள். |
|---|---|
| 1968–69 ... ... ... ... ... | 4,72,820 |
| 1969–70 ... ... ... ... ... | 8,35,780 |
| 1970–71 ... ... ... ... ... | 10,66,560 |

1971–72-க்கான திட்ட இலக்கு 13.00 லட்சம் ஏக்கர்களாகும்.

## பலபோகப் பயிர் குறித்த முன்னோடித் திட்டங்கள்.

இதுவரை ஏற்பட்டுள்ள அனுபவத்திலிருந்து பலபோகப் பயிர்த் திட்டத்தின்கீழ் திட்ட இலக்குகளை வரையறுப்பது மட்டும் போதாதென்று தெரிய வந்துள்ளது. எது தேவையென்றால், வலுவானதும் உண்மையாய்ச் செயற்படுத்த முடிவதுமான பலபோகப் பயிர்த் திட்டமொன்றின் பல்வேறு கூறுகளும் பற்றிக் கட்புல விளக்கம் செய்யப்பட வேண்டும். அதாவது, திட்டத்தின் அமைப்பு, பயிரிடுவதற்கு இன்றியமையாத பொருள்கள், நிதி வாயில்கள், தொழில் நுட்ப உதவி இவற்றின் அவசியமும், விற்பனை வசதி, செய்யும் முறை, சேமிப்புக் கிடங்கு வசதி, சாலை வசதி, ஏனைய போக்குவரத்து வசதிகள் ஆகிய ஆயத்த முன் பணிகளின் அவசியமும் பற்றித் தெளிவாக உணர்த்தப்படவேண்டும். தெரிந்தெடுத்த வட்டாரங்களில் பலபோகப் பயிர் முறை முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துதல் மூலம் இதனை எய்தலாம். இத் திட்டத்தைப் பெரிய பகுதிகளுக்கு விரிவுபடுத்துதலுக்குரிய பொருத்தப் பாட்டினை முன்னோடி வட்டாரம் கட்புல விளக்கம் செய்யும்.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம், மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம், சிறு உழவர்கள் திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படும் பகுதிகளான கீழ்க்கண்ட மூன்று வேளாண்மைக் கோட்டங்களில் இந்த முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

பட்டுக்கோட்டை—தஞ்சாவூர் மாவட்டம்.

முசிறி—திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

கடலூர்—தென்னார்க்காடு மாவட்டம்.



இந்தத் திட்டம் மத்திய அரசு ஆதரவு பெறுகிற திட்டமாக ஏற்பளிக்கப்பட்டுள்ளது; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மதிப்பிடப்பட்ட செலவுத்தொகை ரூ. 12 லட்சம் முழுவதும் இந்திய அரசால் வழங்கப்படும்.

## 1970–71 கோடைப் பின் பருவ காலத்தில் 1.50 லட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பு விரைவுத் திட்டம்.

திருநெல்வேலி, ராமநாதபுரம் மாவட்டங்களில் கரிசல் மண் பகுதிகளில் நடப்பாண்டுக் கோடைப் பின் பருவகாலத்தில் எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கான விரைவுத் திட்டமொன்றை துறை ஏற்கனவே தொடங்கியுள்ளது. இந்த மாவட்டப் பகுதிகளில் மானாவாரி கம்பு விதைப்பதற்கான காலம் அக்டோபர், நவம்பர் மாதங்களாகும்; எனவே, அந்தந்த மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் வேண்டிய அளவு எச்.பி. 3 கம்பு விதைகளை சேமித்து வைத்து, உரிய நேரத்தில் தேவைப்பட்ட உழவர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளித்தனர். இந்த ஆண்டுக்கென இலக்கு குறிப்பிடப்பட்ட 1.50 லட்சம் ஏக்கர்களில் எய்திய சாதனை 1.38 லட்சம் ஏக்கர்கள் மட்டுமே. இந்த ஆண்டில் இந்த வட்டாரங்களிற் சில பகுதிகளில் வட கிழக்குப் பருவ மழை தவறியதால் எஞ்சிய 12,000 ஏக்கர்களையும் இத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர முடியவில்லை.

## 1971–72-இல் 5.00 லட்சம் ஏக்கர்களில் எச்.பி. 3 கம்பு பயிரிடுவதற்கான திட்டம்.

1970–71-இல் எச்.பி. 3 கம்பு பயிரிட்டதில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், 1971–72-ல் இத் திட்டத்தின்கீழ் 5.00 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது; அதன் விவரம் வருமாறு:—

| | பரப்பளவு (லட்சம் ஏக்கரில்.) |
|---|---|
| கோயம்புத்தூர் வட்டாரம் ... ... | 1.00 |
| திருநெல்வேலி வட்டாரம் ... ... | 1.25 |
| மதுரை வட்டாரம் ... ... ... | 1.00 |
| திருச்சிராப்பள்ளி வட்டாரம் ... ... | 1.65 |
| சென்னை வட்டாரம் ... ... ... | 0.10 |
| | 5.00 |

மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான தொகு திட்டம் அரசின் ஆழ்ந்த பரிசீலனையில் உள்ளது. இந்தக் கம்பு பயிர்த் திட்டத்தின் விளைவாக 1971–72-இல் கம்பு உற்பத்தி 1 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம்.

"முனைப்புத் திட்டம்" என மக்கள் பரவலாக அறிந்துள்ள மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம் 1960-ம் ஆண்டு முதற்கொண்டே தஞ்சாவூர் மாவட்டத்தில் செயற்பட்டு வருகிறது.

பின் வரும் வழிகளில் உணவு உற்பத்தியை உயர்த்துவதே மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டத்தின் நோக்கமாகும்: (1) அந்தந்த மண்ணிற்கு மிகவும் பொருத்தமான வேளாண்மை முனைப்பு நடைமுறைகளைத் தோற்றுவித்து, அவற்றைப் பல்வேறு வளர்ச்சிக் கல்வி உத்திகள் மூலமாக உழவர்களிடையே விரைந்து பரப்புதல்; (2) உழவர்கள் மேம்படுத்திய நடைமுறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான பயிரிடு தேவைப்பொருள்களில் அவர்தம் ஆற்றலுக்குட்பட்டனவற்றை உரிய நேரத்தில் அவர்கட்கு கிடைக்கச் செய்தல்.

தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் ஆறு வேளாண்மைக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு கோட்டமும் ஒரு மாவட்ட வேளாண்மை அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில், சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும், சாதாரணமாக ஒரு வேளாண்மை வளர்ச்சி அதிகாரியும், 10 ஊர் நல உதவியாளர்களும் நியமிக்கப்பட்டிருப்பதற்கு மாறாக, இம் மாவட்டத்தில் உள்ள சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகளும், 20 ஊர் நல உதவியாளர்களும் நியமிக்கப்பட்டதன் மூலம் நேரிடப்பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையிலும்கூட, இம் மாவட்டத்தில் பணியாளர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது; இந்த மாவட்டத்துக்கென்றே தனியாக கூட்டுறவுச் சங்கங்கள் இணைப் பதிவாளர் ஒருவரும், ஆறு துணைப் பதிவாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்; ஒவ்வொரு சமுதாய வளர்ச்சி வட்டாரத்துக்கும் ஒரு கூடுதல் வளர்ச்சி அதிகாரியும் (கூட்டுறவு) நியமிக்கப்பட்டுள்ளார்.

இத் திட்டத்தின் முன்னேற்றங்குறித்து மதிப்பீடு செய்யவும், சிறப்புத் திட்டங்களை ஆய்ந்து காணவும், இத் திட்டத்துடன் புள்ளி விவரப்பிரிவு ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இத் திட்டத்தின் ஒரு பகுதியாக டிராக்டர் பணிக்களரி ஒன்றும் இம்மாவட்டத்தில், திருவாரூரில் அமைக்கப்பட்டுள்ளது; இப்பணிக்களரி, இயந்திர முறை பயிர்த் தொழிலை மேம்படுத்த உதவும்; மேலும், சொந்தமாக டிராக்டர்கள் வைத்துள்ள தனியார்க்கு செப்பனிடு பணி வசதிகள் அளிக்கும்; தஞ்சாவூர் மண் வளத்திற்குப் பொருத்தமான புதிய கருவிகள், இயந்திரங்களை வடிவமைத்துத்தரும். இப் பணிக்களரியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 53 டிராக்டர்கள் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் மூலமாக உழவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. இதற்கு மேலும், சமுதாய வளர்ச்சி வட்டாரங்கட்குச் சொந்தமான. 24 டிராக்டர்களும் கூட்டுறவுகட்குச் சொந்தமான 47 டிராக்டர்களும், தனிப்பட்ட உழவர்கட்குச் சொந்தமான 540 டிராக்டர்களும் ஒவ்வோராண்டும் கணிசமான பகுதியிற் பணி புரிகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு 11.00 லட்சம் பேல்கள் தேவையாயிருக்க, தற்பொழுது தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியின் அளவு சுமார் 4.00 லட்சம் பேல்களேயாகும். இதனால் ஆண்டுதோறும் 7.00 லட்சம் பேல்கள் இறக்குமதி செய்யப்படத் தேவையாக இருக்கிறது. பருத்தி உற்பத்தியில் விரைவான, குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட வேண்டியது கட்டாயமாகும்.

உழவர்கள் வயல்களில் செய்யப்பட்ட பெருவாரியான சோதனைகளும், கட்புல விளக்கங்களும், தற்பொழுது கிடைப்பதைவிட அதிகப் பருத்தியை விளைவிக்க முடியும் என்பதை மெய்ப்பித்துள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் MCU 5, சுஜாதா பருத்தி ரகங்களைக் கொண்டு ஹெக்டேர் ஒன்றுக்கு 30 முதல் 35 குவிண்டால்கள் வரை கம்பாஸ் பருத்தி விளைந்துள்ளதாகக் கட்புல விளக்கம் மூலம் தெரிய வந்துள்ளது.

இருக்கின்ற வளத்தை முழுவதும் பயன்படுத்திக் கொள்வதற்காக, பருத்தி உற்பத்தி குறித்த முயற்சிகளை மும்முரப்படுத்துவதற்குப் புதிய முறை ஒன்று மும்முர வேளாண்மை மாவட்டத் திட்ட முறைப்படி தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பாசன வசதியுள்ள பகுதிகளிலும் உறுதியாக மழைவளம் பெறும் பகுதிகளிலும் இப்பணி மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர் மாவட்டத்தில், பருத்தி விளைச்சலின் கீழ் வரும் பரப்பளவு முழுவதும் இந்தத் திட்டத்தின்கீழ்ப் படிப்படியாகக் கொண்டு வரப்படும். தவிர, 3,00,000 ஏக்கரில் இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, ஆகிய மாவட்டங்களில் பருத்தி முனைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு, தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டம், 20,000 ஹெக்டேர் கொண்ட பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவும் வகுப்பு I அதிகாரியின் பொறுப்பில் கொண்டு வரப்படும். விளைச்சலைப் பெருக்குவதற்காக யூரியா, உரத்தை விரிவாகப் பயன்படுத்துதல், பூச்சிக்கொல்லி மருந்துகளை விரிவாகத் தெளித்தல் போன்ற நவீன முறைகள் உள்ளிட்ட முனைப்பு முறைகளைப் பின்பற்றி பருத்தி விளைச்சல் பெருக்கப்படும்.

பருத்தி பயிரிடுவதற்குக் குறிப்பிட்ட ஊக்கம் அளிப்பதற்கு, பயிர்ப் பாதுகாப்பு, யூரியா தெளிப்பு ஆகியவற்றிற்கென, பாசனப் பருத்திக்கு 25 சதவீத உதவித் தொகையும், மானாவாரிப் பருத்திக்கு 50 சதவீத உதவித் தொகையும் வழங்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

திறமையான பயிர்ப் பாதுகாப்புப் பணியைச் செயல்படுத்துவதற்கு, ஒவ்வொரு 10,000 ஹெக்டேர்களுக்கும் ஒரு பயிர்பாதுகாப்புப் பிரிவு வீதம் பயிர்ப்பாதுகாப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. பருத்திப் பயிர்களில் விரிவாக விமானத்தின் மூலம் மருந்து தெளிப்பது, பருத்தி விளைச்சல் குறித்த செலவைச் சிக்கனப் படுத்துவதற்கு களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவது ஆகியவை இத்திட்டத்தின் ஏனைய புதிய கூறுகளாகும்.

*1971 சூலை 24]*

தென்னையும் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதே போன்று 1971–72-லும் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தென்னை வளர்ப்பு தனிப்பட்ட நபர்கள், ஊராட்சிகள் ஆகியோருக்குத் தேவைப்படும் தரமான தென்னம் பிள்ளைகளை வழங்குவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் 7.00 லட்சம் தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்யும் திறனளவுடன் கூடிய 19 தென்னம்பிள்ளை வளர்ப்புப் பண்ணைகள் தற்பொழுது இம் மாநிலத்தில் உள்ளன. உள்ளூர் அங்காடி விலை வீதத்திற்குமேல் 20 சதவீதத் தொகையைக் கொடுப்பதன்மூலம் அடையாளம் இடப் பட்டதாய் மரங்களிலிருந்து நெற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தென்னம் பிள்ளையும் ரூ. 1.50 என்ற சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது.

1969–70-ல், 6.03 லட்சம் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன. 1970–71, 1971–72 ஆகிய ஆண்டுகளில் முறையே 7.47 லட்சம், 7.80 லட்சம் தென்னம்பிள்ளைகளை வழங்குவதே, 1970–71, 1971–72 ஆகிய ஆண்டுகளுக்கான திட்டமாகும். மேம்படுத்தப்பட்ட கிராமப்புற பொருளாதார நடவடிக்கைகள், பயிர் வளர்ப்பு நடவடிக்கைகள், உற்பத்தியைப் பெருக்குவதற்கு உரங்களைப் பயன்படுத்துவது ஆகிய வற்றைக் கடைப்பிடிக்க மும்முரப் பிரசாரம் இம்மாநிலத்தில் நடை பெற்று வருகிறது. மேம்படுத்தப்பட்ட முறைகளைக் கையாளுவதற்கு உரமிடுதல், நாற்றுவிடுதல் ஆகியவை குறித்த ஒவ்வொரு கட்புல விளக்கங்களுக்கும் முறையே ரூ. 50, ரூ. 100 உதவித் தொகை வழங்கு வதன் மூலம், உழவர்களின் நிலங்களில் இந்தக் கட்புல விளக்கங்கள் நடத்தப்படுகின்றன. உதவித் தொகை வழங்கும் அடிப்படையில் பயிர்ப் பாதுகாப்பு இரசாயனங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தெளிப்பானுக்கும் ரூ. 100 என்ற பேரளவு உதவித் தொகைக்கு உட் பட்டு, தென்னம்பிள்ளைகளுக்கு மருந்து தெளிப்பதற்குத் தகுந்த தெளிப்பான்களுக்கு 50 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

1970–71-ல் 100 தெளிப்பான்கள் வழங்குவதற்கும், 1971–72-ல் மற்றும் 100 தெளிப்பான்கள் வழங்குவதற்கும் திட்டமிடப் பட்டுள்ளது. உழவர்கள் நிலங்களில் 1970–71-ல் 500 கட்புல விளக்க நிலங்கள் அமைக்கப்படும். அதே எண்ணிக்கை 1971–72-லும் மேற் கொள்ளப்படும்.

விளைச்சலை 25 சதவிகிதம் அதிகரிக்க தென்னை வளர்ப்பு முனைப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதற்காக முனைப்புத் திட்டம் ஒன்று, 1963–64-ல், தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பகுதியில் உள்ள 1,000 ஏக்கர் கொண்ட அடக்கப் பகுதியில் கொண்டுவரப் பட்டது. தஞ்சாவூர், வட ஆர்க்காடு, கன்னியாகுமரி ஆகிய இம் மூன்று மாவட்டங்களிலும், மேலும் மூன்று பிரிவுகள் 1966–67-ல் தொடங்கப்பட்டன. 1967–68-ல் மேலும் ஒரு பிரிவு மன்னார்குடியில் தொடங்கப்பட்டது. 1969–70-ல் மதுரை மாவட்டம், பொள்ளாச்சி யில் ஒன்றும், மதுரை மாவட்டம் கொட்டம்பட்டியில் மற்றொன்று மாக மேலும் இருபிரிவுகள் தொடங்கப்பட்டன. இவ்வாறாக, 1969–70-ல் ஆறு பிரிவுகள் செயல்பட்டு வந்தன.

உரங்கள், இரசாயனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காகக் கடன் —உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. கடனும், உதவித் தொகையும் முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகின்றன.



*1971 சூலை 24]*

1970–71-ல், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் ஒன்றும், தஞ்சாவூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் ஒன்றும், மதுரை மாவட்டம், கொட்டம்பட்டியில் ஒன்றும் ஆக மூன்று பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 1971–72-ல் இரண்டு பிரிவுகளைத் தொடர்ந்து நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தென்னை வளர்ப்பதற்குத் தகுதியான ஏராளமான நிலப் பகுதிகள் உள்ளன. தென்னை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நிலங்களைக் கொண்டு வர இயலாததற்கு முக்கிய காரணம் நிலஉரிமையாளர்களிடம் நிலவும் நிதிப் பற்றுக்குறையேயாகும். தென்னை வளர்ப்பை அதிகரிக்க ஊக்க மளிக்கும் பொருட்டு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதற்கான திட்டம் ஒன்று 1966–67-ல் செயல் படுத்தப்பட்டது. ஒவ்வொரு நபருக்கும் ரூ. 3,000 என்ற பேரளவுக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன. பதினோ ராவது ஆண்டு முதற்கொண்டு, இந்தக் கடன்கள் 5 சம ஆண்டுத் தவணைகளில் திரும்ப வசூலிக்கப்படத்தக்கவையாகும். நீலகிரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இம்மாநிலம் முழு வதிலும் இது செயல்படுத்தப்படுகிறது.

1971–72-ல் 2,000 ஏக்கர் கொண்ட ஒரு பகுதியில் இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டத்தில், நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலம், 10,000 ஏக்கர் கொண்ட நிலம் தென்னை பயிரிடுவதன்கீழ் புதிதாகக் கொண்டு வரப்படும்.

## தோட்டக்கலை.

### பழஉற்பத்தித் திட்டம்.

பழத்தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்டகாலக் கடன்கள் வழங்குவதன் மூலமும் பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்த இத் திட்டம் வகை செய்கிறது. ஒவ்வொரு தனியாருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்ற அதிக அளவுத் தொகைக்கு உட்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும், ஏனைய பழமரங்களை வளர்ப்ப தற்கு நபர் ஒருவருக்கு ரூ. 2,000 என்ற அதிக அளவுக்கு உட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் நீண்ட காலக்கடன்கள் வழங்க இத் திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கின்றன.

ரூ. 6.00 லட்சம் நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலம் 1970–71-ல் இத் திட்டத்தின் கீழ் 1,600 ஏக்கர் பரப்பளவில் பழ மரங்கள் வளர்க்கத் திட்டமிட்டிருக்க, 1,679 ஏக்கர் இத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. ரூ. 7.12 லட்சம் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்பட்டன. 1971–72-ல் 1,500 ஏக்கர் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். ரூ. 6.00 லட்சம் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படும்.

### அரசுப் பழத்தோட்டம்—பழ நாற்றுப் பண்ணைகள் நிறுவுதல்.

பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும் பழத் தோட்டக்காரர்கள், பழ உற்பத்தியாளர், பொது மக்கள் ஆகியோ ருக்குத் தரமான பயிரிடு பொருட்களை வழங்குவதற்கும் கட்புல

*1971 சூலை 24]*

விளக்க நிலையங்களாகப் பணிபுரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இம் மாநிலத்தில் ஒன்பது பழத் தோட்ட நாற்றுப் பண்ணைகள் இருக்கின்றன.

1969–70-ல் ஒட்டுமா, நாரத்தை, எலுமிச்சை—கிச்சிலி மரங்கள் நறுமணச் செடிகள், ஆப்பிள், ஒட்டுப் பேரிக்காய் முதலிய பல்வேறு வகையைச் சேர்ந்த 1,47,000 மரங்கள் மேற்கூறிய பழத் தோட்டங்களில் பயிரிடப்பட்டன. 1970–71-ல் பழ மரங்கள் வளர்ப்போருக்கு வழங்குவதற்காக 97,325 செடிகள் பயிரிடப்பட்டன.

<u>வாழைப் பயிரிடுவது குறித்து முனைப்புத் திட்டம்.</u>

முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் தற்போதுள்ள பகுதிகளில் வாழை உற்பத்தியைத் தீவிரப் படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ், இதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்கள்மூலம், வாழை பயிரிடுவோருக்கு இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன. வாழைப் பயிரிடுவோரின் நிலங்களில் கட்புல விளக்க நிலங்கள் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள், வணிக வங்கிகள் ஆகியவை மூலமாக, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை வீதம் குறைந்த காலக் கடன் வழங்கப்படுகிறது. வட ஆற்காடு மாவட்டத்தில், கிணறு ஒன்றுக்கு ரூ. 2,000 என்ற வீதத்தில் 500 கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன் வழங்க யூனியன் வங்கி சம்மதம் தெரிவித்துள்ளது.

1970–71, 1971–72 ஆகிய ஆண்டுகளில், தற்போதுள்ள 20,000 ஏக்கரிலும் வாழைப் பயிரிடவேண்டும் என்று திட்டமிடப் பட்டுள்ளது.

<u>பாக்கு உற்பத்தி.</u>—நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், கல்லாறு, மதுரை வட்டத்தில் பெரியகுளம், கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரிமுனை, திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம் ஆகிய இடங்களில் நாற்றுப் பண்ணைகளை அமைப்பதன்மூலம் தரமான கமுகு கன்றுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மூன்றாவது திட்டத்தில், 5.00 லட்சம் கமுகுக் கன்றுகள் வழங்கப்பட வேண்டுமென்ற குறிக்கோள் அளவு வரையறுக்கப்பட்டது. ஆனால் 2.84 லட்சம் கன்றுகள்தான் வழங்கப்பட்டன. நோய்களுக்கெதிராக உரியகாலத்தில் கட்டுப்பாடு நடவடிக்கைகளை எடுப்பதற்கும், உரங்களைப் பயன்படுத்துவதற்கும் தீவிரப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. உதவித் தொகை அதிக அளவு ரூ. 100 என்பதற்கு உட்பட்டு, 50 சதவீத விலையில் தெளிப்பான்கள் 1970–71-ல் வழங்கப் படுகின்றன. 1971–72-லும் இதேபோன்று வழங்கப்படும். 20 தெளிப்பான்களையும், 1.00 லட்சம் கன்றுகளையும் வழங்குவது என்று இலக்கு வரையறுக்கப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டக் கால இறுதியில் 5.00 லட்சம் கமுகுக் கன்றுகளையும், 100 தெளிப்பான்களையும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

<u>முனைப்புத் திட்டம் உட்பட புகையிலை உற்பத்தி.</u>—புகைக்கும் புகையிலை, தாம்பூலப் புகையிலை ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, புகையிலை வளர்ச்சித் திட்டம் ஒன்று 1960-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றின் புகையிலை



*1971 சூலை 24]*

விளைச்சலை அதிகரிக்கச் செய்ய, 1954-ம் ஆண்டிலிருந்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில் புகையிலை முனைப்புத் திட்டம் ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புகையிலை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்திற்காக, நான்கு வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவையாவன, (1) புகையிலை மேம்பாட்டு அடங்கல் திட்டம், (2) புகையிலை முனைப்புத் திட்டம், (3) எப்.சி.வி. புகையிலை வளர்ச்சித் திட்டம், (4) சுருட்டுப் புகையிலைச் சோதனைத் திட்டம் ஆகியவையாகும். இந்த விரிவான திட்டம் இம்மாநிலம் முழுதும் செயல் படுத்தப்படுகிறது. புகையிலை முனைப்புத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்திலும், எப்.சி.வி. புகையிலை மேம்பாட்டுத் திட்டம் தருமபுரி மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

<u>அடங்கல் திட்டம்.</u>—1969–70-ல் 40 கட்புல விளக்க நிலத்துண்டுகள் அமைக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டிருக்க, 100 கட்புல விளக்கங்கள் மேற்கொள்ளப் பட்டன. 1970–71-க்கு 100 கட்புல விளக்க நிலத்துண்டுகளை அமைக்கவேண்டும் என்று குறிக்கோள் அளவு வரையறுக்கப் பட்டுள்ளது. இதில் 40 நிலத்துண்டுகள் அடங்கல் திட்டத்தின் கீழும், 60 நிலத்துண்டுகள் முனைப்புத் திட்டத்தின் கீழும் கொண்டு வரப்படும்.

புகையிலை முனைப்புத் திட்டம்.

| | 1969-70-ல் சாதனை. | 1970–71-ல் குறிக்கோள் அளவு. | 1971–72-ல் குறிக்கோள் அளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பண்ணைத் திட்டங்களின் கீழ் கொண்டு வந்த பகுதி (ஏக்கர்). | 15,637 | 12,000 | 14,000 |

இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பகுதி.—

| | 1969 70-ல் சாதனை. | 1970-71-ல் இலக்கு. | 1971–72-ல். இலக்கு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உரம் பயன்படுத்தல் .. .. | 9,407 | 12,000 | 14,000 |
| பயிர்ப்பாதுகாப்பு .. .. | 9,390 | 12,000 | 14,000 |
| மேம்படுத்தப்பட்ட பயிர் விளைச்சல் நடவடிக்கைகள். | 9,407 | 12,000 | 14 000 |
| தரமான விதைகள் .. .. | 8,939 | 12,000 | 14,000 |

<u>நகரப் பகுதித் திட்டம்.</u>

வேளாண்மை மானியத் திட்டத்தின்கீழ், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய பகுதியிலுள்ள உழவர்களுக்கு வழங்கப்படுவது போலவே நகராட்சிப் பகுதிகளிலுள்ள குடியானவர்களுக்கும் சலுகைகள் வழங்க வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்,

இத் திட்டத்தின்கீழ், பின்வரும் சலுகைகள் வழங்கப்படு கின்றன :—

(1) 50 சதவீத விலையில் காய்கறி விதைகளையும், பழச் செடி, தென்னங்கன்று 75 சதவீத விலையிலும் வழங்குதல்.

(2) கீழ் குறிப்பிட்ட கருவிகளை 50 சதவீத விலையில் வழங்குதல் :—

(a) மண்வெட்டிகள்.

(b) களைக் கொட்டுகள்.

(c) பரம்புகள்.

(d) வெட்டுக் கத்தரிகள்.

(e) பூவாளிகள்.

இத்திட்டம் 84 நகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்கு காய்கறி விதைகள், பழச் செடி நாற்றுக்களை வழங்குதல், கருவிகள் வழங்குதல் ஆகியவை உழவர்களுடைய தேவைகளுக்கேற்ப ஏற்பாடு செய்ய வேண்டியிருப்ப தால், இத்திட்டத்திற்கான திட்ட இலக்கு எதுவும் வரையறுக்கப்பட வில்லை.

## மலர்ச் செடி வளர்ப்பு.

விற்பனை செய்வதற்கேற்ற முதன்மையான இரண்டு வகைப் பூக்க ளாகிய ரோஜா, மல்லிகை ஆகிய மலர்ச் செடிகளை வளர்ப்பதில் தமிழ்நாடு தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆதாயம் தரத்தக்க இந்தப் பூச்செடிகள் பெரும்பாலும் புற நகர்ப் பகுதிகளிலுள்ள சமவெளிப் பகுதியில் ஏற்ற செறிவான இடங்களில் வளர்க்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் விற்பனை செய்வதற்காக பயிரிடப்படும் இந்தப் பூக்கள் ஒரு மிகு ஆதாயம் தரக்கூடிய தொழிலாக வளர்ந்து வருவதால், கோயம்புத்தூர், மதுரை, செங்கற்பட்டு மாவட்டங்களின் பல பகுதிகள் இத்தொழிலில் முனைந்துள்ளன. மலர்களை விற்பதற்காக மாநில முழுவதும் திட்டமிட்ட அங்காடிகள் ஏராளமாக அமைக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 3,000 ஏக்கர் பரப்பளவுள்ள பகுதியில் மல்லிகைப் பூச்செடிகளும், 6,000 ஏக்கர் பகுதியில் சாமந்திப் பூச் செடிகளும், 1,000 ஏக்கர் பகுதியில் ரோஜாப்பூச் செடிகளும், 2,000 ஏக்கர் பகுதியில் துலுக்கச் சாமந்தி செடிகளும் பயிரிடப்பட்டு வருகின்றன என்றும், ஆண்டுக்கு ரூ. 8 கோடி முதல் 10 கோடி அளவிற்கு விற்பனை செய்வதற்கான மலர்கள் கிடைக்கின்றன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பூச்செடிகள் பயிரிடும் பகுதியை அதிகரிப்ப தற்கும் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பு அதிகமாயுள்ளது. பூக்களின் உற்பத்தி மும்முர அளவில் எடுத்துக் கொள்ளப்படவில்லை யெனினும், இப்பூக்கள் குறித்த ஆராய்ச்சிப் பணி 1960-ஆம் ஆண்டுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்தில் மல்லிகைப்பூ, ரோஜா, கனகாம் பரம், சாமந்தி ஆகிய பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகள் அமைக் கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட பலவகைப் பூச்செடிகள் வளர்க்கப் பட்டன. உதகை, தாவர இயல் தோட்டம், கூனூர் சிம்ஸ் பூங்கா, கோடைக்கானல் பிரயண்ட் பூங்கா ஆகியவை பலவகைப் பூக்களை உற்பத்தி செய்யும் மாதிரி நிலையங்களாகச் செயல் புரிகின்றன. இந் நிலையங்கள் பூக்களை ஏற்றுமதி செய்வதற்கு நிறைய அளவு பூக்களை



வழங்குகின்றன. சிறந்த பூச்செடிகளைப் பயிரிடுவதற்குக் கணிசமான பயிர் உத்தியும் சிறந்த பயிர் முறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. பல வகைப் பூக்களில் மலர்கள் குறித்து போதுமான இருப்பை மேம்படுத்த, அரசுப் பழத் தோட்டங்கள்—நாற்றுப் பண்ணைகள் உற்பத்தி நிலையங்களாக மேற்கொள்ளப்பட்டன. அயல்நாட்டு வாணிபத்திற்கென பலவகையான மலர்களுக்குத் தேவை ஏற்பட்டதால், ஏற்றுமதி செய்யத்தக்க பலவகைப் பூக்களின் உற்பத்தியைப் பெருக்க இந்த நிலையங்களில் பெருமளவு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக, ஏற்றுமதி செய்யத்தக்க பூச்செடிகளைப் பயிரிடுதல், பூக்களின் உற்பத்தி ஆகியவற்றில் சிறந்த பயிர் உத்திகளை மேற்கொள்வது நாட்டின் அந்நியச் செலவாணி கிடைப்பதற்கு வழி கோலும்.

சோற்றுக் காளான்கள்.—காளான்கள் சிறந்த வீட்டு உணவாகும். காளான் வகையை நிரந்தரமாக உற்பத்தி செய்து வருவதற்காக உயர்ரகக் காளான் விதைகளைத் தொடர்ந்து வழங்கி வருவது அவசியமாகும். உயர்வகைக் காளான்களைத் தனியே வைத்து ஆராய்ச்சி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிலையத்தில் உண்ணத்தக்க காளான்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான திட்டம் வகுக்கப் பட்டுள்ளது. ரூ. 3.37 லட்ச மதிப்பீட்டுச் செலவில், இத்திட்டத்தை நிறைவேற்றுவது இந்திய வோளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆழ்ந்த பரிசீலனையிலுள்ளது.

பருப்பு பயிறு வகைச் செடிகளின் வளர்ச்சிக்கென நுண் கிருமிகளை உட்செலுத்தல்.—இம்மாநிலத்திலும், பிற இடங்களிலும் மிகு பயன் தரும் பலவகை பருப்பு வகைச் செடிகள், பயறு வகைச் செடிகள் மேம் பாட்டில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அவற்றுள் உரமிடுவது ஒன்றாகும், எனவே, இந்தப் பயறு இனங்களின் விளைச்சலைப் பெருக்கு வதற்காக நுண் கிருமிகளைப் போதிய அளவுக்கு வழங்குவதில் நாட்டம் செலுத்தப்படுகிறது. அத்தகைய நுண் கிருமிகள் பயறு களின் விளைச்சலை 25 சத விகிதம் முதல்30 சத விகிதம் வரை அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், மண்ணி லுள்ள நைட்ரஜன் சத்தும் நிலைப்படுத்தப்படும். ஆழ்ந்த ஆய்விற்குப் பிறகு பயறு இனப் பயிர்களுக்கு ஊசி மூலம் உட்செலுத்துவதற்கான நுண் கிருமி வகைகளை உற்பத்தி செய்து வழங்குவதற்காக வணிகப் பிரிவு ஒன்றை நிறுவும் செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டுள்ளன. தட்ப-வெப்ப நிலைக்கூறுகளைப் பயன்படுத்திக்கொண்டு, நீலகிரியில் அதற்கென தொழிற்சாலை ஒன்றை அமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. இது குறித்த செயற்குறிப்பு, 1971–72-ல் நிறைவேற்றப் படுவதற்காக இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆலோசனையில் உள்ளது.

## மலைத் தோட்டச் சிறு பயிர்கள்.

கோக்கோ வளர்ச்சி.—கோக்கோ பயிர், அதிகம் தேவைப்படுகிற அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் திறனுடைய ஒரு முக்கியமான விற்பனைப் பயிராகும். தமிழ்நாட்டில் கோக்கோ பயிர் வளர்ச்சிக்கு அதிக வாய்ப்பு உள்ளது. நீண்ட காலமாக இம்மாநிலத்தில் "கிரியோலா" என்னும் வகையைச் சேர்ந்த கோக்கோ பயிர் வளர்க்

கப்பட்டுள்ளது. அண்மையில் "பாரஸ்டீரோ" வகையைச் சேர்ந்த கோக்கோ பயிரைப் பயிரிடவும் இந்திய அரசு அனுமதித்துள்ளது. எனவே, தமிழ்நாட்டில் "கிரியோலா", "பாரஸ்டீரோ" என்ற இரண்டு வகைகள் மேம்படுத்தப்படும்.

1962-ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட கோக்கோ மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், (1) கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, (2) திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம், (3) மதுரை மாவட்டத்தில் மங்கலங்கொம்பு ஆகிய இடங்களில் மூன்று கோக்கோ முன்னோடி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏலக்காய் வளர்ச்சி.—உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் உடனடியாக விற்பனையாகும் முக்கிய நறுமணப் பயிர்களுள் இது ஒன்றாகும். இந்தப் பயிர் அதிகம் தேவைப்படுகிற அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் திறனுடையதாகும். ஏலக்காய் பயிரிடுவதன் கீழ் பெரும் பகுதிகளைக் கொண்டுவரும் நோக்கத்துடன், ஏலக்காய் நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கும், அவற்றை வழங்குவதற்கும் சிறு நாற்றங்கால்கள் வளர்ப்பிடங்கள் பேணிவரப்படுகின்றன.

ஏலக்காய்ப் பயிர்த் திட்டத்தின் கீழ், ஏலக்காய் பயிரிடுவதற்கு தரமான ஏலக்காய் நாற்றுக்களை உற்பத்தி செய்து வழங்குவதற்கும், நோயில்லாத நாற்றுகளை வழங்குவதற்கும் இரண்டு நாற்றங்கால் வளர்ப்பிடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு நாற்றங்கால் வளர்ப்பிடம் மதுரை மாவட்டத்ததிலுள்ள மங்கலங்கொம்பு என்ற இடத்திலும், மற்றொன்று திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், மங்கலங்கொம்பிலுள்ள நாற்றங்கால் வளர்ப்பிடம் 31—3—1970 அன்று மூடப்பட்டு, சேலம் மாவட்டம், கொல்லி மலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மிளகுக் கொடி வளர்ப்புத் திட்டம்.—மிளகுக்கொடிப் பதியங்களை போட்டு அவற்றை மிளகு பயிரிடுபவர்களுக்கு சலுகை வீதத்தில் வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அறிவியல் முறையில் மிளகு பயிரிடுவதன் பலன்களை மிளகு விளைவிப்போருக்குக் கட்புல விளக்கம் அளிப்பதற்கு உதவித் தொகை பெறும் கட்புல விளக்க நிலப் பகுதிகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. தெளிப்பான்களும் தூவுக் கருவிகளும் சலுகை வீதத்தில் வழங்கப்படும்.

மிளகு பயிரிடும் பகுதியையும், மிளகு உற்பத்தியையும் பெருக்குவதற்காக மிளகுக் கொடி பதியம்போடும் பண்ணைகளைச் சிறு அளவில் அமைக்கவும், தரமுள்ள நோயற்ற நாற்றுகளை வளர்க்கவும், பயிரிடுவோருக்கு அவற்றைச் சலுகை வீதத்தில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முக்கியமான மிளகு வகையைச் சேர்ந்த கரிமுண்டு, பண்ணையூர் கலப்பு மிளகு வகைகள் இம்மாநிலத்தில் பயிரிடப்படும். இத்திட்டத்தின் கீழ் (1) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பேச்சிப்பாறையிலும், (2) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கூடலூரிலும் இரண்டு சிறு நாற்றங்கால் வளர்ப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



சென்னை மாநகரத்தில் அதைச் சுற்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் காய்கறிகள் உற்பத்தியைப் பெருக்குதல்.—சந்தைகளுக்குக் காய்கறிகளை வழங்குவதற்காக, தரிசு நிலங்களைப் பயன்படுத்தி சென்னை மாநகரத்திலும், அதைச் சுற்றிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், செங்கற்பட்டு மாவட்டம், மண்ணூர் கிராமத்தில் 25 ஏக்கர் நிலப்பகுதியில் 1970–71-ஆம் ஆண்டு முதற்கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. சென்னை, மவுண்ட் சாலை, அரசாங்க மாளிகையிலுள்ள பண்ணை 30—6—1970 முதற்கொண்டு மூடப்பட்டுள்ளது.

காய்கறிப் பயிர் மேம்பாட்டுத் திட்டம்.—முக்கிய மாநகரங்களிலும், நகரங்களிலும் அவற்றைச் சுற்றி 30 மைல் நிலப்பரப்புக்குள் காய்கறி உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம், நீலகிரி மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்தின் ஓசூர் பகுதியிலும் மலைகாய்கறி உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகை செய்கிறது. காய்கறி விதைகள் பாதி விலையில் விற்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் பருவம் ஒன்றுக்கு சொந்த பிணையத்தின் மேல் ரூ. 240 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 120 குறுகிய காலக் கடன் வழங்கப்படுகிறது. முனைப்பு நடவடிக்கைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக கட்புல விளக்க நிலப் பகுதிகள் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் இத்திட்டம் 25 வேளாண்மைக் கோட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உருளைக் கிழங்கு பயிர் மேம்பாட்டுத் திட்டம்.— இத்திட்டம், கோடைக்கானல் மலையிலும் தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டத்திலும், உருளைக்கிழங்கு உற்பத்தியைப் பெருக்கக் கருதுகிறது. ஓசூர் பகுதியில் துறை மூலமாக உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 750 வீதமும், கோடைக்கானல் மலைப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 900 வீதமும் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன. விதை, உரங்கள், பயிர்ப் பாதுகாப்பு இராசயனப் பொருட்களின் தேவை துறையால் ஏற்பாடு செய்யப்படுகிறது. பயிரிடுதலிலும், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆகியவை குறித்தும் இந்த துறையின் பணியாளர்கள் தொழில் நுட்ப உதவிகளை அளிக்கின்றனர்.

இது தவிர, மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மூல விதைகளை ஐந்து மடிப்பு அடிப்படையில் பெருக்குவதற்கும், கோடைக்கானல் மலையில் ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஏக்கர் பரப்பளவில் விதைகளை ஒரு மொத்தமாக வழங்குவதற்கும், இயல்பான உற்பத்தி பரப்பளவில் 1/3 பகுதியில் அவ்விதைகளை நடுவதற்கும் இத்திட்டம் வகை செய்கிறது.

தற்போது, ஒன்று "ரைபிள் ரேஞ்ச்" என்னுமிடத்திலும் மற்றொன்று வில்பட்டியிலுமாக அரசு விதைப் பண்ணைகள் இரண்டு உருளைக்கிழங்கு விதைகளைப் பெருக்குவதற்காக உள்ளன.

மஞ்சள் செடி மேம்பாட்டுத் திட்டம்.—தமிழ்நாடு, சிறப்பாக ஈரோடு கோட்டம், அதிக அளவு மஞ்சள் உற்பத்திக்கு நல்ல வாய்ப்புள்ள இடமாக உள்ளது. ஏக்கர் ஒன்றுக்குக் கிடைக்கும் விளைச்சலை அதிகரித்தல், உற்பத்தியைப் பெருக்குதல் ஆகிய

நோக்கத்துடன், முனைப்பு அடிப்படையில் மஞ்சள் பயிர் மேம்பாட்டிற்கான ஒரு திட்டம் 1—7—1970 முதற்கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

முதலில் கோயம்புத்தூர் மாவட்டம், கோபி, ஈரோடு, ஆகிய கோட்டங்களில் 2,500 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டத்தைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஈரோடு, கோபி கோட்டங்களில் முனைப்பு அடிப்படையில் மஞ்சள் பயிரிடுவதன்கீழ் 2,500 ஏக்கர் பரப்பளவுப் பகுதியைக்கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கட்புல விளக்க நிலப் பகுதிகளும் அமைக்கப்படும். மஞ்சள் பயிரிடுவோருக்கு கூட்டுறவு முறையில் தாராளமாகக் கடன்கள் வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

பயறுவகைகள் பயிரிடுவதற்கான திட்டம் விதைப் பெருக்கத் திட்டம்.—பயறுவகை உற்பத்தியைப் பெருக்குவதில், பயறுவகை விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். அரசுக்குச் சொந்தமான விதைப் பண்ணைகளில் இதுவரை போதுமான அளவு விதைகளை உற்பத்தி செய்ய முடியாதிருப்பதால், தனியார் நிலங்களில் விதைப் பெருக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயிர் வல்லுநர்களிடமிருந்து (பயறு வகைகள்) வரப்பெற்ற மூல விதைகளைக் கொண்டு தொடக்க நிலை விதைப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. தொடக்க நிலை விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகளை வாங்கி, இரண்டாவது நிலை விதைப் பண்ணைகள் அமைப்பதற்கு வழங்கப்படுகின்றன. இரண்டாவது நிலை விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகள், உழவர்களுக்கு பரி மாற்ற முறை மூலம் இயல்பான முறையிலும் வழங்கப்படுகின்றன. விதைப் பெருக்கத்தைத் தவிர, துறையால் பரிந்துரைக்கப்பட்ட எல்லா முனைப்பு நடைமுறைகளைக் கொண்டு ஒரு ஏக்கர் நிலப்பகுதிகளில் முன்னோடி கட்புல விளக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டம் 1971–72-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இருக்கும்.

விரைவுத் திட்டம்.—பருப்பு உற்பத்தியில் தமிழ்நாட்டில் பற்றுக்குறை உள்ளது. 7 லட்சம் டன் பருப்புத் தேவைக்கு 1 லட்சம் டன் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. உணவில் புரதச் சத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், 1970–71-ஆம் ஆண்டில் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விரைவுத் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. திட்ட இலக்கு 5.35 லட்சம் என்றிருக்க, 8.20 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பருப்பு பயிரிடப்பட்டு 1.65 லட்சம் டன் பருப்பு உற்பத்தி அளவு பெருக்கப்பட்டுள்ளது. 203 மெட்ரிக் டன் அளவு பருப்பு இன விதைகள் வாங்கப்பட்டு, உழவர்களுக்கு வழங்கப்பட்டன. 1971–72-ஆம் ஆண்டில், மொத்த உற்பத்தியை 2.50 லட்சம் டன்னாக உயர்த்துவதற்காக, பருப்பு வகைகளைக் கலப்புப் பயிராகவும் வரப்புப் பயிராகவும் 23.4 லட்சம் ஏக்கர் கூடுதல் நிலப் பரப்பில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 500 மெட்ரிக் டன் விதைகள் வாங்கப்பட்டு, வழங்கப்படும்.



பயறு வகைகள் பற்றிய ஆராய்ச்சித் திட்டங்கள்.

இம்மாநிலத்தில் பருப்பு வகைகளின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்துடன் மூன்றாண்டுக்கால அளவிற்கு ரூ. 6.35 லட்சம் செலவில், அடிப்படை பயறுவிதைகளை உற்பத்தி செய்வதற்கான வசதியுடன் கீழ்க்காணும் இரண்டு ஆராய்ச்சித் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(1) ஆடுதுறையில் உள்ள வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நன்செய் நிலப் பயறு வகைகளை மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டம் செலவு (2.35 லட்சம்).

(2) பவானிசாகரில் உள்ள அரசு விதைப்பண்ணையில் பயறு வகைகளின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டமும், ஆராய்ச்சித் திட்டமும் (செலவு ரூ. 4.00 லட்சம்).

ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் செயற்படுத்தக் கருதியுள்ள திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(a) நன்செய் நிலங்களில் நெல் விளைந்த பிறகு சோயாபீன்ஸ், துவரை போன்ற புதிய பருப்பு வகைகளைப் பயிரிடுவது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆராய்தல்.

(b) நன்செய் நிலங்களில் நெல் விளைந்த பிறகு பயிரிடுவதற்கென்றே விரைந்து பலன் கொடுக்கக் கூடிய மிகுபயன் தரும் புதுவகை உளுந்து, பாசிப்பயறு வகைகளைக் கண்டுபிடித்தல்.

(c) அவற்றைப் பயிரிடுவதில் மேம்பட்ட முறைகளை வரையறுத்தல்.

(d) மேம்படுத்தப்பட்ட நன்செய் பருப்பு வகைகளை தமிழ் நாட்டின் கயவாய்ப் பகுதிகளில் விரைவாகப் பரப்பும் வண்ணம் அவற்றை பெருக்குதல்.

சிறுபாசனம், வேளாண்மைப் பொறியியல் நடவடிக்கைகள்.

தண்ணீரை ஏற்றவாறு பயன்படுத்துவதன் மூலமும் இறவைப் பாசன வசதிகளை விரிவுப்படுத்துவதன் மூலமுமே, மிகு பயன் தரும் பயிர்வகைத் திட்டம் போன்ற வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். எனவே, தனியார் குழாய்க் கிணறுகள் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கும், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், அரசு குழாய்க் கிணறுகள் அல்லது ஊருணிகளை அமைப்பதற்கும் நான்காவது திட்டம் வகை செய்கிறது. இத்திட்டங்களுக்குக் கடன் வழங்கும் பொறுப்பு நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் முதலியன கடன் வழங்கு நிறுவனங்களிடம் மாற்றப்பட்டுள்ள போதிலும், தேவையான இயந்திரங்களையும் உதவி தொகைகளையும் அரசு தொடர்ந்து அளித்து வருகிறது.

மாநிலம் முழுவதிலும் சிறு பாசனத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட போதிலும், சில மாவட்டங்களில் மட்டும் இத்திட்டம் மும்முரமாகச் செயற்படுத்தப்படுகிறது. ஏனெனில், இம்மாவட்டங்களில்

குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான வாய்ப்பு நிறைய உள்ளது. இத்திட்டங்கள் "சிறப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்" எனப் பெயர் பெறும் ; அவைகளாவன :—

(i) தஞ்சாவூர் மாவட்டத்தில் தனியார் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான சிறப்பு மேம் பாட்டுத் திட்டம்.

(ii) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்.

(iii) தென் ஆர்க்காடு மாவட்டத்தில் தனியார் குழாய்க் கள் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கான சிறப்பு மேம் பாட்டுத் திட்டம்.

(iv) செங்கற்பட்டு மாவட்டத்தில் தனியார் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான சிறப்பு மேம்பாட்டுத் திட்டம்.



1968-69-ம் ஆண்டிலிருந்து பல்வேறு சிறுபாசனத் திட்டங்களின்கீழ் திட்டக் குறிக்கோள் அளவுகள், சாதனைகள் ; 1971-72-க்கான திட்டக் குறிக்கோள் அளவுகள் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டத்தின் பெயர். | 1968-69 | | 1969-70 | | 1970-71 | | 1971-72 |
|---|---|---|---|---|---|---|---|
| | குறிக்கோள் அளவு. | சாதனை. | குறிக்கோள் அளவு. | சாதனை. | குறிக்கோள் அளவு. | சாதனை. | குறிக்கோள் அளவு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| தனியார் குழாய்க் கிணறுகள் திட்டம். | 1,600 | 2,088 | 2,000 | 2,205 | 2,300 | 2,237 | 2,300 |
| துளைக் கிணறுகள் திட்டம் .. | 500 | 639 | 600 | 568 | 700 | 699 | 700 |
| வடிமுனைக் குழாய்க் கிணறுகள் திட்டம். | 2,000 | 2,678 | 2,000 | 2,055 | 2,000 | 1,559 | 2,500 |
| கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம். | 400 | 859 | 850 | 1,248 | 810 | 1,220 | 1,050 |
| சுரங்க நீரேற்றுத் திட்டம். | 10 | .. | 10 | 10 | 10 | [illegible] | 10 |

பாசன நீரைக் கையாளல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்தல்.

தமிழ்நாட்டில் ஆற்றுப் பாசன வளம் முழுவதையும் பயன்படுத்தி விட்டதால் நிலநீரை வளர்ச்சிக்கு ஆக்கம்தரும் வகையில் சிக்கன மாகப் பயன்படுத்த வேண்டியுள்ளது. கிடைக்கும் நீரினை பயன் படுத்துகின்ற அளவைப் பெருக்குவதற்கான பாசன முறைகளின் வகைகளை நிலத்தின் தன்மைக்கேற்ப அறிவியல் முறையில் ஆய்வு செய்ய வேண்டும். இதனால் பயிர்களின் விதை முறைகளைப் பொறுத்து, வடிகால், வரவுகால் முறைகளைப்பற்றி ஆய்ந்து ஆராய வேண்டியிருக்கும். நீரை வடியச்செய்தல், அதாவது மேல்நிலையில் உபரியாக உள்ள நீரை சுரங்கக் கால்வாய்கள் மூலம் வடியச் செய்யும் முறைகளைப் பற்றி ஆராயவேண்டும் குறிப்பிட்ட ஒரு பகுதியின் தட்ப வெப்ப நிலை, மண்வளம், மழை அளவு ஆகியவற்றை குடியான வர்களுக்குக் கீழ்க்கண்டவை உறுதியாகக் கிடைக்கும் வண்ணம் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையாக ஆக்க வேண்டும்.

(1) போதுமான, ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட நீர் வழங்கல்.

(2) நீர் கிடைக்கும் அளவுகளுக்கு ஏற்ப, திட்டமிட்ட பயிர் உற்பத்தி முறை.

(3) அதிகப்படியான நீரைச் செவ்விதின் வடித்தல்.

மழைக் காலத்தில் கட்டுப்பாடற்ற பாசனங்களின் காரணமாக தாழ்ந்த கயவாய்ப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேதங்கள் ஏராள மானவை. இது வேளாண்மைப் பொருளாதார, வேளாண்மைப் பொறியியல் ஆய்வு ஆகும். பல ஆண்டுகளுக்கு நீடிக்கக் கூடிய விரிவான வேலைத் திட்டம் இல்லையென்றால், இந்த ஆய்வினால் எவ்விதப் பயனும் ஏற்படாது. இந்த ஆய்வின் பயனாக, குடியானவர்கள் தங்களது விளைச்சலைப் பெருக்க முடிவதோடு மட்டுமல்லாது, உணவு உற்பத்தி, நீரை வீணாக்காமல் பயன்படுத்தல் ஆகியவற்றில் மாநிலம் முழுவதற்கும் நல்ல பலன் கிடைக்கிறது. எனவே, நடப்பாண்டில், ரூ. 3.30 லட்சம் செலவில் ஆடுதுறையில் நீர்ப் பயன் நிர்வாக ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பணிக்களரிகளை அதிக எண்ணிக்கையில் சீற்படுத்துவது உட்பட டிராக்டர்களை வாடகைக்கு விடும் திட்டம்.

வேளாண்மைத் துறையின் பொறியியல் நடவடிக்கைகளில் டிராக்டர்கள் வாடகைக்கு விடும் திட்டம் முக்கியமான ஒன்றாகும். இம்மாநிலத்திலே பயிரிடு நிலங்களின் பரப்பை அதிகரிக்க வேண்டி, நிலத்தைச் சமப்படுத்துவதன் மூலம் அதிகப்படியான நிலங்களைச் சீர்ப் படுத்தலும், உணவு உற்பத்தியைப் பெருக்க இயந்திரங்களைப் பயன் படுத்தி பயிர் விளைவித்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, இந்தத் துறை. டிராக்டர்கள், பரம்புப் பொறிகள் ஆகியவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு விடுகிறது. இதற்காக வசூலிக்கப்படும் வாடகை போதுமானதல்ல; ஆனால், குடியானவர்களுக்கு இது மிகக் குறைவாகும்.

அரசு ஆணையின்பேரில் வேளாண்மை சாராத காரியங்களுக்காக வும் டிராக்டர்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இதற்காக, சாதாரணமாக வசூலிக்கப்படும் தொகைகளைப் போல் இரு மடங்குத்



தொகை வசூலிக்கப்படுகின்றது. எனினும், அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், அவற்றின் வேலை எத்தன்மையதாயினும், சாதாரணமாக வசூலிக்கப்படும் வாடகையே வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயலில் இருக்கிறது. இத்துறையில் 188 சங்கிலிச் சக்கர டிராக்டர்களும், 78 சக்கரவகை டிராக்டர்களும் உள்ளன. இவற்றில் 149 சங்கிலிச் சக்கர டிராக்டர்களும், 46 சக்கரவகை டிராக்டர்களும், பயன்படு நிலையில் உள்ளன. (எஞ்சியவற்றைப் பழுதடைந்தவை எனப் புறக் கணித்துவிடக் கருதப்பட்டுள்ளது.) சங்கிலிச் சக்கர டிராக்டர்களும் சக்கரவகை டிராக்டர்களும் எல்லா மாவட்டங்களிலும் இருக் கின்றன.

வறையறுக்கப்பட்ட திட்டக்குறிக்கோள் அளவுகளும், எய்திய சாதனைகளும் வருமாறு :—

| | | குறிக்கோள் அளவு. (ஏக்கரில்). | | சாதனை ஏக்கரில். | |
|---|---|---|---|---|---|
| | | சமப்படுத்துதல். | டிராக்டர் கொண்டு உழுதல். | சமப்படுத்துதல். | டிராக்டர் கொண்டு உழுதல். |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| 1966–67 | .. | 7,400 | 8,000 | 8,795 | 11,505 |
| 1967–68 | .. | 8,360 | 16,300 | 9,438 | 17,483 |
| 1968-69 | .. | 7,610 | 20,300 | 9,617 | 21,520 |
| 1969--70 | .. | 7,348 | 24,400 | 9,145·45 | 24,552·35 |
| 1970–71 | .. | 9,733 | 20,000 | 11,681·08 | 35,051·06 |

ஆந்திரா பிரிவதற்கு முன்னிருந்த சென்னை மாநிலத்தில் பாபட் லாவில் ஒன்றும் கோயம்புத்தூரில் ஒன்றுமாக மொத்தத்தில் டிராக்டர் பணிக்களரிகள் இரண்டு இருந்தன. 1962-ல் தஞ்சாவூர் மும்முர வேளாண்மை மாவட்டத்தின்கீழ் உள்ள ஃபோர்டு அறக் கட்டளை (Ford Foundation) உதவியுடன் திருவாரூரில் டிராக்டர் பணிக்களரி தொடங்கப்பட்டது. மதுரையில் பணிக்களரி ஒன்றை ஏற்படுத்துவதற்கு 1967–68-ல் அனுமதி வழங்கப்பட்டது. திருச்சி ராப்பள்ளியில் ஒன்றும், வேலூரில் மற்றொன்றுமாக மேலும் இரண்டு பணிக்களரிகள் நிறுவ அரசு அனுமதி வழங்கியது. திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பணிக்களரிகள் 1969–70-ல் செயல் படத் தொடங்கின. வேலூரில் உள்ள பணிக்களரி 3—5—1971-லிருந்து செயல்படத் தொடங்கியது.

பழுதுபடாமல் பேணி வருவதற்கும், சோதனை நடவடிக்கை யாகவும், செப்பனிடு கருவிகளுடன் கூடிய இரண்டு இயல் செப்பனிடு பணி ஊர்திகளை இத்துறை வாங்கியுள்ளது. கோயம்புத்தூர், திருவாரூர் ஆகிய இடங்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன. படிப் படியாக மற்ற மாவட்டங்களுக்கும் இவை நீட்டிக்கப்படும்.

1971–72-க்கான திட்டம்.

திட்டக் குறிக்கோள் அளவு—

| | ஏக்கர். |
|---|---|
| சமப்படுத்துதல் ... ... ... ... | 12,025 |
| உழுதல் ... ... ... ... ... | 36,000 |

[1971 ஜூலை 24

கோயம்புத்தூரில் விதைகளைச் சீர்படுத்தும் பொருத்தமான கருவிகள் (தானியம் உலர்த்தும் கருவி) வடிவமைத்து உருவாக்கும் திட்டம்.

நெல், சிறு தானியங்கள், மிளகாய், வேர்க்கடலை போன்ற சில வாணிபப் பயிர்கள் ஆகியவற்றிற்கான கதிரடி களங்களில் அல்லது வயல்களில் பயன்படுத்துவதற்கான, மின்சாரம் மூலம் இயங்கும் அல்லது எண்ணெயைக் கொண்டு இயங்கும் பொருத்தமான தானிய உலர்த்திகளை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இது ஒரு ஆராய்ச்சித் திட்டமாகும். எனவே, திட்டக் குறிக்கோள் அளவு எதையும் முடிவு செய்வதற்கில்லை. இத்திட்டம் 1969 ஆகஸ்ட்டில் செயற்படுத்தப்பட்டது.

## தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம்.

தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம் 1—4—1968-லிருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தின் முக்கியமான நோக்கங்களாவன :—

(1) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கோழிப் பண்ணை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் புதுமைப்படுத்துவதற்கும் பயன்படும் பொருள்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்த வகை செய்தல், அவற்றை நிறுவுதல், நிர்வகித்தல், சொந்தமாகத் தொடங்கி நடத்துதல்;

(2) உள்நாட்டுக்குத் தேவையான ஏற்றுமதிக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் துணை உணவுப் பொருள்களும் அதிக அளவில் கிடைக்கச் செய்வதற்காக, வேளாண்மை விளைபொருள்கள், மீன் உணவுப் பொருள்கள், விலங்கின உணவுப் பொருள்கள் இவற்றைப் பக்குவப்படுத்துவதற்காக தொழில்களையும் வசதிகளையும் ஏற்படுத்த வகை செய்தல், அவற்றை நிறுவுதல், நிர்வகித்தல், சொந்தமாகத் தொடங்கி நடத்துதல்.

டிராக்டர்கள், எண்ணெய் இயந்திரங்கள், மின்சார மோட்டார்கள், விசையேற்றங்கள், முதலிய பண்ணை இயந்திரங்களைத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகம் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வழங்குகின்றது.

இதுவரை, இக்கழகம், உழவர்களுக்கு ரூ. 316.61 லட்சம் மதிப்புள்ள வேளாண்மை இயந்திரங்களை வழங்கியுள்ளது. இதன் மூலம் இக்கழகத்திற்கு 1968–69-ல் ரூ. 5,54,572-ம், 1969–70-ல் ரூ. 15,56,066-ம் ஆதாயம் கிடைத்துள்ளது.

இந்தக் கழகம் ரஷ்யா, ஜெர்மனி, ருமேனியா முதலிய வெளி நாடுகளிலிருந்து இந்திய அரசுத் தொழில் கழகத்தின் மூலமாக டிராக்டர்களை இறக்குமதி செய்து ரொக்கத் தொகை செலுத்தும் அடிப்படையில் தேவையுள்ள உழவர்களுக்கு வழங்குகிறது. டிராக்டர்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்கள், துணைக் கருவிகள் ஆகியவற்றையும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறது.



1971 ஜூலை 24]

வேளாண்மை இயந்திரங்களை விற்ற பிறகு, பழுது பார்ப்பது முதலான பணிகளைச் செய்வதற்காக, அண்மையில் கீழ்க்கண்ட 5 இடங்களில் வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு விடும் நிலையங்களை இக்கழகம் நிறுவியுள்ளது :—

1. செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரத்தில் சிறு காவேரிப் பாக்கம்.
2. மதுரை.
3. திருச்சிராப்பள்ளி.
4. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம்.
5. சேலம்.

மேற்சொன்ன ஐந்து வட்டார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று துணை நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இங்கு வாடகைக்கு விடுவதற்காக வேளாண்மை இயந்திரங்கள் சேமித்து வைக்கப்பட்டு தேவையானபொழுதெல்லாம் உழவர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.

கிணறு தோண்டுதல் போன்ற பிறவற்றையும் இக்கழகம் மேற்கொள்கிறது. தற்பொழுது இக்கழகத்திடம் தென் ஆர்க்காட்டில் சுழல் முறையில் துளையிடும் கருவிகள் மூன்றும், மதுரையில் சம்மட்டி முறையில் துளையிடும் கருவி ஒன்றும் உள்ளன. கீழ்க்காணும் செயற்குறிப்புகள் அதன் பரிசீலனையில் உள்ளன.

(1) சம்மட்டி முறையில் துளையிடும் கருவிகள் மேலும் இரண்டு வாங்குதல்.
(2) நைலான் வலை தயாரிக்கும் இயந்திரம் நிறுவுதல்.
(3) ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு உதவி செய்தல்.
(4) மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தின் உடனுழைப்புடன் முந்திரிக் கொட்டையின் ஓட்டிலிருந்து தோல் பதனிடுவதற்காக டானின் திரவத்தை வடித்தெடுத்தல்.

இதுவரை, வெவ்வேறு வகையான 1,889 டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இங்கிலாந்து, யுகோஸ்லாவியா முதலிய நாடுகளிலிருந்து சுமார் 1,000 டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வேளாண்மைப் பணி மனைகள்—வேலை வாய்ப்பற்ற பொறியாளர்களுக்கு உதவி.

தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பற்ற பொறியாளர்களுக்கு உதவி செய்யும் திட்டம் ஒன்றை மேற்கொள்ளலாமென இந்திய அரசு கருத்தறிவித்துள்ளது. இதனால் தொழில் முனைவோருக்குக் கீழ்க்கண்ட பயன்கள் கிடைக்கும் :—

(1) பயிற்சிக்காக இந்திய அரசு ரூ. 1,500 வழங்கும்.
(2) நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் உதவி.
(3) வட்டி கொடுப்பதற்கான உதவித் தொகை. இந்திய அரசு வழங்கும் நிதி உதவியைக் கொண்டு இம்மாநிலத்தில் 100 பணி மனைகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் 30 பணி மனைகள் உடனடியாகத் தொடங்கப்படும்.

[1971 ஜூலை 24

இந்த வேளாண்மைப் பணிமனைகள் வளர்ச்சி வட்டாரங்களில் அமைக்கப்படும். இந்த பணிமனைகளில் பட்டறை வசதிகளும் இருக்கும். கிணறு தோண்டுதல் வேளாண்மை மேம்பாட்டிற்கான ஏனைய மூலப் பணிகளும் இந்தப் பணிமனைகளால் மேற்கொள்ளப் படும். வேளாண்மைப் பணிக் கூட்டுறவு நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் நாட்டத்தில் இருந்து வருகிறது.

### விதைகள்.

அடிப்படை விதைகளை உற்பத்தி செய்வதற்காக மாநில விதைப் பண்ணைகள் தொடங்கப்படுகின்றன. தனியார்களுக்குச் சொந்தமான இவ்விதைகள், மேலும் பெருக்கப்படுவதற்காகவும் உழவர்களுக்கு வழங்குவதற்கும் உள்ள இரண்டாம் நிலை விதைப் பண்ணைகளுக்கு வழங்கப்படுகின்றன.

நான்காவது திட்டக்காலத்தின் இறுதியில் 25 ஏக்கர்கள் கொண்ட 230 விதைப்பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும் என்பது குறிக்கோள் அளவு. குடுமியான் மலையில் உள்ள பெரிய அளவிலான பண்ணையைக் கருத்தில் கொண்டால், இந்தக் குறிக்கோள் அளவு முன்னரே எய்தப் பட்டுவிட்டது. 1970–71 இறுதியில் 232 பிரிவுகள் செயல்பட்டு வந்தன. திட்டத்தின் எஞ்சியக் கால அளவில், இந்தப் பண்ணைகளில் தொடக்க நிலை விதைகளின் உற்பத்தியை உறுதிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தற்போது வட ஆர்க்காடு மாவட்டம், நவ்லாக் அரசு விதைப் பண்ணையில் விதைச் செய்முறைப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. குடுமியான் மலை, அண்ணா பண்ணையில் விதைச் செய் முறைப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கும், தஞ்சாவூர் மாவட்டம், சாக்கோட்டையில் மற்றொன்றை நிறுவவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இந்தப் பிரிவுகளுக்கான கட்டிடங்கள் 1971–72-ல் கட்டப்படும்.

### விதைப் பெருக்கத் திட்டம்.

தனியார் பண்ணைகளில் உள்ள அரசு விதைப் பண்ணைகளில் உற் பத்தியாகும் அடிப்படை விதைகளை, இரண்டாம் நிலை விதைகளாகப் பெருக்குவது, நெல், சிறு தானியங்கள், ஆகியவற்றின் கீழ் உள்ள மொத்தம் நிலப்பகுதியில் மூன்றில் ஒரு பாகத்தில் பயிரிடுவதற்கு விதைகளை வழங்குவது ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது திட்டக் கால அளவில் ஒவ்வோர் ஆண்டும் கீழ்க் காணும் விதைகளை வழங்கக் கருதப்பட்டுள்ளது:—

| | | | | | மெ.ட. |
|---|---|---|---|---|---|
| நெல்— | | | | | |
| தொடக்க நிலை | ... | ... | ... | ... | 2,780 |
| இரண்டாம் நிலை | ... | ... | ... | ... | 41,700 |
| சிறு தானியங்கள்— | | | | | |
| தொடக்க நிலை | ... | ... | ... | ... | 506 |
| இரண்டாம் நிலை | ... | ... | ... | ... | 6,160 |



1971 ஜூலை 24]

வழங்கப்படவிருக்கும் இரண்டாம் நிலை விதைகளின் மொத்த அளவில் 14,000 மெ.ட. நெல்லும், 2,000 மெ.ட. கம்பும் துறை அதிகாரிகளின் நேரடி மேற்பார்வையின் கீழ் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப் பட்டு, அவைகள் வேளாண்மை விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்கப்படும். மாவட்ட வேளாண்மைச் சிறப்பு அதிகாரியின் கீழ் (விதைகள்) ஐந்து விதைப் பண்ணைகள் அதாவது, போளூர், விழுப்புரம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இருக்கின்றன. விதைப் பண்ணைகளின் ஒவ்வொரு 1,000 ஏக்கருக்கும் வேளாண்மை சிறப்புக் கட்புல விளக்குநர் ஒருவரும், இரண்டு வேளாண்மை மேஸ்திரிகளும் சிறப்புப் பணியாளர்களாகப் பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் ஆதாய–விரயமற்ற அடிப் படையில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டம் 1971–72-லிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### விதைகளின் தரம் பற்றி சான்றளிக்கும் திட்டம்.

சீரான நல்ல தரமுள்ள விதைகளை வழங்குவதன் பொருட்டு விதை களின் தரம்பற்றிச் சான்றளிப்பதற்கு துறை சார்ந்த நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதும் நல்ல தரமான விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். 1—10—1969-லிருந்து செயலுக்குக் கொண்டு வரப்பட்ட விதைகள் சட்டத்தின்கீழ், ஒவ்வொரு பயிர், விதைகளின் வகை, விதைகளின் சாதி ஆகியவற்றிற்கு சில குறைந்த அளவு தரங்கள் முடிவு செய்யப்படுகின்றன. மேற்சொன்னபடி வரை யறுக்கப்பட்ட தரங்களை உடைய விதைகள் மட்டும்தான் உழவர் களுக்கு விதைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும். அத்தகைய தரங்கள் பேணி பாதுகாக்கப்படவில்லையானால், தரமற்ற அந்த விதைகளை வழங்கும் நபர்கள் தண்டனைக்குட்படுவார்கள். இத் திட்டம் 1—4—1970 அன்று தொடங்கப்பட்டது.

விதைகள் வாணிகத்தை மேற்கொள்வதற்குப் பல நபர்களும் நிறு வனங்களும் முன் வரலாம். விதைகளைப் பெருக்குதல், வழங்குதல் ஆகிய பணிகளைப் பிரித்து கொடுத்ததால், பலமுகவரப்புகளினால் வழங்கப்பட்ட விதைகளின் தரத்தைப் பேணி வருதல் அவசிய மாகிறது. எனவே விதைகள் குறித்த சான்றளிக்கும் முறைக்கு அவசியமேற்படுகிறது. விதைகள் குறித்து சான்றளிக்கும் இத்திட்டத் தின்கீழ் பணியாற்றும் பணியாளர்கள், விதை உற்பத்தியாளர்களின் பயிர்களை அதை அவர்கள் நட்ட நாளிலிருந்து அறுவடை வரை மூன்றிலிருந்து 4 முறை பார்வையிடுவார்கள். விதைகளை போரடித் தல், உலர வைத்தல், சேமித்து வைத்தல் முதலிய காலங்களிலும் அவர்கள் அவ்விடத்தில் இருப்பார்கள். விதைகளின் மாதிரிகள் பிரித்தெடுக்கப்பட்டு, விதைப் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப் படும். பரிசோதிக்கப்பட்ட அந்த விதைகள் வரையறுக்கப்பட்ட தரத்தைப் பெற்றிருந்தால் அந்த விதைகளுக்குச் சான்றளிக்கப்படும்.

1971–72-ல் 12,000 ஏக்கர்கள் இந்த விதைச் சான்றளிக்கும் திட்டத்தின்கீழ் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உரமிடும் திட்டம்.

உள்ளூர் எரு வளங்களை மேம்படுத்தல்—

கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் அனைத்தையும் பயன்படுத்துவது, அவைகளை நல்ல தரமுள்ள கலப்பு உரமாக மாற்றுவது ஆகியவையே அத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கலப்பு உரமிடும் இடத்தை பராமறிக்கவும், நல்ல தரமுள்ள கலப்பு உரத்தைத் தயாரிப்பதில் தேவையான தொழில் நுட்ப ஆலோசனையை வழங்கவும் வேண்டி, உழவர்களுக்கும், ஊராட்சிகளுக்கும் உதவுவதற்கு கலப்பு உர வளர்ச்சி இன்ஸ்பெக்டர் ஒருவர் ஒவ்வொரு வட்டாரத்திலும் நிய மிக்கப்பட்டார். வட்டார அளவில், மாவட்ட வேளாண்மை அதிகாரி (கலப்பு உரம்) ஒருவர் கலப்பு உர வளர்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார். இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி எதுவும் வகை செய்யப்படவில்லை. இந்தப் பணியாளர்களுக்கு ஆகும் செலவு, திட்டத்தின் கீழ் வராத செலவுகளில் நேர் செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1971–72-ஆம் ஆண்டில் 72.00 லட்சம் மெ. டன்கள் கலப்பு எரு தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

கழிப்பு எருத் திட்டம்.—பெரிய ஊராட்சிகளிலும், சிறிய ஊராட்சிகளிலும் கிடைக்கக்கூடிய குப்பைகள் அனைத்தையும், மலக் கலவையும் தரமுள்ள எருவாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மலக்கலவை எருப் பணியினை மேற்கொள்வதற்காக, இடம், கருவிகள் முதலானவைகளை வாங்கவேண்டி, பெரிய ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றிற்கு ரூ. 3,600 என்ற அதிக அளவுக்குட்பட்ட கடன்கள் வழங்கப்படுகின்றன. கடன்கள் கொடுப்பது தற்போது தள்ளிப் போடப்பட்டுள்ளது. எனினும், பெரிய ஊராட்சிகளுக்கு கொடுக் கப்படும் உதவித் தொகை தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. உரத்தினை உற்பத்தி செய்யும் தொடர் இனச் செலவில் 25 சதவீதத்தை நேர் செய்வதற்கு ஊராட்சி ஒன்றிற்கு ரூ. 150 என்ற வரம்புக்குட் பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உதவித்தொகை கொடுப் பதற்காக ஒவ்வொரு ஆண்டும் திட்டத்தில் ரூ. 1.00 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. நான்காவது திட்டக்கால அளவின் ஒவ்வொரு ஆண்டிற்குமான திட்டக் குறிக்கோள் அளவு 3.00 லட்சம் மெ. டன்னுக முடிவு செய்யப்பட்டுள்ளது.

மலக்கலவை எருத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு நேர்விலும் ரூ. 150 என்ற அதிக அளவுக்கு உட்பட்டு, எருத் தயாரிப்புச் செலவின் மொத்தத்தில் 25 சதவீதம் உதவித் தொகையாக ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகிறது. நகர்புற கலப்பு உரத் திட்டத்தின் கீழ் கலப்பு உரத்தை உற்பத்தி செய்வதற்காக இடங்கள், லாரிகள் ஆகியவைகளை வாங்குவதற்காக, பேரூராட்சிகள், நகரியக் குழுக்கள் ஆகியவற்றிற்குக் கடனுதவி வழங்கப்படுகிறது. உற்பத்திச் செலவில் 25 சதவீதம் அல்லது உண்மையான விரயம் ஆகிய இந்த இரண்டில் எது குறைவோ, அது அவர்களுக்கு உதவித்தொகையாக வழங்கப்படுகின்றது.





நுண்ணுயிர்களை உற்பத்தி செய்து அவற்றை குப்பிகளில் அடைத்து வழங்குதல்.—பயிர்களின் வளர்ச்சிக்கும் மண் வளத்தினுக்கும் வகை செய்வதற்காக அதிக அளவில் உழவர்களுக்கு இந்த பயிற்றின் நெற்று நுண்ணுயிர்களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கோயம்புத்தூர், ஆடுதுறை, மதுரை, கோயில்பட்டி, காஞ்சிபுரம் ஆகிய 5 இடங்களில் உள்ள பிரிவுகள் நுண்ணுயிர்களை வளர்த்துக் குப்பிகளில் அடைத்து வழங்குவதில் ஈடுபட்டு வருகின்றன. ஒவ்வொரு பிரிவும் ஓர் ஆண்டுக்கு 10,000 குப்பிகள் உற்பத்தி செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. குப்பி ஒவ்வொன்றும் ரூ. 2 வீதம் விற்கப்படுகின்றது. நான்காவது திட்டக் காலத்தின் இறுதியில் 50,000 குப்பிகள் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

## நகர்ப்புற கலப்பு உரம்.

நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் கிடைக்கப்பெறும் குப்பைகள் அனைத்தையும் மலக் கலவையையும் மதிப்புள்ள கலவை உரமாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பணியை மேற்கொள்வதற்காக, கலப்பு உரத்திற்கான இடத்தை அமைப்பதற் கேற்ற இடத்தை வாங்கவும், கலப்பு உர இடத்திற்கு பொதுவான சீரமைப்புக்களைச் செய்யவும், குப்பைகளைக் கலவை உரத் தயாரிப்பு இடத்திற்கு அனுப்ப டிராக்டர்களும், தொடர்வண்டிகளும் வாங்கவும் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

கலப்பு உரத்தை உற்பத்தி செய்வதில் உள்ளாட்சி அதிகாரி மன்றங்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கலப்பு உர உற்பத்தியின் செலவில் 25 சதவீதம் அல்லது உண்மையான விரயம் இதில் எது குறைவோ அது உதவித்தொகையாகக் கொடுக்கப்படுகின்றது. உதவித் தொகையைக் கொடுப்பதற்காக, நான்காவது திட்டக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ. 1.00 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1971–72-ல் கடன் வழங்குவது குறித்து ரூ. 6.00 லட்சமும், உதவித் தொகை வழங்குவது தொடர்பாக ரூ. 1.00 லட்சமும் செலவிடக் கருதப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான திட்டக் குறிக்கோள் அளவு 8.50 மெ. டன் கலப்பு உரமாகும்.

## தழை உரத் திட்டம்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக தாள் உரங்களையும் தழை உரங்களையும் பயன் படுத்துவதனுல் கரிம உரத்தைக்கொண்டு மண் வளத்தினை கூடுதலாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தன்னிடத்தே அதிக உர வளத்தைக் கொண்டுள்ளதால், தாள் உரம் மண் வளப் பெருக்கத்தைத் திறம்படப் பேணிவருகிறது. தாள் உர விதைகளைக் கொள்முதல் செய்யவும், விற்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இந்த விதைகள் அங்காடிகளில் நிலவி வரும் விலைகளில் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்த விதைகளை விற்பனை செய் வதில் அனுமதிக்கப்பட்டுவந்த உதவித் தொகை இப்போது நிறுத்தப் பட்டுள்ளது.

[1971 சூலை 24

நான்காவது திட்டக் காலத்தில் முதல் ஆண்டில் அதாவது 1969–70-ல் 3,500 டன்கள் தாள் உரவிதைகள் வழங்கப்படவேண்டுமென்று குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டிருக்க 2,342 மெ. டன்கள் பசுந்தாள் உர விதைகள் வழங்கப்பட்டன. தாள் உர விதைகள் விதைக்கப்பட்ட பகுதிகள் 14.20 லட்சம் ஹெக்டேர்கள். இதில், வணிகர்களால் வழங்கப்பட்ட விதைகள் தானே உரமாக ஆன தாள் உரங்கள், உழவர்கள் விதைத்த விதைகள் ஆகியவை அடங்கும். 1970–71-ல் 2,000 மெ. டன்கள் குறிக்கோள் அளவுக்கும் மேல் 2,045 மெ. டன்கள் தாள் உர விதைகள் வழங்கப்பட்டன. விதைகள் வழங்கப்பட்டதின்கீழ் 1971–72-க்கான குறிக்கோள் அளவு 2,100 மெ. டன்களாகும். விதைகள் நடப்பட்ட பகுதி 23.72 லட்சம் ஹெக்டேர்களாகும்.

## இரசாயன உரங்கள்.

ஆதாயமளிக்கத்தக்க வகையில் பயிர்கள் விளைவிப்பதற்கு இரசாயன உரங்கள் இன்றியமையாதனவாகும். மிகு பயன்தரும் தானிய ரகங்கள் பயிரிடும் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வந்த பிறகு, இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. உள்நாட்டு உர உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த இரசாயன உரத்தின் மீதானக் கட்டுப்பாட்டை தளர்த்தியதன் காரணமாக மத்திய உரத்தொகுப்பு இறக்குமதியாகும் உரங்களை மட்டும் விற்பனை செய்துவருகிறது. உள்நாட்டு உர உற்பத்தியாளர்களிடமிருந்து கிடைக்கக்கூடிய உர அளவினை வழங்குவதற்கு இந்த அரசு உறுதியளிக்கிறது. எஞ்சிய தேவைகளை மத்திய உரத் தொகுப்பிடமிருந்து பெற்று நேர் செய்யுமாறு இந்திய அரசு கேட்கப்பட்டுள்ளது. இதனால், வேளாண்மை உற்பத்தித் திட்டங்களின் உரத் தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவு செய்யப்படுகிறது.

முன்னர், இம்மாநிலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் உரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. மாவட்டங்கள் அனைத்திலும் உர விற்பனையை சோதனை அடிப்படையில் தனியார் வணிகர்களையும் ஊராட்சி ஒன்றியங்களையும் ஈடுபடுத்த அரசு முடிவு எடுத்ததன் விளைவாக தற்போது உரம் வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்கள், தனி வணிகர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை ஈடுபட்டுள்ளன. 140 உரக் கலவை நிறுவ்னங்கள் உள்ளன. 11,000 உர விற்பனையாளர்களும் இருக்கின்றனர். உரம் விற்க உரிமம் வழங்கும் ஏற்பாட்டிற்குப் பதிலாக, தாராளமாகப் பதிவு செய்துகொள்ளும் ஏற்பாடு ஒன்று செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இம்மாநிலத்தின் கீழ் மூலைமுடுக்குகளிலெல்லாம் எண்ணிறந்த உர விற்பனை நிலையங்களை ஏற்படுத்த வழிகோலப்பட்டுள்ளது. இதனால் உழவர்களுக்கு எளிதில் உரங்கள் கிடைக்கின்றன. தஞ்சாவூர் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் அரசு விற்பனையாளராக தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பை அரசு நியமித்திருக்கிறது. தஞ்சாவூரில் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு அரசு விற்பனையாளராகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.



1971 சூலை 24]

மாநிலத்தில் உரங்களின் உபயோகம் ஒவ்வொரு ஆண்டும் பெருகி வருகிறது. கடந்த ஆண்டுடன் இக்கூடுதலை ஒப்பிடும்போது உர உபயோகம் 1966–67-ல் 21 சதவீதமும், 1967–68-ல் 13 சதவீதமும், 1968–69-ல் 17 சதவீதமும், 1969–70-ல் 31 சதவீதமும் அதிகமாயிருப்பது தெரிய வரும். நைட்ரஜன் உரவகைகளின் கணக்கில் சொன்னால், 1966–67-ல் உர உபயோகம் 85,000 டன்களாக இருந்தது. 1969–70-ல் 1,48,000 டன்களாக உயர்ந்தது. மாநிலம் முழுவதும் அரசு வாணிபத் திட்டங்களின்கீழ் போதிய இருப்பு இருந்ததனால் 1970–71-ல் உரம் வழங்கும் நிலை மனநிறைவளிக்கும்படி இருந்தது. 1970–71-க்கான உரம் பயன்படுத்தும் குறிக்கோள் அளவு 1.80 லட்சம் டன் நைட்ரஜன் உரங்களும், 0.60 லட்சம் டன் பாஸ்பர உரங்களும், 0.50 லட்சம் டன் பொட்டாஷ் உரங்களும் ஆக இருந்தது. குறிக்கோளளவு இப்படி இருக்க, 1970–71-ல் உர உபயோகம் உச்ச நிலையை அடைந்தது. இந்த ஆண்டில் 1.73 லட்சம் டன் நைட்ரஜன் உரங்களும், 0.72 லட்சம் டன் பாஸ்பர உரங்களும், 0.51 லட்சம் டன் பொட்டாஷ் உரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முந்திய ஆண்டை விட 1970–71-ல் நைட்ரஜன் உரங்கள் 16.8 சத வீதமும், பாஸ்பரஸ் உரங்கள் 71.4 சத வீதமும், பொட்டாஷ் உரங்கள் 54.5 சதவீதமும் அதிகமாய்ப் பயன்படுத்தப்பட்டன, தொகுப்பு தொகுப்பில்லாத நிறுவனங்களிடமிருந்து உரங்கள் வழங்குவது மேம்பாடடைந்ததன் காரணமாக, நல்ல கோணிகளில் உரங்களை வழங்கச் செய்வதற்கு அரசு சிறப்பான முயற்சிகளை எடுத்து வருகிறது. உழவர்கள் ஒரு மூட்டைக்குக் குறைவாக சிறுசிறு அளவுகளில் உரம் வேண்டுமென்று கேட்டாலும் அவர்களுக்கு அதை வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கட்டளையிடப்பட்டுள்ளனர். உழவர்கள் மேலும் மேலும் உரங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கவும், வரையறுக்கப்பட்ட அளவுகளில் சரிசமமான அளவில் உரங்களைப் பயன்படுத்த உழவர்களுக்குப் பயிற்றுவிக்கவும் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## கடன் வசதிகள்.

மும்முர உரத் திட்டத்தின்கீழ், கூட்டுறவு வங்கிகள் மூலமும், வணிக வங்கிகள் மூலமும் கிடைக்கும் நிறுவன நிதியைத்தவிர, உரங்கள் வகையிலும் உழவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் மிகுபயன் தரும் தானியத் திட்டத்தில் கலந்துகொள்ளும் உழவர்கள் உட்பட எல்லோருக்கும் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள முழு நிதித் திட்டத்தின்கீழ் வரும் உழவர்களும் இதன் பயனைப் பெறுவர். உழவர்களுக்குக் கடனைக் கொடுப்பதற்காக தக்காவிக் கடன் குறித்து அரசு வாணிகத் திட்டத்தின்கீழ் மாநில அரசு வழங்கும் உரங்களின் விலையில் ஆறில் ஒரு பகுதியை கடனுதவியாக இந்திய அரசு கொடுக்கிறது. இந்திய அரசிடமிருந்து பெற்ற உதவியைப் பயன்படுத்தி மும்முர உரமிடுதல் திட்டத்தின்கீழ் உழவர்களுக்குக் கடன் தொகையைக் கொடுக்க மாநில அரசு நிதி ஒதுக்கீடுகளைச் செய்துள்ளது. ஏக்கர்கள் அடிப்படையிலும், தனிப்பட்டவர்கள் அடிப்படையிலும் அவ்வப்போது அரசினால் முடிவு செய்யப்படுகிற மேல்வரம்புக்குட்பட்டு பல்வேறு பயிர்களுக்கான கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 1970–71-ம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் உணவுப் பயிர்களுக்கு மட்டும்

[1971 ஜூலை 24

அதாவது நெல் சிறுதானியங்கள் ஆகிய பயிர்களுக்கு மட்டும் கடன்கள் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 1970–71-ல் ரூ. 625 லட்சம் ஒப்பளிக்கப்பட்டு பின் வழங்கப்பட்டது.

1971–72-ஆம் ஆண்டுக்கான இரசாயன உரங்களின் தேவைகள், அவைகளைப் பயன்படுத்தல் ஆகியவற்றின் குறிக்கோள் அளவு மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | நைட்ரஜன் உரம். | பாஸ்பரம் உரம். | பொட்டாஷ் உரம். |
|---|---|---|---|---|
| பயன்படுத்தல். | | (மெட்ரிக் டன்களில்.) | | |
| முன்பருவப் பயிர் Kharif, | 1971 | 85,000 | 28,000 | 24,000 |
| பின்பருவப் பயிர்கள் (Rabi), | 1971–72 | 105,000 | 32,000 | 26,000 |
| மொத்தம், | 1971–72 .. | 190,000 | 60,000 | 50,000 |
| உரத்தேவைகள். | | | | |
| முன்பருவப் பயிர், | 1970–71 .. | 55,600 | 8,200 | 22,250 |
| | 1971 .. | .. | .. | .. |
| பின்பருவப் பயிர், | 1971–72 .. | 105,000 | 32,000 | 26,000 |
| மொத்தம், | 1971–72 .. | 160,600 | 40,200 | 48,250 |

1971–72 முதல் காலாண்டுக்காக 20,000 டன்கள் யூரியாவை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.

உழவர்களின் துயர் தணிப்பு அளிப்பதைக் கருத்தில் கொண்டு, 1—3—1969-க்கு முன்னால் வாங்கிய அமோனியம் சல்பேட், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா ஆகியவை தவிர பிற இரசாயன உரங்களின் பழைய இருப்பை தீர்வை விதிக்கப்படுவதற்கு முன் உள்ள விலையில் அதாவது 1—3—1969-க்கு முன்னால் விற்ற விலையில் விற்க அரசு அனுமதித்துள்ளது. இந்த சலுகை விற்பனை 1970–71 ஆண்டு முழுவதும் செயலில் இருந்தது. இந்தச் சலுகை விற்பனையை 1971–72-லும் தொடர்ந்து நடத்த முடிவு செய்துள்ளது. யூரியா, பொட்டாஸ் ம்யூரியேட் ஆகியவற்றின் தொகுப்பு விலையில் முறையே மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 20-ம், ரூ. 10-ம் குறைந்திருப்பதாக இந்திய அரசு தற்போது அறிவித்துள்ளது.

உரம் வாங்குவோருக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் பழைய இருப்பு டை–அமோனியம் பாஸ்பேட், மூரியேட் ஆப் பொட்டாஷ், நான்கு வகை என். பி. கே. காம்ளகஸ், அமோனியம் சல்பேட் யூரியா, ஆகிய உரங்களை மீண்டும் புதிய பைகளில் நிறைத்து சரியான எடையுடன் கிடைப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்சொன்ன முறையில் விற்பனை செய்ய 50 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு செலவு ரூ. 2 (இரண்டு) ஆகும். இதில் புதிய சாக்குகளின் விலையை மட்டும் வாங்குவோரிடமிருந்து வசூலிக்கப்படும். எடை குறைவான மூட்டைகளை சரியான எடையுள்ளதாக மாற்ற ஆகும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். பல்வேறு மாவட்டங்களில் உள்ள பழைய உர இருப்புகள் மேற்சொன்ன முறையில் நிறைந்த புதிய மூட்டைகளாக் மாற்றப்பட்டுள்ளன. ஒரு மூட்டைக்கும் குறை



1971 ஜூலை 24]

வாக உரங்கள் தேவையுள்ள விவசாயிகட்கும் அவர்கள் தேவைக்கேற்ப கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கூடுதலாக சில்லரை விற்பனை விலைக்குமேல், ஓர் சிறு தொகையை பெயரளவில் வசூலிக்கவும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உரங்களின் இருப்பு நிலைமை மனநிறைவளிப்பதாக இருக்கிறது. 15—6—1971 அன்றுள்ளபடி, தொகுப்பு உரங்களின் இருப்பு நிலைமை பின்வருமாறு உள்ளது:—

| | ரகம். | மெட்ரிக் டன்களில். |
|---|---|---|
| 1 | அம்மோனியம் சல்பேட் .. .. .. .. | 24,129 |
| 2 | யூரியா .. .. .. .. .. .. .. | 31,825 |
| 3 | அம்மோனியம் ஸல்பேட்–நைட்ரேட் .. .. | 47 |
| 4 | கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்— | |
| | 20·5 சதவீதம் .. .. .. .. .. | 112 |
| | 26 சதவீதம் .. .. .. .. .. | 1,011 |
| 5 | டை–அம்மோனியம் பாஸ்பேட் .. . .. | 31,871 |
| 6 | அம்மோனியம் பாஸ்பேட் .. .. .. .. | 10,993 |
| 7 | அம்மோனியம் குளோரைட் .. .. .. .. | 1,555 |
| 6 | பொட்டாசியம் மியூரேட் .. .. .. .. | 367 |
| 9 | பொட்டாஷ் ஸல்பேட் .. .. .. .. .. | 180 |
| 10 | என்.பி.கே. கலவை— | |
| | 15 : 14 : 14 .. .. .. | 5,867 |
| | 15 : 15 : 15 .. .. .. | 1,925 |
| | 12 : 24 : 12 .. .. .. | 2,427 |
| | 14 : 28 : 14 .. .. .. | 929 |

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத் திட்டம்.

வேளாண்மை மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு வேளாண்மை மறுகடனுதவிக் கழகம் கடன் வசதிகளை வழங்கி வருகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைத் துறைக்கு கடன் வசதிகள் அனைத்தையும் அளிக்கவும் அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. எனவே, வேளாண்மை மறுகடனுதவிக் கழகம் உதவிசெய்யும் திட்டங்களைப் பொறுத்தவரையில் கிணறு வெட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல், விசையேற்றங்களை நிறுவுதல், கால்நடை, கோழி வளர்ச்சி முதலிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலவளவங்கிகள் நீண்டகாலக் கடன்களையும் கூட்டுறவுக் கடன் வழங்கு வங்கிகள் மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவை நடுத்தரக்கால கடன்களையும் வழங்கி வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் திராட்சை வளர்ச்சித் திட்டம், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முந்திரி வளர்ச்சித் திட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தென்னை வளர்ச்சித் திட்டம், பழனி மலையில் காப்பி பயிர் வளர்ச்சித் திட்டம், நீலகிரியில் தேயிலை வளர்ச்சித் திட்டம் முதலிய 11 திட்டங்கள் அரசினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

[1971 ஜூலை 24

செம்மறியாடு வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக 39 திட்டங்களை கால்நடை வளர்ச்சி இயக்குநர் வகுத்துள்ளார். இவை வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெறுவதன் மூலம் செயல் படுத்தப்படவேண்டும். ஆகவே, இத்திட்டங்கள் மேற்படிக் கழகத் திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான உதவி பற்றி மேற்படிக் கழகம் ஒப்பளிப்பு வழங்குவது எதிர்பார்க்கப் படுகிறது.

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று புதுக்கோட்டை கோட்டத்தில் கலப்புப் பண்ணைப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை கால்நடை வளர்ச்சி இயக்குநர் வகுத்துள்ளார். இத்திட்டத்திற்கு ஏற்படும் செலவு ரூ. 144 லட்ச மாகும். இத்திட்டம் குறித்து கால்நடை வளர்ச்சி இயக்குநருடனும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருடனும் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகிறது.

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று திருநெல்வேலி மாவட்டத்தில் படகு கட்டும் துறையை ஏற்படுத்து வதற்கான திட்டம் ஒன்றை மீன்வளத்துறை இயக்குநர் வகுத் துள்ளார். இத் திட்டத்திற்கு ஏற்படும் செலவு ரூ. 78.70 லட்சமாகும்

## மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள்.

தமிழ்நாட்டில் உழவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தற்போது 10 மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு :—

| இடம் (1) | | ஒதுக்கப்பட்ட மாவட்டங்கள் (2) |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | ... | கோயம்புத்தூர், நீலகிரி |
| 2. ஆடுதுறை | ... | தஞ்சாவூர் |
| 3. கோவில்பட்டி | ... | திருநெல்வேலி, கன்னியாகுமரி |
| 4. கடலூர் | ... | தென் ஆற்காடு |
| 5. குடியாத்தம் | ... | வட ஆற்காடு |
| 6. மதுரை | ... | மதுரை |
| 7. காஞ்சிபுரம் | ... | செங்கற்பட்டு |
| 8. சேலம் | ... | சேலம், தருமபுரி |
| 9. பரமக்குடி | ... | இராமநாதபுரம் |
| 10. திருச்சிராப்ப ளி | ... | ள்திருச்சிராப்பள்ளி |

மண்வளப் பரிசோதனை இயல் ஊர்திப் பிரிவு ஒன்றை இந்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு ஒதுக்கியுள்ளது. இது ஆடுதுறையில் செயல்பட்டு வருகிறது.

வளர்ச்சி வட்டார அளவில் செழிப்புத் தன்மை பற்றிய ஆய்வு ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது. கிராம அளவில் செழிப்புத் தன்மைப்பற்றிய ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டமும் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

கிராம அளவில் செழிப்புத்தன்மை பற்றிய ஆய்வின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக (மாவட்ட முழுமுர வேளாண்மைத் திட்டங்கள்) ஏனைய எல்லா மாவட்டங்களிலும் பாசனமளிக்கப்படும் பகுதியில் ஒவ்வொரு 25 ஏக்கருக்கும் மண் மாதிரி ஒன்று பெறப்படு



1971 ஜூலை 24]

கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில், பாசனம் பெறும் பகுதியில் ஒவ்வொரு ஐந்து ஏக்கருக்கும் மண் மாதிரிகள் பெறப்படுகின்றன. செழிப்புத்தன்மைப்பற்றிய வரைபடங்கள் தயாரிக்கப்படுகையில், பயிர் களுக்கு ஏற்ற உரங்களின் அளவு குறித்து அந்தந்த இடத்திலேயே பரிவுரை செய்வது எளிதாகும்.

ஆடுதுறையிலுள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் நீங்கலாக 1969–70-ல் ஒவ்வொரு ஆய்வுக்கூடத்திலும் ஆண்டொன் றுக்கு 15,000 மண்மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும் என்ற திட்ட இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் நீர் குறித்த மாதிரிகள் அடங்காது. ஆடுதுறையிலுள்ள ஆய்வுக்கூடம் ஆண் டொன்றுக்கு 48,000 மண்மாதிரிகளை பகுப்பாய்வு செய்யவேண்டும். 1970–71-ல், ஆடுதுறை நீங்கலாக ஒவ்வொரு ஆய்வுக்கூடத்திற்கும் இலக்குகள் திருத்தியமைக்கப்பட்டு நிச்சயிக்கப்பட்டுள்ளன. ஆடு துறை தவிர ஏனைய மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு 30,000 மண்மாதிரிகளை ஆய்வு செய்யவேண்டும் என்னும் குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டுள்ளது. நீர் குறித்த மாதிரிகள் இவற்றில் அடங்கா. ஆடுதுறையிலுள்ள ஆய்வுக்கூடம் ஆண்டொன்றுக்கு 1,00,800 மண்மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது.

## பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்.

உணவுப் பயிர்களும் ஏனைய பயிர்களும் பூச்சிகளினாலும் நோய் களினாலும் பாதிக்கப்படுதனின்றும் பாதுகாக்க உழவர்களுக்குத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்கி வருகின்றது. பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவும் பயிர்கள் பூச்சிகளினால் பாதிக்கப்படுவதினின்றும் பாதுகாக்கவும் வேண்டி ஊக்கமளிக்க சலுகை வீதங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்க உழவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். 1967 (1967 ஆகஸ்டு)-ஆம் ஆண்டுவரை, உணவுப் பயிர்கள் குறித்து செலவில் 75 சதவீத விலை யிலும், பருத்தி, கரும்பு, வேர்க்கடலை, எள், தென்னை, காய்கறிகள் முதலிய உணவுப் பயிரல்லாத பயிர்கள் குறித்து பாதி விலையிலும், கிருமிநாசினிகளும் காளான் ஒழிப்பு மருந்துகளும் வழங்கப்பட்டன. 1965–66-ல் முனைப்புப் பகுதிகளிலுள்ள புகையிலைப் பயிர்களுக்கும் இந்த 50 சதவீத உதவிச் சலுகை நீட்டிக்கப்பட்டது.

திட்ட ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி, உதவித் தொகை வழங்கும் திட்டம் படிப்படியாக கைவிடப்பட வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அதன்படி, 1969–70-ல் உதவித்தொகை வழங்குவது 35 சத வீதத்திலிருந்து 30 சத வீதமாகவும் 1970–71-ல் 15 சத வீதமாகவும் குறைக்கப்பட்டது. இதனால் உழவர்கள் அடைந்துவரும் இடர்ப்பாட்டினைத் தமிழ் நாடு அரசு அறிந்து கொண்டது. அதனால் 1971–72-ஆம் ஆண்டிலும் இந்த 15 சதவீத சலுகையைத் தொடர்ந்து நீடித்துவர முடிவு செய்தது.

1970–71-ல் விமான மூலம் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் பணியில் ஒன்பது நிறுவனங்கள் ஈடுபட்டன. ஹெலிகாப்டர்கள் கிடைக்காத பகுதிகளில் விமானங்கள் மூலம் மருந்து தெளிப்பது தொடங்கப்பட்டது. இது குறித்து உழவர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இக்கட்டணம்

[1971 ஜூலை 24

எல்லாப் பயிர்களுக்கும் உட்பட்டதாகும். பூச்சிக்கொல்லி மருந்துகள் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டு வேளாண்மை விற்பனை நிலையங்கள் மூலமாக சலுகை விலையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நச்சுத் திறன் குறைவாக உள்ள இரசாயன உரங்களை விற்க கூட்டுறவு நிறுவனங்களும் அனுமதிக்கப்படுகின்றன. இவை உழவர்களுக்குச் சலுகை விலையில் இரசாயன உரங்களை வழங்கி வருகின்றன.

பல்வேறு வேளாண்மைக் கோட்டங்களிலிருந்து பூச்சி இயல் வல்லுநராலும், பூச்சி இயல் இணை பேராசிரியராலும் பெறப்படும் விவரங்கள் மூலம், பூச்சி, நோய்த்தாக்குதல் பற்றிய விவரங்கள் ஒவ்வொரு வாரமும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. ஒலிபரப்பு அறிக்கைகள் எல்லா மாவட்ட வேளாண்மை அதிகாரிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கோட்டங்களில் பூச்சி, நோய் தாக்குவதைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலுகிறது.

1970–71-ல் (1971 ஜனவரி முடிய) திட்ட இலக்குகள், எய்திய சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1970–71 திட்ட இலக்கு. | 1971 ஜனவரி முடிய எய்திய சாதனை. |
|---|---|---|
| உணவுப் பயிர்கள் (லட்சம் ஏக்கரில்) .. .. | 66·00 | 57·146 |
| தெளிப்பான்கள் (தடவைகள்) .. .. | 5,500 | 5,446 |
| தூவு கருவிகள் (தடவைகள்) .. .. | 500 | 683 |

பயிர்ப் பாதுகாப்புச் சாதனம்.—பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்தி பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், கையினால் இயக்கப்படும் தெளிப்பான்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க 25 சதவீத உதவித்தொகையை அரசு அனுமதித்துள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் உழவர்களுக்கு இக்கருவிகளை வழங்குகின்றன. ஒவ்வோர் ஆண்டும் முறையே 5,000, 400 தெளிப்பான்கள், தூவுக் கருவிகள் (கையினால் இயக்கப்படுபவையும், மின்விசையினால் இயக்கப்படுபவையும் வழங்கப்பட வேண்டும் என்ற திட்ட இலக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து வேளாண்மைத் துணை இயக்குநர் வட்டாரங்களுடன் ஐந்து பயிர்ப் பாதுகாப்புத் தொகுப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுப்பிலும் தேவையான எண்ணிக்கையில் தெளிப்பான்களும் தூவு கருவிகளும் (கையினால் இயக்கப்படுபவையும், மின்சக்தியினால் இயக்கப்படுபவையும்) உள்ளன. இத்தொகுப்பிலிருந்து உழவர்களுக்குத் தெளிப்பான்கள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. பயிர்ப் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்துள்ள இயந்திரக் கம்மியர் பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவது குறித்தும் அக்கருவிகளைப் பேணி வருவது குறித்தும் நேரிடைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கின்றனர். பழுதடைந்த கருவிகளும் இயந்திரக் கம்மியர்களால் பழுது பார்க்கப்படுகின்றன.



1971 ஜூலை 24]

பயிர்ப்பாதுகாப்புத் தொகுப்புகளுக்குச் சாதனங்களை அதிக அளவுக்கு அளிக்க வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு, ஆண்டுதோறும் 300 விசைத் தெளிப்பான்களை வாங்குவதன் மூலம் தொகுப்புகளுக்கு வழங்கப்படும் கருவிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

## விமானம் மூலம் மருந்து தெளித்தல்.

இந்நாட்டில் விமான மூலம் மருந்து தெளிக்கப்படும் மொத்தப் பரப்பளவைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு பிற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தென் மாநிலங்களுக்கான கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து இது தெரியவரும் :—

| | ஆந்திரப் பிரதேசம். | மைசூர். | கேரளம். | தமிழ்நாடு |
|---|---|---|---|---|
| | (பரப்பளவு ஏக்கரில்.) | | | |
| 1968–69 .. | 2,000 | 20,000 | 36,219 | 2,95,755 |
| 1969–70 | 8,135 | 93,680 | 38,004 | 1,95,084 |

அடைந்துள்ள முன்னேற்றம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1968–69 ... ... ... ... | 2,95,755 ஏக்கர். |
| 1969–70 ... ... ... ... | 1,95,084 ஏக்கர். |
| 1970–71 ... ... ... ... | 6,97,400 ஏக்கர். |

1971–72-ல் 15 லட்சம் ஏக்கரில் விமானம் மூலம் மருந்து தெளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர்ப்பாதுகாப்பு இரசாயனங்களுக்காக வழக்கமாக அனுமதிக்கப்படும் உதவித் தொகையுடன்கூட, விமானமூலம் மருந்து தெளிப்பதற்கான வாடகைக் கட்டணங்கள் குறித்த 50 சதவீத மானியம் உதவித் தொகையாக உழவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்தது. 1969–70 முதல் இந்த உதவித்தொகை மாநிலத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த மானியத்திலிருந்து சரிக்கட்டப்பட வேண்டும் என்று இந்திய அரசு கூறியுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 7 வீதம் நோய் பரவியுள்ள 5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மருந்து தெளிப்பதற்கான செலவுகளைச் சரிகட்டும் வகையில் இந்திய அரசு தற்போது ரூ. 35 லட்சம் அளவுக்கு நிதி உதவியை உயர்த்தியுள்ளது. மொத்தத் திட்ட மானியத்துக்குமேல் கூடுதலாக இது வழங்கப்படும். தரிசு நிலங்கள் குறித்து ஏற்படும் செலவும் பிற பயிர்கள்மீது மருந்து தெளிப்பது குறித்து ஏற்படும் செலவில் குறிப்பிட்ட சதவீதத் தொகையும் மாநில அரசினால் ஏற்கப்படுகிறது.

## பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடம்.

உழவர்களுக்கு வழங்கப்படுவதற்காக நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படும் இரசாயனங்களைச் சோதனை செய்து அவற்றிற்குச் சான்றளிக்கும் திட்டம் இம் மாநிலத்தில் செயலில் உள்ளது. தற்

போது, கோயம்புத்தூர், கோயில்பட்டி, ஆடுதுறை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நான்கு பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் உள்ளன. விற்பனை நிலையங்களுக்கு இருப்புகள் வரும்போதெல்லாம் அவை விற்பனை செய்யப்படுவதற்கு முன்பு அந்நிலையங்களிடமிருந்து பெறப்பட்ட சோதனை மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் சோதனையிடப்படுகின்றன. இந்தத் தரமான இரசாயனங்கள் மட்டுமே வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப் படுகின்றன.

காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள பூச்சிக்கொல்லி மருந்து சோதனை ஆய்வுக்கூடங்களில் போதிய சாதனங்கள் இல்லாத தால் அங்கு சோதனை மாதிரிகளைப் பரிசோதனை செய்வது இன்னும் தொடங்கப்படவில்லை.

## மாநிலத்திற்கு ஹெலிகாப்டர்கள்/விமானங்கள் வாங்குதல்.

புதிய வேளாண்மை முறைகளில் பயிர்ப்பாதுகாப்பு அதிக அளவு சிறப்பிடம் பெற்றுள்ளது. பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றித் தெரிந்துகொள்வதிலும் அவற்றை மேற்கொள்வதிலும் உழவர்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. தரமான விதைகள், உரங்கள், பாசனம் ஆகியவற்றுடன் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியமான நான்கு கூறுகளில் பயிர்பாதுகாப்பும் ஒரு கூறாக உள்ளது.

தமிழ் நாட்டில் விமானமூலம் மருந்து தெளிப்பு முறை 1961–62-இல் முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் ஆண்டு தோறும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக மிகு பயன் தரும் தானிய வகைகள், வேர்க்கடலை, பருத்தி போன்ற வாணிபப் பயிர்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பயிர்ப் பாதுகாப்பு "அவசியம்" என்பதைக் கருதி, அண்மை ஆண்டுகளில் விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து இந்த அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வந்துள்ளது. 1970–71-ல், நோய் பரவியுள்ள பகுதிகளில் 69.74 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமான மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. 1971–72-இல் மிகுபயன் தரும் தானிய வகைகளின் கீழும் பல்பயிர்த் திட்டங்களின் கீழும் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள அதிக அளவுப் பரப்பளவைக் கருதி, நெல், வேர்க் கடலை, பருத்தி முதலிய பயிர் வளர்க்கப்படும் 15.00 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமானமூலம் மருந்து தெளிப்பு முறையைச் செயலுக்குக் கொண்டுவருவதென அரசு திட்டமிட்டுள்ளது. மிகுபயன் தரும் தானிய வகைகளில் குறிப்பாக நெற் பயிரிடுதலின்கீழ் மட்டும் 50 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது. 1970–71-இல், 44.93 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது.

விமானமூலம் மருந்து தெளிப்பதற்குப் பயன்படக்கூடிய விமானம் எதுவும் இந்த அரசுக்குச் சொந்தமாக இல்லை. ஆகவே, மருந்து தெளிக்கும் பணி தனியார் விமான நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் பட்டு வருகிறது. இந்த ஹெலிகாப்டர்கள் பிற இடங்களிலும் தேவைப்படுவதால் பயிர்ப்பூச்சிகள் மற்றும் உச்ச காலங்களில் தேவையான ஹெலிகாப்டர்களை வழங்க இந்த தனியார் நிறுவனங் களால் இயலவில்லை. உரிய காலத்தில் ஹெலிகாப்டர்கள் கிடைக்காத



காரணத்தினால், முந்திய ஆண்டுகளில் மருந்து தெளிக்காது விடப் பட்ட கணிசமான பகுதியில் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப் பட்டதோடு உழவர்களின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. எனவே, பூச்சிகளினின்றும் பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பயிர்ப்பூச்சி பிடிக்கும் உச்ச காலங்களில் விமானமூலம் மருந்து தெளிப்பதற்காக இந்திய அரசுக்குச் சொந்தமான நான்கு ஹெலி காப்டர்களை தமிழ் நாட்டில் நிறுத்தி வைக்குமாறு இவ்வரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது.

துறையின் பயனுக்காக இரு ஹெலிகாப்டர்களை வாங்கவும் இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

விமானமூலம் மருந்து தெளிக்கும் பணியை மேற்கொள்ள மாநில அரசுக்கு ஹெலிகாப்டர்களை வாடகைக்குக் கொடுக்கும்பொருட்டு ரூ. 40 லட்சம் செலவில் ஐந்து ஹெலிகாப்டர்களை வாங்க வேளாண்மைத் தொழில் கழகமும் ஏற்பாடு செய்து வருகிறது. வேளாண்மைத் தொழில் கழகம் இதுகுறித்து இந்திய அரசிடமிருந்து பதிலை எதிர்பார்த்து இருக்கிறது.

## வேளாண்மைக் கல்வி.

கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் வேளாண்மை பட்டப்படிப்பில் 242 மாணவர்களும் வேளாண்மைப் பட்ட மேற்படிப்பில் 80 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில், மதுரை வேளாண்மைக் கல்லூரியிலிருந்து முதற்தொகுதி மாணவர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதியுடன் வெளிவருவர். பட்ட மேற்படிப்புக் கல்வியைக் குறிப்பாகக் கவனிக்கும்பொருட்டு பணியாளர் தொகுதியை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

## விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி.

இம்மாநிலத்தில் விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தியது வேளாண்மைத் துறையின் மகத்தானதொரு சாதனையாகும். பூச்சி, நோய்களைத் தடுக்க பூச்சிக் கொல்லி மருந்துகளையும் காளான் ஒழிப்பு மருந்துகளையும் விமான மூலம் திறம்படத் தெளிப்பது குறித்து ஆராய்ச்சி நடத்தவும், உர மிட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் புதிய வாய்ப்புகளைக் கண்டு பிடிப்பதும் இதன் நோக்கமாகும். நாட்டில் முதல் தடவையாக இப்படிப்பட்ட ஒரு பள்ளி தொடங்கப்படுகிறது. விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளி 1970 டிசம்பர் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

## வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நீண்டகாலத் தேவை தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு

வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 8/1971) நிறைவேற்றியதன் மூலம் நிறைவு பெற்றுள்ளது. இப்புதிய பல்கலைக் கழகம் 1—6—71 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. கோயம்புத்தூரிலும், மதுரையிலும் உள்ள இரு வேளாண்மைக் கல்லூரிகளும் கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களும் இப்பல்கலைக் கழகத்தின்கீழ் அடங்கும். பல்கலைக் கழகத் தலைமையிடம் கோயம்புத்தூரில் செயல்படும். பசுமைப் புரட்சியில் வேளாண்மை குறித்து அறிவியல் முறையில் ஆராய்ச்சி செய்ய அரசு அதிகச் சிறப்பிடம் அளித்து வருகிறது. இந்நோக்கத்துடன் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மை ஆராய்ச்சி.—இவ்வாண்டில் வேளாண்மை ஆராய்ச்சியில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முனைந்து செய்யப்பட்ட ஒருங்கிணைப்பு முயற்சியினால் உணவுப் பயிர்கள், வாணிபப் பயிர்களில் உயர்ந்த தரமான தானிய வகைகள் கண்டு பிடிக்கப்பட்டன. நெல் வகையில் "கருணை" தனித்தன்மை வாய்ந்ததாகும். தண்ணீரில் தலைசாயாத் தன்மையையும் செழிப்பும் கொண்டு அமோக விளைச்சலைத் தரும். இத் தானியவகை தஞ்சாவூர் கயவாய்ப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ளது. இதனுடன்கூட, அரிசி வகைகளாகிய காஞ்சி (115 நாட்கள்), காவிரி (110 நாட்கள்), பெண்ணை (110 நாட்கள்), ஐ.ஆர். 20 (130 நாட்கள்), ஐ.ஆர். 22 (115 நாட்கள்) ஆகியவை 1970 நவம்பரில் குறிப்பிட்ட வட்டாரங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

சோளம், கேழ்வரகு ஆகிய வகைகளில் H.B. 3, H.B. 4 சாரதா, ஏனைய தானியங்கள் போன்ற வகைகளும் கண்டுபிடிக்கப்பட்டு அதிக அளவில் பயிரிடுதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

எண்ணெய் விதைகளில் குறிப்பிடத்தக்க தானியம் T.V.M. 10 வேர்க்கடலையாகும். இதில் அதிக சதவீத எண்ணெய் (54.4 சதவிதம்) உள்ளது. பருத்தி வகையில் மற்றொரு முக்கியமான தானியம் "பாரதி" (180 நாட்கள்) ஆகும். பருத்தியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகும். இது உயர்ந்த தர வகையாகும். தமிழ் நாட்டில் புன்செய் நிலத்திற்கு இது மிகவும் ஏற்றதாகும். புரதச் சத்து கிடைக்கும் தானிய வகைகளைப் பெருக்கும் நோக்கத்துடன் பருப்பு வகைகளில் குறிப்பாக அவரை 6, 7, துவரை 1 முதலிய தானிய ரகங்கள் வெளியிடப்பட்டன. மொத்தத்தில், அரிசி வகையில் நான்கு, சிறு தானிய வகைகளில் ஐந்து, பருத்தி வகைகளில் ஒன்று, எண்ணெய் வித்து வகைகளில் ஐந்து, பருப்பு வகைகளில் நான்கு சுவையூட்டும் வாசனைப் பொருள் வகைகளில் இரண்டு, அலங்கார மலர் வகைகளில் ஒன்று, காய்கறி வகைகளில் இரண்டு ஆக 24 புதிய தானிய வகைகளை வேளாண்மைத் துறை வெளியிட்டது. இதனால் வேளாண்மை உற்பத்தியில் விரைவான முன்னேற்றம் ஏற்பட வழிகோலும்.

கோதுமை, மக்காச்சோளம், புதிய கால்நடைத் தீவனம், தீவனப் புற்கள், மிளகாய், காய்கறி வகைகள், முந்திரி, வாழை உட்பட ஏனைய முக்கிய பழப் பயிர்கள் ஆகியவை குறித்த முனைப்பான ஆராய்ச்சி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களை அமைப்பதன் மூலம் மேலும் தீவிரமடைந்துள்ளது. கோயம்புத்தூர், ஆடுதுறை ஆகிய இடங்





களிலுள்ள நிலையங்களில் ஒருங்கிணைந்த அரிசி மேம்பாட்டு அனைத்திந்தியத் திட்டம் வாயிலாக தரமான அரிசி வகைகளை வெளியிடுவது குறித்த புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கொள்ளை நோயை எதிர்க்கும் ஆற்றல்கொண்ட வகைகளைக் கண்டு பிடிக்க சிறப்பு நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

சூரியகாந்தி ஏற்றுமதி அதிக அளவு வாய்ப்புள்ள எண்ணெய் வித்துக்கள் கொண்ட மலராகும். தமிழ்நாட்டுக்கு உகந்த வகைகளை மேம்படுத்தும் பொருட்டு கோவில்பட்டி வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இந்த எண்ணெய் வித்துப் பயிர் மேம்பாடு குறித்து திட்டமொன்றை அரசு செயல்படுத்தியுள்ளது. சூரியகாந்திப் பயிரின் பல வகைகள் சேலம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் சோதனை முறையிலும் 1970-இல் கோயம்புத்தூரில் வேளாண்மைப் பொருளாதார சோதனையின் அடிப்படையிலும் நடப்பட்டன. பயிர் வகைகள், பாசன நீரைக் கையாளும் முறை, மண்ணின் உவர்தன்மை, மண்ணின் அமைப்பு, புன்செய் வேளாண்மை போன்ற புதிய ஆராய்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்படுவதன் மூலமாகக் கண்டு பிடிக்கப்படும் முடிவுகள் புன்செய்ப் பண்ணை உட்பட வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் தகுந்த முறையில் பயன்படுத்தப் படுமென்று நம்பப்படுகிறது.

## பட்டுக்கோட்டையில் ஆராய்ச்சி நிலையம்.

மாண்புமிகு முதலமைச்சர் கூறிய கருத்திற்கிணங்க, பட்டுக் கோட்டையில் உள்ள அரசு விதைப் பண்ணையை, ரூ. 1,05,300 செலவில் பல்பயிர் ஆராய்ச்சி நிலையமாக மாற்றுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. உத்தேச ஆராய்ச்சி நிலையம், ஆராய்ச்சி நல வளர்ச்சி நிலையமாகப் பணியாற்றும். பட்டுக்கோட்டை, அரசு விதைப் பண்ணையில் தற்போதுள்ள 38.90 ஏக்கர் பரப்பளவுடன் பேராவூரணியில் 5 ஏக்கர் நிலப்பகுதி குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப் படும். இது உவர்-களர் நிலப்பகுதியாகும். இங்கு நிலத்தினை உப்புத்தன்மை, காரத்தன்மை நீக்கி விளை நிலமாக்குவது பற்றிய ஆராய்ச்சி நடைபெறும்.

## கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையம்.

திட்டமிட்ட வேளாண்மை வளர்ச்சிக்கு, சிறந்த ஆராய்ச்சி அடிப்படை முற்றிலும் இன்றியமையாததாகும். சிறந்த ஆராய்ச்சி அமைப்பு உருவாக்கப்படுவதைப் பொறுத்தே வேளாண்மை அறிவியல் வளர்ச்சி அமையும். ஆராய்ச்சி மூலம் பெற்ற அறிவியல் முடிவுகள், நன்கு அமையப்பெற்ற நலவளர்ச்சி அமைப்பு மூலமாக, குடியானவர் நிலத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். வசதிக் குறைவு காரணமாக போதிய கவனம் பெறாத பகுதிகள், இப்போது அறிவியல் ஆராய்ச்சியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. புன்செய் நிலங்களிலும், சிறிதே செழிப்புற்ற நிலங்களிலும் உற்பத்தியைப் பேரளவுக்கு உயர்த்துவதே இந்த ஆராய்ச்சிப் பணியின் முயற்சியாக இருந்துவரும். பயிர்கள் குறித்தும், குறிப்பிட்ட பகுதிகள் பற்றியும் வெவ்வேறு பிரச்னைகள் ஆய்ந்து பார்த்து வளர்ச்சிக்குரிய பல்வேறு மேம்பாட்டு வழிவகைகளைக் கூறுவதற்காக, திருச்சி மாவட்டம், குடுமியாமலை, அண்ணா பண்ணையில் கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையம் என்னும் பெயர்கொண்ட ஆராய்ச்சி நிலையம்

செம்மறியாடு வளர்ப்பினை மேம்படுத்துவதற்காக 39 திட்டங்களை கால்நடை வளர்ச்சி இயக்குநர் வகுத்துள்ளார். இவை வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெறுவதன் மூலம் செயல் படுத்தப்படவேண்டும். ஆகவே, இத்திட்டங்கள் மேற்படிக் கழகத் திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கான உதவி பற்றி மேற்படிக் கழகம் ஒப்பளிப்பு வழங்குவது எதிர்பார்க்கப் படுகிறது.

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று புதுக்கோட்டை கோட்டத்தில் கலப்புப் பண்ணைப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை கால்நடை வளர்ச்சி இயக்குநர் வகுத்துள்ளார். இத்திட்டத்திற்கு ஏற்படும் செலவு ரூ. 144 லட்ச மாகும். இத்திட்டம் குறித்து கால்நடை வளர்ச்சி இயக்குநருடனும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருடனும் கலந்தாலோசித்து அரசு பரிசிலித்து வருகிறது.

வேளாண்மை மறுகடனுதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று திருநெல்வேலி மாவட்டத்தில் படகு கட்டும் துறையை ஏற்படுத்து வதற்கான திட்டம் ஒன்றை மீன்வளத்துறை இயக்குநர் வகுத் துள்ளார். இத் திட்டத்திற்கு ஏற்படும் செலவு ரூ. 78.70 லட்சமாகும்

## மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள்.

தமிழ்நாட்டில் உழவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தற்போது 10 மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு :—

| இடம் (1) | | ஒதுக்கப்பட்ட மாவட்டங்கள் (2) |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | ... | கோயம்புத்தூர், நீலகிரி |
| 2. ஆடுதுறை | ... | தஞ்சாவூர் |
| 3. கோவில்பட்டி | ... | திருநெல்வேலி, கன்னியாகுமரி |
| 4. கடலூர் | ... | தென் ஆற்காடு |
| 5. குடியாத்தம் | ... | வட ஆற்காடு |
| 6. மதுரை | ... | மதுரை |
| 7. காஞ்சிபுரம் | ... | செங்கற்பட்டு |
| 8. சேலம் | ... | சேலம், தருமபுரி |
| 9. பரமக்குடி | ... | இராமநாதபுரம் |
| 10. திருச்சிராப்ப ளி | ... | ள்திருச்சிராப்பள்ளி |

மண்வளப் பரிசோதனை இயல் ஊர்திப் பிரிவு ஒன்றை இந்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு ஒதுக்கியுள்ளது. இது ஆடுதுறையில் செயல்பட்டு வருகிறது..

வளர்ச்சி வட்டார அளவில் செழிப்புத் தன்மை பற்றிய ஆய்வு ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது. கிராம அளவில் செழிப்புத் தன்மைப்பற்றிய ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டமும் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

கிராம அளவில் செழிப்புத்தன்மை பற்றிய ஆய்வின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம் நீங்கலாக (மாவட்ட மும்முர வேளாண்மைத் திட்டங்கள்) ஏனைய எல்லா மாவட்டங்களிலும் பாசனமளிக்கப்படும் பகுதியில் ஒவ்வொரு 25 ஏக்கருக்கும் மண் மாதிரி ஒன்று பெறப்படு





கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில், பாசனம் பெறும் பகுதியில் ஒவ்வொரு ஐந்து ஏக்கருக்கும் மண் மாதிரிகள் பெறப்படுகின்றன. செழிப்புத்தன்மைபற்றிய வரைபடங்கள் தயாரிக்கப்படுகையில், பயிர் களுக்கு ஏற்ற உரங்களின் அளவு குறித்து அந்தந்த இடத்திலேயே பரிவுரை செய்வது எளிதாகும்.

ஆடுதுறையிலுள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடம் நீங்கலாக 1969–70-ல் ஒவ்வொரு ஆய்வுக்கூடத்திலும் ஆண்டொன் றுக்கு 15,000 மண்மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும் என்ற திட்ட இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் நீர் குறித்த மாதிரிகள் அடங்காது. ஆடுதுறையிலுள்ள ஆய்வுக்கூடம் ஆண் டொன்றுக்கு 48,000 மண்மாதிரிகளை பகுப்பாய்வு செய்யவேண்டும். 1970–71-ல், ஆடுதுறை நீங்கலாக ஒவ்வொரு ஆய்வுக்கூடத்திற்கும் இலக்குகள் திருத்தியமைக்கப்பட்டு நிச்சயிக்கப்பட்டுள்ளன. ஆடு துறை தவிர ஏனைய மண்வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் ஆண்டொன்றுக்கு 30,000 மண்மாதிரிகளை ஆய்வு செய்யவேண்டும் என்னும் குறிக்கோள் அளவு நிச்சயிக்கப்பட்டுள்ளது. நீர் குறித்த மாதிரிகள் இவற்றில் அடங்கா. ஆடுதுறையிலுள்ள ஆய்வுக்கூடம் ஆண்டொன்றுக்கு 1,00,800 மண்மாதிரிகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது.

## பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்.

உணவுப் பயிர்களும் ஏனைய பயிர்களும் பூச்சிகளினாலும் நோய் களினாலும் பாதிக்கப்படுதனின்றும் பாதுகாக்க உழவர்களுக்குத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்கி வருகின்றது. பயிர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவும் பயிர்கள் பூச்சிகளினால் பாதிக்கப்படுவதினின்றும் பாதுகாக்கவும் வேண்டி ஊக்கமளிக்க சலுகை வீதங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்க உழவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். 1967 (1967 ஆகஸ்டு)-ஆம் ஆண்டுவரை, உணவுப் பயிர்கள் குறித்து செலவில் 75 சதவீத விலை யிலும், பருத்தி, கரும்பு, வேர்க்கடலை, எள், தென்னை, காய்கறிகள் முதலிய உணவுப் பயிரல்லாத பயிர்கள் குறித்து பாதி விலையிலும், கிருமிநாசினிகளும் காளான் ஒழிப்பு மருந்துகளும் வழங்கப்பட்டன. 1965–66-ல் முனைப்புப் பகுதிகளிலுள்ள புகையிலைப் பயிர்களுக்கும் இந்த 50 சதவீத உதவிச் சலுகை நீட்டிக்கப்பட்டது.

திட்ட ஆணைக்குழுவின் ஆலோசனையின்படி, உதவித் தொகை வழங்கும் திட்டம் படிப்படியாக கைவிடப்பட வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது. அதன்படி, 1969–70-ல் உதவித்தொகை வழங்குவது 35 சத வீதத்திலிருந்து 30 சத வீதமாகவும் 1970–71-ல் 15 சத வீதமாகவும் குறைக்கப்பட்டது. இதனால் உழவர்கள் அடைந்துவரும் இடர்ப்பாட்டினைத் தமிழ் நாடு அரசு அறிந்து கொண்டது. அதனால் 1971–72-ஆம் ஆண்டிலும் இந்த 15 சதவீத சலுகையைத் தொடர்ந்து நீடித்துவர முடிவு செய்தது.

1970–71-ல் விமான மூலம் பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் பணியில் ஒன்பது நிறுவனங்கள் ஈடுபட்டன. ஹெலிகாப்டர்கள் கிடைக்காத பகுதிகளில் விமானங்கள் மூலம் மருந்து தெளிப்பது தொடங்கப்பட்டது. இது குறித்து உழவர்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இக்கட்டணம்

[1971 ஜூலை 24

எல்லாப் பயிர்களுக்கும் உட்பட்டதாகும். பூச்சிக்கொல்லி மருந்துகள் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து வாங்கப்பட்டு வேளாண்மை விற்பனை நிலையங்கள் மூலமாக சலுகை விலையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நச்சுத் திறன் குறைவாக உள்ள இரசாயன உரங்களை விற்க கூட்டுறவு நிறுவனங்களும் அனுமதிக்கப்படுகின்றன. இவை உழவர்களுக்குச் சலுகை விலையில் இரசாயன உரங்களை வழங்கி வருகின்றன.

பல்வேறு வேளாண்மைக் கோட்டங்களிலிருந்து பூச்சி இயல் வல்லுநராலும், பூச்சி இயல் இணை பேராசிரியராலும் பெறப்படும் விவரங்கள் மூலம், பூச்சி, நோய்த்தாக்குதல் பற்றிய விவரங்கள் ஒவ்வொரு வாரமும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன. ஒலிபரப்பு அறிக்கைகள் எல்லா மாவட்ட வேளாண்மை அதிகாரிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் கோட்டங்களில் பூச்சி, நோய் தாக்குவதைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலுகிறது.

1970–71-ல் (1971 ஜனவரி முடிய) திட்ட இலக்குகள், எய்திய சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | 1970–71 திட்ட இலக்கு. | 1971 ஜனவரி முடிய எய்திய சாதனை. |
|---|---|---|
| உணவுப் பயிர்கள் (லட்சம் ஏக்கரில்) .. | 66·00 | 57·146 |
| தெளிப்பான்கள் (தடவைகள்) .. .. | 5,500 | 5,446 |
| தூவு கருவிகள் (தடவைகள்) .. .. | 500 | 683 |

பயிர்ப் பாதுகாப்புச் சாதனம்.—பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்தி பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், கையினால் இயக்கப்படும் தெளிப்பான்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்க 25 சதவீத உதவித்தொகையை அரசு அனுமதித்துள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் உழவர்களுக்கு இக்கருவிகளை வழங்குகின்றன. ஒவ்வோர் ஆண்டும் முறையே 5,000, 400 தெளிப்பான்கள், தூவுக் கருவிகள் (கையினால் இயக்கப்படுபவையும், மின்விசையினால் இயக்கப்படுபவையும் வழங்கப்பட வேண்டும் என்ற திட்ட இலக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து வேளாண்மைத் துணை இயக்குநர் வட்டாரங்களுடன் ஐந்து பயிர்ப் பாதுகாப்புத் தொகுப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுப்பிலும் தேவையான எண்ணிக்கையில் தெளிப்பான்களும் தூவு கருவிகளும் (கையினால் இயக்கப்படுபவையும், மின்சக்தியினால் இயக்கப்படுபவையும்) உள்ளன. இத்தொகுப்பிலிருந்து உழவர்களுக்குத் தெளிப்பான்கள் வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. பயிர்ப் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்துள்ள இயந்திரக் கம்மியர் பயிர்ப் பாதுகாப்புச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவது குறித்தும் அக்கருவிகளைப் பேணி வருவது குறித்தும் நேரிடைப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கின்றனர். பழுதடைந்த கருவிகளும் இயந்திரக் கம்மியர்களால் பழுது பார்க்கப்படுகின்றன.



1971 ஜூலை 24]

பயிர்ப்பாதுகாப்புத் தொகுப்புகளுக்குச் சாதனங்களை அதிக அளவுக்கு அளிக்க வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு, ஆண்டு தோறும் 300 விசைத் தெளிப்பான்களை வாங்குவதன் மூலம் தொகுப்புகளுக்கு வழங்கப்படும் கருவிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

விமானம் மூலம் மருந்து தெளித்தல்.

இந்நாட்டில் விமான மூலம் மருந்து தெளிக்கப்படும் மொத்தப் பரப்பளவைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு பிற மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் நிற்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தென் மாநிலங்களுக்கான கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து இது தெரியவரும் :—

| | ஆந்திரப் பிரதேசம். | மைசூர். | கேரளம். | தமிழ்நாடு |
|---|---|---|---|---|
| | (பரப்பளவு ஏக்கரில்.) | | | |
| 1968–69 .. | 2,000 | 20,000 | 36,219 | 2,95,755 |
| 1969–70 | 8,135 | 93,680 | 38,004 | 1,95,084 |

அடைந்துள்ள முன்னேற்றம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1968–69 ... ... ... ... | 2,95,755 ஏக்கர். |
| 1969–70 ... ... ... ... | 1,95,084 ஏக்கர். |
| 1970–71 ... ... ... ... | 6,97,400 ஏக்கர். |

1971–72-ல் 15 லட்சம் ஏக்கரில் விமானம் மூலம் மருந்து தெளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பயிர்ப்பாதுகாப்பு இரசாயனங்களுக்காக வழக்கமாக அனுமதிக்கப்படும் உதவித் தொகையுடன்கூட, விமானமூலம் மருந்து தெளிப்பதற்கான வாடகைக் கட்டணங்கள் குறித்த 50 சதவீத மானியம் உதவித் தொகையாக உழவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்தது. 1969–70 முதல் இந்த உதவித்தொகை மாநிலத்திற்காக ஒதுக்கப்படும் மொத்த மானியத்திலிருந்து சரிக்கட்டப்பட வேண்டும் என்று இந்திய அரசு கூறியுள்ளது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 7 வீதம் நோய் பரவியுள்ள 5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மருந்து தெளிப்பதற்கான செலவுகளைச் சரிகட்டும் வகையில் இந்திய அரசு தற்போது ரூ. 35 லட்சம் அளவுக்கு நிதி உதவியை உயர்த்தியுள்ளது. மொத்தத் திட்ட மானியத்துக்குமேல் கூடுதலாக இது வழங்கப்படும். தரிசு நிலங்கள் குறித்து ஏற்படும் செலவும் பிற பயிர்கள்மீது மருந்து தெளிப்பது குறித்து ஏற்படும் செலவில் குறிப்பிட்ட சதவீதத் தொகையும் மாநில அரசினால் ஏற்கப்படுகிறது.

பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடம்.

உழவர்களுக்கு வழங்கப்படுவதற்காக நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படும் இரசாயனங்களைச் சோதனை செய்து அவற்றிற்குச் சான்றளிக்கும் திட்டம் இம் மாநிலத்தில் செயலில் உள்ளது. தற்

போது, கோயம்புத்தூர், கோயில்பட்டி, ஆடுதுறை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நான்கு பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் உள்ளன. விற்பனை நிலையங்களுக்கு இருப்புகள் வரும்போதெல்லாம் அவை விற்பனை செய்யப்படுவதற்கு முன்பு அந்நிலையங்களிடமிருந்து பெறப்பட்ட சோதனை மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் சோதனையிடப்படுகின்றன. இந்தத் தரமான இரசாயனங்கள் மட்டுமே வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப் படுகின்றன.

காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள பூச்சிக்கொல்லி மருந்து சோதனை ஆய்வுக்கூடங்களில் போதிய சாதனங்கள் இல்லாததால் அங்கு சோதனை மாதிரிகளைப் பரிசோதனை செய்வது இன்னும் தொடங்கப்படவில்லை.

மாநிலத்திற்கு ஹெலிகாப்டர்கள்/விமானங்கள் வாங்குதல்.

புதிய வேளாண்மை முறைகளில் பயிர்ப்பாதுகாப்பு அதிக அளவு சிறப்பிடம் பெற்றுள்ளது. பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றித் தெரிந்துகொள்வதிலும் அவற்றை மேற்கொள்வதிலும் உழவர்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. தரமான விதைகள், உரங்கள், பாசனம் ஆகியவற்றுடன் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியமான நான்கு கூறுகளில் பயிர்பாதுகாப்பும் ஒரு கூறாக உள்ளது.

தமிழ் நாட்டில் விமானமூலம் மருந்து தெளிப்பு முறை 1961–62-இல் முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் ஆண்டு தோறும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக மிகு பயன் தரும் தானிய வகைகள், வேர்க்கடலை, பருத்தி போன்ற வாணிபப் பயிர்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பயிர்ப் பாதுகாப்பு "அவசியம்" என்பதைக் கருதி, அண்மை ஆண்டுகளில் விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து இந்த அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வந்துள்ளது. 1970–71-ல், நோய் பரவியுள்ள பகுதிகளில் 69.74 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமான மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. 1971–72-இல் மிகுபயன் தரும் தானிய வகைகளின் கீழும் பல்பயிர்த் திட்டங்களின் கீழும் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள அதிக அளவுப் பரப்பளவைக் கருதி, நெல், வேர்க்கடலை, பருத்தி முதலிய பயிர் வளர்க்கப்படும் 15.00 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமானமூலம் மருந்து தெளிப்பு முறையைச் செயலுக்குக் கொண்டுவருவதென அரசு திட்டமிட்டுள்ளது. மிகுபயன் தரும் தானிய வகைகளில் குறிப்பாக நெற் பயிரிடுதலின்கீழ் மட்டும் 50 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது. 1970–71-இல், 44.93 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது.

விமானமூலம் மருந்து தெளிப்பதற்குப் பயன்படக்கூடிய விமானம் எதுவும் இந்த அரசுக்குச் சொந்தமாக இல்லை. ஆகவே, மருந்து தெளிக்கும் பணி தனியார் விமான நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் பட்டு வருகிறது. இந்த ஹெலிகாப்டர்கள் பிற இடங்களிலும் தேவைப்படுவதால் பயிர்ப்பூச்சிகள் மற்றும் உச்ச காலங்களில் தேவையான ஹெலிகாப்டர்களை வழங்க இந்த தனியார் நிறுவனங்களால் இயலவில்லை. உரிய காலத்தில் ஹெலிகாப்டர்கள் கிடைக்காத



காரணத்தினால், முந்திய ஆண்டுகளில் மருந்து தெளிக்காது விடப்பட்ட கணிசமான பகுதியில் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப் பட்டதோடு உழவர்களின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. எனவே, பூச்சிகளினின்றும் பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பயிர்ப்பூச்சி பிடிக்கும் உச்ச காலங்களில் விமானமூலம் மருந்து தெளிப்பதற்காக இந்திய அரசுக்குச் சொந்தமான நான்கு ஹெலிகாப்டர்களை தமிழ் நாட்டில் நிறுத்தி வைக்குமாறு இவ்வரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது.

துறையின் பயனுக்காக இரு ஹெலிகாப்டர்களை வாங்கவும் இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

விமானமூலம் மருந்து தெளிக்கும் பணியை மேற்கொள்ள மாநில அரசுக்கு ஹெலிகாப்டர்களை வாடகைக்குக் கொடுக்கும்பொருட்டு ரூ. 40 லட்சம் செலவில் ஐந்து ஹெலிகாப்டர்களை வாங்க வேளாண்மைத் தொழில் கழகமும் ஏற்பாடு செய்து வருகிறது. வேளாண்மைத் தொழில் கழகம் இதுகுறித்து இந்திய அரசிடமிருந்து பதிலை எதிர்பார்த்து இருக்கிறது.

வேளாண்மைக் கல்வி.

கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் வேளாண்மை பட்டப்படிப்பில் 242 மாணவர்களும் வேளாண்மைப் பட்ட மேற்படிப்பில் 80 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில், மதுரை வேளாண்மைக் கல்லூரியிலிருந்து முதற்தொகுதி மாணவர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதியுடன் வெளிவருவர். பட்ட மேற்படிப்புக் கல்வியைக் குறிப்பாகக் கவனிக்கும்பொருட்டு பணியாளர் தொகுதியை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி.

இம்மாநிலத்தில் விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தியது வேளாண்மைத் துறையின் மகத்தானதொரு சாதனையாகும். பூச்சி, நோய்களைத் தடுக்க பூச்சிக் கொல்லி மருந்துகளையும் காளான் ஒழிப்பு மருந்துகளையும் விமான மூலம் திறம்படத் தெளிப்பது குறித்து ஆராய்ச்சி நடத்தவும், உர மிட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் புதிய வாய்ப்புகளைக் கண்டு பிடிப்பதும் இதன் நோக்கமாகும். நாட்டில் முதல் தடவையாக இப்படிப்பட்ட ஒரு பள்ளி தொடங்கப்படுகிறது. விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளி 1970 டிசம்பர் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நீண்டகாலத் தேவை தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு

போது, கோயம்புத்தூர், கோயில்பட்டி, ஆடுதுறை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நான்கு பூச்சிக் கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் உள்ளன. விற்பனை நிலையங்களுக்கு இருப்புகள் வரும்போதெல்லாம் அவை விற்பனை செய்யப்படுவதற்கு முன்பு அந்நிலையங்களிடமிருந்து பெறப்பட்ட சோதனை மாதிரிகள் இந்த ஆய்வுக் கூடங்களில் சோதனையிடப்படுகின்றன. இந்தத் தரமான இரசாயனங்கள் மட்டுமே வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப் படுகின்றன.

காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள பூச்சிக்கொல்லி மருந்து சோதனை ஆய்வுக்கூடங்களில் போதிய சாதனங்கள் இல்லாத தால் அங்கு சோதனை மாதிரிகளைப் பரிசோதனை செய்வது இன்னும் தொடங்கப்படவில்லை.

மாநிலத்திற்கு ஹெலிகாப்டர்கள்/விமானங்கள் வாங்குதல்.

புதிய வேளாண்மை முறைகளில் பயிர்ப்பாதுகாப்பு அதிக அளவு சிறப்பிடம் பெற்றுள்ளது. பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றித் தெரிந்துகொள்வதிலும் அவற்றை மேற்கொள்வதிலும் உழவர்களிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. தரமான விதைகள், உரங்கள், பாசனம் ஆகியவற்றுடன் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கியமான நான்கு கூறுகளில் பயிர்பாதுகாப்பும் ஒரு கூறாக உள்ளது.

தமிழ் நாட்டில் விமானமூலம் மருந்து தெளிப்பு முறை 1961–62-இல் முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் ஆண்டு தோறும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. குறிப்பாக மிகு பயன் தரும் தானிய வகைகள், வேர்க்கடலை, பருத்தி போன்ற வாணிபப் பயிர்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பயிர்ப் பாதுகாப்பு "அவசியம்" என்பதைக் கருதி, அண்மை ஆண்டுகளில் விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து இந்த அரசு சிறப்பான நாட்டம் செலுத்தி வந்துள்ளது. 1970–71-ல், நோய் பரவியுள்ள பகுதிகளில் 69.74 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமான மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. 1971–72-இல் மிகுபயன் தரும் தானிய வகைகளின் கீழும் பலபயிர்த் திட்டங்களின் கீழும் கொண்டுவரத் திட்டமிட்டுள்ள அதிக அளவுப் பரப்பளவைக் கருதி, நெல், வேர்க் கடலை, பருத்தி முதலிய பயிர் வளர்க்கப்படும் 15.00 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விமானமூலம் மருந்து தெளிப்பு முறையைச் செயலுக்குக் கொண்டுவருவதென அரசு திட்டமிட்டுள்ளது. மிகுபயன் தரும் தானிய வகைகளில் குறிப்பாக நெற் பயிரிடுதலின்கீழ் மட்டும் 50 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது. 1970–71-இல், 44.93 லட்சம் ஏக்கர் பரப்பளவில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டது.

விமானமூலம் மருந்து தெளிப்பதற்குப் பயன்படக்கூடிய விமானம் எதுவும் இந்த அரசுக்குச் சொந்தமாக இல்லை. ஆகவே, மருந்து தெளிக்கும் பணி தனியார் விமான நிறுவனங்களிடம் ஒப்படைக்கப் பட்டு வருகிறது. இந்த ஹெலிகாப்டர்கள் பிற இடங்களிலும் தேவைப்படுவதால் பயிர்ப்பூச்சிகள் மற்றும் உச்ச காலங்களில் தேவையான ஹெலிகாப்டர்களை வழங்க இந்த தனியார் நிறுவனங் களால் இயலவில்லை. உரிய காலத்தில் ஹெலிகாப்டர்கள் கிடைக்காத



காரணத்தினால், முந்திய ஆண்டுகளில் மருந்து தெளிக்காது விடப் பட்ட கணிசமான பகுதியில் உணவு உற்பத்தி மிகவும் பாதிக்கப் பட்டதோடு உழவர்களின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது. எனவே, பூச்சிகளினின்றும் பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பயிர்ப்பூச்சி பிடிக்கும் உச்ச காலங்களில் விமானமூலம் மருந்து தெளிப்பதற்காக இந்திய அரசுக்குச் சொந்தமான நான்கு ஹெலி காப்டர்களை தமிழ் நாட்டில் நிறுத்தி வைக்குமாறு இவ்வரசு இந்திய அரசைக் கேட்டுள்ளது.

துறையின் பயனுக்காக இரு ஹெலிகாப்டர்களை வாங்கவும் இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

விமானமூலம் மருந்து தெளிக்கும் பணியை மேற்கொள்ள மாநில அரசுக்கு ஹெலிகாப்டர்களை வாடகைக்குக் கொடுக்கும் பொருட்டு ரூ. 40 லட்சம் செலவில் ஐந்து ஹெலிகாப்டர்களை வாங்க வேளாண்மைத் தொழில் கழகமும் ஏற்பாடு செய்து வருகிறது. வேளாண்மைத் தொழில் கழகம் இதுகுறித்து இந்திய அரசிடமிருந்து பதிலை எதிர்பார்த்து இருக்கிறது.

வேளாண்மைக் கல்வி.

கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் வேளாண்மை பட்டப்படிப்பில் 242 மாணவர்களும் வேளாண்மைப் பட்ட மேற்படிப்பில் 80 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாண்டில், மதுரை வேளாண்மைக் கல்லூரியிலிருந்து முதற்தொகுதி மாணவர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதியுடன் வெளிவருவர். பட்ட மேற்படிப்புக் கல்வியைக் குறிப்பாகக் கவனிக்கும்பொருட்டு பணியாளர் தொகுதியை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளில் பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி.

இம்மாநிலத்தில் விமானமூலம் மருந்து தெளிப்பதில் பயிற்சி அளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தியது வேளாண்மைத் துறையின் மகத்தானதொரு சாதனையாகும். பூச்சி, நோய்களைத் தடுக்க பூச்சிக் கொல்லி மருந்துகளையும் காளான் ஒழிப்பு மருந்துகளையும் விமான மூலம் திறம்படத் தெளிப்பது குறித்து ஆராய்ச்சி நடத்தவும், உர மிட்டு உற்பத்தியைப் பெருக்குவதில் புதிய வாய்ப்புகளைக் கண்டு பிடிப்பதும் இதன் நோக்கமாகும். நாட்டில் முதல் தடவையாக இப்படிப்பட்ட ஒரு பள்ளி தொடங்கப்படுகிறது. விமானமூலம் மருந்து தெளிப்பது குறித்து கோயம்புத்தூர், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளி 1970 டிசம்பர் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நீண்டகாலத் தேவை தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு

வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 8/1971) நிறைவேற்றியதன் மூலம் நிறைவு பெற்றுள்ளது. இப்புதிய பல்கலைக் கழகம் 1—6—71 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. கோயம்புத்தூரிலும், மதுரையிலும் உள்ள இரு வேளாண்மைக் கல்லூரிகளும் கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களும் இப்பல்கலைக் கழகத்தின்கீழ் அடங்கும். பல்கலைக் கழகத் தலைமையிடம் கோயம்புத்தூரில் செயல்படும். பசுமைப் புரட்சியில் வேளாண்மை குறித்து அறிவியல் முறையில் ஆராய்ச்சி செய்ய அரசு அதிகச் சிறப்பிடம் அளித்து வருகிறது. இந்நோக்கத்துடன் வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண்மை ஆராய்ச்சி.—இவ்வாண்டில் வேளாண்மை ஆராய்ச்சியில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முனைந்து செய்யப்பட்ட ஒருங்கிணைப்பு முயற்சியினால் உணவுப் பயிர்கள், வாணிபப் பயிர்களில் உயர்ந்த தரமான தானிய வகைகள் கண்டு பிடிக்கப்பட்டன. நெல் வகையில் "கருணா" தனித்தன்மை வாய்ந்த தாகும். தண்ணீரில் தலைசாயாத் தன்மையையும் செழிப்பும் கொண்டு அமோக விளைச்சலைத் தரும். இத் தானியவகை தஞ்சாவூர் கயவாய்ப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ளது. இதனுடன்கூட, அரிசி வகைகளாகிய காஞ்சி (115 நாட்கள்), காவிரி (110 நாட்கள்), பெண்ணை (110 நாட்கள்), ஐ.ஆர். 20 (130 நாட்கள்), ஐ.ஆர். 22 (115 நாட்கள்) ஆகியவை 1970 நவம்பரில் குறிப்பிட்ட வட்டாரங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

சோளம், கேழ்வரகு ஆகிய வகைகளில் H.B. 3, H.B. 4 சாரதா, ஏனைய தானியங்கள் போன்ற வகைகளும் கண்டுபிடிக்கப்பட்டு அதிக அளவில் பயிரிடுதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

எண்ணெய் விதைகளில் குறிப்பிடத்தக்க தானியம் T.V.M. 10 வேர்க்கடலையாகும். இதில் அதிக சதவீத எண்ணெய் (54.4 சதவிதம்) உள்ளது. பருத்தி வகையில் மற்றொரு முக்கியமான தானியம் "பாரதி" (180 நாட்கள்) ஆகும். பருத்தியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகும். இது உயர்ந்த தர வகையாகும். தமிழ் நாட்டில் புன்செய் நிலத்திற்கு இது மிகவும் ஏற்றதாகும். புரதச் சத்து கிடைக்கும் தானிய வகைகளைப் பெருக்கும் நோக்கத்துடன் பருப்பு வகைகளில் குறிப்பாக அவரை 6, 7, துவரை 1 முதலிய தானிய ரகங்கள் வெளியிடப்பட்டன. மொத்தத்தில், அரிசி வகையில் நான்கு, சிறு தானிய வகைகளில் ஐந்து, பருத்தி வகைகளில் ஒன்று, எண்ணெய் வித்து வகைகளில் ஐந்து, பருப்பு வகைகளில் நான்கு சுவையூட்டும் வாசனைப் பொருள் வகைகளில் இரண்டு, அலங்கார மலர் வகைகளில் ஒன்று, காய்கறி வகைகளில் இரண்டு ஆக 24 புதிய தானிய வகைகளை வேளாண்மைத் துறை வெளியிட்டது. இதனால் வேளாண்மை உற்பத்தியில் விரைவான முன்னேற்றம் ஏற்பட வழிகோலும்.

கோதுமை, மக்காச்சோளம், புதிய கால்நடைத் தீவனம், தீவனப் புற்கள், மிளகாய், காய்கறி வகைகள், முந்திரி, வாழை உட்பட ஏனைய முக்கிய பழப் பயிர்கள் ஆகியவை குறித்த முனைப்பான ஆராய்ச்சி இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களை அமைப்பதன் மூலம் மேலும் தீவிரமடைந்துள்ளது. கோயம்புத்தூர், ஆடுதுறை ஆகிய இடங்



களிலுள்ள நிலையங்களில் ஒருங்கிணைந்த அரிசி மேம்பாட்டு அனைத்திந்தியத் திட்டம் வாயிலாக தரமான அரிசி வகைகளை வெளியிடுவது குறித்த புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கொள்ளை நோயை எதிர்க்கும் ஆற்றல்கொண்ட வகைகளைக் கண்டு பிடிக்க சிறப்பு நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன.

சூரியகாந்தி ஏற்றுமதி அதிக அளவு வாய்ப்புள்ள எண்ணெய் வித்துக்கள் கொண்ட மலராகும். தமிழ்நாட்டுக்கு உகந்த வகைகளை மேம்படுத்தும் பொருட்டு கோவில்பட்டி வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இந்த எண்ணெய் வித்துப் பயிர் மேம்பாடு குறித்து திட்டமொன்றை அரசு செயல்படுத்தியுள்ளது. சூரியகாந்திப் பயிரின் பல வகைகள் சேலம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் சோதனை முறையிலும் 1970-இல் கோயம்புத்தூரில் வேளாண்மைப் பொருளாதார சோதனையின் அடிப்படையிலும் நடப்பட்டன. பயிர் வகைகள், பாசன நீரைக் கையாளும் முறை, மண்ணின் உவர்தன்மை, மண்ணின் அமைப்பு, புன்செய் வேளாண்மை போன்ற புதிய ஆராய்ச்சிப் பணிகள் நிறைவேற்றப்படுவதன் மூலமாகக் கண்டு பிடிக்கப்படும் முடிவுகள் புன்செய்ப் பண்ணை உட்பட வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதில் தகுந்த முறையில் பயன்படுத்தப் படுமென்று நம்பப்படுகிறது.

பட்டுக்கோட்டையில் ஆராய்ச்சி நிலையம்.

மாண்புமிகு முதலமைச்சர் கூறிய கருத்திற்கிணங்க, பட்டுக்கோட்டையில் உள்ள அரசு விதைப் பண்ணையை, ரூ. 1,05,300 செலவில் பல்பயிர் ஆராய்ச்சி நிலையமாக மாற்றுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. உத்தேச ஆராய்ச்சி நிலையம், ஆராய்ச்சி நல வளர்ச்சி நிலையமாகப் பணியாற்றும். பட்டுக்கோட்டை, அரசு விதைப் பண்ணையில் தற்போதுள்ள 38.90 ஏக்கர் பரப்பளவுடன் பேராவூரணியில் 5 ஏக்கர் நிலப்பகுதி குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப் படும். இது உவர்-களர் நிலப்பகுதியாகும். இங்கு நிலத்தினை உப்புத்தன்மை, காரத்தன்மை நீக்கி விளை நிலமாக்குவது பற்றிய ஆராய்ச்சி நடைபெறும்.

கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையம்.

திட்டமிட்ட வேளாண்மை வளர்ச்சிக்கு, சிறந்த ஆராய்ச்சி அடிப்படை முற்றிலும் இன்றியமையாததாகும். சிறந்த ஆராய்ச்சி அமைப்பு உருவாக்கப்படுவதைப் பொறுத்தே வேளாண்மை அறிவியல் வளர்ச்சி அமையும். ஆராய்ச்சி மூலம் பெற்ற அறிவியல் முடிவுகள், நன்கு அமையப்பெற்ற நலவளர்ச்சி அமைப்பு மூலமாக, குடியானவர் நிலத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். வசதிக் குறைவு காரணமாக போதிய கவனம் பெறாத பகுதிகள், இப்போது அறிவியல் ஆராய்ச்சியின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. புன்செய் நிலங்களிலும், சிறிதே செழிப்புற்ற நிலங்களிலும் உற்பத்தியைப் பேரளவுக்கு உயர்த்துவதே இந்த ஆராய்ச்சிப் பணியின் முயற்சியாக இருந்துவரும். பயிர்கள் குறித்தும், குறிப்பிட்ட பகுதிகள் பற்றியும் வெவ்வேறு பிரச்னைகள் ஆய்ந்து பார்த்து வளர்ச்சிக்குரிய பல்வேறு மேம்பாட்டு வழிவகைகளைக் கூறுவதற்காக, திருச்சி மாவட்டம், குடுமியாமலை, அண்ணா பண்ணையில் கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையம் என்னும் பெயர்கொண்ட ஆராய்ச்சி நிலையம்

[1971 ஜூலை 24

ஒன்றை அரசு ஏற்படுத்தியது. சிறப்பாக மண்வளம், நீர் நிர்வாகம ஒட்டிய பயிர்வள ஆராய்ச்சிப் பணியில் இந்நிலையம் முழு நாட்டத்தை செலுத்தும்; மேலும் முன்னோடி ஏற்பாடாக, திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சிக்குரிய முறையான நல வளர்ச்சிப் பணிகளிலும் இந்நிலையம் ஈடுபடும். இந்நிலையத்தை நடத்துவதற்காகும் தோராயச் செலவு ரூ. 17.25 லட்சமாகும். இந்தப் பணித் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும் பரப்பளவு ஏறத்தாழ 2,200 ஏக்கர் ஆகும். இனி வரும் ஆண்டுகளிலும் பயிர்வள ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மை உற்பத்தி மன்றம்.

நன்கு சீரமைக்கப்பட்ட, அறிவியல் சார்ந்த, இன்றியமையா அடிப் படை வசதிகள் இருந்தால்தான் வேளாண்மை மேம்பாட்டுப் பணிகள் நீடித்து நடைபெறமுடியும். இத்தகைய வசதிகள் இன்றி, முக்கிய பணித் திட்டம் எதையும் மேம்படுத்துவதென்பது இயலாது. வேளாண்மை உற்பத்தி குறித்த பிரச்சினைகளைப் பாகுபடுத்தி, வேளாண்மை சீர்பெறுவதற்கான பல்வேறு ஏற்பாடுகளைக் கூறுவ தற்கு வேளாண்மை உற்பத்தி மன்றம் ஒன்றை அமைக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தி மன்றம், வெவ்வேறு நிலைகளில் பயிற்சிக்குரிய வசதிகளை நல்கும்; வேளாண்மை வளர்ச்சி, ஆராய்ச்சிப் பணிகள், இப்போதுள்ள பணிகளைத் திருத்தி யமைத்தல், மாற்றியமைத்தல், நவீன வேளாண்மையில் அறிவியல் சார்ந்த பயிர்முறை உத்திகளைக் கொண்டு வருதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள இந்த அமைப்பு பெரிதும் உதவும். இம் மன்ற அமைப்பு பற்றிய விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

## குடியானவர்கள் பயிற்சியும் கல்வித் திட்டமும்.

இம்மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியை உயர்த்துவதன் பொருட்டு, மிகு பயன்தரும் பயிர் வகைகள் திட்டம், பல்பயிர் விளைச்சல் திட்டம் போன்ற பணிகளில் பெருவாரியான குடியான வர்களை ஈடுபடுத்துவது விரும்பத் தக்கதாகும். அண்மையில் பெற்ற ஆராய்ச்சி முடிவுகளைப்பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தி, புதிய பயிர் முறை உத்திகளைப் பின்பற்றும் திறமையினை வளர்த்துக்கொள்ளும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இந்த குறிக்கோளை மனத்தில் கொண்டும், மத்திய அரசு அளிக்கும் குழு நிதி உதவியைக்கொண்டும், உழவர் பயிற்சி நிலையங்கள் ஆறு கீழ்க்காணும் இடங்களில் செயல் படுகின்றன:—

| | | |
|---|---|---|
| 1. பவானிசாகர் | ... | கோயம்புத்தூர் மாவட்டம் (விரைவிலேயே கோவை வேளாண்மைக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. |
| 2. ராணிப்பேட்டை | ... | வட ஆர்க்காடு மாவட்டம். |
| 3. ஆடுதுறை | | தஞ்சாவூர் மாவட்டம். |
| 4. கோவில்பட்டி | ... | திருநெல்வேலி மாவட்டம். |
| 5. திண்டிவனம் | ... | தென் ஆர்க்காடு மாவட்டம். |
| 6. மதுரை | ... | மதுரை மாவட்டம். |



1971 ஜூலை 24]

1971–72-ல் தமிழ்நாட்டில் மேலும் ஒரு உழவர் பயிற்சி நிலையத்தைத் தொடங்குவதற்கு இந்திய அரசு இப்போது அனுமதி வழங்கியுள்ளது. இந்தப் புதிய நிலையத்தைத் திருச்சிராப்பள்ளி மாவட்டம் லால்குடி அருகில் உள்ள புதூர் உத்தமனூரில் அமைப்ப தென வேளாண்மைத்துறை இயக்குநர் திட்டமிட்டுள்ளார்.

## வேளாண்மைத் தகவலறிவிப்பு.

### வேளாண்மை சார்ந்த பொருள்களில் செய்திப் படங்கள் தயாரிக்கும் பணித் திட்டம்.

மேற்சொன்ன பணித் திட்டத்தின்கீழ் 1971–72-ல், 33 மி.மீ. அளவில் 1,000 அடி நீளமுடைய கீழ்க்காணும் 3 செய்திப் படங்கள் தயாரிக்கப்படும் :—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | மண்வளச் சோதனை ... ... ... | 0.40 |
| 2 | கட்புல விளக்கம் ... ... ... ... | 0.40 |
| 3 | தர விதைச் சான்றிடுதல் ... ... ... | 0.40 |

மேற்சொன்ன செய்திப் படங்களைத் தயாரிப்பதற்காக, மேலே சொல்லிய பொருள்களில் அவசியமான செய்தித் தொகுப்பு தயாரிக்கப் பட்டு, சென்னை 20-ல் உள்ள திரைப்படத் தொழில் நுட்பத் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்படும். இந்தப் பணித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் தொகையை சென்னை திரைப்படத் தொழில் நுட்பத்துறை நிர்வகித்து வரும்.

பிரச்சார-செய்திப் படக்காட்சி இயலூர்தி.—உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக, வேளாண்மையில் புதிய, அறிவியல் சார்ந்த முறைகளைப் பயன்படுத்துவதற்கு தமிழ்நாட்டுக் குடியானவர்களுக்கு விரைவாக அறிவுறுத்தும் பிரச்சார பணிகளுக்காக, இப்போது வாங்கக் கருதியுள்ள சாதனங்களுடன் பிரச்சார செய்திப் படக்காட்சி இயலூர்தி ஒன்று இன்றியமையாது தேவைப்படுகிறது.

இந்தப் பணித் திட்டம் குறித்த செலவு ரூ. 1 லட்சம் என்று வரையறுக்கப்படும்; இதில், இந்திய அரசின் பங்கு ரூ. 0.50 லட்ச மாகும்.

## பயிர் ஈட்டுறுதி (Crop Insurance).

தமிழ்நாட்டில் சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய சிறு தானியங்கள், நெல் ஆகியவற்றிற்குப் பயிர் ஈட்டுறுதித் திட்டம் கொண்டுவரும் சாத்தியக் கூறினை ஆராய்ந்து பார்க்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்தது. இதற்கான ரூ. 38,591 செலவுக்கும் அரசு அனுமதி வழங்கியது. இத் திட்டம் தொடங்கிய நாள் முதலாக, ஈராண்டுக் காலத்திற்குத் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சார் நிலை மேற்பணியாளர் (upper Subordinates) மூவர், நியமிக்கப் படுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தப் பணித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முதலாண்டில் ரூ. 20,478 அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணித் திட்டம் 6—8—70-லிருந்துதான் செயல்படத் தொடங்கியது. இதற்கென நியமிக்கப்பட்ட சார்நிலை மேற்பணியாளர் மூவரும் பணியில் சேர்ந்து விட்டனர்.

திட்டப் பகுதிகளிலும், திட்டத்தில் சேராத பகுதிகளிலும் நெல்லுக்காகவும், புன்செய் நில சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய வற்றுக்காகவும் கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, தாரா புரம், காங்கேயம், கோபி வளர்ச்சி வட்டாரங்களில் இந்த முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். பயிர் விளைச்சல், நிலத்தின் மண்வளம், கடந்த இருபது ஆண்டுகளில் பயிர் நன்கு விளையாமை, பயிர் நன்கு விளையாமைக்கான காரணங்கள் ஆகியவை பற்றிய விவரங்களைத் திரட்டுவதே இந்தப் பணித் திட்டத்தின் நோக்கமாகும். பயிர் ஈட்டுறுதிக்கு முறையாக ஒரு திட்டம் வகுத்துச் செயல்படுத்துமுன்பு, இவ்வாறு திரட்டிய புள்ளி விவரங்கள் பாகுபடுத்தப்பட்டு, அவற்றிற்கான விளக்கம் காணப் படும்.

## விற்பனை வசதி.

உற்பத்தியான விளைபொருளை வாங்குவது, விற்பது ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கு அங்காடிகள் இருந்தாலன்றி, உணவு தானியங் கள், வாணிகப் பயிர்கள் உற்பத்திப் பெருக்கத்தால் பயனேதும் ஏற்படாது. சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடனும், நுகர்வோர் கொடுக்கிற விலையிலிருந்து தகுந்த பங்கை, உற்பத்தியாளர் பெறுவது இயலும் பொருட்டும், முறைப்படுத்தப்பட்ட பதினொரு அங்காடிக் குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இத்துடன், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின்படி, முறைப்படுத்தப்பட்ட 98 அங்காடிக் கூடங்கள் தொடங்கப் பட்டுள்ளன. நான்காம் திட்ட முடிவுக்குள், மேலும் 150 அங்காடிக் கூடங்களை தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும் தங்களது உற்பத்திப் பொருளின் தரத்தை மேம்படுத்த அவர்களைத் தூண்டும் நோக்கத்துடனும், இதுவரை 10 தரப்பிரிவு நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்வாண்டில் மேலும் 10 நிலையங்கள் ஏற்படுத்தப் படும். 1970–71 வரை, 12 தரப் பிரிவு ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. "அக்மார்க்" தரத்தின்கீழ் எல்லாப் பொருட்களையும் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை விளை பொருட்களைத் தரப்படுத்துவதைக் கட்டாயமாக்குவதற்கு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பூர், ராஜபாளையம், பொள்ளாச்சி ஆகிய இடங்களிலுள்ள விதை நீக்கப்படாத கப்பாஸ் பருத்தித் தரப் பிரிவு நிலையங்கள் மூன்றும் விற்பனைக்குக் கொண்டு வரப்படும். கப்பாஸ் பருத்திப் பொறியினை மதிப்பிடுவதில் பயனுள்ள வகையில் பணியாற்றி வருகின்றன. விரைவிலேயே பெருந்துறை யிலும் மற்றொரு நிலையம் ஏற்படுத்தப்படும். இவ்வாண்டில் மேலும் ஒரு நிலையம் தொடங்கப்படும்.



இம்மாநிலத்து விற்பனை அமைப்புகளில் மாநில விற்பனை வாரியம் மேலுமொரு பயனுள்ள அமைப்பாகும். பல்வேறு மாவட்ட விற்பனைக் குழுக்களின் பணிகளை இது ஒருங்கிணைத்து அங்காடிப் பொருள்-விற்பனை நிலவரங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி வெளியிடும் பணியில் இந்த அமைப்பு ஆழ்ந்த நாட்டம் செலுத்தும்.

## மேலும் பல வேளாண்மை விற்பனை நிலையங்களை (Depot) அமைத்தல்.

## பொருட் சோதனைக் கண்காணிப்பாளர்களை நியமித்தல்.

அரசுப் பணம் விரயமாகாமல் தக்கவாறு பாதுகாக்கப் படுவதற்காக வேளாண்மை விற்பனை நிலையங்களில் உள்ள பொருள்களை அவ்வப்போது சரிபார்த்துவர ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். தற்போது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் களாலும், மாவட்ட வேளாண்மை அதிகாரிகளாலும், பொருள்களைச் சரிபார்க்கும் பணியை முறையாக ஏற்றுச் செய்ய இயலவில்லை. எனவே, இதற்காக பொருள் சோதனைக் கண்காணிப்பாளர்கள் பதின்மரை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வேளாண்மை நிலையங்களில் உள்ள பண்டங்களைத் திடீரென்று சோதனையிட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளதால், இந்தப் பணிக்குத் திட்ட இலக்கு எதுவும் முடிவு செய்யப்படவில்லை. ஆனால், இதற்கென அமைக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்கள் 31—12—70 வரை 420 நிலையங்களைப் பார்வையிட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான ரூபாய் விரயமேற்பட்டுள்ளதை சிறப்புப் பணியாளர்கள் கண்டுபிடித் துள்ளனர். இவர்கள் இவ்வகையில் சிறந்த பணியாற்றியுள்ளனர்.

## கூடுதலாக வேளாண்மை நிலையங்களைத் தொடங்குதல்.

மிகுபயன் தரும் பயிர்வகைத் திட்டத்தினாலும், நவரைப் பயிர் விரைவுத் திட்டத்தினாலும் விதைத் தானியம் போன்று வேளாண்மைப் பயிரிடு பொருள்களை உழவர்களுக்கு உடனடியாக வழங்க வேளாண்மை நிலையங்களில் திரட்டி வைக்கும் அவசியம் ஏற்பட் டுள்ளது. குடியானவர்களுக்கு இத்தகைய பயிரிடு பொருள்கள் கிடைக்கச் செய்யும்பொருட்டு, ஆண்டொன்றுக்கு 50 விற்பனை நிலையங்கள் என்னும் வீதத்தில், நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூடுதலாக 250 விற்பனை நிலையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக திட்டத்தில் ரூ. 31.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 50 துணை விற்பனை நிலையங்கள் என்னும் வீதத்தில், 1969–70, 1970–71 ஆண்டு களில், இந்தப் பணித் திட்டத்தின்கீழ் 100 துணை விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது. 1971–72-ல் மேலும் 50 துணை விற்பனை நிலையங்கள் தொடங்கப்படும். இதற்காகும் செலவு ரூ. 2.10 லட்சமாகும்.

1970–71-ல் வேளாண்மை விற்பனை நிலையம்-கிடங்கு கட்டுவதற்காக ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும், வேளாண்மை மானியத்தின் கீழ் ரூ. 4,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியைக் கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை, 13—5—70 நாளிட்ட 361-ம் எண் ஆணையில் அறிவிக்கும்போது, இத்தொகை, மாவட்ட நிலையில்

# தமிழ்நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1971 ஜூலை 26.

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

## 1. *வினாக்கள்–விடைகள்.*

### *வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.*

*Books on fiction purchased for Connemara Public Library*

* 441 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any books on Fiction have been purchased recently (Drafting and corresponding)

(*b*) if not, the reasons therefor?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். 1969–70-ல் 39 புதினங்களும் 1970–71-ல் 60 புதினங்களும் வாங்கப்பட்டன.*

*(ஆ) கேள்விக்கு இடமில்லை.*

Dr. H. V. HANDE. Sir, is it not a fact that there is a convention and also according to the Recent Libraries Act, whenever any publishing house publishes a book on 'Fiction', that publishing house should automatically send a copy of it to the libraries in all important cities like Madras, Bombay, Delhi and Calcutta. Such being the case, the Connemara Public Library also should have automatically got a copy of it. So, what was the necessity for the Connemara Public Libraray to purchase these books?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இந்தியாவில் மூன்று நூல் நிலையங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் எந்தப் புத்தகம் வெளியிட்டாலுங்கூட, அதில் ஒரு நூலை அனுப்பி வைக்க வேண்டும் என்ற முறைப்படி, கன்னிமாரா நூல் நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. வாங்கப்படுகிற புத்தகங்களெல்லாம் பெரும்பாலும் வெளிநாட்டில் பதிப்பிக்கப்படுகிற புத்தகங்களாகவும், இந்த நூல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படாத புத்தகங்களாகவும்தான் இருந்து கொண்டு வருகின்றன. அந்த வகையில்தான், இந்தியாவில் பதிப்பிக்கப்படாமலும், வெளிநாட்டில் பதிப்பிக்கப்பட்டு இங்கு அனுப்பி வைக்கப்படாமலும் உள்ள புத்தகங்களை, நூல் நிலையத்திற்குப் படிக்க வருகிறவர்கள் சிலர் விரும்பிக் கேட்கிறார்கள். பொதுவாக, நூல் நிலையத்திற்குப் படிக்க வருகிறவர்கள் பல வகை நூல்களிலே விருப்பம் உள்ளவர்கள். தங்களுக்கு இன்ன இன்ன புத்தகங்கள் வேண்டும் என்று கேட்கிறார்கள். பேராசிரியர்கள் பலரும் இந்தப் புத்தகம், இன்ன துறைப் புத்தகம் வேண்டும்*

[1971 ஜூலை 24

மாவட்ட ஆட்சித் தலைவரால் தொகுப்பாக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை அதிகாரிகளைக் கலந்து கொண்டு இதற்கெனத் தெரிந்தெடுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு இத்தொகையை அவர் ஒதுக்கவேண்டும் என்றும் அரசு கட்டளை யிட்டுள்ளது. மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மானியம் முழுவதும் தொகுப்பாக்கப்பட்டு, தெரிந்தெடுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மட்டுமே பகிர்ந்தளிக்கப்படுவதால், துணை விற்பனை நிலையங்கள் கட்டு வதற்கு இந்தத் தொகை போதுமானதாகும்.

கீழ்க்காணும் கூறுகளைப் பற்றி ஆய்ந்து பார்த்த பின்னரே, துணை விற்பனை நிலையங்கள் அமைப்பது பற்றி முடிவு செய்யப்படுகிறது :—

(1) ஊராட்சி ஒன்றியத்தில் பயிரிடத்தக்க மொத்தப் பரப்பளவும், துணை விற்பனை நிலையத்தின்கீழ் வரும் பரப்பளவும்.

(2) ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களின் மொத்த எண்ணிக்கையும், துணை விற்பனை நிலையங்களினால் பயனடையலாகும் கிராமங்களின் எண்ணிக்கையும்.

(3) தலைமை விற்பனை நிலையத்திற்கும், கட்டக் கருதியுள்ள துணை விற்பனை நிலையத்திற்குமுள்ள தொலைவு; தலைமை விற்பனை நிலையத்தில் மொத்த விற்பனை.

## வளர்ச்சி வட்டாரங்களில் வேளாண்மை நல வளர்ச்சிப் பணி அதிகாரிகளின் எழுத்துப் பணியையும் தொழில் நுட்பம் சாராப் பணியையும் குறைக்க வேளாண்மை நிலையங்களில் பணியாளர்களை மேலும் அதிகப்படுத்துதல்.

வேளாண்மை நல வளர்ச்சிப் பணி அதிகாரிகளை எழுத்து வேலையி னின்றும், தொழில் நுட்பம் சாராத வேலையினின்றும் விடுவித்து, அவர்களது சேவையினை நேரிடப் பணிகளுக்குப் பயன்படுத்துவதன் பொருட்டு, ஆண்டுதோறும், ரூ. 25,000-க்கு மேல் விற்பனை செய்யும் எல்லா வேளாண்மை விற்பனை நிலையங்களையும் தரம் உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட விற்பனை நிலையங்களில், விற்பனை நடத்த ஒரு உதவியாளரும், ஒரு சிற்றெழுத்தரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ள 50 உதவியாளர், 50 சிற்றெழுத்தர் பதவிகளில், இதுவரை 34 உதவியாளர், 50 சிற்றெழுத் தர் பதவிகள் நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சிய பதவிகள் விரைவிலேயே நிரப்பப்படும்.

## வேளாண்மைத் திட்ட உட்குழு.

வேளாண்மைத் துறையின் பணிகள், பல்வேறு வழிகளில், பல்கி வருவதைக்கொண்டு, ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய பயிர்ப் பெருக்கம், செடிப் பாதுகாப்பு, தோட்டம் வைத்தல் போன்ற வற்றின் மேம்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக, ஒருமுகப் படுத்தப்பட்ட திட்டம் இன்றியமையாததாகிறது. இந்த நோக்கத் துடன், பணி ஏற்றுச் செய்வதற்கும், அனைத்துமடங்கிய வேளாண்மை திட்டத்தின் முக்கியமான பகுதிகளை எடுத்துக்காட்டவும், திட்ட உட்குழு போன்றதொரு கூட்டு அமைப்பு ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று அரசு கருதியது. இதன்படி, சென்னை வேளாண்மைத்துறை



1971 ஜூலை 24]

இயக்குநர் (அலுவலகத்தில், வேளாண்மைத் திட்டம்-நிர்வாகம்) துறை இணை இயக்குநரின்கீழ் திட்ட உட்குழு ஒன்றை ஏற்படுத்துவ தற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. வேளாண்மைப் பொருளா தாரம், வேளாண்மைப் பொறியியல் போன்ற வெவ்வேறு துறைகளில் வல்லுநர்களைக் கொண்டு இந்த உட்குழு அமைந்துள்ளது.

## வேளாண்மைத் துறையைச் சீரமைத்தல்.

வேளாண்மைத் துறையின் திறமையை வளர்க்கவும், வேளாண்மை பற்றிய அறிவை உழவர்களிடையே பரப்பவும், வேளாண்மைத் துறையின் பணிகளைச் செவ்வையாக ஒருங்கிணைக்கவும், வேளாண்மைத் துறையைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

## முடிவுரை.

வேளாண்மைத்துறை "பசுமை புரட்சி" மலர முழு மூச்சுடன் பாடுபட்டுவருவதுடன் அல்லாமல், இது குறித்து எல்லா நடவடிக்கை களையும் எடுத்துவந்துள்ளது மேற்கண்ட அறிக்கையிலிருந்து தெரிய வரும். இம்முயற்சியில் தன்னுடைய வரையரைக்குட்பட்ட வழி முறைகளைத் திறம்பட, மிகவும் சிக்கனமான முறையில் உபயோகித் துள்ளது. அண்மை ஆண்டுகளில் வேளாண்மையில் போற்றத்தகு முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாக, இதுகாறும் எய்தாத அளவுக்கு உற்பத்தி அதிகரித்துள்ளது. விவசாயத்தில் இக்கால அளவில் ஏற்பட்ட பெரிய மாறுதல்களும், முன்னேற்றமும் ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றியது, நெல் விளைச்சலின்கீழ் புதிய பரப்பளவை கொண்டுவந்தது, விரைவாக மிகுபயன் தரும் திட்டத்தின்கீழ் விளைச்சலின் பரப்பளவை அதிகரித்தது, பயறு வகை களுக்கான சிறப்பு திட்டங்களும், சிறு பாசனத் திட்டங்கள் தீவிர மாக்கப்பட்டது, விவசாய இயந்திரங்களையும், கருவிகளையும் அதிகரிக்க எடுத்துக்கொண்ட முறைகள், கைவசமிருக்கும் இயந்திரங் களையும் கருவிகளையும் உபயோகரமான முறையிலும், தீவிரமாகவும் உபயோகிக்க மேற்கொண்ட வழிமுறைகள், பூச்சி மருந்துகள், உரங்கள் முதலியனவற்றை பெறுவதற்கும், சுலபமான முறையில் விவசாய கடன் பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட புதிய முறைகள் ஆகியவை இந்த மாநிலத்தில் முறையான அதிக உணவு உற்பத்தி உண்டானதற்கு முக்கிய காரணங்களாகும். கோவையில் தொடங்கப் பட்ட வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண்மைக் கல்வி ஆராய்ச்சி துறைகளின் முன்னேற்றப் பாதையில் முக்கியமானதொரு மைல் கல்லாகும். அண்ணா பண்ணையில் ஒரு பயிர் வள ஆராய்ச்சி நிலையம் நடப்பு ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமான வேளாண்மை சமுதாயம் ஒன்றை உருவாக்கும் பணியில் நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்லுகிறது.

என்று கேட்கிருர்கள். அப்படிப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த புத்தகங்கள் 1968–69இல் 916 வாங்கப்பட்டன. 1969–70இல் 888 புத்தகங்கள் வாங்கப்பட்டன. 1970–71இல் 948 புத்தகங்கள் வாங்கப்பட்டன. இந்தியாவில் பதிப்பித்த, கன்னிமாரா நூல் நிலையத்திற்கு வருகிற நூல்களை வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1969–70-ல் 39 புத்தகங்களும், 1970–71இல் 60 புத்தகங்களும் (ஃபிக்ஷன்) வாங்கினதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அவைகளில் ஸ்பானிஷ், ஃப்ரெஞ்ச், ஜெர்மன், இரஷ்யன் இம்மாதிரி மொழிகளில் உள்ள “ஃபிக்ஷன்” ஆங்கிலத்தில் இப்பொழுது அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. அந்த அருமையான புத்தகங்களை வாங்கி வைப்பதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, “ஃபிக்ஷன்” இ-லே மொழிபெயர்ப்புகள் வாங்கப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும். ஆனல், கிட்டத்தட்ட 37 வகையான தலைப்புக்களில் பல்வேறு வகையான புத்தகங்கள் வாங்குகிற அளவில் 916 புத்தகங்கள் 1968–69இலும், 888 புத்தகங்கள் 1969–70இலும் வாங்கப்பட்டிருக்கின்றன. 1969–70இல் 39 புதினங்களும், 1970–71 இல் 60 புதினங்களும் வாங்கப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, my information is that a large number of books which should have automatically been sent to this Library has not been obtained because the Library is not functioning effectively and I also understand that due to overlapping a few books had been purchased even though complimentary copies of such books have been sent. Also, may I know from the Hon. Minister whether it is a fact that a new building has been constructed inside the Museum for providing more facilities to the Library but the Librarian insisted on a compound wall which the P.W.D. authorities refused, and subsequently this building was given to the Inspector of Factories ? What are the reasons for the adoption of such delaying tactics and on account of that, the Library has lost an extra building which would be useful for accommodating more books?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்றது பற்றிய முழு விவரங்கள் என்னிடம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் திரட்டித் தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்துக்களின் அடிப்படையில் நிலைமைகள் இருக்குமானல் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக எந்தப் புத்தகம் அச்சானலும் அல்லது வெளியிட்டாலும் மூன்று நகல்கள் கன்னிமாரா நூலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஆனல், தமிழ் நாட்டில் பலர் இரகசியமாகப் படிப்பதற்கென்று “ப்ளு புக்ஸ்” தயாராகின்றன. அவைகளெல்லாம் அங்கு அனுப்பி வைக்கப்படுகின்றனவா? அனுப்பி வைக்காவிட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறும்போது, இரகசியமான முறைகளில் பதிப்பிக்கப்படுவதாகச் சொன்னர்கள். இரகசியமான முறையில் தயாரிக்கின்றவர்கள் அவற்றை எப்படி நூலகத்திற்கு அனுப்பி வைப்பார்கள்? அனுப்பி வைக்கமாட்டார்கள்.

## அனைத்துத்துறைகளிலும் தமிழில் அலுவல் முறைகள்

* 442 வினு—திரு. மா. பா சாரதி : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது எந்தெந்த இலாக்காக்களில் அலுவல் முறைகள் (Drafting and correspondance) தமிழில் நடைபெற்று வருகிறது?

(இ) விரைவில் அனைத்துத் துறைகளின் அலுவல்களும் தமிழிலேயே நடைபெறச் செய்ய மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அரசு அலுவலகங்கள் யாவற்றிலும் பொதுவான சில விலக்குகளுக்குட்பட்டு எல்லா அலுவலக நடைமுறைகளுக்கும் தமிழைப் பயன் படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(இ) அலுவலகங்களுக்குத் தேவைப்படும் விதிகள், விதித்தொகுப்புகள், நடைமுறை நூல்கள், படிவங்கள், முதலியவற்றைத் தமிழாக்கம் செய்து கொடுக்கும் பணி தீவிரமாக்கப்பட்டு வருகின்றது. அலுவலகங்களை ஆய்வு செய்யவும், பணியாளர்கள் தமிழில் எழுதுவதை ஊக்குவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இயன்ற அளவுக்கு ஆங்கில தட்டச்சுகளுக்குப் பதிலாக தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. என். குமாரசாமி : அலுவலகங்களில் இன்னும் ஆங்கிலம்தான் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் முழுவதுமாக நிர்வாகத் துறையில் கொண்டுவரப்படவில்லை. எங்கும் ஆங்கிலத்தில்தான் பெரும்பான்மையாக இருக்கிறதே தவிர, தமிழில் கிடையாது. ஆகவே, அரசு அலுவலகங்கள் யாவற்றிலும் தமிழையே அமுலாக்கும் முயற்சியில் அரசு ஈடுபடுமா?

வகையில் சிறந்த முறையில் தமிழில் வரைவுகள் போன்றவை எழுதுகிறவர்களைத் தேவைப்படுகிற துறைகளுக்கு மாற்றி அதன் மூலம் தமிழைப் பயிற்சிமொழியாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. இ. எஸ். தியாகராசன்: எல்லாத் துறைகளிலும் தமிழில் நடவடிக்கைகள் நடைபெற இன்னும் எவ்வளவு காலமாகும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: காலவரையறையைச் சொல்ல இயலாது. எவ்வளவு விரைவில் கொண்டு வர இயலுமோ அவ்வளவு விரைவில் கொண்டுவர வேண்டும். அதிகாரிகளும் அதற்கேற்றவகையில் பழக்கப்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆரம்பக் கட்டத்தில் சில சங்கடங்கள் இருக்கக்கூடும். சில விதிமுறைகளை ஏற்படுத்தி ஒரு நடைமுறைக்குக் கொண்டு வந்தால், ஒரு முறையைக் கொண்டு வந்தால் இருநூறு, முன்னூறு ஆண்டுகள் அதன் தன்மை இருக்கும். இப்போது தாலுகா ஆபீஸ்களில் சில எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கும். ஆனால் ஸ்டாம்ப் மட்டும்தான் விழும். ஆனால் என்ன எழுதியிருக்கும் என்று தெரியும். நீண்ட நாட்களாகப் பயன்படுத்தப்பட்டுவருவதால் அதே வகையில் தான் இருக்கும் என்று தெரியும். அதேபோல் தமிழை முதலில் கொண்டு வந்துவிட்டால் 200, 300 ஆண்டுகளானாலும் சரி அந்த முறையே இருக்கும். அதிகாரிகளுக்கு அந்தளவிற்குப் பயிற்சி தர வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழில் நல்ல அறிவு பெற்றவர்கள் மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் நல்ல முறையில் எழுதுகிறவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களால் தமிழ் ஆட்சி மொழியாக விரைவில் நல்லமுறையில் பரவுகிற நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Certain areas have been recognised as minority language areas in this State. May I know whether such areas will be supplied with Kannada and Telugu typewriters?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த அரசைப் பொறுத்த வரையில் தமிழ், ஆங்கிலம் இரண்டும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. குறிப்பிட்ட பகுதிகளில் இருப்பவர்கள் அதற்கான முறையில் தெலுங்கு அல்லது கன்னடத்தில் எழுதுவார்களானால் அங்கு அறிந்து கொள்கிற அளவிற்குத்தான் வருகின்றன. ஆனால் வருகிற கடிதங்கள், கடிதப்போக்குவரத்துக்கள் போன்றவை தமிழ் அல்லது ஆங்கிலம் இந்த இரண்டில்தான் இந்த அரசைப் பொறுத்தவரையில் நடைபெறுகிறது.

கோயம்புத்தூர் நகரமன்றத்தை மாநகராட்சியாக்கல்

* 443 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் நகர்மன்றம், சிங்காநல்லூர் நகர் மன்றம் பேரூர் ஊராட்சி ஒன்றியம், பெரியநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கவுண்டம்பாளையம் ஊராட்சி மன்றம், துடியலூர் பேரூராட்சி மன்றம் ஆகியவற்றை இணைத்து, கோயம்புத்தூர் மாநகராட்சி அமைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?



(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இப்பொருள் குறித்த செயற்குறிப்பு அரசின் அல்லது மற்ற அலுவலகங்களின் பரிசீலனையில் இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. என். மருதாசலம்: கோயம்புத்தூருடன் சிங்காநல்லூர், சுற்றுப்புற கிராமங்களையும் சேர்த்து அதை ஒரு மாநகராட்சியாக ஏற்படுத்த அரசிற்கு உத்தேசமுண்டா? அப்படி ஏற்படுத்துவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதற்கு கோவை நகராட்சிமன்ற உறுப்பினர்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும். சுற்றிலுமுள்ள பேரூர், சிற்றூர் ஆட்சிமன்றங்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும். கோவையோடு சேருவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். சிங்காநல்லூர், மற்றும் அங்குள்ள பேரூர், சிற்றூர் இவைகள் சேர்ந்தால் பெரும் செலவு ஏற்படும். இந்த நிலைகள் எல்லாம் ஆராயப்பட வேண்டும், அதோடு அவர்கள் ஒப்புதலும் வேண்டும். மாநகராட்சிமன்றமாகப் போதுமான அளவிற்கு மக்கள் தொகை இருக்க வேண்டும். வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, இவற்றைச் சொல்லி வற்புறுத்தி அப்படி மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படக்கூடும். அவர்கள் விருப்பத்தை அறிந்து செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் என்ன பலன்கள் ஏற்படுகின்றன என்பதையும் பார்க்க வேண்டும். தனித்தனியாகப் பிரித்து தாங்கள் ஒரு தனி பேரூராட்சி, தனி நகரமன்றம் என்று இருக்க வேண்டும் என்ற உணர்வு ஆங்காங்கு இருப்பதால் எளிதில் பெரு நகரத்தோடு தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட யாரும் முற்பட மாட்டார்கள், இன்றியமையாத அவசியத்தையொட்டி தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டாலொழிய.

திரு. கே. என். குமாரசாமி: கோவை நகரத்தினை ஒரு மாடல் நகரமாக உருவாக்குவதற்கு மத்திய அரசினிடம் தமிழக அரசு ஏதாவது கோரிக்கையை அனுப்பியிருக்கிறதா? 100 கோடி ரூபாய் திட்டத்தின் கீழ் அந்த நகரத்தை ஒரு மாடல் நகரமாக ஆக்குவதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியதில்லை. ஆனால் அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த ஆண்டு மே தினத்தில் மதுரை மாநகராட்சியாக மாறியது. அதேமாதிரி அடுத்த ஆண்டு மே தினத்தில் கோவையைப் போன்ற நகரங்களை மாநகராட்சிகளாக்குவதற்கு ஏதாவது ஆலோசனை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழிலே ஆக்குவதற்கான முயற்சிகள் மெல்ல மெல்ல மேற்கொள்ளப்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகங்களில் நடவடிக்கைகளைத் தமிழில் கொண்டுவரப் பின்வரும் நான்கு நிலைகள் கொண்ட திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

(1) முதல் நிலை:—பொது மக்களுக்கு அனுப்பும் கடிதங்கள் யாவும் தமிழில் இருக்க வேண்டும். தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப்பட வேண்டும்.

(2) இரண்டாம் நிலை.—சில விலக்குகளுடன் தங்களுடைய சார்நிலை அலுவலகங்களுடன் தமிழில் கடிதப்போக்குவரத்து நடத்த வேண்டும்.

(3) மூன்றும் நிலை.—பொதுவான சில விலக்குகளுடன் துறைத் தலைமை அலுவலகங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளும் போது தமிழயே பயன்படுத்த வேண்டும்.

(4) நான்காம் நிலை.—பொதுவான சில விலக்குகளுடன் செயலகத் துறைகளுடன் தமிழிலேயே தொடர்பு கொள்ள வேண்டும். இந்த நான்கு நிலைகள் படிப்படியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

நீதி மன்றங்களில் இப்பொழுதுதான் தமிழை ஆட்சி மொழியாகக் கொள்ளும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மெல்ல மெல்ல எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மிக அவசரமாகக் கூடாது. ஆனால், மிக மெல்லவும் செல்லக் கூடாது. அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு நீதி மன்றங்களில்–மாவட்டங்களில் இருக்கும் நீதி மன்றங்களில்–இப்பொழுது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தீர்ப்பை சிறந்த தமிழில் எழுதுபவர்களை ஊக்குவிக்கப் பரிசு அளிக்கும் முயற்சி கூட இருந்து வருகிறது.

திரு. ஏ. எம். இராஜா: இன்னும் பல அரசு அலுவலகங்களிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருகிற பதில்கள் கூட ஆங்கிலத்தில்தான் வந்து கொண்டிருக்கின்றன. அரசு தமிழில் நடைமுறைகள் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தாலும் பல அலுவலகங்களில் இருந்து ஆங்கிலத்தில்தான் கடிதப் போக்குவரத்துக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அவைகளைத் தடுக்கும் பொருட்டு—இப்போது வடக்கே யு.பி. மாநிலம் என்று கருதுகிறேன், அம்மாநிலத்தில் இந்தியைத் தவிர வேறு எந்த மொழியைப் பயன்படுத்தினாலும் அப்படிப் பயன்படுத்துகிற அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று ஆணை பிறப்பித்திருப்பதுபோல் இங்கேயும் அம்மாதிரி ஒரு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எல்லோரையும் பயிற்றுவிக்கிற அம் முறையில் நாம் ஈடுபட்டு வருகிறோம். அதற்கு வேண்டிய வழிகளை அரசு ஆலோசித்து வருகிறது. அதை விரைவுபடுத்த ஒரு குறிப்பிட்ட கால வரையறை வைத்து கண்டிப்பாக செயல்படுத்த வேண்டுமென்ற முறையில் மாற்றுவதற்கான முயற்சி





களை மேற்கொள்ள வேண்டுமென்று முயற்சி இருக்கிறது. வெளியிடப்படும் ஆணைகள் அலுவலகங்களில் எப்படி எப்படி இருக்கின்றன என்பது பற்றி தீவிர ஆய்வுகள் மூலம் சரி பார்த்துத் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. மாவட்டங்கள்தோறும் ஒரு அலுவலர்வீதம் ஆய்வு செய்யத் தனியாக அமைத்து ஆய்வுத் திட்டத்தை நிறைவேற்ற முயன்று வருகிறது. நாம் அவசரப்படாமல் பணியாற்ற வேண்டும். ஆனால் அழுத்தமான வகையில் நோக்கம் நிறைவேறத்தக்க வகையில் முயற்சிகளை மேற்கொண்டு வெற்றிகரமாக ஆக்கவேண்டும்.

திரு. ம. மோசஸ்: தமிழ் டைப்ரைட்டிங் படித்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே தமிழில் நடவடிக்கைகள் எடுக்கும்போது தமிழ் டைப்ரைட்டிங் தெரிந்தவர்கள் அதிகமாகத் தேவைப்படுவார்கள். ஆகவே அரசாங்கத்திலிருந்து ஒரு தமிழ் டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் எல்லா மாவட்டங்களிலும் தொடங்குவதற்குள்ள ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழ் தட்டச்சுப் பயிற்சி தருவதற்கான அளவிற்கு எல்லாயிடங்களிலும் பயிற்சிகளைப் பலரும் தந்து கொண்டு வருகிறார்கள். அரசாங்க அலுவலகங்களில் இருப்பவர்களுக்குக் கூட இப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் எல்லாம் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன. இப்போது ஓரளவிற்குத் தனியார் நடத்துகிற பயிற்சிக்கூடங்களில் கூட தமிழின் முக்கியத்துவத்தை அறிந்து தமிழ் தட்டச்சு கற்றுக் கொடுக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அச்சுப் பொறிகளை மாற்றுகிற நிலைமையில் கூட தட்டச்சுப் பொறிகளை மாற்றும் அளவில் கூட அதிகமான அளவிற்கு தமிழ் தட்டச்சுப் பொறிகள் அலுவலகங்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. பற்றாக்குறை இருப்பதால் அதை அதிகப்படுத்தும் முறையும் ஒரு பக்கத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதேபோல் ஆங்காங்கு வசதிகளும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன.

திரு. கா. வேழவேந்தன்: அண்ணாவின் ஆட்சி ஏற்பட்ட இந்தக் காலத்தில் தமிழ் மாற்றத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் வேறு எந்தக் காலத்திலும் அதை நடைமுறைப்படுத்த முடியாது என்ற எண்ணம் வெளியே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இங்குள்ள தலைமைச் செயலகம் போன்ற அலுவலகங்களில் தங்கள் நடைமுறைகளில் எந்தெந்தத் துறைகளில் தமிழை மிகவும் அதிகமாக அதிகாரிகள் கையாள்கிறார்களோ அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு வேலை உயர்வுக்கூறுகள், (promotion opportunities போன்ற வகையில் வேண்டிய வசதிகளைச் செய்வதற்கு இந்த அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வேலை உயர்வுகள் அத்தகைய நிலைமைகளைச் செய்வதற்குத்தர இயலுமா என்பது ஆராயப்பட வேண்டியதொன்று. சிறந்த முறையில் வரைவுகள் முதலியவைகளை எழுதுகிறவர்களுக்கு ஊக்கப் பரிசு தரும் முயற்சியில் ஈடுபட்டு, மாவட்டங்கள்தோறும், 13 மாவட்டங்களுக்குத் தரப்பட்டு சென்னையில் இரண்டு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ரூ. 500, ரூ. 500 என்று ஊக்கப்பரிசு தரப்பட்டிருக்கிறது. சென்ற

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஒவ்வொரு மே தினத்திலும் ஒவ்வொன்றையும் மாநகராட்சியாக ஆக்கவேண்டுமென்ற குறிப்பு இல்லை. மதுரையைப் பொறுத்தவரையில் அங்கு ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை பல்லாண்டுகளாக இருப்பதாலும், இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் இருப்பதாலும் மதுரை நகரம் மாநகரமாக மாற்றப்பட்டது. ஆனால் இப்போது அந்தப் பிரச்சினை மற்றயிடங்களில் எழவில்லை. மக்கள் தொகை வளர்ந்து போதுமான நிதி வசதியும் அங்கு வளர்கிற காலத்தில் இவை கவனிக்கப்படவேண்டியதொன்று அது.

சீர்காழி பேரூராட்சியைத் தரம் உயர்த்தல்

*444 வினா—திரு. எஸ். வடிவேல்:
திரு. சி. கணேசன்:
மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக்கக் கோரி அப் பேரூராட்சியிலிருந்து தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) சீர்காழி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும்படி அப் பேரூராட்சியிலிருந்து தீர்மானம் ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் அப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. டி. வி. சம்பத்: தலைவரவர்களே, சீர்காழி பேரூராட்சி நகராட்சியாக மாற்றுவதற்கான எல்லா வசதி பொருந்தி இருந்தும், அந்தப் பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அது அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தும், அதை நகராட்சியாக ஆக்கக் கூடாது என்று அந்த நகரத்திலிருந்து ஏதாவது தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தப் பேரூராட்சி நகராட்சியாக மாற்றுவதற்கான தகுதி பெற்று இருக்கிறது. மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டு இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அங்கே மக்கள் தொகை 20,000-க்கு மேற்பட்டு இருக்கிறது. வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதேபோல், வருமானமும் ரூ. 3 லட்சத்திற்கு மேல் இருக்கிறது. எனவே, நகராட்சியாக்குவதற்கான தகுதியை சீர்காழி பெற்று இருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அது பற்றிய முடிவை அரசு விரைவில் எடுக்கும்.



வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அரசு கடன்.

* 445 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாபேட்டை நகராட்சியின் நிதி பற்றாக்குறையைப் போக்கச் சென்ற ஆண்டு எவ்வளவு கடன் அரசால் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டு, அதாவது 1970–71 வாலாஜாபேட்டை நகராட்சிக்கு அதன் நிதி பற்றாக்குறையைப் போக்க அரசு ரூ. 15,000 கடனாக வழங்கியது.

*Demands day organised by Gramasevaks.*

* 446. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the "Demands Day" organised by the Gramasevaks about February, 1971: and

(b) if so, the action taken on the demands?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஊர்நல உதவியாளர்கள் (Gramasevaks) சம்பள வீதத்தை மீண்டும் மாற்றியமைப்பதற்கு, தமிழ்நாடு ஊர்நல உதவியாளர்கள் சங்க கோரிக்கைகளை அரசு பரிசீலித்துள்ளது. இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரைத்த சம்பள வீதங்களே போதுமானவை என்றும், மாற்றம் எதுவும் தேவையில்லை என்றும் அரசு கருதுகிறது.

சென்னை–அரக்கோணம் புறநகர்ப் பகுதி

* 447 வினா—திரு. என். எஸ். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் அரக்கோணம் வரை உள்ள பகுதியை சப்-அர்பன் பகுதியாகச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி சென்னை மாநகர பெரும் திட்டத்தின் பொருட்டு அரக்கோணத்தை சென்னை தலைநகருக்குரிய (மெட்ரோபாலிடன்) பரப்பில் சேர்த்துக் கொள்வதைப்பற்றி இருக்குமானால் அதற்கு விடை அரக்கோணம் நகர அமைப்பு இயக்குநரால் இடைக்கால வளர்ச்சித் திட்டத்தின் பொருட்டு வரையப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளது. அம்மாதிரி சென்னை தலைநகருக்காக வரையறுக்கப்பட்ட பகுதி 456 சதுர மைல் பரப்பை சென்னை–செங்கை

மாவட்டங்களில் கொண்டுள்ளது. அது மேற்கே திருநின்றவூர் வரை எட்டியுள்ளது. அதற்கு அப்பாற்பட்டுள்ள அரக்கோணம் இதில் இடம் பெறவில்லை.

திருப்பூர் நகரமைப்புத் திட்டம்.

* 448 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் டவுன்-பிளானிங் திட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்று புகார் ஏதேனும் 1967-ம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) உறுப்பினர் தமது விண்ணப்பத்தில், "திருப்பூர் நகரமைப்புத் திட்டம் 3-ஐ உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இத் திட்டம் ஏற்கனவே அமுலில் உள்ளது. இத் திட்டத்தில் உத்தேசித் துள்ள சில சாலைகளுக்குத் தேவையான நிலங்கள் ஏற்கனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டு சாலைகளும் போடப்பட்டு விட்டன. கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள இடங்களில் அமைந்திருக்கும் சிறிய அகலமுள்ள சாலைகளை அகலப்படுத்துவதற்குத் தேவையான நிலங் களை ஆர்ஜிதம் செய்வது பற்றி திருப்பூர் நகர மன்றத்தின் பரிசீலனை யில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அதற்காக அரசாங்கம் அந்த நில ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னுலே நகரசபையே பொறுப்பேற்று அந்தக் காரியத்தைச் செய்து, நிலத்தை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்று கூறப் பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நகர மன்றத்திற்கு ஏற்கெனவே ரூ. 76,000 கடன் அளிக்கப்பட்டது. திட்டத்திற்குத் தேவையான நிலங்கள் ரூ. 75,246 செலவில் நகர மன்றமே ஆர்ஜிதம் செய்து இருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் இன்னின்ன பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு ஆங்காங்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் கீழ் சில சாலைகள் அகலப்படுத்துவதற்கான வேலைகள் எஞ்சியுள்ளன. இந்தச் சாலைகள் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ள பகுதியில் உள்ள சிறிய சாலைகளாகும். அச் சாலைகளை அகலப்படுத்து வதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்வது பற்றி திருப்பூர் நகராட்சி மன்றம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதாகக் கூறப் படுகிறது. ஆர்ஜிதம் செய்வதற்காக ஆகும் பெரும் தொகையை, நகராட்சி ஏற்க இயலுமா என்று கோவை மாவட்ட ஆட்சித்



தலைவர் அறிய விரும்பினுர். சாலைகளை அகலப்படுத்த ஏராளமான செலவு ஆகும் என்பதற்காக, திருப்பூர் நகரமன்றம் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று துணை நகரமைப்புத் தலைவர் கூறியுள்ளார். அவர்களுடைய பொருளாதார நிலையைப் பொறுத்து இந்தத் திட்டத்தின் பெரும் பகுதி நிறைவேற்றப்படும். திட்ட நாளாகிய 19—8—1947-லிருந்து இருபதாண்டுக் கால அளவு 19—8—1967 அன்றுடன் முடிவடைந்தது. எனவே, இக்கால அளவை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் என்று திருப்பூர் நகராட்சி மன்றம் கேட்டுக்கொண்டது. அதற்கேற்ப, பணிகளை முடிப்பதற்கான கால அளவு 1967-லிருந்து மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகையால் இத் திட்டமானது 19—8—1972-க்குள் முழுவதுமாக நிறைவேற்றப் படவேண்டுமென்று அரசாங்கம் விரும்புகிறது.

*Electrical crematorium for Madras.*

449 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to stote—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to put up electrical crematorium in Madras City: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சென்னையிலே மக்கள் பெருக்கம் அதிகமாகி விட்டது. மக்கள் உற்பத்தி ஆகிற வேகத் தைப் பார்த்தால் இன்னும் சில நாட்களில் செல்கிற பிணங்கள் க்யூ வரிசையில் நிற்க வேண்டிவரும். அதை ஒட்டி, மின்சாரப் பொறி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதைப் பற்றி நான் அறிந்த வரையில் பிணங்கள் க்யூ வரிசையில் இருக்கும் போது தான் அந்த மின்சார அடுப்பு முழு அளவில் பயன்படும். இல்லையென்றுல் மின்சார அடுப்பு முழு சூடு அடைய ஏறத்தாழ சுவிட்சு போட்டதிலிருந்து 6 மணி நேரம் ஆகவேண்டும். அதை அவ்வப்போது அணைக்க இடம் இருக்கக் கூடாது. அவ்வளவு பிணங்கள் இன்று ஒரே இடத்தில் எரிக்கப்படுவது இல்லை. அவ்வளவு பிணங்கள் ஒரே இடத்தில் எரிக்கக்கூடிய சூழ்நிலை, மனப்பான்மை வருகிறபோது இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நம் நாட்டின் ஹிந்துக்கள் செத்த பிறகு எலும்புகளை காசி, இராமேஸ்வரத்தில் கொட்டுகிருர்கள். இந்த மின்சார எரிப்பு முறை வந்தால் எலும்புகள் கிடைக்காது என்ற காரணத்தால் இதைப் பலர் எதிர்ப் பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதை மக்களுக்கு விளக்கு கிற வகையில் அரசாங்கம் அதன் பயன் குறித்து பிரசாரம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 ஜூலை 26]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மின்சார அடுப்பு உருவாக்கப்படுகிற காலத்தில் பொதுமக்கள் அதனுடைய பயனை உணர்ந்து விடுவார்கள் என்று நான் நம்பிக்கொண்டு இருக்கிறேன் . இன்னும் சில ஆண்டுகள் போனால் மத மூட நம்பிக்கைகள் மெல்ல மெல்ல ஒழியும் போது, எரிக்கப்படுகிற உடம்பின் எலும்பு தேவை இல்லை என்று எண்ணுகிற நிலைமை வரும். சிலர் மத அடிப்படையில் வேண்டாம் என்று சொன்னாலும், பெரும் பாலான சாதாரண மக்கள் அதன் பயனை உணர்ந்து அதை எதிர்க்க மாட்டார்கள். எனவே, நாடு வளர்ச்சி பெறும்போது அதைப்பற்றிய திட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, சென்னையில் மாம்பலத்திற்குப் பக்கத்தில் கண்ணம்மாபேட்டை அருகே ஒரு கட்டிடம் கட்டி மின்சாரப் பொறி பொருத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே மக்கள் பிணத்தைக் கொளுத்துகிறார்கள். அங்கே மின்சார இணைப்புக் கொடுத்து கொளுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது தனிக் கேள்விக்கு உரியது மட்டுமல்ல, கேள்வி போட வேண்டிய இடமும் வேறு.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இன்று சென்னை போன்ற பெரிய நகரங்களில் பிணங்களைப் பலர் புதைத்து வருகிறார் கள். இந்தப் பிணத்தைப் புதைப்பதற்கு பல இடங்களில் இடுகாடு கள் இருக்கின்றன. இந்த இடுகாடுகளில் வீடு கட்டிவிடுகிறார்கள். குடிசைப்போட்டு விடுகிறார்கள் என்று புகார் வருகிறது. இவற்றைத் தடுப்பதற்காக பிணங்களை எரிக்க மின்சாரப் பொறி ஏற்படுத்தி எல்லாவற்றையும் ஒரே இடத்தில் கொண்டு வந்து எரிப்பதற்கான வசதி செய்து தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் கூட மாநகராட்சி மன்றத்தின் கருத்தையும், பொருளா தாரத்தையும் பொறுத்ததாகும்.

---

## *Mini Primary Health Centres.*

* 450 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to open a number of Mini Primary Health Centres in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

---

@ 628-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1971 ஜூலை 26]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் 2,000 குடும்பங்கள் அல்லது 10,000 மக்கள் கொண்ட இடங்களில் மினி பிரைமரி சென்டர் அமைக்கப்படும் என்றும், ஒரு குடும்பத்திற்கு 50 பைசா ஒரு மாதத்திற்கு என்றும், ரூ. 1 என்றும் ஒரு முறை இருக்கிறது. இந்த மாதிரி மினி சென்டர்கள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்ட இடத்தில் தான் இருக்கிறதா அல்லது தமிழகத்தில் எந்தெந்த இடத்தில் இம்மாதிரியான சென்டர்கள் அமைப்பதாக ஆலோசனை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குறிப்பிட்ட இடத்திலே ஏற்படுத்தப்பட்ட மருந்தகங்கள் வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் ஆர்கனைசேஷனால் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு நல்குகிறது. இந்த மினி ஹெல்த் சர்வீஸ் சென்டர்கள் பரவலாக ஏற்படுத்தப்படும். நகரப் பகுதிகளில், பெரிய மருந்தகங்கள் இருந்தாலும், மக்கள் சுகாதாரத்தைப் பொறுத்து, அந்தந்த நகர் பகுதிகளில் இப்படிப்பட்ட அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று நான் பலரை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, ஒவ்வொரு வளர்ச்சி வட்டத்திற்கும் ஒவ்வொரு சுகாதார நிலையம் அமைப்பது பொருத்த மாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 374 பஞ்சாயத்து யூனியனிலே இப்போது ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. 130—140 இடங்களில் பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்களில் இருக்கிறது அரசாங்கத்தின் சார்பிலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. மற்ற இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த ஆரம்பச் சுகாதார நிலையங் மு.ப. 9 30.
களை லாட்டரி சீட்டுப் பணத்திலிருந்து அமைப்பது என்ற செய்தி வந்தது. அப்படி நியமிக்கும் போது, மிக பிற்படுத்தப்பட்ட, அத்யா வசியமான இடங்களில் முதலிலே அமைக்கலாம் என்று அரசாங்கம் கருதுமா? அப்படி அமைப்பதானால், பாலமலை என்ற இடத்தில் மலைவாசிகள் வாழும் இடத்தில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி மினி ஹெல்த் சென்டர் பற்றியது. ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒரு ஒன்றியத் திற்கு ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப் பட்டு, பஞ்சாயத்து குறிப் பிட்ட இடத்தில், குறிப்பிட்ட ஊரில், அவர்கள் கொடுக்கும் முன் பணத்தையும், இடத்திலும், அரசாங்கம் அதிகமாக ஒரு லட்ச ரூபாய் போட்டு, அந்தத் திட்டம் பூரணமாக நிறைவேற்றியதற்குப் பிறகு அரசாங்கமே மருத்துவ மனையை நடத்த வேண்டுமா என்பது ஆலோசிக்கப்பட முடியும்.

திரு. சொ. காவேரி மணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பெரும்பாலும், அலோபதிக் வைத்திய மருந்துக்கள் தான் கொடுக்கப்படுகின்றன. சித்த வைத்திய மருந்துகளும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆங்காங்கே அமைக்கப்படுகிற நிலையங்களில் அலோபதிக் டாக்டர்கள், எம்.பி.பி.எஸ். பாஸ் செய்தவர்கள் மருத்துவர்களாக நியமிக்கப்படுவதால், அலோபதிக் மருந்துகளைக் கொடுக்கிறார்கள். சித்த மருத்துவர்கள் நியமிக்கப்படும் நிலை ஏற்பட்டால், அதைப் பற்றிச் சிந்திக்கலாம். அலோபதிக் டாக்டர் மூலம் சித்த மருந்துக் களைக் கொடுப்பது முறையாகாது.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரதம மருத்துவ மனைகளுக்கு நிதி போதவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதை அதிகப்படுத்த முடியுமா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நிதி போதவில்லை என்ற கருத்து இல்லை. ஏற்கனவே தரப்பட்ட நிதியைவிட, அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதிகமாக இருப்பதால், போதுமானதாக இருக்கும் என்று நம்புகிறேன். எந்த மருந்தகத்திலும் தவறான வழியில் மருந்துக்கள் போகாமல், முறையாகச் செய்யப்பட்டால் பெரும் அளவுக்கு நிறைவு காணலாம் என்று நம்புகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, certain Panchayat Unions are very big and the population is also huge and one Primary Health Centre is not sufficient in such Unions. So, in such Unions will the Government sactio oe more Primary Health Centre?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது பொருளாதார நிலையில் இடம் பெற்று ஆலோசிக்கப் படவேண்டிய ஒன்று.

*Public Relations Officers.*

*438 Q.—THIRU S. DURAISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) number of Regional Public Relations Officers appointed in the State;

(b) the duties and responsibilities attached to the post; and

(c) whether there is any proposal to appoint such officers in each district?*

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) எட்டு.

(ஆ) ஒரு குறிப்பு @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

(இ) இல்லை.

@ 628-630-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.



திரு. சு. துரைசாமி : இந்த விளம்பர இலாகா மூலமாக அதிகாரிகள் நியமித்திருப்பது பொதுமக்களுக்கு வசதியாக இருக் கிறது. ஒவ்வொரு தொகுதியிலும், தொடர்பு அதிகாரிகள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துச் செயல்பட செயற்குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபோல செயற்குறிப்பு இல்லை என்று மூலக் கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறேன்.

திரு. கா. காளிமுத்து : திரைப்படக் கருவிகள் மூலம் வட்டாரத் தொடர்பு அலுவலர்கள் கிராமப் புறங்களில் அரசின் சாதனைகளை விளக்கிக் காட்ட வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதற்கான முயற்சிகளை மேற் கொள்ளத்தான் இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

THIRU R. PONNAPPA NADAR : Sir, are these appointments made through the Public Service Commission or by the Government?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவைகள் சர்வீஸ் கமிஷன் வாயிலாக நியமனம் செய்யப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்கள் சென்னையிலும், ரீஜனல் ஆபீசர்களும் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்கள் 8 பேர்கள் இருக்கிறார்கள்; செங்கற்பட்டிற்கு ஏற் கெனவே உள்ள வெளியீட்டு அலுவலரும், சென்னைக்குச் சிறுவர் அரங்க மேலாளரும் பொறுப்பாக இருக்கிறார்கள். ஆக 10 பேர்கள் இருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : இந்த அரசு மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், மற்றுமுள்ள ஏழைகளுக்கும் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவற்றையெல்லாம் பல பத்திரிகைகள் திரித்துக் கூறி, மறுத்து வருவதால், பொதுமக்களுக்கு இவற்றை எடுத்துச் சொல்ல வலிவான ஒரு பிரசார அமைப்பை அரசு ஏற்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பொதுமக்களே உண்மை எது, உண்மைக்கு மாறானது எது என்பதை அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்பதற்குச் சான்று நடந்து முடிந்த தேர்தல்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த அதிகாரிகளை நியமித்தது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வாயிலாக இல்லை என்று கூறி னார்கள். அதற்குக் காரணம் என்ன? இனிமேலாவது இப்படிப் பட்ட நியமனங்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகச் செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பதவிகள் தாற்காலிக மாக இருப்பவை. நிரந்தரமாக இருந்தால், அப்படிச் செய்வது

அரசுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதினால், இந்தப் பதவிகளை நிரந்தரமாக நிர்ணயம் செய்வது பற்றி முடிவுகள் எடுக்கப் படலாம். அப்பொழுதும் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வரம்பிற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

திரு. ஏ. சுப்பரமணியம்: தலைவர் அவர்களே, இந்த பப்ளிசிடி ஆபீசர்கள் சம்பந்தமாக ஆகும் செலவுக்கு ஏதேனும் வரையறை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே 1967-க்கு முன்பு இருந்த இந்த அமைப்பின் மூலமாகக் கிட்டத்தட்ட ரூ. 17, 18 லட்சம் செலவாகியது; இப்பொழுது இதன் மூலமாக ரூ. 13 லட்சம் செலவாகிறது. தலைமைச் செயலக அமைப்பு உள்பட, வெளியிலும் அமைக்கப்பட்டுள்ள அமைப்புக்கள் சேர்ந்து இந்தத் தொகையில் அடங்கும்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I know what is the qualification for these P.R.O.'s and whether they have specialized in Public Relations Studies or passed any examination?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்படிப்பட்ட பொறுப்புக்களுக்கு எழுதித் தேற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. பொது மக்களோடு தொடர்பு கொண்டு இருக்கிறார்களா என்பதை ஆராய்ந்து, இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீசர்களை முதலாவதாக அரசாங்க மருத்துவ மனைகளில் நியமிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அரசாங்கம் செய்யும் காரியங்களை மக்களோடு தொடர்பு கொண்டு, மக்களை அவற்றிற்கு ஈர்த்து மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்றுதான் இந்த அமைப்புக்கள் இருக்கின்றன. மருத்துவ மனையில் இந்த அமைப்புக்கள் பொருந்தி வராது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற அதிகாரிகள் நியமிக்கும்போது, தர்மபுரி மாவட்டத்திற்குத் தனியாக ஒருவரை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கோவை, நீலகிரி என்றும், சேலம், தர்மபுரி என்றும் இரண்டு மாவட்டங்களை இணைத்து, அதற்கேற்றவகையில் அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட அமைப்புக்கள் தமிழக அரசின் செயல்களை நல்லமுறையில் மக்களுக்கு எடுத்துக் கூறி நல்ல பணியாற்றி வருகிறது. அரசின் நிகழ்ச்சிகள் மக்களுக்கு நல்ல முறையில் இன்னும் அதிகமாகப் பரவ தினத்தாள் ஒன்று வெளியிட்டு, அதன் மூலம், அதிகமான விளம்பரம் தரும் வகையில் விரிவு படுத்தப்படுமா?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது நடைபெறுகின்ற தமிழரசு ஏடு நல்ல முறையில், அதிகப் பிரதிகள் விற்பனையாகி, மக்களிடம் இருக்கிறது. மேலும் வளர்ச்சி பெற்று இருக்கும் நிலை ஏற்பட்டால், அப்பொழுது மாண்புமிகு உறுப்பினருடைய யோசனைகளையும் பரிசீலிக்கலாம்.

*Demonstration by workers of Simpson Group of Companies.*

• 139. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there was strike and demonstration by the workers of the Simpson Group of Companies in Madras City during the middle of April 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (ஆ): பேரவையின் முன் இது பற்றிய குறிப்பு @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தக் கம்பெனியோடு தொடர்பு இல்லாதவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் போது தொடர்பு இல்லாதவர்கள் சேர்ந்து கொள்வது இயற்கையே.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், சிம்சன் க்ரூப், அடிசன் கம்பெனி போன்றவைகளில் இரு பகுதித் தொழிலாளர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டாலும், இன்றைக்குச் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், இருசாரார்கள் பேரிலும் போடப்பட்ட கேஸ்கள் வாபஸ் வாங்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வழக்கின் தன்மைகள் ஆராயப்பட்டு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE: After going through the statement, is it not a fact that there are several other factors also, whether number of clashes had taken place, whether number of complaints had been received from Mr. Gurumurthy's union and also whether several of them were admitted in E.S.I. hospital? May I know whether complaints had been received from a particular another union affiliated to INTUC (a copy of the memorandum of which I had given to the Hon. Minister for Labour)? May I know whether the Hon. Chief Minister will give an assurance or categorical answer that future clashes at least will be prevented and that suitable action will be taken on those who have involved themselves in these clashes, irrespective of party affiliations?

@ 123-124-ம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதுவரை முறையாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்போல் இனியும் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த குறிப்பில் "தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தொழிலாளர் பிரிவினர் சிலர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் ஒரு கூட்டமாகக் கூடி பம்பிங் ஸ்டேஷன் சாலையில் தி.மு.க. தொழிற்சங்கத் தொழிலாளர்களைத் தாக்கினர்" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போது இப்படித் தி.மு.க.வினர் தாக்கப்படுகிறார்களே, இதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருப்பதுதான் காரணம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த சிம்சன் க்ரூப்பில் தகராறு உண்டானதற்குக் காரணம் அங்கே திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியாக ஒரு சங்கம் அமைத்திருப்பதுதான் என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினரைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த சிம்சன் க்ரூப் யூனியன் சம்பந்தமாக சீக்ரெட் பாலட் முறையைக் கையாள்வதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது எல்லாக் கட்சி யூனியன்களும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவாகும். அரசு ஒரு தனி நிறுவனத்திற்கு முடிவு எடுப்பது என்பது பொருத்தமாக இருக்காது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த ஆர்ப்பாட்டம் கோரிக்கைகளுக்காக நடைபெற்றதா? அல்லது இரண்டு போட்டிச் சங்கங்களிடையே ஏற்பட்டதா? போட்டிச் சங்கங்களைத் தவிர்க்க அரசாங்கம் உருவான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போட்டிகளைத் தவிர்ப்பதற்கு பொதுவான கொள்கைகள் வகுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆர்ப்பாட்டங்கள் என்கிற போது சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காக்கும் அடிப்படையில் காவல்துறையினர் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

DR. H. V. HANDE: Whoever gets involved in this particular trade union rivalry, the ultimate persons who are going to suffer are the poor workers and the Government, as I understand, is interested in preventing such things from happening. May I know whether the Hon. Chief Minister would give a categorical answer that he would be prepared to appoint a sort of Commission of



Enquiry, an Expert Commission so that the discontentment among Congress Workers and persons involved in trade union rivalry, will be considerably relieved? One section of the House says that there is discontentment among Congress Workers and another section of the House says that there is discontentment among D.M.K. workers. So will the Hon. Chief Minister come forward to appoint a Court of Enquiry or Commission of Enquiry to investigate into the whole matter and give satisfaction to the public as well as to the workers?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டு கருத்துக்கள் சொல்லப்படுகிற காரணத்தினாலேயே ஒரு விசாரணை வைக்கப்பட வேண்டுமென்று சொல்ல முடியாது, ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் தன்மையை உணர்ந்து இதுபோன்ற விசாரணை அமைக்கப்பட வேண்டும்.

திரு. ரா. ரா. முனுசாமி: சென்னையிலே பல தொழிற்சாலைகளில் நடைபெறுகிற ஆர்ப்பாட்டங்களுக்கு அரசியல் கட்சிகளின் தலையீடுதான் என்பதாக பொதுமக்களிடையே பிரச்சாரம் நடைபெறுகிறதே, இதுபோல அரசியல் கட்சிகள் தலையிடாதிருக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதில் அரசியல் கட்சிகள் தலையிடுகின்றன என்பதற்காகக் கடுமையான நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்காது. ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல சட்டத்திற்கும், ஒழுங்குக்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படக்கூடிய வகையில் செயல்முறைகள் இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் இந்தி வகுப்புக்கள்

*440 வினா—திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எல்லாப் பள்ளிகளிலும் இந்தியை அறவே நீக்கி விட்ட பிறகும், வேலூரில் உள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் டி.எஸ்.பி.களுக்கு இந்தி வகுப்பு நடத்தப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

## *Assignment of land to landless in Pallipet Sub-Taluk.*

*451. Q.—THIRU E. S. THYAGARAJAN: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that an assignment of land in S. No. 12/1 of G.C.S. Kandigai in Pallipet Sub-Taluk, Chingleput District for 18 landless poor people has been made; and

(b) if so, wheher it is being cultivated by the persons to whom it was assigned?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (a) Yes.

(b) Out of the 18 assignees, 4 persons are actually cultivating the land.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்பட்டுள்ள பல ஏழை எளிய விவசாயிகள் அவற்றைச் சாகுபடி செய்ய முடியாது சிலர் தடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அதன்பேரில் என்ன நடவடிக்கை அரசு எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தடுக்கவில்லை. நீதி மன்றம் சென்று உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். இவை பற்றி நீதி மன்றம் தீர்ப்பு அளித்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : திருத்தணி வட்டத்தில் நமது கலைஞர் அவர்களுடைய அரசு நிலம் அற்ற ஏழை எளியவர்களுக்கு நிலத்தை வழங்கியிருக்கிறது. ஆனால் ஒரு சில கிராமங்களில் நிலம் படைத்த ஆதிக்கச் சக்திகள் இந்த ஏழை எளியவர்களுக்குப் பயிரிட முடியாதபடி இன்னல்கள், இடையூறுகள் விளைவித்து வருகிறார்களே, இதை அரசு தடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : எந்த இடத்தில் இதுபோல நடைபெறுகிறது என்று தெரிவித்தால் அரசு அதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும்.

*Urban Land Tax.*

* 452. Q.—THIRU S. SANGAMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether urban land tax is collected from properties possessed by (i) Union Government and (ii) other State Governments; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) ஏனைய மாநில அரசுகளுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள், நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளின்கீழ் வரி விலக்கு பெற்றிருந்தாலொழிய, அத்தகைய நிலங்கள் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டவையாகும். மைலாப்பூரில் ஆர்.எஸ். (மறு நில அளவை) 1832/26 எண்ணில் சுமார் முக்கால் மனையுள்ள நிலம் ஆந்திரப் பிரதேச அரசுக்குச் சொந்தமானது. இது பொதுக் காரியத்திற்குப் பயன்படுகிற நிலமாதலாலும், அதிலிருந்து எவ்விதமான வருமானமும் கிடைக்காததாலும், மேற்படி சட்டத்தின் 29(ஜி) பிரிவின்படி இந்த நிலம் நகர்ப்புற நிலவரி விதிப்பிலிருந்து விலக்கு பெற்றுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : மத்திய அரசாங்கத்தினுடைய இடங்களுக்கு நகர்ப்புற வரி விதிப்பில் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது



என்றார்கள். ஆனால் மத்திய அரசோ நமக்கு எத்தனையோ வரிகளை விதித்து வசூல் செய்து வருகிறது, அப்படி இருக்க மத்திய அரசு இடங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தின் சொத்தாக இருக்கிற காரணம் தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது ரயில்வேக்களுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய சொத்துக்களுக்கு நகரசபை வரி வசூல் செய்து வருகிறது. அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய பஸ்களுக்கு வரி விதித்து வருகிறோம். மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்தச் சொத்துக்களுக்கு வரி விதித்தால் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இருந்த சட்டத்தில் அப்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன்படியே இப்போது விதிவிலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

தூர்வாரி புனரமைக்கும் இயந்திரங்கள்

* 453 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏரிகளில் தூர் எடுக்கும் கருவிகள் கோவை மாவட்டத்திற்கு எப்போது கொண்டு வரப்படும்?

(இ) இதுவரை எந்த எந்த மாவட்டங்களில் மேற்படி கருவி தூர் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தற்சமயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 குளங்களை தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்ததும் ஆவன செய்யப்படும்.

(இ) தூர் வாரி புனரமைக்கும் இயந்திரங்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் வேலை செய்துள்ளன—

(1) செங்கற்பட்டு.
(2) வடஆற்காடு.
(3) தென் ஆற்காடு.
(4) திருச்சிராப்பள்ளி.
(5) மதுரை.
(6) இராமநாதபுரம்.
(7) திருநெல்வேலி.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் ஏராளமான ஏரிகள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. விரைவில் அங்கே தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் சில குளங்கள் தூர் எடுப்பது ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்தவுடன் தேவையான இடங்களில் எல்லாம் இந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. க. உரோ. எட்மண்ட் : நெல்லை மாவட்டத்தில் தூர்வாரி இயந்திரங்கள் வேலைசெய்வதாகச் சொன்னார்கள். எந்த எந்தக் குளங்கள் அவ்வாறு தூர்வாரப்பட்டிருக்கின்றன? தூர்வாரப் படாத குளங்கள் உடனடியாகத் தூர்வாரப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்த எந்தக் குளங்கள் தூர்வாரப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் இல்லை. எந்த எந்த குளங்கள் தூர்வாரப்படவேண்டும் என்பதாக மாவட்ட நிர்வாகப் பொறியாளரால் கொடுக்கப்படுகிற விவர அடிப்படையில் ஆராயப்பட்டு பணிகளை அரசு மேற்கொள்ளுகிறது.

## வேலூர் வட்டம் சதுப்பேரி ஏரி

* 454 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் தாலுக்கா சதுப்பேரி ஏரி எப்போது மராமத்து செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலூர் வட்டம், சதுப்பேரி ஏரி 1969–70-ல் மராமத்து செய்யப்பட்டது.

திரு. கே. ஏ. வகாப் : வேலூரில் குடிதண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் அந்த ஏரியை தூர் எடுத்தால் மிகவும் உதவியாக இருக்கும். இதை உத்தேசித்தாவது அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஏரியின் கரையை உயர்த்துவதற்காக 33 ஆயிரம் ரூபாயும், ஆற்றுக்கால் வாய்க்கால்களை சரிப்படுத்த 41,200 ரூபாயும், வெள்ளத்தடுப்பு நடவடிக்கைக்காக 18,400 ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம் ஆற்றுப் பாசனம் இல்லாத மாவட்டம். ஏரிகளை மட்டும் நம்பியிருக்கிற மாவட்டம். ஏரிகளைத் தூர் வாருவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லையென்று சொல்கிறார்கள். அந்த மாவட்டத்திலுள்ள ஊர்களும் "சதுப்பேரி", "நாகனேரி" போன்றவைகளாகவே இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்திலுள்ள ஏரிகளில் தூர் வாருவதற்கு நிறையப் பணம் ஒதுக்கித்தர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, போதுமான பணம் ஒதுக்கப்பட்டு, வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. தனிப்பட்ட புகார் ஏதாவது வந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

## இராணிப்பேட்டை முதலிய நகராட்சிகளில் சாக்கடை அமைப்புத் திட்டம்

* 455 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து, கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை போன்ற நகராட்சிகளுக்கும், மேல் விஷாரம், வந்தவாசி, செய்யாறு போன்ற பேரூராட்சிகளுக்கும் சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமுல் செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை வாலாஜாபேட்டை போன்ற நகராட்சிகளுக்கும், வந்தவாசி, செய்யாறு, மேல்விஷாரம் போன்ற பேரூராட்சிகளுக்கும் குடிநீர்த் திட்டம் அமல் செய்யப்பட்டு வருகிறதா? டிரைனேஜ் இல்லாத காரணத்தால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆகவே, டிரைனேஜ் அமைக்கும் திட்டத்தை அரசு பரிவுடன் கவனிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்பது புதை சாக்கடைத் திட்டம் என்று கருதுகிறேன். பெருநகரங்களுக்கு இத்திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. படிப்படியாக நிறைவேற்றப்படும். தற்போது மேல்விஷாரம், செய்யாறு, வந்தவாசி போன்றவைகளில் புதை சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவதற்கு திட்டம் இப்போது இல்லை.

## *Crash Programme for Production of Pulses.*

*456 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR :
DR. H. V. HANDE :
THIRU P. S. MANIYAN :
THIRU K. A. WAHAB :

Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any massive programme to grow pulses has been launched in this State during January 1971: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1970–71-ம் ஆண்டுக்கு தமிழ்நாட்டில் பயறு வகைகள் உற்பத்தியைக் கூடுதலாக 5.35 லட்சம்

ஏக்கர் நிலங்களில் பயிரிடுவது என்ற குறிக்கோளுடன் ரூபாய் ஒரு லட்சத்து ஒன்பது ஆயிரம் நிகரச் செலவாகும் ஒரு தீவிர திட்டத்திற்கு இந்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1970–71-ம் ஆண்டில் 8.20 லட்சம் ஏக்கர் நிலங்களில் பயறு உற்பத்தி செய்யப்பட்டு மேற் குறிப்பிட்ட குறியீட்டைத் தாண்டியது. 1971–72-ம் ஆண்டிற்கு இந்தத் தீவிரத் திட்டத்தை கூடுதலாக 23.38 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு உற்பத்தி செய்யும் குறிக்கோளுடன் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இத் திட்டத்திற்காக அரசின் நிகரச் செலவு 5.87 லட்ச ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

DR. H. V. HANDE : For a long time this Government were feeling it difficult to reduce the price of pulse because we were getting pulses from other States like Rajasthan and Gujarat. May I know from the Hon. Minister whether the climatic conditions here are conducive, whether all these things have been taken into consideration, what is the quality of pulses that we get from other States—imported, whatever it is. for the last one year and how much pulses we expect to reduce in the quantity got from outside by this crash programme? What was the amount of pulses we are getting before and what is the quantity that is likely to get reduced in the quantity of pulses that is got from outside because of all these things. what is the effect of it on the prices of pulses, whether the Government have taken into consideration all these things and also the climatic conditions?.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே. மொத்தம் தமிழகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 7 லட்சம் டன் பயறு வகைகள் தேவைப்படுகிறது. இதில் இதுவரையில் நம்முடைய மாநிலத்தில் 1 லட்சம் டன்தான் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இப்போது தீவிரத் திட்டப்படி சுமார் 23 லட்சம் ஏக்கர் எடுத்துக் கொண்டு செயல்படுகிற காரணத்தால் 3 லட்சம் டன் அளவை எய்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இதில் ஆங்காங்கு இருக்கிற மண்வளத்தையும், நீர்வளத்தையும், நிலவளத்தையும் மனதிற் கொண்டு, எந்தெந்த வகையில் பயிரிடலாம் என்பதை ஆராய்ந்து அதன்படி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

நஞ்சையில் உளுந்து அல்லது பச்சைப்பயறு பயிரிடுவது, நெல் அறுவடைக்குமுன் தாளடியிலேயே விதை விதைத்தல் என்பதாக 3 லட்சம் ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கோடையில் கோ. 1. துவரை தனிப் பயிராக பயிரிடுதல் 25 ஆயிரம் ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கோடையில் இறைவை மணிலாவுடன் கோ. 1. துவரை கலப்பு பயிராக பயிரிடுதல் 50 ஆயிரம் ஏக்கர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறது. தென்னை, முந்திரி தோட்டங்களில் கொள்ளு பயிரிடுதல் 50 ஆயிரம் ஏக்கர் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் பருத்தியுடன் உளுந்து அல்லது பச்சைப் பயறு வகைகளை கலப்புப் பயிராகப் பயிரிடுதல் 1 லட்சம் ஏக்கர் வரையில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.



துவரையை நெல் வயல்களில் பரப்புகளிலும் கரும்பு, வாழைத் தோட்டங்களில் வரப்போரப் பயிராகவும் பயிரிடுவதற்கு 10 ஆயிரம் ஏக்கர் எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## மண்வளப்பாதுகாப்புத் திட்டம்

* 457 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில், பல்லடம், அவினாசி வட்டங்களில் முழு அளவில் மண் "அரிப்பு திட்டம்" அமுல் படுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்லடம், அவினாசி வட்டங்களிலுள்ள எல்லாக் கிராமங்களின் பகுதிகள் அனைத்திலும் நிறைவேற்றப் படுவதற்கென முழுமுர மண் வளப்பாதுகாப்புத் திட்டம் ஏதுமில்லை. அந்த வட்டங்களிலுள்ள தெரிந்தெடுத்த கிராமங்களில் வழக்கமான மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகள் நீர்ப்பாசன வசதி இல்லாதவை. மழையை நம்பித்தான் அந்தப் பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை விரைவிலே ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வர அரசு முயற்சி எடுக்குமா? திருப்பூர் ஊராட்சிக்கு முதற்படியாக இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட ஆராய்ச்சி வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1971–72-ல் அவினாசி வட்டத்தைச் சேர்ந்த 45 கிராமங்களிலுள்ள 2,625 ஏக்கர்களையும், பல்லடம் வட்டத்தைச் சேர்ந்த 37 கிராமங்களிலுள்ள 1,825 ஏக்கர்களையும் வழக்கமான மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அவினாசி, பல்லடம் வட்டங்களிலுள்ள பல்வேறு கிராமங்களில் 1—10—1964 முதல் 31—3—1971 வரை உள்ள காலத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அதிகமான அளவு எடுக்கப்பட்டு, இதைத் தீவிரப்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## *Backward Classes Commission Report*

* 458 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH :
THIRU DURAI MURUGAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) whether the Government have received the report of the Chairman of the Backward Classes Commission; and

(b) if so, the details thereof?

[1971 ஜூலை 26

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரம், வீட்டு வசதி முதலியவை குறித்து பின்தங்கிய வகுப்பினர்களின் முன்னேற்றத்துக்கான நலக்குழு பரிவுரைகளைச் செய்துள்ளது. கல்வி நிறுவனங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும், அரசுப் பணிகளில் சேர்த்துக் கொள்வதற்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களின் சதவீதம் 25-லிருந்து 31-ஆக உயர்த்தி அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. நிதிப் பொறுப்பினை ஏற்படுத்தும் குழுவின் பரிவுரைகள் விரிவான பரிசீலனையிலுள்ளன. வழிவகை நிலைமை சீரடையும்போது அவசிய மானால் அவை செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். ஏனைய பரிவுரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, I appeared before the Commission to give my representation. I read the report. The report is no doubt exhaustive and voluminous. But I find that the Chairman of the Committee and the members held opposite views from the very beginning and that th emtmbers had no freedom to express their views and the Chairman dominated the whole affair and as such, the members have written their dissenting notes. I find, on account of this, the report to be incomplete and unsatisfactory. May I know from the Hon. Minister whether the Government have pondered over these matters and whether the Government will enlighten this House with their final view ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் தலைவர் எல்லாவகையிலும் முக்கியத்துவம் எடுத்துக் கொண்டு, மற்ற உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை யென்று கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகின்றார். மேலும் குழுவின் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பின்னால் எழுதியிருக்கிறார்கள் என்று எடுத்துச் சொல்கிறார். பின்னால் எழுதப்பட்ட குறிப்புகள் சிலவற்றைப் பற்றியது. தலைவர் அவர்களால் எந்தவிதமான உரிமையும் தரப்படவில்லை என்று பொருள் அல்ல.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கையிலே பரம்பரையிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், அதாவது "மோஸ்ட் பேக்வேர்ட்"; "பேக்வேர்ட்" என்று இரு பாகமாகப் பிரிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அரசு அதை அப்படிப் பிரிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, "மோஸ்ட் பேக்வேர்ட்"; "பேக்வேர்ட்" என்று பிரிக்கத் தேவையில்லையென்று அரசு முடிவு எடுத்துள்ளது.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஏழ்மை நிலையிலுள்ள முஸ்லீம்கள், கிறிஸ்தவர்களைப் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கும் சலுகைகள் தரப் படுமா?



1971 ஜூலை 26]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, "பின்தங்கியோர்" என்பது ஏழ்மை நிலையை மட்டும் கொண்டுள்ளவர்கள் பட்டியல் அல்ல. சமுதாயத்திலும், கல்வியிலும் பின்தங்கிய நிலைமையில் உள்ளவர்கள்தான் பின்தங்கியோர் எனப்படுபவர், பணம் உள்ள நிலைமையைப் பொறுத்தது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. காவேரி மணியம்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் "மலை வேடர்" என்ற பிரிவினர் தங்களை "நம்பிராஜன்" என்ற பரம்பரையிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். இந்தக் குழு மதுரை மாவட்டத்திற்கு வந்தபோது, இந்த மக்களுக்கு இதைப்பற்றி முறையாக எடுத்துச் சொல்லாத காரணத்தால் இந்தக் குழு அறிக்கையில் அவர்கள் பெயர் சேர்க்கப்படவில்லை. இப்போது முறையாக எடுத்துச் சொன்னால் இதில் சேர்க்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இதை முறையாக எடுத்துச் சொன்னால், தமிழக அரசு கவனிக்கத் தயாராக இருக்கிறது.

திரு. ந. நாச்சியப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் அரசினுடைய உதவியை நாடும்பொழுது அவர்கள் "ர்" என்று போட்டால் உயர்ந்த ஜாதி என்று நினைக்கிறார்கள், ஆகவே "ன்" என்று போடவேண்டும். தேவாங்கா, கவுடா என்று போடவேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிப் போடுவது இழிவுபடுத்துகின்ற தன்மையில் இருக்கிறது என்று அந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் நினைக்கிறார்கள். எனவே தேவாங்கர், கவுடர் என்று போட்டுக்கொள்ளலாம்; அப்படிப் போட்டாலும் பின் தங்கியவர்கள் என்று கருதப்படலாம் என்று அரசு ஆணை
பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன். மு. ப. 10-00

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, "ன்" னா அல்லது "ர்" ரா என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டியவையாகும். ஆராய்வு முடிந்ததற்குப் பிறகு தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். செல்வராஜ்: தலைவர் அவர்களே, இந்த நலக்குழு கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே ஏதாவது முன்பு இருந்த இனங்களோடு புதிய இனங்களைச் சேர்த்திருக்கிறார்களா? அல்லது முன்பு இருந்த இனங்களிலே இருந்து நீக்கியிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, சில வகுப்பினர்களைச் சேர்ப்பது என்பது ஆலோசனையில் இருக்கிறது என்பதை மட்டும் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த கருணீகர் என்ற வகுப்பையும் அதிலே சேர்க்கவேண்டுமென்று ஏதாவது அந்தக் குழு அனுப்பிய பரிந்துரையிலே இருக்கிறதா, அப்படியானால் அதையும் பிற்பட்ட வகுப்பிலே சேர்ப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தனிக் கேள்வி போடவும். தற்பொழுது என்னிடத்தில் குறிப்பு இல்லை.

DR. H. V. HANDE: Sir, the report runs into three volumes ant several recommendations were made in the report.

MR. SPEAKER: The hon. Member's question can be brief and precise. He is trying to put a very, very long question.

DR. H. V. HANDE: I am only trying to make the Hon. Minister understand . . .

MR. SPEAKER: The hon. Minister can understand it. The hon. Member can put his question in an interrogative form. He is an experienced Member and he can ask this way, whether a Committee would be appointed . . .

DR. H. V. HANDE: If the proceedings of the last 10 or 15 years . . . .

MR. SPEAKER: Every supplementary question of the hon. Member contains a Preamble. Without adding a preamble, he can put the question straightaway.

DR. H. V. HANDE: My submission is that there have been several occasions when even long preambles were allowed . . .

MR. SPEAKER: The hon. Member is an experienced Member and he can be a model. If a short question is put, it will save time and the House also may have opportunities to have more supplementary questions to be answered.

DR. H. V. HANDE: Sir, I am saving the time of the Hon. Minister in giving brief answers.

Sir, with your permission may I come now to the question. May I know what are the specific recommendations which the Government are going to implement ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழு ஏறக்குறைய 110 சிபாரிசுகளைப் பரிந்துரைத் திருக்கின்றது. 110 பிரிவுகளில் முக்கியமானவற்றை அரசு ஆலோசனைசெய்து அமைச்சரவையிலே ஆராய்ந்து அதன்படி இப்பொழுது 13 கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. பின்தங்கிய வகுப்பினருக்காக ஒதுக்கீடு 25 சதவீதம் என்று இருந்ததை 31 சதவீதமாக உயர்த்தியிருப்பதும் அந்தக் கோரிக்கைகளின் விளைவுதான். இவை எல்லாவற்றைப்பற்றியும் பின்தங்கிய வகுப்பினர் மானியத்திலே விரிவாக நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கா. வேழவேந்தன்: நம்முடைய அரசுச் சார்பில் அமைக்கப்பட்ட போலீஸ் கமிஷனுடைய அறிக்கையின் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட காலத்திலே எத்தனை கோடி ரூபாயிலே எவ்வளவு காரியங்கள் நடைபெறும் என்று குறிப்பிட்டு பாராட்டைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதேமாதிரி சிறப்பாக பின்தங்கிய குழுவினுடைய அறிக்கையிலே குறிப்பிட்ட பரிந்துரைகளை நிறைவேற்ற ஒரு கால வரையறை ஏற்படுத்திக் கொண்டு—என்ன என்ன வகையிலே செலவு செய்யவேண்டுமென்ற முறையிலே சில குறிப்புகளையும் கொடுத்திருக்கிறார்கள்—எத்தனை ஆண்டுகளில் அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்தி நிறைவேற்ற வேண்டுமென்ற அளவிலே ஒரு வரையறையை அரசாங்கம் வகுக்குமா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: Sir, on a point of order. Now the hon. Member has referred in his question, the reports of the Police Commission and the Backward Class Commission. I am not saying that that question is out of order. I am only pointing out that the Hon. Minister can understand it only if we give the details . . . . .

MR. SPEAKER: The hon. Member may resume his seat. It is quite true and I understand it. But the hon. Member may be a model and he may be a pioneer and he is an experienced member. Of course, the new Members may try to express it in so many sentences. If the question is short, the hon. Member himself can put another supplementary. Hon. Ministers are well informed and they need not be taught from A, B, C. The question should be put in an interrogative form.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு ஏறத்தாழ 110 பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதைச் செய்வதற்குப் பின்தங்கியவர்களை முன்னேற்றுவதற்கு குழுவினுடைய பரிந்துரையை மட்டும் நிறைவேற்றினால் போதாது. அதற்குச் சமுதாயத்தினுடைய ஒத்துழைப்பு வேண்டும், அது கிடைத்தால் முடித்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: குழுவினுடைய அறிக்கை இரண்டு பாகங்களாக வந்திருக்கிறது. முன்பகுதிக்கும் பின்பகுதிக்கும் முன்னுக்குப்பின் முரணுகை இருக்கிறது. முன்பகுதியிலே 1953-லே அமைக்கப்பட்ட குழுவுக்குப் புதிதாக யார் யாரை அந்த வகுப்பிலே சேர்க்கலாம் என்ற அதிகாரம் எங்களுக்கு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டாவது பாகத்தில் சில குறிப்பிட்ட வகுப்பினரை அதிலே சேர்க்கவேண்டுமென்று சொல்லப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மேலும் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே முன்னுக்குப் பின் முரணுகை இருக்கின்ற கருத்துக்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்துச் சரியாகச் செய்ய வேண்டுமென்றுதான் அரசு கருதுகிறது.

[1971 ஜூலை 26

திரு. கு. காமாட்சி: இந்த பிற்பட்டோர் நலக் குழுவின் அறிக்கையிலே—இந்த நாட்டிலே முக்குலத்தோர் சமுதாயத்தின் எண்ணிக்கை மிகக் குறைந்திருக்கிறது என்று பரவலான கருத்து இருக்கிறது—அந்த அறிக்கையும் சொல்கிறது. ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சமுதாயமும் குழுவின் முன்னாலே சாட்சியம் தெரிவிக்கின்றபொழுது தங்களுடைய சமுதாயம் ஏராளமான மக்கள் தொகை கொண்டது என்று கூறியிருக்கிறார்கள். அதையெல்லாம் கூட்டிப்பார்த்தால் தமிழ் நாட்டின் மொத்த ஜனத் தொகைக்கும் அதிகமாக இருக்கிறது. ஏனவே உள்ளபடியே ஜனத் தொகையை அளவிட்டுப் பார்க்கக்கூடிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உண்மை நிலைமையை இந்தக் குழு ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: "ர்" அல்லது "ன்" போடுவது பற்றிப் பிரச்னை இருக்கிறது. "ர்" என்பது சிறப்பு விகுதிதான். அதைப் புகுத்துவதிலே அரசாங்கத்திற்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. "ன்" என்று போட்டு தேவாங்கன், கள்ளன் என்று போடுவதற்குப் பதிலாக தேவாங்கர், கள்ளர் என்று போடவேண்டுமென்று நாங்கள் எல்லாம் முன்பே சொல்லியிருக்கிறோம். எனவே அதை உடனடியாக அமல் நடத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையில் சேர்மன் என்பதிலேகூட கடைசியில் "ன்" தான் வருகிறது, ஆனாலும் அது மரியாதைக்குரியதாகத்தான் இருக்கிறது. அதுவல்ல பிரச்னை, பிரச்னை எது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆராய்ந்த பிறகு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கே. முத்தையா: பேக்வர்ட் என்று சொல்லிக் கொண்டு கல்விச் சலுகைகள் பெறும்பொழுது பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால் பெண் வீட்டாரிடமும், கிரையப் பத்திரம் செய்யும் பொழுதும் சப்ரிஜிஸ்திரார் ஆபீஸிலே பார்த்தால் பார்வர்டாக இருக்கிறது. எனவே இதையெல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதையெல்லாம் பரிசீலனை செய்வதற்காகத்தான் இந்தக் குழு போடப்பட்டது. இந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. அவற்றை முழுமையுமாகப் படித்தால் நல்ல பல கருத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: சில மாவட்டங்களிலே முற்பட்ட வகுப்பினர்—வசதியில்லாதவர்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்குச் சலுகைகள் கிடைப்பதில்லை. எனவே அவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பொருளாதார அடிப்படையிலே கல்விச் சலுகைகள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?



1971 ஜூலை 26]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, பின்பட்ட வகுப்பினர் என்பவர்கள் நான் ஏற்கனவே சொல்லியபடி அரசியலமைப்புச் சட்டப்படி 15-வது வகுப்பு 4-வது பிரிவிலே சொல்லப்பட்டிருப்பதைத்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதிலே குறிப்பிட்டிருப்பது கல்வி வசதியைப் பொறுத்த வரையிலும் சமுதாயத்திலே பின்தங்கிய நிலையைப் பொறுத்த வரையிலும்தான் பின்தங்கியவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர பொருளாதாரத் துறையிலே அல்ல அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, இந்தப் பிற்பட்ட நலக்குழுவில் சராசரி பிற்பட்ட மக்களுக்கு 28 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அதிலே ஒரு இன மக்கள் 40 லட்சம், இன்னொரு இனம் 20 லட்சம், இன்னொரு இனம் 10 லட்சம் என்றும் இருப்பதால் இதைச் சராசரி என்ற முறையில் அரசினர் பல சலுகைகளைப் பெறும்பொழுது அதிகமாக, 40 லட்சம் என்ற எண்ணிக்கையில் உள்ள இன மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், அதையெல்லாம் மாற்றியமைக்க பேக்வார்ட், மோஸ்ட் பேக்வார்ட் என்று அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப் படவில்லை. ஏற்கனவே அப்படி ஒரு உத்தேசம் இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்லிவிட்டார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்று இருக்கும் அந்த நிலை எப்போது, எப்படித் தீரப்போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்கிற அன்றைக்கே அழிந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 459

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, கேள்வி கேட்டவருக்கு இரண்டு துணைக் கேள்விகள்கூடக் கொடுக்காமல்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Resume your seat. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நான் இந்த மன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன். கோபமாகவோ, தாபமாகவோ கேட்பது மன்றத்தின் மரபுகளுக்கு உகந்தது அல்ல. கேள்வி கேட்பது என்பது, நான் பலமுறை விளக்கியிருக்கிறேன், எந்தெந்தக் கேள்விகளுக்கு, யார் யாருக்கு, முக்கியத்துவம் என்பது கேள்வியைப் பொறுத்தது. இப்பொழுது கூடக் கேள்வி நேரம் நீடிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் துடிதுடிப்பானவராகயிருந்தாலும் மன்றத்தின் மரபுகள், கௌரவம் இவைகளைக் கவனிக்க வேண்டும்.

அரசினர் பேருந்துகள் வாலாஜாபேட்டையில் நிறுத்தல்

* 459 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து கோயமுத்தூர், சேலம், கிருஷ்ணகிரி, ஆத்தூர், பெங்களூர் முதலான இடங்களுக்குச் செல்லும் அரசினர் பேருந்துகள் வாலாஜாபேட்டை நகரில் நிற்க ஏற்பாடு செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, வாலாஜாபேட்டை மட்டும் அல்ல, இராணிப்பேட்டையும் பெரிய நகராட்சி. அங்குகூட அரசு விரைவு வண்டிகள் நிற்பது இல்லை. ஆகவே என்னைப் போன்றவர்கள் வேலூருக்குச் சென்று மறுபடியும் சென்னைக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அரசு யோசித்து, இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை ஆகிய இடங்களில் நிற்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இராணிப்பேட்டை, வாலாஜாப்பேட்டை போன்ற நகரங்கள் ஆற்காட்டுக்குப் பக்கத்திலேயிருப்பதாலும், ஆற்காட்டிலே இப்பொழுது நெடுந்தொலைவுப் பேருந்து நிற்பதாலும் வேலூருக்குப் போவதைத் தவிர்த்து ஆற்காட்டிலேயே ஏறிக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது.

*Setting fire to State Transport Bus*

* 460 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether it is a fact that any State Transport bus was burnt by the striking workers of the Southern Structurals in Madras about the 29th May 1970: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ): திருக்கோவில்குப்பம் என்ற இடத்தில் அரசு பேருந்து ஒன்று இனந் தெரியாத நபர்களின் கூட்டமொன்றால் நிறுத்தப்பட்டு தீவைக்கப்பட்டது. அப்பேருந்து ரூ. 20,100 செலவுசெய்து பழுதுபார்க்கப்பட்டு, 2—10—1970 முதல் மீண்டும் ஓட்டப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அதை இன்னுமா யாரால் தீங்கு செய்யப்பட்டது என்பதை அரசால் கவனிக்கப்படவில்லை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சம்பந்தப்பட்டவர்கள்மீது பட்டாபிராம் காவல் நிலையத்தில் புகார் செய்து, வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ்-



ஐச் சேர்ந்த ஊழியர்கள் சிலர் இருக்கிறார்கள், இன்னும் சிலர் இருக்கிறார்கள். அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*State Transport buses involved in accidents*

* 461 Q.—THIRU K. P. GOPAL: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there were accidents caused to the Government Transport buses in the Madras City on 11th June 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 11—6—1971 காலை 10-15 மணியளவில் வழித்தடம் எண் 19-எஸ் (இந்திரா நகர்–மவுண்ட் சாலை) பேருந்து பயணிகள் இறங்குவதற்காகவும் பயணிகள் ஏறுவதற்காகவும் மாநில கணக்காளர் அலுவலகத்தின் முன் நின்று கொண்டிருந்தது. அதே நேரத்தில் அந்தப் பேருந்திற்குப் பின்னால் வழித்தடம் எண் 19 (திருவான்மியூர்–பிராட்வே) செல்லும் பேருந்தும் பயணிகள் இறங்குவதற்காகவும் ஏறுவதற்காகவும் நின்றது. வழித்தடம் எண் 19-ல் செல்லும் பேருந்து நிறுத்துமிடத்திலிருந்து புறப்பட்டு முன்னே நின்றுகொண்டிருந்த வழித்தடம் எண் 19-எஸ் பேருந்தைக் கடக்கும் சமயம் ஒரு பயணி விரைந்து வந்து வழித்தடம் எண் 19-ல் செல்லும் பேருந்தில் ஏறி அவருடைய உடல் படிக்கட்டுக்கு வெளியேயிருந்த நிலையில் நின்றிருந்த சமயத்தில் இரண்டு பேருந்துகளுக்குமிடையே சிக்கி நசுங்கி படுகாயமடைந்தார். அந்தப் பயணி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே இறந்தார்.

திரு. கே. பி. கோபால்: தலைவரவர்களே, இதுபோன்ற விபத்துக்களைத் தவிர்க்கும்பொருட்டு திரு. கோவிந்தசாமிநாதன் பரிவுரைகளை இந்த அரசு ஏற்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கனவே புறப்பட்டுவிட்ட பேருந்துகளில் பயணிகள் ஓடி ஏறக் கூடாது என்பதை அப்பயணிகளுக்கு நாம் எடுத்துச்சொல்வதன் மூலம் இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்க முடியும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இப்படிப் பஸ்கள் புறப்பட்ட பின்னர் பிரயாணிகள் ஓடி ஏறுவதற்குச் சாதகமாக அந்த ஃபுட் போர்ட் பக்கத்தில் ஒரு கம்பி கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்தக் கம்பியை எடுத்துவிட்டால் ஓடிச்சென்று ஏறுவதற்கு மிகவும் கஷ்டமாகும், அதனால் அப்படி ஏற முடியாது. ஆகவே, இனிமேல் பஸ்களில் இருக்கின்ற அந்தக் கம்பியை எடுத்துவிட அரசு முடிவு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கம்பியை எடுத்துவிடுவதற்குப் பதிலாக அந்தப் பகுதியை ஜன்னல் கண்ணாடியைக் கொண்டு அடைத்துவிடுவதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இப்படிப் பயணிகள் தொத்திக்கொண்டு போவதால் இத்தகைய ஆக்சிடெண்டுகள் நடக்கின்றன. எனவே அந்த வாசலேயே, பயணிகள் ஏறிவிட்டபிறகு மூடிவிடுவதற்கு கதவுபோட ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, முதலில் கைப்பிடியைத் தடுத்துப் பார்ப்போம். பிறகு கதவடைப்பு செய்யலாம்.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the increasing accidents in the City, will the Government think of taking strong steps to clear the pavements, particularly in busy areas like Usman Road?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசாங்கம் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஏற்கனவே மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் பயணிகள் விரைவில் வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்ற அந்த வேகத்தில் இடையிலே இந்தக் காரியங்களிலே ஈடுபடுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இம்மாதிரி பீக் அவர்சில் இந்தக் கஷ்டங்கள் ஏற்படுவதால் முக்கியமான ஸ்டாண்டுகளில் கண்டிப்பாகக் க்யூ வரிசை இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுமா? அதற்குத் தேவையான அதிகாரிகள் நிறுத்தப்படுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தபடி, க்யூ வரிசை இல்லாமல் நின்று கொண்டிருப்பதால் இந்தக் கஷ்டங்கள் வருவதைச் சர்க்கார் உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் முதல் கட்டமாக 50 பேருந்துகள் நிற்கும் இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

திரு. கோவை செழியன்:

* * * *

MR. SPEAKER: This is not allowed. I order expunction. This may be expunged.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் எடுத்துவிட ஆணையிடுகிறேன். அது முடிந்த விவகாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையும் எடுத்துவிட ஆணையிடுகிறேன். அது முடிந்த விவகாரம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



*Arrears on account of Thulasi Archana to Sri Ranganathaswamy Temple.*

*462 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether representations have been received recently by the Department of Hindu Religious and Charitable Endowments to collect the arrears of the Thulasi Archana due to Sri Ranganathaswamy temple, Srirangam from Kodaraigulam Inam Estates, Ambasamudram in 1970?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் ஸ்ரீரங்கத்தைப்பற்றி, ஒரு கேள்வி கேட்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இப்படி "அரியர்ஸ்" இருக்கின்ற காரணத்தினால், அந்த அரியர்ஸை வாங்க அரசாங்கமே ஏன் முன் வரவில்லை? அந்த அரியர்ஸ் ஸ்ரீரங்கநாத சுவாமிக்கு துளசி அர்ச்சனை மூலம் வரக்கூடிய ஒன்று என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அம்பாசமுத்திரம், கோதரைகுளம் இனாம் எஸ்டேட்டுகளிலிருந்து 21 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான பட்டா கோயிலுக்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்த அறநிலையத்துறை சார்பாக நடவடிக்கை எடுத்த பொழுது, திருவாடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தவர்கள் அந்த நிலத்தை வாங்கி இருப்பதாகத் தெரியவந்தது. இந்த அறநிலையத்தார் "இனாம் விசாரணை" மூலம் அந்த நிலம் ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்குத்தான் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், இந்த உத்தரவை எதிர்த்துத்தான் திருவாடுதுறை ஆதீனத்தார் ஹைகோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எனவே, இதிலே பொறுத்திருந்துதான் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கநாதருக்கு கொடுக்க வேண்டிய கடன் இது. அதிலே திருவாடுதுறை ஆதீனம் கோர்ட்டுக்கு போயிருக்கிறார்கள் என்றால், இது நியாயமான முறையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கொடுக்க வேண்டிய கடன் பாக்கிக்காக அவர்கள் கோர்ட்டுக்குப் போகவில்லை. ஸ்ரீரங்கநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு 21 ஏக்கர் நிலத்தை பட்டா வழங்கப்படுவதற்காக அறநிலையத்துறை ஆனது நடவடிக்கை எடுக்கும் நேரத்திலே, திருவாடுதுறை ஆதீனத்திற்கு அந்த நிலம் சம்மந்தமாக பட்டா வழங்கப்பட்டிருக்கிறது, அப்படிப்பட்ட பட்டா ஸ்ரீரங்கநாத சாமிக்குத் தான் வழங்கப்பட வேண்டுமென்று நாம் மேல் அதிகாரிகளிடத்திலே முறையிட்டுக் கொண்டோம். உடனே, திருவாடுதுறை ஆதீனத்தார் எங்களுக்குத் தான் அப்படி பட்டா பெற உரிமை இருக்கிறது என்று ரிட் மனு செய்து, ஹைகோர்ட்டு மூலமாக "ஸ்டே" வாங்கியிருக்கிறார்கள். எனவே, அது யாருக்குச் சேர்ந்தது என்பதை

ஹைக்கோர்ட்டு தான் முடிவு செய்ய முடியும். அந்த நிலத்தின் ஸ்வாதீனம் நம் கையிலே வரவில்லை. அது வந்தால் தான் குத்தகை பாக்கியை நாம் வசூலிக்க முடியும்.

திருமதி ஜோதி வெங்கடாஜலம்: திருவாடுதுறை ஆதீனத்திற்கு வேண்டிய சொத்து இருக்கிறது. எனவே, ஸ்ரீரங்கநாதசுவாமியின் சொத்திலே அவர்கள் கை வைப்பது நல்லதல்ல. எனவே, இதிலே இந்த அரசாங்கத்தின் நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேராக இந்த யோசனையை திருவாடுதுறை ஆதீனத்திற்கு எடுத்துச் சொல்லி, அந்த நிலத்தை ஸ்ரீரங்கநாதசாமிக்கு மீட்டுத் தந்தால் நன்ருக இருக்கும்.

திரு. கு. காமாட்சி: ஸ்ரீரங்கநாதர் முன்பு ஏழையாக இருந்தார். அப்பொழுது சமயபுரம் மாரியம்மன் உதவி அவருக்குத் தேவைப் பட்டது. இப்பொழுது அந்தத் தாய் ஏழையாகி விட்டாள். எனவே, தயவு செய்து சமயபுரம் மாரியம்மாளை ஸ்ரீரங்கநாதசாமி தேவஸ்தானத்திலே இருந்து பிரிக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சுருக்கமாக சமயபுரம் ஆத்தாளை ஸ்ரீரங்கநாதசுவாமி தேவஸ்தானத்திலே இருந்து பிரிக்க ஏதாவது உத்தேசம் உண்டா என்று கேட்டால் போதுமானது. இந்த அவையிலே கூட, சில அமைச்சர்கள் சுருக்கமாகப் பதில் அளிக்கிருர்கள். இன்னும் சில அமைச்சர்கள் "விவர அறிக்கையை" வைத்துவிட்டு கூட நீண்ட நேரம் பேசுகிருர்கள். விவர அறிக்கையை வைத்துவிட்டால் நீண்ட நேரம் பேச வேண்டியதில்லை. எனவே, உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகச் சொல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்பேர்ப்பட்ட கோரிக்கைகள் அறநிலையத் துறைக்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையிலே இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: துளசி அர்ச்சனை மூலம் அரியர்ஸ் இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். இப்படி எத்தனை வருஷமாக அரியர்ஸ் இருந்து கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துளசி அர்ச்சனைக்காக ஸ்ரீரங்கநாதசாமி தேவஸ்தானத்திற்கு 21 ஏக்கர் நிலம் நெல்லை மாவட்டத்திலே இருந்து கொடுத்திருக்கிருர்கள். அந்த நிலத்தின் ஸ்வாதீனமும், அனுபவ பாத்தியதையும் நமக்கு வரவில்லை. நிலமும், அந்த நிலத்தின் அனுபவ பாத்தியதை வர வேண்டுமென்பதற்காகத் தான் நாம் திருவாடுதுறை ஆதீனத்தை எதிர்த்து ஹை கோர்ட்டிலே வாதாடி வருகிருேம். நிலம் நம்முடைய அனுபவத்திற்கு வந்ததற்குப் பிறகு தான், குத்தகை முறை பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படி ஆண்டவன் விவகாரங்களிலே கோர்ட்டுக்குப் போகும்பொழுது நல்ல நிலைமையிலே



நீதி உடனுக்குடன் வழங்க வேண்டியவர்கள், ஆண்டவன் விவகாரத்தில் கொஞ்சம் தயங்குவதாக கருத்து மக்களிடையே விளங்குகிறது. அது உண்மையா?

THIRU R. PONNAPPA NADAR: It is a reflection on the judiciary.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர்: இந்த 21 ஏக்கர் நிலம் எந்த அடிப்படையிலே அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டது; அல்லது அது கிரயத்திற்கு அவர்களால் வாங்கப்பட்ட நிலமா; அல்லது திருவாடுதுறை ஆதீனமே இதற்கு கைங்கரியமா; ஏதாவது செய்யப் பட்டு வருகிறதா? அத்தோடு இந்த நிலத்திலே ஒரு வருஷத்திற்கு என்ன வருமானம் வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த நிலத்தைப் பொறுத்த வரையில் தாசில்தார் இடமிருந்து பட்டா வழங்குவதற்கு விசாரணை நடத்தினுர்கள். அந்த விசாரணைக்காக நோட்டீஸ் அனுப்பியவுடன், திருவாடுதுறை ஆதீனமே நிலத்தை வாங்கியதால், அந்த ஆதீனத்திற்கு பட்டா வழங்கி இருக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்தது. அதற்குப் பிறகுதான், நம்முடைய துறையினருக்கு இந்த நிலைமைகள் எல்லாம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, நெல்லை மாவட்ட விசாரணைக் குழு இடத்திலே மேல் முறையீடு செய்தோம். பிறகு அவர்கள் நம்மிடத்திலே நிலத்தை ஒப்படைக்க செய்தார்கள். அதை எதிர்த்துத்தான், திருவாடுதுறை ஆதீனத்தார் ஹை கோர்ட்டிலே அப்பீல் செய்திருக்கிருர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த முறையிலேயே பல இனத் தலைவர்கள் ஆண்டவன் பெயராலே இருந்து கொண்டிருக்கும் நிலங்களை அனுபவித்துக் கொண்டிருப்பது என்னவோ உண்மை. அதை எல்லாம் கண்டு பிடிக்க, இந்த அறநிலைய இலாகா நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தனிப்பட்ட நபர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு பிடிப்பதற்காக தனி அலுவலர்களை —டெபுடி கலெக்டர் போன்றவர்களை அமைத்து, இதைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். இப்படி, மேலும், மேலும் கண்டு பிடிப்பதற்கான தீவிரமான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிருர்கள் அவர்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது

## (2) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (அ) தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேது சமுத்திரக்கால்வாய்த் திட்டம் ஆகியவை குறித்து மக்களவையின் மதிப்பீட்டுக் குழுவின் கருத்து பற்றி.

MR. SPEAKER: Thiru A. Subramaniam and Thiru K. N. Kumaraswamy, M.L.As. have given notice under Rule 42 of the Assembly Rules to adjourn the business of the House to discuss the following definite matter of urgent public importance:

"The serious situation that has arisen as a result of the observation of the Estimates Committee of the Lok Sabha that the Government of India should proceed with caution in regard to the Tuticorin Port and the Sethusamuthram Canal Projects and the warning by the same Committee that the projects are over-ambitious and economically not viable and the danger of the two Projects being scuttled or delayed in consequence of the above observations."

THIRU K. T. K. Thangamani has also given notice of a similar motion.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த தூத்துக்குடி துறைமுகத் திட்டமும், சேதுசமுத்திர கால்வாய்த் திட்டமும் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதவை என்று கருதித்தான் இதுகுறித்து நாம் பல ஆண்டுகளாக மத்திய சர்க்காரிடம் வாதாடி அது இன்றைக்குக் கைகூடும் அளவுக்கு வந்திருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத் திட்ட வேலைகள் எல்லாம் துவங்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, நம் மாநிலத்திற்கு எல்லா நன்மைகளும் வரும் என்று நம்பியிருந்தோம். ஆனால், இதற்கிடையில் லோக் சபையின் "எஸ்டிமேட் கமிட்டியானது", இந்தத் திட்டங்கள் மிகவும் "ஓவர் ஆம்பிஷஷ்" என்று சொல்லி, மத்திய அரசு இந்தத் திட்டங்களை மிக ஜாக்கிரதையாகத்தான் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அந்த எஸ்டிமேட் கமிட்டியின் உரிமையைப் பற்றி நாம் மறுக்கத் தயாராகவில்லை. ஆனால், இந்தத் திட்டங்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மிகவும் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்ட திட்டங்களாகும். அப்படி இருக்கும்பொழுது அந்த எஸ்டிமேட் கமிட்டியிலே இருப்பவர்கள் இப்படிப் பேசியிருக்கிறார்கள் என்றால், அந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசு பண உதவி செய்வதாலே, அவை நிறுத்தப்பட்டன என்றால் அது நம்முடைய மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மிகவும் பாதித்துவிடும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இது குறித்து விவாதிப்பதற்கு—இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், தமிழக மக்களின் வாழ்வுப் பிரச்சினையாகவும் இருப்பதால்—இந்த சபையின் பிற அலுவல்களை ஒற்றி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, லோக் சபையின் எஸ்டிமேட் கமிட்டியின் ரிபோர்ட்டைத் துச்சமாக மதித்துவிடக் கூடாது. காரணம், இதே மாதிரி லோக் சபையின் எஸ்டிமேட்



கமிட்டி, எக்ஸ்பெர்ட்ஸ் கமிட்டி ஆகியவைகளின் ரிப்போட்டின் பேரில்தான் மண்டபத்திலே இருந்த இந்திய மீன் வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் சாதாரண ஒரு "பிராந்திய நிலையமாக" ஆக்கப்பட்டது. ஆகவேதான், அந்த எஸ்டிமேட் கமிட்டியின் ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட்டவுடனே, இந்தத் தூத்துக்குடி துறைமுக ஆழ் கடல் திட்டம் வந்து கொண்டிருக்கும்பொழுது, இந்த சேதுசமுத்திர கால்வாய்த் திட்டத்தை ரூ. 38 கோடியிலிருந்து ரூ. 58 கோடிக்கு உயர்த்தி ஏற்கனவே சிபாரிசு செய்து இருந்தோம். அந்த எஸ்டிமேட் கமிட்டியிலே, இது உண்மையிலே இலாபகரமான திட்டங்களாக இருக்குமா என்ற கேள்வியை அங்கே எழுப்பியதைப் பார்த்ததும், நீண்ட நெடுங்காலமாக நாம் விரும்பி இருக்கும் இத்திட்டங்கள் வராமல் போய்விடுமோ என்ற அச்சம் நமக்கு இன்றைக்கு வந்திருக்கிறது. இதிலே தமிழக அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. லோக் சபையிலே அமைச்சர் திரு. ராஜ்பகதூர் போன்றவர்கள் அந்தக் கமிட்டியின் சிபாரிசுகளை நாங்கள் அமலுக்கு கொண்டு வர மாட்டோம் என்று சொன்னாலும் கூட, இதிலே மத்திய அரசு அதிகமான உத்தரவாதத்தை நமக்கு அளிக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்க இந்த தமிழக அரசு முன்வர வேண்டும். இதிலே கவனம் செலுத்த வேண்டும். இது முக்கியமான விஷயம். எனவே, சபையின் சாதாரண விஷயங்களை ஒற்றி மு.ப.
வைத்து, இதைப்பற்றி விவாதித்து உறுப்பினர்கள் தங்களுடைய 10-30
கருத்துக்களைச் சொல்ல, ஆவன செய்ய வேண்டுமென்று பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஐயத்தைப் போக்கும் வகையில் நான் தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம் ஆகிய இந்த இரண்டு திட்டங்களைப்பற்றி தற்போதுள்ள நிலைமைகளைச் சற்று விரிவாக விளக்க விரும்புகிறேன்.

தற்போது தூத்துக்குடியில் உள்ள துறைமுகம், இந்தியாவிலேயே மிகப் பெரிதான நடுத்தரத் துறைமுகமாகும். இதனை ஒரு ஆழ்கடல் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும்பொருட்டு 1970-ல் "நடுத்தரத் துறைமுக அபிவிருத்திக் குழு" பரிந்துரைத்தது. ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு 24.4 கோடி ரூபாய் மதிப்பீட்டுடன் ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் மத்திய அரசுத் திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு அரசு, அரசியலமைப்பு சட்டத்தின் 258-பிரிவின் கீழ் இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது. முயல் தீவிற்கு அண்மையில் செயற்கைத் துறைமுகம் ஒன்று அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கடலில் 2,745, 1,275 மீட்டர் பரப்புள்ள இடத்தில் கப்பல்துறை அமைத்தும், கப்பல் போகவும் வரவும் 122 மீட்டர் அகலம் உள்ள வழி அமைத்தும், 1,275 மீட்டர் இடைவெளியிட்டு சுமார் 3,900 மீட்டர் நீளமுள்ள 2 அலைத் தடுப்புச்

சுவர்கள் (வடக்கு–தெற்கு) கட்டியும் மேற்படிச் செயற்கைத் துறை முகம் அமைக்கப்படும். இத்துறைமுகத்தில் கீழ்க்காணும் ஐந்து துறைகளுக்கு இடவசதியளிக்கப்படும் :—

| | |
|---|---|
| நிலக்கரித் துறை ... ... ... ... | 1 |
| உப்புத் துறை ... ... ... ... | 1 |
| சிமெண்டுத் துறை ... ... ... ... | 1 |
| பொதுச் சரக்குத் துறை ... ... ... | 1 |
| கப்பல் பழுது பார்த்தல் சரக்குத் துறை ... | 1 |

இப்போதைக்கு இவற்றில் ஆழம் 32 அடியாக இருக்கும். பின்னர் 35 அடி அளவிற்கு இவற்றை ஆழப்படுத்த முடியும். பிற்காலத்தில் உரத் துறையில் மேற்கொண்டு போக்குவரத்து ஏற்படுவதையொட்டி உரத் துறைக்காக மேலும் ஒரு இட வசதி ரூ. 1.6 கோடி செலவில் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டக் குழுவின் போக்குவரத்துப் பிரிவின் தலைமை அதிகாரியான திரு. ஊத்ராவும் முன்னாளைய காரியதரிசி திரு. திருமலை, ஐ.ஏ.எஸ். அவர்களும் சேர்ந்து தயாரித்த அறிக்கையின்படி, இத்துறைமுகத்தின் வழியாக கீழ்க்கண்ட அளவு போக்குவரத்து நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது :—

| | |
|---|---|
| 1971–72 ... ... ... ... | 22.35 லட்சம் டன். |
| 1975–76 ... ... ... ... | 35.10 லட்சம் டன். |
| 1980–81 ... ... ... ... | 44.20 லட்சம் டன். |

இத்திட்டத்திற்கு 1971 மே மாதம் முடிய ரூ. 16.827 கோடி (மொத்தம்) செலவாகியுள்ளது. 1972-ம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் இரண்டு கப்பல்கள் தங்குமிடங்களையும் 1973 மார்ச் திங்களுக்குள் மற்ற இரண்டு கப்பல்கள் தங்குமிடங்களையும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது தெற்கு அலைத் தடுப்புப் பகுதியில் நாள் ஒன்றுக்கு சுமார் 3 ஆயிரம் டன் கற்களும் வடக்கு அலைத் தடுப்புப் பகுதியில் நாள் ஒன்றுக்குச் சுமார் ஒரு ஆயிரம் டன் கற்களும் போடப்படுகின்றன. திட்டமிட்ட நாளுக்கு முன்பாக இத்திட்டத்தை முடிப்பதற்காகக் கற்கள் போடுவதின் அளவை நாள் ஒன்றுக்கு 5,000 முதல் 6,000 டன் வரை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. போதிய அளவு நிதி ஒதுக்கீடு கிடைத்தால் இத்திட்டம் 1972–73-ல் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேது சமுத்திரத் திட்டம்:—இந்தியாவின் மேற்குக் கரையையும் கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையை மேம்படுத்துவதற்காகவும், அதன் நீளத்தைக் குறைப்பதற்காகவும், மன்னார் வளைகுடாவை வங்காள விரிகுடாவுடன் இணைப்பதுதான் சேதுசமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும்.

1965-ம் வருடம் மே மாதம் இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட தலைமைப் பொறியாளரும், திட்ட ஆலோசகருமான திரு. சி. வி. வேங்கடேஸ்வரன் இத்திட்டம் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை நடத்தினார். ஆய்வுகளை முடித்து இதுகுறித்து இவரும் முன்னாளைய திட்ட அதிகாரி திரு. ஆர். நடராசன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் சேர்ந்து





தயாரித்த விரிவான அறிக்கை ஒன்றை முன்னாளைய இந்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்களிடம் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் சமர்ப்பித்தனர். இவ்வறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியிலும், தொழில் நுட்ப வகையிலும் இயன்ற ஒன்றாகும் என்று திட்ட வட்டமாகக் கூறப்பட்டுள்ளது. பல இணைப்புகளை ஆராய்ந்ததில் இராமேஸ்வரம் இணைப்பும் மண்டபம் இணைப்பும் சிறந்தவை என்று கண்டறியப பட்டது. இவ்விரண்டு இணைப்புகளில் இராமேஸ்வரம் இணைப்பில் நீளமும் செலவும் குறைந்ததாக இருக்கிறது, எனவே இராமேஸ்வரம் இணைப்பே சிறந்தது என்று இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இவ்விரண்டின் திட்ட மதிப்பீடு முறையே ரூ. 37.50 கோடி, ரூபாய் 55.00 கோடியாகும். திட்ட அறிக்கையைக் கூர்ந்து நோக்கினால் இத்திட்டம் தொழில் நுட்ப வகையில் இயன்ற ஒன்றாகும் என்பதும், பொருளாதார வகையில் சாத்தியமானது என்பதும், வியாபார ரீதியில் இலாபகரமானது என்பதும், அரசியல் ரீதியில் மதி நுட்பம் வாய்ந்தது என்பதும் சந்தேகத்திற்கிடமின்றிப் புலனாகும்.

இத்திட்டம் பேராசையானது என்றும், பொருளாதார ரீதியில் இயலாத ஒன்று என்றும் "மக்கள் சபை மதிப்பீட்டுக்குழு" குறிப்பிட்டுள்ளதென்று சொல்லப்பட்டது. இது இப்பொழுது கூறியதல்ல, 1969-ல் சொல்லப்பட்டது. அதற்குப்பின் நிலை எவ்வளவோ மாறிவிட்டது. அப்பொழுது "மெட்ருஸ் ஔட்டர் ஆர்பர்" திட்டமோ அல்லது தூத்துக்குடித் துறைமுகத் திட்டமோ இதில் ஏதாவது ஒன்றுக்குத்தான் அனுமதி வழங்க முடியுமென்று மத்திய அரசு கூறிற்று. ஆனால் இந்த அரசின் முயற்சியால் இவை இரண்டிற்குமே அனுமதி பெறப்பட்டு, இப்பொழுது வேலை நடைபெற்று வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சேது சமுத்திரத் திட்டம் முடிந்தவுடனேயே அதிக வருவாயுள்ளதாக அமைவதுடன், பின்வரும் ஒவ்வொரு ஆண்டிலும் இரட்டிக்கக்கூடியதுமாகும். இதனால் கிடைக்கக்கூடிய வருவாயில் பெரும் பங்கு அயல்நாட்டு நாணய மாற்றாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இது குறித்து ஏற்கனவே கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆதித்தனாரும், பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சாதிக் பாட்சாவும், மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. இராஜ்பகதூர் அவர்களுடன் நேரில் கலந்துரையாடியதில் மத்திய அமைச்சர் இத்திட்டத்திற்குப் பேராதரவு தருவதாகவும் வாக்களித்துள்ளார். ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கும் தகுந்த முதன்மையிடம் அளிக்குமாறு மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களையும் இவ்வரசு கேட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த ஒற்றிவைப்புப் பிரேரணையை அனுமதித்து விவாதித்திடத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு <u>பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

MR SPEAKER: Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, the hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice of an adjournment motion for discussing the following matter of urgent public importance :— (I am reading the notice as amended by me.)

'Action of the Police on 23rd July 1971 at Annamalai University Campus in lathi-charging the students inside the Post-graduate Hostel and arresting the students by breaking open the class room, long after the convocation was over'.

The hon. Member, Thiru K. Suppu of the same Communist Party has given notice of a similar motion.

The hon. Member, Thiru R. Ponnappa Nadar of the Congress Party has given notice of the following adjournment motion :—

"That the business of the House do stand adjourned to discuss about a matter of urgent public importance, namely, the lathi-charging on 23rd July 1971 against the students of the Annamalai University yithin the University Campus."

The hon. Members, Thiru J. James and Thirumathi T. N. Anandanayaki, Deputy Leader of the same Party, have given notices of a similar motion and I am not reading them.

The hon. Member, Dr. H. V. Hande of the Swatantra Party has given notice of the following adjournment motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules :—

'I move that the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance namely, unrest an closure of the University since Saturday the 24th instant.' Now I call upon the Leader of the . . .

THIRU R. PONNAPPA NADAR: Sir, apart from the leaders of parties, the Members who have given notice of an adjournment motion may also be allowed to speak . . .

MR. SPEAKER: The hon. Member, Thiru Ponnappa Nadar may resume his seat. It is the convention that though leaders and members of Parties have given notice of the same adjournment motion, usually the leaders are invited to explain it. Now I call upon Dr. Hande to speak . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, under rule 42 of the Assembly Rules, Members who have given notice of an adjournment motion can speak on them if the Hon. Speaker permits them to do so. That is the privilege of Members, and let not convention bind us and the Hon. Speaker may allow the hon. Members to speak . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோதும், கடந்த காலத்தில் காங்கிரஸ் கட்சி எதிர்க் கட்சியாக இருந்த



போதும், தாங்கள் சொன்ன இந்த மரபைத்தான் பின்பற்றி உறுப்பினர்கள் பலர் இதுபோன்ற ஒத்திவைப்புப் பிரேரணைகளைக் கொடுத்தாலே, அந்தந்தக் கட்சித் தலைவர்கள்தான் அதைப்பற்றிப் பேசுவது என்று இருந்தது. ஆனால் இப்போது உறுப்பினர்களுக்கு அந்த உரிமை வேண்டும் என்று அவர்கள் கேட்பார்களேயானால், பேரவைத் தலைவர் அவர்கள் "மரபு கெட்டாலும் பரவாயில்லை, பேசுவதற்கான வாய்ப்புத்தான் வேண்டும்" என்று கேட்பவர்களுக்கு அத்தகைய வாய்ப்பினை அளிப்பதுதான் சாலச் சிறந்தது என்பதே என் தாழ்மையான கருத்து என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைத்தான் முதலிலேயே குறிப்பிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உங்களைத் தந்திரமாக வலையில் சிக்க வைக்கின்றார்கள். பேசுவதால் இந்த மன்றத்திற்கும் நஷ்டம் இல்லை, மன்ற உரிமைகளுக்கும் நஷ்டம் இல்லை. வழக்கமாக உறுப்பினர்களும் அவர்களுடைய தலைவர்களும் ஒரே தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், தலைவர்கள் மட்டுந்தான் விளக்குவது வழக்கம். தலைவரை மீறி இன்னொரு தலைவர் வருகிறார் என்ற முறையில் கிடையாது. அல்லது தலைவர்கள் விளக்கமாகச் சொல்லமாட்டார்கள் என்ற பொருள்படக் கூடும். இந்த மன்றத்தில் கடைப்பிடித்து வந்த மரபைப்பற்றிச் சொன்னேன். உங்களுக்கும் தீர்மானம் கொடுத்தவர்கள் எல்லாம் பேச வேண்டுமென்று இருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விருப்பமும் அதுவாக இருந்தால், எனக்கு ஆட்சேபனை இல்லை. இன்னும் ஒவ்வொரு நாளும் எல்லா உறுப்பினர்களும் அவசரத் தீர்மானங்களைக் கொடுத்து புதிய மரபைக் கூட சிருஷ்டித்துக் கொள்ளலாம். இப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் நோக்கத்தை விளக்குவார்கள்.

DR. H. V. HANDE: Hon. Speaker has read my adjournment motion.

MR. SPEAKER: I have amended it. There was an untrue statement in it and that need not be pronounced in the House. That has not happened and that is why it was dropped. I omitted it.

DR. H. V. HANDE: The situation in the Annamalai University Campus, I think the latest position, we have to take into consideration. Since Saturday 24th the Annamalai University had been closed and then we were also given to understand that it had been closed indefinitely. We do not know when it is going to be re-opened. What was the actual cause? We have to know the causative factor that was responsible for closure of the University. There was student unrest. They wanted to have the Founder's Day. Even that was cancelled on Saturday. It has been reported that a body was found. That aspect is there. We do not know who that person was. We expect a proper explanation from the Hon. Chief Minister. Whatever it is, the position is, the post-mortem of the body has been done. What is the result of post-mortem examination, we have to know. There is also a reported statement (I do not know how far it is true) that some people were chased and a person accidentally fell

in the tank. We do not know how far it is correct. If we adjourn the House and discuss the matter (already each party leader had requested that each member of his party might be permitted to speak) it would be better.

Another important thing I want to bring to the attention of the Hon. Chief Minister. There seems to have been certain amount of undercurrent of unrest for the past four or five days. That has snow balled and had taken the form of big unrest. That is the ultimate position. I would have been very happy if the intelligence, State Intelligence (We have the Central Intelligence) had properly functioned and found out what exactly was happening in the campus and where the unrest was and what was it due to. If the Hon. Chief Minister had been propertly supplied with the required information by the Intelligence, probably I still feel, that the Chief Minister who is known for his tact (even the Hon. Speaker was just now mentioning and paying complements for the Hon. Chief Minister's tact) would have prevented this sort of situation. So, if the Hon. Speaker could adjourn this House, we can cautiously and calmly discuss this subject.

I do not believe in eliciting anything from students; I am basically and fundamentally against exploiting students for political purpose; if it is a question of getting half a dozen votes by exploiting hte students I would be basically against it and that I want the Hon. Chief Minister to clearly understand. If all these things had been understood, we would have prevented the situation. That is my submission. If only the intelligence had given the information before-hand if only the psychology of the students were made known to the Hon. Chief Minister, the situation could have been prevented.

The closure of the University is a serious matter: I say therefore that the business of the House be adjourned to discuss this matter in a calm atmosphere. Thank you.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய "அட்ஜர்ன்மென்ட் மோஷனில்" பிரதானமாக போலீசார் யுனிவர்சிடி காம்பசுக்குள் நுழைந்து லத்தி சார்ஜ் செய்ததும், அதற்குப் பிறகு மாணவர்கள் தங்களுடைய லெக்சர் ஹாலில் இருக்கின்றபோது அதை உடைத்து மாணவர்களைக் கைது செய்த சம்பவத்தையும் பற்றி உங்கள் முன்னால் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சம்பவத்தின் மூலக்காரணத்திற்குள் போக நான் விரும்பவில்லை.

இந்த நேரத்தில் தெளிவாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாணவர்கள் எக்காரணத்தினால் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள் என்பது இனிமேல் விசாரித்தால்தான் தெரியும். பொதுவாக பட்டம் பெற்றவர்களுக்குத்தான் டாக்டர் பட்டம் கொடுக்க வேண்டுமென்ற நியதி இல்லை. வின்ஸ்டன் சர்ச்சிலோ அல்லது இன்றைக்கு இருக்கக்கூடிய நம்முடைய பிரதம மந்திரியோ எந்தக் கல்லூரியிலும் பட்டம் பெற்றவர்கள் அல்ல. காமராஜர் போன்றவர்களுக்கு டாக்டர் பட்டம் கொடுக்கப்படுகிறது என்றால்





அதை வரவேற்க வேண்டும். அதுதான் காரணமாக இருக்கிறது என்று சொன்னால் அரசியல் கட்சிகள் இம்மாதிரியான காரணத்தை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது.

கான்வொகேஷன் காலையில் நடந்து முடிந்த பிறகு தான் போலீசாரின் அத்துமீறிய செய்கையானது நடந்திருக்கிறது. எங்களைப் பொறுத்தவரை இம்மாதிரி சம்பவங்கள் வருகின்றபோது குறைந்த அளவு பாதுகாப்பு அடிப்படையில்தான் இருக்க வேண்டுமே தவிர, காம்பசுக்குள்ளே நுழைந்து கைது செய்வது, லத்தி சார்ஜ் செய்வது, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது போன்றவைகள் எல்லாம் கூடாது என்பதுதான் கொள்கை.

இதே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ராஜேந்திரன் போன்றவர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள். இப்படி போலீசார் அத்துமீறி காம்பசுக்குள் நுழைந்து நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்றால், நிலைமை எங்கு போய் முடியும் என்று சொல்ல முடியாது. அங்கே நடந்த பல விவரங்களை விவரித்துச் சொல்ல விரும்பவில்லை. லத்தி சார்ஜ் நடந்த காரணத்தால் குளத்தில் விழுந்து இறந்திருப்பார்கள் என்பது நிலைமையை இன்னும் சிக்கலாக்குகிறது. தொடர்ந்து பல்கலைக் கழகம் மூடப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் செய்திகள் எல்லாம் வெளியே வந்தால் மற்றக் கல்லூரி மாணவர்கள் இதைக் கண்டிக்கக்கூடிய நிலைமையில் பதட்ட நிலை ஏற்படும் என்ற காரணத்தால் நிதானமான முறையில் சபையில் விவாதிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால், எல்லாக் கட்சிகளும் ஆளும் கட்சி உட்பட தங்கள் கருத்தைக் கூறக் கூடிய நிலைமையும், அரசு தவறிவிட்டது என்று நாங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று சொல்ல அரசுக்கும் வாய்ப்புக் கிடைக்கும். இது ரொம்ப முக்கியமான விஷயம் என்ற முறையில் மற்ற ஒத்திவைப்புப் பிரேரணைகளைப் போல் முடிவு எடுக்காது இதற்கு அனுமதி தந்து, சபையினுடைய கருத்தைத் தெரிந்து கொள்ளப் பேருதவியாக இருக்கும் என்ற முறையில் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது, எப்படி இந்த மன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றிக் குறுகிய நேரத்தில் ஒருசில முக்கியமான கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். விவாதத்திற்குரிய காரியங்களைப் பற்றி நான் கூறுவதற்கு முன்வரவில்லை. 23-ம் தேதியன்று விரும்பத்தகாத நிகழ்ச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்து விட்டது. அதைக் கண்டு நாம் எல்லோரும் வருத்தப்படக் கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம்.

அன்று காலையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்ததாகவும், அப்போது போலீசாருக்கும், கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் மோதல் ஏற்பட்டதாகவும்—பத்திரிகையில் வந்த செய்தி அல்ல—மற்றவிதமாக தகவல் கிடைத்திருக்கிறது. அதையொட்டி போலீசார் ஒரு லத்தி சார்ஜ் நடத்தி ஓட ஓட மாணவர்களை விரட்டியடித்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆர்.டி.ஓ.

போன்ற உயர்தர அதிகாரிகள் இருந்ததாகவும், எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் சட்டப் பிரகாரம் கொடுக்கவில்லை; கூட்டத்தினரைப் பிரிந்து செல்லும்படி ஆணை பிறப்பிக்கப்படவில்லை. 127-வது பிரிவுப்படி கிரிமினல் சட்ட நடவடிக்கைகள் எடுக்கும் போது எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை என்ற கருத்தும் கூறப்படுகிறது. அதுமட்டுமல்ல, கான்வகேஷன் சுமுகமாக நடந்து முடிந்திருக்கிறது. ஆனால் ஓடியவர்களையும், ஹாஸ்டலில் புகுந்தவர்களையும், மற்றவர்களையும் போலீசார் அத்துமீறி அடித்து அடக்கு முறைக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற செய்தியைக் கண்டு நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம்.

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:</u> போலீஸார் அடித்ததன் காரணமாக உயிர் இழப்பு ஏற்பட்டதாகச் சொன்னார்கள். யார் என்பதற்கான விளக்கத்தை வேண்டுகிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்:</u> போலீஸ் தரப்பிலிருந்து ஒரு நபர் குளத்தில் விழுந்ததாகவும், அதுசம்பந்தமாக போலீஸ் இலாகாவில் இருந்து அறிக்கை விடுத்திருக்கிறார்கள். விழுந்த நபருக்கு எந்தவிதமான வெளிக் காயமும், உள் காயமும் இல்லை என்று மருத்துவப் பரிசோதனையாகி விட்டது என்ற அறிக்கை போலீஸ் தரப்பிலிருந்து பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியைப் பார்த்தேன். விசாரணை இருக்கிறபோது இம்மாதிரியான செய்திகளை விடுப்பது என்பது பொருத்தம்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விசாரணையில் இருக்கிறபோது இந்தமாதிரியாக அதன் விவரங்களை எடுத்துக்கூறுவது பொருத்தமானதல்ல. ஒரு பிரேதம் அந்தக் குளத்தில் விழுந்திருக்கிறது. அது யுனிவர்சிட்டி காம்பஸுக்குள்ளே கைப்பற்றப்பட்டிருக்கிறது. லத்தி சார்ஜில் காயம் இருக்கிறதா காயம் இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்ய இப்போது நீதி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:</u> குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாணவர் என்று பத்திரிகைகளில் ஒரு தவறான செய்தி வெளியிடப்பட்டது. போலீஸ் அறிக்கையில் கூட அவர் மாணவரா அல்லது வெளியாரா என்று இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என்று போலீஸ் அறிக்கையில் தந்திருக்கிறார்களே தவிர, மாணவர் என்றோ, மாணவர் அல்ல என்றோ, கூறிடவில்லை. யார் என்று கண்டுபிடிக்கப்படவில்லை என்றுதான் கூறியிருக்கிறார்கள். பத்திரிகைகளில் ஒரு தவறான செய்தி வந்தது; அதைத் திருத்தி வெளியிட்டிருக்கிறார்கள் இப்போது. மாணவர் என்று வேண்டுமென்றே கற்பனை செய்து கொண்டு ஒரு அவதூறை இந்த நாட்டில் பரப்புவது என்றால் அதன் விளைவுகள் வேறுவிதமாக மாறக்கூடும். போலீஸார், அது யார் என்று கண்டுபிடிக்கப்படவில்லை என்று அறிக்கை தந்திருக்கிறார்கள்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்:</u> எனது பேச்சில் "ஒரு நபர்" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். மாணவரா அல்லது மாணவர் அல்லாதவரா என்று நான் சொல்லவில்லை.



ஆகவே, இம்மாதிரியான அறிக்கை விடுவது விசாரணை இருக்கும் போது குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க மிகவும் கஷ்டமாகிறது. போலீஸார் யூனிவர்சிட்டி காம்பஸ்க்குள்ளே முன் அனுமதி பெறாமல் சென்றிருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது; இந்தச் சம்பவம் மிகவும் வருந்தத்தக்கது. 70 பேர்கள் காயமுற்றிருக்கிறார்கள் என்று "இந்து" பத்திரிகையில் ஒரு ரிப்போர்ட் வந்திருக்கிறது. இவ்வளவு மாணவர்கள் காயமுற்றிருக்கிறார்கள், அவ்வளவு கடுமையானதொரு லத்தி சார்ஜ் அங்கு நடைபெற்றிருக்கிறது.

குறிப்பாக மாணவர்கள் இல்லத்திலும், க்ளாஸ் அறைகளுக்கும் சென்று இம்மாதிரி காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்கது. யூனிவர்சிட்டி காம்பஸுக்குள் சாதாரணமாக மாணவர்கள் கிளர்ச்சி செய்தால் அவர்களைப் பராமரிப்பது போலீஸ் அதிகாரிகளின் தலையாய கடமையாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாணவர்கள் எல்லாம் இந்த நாட்டுச் செல்வங்களாக இருக்கிறார்கள். அவர்கள் தவறான பாதையில் சென்று விட்டார்கள் என்றால் அவர்களைக் கண்காணிப்பதில் சற்று அதிகக் கவனமாக இருக்கவேண்டுமே அல்லாமல், கடுமையான குற்றவாளிகளைப் போல் இவர்களைத் துரத்தி அடிப்பது, அதிலும் அவர்களது ரத்தத்தை இந்த மண்ணில் சிந்த விடுவது போன்ற இம்மாதிரிக் காரியங்களை எல்லாம் செய்வது பொருத்தமல்ல.

நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தபோது இந்த அவை முன்னவர் அவர்கள் ஒரு விசாரணைக் கமிஷனை, கமிஷன் ஆஃப் என்கொயரீஸ் ஆக்ட்டை அனுசரித்து ஒரு நீதி விசாரணை நடத்தப் போவதாக இங்கு ஓர் அறிக்கை விடுத்தார்கள். நாங்கள் இந்த அவசரத் தீர்மானத்தைக் கொடுத்ததற்குப் பிற்பாடு என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இம்மாதிரி கமிஷன் ஆஃப் என்கொயரி இருப்பதால் இதைப் பற்றி விவாதிப்பதில் எந்த விதமான சட்டப்பூர்வமான தடங்கல் எதுவும் இருக்காது. நம் விதி 50-ல் என்னென்ன வழிவகைகள் இருக்கின்றன என்பதைப் பற்றித் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் பத்து அம்சங்களைச் சொல்லி இருக்கிறார்கள், "ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் ஆப் ரைட் டு மேக் மோஷன்ஸ்" என்று என்னென்ன காரியங்களைக் கொண்டுவரலாம் என்று விதி இருக்கிறது. அதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, திட்டவட்டமாகவும் சொல்லப்பட்டு இருக்கிறது. இது "ஸப் ஜுடிஸ்" ஆகாது என்ற கருத்தையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு சாதாரண என்கொயரியாக இருக்கிறது. 1-ம் கமிஷன் என்ற முறையில் இருக்கிறது. இதில் யாரையும் தண்டிக்கப் போவதில்லை. எந்த முறையில் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்தன என்பதை, "டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்" அடிப்படையில் தான் தீர்மானிக்கப் போகிறார்கள். ஆகவே சட்டச் சிக்கல் எதுவும் இதைப்பற்றி விவாதிப்பதால் ஏற்படாது.

குறிப்பாக ஒரு நீதி விசாரணை போடப்பட்டிருக்கிற காரணத்தினால், இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எல்லாம் அந்த இடத்திலிருந்து மாற்றி வேறு அதிகாரிகளைப் போட்டால்தான் மாணவர்கள் மனதில் உள்ள அச்சத்தை அகற்ற முடியும். குறிப்பாக ஒரு நல்ல நீதிபதி விசாரணை நடக்க வேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட

அதிகாரிகள் அங்கிருந்தால் எல்லோரும் சாட்சியம் சொல்ல வரமாட்டார்கள். இப்படி மாணவர்களுக்கு இந்த மாதிரியான கொடுமைகளை இழைத்தவர்கள் இன்றும் அங்கு இருந்து கொண்டிருந்தால், மற்ற சாட்சி சொல்லப் போகிறவர்களின் கதி என்னவாகும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இது அரசாங்க அன்றாட சட்ட நிர்வாகத்தின்கீழ் உட்பட்டதல்ல. இதை ஒரு பிரத்யேகமான கண்ணோட்டத்துடன் விவாதிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதிரியான சம்பவங்களைத் தவிர்த்திருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, ப்ரெவென்டிவ் ஸ்டெப்ஸ் எல்லாம் எடுத்திருக்க வேண்டும். அதல்லாமல், எந்தவிதமான எச்சரிக்கையும் இல்லாமல், நாய்களைப் போல் விரட்டி அடிப்பது ஒழுக்கமானதல்ல, நியாயமானதல்ல, தர்மமானதல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டி, இந்த மேலான அவையில், இந்தக் காரியத்தைப் பற்றி மக்கள் அதிகமாகப் பயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், மாணவர்கள் திகில் அடைந்திருக்கிறார்கள், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் பீதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், இதை விவாதிக்க இந்த அவையில் நேரத்தை ஒத்திவைத்து இரண்டு மணி நேரம் விவாதிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டு, அதன் மூலமாக தமிழக மக்கள் எல்லாம் பெருமைப்படக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் காவல் துறையினரும் நிர்வாகமும் நடத்தியுள்ள இந்தக் கறைபிடித்த வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றி இந்த நேரத்தில் நான் குறிப்பிடுவதற்காக மிகவும் வருந்துகிறேன். ஊழல்கள் நிறைந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை எதிர்த்து நடைபெறும் மாணவர்கள் போராட்டத்தினை, நிர்வாகத்திற்கும் மாணவர்களுக்கும் இடையேயுள்ள போராட்டத்தினை, மாணவர்கள் அரசாங்கத்திற்கிடையே நடக்கக்கூடிய போராட்டமாக உருவாக்கப் பட்டதற்காக நான் வருந்துகிறேன்.

மாணவர்கள் மீது இந்த அமைச்சரவைக்கு இல்லாததொரு அக்கறை திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள, ஆளும் கட்சியிலுள்ள மதிப்பிற்குரிய மாணவர்கள் தலைவர்களுக்கு இல்லாத ஒரு அக்கறை எங்களுக்கு வந்து விட்டது என்றோ அல்லது அவர்களுக்குத் தெரியாதது எங்களுக்குத் தெரிந்துவிட்டது என்ற கருத்திலோ நான் அதைச் சொல்ல வரவில்லை. நான் சொல்வதை விருப்பு வெறுப்பில்லாமல் எடுத்துக்கொள்ள வேண்டும். நடைபெற்ற சம்பவங்கள் எப்படி நிகழ்ந்துள்ளன என்று கண்டறிந்து நடந்த தவறுகளைக் கண்டிக்கவும், அதைச் சீர்திருத்தவும் என்ற அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் இந்த அரசு. கட்சிக் கண்ணோட்டத்தோடு இதைப் பார்க்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டமளிப்பு விழாவிற்கு முன்பே கலவரங்கள் நடக்கும் என்ற தகவலையொட்டி காவல் துறையினர் பல இடங்களில் நிறுத்தப் பட்டிருக்கிறார்கள். மாணவர்களின் விடுதிகளுக்கு முன்னால் பல காவலர்களை நிறுத்தி வைத்திருந்தது மாணவர்களுக்கு ஒரு அருவருப்பை ஏற்படுத்தியிருக்கிறது. பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிற்கு, ஏற்கனவே படித்து முடித்த மாணவர்கள்தான் பட்டம் பெறுவதற்கு வந்திருக்கிறார்கள், விருந்தினர்களும் வந்திருக்கிறார்கள். இவர்கள் அங்கு வந்து அமர்வதற்கு டிக்கட்டுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அப்படி டிக்கட்ஸ் வாங்கி வந்தவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் எங்களை உள்ளே செல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டும் கூட அவர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை, அப்படி உள்ளே செல்வதைத் தடுத்திருக்கிறார்கள்.



அப்படிப்பட்ட விரும்பத்தகாத நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. மாணவர்கள் லத்தி சார்ஜ் செய்யப்பட்டு அவர்கள் சிதறி ஓட, சேற்றில் விழுந்திருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்குக் கை கொடுத்தவர்களையும், கை கொடுக்காதவர்களையும், கை கொடுத்தவர்கள், கை கொடுக்காதவர்கள் என்றில்லாத வகையில் காவல் துறையினர் எல்லோரையும் அடித்திருக்கிறார்கள். நான்கு மணிக்குப் பின்னர் முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டச் செல்கிறார்கள். அப்படி அவர்கள் செல்லும்போது அங்கு மாணவர்கள் நடமாட்டம் எதுவும் இருக்கக்கூடாது என்று கருதி, ஒரு தவறான கருத்தில், மாணவர்கள் எல்லோரும் எதிர்க்கக்கூடியவர்கள் என்ற தவறான கருத்தில் தவறானதொரு முடிவிற்கு வந்து மாணவர்களை காவல் துறையினர் வானில் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். அங்குள்ள ஆர். டி. ஓ. அவர்கள் * * * உள்ளே நுழைந்து மாணவர்களை அடிக்க வேண்டுமென்று சொல்ல, காவலர்கள் அறைகளுக்கு உள்ளே சென்று மாணவர்களை அலற அலற அடித்திருக்கிறார்கள். இதைக் கண்டவர்களும், கேட்டவர்களும் மிகவும் பதட்டப்பட்டிருக்கிறார்கள். மாணவர்களால் சிந்தப்பட்ட ரத்தத்தையெல்லாம் காவல் துறையினர் துணியை வைத்துத் துடைத்தெடுத்திருக்கிறார்கள். கொடுமையான நிகழ்ச்சிகள் அங்கு நடைபெற்றிருக்கின்றன. அறைகளைத் திறக்கச் சொல்லி அறைகளில் புகுந்து அடித்திருக்கிறார்கள். பல மாணவர்கள் வேஷ்டிகள் கிழிக்கப்பட்டு அண்டர்வேரோடு நின்று கொண்டிருந்திருக்கிறார்கள். சிலரது எட்டு முழ வேஷ்டியைக் கிழித்து நான்கு முழமாக்கி அதைக் கட்டிக் கொள்ளச் செய்திருக்கிறார்கள். அடிப்பட்டவர்களை காயம்பட்டவர்கள், காயம்படாதவர்கள் என்று பிரித்து காயம்படாதவர்களை எங்கேயோ தொலை தூரத்தில் கொண்டு சென்று விட்டுவிட்டு, காயம்பட்டவர்களை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று பொய் சான்றிதழ்களை வாங்கியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன்.

இதுபற்றியெல்லாம் நீதி விசாரணை நடைபெற இருப்பதன் காரணமாக முதலில் அங்குள்ள ஆர்.டி.ஓ.-வையும், அங்குள்ள போலீஸ் அதிகாரிகளையும் உடனடியாக மாற்ற வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் மீது சரியான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வர வேண்டும். முதல்வர் அவர்கள் நாம் சம்பந்தப்பட்டிருக்கிறோமே என்ற நினைவில்லாமல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். கல்லூரிகளில் படித்தவர்களுக்குத்தான் என்றில்லாமல், மக்கள் மன்றத்தில் பயின்றுள்ள தங்களுக்குப் பட்டம் வழங்கப்பட்டிருப்பது பெருமைப்

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

படக்கூடியதாகும். ஏட்டளவில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குக் நான் பட்டமளிப்பது என்றில்லாமல் தங்களுக்குப் பட்டம் வழங்கியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதைக் காட்டி நிர்வாகம் தலையிடுவது என்று சொல்வது, காவல் துறையினரும், ஊழல் நிறைந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகமும் தலையிடுவது என்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தராமல் இருப்பதற்கும் இந்த அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிப்பது சிறந்ததாகும். ஆகவேதான் இந்த ஒற்றிவைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் * * * சொன்ன பகுதிகளை இந்த மன்றத்தின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கிவிடுமாறு ஆணையிடுகிறேன். இந்தக் கருத்தை மற்ற உறுப்பினர்களும் கவனிப்பது நல்லது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த முக்கியம் வாய்ந்த
மு.ப. 11 00 தீர்மானத்தை நிச்சயமாக அரசியல் நோக்கத்தோடு இங்கே கொண்டு வரவில்லை என்பதை நான் முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் நடத்திய நிகழ்ச்சிக்கும் அரசியலுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ கருப்புக்கொடி ஆர்ப்பாட்டங்கள் மாணவர்களால் இதற்கு முன்பு நடத்தப்பட்டிருக்கின்றன. எந்தக் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டமும் உயிர்ச் சேதத்தில் முடியவில்லை. இதுதான் வரலாற்றில் முதல் தடவையாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதில் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மீண்டும் மீண்டும் இந்தத் தடியடிப் பிரயோகத்தில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். நிரூபிக்க இயலுமா? உயிர்ச்சேதத்திற்கு ஆளான மாணவர் யார்? அவருடைய பெயரைச் சொல்ல முடியுமா?

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் மிகத் தெளிவாக, கவனமாக வார்த்தைகளை உபயோகிக்கிறேன். 'மாணவர்கள்' என்ற வார்த்தையை உபயோகிக்கவில்லை. உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று தெளிவாகக் கூறினேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உயிர்ச்சேதம் இந்தச் சம்பவத்தால் ஏற்பட்டது என்று நீங்கள் சொல்கிறீர்களா?

திரு. ஜே. ஜேம்ஸ் : அங்கே ஒரு கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிகளில்தான் உயிர்ச்சேதம் ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தால்தான் உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று கூறுகிறீர்களா?

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



திரு. ஜே. ஜேம்ஸ் : நான் தமிழில்தான் சொல்கிறேன் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நானும் தமிழில்தான் கேட்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது. அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டா? உண்டு என்றுதான் சொல்கிறீர்களா?

திரு. ஜே. ஜேம்ஸ் : இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு உண்டா இல்லையா என்று கூறுவதற்குத் தகுதி வாய்ந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். அவர்கள்தான் அங்கு இருந்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது அதற்குத் தொடர்பு உண்டா இல்லையா என்று சொல்லலாம். எனக்குத் தெரியாது என்று கூறிக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திரு. சுப்பு அவர்கள் கூறியதுபோல் கலாட்டாவுக்குக் காரணம் மாணவர்களையும், பாஸ் வழங்கப்பட்டவர்களையும், விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களையும் பட்டமளிப்பு விழாவுக்குப் போலீசார் அனுமதிக்கவில்லை என்ற காரணத்தினால், வெளியில் கேட்டில் நின்றுகொண்டிருந்திருக்கிறார்கள். ஆகவேதான் இந்த கலாட்டா ஆரம்பமாகிறது என்று சொல்கிறார்கள். அதைத் தொடர்ந்துதான் மீண்டும் பல கலாட்டாக்கள் நடந்தன. ஆனால், நான் கூறிக்கொள்வதெல்லாம் இந்தப் பட்டமளிப்பு விழாவுக்கு முன்னெச்சரிக்கையாக ஏறத்தாழ 1,000 துப்பாக்கி தாங்கிய போலீஸ்காரர்கள் அந்தப் பல்கலைக்கழக விளாகத்தில் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். இதற்கு அந்தப் பல்கலைக்கழகத்தின் அனுமதியை அரசாங்கம் பெறவில்லை. இத்தனை நிகழ்ச்சிகள் நடக்கும்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் * * * அந்த விளாகத்தில் இருந்திருக்கிறார்கள். அங்கே என்ன நடந்தது? ஏதோ கற்கள் எறியப்பட்டு இருக்கலாம். இதற்குப் பயந்து மாணவர்கள் தங்கள் அறைகளில் கதவடைத்துப் பூட்டிக்கொண்டிருந்து இருக்கிறார்கள். கதவை உடைத்துப் போலீஸ்காரர்கள் அவர்களை வெளியே இழுத்துவந்து நையப் புடைத்து இருக்கிறார்கள். பலரைப் போலீஸ் வானிலே ஏற்றிச் சென்று எங்கேயோ கொண்டு போய் விட்டிருக்கிறார்கள். அந்த மாணவர்கள் எங்கு சென்றார்கள் என்று விவரம் தெரியவில்லை. எத்தனை பேர் அடிப்பட்டார்கள், காயம்பட்டார்கள் என்ற விவரம் வந்து சேரவில்லை.

நான் இங்கே கூறுவது எல்லாம், இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்பு, பல நிகழ்ச்சிகளில், சிதம்பரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு இருக்கிறார்கள். எந்த நிகழ்ச்சியின்போதும் உயிர்ச்

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சேதம் நடந்ததற்காக ஒரு அனுதாப வார்த்தையைக் கூற நமது முதலமைச்சருக்கு தயவு வரவில்லை, இதைக் குறித்து மாணவர் உலகம் என்ன கருதும் என்பதை இப்போது நான் அரசுக்கு சுட்டிக் காட்டுகிறேன்.

*            *            *            *

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி, இதற்கு எப்படி அனுமதி கொடுக்கப்படவேண்டும் என்பதற்கு என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பட்டமளிப்பு விழாவின்போது, கருப்புக் கொடி காட்டப் போகிறார்கள் என்பதை நாமும் கூட அறிந்திருந்தோம். கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயக நாட்டில், ஒரு சாதாரணமான நிகழ்ச்சி. ஜனநாயக முறையில் அனுமதிக்கப்படும் நிகழ்ச்சி. அதை இவ்வளவு பெரிதாகப்படுத்தி, அதற்காக இவ்வளவு போலீஸ் பந்தோபஸ்து செய்து, பாவம், மாணவ மணிகளை வெறியூட்டி, தடிகொண்டு தாக்கி ("த்ஸொ, த்ஸொ") அவர்களை நாய் போல் இழுத்து . . .

'Choo, Choo, Choo'—is not permitted in the House.

MR. SPEAKER: Your ears are more sharp. You should not hear. The hon. lady Member ......

THIRU R. PONNAPPA NADAR: Either we should be given an opportunity to speak or we may be asked to do something else.

MR. SPEAKER: Your ears must not be too sharp.

THIRU V. M. ABDUL JABBAR: May I know what is that something else?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is not permitted under the Rules (interruption) Assembly Rules.

MR. SPEAKER: You proceed.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்புறம், இந்த மாணவ மணிகளைத் தடிகொண்டு தாக்கி இழுத்தடித்திருக்கிறார்கள். இதை மிகச் சமாதானமான முறையில் சமாளித்திருக்க முடியும். அவர்களில் யார் யார் அனுமதி பெற்று பட்டமளிப்பு விழாவிற்கு வந்தார்கள் என்பதைக் கூடப் பார்க்காமல், அத்தனை பேரையும், அவர்கள் காத்துக்கொண்டிருக்கும்போது, அனுமதிச் சீட்டு இருந்தும், அனுமதிச் சீட்டே இல்லாமல் வேறு பலர் வேறு வேறு காரணத்தினால் அனுமதிக்கப்பட்டிருந்ததால், கலாட்டா நடந்திருக்கிறது. இந்த நிலையில் வைஸ்-சான்ஸலர் ஏதாவது போலீஸை வரவேண்டும் என்று கேட்டாரா? அனுமதி கொடுத்தாரா? வைஸ்-சான்ஸலரின் அனுமதியின்றி யூனிவர்சிடி காம்பசில் போலீஸ் எப்படிக் காலடி வைத்தார்கள்? வைஸ்-சான்சலர் பர்மிஷன் இல்லாமல் சென்றது, துரத்தித் துரத்தி அடித்து, பாவம், நீச்சல் தெரியாதவர்களை

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



குளத்தில் தூக்கிப் போட்டு என்ன நடந்தது என்றே தெரியாமல், செத்தார்களா இல்லையா என்று தெரியாமல் நிலைமை போயிருக்கிறது. இன்றுவரையில் 71 மாணவர்கள் அடிப்பட்டுக் காயமுற்று இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். தாக்கப்பட்டிருக்கிறார்கள். காலையில், மாலையில், 4 மணிக்கு போலீசார் மாணவர் விடுதியைச் சுற்றி வளைத்துக் கொண்டு, பூட்டியிருந்த கதவுகளையும் உடைத்துக் கொண்டு உள்ளே சென்று அறைகளிலே புகுந்து, பையன்களைத் தடியால் அடித்து, தூக்கித் தூக்கி நாய்போல் லாரிகளில் போட்டுக் கொண்டு சென்றிருக்கிறார்கள். பாவம், பிள்ளைகள் பொருள்களைக் காணோம் என்று தவிக்கிறார்கள், வாட்சுகளைக் காணோம், பென்களைக் காணோம் என்று இப்படியெல்லாம் தவித்திருக்கிறார்கள்.

அங்கே எதற்காகப் போலீஸ் போகிறது? யூனிவர்சிடி காம்பசில் காலடி வைத்தது எதற்காக? அது அத்துமீறிய செயல். உள்ளே புகுந்து, தடிகொண்டு தாக்கி, மாணவர்களின் ரத்தத்தைச் சிந்தி, அத்துமீறிய செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். எந்தப் போராட்டத்திலும் தலையிடும்போது போலீசார் யோசித்துத் தலையிட வேண்டும். மாணவர்கள் இளையவர்கள். நம் போன்று கட்டுப்பட்டு, உணர்ச்சிகள் அடங்கியவர்கள் அல்ல. ஆகவே, அவர்களுடைய சைகாலஜியை புரிந்துகொண்டு செயல்பட்டிருக்க வேண்டும். பாவம் காயம் பட்டவர்கள், அடிபட்டவர்கள், பலரைக் காணவே காணோம். கேட்டாலும், சொல்லவும் மாட்டேன் என்கிறார்கள். எந்தப் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறார்கள் என்று எங்களுக்கே தெரியாது என்கிறார்கள்.

இவ்வளவு பெரிய போலிஸ் "எக்ஸஸ்", அத்துமீறிய தன்மை கேட்டதே இல்லை. இதை அமைதிந்தது மிக மிக வருந்தத்தக்கது. இனிமேலாவது இம்மாதிரி கிளர்ச்சிகள் வந்தால் எந்த முறையில் அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்நிய நாடுகளில் வேறு வேறு வழிகளில் சமாளிக்கிறார்கள். தடிகொண்டு நாயை அடிப்பது போல் மாணவர்களை அடிப்பது கண்டிக்கத்தக்கது. ஆகவே, இந்த நிகழ்ச்சிகளைப் பற்றி விவாதிக்க சபையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23-ம் நாளன்று, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது, எனக்குப் பட்டம் அளிக்கப்பட்டதை இந்த மன்றத்திலே தாங்கள் பாராட்டி, வரவேற்றுப் பேசியதை நான் அறிந்து மகிழ்கிறேன் என்றாலும், அன்றையதினம் திட்டமிட்ட சம்பவம் நடைபெற்றிருக்குமானால், நீங்கள் குறிப்பிட்டது அன்று அவ்வாறு இருந்திராமல், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நின்று மௌனம் அனுஷ்டிக்கின்ற நிலையில் அமைந்திருக்கும் என்பதை நான் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். பட்டமளிப்பு விழாவிற்காகச் சென்று சிதம்பரத்தில், பப்ளிக் ஒர்க்ஸ் பங்களாவில் நான் தங்கியிருக்கும்போது, என் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்பு இருந்த காரணத்தினால், திட்டமிட்ட காரியங்கள் நடைபெறாமல், தாற்காலிகமாக நான் உங்களை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களில் சில பேர், தீவிர வாத நோக்கம் உள்ளவர்கள் என்பதை நாடு நன்றாக அறியும். தீவிர வாதம் சொல்லுகிற நக்ஸலைட் இயக்கத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவர்கள் சில பேருக்குத் தொடர்பு உண்டு. தென்னாற் காடு வெடி குண்டு சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள், அதில் ஈடுபட்டு உயிர் இழந்தவர்கள் நக்ஸலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர் களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களும் உண்டு என்பதும் நாடறிந்த ஒன்று. அது சம்பந்தமாக விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனக்குப் பட்டம் அளித்தது நியாயம்தான் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், பெருமனது வைத்து நண்பர் திரு. சுப்பு அவர்களும் எடுத்துக் கூறியதற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பட்டம் அளிப்பது அல்லது எனக்குப் பட்டம் வழங்குவது என்கின்ற அடிப் படையில் இந்தக் கிளர்ச்சி நடைபெற்றிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். அவர்கள் சொன்னார்கள், ஏதோ நிர்வாகத்தில் ஊழல்கள் இருப்பதை முன்னிட்டு, மாணவர்கள் காத்துக் கிடக் கிறார்கள். இப்பொழுது பயன்படுத்திக் கொண்டார்கள் என்று சொன்னார்கள்.

கருப்புக் கொடி காட்டுவது ஜனநாயகத்திலே அனுமதிக்கப்பட்ட ஒன்று என்று இங்கே திருமதி அனந்தநாயகி வாதிட்டார்கள். இதையேதான் திராவிட முன்னேற்றக் கழகமும், ஏனைய எதிர்க் கட்சிகளும் கடந்த பல்லாண்டு காலமாகச் சொல்லி வருகிறது. இன்றைக்கு கொடி காட்டுவது ஜனநாயகத்திலே அனுமதிக்கப்பட்ட ஒன்று. திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் பல தடவைகள், பல தலைவர்களுக்கு—மத்திய அரசாங் கத்திலே இருந்து வந்த கட்சிகளுக்குக் கருப்புக் கொடி நிகழ்ச்சிகளை நடத்தி இருக்கிறது. கருப்புக் கொடி நிகழ்ச்சி நடத்துவது என்றாலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே, ஒரு குறிப்பிட்ட பேர்களுடைய தலைமையிலே கருப்புக் கொடி காட்டப்படும் என்று அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் குறித்துத் தருகின்ற இடத்திலே அமைதி யான முறையிலே கருப்புக் கொடி காட்ட அழைக்கப்பட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அந்த வகையிலேதான் கருப்புக் கொடி காட்டப்பட வேண்டும் என்பதை இன்றைக்கும நான் மறுக்க வில்லை.

ஆனால், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே இருந்து கொடி காட்ட முன்வந்த மாணவர்கள் தாங்கள் கருப்புக் கொடி காட்டப் போகிறோம் என்று ஏற்கனவே தெரிவிக்கவும் இல்லை, அவர்கள் இன்னின்னார் கருப்புக்கொடி காட்டப் போகிறோம், இன்னார் தலைமையிலே காட்டப் போகிறோம் என்றும் அறிவிக்கவில்லை. அதற்கான ஒரு இடத்தை எங்களுக்கு ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்கவுமில்லை. 23-ம் தேதி அன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவுக்கு நான் செல்லுகிறேன் என்றால், 22-ம் தேதி இரவுதான் ஒரு துண்டு அறிக்கையை வெளியிட்டு "நாடோடிப்





பாட்டு பாடித் திரிந்த ஒருவனுக்குப் பட்டமா" என்ற ஒரு கேள்வியை அவர்கள் அதிலே விடுத்தார்கள். அதற்காக நான் வருத்தப்படவில்லை.

நாடோடியாக இருந்த நாங்கள் நாடாள வந்திருக்கின்ற நேரத்தில் "நாடோடிப் பாட்டு பாடிய ஒருவனுக்குப் பட்டமா" என்றால், அது என்னைப் புண்படுத்துவது ஆகாது; எனக்குப் பட்டம் அளித்தவர்களைப் புண்படுத்துவதுதான். நான் உத்தமர் மகாத்மா காந்தி அடிகளைப்பற்றி கவிதைகள் எழுதி இருக்கிறேன்; மறைந்த மாபெரும் மேதை பண்டித நேருவைப் பற்றி கவிதைகள் எழுதி இருக்கிறேன்; மறைந்த கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் அவர்களைப்பற்றி கவிதைகள் எழுதி இருக்கிறேன்; தாழ்ந்து கிடக் கின்ற சமுதாயம் முன்னேற வேண்டும் என்று நான் கவிதைகள் எழுதி இருக்கிறேன்.

இப்படிப்பட்ட நாடோடிப் பாடல் பாடிய ஒருவனுக்கு ஒரு பட்டம் அளிப்பதா, ஒரு டாக்டர் பட்டம் அளிப்பதா என்ற கேள்வியோடு இல்லாமல், பிறகு காவிரி நீர்ப் பிரச்சினையில் சட்ட மன்றத்திலே பேசும் பொழுது "ஹேமாவதி அணை கட்டினால் என்ன, நமக்குத் தண்ணீர்தான் வரவேண்டும்" என்று சொன்னவர்தான் இந்த பொதுப்பணித் துறை அமைச்சர், ஆகவே, அவருக்குக் கருப்புக் கொடி காட்டவேண்டும், என்று போட்டிருக்கிறார்கள்.

இந்தச் சட்ட மன்றத்திலே இருந்த அனைத்துக் கட்சித் தலைவர் களுக்கும் தெரியும், ஹேமாவதி அணை கட்டினால் என்ன என்று நான் கேட்டதில்லை. ஹேமாவதி அணையோ மற்ற அணைகளோ கட்டப் பட்டு, எங்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காமல் செய்யக் கூடாது, எங்களுடைய உரிமைகள் பறிக்கப்படக் கூடாது என்பதைத்தான் பலமுறை நான் இந்த மன்றத்திலே பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபொழுதும் முதலமைச்சராக வந்த பொழுதும் வலியுறுத்தி வருகிறேன். அதைப் பாராட்டி காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் எல்லாம் இந்த மன்றத்திலே பேசியிருக் கிறார்கள். மேலவையிலேயும் அப்படியே பேசியிருக்கிறார்கள். ஆகவே, இப்படித் தவறான விஷயங்களை மாணவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, நான் மைசூர் அணை கட்ட ஆதரவாக இருக்கிறேன் என்று "மாணவர் காங்கிரஸ், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்" என்கின்ற பெயரால் ஒரு துண்டுப் பிரசுரத்தையும், "இந்திய மாணவர் சங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்" என்ற பெயராலே இன்னொரு துண்டுப் பிரசுரத்தையும் ஒட்டியிருக்கிறார்கள். பதினன்கு சோஷலிச நாடுகளைத் தவிர, உலகில் உள்ள எந்த முதலாளித்துவ நாடுகளிலேயும் மக்களுக்கு வேலை அளிக்க முடியாது. அமெரிக்காவில் 43 லட்சம் பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சோஷலிசத்தினால் மட்டுமே வேலையின்மையை ஒழிக்க முடியும். நமது நாட்டிலேயும் அபபடிப்பட்ட கொள்கை—ஏகபோக முதலாளித்துவ நாடுகளுக்குத் துதி பாடும் கொள்கை—வளர வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அப்படிப்பட்ட "இந்திய மாணவர் சங்கத்தின்" பெயரால் இன்னொரு துண்டு அறிக்கையும் முதல் நாள் வெளியிடப்பட்டிருக்கிறது. மறு நாள் காலையிலே

கருப்புக் கொடி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்பொழுதும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சென்று, நீங்கள் கருப்புக் கொடி காட்டுவதிலே ஆட்சேபணை இல்லை, உங்களுக்கு ஒரு இடம் ஒதுக்குகிறோம் அங்கே நின்று காட்டுங்கள் என்றதும், அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

இந்தப் படத்தை நீங்கள் பார்த்தால் தெரியும், என்னுடைய காரும் கவர்னர் பெருமான் அவர்கள் காரும் செல்லும் பாதையின் நடுவே அவர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கருப்புக் கொடி காட்ட வந்தவர்களுக்கும் போலீஸ் துறையினர் தகுந்த பாதுகாப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்த மாணவர்களைச் சுற்றி போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்திருக்கிறது. கவர்னர் காரும், என்னுடைய காரும் பட்டமளிப்பு மண்டபத்திற்குச் செல்லுவதற்கு முன்பாகவே. அந்தப் பட்டமளிப்பு மண்டபத்திற்குச் சென்று கொண்டிருந்த எம்.எல்.ஏ.-க்கள், நகர சபையின் தலைவர்கள் இவர்களுடைய கார்கள் எல்லாம் சென்ற வழியில் அந்த மாணவர்கள் அவர்களுடைய கார்களைச் சுற்றி வளைத்துக் கொண்டும், கற்களை அவைகளின்மீது எறிந்தும், அங்கிருந்த போலீசாரைக் காயப் படுத்தியும் இருக்கிறார்கள். இப்படிப் பல நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன.

பல்கலைக்கழக மண்டபத்திலே பட்டம் வாங்க வந்தவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று இங்கே சொல்லப்பட்டது. இந்த ஆண்டு அதிகமான தொகையினர் பட்டம் வாங்க அந்த மண்டபத்திலே வந்து அமர்ந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 600, 700 பேர் பட்டம் வாங்கினார்கள் என்றால், இந்த ஆண்டு அநேகமாக 800 லிருந்து 900 பேர் வரை பட்டம் வாங்க வந்திருந்தார்கள் என்று அங்கே கணக்கிட்டுச் சொன்னார்கள்.

அது மட்டுமில்லாமல் பட்டமளிப்பு மண்டபத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்த போலீசார் அவர்களைத் தடுத்ததாகச் சொல்லுகிறார்கள். கான்வகேஷன் ஹாலுக்கு முன்னால் நின்று கொண்டு, பெற்றவர்களையும், பட்டம் வாங்கும் பிள்ளைகளையும் பார்த்து, உள்ளே அனுமதித்துக் கொண்டிருந்தார்கள் அலுவலர்கள். ஆங்காங்கே இருந்த அலுவலர்களைத் தவிர, போலீசார் அந்த இடத்திலே இல்லை. தாங்களே உள்ளே நுழைய வேண்டும் என்று சொன்னார்கள் கருப்புக் கொடி காட்டியவர்கள். அப்பொழுது பல்கலைக்கழக மண்டபத்திற்குள்ளே நுழைய வேண்டும் என்று துடித்தார்கள்.

கடந்த ஆண்டு மத்திய அமைச்சர் திரு சந்திரசேகரன் அவர்கள் பட்டமளிப்பு விழா நடத்தச் சென்றிருந்தபொழுது இப்படி பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொள்ளாத மாணவர்கள் அனுமதிக்கப் பட்டதால், அவர் பேச முடியாத நிலைமை ஏற்பட்டு, கூச்சலும், குழப்பமும் எழுப்பப்பட்டு, ஆகாயக் கப்பல் விடுவது போன்றவை நடைபெற்று, அவர் பேச முடியாமல் திணறினார்கள் என்றும், ஆகவே தான் "ஜூனியர் ஸ்டுடென்ட்ஸ்"—பட்டமளிப்பு சம்பந்தமாக இல்லாத மாணவர்களை அனுமதிக்க வேண்டாம் என்று தடுத்திருக்கிறார்கள், நிர்வாகத்தினர்.



அந்த விழா மண்டபத்திலே காலையிலே எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை. பட்டமளிப்புக்கு வந்த மாணவர்கள் தங்கள் பட்டங்களைப் பெற்றதோடு, இந்த விழாவினுக்கு தகுதி அற்றவனுக்கு, பொருத்தம் இல்லாதவனுக்கு, ஜாதியிலே கேடாக இருப்பவனுக்கு பட்டம் அளிப்பதை அங்கிருந்த மாணவர்கள் தாங்கிக் கொண்டதோடு அல்லாமல், என்னை வரவேற்று கை ஒலியிட்டு அவர்களுடைய அந்த மகிழ்ச்சியை அங்கே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பட்டமளிப்பு மண்டபத்திலே எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

மாலையிலே எதற்காக நடைபெற வேண்டும் என்று கேட்டார்கள். மாலையிலேயும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குள்ளே கவர்னர் பெருமானுக்கும், எனக்கும் ஒரு நிகழ்ச்சி இருந்தது. பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், கவர்னர் பெருமான் அவர்களோடு நான் "ஆராய்ச்சி மேடுதிட்டு" அடிக்கல் நாட்டி வைக்க வேண்டுமென்று அழைக்கப்பட்டிருந்தேன். 4 மணிக்குச் செல்ல வேண்டும். அதற்கிடையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனக்குப் பல்கலைக்கழகத்திற்குள்ளே வரவேற்பு கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்து, அதன் தலைவர்கள் எல்லாம் என்னை அதற்கு ஒத்துக்கொள்ளச் சொல்ல, அவர்கள் அந்த வரவேற்பை அப்படிக் கொடுக்க வேண்டாமென்று நான் சொல்லிவிட்டேன். அவர்கள் அந்த வரவேற்பை இரவு பொதுக் கூட்டத்திலேதான் கொண்டு வந்து வைத்தார்கள். அந்த அளவுக்கு நிலைமைகள் சுமுகமாக இருக்க வேண்டும் என்று முயற்சிகள் எடுத்துக் கொண்டோம்.

ஆனால், நான் மாலையிலே செல்லும்பொழுது மீண்டும் என்னுடைய கார் போகின்ற வழியிலே நின்று கொண்டு கல்வீச்சிலே ஈடுபட்டு 40-க்கு மேற்பட்ட போலீசாருக்கு காயம் ஏற்படும் நிலைமை வந்த பிறகுதான் அவர்களைத் தடியால் கூட அல்ல, பிரம்பால்தான் போலீசார் அடித்திருக்கிறார்கள். லேசான காயங்கள் நான் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மாணவர்கள்தான் ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பயங்கரமான அல்லது கவலைக்கிடமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதற்கிடையிலே 24-ம் தேதி காலையிலே 10 அல்லது 11 மணிக்குக் கிடைத்த தகவலின்படி ஒரு வாலிபர் பிணம் பல்கலைக் கழகத்திலே உள்ள ஒரு ஆழமான குளத்திலே மிதப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தப் பிணத்தைப் பெற இயலாது என்ற நக்சலைட்டு இயக்கத்தைச் சேர்ந்த 2, 3 மாணவர்களின் தலைமையில் கூடிக்கொண்டு போலீசாரை அந்தப் பிணத்தை எடுக்க ஒட்டாமல் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிறகு போலீஸாரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் அவர் மு.ப.
களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவிற்கு வந்தார்கள். 11 3
மாணவர்கள் இரண்டு நிபந்தனைகளைக் கொடுத்தார்கள். ஒன்று, அந்தப் பிணத்தைப் பிரேத பரிசோதனை செய்யப்படும் நேரத்தில், மாணவர்கள் மூன்று பேர், நான்கு பேர் அனுமதிக்கப்பட வேண்டும். அதோடு அந்நேரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக டாக்டரும் உடன் இருக்கவேண்டும். இந்த நிபந்தனைகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனைகளும் போலீசாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு

பிறகு கடலூர் மருத்துவ மனைக்குப் பிணம் கொண்டுவரப் பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் யாருமே, இப்பிணம் இன்னாருடையது, தங்களைச் சேர்ந்த சக மாணவருடையது என்று அடையாளம் காண்பிக்கவில்லை. அங்குள்ள பேராசிரியர் களில் யாரும் இப்பிணம் இந்த மாணவருடையது என்று கூறவில்லை.

இதற்குப் பிறகும் மாணவர்களுடைய நிபந்தனைக்கு உட்பட்டு பேராசிரியர் ஒருவரும், மாணவர்கள் மூன்று பேரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக டாக்டரும் கூட இருந்துகொண்டு, கடலூரில் மருத்துவ மனையில் மாவட்ட மருத்துவ அதிகாரியான டி.எம்.ஓ.-வினால் பிரேதப் பரிசோதனை செய்யப்படுகிறது. அம்மருத்துவ அதிகாரி குறிப்பிட்டார், "பத்து அல்லது பதினைந்து மணி நேரத்திற்கு முன்பு உயிர் இழந்திருக்க வேண்டும்" என்று. அதாவது 23-ம் தேதி இரவு பத்து அல்லது பத்தரை மணிக்கு உயிர் இழந்திருக்கலாம் என்று. அவர் மேலும் குறிப்பிட்டார், "அப்பிணத்தில் உள்காயமும் இல்லை, வெளிக்காயமும் இல்லை" என்று டாக்டர் அவர்கள் கூறியிருக் கிறார்கள். இவ்வளவையும் மாணவர்களுடைய நிபந்தனைக்குட்பட்டு, மாணவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக டாக்டரை வைத்துக்கொண்டு, ஒரு பேராசிரியரை வைத்துக்கொண்டு செய்யப்பட்ட பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு முடிவு அறிவிக்கப் பட்டது.

இவ்வளவுக்குப் பிறகும், இதை எப்படியாவது பெரிதுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள், அன்றையதினம் நாலா புறமும் எப்படிப்பட்ட செய்திகளை அனுப்பினார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த நேரத்திலே, யார் யார் கடலூரிலே முகாமிட்டிருந் தார்கள், யார் யார் எங்கெங்கே அனுப்பப்பட்டார்கள், எந்த அளவிற்கு இதை ஒரு அரசியல் பிரச்சனையாக ஆக்க வேண்டும் என்பதற்காக யார் யார் முயற்சி எடுத்துக்கொண்டார்கள், எப்படிப் பட்ட முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

மாணவர்களுடைய போராட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், மாணவர்களுக்காக இன்றைய தினம் நெக்குருகப் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது உள்ளபடியே எனக்குச் சற்று வியப்பாகத்தான் இருந்தது. அவர்கள் இப்போது ஏற்பட்டு விட்ட துக்கத்திற்காக வருந்துவதில் மறுப்புத் தெரிவிக்க வில்லை. இதேபோல நானும் சரியாகவோ தவறாகவோ எங்கே யாவது மாணவர் மீது ஒரு அடி விழுந்தாலும் அது என்மேலே விழும் அடியென்றே கருதுகின்றேன். இதைப் பன்முறை இம்மாமன்றத்தில் சொல்லியிருக்கின்றேன்.

ஆனால், இங்கே இவற்றைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள், "இது வரலாறு காணாத நிகழ்ச்சி, இது வரலாறு காணாத நிகழ்ச்சி" என்று. நான் அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன், தமிழகத்திலே வரலாறு என்பதே 1967-ம் ஆண்டிற்குப்பின்புதான் உருவாயிற்றா? அதற்கு முன்பு தமிழகத்திற்கு வரலாறே இல்லையா?



அவையின் கவனத்தைச் சற்றுப் பின்னால் இழுக்கின்றேன். 1965-ம் ஆண்டிலே என்னை பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் கட்டிப் போட்டுவிட்டு, தமிழ் நாட்டிலே நாற்பத்தாறு இடங்களிலே துப்பாக்கிப் பிரயோகம் செய்து மாணவர்களின் நெஞ்சங்களைப் பிளந்தார்களே, அது வரலாறு அல்லவா? "வரலாறு காணாத, வரலாறு காணாத" என்று சொல்லும்போது வார்த்தைகள் அலங்கார மாகத்தான் இருக்கின்றன. ஆனால் அவற்றில் உண்மை சிறிதேனும் இருக்க வேண்டாமா? உண்மைக்குச் சிறிதாவது அவற்றில் சம்பந்தம் இருக்க வேண்டாமா? வரலாறு காணா சம்பவம் என்று சொல்லப்படும் இதிலே நடந்ததெல்லாம், ஒரே ஒரு முறை தடியடிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. இதிலே இறந்துபோனவர் என்று சொல்லப்படும் நபர் குளத்தில் விழுந்த ஒரு பிணம். இது யாருடைய பிணம் என்று இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. மாணவர் அல்ல என்றுதான் இதுவரையில் அடையாளம் காட்டியவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களில் யாரும், இறந்தவர் மாணவர் என்று சொல்லவில்லை.

இவ்வளவுக்கும் பிறகு நேற்று வரையில் பிணத்தை வைத்திருந்து பிறகு புதைத்திருக்கின்றார்கள், துர்நாற்றம் அதிகமாக வீசத் தொடங்கி விட்டது என்ற காரணத்தினால். போட்டோக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். பிணம் அழுகத் தொடங்கிவிட்டது, மூளை அழுகத்தொடங்கிவிட்டது என்று மாவட்ட மருத்துவ அதிகாரி யான டி.எம்.ஓ. குறிப்பிட்டதன் பேரிலே பிரேதத்தைப் புதைத்திருக் கின்றார்கள். இதற்குப் பிறகு பத்திரிகையொன்றில் தவறான செய்தி வந்தது, "சுதேசமித்திரன்" பத்திரிகையில். அதில் இறந்தவர் மாணவர் ஒருவர் என்றும், கடலூர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு பிறகு இறந்துவிட்டார் என்றும் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந் தார்கள். பின்னர் அவர்களே உண்மையைப் புரிந்துகொண்டு இன்று காலைப் பத்திரிகையான "தினத்தந்தி" பத்திரிகையில் தாங்கள் கொடுத்த தவறான செய்தியால் மாணவர்களிடையே பதட்டம் ஏற் பட்டுவிடுமோ என்று கருதி அச்செய்தி தவறானது என்று "சுதேச மித்திரன்" சார்பிலே ஒரு அறிவிப்பைக் கொடுத்திருந்தார்கள். அப்படிப்பட்ட பத்திரிகைத் தர்மத்தை உள்ளபடியே பாராட்டு கின்றேன்.

நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மிக அழகாகச் சொன்னார் கள், "இச்சம்பவத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் நடத்து கிறதையோ அல்லது வன்முறைகளை ஊக்குவிப்பதையோ விரும்ப வில்லை" என்று. இதே முறையில்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலே 1965-ஆம் ஆண்டிலே நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே இந்தி எதிர்ப்பிலே எங்களுக்கு அக்கறையும் ஆர்வமும் அதிகம் இருந்தாலும், கிளர்ச்சி நடைபெற வேண்டும் என்பதில் எங்களுக்கு அதிக ஆர்வம் இருந்தாலும்—அந்த நேரத்தில் ஆளும் கட்சியினர் சிலர் கூட இந்தப் போராட்டத்திற்கு அனுசரணையாக இருந்தார்கள் என்பதை இப்போது கூட அவர் களுடைய புன்சிரிப்பின் மூலமாக அறிந்துகொள்ளுகிறேன் என்றாலும் கூட—அந்த நேரத்தில்கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் என்ன

அறிக்கையை விடுத்தார்கள், "போராட்டத்தில் எந்தவிதமான வன்முறையும் இருக்கக்கூடாது, வன்முறை வேண்டாம்" என்று திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்கள்.

இன்றைக்கு இம்மன்றத்தின் தலைவராக வீற்றிருப்பவர் அன்றைக்கு இம்மன்றத்தில் பேசும்போது சொன்னார்கள், "இவ்வளவு அறிக்கைகளுக்குப் பிறகும் மாணவர்கள் வன்முறையில் ஈடுபடுவார்களேயானால், நாங்கள் அவர்களை இந்த நாட்டிற்கு நண்பர்களாக ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று, அந்த அளவிற்கு வன்முறையை அறவே ஒதுக்கிடவேண்டும் என்று அன்றைக்குச் சொல்லப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தினரால்.

எனவே இப்போது நடைபெற்ற சம்பவத்தில் யார் யார் கலந்துகொண்டார்கள், அது எத்தன்மை வாய்ந்தது, அதில் நக்ஸலைட்கள் கலந்துகொண்டிருக்கின்றார்களா என்றெல்லாம் ஒரு சிறிதுகூடக் கவலைப்படாமல் பிரச்சனைகளை அணுகுமுறை நாம் [illegible]களுக்கு விந்திட்டவர்களாவோம் என்று விளக்கத்தைச் சொல்லிக்கொண்டு, [illegible]கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்று தெரிவித்துக் கொண்டு, இதுபற்றித் தீர்மானம் கொணர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்கு மேலும் இதை வற்புறுத்த மாட்டார்கள் என்ற எண்ணத்தைச் சொல்லிக்கொள்ளுவதோடு, இச்சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை ஒன்று நடத்தப்பட இருக்கிறது, எனவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று எடுத்துக்காட்டி அமருகின்றேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Sir, on a point of clarification. The body was in the hospital and the post-mortem was done. It is true that there is no injury on the body. Still there is a possibility of the person having been chased and having accidentally fallen. Has this particular aspect of the matter been investigated ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பிரேதத்தின் வயிற்றிலிருந்த ஜீரணமான பொருள்கள் எல்லாம் எடுத்து சேகரிக்கப்பட்டு ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. 24-ஆம் தேதி மாலை 5 மணிக்குச் சொல்லப்பட்டது, சுமார் 16 அல்லது 18 மணி நேரத்திற்கு முன்பு இறந்திருக்க வேண்டும் என்று. அதாவது 23-ம் தேதி இரவு 10-30 மணிக்குத்தான் மூழ்கி இறந்திருக்க வேண்டும். அது தற்கொலை செய்து கொள்வதற்காக மூழ்கி இறந்ததா அல்லது டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது போல ஓடும்போது தவறி விழுந்திருக்கலாமா என்பதையெல்லாம் இப்போது அனுமானிக்க முடியாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வெகு வேகமாக விளக்கம் சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் "நான் தாழ்ந்த ஜாதி" என்று குறிப்பிட்டார்கள். அது சரியில்லை. யாரும் அப்படி நினைக்கவில்லை. தயவு செய்து அதை நடைமுறைக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, நானே ஏற்றுக்கொண்டிருக்கும்போது அவற்றை நீக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகும், இந்த சம்பவம் குறித்து ஒரு உயர் நீதிமன்ற நீதிபதியைக்கொண்டு விசாரணைக்கு ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் அறிவித்திருப்பதையொட்டியும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகின்றேன். எனவே இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

THIRU R. PONNAPPA NADAR: Sir, as a protest against police excesses and as no useful purpose would be served by the enquiry without the transfer of the officials connected with these incidents, we are staging a walk-out.

(Then the Members belonging to the Congress (O) Party staged a walk-out.)

## (3) கவன ஈர்ப்பு.

திருச்சிராப்பள்ளி—பொன்மலை இரயில்வே பணிக்களரியிலுள்ள இரயில்வே சரக்குப்பெட்டிக் கட்டுமானப் பிரிவு மூடப்படுவது குறித்தும் தொழிலாளர்கள் பாதிப்பு குறித்தும்.

திரு. கு. காமாட்சி: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

தற்போது திருச்சி-பொன்மலையில் உள்ள இரயில்வே தொழிற்சாலையில் இரயில்வேயின் வாகன உற்பத்தி செய்யும் பிரிவினை இழுத்து மூடிவிட்டு, [illegible] ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்க இரயில்வே நிர்வாகம் நிர்மானித்து நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதால். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, குந்தகமும் ஏற்பட்டிருப்பதுடன் தமிழக மக்களுக்கு வேலை கிடைப்பதும், மேலும் இந்தத் தொழிற்சாலையில் தற்சமயம் வேலை செய்யும் சுமார் 1,500 தொழிலாளர்கள் பதவி உயர்வு, ஊதிய உயர்வு ஆகியவைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி—பொன்மலை இரயில்வே பணிக்களரியில் உள்ள இரயில்வே சரக்குப் பெட்டிக் கட்டுமானப் பிரிவைப் படிப்படியாக மூடிவிடுவது என்றும், அமர்தசரசில் உள்ள தனியார்த் துறைப் பிரிவு ஒன்றுக்கு கட்டுமானப் பணியை ஒப்படைப்பது என்றும் இரயில்வே அமைச்சகம் கருதியுள்ளது குறித்தும், அதன் விளைவாக, இப்பிரிவில் தற்போது பணிபுரியும் தொழிலாளர்களின் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை பாதிக்கப்படுவதோடு, பல தொழிலாளர்கள்

வேலை வாய்ப்பு வசதிகளை இழக்க நேரிடுவது குறித்தும் எழுந்துள்ள துயர சூழ்நிலை குறித்தும் விவாதிக்க என திரு. காமாட்சி அவர்கள் கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்துள்ளார்.

கடந்த ஜூன் திங்கள் திரு. எம் கல்யாணசுந்தரம், எம்.பி., முதல் அமைச்சரிடம் கீழ்க்கண்டவாறு முறையிட்டார்.

"பொன்மலையிலுள்ள இரயில்வே சரக்குப்பெட்டிக் கட்டுமானப் பிரிவைப் படிப்படியாக மூடிவிடுவது என்று இரயில்வே அமைச்சகம் தீர்மானித்துள்ளது. பொன்மலை இரயில்வே சரக்குப் பெட்டிக் கட்டுமானப் பிரிவுக்குக் கொடுக்கப்படும் பணி ஆணைகள் 1,000 பெட்டிகளிலிருந்து 750 பெட்டிகளாகக் குறைக்கப்பட்டன."

தேவையான சரக்குப் பெட்டிகளை, ஏகபோகமாகத் தயாரிக்கும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வாங்குவது என்று இரயில்வே துறை நிர்மானித்துள்ளது என்றும் இரயில்வே பணிக்களரிகளில் சரக்குப் பெட்டிக் கட்டுமானம் 1961-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும், ஆகவே, இத்துறையில் ரெயில்வே பணிக்களரிகள் ஆதாயம் தரத்தக்க வகையில் செயல்பட்டுப் போற்றத்தகு பணி செய்து வருகின்றன என்றும் கூறப்பட்டது. இந்த பணிக்களரியில் உள்ள தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு, பதவி உயர்வுக்கான வசதிகள் ஆகியவை இரயில்வே அமைச்சகத்தின் இந்த முடிவால் அதிக அளவில் குறைக்கப்பட்டுவிடும் என்று கவலையேற்படுவதாகவும், திரு. எம். கல்யாணசுந்தரம், எம்.பி., முதல் அமைச்சரிடம் முறையிட்டார்.

திரு. எம். கல்யாணசுந்தரம், எம்.பி., தெரிவித்தது போன்ற செயற்குறிப்பு ஏதுமிருக்கிறதா என்றும், அதுபோன்ற செயற்குறிப்பு இருந்தால் இந்த நடவடிக்கையால் 1,500 தொழிலாளர்கள் வேலை இழக்கக் கூடிய துயர விளைவுகள் நேரிடும் என்றும், வங்கிகள், ஈட்டுறுதி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவை நாட்டுடைமையாக்கப்படுவது குறித்து வலியுறுத்தப்படும் இந்நாளில் புகழும், உறுதிநிலையும் பெற்ற அரசுப் பணிக்களரி ஒன்று மூடப்படுவது துரதிர்ஷ்டமானதாகும் என்றும், 1—7—1971-ஆம் நாள் இந்திய இரயில்வே அமைச்சருக்குப் பொதுப்பணித் துறை அமைச்சர் எழுதியுள்ளார். அவருடைய பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

## (4) அமைச்சரின் அறிக்கை.

### ஐ.ஆர். 8 நெல் வகைப்படுத்தப்பட்டிருப்பது குறித்து அளித்த விடையைச் சரி செய்து உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மிகு பயன் தரும் நெல் வகைகளைப் பயிரிட உழவர் பெருமக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஐ. ஆர். 8 போன்ற நெல் வகைகள் "நேர்த்தியானவை" யென வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று 6—7—1971 அன்று நெல் கொள்முதல் விலை குறித்த 140-ஆம் எண் வினாவிற்கு விடையளிக்கையில் நான் கூறினேன். மிகு பயன் தரும் நெல் வகைகள் அனைத்தும் நேர்த்தி



யானவை என்று வகைப்படுத்தப்படவில்லை. ஆடுதுறை 27 நெல் வகை "நேர்த்தியானது" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.ஆர். 8 நெல் ரகம் நடுத்தரமானது என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. மிகு பயன் தரக்கூடிய நெல் வகைகள் அனைத்துக்கும், அவை நேர்த்தியானவை என்று வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் சரி, நடுத்தரமானவை என்று வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் சரி, அவற்றிற்காகக் கொடுக்கப்படும் கொள்முதல் விலைக்குமேல் ரூபாய் 1 ஊக்கத் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. நேர்த்தியான, நடுத்தரமான, மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் கொள்முதல் விலைகள் முறையே குவிண்டால் ஒன்றுக்கு 51 ரூபாய், 48 ரூபாய், 46 ரூபாய் ஆகும். நெல்லை நேர்த்தியான ரகம், நடுத்தர ரகம், மோட்டா ரகம் என்று வகைப்படுத்துவது, பொதுவாக நெல்லின் நீளம், நீள-அகல வீதாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய அரசின் இசைவு பெற்றுச் செய்யப்படுகிறது.

## (5) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்பு சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1971).

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Speaker, Sir, I have the honour to present the Report* of the Joint Select Committee on the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971).

## (6) அறிக்கை அளித்தல்.

1967–68-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு கணக்குகளின் மீதான பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Tamil Nadu for the year 1967-68.

## (7) 1971–72-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

### கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்—"கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன் நிதி என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,00,42,200-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" எனக் கோருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மதம் மாறிய அரிசனங்களுக்கும், அரிசனங்களுக்கு அளிக்கும் எல்லாச் சலுகைகளையும் வழங்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க :

* Published in the Tamil Nadu Gazette Extraordinary, dated 26th July 1971.

[திரு. ஜே. ஜேம்ஸ்]

[1971 ஜூலை 26

I move—

'That the allotment of Rs. 7,00,42,200 under Demand No. 25—Welfare of the Schedule Tribes, and Castes be reduced by Rs. 100.'

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமைக் காரணமாக அரிசனங்களைக் கொடுமைப்படுத்துவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க:

I move—

"That the allotment of Rs. 7,00,42,200 under Demand No. 25—Welfare of the Scheduled Tribes, and Castes be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனத் தெருக்களுக்கு அரசினர் பொறுப்பில் மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுப்பது குறித்து விவாதிக்க:

"நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பில் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,00,42,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்குத் தொழில் வசதிகளையும், வீட்டு வசதிகளையும் மேம்படுத்த அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்பது பற்றி விவாதிக்க:

"நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பில் ஒதுக்கப்படுகின்ற ரூ. 7,00,42,200-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்கிற என்னுடைய வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வருகின்றன. இதில் கலந்து கொண்டு பேச மாண்புமிகு உறுப்பினர்கள் 20 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மணி 11¾ ஆகிறது. இரண்டு மணி நேரம் இருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும் ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடங்களுக்கு மேல் போகாமல் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முற்பட்டால் சபை நடவடிக்கைகளைக் குறித்தபடி நடத்தி முடிக்கலாம். ஒதுக்கப்பட்ட தொகுதி உறுப்பினர்கள்—பேசப் பெயர் கொடுத்திருக்கிறவர்கள் அனைவரும் பேச வேண்டியது முக்கியம் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: நிறையப் பேர் பேச வேண்டியிருப்பதால் சபையை மத்தியானமும் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.



1971 ஜூலை 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மத்தியானம் வைத்துக்கொள்வது பற்றி ஆட்சேபணை இல்லை. மத்தியானம் வைத்தாலும் யாரும் வருவதில்லை. பார்ட்டி வேறு இன்று இருக்கிறது. 50 நிமிடத்தில் சொல்லக்கூடிய கருத்தை 5 நிமிடத்திலும் சொல்லலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தக் கோரிக்கைக்காக நாம் ஒரு நாள் ஒதுக்கினோம். ஆனால் இன்றைய தினம் இப்போதே மணி 12 ஆகப்போகிறது. இதற்காக இரண்டரை மணி, 3 மணியாவது இருந்தால் முடித்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் ஐந்து நிமிடத்திற்கு மேல் போகாமல் விவாதம் நடந்துகொண்டே போனால் கூட முடித்துவிடலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் இதற்காக 3 மணி நேரம் ஒதுக்குவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை இரண்டு பேர்கள்தான் பெயர் கொடுத்திருக்கிறார்கள். திரு. கே. எம். எஸ். ஒருவரும், திருமதி அம்மையார் அவர்களும்தான். ஆகவே இவர்கள் வேண்டுமானால் பத்து நிமிடங்கள் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் இந்த மானியக் கோரிக்கை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதைச் சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்பில் பதிவு செய்யுமாறு ஆணையிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, with the limited time available, I am going to speak on only two points relating to my constituency. One relates to the most backward Harijans among the Harijans and the second relates to dhobis who are not included in the Scheduled Castes. Many industrial developments are taking place in this country which will deprive the Harijans of their normal traditional work. For example, they are very good basket-makers but now basket making is dying out and many Harijans have become unemployed because of the new basket and other things that are produced by the various industries.

Also in my constituency there are many cobblers who have been driven out of their business by the big shoe industries. The only thing that is left to the cobblers is repairs and that too crude repairs. Now, even these repairs are attended by the big shoe industries. Consequently many cobblers are suffering. Of course, the Government are giving loans to them but what is really happening? They are not able to utilise the loans and start their work immediately.

@ 125-141-ம் பக்கங்களில் 4-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது

[Thiru K. M. Subramaniam] [1971 ஜுலை 26

Now, the Harijan is included in the list on the basis of untouchability.

So far as dhobies are concerned, I know they are included as Scheduled Castes in Delhi, Nagaland, Madhya Pradesh and Uttar Pradesh and even in Kerala. Even in Nagercoil, which is now part and parcel of Tamil Nadu, they are included as Scheduled Castes. But for the last 17 years, dhobies in Tamil Nadu have been clamouring for their inclusion in scheduled caste list but unfortunately we are told by the Central Government that they cannot be included in the scheduled caste list unless and untill the Tamil Nadu Government recommends that they be included, in the Scheduled Caste list. They have made representation and again and again appealed to Government. The All India Rashtriya Dhobi Mahasang, held a conference and have once again requested that they should be included in Scheduled Caste list.

In spite of their backwardness, today, because of mechanised washing from ......

MR. SPEAKER: Dhobikanas.

THIRU K. M. SUBRAMANIAM: Dhobies are suffering from mechanical laundries and dry cleaners. The dry cleaners charge Rs. 1.50 per shirt whereas dhobies charge Rs. 4 per 100. What is happening because of these dry cleaners coming up? The dhobies are becoming economically backward and more backward because of mechanised washing. Government is not having the interest of dhobies in heart. They should be given all encouragement.

Unfortunately unless they belong to a particular party and get themselves admitted into the society, they are not given utensils. Take soda for example. It is sold in blackmarket at a huge price, more than 100 per cent of its price fixed. What is happening ? Do you know? If they belong to a co-operative society, they would be given that. But dhobies in Saidapet (I am elected from T. Nagar constituency and part of Saidapet comes under my constituency) are suffering. Only if they belong to a particular political party they could become members of Co-operative Society and get the soda. Why should Government want to give it only to co-operatives? In co-operatives politics plays a prominent part. Middlemen come in and get the benefit and not actual workers. So what I say is, why not Government start a co-operative mechanised washing unit, so that the present competition from private dry cleaners could be met and dhobies also saved to a considerable extent. This has now become a mechanised industry.

There is a housing co-operative society of washermen in Saidapet. But they have not been provided with loan for houses and no houses had been built for dhobies. Let the Hon. Minister see that this is accelerated and dhobies are provided with sufficient funds to build houses.



1971 ஜுலை 26] [Thiru K. M. Subramaniam]

I am very sorry to point out that a dhobikana constructed in 1954 is lying unused. Snakes are coming inside; instead of human beings, snakes are coming and they are washing themselves. I appeal to the Hon. Lady Minister to see for herself what is happening in the Dhobikana at Saidapet and what a difficulty the dhobies have to face from organised mechanical institutions like dry cleaners. The Government should come to the rescue of dhobies.

Today the problem of Harijan uplift is beset with competition from all sides. Are the poor Harijans able to weave their baskets ? So many shops are offering plastic buckets free for this or that purchase. ......

(At this stage, the Speaker sounded the gong and called upon Thiru J. S. Raju to speak).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

* திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிற அரிசன நலத்துறை மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அறிக்கையின் கடைசி பாராவில் குறிக்கப்பட்டுள்ளதைப் போல், ஏற்கெனவே உள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் நல்ல பயனுள்ள புதிய திட்டங்களைத் துவக்கி, அரிசன முன்னேற்றத்தை விரைவுபடுத்தி, ஓர் ஒருங்கிணைந்த சமதர்ம சமுதாயம் இந்த நாட்டில் ஏற்பட்டு, "தாழ்ந்தவரென்பர் இனி இங்கில்லை" என்ற இலட்சியத்தை வைத்துத் தயாரித்திருக்கிற அறிக்கையை நான் மனதார வரவேற்கிறேன்.

மேலும், இந்தத் துறையின் சார்பாக 1967-க்குப் பிறகு இன்று வரை அமைச்சராகப் பணியாற்றி வருகின்ற மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எங்களுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1967-க்குப் பிறகு அமைந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஜாதி, சமய வேறுபாடுகள் இல்லாமல், நல்ல சட்ட அமைப்பு கொண்டு, நல்லதொரு சமுதாயத்தைத் தமிழ்நாட்டில் உருவாக்க வேண்டுமென்று பாடுபட்டு வருவதை நாம் எல்லாம் அறிவோம். தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் சமர்ப்பிக்கக்கூடிய நேரத்தில் எல்லாம், ஒவ்வொரு மானியமும் நிறைவேற்றப்படும் காலத்தில் எல்லாம், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்குப் புதிய சலுகைகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்கிற நம்பிக்கை இந்த மன்றத்தின் உள்ளே இருக்கிற எங்களுக்கு இருக்கிறது; எங்களைத் தேர்ந்தெடுத்து இந்த மன்றத்திற்கு அனுப்பிய பொதுமக்களுக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். சலுகைகள் பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயிலிருந்து இப்போது 2,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது அனைவராலும் வரவேற்கத்தக்கது. படிப்புக் கட்டணத்தையும் இந்தச் சலுகைகளுக்குப் பொருந்துமாறு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். பட்ட மேற்படிப்பு, ஆசிரியர் பட்டப் பயிற்சி, புலவர் படிப்பு, தொழில் நுட்பக் கல்வி, தொழிற் கல்வி, தட்டெழுத்துப் பயிற்சி முதலிய 50 வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்க நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பை நீக்கியதோடு, கல்வி கற்கத் தகுதி பெற்ற அனைவருக்கும் உதவித் தொகை அளிக்க முன் வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அடுத்தபடியாக, சென்னையில் விடுதிக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய் என்றுதான் இருந்தது. இந்த ஆண்டு அதை 70 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறது இந்த அரசு. அதேபோல், சென்னையைத் தவிர மற்ற இடங்களில் 50 ரூபாய் என்று இருந்ததை 55 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தியிருக்கிறது. மேலும், பொறியியல், மருத்துவம், உழவியல் போன்ற துறைகளில் படிப்பவர்களுக்குத் தரப்படுகின்ற ஸ்காலர்ஷிப் போதவில்லையென்றால், மேலும் செலவழிக்க வேண்டிய அவசியம் இருந்தால், மாணவர்களுக்குக் கடன் தருவதற்கு ஒரு லட்சம் ரூபாய் தருவதற்காக அறிக்கையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றப் பிரச்சினைகளைக் காட்டிலும் தாழ்த்தப்பட்டோர், மலைவாசியினர் நலன் சமுதாயத்தின் முக்கியமான பிரச்சினையாகும்.

பிறக்கும்போது கெட்ட பெயரோடு பிறந்து, சமுதாயத்தால் கொடுமைப்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு எந்த ஒரு அரசாங்கம் அவர்களை முன்னேற்றுவதற்குத் திட்டங்களை வைத்துச் செயல்படுகிறதோ அதற்கு நல்ல பெயர் ஏற்படும். அந்த வகையில் நம்முடைய தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைக் களைந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த காலத்தில் வழங்கப்பட்டு நடைபெற்று வருகிற திட்டங்களோடு புதிய திட்டங்களையும் சேர்த்திருக்கிறார்கள். அதற்காக நான் முதலமைச்சர் அவர்களையும் அம்மையார் அவர்களையும் பாராட்டுகிறேன்.

இந்தத் துறைக்காக 1969–70-ல் 540 லட்சம் ரூபாயாக இருந்தது 1970–71-ல் 551 லட்சம் ரூபாயாக உயர்ந்து இன்றைக்கு 1971–72-ல் 7 கோடி ரூபாய்க்கு மேலாகவும் அதாவது 7½ கோடி ரூபாய் அளவுக்கு நிதியை தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. இந்தத் துறை 918 பள்ளிகளை நிர்வகித்து வருகிறது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட, பழங்குடி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் படித்து வருகிறார்கள். கல்விக்காக மட்டும் 527 லட்சம் ரூபாயைச் செலவழிக்க திட்டமிட்டிருக்கிறது.

மேலும் ஒவ்வொரு துறையிலும் அதிகமான அளவிற்கு நிச்சயமாக அமைச்சர் அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு வசதிகளையும்



வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் விடுதிகள் கட்டுவதற்காக 9.33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு கூடுதலாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முன்பு உழவு மாடுகள் வாங்குவதற்காக 400 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது 500 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கிணறு வெட்டுவதற்கு முன்பு 1,500 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டில் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மின் இறைவை சாதனங்கள் பொருத்துவதற்கும், வடிமுனைக் குழாய்க்
நண் பகல் 12-00.
கிணறுகள் அமைப்பதற்கும் 1970–71-ம் ஆண்டில் 11 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 1971–72-ல் 11.8 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு அது உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே வட்டியில்லாதக் கடன் வழங்கப்படுவதால் தாழ்த்தப்பட்ட மக்கள் அதன் மூலம் வியாபாரம் செய்து, தொழில் செய்து பிழைப்பதற்கு ஆன திட்டம் அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலிருந்து சன்னஞ்சன்னமாக அதற்காக ஒதுக்கப்படுகின்ற தொகை 1968–69-லே 1 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 169 பேர்களும், 1969–70-லே 2 லட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கப்பட்டு 612 பேர்களும், நடப்பு ஆண்டிலே 10 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 1,896 பேர்களும் பயன் அடைகின்ற வகையில் அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்த ஆண்டும் அதே அளவுக்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையை எடுத்துக்கொண்டாலும் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஏற்ற நிலையை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் எனக்கு இன்னும் கொஞ்ச நேரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

திரு. ஆ. முனியாண்டி: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மானியத்தை வாழ்த்தி வரவேற்று, என்னுடைய உரையை வழங்கலாம் என்று ஆசைப்படுகின்றேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே அம்மையார் அவர்கள் எடுத்துக்கொண்ட தனிக் கவனம் காரணமாக இன்றைய தினம் வரையில் ஒவ்வொரு துறையும் நாம் எண்ணிப் பெருமைப்படத்தக்க அளவுக்கு வளர்ச்சிப்பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் பொருளாதாரத் துறையிலே மிகமிகப் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை வளம் பெறத் தக்க வகையில் உச்சவரம்பின் மூலம் கிடைக்கின்ற மிச்ச நிலங்களை அந்த மக்களுக்கு விவசாயத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கோயிலின் பெயரால் ஆயிரக்கணக்கான நிலங்கள் இருக்கின்றன. அவற்றையும் அந்த மக்களுக்குக் கொடுத்து அவர்கள் நேரிடையாக அதை உழுது விவசாயம் செய்துகொள்வதற்கு வழிவகைக்காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வகையிலே அரசு எந்த அளவுக்கு வேகமும் விறுவிறுப்பும் காட்டுகிறதோ அந்த அளவுக்கு அலுவலரும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொன்னால் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு என்ன என்ன வகையில் வீடுகள் இன்னின்னருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அவர்கள் அறிவிக்க வில்லை. அவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட மனைகளில் அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள முடியாத நிலைமையில் அவதிப்படுகிறார்கள். நாம் எப்படி ஐந்தாண்டுத் திட்டம் என்று போட்டு அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதைப்போன்று அவர்களுக்காக என்று ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு திட்டம் போட்டு, ஒரு ஆண்டில் வீடு கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு ஆண்டில் அவர்களுக்கு குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையிலே திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி ஒவ்வோர் ஆண்டும் ஏதாவது ஒரு பிரச்னையை எடுத்துக்கொண்டு, தனிக் கவனம் செலுத்தி, அதைத் தீர்ப்பதற்கு முயற்சியெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் இப்பொழுது பல்கலைக் கழகம் அமைந்தாகிவிட்டது. அங்கே மாணவர்களுக்கு விடுதி—எப்படி சென்னையில் எம். சி. ராசா விடுதி என்று இருக்கிறதோ அதைப்போன்று—அங்கேயும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக அம்மையார் அவர்கள் கடைசிப் பாராவில் கூறியிருப்பதைப்போல் வட்ட, மாவட்ட வாரியாக தாழ்த்தப்பட்ட மக்கள் நலமுறுவதற்கும் தீண்டாமை ஒழிக்கப்படுதெற்கும் தனிக் கவனம் செலுத்த இருப்பதை நான் மட்டுமல்ல, எல்லோரும் நாடும் ஏடும் பாராட்டிக் கொண்டிருக்கிறது. அந்த மக்களுக்குப் புதிய புதியத் திட்டங்களை, புதிய புதிய முறைகளைத் துவக்கி அவர்கள் தனிக் கவனம் செலுத்துவதைக் கண்டு நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய மாநிலம் எப்பொழுதும் அகில இந்தியாவுக்கும் வழி காட்டியாக, தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு உதவி செய்வதில் முன்னோடியாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா: உதவித் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக் கின்ற அரிசன நலத்துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டிற்கு அதிகமாக ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பது இன்றையதினம் பாராட்டத்தக்கது. வேளாண்மையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. உதவித் தொகை அரசாங்கம் கொடுக்கிறது என்று சொன்னாலும்—எப்படி நிலங்களில் விவசாயம் செய்தால் அவர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து அதன்மூலம் உதவி செய்யப்படுகின்றதோ அதைப்போன்று —ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் என்ற அளவிலே நிலங்கள் சொந்தமாக அரிசனங்கள் வைத்திருந்தால் அவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கம் வைத்து அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போன்று நிலம் இல்லாத அரிசனங்கள் குத்தகை வாரம் எடுத்துக்கொண்டு உழுதுகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரிசனக் குத்தகை வாரதாரர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து அதன் மூலமாக உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது வட்டியில்லாத கடன் கொடுக்கப்படுகிறது. அரிசனங்களும் அதைப் பெற்றுக்கொண்டு தொழில்கள் நடத்த முன் வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அதற்காக பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது குறைவானது. இன்னும் அதிகமாக உயர்த்திக் கொடுக்கவேண்டும். அவர்களுக்காகக் கொடுக்கப்படு கின்றபொழுது கடன் விதிமுறைகள், நிபந்தனைகள் மிகக் கடுமையாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அவர்களுக்கு சுலபமாகக் கடன்கள் கிடைக்கக்கூடிய வகையிலே அவற்றைத் தளர்த்தி விரைவிலே கடன் தொகைகள் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குடியிருப்பு மனைகள் அவர்களுக்குக் கொடுப்பது அரசாங்கத்தினுடைய பிரதானக் கொள்கை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரிசனங்கள் சமுதாயத்தின் அடித்தட்டிலே வாழ்கின்றவர்கள், இந்த நாட்டின் முதுகெலும்பு என்று அவர்களைச் சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் சகல தொழில்களையும் மனித சமுதாயம் மிகக் கேவலமான தொழில் என்று கருதக்கூடிய மலம் வாரக்கூடிய தொழிலைச் செய்கின்றவர்கள் என்பதை அரசாங்கம் கருத்தில்கொண்டு, அவர்களுக்குச் சில காரியங்களைச் செய்யவேண்டும். குடியிருப்பு வீட்டு மனைகள் என்று 1 லட்சத்து 90 ஆயிரம் ஒதுக்கப்பட்டு அதிலே 1 லட்சத்து 15 பேர்கள்தான் வீடு கட்டியிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இன்னும் 76 ஆயிரம் பேர்கள் வீடுகள் கட்டாமல் இருக்கிறார்கள். அவர்கள் வீடுகள் கட்டாமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் பொருளாதார நிலையிலே பின்தங்கியவர்கள் என்பதுதான். அவர்கள் ஒரு சிறு குச்சியைக்கூட அமைத்துக்கொள்ள முடியாத—அதற்குக்கூட வழியில்லாதவர்களாக இருக்கிறார்கள். சென்ற ஆண்டு 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது, இன்றைய தினம் அதற்காகப் பணம் ஒதுக்கப்படவில்லை. அதற்காக ரெவின்யூ போர்டு மெம்பரை ஆய்வு செய்யச்சொல்லி அறிக்கை பெறவிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் அவசியந்தான்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், ஆந்திரா மாநிலத்தின் மக்கள் தொகையில் 14 சதவீதம் பேர்கள் அரிசனங்கள் இருக் கிறார்கள். அவர்களுடைய வீட்டு மனைகளுக்காகவென்று அந்த அரசாங்கம் ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்திலே 18 சதவீதம் பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்காக ஒதுக்கியிருப்பது 30 லட்ச ரூபாய்தான். அவர்கள் ஆந்திராவிலே ஒன்றரைக்கோடி ரூபாய் ஒதுக்கினாலும் அதற்காக ஒரு திட்டம் தயாரித்து ஒவ்வொரு வருஷமும் 70 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று திட்டம் வைத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறார்கள். அதைப் போன்றே ஒவ்வொரு மாவட்டத் திற்கும் 30 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று

[திரு. ஆ. கு. சுப்பையா] 1971 ஜூலை 26]

திட்டம் தயாரித்து இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலும் வீடு கட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையிலும் ஒரு திட்டம் ஏற்படுத்தி, அந்த ஏழை எளிய மக்கள், கிராமங்களிலே வாழ்கின்றவர்கள், வசதியில்லாத நிலைமையில் இருக்கின்றவர்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்திலே வைத்துக்கொண்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். இன்றைக்குச் சுமார் 70 ஆயிரம் வீட்டுமனைகள் சும்மா கிடக்கின்றன. காரணம் பள்ளமான இடத்தில் மனைகள் கொடுக்கப்பட்டுவிட்டதால் அதைத் தூர்த்து, வீடுகள் கட்டிக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. எனவே அரசாங்கம் அப்படிப்பட்ட இடங்களைத் தூர்த்து அவர்களுக்கு வீடுகளும் கட்டிக்கொடுக்க வேண்டும்.

மைசூர், பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே அவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்காக, அதற்கு உதவி செய்வதற்காகவென்றே தனி பைனான்ஸ் கார்ப்பரேஷன் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்டத் திட்டத்தை நம்முடைய மாநிலத்திலும் ஏற்படுத்தி தனியாக பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தி, அவர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலைகளுக்கு நியமனம் செய்யப்படுகின்றபொழுது 16 சதவீதமாக இருந்ததை இப்போது 18 சதவீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத் துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி, 16 சதவீத மக்கள் அரிசனமக்கள் ஒதுக்கப்பட்டபடி நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்களா என்று பார்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். உயர் மட்டக் குழு ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவித் தலைவராகவும் இருந்து கவனித்துக்கொண்டுவருகிறார்கள். அது சம்பந்தப்பட்ட இலாக்காக்களிடமிருந்து அறிக்கை பெறுகிறார்கள். சில இலாக்காக்கள் கொடுப்பது உண்டு, சில இலாக்காக்கள் கொடுக்க மறுக்கிறார்கள். அம்மாதிரி இருக்கக்கூடாது. அதைத் தணிக்கை செய்யும் முறையில், ஆடிட் செய்யும் முறையில் ஒவ்வொரு இலாக்காவிலும் எத்தனை ஆயிரம் பேர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள், ஹரிஜன சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா என்றெல்லாம் பார்ப்பதற்குத் தணிக்கைக் குழு இருக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்வதற்கு விரும்புகிறேன். அந்த முறையிலேதான் இன்று அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இறுதியாக, தமிழக அரசு பின்தங்கிய நல மக்களுக்காக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு மாவட்ட ரீதியாக உள்ள பின் தங்கிய மக்களைப்பற்றி ஆராய்ந்து அரசாங்கத்திற்குச் சில ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறார்கள். ஹரிஜன மக்களுக்கு என்று 1946-ஆம் ஆண்டு தனி இலாக்கா ஏற்படுத்திச் சில செய்யப்பட்டு வருகிறது. அந்த அளவில் அவர்கள் அந்தச் சலுகைகளைப் பெற்றிருக்கிறார்களா? அல்லது பெறவில்லையா, முன்மாதிரியேதான் இருக்கிறார்களா என்று ஆராய்வதற்காக அரிசன நல வகுப்புக்கென்று கமிஷன் ஒன்றை அமைத்து ஆராய வேண்டியது மிகமிக அவசியம்



1971 ஜூலை 26] [திரு. ஆ. கு. சுப்பையா]

என்று நான் கருதுகிறேன். அந்த முறையிலே பார்த்தால் இன்றைக்கு மிக வேகமாக மாற்றம் செய்ய வேண்டிய ஒரு காலகட்டத்திலே இருக்கிறோம், அந்த ஏற்பாட்டைச் செய்ய அரிசன வகுப்புக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையைக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. பாலசுந்தரம்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அரிசன மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன நலத்துறை செம்மையாகவும், செழுமையாகவும் இயங்குவதற்கு இன்றைக்கிருக்கின்ற தமிழக அரசு எவ்வளவோ நன்மைகளைச் செய்துவருவதை நான் உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இருபதாண்டுக் காலமாக, இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் சர்க்கார் செய்துவந்த தவறையே இன்றைக்கிருக்கிற சர்க்காரும் செய்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இன்றைக்கிருக்கின்ற சூழ்நிலையில் முக்கியமாக, முதுகெலும்பாகக் கருதப்படுவது தீண்டாமை ஒழிப்பு. அந்தத் தீண்டாமை ஒழிப்பிற்காக இன்றைக்கிருக்கின்ற சர்க்கார் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அளவில் முழுமூச்சாகக் கருதினாலும் அதைக் கடைப்பிடிக்கின்ற முறையிலே தான் சில மாற்றங்களும், மாறுபாடுகளும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தீண்டாமை ஒழிப்பிலே ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் இந்தத் தீண்டாமை ஒழிப்பின்மூலம் தனித்தனி அங்கங்களாக, தனித்தனியாகப் பிரிந்து இன்றைய சூழ்நிலையிலே செயல்பட்டு வருகின்ற ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது. தீண்டாமை ஒழிய வேண்டுமென்று இங்கே சொல்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அரிசன நல இலாக்கா என்று ஒரு தனி இலாக்கா, தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொல்கிறோம், ஆனால் பிற்பட்ட சமுதாயத்தினர் முன்னேற வேண்டுமென்பதற்காக ஒரு இலாக்கா. இப்படிப்பட்ட சங்கடமான சூழ்நிலையில் இருந்தால் நாம் எப்படித் தீண்டாமையை ஒழிக்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்று சொல்லும் அதே நேரத்தில் ஒரு ஒருமையான, உள்ளபூர்வமான உண்மையை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இன்னும் இந்த நாட்டில் தீண்டாமை ஒழிக்கப்படவில்லை, ஆனால் தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொன்ன மகாத்மா காந்தியடிகளை ஒழித்துக் கட்டியிருக்கிறார்கள், தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொன்ன அறிஞர் அண்ணா அவர்களை ஒழித்துக் கட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கிறபொழுது இன்றைக்கிருக்கிற சர்க்கார்தான், இன்றைக்கிருக்கிற ஆட்சிதான், தீண்டாமையை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையை அந்த அரிசன மக்கள் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கிருக்கிற சர்க்கார், இன்றைக்கிருக்கிற ஆட்சி, இன்றைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்கின்ற முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த நடவடிக்கையிலே தோல்வி காணுவார்களேயானால் தலைமுறை தலைமுறையாக ஆண்டாண்டுக் காலமாக இன்னும் ஆயிரம் ஆண்டுகளானாலும்

[திரு. வை. பாலசுந்தரம்] [1971 ஜூலை 26

இன்னும் பல்லாண்டுகளானாலும் சரி ஆதித் திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விமோசனமே இல்லை என்பது தான் என்னுடைய திண்ணமான நம்பிக்கை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவேதான், தீண்டாமை ஒழிப்பின்மீது நாட்டம்கொண்டு சில புரட்சிகரமான முடிவுகளில் ஈடுபட்டிருக்கிறோம். இதற்கு முன்பு பேசிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தான் மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினர் என்ற காரணத்தால் எப்படி அலைக்கழிக்கப்படுகிறார்கள் என்பதை நெஞ்சுருகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட கேடுபாடுகளை ஒழிக்க வேண்டுமென்றால் ஒரு உண்மையை நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். சமுதாயத்தில் சம தர்ம அடிப்படையை உருவாக்க முயற்சியெடுக்க வேண்டும். அப்படி முயற்சியெடுக்கும் நேரத்தில் தனியாக மாணவர்களுக்கு தனி உணவு, பிற்பட்ட மாணவர்களுக்கு ஒரு விடுதி, ஆதித் திராவிட சமுதாயத் தைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தனியாக ஒரு விடுதி, என்று இப்படியே பிரித்துப் பிரித்துக் காலத்தை ஓட்டிக்கொண்டே சென்றால் நிச்சயமாகத் தீண்டாமை ஒழியாது என்பதை வன்மை யாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சமதர்மத்தைக் காணவேண்டும், ஒரு புரட்சிப் பாங்கை இந்த நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு துணிவான முடிவிற்கு வரவேண்டும். தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரும் நேரத்திலே இப்படி இருக்கின்ற நிலைமைகளை அகற்ற வேண்டும், அரிசன நல இலாக்கா ஒழிக்கப்பட வேண்டும், பிற்படுத்தப்பட்டோர் இலாக்கா ஒழிக்கப்படவேண்டும். இவையனைத்தையும் ஒழிக்க, ஒரு முகமாக இந்த நாடு வளர்ச்சியடைய வேண்டுமென்று எண்ணி, அவைகளை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயல் படக்கூடிய சாத்தியக்கூறுகளை நமது அரசு செய்ய முன்வரவேண்டு மென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படித்தான் இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் சர்க்கார் இப்படி அரிசனங்களுக்கு நன்மைகள் செய்கிறோம், பிற்பட்டோருக்கு நன்மைகள் செய்கிறோம் என்று சொல்லிச் சொல்லி காலத்தை கடத்திவந்து, அவர்கள் இருக்கும் இடமே இல்லாமல் ஆகக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய அம்மையார் அவர்கள் சொன்னார்கள், இங்கே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில். ஜாதிக்கு ஒரு சிறப்பு ஏற்பட வேண்டுமென்றால் "ன்"-க்குப் பதிலாக "ர்" சேர்த்தால் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். "ன்"-க்குப் பதிலாக "ர்" சேர்ப்பதன் மூலம் ஜாதிக்கு ஒரு சிறப்பைக் கொடுக்கிற ஒரு தத்துவத்தை வளர்க்கும் சூழ்நிலை ஒரு கட்சிக்கு இருந்தால் அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஒரு சமதர்மத்தை அமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே தீர்வு காண வேண்டுமென்ற நம்பிக்கை உடையவர்களாக இருக்கவேண்டும். ஆனால் இந்த நிலையில், இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்க



1971 ஜூலை 26] [திரு. வை. பாலசுந்தரம்]

வேண்டுமென்று இந்த அரசு கருதுகின்ற காரணத்தால் இப்படிப் பட்ட முயற்சிகள் ஒருசில ஆண்டுகளுக்கு நடவடிக்கையிலே இருக்கிறது என்பதை உணர்ந்து பார்க்கிறேன்.

அப்படி உணர்ந்துபார்க்கின்ற நேரத்தில், அரிசன மக்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளை ஒருவாறாகச் செய்து வருகிறது. அப்படிச் செய்துவரும் நேரத்தில் அரிசன மாணவர்களாகயிருந் தாலும் சரி, அரிசன மக்களின் வேலைவாய்ப்பிற்காக ஈடுபடும் மாணவர்களாயிருந்தாலும் சரி ஒரு சிறப்பு ஏற்படுத்த வேண்டுமென்று இன்றைக்கிருக்கும் சர்க்கார் 16-இலிருந்து 18-ஐ உருவாக்கி யிருக்கிறது. ஆனால் அகில இந்திய ரீதியில் பார்க்கும்பொழுது இன்றைக்கு 23 சதவிகிதம் வேலைவாய்ப்பிற்கான சலுகைகளை மாணவர் களுக்கு வழங்கியிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக் கிருக்கும் தமிழக அரசு அதையும் பின்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, வாய்ப்பை நல்கியமைக்காக நன்றி கூறுகிறேன்.

திரு. என். இராஜாங்கம்: பெருமதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவரவர்களே, 1971–72-ஆம் ஆண்டுக்கான அரிசன நலத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 1 கோடிக்குமேல் நமது இலாக்காவிற்குத் தொகையை அதிகப்படுத்தியிருப்பதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தமே $7\frac{1}{2}$கோடி ரூபாய்க்கு இந்த மானியம் கேட்கப்பட்டாலும் அதிலே மற்றத் துறைகளைக் காட்டிலும் அரிசன மக்களுக்கு வீட்டு மனை கொடுக்கும் துறைக்கு அதிகமாக வாங்கியிருக்கலாம். நிதிப் பற்றாக் குறை காரணமாக அவ்வாறு நடக்காமல் இருக்கும் என்று தெரியும். நம் மாநிலத்தில் நிதிப்பற்றாக்குறையிருந்தாலும் மத்திய அரசைக் கேட்டாவது நமது முதல்வரவர்களும், இலாக்கா அமைச்சர் அவர் களும் இதை அதிகமாக வாங்க இனிமேலாவது முயற்சியெடுக்க வேண்டுமென்ற என் எண்ணத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது அரசாங்கம் இன்றுள்ள நிலையில் ஏற்கனவே கையாண்டு வந்த முறைகளை அதிகப்படுத்தி அதிலே சற்று அதிகமாக முன்னேற்றத்தைக் காண, விடுதிகள் திறப்பது, உழவு மாடு வாங்கு வதற்குக் கொடுப்பதை உயர்த்துவது, அதேபோல் கிணறு வெட்டக் கொடுத்த பணத்தில் உயர்வு, இப்படி ஒவ்வொன்றிலும் அதிகமாக உள்ளபடியே பணத்தை ஒதுக்கியிருந்தாலும் மிக முக்கியமான குடியிருப்பு மனைக் கட்டுகளுக்கு நாம் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்குக் கல்வியில் கிட்டத்தட்ட 5 கோடிக்கு மேல் செலவாகிறது. கல்வியில் 5 கோடி செலவழிக்கிறோம் அதிகக் கவனம் செல்ல வேண்டுமென்று. அதனால் இலாக்காவினர் இன்னும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். இராஜாங்கம்] [1971 ஜூலை 26

இன்று உண்மையாகவே பள்ளிகள் ஆண்டுக்காண்டு நமக்கு அதிகமாகி வருகிறது. இதற்கு முன்னால் ஒரே ஒரு இடத்தில் சிதம்பரம் நந்தனார் பள்ளி என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இருந்தது. இப்போது பல இடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் சிகரம் வைத்தாற்போல் சிதம்பரம் நந்தனார் பள்ளிதான் இருக்கிறது. பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து அந்த இடத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஹாஸ்டல் கட்டியிருக்கிறார்கள். அங்கு இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. ரிசல்டைப் பொறுத்த வரை கணிசமான அளவுக்கு ரிசல்ட் வந்திருக்கிறது. அதற்குக் காரணம் தனிப்பட்ட இலாகாவின் திறமையான செயல்கள் என்று தான் நம்புகிறேன்.

பல உயர்நிலைப்பள்ளிகளை உண்டாக்க வாய்ப்பு இருப்பது இந்த அறிக்கையில் இருந்து தெரியவருகிறது. மாவட்ட அளவில் வெல்பேர் ஆபீசர்கள் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல சேவை செய்யக்கூடியவர்கள்தான் என்றாலும், அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது இலாகாவின் தலைமைக் காரியாலயத்தைப் பொறுத்தது. அமைச்சர் அவர்களும், இலாகா செயலாளரும் முழு மனதோடு இதனைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை 1961-ம் ஆண்டில் துவங்கி தீவிர நடவடிக்கைகள் எடுத்த பிறகும் 1971-ம் ஆண்டு வரை எந்தெந்த கிராமங்களுக்கு மனை கிடைத்திருக்கிறது என்று பார்த்தால் ஒன்றும் கிடைக்கவில்லை. எந்தெந்த கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ரீதியில் அரசாங்கத்திற்கு அனுப்பியும் மனைகள் அப்படியே இருக்கின்றன. தயவுசெய்து இதனைக் கவனிக்க வேண்டும்.

சென்னை நகரில் மட்டும் குடிசை மாற்று வாரியம் குடிசைப் பகுதிகளை மாற்றியமைத்து நல்ல முறையில் ஏழைகளுக்கு, குடிசை வாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் மாவட்ட அளவில், மாவட்டத் தலைநகர் அளவிலாவது குடிசை மாற்று வாரியத் திட்டத்தின்கீழ் அமல்படுத்த வேண்டும். உண்மையிலேயே மாவட்டத் தலைநகரில் பெரிய பெரிய மாளிகைகளும், படுத்துப் போகிற குடிசைகளும் இருக்கின்றன. எவ்வளவோ பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றிய பிறகும் இந்த நிலை இருக்கக்கூடாது. நான் பத்தாண்டுக் காலமாக எம்.எல்.ஏ.-வாக இருக்கிறேன். நான் அப்படிப்பட்ட படுத்துப் போகிற குடிசையில்தான் இருக்கிறேன். என் வீட்டுக்கு வருகிறவர்கள் வெளியேதான் நிற்கவேண்டும். அப்படிப்பட்ட முன்னேற்றந்தான் அடைந்திருக்கிறோம் என்பதைப் பகிரங்கமாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் இந்த ஆண்டு ஐந்தாறு கிராமங்களுக்காவது குடியிருப்பு மனைகள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று செயலாளர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சங்கராபுரம் தொகுதி மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதி. கால்வராயன் மலைப்பகுதியில் சடையக் கொண்டான், அரியக்கொண்டான், குறும்பக் கொண்டான் என்ற ஜாகிர் பகுதிகள் இருக்கின்றன. ஏறக்குறைய 300 சதுர மைல், 30,000 ஜனத்தொகை உள்ள பகுதி. அந்தப் பகுதி மக்களுக்கு நாம் செய்யும் பல நன்மையான காரியங்கள் விடப்பட்டிருக்கின்றன. இதை அரசாங்கத்தின் குறை என்று சொல்லவில்லை; அதைப் பற்றி எடுத்துச் சொல்லி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவராத நிலைமை இருக்கலாம். எப்படி இருந்தாலும் நம்முடைய அரசாங்கம் வந்த பிறகு இரண்டு பள்ளிகள், ஒரு விடுதி ஏற்பட்டிருக்கின்றன. பல பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும், குடி தண்ணீர் வசதி, சாலை வசதி ஆகியவற்றைச் செய்து தரவேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தை ஆதரித்துப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.



1971 ஜூலை 26] [திரு. என். இராஜாங்கம்]

* திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற அரிசன மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1971–72-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இந்த இனத்திற்காக, 700 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே கல்விக்காக ஒதுக்கப்பட்ட 527.59 லட்சம் ரூபாய் போக, கிட்டத்தட்ட 172.83 லட்சம் ரூபாய்தான் மற்ற இனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது மற்ற இனங்களுக்கு ஒதுக்கியிருக்கும் பணம் போதாது, கொஞ்சம் அதிகப்படுத்தியிருந்தால் நன்றாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

பொருளாதார முன்னேற்றம் என்ற தலைப்பில் "தரிசு நிலங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட பட்டியலில் அரிசனங்களுக்கு 7-வது இடமாக இருந்ததை 2-வது இடத்திற்கு உயர்த்தி மேலும் மிகுதியான அரிசனங்கள் வேளாண்மை நிலங்களைப் பெற்று பயனடைய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரை இந்தவிதமான வாய்ப்பு கிடையாது. 1967-ம் ஆண்டில் இருந்து எந்தவிதமான நிலத்தையும் ஒரு அரிசனனுக்குக் கூடக் கொடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் செய்பவர்களுக்கு இலவசமாகக் கருவிகள் வழங்கப்படுகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பிட்டு கருமார், தச்சுத் தொழில் செய்கின்றவர்களுக்குக் குறிப்பிட்ட பொருள்கள் தான் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றனவே தவிர, மற்றெல்லாத் தொழில் செய்பவர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை.' அரிசனங்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும் அந்தத் தொழிலுக்கு ஏற்ற கருவிகளை அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் நடத்த வட்டியில்லாத கடன் கொடுப்பதற்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்குத் தனி நபர் ஜாமீனிலும், ஆயிரம் ரூபாய்க்கு மேல் போனால் சொத்து மதிப்புள்ளவர் ஜாமீனிலும் கொடுக்கவேண்டுமென்று மனுஃபாரத்தில் இருக்கிறது. அரிசனங்களுக்கு சொத்துள்ளவர்களாக இருக்க

இடமோ நிலமோ கொடுக்காத நிலைமையில் இருக்கும்போது வேறு யாரும் சொத்து ஜாமீன் கொடுக்க முன்வருவதில்லை. இந்த நிலையை மாற்றி ஓரளவு அந்தத் தொழிலையே ஈடுகட்டி தொழிலை அபிவிருத்தி செய்ய கடன் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

குடியேறிய நிலங்களில் வீடு கட்டும் பிரச்சினையைப் பொறுத்த வரையில் சில இடங்களில் குடியேறியவர்களை அப்புறப்படுத்தும் நிலைமை இருக்கிறது. கூடலூர் தாலூகாவில் நிலங்களில் இருந்து அரிசனங்கள், மலைவாசிகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைப் பற்றி எந்தவிதமாகவும் சொல்லுவதற்கு இல்லாத முறையில் இருக்கிறது.

மலைவாசிகளுக்காக மொபைல் யூனிட்—நடமாடும் ஆஸ்பத்திரி ஏற்படுத்தியிருக்கிறார்கள். கோவை, மதுரை, நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஒவ்வொரு யூனிட்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ரோடு வசதி இல்லாததால் பல அரிசன காலனிகள் இருக்கும் பகுதிகளுக்கும் இந்த மொபைல் யூனிட் போக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். பொருளாதார நிலைமை மோசமாக இருக்கும் இந்தச் சமூகத்திற்கு அந்த வசதிகளை எல்லாம் நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை மழையும் காற்றும் அதிகம். அரிசனங்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட காலனிகளில் கூரைகள் அப்படியே காற்றில் பறந்து சென்று விடுகின்றன. நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் பகுதியிலுள்ள ஒரு காலனியில் 18 அரிசன வீடுகளின் கூரை அடித்துச் செல்லப்பட்டு இரண்டு வருஷமாகியும் அந்தக் கூரையைப் போட்டுக் கொடுக்க வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறது. அவர்கள் எவ்வளவோ நீலகிரி க்ஷேமநல அதிகாரிக்கு மனுக்கள் கொடுத்தும், அவர்கள் "நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார்கள். இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

பணம் ஒதுக்கும்போது ஜில்லா வாரியாக அரிசனங்களுடைய ஜனத்தொகை எவ்வளவு இருக்கிறதோ அந்த அடிப்படையில் ஒதுக்கினால் அவர்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வாய்ப்பாக இருக்கும். நீலகிரி ஜில்லாவில் அரிசனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதற்குத் தக்கவாறு தொகையை அதிகமாக ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். பி.ப 12-30

புலவர் சி. பழனிச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1971–72-ம் ஆண்டுக்கான அரிசன நல மானியக் கோரிக்கையின் பேரில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் அரிசன நலத் துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும் பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. 1970–71-ம் ஆண்டில் 433.32 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1971–72-ம்



ஆண்டில் கல்விக்காக மட்டும் 527.59 இலட்சமாக உயர்ந்துள்ளது. இப்படி தாழ்த்தப்பட்ட மக்களின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்காக நமது தமிழக அரசும், மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து நமது அரசு தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறது. ஆனால் தாழ்த்தப்பட்டோரின் பொருளாதாரம் இன்னும் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறது.

வீடற்ற தாழ்த்தப்பட்டோருக்காக காலனி வீடுகள் அமைக்கும் முறையைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். அதுமட்டுமின்றி வீடு கட்ட இடம் மட்டும் இப்போது கொடுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பாலும் கூலி வேலை செய்து நாளுக்கு ஒன்றரை ரூபாய், இரண்டு ரூபாய் சம்பாதித்து அதைக் கொண்டு தங்களின் மனைவிமக்களைக் காப்பாற்றுவதற்கே மிகவும் துன்பப்படுகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் வெறும் இடத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஆகவே, அந்த இடத்தில் வீடு கட்டிக்கொள்வதற்கும் அரசாங்கம் பொருளுதவி செய்ய வேண்டும். புறம்போக்கு நிலங்களைப் பிரித்துப் பட்டா வழங்கும்போது குறிப்பிட்ட அளவு அரிசனங்களுக்குப் பட்டா வழங்கப்படுகிறதா என்பதில் அரசு கவனமாக இருந்து செயல்பட வேண்டும். மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் அரசுப் பணிகளில் தாற்காலிகமாக நியமனம் செய்தாலும், தாழ்த்தப்பட்டோருக்கும் பின்தங்கிய மக்களுக்கும் சுழல் முறையில், ரொட்டேஷனில், பதவிகள் ரிசர்வ் செய்யப்பட வேண்டும்.

சிறிய விவசாயிகளாயுள்ள அரிசனங்களுக்கு முன்பெல்லாம் உழவு மாடுகள் வாங்கிக் கொடுத்து வந்தது அரசு. ஆனால் தற்போது அதை நிறுத்தி விட்டதாக அறிகிறேன். ஆகவே, அவர்களுக்கு மீண்டும் உழவு மாடுகள் வாங்கிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் நடத்த வட்டியில்லாக் கடன் கொடுப்பதாகக் கூறி கடந்த ஆண்டு ஒரு மாவட்டத்திற்கு ரூ. 20,000 தான் வழங்கப்பட்டது. இது மிகமிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இத் தொகையை மாவட்டத்திற்கு ரூ. 50,000 என்றளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாட்டில் உள்ள அருந்ததியர் என்ற பிரிவினர் ஏனைய பிரிவினரை விடச் சொல்லொணு வகையில் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் பின்தங்கியுள்ளனர். கடந்த கால அரிசன நலத் திட்டங்களால் ஒரு சிறிதும் மாற்றமோ, முன்னேற்றமோ அடையாமல் உள்ளனர். தும்பி, தோப்பறைகளையும், செருப்புகளையும் விவசாயிகளுக்குத் தைத்துக் கொடுத்துப் பெற்று வந்த சிறிதளவு ஊதியத்தையும் தற்சமயம் அவர்கள் இழந்து நிற்கின்றனர். பசுமைப் புரட்சியாலும், மின்சார இணைப்புகள் ஏராளமாகக் கிணறுகளுக்குக் கொடுத்துவருவதாலும் இவர்களது தும்பி, தோப்பறை தைக்கும் தொழில் வேகமாக மறைந்து கொண்டு வருகிறது.

மெஷின்களில் செய்யப்படும் பளபளக்கும் தோல் செருப்புகள், ஹவாய் செருப்புகள், பிளாஸ்டிக் செருப்புகள் இவற்றுடன் கையால் தைக்கப்படும் செருப்புகள் போட்டிபோட முடியாத நிலையில் அருந்ததியர்களின் செருப்புத் தொழிலுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டது. சமூக ஏணியில் கடைசித் தட்டில் இருக்கும் இந்த மக்கள் தங்களின் தொழிலுக்கு ஏற்பட்ட ஆபத்தினுல் ஏற்பட்ட துன்ப துயரங்களை வெளியில் சொல்ல இயலாத வாயில்லாப் பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக வாழ்ந்துவரும் அருந்ததியர்களுக்கு, அரிசன நல இலாகாவுக்குள்ளே "கள்ளர் சீரமைப்பு" என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தி கள்ளர்கள் நலன் பேணுதல் போல் "அருந்ததியர் சீரமைப்பு" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அருந்ததியர் முன்னேற்றத்தில் தனிப்பட்ட கவனம் செலுத்தி செயல்பட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டிலே சாதிப் பாகுபாட்டை ஒழிக்க காந்தியடிகள், பெரியார், அறிஞர் அண்ணு ஆகியோர் அரும் பாடுபட்டும் முழுமையாக நீங்கியபாடில்லை. படித்தவர்களுக்கிடையே கூட சாதிப் பாகுபாடு இன்னும் இருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் வட்டம் கருப்பூர் என்ற ஊரில் உள்ள கோவில் ஒன்றில் ஒரு தாழ்த்தப்பட்டோர் இறைவழி பாட்டிற்காக நுழைந்தபோது சாதி இந்துக்களால் அடித்து விரட்டப் பட்டார். திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி ஆலயத்தில் சிறுவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. ஆனுல் அரிசனச் சிறுவர்களை மட்டும் கோவிலுக்குள் நுழைய விடுவதில்லை. அவர்களுக்கு பள்ளிக்கூடத்திற்கே உணவை அனுப்பிவிடுகிருர்கள். இந்த நிலைகளை யெல்லாம் அரசு கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வீ. இராசகோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நடந்து முடிந்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஹரிஜனங்கள் முழுக்க முழுக்க வோட்டு போட்டார்கள் என்பதை இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, ஹரிஜனங்கள் இந்த ஆட்சியின்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்திருப்பதன் காரணமாக இந்த அரசு அவர்களின் முன்னேற்றத்திற்காக ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறேன். இந்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக எடுத்து வருகிற நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன். இந்த சமுதாயம் பெரியதொரு சமுதாயம்.

இந்த சமுதாயத்தை முன்னேற்றுவிக்கும் ஒரே வழி கல்விதான். கல்வித் துறையில் ஹரிஜனங்கள் மேலும் முன்னேறுவதற்காக நல்ல பல திட்டங்களைத் தீட்ட வேண்டும். திட்டங்கள் தீட்டுவதோடு அவர்கள் முன்னேற்றத்தில் நல்ல கண்காணிப்பும் இருக்கவேண்டும். கல்லூரிகளில் ஹரிஜனங்களுக்காக 18 பர்சென்ட் ஸீட்ஸ் ஒதுக்குகிருர்கள். அரசுத் துறையில் உள்ள கல்லூரிகளில் நிச்சயமாக அந்த 18 பர்சென்ட் கொடுப்பார்கள் என்று முழுக்க முழுக்க நான் நம்புகிறேன். ஆனுல், தனியார் கல்லூரிகளிலும் இந்த 18 பர்சென்ட் கொடுத்தாக வேண்டும். அப்படிக் கொடுக்கப்படவில்லை என்ருல் அவர்களுக்குக் கொடுக்கும் மானியம் நிறுத்தப்பட்டு விடும் என்ற நிபந்தனையை ஏற்படுத்த வேண்டும். அப்படியில்லாவிட்டால் அவற்றையெல்லாம் நாம் அரசுடைமையாக்கி விடவேண்டும். அப்போதுதான் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் கிடைக்கும்.





விடுதிகளில் தங்கியிருக்கிற ஹரிஜன மாணவர்களுக்கு உதவித் தொகையை பத்து ரூபாய் அதிகமாக உயர்த்தியிருக்கிருர்கள். இந்த பத்து ரூபாய் உயர்வு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதியில் இல்லாமல் வீடுகளிலிருந்துகொண்டு கல்லூரிகளுக்குச் செல்லும் ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மாணவர்களுக்கு டே ஸ்காலர்ஷிப் என்று கொடுக்கிருர்கள். எந்த அடிப்படையில் இந்த டே ஸ்காலர்ஷிப் கொடுக்கிருர்கள் என்பது புரியவில்லை.

விடுதியில் வாய்ப்பு வசதிகள் கிடைக்காத காரணத்தினுல்தான் யாராவது உறவினர்கள் வீட்டில் தங்கிப் படிக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கும் முழு உதவித் தொகை கொடுக்க வேண்டும். டே ஸ்காலர்ஷிப் என்று கொடுக்கக்கூடாது. இப்போது விடுதிகளில் மாணவர்கள் சேர முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது.

எம். ஸி. ராஜா விடுதியில் முதலில் ஒரு ரூமில் மூன்று பேர்கள் இருந்து வந்தார்கள். இப்போது ஆறு பேர்கள் என்ற வகையில் ஆடுமாடுகளை அடைப்பதைப் போல் மாணவர்களை அடைக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் நிலையில் இருக்கிறது. ஆகவே, ஹரிஜன மாணவர்களுக்கு அதிகப்படியான விடுதிகளைக் கட்டித் தரவேண்டும்.

எனது தொகுதி தெள்ளாறில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு 800 மாணவர்கள் படிக்கிருர்கள். அவர்களுக்கு ஒரு விடுதி கட்டித் தரவேண்டும். கீழ்கொடுக்காநல்லூரிலும் ஒரு ஹரிஜன மாணவ விடுதி கட்டித் தரவேண்டும். வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு 18 பர்சென்ட் அளவிற்கு கொடுக்கப்படுகிறதா என்பதில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். தீண்டாமை ஒழிப்பிற்காக தக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பது கண்டு அரசைப் பாராட்டுகிறேன். தாழ்த்தப்பட்டோரின் நிலையை ஆராய்வதற்காக ஒரு தனிக் கமிட்டி நிறுவி ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தக் கோரிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: உதவித் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நல இலாகா மானியத்தின்மீது தரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

இந்த அரசு ஹரிஜன மக்களின் முன்னேற்றத்தில் கொண்டிருக்கிற மிகுந்த அக்கறையையும் ஆர்வத்தையும் கண்டு நான் பாராட்டுகிறேன். ஆனுல் அதை எடுத்துக்காட்டும் முறையில் இத்துறைக்கு

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 26

நிதி ஒதுக்கீடு இல்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொத்தத்தில் உள்ள பட்ஜட் ஒதுக்கீட்டில் 2 சதவிகிதம்தான் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனை அதிகப்படுத்தியாக வேண்டும். காரணம் இந்த இலாகா அல்லது இந்தத் துறை எல்லா வகைகளிலும் முன்னேற்றம் காண வேண்டிய மக்களுக்காக ஒரு பெரும் பணியைச் செய்யவேண்டியிருப்பதால் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை அதிகப்படுத்தப்படவேண்டும்.

ஜாதி என்ற பாகுபாட்டினை ஒழித்தால்தான் இந்த நாடு முன்னேறும், இந்த நாட்டில் ஜனநாயகமும் தழைத்தோங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஜாதி ஒழிப்பு என்பது இன்னும் பல கிராமங்களில் ஏட்டளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறையில் அதற்குப் பல எதிர்ப்புகள் வருகின்றன. இந்த விஷயத்தில் அரசு நல்லமுறையில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். ஜாதியை ஒழிக்க வேண்டுமென்றால் ஹரிஜனங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது என்பதை அமைச்சர் அவர்கள் கொள்கை அறிக்கையில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொருளாதார மேம்பாடு என்பது, வேளாண்மை என்றால் நிலம் வேண்டும். அரசாங்க புறம்போக்கு நிலங்களை நிலமற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது, ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் பலவிடங்களில் மேல் ஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்களும், நிலம் உள்ளவர்களும் கூட அவற்றைப் பெற்றிருக்கிறார்கள் என்ற புகார் அடிக்கடி வருகிறது. ஆகவே நிலம் ஒதுக்கீடு செய்யும் விஷயத்தில் ஹரிஜனங்களுக்கு முதல் இடம் கொடுப்பதில் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

நிலம் கொடுக்க முடியாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இந்த வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் ஹரிஜன மக்களுக்கு தொழிற்சாலையில் இடம் கொடுப்பது இல்லை. நான் கோவையிலிருந்து வருகிறேன். அங்கே கோவையில் இருக்கும் பஞ்சாலைகளில் ஹரிஜன மகன்களுக்கு வேலை கொடுப்பது என்பது, நிச்சயமாக நிலவுக்கு ஆசைப்படுவது போல் தான். இந்த விஷயத்தில் நேரடியாக அரசாங்கம் தலையிட்டு அந்தப் பஞ்சாலைகளில் ஹரிஜன மக்களுக்கும் வேலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்த வேலை கொடுக்கும் விஷயத்தில் ஜாதிகள் குறுக்கிடாமல் இருக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். சட்ட ரீதியாக இதைச் செய்ய முடியாது என்றாலும், அமைச்சர்களுக்கு இருக்கும் மற்ற செல்வாக்கின் மூலம் அரசு இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் ஆடு வளர்ப்பு, கோழிப்பண்ணை ஆகியவற்றை இன்றைக்கு எல்லா கிராமங்களிலும் குறிப்பாக ஹரிஜன மக்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் ஆரம்பிப்பதற்கான திட்டத்தை



1971 ஜூலை 26] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

வகுத்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் ஹரிஜன மாணவர்களுக்கு என்று விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அது மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லவேண்டும். இதை எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஹரிஜன மாணவர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் அதிகமான விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்காலர்ஷிப் பொறுத்தவரையில், இந்தக் கொள்கை அறிக்கையைப் பார்த்தால், ஸ்காலர்ஷிப் பெறுகிறவர்களின் எண்ணிக்கை உயர்வது மிக மந்தமாக இருக்கிறது. இந்த எண்ணிக்கை உயருகிற அளவு போதாது. ஹரிஜன மாணவர்களுக்கு இயல்பாகவே கல்வி பெறுவதிலே, தேர்ச்சி பெறுவதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த வகையில் ஸ்காலர்ஷிப்பை கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தாமல் 1 மடங்கு, 2 மடங்கு என்று மல்டிபில்ஸ் முறையில் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக, வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், அமைச்சரவர்கள் தந்து இருக்கிற கணக்கிலே, வீட்டு மனைகள் வழங்குவதிலே கூட ஒரு பகுதிதான் அளிக்கப்பட்டிருக்கிறது. சில பகுதிகளில் மனைகளில் வீடுகள் கட்டாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். வழங்கப்பட்டுள்ள 1,90,123 மனைகளில் 1,15,693 வீடுகள் மட்டுமே இதுவரை கட்டப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்குப் பண வசதி இல்லாதது தான்.

அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது சொன்னார்கள். அந்த வீடுகள் கட்டுவதற்காகக் கடன் வாங்கிக் கொண்டு சென்ற பெரும் பகுதியினர் அந்தக் கடனை திருப்பித்தருவதில்லை என்று சொன்னார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் பொருளாதார நிலை தான். அவர்களுக்கு அந்தக் கடனை திருப்பித் தருவதற்கு வழி இல்லை. ஆகவே, அரசாங்கம் வீடு கட்டித்தரும் திட்டத்தை பெரும் திட்டமாக நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். வீடு கட்டுவதற்குத் தரும் ரூ. 950-ஐ அதிகப்படுத்த வேண்டும். இதற்கு அதிகாரிகள் கூட பரிந்துரை செய்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பணத்தை ரூ. 2,000 மாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வாழக்கூடிய நிலையில் வீடுகள் கட்டுவதற்கும், அதற்குரிய தொகையை அதிகப்படுத்துவதற்கும், அதைக் கடனாக இல்லாமல் ஹரிஜன இலாகாவே ஒரு ஃபேஸ்ட் ப்ரோகிராம் போட்டு அந்த வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன மக்களை தனியாக ஒதுக்கி வைக்கும் வரையில் இந்த ஜாதி வித்தியாசம் ஒழியாது. அந்த மக்களை மற்ற மேல்ஜாதிக்காரர்கள் வாழுகின்ற பகுதிகளிலேயே வாழக்கூடிய அளவில் செய்ய வேண்டும். திடீரென்று எல்லா இடங்களிலும் இப்படிச் செய்துவிட முடியாது. படிப்படியாகச் செய்யலாம். இந்தத் தாழ்த்தப்பட்ட

நிதி ஒதுக்கீடு இல்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மொத்தத்தில் உள்ள பட்ஜட் ஒதுக்கீட்டில் 2 சதவிகிதம்தான் இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனை அதிகப்படுத்தி யாக வேண்டும். காரணம் இந்த இலாகா அல்லது இந்தத் துறை எல்லா வகைகளிலும் முன்னேற்றம் காண வேண்டிய மக்களுக்காக ஒரு பெரும் பணியைச் செய்யவேண்டியிருப்பதால் இந்தத் துறைக் காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை அதிகப்படுத்தப்படவேண்டும்.

ஜாதி என்ற பாகுபாட்டினை ஒழித்தால்தான் இந்த நாடு முன்னேறும், இந்த நாட்டில் ஜனநாயகமும் தழைத்தோங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. ஜாதி ஒழிப்பு என்பது இன்னும் பல கிராமங்களில் ஏட்டளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. நடைமுறையில் அதற்குப் பல எதிர்ப்புகள் வரு கின்றன. இந்த விஷயத்தில் அரசு நல்லமுறையில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். ஜாதியை ஒழிக்க வேண்டு மென்றால் ஹரிஜனங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது என்பதை அமைச்சர் அவர்கள் கொள்கை அறிக்கையில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொருளாதார மேம்பாடு என்பது, வேளாண்மை என்றால் நிலம் வேண்டும். அரசாங்க புறம்போக்கு நிலங்களை நிலமற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது, ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் பலவிடங்களில் மேல் ஜாதிக் காரர்கள் என்று சொல்லப்படுபவர்களும், நிலம் உள்ளவர்களும் கூட அவற்றைப் பெற்றிருக்கிறார்கள் என்ற புகார் அடிக்கடி வருகிறது. ஆகவே நிலம் ஒதுக்கீடு செய்யும் விஷயத்தில் ஹரிஜனங் களுக்கு முதல் இடம் கொடுப்பதில் மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

நிலம் கொடுக்க முடியாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இந்த வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில் ஹரிஜன மக்களுக்கு தொழிற்சாலையில் இடம் கொடுப்பது இல்லை. நான் கோவையிலிருந்து வருகிறேன். அங்கே கோவையில் இருக்கும் பஞ்சாலைகளில் ஹரிஜன மகன்களுக்கு வேலை கொடுப்பது என்பது, நிச்சயமாக நிலவுக்கு ஆசைப்படுவது போல் தான். இந்த விஷயத் தில் நேரடியாக அரசாங்கம் தலையிட்டு அந்தப் பஞ்சாலைகளில் ஹரிஜன மக்களுக்கும் வேலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்த வேலை கொடுக்கும் விஷயத்தில் ஜாதிகள் குறுக் கிடாமல் இருக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். சட்ட ரீதியாக இதைச் செய்ய முடியாது என்றாலும், அமைச்சர்களுக்கு இருக்கும் மற்ற செல்வாக்கின் மூலம் அரசு இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் ஆடு வளர்ப்பு, கோழிப்பண்ணை ஆகியவற்றை இன்றைக்கு எல்லா கிராமங்களிலும் குறிப்பாக ஹரிஜன மக்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் ஆரம்பிப்பதற்கான திட்டத்தை



வகுத்து செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்வி யைப் பொறுத்தவரையில் ஹரிஜன மாணவர்களுக்கு என்று விடுதி கள் அமைக்கப்பட்டுள்ளன. அது மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லவேண்டும். இதை எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் கள் குறிப்பிட்டார்கள். ஹரிஜன மாணவர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் அதிகமான விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்காலர்ஷிப் பொறுத்தவரையில், இந்தக் கொள்கை அறிக்கை யைப் பார்த்தால், ஸ்காலர்ஷிப் பெறுகிறவர்களின் எண்ணிக்கை உயர்வது மிக மந்தமாக இருக்கிறது. இந்த எண்ணிக்கை உயருகிற அளவு போதாது. ஹரிஜன மாணவர்களுக்கு இயல்பாகவே கல்வி பெறுவதிலே, தேர்ச்சி பெறுவதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. அந்த வகையில் ஸ்காலர்ஷிப்பை கொஞ்சம் கொஞ்சமாக அதிகப் படுத்தாமல் 1 மடங்கு, 2 மடங்கு என்று மல்டிபில்ஸ் முறையில் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக, வீட்டு வசதியைப் பொறுத்தவரையில், அமைச்சரவர்கள் தந்து இருக்கிற கணக்கிலே, வீட்டு மனைகள் வழங்குவதிலே கூட ஒரு பகுதிதான் அளிக்கப்பட்டிருக்கிறது. சில பகுதிகளில் மனைகளில் வீடுகள் கட்டாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். வழங்கப் பட்டுள்ள 1,90,123 மனைகளில் 1,15,693 வீடுகள் மட்டுமே இது வரை கட்டப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்குப் பண வசதி இல்லாதது தான்.

அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது சொன்னார்கள். அந்த வீடுகள் கட்டுவதற்காகக் கடன் வாங்கிக் கொண்டு சென்ற பெரும் பகுதியினர் அந்தக் கடனை திருப்பித்தருவ தில்லை என்று சொன்னார்கள். இதற்குக் காரணம் அவர்களுக்கு இருக்கும் பொருளாதார நிலை தான். அவர்களுக்கு அந்தக் கடனை திருப்பித் தருவதற்கு வழி இல்லை. ஆகவே, அரசாங்கம் வீடு கட்டித்தரும் திட்டத்தை பெரும் திட்டமாக நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். வீடு கட்டுவதற்குத் தரும் ரூ. 950-ஐ அதிகப்படுத்த வேண்டும். இதற்கு அதிகாரிகள் கூட பரிந்துரை செய்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பணத்தை ரூ. 2,000 மாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வாழக்கூடிய நிலையில் வீடுகள் கட்டு வதற்கும், அதற்குரிய தொகையை அதிகப்படுத்துவதற்கும், அதைக் கடனாக இல்லாமல் ஹரிஜன இலாகாவே ஒரு ஃபேஸ்ட் ப்ரோகிராம் போட்டு அந்த வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன மக்களை தனியாக ஒதுக்கி வைக்கும் வரையில் இந்த ஜாதி வித்தியாசம் ஒழியாது. அந்த மக்களை மற்ற மேல்ஜாதிக் காரர்கள் வாழுகின்ற பகுதிகளிலேயே வாழக்கூடிய அளவில் செய்ய வேண்டும். திடீரென்று எல்லா இடங்களிலும் இப்படிச் செய்துவிட முடியாது. படிப்படியாகச் செய்யலாம். இந்தத் தாழ்த்தப்பட்ட

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1971 ஜூலை 26

மக்கள் மற்றவர்களோடு சேர்ந்து வாழக்கூடிய நிலையை வகுக்க வேண்டும், அவர்களுக்கு வீடுகள் அரசே கட்டித் தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* டாக்டர் ச. அ. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது அரசின் ஹரிஜன நலத்துறை அமைச்சர் கொண்டு வந்து இருக்கும் இந்த ஹரிஜன நல மானியத்தை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைப் பேச வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஹரிஜன நல மானியத்தின் கீழ் ரூ. 700.422 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாரதியார் சொன்னது போல், " ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் " என்று சொல்லியது போல், கல்விக்குப் பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இந்த நேரத்தில் எனது தொகுதியில் தேவைகளைப் பற்றி ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்கலாம் என்று நினைக் கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் அரூர் வட்டம் மிகவும் பின்தங்கிய விட்டம். இந்த வட்டத்தில் ஒரு சில ஹரிஜன் பள்ளிகள் தான் இருக்கின்றன. அதை உயர்நிலைப்பள்ளிகளாக மாற்ற வேண்டும். மருதிப்பட்டியில் ஆரம்பப் பாடசாலை இருக்கிறது. அதை உயர் நிலைப் பள்ளியாக்கும்படி இந்த சமயத்தில் அம்மையார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியத்தில் தருமபுரி மாவட்டத் திற்கும் மிகவும் சிறிதளவு தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் கூடுதலாக ஒதுக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரூர் வட்டத்தில் ஹரிஜன் கிராமங்கள் தான் ஏராளமாக இருக் கின்றன. இந்தக் கிராமங்களில் காலனிகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு சில கிராமங்களில் கூட காலனிகள் அமைக்கப்படவில்லை. இந்தக் காலனி கள் கட்டுவதற்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதற்கும் பணம் ஒதுக்கு வதற்கும் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன் போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இந்த வட்டத்திலுள்ள மக்கள் பெரும்பாலும் ஹரிஜன விவசாயிகள். இந்த விவசாயிகள் நிலம் இல்லாமல் இருக்கிறார்கள். ஹரிஜன நலத்துறை மூலமாக பாழாய்க் கிடக்கும் காடுகள், மொரப்பூர், பொய்ப்பட்டி, காடுகளை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் ஹரிஜன கூட்டுறவுப் பேருந்து நடை பெறுகிறது. இதன் நிர்வாகம் அவ்வளவு நல்லபடியாக நடப்ப தாகத் தெரியவில்லை. ஆகவே, ஹரிஜன நலத்துறையின் மூலமாக அதைக் கண்காணிப்பதற்கும் அதற்குத் தகுந்த அளவு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் விரும்பி, வேண்டி கேட்டுக்கொள் கிறேன்.



1971 ஜூலை 26] [டாக்டர் ச. அ. சின்னராசு]

தருமபுரியில் ஒரு ஹரிஜன கல்லூரி மாணவர்கள் விடுதி துவங்க இருக்கிறது. முதலில் அந்த விடுதியில் 100 மாணவர்கள் இடம் பெறுவார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது தரப் பட்டு இருக்கும் அறிக்கையின் மூலமாக 50 மாணவர்களுக்குத்தான் இடம் இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த 50 இடம் தான் என்று சொன்னால், தருமபுரி மாவட்டத்திலிருந்து வரும் மாணவர்கள் படிக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, அதை 100 மாணவர்கள் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஹரிஜன நலத்துறை மானியத்தில் காந்தி அடிகள் நினைவு சிறப்புக் கல்வி உதவித்தொகை என்ற திட்டம் சொல்லப்பட்டிருக் கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கல்லூரிகளில் புகுமுகு வகுப்பில் பல்கலைக் கழகத் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெறும் மாணவர் ஒருவரையும், மாணவி ஒரு வரையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சாதாரணமாக வழங்கப் படும் உதவித்தொகையுடன் சிறப்புச் சலுகையாக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை மிகவும் வரவேற்று, இந்த திட்டத்தைக் கொண்டுவந்த முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறி இந்த மானியத்தில் நான் கேட்ட சில கோரிக்கைகளைக் கவனித்து நிறைவேற்றிக் கொடுக்குமாறு பணிவன் போடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. மூ. இராமன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971–72-ம் ஆண்டுக்கான ஹரிஜன நல மானியத்தின்மீது பேசு வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாடு அரசு ஹரிஜன மக்களின் முன்னேற்றத் திற்காக இந்த ஆண்டு ஒதுக்கிய 7 கோடி ரூபாயில் கல்வித்துறைக் காக 75 சதவிகிதம் ஒதுக்கியிருப்பதை உள்ளபடியே அந்த தாழ்வு படுத்தப்பட்ட சமுதாயத்தின் சார்பில் மாணவர்கள், மாணவிகளின் சார்பில் வரவேற்று, இந்த மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகள் முன்னேறுவதற்கும், உழவு மாடுகள் வாங்கு வதற்கும், கிணறுகள் வெட்டக் கொடுக்கப்படும் தொகைகள் உயர்த் தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே கிணறு தோண்டக் கொடுத்த ரூ. 1,500 இன்றைக்கு 2,000 ஆக உயர்த்தப்பட்டிருப்பது வரவேற் கத்தக்கது. உழவு மாடுகள் வாங்க இப்பொழுது ரூ. 400-லிருந்து 500 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவற்றிற்காக அமைச்சர் அவர்களுக்கும், செயலாளர் அவர்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

மாணவர் விடுதிகளில் ரூ. 18, 20 என்று கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு அதில் ரூ. 5 உயர்த்தப்பட்டிருப்பது போற்றத்தக்கது.

[திரு. மு. இராமன்]   [1971 ஜூலை 26

என்னுடைய தொகுதியில் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், தென்னாற்காடு மாவட்டத்தில் குடியிருப்புக்காக ரூ. 15 லட்சம் தேவைப்படுகிறது. அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து குடியிருப்பு மனைக்காக அதிகமாக ஒதுக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப் பிற்பட்ட பகுதிகளில் 2, 3 லட்சம் என்று ஒதுக்குவது போதாது. 5, 6 காலனிகளுக்குத்தான் வரும். இன்றைக்கு இருக்கும் நிலையில் 15 லட்சமாவது ஒதுக்கித்தர வேண்டும் என்று மாவட்டத்தின் சார்பில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வளவனூர் சாலையம் பாளையம் குடியிருப்பு மனைக்கு 4(1) (எ) நோடிபிகேஷன் போட்டு, நிலச்சொந்தக்காரர் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து அது தீர்ப்பு ஆகாமல் இருக்கிறது. அமைச்சரவர்களும், செயலாளர் அவர்களும், இதற்காகத் தனிக் கவனம் செலுத்தி, உயர் நீதி மன்றத்தில் உள்ள வழக்கைத் தீர்த்து, ஏழை எளிய மக்களுக்கு வாழ்க்கை வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை நீக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து, போர் குழாய்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாங்குப்பம் காலனி, வி. நெற்குளம், மாத்தூர் காலனி போன்றவைகளுக்கு போர் குழாய்களை அமைத்துத் தண்ணீர் கொடுக்க முடிவு எடுக்கப்பட்டது. 100, 150 அடி போனால்தான் தண்ணீர் கிடைக்கும். ரூ. 4,000 போதாது. போர் குழாய்கள் அமைத்து, மேநீர்த் தேக்கம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கண்டமங்கலம் அரசு உயர் நிலைப் பள்ளி விடுதியில் 25 மாணவர்கள் இருக்கிறார்கள். மனுக்கொடுத்த மாணவர்கள் ஒருவருக்குக்கூட இடம் கிடைக்கவில்லை. அந்த 25 இடத்தை 50 இடமாக உயர்த்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நில உச்சவரம்பினால் கிடைக்கும் உபரி நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தலைக்கு ஒரு ஏக்கர் என்று குடும்பத்திற்குக் கொடுத்து வாழ வகைசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேச இந்தச் சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் நலன் மானியத்தின்மீது ஒரு சில வார்த்தைகள் பேசுவதற்கு முன்னதாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தகுதிமிக்க நம் முதல்வர் அவர்களுக்கு கவுரவப் பட்டத்தை அளித்தமைக்காக, நான் என் கட்சியின் சார்பிலும், என்னுடைய சார்பிலும் பாராட்டி என் பேச்சைத் துவங்குகிறேன்.

மனிதன் பிறப்பினால் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற பாகுபாட்டை அழித்து ஒழிக்க வேண்டும் என்கிற இஸ்லாமிய மார்க்கக் கோட்பாடுகளுக்கேற்ப, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான் பேசுவது மிக மிகப் பொருத்தமானது என்று கருதுகிறேன். எனது தொகுதியில் அரிசன மக்களைப் பார்த்தால், அவர்களுடைய நிலையைப் பார்த்தால் இரத்தக் கண்ணீர் விட்டுத்தான் இந்த அவையில் பேச வேண்டும். மிக மிகத் தாழ்ந்த நிலையில் அவர்கள் வாழ்கிறார்கள். எங்கு சென்றாலும், குடிநீர் இல்லாத குடிசை வீடுகள், வருவாய் இல்லாத நிலைமை. உடைகூட இல்லாத கொடுமை. மேலே சட்டைகூட இல்லாமல், ஒரு துண்டைக் கட்டிக்கொண்டு இருக்கும் அலங்கோலமான காட்சி. அவர்களைக் கை தூக்கிவிடும் நன்னாள் என்று வருமோ என்று காத்திருக்கிறோம்.



1971 ஜூலை 26]   [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

என்னுடைய தொகுதியில் விவசாயக் கிணறுகளில் எல்லாம், பம்பு செட்டுகள் வைத்திருப்பதால், கவலைகளுக்கு வேலையின்றி அதைச் சீர்செய்து பிழைத்துவந்தவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய அரசு குடியிருப்பு மனைகளுக்கு வசதி செய்துகொடுத்தாலும், வீடுகள் கட்டித் தர வசதி போதுமான அளவில் செய்யவில்லை. அதைக் கவனிக்கும் போது, நிதிநிலை அறிக்கையில் 350 கோடி ரூபாயில், 7 கோடிதான் தாழ்த்தப்பட்டவர்களுடைய நலனுக்காகச் செலவிடப்படுகிறது. இது இரண்டு விழுக்காடுதான். பல்லாண்டுக் காலமாகத் தாழ்த்தப்பட்ட மக்களை கைதூக்கிவிட நாம் முயற்சிகள் செய்தாலும், இந்த 2 சதவிகிதம் என்பது போதாது. ஆகவே, அதிகமான தொகை ஒதுக்கப்படவேண்டும். அவர்களை மேம்பாட்டிற்குக் கொண்டுவர வழிவகைகளைச் செய்து, அவர்களை மேலான நிலைக்கு நடாத்திச் செல்ல இந்த அரசு முன்வரவேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களில் கழிப்பு இடம்கூட இல்லை. இவர்களுக்குக் கல்வி அறிவும் இல்லாததால், அங்கேயே மலஜலம் கழித்து, வசிக்கமுடியாத அளவுக்கு அசூசையான நிலையில் இருக்கிறார்கள். குறைந்த பட்சம், எங்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அரசாங்கத்திலேயே கழிப்பு இடங்கள் அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

இதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், மத்திய சர்க்காருடன் போராடி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25 கோடிக்குக் குறைவு இல்லாமல் மானியம்பெற்று, நம் மாநிலம் அதோடு தானும் 25 கோடி கொடுத்து, மொத்தம் 50 கோடி ரூபாயில் ஆண்டு ஒன்றுக்கு 5 மாவட்டங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடுகள் செய்து, மாவட்டத்திற்கு 10 கோடி ரூபாய் மதிப்புள்ள வீடுகள் கட்ட என்று ஒதுக்கிச் செயல்பட வேண்டும். இல்லையென்றால், இன்னும் பல ஆண்டுகளுக்கு, இந்தத் துறையை வைத்துக்கொண்டு, அவர்களுடைய அவல நிலையைப்பற்றிப் பேசிக் கொண்டேதான் இருப்போம். செயலில் ஒன்றும் இருக்காது.

பல இடங்களில் மின் விளக்குகள் போட்டிருந்தாலும், விளக்குகள் எரிவதே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் மேல் அதிகாரிகளுக்கு விண்ணப்பம் கொடுப்பதும் இல்லை. கொடுத்தாலும் அவர்கள்

கவனிப்பது இல்லை. அரசு ஒரு கட்டளை போட்டு, பிற்பட்ட பகுதிகளில் விளக்குகள் எரியாமல் இருப்பது அறவே தவிர்க்கப்பட வேண்டும் என்று ஆணையிடவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே தொழு நோய் அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாகக் குழந்தைகள்கூட பள்ளிக் கூடங்களுக்கு வரவொட்டாமல் தடுக்கப் படுகிறார்கள், அவர்களுக்கும் அந்த நோய் இருப்பதாக. ஆகவே அந்தப் பகுதியில் நடமாடும் மருத்துவ சாதனத்தைக் கொண்டு சென்று தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் இடங்களில் மருத்துவ வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப் பட்டார்)

* திரு. அ. சின்னசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்தின் அமைச்சரும், தாய்க் குலத்தின் பெருமை மிக்கவரும் கொண்டு வந்துள்ள இந்த மானியத்தை வரவேற்று, இந்த வாய்ப்பினை அளித் தமைக்கு நன்றி தெரிவித்து என் கருத்துக்களைச் சொல்லுகிறேன்.

இந்த மானியத்தில் கல்விக்காக ஒதுக்கியிருக்கும் தொகை போதுமா என்றுகேட்டால், போதாது என்று சொல்ல விரும்பு கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயம் எங்கும் இருக்கும் வறுமை, அறியாமை போக, இன்னும் அதிகமான கல்லூரிகள் தோன்ற வேண்டும். தமிழகத்தில் ஏற்பட்டுவிட்ட மதுவிலக்கு ரத்து என்ப தால் தாழ்த்தப்பட்ட மக்கள் நிலைமை சீராகுமா அல்லது பாழாகுமா என்பது சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. தாழ்த் தப்பட்ட மக்களிடையே ஏற்பட்டிருக்கும் பொருளாதார முன்னேற்றம், கல்வி முன்னேற்றம் பாழாகும் என்று ஒரு சதிக் கூட்டம் பாமர மக்களிடையே சொல்லிவருகிறது.

பி.ப. 1·00. அதைப் போக்கடிக்கின்ற வகையில் தமிழக சர்க்கார் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் பல சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் "அட்மிஷன்" ஆகும் நேரத்தில் பல இன்னல்களை ஏற்க வேண்டி யிருக்கிறது. அவர்கள் முன்பணமாக அதாவது 100, 125 ரூபாய் வரை கட்ட வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தை பின்னாலே திருப்பித் தருவார்கள் என்று சொல்லுகிறார்கள். 100, 125 ரூபாய் கட்டுவது அந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். அப்படிக் கல்லூரியிலே சேர்ந்து விட்டதற்குப் பின்னால் அந்த மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி இல்லாமல் இருக்கின்ற காட்சியை நாம் பார்க்கிறோம்.

கல்லூரியிலே சேர்ந்த அத்தனை மாணவர்களுக்கும் ஹாஸ்டல் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், நம்முடைய இயக்குநர் அவர்கள் கல்லூரியிலே உள்ள



பிரின்ஸ்பால் அத்தனை பேரையும் கூட்டி வைத்து, அந்த மாணவர் களுக்கு, கல்லூரியிலே சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஹாஸ்டல் வசதியை செய்து தர வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்.

இந்தத் துறையின் சார்பாக இன்னொன்றையும் சொல்லுகிறேன், கல்லூரியிலே இருப்பதைப்போல ஹாஸ்டல் வசதி ஆரம்ப பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் இருக்க வேண்டும்.

மற்றும், நகரங்களிலே இருப்பதைப்போல் "நர்சரி ஸ்கூல்" ஒவ்வொரு யூனியனிலேயும், பஞ்சாயத்துக்களிலேயும் ஆரம்பிக்கப் பட வேண்டும். அப்படி ஆரம்பித்தால்தான் பள்ளிக்கூடங்கள் செல்லுவதற்கு முன்னால் அந்த குழந்தைகளுடைய மன நிலை பக்கு வப்படுத்தப்படவும், இளம் உள்ளங்கள் வளர்ச்சி பெறவும் உதவி யாக இருக்கும்.

மேலும், எல்லா ஹாஸ்டலுக்கும் நம்முடைய டிபார்ட்மென்ட் சார்பாக பில்டிங் ஏற்படுத்தித் தர வேண்டும். முதலிலே "கேர்ல்ஸ் ஹாஸ்டலுக்காவது" வழி வகைகளை செய்ய வேண்டும். என்னுடைய ஜெயங்கொண்டான் தொகுதியிலே அப்படிப்பட்ட நிலைமையிலே பெண்கள் இருக்கிறார்கள் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். எந்த பக்கம் பார்த்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அந்த இடத்திலே படிக்கிற பெண் குழந்தைகளுக்குப் பாது காப்பு இல்லை. அந்த விடுதியோ ஒதுக்கப்பட்ட இடத்திலே இருக் கிறது. அங்கே சரியான சுவரோ, வாசற்படியோ இல்லை. எனவே, கேர்ல்ஸ் ஹாஸ்டலுக்காவது பில்டிங் கொடுப்பதிலே முக்கியத் துவம் தரவேண்டும்.

நம்முடைய அரசாங்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்று கருதி 2,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதாகத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அதைப்போல் படித்து விட்டு பட்டத்தோடு வீட்டிலே இருக்கின்ற கிராமப்புற மாணவர் களுக்கு, இந்த வெல்பேர் டிபார்ட்மென்டில் மூலமாக ஏதாவது ஒரு வகையிலே "ஜாப் ஓரியன்டேஷன்" கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (மணியடிக்கப்பட்டது)

* திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இந்த ஹரிஜன மானியத்தின்மீது என்னுடைய கருத்தை கூற விரும்புகிறேன்.

இந்த மானியத்தின்கீழே 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந் தாலும், அதிகமாக 45 லட்சம் ரூபாய் முந்திய ஆண்டை விட ஒதுக் கப்பட்டிருந்தாலும், அந்தத் தொகை போதாது என்று நான் கருதுகிறேன். இந்த மாநிலத்தின் ஜனத்தொகையிலே 3-ல் ஒரு பங்கு ஹரிஜனங்கள் இருக்கிறார்கள். இந்த ஒதுக்கீடு பணங்களை அந்தந்த மாவட்டத்தின் ஹரிஜன நல இலாகாவிற்குக் கொடுத்து விட்டார்கள். ஹரிஜன நல இலாகாவினால் முன்பு கல்லூரி மாண வர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணச் சலுகை கார்டு கொடுத்து வந்தார் கள். ஆனால், இப்பொழுது அந்த அதிகாரம் மாவட்டங்களிலே பிரித்துக் கொடுத்தாகி விட்டது. இதனால் மாணவர்கள் பணம்

பெறுவது தாமதப்படுகிறது. ஆகவே, இந்த மாநிலத்திலுள்ள அதிகாரத்தை அப்படியே வைக்க வேண்டும். மாவட்டங்களிலே சென்று ஹரிஜன அதிகாரிகள் இதைச் செயல்படுத்துவதற்கு, ஸ்காலர்ஷிப் பணத்தை உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேமாதிரி நம்முடைய மாநிலத்திலே ஹரிஜன நல இலாகா, பின் தங்கிய நல இலாகாவோடு ஒன்று சேர்ந்திருக்கிறது. அப்படி ஒன்று சேர்ந்திருக்கும் பொழுது அந்த இலாகாவிலே வரும் செலவு கள், மின்சாரச் செலவு, டெலிபோன் செலவு, இது பூராவும், அரிசன நல பண்டிலேயிருந்துதான் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதிலே பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அரிசன நல இலாக்காவிலே இருந்து போகிறது. அத்தோடு இன்றைக்கு அரிசன நல இலாக்கா விலே இருக்கக்கூடிய "ஜாயின்ட் செகரட்டரி" பதவி தேவையா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். செகரட்டரி என்று ஒருவர் இருக்கும்பொழுது இது தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

அத்தோடு மாத்திரமில்லாமல், இன்றைக்கு ஒவ்வொரு மாவட் டத்திலேயும் இருக்கின்ற நகர்ப்புறப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள்தான் துரிதமாகவும், அதிகபடியான ஸ்காலர்ஷிப் பணமும் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் திலேயும் இருக்கக்கூடிய கிராமப் பகுதியிலேயும் இருக்கும் மாண வர்களுக்கு அப்படி ஸ்காலர்ஷிப் பணம் கிடைப்பதில்லை. அந்த ஸ்காலர்ஷிப் பாரம்கூடக் கிடைப்பதில்லை. நகர்ப்புறங்களிலே அப்படி முதலிலே ஸ்காலர்ஷிப் கொடுப்பதைத் தவிர்த்து, கிராமப் புறப் பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த வீடு கட்டும் திட்டத்திலே பலர் விண்ணப்பங்களைப் போட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஈரோடு தாலுக்காவிலே இப்படி விண்ணப்பத்தைப் போட்ட ஹரிஜன மக்கள் 6 மாதத்திற்கு மேல் காத்திருக்கிறார்கள். ஆயினும் அந்த இலாகா, அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரியவில்லை.

உடுமலைப்பேட்டை பிர்க்காவிலேயும் இதே நிலைமைதான். எனவே, அந்த முறையிலே எந்தெந்தப் பகுதியிலே ஹரிஜனங்களுக்கு வீட்டு மனை வினியோகிக்க இருக்கிறார்களோ, அந்த இடங்களிலே எல்லாம் சென்று அந்த வீட்டு மனுப்போட்டவர்களின் விண்ணப்பங் களைப் பரிசீலனைசெய்து அவர்களுக்கு அதைக் கூடிய சீக்கிரம் கொடுக்க, மாவட்ட அளவிலே ஒரு குழு அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். 18 சதவீதம் ஒதுக்கப்பட்டது. தாழ்த் தப்பட்ட மக்கள் முன்னேறினால்தான் இந்நாடு முன்னேறும் என்று மகாத்மா காந்தி கூறி இருக்கிறார். எல்லா உத்தியோகங்களிலும் ஹரிஜனங்கள் நிரப்பப்படவேண்டும். (மணி அடிக்கப்பட்டது)



* திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, ஹரிஜன நலத் துறை மானியத்தை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1967-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு எண்ணற்ற சலுகைகளை ஆதித் திராவிடர்களுக்கு வழங்கி இருந்தாலும், ஒட்டு மொத்தமாக இன்றைக்குக் கணக்கு எடுத்துப் பார்க்கும்பொழுது எதிர்பார்த்த அளவுக்கு ஆதித் திராவிட சமுதாயம் முன்னேற்றம் அடைந்திருப்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், உள்ளபடியே இது முன்னேற்றம்தானா என்று யோசித்துக் கூற வேண்டிய அவல நிலை தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. நான் அதிகமாகச் சொல்லாவிட்டாலும் இன்றைக்கு ஹரிஜன நல அமைச்சராய் இருக்கின்ற அம்மையார் அவர்கள் இல்லத்திலே பணிபுரிகிற பணி யாளர்களைப் பார்த்து "நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்" என்று கேட்டால், நாங்கள் அம்மையார் வீட்டிலே வேலை செய் கிறோம் என்று சொல்லத் தயங்குகின்ற நிலை அங்கே இருக்கிறது என்றால், தாழ்த்தப்பட்ட சமுதாயம் இன்னும் முன்னேறவில்லை என்பது நமக்கு விளங்குகிறது. ஆகவே, அரசாங்கம் தன்னுடைய செயல் முறைத் திட்டங்களைத் தீவிரப்படுத்துவதன்மூலமாக, தாழ்த் தப்பட்ட மக்களுக்கு நல்ல பல சலுகைகளைக் காட்ட வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

நான் கேள்விப்பட்டவரை இன்றைய வரையில் உயர் நீதி மன்றத்திலே ஒரு ஆதி திராவிடர்கூட நீதிபதியாக இல்லை என்பது தான். இதைப் பார்க்கும்பொழுது இந்த மக்களின் நிலை என்றைக்கு மாறுமோ என்று நாம் எண்ண வேண்டியிருக்கிறது.

ஏறத்தாழ 28 ஆயிரம் பேர் பணிபுரியும் சென்னை மாநகராட்சி மன்றத்திலே விரல்விட்டு எண்ணத்தக்க அளவிற்குக்கூட அதில் ஆதித் திராவிடப் பெருங்குடி மக்கள் பணி ஏற்கவில்லை. கேட்டால், அரசாங்கத்தினால் சொல்லப்பட்டுள்ள விகிதாச்சார முறை இம் மன்றத்திற்குப் பொருந்தாது என்று சொல்லுகின்றார்கள்.

ஒரு காலத்தில் நாமே பேசியிருக்கின்றோம், "எலிகளுக்கும் நண்டுகளுக்கும்கூடத் தனித்தனியாக வளைகள் இருக்கின்றன, ஆனால் நாட்டின் முதுகெலும்பு போன்ற ஆதித் திராவிட மக்களுக்கு வாழ் வதற்கு என குடிசைகள் கிடையாது" என்று. இந்த நிலைதான் இன்னமும் நீடித்துக்கொண்டிருப்பது உண்மையிலேயே வருத்தத் திற்குரிய ஒன்றாகும். எனது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு என மனைகள் பெரும்பாலாக நஞ்சை நிலங் களில் வீடுகளுக்கான மனைக்கட்டுகள் வேண்டும் என்று கோரி மனுக்கள் கொடுக்கப்பட்டிருந்தும் இன்னும் கொடுக்கப் படாமலேயே இருக்கின்றன. கொடுக்கப்பட்டுள்ள இடங்களிலே அப்படிப்பட்ட நஞ்சை நிலங்களை மேடாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கேள்வி நேரத்தின்போது வருவாய்த்துறை அமைச்சர் அவர் களிடத்திலே கேட்டுக் கொண்டபடி குறைந்தபட்சம் ஜாதிபேதங் களை ஒழிப்பதற்கு, கிராமங்களிலே நியமிக்கப்படுகின்ற சாதாரண

[திரு. ந. சோமசுந்தரம்] [1971 ஜூலை 26

உத்தியோகங்கள், அதாவது கர்ணம், மணியம் போன்ற உத்தியோகங்களிலே, ஆதித் திராவிடர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நியமித்தால் அது ஜாதிபேதத்தினை ஒழிப்பதற்கு உதவியாக இருக்கும். மேலும் அரசாங்க வக்கீல்களை நியமனம் செய்யும் நேரத்திலே, நான் அறிந்த வரையில் ஆதித் திராவிடத் தோழர்களுக்கு எந்தவிதமான முன்னுரிமையோ சலுகையோ இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அரசாங்க வக்கீல்களுக்கான நியமனம் செய்யும்போது இதையும் கவனத்தில்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆதித் திராவிடரல்லாதார் அப்பதவியிலிருக்கும்போது, அரிசனங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் வரும்போது அவர்களுடைய உரிமைகள் சரிவரப் பாதுகாக்கப்படுவதில்லை. அவர்கள் காண்பிக்க வேண்டிய பொறுப்புணர்ச்சிகளைக் காண்பிப்பதில்லை. எனவே இது விஷயத்தில் அரசு கவனிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்,

மேலும் என் தஞ்சை மாவட்டத்தையும், பக்கத்திலுள்ள திருச்சி மாவட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அரிசன முன்னேற்றத்தில் தஞ்சை மாவட்டம் பின்தங்கியிருப்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. திருச்சி மாவட்டத்தில் ஆதித் திராவிட மக்கள் பெற்றுள்ள நன்மைகளும் சலுகைகளும் மற்ற மற்ற ஆக்க வேலைகளும் தஞ்சை மாவட்டத்தில் காணமுடியவில்லை என்றால் இதற்குக் காரணம் என்னவாக இருக்க முடியும்? தஞ்சை மாவட்டத்தில் உள்ள அரிசன இலாகாவில் உள்ளவர்கள் எவ்வளவு அலட்சியமாகவும் உணர்வு இல்லாமலும் பணிபுரிகின்றார்கள் என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம். (மணியடிக்கப்பட்டது)

* திரு. ஆ. கருப்பையா: தலைவர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து இரண்டொரு கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

ஆண்டுக்காண்டு இம்மானியம் பெருகிக்கொண்டே வருகின்றதைப் பார்க்கிறோம். இதுபோன்றே இச்சமுதாயமும் வளர்ந்து கொண்டே வருகின்றதை நாம் எல்லோரும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். சமுதாய வளர்ச்சிக்கொப்ப இந்த மானியத்தையும் நாம் பெருக்கிக்கொள்ள வேண்டிய நிலையிலிருந்தாலும்கூட நான் ஆசைப்படுவது, நாம் இதைவிட வேகமாக வளரவேண்டும் என்பது தான். நல்லதொரு தலைமையின்கீழ் இன்றையதினம் தமிழகம் இயங்கிக்கொண்டு வருகின்றது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவார்கள். எனவே இந்த நேரத்திலேயே நாம் நல்ல வளர்ச்சியுற வேண்டும் என்று ஆசைப்படுவதில் யாருக்கும் பொறாமையிராது என்றே கருதுகிறேன்.

வேலைவாய்ப்பினைப் பொறுத்தமட்டில் 18 சதவிகிதம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட பஞ்சாயத்து யூனியன், நகராட்சி போன்ற அமைப்புகளில் இன்னும் மருந்துக்குக்கூட இடமில்லாத நிலைதான் இன்னும் நீடிக்கிறது. இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இச்சமுதாய முன்னேற்றத்திற்கென பல முறைகளை



1971 ஜூலை 26] [திரு. ஆ. கருப்பையா]

அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலே பொருளாதார அடிப்படையில் இச்சமுதாயத்திற்கு இன்னும் பல வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

கிராமங்களிலே அபிவிருத்தி ஏற்படுவதற்கென ஆடு மாடு வளர்ப்புக்கென பல சங்கங்களை அமைத்துச் செயல்படுத்தி வருகின்றார்கள். இப்படிப்பட்ட சங்கங்கள் ஆயிரம் பேருள்ள அரிசன கிராமங்களிலெல்லாம் கண்டிப்பாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

இது மட்டுமின்றி, மற்ற மற்றச் சமுதாயத்தினரைப்போலன்றி, அரிசன சமுதாயத்தில் உள்ள பெண்களும் ஆண்களோடு நிலங்களிலே வேலை செய்ய வேண்டியிருக்கின்றது. அவர்கள் இப்படி வேலைக்காகச் செல்லும் நேரத்தில் அவர்களுடைய குழந்தைகளைப் பேணிவளர்ப்பதற்கென இல்லங்கள் ஆயிரம்பேருள்ள அரிசனக் கிராமங்கள்தோறும் கண்டிப்பாக இருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏன் இதை வலியுறுத்துகிறேன் என்றால் இரண்டாண்டுகளுக்கு முன்பு என் கிராமத்திலேயே வீட்டில் விட்டு விட்டுப்போன தன் குழந்தை, தாய் திரும்புகிறபோது பிணமாகத் தொட்டிலில் இருப்பதைக் கண்டாள். சுற்றிச்சுற்றி வந்து அக்குழந்தை புடவையால் கழுத்து இறுக்கப்பட்டு இறந்துவிட்டது. எனவே குழந்தை பராமரிப்பு நிலையங்கள் கிராமங்கள்தோறும் வேண்டும்.

ஆறு வயதுக்குக் குறைவாக உள்ள குழந்தைகளின் பராமரிப்பிற்காகக் கிராமங்களிலே பால்வாடி நிலையங்கள் இருக்கின்றன இவைகள் முக்கியமாக அரிசனச் சேரிகளில்தான் இருக்க வேண்டும். ஆனால் இன்றுள்ள நிலையில் சேர்மென்கள் இருப்பவர்கள் தங்களுடைய ஊரிலேயே அவற்றை அமைத்துக் கொள்ளுகிறார்கள். எனவே இவற்றை அரிசனச் சேரிகளில் அமைக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு கல்வி ஸ்தாபனங்களிலே அரிசன மாணவர்கள் புக வேண்டுமானால் அதிகமான எண்ணிக்கை பெற்றவர்களையே எடுத்துக்கொண்டு மற்றவர்களுக்கு இடமில்லை என்று சொல்லி விடுகிறார்கள். இதனால் குறைந்த எண்ணிக்கை பெற்ற மாணவர்களுக்குக் கல்லூரிகளிலே இடம் இல்லாது போய்விடுகிறது. எனவே அரசால் ஒரு நியதி ஏற்படுத்தப்பட வேண்டும். அரிசனங்களைப் பொறுத்த மட்டில் குறைந்தது இவ்வளவு மார்க்கு இருந்தாலே போதும் என்று வைக்கப்பட வேண்டும்.

அடுத்து, கிராமங்களிலே மக்களுக்கென வானொலிப்பெட்டிகளைக் கொடுக்கிறோம். இவற்றைக் கொடுக்கும்போது கிராம மக்களைக் கூட்டி வைத்து அங்குள்ள எம்.எல்.ஏ. முன்னிலையில் கொடுக்கப்பட வேண்டும். பல சந்தர்ப்பங்களிலே என்ன நேரிடுகிறது என்றால் செல்வாக்குப் படைத்த கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களுக்கு இஷ்டமானதொரு இடத்திலே வைத்துக் கொண்டு விடுகின்றார்கள். அவற்றின் பலனை அரிசனங்கள் அவ்

றைக்கேட்டு அனுபவிக்க முடிவதில்லை. ஒரு இடத்திலே இப்படி வைக்கப்பட்ட ரேடியோ பெட்டியை போலீஸ் உதவியைக்கொண்டு கதவை உடைத்து வெளியே எடுக்கவேண்டி ஏற்பட்டது. எனவே இப்படிப்பட்ட ரேடியோக்கள் தரும்போது அவை மக்கள் முன்னிலையிலும் சட்ட மன்ற உறுப்பினர் முன்னிலையிலும் தரப்பட வேண்டும் என்று சொல்லி இத்திட்டம் மேலும் விரிவு படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. ந. நாச்சியப்பன்: தலைவரவர்களே, அரிசனத் துறை மானியத்தை வரவேற்று இரண்டொரு கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்தொகுதியிலுள்ள மலைவாழ் மக்களுடைய நிலைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஏறத்தாழ 800 சதுர மைல் உள்ள என்னுடைய கள்ளக்குரிச்சி வட்டத்தில் 300 சதுர மைல் பரப்புள்ள கல்விராயன் மலைப்பகுதியில் ஏறத்தாழ 30,000 மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நாம் எல்லாம் முன்னேற்றமடைந்துள்ள நாகரீக சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டுள்ள இந்த நேரத்திலே இந்தப் பகுதிவாழ் மக்கள் மக்களாக இல்லாமல், மாக்களாகவே மிருகங்களோடு அவற்றையொத்த வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சோஷலிஸ சமுதாயம் சமத்துவம் என்று சொல்லிக் கொண்டுள்ள இந்த நேரத்தில் ஒரு தனிமனிதனின் வருமானத்திற்கு ஆயிரக்கணக்கில் வரிகள்மூலம் இந்தக் காலத்தில் அங்கே வாழும் மக்கள் கொடுத்து வருகின்றார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக அவர்கள் அங்குள்ள ஜாகீர்தாருக்கு என்னென்ன வரிகளைக் கட்ட வேண்டியிருக்கிறது என்று சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏர் உழவிற்காக ஏர் ஒன்றுக்கு ரூ. 2.50 என்றும் மரம் வெட்டுவதற்கென கொடுவாள் வைத்துக்கொண்டிருந்தால் கொடுவாள் ஒன்றுக்கு ரூ. 1.25 என்றும் திருமணம் ஆனவர்களுக்கு திருமணம் செய்துகொள்ளுவதற்கு ரூ. 15 என்றும் மணமாகாதவர்களுக்கு ரூ. 2 என்றும் விவாகரத்து செய்து கொண்டவருக்கு ரூ. 2 என்றும், 25 வீடுகள் கொண்ட கிராமத்திற்கு ஐந்து மூட்டை தானியம் என்றும் ஜாகீர்தாருக்குக் கொடுக்கவேண்டும் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு இன்னும் குடிதண்ணீர் வசதி இல்லாமலேயே இருந்துவருகிறது.

நடமாடும் வைத்தியசாலைகள் வசதிகள்கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இவ்வசதிகள் வேறு மலைவாழ்பகுதி மக்களுக்கு அளிக்கப்பட்டிருந்தாலும் என் தொகுதி மக்களுக்கு அளிக்கப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே அந்தப் பகுதியில் உள்ள மக்கள் சாலை வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே அத்தியாவசியமாகத் தேவைப்படுகிற சாலைகளைப் போட்டுத்தர வேண்டும்.



ஒரு காலத்தில் கல்விக்கே கண்கொடுத்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் ஆண்டகாலத்தில் ஓராசிரியர் பள்ளி மலையில் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் காலத்திலேயே அது மூடப்பட்டும்விட்டது. நம்முடைய ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் அங்குள்ள மக்களின் பிள்ளைகள் கல்வி பயிலவேண்டும் என்பதற்காக கோமுகி அணைப்பகுதியில் ஒன்றும், சங்கராபுரம் பகுதியில் ஒன்றும் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் மலைக்கு மேல் உள்ளவர்கள் இருபது மைல், இருபத்தைந்து மைல் தாண்டி கீழே வந்து இந்தப் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே மலையிலேயே பள்ளியைத் துவக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, மலைவாழ் பகுதிகள் ஒரு பகுதிக் காட்டைக் கொளுத்தி பயிர்வைப்பதும், அடுத்த ஆண்டு வேறு பகுதியைக் கொளுத்தி பயிர்வைப்பதுமாகப் பல்லாண்டுகளாகப் பயிர்செய்து வருகிறார்கள். அப்படி புனல்காடு கொளுத்துவதைக் கொளுத்தக் கூடாது என்பதாகக் காட்டு இலாக்கா ஆணை பிறப்பித்திருப்பதனால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதற்கு வழிகாண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் எங்கள் பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்கு எந்தவிதமான கடனும் கொடுக்கப்படவில்லை. அதுபோல பாசனக் கிணறு வெட்டவும் கடன் கொடுக்கப்படவில்லை. நம்முடைய ஆட்சியிலாவது அந்த மலைவாழ் பகுதி மக்கள்மீது இரக்கம்கொண்டு பற்பல வசதிகளையும் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. இரா. மாணிக்கவாசகம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஹரிசன நல இலாக்கா மானியத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியைவிட ஏறத்தாழ 40, 45 லட்சம் ரூபாய் இவ்வாண்டு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகை 1969-70-ல் 14 லட்சத்து 354 ரூபாயாக இருந்தது. அதன் மூலம் 744 பேர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 1970-71 இல் ஒதுக்கப்பட்ட தொகை 13 லட்சத்து 292 ரூபாய் என்கிறார்கள். இப்படி ஒதுக்கப்பட்ட தொகையில் பயன்பெற்றவர்கள் 1,004 என்கிறார்கள். 1969-70-ல் அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தும் பயன் பெற்றவர்கள் 744 என்கிறபோது 1970-71-ல் குறைந்த பணத்தில் 1,004 பேர்கள் எவ்வாறு பயன் பெற்றிருக்க முடியும்? ஒன்று அவ்வாண்டு மாணவர்களுக்குக் கொடுத்த தொகை குறைக்கப்பட்டதா? இல்லை என்று சொன்னால் முன்பே வழங்கப்பட்டவர்கள் பயன்பெறவில்லையா என்பதை உணர வேண்டும். எங்கே தவறு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அவர்கள் தொழில் செய்வதற்கு மூலதனமாக சென்ற ஆண்டு 10.23 லட்சம் கடனைக் கொடுக்கப்பட்டிருக்கிறது . இதற்கு அதிகமான விண்ணப்பங்கள் வருகின்றன. இதற்கு மிக, மிக ஆதரவு இருக்கிறது என்று சொல்லிவிட்டு இவ்வாண்டு அதற்காக ரூ. 10 லட்சமே ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி ஆதரவு உள்ள இனத்தில் அதிகமான தொகை ஒதுக்கப்படவேண்டும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் மற்ற கல்வி போன்ற இதர துறைகளிலே தானே முன்னேறுவதற்கு முன் வருவார்கள்.

இன்றையதினம் பொருளாதாரத் துறையில் அவர்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதனால்தான் தங்களுடைய பிள்ளைகளைப் பண்ணைகளில் வேலைக்குச் சேர்த்துவிடுகிறார்கள். அந்த நிலைமை மாறவேண்டுமென்றால்—தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் ஜகத்தினை அழித்திடுவோம்—பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை—என்று பாடிய மகாகவி கனவை நினைவாக்கப் பாடுபடுகிற இந்த ஆட்சி அவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையப் பாடுபடவேண்டும்.

இப்போது அவர்களுக்கு வழங்கப்படுகிற தையல் மிஷின் போன்றவைகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. ரிப்பேர் ஆகிவிட்டாலும் உடனடியாக அதை சரி செய்ய முடியவில்லை. யாரும் அரிசனங்களிடம் துணி தைக்கவும் கொடுப்பதில்லை. ஆகவே அவர்களுக்கு அதிகமாக ஆடுகள், கோழிகள், மாடுகள் போன்றவற்றை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் அவர்கள் மிகுதியாகப் பயன்பெறுவார்கள்.

என்னுடைய பகுதியில் கணபதி, தென்மேடு, உக்காரம் போன்ற இடங்களில் அவர்களுக்கு வழங்குவதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. காட்டு நிலங்களை நீண்ட காலக் குத்தகைக்குவிட்டால்தான் அவர்கள் நல்ல முறையில் வளர்ச்சியைப் பெருக்க முடியும். கூட்டுறவுத்துறையில் விவசாயத்தில் ஈடுபட அவர்களுக்கு நிலம் வழங்கி, கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள உதவ வேண்டும்.

உச்சவரம்புச் சட்டத்தின்மூலமாக வருகிற நிலங்களை கூட்டுறவுத் துறை மூலமாக அரிசனங்களுக்கு வழங்க ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

* திரு. பா. நாகலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஹரிஜன நலத்துறை மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே தமிழக அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்களை தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்காகச் செய்திருந்தும் சில குறிப்பிட்ட சங்கடங்கள் இருக்கின்றன. மாவட்ட நலத்துறை அதிகாரி எங்களுடைய மாவட்டத் தலைநகராகிய காஞ்சிமாநகரில் இருக்கிறார். எங்களுடைய பகுதியில் பெரும்பான்மையான ஊராட்சிகளில் இணைப்புச் சாலை கிடையாது. குடிதண்ணீர் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை.



அரிசன நலத்துறையைக் கேட்டால் கிணறுதான் தர முடியும். அதற்கு ஓவர்ஹெட் டாங்கு கொடுக்க முடியாது என்கிறார் இயக்குநர்.

செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரியில் நல்ல அடிநீர் ஊற்று இருக்கிறது. ஆயில் ரிபைனரிக்காக 120 அடி, 130 அடி ஆழத்தில் கிணறு அமைத்து தண்ணீர் வருகிறது. ஆனால் ஹரிஜன காலனிகளில் 18 அடி ஆழம் தான் கிணறு எடுக்கிறார்கள். அதற்குமேல் தோண்டக் கூடாது என்கிறார்கள். தோண்டுவதற்கும் மதிப்பீடு கிடையாது. இப்படிப்பட்ட கிணறுகளை எடுப்பதனால் சர்க்காருக்கு நஷ்டம். அரிசன மக்களும் தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். இதைக் கவனத்தில் வைத்து ஆழமாக ஒரு கிணறாவது எடுத்து ஓவர்ஹெட் டாங்கு வைத்து ஆங்காங்கே தண்ணீர் சப்ளை செய்ய ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான பட்டாக்கள் நில மற்றவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் என்னுடைய தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ, நடுத்தர மக்களுக்கோ பயிர் செய்கிற நிலமாக இருந்தாலும், குடிமனையாக இருந்தாலும், இதுவரை ஒரு பட்டா கூட வழங்கப்படவில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு குடிமனை பட்டாவாவது என்னுடைய தொகுதியில் வழங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நலத்துறை அதிகாரியின் கீழ் இப்போது 2 சூப்ரவைசர்கள், ஒரு ஓவர்சியர்தான் இருக்கிறார். செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 15 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆங்காங்கே உள்ள காலனிக்கு அவர்களை அழைத்துச் சென்று எஸ்டிமேட் போடுவதற்கே இப்போது நேரமில்லை. ஆகவே இவ் விலாக்கா சிப்பந்திகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சுடுகாட்டுப் பாதை அமைத்துத் தர வேண்டுமா, குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்க வேண்டுமா இதற்கெல்லாம் இரண்டாண்டு ஆனாலும் அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் மதிப்பீடே தயாரிக்க முடிவதில்லை—ஆகவே அதிகாரிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு வியா பிப
பாரத்திற்கு அரிசன மக்களுக்காகப் பணம் தருகின்றார்கள். அப்படித் 1-30
தருகின்ற பணம் கொஞ்சமாக இருக்கிறது. மாவட்டத்திற்கு ஒரு தொகை ஒதுக்குகிறார்கள். தொகுதி என்று வரும்போது ஒரு தொகுதிக்கு 4 பேர்களுக்குக்கூட கிடைக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஆகவே, மாவட்டத்திற்கு அதிகமான அளவில் பணத்தை ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்தெந்தத் தொகுதியில் அரிசன மக்கள் அதிகமாக இருக்கின்றார்களோ அந்த மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலாவது

நிதியை ஒதுக்கித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1971–72-ம் ஆண்டுக்கான அரிசன நலத்துறை மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் புரையோடிக் கிடக்கிற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் வாழ்க்கை வளம் பெறவும், வாழ்வு மலரவும் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களும், இந்த இலாக்காவை நிர்வகித்துவரும் மாண்புமிகு அம்மையார் அவர்களும் சரியான முறையில் நல்ல திட்டத்தைத் தீட்டி, தமிழகம் முன்னேற வேண்டுமென்று பணியாற்றி வருவதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலைவாய்ப்பைப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் கொடுக்க வேண்டுமென்று உருவாக்கினாலும், நம்முடைய செகரடேரியட்டில் பணியாற்றுபவர்களைப் பார்க்கும்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், போதுமான அளவில் இல்லையென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு குடிநீர்ப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், கிராமங்களை முன்னேற்றுகின்ற அளவுக்கு திட்டம் அமைக்கப்படவில்லை. நகரம்தான் முன்னேறுகிறது. ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சி மன்றங்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதிலே சரியான நாட்டம் காண்பிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சரியான முறையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், அரிசனங்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த மானியத்திலே 90 சதவீத அரிசன உறுப்பினர்கள்...... (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): "நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர்."

திரு. எம். பன்னீர்செல்வம்: அடுத்தபடியாக, காட்டு இலாகாவைப் பார்க்கும்போது என்னுடைய தொகுதியாகிய ஆம்பூர் பகுதியில் விண்ணமங்கலம் என்ற கிராமத்தில் மூவாயிரம் ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரிடையாகச் சென்று பார்த்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைப் பார்த்து, ஏழை அரிசன மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் பிரித்துக் கொடுத்தால், உணவு நிலைமையைச் சீர்திருத்துவதற்கு வசதியாக இருக்கும், அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கும் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



வட ஆர்க்காடு மாவட்டம் வறட்சியால் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது என்பது சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிற்பட்ட சமுதாயத்தினரும், தாழ்த்தப்பட்ட மக்களும், அரிசன மக்களும் அங்கே வாழ்கிறார்கள். அந்தச் சமுதாய மக்களைப் பார்க்கும்போது நாம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. உணவுத் தானியங்களின் விலை கட்டுக்கடங்காமல் இன்றையதினம் ஏறிக்கொண்டிருக்கிறது. இதனால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அல்லல்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு காட்ட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வட ஆர்க்காடு மாவட்டத்தில் மின்சார இலாகாவில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள் டி. சி. எல். வேலைக்குப் போடுகிறவர்களை அடுத்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாகவே தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் இருக்கிற மக்களுக்கும், குறிப்பாக அரிசன மக்களுக்கும் டெம்ப்ரரி கேஷுவல் லேபர் வேலை போட்டுத் தர வேண்டும். அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களைப் போட்டுக் கொள்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காக கடந்த 1971-ம் ஆண்டு 1 லட்சம் பாரங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் இன்றையதினம் 30 ஆயிரம் பாரங்கள்தான் வட ஆர்க்காடு மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உபகாரச் சம்பளப் பாரங்களை உடனடியாகக் கொடுத்தால் ஏழை அரிசனங்கள் புத்தகங்கள் வாங்குவதற்கும், பேனா, பென்சில் போன்ற பொருள்கள் வாங்குவதற்கும் வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பாரங்கள் உடனடியாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எந்த மாநிலமும் செய்யாத சாதனைகளை இந்த மாநிலம் செய்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அம்மையார் அவர்களும் இந்தத் திட்டத்தைச் சிறப்போடு செய்திருக்கிறார்கள் என்று கூறி, அவர்களைப் பாராட்டி, இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Hon. Mr. Chairman, Sir, in support of the cut motion given on behalf of the Swantantra Party, I wish to offer a few remarks.

At the very outset I would request the Hon. Minister to give careful consideration to a request which I have made inside the House on several occasions, namely, with regard to the life history of Dr. Ambedkar. I had wanted the Hon. Minister to introduce the life history of Dr. Ambedkar as a Chapter in the regular text books of students of high school or middle school in Tamil Nadu. I had mentioned it several times and, several times brought about a cut motion last year, when I was roughly given almost an assuranme that it would be done.

Another point which I would like to stress is this. I had given another cut motion in the Demand of the Legislature that the portrait of Dr. Ambedkar could also be kept inside the Assembly because it was Dr. Ambedkar and before him it was Mahatma Gandhi who really fought for the uplift the Harijans. In fact Mahatma Gandhi practically gave away the later half of his life. in spite of the difficulties and for the sake of the Harijans and later on Dr. Ambedkar came into the scene. Mahatma Gandhi was trying to get some sort of more benefits fod the Harijans. But Dr. Ambedkar said 'it is not sufficient. We should fight for the rights of Hadijans '. Therefore, the ideology of Dr. Ambedkar should be properly propagated. That is what I have been saying for a number of years. I hope and trust that the Hon. Minister will give proper consideration to this point.

Another thing I would like to stress in this context is this. Unless all the caste Hindus go all out and try to mingle socially and encourage inter-caste marriage on a large scale, there is a grave danger to Hinduism itself. That is the most important point which I would request my brothers here to insist. Hinduism can no longer be the private domain of a section of Hindus or the upper crust of caste Hindus. It is the duty of every Hindu to take effective and drastic steps to make every Harijan emotionally, culturally and actively involve himself in the stabilisation and growth of Hinduism. That is an important point which I would request all my brothers to give careful consideration to. I would like to give a note of warning. If this is not done here and now, I am afraid a time may come when Harijans will completely disassociate themselves from Hinduism and they should have legitimately done so because they can no longer be second class or third class Hindus.

Then I would try to strike a note of warning to friends in this State. I am als oimpatient to see the sight of a caste. Hindu and a Harijan walk side by side and like Dr. Martin Luther King and another, enter a temple together. It may look like a fanciful dream now but if this dream is not converted into a reality, I am afraid the very religion of Hinduism may be wiped out, as the majority of Hindus is Harijans. A social reform in this direction on a war footing is the need of the hour. When it is possible for every Christian and Muslim to take every Christian or Muslim along with him or her in the correlation of the religion, to develop a totality of identity with his own religion, it must be possible to develop this sort of ideology among the Hindus also.

I would like to point out certain other marginal defects with regard to administration. One is, the Harijan Development Department itself is not taking active interest in the problem of Harijans. Whenever persons cite the problem of Harijans, there is a sort of secondary importance given.



I would request the Department concerned whenever M.L.As. go and meet them, whenever M.L.As. try to ventilate their grievances, irrespective of what type of M.L.As. they are, they may be Harijans or non-harijans, it does not matter,—I wish to strike a note of warning here—Every one concerned should treat them with all respect and courtesy because they are fighting for a cause. That is one point.

I now come to the Harijan Hostels. There is one Harijan Hostel, Salter Hostel, in my constituency. But I understand that the Harijan hostels are not run on the lines on which they ought to be run. So I request the Hon. Minister to appoint a high-ranking officer in her Department to go round and test-check a few hostels without informing the inmates or the administrators to find out how exactly they are run. If the Hon. Minister does it, she will be in for some shocks.

Then I come to the crash programme in certain areas. Hon. Members are always ventilating their grievance that the fund allotted for the Harijans are very low, less than Rs. 6 crores. In this connection, I would suggest that it would be better if we select a few areas in certain districts like Ramanathapuram and try to develop these areas intensively so that we can see whether it is possible to bring the standard of living of the Harijans on a par with that of the Caste Hindus. If it is possible to do it, then we can spread it to other areas. Otherwise, we cannot get rid of the great depression prevailing in the depressed classes.

Then I come to the most important problem. It relates to the serious repercussions that scrapping of prohibition will have over the fabric of the Harijan society. This is a very vital matter and we are now investing less than Rs. 6 crores on them. But we are likely to take back from the Harijans through the scrapping of prohibition about Rs. 10 to Rs. 15 crores. So, I request the Hon. Minister to forget about the politics and in all persuasiveness I request the Hon. Minister to consider the serious repercussions that it will have on the fabric of the Harijan society. The Government while giving these amounts by way of grants, will definitely take back from them more than this amount by the scrapping of prohibition. It is something like giving water in a mud-pot, which has a hole. Whatever amount of water you may pour, the whole thing will go away. A clear and stray dent is now sought to be created in their society because it is the Harijans who will ultimately be bearing the heavy cross of the Abkari Act which is going to be revived as also the burnt of the hazards of the scrapping of prohibition. This has been uniformally realised by Gandhiji, Anna, Kamaraj and Rajaji. I request the Hon. Minister to give serious consideration to this matter and see that the Harijans are not ultimately ruined.

As I have promised Mr. Chairman, I have only briefly touched on the points and I request the Hon. Minister to give weighty consideration to them. Thank your, Sir.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: சேர்மன் அவர்களே, இந்த அரிசன மானியத்தின்மீது என்னுடைய அபிப்பிராயங்களையும் சில கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். ஆண்டுதோறும் இந்த அரிசன மானியத்திற்காக வேண்டி அதிகப்படுத்திக் கொண்டே போகிறோம் நிதி ஒதுக்கையிலே.

ஜாதி ஒரு தொழிலின் அடிப்படையிலே அதன் காரணமாக ஏற்பட்டது என்பதை நாம் மறுக்க முடியாது. இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள் என்று குறிப்பிடும்பொழுது தாழ்த்தப் பட்டவர்களில் சப்-செக்ட்ஸ் என்ற முறையிலே பல துறைகளிலே உள்ளவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஜாதி ஒழிய வேண்டுமென்றால் அவர்கள் கல்வித் துறையிலே முன்னேற வேண்டுமென்பது முதற் குறிக்கோள்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பல மகான்கள் வந்தார்கள், சென்றார்கள். ஆனால் எங்களுடைய நிலைமை மாறாமல் இருக்கிறது. உய்விக்க வந்தவர்களும் உழைக்க வந்தவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் செல்வாக்குப் பெற்றார்களே தவிர செய்தது ஒன்றுமில்லை என்று கூறினார்கள். ஆனால் செய்தது ஒன்றுமில்லை என்ற அளவுக்கு நாம் இன்று இல்லை. இந்த மானியத்திற்காகத் தரப்பட்ட குறிப்பிலே நன்றி மறப்பது நன்றன்று என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. செய்கின்ற பற்றுக்கு நன்றியை மறக்காமல் இருப்பது எல்லா இனத்தாருக்கும் பொறுத்தம் தான், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் நன்றி தனிப் பொறுப்பாக இருக்க முடியாது.

திரு. கூர்மைய்யா அவர்கள் குழுவின் தலைவராக இருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று ஒரு ரிப்போர்ட் கொடுத்தார். அதற்குப் பிறகு சமீபத்திலே திரு. இளைய பெருமாள் ரிப்போர்ட்டும் வந்திருக்கிறது. திரு. கூர்மைய்யா ரிப்போர்டிலிருந்து இன்றுவரை நாம் பார்க்கும்பொழுது அத்தியாவசியமாக எந்தத் துறையிலே அரிசன மக்கள் முன்னேற வேண்டுமென்றால் கல்வித் துறை, மருத்துவ வசதி, சுகாதார நிலைமை, வீட்டு மனைகள், பயிரிட நிலங்கள், குடிநீர் இவைதான் அத்தியாவசியமாக இருக்கின்றன. எங்கே சென்றாலும் கிராமங்களிலே பார்க்கும்பொழுது குடிநீர் இல்லாமல் அந்த மக்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தால் குடிநீர் அத்தியாவசியத் தேவையைக் கூட நாம் நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கிறோம்.

என்னுடைய ஸ்ரீரங்கம் தொகுதியிலே மல்லாச்சிபுரம் என்ற கிராமத்திலே 43 வீடுகள் 26—1—1971-ஆம் தேதியன்று தீப்பிடித்து எரிந்துவிட்டது. தீப்பிடித்து எரிந்த வீடுகளுக்கு 80 ரூபாய் கொடுக்கிறோமென்றால் அந்த இடத்தைப் பொறுத்தவரையில் அப்படி 30 வீடுகளுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 13 வீடுகளுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அதைப்பற்றி அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். அந்தத் தகவல் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்த ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு நடுவீதியிலே அவதிப்படுகின்றார்கள். அரசு அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நிலங்கள் தரப்படுகின்றது என்று சொல்கிறார்கள். பத்திரிகையிலே வருவதைப் பார்த்தால் தமிழக அரசு நிலப்பட்டாக்கள் பல வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்த வீட்டுப் பட்டாக்கள் பெற்றவர்கள் 2 லட்சத்து 71 ஆயிரத்து 478 பேர்கள், வழங்கப்பட்ட நிலம் 8,505 ஏக்கர் என்றும் நிலப்பட்டாக்களைப் பொறுத்தவரையில் 1 லட்சத்து 91 ஆயிரத்து 601 பேர்கள், வழங்கப்பட்ட நிலம் 3 லட்சத்து 80 ஆயிரத்து 264 ஏக்கர் என்று பொதுவாக இருக்கின்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று போடாமல் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் தொகை அதிகப்படியாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பற்றி குறிப்புகள் கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது இதைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையிலே நிதி வழங்கப்படுகிறது. வடஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் புது கிராமங்கள் 300 கிராமங்கள் இருக்கின்றன. பழங்குடி மக்கள் கிராமங்கள் 25-க்கு வழங்கப்பட்ட வீட்டு மனைக்காக விலைமதிப்பு 933 மனைகளும் பழங்குடியல்லாத பிற மக்களுக்கு 10,731 மனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. பழங்குடி மக்களுக்கு மனை வீடுகள் வழங்கியதன் மதிப்பு 2 லட்சத்து 83,431 ரூபாய். மற்றவர்களுக்காக வழங்கியதன் மதிப்பு 21 லட்சத்து 94 ஆயிரத்து 804. கல்வி உதவிப் பணம் $3\frac{3}{4}$ லட்சம், பழங்குடி மக்களுக்கு ரூ. 74 லட்சம், தொகையும், பழங்குடி மக்கள் அல்லாத $1\frac{3}{4}$ லட்சம் பேர்களுக்கு ரு. 214 லட்சம் தொகையும் கொடுத்திருக்கிறார்கள் என்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக இந்தத் துறை லேபர் டிபார்ட்மெண்டிலே இருந்தது. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இந்த எஸ்டாபிளிஷ்மெண்டிற்காக என்று லேபர் டிபார்ட்மெண்டிலே தனிப்பட்ட தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அந்த எக்ஸ்பெண்டிச்சரையும் அரசாங்கம் இதிலே எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அரிசன டிபார்ட்மெண்டிலிருக்கின்ற எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவிற்காக மற்ற எஸ்டாபிளிஷ்மெண்ட்களுக்காக ஒதுக்கப்படுகின்ற விதமாக அரிசன டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்களுக்காகவும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன்கள் பல துறைகளிலே அவர்களுக்குக் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மானியமாகவும், கடனாகவும், வட்டியில்லாக் கடனாகவும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில் திருப்பி வாங்கப்படும்பொழுது, பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடனைத் திருப்பிக் கட்டாவிட்டால் அந்தப் பம்பு செட்டுகளையே கழற்றிக் கொண்டு போய்விட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு ஏழை விவசாயி விவசாயம் செய்யும்பொழுது அந்தச் சமயங்களில் கழற்றிக் கொண்டு போய்விட்டால் எப்படி அந்த ஏழை மக்கள் விவசாயம் செய்ய முடியும், எப்படிக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பார்கள்

என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். ஆட்சித் தலைவரைக் கேட்டால், அரசாங்கத்தின் உத்தரவு, கடன்களைக் கொடுக்காவிட்டால், பம்பு செட்டுகளைக் கழற்றிவிட வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆட்சியாளர்களுக்கு உத்தரவு போட்டு கடன்களைக் கொடுக்கிறோம். உதவி செய்கிறோம் என்று சொல்வதில் அர்த்தமேயில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

வீடு கட்டிக் கொடுக்கும்பொழுது நல்லமுறையிலே கட்டிக் கொடுக்க வேண்டும். இங்கு பேசிய மதிப்பிற்குரிய திரு. சுப்பிரமணியம் அவர்கள்கூடக் கூறினார்கள், அரிசன மக்களுக்குக் கட்டும் வீடுகள் அரிசன இனத்தைச் சார்ந்தவர்கள் இல்லாத மற்ற இன ஜாதிக்காரர்கள் இருக்கும் பகுதிகளில் கட்டப்பட வேண்டும், அப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்று சேர்த்து ஜாதியை ஒழிக்க வேண்டுமென்றால் அது ஒரு வகை என்று கூறினார்கள். அது உண்மை. அப்படிக் கட்டினால்தான் அந்த மக்களுக்கும் சேர்ந்து பழக வாய்ப்பு ஏற்படும், ஜாதிபேத வித்தியாசங்கள் நீங்கும், கீழ் வெண்மணியில் நடந்ததைப்போல் நடக்காமல் இருக்க சந்தர்ப்பங்கள் இருக்கும். அந்தச் சம்பவத்தை நினைத்து அரிசன மக்கள் இன்றைக்கும் மிகவும் பயந்து கொண்டிருக்கிறார்கள்.

பல நல்ல காரியங்களுக்குத் திட்டம் வகுத்திருக்கிறோம் என்று கூறப்படுகிறது. அரிசன மாணவ மாணவியர்கள் இருக்கும் ஹாஸ்டல்களைப் பார்த்தால் அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்திற்குத் தகுந்தாற்போல் அவர்களுக்கு உள்ளபடியே சத்துணவு கொடுக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கும்பொழுது ஏதோ காண்டிராக்ட் மூலம் விட்டுவிட்டு அந்தக் காண்டிராக்டர்கள் கொண்டு வந்து போடும் கறிகாய்களைச் சாப்பிட்டுக் கொண்டு படிக்கவும் வேண்டுமானால் அவர்களுடைய உடம்பும் பாதிக்கப்படுகிறது. அவர்களின் பெரும்பான்மையானவர்களுக்கு உடல்நிலை அடிக்கடி கெட்டுப் போவதால், இந்த உணவு முக்கியமானது, அது ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இல்லையென்றால் சாப்பாடு போடுகிறோம், ஹாஸ்டல்களை விருத்தி செய்கிறோம் என்று சொல்வதிலே பிரயோஜனமில்லை. கொடுப்பது நல்ல முறையில் கொடுக்கப்படுகிறதா என்பதை நாம் கவனிக்க வேண்டும். தனிப்பட்ட துறையிலே சோஷியல் ஒர்க்கர்ஸ் போட்டுப் பார்த்தாலும் நல்லது. ஏனென்றால் பலர் இந்தத் துறையிலே Service செய்ய ஆவலாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம், இல்லையென்றால் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதைப்போல் தனி ஆபீசரைப் போட்டாலும் பரவாயில்லை என்று நினைக்கிறேன். ஏனென்றால் அது மிகவும் அத்தியாவசியமானது.

மற்றொன்று, ஏழை ஹரிஜன மாணவ மாணவியர்கள் படித்துத் தேர்ந்த பிறகு கல்லூரிகளில் சீட் கிடைக்காத கஷ்டத்தைப் பார்க்கும்பொழுது அவர்களுக்குக் கல்வித்தரம் உயர வேண்டும், சமுதாயத்திலே அவர்கள் வாழ வேண்டுமென்று நமக்கு நல்லெண்ணமிருந்தாலும்கூட, இந்த அட்மிஷன் சமயங்களிலே அவர்கள் படுகின்ற பாடு கொஞ்ச நஞ்சமல்ல. குறிப்பாக அரிசன மாணவ



மாணவியர்கள் இத்தனை மார்க்குகள் எடுத்தால், கண்டிப்பாக அவர்களுக்குப் பரீட்சையில் கிடைக்கின்ற மினிமம் மார்க் என்று 'ஸ்டேட்டிஸ்டிக் எடுத்து, குறிப்பாக கடைசியாக எடுத்துக் கொள்ளும் மாணவ மாணவியர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்த அளவில் சீட்டுகள் கொடுக்க வேண்டும், எவ்வளவு மார்க் வேண்டும் என்பதை ஓரளவு நிர்ணயித்துவிட வேண்டும். அப்படி நிர்ணயித்தால்தான் இந்த மார்க் கிடைத்தால்தான் அனுமதி கிடைக்கும் என்ற நல்ல முடிவுக்கு வந்துவிடுவார்கள். அதற்குமேலே மாணவர்கள் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை.

அத்துடன், இங்கே எங்கள் கட்சியின் சார்பிலே எங்கள் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை யொட்டி ஒன்று முக்கியமாகக் கூற வேண்டும்.

To discuss about the delay in the acquisition of land for the Harijans in Kadiapattanam village, Kalkulam taluk, Kanyakumari district. என்று இருக்கிறது. இந்த இடத்திலே ஏற்கனவே நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்கெல்லாம் ஏற்பாடாகி அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குச் சென்று கோர்ட்டில் கேஸ் டிஸ்மிஸ் ஆகிவிட்டது. டிஸ்மிஸ்ஸான பிறகு அரசு எடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கும்பொழுது Stay of acpuisition proceeding செய்ய வேண்டுமென்று நிலச்சொந்தக்காரர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, ஆவன செய்து முதலில் எடுத்த பிரகாரம், எடுத்த நிலத்தை அவர்களுக்கு, ஏழைகளுக்குக் கொடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த தலைவரவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* <u>மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து</u>: சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது பலரும் பேச வேண்டுமென்ற விருப்பத்திற் கிணங்கத்தான் ஒதுக்கி வைக்கப்பட்ட நேரத்தையும் தாண்டி இந்த விவாதத்திலே அனைவரும் கலந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

சாதாரணமாகவே, இந்த விவாதத்தில் பலரும் பங்கு கொள்ள விருப்பம் காட்டுவதிலேயிருந்து நமது மாநிலத்திலே இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களது நல்வாழ்வில் அனைவரும் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்பதையே அது எடுத்துக் காட்டும். இந்த அரசும் அதற்கேற்ற வகையில் படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் அதிகப்படியாக நிதி ஒதுக்கீடு செய்து இந்த மக்களது நல்வாழ்விற்காக நல்ல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது என்பதை இந்தச் செயல்களின் மூலமாக நிச்சயமாக அனைவரும் அறிவார்கள். கழக அரசு 1967 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது அரிசன மக்களது நல்வாழ்விற்காகவும், பின்தங்கிய மக்களது நல்வாழ்விற்காகவும், ஒன்றாக இருந்த இலாக்காவைத் தனித்தனியாகப் பிரித்து,

பின்தங்கிய மக்கள் நல்வாழ்விற்காகத் தனியாகக் குழு அமை ஆராய்ந்து பரிசிலனை செய்து அதன்மூலம் பல திட்டங்களைத் தீ இன்றைக்கு அரசு முடிந்தவரை செயலாற்றிக் கொண்டு வருகி. இங்கு பேசியவர்கள் தனியாக இப்படிப்பட்ட இலாக்கா இரு வேண்டுமா என்று பேசினார்கள், மதிப்பிற்குரிய திரு. பாலசுந்த அவர்கள்கூடப் பேசினார்கள். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருக்கின்ற வரையிலும் இலாக்கா இருக்கத்தான் வேண்டு இன்னமும் எத்தனையோ ஆண்டுக்கால முயற்சியிலும் ஜாதிக ஒழிக்கப்படவில்லை, பின்தங்கிய, தாழ்த்தப்பட்டவர்களின் நிலை உயர்த்தப்படவில்லை, வாய்ப்புகள், வசதிகள் உள்ளவர்கள் தங்கள் வாழ்வில் முன்னேறிக் கொள்கிறார்கள் என்ற நல்ல ஒரு பாடத்தின் அடிப்படையில்தான் நாம் இத்தனை ஆண்டுக் காலமாகக் கண்டோம்.

ஒதுக்கப்பட்ட தொகை போதாது என்றும், அதிகப்படியான தொகைகள் ஒதுக்கித் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அதை நாங்களும் உணர்கிறோம். நிதிநிலைக்கு ஏற்ற அளவில் ஒவ்வொரு இலாக்காவிற்கும் எந்தெந்த அளவில் ஒதுக்க முடியுமோ அந்த அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு, வந்திருக்கின்ற இந்த மானியத்தில் மிக நல்ல திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். தொழில் முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும், குடிதண்ணீருக்காகவும், மின்சார வசதிக்காகவும் எந்த அளவில் அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதை அந்தந்தத் தனிப்பட்ட இனங்களிலே பார்த்தால் பொதுவாக நிச்சயமாக உணர முடியும்.

உபகாரச் சம்பளத்தின் உயர்வில் அதிக உயர்வைக் காண முடியவில்லை என்று சொன்னார்கள். 1969-70-இல் ஃப்ரீ மெட்ரிக்குக்கான ஸ்காலர்ஷிப் 3,52,899 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் 1970-71-இல் 3,87,847 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதே போல் மலைவாழ் மக்களுக்கு 1969-70-இல் 15,477 என்றால் 1970-71-இல் 21,432 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆக இப்படி ஆண்டு ஒன்றுக்கு அதிகப்படியான வகையிலே அள்ளிக் கொடுக்கின்ற திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

பி.ப. 2.00. குடிதண்ணீர் வசதிக்காக இன்றைக்கு அரசு 17 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. குடிதண்ணீருக்காக 1970-71-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 8.2 லட்சம் ரூபாய்; 1971-72-ல் இப்போது ஒதுக்கியிருப்பது 17.2 லட்சம் ரூபாய். ஏறத்தாழ இரட்டிப்பு மடங்கு அதிகப்படியான தொகையை ஒதுக்கியிருக்கிறோம். மின் இணைப்புக்காக சென்ற 1970-71-ல் 20.02 லட்சம் ரூபாய் ஒதுக்கி இந்த ஆண்டு 13.50 ரூபாய்தான் ஒதுக்கியிருந்தாலும், இதுவரை மின் விஸ்தரிப்பு செய்யப்பட்ட பகுதிகள் அனைத்திலும் தாழ்த்தப்பட்ட பகுதி மக்கள் வாழும் பகுதிகளுக்கு மின் இணைப்புக் கொடுத்தாகிவிட்டது. இவை எல்லாம் அரசாங்கம் தானாகவே பார்த்து செயல்பட்டு வருகின்ற திட்டங்களாகும்.

தொழில் முன்னேற்றத்திற்காக 10 லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். கடந்த ஆண்டு 2 லட்சம் ரூபாய்தான் கொடுத்தோம்.





மாணவர்களுடைய கல்வியில் அக்கறை காட்டி எவ்வளவோ ஆண்டுகளாக அவர்களுக்குக் கொடுக்கப்படும் பணம் உயர்த்தப்பட வேண்டுமென்று எல்லாக் கட்சிக்காரர்களும் பரிந்துரை செய்தார்கள். இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள், விவசாயக் கல்லூரி மாணவர்களுக்கெல்லாம்கூட கடன் கொடுப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வட்டி இல்லாத கடன்களைக் கொடுத்து அவர்கள் படித்து பதவிக்கு வந்த பிறகு திருப்பித் தரும் அளவுக்குக் கடன் தரப்படுகிறது.

9-ம் வகுப்பிலிருந்து 11-ம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களில் தேர்ச்சி பெற முடியாத, தோல்வியுற்ற மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நில ஆர்ஜிதம் செய்வதிலும், தனியாக விவசாயத்திலே அக்கறை காட்ட வேண்டுமென்பதற்காக லாண்ட் காலனைசேஷன் ஸ்கீமை ஏற்கனவே இருந்த அரசு உருவாக்கியது என்றாலும் அப்போது நல்ல நிலங்களாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. எவ்வளவு உரம் போட்டாலும் அந்த நிலங்களிலே வளர்ச்சியைக் காண முடியவில்லை. அதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு, இருக்கின்ற இந்தத் திட்டங்களைச் சரியான முறையில் நிர்வகிக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

வேலை வாய்ப்பைப் பொறுத்தவரை மத்திய அரசு 23 சதவிகிதம் ஒதுக்கியிருக்கும்போது நம்முடைய அரசு 18 சதவிகிதந்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருக்கிறது என்றார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரை பின்தங்கிய வகுப்பினர் என்ற பட்டியல் தருவது ஷெட்யூல்டு காஸ்ட் அண்டு ஷெட்யூல்டு டிரைப்ஸ்தானே தவிர வேறல்ல. அரசியல் சட்டத்தில் இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் இருப்பது போல் பின்தங்கியவர்கள் என்ற பட்டியல், மத்திய அரசில் தனியாகக் கிடையாது. அரசியல் சட்டம் உருவாகும் வரை "ஷெட்யூல்டு காஸ்ட்ஸ்", "ஷெட்யூல்டு டிரைப்ஸ்" என்பவர்கள் தீண்டாமைச் சட்டத்திற்கு உட்பட்ட இனங்கள் என்றுதான் இந்தச் சமுதாயத்திற்குப் பெயர் இருந்தது. பிறகுதான் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ், ஷெட்யூல்டு டிரைப்ஸ் என்று வந்தது.

தமிழில் அனுபந்த ஜாதியினர் என்று கூறுகிறார்கள். மத்திய அரசு 23 சதவிகிதம் இவர்களுக்காக ஒதுக்கீடு செய்கிறார்கள். ஆனால் மாநில அரசு பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள் என்ற பட்டியலை, பொருளாதாரத்திலும், கல்வியிலும், மற்ற வகையிலும் பின்தங்கியிருப்பவர்களின் பட்டியலைத் தனியாகத் தயாரித்திருக்கிறது. இப்படிச் சில மாநிலங்கள் தயாரித்திருக்கின்றன. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி இந்த மாதிரிச் சலுகைகள் தந்து ஒதுக்கப்படுவது 50 சதவிகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்றிருக்கிறது. ஆகவேதான் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் எண்ணிக்கைப்படி தாழ்த்தப்பட்ட

மக்களுக்குப் 18 சதவிகிதம் என்றும், பின்தங்கிய மக்களுக்கு 31 சதவிகிதம் என்றும் ஆக மொத்தம் 49 சதவிகிதம் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக் கென்றும் 51 சதவிகிதம் மற்றவர்களுக்கு என்றும் முடிவு செய்து ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எண்ணிக்கைக் கணக்கைப் பார்க்கும்போது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை 53 சதவிகிதம் பிற்பட்ட மக்கள்தானா இருக்கிறார்கள்? சதவிகிதக் கணக்குப்படி கொடுக்க வேண்டுமென்று சொன்னால் பின்தங்கிய மக்களுக்கு இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும். இதை யெல்லாம் மனத்தில் கொண்டுதான் அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பின்தங்கிய மக்களுக்கு 31 சதவிகிதம் என்றும் நிர்ணயித்து ஒதுக்கீடு செய்திருக்கிறது.

இப்போது அரசாங்கம் நல்லபல உத்தரவுகளை அனுப்பியிருக்கிறது. அதே போன்று நலத்துறை இலாக்காவிலும் மற்ற இலாகாக்களிலும் இவை எல்லாம் சரியானபடி நிறைவேற்றப்படுகின்றனவா என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது. நான் எவ்வளவோ முறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அரசாங்க இயந்திரம் உருவாக்கப்பட்ட காலத்தில் இந்தச் சதவிகிதம் கிடையாது. ஆகவே, முழுக்க முழுக்க ஒவ்வொரு இலாக்காவிலும் இந்தச் சதவிகிதம் பூர்த்தியாக வேண்டுமென்பது இலகுவான காரியம் அல்ல. ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு இலாக்காவுக்கும் காலியாகும் இடங்கள் ஐந்து, பத்து என்ற அளவில்தான் இருக்கும். அதிலே இந்தச் சதவிகிதக் கணக்குப் பார்க்கும்போது ஓரிரு இடங்கள் கூடக் கிடைக்காது. ஆனால் ஒதுக்கிய இடங்களுக்குக் கூட இந்த ஆண்டு ஆள் வரவில்லை என்றால் அடுத்த ஆண்டு அதைப் பூர்த்தி செய்ய வேண்டும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களைத் தகுதியற்றவர்கள் என்று அனுப்பக் கூடாது என்றெல்லாம் கூறியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கும் அக்கறை அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஐ.ஏ.எஸ். டிரெயினிங் சென்டர் நீண்டகாலமாக நம்முடைய மாநிலத்தில் நடைபெற்று வருகிறது. எவ்வளவோ பேர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் பதவிக்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னார்கள். அது பற்றிப் பாராளுமன்றத்தில் கூட எடுத்துப் பேசப்பட்டது. அதிலெல்லாம் அரசாங்கம் அக்கறையோடு கவனித்துப் பல பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வாங்கிக் கொடுத்து வருகிறது. ஐ.ஏ.எஸ். ட்ரெயினிங் முழுக்க முழுக்க மத்திய அரசாங்கத்தின் துணைகொண்டு நடத்துகிறார்கள். இப்போது புதிதாக குரூப் ஒன், குரூப் டு காம்படிடிவ் எக்சாமினேஷனைப் பொறுத்தவரை தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லுகிறவர்கள்கூட அதிலே பயிற்சி பெற வேண்டுமென்ற புதிய மாற்றத்தை இந்த ஆண்டு செய்ய மாநில அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.



அதேபோன்று தேசீயமயமாக்கப்பட்ட பாங்குகள், எல்.ஐ.ஸி. இவைகளில் பணியாற்றுகிறவர்களுக்கு இந்த சென்டரில் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவு போட்டிருக்கிறது. இந்தப் பணிகளில் செல்கிறவர்களுக்கு இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று, தேர்வு பெற்று, பெரிய உத்தியோகங்களில் அமர்த்த அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது.

வேலைவாய்ப்புப் பயிற்சிக்கு 24 சதவிகிதம் நம் அரசாங்கமே கூடக் கொடுக்கிறது. ரூ. 45 ஸ்டைபண்ட் அவர்களுக்குக் கொடுத்து வருகிறோம். அதற்காக நிறையப் பணம் செலவு செய்யப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 12 லட்சம் ரூபாய் வேலை வாய்ப்புப் பயிற்சித் துறைக்காக செலவழிக்கப்பட்டு வருகிறது. எந்த அளவிற்கு கவனத்தோடு நடத்த வேண்டுமோ அந்தளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

அடுத்து, திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சலவைத் தொழிலாளர்களை இந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். சலவைத் தொழிலாளர்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் இருப்பதால், அதை பின்தங்கிய வகுப்பினர் இலாகா அமைச்சர் அவர்கள் கவனித்து வருகிறார்கள். இந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று எவ்வளவோ ஆண்டுக் காலமாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அங்கும் இங்கும் மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி என்றிருந்தபோது கூட பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, இந்த இலாகாவிற்கு மாண்புமிகு கக்கன் அவர்கள் பொறுப்பேற்றிருந்தபோது 1965-ல் மாநில அரசு ஒரு சிபார்சு செய்திருக்கிறது. மாநில அரசு சிபார்சு செய்தால் அதை ஒத்துக்கொள்வதாக மத்திய அரசு கூறுவதாகச் சொன்னார்கள். 1965-ல் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தீண்டாமை கொடுமைக்கு ஆளாக்கப்பட்டவர்கள்தான் இந்தப் பட்டியலில் வர முடியும்.

பொருளாதாரத் துறையில் அவர்கள் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பதால் மோஸ்ட் பேக்வேர்ட் கிளாஸில் சேர்த்து, அதிகப்படியான அக்கறை காட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் அந்தப் பட்டியலில் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேரப் பொருளாதாரத் துறையில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், கல்வித்துறையில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள், என்றெல்லாம் இருக்கின்றன. சமுதாயத்தில் தாழ்ந்த நிலையிலிருப்பவர்கள் என்றல்ல. டெல்லி, ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நம் மாநிலத்தில் கன்னியாகுமரியில் இருந்தார்கள். ஆனால் அங்கெல்லாம் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள் இன்றைக்கும். நம் மாநிலத்தில் அவர்கள் தோய்த்த ஆடைகளைத்தான் உடுத்திக் கொள்கிறார்கள். திருமணங்களுக்குக் கூட அவர்கள் வந்து சில சடங்குகள் செய்கிறார்கள். அவர்களைத் தீண்டாதார் என்று யாரும் கருதுவதில்லை. ஆகவே அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நான் இவர்களை இந்தப் பட்டியலில்

சேர்க்கக் கூடாது என்று கருதுவதாக அருள்கூர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டாம். இந்த விளக்கம் நீண்ட நாட்களாக மத்திய அரசால் தரப்பட்டு வந்திருக்கிற விளக்கமாகும்.

அருந்ததியர்கள் பற்றிச் சொன்னார்கள். செருப்புகள் விலை போகவில்லை. ரிப்பேரில் கிடைக்கக்கூடிய ஊதியம் போதாது என்றால் தானாக தொழில் நடத்த வட்டியில்லாக் கடன்கள் கொடுக்கிறோம். அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. முனியாண்டி அவர்கள் மதுரையில் ஒரு கல்லூரி விடுதி தேவை என்றார்கள். போதுமான மாணவர்கள் இல்லாததால் கல்லூரி விடுதி இயங்க முடியாத நிலையில், அங்கொரு விடுதியிருக்கிறது. போதிய அளவிற்கு மாணவர்கள் வந்தால் அது இயங்க முடியும்.

திரு. சுப்பையா அவர்கள் நில ஆர்ஜிதத்திற்குப் போதிய அளவிற்கு பணம் ஒதுக்கப்படவில்லை என்றார்கள். இதுவரை 1,90,123 மனைகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 1,15,693 வீடுகள் மட்டுமே இதுவரை கட்டப்பட்டுள்ளன. மீதி 74,430 வீடுகள் கட்டப்படவில்லை. ஆர்ஜிதம் செய்து வழங்கிய பின்னரும் வழக்குமன்றத்திற்குச் செல்கிறார்கள். அதுவரை காத்து நின்று நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஆனால் வீடுகள் கட்டப்படவில்லை. ஏன் வீடுகள் கட்டப்படவில்லை என்பதை அறிய வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தனி வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் ஒருவரை நியமித்து இதுபற்றி பரிசீலிக்க வேண்டுமென்று பணித்திருக்கிறார்கள். அவர்கள் சிபார்சு வந்த பிறகு மேற்கொண்டு வீடுகள் கட்டுவதற்கு அதிகப்படியான நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும், அம்மையார் அவர்களும் சொன்னார்கள். வீடுகள் கட்டும்போது ஒன்றாக எல்லோருக்கும் சேர்த்துக் கட்ட வேண்டும் என்று. இப்போதும் அந்தத் திட்டம் இருக்கிறது. 10 சதவிகிதம் மற்ற சமுதாயத்தினருக்கும் சேர்ந்து கட்ட வேண்டும் என்றிருக்கிறது. வீடுகளாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூடங்களானாலும் சரி, கல்லூரிகளானாலும் சரி, எதுவாக இருந்தாலும் ஹரிஜன மக்களுக்காகச் செய்யப்படுகிற எல்லாத் திட்டங்களிலும் ஒருசில சதவிகிதம் ஹரிஜனங்கள் அல்லாத மக்களுக்கும் சேர்த்துத்தான் செய்யப்பட்டு வருகின்றன.

எல்லோரும் ஒன்றாக ஜாதி வித்தியாசமின்றி வாழவேண்டும், ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டும் என்று பள்ளிகளில் மாணவர்களின் உள்ளங்களில் எழுச்சியான நல்லெண்ணங்கள் வர வேண்டுமென்று செய்கிறோம். அந்த எண்ணம் வருகிறதா என்றால் இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்காக நிலம் எடுக்கும்போது நிலம் உள்ளவர்கள் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள், வழக்குமன்றம் செல்கிறார்கள். வழக்கு மன்றத்தில் சாதகமாகத் தீர்ப்புக் கூறப்பட்ட



பின்பும் வீடுகள் கட்டுவதற்கு விடாமல் தடை செய்கிறார்கள். இன்னும் நாங்கள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்படியாகச் சொல்லி வீடுகள் கட்ட விடுவது கிடையாது. ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்ட நேரத்தில் கூட மற்ற ஜாதிக்காரர்கள் கட்டவிடாமல் தடுக்கக்கூடிய விதத்தில் பல வீடுகள் கட்டப்படாத நிலையில் இருக்கின்றன.

இவற்றையெல்லாம் முதலில் பரிசீலனை செய்த பிறகு கட்ட வேண்டிய வீடுகளைக் கட்டிவிட்டு பிறகு ஆர்ஜிதம் செய்வோம் என்ற நிலை இருக்கிறது. ஆகவேதான் ஆர்ஜிதத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை குறைவாக இருக்கிறது.

மலிவு வீடுகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகின்றன. ரூ. 940 போதாது என்று சொன்னார்கள். கட்ட வேண்டிய வீடுகள் அதிகமாக இருப்பதால் தொகை குறைகிறது. தொகை குறைவதால் வசதிகள் குறைகின்றன. ஆகவே ரூ. 940 என்பதை ரூ. 1,100 ஆக உயர்த்த வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்னால் மாவட்ட நலத் துறை அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். ரூ. 1,100-க்கு ஓரளவிற்கு வசதிப்படுத்திக் கொடுக்க முடியுமென்று நினைக்கிறேன்.

ஆந்திராவில் கட்டுவதுபோல் வேறு மாநிலங்களில் உள்ளது போல் ஆண்டுக்கு 70,000 வீடுகள் கட்ட வேண்டுமென்று திரு. சுப்பையா அவர்கள் சொன்னார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நலத்துறை செயலாளர் அவர்கள் கூட சமீபத்தில் ஹைதராபாத் சென்றுவிட்டு வந்தார்கள்.

எல்.ஐ.சி. மூலம் நிதி உதவி பெற்று வீடுகள் கட்டுவதாகக் கூறினார்கள். நாமும் அதேபோல் எல்.ஐ.சி. மூலம் தொடர்புகொண்டு ஹரிஜன் மக்களுக்கு வீடுகள் கட்ட நிதி உதவி செய்வதற்காக அவர்களை நாடுவதாக இருக்கிறோம். அந்தப் பேச்சு வார்த்தைகள் முடிந்தபிறகு எல்.ஐ.ஸி. வழியாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த அரசு முன்வரும்.

அதேபோல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கூட இந்த அரசின் கவனத்தில் இருக்கிறது. அதற்காக தேசியமயமாக்கப்பட்ட பாங்கிகளிடம் கூட பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். பஞ்சாபில் இந்த வகையில் ஒரு சட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதையும் பார்த்து, கேரளாவிற்கும் சென்று பார்த்த பிறகு நம் மாநிலத்தில் ஒரு பைனான்ஸ் கார்ப்பரேஷன் உண்டாக்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் விரும்புகிறது. இப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு செயலாற்றப்பட்டு வருகின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜாங்கம் அவர்கள் பேசும்போது, "தான் கூட குடிசையில் படுத்துக்கொண்டு செல்கிற நிலையில்தான் வீடு வைத்து இருக்கிறேன்" என்று சொன்னார்கள். அது வருந்தத்தக்கது தான். மாண்புமிகு உறுப்பினர் ஓரளவுக்கு மாதம் ஊதியம் பெற்று வாழ்க்கை செலவு என்ன என்பதை அறிந்து இருப்

பவர்கள். அவர்கள் கூட இன்னும் தன்னுடைய குடிசையை செப்பனிட்டுக் கொள்ளாமல், ஊர்ந்து நுழைகின்ற நிலைமையில் தன்னுடைய வீட்டை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், மற்றவர்கள் என்ன செய்வார்கள். அவர்கள் தானே முயற்சி, எடுத்துக்கொண்டு அந்த நிலைமையைச் சீர்செய்து கொள்ள வேண்டும். இந்த மாதிரி முயற்சியை அனைவரும் எடுக்க வேண்டும். எல்லாவற்றையும், எல்லோருக்கும் அரசாங்கம் தரும் என்று கொள்வது சரியல்ல என்று கூறிக்கொள்கிறேன். அதற்கு மார்க்கம் இருக்கிறது. அரசாங்கத்தில் நிதி உதவி பெற்று தன்னுடைய வீட்டை ராஜாங்கம் அவர்கள் கட்டிக்கொள்ளலாம். வேறு பல இடத்தில் கடன் பெற்று அந்த வீட்டைக் கட்டிக்கொள்ளலாம். எல்.ஐ.சி. மூலமாகக் கொடுக்கும் கடன் திட்டத்தின் மூலமாகவும் அந்த வீட்டைச் செப்பனிட்டுக் கொள்ளலாம். அவரது நிலையை மற்றவர்களோடு ஒப்பிடுவது சரியல்ல.

நீலகிரி மாவட்டத்தில் நிலப்பட்டா கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் தோட்டப்பயிர் வைக்க வேண்டியிருக்கிறது. இந்த இடத்தில் பட்டா கொடுக்கவேண்டுமென்று ஒரளவுக்கு அங்கே இருக்கும் மலைவாழ் மக்களுக்குப் பட்டா கொடுக்கும் அளவுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பட்டா கொடுக்கும் முறை வைத்து இருக்கிறோம். கண்டிஷனில் பட்டாக்கள் கொடுக்கிறோம். அதை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

உழவு மாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். இல்லை. உழவு மாடுகளைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். சில ஆலயங்களில் ஜாதி வித்தியாசங்கள் பார்க்கப்படுவதாகச் சொன்னார்கள். பொதுவாக, அரசியல் கட்சிகளில் இருப்பவர்கள் வேண்டுமானால் முற்போக்குக் கொள்கை வைத்து இருக்கலாமே தவிர, மற்றவர்கள் அந்த ஜாதி வேற்றுமையை விட மாட்டார்கள். கூடுமான வரையில் அரசியல் கட்சியில் பங்கு பெற்று இருப்பவர்கள் நல்ல முற்போக்குச் சிந்தனையோடு இப்படிப் பட்ட காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு முயல வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களைச் செயல்படுத்துவதற்காகத்தான் இன்றைக்கு மாநில ஹரிஜன நல வாரியம் ஒன்றை, தீண்டாமை ஒழிப்பு ஒழிப்பு எஐற நல்ல நோக்கத்தோடு கொண்டு வருகிறோம்.

திரு. ஜப்பார் அவர்கள் மனம் விட்டுப் பேசினார்கள். அவர்கள் தொகுதியில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் மத்திய அரசிடம் ரூ. 25 கோடி கடன் பெற்றுவது அந்த மக்களுக்கு வாழ்வு தரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய நல்ல எண்ணத்தை, தாழ்த்தப்பட்டவர்களிடத்தில் அவர்கள் கொண்டு இருக்கும் கருணை உள்ளத்தை உண்மையிலேயே வரவேற்கிறேன். இவர்கள் இப்படிச் சொல்கிறபோது, முஸ்லீம் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனையோ இடங்களில் தாழ்த் தப்பட்ட மக்களுக்குத் தொல்லை தருகிறார்கள். மாயவரத்திற்குப்



கத்தில் ஒரு கிராமத்தில் செத்த பிணத்தைத் தூக்கிக் கொண்டு ஸ்லீம் வீதி வழியே போகக்கூடாது என்று முஸ்லீம்கள் தடுத்து ருக்கிறார்கள். எத்தனையோ முறை நாங்கள் ஈடுபட்டு அதைத் தீர்வு செய்து இருக்கிறோம். அவர்கள் அதற்காக வேறொரு இடம் வாங்கித் தருகிறோம். அந்த வழியாக எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னார்களே தவிர அந்த வழியாகப்போனால் என்ன என்று சொல்ல மனம் வரவில்லை. சிலருக்கு முற்போக்குக் கொள்கை இல்லை; அனைவருக்கும் முற்போக்கெண்ணம் ஏற்படும்படியான முறையில் இந்தக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொண்டு பிரச்சாரம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வேறொரு தீர்மானம் கொண்டு வர இருக்கிறார்கள். எனவே நீண்டதொரு பதிலை நான் இங்கே தர விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் அம்பேத்கார் அவர்களுடைய வரலாற்றை பள்ளிகளில் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அவருடைய வாழ்க்கையைப் பற்றி "நான்-டீடெயில்ட்" பாடமாக குழந்தைகள் படிக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. படம் வைப்பதற்கான யோசனையைச் சொன்னார்கள். அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

இன்டர்-காஸ்ட் மாரேஜ் பற்றிச் சொன்னார்கள். பலபேர் இன்றைக்கு இந்தத் திருமணம் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்கு என்று தங்கப்பதக்கம் தரும் திட்டத்தையும் ஏற்பாடு செய்து இருக்கிறோம். மணம் செய்து கொள்கிறார்கள். ஆனால் அதை வெளியே சொல்லப் பயப்படுகிறார்கள். இந்த மணம் செய்து கொள்பவர்கள் பெரும்பாலும் காதல் திருமணம் தான் செய்து கொள்கிறார்கள். பெற்றோர்கள் அனுமதி இல்லாமல் செய்து கொள்கிறார்கள். இதனால் இவர்கள் பயந்து, பயந்து வாழ வேண்டியிருக்கிறது. ஆகவே அதைப் பகிரங்கமாகச் சொல்லி பரிசு பெறத் தயங்குகிறார்கள். எனவே, இந்த மணங்களை ஊக்குவிக்கிற வகையில் பரிசு தரும் திட்டத்தை வைத்து இருக்கிறோம். முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள் இந்தத் திருமணங்களைச் செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மணம் செய்து கொண்டவர்கள் ஆலயத்திற்குச் செல்லும் போது மனைவியை அழைத்துச் செல்ல வேண்டும். ஐயா பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் நீண்டகாலமாக இத்தகைய முற்போக்குக் கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்திருக்கிறார்கள். ஹிந்து மக்கள் விரும்பி இந்தத் திருமணத்தைச் செய்து கொண்டால் தான் ஜாதி பேதங்களை ஒழித்துக்கட்ட முடியும். ஐயா அவர்களும், அண்ணா அவர்களும் நாங்கள் ஹிந்துக்கள் அல்ல, இந்தியன் என்று சொல்லி இருக்கிறார்கள். ஹிந்து மதத்தை விட்டுவிட்டு, மக்கள் வந்தால்தான், இந்த ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க முடியும் இப்படிப்பட்ட, முற்போக்கு சிந்தனையோடு அனைவரும் ஒன்றுபட்டு பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாகப் பேசிய அம்மையார் அவர்கள் குடி நீர்த் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். குடி தண்ணீருக்காக அதிகப்படியாக பணம் ஒதுக்கியிருக்கிறோம். எஸ்டாபிலிஷ்மெண்ட் செலவும் இந்த பட்ஜெட்டில் சேர்ந்து இருக்கிறதாவென்று கேட்டார்கள். இதைப்பற்றி ஆராய்ந்து பிறகு என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதைச் செய்கிறேன். மற்ற இலாக்காவில் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து அதைக் கவனிக்கிறேன் என்று அம்மையாருக்கு உறுதி கூறுகிறேன். வீடுகட்டிக் கொடுப்பதில் அரிசனங்களுக்கென்று தனியாக இருக்கக் கூடாது, எல்லா சாதியினரும் ஒன்றாக வாழும் முறையில் வீடுகள் தர வேண்டுமென்றார்கள். ஏற்கெனவே அம்மையார் சார்ந்து இருக்கும் கட்சி ஆட்சியில் இருந்தபோது இந்தப் பரிந்துரைகள் வந்திருக்கின்றன. 10 சதவிகிதம் மற்ற சமுதாயத்தினரும் இருக்க வேண்டுமென்று. ஆனால் அரிசனங்கள் மற்ற சமுதாயத்தினரோடு வந்து வாழ்வது இல்லை. வந்து வாழ்பவர்களையும் மற்றவர்கள் விடுவது இல்லை.

மன மாற்றங்கள் ஏற்படுகிற வரையில் எந்தத் திட்டங்கள் வகுத்தாலும் இந்த நிலைமையை மாற்ற முடியாது. இதற்கெல்லாம் நல்ல மன மாற்றம் ஏற்பட வேண்டும். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும். இதற்காகத்தான் அரசு இந்த நல வாரியத்தை உண்டாக்கி இருக்கிறது. இந்த நல வாரியம் அமைக்கும் நல்ல திட்டத்தின் மூலமாக ஆங்காங்கு தீண்டாமை ஒழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இந்தக் குழு தாலூக்கா வாரியாக இருக்கும். இந்தக் குழு எங்கெங்கே தீண்டாமை அனுஷ்டிக்கப்படுகிறதோ அந்த இடத்திலிருந்து கிடைக்கிற புகார்களைப் பரிசீலனை செய்து, அதற்கு மேலே இருக்கும் அதிகாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் இப்படி, இந்த இடத்தில் தவறு நடந்து இருக்கிறது என்று அறிக்கை அனுப்புவார்கள். முதலிலேயே போலீஸ் அதிகாரிகள் விசாரணை செய்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏதும் நடக்கவில்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஆனால் இந்தக் குழு அந்தப் புகார்களை விசாரித்துப் பார்த்து, இப்படி நடந்து இருக்கிறது என்று மேல் அதிகாரிகளுக்கு அனுப்பினால் நடவடிக்கை எடுக்க முடியும். இதுவரை போலீஸ் தவிர வேறு யாரும் இது போன்ற புகார்களைப் பரிசீலித்தது இல்லை. இவ்வளவு காலமாக இந்தக் குற்றத்தைச் செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை சாதாரணமாக ரூ. 50 அபராதமும், கட்டத் தவறினால் 6 மாதம் தண்டனையும் என்று இருந்தது. இந்த ரூ. 50-ம் 6 மாத கடுங்காவல் தண்டனையும் யாரும் கொடுப்பது கிடையாது. ஆகவே மினிமம் தண்டனையாக இருக்க வேண்டுமென்று 3 மாதம் அவசியம் தண்டனை கொடுக்க வேண்டுமென்றும் ரூ. 50 கட்டாயம் அபராதம் இருக்க வேண்டுமென்றும் விதித்திருக்கிறோம். இதற்கு மேல் ஒரு முறை தவறு செய்தவர்களுக்கு 6 மாதம் சிறைத் தண்டனையும் ரூ. 200 அபராதம் கட்ட வேண்டுமென்றும் வைத்து இருக்கிறோம். இரண்டாவது முறையாக இதே தவறைச் செய்பவர்களுக்கு 6 மாதத்திலிருந்து 1 வருஷம் வரையில் தண்டனையும், ரூ. 200-லிருந்து ரூ. 500 வரைக்கும் அபராதம் கட்ட வேண்டுமென்றும் வைத்து இருக்கிறோம். மூன்றாவது முறையாக இதே தவறைச் செய்தால் ஒரு ஆண்டிலிருந்து 3 ஆண்டு வரை தண்டனையும், அவர்களுக்கு ரூ. 500-லிருந்து ரூ. 1,000 வரை அபராதமும் என்று



ஒரு கடுமையான தண்டனை அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்றும் வைத்து இருக்கிறோம். இந்த முறையை படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டு வர தமிழக அரசு அமைச்சரவை ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கமும் இதை ஒப்புக்கொள்ளும். ஏனென்றால், மத்திய அரசாங்கம் தான் இளையபெருமாள் குழுவின் அறிக்கையை அனுப்பி வைத்து அந்த அறிக்கையின் மீது கருத்து தெரிவிக்கும்படி கேட்டிருந்தார்கள். இந்த விதிமுறைகளை ஒப்புக் கொண்டு மத்திய அரசாங்கத்திற்கு எழுதி இருக்கிறோம். எனவே இந்த அரசு தீண்டாமை ஒழிப்பதிலே எவ்வளவு அக்கறையாக இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஏதோ கண்துடைப்புக்காக சட்டம் கொண்டுவராமல், அதை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு சட்டத்தைக் கொடுப்பதன் மூலமாக இப்படிப்பட்ட நல்ல காரியத்தை அரசு செய்துகொண்டு வருகிறது. ஆகவே, இந்த மானியத்தின் மீது வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்திருப்பவர்கள் அதை வற்புறுத்த வேண்டாம், அதை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல பல கருத்துக்களை எடுத்துச்சொன்ன உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு எல்லா உறுப்பினர்கள் பேசியதையும் நான் குறிப்பெடுத்திருக்கிறேனாகையால் அவைகளைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. பி.ப. 2 30
உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறுகிறார்களா என்று தெரிவிக்க வேண்டும். திரு. ஜேம்ஸ் அவையில் இல்லை. அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப் பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்களின் வெட்டுத் தீர்மானம் அவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

DR. H. V. HANDE: In view of the categorical answer finally given by the Hon. Minister, particularly to my cut motion, I am withdrawing it.

The cut motion was, by leave withdrawn.

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

MR. DEPUTY SPEAKER: The question is:

"That the Government be granted a sum not exceeding Rs. 7,00,42,200 under Demand No. 25—Welfare of the Scheduled Tribes and Castes, etc."

The Demand was put and carried and the Grant was made.

## (8) அரசினர் தீர்மானங்கள்.

### தமிழ் நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தில் கண்டுள்ள விலக்குகளை ஆய்வு செய்ய கூட்டுக் குழு அமைத்தல்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தில் கண்டுள்ள விலக்குகளை நீக்குதல் அல்லது திருத்தம் செய்தல் பற்றிய தன்மை, நோக்கம் ஆகியவற்றைப் பரிசீலிப்பதில் வருவாய்த்துறை பொறுப்பேற்றுள்ள அமைச்சருக்கு ஆலோசனை வழங்க இரு அவைகளின் 24 உறுப்பினர்கள் (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மேலவை உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டுக்குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன் இக்கூட்டுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்பட வேண்டும் :—

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
2. திரு. சோ. அழகர்சாமி.
3. திரு. ஏ. ஆர். பெருமாள்.
4. திரு. எம். ஏ. லத்திப்.
5. திரு. தி. சி. ஆ. சிவபிரகாசம்.
6. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
7. திரு. இ. எஸ். தியாகராசன்.
8. திரு. துரை கோவிந்தராசன்.
9. திரு. பி. எஸ். மணியன்.
10. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
11. திரு. பி. பொன்சொக்கலிங்கம்.
12. திரு. வி. பழனிவேலு.
13. திரு. அ. ப. சண்முகசுந்தரம்.
14. திரு. ஆ. பரந்தாமன்.
15. திரு. ஆ. வெள்ளதுரை.
16. திரு. கா. காளிமுத்து.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

MR. DEPUTY SPEAKER: Under Rule 139 (1) of the Assembly Rules, Hon. Speaker has nominated the Hon. Minister in charge of Revenue as a member of the Joint Committee.

## (ஆ) 1965-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் செய்யக் கருதியுள்ள திருத்தம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"வருவாய்த்துறையின் 25—11—1965 நாளிட்ட O. A 1240/1965 ஆம் என் அறிவிப்புடன், 1—12—1965 நாளிட்ட தமிழ் நாடு அரசிதழின் V-ஆம் பாகத்தில் 1284-1296-ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டு பின்னர் திருத்தப்பட்டுள்ள தமிழ் நாடு 1965-ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒரு வகை செய்தல்) விதிகளில், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 94-வது பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தம் மேற்சொன்ன உட்பிரிவின் வரம்பு நிபந்தனையில் சொல்லியுள்ளவாறு ஏற்பளிக்கும்படி வேண்டுகிறேன்."



வரைவு திருத்தங்கள்.

மேற்படி விதிகளில்,—

(1) 1-வது விதியில், "சென்னை 1965-ம் ஆண்டு நிலச் சீர்த் திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்த்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) 2-வது விதியில் (a) துணைவிதியில், "சென்னை 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (சென்னை சட்டம் எண் 58/1961)" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 58/1961" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(3) 5-வது விதியில் (1) துணை விதியில் (iii) பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது :—

"இந்தியத் தேசிய ராணுவத்தில் பணியாற்றிவர்களும், 1950 சனவரி 26-ஆம் நாளுக்கு முன்னர் ஓய்வு பெற்ற அல்லது படைக் கலைப்புக் காரணமாக அனுப்பிவிடப்பட்ட ராணுவப் படைஞர்களும் உட்பட ராணுவப் படைகளைச் சேர்ந்துள்ள அல்லது சேர்ந்திருந்த ஒருவர்".

(4) 9-ஆவது விதியில் (vi) துணைவிதியில், "சென்னை 1864-ஆம் ஆண்டு வரி வருவாய் வசூல் சட்டம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1864-ஆம் ஆண்டு வரி வருவாய் வசூல் சட்டம்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(5) நிலச் சீர்த்திருத்த (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளைச் சேர்ந்த A,B,C,D படிவங்களில் "சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(6) மேற்சொன்ன விதிகளைச் சேர்ந்த E F, படிவங்களில், "சென்னை 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடருக்கும், "ஸ்ரீ" என்ற சொல்லுக்கும் பதிலாக, "தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகள்" என்ற சொற்றொடரையும், "திரு" என்ற சொல்லையும் முறையே அமைத்துக் கொள்ள வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் வந்திருப்பது மிகவும் உதவிகரமானதாக இருக்கிறது. இங்கே ஐடெம் (3)-ல்

"for clause (iii) of sub-rule (1) of rule 5, the following shall be substituted, namely :—

"A person who is or who has been a member of the Armed Forces, including persons who have served in the Indian National Army and members of the armed forces who retired or were disbanded before the 26th January 1950";

என்று இருக்கிறது. பொதுவாகக் கொண்டுவந்திருப்பது, ஐ.என்.ஏ. சோல்ஜர்கள் ஆர்ம்ட் போர்சில் இருந்ததாகச் செய்திருப்பது மிகவும் விரும்பத்தக்கது. வரவேற்கத்தக்கது. இன்னமும் ஆர்ம்ட் போர்சில் இருந்ததாக அவர்கள் வேறு வகைகளில் கருதப் படவில்லை. நில உச்சவரம்புச் சட்டத்தில் கீழ் வரும் நிலங்களைக் கொடுப்பதில் இந்த ஐ.என்.ஏ.காரர்கள் சேர்க்கப்பட்டிருப்பது மிக மிக வரவேற்கத்தக்க அம்சம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பி.ப. 1.35 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

@ 174. Notification issued with G.O. Ms. No. 192, Rural Development and Local Administration, dated the 9th February, 1970, making the Madras Corporation Servants' Conduct Rules, 1968. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).].

@ 175. Notification issued with Roc. No. 98121/70-E5, dated the 25th August 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Pullambadi Town Panchayat in Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

@ 176. Notification issued with Roc. No. 101490/69-P2, dated the 3rd December 1969, in regard to exclusion of Vallinayagipuram for Constitution of separate Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

177. Notification issued with Roc. No. 23370/70-P1, dated the 2nd March 1970 in regard to exclusion of certain areas from the existing Thadicheri Panchayat in Periyakulam taluk of Madurai



District for constitution into a separate panchayat by name Srirengapuram. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

178. Tamil Nadu Government's Review and the Fifth Annual Report and Statement and Accounts of the Tamil Nadu Small Industries Corporation Limited for the year ended 31st March 1970. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956).].

179. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricity Board for the year 1969-70. [Laid on the Table of the House under section 69 (5) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1958).]

### B. *Reports, Notifications and Other Papers.*

171. Erratum issued with Roc. No. 162101/69-P2, dated the 26th February 1970, to the notification relating to exclusion of certain areas from the Iluppaiyurani Panchayat of Tirunelveli district.

172. Erratum issued with Roc. No. 181278/69-P2, dated the 25th February 1970, to the notification relating to exclusion of Konnathampatti area for constitution of a separate panchayat.

173. The Performance Budget of the Harijan Welfare Department for the year 1971–72.

£ 174. Policy note on Agricultural Demands 16 and 39 (Tamil).

£ 175. Agricultural Calender (Two volumes) (Tamil).

176. Leaflet namely " Anna Kanavu Niraiveriadu " (Tamil).

£ 177. The Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971) as passed by the Legislative Assembly on 13th July 1971 with Annexure containing the amendments made by Legislative Council on the 21st July 1971.

178. Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Tamil Nadu for the year 1967–68.

179. Report and Proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Town and Country Planning Bill, 1971 (L.A. Bill No. 1 of 1971).

@ 180. Statistics regarding Agricultural Advancements in Tamil Nadu.

---

£ Despatched to Members on 23—7—1971.

@ Laid on the Table of the House on 24—7—1971.

## இணைப்பு 1

[520-ம் பக்கத்தில் 150-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

ஒவ்வொன்றிலும் சுமார் 10,000 மக்கள் தொகை கொண்ட 2,000 குடும்பப் பிரிவுகளை அமைத்து சிறு தொடக்கச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அடையாற்றிலுள்ள மருத்துவத் தொண்டுப் பணி நிலையம் உத்தேசித்துள்ளது. இப் பிரிவுகள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று பாதுகாப்புச் சுகாதாரப் பணிகள் புரியும். (1) திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 வருவாய் உள்ள குடும்பத்திடமிருந்து திங்கள் ஒன்றிற்கு 0.50 காசும், (2) திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 200 வரை வருவாய் பெறுகின்ற குடும்பத்திலிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 1-ம், (3) திங்கள் ஒன்றுக்கு ரூ. 200-க்கு மேல் வருவாய் பெறுகின்ற குடும்பத்திலிருந்து ஆண்டு வருவாயில் ½ சதவீதமும் பெற இத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் நேராகச் சென்று சிகிச்சை அளிக்கப்படும். மருத்துவத் தொண்டு பணி நிலையம் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இத்தகைய 10 சுகாதார நிலையங்களை அமைக்க உத்தேசித்துள்ளது.

The Voluntary Health Services Medical Centre, Adyar has proposed to organise units of 2,000 families consisting of roughly 10,000 population each, into a Mini Primary Health Centre through which all preventive and curative services would be delivered at the doors of the families. The scheme envisages the contribution by each family (1) at 50 paise per month if the income of the family is Rs. 100 per mensem. (2) Re. 1 per mensem if the income is between Rs. 100 and Rs. 200 and (3) ½ per cent of the annual income, if the income of the family is above Rs. 200 per mensem. The medical services will be rendered at the promises of the families. The Voluntary Helath Services Medical Centre, has thus proposed to establish 10 such Mini Primary Health Centres in the St. Thomas Mount Panchayat Union area.

## இணைப்பு 2

522-ம் பக்கத்தில் 438-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

*Duties and Functions of the Regional Public Relations Officers.*

(1) *Publicity.*—He will arrange publicity within the district or districts for all the promotional schemes campaign and celebration. He will have the film exhibiting unit at his disposal and will arrange 16 mm. film shows, meatings, songs and Dramas in the Village.



(2) *Information.*—At regional level, he will run a small information Centre where he will be able to supply all details of Government Schemes. He will also, in consultation with Collectors of the districts in his region bring out pamphlets in a limited way Press Releases may also be issued by him on behalf of the Collector.. He will also collect material for production of pamphlets at State level.

(3) *Tourism.*—Every region has some tourist spot or the other. This Officer will be in charge of Tourism also and will do everything to promote inland Tourism.

(4) *Visits.*—When V.I.P.'s visit the district in a region, this Officer will act as Liasion Officer on behalf of the Goaernment.

(5) *Exhibition.*—This Officer will have a small exhibition unit and conduct exhibition in regional level.

(6) *Distribution of Materials.*—The Regional Public Relations Officers will distribute Publicity materials at regional level sent to him from the Headquarters.

(7) *Co-ordination.*—The Regional Public Relations Officer will co-ordinate the publicity work of both Central and State Government Officers.

(8) *Films.*—It is proposed to set up a Film Wing in the Information department and it will produce films at State level and distribute them for screening Theatres in the different districts of the Region. The Regional Public Relations Officers will look after the distribution and screening work in the districts. The Officer will also assist in the coverage of film units and photographic units at regional level.

(9) *Press.*—Every district has now Daily Newspapers and Weeklies. This Officer will also be the Press Relations Officer at regional level.

(10) *Campaigns and Celebrations.*—The Regional Public Relations Officer will assist the Collector and all the district Officers in conducting campaigns, celebrations and Government functions.

### மண்டல மக்கள் தொடர்பு அலுவலர்களின் கடமைகளும், பணிகளும்.

(1) விளம்பரம்.—(தனது எல்லைக்குட்பட்ட) மாவட்டத்திலோ அல்லது மாவட்டங்களிலோ முன்னேற்ற திட்டங்கள் தொடர்பான எல்லா பிரச்சாரங்களையும் விழாக்களையும் பற்றிய விளம்பரங்களை அவர் ஏற்பாடு செய்வார். "திரைப்படம்" காட்டுகின்ற கருவி அவரிடம் இருக்கும். அவர், கிராமங்களில் 16 எம்.எம். திரைப்படக் காட்சிகள், கூட்டங்கள், பாட்டுகள், நாடகங்கள் இவைகளை ஏற்பாடு செய்வார்.

(2) செய்தி.—மண்டல அளவில் அவர் ஒரு சிறிய தகவல் நிலையத்தை அமைத்துக்கொண்டு அங்கிருந்து, அரசின் திட்டங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவர் வழங்குவார். மாவட்ட ஆட்சித் தலைவரை கலந்துகொண்டு தன்னுடைய மண்டலத்திற்குள் வரையறுக்கப்பட்ட அளவில் துண்டு வெளியீடுகளை வெளியிடுவார். மாவட்ட ஆட்சித் தலைவருக்காக செய்தி வெளியீடுகள் அவரால் வெளியிடப்படும். மாநில அளவில் துண்டு வெளியீடுகளை வெளியிடுவதற்கான விவரங்களை அவர் சேகரிப்பார்.

(3) சுற்றுலா.—ஒவ்வொரு மண்டலத்திலும் சுற்றுலாவிற்கான இடங்கள் இருக்கின்றன. இந்த அலுவலர் சுற்றுலாவிற்கு பொறுப்பாக இருப்பதுடன், உள்நாட்டு சுற்றுலா வளர்ச்சிக்கான எல்லா நடவடிக்கைகளும் எடுப்பார்.

(4) வருகை.—ஒரு மண்டலத்திலுள்ள மாவட்டங்களுக்கு வி.ஐ.பி. எனப்படும் மிக முக்கியமானவர்கள் வருகை தருகின்ற போது அவர்களையும் அரசையும் இணைக்கின்ற ஒரு இணைப்பு அலுவலராக பணியாற்றுவார்.

(5) கண்காட்சி.—இந்த அலுவலர் ஒரு சிறிய கண்காட்சி பிரிவை வைத்துக்கொண்டு மண்டல அளவில் கண்காட்சிகளை நடத்துவார்.

(6) சாதனங்களை விநியோகித்தல்.—தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் விளம்பரச் சாதனங்களை மண்டலத்திற்குள் மண்டல மக்கள் தொடர்பு அலுவலர் விநியோகிப்பார்.

(7) ஒருங்கிணைப்பு.—மத்திய, மாநில அரசுகளின் அலுவலர்களின் விளம்பரப் பணிகளை மண்டல மக்கள் தொடர்பு அலுவலர் ஒருங்கிணைப்பு செய்வார்.

(8) திரைப்படங்கள்.—செய்தித் துறையில் திரைப்படப் பிரிவு ஒன்றினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அஃது மாநில மட்டத்தில் திரைப்படங்களை தயாரித்து, மண்டலத்தின் பல மாவட்டங்களில் உள்ள திரை அரங்குகளில் திரையிட அனுப்பும். மாவட்டங்களில் பகிர்ந்தளிப்பதையும் திரைப்படுவதையும் மண்டல தொடர்பு அலுவலர்கள் கவனித்துக் கொள்வார்கள். புகைப்படம் எடுப்பவர்கள், திரைப்படம் எடுப்பவர்கள் அவரது மண்டலத்திற்கு வரும்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்.

(9) செய்தி இதழ்.—ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்தி நாளிதழ்களும், வார ஏடுகளும் வெளிவருகின்றன. அந்த அலுவலர் மண்டல அளவில் செய்தி இதழ் தொடர்பு அலுவலராக பணியாற்றுவார்.

(10) பிரச்சாரங்கள், விழாக்கள், மற்றும் அரசின் நிகழ்ச்சிகள் இவைகளை நடத்திட மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட அலுவலர்களுக்கும் மண்டல மக்கள் தொடர்பு அலுவலர் உதவி செய்வார்



## இணைப்பு 3.

[525-ம் பக்கத்தில் 439-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

On 21st April 1971, some workers belonging to Thiru Gurumurthi's Union (T.N.C.C.) and Thiru Prathapachandran's Union (D.M.K.) of Simpson Company had a wordy quarrel. As a result of this, some workers of the T.N.C.C. Labour Wing formed themselves into an unlawful assembly and attacked the workers of the D.M.K. Union at Pumping Station Road. A case and a counter case were registered in the Chintadripet Police Station against the workers involved in the incident. Two persons were admitted as in-patients in General Hospital for treatment. Three others of Thiru Gurumurthi's Group with simple injuries were treated as out-patients. A third case was also registered in Chintadripet Police Station against Thiru Prathapachandran and some others. Five persons were taken into custody.

2. As a sequel to the above incident, some workers of Addison and Company, Sembium (Thiru Gurumurthi's Group) resorted to alightning strike on 21st April 1971. Further, following a clash between the rival Unions, i.e.., T.N.C.C. and D.M.K. at 16-00 hours on 22nd April 1971, the D.M.K. workers started in a procession and dispersed at Perambur. On 23rd April 1971 (holiday) the workers of the D.M.K. Union went in procession to the Labour Commissioner's Office at Chepauk and presented a memorandum demanding full wages for 23rd April 1971 and thereaftre proceeded to the State Guest House to present a memorandum to the State Education Minister. On being advised to meet the State Education Minister later, they dispersed.

24—4—1971-ல் சிம்சன் கம்பெனியைச் சேர்ந்த திரு. குருமூர்த்தி அவர்களின் தொழிற்சங்கத் (டி.என்.சி.சி.) தொழிலாளர் சிலருக்கும் திரு. பிரதாபசந்திரன் அவர்களின் தொழிற்சங்கத் (தி.மு.க.) தொழிலாளர் சிலருக்குமிடையே வாய்ச்சண்டை ஏற்பட்டது. இதன் விளைவாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தொழிலாளர் பிரிவினர் சிலர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் ஒரு கூட்டமாகக் கூடி பம்ப்பிங் ஸ்டேஷன் சாலையில் தி.மு.க. தொழிற்சங்கத் தொழிலாளர்களைத் தாக்கினர். இந்நிகழ்ச்சிக்குத் தொடர்புடைய தொழிலாளர்கள் மீது ஒரு வழக்கும், ஒரு எதிர் வழக்கும் சிந்தாதிரிப்பேட்டைக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டன. இருவர் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக அகப் பிணியாளர்களாய்ச் சேர்க்கப்பட்டனர். குருமூர்த்தி குழுவைச் சேர்ந்த பிற மூவர், சிறு காயங்களுடன் அம்மருத்துவமனைக்குச் சென்று புறப் பிணியாளர்களாய்ச் சிகிச்சை பெற்று வந்தனர். திரு. பிரதாபசந்திரன் மீதும் வேறு சிலர் மீதும் மூன்றாவது வழக்கு ஒன்றும் சிந்தாதிரிப்பேட்டைக் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. ஐவர் சிறைக் காவலில் வைக்கப்பட்டனர்.

[1971 ஜூலை 26

2. மேற்கண்ட நிகழ்ச்சியின் விளைவாக செம்பியம் அடிசன் நிறுவனத் தொழிலாளர்கள் (குருமூர்த்தி குழுவினர்) 21—4—1971-ல் திடீரென வேலை நிறுத்தம் செய்தனர். மற்றும் 22—4—1971 மாலை 4 மணியளவில் போட்டித் தொழிற்சங்கங்களான தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தி.மு.க. தொழிற்சங்கங்களிடையே மோதல் நடந்த பின், தி.மு.க. தொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்று பெரம்பூரில் கலைந்தனர். விடுமுறை நாளான 23—4—1971-ல் தி.மு.க. தொழிலாளர்கள் சேப்பாக்கத்திலுள்ள தொழில் ஆணையாளர் அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று, 23—4—1971-க்கு முழு ஊதியம் வழங்கப்படவேண்டுமெனக் கோரும் மனு ஒன்றினை அளித்தனர். அதன் பிறகு கல்வியமைச்சரிடம் மனு ஒன்றை அளிப்பதற்காக அவர்கள் மாநில விருந்தினர் மாளிகைக்குச் சென்றனர். கல்வியமைச்சரைப் பின்னர் சந்திக்குமாறு கூறப்பட்டதற்கிணங்க அவர்கள் கலைந்து சென்றனர்.



1971 ஜூலை 26]

[65-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

இணைப்பு-4.

அரிசன நலத்துறை மானியம்.

கொள்கை விளக்கக் குறிப்பு.
(1971–72).

"அரிசன, மலைவாசி மக்கள் நலன்" என்பதன்கீழ் இந்த 1971–72-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை இப்பேரவையின் முன்வைத்து ரூபாய் 700.422 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

அரிசன, மலைவாசி மக்கள் நலன்களைப் பேணுவதற்காகத் தமிழ்நாடு அரசு ஆற்றும் ஆக்கப் பணிகள், முயற்சிகள் பற்றிய விவரங்களைக் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம் :—

1. கல்வி.
2. பொருளாதாரம்.
3. குடியிருப்பும் மற்ற பொது வசதிகளும்.
4. துப்புரவுப் பணிபுரியும் மக்களின் நலன்.
5. தீண்டாமை ஒழிப்பு.
6. மலைவாசி மக்களின் வளர்ச்சி.

1. கல்வி.

ஒவ்வோர் ஆண்டும் அரிசன நலத்துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும் பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. 1969–70-ம் ஆண்டில் அரிசன நலத் துறைக்காகச் செலவு செய்யப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 540.80 லட்சத்தில் அரிசனங்களின் கல்விக்கு மட்டும் ரூ. 397.55 லட்சம் செலவிடப்பட்டது. இது மொத்தத் தொகையில் 74 விழுக்காடு ஆகும். 1970–71-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 551.13 லட்சமாகும். இதில் கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 415.47 லட்சமாகும். இது திருத்திய மதிப்பீட்டில் ரூ. 433.32 லட்சமாக உயர்ந்துள்ளது. இது மொத்தத் தொகையில் 75 விழுக்காடு ஆகும். 1971–72-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 700.42 லட்சத்தில் கல்விக்கு மட்டும் ரூ. 527.59 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## படிப்பு உதவித் தொகை

அரிசன, மலைவாசி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவ மாணவியர்களுக்கு உண்டுறை உதவித் தொகைகளும், படிப்பு உதவித் தொகைகளும், தொடரா மானியங்களும் தொடக்க வகுப்புகளிலிருந்து பட்ட மேற்படி வரையிலும் கலைப் படிப்பிற்கும் தொழில் படிப்பிற்கும் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. 1969–70, 1970 71–ஆம் ஆண்டுகளில் இதற்காக வழங்கப்பட்ட தொகையும் இதனால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| ஆண்டு. | மத்திய அரசு படிப்பு உதவித் தொகை (Government of India Scholarships) அரிசன மாணவ மாணவியர்கள். | | | | மலைவாசி மாணவ மாணவியர்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பள்ளி இறுதி வகுப்பு வரை. Pre-Matric. | | மேல் படிப்பு. Post-Matric. | | பள்ளி இறுதி வகுப்பு வரை. Pre-Matric. | | மேல் படிப்பு. Post-Matric. | |
| | வழங்கப்பட்ட தொகை. | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | ரூ. | | ரூ. | | ரூ. | | ரூ. | |
| 1969–70 | .. | .. | 57,42,795 | 11,527 | .. | .. | 70,137 | 117 |
| 1970–71 | .. | .. | 63,03,499 | 13,138 | .. | .. | 79,689 | 158 |
| | தமிழக அரசு படிப்பு உதவித் தொகை (State Scholarships) | | | | | | | |
| 1969–70 | 64,26.232 | 3,52,155 | 18,28 854 | 7 640 | 14,254 | 744 | .. | .. |
| 1970–71 | 67.68 845 | 3,86,843 | 20,32,870 | 8.136 | 13 292 | 1,004 | .. | .. |

குறிப்பு.—மலைவாசி மாணவ மாணவியர்களுக்கு மேற்படிப்புக்காக உதவித் தொகை மத்திய அரசு நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.

இதிலிருந்து கல்விக்கு மானியமாக வழங்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட மாணவ மாணவிகளின் எண்ணிக்கையும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது நன்கு விளங்கும்.



### 1970–71 ஆண்டில் புதிதாக வழங்கப்பட்ட சலுகைகள்:—

உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 2,000-லிருந்து ரூ. 2,500 ஆக 1970–71-ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வரம்பு படிப்புக் கட்டணச் சலுகைக்கும் பொருந்தும்.

பட்ட மேற்படிப்பு, ஆசிரியர் பட்டப் பயிற்சி, புலவர் படிப்பு, தொழில் நுட்பக் கல்வி, தொழிற் கல்வி, தட்டெழுத்துப் பயிற்சி முதலிய ஐம்பது வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்க நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பு எண்ணிக்கை 1970–71 முதல் அறவே நீக்கப்பட்டு விட்டது. எனவே, இனி இக்கல்வி கற்கத் தகுதி பெற்ற அனைவரும் உதவித் தொகை பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகம் நடத்தும் நூலக அறிவு பட்டப் படிப்பிற்கும் உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

"நன்றி மறப்பது நன்றன்று" என்ற தமிழர் பண்பாட்டிற்கிணங்க தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்கள் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்காக ஆற்றிய அரும் பெரும் தொண்டை நினைவூட்டும் வகையில் "காந்தி அடிகள் நினைவு சிறப்புக் கல்வி உதவித் தொகை" திட்டம் நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 1970–71-ம் ஆண்டு முதல் செயற்படுத்தப் படுகின்றது: இத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் பல்கலைக் கழகத் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெறும் மாணவர் ஒருவரையும், மாணவி ஒருவரையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சாதாரணமாக வழங்கப்படும் உதவிச் சலுகைகளுடன் சிறப்புச் சலுகையாக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகின்றது. இது ஆறு ஆண்டுக் காலம் வழங்கப்படும். மேலும் அவர்களுக்குப் பட்டப் படிப்புத் துவக்க காலத்தில் ஏற்படும் செலவிற்கென ரொக்கமாக ரூ. 500 வழங்கப்படுகின்றது.

தற்போது வழங்கப்படும் உண்டுறை உதவித் தொகையை உயர்த்தி 1971–72-ம் ஆண்டு முதல் கூடுதலாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி கலை மற்றும் சட்டக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு சென்னை நகரில் ரூ. 60-லிருந்து ரூ. 70 ஆகவும், மற்ற இடங்களில் ரூ. 50-லிருந்து ரூ. 55 ஆகவும் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மருத்துவம்; பொறியியல் போன்ற படிப்புகளுக்கும், உண்டுறை உதவித் தொகையை உயர்த்த செயற்குறிப்பு பரிசீலனையிலுள்ளது. இதற்காக இவ்வாண்டில் ரூ. 3.07 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போல் சிறப்புக் கட்டண உதவித் தொகை விகிதத்தையும் உயர்த்த 1971–72-ம் ஆண்டிற்கு ரூ. 4.50 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசினரால் வழங்கப்படும் உதவித் தொகைகளுக்கு மேல் கூடுதலாகப் பொறியியல், உழவியல், மருத்துவம், போன்ற படிப்பு வகைகளுக்குச் செலவு செய்ய நேர்கின்றது. அத்தகைய கல்வி பயிலும்

மாணவர்களில் மிகவும் அவசியமாகப் பொருளுதவி தேவைப்படுபவர்களுக்குக் கடன் வழங்கவும் அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென 1971–72-ம் ஆண்டில் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேல் பட்டப்படிப்பிற்காக மத்திய அரசு வழங்கும் உதவித் தொகைகளும் அரிசன நலத்துறையின் மூலமாக வழங்கப்படுகின்றன. சில கொள்கைகளையும் விதிமுறைகளையும் அனுசரித்து மத்திய அரசு நிதி உதவி நிர்ணயம் செய்து வழங்குகின்றது. அதன்படி 1969–70-ஆம் ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் வழங்கியது. 1970–71-ஆம் ஆண்டிற்கு ரூ. 8.79 லட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல என்பதாலும், இத்திட்டத்தின்கீழ் மாநில அரசால் செலவிடப்படும் தொகை ஆண்டுதோறும் உயர்ந்து வருவதாலும், மத்திய அரசு தன் பங்கைப் பெரும் அளவிற்கு ஏற்றுக்கொண்டு இன்னும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என அரசு வலியுறுத்தியுள்ளது.

மத்திய அரசு வழங்கும் உதவித்தொகை பெறும் மாணவர்கள் மாநில அரசு உதவித்தொகை பெறுவதற்கு தகுதி உள்ளவர்களாயிருந்தால் மாநில அரசு உதவித் தொகைக்கும், மத்திய அரசின் உதவித் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை இவ்வரசு ஈடு செய்து அளித்து வருகின்றது.

அரிசன நலத்துறைப் பள்ளிகள் :

அரிசன மாணவர்களுக்காக 849 பள்ளிகளை அரிசன நலத்துறை நடத்தி வருகிறது. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 743 ; நடுநிலைப் பள்ளிகள் 77 ; உயர்நிலைப் பள்ளிகள் 11 ; இரவுப் பள்ளிகள் 17 ; திண்ணைப் பள்ளி 1.

மலைவாசி மாணவர்களுக்காக 69 பள்ளிகளை அரிசன நலத்துறை நடத்தி வருகிறது. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 64 ; நடுநிலைப் பள்ளிகள் 4 ; உயர்நிலைப் பள்ளி 1.

இவற்றுல் சுமார் 1.50 லட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர்.

சென்ற ஆண்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள மேல வள்ளியூர் தொடக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. மேலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த தர்மநல்லூர், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த நெடுங்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன.

கீழ்க்கண்ட இடங்களில் மலைவாசியினருக்காக வரும் ஆண்டில் புதியதாக உறைவிடப் பள்ளிகள் திறக்க அரசு உத்தேசித்துக் கூடுதலான நிதியும் ஒதுக்கியுள்ளது.

1. வெப்பாடி—சேலம் மாவட்டம்.
2. பேசலாத்தி—கோயம்புத்தூர் மாவட்டம்.
3. உளியூர்—கோயம்புத்தூர் மாவட்டம்.



பள்ளிகளில் வசதிகள் பெருக்கம் :

அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் மேசைகள், நாற்காலிகள் முதலியவற்றிற்கும், விஞ்ஞானக் கருவிகள், கல்விப் பயிற்சி சாதனங்கள், அறிவியல் ஆய்வுக்கூட சாதனங்கள் முதலியவற்றிற்கும், நூல் நிலைய வசதிகளைப் பெருக்கவும் படிப்படியாக ஆண்டுதோறும் வகை செய்யப்பட்டு வருகின்றது. இதற்காக 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 5.91 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1971–72-ஆம் ஆண்டிற்கு ரூ. 6.10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பழுதடைந்த பள்ளிக் கட்டிடங்களை மேம்பாடு செய்யவும், புதுக்கட்டிடங்கள் அமைக்கவும், படிக்கிரமத் திட்டப்படி நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக சென்ற ஆண்டில் ரூ. 5.83 லட்சம் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ. 10.60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன நலப்பள்ளிகளில் 176 பள்ளிகள் இன்னும் வாடகைக் கட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றன. அரசு கணிசமான நிதி ஒதுக்கி ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் இப்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் அமைக்க வேண்டுமென 1968–69-ஆம் ஆண்டு மதிப்பீட்டுக்குழு பரிந்துரைத்திருந்தது. அதற்கிணங்க ஒரு படிக்கிரமத் திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் பள்ளிக்கட்டிடங்கள் அமைப்பதற்கு இவ்வாண்டு முதல் ரூ. 2 லட்சம் நிதி கூடுதலாக ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

சீருடை வழங்கல் :

ஆண்டுக்கு இருமுறை அரிசன நல விடுதிகளில் தங்கிப் பயிலும் சிறுமிகளுக்கு, தீபாவளி, பொங்கல் விழாக்களை ஒட்டிச் சீருடை வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குப் பொங்கல் விழாவை ஒட்டிச் சீருடை வழங்கப்பட்டு வருகிறது.

அரிசனச் சிறுவர் சிறுமியர்களுக்கு மட்டும் சீருடை வழங்குவதால் இளம் உள்ளங்களில் ஏற்படும் ஒருவித வேற்றுமை உணர்ச்சியைப் போக்கி ஒருங்கிணைப்பையும் சமநிலை உயர்வையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் 1970–71-ம் ஆண்டு முதல் சாதி வேறுபாடின்றி ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் பயிலும் எல்லாச் சிறுவர்களுக்கும், பொங்கல் விழாவின்போது சீருடை வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு ரூ. 4.5 லட்சம் அதற்கு செலவழிக்கப்பட்டது. நடப்பு ஆண்டுக்கு ரூ. 5.45 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா :

மலைவாசியினருக்கான பள்ளிகளில் பயிலும் மாணவர்களைப் பொது வெளி உலக அறிவு வளர்ச்சிக்காக ஆண்டில் ஒரு முறை நமது நாட்டில் உள்ள முக்கிய இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றுவரும் திட்டம் 1969–70-ம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000 நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது.

### மதிய உணவு :

அரிசன நலத்துறையின் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் மதிய உணவு வழங்கும் இப் பயனுள்ள திட்டம் சீரிய முறையில் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் ஆண்டு தோறும் சுமார் 1.25 லட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர். வேறு பொதுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் 75 விழுக்காட்டிற்குக் குறையாமல் அரிசன மாணவர்கள் இருந்தால் அவ்வரிசன மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம் செயற்பட்டு வருகின்றது.

மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு 1970–71-ம் ஆண்டு மொத்தம் ரூ. 33.70 லட்சம் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் இதற்கென ரூ. 34.46 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் பயன்பெற்ற அரிசன மாணவ மாணவிகளுக்கு மதிய உணவு வழங்கும் வகையில் செலவு செய்யப்பட்ட தொகை கீழ்வருமாறு—

| அரிசன நலப் பள்ளிகள். | ஆண்டு. | செலவு செய்த தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூ. லட்சத்தில்) |
| 831 | 1970–71 | 25·84 |
| 831 | 1971–72 | 24·46 |
| | | (ஒதுக்கீடு) |

இத்தொகை ஆண்டு இறுதியில் ரூ. 28·00 லட்சமாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

### இலவசப் புத்தகமும், குறிப்பேடும் :

அரிசன நலத்துறையின்கீழ் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் புத்தகங்கள், குறிப்பேடுகள், கரும்பலகைகள், எழுதுபொருள்கள் முதலியன இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

### பள்ளிகளில் சுகாதார வசதிகள் :

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் உள்ள மாணவிகளுக்கும், ஆசிரியைகளுக்கும் சுகாதார (கழிவு அறை) வசதியை முதல்கட்டமாகச் செய்து தரப்படுவது அவசரத் தேவை என்பதை உணர்ந்து; ஒரு படிக்கிரமத் திட்டம் வகுத்து இத்தேவையைப் பூர்த்தி செய்ய அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டில் முதல் கட்டமாக ஐம்பது அரிசனப் பள்ளிகளில் ஆசிரியைகளுக்கும், மாணவியர்களுக்கும், சுகாதார (கழிவு அறை) வசதிகள் ஏற்படுத்த ரூபாய் ஒரு லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஆசிரியர் குடியிருப்பு :

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் திட்டத்தின் முதல் கட்டமாக மலைவாசி மக்களுக்கான பள்ளிகள் உள்ள இடங்களில் ஆசிரியர்களுக்கான இல்லங்கள் 1967–68-ம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டில் இதற்காக ரூ. 20,000 நிதி ஒதுக்கப்



பட்டது. நடப்பு ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ. 50,000. இத்திட்டத்தை அரிசன நலப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த அரசு முடிவுசெய்துள்ளது. இதற்காக நடப்பு ஆண்டுக்கு ரூபாய் இரண்டு லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிலத் திட்டம் :

அரிசன, மலைவாசி மாணவ மாணவியர்களில் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயின்றவர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால், மேற்படி பணிகளில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விழுக்காடு நிறைவு பெறாமல் இருந்தது. இதை உணர்ந்து அரிசன, மலைவாசி மாணாக்கர்களை இப் பயிற்சிகளில் தேர்வு பெற ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் இதற்கென புதிதாக ஒரு திட்டம் சென்னை, கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நகரங்களில் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. இத் திட்டத்தின்படி தனியார் பயிற்சிப் பள்ளிகளில் தட்டெழுத்துப் பயில 250 மாணாக்கர்களுக்கும், சுருக்கெழுத்துப் பயில 125 மாணாக்கர்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படும். இத் திட்டம் 1971–72-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்த ரூ. 1.03 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தேர்வுகளில் தவறிய அரிசன மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி :

9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரை உள்ள தேர்வுகளில் தவறிய அரிசன மற்றும் மலைவாசி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று இவ்வாண்டு முதல் மேற்கொள்ளப் படுகிறது. 1971–72-ம் ஆண்டு இதற்கென ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மாணாக்கர் இல்லங்கள் :

தொலைவில் உள்ள கிராமங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் வந்து பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தொழிற் பயிற்சி நிலையங்களிலும் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு இல்லங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நிதி நிலைமையைப் பொறுத்தும் தேவைக்கேற்பவும் புது இல்லங்கள் ஆண்டுதோறும் திறக்கப்படுகின்றன. அரிசன நலத்துறையிடமிருந்து நிதி உதவி பெற்று வரும் தனியார் மாணவர் இல்லங்களையும், கிரமப்படி திட்டத்தில் அரிசன நலத்துறையின் நேரடி நிர்வாகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. சென்ற ஆண்டில் புதியதாக திறக்கப்பட்ட இல்லங்களின் விவரம் கீழ் வருமாறு :—

(1) கல்லூரி மாணவர்களுக்கானவை—2.

(2) கல்லூரி மாணவிகளுக்கானது—1.

(3) பள்ளி மாணவர்களுக்கான இல்லங்கள்—13.

(4) பள்ளி மாணவியர்களுக்கான இல்லங்கள்—7.

(5) தனியாரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டவை (பள்ளிகளுக்கானவை)—7.

1971–72-ம் ஆண்டில் 25 புதிய இல்லங்கள் திறக்கவும், சில தனியார் இல்லங்களை மேற்கொள்ளவும், ரூ. 3 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மற்ற வகுப்பைச் சார்ந்த பிள்ளைகளுடன் ஒருங்கு சேரப் பழகுவதன் மூலம் அரிசனக் குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையும், முன்னேற்றமும் வளரும் என்ற நோக்கத்திலும், பல இனத்தைச் சார்ந்த பிள்ளைகளிடையேயும் அரிசன பிள்ளைகளிடையேயும் நல்ல இணக்கமான உறவை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் இந்த விடுதிகளில் பிற்பட்ட வகுப்பினரையும், முன்னேற்றமடைந்த வகுப்பினரையும், ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டில் சேர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மலைவாசி மாணவர் இல்லங்களில் உறையும் மாணவ மாணவிகளுக்கு படுக்கையும், அரிசன மாணவ விடுதிகளில் உள்ளவர்களுக்கு பாயும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வில்லங்களில் தங்கியுள்ள மாணவ மாணவியர்களுக்கு உணவிற்காக செலவிடப்படும் தொகையை ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ. 5 வீதம் நடப்பு ஆண்டு முதல் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 16,68,000 கூடுதலாகச் செலவாகும். நடப்பு ஆண்டில் இதற்காக ரூ. 11,12,000 கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>பகுதி நேர ஆசிரியர்கள் :</u>

மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், இறுதி ஆண்டுத் தேர்வில் அவர்களது செயல்திறனை வளர்க்கவும் பகுதி நேர ஆசிரியர்களை நியமனம் செய்து பாடம் சொல்லித் தரும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

<u>இல்லக் காப்பாளருக்குப் பரிசு :</u>

ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த மாணவர் இல்லம் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு, அதில் உள்ள மாணவ மாணவியர் உயர்நிலைப் பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் மிக உயர்ந்த எண்ணிக்கையில் தேர்ச்சி அடைகின்றனரோ அந்த இல்லக் காப்பாளருக்கு ரூ. 200 ரொக்கப் பரிசு வழங்கப்படுகின்றது.

<u>இல்லக் கட்டிடங்கள் :</u>

பெரும்பாலான விடுதி இல்லங்கள் வாடகைக் கட்டிடங்களில் தான் தற்போது உள்ளன. நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடங்களை அமைத்துத் தர வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்து படிப்படியாகப் புதுக் கட்டிடங்களை கட்ட நீண்ட கால திட்ட அடிப்படையில் வகை செய்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 9.33 லட்சம் செலவில் 5 இல்லங்கள் அரிசனங்களுக்காகவும் ரூ. 2.68 லட்சம் செலவில் 2 இல்லங்கள் மலைவாசி மாணாக்கர்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள கட்டிடங்களை நிறைவு செய்வதற்கும், புதிய கட்டிடங்கள் கட்டவும் 1970–71-ம் ஆண்டில் ரூ. 4.52 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1971–72-ம் ஆண்டின் அரிசன மாணவர்களுக்கு 6 இல்லங்கள் கட்ட ரூ. 5.50 லட்சமும்; அரிசன மாணவியர்களுக்கு இல்லங்கள் கட்ட ரூ. 2.29 லட்சமும், மலைவாசி மாணாக்கர்களுக்கு இல்லங்கள் கட்ட ரூ. 1.50 லட்சமும், ஆக மொத்தம் ரூ. 9.29 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



<u>தனியார் விடுதிகளுக்கு மானியம் :</u>

அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் மாணவ மாணவிகளைப் பேணுவதற்காக நிதி உதவி மானியமாக வழங்கப்படுகின்றது. தீண்டாமையைப் போக்கும் நோக்கத்துடனும், பல்வேறு வகுப்பைச் சேர்ந்த மாணவர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் பொருட்டும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும், முன்னேற்றமடைந்த மற்ற வகுப்பு மாணவர்களுக்கும் குறிப்பிட்ட அளவில் இந்த மானியம் வழங்கப்படுகின்றது. 1969–70-ம் ஆண்டில் அரசு மானியம் பெறும் 65 இல்லங்களுக்கு 4,341 மாணவர்களைப் பேணுவதற்கு 8.21 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. 1970–71 ஆண்டிற்கு 8.06 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டது. 1970–71-ம் ஆண்டில் 9 தனியார் விடுதிகள் அரசினரால் பேண எடுத்துக்கொள்ளப்பட்டன. 1971–72-ம் ஆண்டிற்கு மிகுதியுள்ள தனியார் விடுதிகளுக்கு மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு தேவைக்கேற்ப செய்யப்படும்.

## <u>2. பொருளாதார முன்னேற்றம்.</u>

<u>வேளாண்மை :</u>

பெரும்பான்மையான அரிசன மலைவாசி மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு உழவு மாடுகள், விதை, உழவுக்குக் கருவிகள், முதலியன வாங்கவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை வழங்கப்பட்டு வந்த தொகை போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்து உழவு மாடுகள் வாங்க ரூ. 400-லிருந்து 500 ஆகவும், கிணறு தோண்ட ரூ. 1,500-லிருந்து 2,000 ஆகவும் 1970–71-ம் ஆண்டு முதல் அரசு உயர்த்தியுள்ளது. மின் இறவைச் சாதனங்கள் பொருத்துவதற்கும், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும் இந்த மானியத் திட்டம் பொருந்தும் என அரசு ஆணையிட்டுள்ளது. இப்படி மானியம் வழங்க அரிசன மக்களுக்கென 8.00 லட்சம் ரூபாயும், மலைவாசி மக்களுக்கென 3.00 லட்சம் ரூபாயும் 1970–71-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் அரிசன மக்களுக்கென ரூ. 8.80 லட்சமும், மலைவாசி மக்களுக்கென ரூ. 3.00 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. தரிசு நிலங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட பட்டியலில் அரிசனங்களுக்கு 7-வது இடமாக இருந்ததை 2-வது இடத்திற்கு உயர்த்தி மேலும் மிகுதியான அரிசனங்கள் வேளாண்மை நிலங்களைப் பெற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

நிலமில்லாத ஏழை அரிசன உழவுத் தொழிலாளர்களுக்கு உதவும் வகையிலும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும், கூட்டுறவுப் பண்ணைத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பயிரிடத் தக்க புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும், நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு அச்சங்கங்களில் உறுப்பினராக உள்ள அரிசன உழவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலங்களைச் சீர்திருத்தி வேளாண்மை செய்யவும், பாசன வசதிக்காக கிணறுகள் தோண்டவும், உழவு மாடுகள் வாங்கவும், மற்றுமுள்ள இத்தகைய வேளாண்மைப்

பணிகளுக்காக மானியமாகவும், கடனாகவும், இச்சங்கங்களுக்கு அரசு நிதி உதவி அளித்து வருகின்றது. 57 சங்கங்களுக்கு 14,263 ஏக்கர் பரப்புள்ள பயிரிடும் நிலங்கள் உள்ளன. இவற்றிற்கு இதுவரை ரூ. 47 லட்சம் (கடனாகவும் மானியமாகவும்) உதவித் தொகை அளிக்கப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு ரூ. 92,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் :

கருமார் தொழில், தச்சுத் தொழில், தையல் தொழில், இன்ன பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள அரிசன மக்களுக்கு அவரவர் தொழில் களுக்குத் தேவையான கருவிகளும், சாதனங்களும் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

தொழில் நடத்த வட்டியில்லாக் கடன் வசதி :

மோட்டார் பழுது பார்த்தல், மளிகை, சைக்கிள் கடைகள், உணவு விடுதிகள் நடத்துதல், போன்றவைகளில் ஈடுபட்டுள்ள அரிசன மக்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அந்தந்தத் தொழில்களுக்குத் தகுந்தாற்போல் ரூ. 250 முதல் 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் 1968–69 முதல் செயல்படுத்தப்படுகின்றது. கடன் பெற்று ஓராண்டு சென்ற பின்னர் இந்தத் தொகையை சுலபமாக 100 மாதத் தவணைகளில் திருப்பி செலுத்தலாம். 1968–69-ல் 167 நபர்களுக்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 1969–70-ம் ஆண்டுக்கென முதலில் ஒதுக்கப்பட்டிருந்த 2 லட்சம் ரூபாயை 2.81 லட்சமாக உயர்த்தி 612 பேர்களுக்கு வழங்கப்பட்டது. இத் திட்டத் திற்கு மேன்மேலும் வரவேற்பிருந்ததாலும், உதவிகோரி மிக அதிக மான விண்ணப்பங்கள் வந்ததாலும், 1970–71-ம் ஆண்டிற்கு ஒதுக்கிய தொகையை ரூ. 10.23 லட்சமாக அதிகரித்து 1,896 பேருக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் இந்த இனத்தில் ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை இயக்குநர் மூலமாகத் தொழில் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இப் பயிற்சி நிலையங் களில் பயிற்சி பெறும் அரிசன, மலைவாசி மாணவ மாணவியருக்கு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதற்காகும் தொகை முழுவதும் அரிசன நலத் துறையால் ஈடு செய்யப்படுகின்றது. இப் பயிற்சி நிலையங்களுக்காக அரிசன மாணவர்களுக்கு விடுதிகளும் தேவைக்கேற்ப நடத்தப்படுகின்றன. 1970–71-ம் ஆண்டிற்கு ரூ. 10.25 லட்சம் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ. 12.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு :

தொழில் துறையில் அரிசனத் தொழிலாளர்கள் முன்னேற்றம் காண வகை செய்யும் முறையில் கூட்டுறவுத் தொழிற் சங்கங்களையும், பயிற்சி உற்பத்தித் தொழில் நிலையங்களையும் புதிதாக அமைத்திடவும், ஏற்கனவே அமைக்கப்பட்டவைகளைப் பேணி பலப்படுத்தவும், அரசு வழி வகை செய்து வருகின்றது. நிர்வாக வசதிகளுக்காக இவைகள் தொழில் வணிகத் துறை, தமிழ்நாடு கிராமத்தொழில் வாரியம், மாதர் நலத்துறை ஆகியவற்றின் பொறுப்பில் உள்ளன. இதற்குத் தேவையான நிதி உதவியை இத்துறைகளுக்கு அரிசன நலத் துறை அளிக்கின்றது.



காட்டுப் பகுதிகளிலும், மலைப் பகுதிகளிலும் வாழும் மலைவாசி களின் பிற்பட்ட நிலையையும், பொருளாதாரச் சீர்கேட்டையும், தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகளும், வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களும் அவர்களைச் சுரண்டி வருகின்றார்கள். அதைத் தடுக்கவும், காட்டு வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டுப் பொருளீட்டு வதற்கும் உதவியாக கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவப்பட்டு நடந்து வருகின்றன. இச் சங்கங்களுக்கு அவசியத்தை ஒட்டிச் சில சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இத்தகைய சங்கங்கள் 19 இயங்கி வருகின்றன. 1970–71-ம் ஆண்டிற்கு 56,000 ரூபாய் ஒதுக்கப் பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ. 3 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அரிசனங்களுக்கு ஆண்டு முழு வதும் வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே பணியின்றி இருக்கும்போது தக்க வேலைகளில் ஈடுபட்டு தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், மற்றும் ஏழை மக்களுக்கு உதவவும், பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. இச் சங்கங் களின்மூலம் அரிசன உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ. 150, கடனாக ரூ. 150 ஆக மொத்தம் ரூ. 300 நிதி உதவி 1968 முதல் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் சென்ற ஆண்டு முதல் கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ. 250, கடனாக ரூ. 250 ஆக மொத்தம் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது. 1970–71-ம் ஆண்டு வரையில் 360 சங்கங்கள் துவக்கப்பட்டன. பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படவும், தன்னிறைவு பெற்ற அமைப்புகளாக அமையவும், இதுவரை இயங்கிவந்த திட்டம் சற்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய திட்டத்தின்படி இனி புதியதாக அமைக்கப்படும் சங்கங்களில் 150 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். (தற்போது 50 உறுப்பினர்கள்). கறவை மாடுகள் வாங்க மூன்று முறை உதவி அளிக்கப்படும். முதல் மாடும், இரண் டாவது மாடும் வாங்க முறையே ரூ. 375 கடனும், ரூ. 125 மானியமும் ஒவ்வொரு முறையும் அளிக்கப்படும். மூன்றுவது மாடு வாங்க ரூ. 500 கடனாக அளிக்கப்படும். பொதுச் சங்கங்களில் உள்ள அரிசன அங்கத்தினர்களும் இக்கடனுதவி பெறத் தகுதி உள்ளவர்கள் ஆவார் கள். இத்தகைய 5 சங்கங்கள் மலைவாசி மக்களின் நன்மைக்காக நீலகிரி மாவட்டத்தில் துவக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கென 1971–72-ம் ஆண்டிற்கு ரூ. 2.75 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு அரிசனங் களுக்கு ஆதரவும் நிதி உதவியும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது. அரசாங்க ஆதரவு பெற்ற ஈரோடு சங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. மற்ற இடங்களிலும், இச்சங்கங்களை நிறுவ முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. 1971–72-ம் ஆண்டில் தர்மபுரி, சேலம் ஆகிய இடங்களில் உள்ள சங்கங்களுக்குப் பேருந்துகள் ஓட்டுவதற்கு அனுமதி அளித்தவுடன் நிதி உதவி வழங்கக் கொள்கை அளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

[1971 ஜூலை 26

3. குடியிருப்பும் மற்ற பொது வசதிகளும்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் வீட்டு வசதி முக்கிய மானது. வீடில்லாத எல்லா அரிசன மக்களுக்கும் வீட்டு மனைகள் வழங்கி அவர்கள் வீடு கட்டி வாழ வகை செய்ய வேண்டுமென்பது அரசின் அவா. இதற்காக அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு மனைகளுக்காக நிலம் இலவச மாக வழங்கப்பட்டு வருகின்றது. அரசிற்குச் சொந்தமான நிலம் இல்லாத இடங்களில் தனியார் நிலங்களை அரசு விலைக்கு வாங்கி மனைகளாக வழங்குகின்றது. இதற்காகத் தனி வட்ட அலுவலர்கள் (தாசில்தார்) அவர்களின் கீழ்த் தனி வருவாய் ஆய்வாளர்கள், நில அளவையாளர்கள் முதலிய பணியாளர்கள், தேவைக்கேற்ப எல்லா மாவட்டங்களிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தி மனைகளாக வழங்கிப் பட்டாவும் தந்து வருகின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் இதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை, வழங்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | செலவழிக்சப்பட்ட தொகை. (ரூ. லட்சத்தில்) | கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் பரப்பு. (ஏக்கரில்). | வழங்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1969-70 | 25·61 | 728·57 | 12,105 |
| 1970-71 | 30·38 | 814·04 | 12,787 |

இதுவரை கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் மற்றும் வழங்கப் பட்ட மனைகள் குறித்து ஆய்வு அறிக்கை ஒன்றை வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் ஒருவரின் மூலம் பெற்ற பின்னர், நடப்பு ஆண் டுக்கு நிதி ஒதுக்குவது பற்றி பரிசீலிக்கப்படும். இதுவரை 12,686 ஏக்கர் பரப்பளவு கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் 1,90,123 வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 1,15,693 வீடுகள் மட்டுமே இது வரை கட்டப்பட்டுள்ளன. மிகுதியுள்ள 74,430 மனைகள் கட்டுவதில் ஏற்படும் தாமதத்தைப் பற்றி ஆய்வு செய்யும் பணியையும், தாமதத்தை தவிர்க்க பரிந்துரைகள் செய்யும் பணியையும் தனி வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் ஒருவரிடம் அரசு ஒப்படைத்துள்ளது.

புறம்போக்கு நிலங்களில் அரிசன மக்கள் மிகுதியாகக் குடியேறிப் பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தாங்கள் குடியேறியுள்ள மனைக்கட்டுகளைத் தங்களுக்கே உரிமையாக்க வேண்டு மெனக் கோரி வந்தனர். இவ்வரசு பொறுப்பேற்றதும் இக்கோரிக் கையை நன்கு ஆய்ந்து மறுப்பில்லாத புறம்போக்கு நிலங்களில் 1960-ஆம் ஆண்டிற்கு முன்பு குடியேறி வாழ்ந்து வரும் அரிசன மக்களுக்கு (அந்நிலங்களை ஒப்படைப்பதில் வேறுவித தடையேதுமில்லை எனில்) அவற்றை அவர்களுக்கே வழங்கலாம் என அரசு ஆணை பிறப்பித்து, அதை விரைந்து செயற்படுத்தி வருகின்றது.

அரிசன மக்களுக்கு ஏராளமான வீட்டு மனைகள் வழங்கப் பெற்றும் இன்னும் அனேக மனைகள் வீடுகள் கட்டப்படாமல் காலி யாக உள்ளன. ஆகவே அதிகப்படியான மக்கள் பயன்பெற மலிவு வீடுகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின்



1971 ஜூலை 26]

படி ஒற்றை வீடுகள் ரூ. 940-க்கும், இரட்டை வீடுகள் ரூ. 1,805-க்கும் கட்டித் தரப்படுகின்றன. இதில் ரூ. 250 வட்டியில்லாக் கடனுகவும், (இரட்டை வீட்டிற்கு ரூ. 500) மீதி மானியமாகவும் தரப்படுகின்றது. மாதம் ஒன்றுக்கு ரூ. 2.50 வீதம் 100 மாதங்களில் கடன் வசூலிக்கப் படும். இவ்வீடுகள் அரிசன நலத் துறையினரால் தொழில் நுட்ப அலுவலர்களின் உதவியோடு கட்டிக் கொடுக்கப்படும். 1970-71-ம் ஆண்டிற்கு இதற்காக அரிசனங்களுக்கு ரூ. 4.12 லட்சமும், மலைவாசி மக்களுக்கு ரூ. 2.75 லட்சமும் மானியமாக ஒதுக்கப்பட்டது. கடனுக வழங்க ரூ. 0.93 லட்சம் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டுக்கு மொத்தம் ரூ. 6.87 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் குடிசை ஒழிப்பு வாரியத்தின் மூலமாகவும், வீடுகள் கட்டித் தரப்பட்டு வருகின்றது.

எல்லா அரிசனக் குடியிருப்புகளிலும் மிக அவசியமான குடிநீர் வசதிகளையும், குடியிருப்பு இணைப்பு சாலை வசதிகளையும் விரைவில் செய்துதர வேண்டுமென்ற நோக்கத்தில் விவரங்கள் சேகரிக்கப் பட்டன. தமிழகத்தில் சுமார் 2,124 அரிசனக் குடியிருப்புகள் குடிநீர் வசதியில்லாமலும், 2,355 குடியிருப்புகள் இணைப்புச் சாலை வசதியில்லாமலும் இருப்பதாக தெரிய வந்தது. பொதுவாக இவ்வசதிகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும், அரிசன நலத்துறை மூலமாகவும், நிறைவு செய்து தரப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் நிதியிலிருந்து ஒரு பகுதி செலவு செய்யப் படுகையில் மக்கள் ஒரு பகுதியை தங்கள் பங்காகத் தரவேண்டு மென்பது திட்டம். ஆனால் வசதி இல்லாத அரிசன மக்கள் தங்கள் பங்கை ஏற்றுக்கொள்ள இயலாது என்ற காரணத்தால் அரிசன நலத் துறை இதற்காக ஆண்டொன்றுக்கு 6 லட்சம் ரூபாய் அளித்து வந்தது. சென்ற ஆண்டிற்கு இது ரூ. 9.70 லட்சமாக உயர்த்தப்பட்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 9.75 லட்சமாக மேலும் உயர்த்தப் பட்டது.

மலைப்பகுதிகளிலும் வனப்பகுதிகளிலும் வாழும் மலைவாசி மக்க ளுக்கு நல்ல சாலைகளும், இணைப்புப் பாதைகளும், குடிநீர் வசதிகளும் செய்து தரப்படுகின்றன. 1970-71-ம் ஆண்டில் சுமார் இரண்டு லட்ச ரூபாய் செலவில் திருச்சி மாவட்டத்தில் துவக்கப்பட்ட சோபனபுரம் செங்காட்டுப்பட்டி மலைச்சாலை அமைப்பு வேலை பூர்த்தி அடையும் நிலையில் உள்ளது.

மேற்கண்ட இனங்களுக்காக கடந்த மூன்று ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகைகளின் விவரம் பின்வருமாறு :—

(செலவான தொகை லட்சத்தில்)

| ஆண்டு. | அரிசனங்களுக்கு. | | மலைவாசியினருக்கு. | |
|---|---|---|---|---|
| | புதிய குடி நீர்க் கிணறுகள் (திட்ட செலவு. | இணைப்புப் பாதைகள் (திட்டத்தில் சேராதது). | குடிநீர்க் கிணறுகள் (திட்ட செலவு). | இணைப்புப் பாதை |
| | | (ரூ. லட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1968-69 | 5·92 | 17·92 | 1·15 | 1·82 |
| 1969-70 | 7·62 | .6·87 | 0·99 | 1·14 |
| 1970-71 | 8·28 | 22·88 | 0·82 | 1 95 |
| 1971-72 | 17·25 | 17·00 | 2·04 | 2·81 |

துறையினரின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். இவ்வாரியம் மாதம் ஒரு முறை கூடி காவல் துறையினரால் தீண்டாமை சம்பந்தப்பட்ட முறையீடுகளின் மீது எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்யும்.

மாவட்ட அரிசன நல வாரியம்.—இவ் வாரியத்தில் மாவட்ட ஆட்சியாளரும், மாவட்டக் காவல்துறை அலுவலரும், மாவட்ட நல அதிகாரியும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வட்ட வாரியங்களின் தலைவர்களும் உறுப்பினர்களாகப் பணி புரிவார்கள். இவ் வாரியம் மூன்று மாதங்களுக்கொருமுறை கூடி வட்ட வாரியங்களின் நடவடிக்கைகளையும், தீண்டாமை ஒழிப்புப் பணிகளை தீவிரப்படுத்த மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும் (ஆக்கப் பணிகளையும்) குறித்து ஆய்வு செய்யும்.

மாநில அரிசன நல வாரியம்.— இவ்வாரியத்தில் அரிசன நலத் துறை அமைச்சர் அவர்களும், சமூக நலத்துறைச் செயலாளரும், உள்துறைச் செயலாளரும், மாநில காவல்துறை அதிகாரியும், அரிசன நலத்துறை இயக்குநரும் 7 முதல் 9 வரை அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார்களும் உறுப்பினர்களாகப் பணி புரிவார்கள். அரிசன நலத்துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவர். சமூக நலத் துறைச் செயலாளர் இவ்வாரியத்தின் செயலாளராகப் பணி புரிவார். இவ்வாரியம் மூன்று மாதங்களுக்கொருமுறை கூடி மாவட்ட வாரியங்கள் எடுத்த முடிவுகளையும்' தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் ஆய்வு செய்யும்.

உயர்மட்டக் குழு :

அரசு நிர்வாகத்திற்குட்பட்ட பலவகை அலுவலகங்களில், பணியாளர்கள் நியமனம் செய்யப்படுகையில் அரிசனங்களுக்கும் மலைவாசி மக்களுக்கும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிர்ணய சதவீத இடங்கள் நிரப்பப்படுகின்றதா என்பதை ஆராய "உயர் ஆணைக் குழு" என்ற அமைப்பு இயங்கி வந்தது. இதில் இன்னும் ஆழ்ந்த கவனம் செலுத்தும் வகையிலும், மேலும் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் ஈடுபடும் வகையிலும் இந்த அமைப்பை மாற்றி முதலமைச்சரைத் தலைவராகவும், அரிசன நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்ட "உயர்மட்ட ஆலோசனைக் குழு" வாக 1969–70-ல் இவ்வரசு அமைத்தது. இக்குழு அரிசன மலைவாசி மக்கள் பெருமளவில் அரசுப் பதவிகளில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகளைப் பெருக்கித் தருவதில் ஆழ்ந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. இக்குழு உடனடியாக அமுலுக்குக் கொண்டு வந்துள்ள சில செயல்களில் முக்கியமானவை கீழே தரப் பட்டுள்ளன :—

(1) தற்காலிக அலுவலர் நியமனங்களுக்குக் கூட அரிசனங்களுக்கும், மலைவாசி இனத்தவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விழுக்காட்டின்படி பிரதிநிதித்துவம் தரும் முறையில் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது.

(2) இந்தியப் பேரரசு அலுவல்களுக்கும், மாநில அரசு அலுவல்களுக்கும் அரிசன, மலைவாசி இனத்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விழுக்காட்டை (எண்ணிக்கையை) உயர்த்த வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது.



இப்பரிந்துரையின்பேரில் தற்போதுள்ள 16 விழுக்காட்டை 18-க்கு உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது. கல்விக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் இந்த உயர்த்தப்பட்ட விழுக்காட்டின்படி அரிசன மாணவ மாணவியர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

(3) தமிழ்நாடு பணியாளர் தேர்வுக்குழு, அலுவலர்களையும் பணியாளர்களையும் தேர்ந்து எடுப்பதற்காக நடத்தும் தேர்வுகளுக்கு அரிசன, மலைவாசி இனத்தவர்கள் எவ்வித தேர்வுக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

அரசினரால் அரிசன நல முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப் படும் திட்டங்களைப் பற்றியும், சாதனைகளைப் பற்றியும், மக்கள் நன்கு புரிந்து கொண்டு திட்டத்தின் பயன்களையும், சலுகைகளையும், உரிமைகளையும் எளிதாகவும், விரைவிலும் பெற இது பற்றிய கருத்துக்களையும், புது யோசனைகளையும் அறிந்து கொள்ளவும் அரிசன நலக் கருத்தரங்குகள் மாவட்டம் தோறும் நடத்த அரசு கருதியது. முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் ஒரு கருத்தரங்கு சென்ற ஆண்டு நவம்பர் திங்களில் நடத்தப்பட்டது. இதில் அமைச்சர்கள், அரசு செயலாளர்கள், மாநிலத் துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், இதர மாவட்ட அலுவலர்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சமூக நலத் தொண்டர்கள், பொது மக்கள் முதலியோர் கூடி விவாதித்தனர். பல உட்குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு பொருள் பற்றியும் ஆராய்ந்து நல்ல கருத்துக்களையும் அறிவுரைகளையும் வழங்க ஏதுவாயிற்று. மற்ற மாவட்டங்களிலும் இது போன்ற கருத்தரங்குகளை நடத்த அரசு உத்தேசித்துள்ளது.

ஏற்கெனவே உள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதுடன் நல்ல பயனுள்ள புதிய திட்டங்களை துவக்கி, அரிசன முன்னேற்றத்தை விரைவு படுத்தி, ஓர் ஒருங்கிணைந்த சமதர்ம சமுதாயம் இந்த நாட்டில் ஏற்பட்டு, "தாழ்ந்தவரென்பர் இனி இங்கில்லை" என்ற நிலை ஏற்பட வேண்டுமென்ற இலட்சியத்தை விரைவில் அடைய இவ்வரசு தீவிரமாகச் செயற்படுகின்றது. அரிசன நலனுக்காகச் செயல் படுத்தும் திட்டங்களில் தமிழக அரசு முன்னோடியாக விளங்குகின்ற தென்பது இத்திட்டங்களைப்பற்றிப் பிற மாநிலங்களிலிருந்து விவரங்களைக் கேட்டுவரும் கோரிக்கையிலிருந்து நன்கு புலனாகின்றது.

*How to use the Index.*

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject mater within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading " Bill(s) ".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., " Committee(s) ", " Council(s) ", " Corporation(s) ", etc.

Various schools, colleges, conferences, ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the index is given below :—

| | | |
|---|---|---|
| **A.M./Ad. Motion** | ... | Adjournment Motion. |
| **Ann.** | ... | Announcement. |
| **B.O.H.** | ... | Business of the House. |
| **C.A.** | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| **C.A.St.** | ... | Calling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate |

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H D | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R./Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# Index
# Tamil Nadu Legislative Assembly Debates

Second Session of the Fifth Assembly under the Constitution of India.

22nd, 23rd, 24th and 26th July 1971.

(Volume IX Nos. 1–4.)

A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—
  Budget (Revised), 1971–72, Voting—
    Fisheries ... ... ... ... ... ... 253–254
    Welfare of Scheduled Tribes, Castes, etc. ... 594–596

ABORTION—
  Legislation ... ... ... ... ... 205–209

ACT(S)—
  Agricultural Labourers Fair Wages Act, further extension ... ... ... ... ... 363–364

AGRICULTURE—
  Agricultural Farms (State), wage rise to labourers. 369
  Coconut and Banana plantations, pest attack (C.A.) ... ... ... ... ... ... 374–378
  Pulses, production, crash programme ... ... 531–533
  Soil Conservation Scheme, Implementation in Coimbatore District ... ... ... ... 533

ALAGARSWAMY,, ,THIRU S.—
  Budget (Revised), 1971–72, Voting :
    Agriculture Capital Outlay on Agriculture ... 379, 404–406
    Cinchona, Forest Department, capital outlay on Forests ... ... ... ... ... 284
    Labour including Factories, Registration Department ... ... ... ... ... ... 49

PAGES

A—*cont.*

ALAARSWAMY, Thiru S.—*cont.*

Budget (Revised), 1971-72, Voting—*cont.*

Rameswaram Town Panchayat, reclassification as Township ... ... ... ... ... 9-12

ANANDANAYAKI, Thirumathi, T. N.—

Absence of Opposition Party leaders in the front bench—Point of Order ... ... ... ... 296

Annamalai University, lathi charge by the Police against students in University campus and closure of University (A.M.) ... ... ... 550, 560-561, 568

Budget (Revised), 1971-72, Voting:

Agriculture—Capital outlay on Agriculture ... 379, 384-385, 420, 423, 435

Fisheries ... ... ... ... ... 242-246, 248, 249, 260, 283

Labour including Factories, Registration Department ... ... ... ... ... 48, 104-113, 115, 121

